தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை—58

# இங்கிலாந்தின் வரலாறு-I

## (A HISTORY OF ENGLAND)

ஆசிரியர் :

பேராசிரியர் ஜி. எம். டிரெவெலியன், ஓ. எம்.
டிரினிட்டி கல்லூரி ஆசிரியர் 1940–1951,
கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்து,
தற்கால வரலாற்றுத் துறையில்
அரசரின் கட்டளைப் பேராசிரியராகப்
பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

தமிழாக்கம் :

க. த. திருநாவுக்கரசு, எம்.ஏ. (தமிழ்);
எம்.ஏ. (வரலாறு); எம்.லிட்.; டிப். (மொழியியல்);
துணைப் பேராசிரியர், தமிழ்த் துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை—58

# இங்கிலாந்தின் வரலாறு-I

## (A HISTORY OF ENGLAND)

ஆசிரியர் :

**பேராசிரியர் ஜி. எம். டிரெவெலியன், ஓ. எம்.**

டிரினிட்டி கல்லூரி ஆசிரியர் 1940-1951,
கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்து,
தற்கால வரலாற்றுத் துறையில்
அரசரின் கட்டளைப் பேராசிரியராகப்
பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

தமிழாக்கம் :

**க. த. திருநாவுக்கரசு,** எம்.ஏ. (தமிழ்) ;
எம்.ஏ. (வரலாறு) ; எம்.லிட்.; டிப். (மொழியியல்);
துணைப் பேராசிரியர், தமிழ்த் துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை.

**தமிழ் வெளியீட்டுக் கழகம்**

**தமிழ்நாடு - அரசாங்கம்**

First Edition — February, 1965

B.T.P. No. 58

# HISTORY OF ENGLAND—I

G. M. Trevelyan

*Translation*

K. D. Thirunavukkarasu



PRICE Rs. 15-00

Original English language Edition, Third Edition (New Impression 1960) by Longmans, Green & Co., Ltd., London. This translation of 'A History of England' is published by arrangement with Messers Longmans, Green & Co., London.

*Printed by*
Amurtha Printers,
111-C, Arcot Road,
Madras-24.

# அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான **இங்கிலாந்தின் வரலாறு - I** என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 58ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 93 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

**எம். பக்தவத்ஸலம்**

# தமிழாக்கியோன் முன்னுரை

மக்களின வரலாற்றில் இவ்விருபதாம் நூற்றுண்டு சிறப்பு மிக்க இடத்தைப் பெற்றிருக்கின்றது. அதற்குரிய காரணங்கள் இரண்டு எனலாம். அணுவின் ஆற்றலை மனிதன் பயன்படுத்தக் கற்று, அதன் பயனாக விண்வெளி ஆராய்ச்சியில் பெற்ற வெற்றி இந் நூற்றுண்டிற்குப் பொன்றுப் புகழினைத் தேடித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மற்றொன்று உலக முழுவதும் மக்கள் ஆட்சி மலர்ந்துள்ளமையாகும். மக்களாட்சியே, பல்வேறுவகையான ஆட்சி முறைகளிலும் சாலச் சிறந்தது என்பதை இன்று நாம் கண்கூடாகக் காணுகின்றோம். இம் மக்களாட்சிக்கு முதுகெலும்பாக உள்ள பாராளுமன்றத்தையும், அதனுடன் தொடர்புடைய பல்வேறு நிலையங்களையும், அமைப்புகளையும் சற்றேறக் குறைய ஐந்து நூற்றுண்டுகளாகப் பேணி வளர்த்து வரும் பெருமை இங்கிலாந்திற்கேயுரியதாகும். இங்கிலாந்து இன்றும் மக்களாட்சியின் வளர்ப்புப் பண்ணையாகச் சிறப்புற்று விளங்கி வருகிறது. மக்களாட்சியின் பண்புகளையும் பல்வேறு நிலையங்களையும் எவ்வாறு இங்கிலாந்து வளர்த்தது என்பதை அறிவதற்கு, மக்களாட்சியினை மதித்துப் போற்றும் ஒவ்வொருவரும் இங்கிலாந்தின் அரசியல் வரலாற்றை மட்டும் அல்லாமல், அதனுடைய நாகரிகப் பண்பாட்டு வரலாற்றையும் அறிதல் வேண்டும்.

இவை யாவும் தம்முடைய நூலில் ஒருங்கே சிறப்புற்று விளங்குமாறு பேராசிரியர் ஜி. எம். டிரெவெலியன் என்பார் 'இங்கிலாந்தின் வரலாறு' என்னும் நூலினை எழுதியுள்ளார். அந்த ஆங்கில நூலின் தமிழாக்கமே இந்நூலாகும். அந்நூலின் முதற்பகுதியே இந்நூல் வடிவில் வெளியிடப்படுகிறது. இந்நூல் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட இங்கிலாந்தின் தொல்பழங்கால வரலாற்றில் தொடங்கி (கி.மு. 500), டியூடர்களின் ஆட்சியோடு (கி.பி. 1603) முடிவடைகிறது.

ஆங்கிலமொழியில் இந்நூலை இயற்றிய ஆசிரியர் ஜார்ஜ் மெக்காலே டிரெவெலியன் என்பவராவர். அவர் இங்கிலாந்தின் இணையற்ற வரலாற்று இலக்கியத்தைப் படைத்ததன்மூலம் பொன்றுப் புகழினைப் பெற்றுள்ளார். அவர் வரலாற்றுப் பேராசிரியராக விளங்கியதோடு, டர்ஹாம் பல்கலைக் கழகத்தின்

வேந்தராக (Chancellor)வும் பணியாற்றியுள்ளார். அவருடைய 'இங்கிலாந்தின் வரலாறு' என்னும் இந்நூலும், 'இங்கிலாந்தின் சமூக வரலாறு' (Social History of England) என்னும் மற்றொரு நூலும் உலகப்புகழ் பெற்றனவாகும். சென்ற ஆண்டில்தான் (1963) இந்நூலின் ஆசிரியர் காலமானார்.

தமிழகத்தின் அறிவுப் பசியைத் தணிக்கும் தமிழ்நூலாக இந்நூல் வெளியிடப்பெறுகிறது. கல்லூரி மாணவர்கட்கு மட்டும் அல்லாமல், ஓரளவிற்குச் சிந்திக்கத் தெரிந்தவர்களும் படித்துப் பயனடையும் வகையில், எளியமுறையில், வழக்குத் தமிழில் இந்நூலினை மொழிபெயர்க்க முயன்றுள்ளேன். இயன்றவரை மூலநூலினை அடியொற்றி, தெளிவாகப் புரியுமாறு, அங்கங்கே 'கூறியது கூறலாக'ச் சிற்சில கருத்துகளை விரித்துரைத்துள்ளேன்.

இந்நூலினுள்ளே 150, 199, 266, 298, 383, 425, 631, 661, 745ஆம் பக்கங்களில் காணப்படும் அடிக்குறிப்புகளைக் கருத்துத் தெளிவிற்காக நான் எழுதியுள்ளேன். நூலின் இறுதியில் கலைச் சொற்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிக்கலானவற்றிற்கும், தெளிவற்றவற்றிற்கும் நூலினுள்ளேயே அவை வரும் இடங்களில் பிறை வளைவுக்குள் ஆங்கிலச் சொற்களைத் தந்துள்ளேன். 'பொருள் அட்டவணையும்' நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக் கழகப் பட்டப்படிப்பைத் தமிழ்மொழியின் மூலம் பயிற்றுவிக்கும் அரிய முயற்சியில், என்னையும் ஈடுபடுத்தி, மேற்கொண்ட கடமையைச் செம்மையாகச் செய்ய வாய்ப்புகளையும் வசதிகளையும் தேடித் தந்த தமிழ் வெளியீட்டுக் கழகத்தினருக்கு எனது உளங்கனிந்த நன்றி என்றும் உரியதாகும்.

க. த. திருநாவுக்கரசு

**படையல்**

ஹார்வார்டு பல்கலைக் கழகத் தலைவர்
**லௌவல்** அவர்கட்கு

இந்நூலினை
எனது அன்பின் காணிக்கையாகப்
படைக்கின்றேன்.

# முகவுரை

இங்கிலாந்தின் விரிந்த வரலாற்றினை எழுநூறு பக்கங்கள் கொண்ட ஒரு நூலாக எழுதினல், அந்நூல் பாடப் புத்தக மாகவோ, ஒரு விரிந்த கட்டுரையாகவோ அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்விரு முறைகளிலும், நிகழ்ச்சிகளை முழு வதும் விளக்கமாகக் கூறமுடியாது. இந்நூல் பொருளாதார நிலைகளோடும், அரசியல் நிலையங்களோடும், கடல் கடந்த நாடு களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளோடும் ஆங்கிலேய சமுதாயம் கொண்டிருந்த தொடர்பினையும், அதனல் இங்கிலாந்து அடைந்த முன்னேற்றத்தையும் ஆராய்ந்தறிய முயலும் கட்டுரை யாகும். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாலும், காலத்தை வரையறுத்துக் கூறுவதாலும், தலையாய மக்களுக்கும் நிகழ்ச்சி களுக்கும் மட்டும் சிறப்பிடம் தருவதாலும் இந்நூல் பாடப் புத்தக மாகும்.

ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் வரலாறுகளும், கடல் கடந்த பிரிட்டானியப் பேரரசின் வரலாறும் இந்நூலினுள் சிறப்பிடம் பெற்றுள்ளன. ஆனல், அவை ஆங்கிலேயரின் நோக்கொடு விளக்கப்படவில்லை. எனினும், இங்கிலாந்தினை நடுநாயகமாகக் கொண்டே பிரிட்டனின் வரலாற்றினை விளக்க வேண்டிய இன்றியமையாமை இந்நூலின் முதற்பிரிவில் காணப் படும் சிறப்பியல்பாகும். இந்நூலிற்கு **'இங்கிலாந்தின் வரலாறு'** என்று யான் பெயரிட்டமைக்கு உரிய காரணமாக இதனைக் கூற விரும்புகிறேன். மேலும், என்னிடத்து மக்கள் மிகச் சிறந்த கருத்துகளையும், புதிய கருத்துகளையும் எதிர்பார்த்து ஏமாற் றம் அடையக் கூடாது என்ற காரணத்தாலும் 'இங்கிலாந்தின் வரலாறு' எனப் பொதுப்படையாகப் பெயரிட்டுள்ளேன்.

1924ஆம் ஆண்டின் இளவேனிற் பருவத்தில், பாஸ்டன் நகரில் யான், லௌவல் (Lowell) அறக் கட்டளையின் சார்பில் விரிவுரை யாற்றும் பேற்றினைப் பெற்றேன். அப்போது எடுத்து விளக்கிய கருத்துகளே இத்துணைப் பெரிதாக, இந்நூல் வளருவதற்கு உட்கருவாக அமைந்தன. எனவே, ஹார்வார்டு பல்கலைக் கழகத் தின் தலைவரான லௌவல்லுக்கும், அந்நிகழ்ச்சியின்பொழுது, அங்கு என்னுடைய புரவலர்களாக விளங்கிய மற்ற அன்பு மிகு நண்பர்களுக்கும் இந்நூலினை எனது அன்பின் அடையாளமாகப்

படைக்கின்றேன். பழைய கேம்பிரிட்ஜைச் சார்ந்த அரசர் கல்லூரியில் பணியாற்றும் டாக்டர் கிளாப்பாம், இயேசு கல்லூரியில் பணியாற்றும் திரு. கிளாடி எலியட் என்னும் எனது இரு நண்பர்களுக்கும், நான் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் கூறிய நண்பர் 'தற்கால பிரிட்டனின் பொருளாதார வரலாறு' (Economic History of Modern Britain) என்னும் தன்னுடைய நூல், கையெழுத்துச் சுவடியாக இருந்த பொழுதே அதன் முற்பகுதிகளைக் காண எனக்கு உரிமை நல்கினர். நான் அவ்வுரிமையினை மிகுதியாகப் பயன்படுத்திக் கொண்டேன். திரு. எலியட் என்னுடைய நூலின் முதற் பாதியைப் படித்து, எண்ணற்ற கருத்துகளைப்பற்றி மதிப்பிடற்கரிய அறிவுரைகளை எனக்குக் கூறியுள்ளார். எனவே, அவர்கள் இருவருக்கும் எனது உளங்கனிந்த நன்றி என்றும் உரித்தாகும்.

பெர்க்காம்ஸ்டெட்டு, **ஜி. எம். டிரெவெலியன்**
ஏப்ரல், 1926.

## பிறகு வந்த பதிப்புகளின்
## முகவுரை

இந்நூலினுள் 1945-லும், மீண்டும் 1951-லும் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அவற்ருேடு புதிதாகச் சில செய்திகளும் கருத்துகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், மேற்கொண்டு படிப்பதற்குரியனவாகத் தரப்பட்டுள்ள நூற்பட்டியலில், அண்மையில் வெளியான நூல்கள் சில சேர்க்கப்பட்டுள்ளன.

**ஜி. எம். டிரெவெலியன்**

# உள்ளுறை

## முதற் பிரிவு

### பண்டைக்காலம் முதல் நார்மானியரின் படையெடுப்பு வரை இங்கிலாந்தில் உண்டான இனக்கலப்பு



## இரண்டாம் பிரிவு

### நார்மானியர் படையெடுப்பு முதல் சமயச் சீர்திருத்த இயக்கம் தோன்றிய காலம்வரையில் இங்கிலாந்தில் உருவாகிய தேசிய இனம்

## மூன்றும் பிரிவு

**டியூடர்களின் ஆட்சிக்காலத்திய இங்கிலாந்தில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கமும், சீர்திருத்த இயக்கமும், கடல் ஆதிக்கமும்**

## படங்கள்

## அரச மரபுகளின் கால்வழி



* இந்நூலின் இரண்டாம் பகுதியில் இவற்றைக் காணலாம்.

## பதிப்பகத்தாரின் குறிப்பு

கெல்ட்டிக்கு, ரோமானிய மக்கள் காலத்திய பிரிட்டனின் படம், படைக்கருவிகளின் மதிப்பீட்டுக் (Ordnance Survey) குழுவினரின் படத்தை அடிப்படையாகக் கொண்டது. மேன்மை தங்கிய பேரரசியின் எழுதுபொருள் அலுவலகக் கட்டுப்பாட்டு அதிகாரியின் இசைவினைப் பெற்று இப்படம் பதிப்பிக்கப் படுகிறது.

# முன்னுரை

நம் நாட்டின் நாகரிக வரலாறு மிகப் பழமையானது. அது ஆல்பிரட்டு (Alfred) அரசரின் ஆட்சிக்கு நெடுங்காலத்திற்கு முன்பே தொடங்குகிறது. ஆனால், உலக நிகழ்ச்சிகளில் இங்கிலாந்து தலைமை தாங்கத் தொடங்கியதன் வரலாறு, கடந்த நான்கு நூற்றாண்டுகளுக்கு உட்பட்டதாகும். இவ்வரலாறு எலிசபெத்து பேரரசியின் ஆட்சிக்காலத்திலேயே தொடங்கு கிறது. இதற்குரிய காரணத்தை உலகப் படத்திலிருந்து அறிய லாம். அலக்சாண்டிரியாவில் வாழ்ந்த உலகப்படத் தயாரிப் பாளர்களும், இடைக்காலத்தில் மடாலயங்களில் இருந்த உலகப் படத் தயாரிப்பாளர்களும், நம்முடைய தீவினை எல்லா நாடு களுக்கும் வடமேற்கேயுள்ள எல்லைப்புறத்துக்கு அப்பால் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர். ஆனால், அமெரிக்கா கண்டு பிடிக் கப்பட்டதற்குப் பிறகு, ஆப்பிரிக்காவிற்கும் கீழை நாடுகளுக்கும் பெருங்கடல் வழிகள் கண்டு பிடிக்கப்பட்டதற்குப் பிறகு, கடலக வாழ்வு இயக்கத்தின் நடுநாயகமாக பிரிட்டன் அமையலாயிற்று. இங்கிலாந்தின் நில இயல் தோற்றத்தில் உண்டான இம் மாறு தலை அவளுடைய குடிமக்கள் நன் முறையில் பயன்படுத்திக் கொண்டனர். ஸ்டூவர்ட்டு மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் பெருங் கடல்களுக்கு அப்பாலுள்ள நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றோடு இங்கிலாந்து செய்யத் தொடங்கிய பெரு வாணிகத் திற்கும், அவ் வாணிகத்திற்கு வேண்டிய பொருள்களையும் பண்டங்களையும் அளித்து ஆதரித்த தொழிற்சாலைகளுக் கும் தலைமை நிலையமாக பிரிட்டன் விளங்கியது. இத்தகைய பெருமையை இங்கிலாந்தின் மக்களே அவளுக்கு அளித்தனர். அடுத்து, நியூட்டன் பிறந்த நாடாகிய இங்கிலாந்து, அறிவிய லின் உதவியைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய கருவிகளையும் இயந்திரங்களையும் படைத்து அளிக்கத் தொடங் கியது. இதன்மூலம் உலகம் முழுவதிலும் இங்கிலாந்து தொழிற் புரட்சியை உண்டாக்கியது. இதற்கிடையில் வட அமெரிக்காவிற் குத் தன்னுடைய மக்களையும் சட்டத்தையும் இங்கிலாந்து தந்துதவியது. அங்குத் தன்னுடைய பதின்மூன்று குடியேற்ற நாடுகளை இழந்த பிறகுதான், மிகப் பரந்ததும், எங்கும் சிதறிக் கிடப்பதுமான இரண்டாவது பேரரசை இங்கிலாந்து உலகம் முழுவதிலும் நிறுவியது.

சென்ற நூற்றுண்டுகளில் இங்கிலாந்து, உலகியலில் அடைந்த வளர்ச்சியும், உலக நாடுகள் அனைத்திற்கும் தலைமை யேற்ற சிறப்பும் அவள் அறிவாற்றலில் அடைந்த மாபெரும் வெற்றியோடு ஒத்து இயங்கி வந்திருக்கின்றன. ஷேக்ஸ்பியர் (Shakespeare) காலம் முதற்கொண்டு அறிவுலகப் படைப்பு களில் அவள் அடைந்துள்ள முன்னேற்றம் சிறப்பு மிக்கதாகும். இத்துடன் இடைக்காலத்தில் தோன்றிய பீடு (Bede), ரோஜர் பேக்கன், சாசர், விக்கிளிப்பு போன்ற அறிஞர்கள் அறிவியல், இலக்கியம் ஆகிய இரண்டின் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள அருந் தொண்டினை ஒப்பிட்டு நோக்கும்பொழுது, இங்கிலாந்து இடைக் காலத்தில் அடைந்த வளர்ச்சியும் முன்னேற்றமும் மிகச் சிறிதாகவே காணப்படுகிறது. திடீரென்று பரந்து விளங்கும் நிலவுலகில், கடலக வாழ்வின் நடுநாயகமாகத் தான் விளங்கு வதை லண்டன் மாநகரம் விழிப்புற்றுக் காணத் தொடங்கிய காலத்தில்தான், உலகில் மறுமலர்ச்சி இயக்கமும் சமயச் சீர் திருத்த இயக்கமும் வீறுகொண்டு எழுந்தன. இவ்விரு இயக்கங் களும், அறிவாற்றல் வளர்ச்சிக்கும் தனி மனிதனின் தன்னுரி மையை உறுதிப்படுத்துவதற்கும் இருந்துவந்த தடைகளை உடைத்தெறிந்தன. இதனால் மற்ற நாட்டு மக்களைவிட இங்கி லாந்து நாட்டு மக்களே பெரும்பயன் அடைந்தனர் எனில் அது மிகையாகாது. ஏனெனில், அறிவாற்றல் வளர்ச்சியும், தனி மனி தனின் தன்னுரிமை வற்புறுத்தலும், பிரிட்டனின் மக்களுக்கு உகந்ததாயும் அந்நாட்டின் அறிவுத் திறனுக்கு விடுதலை அளிப்ப தாயும் அமைந்தமையால் ஆங்கிலேயர் அதனால் பெரும் பயன் அடைந்தனர்.

அரசியல் உலகில் இங்கிலாந்து பாராளுமன்றங்களின் தாயாகப் புகழ் பெற்று விளங்குகின்றது. இந்நாடு தன்னுடைய மக்களின் இயல்பூக்கங்களுக்கும் மனப்பாங்கிற்கும் ஏற்ப, புது வகையான ஆட்சி முறையை அமைத்துக் கொண்டது. பிறநாடு கள் அடிக்கடி முரண்பாடுடையனவாகக் கருதும் ஆட்சித்திறமை, மக்கள் கட்டுப்பாடு, தனி மனிதனின் உரிமை என்னும் மூன்றை யும் ஒருங்கே ஒத்தியங்கும்வண்ணம் பல நூற்றுண்டுகளாகப் பெரிதும் முயன்று, தனிச் சிறப்பு வாய்ந்த ஆட்சி முறையினை பிரிட்டன் அமைத்துக்கொண்டமை உலக வரலாற்றிலேயே ஒரு திருப்புமையமாகும். இடைக்காலத்தில்தான் பாராளுமன்றம் முதன் முதலாகத் தோன்றியது. அரசனது அதிகாரத்திற்கு மேலாகப் பேராற்றல் பெற்றுப் பாராளுமன்றம் விளங்குவதற்குப் போராட்டங்கள் பல நடத்தப்பட்டன. இறுதியில் பாராளு மன்றம் வெற்றி பெற்றது. அதற்குக் காரணமாக இருந்தது

இங்கிலாந்தின் பொதுச் சட்ட (Common Law)மாகும். அச்சட்டமும் இடைக்காலத்தில் தோன்றியதேயாகும். இவ்வுலகியல் விவகாரங்களில் தலையிடும் அரசின் வரம்பிலா அதிகாரத்திடத்து மக்களுக்கு வெறுப்புணர்ச்சி தோன்றியது. அதனால், அரசினுடைய அதிகாரங்களைப் பேரளவில் பகிர்ந்து பாராளுமன்றத்திற்கு மக்கள் அளித்தனர். கூட்டுரிமை வாழ்க்கையில் பாராளுமன்றம் நம்பிக்கையுடையதாக இருந்தது. பல்வேறு கூட்டுரிமை விருப்பங்களையும் தேவைகளையும் அவற்றின் பிரதிநிதிகளின்மூலம் கலந்து சிந்தித்துப் பாராளுமன்றம் முடிவு செய்தது. இவை அனைத்தும் இடைக்காலத்திய அரசியலின் சிறப்பியல்புகளாகும். ஆனால், பாராளுமன்றம் இடைக்காலத்தின் சிறப்பு மிக்கதொரு விளைவாக இருந்தாலும், அதனுடைய ஆதிக்கம் டியூடர், ஸ்டூவர்ட்டு, ஹனேவரிய மன்னர்களின் ஆட்சிக்காலங்களில் பையப் பைய வளர்ச்சியுற்றது. அக்கால ஐரோப்பாவில்தான், ரோமானியச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியற் கோட்பாடுகளை எல்லாம் பாராளுமன்றம் எதிர்த்து வெற்றி கண்டது. அதன் நாற்றுகள் நிலவுலகின் நேர் எதிர் முனைகளுக்கும், அமெரிக்காவிற்கும் கொண்டு போய் நடப்பட்டன. அங்கெல்லாம் அவை செழிப்புற்று விளங்குகின்றன. இதனால், இங்கிலாந்தின் அரசியல் வரலாறு, ஐரோப்பிய அரசியல் வாழ்விற்கும் மேற்பட்ட மாபெரும் சிறப்பும் இறவாப் புகழும் பெற்றுள்ளமை உலகறிந்த உண்மையாகும். பிரான்சும், ஸ்பெயினும் இடைக்காலத்தில் ஏராளமான பண்ணைகளையும் (Estates) பாராளுமன்றங்களையும் உடையனவாக இருந்தபோதிலும், தற்காலச் சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு அவற்றை மாற்றி அமைக்கத் தவறின. அதனால், அவ்வமைப்புகள் அனைத்தும் தோல்வியுற்றன. நிலமானியப் படைத் திட்டம் மறைந்துகொண்டிருந்த வேளையில், இலத்தீன் மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் வல்லாட்சியுடைய முடியரசே புதுயுகத்தின் சிறப்புமிக்க அரசியல் செய்தியாகப் போற்றத் தொடங்கினர். மாக்கியவெல்லி (Machiavelli) புதிதாகத் தோன்றிய தேசிய உணர்ச்சியை அரசனின் தான்தோன்றித்தனமான ஆட்சிக்குப் பயன்படுத்துவதற்குரிய வழிவகைகளைக் கற்பித்தார். ஆனால், அதற்கு மாறாக இங்கிலாந்து ஒன்றே வல்லாட்சியைத் தோற்கடித்து, நாட்டுணர்ச்சி மிக்க சிறந்ததோர் அரசினை நெடுங்காலமாகக் கட்டிக் காத்து வருகின்றது. மேலும் அது போர்க்காலத்தும், அமைதிக் காலத்தும் சொற்போர் மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒரு மாபெரும் பேரரசை வெற்றிகரமாக ஆட்சி புரியுமாறு சிறந்ததோர் ஆட்சி முறையினை விரிவாக வளர்த்து

வருகின்றது. கி.பி. 1689-க்கும் கி.பி. 1815-க்கும் இடையே தோன்றிய வாணிகத்தையும் படையாற்றலையும் சோதிப்பதற்கென்றே, போர்கள் பல உண்டாயின. அயல்நாட்டு எதிரிகளோடு நிகழ்த்திய அப்போராட்டங்களினால், நம்முடைய பண்டங்களும், கப்பல்களும், படைகளும் சாலச்சிறந்தவை என்பதை உலகம் அறிந்தது. அதுமட்டும் அன்றி, நாட்டு மக்களின் பெருவிருப்பத்திற்கு ஊக்கம் அளிக்கும் கருவிகளில் வல்லாட்சியைவிடப் பாராளுமன்றம் வழங்கும் உரிமைகளே திறமையும் தேர்ச்சியுமுடையனவாக இருக்கின்றன என்பதை அப் போர்கள் உலகிற்கு அறிவுறுத்தின. இம் மாபெரும் தீர்ப்பு, தொழிற் புரட்சியினால் மக்களிடத்தே மலர்ந்த புதுவாழ்விலும் இன்றுவரை மாற்றமுறாது இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அதே பாராளுமன்றத்தின் நிலையங்கள் மக்களாட்சிப் பண்புகளுக்கேற்ப மாற்றமுற்றுக் கொண்டிருந்தன. அவ்வேளையில், தொழிற் புரட்சியினால் உண்டாக்கப்பட்ட புதுமைப் பண்பும், குழப்பமடையச் செய்யும் இயல்பும் வாய்ந்த சமுதாய வாழ்க்கைச் சிக்கல்களை எதிர்த்து நின்று சமாளிக்கும் கடுமையான சோதனைக்குட்பட்டு அவை வெற்றி பெற்றன. அதே காலத்தில் வெள்ளை, பழுப்பு, கறுப்பு நிற மக்களினத்தைக் கொண்ட விரிந்ததும், என்றும் ஓயாது பெருகிக்கொண்டு இருந்ததுமான பேரரசு, பலதிறப்பட்ட சிக்கலான பிரச்சினைகள் பலவற்றை எழுப்பியவண்ணமிருந்தது. சில ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு பிரச்சினையும் புதியதொரு வடிவில் (தற்காலப் பொருளாதார நிலைகள் சமுதாயத்திலும் அரசியலிலும் உண்டாக்கும் மாறுதல்களைப் போன்று) ஓயாது, மாறி மாறித் தோன்றிக்கொண்டிருந்தன. வெள்ளை இனத்தவருக்குப் பாராளுமன்ற அரசாங்கமும், தன்னாட்சிக்குத் தகுதிபெறாத சமுதாயங்களை நேர்மையாக ஆள வேண்டும் என்ற விருப்பமும் கொண்டிருந்த காரணத்தினால் தான், இங்கிலாந்தில் வியக்கத்தக்க மக்களின் சங்கமாகிய பாராளுமன்றத்தை இதுவரை கட்டிக்காக்க முடிந்தது.

எனவே, கடந்த காலத்தில் நாம் கொண்டிருக்கும் அக்கறை, உலகியல் முன்னேற்றம்பற்றியதாக இருந்தாலும், இனப் பெருக்கம், அரசியல், சமூக நிலையங்களின் வளர்ச்சி, அல்லது தூய அறிவாற்றல், இலக்கிய வளர்ச்சி முதலியவைகளைப் பற்றியதாக இருந்தாலும் அவை பிரிட்டனின் வரலாற்றில் கடந்த நான்கு நூற்றாண்டுகளாகச் சீரும் சிறப்பும் பெற்று விளங்குவது மறுக்க முடியாத உண்மையாகும். ஆயினும், நான்

இந்நூலின் மூன்றிலொரு பகுதியை டியூடர்களின் (Tudors) ஆட்சிக்கு முற்பட்ட காலத்திய வரலாற்றை ஆராய்ந்து மதிப்பிடுவதற்காகப் பயன்படுத்தியுள்ளேன். தொல்பழங்காலம் முதல் கி.பி. 1066-வரை பிரிட்டனுக்குள் படைக்கலந்தாங்கிய மக்களினங்கள் பல வந்து குவிந்து, பின்னர் இரண்டறக் கலக்கலாயின. நார்மானிய, பிளாண்டாஜெனட் மன்னர்களது வெண்கொற்றக் குடை நிழலில், அம்மக்களினங்கள் தேசிய மனப்பான்மையினையும், நாட்டின் வழக்காறுகளையும் வளர்த்தன. எலிசபெத்துப் பேரரசி தன்னுடைய குடிமக்களாகிய ஐம்பது இலட்சம் பேர்களைக்கொண்டு உலகை ஆளத்தொடங்குவதற்கும், அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி உலக அரங்கில் பொன்றாப் புகழ் பெறுவதற்கும் இவையே காரணமாக இருந்தன. அக்காலத்திய கடலகக் கண்டு பிடிப்புகளும், அறிவாராய்ச்சி இயக்கங்களும் பிரிட்டானியருடைய வழித்தோன்றல்களுக்கு வாய்ப்புகள் அளித்தன. அவற்றைப் பெற்றுச் சிறந்தோங்க அவர்களால் முடிந்தது. அப்பொழுது நாட்டிற்கு நல்லகாலம் வந்தது. அத்துடன் அதைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு நாட்டு மக்களும் தயாராகக் காத்திருந்தமை இங்கிலாந்தின் நற்பேறேயாகும்.

இங்கிலாந்தின் செல்வம் எப்பொழுதுமே கடல் தந்த வளமாகும். வரலாற்றின் தொடக்க காலமுதல் இயற்கை அன்னை, இங்கிலாந்தில் உள்நாட்டுப் பகுதிகளுக்குக் கடல் தரும் இயற்கைச் செல்வங்கள் எளிதில் சென்று சேருவதற்காகத் துறைமுகங்களையும் ஆறுகளையும் திறந்து வைத்திருக்கிறாள். திரைக் கடலினை அடிமை கொள்ளுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, பிரிட்டன் கடலினுடைய குடிமகளாகவே வாழ்ந்தாள். அவளுடைய கடற்கரைப் பகுதிகளிடத்து நீரில் மிதந்து வந்த படகோட்டிகளே அவளுடைய தலைவிதியைத் தொடர்ந்து முடிவு செய்தனர். ஐபீரியர், கெல்ட்டிக்குகள் முதற்கொண்டு சாக்சானிய, டேனியக் குடியேறிகள் வரை, வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட நெடுங்கால முதல் – பொனீசிய (Phoenicians) வாணிகர் முதற்கொண்டு ரோமானிய, நார்மானியத் தலைவர்கள் வரை, ஐரோப்பாவிலிருந்து அடுத்தடுத்துப் போர் விருப்பமுள்ள குடியேறிகள் அலையலையாக இங்கிலாந்திற்கு வந்தனர். அவர்களுள் சிறந்த ஆற்றல் மிக்க கடலோடிகளும், உழவர்களும், வாணிகர்களும் சிறப்புடையவராவர். அவர்கள் இங்கிலாந்தில் வாழ்வதற்காகவும், இங்குள்ள பழங்குடி மக்களிடத்துத் தங்களுடைய அறிவையும் உணர்வையும் அறிவுறுத்துவதற்காகவும் கடல்வழியாக வந்து குடியேறினர். இங்கிலாந்தின் கிழக்குக்

கடற்கரை டியூட்டானிய (Tudtons), ஸ்காண்டிநேவியக் குடியேறிகளுக்குத் தொல்லையில்லாமலே திறந்து கிடந்தது. அவளுடைய தெற்குக் கடற்கரையோரம் விரிந்தும் பரந்தும் அமைந்திருக்கிறது. பிரான்ஸின்மூலம் நடுநிலக் கடற்பகுதியின் நாகரிகப் பண்பாடுகள் இங்கிலாந்தினுள் எளிதில் நுழைந்து செல்வாக்கு பெறுவதற்கேற்றவண்ணம் அக்கடற்கரை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது டியூட்டானிய, ஸ்காண்டிநேவிய மக்களிடமிருந்து அவள், தன் மக்கள் தொகையின் முக்கிய பகுதியினையும், பண்பு நலனையும், ஆங்கில மொழியின் வேரினையும் அரிதின் முயன்று பெற்றனள்; தென் பகுதியிலிருந்து அவளுடைய மொழியின் பிற கூறுகள் அனைத்தையும், அவளுடைய பண்பாட்டின் முக்கிய அமைப்புகளையும், அவளுடைய அமைப்பு முறை திறமையின் பெரும் பகுதியினையும் பெற்றாள்.

ஸ்காண்டிநேவியாவோடு அவள் கொண்டிருந்த தொடர்பினை முறிப்பதற்கு கான்யூட்டு (Canute) என்னும் அரசர் முயன்றார். எனினும், அத்தொடர்பினை நார்மானியரின் வெற்றியே அடியோடு அறுத்தெறிந்தது. பல நூற்றாண்டுகள் வரை நார்டிக்கு இனத்தவரைப் பிரஞ்சு மொழி பேசும் உயர்குடிமக்களும், இலத்தீன் மொழி பேசும் மத குருமார்களும் இங்கிலாந்தில் ஆண்டுவந்தனர். இத்தகைய அயல் நாட்டினரின் தலைமையின் கீழ்தான், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளின் மனவெழுச்சிக்கு முற்றிலும் மாறான நிலையில், ஆங்கிலேயர்கள் தங்களுடைய ஆழ்ந்த நாட்டுணர்ச்சியையும், தனிப்பண்புகள் வாய்ந்த நிலையங்களையும் வளர்த்துக் கொண்டனர். அது நமக்கு வியப்பும் விம்மிதமும் அளிக்கின்றது. சாசர் (Chaucer), விக்ளிப்பு (Wycliffe) வாழ்ந்த காலத்திய ஆங்கிலேய மக்கள் பேரழிவினை உண்டாக்கிய கொடிய நூறாண்டுப் போரில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், இன்னல் நிறைந்த அக்காலத்திலேதான் தனிச் சிறப்பு மிக்க ஆங்கிலேய தேசிய இனம் உருவாகத் தொடங்கியதைக் காண்கிறோம். அத்தேசிய இனம் பழைய சாக்சானியர் இனத்தைவிடச் சிறப்புடையது. கடலின் அலைகள் நம் நாட்டின் கரையோரங்களில் பல திறப்பட்ட இனங்கள், பண்புகள், பண்பாடுகள் முதலியவற்றைக் கொண்டுவந்து ஒதுக்கின. அவற்றின் கூறுகளை இத்தீவின் தட்பவெப்ப நிலை பக்குவப்படுத்தியது. அதன் பிறகு அவற்றை நயமாகப் பொருத்தி ஓரினமாக்கியதாகத் தெரிகிறது. சமயச் சீர்திருத்த இயக்கத்தின்பொழுது ஆங்கில மொழி காளைப்பருவமுற்றது. உடனே ஸ்காண்டிநேவிய, டியூட்டானிய மொழிகளோடு மீண்டும் நெருங்கிய தொடர்பு கொள்ளுவதைத் தவிர்த்தது; தன்னுடைய இலத்தீன் மொழி

யாசிரியர்களைப் புறக்கணிக்கலாயிற்று. இவ்வாறு பிரிட்டன் தானே ஒரு தனி உலகமாகச் சிறப்புற்று விளங்கத் தொடங்கியது.

இங்கிலாந்தின் அரசியல், பண்பாட்டு வளர்ச்சியில் உண்டான இந்நெருக்கடியான நிலையில்தான், அவள் ஐரோப்பாவோடு கொண்டிருந்த தொடர்பு நலிவுறத் தொடங்கியது. அதே சமயத்தில்தான் ஸ்காட்லாந்து இங்கிலாந்துடன் சேர்ந்து ஒரே நாடாயிற்று. அக்காலத்திலேயே நிலவுலகின் பல பகுதிகள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டன. அதனுடைய மூலை முடுக்குகளுக்குச் செல்லுவதற்காக ஆங்கிலேயர்களுக்கு மாபெருங் கடல்கள் புதிய பாதைகளைத் தந்துதவின. ஆங்கில மக்களின் அனைத்துலக அனுபவமும், மனப்பாங்கும் அவர்களுடைய தீவு வாழ்க்கையின் சிறப்பியல்களைப் போலவே சாலச் சிறந்தனவாகும். கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆங்கிலேயர்கள் புதியனவற்றைத் துருவிக் காண்பவர்களாகவும், பெருவாணிகராகவும் சிறப்புற்றுள்ளனர். அவர்கள் உலகின் இரு பெரும் பகுதிகளிலுமுள்ள ஒவ்வொரு கடற்கரையிலும் சென்று குடியேறியுள்ளனர். இவ்வாறு ஆங்கிலேயர் பெற்ற கடல் ஆதிக்கத்தினலுண்டான விளைவே ஆங்கில மன்னர்களின் அனைத்துலக அனுபவமும் சகோதர மனப்பான்மையுமாகும்.

இவ்வாறு பிரிட்டன் பழங்காலத்தில் கடலோடு கொண்டிருந்த தொடர்பு முனைப்பின்றி எளிதில் எதையும் ஏற்றுக் கொள்ளுவதாக இருந்தது; தற்காலத்தில் முயற்சியோடு எதையும் ஈட்டும் — கைப்பற்றும் — ஆர்வம் உடையதாக இருந்து வருகிறது. இவ்விரு இயல்புகளே அவளுடைய வாழ்வின் உயிர் நாடியாகும்; அவளுடைய கதையின் கருமுதலாகும்.

# இங்கிலாந்தின் வரலாறு

(தொகுதி I)

# முதற் பிரிவு

## பண்டைக்காலம் முதல் நார்மானியரின் படையெடுப்பு வரை இங்கிலாந்தில் உண்டான இனக் கலப்பு

### தோற்றுவாய்

பல்வேறு இன மக்களின் குருதிக் கலப்பினை உடையவர்கள் ஆங்கிலேயர் என்பது உலகறிந்த உண்மையாகும். இம் முதற் பிரிவினுள், இங்கிலாந்தில் எப்பொழுது, ஏன், எவ்வாறு பல்வேறு வகைப்பட்ட மக்களினங்கள் கூடிக் கலந்தன என்பதை ஒருவாறு விளக்க விரும்புகின்றேன்.

இப்பொழுது நமது தீவினில் வாழும் மக்களினம், நார்மானியரின் படையெடுப்பின்பொழுது, பல்வேறு மக்களினங்களின் கூட்டுறவால் தோன்றிய, புதியதொரு மக்களினமாக முழு வளர்ச்சிபெற்று விளங்கியது. நார்மானியர்களின் படையெடுப்பினுல் மிகச் சிறிய அளவிற்கே இனக் கலப்பு உண்டாயிற்று. ஆனல், சமூகப் பண்பாட்டுத் துறைகளில் உண்டான மாற்றங்கள் மிகப் பேரளவினதாகும். நார்மானியர்களின் படையெடுப்புடன் வாளையும் வேலையும் காட்டி அச்சுறுத்தி, வன்முறையில் நாட்டினுள் நுழையும் குடியேற்ற முறை ஒருவாறு முடிவிற்கு வந்தது. ஹேஸ்டிங்ஸ் (Hastings) போருக்குப் பிறகு பேரழிவு மிக்க நிகழ்ச்சிகள் ஒன்றும் நடைபெறவில்லை. இதற்கு மாருகப் பையப்பைய அயல்நாட்டுத் தொழில்வல்லாரும் பாட்டாளி மக்களும், உள்நாட்டுப் பழங்குடி மக்களின் உடன்பாட்டினை யேற்று அமைதியாக நம் நாட்டினுள் வந்து புகுந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஃபிளமிங்குகள் (Flemings), ஃபிரஞ்சு நாட்டுப் புராடஸ்டன்ட்டுகளான யூகோனாட்டுகள், (Hugpenots), ஐரிஷ் மக்கள் முதலியோராவர்.

நார்மானியரின் படையெடுப்பிற்கு முன்பு பிரிட்டனின்மீது படையெடுப்பது மிக எளிமையான செயலாகும். ஆனால், நார்மானியர்களின் படையெடுப்பிற்குப் பிறகு பிரிட்டனின்மீது படையெடுப்பது மிகவும் அரிய செயலாயிற்று. இதற்குரிய காரணம் மிகத் தெளிவானதாகும். ஒன்று, நாட்டுணர்ச்சி மிக்க மக்களைக்கொண்ட நாடாக இங்கிலாந்து மாறியமையாகும். கடலில் பேராதிக்கம் செலுத்தக்கூடிய சிறந்த கப்பற்படையினை இங்கிலாந்து பெற்றிருந்தமை மற்றொரு காரணமாகும். அடுத்து இத்தகைய மக்களையும் படைகளையும் கொண்டிருந்த நாட்டில் அரசாங்கம் நன்முறையில் அமைக்கப்பட்டிருந்தது சிறப்பு மிக்க காரணமாகும். அது நாட்டின் நலனைக் கருதி, தற்காப்புக்குரிய வசதிகளைப் பெருக்கிக்கொண்டதில் வியப்பில்லை. ஸ்பெயின் நாட்டின் அரசரான ஃபிலிப்சும், பதினான்காம் லூயியும் அல்லது நெப்போலியனும் ஆங்கிலக் கால்வாயின் அக் கரையில் பெரும் படைகளைக் கொண்டுவந்து குவித்து, இங்கிலாந்தைத் தாக்கப் போவதாக அச்சுறுத்திய சமயங்களில், இக் கரையில் இங்கிலாந்து அச்சமின்றி விளங்கியதற்கு உறுதுணையாக இருந்தது இப் பேராற்றல் மிக்க கப்பற்படையேயாகும். அண்மைக் காலத்திலும் இதற்குரிய வாய்ப்பு வசதிகளை நன்கு பயன் படுத்திச் சிறந்த முறையில் கடற்படை நிறுவப்பட்டது. சிற்சில சமயங்களில் படையெடுப்புச் சக்திகளை இங்கிலாந்து தானே வரவேற்றிருக்கலாம். ஆயினும், ஆங்கிலேய மக்களின் ஒருமித்த ஆதரவைப் பெறாத படையெடுப்புகளுள் ஒன்றுகூட சிறிதளவிற்கும் வெற்றி பெறாமைக்குக் காரணம், கடலாகிய அரணை இங்கிலாந்து பெற்றிருந்தமையேயாகும். மக்களின் ஆதரவைப் பெற்ற டியூடர் அரசர் மரபைச் சார்ந்த ஹென்றியும், ஆரஞ்சின் இளவரசரான வில்லியமும்தான் தங்கள் படையெடுப்புகளில் வெற்றிபெற முடிந்தது. ஆனால், நார்மானியர்களின் படையெடுப்பிற்கு முன்பு, நெடுங்காலம்வரை பிரிட்டிஷ் தீவின் அரசரோ, அதன் நாவாய்ப் படையோ பிறரால் வெல்ல முடியாத பேராற்றல் வாய்ந்ததாக விளங்கவில்லை. ஆல்ஃபிரட்டு (Alfred), ஹாரல்டு போன்ற மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும், அவை தங்கள் கடமையை நிறைவேற்றக்கூடிய ஆற்றல் வாய்ந்தனவாக இல்லை. இதற்கும் முற்பட்ட காலத்தில் அத்தகைய படையே இருந்ததில்லை. நிலவியல் அமைப்பும் வேறு பிற காரணங்களும், பண்டைக்கால பிரிட்டனை அயலாரின் தாக்குதல்களுக்கு எளிதில் இரையாகுமாறு செய்தன. ஆயினும், அக்காலத்து ஒரோவழி ரோமானியச் சிறைக் கப்பல்களும் (galleys) பெரும் படைகளும் இங்கிலாந்தை அயலாரின் படையெடுப்புகளிலிருந்து காப்பாற்றின.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஆயிரக்கணக்கான தொல் பொருட் சின்னங்களை அகழ்ந்தெடுத்து இருக்கின்றனர். அந்த மங்கலான ஒளியினைப் பெற்றும், இங்கிலாந்தில் பல்வேறு இனங்கள் இரண்டறக் கலந்து ஒன்றுபட்ட செய்தியை—நார் மானியரின் படையெடுப்போடு முடிவுறும் கதையினை—ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றினை—தெளிவாக விளக்க முடியவில்லை. கெல்ட்டுகள் (Celt), சாக்சானியர்கள் (Saxon), டேனியர்கள் (Dane) இங்கிலாந்தினுள் நுழைந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், மாக்பெத்து (Macbeth) பூதர்கள் நிறைந்த காட்டகத்தே நிகழ்த்திய போரைப் போன்று காணப்படு கின்றன. பின்னல் நிகழப்போவதை அந் நிகழ்ச்சிகளே முன் கூட்டி அறிவிக்கும் நிலையில் அமைந்திருக்கின்றன. அம் மங்க லான மூடுபனிக்கிடையே கொம்புகள் முழங்குவது கேட்கின்றது; நாகரிகமற்ற மக்களின் கூச்சலும் கொந்தளிப்பும் கொண்ட பேராரவாரம் நம்முடைய செவிகளிலே எதிரொலிக்கிறது. பூசல்களிடையே போர்புரியும் வீரர்களின் அரக்க வடிவங்கள் நொடிப்பொழுது நம் மனக்கண் முன்னே தோன்றி மறை கின்றன. ஆனல், அங்குத் தொல்பழங்காலத்திய மண் கட்டிகளை உழவர்கள் உடைத்துக்கொண்டிருப்பதையும் காணு கின்றோம்; கோடரிகளால் காடுகள் வெட்டி சாய்க்கப்படும் ஓசையினைக் கேட்கின்றோம். இவற்றைச் சுற்றிலும் கடல் அலை களின் இன்னொலியும், கப்பல்களைக் கரையேற்றும் கடலோடி களின் கூச்சலும் கலந்தொலிக்கின்றன.

இயல் 1

# இங்கிலாந்தின் பழங்குடி மக்களாகிய ஐபீரியர்களும் கெல்ட்டிக்குகளும்

பிரிட்டன், தீவாக மாறுவதற்கு முன்பு, ஐரோப்பியப் பெரு நிலப் பரப்போடு நிலத் தொடர்புடையதாக இருந்தது. அத் தொல்பழங்காலத்தில் உண்டான மாபெரும் புவியியல் மாற்றங் களைப்பற்றி நாம் அறிய முடியவில்லை. அங்கு இருந்த எரிமலை யின் குமுறல்களைப்பற்றியோ, மலைகளின் தோற்றமும் அழிவும் பற்றியோ, நிலக்கரிக்குக் காரணமான வெப்பமண்டலச் சதுப்பு நிலக் காடுகளின் அழிவைப்பற்றியோ இங்கு நான் விளக்கப் போவதில்லை. இங்கிலாந்தில் தோன்றிய சீமைச் சுண்ணும்புக் குன்றுகளைப்பற்றியோ விளக்கமாகக் கூறவேண்டும் என்பது என்னுடைய நோக்கமன்று. பனி ஊழிகளுக்கு இடைப்பட்ட


காலத்திய நிலவுலகில், அங்குமிங்கும் அலைந்து திரிந்த ஆதி மனிதன் (Piltdown man) முதற்கொண்டு, இங்கிலாந்தில் நாடோடிகளாக வேட்டையாடி வாழ்ந்த பல்வேறு மக்களினத்தை வேறுபடுத்தி விளக்கவும் (யான்) முயலவில்லை. பனி ஊழிகளுக்குப் பிறகு, வடஐரோப்பாவின் சிறப்புமிக்க இளவேனிற் காலத்தில், ஐயத்துக்கு இடமற்ற தற்கால மக்களினம் (Homo Sapiens) தோன்றியிருக்கலாம். பிற்காலத்தில் பிரிட்டன்[1] என்னும் பெயர்பெற்று விளங்கப்போகும் நாட்டின் மண்ணில் முதன்முதலாக அம் மக்களினம் அக் காலத்தில் தோன்றியிருக்கலாம். கடைசியாகப் பனி ஊழி மறைந்த பிறகு, ஐரோப்பாவிலிருந்து நில இணைப்புகள் வழியாக இங்கிலாந்திற்குத் தொல்பழங்காலக் குடியேறிகள் வந்தனர். அவர்களோடு அல்லது அவர்கள் வருகைக்குச் சிறிது காலத்திற்கு முன்பு பொதுவான வன விலங்குகளும், பறவைகளும், மரங்களும், மலர்களும் இந்நாட்டிற்கு வந்திருக்கவேண்டும். கம்பிளி யானைகளை (Mammoth) வேட்டையாடிய கொடிய விலங்குகளும், குதிரைகளும், கலைமான்களும் பிற்காலத்திய காட்டுமிராண்டி மக்களின் உணவுப் பொருள்களாகப் பயன்பட்டிருக்கலாம். அக் காட்டுமிராண்டி மக்கள் நம்முடைய தொல்பழங்கால மூதாதையர்களுள் ஒருசிலராக இருந்திருக்கலாம். அவர்கள் நில வழியாக இந் நாட்டினுள் நுழைந்த காலத்தில் டோவர் (Dover), காலேய்சு (Calais) பகுதிகளில் கீழ்நோக்கி வளர்ந்துள்ள சீமைச் சுண்ணம்புப் பாறைகள் இடையீடு இல்லாத மலைத்தொடராகவே இருந்திருக்கவேண்டும். அக் காலத்தில் மாண்புமிக்க தேம்ஸ் ஆறு, ரைன் ஆற்றினை நோக்கிப் பாய்ந்தோடியது. வடகடலின் அலைகளுக்கு அடியில் இப்பொழுது மூழ்கிப்போயிருக்கும் சதுப்பு நிலத்தின் வழியாக வளைந்து சென்று, அஃது ஆர்ட்டிக் பெருங் கடலில் கலந்தது. டாக்கர் பாங்கிற்கு அருகிலுள்ள கடலின் மண்ணையெடுக்கும் பொழுது, இன்றைக்கும் கம்பிளி யானைகளினுடைய எலும்புகளும், கலைமான்களுடைய எலும்புகளும் கண்டெடுக்கப்படுகின்றன.

இக் காலத்தில் பிரிட்டனுக்கே சிறப்பாகவுரிய மாவடை மரவடைகள் (fauna and flora) கடந்த பனி ஊழிக் காலத்

[1] 'பிரிட்டன்' என்னும் பெயர் இங்கிலாந்து, வேல்சு இரண்டும் இணைந்த நிலப்பரப்பினைக் குறிப்பதாகும். பிரிட்டனோடு ஸ்காட்லாந்தைச் சேர்த்து 'கிரேட் பிரிட்டன்' (Great Britain) என்பர். இவற்றோடு அயர்லாந்தையும் சேர்த்து 'கிரேட்டர் பிரிட்டன்' (Greater Britain) என்பர், இவற்றை யான் பெரும் பிரிட்டன், மாபெரும் பிரிட்டன் என இந் நூலுள் குறிப்பிட்டுள்ளேன்.

தில் புல்பூண்டுகள் அனைத்தும் ஆழ்ந்தொழிந்த நிலப்பரப்பினைக் குறைவுறாது நிரப்புவதற்காக வடக்கு நோக்கி வந்தன. எனவே, அவை பெரிதும் வட ஐரோப்பாவின் மாவடை மரவடைகளோடு நெருங்கிய ஒப்புமை உடையனவாகக் காணப்படுகின்றன. செந்நிறக் காட்டுக்கோழி வேறு நாடுகளிலும் காண இயலாதது; அது பிரிட்டிஷ் தீவுகளுக்கே சிறப்பாகவுரிய பறவையாகும். அயர்லாந்து டோவர் நிலமுனை (Dover Straits) தோன்றுவதற்கு முன்பு, திடீரென்று இங்கிலாந்து ஐரோப்பாவிலிருந்து கடலினால் துண்டிக்கப் பட்டமையால் அங்குப் பாலூட்டிகளும், தாவரங்களும், ஊர்வனவாகிய விலங்குகளும் மிகமிகக் குறைவாகவே உள்ளன.

பிரிட்டன் தனித்ததோர் தீவாக மாறிய பிறகும், பல நூற்றாண்டுகள் வரை கொடிய விலங்குகள் வாழ்ந்த காடே அங்குப் பேரரசு செலுத்தியது. அதனுடைய பாசியால் மூடப் பெற்ற ஈரக்கசிவுடைய நிலப் பரப்பினை விண்ணுலகிற்குப் புலனாகாதவாறு மறைத்த எண்ணற்ற மரங்கள் பச்சைப் படாம் போர்த்ததைப் போன்று காணப்பட்டது. வேனிற் காலத்துப் பொழுதுபுலர் காலைவேளையில், அவை மெல்லிய பூங்காற்றினால் மெல்ல அசைந்தாடின. அங்கு விழித்தெழும் இலட்சக்கணக்கான பறவைகள் தங்கள் இனிய கீதத்தினால் காட்டில் குடிகொண்டிருந்த அமைதியைக் குலைத்தன. நூற்றுக் கணக்கான கற்கள் தொலைவில் இடையிடையே உள்ள குன்றுகளிலும், சமவெளிகளிலும், மரங்களிலும், மரக்கிளைகளிலும் தொடர்ந்து பன்னெடுங்காலம் இவ்வினிய இசையினைப் பறவைகள் எழுப்பிவந்தன. ஆயினும், மனிதன் அவ்வகை இன்பத்தினை, அத் தொல்பழங்காலத்தில் நுகர்ந்து இன்புறவில்லை. அக் காடுகளில் ஒரேவழியாகத் தோலுடை தரித்த காட்டுமிராண்டி மக்கள் குழாம், கைகளிலே கற்கோடரிகளைக்கொண்டு திரிந்தது. அவர்கள் ஒரு தீவில் இருப்பதை அறியாதவர்களாயும், சேறும் சகதியும் நிறைந்த இக் காட்டு நிலங்களுக்கு அப்பால் உலகின் வேறு பகுதிகள் இருப்பதைப்பற்றி கனவில்கூட நினைக்காதவர்களாயும், திருட்டுத்தனமாக அஞ்சியஞ்சி அங்கு மிங்குமாக அலைந்து திரிந்தனர். அவ்வாறு அலைந்து திரிந்த அம் மனித விலங்குகள், தங்களுக்குப் பேரச்சத்தையும் பெருங் கேடுகளையும் உண்டாக்கிய கொடிய காட்டு விலங்குகளை வேட்டையாடினர். அதைக்கண்டு பிற விலங்குகள் அஞ்சியோடின.




படம் 1.

**ஐபீரிய மக்கள் காலத்திய பிரிட்டன்**

குறிப்பு: இங்கிலாந்தின் பெரும்பகுதி, அடர்த்தியான காடுகள் நிறைந்ததாயும் வளர்ச்சி குறைந்ததாயும் இருந்திருக்கவேண்டும். இவற்றிற்கு விதிவிலக்காக மிக உயர்ந்த மலைகளில் பலவற்றையும், ஆற்று வெளிகளையும், சீமைச்சுண்ணாம்புப் பள்ளத்தாக்குகளையும் கூறலாம்.

நிலவியல் உலகப் படத்தை நோக்கினல், ஐரோப்பியப் பெரு நிலப்பரப்பிற்கு வெளியே ஒதுக்குப்புறமாக பிரிட்டன் அமைந்திருப்பதைக் காணலாம். தாழ்வான கடற்கரையின் பின்னல் அலை அலையாக அமைந்திருக்கும் சமவெளிகளை உடையதாக இங்கிலாந்து அமைந்துள்ளது. துறைமுகங்களின் வழியாக அமைந்துள்ள ஆறுகளின் வழியே எளிதாக யாரும் உள்ளே நுழைவதற்கேற்றவாறும், மரக்கலங்களின் போக்குவரத்திற்கு வசதியாகவும் பிரிட்டனின் இயற்கை அமைப்பு இருந்துவருகிறது. அட்லாண்டிக் பெருங் கடலிற்கு எதிராகவுள்ள வடக்குப் பக்கத்திலும் மேற்குப் பக்கத்திலும்தான் மலைகள் நிறைந்துள்ளன. அவற்றை அடுத்து யாரும் எளிதில் புக முடியாத கடற்கரையும் இருக்கின்றது. ஆயினும், அவ்விடத்திலும் செவர்ன், டீ (Dee), மெர்சி (Mersey), கிளைடி (Clyde) முதலிய சிற்ருறுகளின் கழிமுகங்கள் இந் நாட்டின் பிற்கால வரலாற்றினை உருவாக்குவதில் முனைந்துநின்றன. ஆனல், தொல்பழங்காலம் முதல் சமதளமான தெற்குப் பகுதியையும், சமவெளிகளையும், தாழ்ந்த வரம்புகளையும் கிழக்குக் கடற்கரைப் பகுதிக்குப் பின்புறத்தில் காணலாம். அப் பகுதியைக் கப்பற்படை காவல்புரியாத காலத்தில் குடியேற்றப் பழங்குடி மக்களும், கடற்கொள்ளைக்காரர்களும், கொள்ளைக்காரக் கூட்டங்களும், ஐரோப்பியக் கடற்கரைகளில் சுற்றித் திரிந்துகொண்டிருந்த வாணிகர்களும் அப் பகுதிகளால் பெரிதும் கவரப்பட்டனர். அவற்றைக் கைப்பற்றவேண்டும் என்னும் பேரார்வம் கொண்டவராய்த் தக்க சமயத்தை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர்.

ரோமானியப் பேரரசு நிறுவப்படுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, நடுநிலக் கடற்பகுதியைச் சார்ந்த வாணிகர்கள் சிலர் இத் தீவைப்பற்றி அறிந்திருந்தனர். அக் காலத்தில் பிரிட்டன் முத்திற்கும், பொன்னிற்கும், தகரத்திற்கும் பெயர்பெற்று விளங்கியதைப் போன்றே, வரலாற்றுக் காலம் நெடுக அயலாரின் உள்ளங்களைக் கவர்ந்து தன்மீது படையெடுக்குமாறு தூண்டி வந்தது. இங்கிலாந்தின் நிலவளமும், செழிப்புமிக்க புல்வெளியும், வளம் மிக்க உரம்வாய்ந்த மரங்கள் நிறைந்த காடுகளும், மூடுபனியினல் வடகோடியிலிருந்தும் துன்புருத வியக்கத்தக்க இயற்கை வளமும் இத் தூண்டுதலுக்குக் காரணமாக இருந்து வந்தன. மக்கள், வளைகுடா வெப்ப நீரோட்டத்தால் இங்கிலாந்து மூடுபனியினல் அல்லலுறவில்லை என்னும் உண்மையினை

உணரும் வரை, இங்கிலாந்து ஒரு வியத்தகு நிலமாகவே உலகிற்குக் காட்சியளித்தது.[1]

பிரிட்டனின் காடுகளில் வனவிலங்குகளும் பறவைகளும் பேரளவில் எங்கும் நிறைந்து காணப்பட்டன. எனவே, அங்கு வாழ்ந்த ஆதிமனிதன் திறமைவாய்ந்த வேடனாக விளங்கினான். நீர்க்கால் வடிந்துவிட்ட நெடுங்காலத்திற்குப் பிறகும், எல்லா மாவட்டங்களிலும் தாழ்ந்த சேற்று நிலங்களில் மீன்களும் கோழிகளும் நிறைந்திருந்தன. இத்தகைய தாழ்ந்த சேற்று நிலங்கள் பிற்காலத்திய கேம்பிரிட்ஜுக்கும், பிற்காலத்திய லிங்கனுக்கும் இடைப்பட்ட பகுதியில் மிகுதியாக இருந்தன. எண்ணற்ற தலைமுறைகளைச் சார்ந்த மீனவரும் கோழிபிடிப்போரும், சக்கிமுக்கிக் கற்களினால் செதுக்கப்பட்ட தங்களுடைய கருவிகளையும் படைக்கலன்களையும், தாழ்ந்த சேற்று நிலங்களின் நீர்நிலைகளிலும் பக்கத்தே இருந்த புதர் அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும் விட்டுச் சென்றனர். அவை இன்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு, அக்கால மக்களுடைய வாழ்க்கையை உய்த்துணரப் பேருதவிபுரிகின்றன. மக்கள் ஆடு மாடுகளை மேய்த்து வாழத் தொடங்கிய காலத்தில் தெற்கிலுள்ள சீமைச் சுண்ணம்புப் பள்ளத்தாக்குகள் அவர்களுக்குப் பேரின்பம் அளித்தன. மேலும், அவை பெருஞ்செல்வமாகவும் விளங்கின. பன்றி வளர்த்த அஞ்சாமை மிக்க மக்கள், கீழ்ப்பகுதியிலுள்ள இருளடர்ந்த காடுகளுக்கு வேடுவர்களைப் பின்தொடர்ந்து சென்றனர்.

நாட்டின் பல பகுதிகளில் சக்கிமுக்கிக் கற்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தவை சீமைச் சுண்ணம்புக் கற்களோடு புதைந்து கிடந்தவையாகும். இத்தீவில் ஆதிகாலத்தில் அவர்கள் சுரங்கங்களை வெட்டினர். அவர்கள் முப்பது அடிகளுக்கும் மேற்பட்ட ஆழமுடைய கிணறுகளைச் சுரங்கங்களில் தோண்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்குப் பிறகு கலைமான்களின் கொம்புகளைக்கொண்டு இன்னும் ஆழமாகத் தோண்டினர். அவர்கள் தங்கள் தோள்களினால் பாறைகளைத்

[1] பிரிட்டனில் கொடியகுளிர் மக்களை வாட்டவில்லை என்பதை சிசரும், டாசிடசும் அக்காலத்திலேயே நன்குணர்ந்திருந்தனர். டாசிடசு 'இங்கிலாந்தில் வானம் எப்பொழுதும் மேகங்களாலும் மழையினாலும் மூடப்பட்டிருக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார். பிரிட்டனில், வானிலையும் வெப்பநிலையும் விரைவாக மாற்றமுறுவதனால் ஒவ்வொரு பருவத்திலும் அங்கு வாழும் மக்களுக்குச் சிறந்த, வற்றாத இன்பத்தை அளிக்கிறது. மேலும், அது நம்முடைய உடலாற்றலையும் உள்ள உரத்தையும் கிளர்ந்தெழச் செய்து, நம்மை 'ஆங்கிலேயர்களாக' ஆக்குகிறது. உண்மையில் அஃது இங்கிலாந்தின் பெறற்கரிய பேறேயாகும். ஆயினும், படையெடுப்பாளர்கள் அதற்காகவே படையெடுத்திருப்பார்கள் என்று கூறுவது பொருந்தாது.

தாங்கி, அவற்றைப் பெயர்த்தும் தள்ளினர். சீமைச் சுண்ணம்புப் பாறைகளினிடையே படிமேடைகளைச் செதுக்கி, அன்றைய உலகில் அவர்களைத் தலைவர்களாக விளங்கச் செய்த சக்கிமுக்கிக் கற்களை அகழ்ந்தெடுத்தனர். பழங்கற்காலம் எனப் போற்றப் படுவதற்குக் காரணமாகவுள்ளவை, நயப்பின்றி கரடுமுரடாகச் செய்யப்பட்ட கற்கருவிகளாகும். அவை அனைத்தும் சக்கிமுக்கிக் கற்களாலே இங்குச் செய்யப்பட்டன. அக்கருவிகள் கண்ணுக்குப் புலனாகாதவாறு மெல்ல மெல்ல மறைந்து 'புதிய கற்கால' நாகரிகம் தோன்றியது. அக்காலத்திய மனிதன் சக்கிமுக்கிக் கற்களால் தான் செய்த கருவிகளையும், படைக்கலங்களையும் நயப்பும் வழவழப்பும் உடையனவாக விளங்குமாறு மெருகிடக் கற்றுக் கொண்டான்.

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இங்கிலாந்தில் 'வெண்கலக் கால' நாகரிகம் அரும்பியது. அதற்குப் பிறகு ஆயிரம் ஆண்டுகள் கழித்து 'இரும்புக் கால' நாகரிகமும், பேரளவில் கிடைத்த வேறு பல உலோகங்களைப் பயன்படுத்தும் உலோக நாகரிக ஊழியும் தோன்றின. அங்குக் கிடைத்த உலோகங்களை உருக்குவதற்குவேண்டிய மரங்களும் ஏராளமாகக் கிடைத்தன. வீடுகள் கட்டுவதற்கும், எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கும் தேவையான பலவகைப்பட்ட மரங்கள், எங்குப் பார்த்தாலும் வானளாவ உயர்ந்து வளர்ந்திருந்தன. புதுப் புனல் எங்கும் பரவியிருந்தது. புதை சாக்கடைகளும் கிணறுகளும் தோண்டப்படுவதற்கு முன்பெல்லாம், இன்றைய இங்கிலாந்தின் தென்பகுதியைக் காட்டிலும் மேட்டு நிலங்களில் முட்டுப்பாடின்றித் தண்ணீர் கிடைத்து வந்தமை சிறப்பு மிக்க செய்தியாகும். புதுப் புனலைச் சார்ந்தே நாகரிகத்தின் தொடக்க காலத்தில் அமைக்கப்பட்ட குடிசைகளின் வட்டங்களும், 'டூம்ஸ்டே' நில அளவைக் (Domesday Survey) காலத்தில் கட்டப்பட்ட, சாக்சானிய நகரக் குடியிருப்புகளைக் கொண்ட கிராமங்களின் அழிவுச் சின்னங்களும் காணப்படுகின்றன.

நாகரிக வளர்ச்சியின் இறுதிநிலையில் உழவுத் தொழிலினை மனிதன் கற்றான். அவன் நிலத்தை உழுது, விதைகளை விதைத்துப் பயிரிடக் கற்றபொழுது, இங்கிலாந்தின் கிழக்குப் பகுதியும், தெற்குப் பகுதியும் பலமடங்கு அதிக உற்பத்தியைத் தந்தன. தற்காலத்தில் உலகச் சந்தையில் தானியங்களின் விலை பற்பல சூழ்நிலைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும், கதிரவனின் வெப்பம்மிக்க அப் பகுதிகளில் இன்னும் கோதுமை பயிரிடுவது

ஆதாயமிக்க தொழிலாகவே இருந்துவருகிறது. மனித இனத்தின் தொடக்க கால வாழ்க்கையில், உழவுத் தொழில் மாபெரும் மாற்றத்தை உண்டாக்கியது எனலாம். உழவுத் தொழில் மனிதனின் இனப்பெருக்கத்திற்கு உதவியது.

அவனைக் குடியும் வீடுமாக ஒரே இடத்தில் நிலைத்து வாழப் பேருதவிபுரிந்தது. அவனுடைய தொழிலுக்கு இன்றியமையாத நிலத்தினைவிட்டுப் பிரியாது வாழச் செய்தது. மேலும், மக்கள் ஒன்றுகூடி, சமூகக் குழுக்களாக ஒற்றுமையுடன் வாழவும், ஊர்களை அமைத்துக் கலைகளை வளர்த்துப் புதியன புனைந்து கருத்து வகையால் உயர்ந்த பல முன்னேற்றங்களை எளிதில் அடையவும் தூண்டுகோலாக உழவுத் தொழில் விளங்கியதை—விளங்குவதை வரலாறு எடுத்துரைக்கிறது. பிரிட்டனில் உழவுத் தொழில் மிக மெல்லவே நாட்டு மக்களுடைய உள்ளத்தைக் கவர்ந்தது. சாக்சானியர் செல்வாக்குப் பெற்ற காலத்தில்தான், இன்றைக்குக் காணப்படும் சிற்றூர்கள் அனைத்தும், காடுகெடுத்து நாடாக்கப் பட்டன; குளம் தொட்டு வளம் பெருக்கப்பட்டன. இவ்வாறு அவை சிறப்புறத் தொடங்கின. அக் காலத்தின் பிற்பகுதியில் தான் உழவுத் தொழில் சிறந்ததொரு நிலையினை அடைந்தது. ஆனால், வரலாற்றுக் காலத்திற்கு முன்பே, தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில்மட்டும்—சேறும் சகதியுமற்ற, காடும் மேடுமற்ற, வெறும் பொட்டல் காடாக இல்லாத சமவெளிப் பகுதிகளில், முதன்முதலாக வேளாண்மைத் தொழில் செய்யப்பட்டது.

இத்தகைய கவர்ச்சிகள் நிறைந்ததாய், அத் தொல்பழங் காலத்திலேயே இங்கிலாந்து சிறப்புற்றிருந்தது. அதனால், எண்ணற்ற படையெடுப்பாளர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. நார்வேயிலிருந்து உஷன்ட்டு (Ushant) வரை ஈராயிரம் கற்களுக்கு நீண்டமைந்துள்ள, வட ஐரோப்பியக் கடற்கரை அடிவட்டத்தின் நடுமையாக பிரிட்டன் அமைந்திருக்கிறது. அதனால், அஃது எல்லோருடைய கருத்தையும் எளிதில் கவர்ந்தது. வரலாற்றுக் காலம் என்னும் நாகரிகத்தின் அருணோதயத்திற்கு முன்பிருந்து நார்மானியர்களின் படையெடுப்புவரை ஐரோப்பியப் பெருநிலப்பரப்பின் கடற்கரையோரங்களிலிருந்து அடுத்தடுத்து நாகரீக மக்கள் வந்தனர். அவர்கள் தங்களுக்கு இயற்கை அளிக்கும் இரையாகவே இங்கிலாந்தைக் கருதினர். மேலும், நாடோடி மக்கள் ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியிலிருந்து மேற்கு நோக்கியே அலைந்து திரிந்துகொண்டிருந்தனர். அதனால் உண்டான நெருக்கடியால்தான், இங்கிலாந்து அடிக்கடி மாற்றாரின் தாக்குதல்களால் துன்புற்றது. பல்லாயிரக்கணக்

கான ஆண்டுகளாகக் கடல் மறவர்கள் ஓயாது அலையலையாக வந்துகொண்டிருந்தனர்; அல்லது வேறு பல இன மக்களைப் பிற முரட்டினத்தார் விரட்டியடித்தனர். இவ்வாறு பிரிட்டனின் தெற்குக் கடற்கரைப் பகுதியிலும், கிழக்குக் கடற்கரைப் பகுதியிலும் பழங்குடி மக்கள் வந்து குடியேறிக்கொண்டிருந்தனர்.

புதிய குடியேறிகளின் குழுக்கள் ஒவ்வொன்றும் இத்தீவினுள் பாதி வழிக்குமேல் வெற்றியோடு நுழைந்தன. அதற்குப் பிறகு தான், அவர்கள் தங்களை மேற்கொண்டு முன்னேறிச் செல்ல வொட்டாமல் தடுத்துத் துன்புறுத்தும் காட்டு நிலங்களையும் புதை சேற்றினையும் கண்டு அச்சமுற்றனர். ஆனால், காடுகளினூடே புகுந்து செல்ல முடியாத இடங்களிலும், பள்ளத்தாக்குகள் நீர் நிறைந்தும் புதைசேறு மிக்கதாயும் உள்ள இடங்களிலும், ஆற்றில் படகுகளைச் செலுத்தியும், புதர் நிறைந்த காடுகளைச் சுற்றிக் கொண்டும் படையெடுப்பாளர்கள் நாட்டினுள்ளே செல்லுவதற்கு முயன்றனர். ஆதிமனிதர்களின் மேட்டுநிலக் குடியிருப்புகளும், பாதைகளும், பனிக் குளங்களும் இருந்து அழிந்த இடங்களில் தொல்பொருள் சின்னங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. அப் பகுதிகளில் எல்லாம் இக் காலத்தில் செம்மறி ஆடுகளும், 'புளோவர்சு' (plovers) என்னும் பறவைக் கூட்டங்களுமே பெருந்திரளாகக் கூடுகின்றன. இதனால், காடுகெடுத்து நாடாக்கப்படுவதற்கு முன்பும், பள்ளத்தாக்குகளிலிருந்து தண்ணீர் வடிந்து நன்னிலமாவதற்கு முன்பும், மக்கள் வாழ்க்கையில் மேட்டு நிலங்கள் பெற்றிருந்த செல்வாக்கினை நாம் ஒருவாறு உய்த்துணர முடிகிறது.

படையெடுப்பாளர்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது முறையாகப் படையெடுத்து இங்கிலாந்தினுள் முன்னேறிச் சென்ற பொழுதுதான், அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இயற்கை இடைமறித்து நிற்பதைக் கண்டு அஞ்சினர். வேல்சில் உள்ள மலைத்தொடரும், வடமேற்கு இங்கிலாந்து ஸ்காட்லாந்து பகுதியிலுள்ள மலைத்தொடர்களும், எளிதில் தம்மை யாரும் கடந்து செல்லவொட்டாது தடுத்து நிறுத்தின. இங்கு இதுவரை பின்வாங்கி ஓடியவர்கள், ஒருங்கு திரண்டு தங்களை விரட்டியவர்களை எதிர்த்து நின்றனர். ஆனால், அவர்களை இதுவரை விரட்டிக்கொண்டு வந்தவர்கள் முன்னேற வொட்டாது தடுத்து நிறுத்தப்பெற்றனர். இத்தகைய மலைத்தொடர்களில்லாமல் இங்கிலாந்து வெறும் சமவெளிகளையுடைய நாடாகவே இருந்திருக்குமானால், இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்தவர்கள் எல்லாருமே அத்தீவின்

முழுவதிலும் விரைவிலே சென்று, அதன் எட்டுத் திக்குகளிலும் தங்கள் வெற்றிக்கொடியை நாட்டியிருப்பர். அவ்வாறு நிகழ்ந்திருந்தால், இன்று இங்கிலாந்தில் காணப்படுவதைப் போல இன வேறுபாட்டின் அடிப்படையில் பிரித்துணரப்படும் வேல்சையும், ஸ்காட்லாந்தின் மேட்டுநிலப் பகுதியையும் கொண்டு விளங்கும் 'கெல்ட்டிக்குகளின் பிரிட்டன்' (Celtic Britain) என்றும், சாக்சானியர்களின் பழங்குடி மக்கள் கி.பி. ஆறும் நூற்றுண்டில் வேல்ஸைக் கடந்து அயர்லாந்திலும் குடியேறி விட்டமையால், எஞ்சிய இங்கிலாந்தும் அயர்லாந்தும், சாக்சானிய இங்கிலாந்து என்றும் வேறுபடுத்தி உரைக்கும் வழக்கம் தோன்றி இருக்காது. உண்மையிலேயே அயர்லாந்தின் பெரும் புல்வெளிக்குக் கி.பி. பன்னிரண்டாம் நூற்றுண்டில்தான் ஸ்டிராங்போ என்னும் நிலமானியப் படைத்தலைவரின் கீழ், ஆங்கிலேயர்கள் முதன்முதலாகச் சென்று தங்கினர். முதன்முதல் விரைந்தோடிய சாக்சானியக் குடியேறிகளை வேல்ஸ், பென்னிஸ் பகுதிகளிலுள்ள மலைகள் தடுத்து நிறுத்தின. இதைப் போன்றே தொல்பழங்காலத்தில் ஐபீரியர்களும் கெல்ட்டிக்குகளும் படையெடுத்து வந்தபொழுது நடந்திருக்க வேண்டும். அவர்களுடைய படையெடுப்புகளைப்பற்றிய எழுத்துச் சான்றுகள் கிடைத்திருந்தால், இது உறுதிப்பட்டிருக்கும். நிலவியல், வரலாற்றினை ஆட்சி புரிகிறது எனலாம். இப்பொழுது இங்கிலாந்தில் உள்ளதைப் போன்று இல்லாமல், இங்கிலாந்தின் தெற்குக் கடற்கரைப் பகுதியிலும் கிழக்குக் கடற்கரைப் பகுதியிலும் மலைத்தொடர்கள் இருந்திருந்தால், ஐரோப்பாவினின்று படையெடுத்துவந்த நாடோடிகள் எளிதில் இங்கிலாந்தினுள் நுழைந்திருக்க முடியாது. ஆற்றல் மிக்க காட்டுமிராண்டிகளின் பல்வேறு இனமக்களைக் கொண்ட ஒரு கொள்கலமாகப் பண்டைக் காலத்திலேயே இங்கிலாந்து மாறியிருக்காது. தற்காலத்தில் மனிதன் இயற்கையை ஏவல் கொள்ள—அதன் ஆற்றலை அடக்கியாள முயலுகிருன். ஆனல், அதை அறியாத அப் பழங்காலத்தில், ஒரு நாட்டின் நிலவியல் அமைப்பு அந்நாட்டின் பழங்காலக் குடியேற்றத்தினைப்பற்றி அறியப் பேருதவியாய் இருந்துவருகிறது.

எனவே, பிரிட்டனின் இத்தகைய நிலவியல் அமைப்பின் காரணமாக மேற்கண்ட பொது அடிப்படையில், மீண்டும் மீண்டும் பழங்குடி மக்களின் படையெடுப்புகள் தொடர்ந்து நடைபெற்றன. அடிக்கடி, ஆனல், எத்துணைக் காலத்திற்குள் என்று திட்டவட்டமாகக் கூற முடியாத அளவிற்கு, மேலும் மேலும் கற்காலம் முதற்கொண்டு டேனியர்கள் படையெடுப்பு

வரை, யாதாகிலும் ஓரினத்தைச் சார்ந்த போர்வீரர்கள் படையெடுத்தவண்ணமிருந்தனர். அவர்கள் இன்றைக்கு ஃபிரான்சு, ஹாலந்து, ஜெர்மனி அல்லது ஸ்காண்டிநேவியா என வழங்கும் நாடுகளிலிருந்து ஓயாது கடலைக் கடந்து வந்து, இங்கிலாந்தினைத் தாக்கிக்கொண்டிருந்தனர். அவர்கள் இங்கிலாந்தின் வளமிக்க தெற்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் குடியேற்றங்களை அமைத்தனர். அவர்கள் அப் பகுதிகளில் வாழ்ந்துவந்த பழங்குடி மக்களைக் கொன்றும், அடிமைப்படுத்தியும், எதிர்த்து நின்றோரைக் காட்டிற்குள் விரட்டியும், தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

நெடுங்காலத்திற்கு முன்பே பிரிட்டனில் கலப்புற்று வாழத் தொடங்கிய பல்வேறு இன மக்களின் குடியேற்றங்கள், பலதரப் பட்டனவாய் இன்று விளங்குவதற்கு மேற்கூறியதே காரணமாகும். காரன்வாலிலும், வேல்ஸிலும், ஸ்காட்லாந்திலும், மேட்டுநிலங்களிலும் வாழும் மக்கள் தொல்பழங்காலப் பழங்குடி மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்களை நாம் நமது நாட்டின் 'கெல்ட்டுகளின் வழித்தோன்றல்கள்' எனக் குறிப்பிடுகின்றோம். ஆனால், அவர்களுள் பெரும்பாலோர், ஐரிஷ் மக்களைப்போலவே, கெல்ட்டிக்கு மக்களுக்கு முன்பு, நம் நாட்டில் வாழ்ந்துவந்த ஆதிமக்களின் வழித்தோன்றல்களாவர். மேற்கு ஐரோப்பாவிற்கு மிகப் பிற்காலத்தில் வந்த கெல்ட்டிக்குகள், உயர்ந்த தோற்றமும் செம்பட்டை மயிரும் உடையவர்கள். ஜூலியஸ் சீசரின் வருகைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே, அவர்கள் பிரிட்டனிலும் அயர்லாந்திலும் அடியெடுத்து வைத்தனர். இன்று நாம் 'கெல்ட்டிக்குகள்' என்று தவறுதலாக அழைக்கும் பழங்குடி மக்களுள் பெரும்பான்மையோர் கருநிறத் தலைமயிரை யுடையவர்கள். அவர்களுடைய மூதாதையர்கள் செந்நிறக் கெல்ட்டிக்குகளைப்பற்றி இங்கிலாந்து கேள்வியுறுவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்நாட்டில் நிலையாகத் தங்கி வாழ்ந்துவருபவராவர். அவர்கள், மாத்தியூ ஆர்னல்டு (Matthew Arnold) தன்னுடைய பாடல் ஒன்றில் 'கருநிற ஐபீரியர்கள்' என்றும், 'நாணம் மிக்க வாணிகர்கள்' என்றும், பொனிசிய வாணிகர்களோடு நம் நாட்டுக்கு வந்த வாணிகர் குழாத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வருணித்துள்ள மக்களினத்தைச் சேர்ந்தவர்களாவர்.

எனவே, நாம் கெல்ட்டிக்கு மக்களுக்கு முற்பட்ட பழங்குடி மக்களை 'ஐபீரியர்கள்' (Iberians) என்னும் குழுப் பெயரால் குறிப்பிடுவதே சாலச் சிறப்புடையதாகும். அக் குழுவில் பல

இன மக்கள் இருந்திருந்தாலும், எல்லாரும் கருநிறத் தலைமயிருடையவர்களாக இல்லாமற் போனாலும், அவர்களுள் பெரும்பான்மையோர் ஐபீரிய இனத்திற்குரிய பண்புகளை—இனக்கூறுகளையுடையவர்களாக இருக்கின்றனர். எனவே, அவர்களை 'ஐபீரியர்' என்னும் குழுப் பெயரால் குறிப்பிடுவது தவறாகாது.[1] தற்கால ஆங்கிலேயர்கள் ஒவ்வொருவரின் நரம்பிலும் சிறிதளவு ஐபீரியரின் குருதி கொப்புளித்து ஓடுகிறது எனலாம். அவ்வாறே ஸ்காட்டியர்களிடத்துச் சிறிது அதிகமாகவும், வெல்ஷ், ஐரிஷ் மக்களிடத்து மிகுதியாகவும் ஓடுகிறதெனலாம். பிரிட்டனில் நெடுங்காலம் நிலைத்திருந்த கற்கால நாகரிகக் காலத்திலும், வெண்கல நாகரிகக் காலத்திலும், ஐபீரியர் காட்டுமிராண்டி வாழ்க்கையினின்று மெல்லமெல்ல வளர்ச்சியுற்று நாகரிக வாழ்க்கையின் முதற்படியினை எட்டிப் பிடித்தனர். முதன்முதலில் சக்கிமுக்கிக் கற்களைப் பயன்படுத்தி வாழ்ந்த வேடர்களாகவும், அதன்பிறகு ஆடுமாடுகளை மேய்க்கும் ஆயர்களாகவும் அவர்கள் வாழ்ந்தனர். அக்காலத்தில் நாய்களையும், செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும், எருதுகளையும், பன்றிகளையும் பயன்படுத்திப் பல வேலைகளைச் செய்துகொள்ளவும் அவர்கள் கற்றிருந்தனர். மேலும், அவற்றின் பொருள்களை எவ்வாறு தாங்கள் பயன்படுத்திக்கொள்ளுவது என்பதைப் பற்றியும் அவர்கள் அனுபவத்தின்மூலம் நன்கறிந்திருந்தனர். நாளடைவில் அவர்கள் உலோகங்களைப் பயன்படுத்தவும் கற்றனர். வெண்கலத்தினைப் பயன்படுத்த கற்ற பிறகு, அவர்கள் உழவுத் தொழிலை முதன்மையாகக்கொண்ட பல வகைத் தொழில்களிலும், நூலினை நூற்று ஆடைகளை நெய்வதிலும் தேர்ச்சிபெற்றனர். இதற்கு முற்பட்ட பழங்காலத்தில் இருநூறு, முந்நூறு பேர்களைக்கொண்ட அரசியல் குழுக்களாக விளங்கிய பழங்குடி மக்களினம், கரடிகளையும் ஓநாய்களையும் கண்டு அஞ்சியஞ்சி வாழ்ந்த மக்களினம், மிக அருகிலே உள்ள வேற்றினப் பழங்குடி மக்களைக் கண்டு பேரச்சம்கொண்டு வாழ்ந்த மக்களினம், மிகச் சிறந்ததோர் அரசியல் அமைப்பினை அமைத்து, தம் இனத்தின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டது. இவ் ஐபீரிய மக்களினத்தார் டோர்செஸ்டருக்கு அருகில் அறிவியல் அடிப்படையில் வகுக்கப்பட்ட போரியல் திட்டப்படி 'மெய்டன் காசில்' (Maiden Castle) என்னும் மாபெரு மண்கோட்டையினைக் கட்டினர். மேலும், அவர்கள்

[1] கெல்ட்டிக்குகளுக்கு முற்பட்ட பழங்குடி மக்களினத்தவருள் சிலரைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் 'நடுநிலக் கடலினத்தவர்' (Mediterraneaus) என்றும், வேறு சிலரை 'அல்பைனர்' (Alpines) என்றும் அழைக்கின்றனர்.

பொறியியற் கலைஞர்கள் கண்டு வியக்கத்தக்க மாபெருங் கற் கோபுரங்களை எழுப்பியுள்ளனர். அவர்களுள் முதன்முதல் குடியேற வந்தவர்கள் பரிசல் அல்லது வள்ளம் போன்ற குறும் படகுகளில் இங்கிலாந்திற்கு வந்தனரேனும், அவர்கள் 'நீண்ட கப்பல்களை'யும், தாழ்வான போர்க் கப்பல்களையும் கட்டுவதற்குக் கற்றுக்கொண்டனர்.

இத்தகைய பெரு முன்னேற்றத்திற்குரிய கலைகளுள் பெரும்பாலானவற்றை—சிறப்பாக வேளாண்மை, உலோக வேலை, நீண்ட கப்பல்களைக் கட்டும் வேலை முதலியவற்றைத் தெற்கிலிருந்து வந்த வாணிகர்களோ, அவ் வாணிகர்களிடமிருந்து அக் கலைகளைக் கற்றுத் தேர்ந்த ஐரோப்பியப் பழங்குடி மக்களோ இத் தீவின் பழங்குடி மக்களுக்குக் கற்பித்திருக்க வேண்டும். லெவான்ட் (Levant) ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ப்புத் தொட்டிலாக இருந்தது. டையர் (Tyre), ஏதன்சு, ரோமாபுரி போன்ற நகரங்கள் தோன்றுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, மெசொபட்டோமிய, எகிப்திய, கிரித்து (Crete) நாட்டு மக்கள் வேளாண்மைத் தொழிலையும், வேலைத்திறத்தையும், கப்பல் கட்டும் தொழிலையும், இன்னும் வாழ்க்கைக்கு இன்றியமையாது தேவைப்படும் பலவகையான பயன் கலைகளையும் முதன்முதல் உலகிற்கு அளித்தனர். இத்தகைய புராமிதியஸ்[1] (Prometheaus) அம்பலப்படுத்திய மறைபொருள்களை எல்லாம் தெற்கிலும் கிழக்கிலும் இருந்து தொடங்கப்பெற்ற அவர்களுடைய பயணத்தில் பிறருக்குக் கற்பித்தனர். அவை ஐரோப்பாவின் நாகரிகமற்ற காட்டு மக்கள் வாழும் பகுதிகளிடையே ஒரு வாணிகரிடமிருந்து இன்னொரு வாணிகரிடமும், ஓரினப் பழங்குடி மக்களிடமிருந்து பிறிதொரு பழங்குடி இன மக்களிடமும் கைமாறிச் சென்று 'தகரத் தீவுகள்' என்று கற்பனைக் கதைகள் புகலும் வடகடலின் மூடுபனியிடையேயும் அலைகளிடையேயும் அமைந்துள்ள இங்கிலாந்தினை அடைந்தன.

லெவான்டோடு பிரிட்டன் செய்த வாணிகம் அல்லது லெவான்டு பிரிட்டனோடு செய்த வாணிகம் சற்று மிகுதியாக இருந்தது. இவ்வாணிக உறவு கெல்ட்டிக்குகளின் கைப்பற்று

[1] கிரேக்க நாட்டுத் தெய்வங்களுக்கு எதிராக, மக்களுக்கு உதவி செய்த அசுர மரபைச் சேர்ந்தவன் புராமிதியஸ். அவன் விண்ணுலகிலிருந்து நெருப்பினைத் திருடிக் கொண்டுவந்து மக்களுக்கு அளித்தான்; மக்களுக்குத் தெரியவொட்டாது மறைத்துவைக்கப்பட்டிருந்த வேறு பல்வகையான வாழ்க்கைக்குரிய கலைகளை மக்களுக்குக் கற்பித்தமையால், சீயஸ் (Zeus) என்ற கிரேக்க நாட்டுத் தலைமைத் தெய்வத்தால் அவன் ஒறுக்கப்பட்டான்.

தலைக் காட்டிலும் மிகப் பழமையானதாகும். கி. மு. 2500 ஆம் ஆண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் திட்டிக்கல் (jet) ஸ்பெயினில் கிடைத்திருக்கிறது. கி. மு. 1300ஆம் ஆண்டுக் காலத்தைச் சார்ந்த எகிப்திய உருண்டை மணிகள் இங்கிலாந்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்துணைப் பழங்காலத்தில் அல்லது அதைவிட இன்னும் மிக முற்பட்ட காலத்தில், நடுநிலக் கடற்பகுதியினைச் சார்ந்த வாணிகர்கள் இன்று கிடைத்தற்கரியதாகப் போன பொன், முத்துகள் போன்ற அரிய பொருள்களுக்கும் இங்கிலாந்து பெயர்பெற்றிருந்ததை நன்கு அறிந்திருந்தனர். இத்தகைய கீழ்த்திசை மக்கள் இங்கிலாந்திற்கு நாகரிகத்தினைக் கொண்டுவந்து புகுத்திய பெருமைக்கு உரியவர்களாவர். ஐபீரிய மக்கள் அவர்களிடமிருந்து கற்ற கலைகளைத் தங்கள் சூழ்நிலைக்கேற்ப மாற்றியும் திருத்தியும் அமைத்து வளர்ப்பதில் அறிவாற்றல் நிரம்பியவர்களாக விளங்கினர் என்பதை நாம் அவர்களுடைய நாகரிக வளர்ச்சியால் அறிகிறோம்.

இத் தீவினுள் மிகப் பழைமையானவையாகக் கண்டெடுக்கப்பட்ட வெண்கலத்தாலான படைக்கருவிகளை வாணிகர்களேனும், சில வெற்றி மிக்க படையெடுப்பாளர்களேனும் கடல்கடந்த நாடுகளிலிருந்து இங்குக் கொண்டுவந்திருக்க வேண்டும். ஆனால், செம்பும் தகரமும் ஒருங்கே, இத் தீவின் பல பகுதிகளில், சிறப்பாகக் காரன்வாலில், நிலத்தின் மேற்பரப்பிற்கு மிக அண்மையில் புதைந்துகிடக்கின்றன. இதனால், இந் நாட்டின் பழங்குடி மக்கள் அவ்விரு உலோகங்களையும் ஒருங்கு சேர்த்து உருக்கவும், அதிலிருந்து தாங்களே வெண்கலம் என்னும் உலோகத்தைச் செய்யவும் கற்றனர். அதன்பிறகு, நெடுங்காலமாகத் தொடர்ந்து சிறப்புற்றிருந்த கற்கால நாகரிகம் மறையலாயிற்று. அவை எல்லாவற்றையும்விட முதலில் வெண்கலமும், அதன் பிறகு இரும்பும் சிறப்பிடம் பெற்றது காலத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும். உலோக வேலையில், இவர்களுள் சிலர் மிகச் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தனர். உலகம் இன்று பெற்றிருக்கும் மிக நேர்த்தியாக மெருகிடப்பெற்ற வெண்கலச் சிலை வேலைப்பாடுகள் நம்முடைய மூதாதையரான இவ் ஐபீரியர்களுடைய கைவண்ணத்திற்கு இறவாப் புகழைத் தேடித்தரும் சான்றுகளாகும். இப் பழைய நாகரிகத்தின் மையங்களாக விளங்கிய இடங்களில் எல்லாம் பெரிய கற்கோபுரங்கள் நிறுத்தப்பெற்றிருக்கின்றன. அவற்றுள் ஸ்டோன்ஹென்ச் (Stonehenge) என்பதும் ஒன்றாக இருக்கலாம். அந் நாகரிகத்தின் நிலைக்களன்கள் அனைத்தும் வேளாண்மைக்குப் பெரிதும் பயன்படாத, ஆனால், நெடுங் கால

மாகக் கிடைப்பது அற்றுப்போன சிறந்த சக்கிமுக்கிக் கற்கள் அல்லது நிலத்தின் மேற்பகுதியிலேயே கிடைக்கக்கூடிய பொன், தகரம், செம்பு முதலியவைகள் கிடைத்துவந்த நிலப்பகுதிக ளாகவே சிறப்புற்று விளங்கின.

இத் தீவினுக்குள்ளே நெடுந் தொலைவிலிருந்து வந்த பழங் குடி மக்களுக்கிடையே வாணிகத் தொடர்பும் வாணிக வழி களும் வளர்ச்சியுற்றன. அக் காலத்தில் பொன்னிற்காக அயர் லாந்தோடு வாணிகம் புரிந்த துறைமுகங்கள் சில ஐரோப்பாவில் இருந்தன. வேறு சில துறைமுகங்கள் தகரத்தை ஐரோப்பா விற்கு ஏற்றுமதி செய்தன. நாட்டின் மேடுபள்ளங்களின் வழி யாகக் குறுக்கிட்டுச் சென்ற பழம் பாதைகள், சேற்று நிலங்களா லும் காடுகளாலும் துண்டிக்கப்பட்டிருந்த இந் நாகரிகத்தின் நடு மையங்களை இணைத்தன. அத்தகைய குறுகிய பழம் பாதை களின் வழிகளை அடுத்து உயர்ந்த மேட்டு நிலங்களில் கோட்டை கொத்தளங்கள் அமைக்கப்பெற்றன. அவை பெரிதும் மேட்டு நிலங்களை அடுத்துள்ள சீமைச் சுண்ணம்புப் பள்ளத்தாக்குகளின் வழியாகச் சென்றன; சகதியான சதுப்பு நிலத்தைக் கடந்தன; அதன்பிறகு, புல்வெளி நிறைந்த காட்டிற்கு மேலாகச் சென்றன. இதைப் போன்றே வடக்குப் பள்ளத்தாக்கின் தெற்குத் திசை ஓரமாகச் சென்ற பாதை, பிற்காலத்தில் கான்ட்டர்பரிக்குச் (Canterbury) செல்லும் 'திருப்பயணிகளின் பெருவழி' எனப் பெயர்பெற்றது. நான்காயிரம் அல்லது அதற்கும் முற்பட்ட காலத்திய மக்களுக்குப் பயன்பட்டதைப் போன்றே இன்றும் அவை கால்நடையாளர்களுக்குப் பெரிதும் பயன்பட்டுவரு கின்றன.

இவ்வாறே கெல்ட்டுகளின் வருகைக்கு முன்பே சில்ட்டர்ன் (Chiltern) சீமைச் சுண்ணம்பு மலையோரமாக, தேம்ஸ் ஆற்றின் தென்பகுதி நோக்கிச் செல்லும் 'ஐக்னீல்டு நெடுவழி' (Icknield Way) பெரிதும் பயனுடையதாக இருந்தது. அது வேளாண்மை நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கிய கிழக்கு ஆங்கிலியாவோடு ஹார்வர் பரிவட்டத்தைச் சூழ்ந்து வளர்ச்சியுற்றிருந்த பள்ளத் தாக்கு நாகரிகத்தோடும் நெருங்கிய உறவு உண்டாகத் தூண்டு கோலாக அமைந்தது. ஐக்னீல்டு நெடுவழியின் இருமருங்கிலும் ஒருசில அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களல்லாமல், மற்ற மக்கள் இன்றும் நுழைய முடியாத அடர்த்தியான பெருங்காடு கள் ஆழமானவையாகவும் அகலமானவையாகவும் உள்ளன. இவ் வழியே இளவேனிற் காலத்துத் தழைத்து விளங்கும் பசும் புல்லினை, வெட்டி எடுத்துச் சென்ற வழிப்போக்கர்கள், காட்டிலே

எழும் ஓசையை ஆர்வத்தோடு கூர்ந்து கேட்டும், ஓநாய்களின் ஊளையினைக் கேட்டும், கரடிகளின் உறுமலைக் கேட்டும், எதிரிகளான காட்டுமிராண்டி மக்களின் கொடிய குரலைக் கேட்டும், அவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டை எளிதில் உணர்ந்தும், மனிதனுக்கு மிக முக்கியமான கருத்துகளையும், எண்ணங்களையும், கலைகளையும், தொழில்களையும் சுமந்துகொண்டு சென்றனர்.

கி.மு. ஏழாம் நூற்றாண்டு முதல் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுவரை நெடுங்காலமாக வடமேற்கு ஜெர்மனியிலும் நெதர்லாந்திலும்[1] வாழ்ந்துவந்த கெல்ட்டிக்குகள் ஐரோப்பாவின் குறுக்கும் நெடுக்குமாகப் பல திசைகளை நோக்கிப் புறப்பட்டு, அலைந்து திரிந்தனர். கி.பி. நான்கைந்து நூற்றாண்டுகள் வரை, நெதர்லாந்திற்கு நெடுங்கிழக்கிலுள்ள பகுதிகளினின்று டியூட்டானியர்கள் (Teutons) என்ற நாடோடி மக்கள் கெல்ட்டுகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இங்கிலாந்து நோக்கிப் படையெடுத்து வந்தனர். இவ்வினமக்களின் நாடு நேடிச் சுற்றித் திரிந்த அலைவுகளுக்கிடைப்பட்ட காலத்தில்தான் ஆல்ப்ஸ் மலைக்கு வடக்கே ரோமானியர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

தொடக்க காலத்தில் கெல்ட்டிக்குகள் தங்களுக்குப் பின்பு வந்த படையெடுப்பாளர்களைப் போலவே குடியேறுவதில் பேரார்வமும், பேராற்றலும், பெருந்திறமையும் உடையவர்களாகவே விளங்கினர். அவர்களுள் ஒரு பெருங்குழுவினர் ஃபிரான்சில் தங்கினர். அவர்கள் பிற்காலத்திய காளிய (Gaul) நாட்டு மக்களினத்தில் முக்கியக் கூறாக விளக்கமுற்றனர். அவர்களுடைய தெற்குக் கிளையினர் இத்தாலியில் எட்ருஸ்கன் (Etruscan) கூட்டமைப்பின் தலைமையினை அழித்தொழித்து, 'போ' ஆற்றுவெளியில் நிலையாகத் தங்கி வாழ்ந்தனர். கி.மு. 387 அளவில் அவர்கள் ரோமாபுரியைத் தாக்கினர். அப்பொழுது வாத்துகள் அத்தலைநகரைக் காப்பாற்றியதாகச் சொல்லப்படுகிறது. மற்றவர்கள், ஸ்பெயினுக்கும் பால்கன் பகுதிகளுக்கும் விரட்டப்பெற்றனர். இதே நூற்றாண்டுகளில் வடதிசை நோக்கிப் புறப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க இந் நாடோடிக் கூட்டத்தினரின் ஒரு பிரிவினர், நம்முடைய தீவினை அடிமைப்படுத்தினர். இங்கு வாழ்ந்த பழங்குடி மக்களிடத்து கெல்டிக்குகளின் ஆட்சியையும் மொழியையும் ஏற்றுக்கொள்ளுமாறு சுமத்தினர். பிரிட்டனின் மீது படையெடுத்துவந்த கெல்டிக்குகள் தொடர்ந்து ஒரே

[1] முற்காலத்தில் இன்றைய பெல்ஜியமும் ஹாலந்தும் ஒரே நாடாக இணைந்து இருந்தபொழுது, அதற்கு 'நெதர்லாந்து' என்னும் பெயர் வழங்கிவந்தது.

மக்களினத்தின் பல்வேறு அலைகளாக வந்தனர். ஆனால், தங்களுக்கிடையே பகைமையுணர்வு உடையவர்களாகவும், தனித்தனியே ஒவ்வொரு கிளைமொழியினைப் பேசுபவர்களாகவும் வந்தனர். எர்சி (Erse), கேய்லிக் (Gaelic), வெல்ஷ் (Welsh) போன்ற திரிந்த வழக்குகளையுடைய கிளைமொழிகள் இன்றும் வழக்கிலுள்ளதை நாம் காணலாம். இவை கெல்டிக்குகளும் ஐரோப்பியர்களும் பேச்சு வழக்கில் உண்டாக்கிய கிளை மொழிகளாகும். தொடர்ந்து அலையலையாக வந்துகொண்டிருந்த கெல்டிக்குகள் பிரிட்டனில் நுழைந்தவுடன், அங்குள்ள ஐபீரியப் பழங்குடி மக்களையும், தங்களுக்கு முன்னால் குடியேறியுள்ள தம்மினத்தவரான கெல்ட்டிக்குகளையும் கொன்று குவித்தனர்; அடிமைப்படுத்தினர்; வடதிசைப் பகுதிக்கும் மேற்குப் பகுதிக்கும் அவர்களை விரட்டியடித்தனர்; அதன் பிறகு, தங்கள் குடியேற்றங்களை அமைக்கலாயினர். விரட்டப்பட்டவர்கள், வரலாற்றுக் காலம் நெடுக, மலைகள் நிறைந்த வடக்குப் பகுதியையும் மேற்குப் பகுதியையும் தங்கள் புகலிடமாகக்கொண்டு வாழ்ந்தனர்.[1]

கெல்ட்டிக்குப் பழங்குடி மக்கள் குறைந்தது இரண்டு பெரும் அலைகளாகவேனும் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்திருக்கவேண்டும். சற்றேறக்குறைய கி.மு. 600 அளவில் வந்தவர்களான கேய்லர்கள் (Gaels) அல்லது கோய்டலர்கள் (Goidels) முதன்முதலில் வந்த கெல்ட்டிக்குக் குழுவினராவர். அவர்கள் இன்றும் அயர்லாந்து, ஸ்காட்லாந்து பகுதிகளில் காணப்படுகின்றனர். இக் காலத்திலும் வேல்ஸ் பகுதிகளில் வாழும் சிம்றிகளும் (Cymri), பிரைத்தன்களும் (Brythons) இரண்டாவதாக வந்த கெல்ட்டிக்கு குழுவினைச் சேர்ந்தவராவர். பிரைத்தானிய மக்களிடையே, பெல்ஜியத்தினின்று வந்த பெல்ஜேக்களும், சீசர் கண்ட தென்–இங்கிலாந்தில் பரவியிருந்த பல்வேறு பழங்குடி மக்களும் குறிப்பிடத்தக்கவராவர். அவர்கள் ஆங்கிலக் கால்வாயின் அக் கரையிலிருந்த காளினத்தவரோடு (Gaul) நெருங்கிய உறவுடையவர்களாக இருந்தனர். மாசிடோனின் மாண்பு மிக்க வேந்தரான அலெக்சாண்டரின் காலத்தில் (கி.மு. 325-ல்) இங்கிலாந்திற்கு வந்த கிரேக்க யாத்திரிகர் பித்தியஸ்


1 பேராசிரியர் சாட்விக்கு (Chadwick), பல்வேறு காலத்தில் இங்கிலாந்திற்கு வந்த கெல்ட்டிக்குகள், பெல்ஜியம், ஹாலந்து, வடமேற்குப் பகுதிகளில் வாழ்ந்த ஒரே இனத்தைச் (அவர்களுக்குப் பிறகு வந்த ஆங்கிலோ-சாக்சானியர்களைப்போல) சேர்ந்தவராவர். அவர்கள் வேறுபட்ட காலங்களில் கடலினைக் கடந்துவந்தமையாலும், அல்லது அவர்களுடைய பிற்கால வரலாற்றில் உண்டான மாறுதல்களாலும், பழங்குடி மக்களோடு அவர்கள் கொண்ட தொடர்பினாலும். அவர்களிடையே வேறுபட்ட பண்பாடுகள் வளர்ச்சிபெற்றன' என்று கூறியுள்ளமை இங்குச் சிந்திக்கத்தக்கது.

(Pytheas) இத் தீவினைப் 'பிரேட்டானிக்' (Pretanic) தீவு என்று குறித்துச் சென்றுள்ளார். இதனால், இன்றுவரையும் இந் நாட்டிற்குப் 'பிரிட்டன்' என்னும் பெயர் வழங்கிவருவதற்குக் காரணமான பிரித்தானிய மக்கள் அக் காலத்திற்கு முன்பே இங்கிலாந்தில் நிலையாக வாழ்ந்துவந்திருக்கவேண்டும் என்பது புலனாகிறது.

கிறிஸ்து பெருமான் பிறப்பதற்கு முற்பட்ட ஆறு நூற்றாண்டுகள்வரை ஐரோப்பாவில் கெல்ட்டிக்கு இன மக்கள் அலைந்து திரிந்தனர். அவர்கள் உயரமானவர்கள்; பொன்னிறமுடைய தலைமயிரினையுடையவர்கள்; சிறந்த போர்வீரர்கள்; இரும்பினை உருக்கிக் கருவிகளாகச் செய்வதிலே வல்லவர்கள். அக்காலத்தில்தான் வெண்கலக் கால நாகரிகம் மறைந்து, இரும்புக் கால நாகரிகம் அரும்பியது. அவர்கள் தங்களுடைய தொழில்களுக்கு வேண்டிய கருவிகளையும், தற்காப்புக்கு வேண்டிய படைக்கலன்களையும் இரும்பினால் முதன்முதல் செய்யக் கற்றனர். அக் கருவிகள் இன்றைய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் கருத்தினைக் கவரத்தக்க சிறப்புடையனவாக உள்ளன. இத் தகைய அரிய கருவிகளைச் செய்தவர்கள் கெல்ட்டிக்கு இனத்தவரின் படையெடுப்பில் கடைசியாக வந்த குழுவினைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். பிரிட்டனிலும் அயர்லாந்திலும் அடிமைப்படுத்திய பழங்குடி மக்களை, அழகிய நிறம் பொருந்திய தலைமயிரினையுடைய கெல்ட்டிக்குகள் தங்களை உயர்குடி மக்களாகக் கருதுமாறு செய்தனர். இறுதியில், இவ்வினங்களும் கலப்புற்றன. ஆனால், எவ்வீதத்தில் ஐபீரியரின் குருதி, கெல்ட்டிக்குகளிடத்துக் கலந்திருக்கும் என்பதைத் திட்டவட்டமாகக் கூற இயலாது. வேல்ஸிலும், காரன்வாலிலும், அயர்லாந்திலும், ஸ்காட்லாந்தின் மேட்டுநிலங்களிலும் வாழும் மக்களுடைய உடற்கட்டும் நிறமும், பெரிதும் ஐபீரிய மக்களுடையனவாகவே காணப்படுகின்றன. வெல்ஷ் மலைப்பகுதிகளில் வாழும் ஐபீரியப் பழங்குடி மக்களிடத்துக் கலந்துள்ள கெல்ட்டிக்குகளின் குருதி மிகச் சிறிதளவினதேயாகும். ரோமானியரும் சாக்சானியரும் படையெடுத்தபொழுது, பிரிட்டனின் வளமிக்க கீழைப்பகுதிகளில் எந்த அளவிற்குக் குருதிக் கலப்பு உண்டாயிற்று என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறுவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. தோற்கடிக்கப்பட்ட ஐபீரியர்களோடு எந்த முறையில் சமூகப்பொருளாதாரத் தொடர்பினைக் கெல்ட்டிக்குகள் மேற்கொண்டனர் என்பதையும் அறிய முடியவில்லை. வேல்ஸில் நெடுங்காலமாக நிலைத்திருந்த பழம்பொருட் சின்னங்களை ஆராய்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் சிலர், அழியாது

காணப்படும் சிற்றூர்கள் சிலவற்றைக் கண்டு, அவை படையெடுப்பாளர்களுக்காக (கெல்ட்டிக்குகளுக்காக) ஐபீரிய மக்கள் விட்டு விட்டுச் சென்றவை என்பர். சிறிது அழிந்தும் அழியாதும் காணப்படும் சிற்றூர்கள், ஐபீரிய மக்கள் படையெடுப்பாளர்களாகிய கெல்ட்டிக்குகளின் தாக்குதல்களிலிருந்து தங்கள் ஊர்களைக் காப்பாற்ற மிகப் பேரளவில் திறைப் பொருள்களைச் செலுத்தினர் என்றும், அவ்வாறு காணப்பட்டவையே இவ்வூர்கள் என்றும் கூறுகின்றனர். ஆனால், அத்தகைய முறை பிரிட்டன் முழுவதும் இருந்துவந்தது என்ற முடிவிற்கு வருவது பொருத்தமற்றதாகும். அடிமைத்தனம் அல்லது நிலச் சார்பான அடிமை ஊழியம் கிழக்கு இங்கிலாந்தில் பொதுவான ஒரு முறையாக இருந்திருக்கவேண்டுமென்று கொள்ளுவதே சிறப்புடையதாகும்.

தங்களுக்கு முற்பட்டவர்களான ஐபீரியர்களைப் போன்றே கெல்ட்டிக்குகளும் குல மரபினராகவோ, கூட்டுக் குடும்ப இனத்தினராகவோ வாழ்ந்திருக்கவேண்டும். அவர்களுடைய சமுதாயத்தின் கட்டுக்கோப்பு சட்டத்திற்குட்பட்ட, உணர்ச்சிவழிப்பட்ட தொடர்புகளினால் அமைந்த உறவின் ஒழுக்கத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர்களுக்குப் பிறகு வந்த சாக்சானியர்களைப் போலவே கெல்ட்டிக்குகள் நாட்டு ஆட்சியை நிறுவியவர்களுமல்லர்; அதைவிட நிலமானியப் படைமுறை அமைப்புகளை அமைத்தவரும் அல்லர். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்து சாக்சானியர்களின் படையெடுப்பினை எதிர்த்துத் தோல்வியுற்று, அவர்களுக்கு அடிபணிந்த காலம்வரை, வேல்ஸும், அயர்லாந்தும், ஸ்காட்லாந்தின் மேட்டுநிலங்களும் இனமரபு வாழ்க்கை நெறிப்படியே ஆளப்பட்டுவந்தன. பிரிட்டிஷ் தீவுகளில் கெல்ட்டிக்கு மக்களின் ஆட்சி மிகச் சிறப்புற்றிருந்த காலத்தில் விளங்கிய அரசர்கள் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நாட்டினை ஆளும் தலைவர்களாகவோ, நிலமானியப் படைத் தலைவர்களாகவோ இல்லாமல், இனமரபுத் தலைவர்களாகவே இருந்திருக்கவேண்டும். அவர்களிடையே வழக்கிலிருந்த நீதியும் சட்டமும் அவ்வினத்தின் சமுதாயப் பழக்க வழக்கங்களிலிருந்து உருவானவையாகும். அவ் வழக்காற்றுச் சட்டத்தினை அளவுகோலாகக் கொண்டே இனத் தலைவர்கள், தமது இனத்தின் உறுப்பினர்களை ஒறுத்தும் காத்தும் வந்தனர்; அவர்கள் சார்பில் தங்களுக்கு இன்னலிழைத்த பகைவர்களிடமிருந்து இழப்பீட்டைப் பெற்றனர் அல்லது பழிவாங்கும் செயல்களில் ஈடுபட்டனர். ரோமானியர்




படம் 2.

**கெல்ட்டிக்குகள் காலத்திய பிரிட்டனும்**
**ரோமானியர் காலத்திய பிரிட்டனும்**

இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்தபொழுது, கெல்ட்டிக்குகள் தங்களுக்குள்ளே இடையறாது போரிட்டுக்கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் தற்காலக் கோட்டங்களுள் (county) பலவற்றைப் போன்ற, பரந்த நிலப்பரப்புகளில் பல குடும்பங்களாக நிலையாகத் தங்கி வாழ்ந்து ஒன்றுபட்ட ஓரமைப்பாக விளங்கினர்.

வெண்கலக் கால நாகரிகக் காலத்தில் ஐபீரியர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வேளாண்மை, இரும்புக் கால நாகரிகத்தின் தலைவர்களாகிய கெல்ட்டிக்குகளால் தொடர்ந்து செய்யப்பட்டது. மேலும், அவர்கள் பையப்பைய உழவுத் தொழிலில் முன்னேற்றத்தைக் கண்டனர். இக் காலத்தைப் போலவே பழங்காலத்திலும் இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் கோதுமையும், வடக்குப் பகுதியின் எல்லையில் ஓட்ஸ் (Oats) என்னும் தானியமும் பயிரிடப்பட்டன. தானியங்களோடு தேனினைப் பெய்து காய்ச்சி வடிக்கப்பெற்ற தேறலைக் குடித்துக் களிப்பதில் கெல்ட்டிக்குகள் பெரு விருப்பம் உடையவர்களாக இருந்தனர். காடுகள் பெரிதும் வெட்டி அழிக்கப்படாமையால் மிகக் குறைவான நிலப்பரப்பே அக் காலத்தில் பயிரிடப்பட்டு வந்தன. தேம்ஸ் ஆறும் டிரெண்ட் ஆறும் பாய்ந்தோடிய ஆற்றுவெளிகள் வடிகால்களில்லாமையால் சேறும் சகதியும் நிறைந்தனவாய் இருந்தன. எனவே, அங்கு வாழ்ந்த மக்கள் மிகச் சிலராக இருந்ததோடு, நெருக்கமாக ஓரிடத்தே வாழமுடியாது துன்புற்றனர்.

சாக்சானியர் ஆட்சிக் காலத்திலும் நார்மானியரின் ஆட்சிக் காலத்திலும், ஆயிரக்கணக்கான பன்றிகள் திரள்திரளாக வளமிக்கு இளமை மாறாத 'ஓக்' (Oak) என்னும் சீமை ஆலமரக் காடுகளினூடே திரிந்துகொண்டிருந்தன. இவ்வாறே கெல்ட்டிக்குகளின் வருகைக்கு முன்பும் வந்த பிறகும், இங்கிலாந்தின் பொருளாதாரத்தினை அப் பன்றிகள் வளமுறச் செய்திருக்க வேண்டும். இன்றும் இங்கிலாந்தில் பன்றிகள் பல்வேறு வகைக் கறிகளாகப் பெரு விருப்பத்தோடு சமைக்கப்படும் உணவுப் பொருளாக இருந்துவருகின்றன. ஆதிகாலத்தில், பிரிட்டனிலும் அயர்லாந்திலும் அது வாழ்க்கையின் கொழுகொம்பாக இருந்தது. செம்மறியாடுகளும் எருதுகளும், பழங்குடி மக்களால் சேகரிக்கப்பெறும் செல்வத்தின் முக்கிய ஊற்றாகவும் பண்டமாற்றிற்குரிய முக்கியப் பொருளாகவும் இருந்திருக்கலாம். போர்க்களங்களுக்குச் செல்லும் கெல்ட்டிக்கு இனமரபுத் தலைவர்களைத் தேர்களில் இழுத்துச் செல்லு

வதற்காகக் குதிரைகள் வளர்க்கப்பட்டன. ஆனால், நிலத்தினை உழுவதற்கு எருதுகளே பயன்படுத்தப்பட்டுவந்தன.

கெல்ட்டிக்குகளின் ஆதிக்கத்திற்குஉட்பட்டிருந்தஇங்கிலாந்து முழுவதிலும் வேளாண்மைத் தொழில் செய்யப்படவில்லை. இடைக் காலத்திலும் சாக்சானியர்கள் காலத்திலும்தான், உழவுத் தொழில் பிரிட்டனின் முதன்மைத் தொழிலாக, மக்களுடைய அன்றாட வாழ்விற்கு இன்றியமையாத் தொழிலாகச் சிறப்புற்றது. வேட்டையாடுதல், மீன் பிடித்தல், ஆடு, மாடு, பன்றிகள் வளர்த்தல், நெசவுத் தொழில் செய்தல், தேனீ வளர்த்தல், உலோகத் தொழில், தச்சுத் தொழில் போன்ற தொழில்களும், இவை யாவற்றையும்விடப் போரிடுதலும், காடுகள் நிறைந்த பரந்துபட்ட சதுப்பு நிலங்களில் அங்குமிங்குமாகச் சிதறுண்டு வாழ்ந்த மக்கள் தொகையினரின் வாழ்வையும் காலத்தையும் பெரிதும் வீணாக்கின. கெல்ட்டிக்குக் குடும்பங்கள் வாழ்வதற்காகக் கட்டப்பட்ட குடிசைகள் பலம் வற்ற மரச்சட்டங்களைக் கொண்டிருந்தன; மிலாறுகளால் அதன் கூரைகள் முடையப்பட்டிருந்தன; அவற்றின் சுவர்கள் களிமண்ணால் கட்டப்பட்டிருந்தன. அதனால்தான் அப் பழங் குடி மக்களிடையே அடிக்கடி போர் மூண்டபொழுதெல்லாம், அவை எளிதில் இடித்து அழிக்கப்பெற்றன. அக் குடிகளை அவர்கள் 'டிரேவ்ஸ்' (trevs) என்னும் பெயரால் குறிப்பிட்டுவந்தனர். மேற்குப் பகுதியில் வாழ்ந்த மக்கள் புல்வெளிகளை நாடியும், வேட்டையாடக் காட்டு நிலங்களைத் தேடியும், அடிக்கடி தங்கள் குடில்களை இடம்பெயர்த்து எடுத்துச் சென்றனர். இவ்வாறே இடைக்காலத்தின் கடைப் பகுதியில் வெல்ஷ் மக்களும் செய்துவந்தனர். 'அங்குச் செய்யப்பட்ட வேளாண்மைத் தொழில்முறை இவ்வாறிருந்தமையால், மக்கள் நிலையாக அங்குள்ள நிலங்களிடையே தங்கி வாழமுடியாமற் போயிற்று என்பர் விநோகிராடாஃப் (Vinogradoff). இம் முடிவு இங்கிலாந்தின் மேற்குப் பகுதிக்கும் நடுப் பகுதிக்கும் முற்றிலும் பொருத்தமுடையதாகும். ஆனால், காடுகள் நிறைந்திருந்தமையால் மக்கள் வாழ்வதற்கு அப் பகுதிகள் வசதியற்றிருந்தன. எனவேதான், கெல்ட்டிக்கு இன மக்கள் அங்கு மிகுதியாகத் தங்கி வாழாமல், கோதுமை செழிப்பாக வளரும் தெற்குப் பகுதிக்கும் கிழக்குப் பகுதிக்கும் சென்றனர். ஆயினும், அவ்விடங்களிலுங்கூட கெல்ட்டிக்குகள் திறந்த வெளி வயல்களில் தனித்தனி குழுக்கள் ஒன்றுசேர்ந்து சமூகமாகக் கூடி வேளாண்மைத் தொழில் செய்தமைக்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. பிற்காலத்தில், இவ்விடங்களில்

நகரக் குடியிருப்புகளை மையமாகக்கொண்டு ஆங்கில சாக்சானியர்கள் வேளாண்மைத் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். எனினும், இங்குத் திறந்தவெளி வயல்களின் வேளாண்மை முறை நடைமுறையில் இருந்ததாகத் தெரியவில்லை.

எவ்வாறாயினும், இங்கிலாந்தின் பெரும் பகுதிகளில் வாழ்ந்த கெல்ட்டிக்குகளின் மனப்போக்கு, நாட்டுப்புறங்கள் முழுவதிலும் சிறுசிறு குடும்பக் குழுக்களாகச் சிதறுண்டு வாழ்வதைப் போற்றுவதாகவே அமைந்திருந்தது. அக் குடும்பக் குழுக்கள் ஒவ்வொன்றும் மேலும்மேலும் சிறுசிறு தனிக் குடும்பங்களாகப் பிரிந்து தடுக்கப்பட்ட விளைநிலங்களுக்கிடையே குடில்கள் அமைத்துக்கொண்டு வாழலாயின. அவ்வாறு குடில்கள் அமைக்கின்றபொழுது, தங்கள் சிற்றூர்களின் புறத்தே தரிசு நிலங்களை மிகுதியாக அவர்கள் விட்டுவைத்தனர்.[1]

[1] இங்கிலாந்தின் மேற்குப்பகுதி, பண்டைக்காலம் முதற்கொண்டு தடுக்கப்பட்ட விளைநிலங்களையும் சிறுகுடிசைகளையுமுடைய நாடாக விளங்குவதற்குரிய காரணம், கெல்ட்டிக்குகளின் வழக்கத்தினைப்பின்பற்றியதனால் உண்டாகியிருக்கலாம். ஆனால், நிலத்தின் இயற்கை அமைப்பினைக் கருத்தில்கொண்டு அதற்காகவும் பெரும்பகுதி விடப்பட்டிருக்கலாம். நார்டிக்கு இனத்தைச் சார்ந்த படையெடுப்பாளர்களும் திறந்தவெளி வேளாண்மை முறையை மேற்கொள்ளவில்லை. குடி இருப்புகளை நடு மையமாகக்கொண்டு மாவட்டங்கள் விரிவுற்றபொழுது, அவை பேரளவில் வேளாண்மை செய்வதற்கு ஏற்றதாக அமையவில்லை. வடக்குப்பகுதியிலுள்ள சதுப்பு நிலங்களும், கென்ட்டின் பழத்தோட்டங்களும், பெரிதும் காடு மேடாகக் கிடந்த நிலப்பகுதியும் பேரளவில் வேளாண்மை செய்வதற்குப் பயன்படாமல் போயின. ஆனால், சாக்சானியர்கள் கிழக்குப் பகுதியிலும் நடுப்பகுதியிலும் பெரிதும் திறந்தவெளி வேளாண்மை முறையினைச் செயற்படுத்தியதோடு, குடி இருப்புக்களை நடு மையமாகக் கொண்ட பரந்த மாவட்டங்களையும் அமைத்தனர். சாக்சானியர்கள் கைப்பற்றுவதற்கு முன்பு அக் கிழக்குப் பகுதிகளில் திறந்தவெளி வேளாண்மை முறையும், குடி இருப்புக்களை ஒரு மையமாகக்கொண்ட நகரங்களும் (கெல்ட்டிக்குகள் காலத்தில்) இருந்தனவா? என்பதே ஆராய்ச்சிக்குரிய பிரச்சினையாகும். சீபோம் (*Seebohm*) என்னும் ஆராய்ச்சியாளர் கெல்ட்டிக்குகள் திறந்தவெளி வேளாண்மை முறையை அறிந்திருந்தனர் என்பர். ஆனால், வினோகிரடாஃப் அதனை அவர்கள் அறிந்திலர் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். இவற்றினை உறுதியாகக் கூறுவதற்குப் போதிய சான்றுகள் இல்லை. வில்ட்ஷையர் (*Wiltshire*), ஆம்ப்ஷையர் (*Hamshire*) பகுதிகளில் எடுக்கப்பட்ட 'விண்வெளிப் புகைப்படக் கலை' (**Air photography**)யினால், சீபோம் என்பாரின் கருத்திற்கு மாறான முடிவுகள் கிடைத்துள்ளன. கெல்ட்டிக்குகள் பின்பற்றிய வளைக்கப்பட்ட விளைநிலங்களும், வேளாண்மை முறைகளும் ரோமானியர்கள் காலத்தில் ஒரு சிறிதும் மாற்றப்படவில்லை என்பதும், ஆனால், சாக்சானிய படையெடுப்பாளர்கள் அவற்றை ஒழித்துவிட்டுப் புதிய முறையினைப் புகுத்தினர் என்பதும் தெரியவருகிறது. ஓ.ஜி.எஸ். கிராஃபோர்ட்டு எழுதியுள்ள 'விண்வெளி மதிப்பீடும் தொல்பொருளாராய்ச்சியும்' என்னும் நூலினுள் விரிவாகக் காணலாம். **(O. G. S. Crawford: Air-Survey and Archaeology.)**

பிரிட்டனில் கெல்ட்டிக்கு நாகரிகம் மிகச் சிறப்புற்று விளங்கிய பகுதிகள், தெற்கிலும் தென்கிழக்கிலும் உள்ளவையாகும். அங்கு மிகச் சிறந்த வயல்வெளிகள் இருந்தன. அவற்றையடுத்துத் திறந்த புல்வெளிகள் நிறைந்த பள்ளத்தாக்குகளும், சஸ்ஸக்ஸ் வீல்டில் உள்ள இரும்புச் சுரங்கங்களும் உலைக்களங்களும் இருந்தன. நடுநிலைக் கடற்பகுதியைச் சார்ந்த வாணிகர்களோடும், கடல்கடந்த நாடுகளில் உள்ள கெல்ட்டிக்கு உறவினர்களோடும் தொடர்பு கொள்ளுவதற்கும், போக்குவரத்திற்கும் எளிதாகப் பயன்பட்டுவந்த ஆங்கிலக் கால்வாய் கரையோரமாக அமைந்திருந்த துறைமுகங்களும் (லண்டன் எதற்கும் பயன்படாத நிலையில் அக் காலத்தில் இருந்தது) சிறப்புற்று விளங்கின. இத் தீவு முழுவதிலும் அக் காலத்தில் சிறந்த நகர வாழ்வு நடைபெற முடியவில்லை யென்றாலும், செயின்ட் ஆல்பன்சுக்கும் (St. Albans), கோல்செஸ்டருக்கும் (Colchester) அருகில் குடிசைகளின் குழுக்கள் மிகப் பேரளவில் காணப்படுகின்றன. கி.மு. 150 அளவில் பிரிட்டனின் தெற்குப் பகுதியில் வாழ்ந்த பழங்குடி மக்கள் மாசிடோனிய அரசர்கள் வெளியிட்ட 'ஸ்டேட்டர்' (stater) என்னும் பொன் நாணயத்தைப் போன்று தங்களுக்கென்று சிறப்பாகப் பொன் நாணயங்களை அச்சிட்டுக் கொண்டனர் என்பதை அறிகிறோம்.[1] கி.மு. முதல் நூற்றாண்டில் பிரிட்டானிய பெல்ஜேக்களும், பிற தெற்கத்திய பழங்குடி மக்களும் வடக்கு காளிலிருந்த (Northern Gaul) தங்கள் பங்காளிகளோடு நெருங்கிய அரசியல் தொடர்புகொண்டிருந்தனர். அவர்களுள் சிலர், ஐரோப்பிய பெல்ஜேக்களின் அரசனைத் தங்களுக்கும் உரிய தலைவனாகச் சில ஆண்டுகள் ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆகவேதான், ரோமானியர் வட காளிய இனத்தவர்களை அடக்கியொடுக்க, பெரும் படையோடு போர்முரசு கொட்டி வருகின்றனர் என்ற செய்தியைக் கேட்டவுடனேயே இவர்கள் (பிரிட்டானியர்கள்) சீசரை எதிர்த்து, நிலத்திலும் நீரிலும் போரிடுவதற்குக் கப்பல்களையும் வீரர்களையும் அனுப்பிவைத்தனர். பின்னர், சீசர் இங்கிலாந்தின்மீது படையெடுத்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

[1] பிரிட்டனின் பழம்பொருட் காட்சிசாலையில் பண்டை நாணய அறைகளில் இதற்குரிய சான்றுகளைக் காணலாம். வெண்கலக் கேடயங்களும், வெண்கலம், இரும்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட படைக்கலன்களும் முதல் அறையில் உள்ளன. அடுத்த அறையிலுள்ள பொன்னாலான அணிகலன்களும் இரும்புக்கால நாகரிகச் சின்னங்களுக்குரிய அறையிலுள்ள கருவிகளும், பிரிட்டனின் ஐபீரிய மக்களும் கெல்ட்டிக்குகளும் வளர்த்த நாகரிகத்தின் சிறப்பினைத் தெரிவிக்கின்றன.

கிறித்துவ சமயத்தவர் செல்வாக்குபெற்ற காலத்தில், நாட்டு மக்களிடையே வழங்கிவந்த நாட்டுப் பாடல்களிலிருந்தும், வனதேவதைக் கதைகளிலிருந்தும், நாம் சில கருத்துக்களை உய்த்துணரலாம். அவையல்லாமல், ஐபீரிய, கெல்ட்டிக்கு மக்களின் சமய வாழ்வினைப்பற்றி அறிவதற்குரிய வேறு சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. குறிப்பிட்ட சுனைகளிலும், குகைகளிலும், மலைகளிலும், காடுகளிலும், வேறு பல இயற்கைப் பொருள்களிலும் சுற்றி ஊடாடும் தெய்வங்களையும், தேவதைகளையும் பிற்காலத்திய மக்கள் வனதேவதைகளாகவும், நீரிலுறையும் தெய்வங்களாகவும் போற்றினர். கெல்ட்டிக்கு மக்களுடைய சமயத்தைப்பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் அக் காலத்தில் யாராகிலும் எழுதிப் போற்றியிருக்கிறார்களா என்று ஆராய்கின்றபொழுது, ஜூலியஸ் சீசர் (Julius Caesar) தன்னுடைய 'பாசறை நினைவுகள்' என்னும் தலைப்பில் எண்ணற்ற நிகழ்ச்சிகளைக் குறித்ததைப் போலவே, அவருடைய கருத்தைக் கவர்ந்த கெல்ட்டிக்கு மக்களின் சமயத்தின் சிறப்பியல்புகளைப் போற்றிக் குறித்துள்ளார் என்பதை அறிகிறோம். கெல்ட்டிக்கு மக்களிடத்து நன்கு சிறப்புற்று விளங்கிய குருமார்களின் சாதி அமைப்பு சீசரின் கற்பனையைத் தூண்டிவிட்டது. துருவிதர் (Druids) என்ற குருமார் இனத்தவர், பிரிட்டனில் பேராற்றல் வாய்ந்தவர்களாக வாழ்வதைக் கண்டு சீசர் வியப்புற்றார். அத் துருவிதர்கள் கல்வி யறிவினைத் தங்களுக்குரிய தனியுரிமையாக—உடமையாகக் கொண்டிருந்தனர். அவர்களே வழக்கு மன்றங்களில் நீதி வழங்கிவந்தனர். அவர்களுடைய கட்டுப்பாட்டை மீறுகின்ற பொதுமக்களைத் தங்கள் இனத்தினின்று இழிந்தவர்களாக விலக்கிவைத்தனர். 'இவ்வாறு விலக்கிவைக்கப்பட்ட மக்கள் தெய்வ நம்பிக்கை அற்றவர்கள் என்றும் வெறுக்கத்தக்க பழி பாவங்களைச் செய்தவர்கள் என்றும் குற்றம் சாட்டப்பட்டனர். அத்தகையோர் தங்களைச் சந்திக்ககூடாதென்றும், தங்களிடம் பேசக்கூடாதென்றும் குருமார்கள் தடை விதித்தனர்' என்றும் சீசர் குறித்துள்ளமை கருதத்தக்கதாகும். குருமார்களின் ஆதிக்கம் ரோமானிய ஆட்சியாளருக்கு வெறுப்பினை உண்டாக்கியது. ரோமாபுரி அக் காலம் வரை கீழ்த் திசையினின்று வந்த குருமார்களின் தலைமைக்குத் தலை வணங்காமல் இருந்து வந்தது. எனவே, ரோமானியர்களுக்கு குருமார்களின் ஆதிக்கத்தைக் கண்டதும் வெறுப்புண்டாவதில் வியப்பொன்றும் இல்லை. 'எல்லா காளிய மக்களும் ஓரினத்தவர்' என்று நோக்குகின்றபோது அவர்கள் முற்றிலும் மூட நம்பிக்கையுடையவர்களாகவே இருந்து இருக்கின்றனர். நோயினால்

துன்புறுகின்ற நோயாளிகளும் அல்லது போரில் ஈடுபடுகின்றவர்களும், பெருந்துன்பத்திற்கு ஆட்பட்டு அல்லலுறுகின்றவர்களும், தங்களுடைய தெய்வங்களுக்கு நரபலியிடுவர்; அல்லது அவ்வாறு பலியிடுவதாக உறுதிமொழி கூறி வேண்டிக்கொள்ளுவர். இத்தகைய சடங்குகளில் எல்லாம் கெல்ட்டிக்குகள் தங்கள் குருமார்களான துருவிதர்களைச் (Druids) சமய குருவாகப் பயன்படுத்திக்கொள்ளுவர் என்பர் ஜுலியஸ் சீசர். மேலும் அவர், 'இப் பழக்க வழக்கங்களில் கெல்ட்டிக்குகள், காளிய மக்களிடமிருந்து பெரிதும் வேறுபடுகின்றனர். காளிய மக்களுடைய சமயச் சடங்குகளில் தலைமை தாங்குவதற்கு துருவிதர்களைப் போன்ற சமய குருமார்கள் இல்லாமை குறிப்பிடத்தக்கது' என்று தான் நேரில் கண்டவற்றைத் தெரிவித்துள்ளார். ஆங்கில சாக்சானியர்களையும், நார்சிய (Norse) மக்களையும் சீசர் அறிந்திருப்பாரேயானால், அவர்களைப்பற்றியும் இவ்வாறே சொல்லியிருப்பார். கிறித்துவ சமயக் கோட்பாடுகளை அறியாது, புறச் சமயக் கோட்பாட்டு நெறியினை (paganism) மேற்கொண்டொழுகிய ஃபிரான்சிலும் இங்கிலாந்திலும் வாழ்ந்த கெல்ட்டிக்குகளின் சமயத்தினை, அவர்களிடமிருந்து இங்கிலாந்தில் வன்முறையில் கைப்பற்றிய பிறகாட்டுமிராண்டி மக்கள் கூட்டத்தாரின் சமயத்தோடு ஒப்பிடுவோமானால், கெல்ட்டிக்குகளின் சமயம் அச்சத்தை உடலாகவும், குருமார்களின் ஆதிக்கத்தை உயிராகவும் கொண்டிருந்தது என்று கூறலாம்.[1]

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

பிரிட்டன் தீவாக அமைவதற்கு முன்பு இருந்த நிலை —தீவு — விரும்பத்தக்க தீவு — இங்கிலாந்தும் அதன் படையெடுப்பாளர்களும்—வரலாற்றினை நிலவியல் ஆட்சிபுரிகிறது— ஐபீரியர்கள் — குறுகிய வாணிக வழிகள் — கெல்ட்டிக்குகளின் வருகை—கெல்ட்டிக் 'டிரேவ்ஸ்'களும் வேளாண்மையும் — கெல்ட்டிக்குகளின் சமயம்.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூற்கள்


1. H. J. Mackinder: 'Britain and the British Seas.'
2. Donold Mackenzie : 'Ancient Man in Britain.'
3. Sir Cyril Fox : 'Archaeology of the Cambridge Region' (1928).


[1] Cambridge Medieval History, Vol. II. Chapter XV.

4. Sir Cyril Fox: 'The Personality of Britain' (1943).
5. Vinogradoff: 'Growth of the Manor', Bk. I, Ch. I., and Bk. II. Ch. II.
6. Oman: 'England before the Norman Conquest', Chapters I & II.
7. Quennell: 'Everyday Life in Pre-Historic Times.'
8. Hippisley Cox: 'The Green Roads of England.'

இயல் 2

# ரோமானியர் கண்ட பிரிட்டன்

கெல்ட்டிக்கு இன மக்களின் வருகைக்கும் சாக்சானியர்களின் படையெடுப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில், ரோமானியர் பிரிட்டனைக் கைப்பற்றினர். தங்களுக்கு முன்பே ரோமானியர் இங்கிலாந்தைக் கைப்பற்றி இருந்தமையால், சாக்சானியர் இரண்டு நூற்றாண்டுகள் தாமதித்தே இங்கிலாந்தினுள் நுழைய வேண்டியதாயிற்று. பிரிட்டனுக்கு வந்த கெல்டிக்குகள், சாக்சானியர்கள், சேனியர்கள் இந்நாட்டின் பழங்குடி மக்களைக் கொன்று குவிப்பதையும், அவர்களை நாட்டிலிருந்து காட்டிற்கு விரட்டுவதையுமே தங்கள் குறிக்கோளாகக்கொண்டு இருந்தனர். இவ்வாறு படையெடுப்பாளர்கள் பழங்குடி மக்களின் ஊர்களைக் கைப்பற்றினர்.[1] பிறகு, படையெடுப்பாளர்கள் அங்கு நிலையாக வாழத்தொடங்கினர். ஆனால், ரோமானியரின் போக்கு இதற்கு நேர்மாறாக இருந்தது. தாங்கள் நாகரிகத்தின் கொடுமுடியை அடைந்தவர்கள் என்று ரோமானியர் கருதிய காரணத்தால், அவர்கள் இங்கிலாந்தின் பழங்குடி மக்களைச் சுரண்டினர். தங்களுடைய ஆட்சியை இங்கிலாந்தில் நிலைநாட்டினர். மேலும், ரோமானியர் தாங்கள் ஆளப் பிறந்தவர்கள் என்று அறிவுறுத்தினர். ரோமானியர்கள் அமெரிக்காவிற்குச் சென்ற திருப்பயணத் தந்தையர் (Pilgrim Fathers) போல் அல்லாமல், ஆஃப்ரிக்காவிற்குச் சென்ற ஐரோப்பியரையே இவ்வகையில் பெரிதும் ஒத்திருந்தனர். ஐரோப்பிய வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்குத் திறமையுடைய ஆஃப்ரிக்க மக்களுள் பெரும்பாலோரைக்காட்டிலும், இங்கிலாந்தின் பழங்குடி மக்களான வெள்ளையர்கள், இலத்தீன் மொழியாளர் வாழ்க்கை நெறிமுறைகளை முழுவதும் மேற்கொண்டு ஒழுகத்தக்க வாய்ப்பு உடையவர்களாக இருந்தனர். ஆயினும்,

[1] பார்க்க: படம் 1.

பிரிட்டானியர்களும் காளியர்களும் (Gauls) ரோமானியப் பேரர சின் ஆதிக்கத்திற்குட்பட்ட கிரேக்க நாட்டைப் போன்றோ கீழ்த்திசை நாடுகளைப் போன்றோ, தங்களுக்கெனத் தனிச் சிறப்பினையுடைய நாகரிகத்தினைப் பேரளவில் பெற்றிருக்க வில்லை என்பது நினைவுகூரத் தக்கது. எனவே, ரோமானியர் முதன்முதலில் கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு சீற்றம் கொண்டு இங்கிலாந்தினுள் நுழைந்தனர். அது முதற்கொண்டு மேற்கு நாட்டுக் குடிமக்களிடையே தங்கள் நாட்டு வாழ்க்கை யின் பல்வேறு கூறுகளையும் ஒருங்கே புகுத்த முயன்றனர். இம் முயற்சியில் அவர்கள் காளியரிடத்துப் பெற்ற வெற்றி என்றும் அழியாது நின்று நிலவியது. மேலும், அவ் வெற்றியே தற்கால வரலாற்றின் தொடக்கநிலையாக அமைந்தது. ஆனால், பிரிட்ட னில் அவர்கள் முயற்சி தொடக்கத்தில் பெரு வெற்றியினை அளித்தபோதிலும் இறுதியில் முற்றிலும் தோல்வியுற்றது. ரோமானியர் பிரிட்டனைக் கைப்பற்றிய காலத்திய தொல் பொருள் ஆராய்ச்சியில் வல்லுநரான ஹாவர்ஃபீல்டு (Haverfield), 'ஒரு காலத்தில் பிரிட்டனை ஆட்சிபுரிந்த ரோமானியரிடமிருந்து பிரிட்டானியர்களாகிய நாம் பயன்தரத்தக்க எதையுமே மர புரிமையாகப் பெறவில்லை' என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது. ரோமானியர் தங்களுக்குப் பிறகு சிறப்புடை யனவாக இங்கு விட்டுச்சென்றவை மூன்றெனக் கூறலாம். இவற்றுள் முதன்மையானது வெல்ஷ் கிறித்துவச் சமயம். இதனைச் சிசரோ, அக்ரிகோலாவோ (Agricola), ஹாட்ரியனோ (Hadrian) அறிந்திருந்தால் வேடிக்கையாக மனம் மகிழ்ந்திருப்பர்; அல்லது பேரதிர்ச்சியுற்றிருப்பர். இரண்டாவதாக இங்கிலாந்து பெற்ற சிறப்புமிக்க பயன், ரோமானியர்கள் வகுத்த நெடுஞ் சாலைகளாகும். இவ்விரண்டாவது பயனின் உடன்விளைவே மூன்றாவது பயனாகும். லண்டன் போன்ற புதிய நகரங்களின் இருப்பிடங்கள் தொன்றுதொட்டுத் தொடர்ந்து முக்கியத்துவம் பெற்று விளங்குவது மூன்றாவது பயனெனில் தவறாகாது. ஆனால், ரோமானிய நகர வாழ்க்கையும், நாட்டுப்புற மாளிகை வாழ்க்கை யும் (villa), கலைகளும், இலத்தீன் மொழியும், அரசியல் அமைப்பும் நொடிப்பொழுதில் இங்கிலாந்து மக்களிடையே பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்ல மறைந்து போயிற்று. இத் தீவின் பழங்கால வரலாற்றின் உண்மை நிகழ்ச்சி எதிர்மறை நிகழ்ச்சியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஃபிரான்சினை அவர்கள் ரோமானிய நாகரிகமயமாக்குவதில் மாபெரும் வெற்றி பெற்றனர். ஆனால், பிரிட்டன் நிலையாக இலத் தீன் மொழியின் நாகரிக வாழ்வில் மூழ்குமாறு செய்வதில் ரோமானியர் பெரும் தோல்வியுற்றனர்.

ரோமாபுரிப் பேரரசினை அரசியல் துறையில் சீர்திருத்தங்கள் செய்து புதுப்பித்தமையாலும், அதனை வடக்கு ஐரோப்பாவில் விரிவுபடுத்தினமையாலும், ஜூலியஸ் சீசர் உலக வரலாற்றில் சிறப்பிடத்தைப் பெற்ருர். அவ்விரு மாபெரு சாதனைகளும் அவருக்குப் பொன்ருப் புகழினைத் தேடித்தந்தது. அவர் காளினை என்றுமே இலத்தீன் மொழிவழங்கும் நாடாக மாற்றினர். சீசர், நடுநிலக் கடற்பகுதியைச் சார்ந்த மக்களின் அதிகாரம் ஆல்ப்ஸ் மலைக்கு வடக்கே தழைத்தோங்க வித்திட்டார். மேலும், அவர் புதிய கோட்பாடுகளைக்கொண்டு பயனற்றுப்போன பண்டை உலகின் அரசியல் அமைப்பினை மாற்றியமைத்து, உலகிற்கு வழி காட்டினர். குறுகிய மனநிலையுடையதாக இருந்த ரோமானியக் குடியரசினை—தன்னலவெறி பிடித்த உயர்குடி மக்களுக்கும், மதிப்பின்றி வாழ்ந்த நகர மக்கள் கும்பல்களுக்குமிடையே சிக்கிச் சீரழிந்த ரோமானியக் குடியரசினை—நாகரிகமுற்ற உலகில் கட்டுப்பாடும் விரிந்த நோக்கமும் உடைய பேரரசாக, மக்களுடைய ஆதரவைப் பெற்ற வல்லாட்சியாக மாற்றிய பெருமை சீசரையே சாரும். இம்முறையில் அவருக்குப் பிறகு அரசுரிமைக்கு வந்தவர்கள் ரோமானிய அரசினை மாற்றியமைத்தனர். அதனல், மேற்குப் பகுதியில் ரோமானியப் பேரரசினுடைய வாழ்நாளை இன்னும் ஐந்நூறு ஆண்டுகள் நீடிக்குமாறு செய்தனர். அருகிலுள்ள கிழக்கு நாடுகளில், மேலும் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் அப்பேரரசு அழிந்தொழியாது காப்பாற்றப்பட்டது. சீசரின் பேரரசு பண்டை உலகினையும், தற்கால உலகினையும் இணைக்கும் சங்கிலியாக மாறிற்று. பிற்காலத்தில் ஐரோப்பிய மக்களினத்திற்குப் பொதுப்படையான பண்பாட்டினை இப்பேரரசு அளித்தது. கிரேக்க, ரோமானியப் பண்பாட்டின் உயிர்ப்பண்புகளைப் போற்றிக் காத்தமையால் அதைப் பெறமுடிந்தது. இப்பேரரசு கிறித்துவ சமயக் கோட்பாடுகள் நாகரிக உலகின் எட்டுத்திக்குகளிலும் சென்று பரவுவதற்கு, ரோமானியர் வகுத்த நெடுஞ்சாலைகள்—ரோமானியப் படை வீரர்களால் காக்கப்பட்ட நெடுஞ்சாலைகள்—பேருதவியாக இருந்தன.

சீசர் காளில் செய்த சீர்திருத்தங்கள், பிற்காலத்தில் அவர் பேரரசு முழுவதிலும் செய்த சீர்திருத்தங்களுக்கும் அரும்பெரும் செயல்களுக்கும் அடிப்படையாக அமைந்தது. அவர் ஒரு நாள் டோவர் (Dover) இடைகழி நிலமுனைப்பிற்கு அப்பால் உள்ள நிலப்பரப்பினை நோக்கியவண்ணம் நின்றபொழுது காளினைத் தான் முற்றிலும் அடிமைப்படுத்தவில்லை என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. நெப்போலியனைப்போல சீசர் நெடுங்

தொலைவிலுள்ள செங்குத்தான வெள்ளைப்பாறைகளை அளந்து மதிப்பிடலானர். ஆனால், சீசர் கொண்டிருந்த நோக்கம் நெப் போலியனுடைய நோக்கத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட தாகும். ஏனெனில், சீசர் இங்கிலாந்திற்கு ஒருமுறை சென்று வர முயன்றால், அவரைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் வேறு யாருக் கும் அக் காலத்தில் கிடையாது. அதைப்போலவே அவர் எத் தகைய இடையூறுமின்றி, அங்கிருந்து திரும்பி வரவும் தடை யாதொன்றுமில்லை. மிக முக்கியமான வேலைகளிலிருக்கும் பொழுது அந் நாட்டிற்குச் சென்று வருவதால் பயன் விளையுமா என்பதே சீசருக்குண்டான ஐயமாகும்.

இங்கிலாந்தின்மீது படையெடுக்கவேண்டும் என்று சீசர் கருதினர். அங்கு ரோமானியரின் ஆட்சியை நிலைநாட்டவேண்டும் என்ற நோக்கத்தால் அவர் அவ்வாறு கருதவில்லை. அதற்கு அவருக்கு நேரமுமில்லை; போதிய படைபலமுமில்லை. காளில் அவ ருடைய இராணுவத் தலைமைப்பதவியையும் இத்தாலியின் வருங் கால அரசியலில் அவருக்கிருக்கக்கூடிய நல்வாய்ப்புக்களையும், இடர்ப்பாடுகளுக்கும் இன்னல்களுக்கும் இடையே காப்பாற்றிக் கொள்ளவேண்டியவராக இருந்தார். ஹன்னிபலை (Hannibal), கார்த்தேஜின் 'செனேட்டர்கள்' எவ்வாறு விரும்பினர்களோ அதைப்போன்றே ரோமாபுரிக் குடியரசின் ஆட்சிப்பொறுப்பில் இருந்தவர்கள் சீசரை விரும்பிப்போற்றினர். ஆனால், எதிர் கட்சியின் தலைவர் என்ற காரணத்தாலும் ரோமாபுரியின் ஆட்சி அரங்கினை அடைவதற்கு முயன்றதனாலும், சீசர் பகட்டான வீர தீரச் செயல்களைச் செய்து, மக்களுடைய உள்ளத்தைக் கவர வேண்டியவராக இருந்தார். அவர் தன்னுடைய கட்சியாளர்களை வளமுறச்செய்வதற்கும், வீரர்களுக்கு ஊதியம் அளிப்பதற்கும், போர்க்கருவூலத்தை நிறைப்பதற்கும், திறைப்பொருளையும் அடி மைகளையும் பேரளவில் தன் நாட்டிற்குக் கொண்டுசெல்ல வேண் யவராக இருந்தார். இத் தேவைகள் அனைத்தையும் இங்கி லாந்தின்மீது படையெடுப்பதன்மூலம் நிறைவேற்றிக் கொள் ளக்கூடிய வாய்ப்பினைப் பெற்றாலும் பெறலாம் என்று சீசர் எண் ணினர். இவை யாவற்றையும்விட காளினை மிகக் கீழ்ப்படிந்த அடிமை நாடாக அடக்கியொடுக்கி வைக்கவேண்டும் என்றால், காளிய இனத்தவரோடு நெருங்கிய தொடர்புகொண்டுள்ள தென் இங்கிலாந்தின் மக்களையும் வென்று அடிமைப்படுத்த வேண்டும் என்று சீசர் கருதினர். சுற்றுப்புற நாடுகளும் ரோமா புரிக்கு அடங்கியனவாக இருந்தால்தான் காள் போன்ற அடிமை நாடுகள் தவறாது திறைப்பணம் செலுத்தும் என்பதும் தங்கள் உரிமையைத் திரும்பப் பெறுவதற்குக் கலகம் செய்யாது என்

பதும் அவருடைய நம்பிக்கையாகும். காலின் வருங்கால ஆட்சியாளர்களுக்கு, அதனை அடுத்துள்ள பிரிட்டனுடைய அரசியல் நிலையைப் பற்றியும், நிலவிய அமைப்பைப் பற்றியும் நேரடியாகக் கண்ட தெளிவான அறிவு இன்றியமையாதது என்றும் சீசர் கருதியதனால், அவர் பிரிட்டனின் மீது படையெடுத்துச் செல்லுவதற்குத் தயாரானார்.

அவருடைய முதற் படையெடுப்பு கி. மு. 55-ல் நடைபெற்றது. அது பேரிழவின் தோல்வியாக முடிந்தது. மிகச் சிறிய படையொன்றினைத் துணையாகக் கொண்டு, டோவர் இடைகழியிலிருந்து பத்துக் கற்கள் தொலைவே பிரிட்டனின் உள்ளே சென்றார். சீசர் அடுத்த ஆண்டில், கி. மு. 54-ல் பெரும்படை திரட்டிக்கொண்டு சென்று பல போர்களில் வெற்றி பெற்றார். பகைவர்களின் கண்முன்னாலேயே தேம்ஸ் நதியைக் கடந்து அவர் கட்டவலானியரின் (Catuvellani) அரசரான காசிவெலானஸ் (Cassivelaunus) என்பாரின் நாட்டில் சிறப்புற்று விளங்கிய ஹெர்ட்போர்ட்ஷையர் பகுதியிலும் வெற்றியோடு நுழைந்தார். கட்டவலானியர் என்ற இனத்தைச் சேர்ந்த மக்கள் பிரிட்டனின் தென் பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். அவர்களுடைய கூட்டுத் தலைமையில் உண்டான பொறாமையும் பூசலும் அவர்களுடைய எதிரிகள் சிலரையும் ரோமானியரோடு தொடர்பு கொண்டு நாட்டைக் காட்டிக்கொடுக்குமாறு செய்தது. இவ்வாறு சீசரின் காலத்திலும், அவருக்குப் பிறகு ஒரு நூற்றாண்டு கழிந்து கிளாடியஸ் (Claudius) படையெடுத்து வந்தபொழுதும், அவ்வின மக்களுக்கிடையே உண்டான பிளவும் பூசலும் ரோமானியர்களுக்குப் பேருதவியாக இருந்துவந்தன. ஆனால், பெரும்பாலான பிரிட்டானியர்களும் கென்ட்(Kent)பகுதியைச் சேர்ந்த மக்களும் ஒருங்குசேர்ந்து, சீசரை எதிர்த்துக் கடும்போர் புரிந்தனர். நன்கு பயிற்றுவிக்கப்பட்ட, கட்டுப்பாடுடைய ரோமானியப் படையின் அணிவகுப்பினை யெதிர்த்துப் போரிட்ட கெல்ட்டிக்குகளின் திறமையற்ற கட்டுப்பாடில்லாத காலாட்படை வெற்றியடைவது அரிய செயலாகும். எனினும், மஞ்சள் நிறத் தலைமயிரினையுடைய துணிவு மிக்க கெல்ட்டிக்குகளின் உயர்குடி மக்கள், நன்கு இழைக்கப்பட்ட திண்மை வாய்ந்த தேர்களில் ஏறிப் போர்க்களம் அதிருமாறு சென்றனர். பத்தாம் நூற்றாண்டில் போர்க்கலையில் தேர்ச்சி மிகுந்து விளங்கிய மக்களும், போரிட்டறியாத வகையில், ஹோமரின்(Homer) காப்பிய வீரர்களைப்போன்று கெல்ட்டிக்குகள் அஞ்சா நெஞ்சுடன் போர் புரிந்தனர். தேர்கள் ஒரு காலத்தில் போர்முறைக்குகந்த கருவியாகக் கருதப்பட்டன. இதற்கு முன்பே கெல்ட்டிக்கு இன

மக்கள் வாழும் காளிலும், கிரேக்க நாகரிகத்தினை யேற்றுக் கொண்ட கீழைநாடுகளிலும், தேர்கள் பயன்படுத்தப்படா தொழிந்தன. பிரிட்டானிய மக்கள் மட்டும் குதிரைப் படையைக் கொண்டு போரிட்டு இருப்பார்களானால், அவர்களை யாருமே வென்றிருக்க முடியாது. ஆனால், நார்மானியரின் வெற்றிக்குப் பிறகுதான் இடைக்கால மாவீரர்களைக்(Knights)குதிரைப் படையில் பழக்கப்படுத்தினர். இதற்கு முன்பு குதிரைப் படையில் பயிற்சி மிக்க வீரர்களைக் கொண்டு தற்காத்துக் கொள்ளக் கூடிய நற்பேறு இங்கிலாந்திற்கு வாய்க்காமற்போயிற்று.

கி. மு. 54-ல் நடந்த படையெடுப்பு இதற்கு முன்பு நிகழ்ந்ததைப்போன்று சீசருக்குத் தோல்வியை அளிக்கவில்லை. ஆயினும், அதை சீசர் பெற்ற மாபெரு வெற்றி என்றும் கூறுவதற்கில்லை. சிசரோ (Cicero) தன்னுடைய உற்ற தோழர்களிடத்து, 'புகழ் மிக்க பிரிட்டானிய நாட்டின் பொன் நம் தேவைக்கு மிகக் குறைந்த அளவிலேயே கொண்டுவரப்பட்டது' என்று குறைகூறியமை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்ட அடிமைகளை ரோமாபுரிச் சந்தையில் அதிக விலை கொடுத்து வாங்குவாரில்லை. காளினை வென்றவுடன், சீசர் கலகக்காரர்களைச் சிறைப்படுத்தி மொத்தமாக ரோமாபுரியிலுள்ள ஏலம் போடுவோரிடம் கொண்டுபோய் ஒப்புவித்தார். அதைப்போல் இம்முறையும் செய்வதற்குப் போதிய நேரமும், வாய்ப்பு வசதிகளும் சீசருக்குக் கிடைக்கவில்லை. ஆங்கிலக் கால்வாயின் இருமருங்கிலும் வாழ்ந்த மக்களுடைய மனத்தில் சீசரின் படையெடுப்பு நிலையான இடத்தைப் பெற்றதைத் தவிர, இப்படையெடுப்பினால் வேறு எவ்விதப் பயனும் நிலையாக உண்டாகவில்லை. திறைப்பணம் செலுத்தப்படுவதும் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே நிறுத்தப்பட்டது. காளியப்போருக்குக்காரணமாக இருந்த வெர்சிங்கடோரிக் (Vercingtorix) கலகம் சீசர் மேற்கொண்டு பிரிட்டனில் வேறு செயல்களில் ஈடுபடவொட்டாமல் செய்தது. இதற்குப்பிறகு நெடுங்காலம் ரோமாபுரியில் உள்நாட்டுப் போர்கள் நடந்தன. அதன் பிறகு அகஸ்டஸ் (Augustus), டைபீரியஸ் (Tiberius) போன்ற பேரரசர்கள் ரோமானியப் பேரரசினைத் திருத்தியமைப்பதிலேயே ஈடுபட்டிருந்தனர். இதனால் நெடுந் தொலைவிலுள்ள இங்கிலாந்து ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு ரோமானியருடைய தலையீடின்றித் தனித்து இயங்கியது.

சீசர் பிரிட்டனின்மீது படையெடுத்ததால் உண்டான தொடர்பைவிட, அவர் காளினைக் கைப்பற்றியமையால், தென் பிரிட்டன், இலத்தீன் நாகரிகத்தோடு நேரடியாக நெருங்கிய

தொடர்புகொள்ள ஏதுவாயிற்று. வடகாளிய இன மக்களுடைய ஒரு கிளையினரே பிரிட்டனில் வாழ்ந்து வந்தனர். அதனால் அவர்களிடையே ஒருவகையான இனக் கவர்ச்சியும், இன ஒற்றுமையும் இருந்து வந்தன. ரோமாபுரியின் ஆட்சிக்குட்பட்ட வட காளிய மக்களுக்குள் பலர் ரோமானிய குடிமக்களாக இக் காலத்தில் உரிமை பெற்றிருந்தனர். சீசரின் பேராற்றலாலும், பெருந்திறமையாலும் இங்கிலாந்தினுள் ரோமானியர் எளிதில் நுழைய முடிந்தது. மேலும், பிற்காலத்தில் கிளாடியஸ் எளிதில் பிரிட்டனைக் கைப்பற்றுவதற்கு சீசரின் படையெடுப்பு வழி வகுத்துக் கொடுத்தது. ரோமாபுரியில் சீசருக்கு எதிராகத் தோன்றிய கிளர்ச்சிக்கு சீசர் பலியிடப்பட்டார். தக்க காலத்தை எதிர்ப்பார்த்திருந்த அவருடைய எதிரிகள் அவரைப் பழிவாங்கிக்கொண்டனர். அதைத் தொடர்ந்து அந்தோணிக்கும் (Antony), கிளியோபத்திரைக்கும் (Cleopatra) இடையே வளர்ந்த காதல் ரோமானியப் பேரரசினுள்ளே கிழக்கிற்கும், மேற்கிற்கும் உள்ள தொடர்புபற்றிய பிரச்சினையை எழுப்பியது. அதே நேரத்தில் அகஸ்டஸ் பேரரசினைத் திறமையாக நிறுவிக் கொண்டிருந்தார். அவ்வேளையில் அருளாளரான இயேசுநாதர் தம்முடைய கொள்கைகளை மக்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தார். தவத்திரு பால் (Paul) கிறிஸ்துவ சமயத்திற்கு மாற்றப்பட்டார். இத்தகைய சிறப்பு மிக்க இந்நூற்றுண்டு, உலக வரலாற்றில் மிக முக்கியமானதாகும். அக்காலத்திய இங்கிலாந்து வரலாற்றில் சிறப்புமிக்க நிகழ்ச்சிகள் சில இடம் பெற்றுள்ளன. நெடுந்தொலைவிலுள்ள ரோமாபுரி வாழ்க்கைமுறையினை ஏற்றுக்கொண்ட மாநிலமாகிய காளிலிருந்து வந்த ரோமாபுரியின் வடபகுதியைச் சார்ந்த வாணிகர்களும், குடியேறிகளும் பிரிட்டனின் உள்ளே குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். அவர்கள் இங்கிலாந்தின் பழங்குடி மக்களை ஆண்ட அரசர்களின் அவைக்களத்து, செல்வாக்குப் பெற்றும் வந்தனர்.

ஷேக்ஸ்பியரின் சிம்பலின் (Cymbeline) நாடகம், அவருடைய லியர் (Lear) நாடகத்தைப்போன்று முழுவதும் கற்பனைக் கதையன்று. கி.பி. 5 முதல் 40 வரை சிம்பலின் (Cymbeline) என்னும் அரசன் பிரிட்டனில் கட்டவலானியர் (Catuvellauni) என்னும் பழங்குடி மக்களை ஆண்டு வந்தார். அவர் பிரிட்டனின் தெற்குப் பகுதிவரையில் அவர்களுடைய இன ஆதிக்கத்தைப் பரப்பினார். இதனை அவர் வெளியிட்ட வெள்ளிக் காசின் பின் புறத்தில் 'பிரிட்டனை ஆளும் அரசன்' ('Rex Brittonum') என்று இலத்தீன் மொழியில் பொறித்து இருப்பதனால் அறிகிறோம். அவர்

ரோமானியப் பேரரசர் அகஸ்டஸோடும், டைபீரியஸோடும் (Tiberius) நட்புறவு உடையவராக இருந்தார். அவருடைய வெள்ளிக் காசில் தம்முடைய பட்டத்தினை, இலத்தீன் மொழியில் பொறித்திருப்பது இதற்குச் சிறந்ததொரு சான்றாகும். நார்மானிய மாவீரர்களையும் (Knights), சமய குருமார்களையும், அருளாளர் எட்டுவர்ட்டு (Edward the Confessor) இங்கிலாந்திற்குப் பெயரளவில் வரவழைத்தார். மேலும், அவர் பிரஞ்சு மொழியினை அவைக்கள மொழியாக ஏற்றுக்கொண்டார். அதைப்போன்று சிம்பலின் ரோமானிய வாணிகர்களையும், தொழில் வல்லுநர்களையும், பிரிட்டனின் நகரங்களில் குடியேற்றங்களை அமைத்துக் கொள்வதற்கு அனுமதி அளித்து வந்தார். அதன்மூலம் அவர் பிரிட்டனின் பழங்குடி மக்களுள் பலர் இலத்தீன் மொழியினையும் நாகரிகத்தையும் நன்கறியுமாறு செய்தார். சிம்பிலின் செயின்ட் ஆல்பன்சுக்கு அருகிலிருந்த வெருளாமியம் (Verulamium) என்னும் தம்முடைய தலைநகரை, கோல்செஸ்டருக்கு அருகிலுள்ள கமுலோடோனம் (Camulodunum) என்னும் நகருக்கு மாற்றிக்கொண்டார். இப்புதிய தலைநகரம் சிம்பலின் வென்ற திரினோவான்டியர் (Trinovantes) ஆட்சிக்குட்பட்டிருந்த நாட்டில் இருந்ததாகும்.[1] அங்குக் கிடைத்த பொன்னைக் கொண்டே அவருடைய தங்கசாலைகள் ரோமானிய நாணயமுறையினைப் பின்பற்றிப் பேரளவில் பொற்காசுகளை அச்சிட்டு வழங்கின.

இவருடைய ஆட்சிக் காலத்திலேயே லண்டன் ஒரு நகரமாக வளர்ச்சியுற்றிருக்கவேண்டும். தேம்ஸ் ஆற்றுப் படுகையில் கண்டெடுக்கப்பட்ட பழம்பொருட்சின்னங்களால், ரோமானியப் படையெடுப்பிற்கு முன்பு—ஆனால், ரோமானியரின் நாகரிக வாழ்க்கை முறை இங்கிலாந்தில் பரவிக்கொண்டிருந்த காலத்தில், லண்டன் மாநகரப் பாலம் முதன்முதல் மரத்தினால் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. எனவே, இத்தகைய நிலைமாறுபாட்டுக் காலத்தில்தான், வடகரையின் பாலத்தலைப்பில் லண்டன், நகரமாகத் தோன்றத் தொடங்கியிருக்கவேண்டும்: கிளாடியசின் தலைமையின்கீழ் ரோமானியர்கள் பிரிட்டனின்மீது படையெடுத்து வந்தபொழுது, லண்டன் என்ற பெயருடைய ஒரு நகரம் இருந்ததென்று தெரியவருகிறது.

[1] படிப்போருக்கு எளிதில் விளங்கவேண்டும் என்பதற்காக நான் எப்பொழுதுமே தற்காலப் பெயர்களையே பயன்படுத்தி வருகிறேன். ஆனால், இங்கு 'வெருளாமியம்' என்னும் இடத்தில்தான் இன்றைய செயின்ட் ஆல்பன்சு இருக்கிறது என்று உறுதியாகக் கூற முடியாததால், அவ்விடத்திற்குரிய பழைய பெயரினையே கையாண்டுள்ளேன்.

எவ்வாறாயினும், ஆங்கிலேயரின் வரலாற்றில் முதன்முதல் சிறப்புமிக்க இடத்தினைப் பெற்றது லண்டன். அடுத்து உலக வரலாற்றினை உருவாக்குவதில் லண்டன் மாநகரம் பெரிதும் ஈடுபட்டது. ரோமானியர்களின் ஆட்சிக் காலத்தில்தான் முதன் முதலாக லண்டன் மாநகரம் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது எனலாம். 'லண்டன்' என்னும் அந்நகரத்தின் பெயர் கெல்ட்டிக்கு மொழிக்குரிய சொல்லாகும். ஆனால் அந்நகரம் ஐபீரிய நாகரிகத்தின் சிறந்ததொரு நிலைக்களனாகவோ, கெல்ட்டிக்குகளின் நாகரிக வளர்ச்சிக்குப் பேருதவியாகவோ என்றும் இருந்ததில்லை. சீசரின் காலத்திலும், அவருக்குப் பிறகு நெடுங்காலம் வரையிலும் மிடில்செக்ஸ் (Middlesex) காடாகவே இருந்தது. பிற்கால லண்டன் மாநகரின் பெரும்பகுதி இக்காலத்தில் சேறும் சகதியும் நிறைந்த நிலப்பரப்பாகவே இருந்தது.[1] ஆனால், செங்குத்தான வன்னிலம் பாலத்தினைக் கட்டுவதற்குஏற்ற தாய் அமைந்தது. கென்ட்டு பகுதியிலுள்ள துறைமுகங்களிலிருந்து வரும் சாலைகள் லண்டனில் ஆற்றினைக் கடந்து, மேலும் இங்கிலாந்தின் வடக்குப் பகுதிக்கும், மேற்குப் பகுதிக்கும் செல்லுகின்றன. தேம்ஸ் ஆற்றுக் கழிமுகத்தின் வழியாக ஐரோப்பாவினின்று கொண்டு வரப்படும் பெருவாணிகப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு ஏற்ற இடமாக லண்டன் மாநகரம் அமைந்திருக்கிறது. எதிர்பாரா வகையில் துறைமுகமும், பாலமும் ஆகிய இரண்டும் ஒருங்கே இந்நகரில் அமைந்தன. இத்தகைய எதிர்பாரா நிலவியல் பொருத்தம் லண்டன் மாநகரின் சிறப்பிற்குக் காரணமாக அமைந்தது.

ரோமானியர் இங்கிலாந்தைக் கைப்பற்றியபிறகு, லண்டன் மாநகரப் பாலத்தினை நடுமையமாகக் கொண்டு, வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் நெடுஞ்சாலைகள் அமைத்தனர். அவர்கள் இங்கிலாந்தில் அமைத்த சாலைகளுள் பாதிக்கு மேற்பட்டவை லண்டன் பாலத்தை வேறு பகுதிகளோடு இணைப்பனவாக இருந்தன. ரோமானியர் லண்டன் மாநகரம் மாபெருந்துறைமுகமாக வளர்ச்சியுற்றுச் சிறப்புறுவதற்கு அடிகோலினர்கள் என்று கூறலாம். ரோமானியர் காலத்தில் அவர்கள் முயற்சியால் ஐரோப்பா

[1] இன்றைய லண்டன் மாநகரின் தெருக்கள், பண்டைக் கால லண்டன் மாநகரிலிருந்த களிமண், நீர் ஆகியவற்றிலிருந்து ஐந்திற்குமேல் இருபது அடிகளுக்கு அதிகப்படாத உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. நகரத்தின் அடிமட்டம் எப்பொழுதும் உயர்ந்து கொண்டே போகிறது. தற்கால லண்டன் மாநகரின் பெரும்பகுதி, ஒருகாலத்தில் சதுப்பு நிலமாகவோ, ஏரியாகவோ இருந்திருக்க வேண்டும். லண்டன் மாநகரின் தோற்றம் பற்றிய பலவகைப் பிரச்சினைகளை அறிய வேண்டுமானால், T. W. Page எழுதியுள்ள 'London' என்னும் நூலினைப் பார்க்கவும்.

வோடு செய்யப்பட்டுவந்த பெருவாணிகத்தின் இறக்குமதித் துறைமுகமாக லண்டன் மாநகரம் பயன்படுத்தப்பட்டது. அதனால் நெடுங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டுவந்த தேம்ஸ் ஆறு, போக்குவரத்துக்குரிய அசைந்தோடும் நெடுஞ்சாலையாக மாறிற்று. ஐரோப்பாவிலிருந்து கொண்டுவரப்படும் பண்டங்களை, உள்நாட்டிற்குள் கொண்டுசென்று எளிதாக இறக்குமதி செய்வதற்குரிய இடத்தில் லண்டன் மாநகரம் அமைந்திருந்தது. மேலும், அங்கிருந்து நெடுந்தொலைவிலுள்ள மாநிலங்களில் வாழும் (பழங்குடி மக்களின் தேவைக்காக அல்லாமல்) ரோமானியப் பேரரசினைச் சார்ந்தோரின் தேவைக்குரிய பொருள்களை எளிதில் நிலவழியாக அனுப்புவதற்குகந்த இடத்தில் லண்டன் மாநகரம் அமைந்திருந்தமையால்தான், பிற்காலத்தில் அது உலகச் சிறப்பினை அடைய முடிந்தது. ரோமானியப் பிரிட்டனிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் தகரம், தோல், அடிமைகள், முத்துகள் முதலியனவாகும். சிற்சில சமயங்களில் தானியங்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்வரிய பொருள்களை ஏற்றுமதி செய்து, அதற்கு மாற்றாக உலகின் பல பகுதிகளிலிருந்தும் சொகுசு மிக்க இன்ப வாழ்க்கைக்குத் தேவையான பகட்டுப் பொருள்கள் பலவற்றை இங்கிலாந்து பெறலாயிற்று.

ரோமானியர் இங்கிலாந்திலிருந்து வெளியேறியபிறகு, நார்மானியரின் படையெடுப்புவரையில் அடைய முடியாத வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் ரோமானியரின் ஆட்சிக் காலத்தில் லண்டன் மாநகரம் அடைந்தது. அந்நகரம் ரோமானியரின் ஆட்சியில் பெரிதும் விரிவடைந்ததோடு, செல்வ வளத்திலும் சிறப்புறத் தொடங்கியது. இடைக்காலத்தில் லண்டன் மாநகரைச்சுற்றி எழுப்பப்பட்ட பெருஞ்சுவரைப்போன்று, ரோமானியர் காலத்தில் 'ரோமானியப் பெருஞ்சுவர்' லண்டனைச் சுற்றி எழுப்பப்பட்டது. இடைக்காலத்தில் கட்டப்பட்ட சுவர், பண்டைய ரோமானியப் பெருஞ்சுவரினை அடியொற்றிக் கட்டப்பட்டதே யாகும். இவ்விரு காலங்களிலும் லண்டன் வாணிக நகரமாகச் சிறப்புற்று விளங்கியதே ஒழிய, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நகராக விளங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ரோமானியர் காலத்திய நகரங்களின் சிறப்பு வரிசையில் சிறிய நகரங்கள் பலவற்றைக் காட்டிலும் லண்டன் தாழ்ந்த நிலையிலேயே இருந்தது.

சீசர் நாடு காணும் நோக்குடன் முதன்முதல் இங்கிலாந்தின்மீது படையெடுத்ததை முன்பு கண்டோம். அதற்குப் பிறகு ஒரு நூற்றாண்டு கழிந்து, பேரரசரான கிளாடியஸ் தலைமை

யில் ரோமானியரின் மாபெரும் படை ஒன்று இங்கிலாந்தை முற்றுகையிட்டது. பிறகு ரோமானியர் பிரிட்டன் முழுவதும் கைப்பற்றினர். பல ஆண்டுகளாக இங்கிலாந்தின்மீது படையெடுக்க வேண்டும் என்று ரோமானியர் துடிதுடித்துக் கொண்டிருந்தனர். அதற்காகத் திட்டம் போட்டுப் படை திரட்டினர். இறுதியில் இப்படையெடுப்பு நடைபெற்றது என்பதை ஹோரேசினுடைய (Horace) நூல்களைப் படிப்போர் நன்குணர்வர். ரோமானியர், முற்போக்குக் கொள்கையுடைய ஒருவர் தங்கள் பேரரசரானதும், தங்களுடைய விருப்பத்தினை அவர்மூலம் செயற்படுத்துவதற்கேற்ற காலத்தை எதிர்பார்த்திருந்தனர். தக்க வாய்ப்பும் வசதியும் கிடைத்தவுடனே, ரோமானியர் தங்கள் அரசரின் தலைமையின்கீழ் ஒருங்கு திரண்டனர். தங்கள் காளிய நாட்டுப் பகுதியைச் சார்ந்துள்ளதும், ஆங்கிலக் கால்வாய்க்கு அப்பாலுள்ளதுமான கெல்ட்டிக்குகளின் நாட்டினைக் கைப்பற்றுவதற்குப் பேரார்வத்துடன் அவர்கள் புறப்பட்டனர். பிரிட்டனில் தங்கிவிட்ட ரோமானிய வாணிகர்களும், ரோமாபுரிப் பேரவை உறுப்பினர்களும், வீரர்களும், புதிய வருவாயாக அடிமைகளையும், நிலங்களையும், பதவிகளையும் பெறவேண்டும் என்ற பேரவாவினால் உந்தப்பெற்று, இங்கிலாந்தை உடனடியாகக் கைப்பற்ற எண்ணினர். அவர்கள் இங்கிலாந்தின்மீது படையெடுப்பதால் பேரிழப்பும், பெருந்துன்பமும் உண்டாகா என்று எதிர்பார்த்தமை மெய்யாயிற்று. இதற்கு முன்பே அரைகுறையாக ரோமானிய நாகரிகத்தினுள் பிரிட்டானியப் பழங்குடி மக்களின் தலைவர்கள் மூழ்கிக் கிடந்தனர். அதனால் அவர்கள் ஒன்றுபட்டு நாட்டுணர்ச்சியோடு ரோமானியரை எதிர்க்க முடியாமற் போயிற்று. மேலும், அவர்களுள் பலர், கட்டவலானியரின் ஆதிக்கத்தைக் கடுமையாக வெறுத்தனர். எனவே, தேம்ஸ் கழிமுகத்தின் வழியாக ரோமானியப் படை செல்லுவதற்காக நடந்த போரும் (கி.பி.43), கோல்செஸ்டரை நோக்கி ரோமானியப் படைகள் சென்றமையும், இங்கிலாந்தின் தென்கிழக்குத் தீவில் சிறப்புற்று விளங்கிய பண்டைய பேரரசின்—சிம்பலினுடைய ஆட்சியின் வரம்பினைக் குறைத்துவிட்டது. அடுத்து ஓரிரண்டு ஆண்டுகளில் நடந்த போர், வில்ட்டிலும்(Wilt), சாமர்செட்டிலும் (Somerset) சிறப்புற்று விளங்கிய பெல்ஜேக்களின் ஆற்றலை அழித்தொழித்தது. மேலும், அப்போரில் டார்செட்டில் வாழ்ந்த துரோடிரிகரின்(Durotriges)மாபெருங் களிமண் கோட்டைகள் இடித்து மண்ணோடு மண்ணாக்கப்பட்டன. பக்சிவிருந்து (Bucks) வார்விக்ஷையருக்கு இடைப்பட்ட இடைநிலத்தில் (midlands) இன்னும் காடுகளே மிகுதியாக இருந்து வந்தமையாலும், மக்கள் மிகவும் அரிதாக அங்கு வாழ்ந்தமை

யாலும், அங்கு ரோமானியரை எதிர்ப்பாரில்லாமற் போயி னர். ஆனால், ரோமானியப் படைகளின் அணிவகுப்பு வெல்ஷ் (Welsh) மலைச்சாரலையடைந்ததும், வடநாட்டவர்களாகிய மூரியர் களைச் (Moors) சந்தித்தது. இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்து வெற்றி முரசு கொட்டிய பிற படையெடுப்பாளர்களைப் போலவே, ரோமானியர் இங்குக் கடுமையான இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் அஞ்சாது போர்புரிய வேண்டியவர்களானூர் கள். கி.பி. 60-ஆம் ஆண்டில், அவர்கள் வெல்ஷ் பகுதியில் எழுந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய வழிகளை ஆராய்ந்து கொண்டிருந்தனர். சுனோடன் (Snowdon) மலைமுகடுகளைச் சுற்றிக் கடந்து சென்ற ரோமானியப் படைவீரர்கள் தாழ்ந்த பகுதியான ஆங்கிலசி (Anglesey) என்னும் இடத்தை அடைந் தனர். அப்பொழுது படையின் பின்னணியில் பெருங்கலகம் உண்டாகியிருப்பதாகச் செய்தி பரவியது. உடனே ரோமானியப் படைவீரர்கள், துருவிதர்களையும், அவர்களை வெறியுணர்ச்சி யோடு போற்றிப் பின்பற்றிய பழங்குடி மக்களையும் கொன்று குவிக்கத் தொடங்கினர்.

போடிசியா (Bodicea) தலைமையில்நடந்த எதிர்ப்புக் கிளர்ச்சி ஒரு விதிவிலக்கு என்று ரோமானியர்களே கூறுகின்றமையால், இங்கிலாந்தின் கிழக்குப் பகுதியும், தெற்குப் பகுதியும் ரோமா னியரின் ஆதிக்கத்திற்கு எளிதில் இரையாயின என்பது புலனு கிறது. முன்னேறிக்கொண்டிருந்த ரோமானிய வீரர்களுடைய ஒழுக்கக்கேடான செயல்களே — தவறான நடத்தையே இக் கிளர்ச்சியினைக் கிளப்பியது எனலாம். கிளைவும், ஹேஸ்டிங்சும் இந்தியாவில் பிளாசிப் போருக்குப் பிறகு பிரிட்டிஷாரின் ஆட் சியை முறையாக நடத்துவதற்குமுன்பு, ஆங்கிலேயர்கள் வங் காள மக்களை மிகக் கொடுமையாகவும், அதே நேரத்தில் இழி வாகவும் துன்புறுத்தினர். அதைப்போன்று ரோமானியப் படை வீரர்கள் தங்கள் நாட்டோடு எவ்வகையிலும் பகைமை கொள் ளாத இசேனியரையும் (Iceni), திரினோ வாண்டியரையும் மிகவும் இழிவாகக் கொடுமைப்படுத்தியமை, அவர் களைக் கலகம் செய்யுமாறு தூண்டியிருக்க வேண்டும். ரோமானியர் தங்கள் நிலங்களைப் பறிமுதல் செய்வதையும், கொள்ளையடிப்பதையும் கண்டு இசேனியர்கள் சினமுற்றனர். மேலும், தங்கள் அரசி போடிசியாவிற்கும் (Bodicea), அவள் குடும்பத்திற்கும் மானக்கேடு உண்டாகுமாறு தனிப்பட்ட முறை யில் ரோமானியப் படைகள் கொடுஞ்செயல்களில் ஈடுபட்ட பொழுது, அவர்கள் கொதித்தெழுந்தனர். இவ்வாறு கெல்ட்

டிக்கு இன மக்களின் [1] மூர்க்கத்தனம் ரோமாபுரியை எதிர்த்தும், பிரிட்டனை ரோமாபுரியின் அடிமையாக்குவதற்காகக் கோல்செஸ்டரிலும், வெருளாமியத்திலும், லண்டன் மாநகரிலும் பேரளவில் திரள் திரளாகக் கூடியிருந்த ரோமானியரை எதிர்த்தும் கலகம் காட்டுத் தீப்போல் நாடெங்கும் பரவியது. அதனால் மேற்கண்ட நகரங்களில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான ஆடவரும் மகளிரும் காட்டுமிராண்டித்தனமான கொடுஞ் செயல்களால் அல்லலுற்றனர்.

நாட்டுப்பற்றோடு இனப்பற்றுமிக்க கெல்ட்டிக்கு மக்களால் அவர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இப்படுகொலைக்குப் பலியானவர்கள் எழுபதினாயிரம் பேரென்று கூறப்படும் மரபுவழிச் செய்தி, ஓரளவிற்கு உயர்வு நவிற்சியேயாகும். ஆயினும், உயிரிழந்தோரின் பேரளவான எண்ணிக்கை, பிற்காலத்தில் (பதினேழு ஆண்டுக் காலத்திற்குள்) இலத்தீன் மயமாக்கப்படுவதற்கு முன்பே, இந்நகரங்களில் வாழ்ந்த மக்கள் ரோமானிய நாகரிக வாழ்வினை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர் என்பதை உறுதிப்படுத்துகின்றது.


ஆங்கிலசியிலிருந்து (Anglesey) திரும்பிப்போகுமாறு வற்புறுத்தப்பட்ட ரோமானியப் படைவீரர்கள் வெறியுணர்ச்சியோடு அடிக்கடி தங்களைத் தாக்கிய கெல்ட்டிக்கு மக்களோடு போர் புரிந்து வந்தனர். அண்மையில் நடந்த படுகொலைக்காக நார்ஃபோக்கைச் (Norfolk) சார்ந்த இசானியர்கள், சொற்களால் எடுத்துரைக்க முடியாத அளவிற்குக் கொடூரமாகப் பழிவாங்கப்பட்டனர். அதனால் உண்டான அழிவு வேலைகளினால் அவர்களுடைய நாடு பாழடைந்தது. அது பல தலைமுறைகளுக்குப் பிறகும் இழந்த நலன்களைப் பெற்றுப் பொலிவுற முடியாமற் போயிற்று. போடீசியா நஞ்சுண்டு இறந்தாள். பிரிட்டனின் கிழக்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் மீண்டும் ரோமானியரின் ஆட்சி அமைப்புகளும், முறைகளும் நிறுவப்பெற்றன. விரைவில் இங்கிலாந்து நாட்டுப் பழங்குடி மக்களிடத்து ரோமானியர் நீதிக்கும், நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்களாக நடந்து கொண்டனர். இசேனியர்களால் அழிக்கப்பெற்ற—பாழ்படுத்

[1] இதுவரை 'கெல்ட்டிக்கு' என்னும் சொல்லை நான் அதற்குரிய பொதுப் பொருளில் பயன்படுத்திவந்தேன். அதாவது, கெல்ட்டிக்கு-ஐபீரியக் குருதிக் கலப்புடைய மக்களைக் குறிக்குமாறு வழங்கி வந்தேன். பொன்னிறக் கூந்தலையுடைய போடீசியா, நன்கு வரையறுத்துக் கூறப்படும் கெல்ட்டிக்கு உயர்குடி மக்களினத்தைச் சேர்ந்தவளாவள். அவளுடைய உண்மைப் பெயர் 'பௌடிச்சா' (Boudicca) என்பதாகும். ஆனால், கவிஞர் கூப்பரும், டென்னிசனும் இன்னோசைமிக்க 'போடீசியா' என்னும் பெயரால், அவளை உலகில் புகழ் பெறுமாறு செய்தனர்.

தப்பெற்ற நகரங்கள் அனைத்தும், இதற்கு முன்பு என்றுமே அடைந்திராப் பெருஞ் சிறப்புடன் தழைத்தோங்கலாயின. லண்டன் மாநகரம், வட ஐரோப்பியப் பெருவாணிகத்தின் புதிய நிலைக்களனாக ஆண்டுதோறும் புதிய வளர்ச்சியுற்றுச் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழத் தொடங்கியது. புதிதாகத் தலையெடுக்கும் தலைமுறையைச் சார்ந்தவருள் சிறப்புமிக்கவரும், முக்கியமானவருமான பிரிட்டானியர் கட்டுப்பாடில்லாத போர்வீரர்களுக்குரிய பழக்கவழக்கங்களையெல்லாம் உதறியெறிந்தனர். ரோமானியரின் 'டோகா' (Toga) என்ற போர்வை உடைகளைப் பெருமிதத்தோடு அவர்கள் அணியத் தொடங்கினர். ரோமானியரின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதிலும் இலத்தீன் மொழியினைப் பேசுவதிலும் ரோமானியக் கலையின்பத்தில் மூழ்குவதிலும் அவற்றைப் பயிலுவதிலும் பேரார்வங்கொண்டும், பெருமகிழ்ச்சியுற்றும் அவர்கள் வாழலாயினர்.

ஆனால், வடமேற்கு எல்லைப்புறத்து வாழ்ந்த மூரியர்கள் (Moors) தீராப்பகையுடன் பெருந்தொல்லை கொடுத்து வந்தனர். வீரமிக்க மறவர் இனத்தைச் சார்ந்த அம்மூரியர்கள், காட்டுமிராண்டிப் பண்பில் வற்றாத ஊற்றாக இருந்துவந்த வெல்ஷ் மலைகளிலிருந்து தொடர்ந்து கூட்டங்கூட்டமாகக் கீழே இறங்கி வந்தனர். அங்குப் பாதுகாப்பில்லாத நகர மக்களையும், நாட்டுப்புற மாளிகைகளில் (Villa) வாழ்ந்த மக்களையும் மூரியர் கொள்ளையடித்தும், கொன்று குவித்தும் துன்புறுத்தினர். இவர்களை அடக்கியொடுக்குவது ரோமானியப் படைவீரர்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்துவந்தது. இறுதியில் ரோமானியர் வெல்ஷ் மலைப்பகுதியில் கட்டுப்பாடுடைய படையொன்றை நிலையாக வைத்து நாடு காவல் புரிவது என்ற முடிவிற்கு வந்தனர்.

நெடுங்காலம் இப்பிரச்சினைக்கு முடிவுகாண வேறு பல வழிகளை ஆராய்ந்துவந்த ரோமானியப் படைவீரர், கெல்ட்டிக்கினத்தைச் சார்ந்த வீரர், குழுவினின்றும், சாக்சானிய வீரர் கூட்டத்தினின்றும், டேனியரின் வீரர் கூட்டத்தினின்றும் பெரிதும் வேறுபட்டு விளங்கினர். மேலும், நார்மானியர் காலத்திய நிலமானியப் படைவீரர்களுக்கும், ரோமானியப் போர்வீரர்களுக்கும் பெருத்த வேறுபாடு இருந்துவந்தமை குறிப்பிடத்தக்கது. ரோமானியப் படை மிகச் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டதாகும்; நெடுங்காலமாகப் போர்த் தொழிலையே தொடர்ந்து செய்து வந்ததுமாகும்; அது கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் கண்ணெனப் போற்றிவந்த பெரும் படையாகும். ஆண்டுதோறும் அப் படைக்குப் புது முறையில் பயிற்சி தரப்பட்டது. அதனால்




படம் 3.

ரோமானியப் பேரரசு

அப்படை கட்டுப்பாடும் திறமையும் உடையதாய்ச் சிறந்து விளங்கியது. போரின்றி அமைதியாக இருந்த காலங்களில் கோட்டைகள் கட்டுவதிலும், பாலங்கள் அமைப்பதிலும், சாலைகள் போடுவதிலும் ரோமானியப் படைகள் பயன்படுத்தப்பெற்றன. அதனால் வேலையின்றிச் சோம்பேறிகளாகப் படைவீரர்கள் மாறுவதற்கோ, அவர்கள் தங்களுக்குள் செருக்குற்று ஒருவரையொருவர் எதிர்த்து வெட்டி மடிவதற்கோ, ஒன்று சேர்ந்து கலகம் செய்வதற்கோ வாய்ப்பில்லாமற்போயிற்று. பிரிட்டனின் மீது படையெடுத்துவந்த மற்றவர்கள் எல்லாம் பகுத்தறிவின்றி நாட்டு மக்களைப் பேரளவில் கொன்று குவித்தும், நாட்டினைப் பாழாக்கியும் வெற்றி பெற்றனர்; அல்லது உழவர்களைப் புதிதாகப் பேரளவில் கொண்டுவந்து இந்நாட்டினுள் குடியேற்றியும், பெரு மாளிகைகளையும் கோட்டைகளையும் கட்டியும், தங்கள் வெற்றியை இந் நாட்டில் நிலைநாட்டினர். ஆனால், ரோமானியர் இம் முறைகளைப் பின்பற்றவில்லை. அவர்கள் பிரிட்டன் முழுவதற்கும் பொருந்திவரக்கூடிய திட்டம் ஒன்றினை முறையாக வகுத்து, நாடு முழுவதிலும் படைகளின் போக்குவரத்துக்கு ஏற்ற நெடுஞ்சாலைகளை அமைத்தனர். அவற்றின் இடையிடையே கோட்டைகளைக் கட்டி, அவற்றுள் நிலையாகப் படைகளை வைத்துக் காவல்புரிந்தனர். இவ்வாறு சிறுகச் சிறுக ரோமானியர் பிரிட்டனைக் கைப்பற்றினர். தங்களுடைய படையெடுப்பினை எதிர்த்த இசேனியரின் எழுச்சிக்குப்பிறகு,முதலாவதாக ரோமானியர்கள் இம் முறையினைத் திறமையாகப் பின்பற்றிச் செயலாற்றிவந்தனர். அதனாலேயே இங்கிலாந்தை அவர்கள் எளிதில் வெல்ல முடிந்தது. தங்கள் முதல் முயற்சியில் தோல்வியுற்ற சாக்சானியர்கள் இம் முறையைப் பின்பற்றத் தவறிவிட்டனர். ஆனால், நெடுங்காலத்திற்குப் பிறகு வந்த நார்மானியப் பிரபுக்கள் வெல்ஷ் மலைச்சாதியினரை எதிர்த்து முன்னேறவொட்டாது தடுப்பதற்கும், அவர்களை அடக்கியொடுக்குவதற்கும் வேண்டிப் பெரிய அரண்மனைகளையும், கோட்டைகளையும் கட்டினர். ரோமானியர்கள், கிழக்கிலும் தெற்கிலும் உள்ள சமவெளிப் பகுதிகளை ரோமானியமயமாக்கியதைப் போல, மலைப்பகுதிகளில் தங்கள் நாகரிகத்தினைப் புகுத்த முடியவில்லை. சுனோடன் (Snowdon), பிளான்லிம்மன் (Plynlymmon) மலையடிவாரங்களில் அவர்களால் நகரங்களைக்கூட அமைக்க முடியவில்லை. ஆனால், நெடுஞ்சாலைகளைப் போட்டதனாலும், கோட்டைகளைக் கட்டியதனாலும், ரோமானியர்கள் பிரிட்டனில் அடியெடுத்துவைத்த முப்பத்தைந்தாண்டுகளுக்குள் திறமைமிக்க படையினைக் கொண்டு எளிதில் வேல்சினைக் கைப்பற்றிக் கொண்டனர்.

மிகக் குறுகியதாகவும் தனித்தும் இருந்தமையால் இடர்ப் பாடுடையதாக இருக்கும் என்று நினைத்து ரோமானியர், டேவோன் (Devon), காரன்வால் (Cornwall) பகுதிகளைப் புறக் கணிக்கலாயினர். எக்ஸீடருக்கு (Exeter) அப்பால் ரோமானியப் பழம்பொருட் சின்னங்கள் மிக அரிதாகவே கிடைத்துள்ளன. புதிய பிரிட்டனில் சாமர்செட்டு முக்கியத்துவம் பெறத் தொடங் கியது. கிளாடியசு படையெடுத்த ஆறுவது ஆண்டிற்குள் புதி தாக அமைக்கப்பட்ட ரோமானியருடைய அரசாங்கம், மெண் டிப்பிலுள்ள (Mendip) ஈயச் சுரங்கங்களை அகழ்ந்தெடுக்கும் வேலையில் ஈடுபட்டது. அகுவா சோலிசின் (Aquae Solis) என்னும் நலவாழ்வுக்குரிய நீர் ஊற்று, பாத்து (Bath) நகரினை விரைவில் ரோமானிய—பிரிட்டிஷ் சமூகத்தினரின் புத்தம் புதுப் பாணி களுக்கும், சொகுசுமிக்க ஆடம்பர இன்ப வாழ்விற்கும், உடல் நலத்தைப் பேணுவதற்கும் உரிய பொழுதுபோக்குத் தலமாக விளங்குமாறு செய்தது. மங்கலாக இருக்கும் பிரிட்டனின் வானிற்குக் கீழே ரோமப் பேரரசின் மகிழ்ச்சி மிக்க சோம்பல் வாழ்க்கை இன்பத்தில் மக்களைத் திளைக்குமாறு செய்ய ரோமா னியர் முயன்றனர்.

வடக்குப் பகுதியில் தோன்றிய எல்லைப் பிரச்சினையும், அதனால் உண்டான இடர்ப்பாடுகளும் முற்றிலும் தீர்க்கப்படா மலே இருந்துவந்தன. மூரியர்கள் வாழ்ந்த புதர்க்காடுகள் டைனியிலிருந்து (Tyne) ஹம்பர் (Humber) வரை நிறைந்திருந்தன. நாம் அறிந்த வெண்புல் பகுதி, அக் காலத்தில் தூரிகை மரங் களும் (Brushwood), பிர்ச் மரங்களும் (Pirch), குட்டையான சீமை ஆல மரங்களும் (Oak) நிறைந்தவையாக விளங்கின. அவை இங்கி லாந்தில் கம்பளி வாணிகம் வளரத் தொடங்கிய பிற்காலத்தில் வளர்க்கப்பட்ட செம்மறியாடுகளால் கொறிக்கப்படுவதற்கு முன்பே மறைந்தன. அத்தகைய பாழ்நிலப் பகுதிகளில் வாழ்ந்த காட்டுமிராண்டிக் கொள்ளைக்காரர்களாகிய கருநாகங்கள், ரோமானிய வீரர்களாகிய பாம்பாட்டிகள் ஊதிய மகுடியின் இனிய ஓசையைக் கேட்டு, அதற்குக் கட்டுப்பட்டு நடக்க மறுத் தன. மேலும், அவர்களுடைய இனப் பழக்கவழக்கங்களையும், போரியல்புடைய ஆர்வத்தையும் கைவிட மறுத்தனர். அவர்கள் வாழ்ந்த பகுதிக்கு அப்பால், தற்கால ஸ்காட்லாந்தின் நிலப் பகுதி அமைந்திருந்தது. அங்கு ஓரளவிற்குக் கெல்ட்டிக்கு இனத்தையும், பேரளவிற்குப் பிற இனங்களையும் சார்ந்தவர்க ளான காலிடோனியர் (Caledonians) என்னும் பிக்டிஷ் (Pictish) மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களும் மேற்கண்ட காட்டு மிராண்டிக் கொள்ளைக்காரர்களைப்போலவே அடிபணிய மறுத்

தனர். அவர்களுடைய நாட்டின் இயற்கையமைப்பும், நெடுந் தொலைவில் அப்பகுதி அமைந்திருந்தமையும், அவர்களை எளிதில் வெல்ல முடியாத பேராற்றல் வாய்ந்தவர்களாக விளங்குமாறு செய்தன.

கிளாடியசின் படையெடுப்பிலிருந்து ஒன்றரை நூற்றுண்டு கழிவதற்குள் ரோமானியப் பேரரசரான செவீரசு (Severus), தம்முடைய பேரரசின் வட எல்லையை இறுதியாக வரையறுத் தார். ஹாட்ரியன் (Hadrian) கி. பி. 123–ல் சோல்வேயிலிருந்து (Solway) டைனி (Tyne) ஆற்றின் கழிமுகம் வரையில் கட்டிய ரோமானியப் பெருஞ் சுவரினைச் செவீரசு புதுப்பித்தார். பல முறை ஸ்காட்லாந்தைக் கைப்பற்ற ரோமானியர்கள் முயன் றனர். ஒரு முறை புகழ்மிக்க ரோமானிய வரலாற்றுசிரியரான டாசிடசின் (Tacitus) மாமனுராகிய அக்ரிகோலா (Agricola) பிரிட் டனின் ஆளுநராக இருந்தபொழுது, அவர் மேட்டுநிலப் பகுதி யின் எல்லையிலிருந்த 'மோன்ஸ் கிரௌபியஸ்' (Mons Graupius) என்னும் இடத்தில் வெற்றி பெற்றபொழுது, ஸ்காட் லாந்தைக் கைப்பற்ற முயன்றுர். அந்தோனியஸ் பயஸ் (Antoninus Pius) ஆட்சிக் காலத்தில் (கி. பி. 140-ல்) ஸ்காட்லாந்தினைக் கைப் பற்றும் முயற்சி நடைபெற்றது. மீண்டும் ஒரு முறை செவீரசு காலத்தில் ஸ்காட்லாந்தின்மீது ரோமானியர் படையெடுத்தனர். ஆனல், ஆங்கிலேயப் பிளான்டாஜனட்டு அரசர்களைப்போன்றே, ஸ்காட்லாந்தினைக் கைப்பற்றும் முயற்சியில் ரோமானியர் திரும் பத்திரும்பத் தோல்வியுற்றனர். காலிடோனியர்கள் தங்களுக்கு உறுதுணையாக இருந்த இயற்கைச் சூழல்களுக்கிடையே ரோமானியர்களை எதிர்த்தது மட்டும் ரோமானியருடைய தோல்விக்குக் காரணமாகாது. பின்புறத்திலிருந்த மலைச்சாதி யினரான கொள்ளைக்காரர்கள் அடிக்கடி குழப்பமும் கலகமும் செய்து வந்தமையும் அவர்களுடைய தோல்விக்குக் காரணமாகும். காலிடோனியாவை ரோமானியர்கள் கைவிடும்வரை, அவர்க ளுடைய செய்திப் போக்குவரத்துக்குரிய வழி நெடுந்தொலை விற்கு நீண்டதாக இருந்தது. அதனல் ஹம்பரிலிருந்து வடக்கு நோக்கிய வழி முழுவதும் எதிரிகள் தாக்கித் துன்புறுத்து வதற்கு ஏற்ற சூழ்நிலை அமைந்திருந்தது.

ரோமானியர் ஸ்காட்லாந்தில் தங்களுக்குப் பிறகு நின்று நிலவுமாறு விட்டுவிட்டுச் சென்றவை ஆழ்ந்த அகழிகள் சூழ்ந்த சில பாசறைகளும், போர்த்து கழிமுகத்திற்கும் கிளைடி கழிமுகத் திற்கும் இடையே அந்தோனியஸ் கட்டிய மாபெருஞ் சுவருமாகும். இவை யாவற்றையும்விட மிக முக்கியமான ஒன்றை ரோமானியர்

ஸ்காட்லாந்தில் விட்டுச் சென்றனர். காலிடோனியாவைச் சார்ந்த பிக்டிஷ் (Pictish) இனமக்களுக்கு இடையே ரோமானியரின் படையெடுப்பு ஒற்றுமையுணர்வினைக் கனன்று எழுமாறு செய்தது; எல்லோரும் ஒன்றுபட்ட ஒரு நோக்குடனே இணைந்து ரோமானியப் பேரரசின் சுவர்களையும் செயல்களையும் எதிர்ப்பதற்கும் அழிப்பதற்கும் உரிய புத்துணர்ச்சியையும், புது ஆர்வத்தையும் ஊட்டியது. சீசர்களின் ஆட்சியில் அயர்லாந்தைத் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர யாரும் முயலவில்லை.

எனவே, ரோமானியர் பிரிட்டனில் கைப்பற்றி ஆண்ட பகுதி தற்கால இங்கிலாந்தையும் வேல்சையும் கொண்டதாக இருந்தது.[1] ஆனால், இப்பகுதியுங்கூட மிகவும் மாறுபாடுடைய இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை இலத்தீன் மொழி நாகரிகத்தில் ஊறித் திளைத்த இங்கிலாந்தின் கிழக்கும் தெற்கும் சேர்ந்த பகுதியும், நாகரிகமடையாத காட்டுமிராண்டி மக்கள் வாழ்ந்த வடக்கும் மேற்கும் சேர்ந்த பகுதியுமாகும்.

ஹம்பருக்கும் (Humber), டிரென்டுக்கும் (Trent) வடக்கிலும், செவர்னுக்கும் (Severn), எக்சி (Exe) க்கும் மேற்கிலும் கெல்ட்டிக்கு–ஐபீரியப் பழங்குடி மக்களின் பண்பு அதனுடைய ஆதிநிலையிலேயே இருந்து வந்தது. பிரிட்டனின் செம்பாதியான இம்மூரியர்கள் நாட்டில் நிறுத்தப்பெற்றிருந்த காவற் படை அனைத்தும், அவற்றின் நேரம் முழுவதையும் இப்பகுதியில் அமைதியை நிலைநாட்டவே செலவழித்தது. உண்மையிலேயே இராணுவம் கைப்பற்றிய இடங்களில் முக்கியமானது இவ்விடம் என்பதைத் தவிர வேறெவ்விதச் சிறப்பும் இவ்விடத்திற்கு இல்லை. ரோமானியப் பேரரசின் பெரும் படையின் பத்தினுள்

[1] ஹாட்ரியனும், செவீரசும் டைனியின் வடகரை வழியாகச் செல்லுமாறு கட்டிய பெருஞ் சுவரை ரோமானியரின் ஆட்சிக்குட்பட்ட பகுதி எல்லையாகக் கொண்டிருந்தது. அச்சுவரின் வடக்குப் பக்கத்திற்கு அப்பால கொடிய மூரியர்கள் நெடுக வாழ்ந்தமையால், அயல் நாட்டுப் பார்வையாளர்கள் ரோமானியப் பெருஞ்சுவர் காட்டினூடே நெடுகச் செல்லுவதாகக் கூறிச் சென்றனர். ஓரளவிற்கு இது உண்மையேயாகும். ஆனால், அச்சுவரின் தென் பகுதியில் அதனையொட்டி டைனி ஆற்றின் பள்ளத்தாக்கு இருந்தது. அது நாகரிகத்தின் இயற்கை எல்லையாகவே அமைந்திருந்தது. இன்று அங்கு நகரங்களும், ரயில் வழியும் உள்ளன. செவியட் மலைகளின் முகடுகளும், வட இங்கிலாந்தின் ஊடே செல்லும் வேறு எத்தகைய வழிகளும் பொருள்களைக் கொண்டுபோவதற்கு மிகக் கடினமான வழிகளாகவே இருந்திருக்க வேண்டும். ரோமானியர் அச்சுவர்களைத் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த காலத்தில், அதற்கு வடக்கே, ஆனால் செவியட் மலைகளுக்குத் தெற்கே சில கோட்டைகளைக் கட்டிக் காத்தனர். ஆவர்பீல்டு என்னும் அறிஞர், 'ஆயினும், இப்பொழுது இருப்பதைப் போலவே அன்று வடக்கையும் தெற்கையும் பிரித்துக் காட்டும் எல்லைக் கோடாகச் செவியட்டு மலைகள் விளங்கின' என்பர்.


ஒரு பங்கு அளவினதாகிய 40,000 வீரர்கள் பிரிட்டனின் இப்பகுதியைக் காவல் புரிந்தனர். அங்கு மூன்று பெருங் கோட்டைகளை நிலைக்களனாகக் கொண்டு, மூன்று படைத்தளங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவை யார்க்கின் கோட்டை, செஸ்டரின் கோட்டை, கார்லியன் (Caerleon) கோட்டை என்பனவாகும். அவை ஒவ்வொன்றும் ஒரு பெரும்படையின் தலைமை நிலையமாக விளங்கின. வேல்சில் பென்ஸ் (Pennines), கம்பர்லாந்து (Cumberland), நார்த்தம்பிரியா (Northumbria) ஆகிய மூன்று நகரங்களும் முக்கியப் படைத்தளங்களாக இருந்தன. அந்நகரங்களின் வழியே நெடுஞ்சாலைகளை ரோமானியர் அமைத்தனர். அச்சாலைகள் ஒரு மலைப் பாசறையிலிருந்து மற்றொரு மலைப்பாசறைக்கு நேராகச் செல்லுமாறு செம்மையாகப் போடப்பட்டிருந்தன. அச்சாலைகளை அமைத்த ரோமானிய வீரர்கள் இரும்புக் கவசம் அணிந்தவர்களாய், அவ்வழிகளிலேயே எந்நேரமும் அணிவகுத்து, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லுவதும் திரும்பி வருவதுமாக இருந்தனர். அவர்களுடைய அணிவகுப்பும் ஆரவாரமும் அப்பகுதிகளில் வாழ்ந்த காட்டுமிராண்டி மக்களுக்கு வெறுப்பையும் பகைமையையும் உண்டாக்கின. டெவோனும் (Devon), காரன்வாலும் (Cornwall), கெல்ட்டிக்கு பழங்குடி மக்கட் பண்பு நிறைந்த தனிப்பகுதிகளாக இருந்துவந்தன. பயன் மிக்க தென்கிழக்குச் சமவெளிகளில் ரோமானிய நாகரிகத்தில் மூழ்கித் திளைத்த பிரிட்டானிய மக்கள் அமைதியாக நெருங்கி வாழ்ந்துவந்தனர். இப்பகுதிகளில்தாம் ரோமானியப் பெரும் படையின் நடமாட்டம் குறைவாக இருந்து வந்தது. ஆனால், அப்பகுதிகளில் ரோமானிய நகரங்களும் ஏராளமாக இருந்தன; ரோமானிய நகரம் அங்குப் பிறரைக் கவருவதில் பேராற்றல் வாய்ந்ததாகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரிட்டானியத் தீவின் இவ்விரு நிலவியல் பிரிவுகளும் இவ்வாறு இருவகையான பண்பாட்டின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. சாக்சானியர்களுடைய தாக்குதல்களுக்குள்ளாகி அழிவுற்ற மாவட்டங்கள் அனைத்தும், ரோமானிய நாகரிகத்தையும், வாழ்க்கை முறைகளையும் மேற்கொண்டு சிறப்புற்று விளங்கிய பகுதிகளேயாகும். இதனால் ரோமானிய நாகரிகமும், பண்பாடும் நலிவுறத் தொடங்கின. ஆனால், வேல்சிலும், காரன்வாலிலும், ஸ்டிராத்கிளைடிலும் (Strathclyde), லங்காஷயரிலும் கெல்டிக்கு மக்களின் நாகரிகம் தனித்து அழியாது என்றும் விளங்க வேண்டிய நற்பேறு பெற்றிருந்தமையால், அப்பகுதிகள் சாக்சானியரின் தாக்குதல்களுக்கு இரையாகாது தப்பின. அப்பகுதிகள் யாவும் ரோமானியருடைய ஆதிக்கத்திற்குட்படாது தனியுரிமை

யோடு கெல்டிக்கு மக்களுடைய பண்பாடு தழைத்தோங்கிய இடங்களாகும். இவ்வெதிர்பாரா நிகழ்ச்சி பிரிட்டனின் எப்பகுதியிலும் ரோமானியரின் செல்வாக்கு நிலைத்து நிற்காமைக்குரிய காரணத்தைப் பெரிதும் அறிவிக்கிறது எனலாம்.

ரோமாபுரி, காளினை ரோமானிய மயமாக்கியதைப்போல பிரிட்டனை ஏன் மாற்றமுடியாது தோல்வியுற்றது என்பதற்கு இரண்டாவதாக ஒரு காரணம் கூறலாம். ஆனால், அது மிகவும் பொதுவாகக் கூறக்கூடிய காரணமாகும். நடுநிலக் கடற்பகுதியிலிருந்து நெடுந்தொலைவிற்கு அப்பாலுள்ள நாடு பிரிட்டனாகும். பிரான்சின் தெற்குப் பகுதி நடுநிலக் கடற்பகுதியினைச் சார்ந்த ஒரு கூறேயாகும். ஆனால், இத்தாலிய நகரான ரோமாபுரியின் நாகரிகமும், பொதுமன்ற வாழ்வும், வெளிமுற்றங்களிலே காலமெல்லாம் உறைவதும் ஆகிய வாழ்க்கை நெறியும், நெடுந்தொலைவிலுள்ள வடக்குப் பகுதியில் கொண்டுவந்து புதிய சூழல்களுக்கு இடையே நடப்பட்டமையால், அந்நாகரிகம் வட ஐரோப்பியக் குளிரினால் நடுக்கமுற்றுத் தழைத்தோங்காது அழிந்தொழிந்தது. பண்டை உலகின் பல பகுதிகளிலும் மலர்ந்து மணம் வீசியது, நடுநிலக் கடற்பகுதியில் அரும்பிய நாகரிகமேயாகும். இடைக்கால உலகம்தான் உண்மையில் ஐரோப்பிய உலகமாயிற்று. இடைக்காலத்தில் ரோமாபுரி லெவான்ட் (Levant) டையும், வடஆப்பிரிக்காவையும் இழந்ததாலும், ஜெர்மனியைக் கிறிஸ்துவ நாடாக மாற்றியதாலும், இன்றைய ஐரோப்பியப் பெருநிலம் தனித்ததொரு நாகரிக உலகமாக விளங்கத் தொடங்கிற்று. பண்டை உலகில் இங்கிலாந்து நெடுந்தொலைவில் தனித்திருந்த எல்லைப்புற அரணாக இருந்து வந்தது. இடைக்காலத்தில் அது கிறிஸ்துவ உலகத்தின் இதயத்திற்கும், நிலமானியப் படைமுறை நாகரிகத்திற்கும் மிக அருகில் இருக்கலாயிற்று. எனவேதான், ரோமானியர்களின் வேலைப்பாடுகளைக் காட்டிலும் நார்மானியரின் வேலைப்பாடு இங்கிலாந்தில் பெரிதும் நிலைபெற்று விளங்க முடிந்தது. கெல்ட்டிக்கு இனமக்கள் வாழ்ந்த பிரிட்டனின் நாகரிகத்தை அடியோடு மாற்றக்கூடிய அளவிற்கு ஏராளமாக இத்தாலிய அல்லது நடுநிலக் கடற்பகுதியைச் சார்ந்த மக்கள் இங்கிலாந்திற்கு வரவில்லை. எனவே, மேற்போக்கான மாறுதல்களையே பிரிட்டனின் மக்கள் வாழ்க்கையில் ரோமானியரால் செய்ய முடிந்தது. ஆயினும், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்த வளமிக்க தெற்கிலும், கிழக்கிலும் உள்ள மாவட்டங்களின் மக்களை ரோமானிய நாகரிகத்தில், மேலெழுந்தவாருக மூழ்கித் திளைக்குமாறு செய்து, ரோமானியர்கள் பெற்ற வெற்றி மிகச் சிறப்புடையதாகும். ஆனால், அந்

4




நாட்டுப்படம் 4.

**இடைக்காலத்திய கிறிஸ்துவ உலகம்**

நாகரிகம் மிக எளிதில் மாறக்கூடியதாக—நிலையற்றதாக விளங்கியமை இங்குக் கருதத்தக்கது.[1]

நடுநிலக் கடலினைச் சார்ந்த நாகரிகம் நகர வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டது. அந்நாகரிகத்தினை உலகெங்கும் படைகளைக்கொண்டு பரப்பிய பெருமை ரோமாபுரிக்கே உரியதாகும். இவ்வகையில், அது வெற்றிகொண்ட கெல்ட்டிக்கு நாகரிகத்தினின்றும், அதற்குப் பிறகு பிரிட்டனில் குடிபுகுந்த சாக்சானிய, நார்மானிய நாகரிகங்களினின்றும் வேறுபட்டு விளங்குகிறது. ரோமானியப் பேரரசு, நகர அரசினின்று தோன்றி வளர்ச்சியுற்றதே யாகும். அது நடுநிலக் கடற்பகுதியிலிருந்த எண்ணற்ற நகர அரசுகளைக் கைப்பற்றி அவற்றைத் தன்னுடைய அரசுடன் சேர்த்துக்கொண்டது. காளிய மக்களிடையே புதிய நகரங்களை ரோமாபுரி அமைத்துத் தந்தது. எளிதில் செல்ல இயலாத நெடுந்தொலைவிற்கு விரிந்திருந்த ரோமானியப் பேரரசின் முக்கிய நகரங்களுக்கிடையே போடப்பட்டிருந்த இராணுவ நெடுஞ்சாலைகள், போக்கு வரத்திற்குப் பெரிதும் உதவியாக இருந்தன. இவ்வாறு நெடுஞ்சாலைகளால் இணைக்கப்பட்ட மதில் சூழ்ந்த நூற்றுக்கணக்கான நகரங்களிடையேதான் பேரரசின் உண்மையான வாழ்க்கை சீரும் சிறப்பும், ஏற்றமும் எழிலும் பெற்று விளங்கியது. இந்நகரங்கள் ஒவ்வொன்றிலுமிருந்துதான் ரோமானியர் நாட்டை ஆளமுயன்றனர். மேலும், அங்கிருந்தே சுற்றிலுமுள்ள நாட்டுப்புறங்களை ரோமானிய மயமாக்க முயன்றனர். அவ்வாறே தெற்கு பிரிட்டனிலும் ரோமானியர் முதன் முதல் நகரங்களை அமைத்தார்கள்.

லண்டன் மாநகர் மட்டுமல்லாமல் பெரிய நகராட்சி மன்றங்களையுடைய நகரங்களையும், சில்செஸ்டர் போன்ற சிறு நகரங்களையும் ரோமானியர் நீண்ட சதுர வடிவில் திட்டமிட்டு அமைத்தனர். அந்நகரங்களைச் சுற்றிலும் பெருஞ் சுவர்களை அவர்கள் எழுப்பினர். இத்தகைய நகரங்களுள் வாழ்ந்த தொழிலாளிகள்

[1] ரோமானிய வாணிகர்கள், படைவீரர்கள், ஆட்சியாளர்கள் அனைவரும் நடுநிலக் கடற்பகுதியினைச் சார்ந்தவரல்லர். சிறப்பாக முதல் தலைமுறைக்குப் பிறகு, வந்த பெரும்பான்மையான வீரர்கள் கெல்ட்டிக்கு, டியூட்டானிக்கு இனங்களைச் சார்ந்த வடவர்களேயாவர். அமைதிக் காலத்தில் ரோமானிய வீரர்கள் ஆண்டுதோறும் ஆயிரம் முதல் ஆயிரத்தைந்நூற்றுக் குட்பட்டவர்கள் பணம் கொடுத்து வேலையிலிருந்து விலக்கப் பெற்றனர். ஆனால், அவர்களுள் எத்தனை பேர் தங்கள் பணி முடிந்தவுடன் பிரிட்டனில் நிலையாகத் தங்கினர் என்பது தெரியவில்லை. பேரளவில் பணித்துறை மக்கள் வந்து குடியேறியமைக்கும் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. இத்தீவின் பழங்குடி மக்களுள் பெரும்பான்மையோருக்கு இலத்தீன் மொழியினையும், நாகரிகத்தையும் கற்பிப்பதற்குத் தேவையான அளவிற்கேனும் ரோமானிய வாணிகர்கள் நிலையாக இங்கிலாந்தில் தங்கியிருக்க வேண்டும். அயல் நாட்டு மக்கள் பெரிதும் பிரிட்டனின் நகரங்களிலேயே ஒன்றுகூடி வாழலாயினர்.

கூட இலத்தீன் மொழியைப் பேசினர். தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அங்கு அகழ்ந்தெடுத்த மட்பாண்டங்களில் அவற்றைச் செய்த குயவர் அப்பாண்டங்களின்மீது இலத்தீன் மொழி எழுத்துக்களைக் கிறுக்கிவைத்துள்ளனர். இதனால், ரோமானியர் ஆட்சிக் காலத்திய தொழிலாளிகள் இலத்தீன் மொழியை எழுதவும் பேசவும் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர் என்பது புலனாகின்றது. இங்கிலாந்தில் மீண்டும் இதற்கொப்பாக வேறொன்றையும் நெடுங்காலத்திற்குக் கூறமுடியாத அளவிற்கு, ரோமானிய நாகரிகம் அங்கு ஒப்புயர்வற்று விளங்கியது. ஆனால், அது அந்நாட்டு மண்ணிலே முளைத்தெழுந்து, உள்நாட்டில் வளர்ச்சியுற்ற தேசிய நாகரிகம் அன்று. அது கடல் கடந்த நாடுகளில் பரவியிருந்த உலகக் குடிமக்கள் கோட்பாடுடைய பேரரசின் வாழ்க்கை முறையேயாகும். பிரிட்டனின் முற்போக்குக் கருத்துகளைக்கொண்ட பழங்குடி மக்கள் அப்பேரரசின் நாகரிக வாழ்வினையேற்று, சிறிது காலம்வரை அதனுடைய ஒரு கூறாக விளங்குவதில் மனநிறைவு அடைந்தனர்.

நகரப் பெருஞ்சுவர்களுக்கு அப்பால் ரோமானிய நாகரிகம் சென்று தேய்ந்து இற்றது. நகரங்களின் புறத்தே இருந்த நாட்டுப்புறங்களில், ரோமானிய நாகரிகம் மக்களுடைய உள்ளத்தை ஓரளவிற்குத்தான் கவரமுடிந்தது. ஆனால், அவற்றிற்கு அப்பாலிருந்த சிற்றூர்களிலும், காட்டுப் பகுதிகளிலும் கெல்ட்டிக்கு மக்களுடைய பழங்குடி மக்கட் பண்பே ஆட்சிசெலுத்தியது. நாட்டுப்புறங்களில் ரோமானியரின் பொலிவுமிக்க நாட்டுப்புற மாளிகைகள் (Villa), நெடுந்தொலைவிற்கு இடையே ஒவ்வொன்றாகக் கட்டப்பட்டிருந்தன. அவை இத்தாலியக் கட்டடக் கலை முறையினை அடிப்படையாகக் கொண்டு கற்களால் கட்டப்பட்டிருந்தன. அவற்றைப் பல்வண்ணம் தீட்டப்பெற்ற தரையும், புடைப்புச் சிற்பங்களும், நீராடும் செய்குளங்களும் அணிசெய்தன. ஒவ்வொரு நாட்டுப்புற மாளிகையோடும் பண்ணையொன்று இணைக்கப்பட்டிருந்தது. அவற்றில் அடிமைகளும், குடியேறியவர்களும் (Coloni) வேலை செய்துவந்தனர். கூலியாட்கள் பண்ணையாட்களைப்போன்று நிலத்தொடு நெருங்கிய தொடர்புடையவர்களாகவே இருந்தனர். இடைக்காலத்திய உட்குடிகள் (Villeins) பெருநிலக்கிழார்களின் கொடுமைகளுக்கு அஞ்சி வாழ்ந்ததைப் போன்றே இக்கூலியாட்களும் உரிமையற்ற நிலையில், ஆனால், முழு அடிமைகளாய் மாறாதவர்களாகப் பண்ணைகளில் வேலை செய்து வந்தனர். அங்கு வாழ்ந்த மக்களுக்கு உரிமைகளில்லையாயினும், அங்கு அமைதி நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தென்கிழக்கு மாவட்டங்களில் ரோமானியப் படைகள், கலைக்

கப்பட்ட பிறகு, ரோமானியப் பேரமைதி (Pax Romana) நிலவலாயிற்று. இந்நாட்டுப்புற மாளிகைகள் இடைக்காலத்திய அரண்மனைகளைப் போன்றோ, பண்ணை மாளிகைளைப் போன்றோ கோட்டை கொத்தளங்களும், பெரிய அரண்களும் உடையனவாகக் கட்டப்படவில்லை. அக்காலத்திய முறைப்படி அமைக்கப்பட்டிருந்த படையினைச் சேர்ந்த வீரர்களுக்கே, போர் புரிவதற்குரிய பயிற்சி அளிக்கப்பட்டது. ரோமானியப் படைகளின் உதவி கிடைக்காத சமயத்தில், ரோமானியரின் நாகரிகத்தில் மூழ்கியிருந்த பிரிட்டன், படையெடுப்பாளர்களுக்கு எளிதில் இரையாகியமைக்கு இது ஒரு முக்கியக் காரணமாகும்.

நம்முடைய தெற்கு மாவட்டங்கள் சிலவற்றுள் நாட்டுப்புற மாளிகைகள் அடிக்கடி அகழ்ந்தெடுக்கப்படுகின்றன. மற்றப் பகுதிகளுள் அவை கிடைப்பது மிக அரிதாகவே இருக்கிறது. ரோமானியர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கெல்ட்டிக்கு 'டிரேவ்ஸ்' (Trevs) எனப்படும் குடிசைகள் எப்பொழுதாகிலும் அகழ்ந்தெடுக்கப்படுகின்றன. அக்குடிசைகளின் அடிமட்டத் திட்டமும், குடிசைகளின் வடிவ அமைப்பும் இங்கிலாந்திற்கேயுரிய தனி முறையாகும். ஆனால், அக்குடில்களில் வாழ்ந்த மக்கள், ரோமானிய முறையில் செய்யப்பட்ட மட்பாண்டங்களையும், வேறு சாமான்களையும் பயன்படுத்தினர் என்பது அங்குக் கிடைத்துள்ள தொல்பொருள் சின்னங்களால் தெரிகிறது. இக்காலத்தில் ஐரோப்பியப் பண்டங்களும், பொருள்களும், ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளின் கலைமுறைகளைப் பின்பற்றிச் செய்யப்பட்ட பண்டங்களையும், பொருள்களையும் மக்களிடையே புழங்காமல் விரட்டி, அவ்விடத்தைத் தாம் கைப்பற்றி விடுகின்றன. இதைப்போன்றே அக்காலத்தில் கெல்ட்டிக்கு மக்களின் கலைகளும், தொழில்களும் படைத்துத்தந்த பொருள்களை இருக்கும் இடம் தெரியாது மறைந்தொழியுமாறு சிறப்புமிக்க சேமியருடைய (Samian) கலைப் பொருள்களும் பண்டங்களும், இத்தாலியருடைய கலைப் பொருள்களும் பண்டங்களும் செய்தன. இத்தகைய மாற்றம் எப்பொழுதுமே உலகினை உண்மையில் சிறப்புறச் செய்ததில்லை. ஆனால், நாட்டுப்புறங்களில் வாழ்ந்த கெல்ட்டிக்கு மக்கள் எம்மொழியினை அல்லது எம்மொழிகளைப் பேசினர் என்பதைப்பற்றி அறிவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. அதைப்போன்றே அவர்கள் ரோமானியரோடு கொண்ட தொடர்பினால் எவ்வளவிற்கு அவர்களுடைய நிலவுடைமை முறையிலும், வேளாண்மைத் தொழில் முறையிலும், அன்றாட வாழ்க்கையின் பழக்க வழக்கங்களிலும் மாற்றங்கள் உண்டாயின என்பதை அறுதியிட்டுக் கூறுவதற்கும் போதிய

சான்றுகள் கிடைக்கவில்லை. இத்தகைய சிக்கலான கேள்விகளுக்குத் தெளிவாக வரையறுத்து விடைகூறுவதற்கு இதுவரை கிடைத்துள்ள பழம்பொருட் சான்றுகள் ஓரளவிற்கே பயன்படுகின்றன. பண்டை வரலாற்றில் தேர்ச்சி மிக்க பேரறிஞர்களான ஹாவர்பீல்டும் (Haverfield), வினேகிரடாப்பும் (Vinogradoff) இத்தகைய பிரச்சினைகளைப்பற்றிக் கருத்து வேற்றுமையுடையவர்களாக உள்ளனர்.

ரோமானியர் ஆட்சிக் காலத்தில் சில மாவட்டங்களில் வேளாண்மைக்குப் பயன்படுத்திய நிலங்களும், காடுகெடுத்து நாடாக்கப்பட்ட நிலங்களும், சதுப்பு நிலப் பகுதிகளிலிருந்து மீட்கப்பட்ட நிலங்களும் விரிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு விரிவுபடுத்தப்பட்ட மாவட்டங்களுள் கேம்பிரிட்ஜ்ஷையர் ஒன்றாகும். ஆனால், அவ்விடத்திலும் அம்மீட்பு வேலை தொடக்க நிலையிலேயே இருந்தது ; முற்றிலும் மேற்கொண்டு செய்யப்படவில்லை. பக்சிலிருந்து (Bucks) வார்விக்ஷையர்வரையிலுள்ள மேட்டு நிலங்கள் பெரிதும் காட்டுப் பகுதியாகவே விடப்பட்டிருந்தன. தேம்ஸ் ஆற்றுவெளியும், டிரன்டு ஆற்றுவெளியும் இன்னும் நீரிடைப்பட்ட நிலப்பரப்பாகவே இருந்தன. அங்கிருந்த முக்கிய நகரங்களுக்கும், ஊர்களுக்கும் இடையே பிற்காலத்தில் காணப்படுவதைப் போன்ற நெருங்கிய தொடர்பிருந்ததாகத் தெரியவில்லை.

ரோமானியர் இங்கிலாந்தில் காடு கெடுத்து நாடாக்குவதிலும், வடிகால் வசதிகள் அமைத்துத் தருவதிலும் ஓரளவிற்கு ஈடுபட்டிருந்தனர். ஆனல், இத்தகைய திட்டங்களின் மாபெரும் பகுதியினைச் சற்றேறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் சாக்சானியர்களும், டேனியர்களும் தங்கள் நகர இருப்புகளை அமைப்பதன்மூலம் செய்து முடித்தனர்.[1] ஆயினும், ரோமானியர் மேற்கண்ட மாவட்டங்களில் தாங்கள் மீட்ட நிலங்களைக் கொண்டே ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான அளவிற்குத் தானியங்களைப் பயிரிட்டனர்.

[1] ரோமானியர் அமைத்துள்ள நெடுஞ்சாலைகள் நிலம் பயிரிட்டதையும், மக்கள் வாழ்ந்ததையும் சுட்டிக்காட்டுவதாய் இருந்தாலும், நமக்குத் தெரிந்த ரோமானிய நெடுஞ்சாலைகளைக் கொண்டு இக்கருத்தினை வாதிப்பது இடர்ப்பாடுடையதாகும். ரோமானியர் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு நெடுஞ்சாலைகள் அமைத்து, இங்கிலாந்து முழுவதையும் இணைத்தனர். ஊர்களும், நாட்டுப்புற மாளிகைகளும், சிறு நகரங்களும் நெடுஞ்சாலைகள் அமைத்தவர்களால் புறக்கணிக்கப்பட்டன. அவற்றிற்கு இடையே சிறிய தெருக்களைப் போட்டனர். அவற்றை இன்று நாம் ரோமானிய நெடுஞ்சாலைகள் என்று அழைப்பதில்லை.

பிரிட்டனின் அரசாங்கம் உறுதியானதுமன்று; ஒரே சீரான மையக் குவிமுக ஆட்சி (Bureaucracy) உடையதும் அன்று. ரோமானியப் பேரரசு அடிமைத்தனம் என்னும் சமூக அடிப்படையின்மீது நிறுவப்பெற்ற இராணுவ வல்லாட்சியாகவே இருந்தது. எனினும், அது சில துறைகளில் முற்போக்குக் கொள்கை உடையதாக விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். ரோமானியரின் ஆட்சியியல் பழக்க வழக்கத்திற்கு இணங்கப் பிரிட்டனில் தனியுரிமை வாய்ந்த நகராட்சி மன்றங்கள் அமைக்கப் பட்டன. அவை தன்னாட்சி உரிமை பெற்றிருந்தன; அத்துடன் தற்காலக் கோட்டங்களைப் போன்று பரந்து விளங்கிய நாட்டுப் புறப் பகுதிகளை ஆளும் அதிகாரத்தைப் பெற்றிருந்தன. இத் தகைய தன்னாட்சியுரிமை பெற்ற நகரங்கள் அக்காலத்தில் ஐந்து இருந்ததாகத் தெரிகின்றது. அவை வெருளாமியம், கோல் செஸ்டர், லிங்கன், கிளௌசெஸ்டர், யார்க்கு என்பனவாகும். இவற்றைக்காட்டிலும் வாணிகப் பெருநகரான லண்டன் பரப் பளவில் பெரியதாக இருந்தது. ஆனால், அது அரசியல் முக் கியத்துவம் பெறாமலிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாகரிகமடைந்த பிரிட்டனின் எஞ்சிய பகுதிகள் இருபெரும் பாளையங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை பழங்குடி மக் களின் பெயர்களையுடையனவாக இருந்தன. அவை கெல்ட்டிக்கு மக்களின் தாக்குதல்களுக்கு அடிக்கடி இரையாக வேண்டியன வாக இருந்தன. நகராட்சிமுறை அமைப்பிற்குத் தகுதியில்லாத சிறு ரோமானிய நகரங்களை மையமாகக் கொண்டே பாளையங்கள் ஆளப்பட்டு வந்தன. உள்நாட்டுப் பழங்குடி மக்களின் இனப் பண்புகளை ரோமானியர்கள் அடியோடு அழிப்பதில்லை. அதற்கு மாறாக, அவர்கள் அப்பழங்குடி மக்களின் இனப்பண்புகளை அர சாங்கத்தின் திறமை மிக்க ஆட்சி முறைக்கேற்ற ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொண்டனர். ஆனால், அதே சமயத்தில் தங்கள் கவர்ச்சிமிக்க நாகரிகத்தோடு, பழங்குடி மக்களின் இனப்பண் பினைத் தொடர்பு கொள்ளுமாறு செய்து, அதனுடைய அடிப் படையை அரித்தொழித்தனர். கெல்ட்டிக்கு இனத் தலைவர்கள் நடையுடை பாவனையாலும், பேசும் மொழியாலும், உள்ளத்துணர் வாலும் ரோமானியர்களாக மாறுவதற்குத் தேவையான வாய்ப் புகள் அனைத்தும் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. இக்கட்டுப் பாட்டிற்கு உட்பட்டே கெல்ட்டிக்கு இனத் தலைவர்கள், தங்கள் இனத்தவருக்குத் தலைவராக, மேற்போர்வை உடையணிந்த (Toga) ரோமானிய அதிகாரிகளாகவே தங்கள் இனமக்களை ஆண்டனர் என்று கூறின், அது மிகையாகாது. அதிகார மனப் பான்மையினை யுடைய ரோமானியர், தாங்கள் கைப்பற்றிய

நாட்டின் தலைவர்களுக்கு இத்துணை உரிமை அளித்திருந்தமை அவர்கள் பழங்குடி மக்களிடத்துக் காட்டிய தாராள மனப் பான்மையின் விளைவேயாகும். ஆனால், இம்முறையே கெல்ட்டிக்கு இன மக்களை, நல்லெண்ணத்தோடும் நன்மதிப்போடும் ரோமானிய வாழ்க்கை முறையினை மேற்கொள்ளத் தூண்டும் கருவியாக அமைந்தது. இதைப்போன்ற பாளையப்பட்டு ஆட்சி முறையே காளிலும் அமைக்கப்பட்டது. ஆனால், காளினைப் பிராங்கியர் (Franks) கைப்பற்றியபோதிலும், அங்குப் பாளையப் பட்டுகளின் பெயர்களும், நிலப்பகுதிகளும் அழிந்தொழிய வில்லை. பிரிட்டனில் பேரழிவு உண்டாக்கிய சாக்சானியரின் படையெடுப்பால், அவை முற்றிலும் மறைந்தே போயின.

ரோமாபுரிப் பேரரசு தற்காலத் தேசிய இன அரசுகளைப் போன்று தனி மனிதனின் அல்லது சமூகத்தின் உரிமைகளைப் பறிக்கவில்லை. அது புதிதாகத் தன்னுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்ட மாநிலங்களின் இனமரபின் பழக்க வழக்கங்களில் பொதுவாகத் தலையிட்டதில்லை. ஆனால், அதனுடைய அரசியல் அதிகாரத்திற்கு எதிர்ப்புக் கிளம்பிவிட்டால், சிறிதுகூட அருள் நோக்கின்றி மிக வன்மையாகப் பழங்குடி மக்களை ஒறுத்து வந்தது. இதைப்போலவே சமயத்துறையிலும் கண்டிப்புடையதாக ரோமானியப் பேரரசு இருந்ததில்லை. இருண்ட காலத்திலும், இடைக்காலத்திலும் கிறிஸ்துவ சமயம் இதற்கு நேர் மாறாக இருந்து வந்தது. தத்துவ விசாரணையில் ஈடுபடுவதையோ, சமயத்தில் பலவகைக் கிளைகளை அல்லது புது வகைகளை உண்டாக்குவதையோ ரோமானியப் பேரரசு தடை செய்யவில்லை. ஆனால், தன்னுடைய அரசியல் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுத்த துரூவிதத்தையும் (Druidism), கிறிஸ்துவ திருச்சபையினையும் அடக்கியொடுக்கியது. ரோமானியப் பேரரசு கிறிஸ்துவ சமயத்தினரைத் துன்புறுத்தி அடக்கியொடுக்க முயன்றதற்கு அதனுடைய சமயக் கொள்கை காரணமன்று; அதனுடைய அரசியல் நோக்கமே காரணமாகும். ரோமானியப் பேரரசு கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தியமையால் உண்டான விளைவு, அருவருப்பு அற்றதென்றோ, கொடுமைகள் குறைந்ததென்றோ கூற முடியாது. திருச்சபை தோன்றிய காலத்திலே அதனை ரோமானியர் சிற்சில சமயங்களில் துன்புறுத்தி வந்தனர். அதனால், திருச்சபை ஆதிக்கம் பெற்றவுடன், சற்றேறக்குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் தொடர்ந்து புறச்சமயத்தினரை மிகக் கொடுமையாகத் துன்புறுத்தும் திறமையினைப் பெற்றது. திருச்சபையின் ஆதிக்கம் அழிவுற்ற பிறகே, அதனுடைய துன்புறுத்தும் பண்பும் பையப்பையக் குறையலாயிற்று. பிரிட்டனில் திருச்

சபை சிறிய அளவிலேயே நிறுவப்பட்டிருந்தமையால், அங்கு அதன் புறச்சமயத் துன்புறுத்தலும் பேரளவில் நடைபெறுமற் போயிற்று. ஆனால், செயின்ட் ஆல்பன்சு (St. Albans) உயிர்த் தியாகம் செய்ய நேர்ந்த கதை, இங்கிலாந்திலும் புறச்சமய ஒறுத்தல் எத்துணைக் கொடுமை வாய்ந்ததாக இருந்தது என் பதை எடுத்தியம்புகிறது.

ரோமானியப் பேரரசு எங்கெல்லாம் தன்னுடைய ஆதிக் கத்திற்கு எதிர்ப்பு இல்லை என்று அறிந்ததோ, அங்கெல்லாம் பல தெய்வ வழிபாட்டின் வட்டார வேற்றுமைகளையும் அப்படியே சேர்த்துத் தழுவிக்கொண்டது. கெல்ட்டிக்கு இன மக்கள் வழி பட்ட தெய்வங்களையும், பிரிட்டனின் வனதேவதைகளையும், தம் முடைய கிரேக்க-ரோமானியத் தெய்வக் குழுவினில் உள்ள தெய் வங்களோடு பேரரசு ஒன்றுபடுத்த முயன்றது. இவ்விரு தெய் வங்களுக்கும் இடையே காணப்பட்ட முக்கிய பண்புகளிலுள்ள ஒப்புமையை அடிப்படையாகக் கொண்டு அவற்றை ஒரு தெய்வ மாகவே பேரரசு கருதத் தொடங்கியது. இத்தகைய நோக்கங் களை அடிப்படையாகக் கொண்டு கெல்ட்டிக்கு தெய்வங்கள் ரோமானியத்தெய்வங்களோடு இரண்டறக்கலக்கப்பெற்று,வேறு புதிய பெயர்களால் அழைக்கப்பட்டன. ஜீயஸ்—ஜூப்பிட்டர்[1] 'பொருமை மிக்க தெய்வங்கள்' என்ற நிலை மாறிவிட்டது. பல திறப்பட்ட நெறிமுறைகளைத் தன்னகத்தே கொண்ட பலவகைத் தெய்வ வழிபாடுகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து ஒரு தனிச் சமய மாகவே கருதப்படும் நிலையினை அடைந்தது.

அதே சமயத்தில் யூதர்களின் சமயமும் (Judaism), கிறிஸ்துவ மும், இஸ்லாமும் தம்முள்ளே வேறுபாடுடைய சமயங்க்ளாகவே இருந்துவந்தன. பிரிட்டனில் துருவிதர்களின் புரோகிதத்துவம் தங்களுடைய ஆதிக்கத்திற்கு ஊறு விளைக்கும் என்ற காரணத் தால், ரோமானியர் அதை அடியோடு அழித்தொழித்தனர். ஆயினும், பிரிட்டனின் மக்கள், தங்கள் பழைய தெய்வங்களை ரோமானியர்கள் கொண்டுவந்த புதிய தெய்வங்களோடு சேர்த்து வழிபடும் உரிமை பெற்றவர்களாக இருந்தனர். பன்மொழி பேசும் வீரர்களைக் கொண்ட ரோமானியப் படையினர் நெடுந் தொலைவிற்குப் பரவியுள்ள ரோமானியப் பேரரசிற்குட்பட்ட

1 'ஜீயஸ்' என்பது கிரேக்கர்களால் பேராற்றலும், பேரறிவும் வாய்ந்ததாகப் போற்றப்பட்ட தெய்வத்தின் பெயராகும். ரோமானியர் கிரேக்க நாகரிகத்தினுள் மூழ்கித் திளைத்தபொழுது, தங்களுடைய தெய் வங்களுக்கெல்லாம் தலைவராக இருந்த ஜூப்பிட்டரும் (Jupiter), கிரேக் கரின் தலைமைத் தெய்வமாகிய ஜீயசும் (Zeus) ஒன்றே என்று கருத லாயினர்.

எண்ணற்ற தெய்வங்களுக்குத் தங்கள் சுவரில் இடமளித்து, அவற்றைப் போற்றி வழிபட்டனர். ஆனல், அவர்கள் வழி பட்ட தெய்வங்களுள் பெரும்பாலானவை ரோமாபுரிக்குரிய தெய்வங்களாகும். அவர்கள் பின்பற்றிய வழிபாட்டு முறையில் கீழ்நாடுகளினுடைய வழிபாட்டு முறைகள் சிறப்பிடம் பெற லாயின. அவற்றுள் குறிப்பிடத்தக்கது மைத்திரேயியம் (Mithraism) என்னும் வழிபாட்டு நெறியாகும். இது நடுநிலப் பகுதியின் மேற்குப் பகுதியிலிருந்த மக்களுடைய வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. இவ்வழிபாட்டு நெறி, கிழக்கிலிருந்து அடுத்து வரப்போகின்ற மற்ருெரு சமயத் தினை அனைவரும் ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்னதாக, மக்க ளுடைய மனத்தினைப் பக்குவப்படுத்திவைத்தது.

பிரிட்டனில் இருந்த ரோமானியப் படை ரோமாபுரியை நோக்கித் திரும்பிப்போவதற்குச் சிலநூற்ருண்டுகளுக்கு முன்பே, கான்ஸ்டன்டைன் (Constantine) என்னும் பேரரசர் கிறிஸ்துவ சமயத்தைப் பேரரசின் சமயமாக்கினர். ஆயினும், இங்கிலாந் தின் நெடுந்தொலைவிலிருந்த மாநிலங்களில் அப்புதிய சமயம் விரைவிலே சென்று பரவவில்லை. பிரிட்டனில் அகழ்ந்தெடுக்கப் படும் ரோமானியத் தொல்பொருள் சின்னங்களை அடிப்படை யாகக் கொண்டு ஆராய்கின்ற பொழுது, அக்காலத்திற்குரிய கிறிஸ்துவ சமயச் சின்னங்கள் ஒன்றுமே கிடைக்கவில்லை என் பது தெரிகிறது. எனவே, ரோமானியரின் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்துவ சமயம் இங்குச் செல்வாக்குற்றதாகத் தெரியவில்லை. ரோமானியரின் பிற அமைப்புகளும், நிலையங்களும் பிரிட்டனில் அடியோடு மறைந்தொழிந்தபோது, கிறிஸ்துவ சமயம் வெல்ஷ் மக்களிடை நீறுபூத்த நெருப்பாக இருந்து, பின்னர் நாடெங்கும் பரவலாயிற்று. ரோமானியப் படைத்தலைவர்களும், அதிகாரி களும் கைவிட்டுச் சென்றபோது, நாகரிகத்தின் தூதர்களுள் சமயத் தொண்டர்களே பிரிட்டனை விட்டுப் பிரியாது, அவர் களுக்கு அப்பொழுது உண்டான துன்பத்திலும் துணையாக நின்றனர். இதனல்தான் ரோமானியரின் பிற அமைப்புகளும், நிலையங்களும் இங்கிலாந்தில் அடியோடு மறைந்தொழிந்தும், அங்குக் கிறிஸ்துவ சமயம் நின்று நிலவமுடிந்தது.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

ரோமாபுரியும், பிரிட்டனும்—ஜூலியஸ் சீசர்—பிரிட்டனில் சீசர்—கெல்ட்டிக்கு—ரோமானியர் காலத்தில் லண்டன் மா நகரின் நிலை—கிளாடியசின் வெற்றி—போடீசியா — வடமேற்கு

எல்லைப் பிரச்சினை—ரோமானியப் பெருஞ்சுவர்—இலத்தீன் நாகரிகமயத்தின் எல்லை—ரோமானிய நகரங்களும், நாட்டுப்புற மாளிகைகளும்—ரோமானியப் பிரிட்டனின் சமயநிலை.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்


. ஹாவர்பீல்டு (Haverfield):
The Roman Occupation of Britain, Revised by G. Macdonald, 1924.

2. Haverfield in Cambridge Medieval History, I, chap. XIII.

3. ஆர்.ஜி. காலிங்வுட்டு
(R. G. Colling Wood): Roman Britain.

4. ஹியூம் பிரவுன்
(Hume Brown): History of Scotland, chap. I.

5. ஆர்.இ.எம்.வீலர்
(R.E.M. Wheeler): Prehistoric and Roman Wales, 1925.

6. காலிங்வுட்டும், மேயர்சும்
(Colling Wood and Myres): Roman Britain and the English Settlements, (Oxford History of England Vol.I), 1936.


## இயல் 3

# நார்டிக்கு இன மக்களின் படையெடுப்புகளும், ஆங்கில-சாக்சானியர் இங்கிலாந்தைக் கைப்பற்றுதலும்

நார்டிக்கு இன மக்கள் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்த நிகழ்ச்சி பிரிட்டனின் வரலாற்றின் போக்கையே மாற்றியமைத்தது என்று கூறினால், அது மிகையாகாது. ஆங்கில-சாக்சானியரும், ஜுட்டுகளும் (Jutes) திடீரெனப் பிரிட்டனுள் நுழைந்தனர். டேனியர்களும் (Danes), நார்சிய மக்களும் (Norsemen) எதிர்பாரா வகையில் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்தனர். இவ்விரு நிகழ்ச்சிகளும் ஒரே இயலில் கூறத்தக்க செய்திகளாகும். கி. பி. முந்நூறும் ஆண்டிற்கு முன்பே, ரோமானியப் பிரிட்டனின் கடற்கரைப் பகுதிகளை சாக்சானியக் கடற்கொள்ளைக்காரர்கள், கொள்ளையடிப்பதற்காக

முதன்முதல் படையெடுத்து வந்தனர். இவ்வாறு தொடங்கிய சாக்சானியரின் படையெடுப்பு கி. பி. 1020-ல் கான்யூட்டு (Canute) மன்னரின் ஆட்சியில் ஒருவாறு முடிவுற்றது. அவர் சாக்சானியரோடும், டேனியரோடும் உறவுடைய இனமக்களைச் சமமாக நடத்துவதற்கு முன்வந்தார்; அவர்களிடத்து நட்புரிமை கொண்டாடினர். அதன் மூலம் ஸ்கான்டிநேவியர் இங்கிலாந்தைக் கைப்பற்றும் பணியை முற்றுப்பெறுமாறு செய்தார். இவ்விரு கால எல்லைகளுக்கிடையே இந்நாட்டுப் பழங்குடி மக்களின் இனப்பண்புகள் பெரிதும் மாற்றமுற்றன. நார்மானியர்களும், பிளமிஷ் (Flemish) மக்களும், யூகோநாட்டுகளும் (Huguenot), ஹாபுரு மக்களும், ஐரிஷ் மக்களும், இன்னும் வேறு பல இனத்தைச் சார்ந்த குடியேறிகளும், பிரிட்டனுக்கு அடுத்தடுத்து வந்தவண்ணம் இருந்தனர். அதனுல் அந்நாட்டுக் குடிமக்களின் இனப்பண்புகள் சிறிது சிறிதாக இடைவிடாது மாற்றமுற்றுவந்தன. ஆனுல், கான்யூட்டு மன்னர் காலத்தில் இங்கிலாந்து மக்களின் இனஅடிப்படை உறுதியாக அமைந்துவிட்டது. ரோமானியரின் இடையீட்டைக் காட்டிலும், நார்டிக்கு இனமக்களின் படையெடுப்புகள் மிக முக்கியமானவையாகும். நார்மானியப் படையெடுப்புகளைவிட நார்டிக்கு இன மக்களின் படையெடுப்புகள் மிக்க சிறப்புடையனவாகும். பிரிட்டனில் சிறப்புற்று விளங்கிய கெல்ட்டிக்கு நாகரிகத்தினை ரோமானியமயமாக்க முயன்ற பொழுது, ரோமாபுரி தோல்வியுற்றது. அதற்குக் காரணம் ரோமானியர் மிகச் சிலராகவே பிரிட்டனுக்கு வந்திருந்தமையாகும். நார்மானிய-பிரஞ்சு உயர்குடி மக்களும், மதகுருமார்களும் இங்கிலாந்தைக் காளியமயமாக்க முயன்றனர். அதனுல், சிறப்பு மிக்க நிலையான விளைவுகள் உண்டானபோதிலும், அவை நாளடைவில் நாட்டு மக்களுடைய இனப்பண்புகளை அழித்தொழிக்க முடியாது, தாமே மெல்ல அழிந்துபோயின. இப்படையெடுப்புகள் எல்லாவற்றையும் காட்டிலும், நார்டிக்கு இனமக்கள் இங்கிலாந்தின்மீது படையெடுத்ததனுல் உண்டான விளைவுகளே மிகப் பலவாகும். பிரிட்டனில் வேளாண்மைத் தொழிலில் சிறப்புற்று விளங்கிய மாவட்டங்கள் அனைத்திலும் வாழ்ந்த கெல்ட்டிக்கு இன மக்கள் எல்லோரையும் விரட்டிவிட்டு, அவ்விடங்களில் நார்டிக்கு இன மக்கள் நிலைத்து வாழத் தொடங்கினர். தற்கால ஆங்கிலேயரின் சிறப்பு மிக்க பண்புநலன் வெல்ஷ் இனத்தவரால் பக்குவப்படுத்தப்பட்ட நார்டிக்கு பண்பாடாகுமேயொழிய நார்டிக்கு இனத்தவரால் பண்படுத்தப்பட்ட வெல்ஷ் இனப் பண்பாகாது. ஸ்காட்லாந்தில் கெல்ட்டிக்கு பண்பின் கூறு, அங்கு வாழும் மக்களின் இனப்பண்பு ஆற்றல் மிக்கதாகக் காணப்படுகிறது. ஆனுல், ஸ்காட்லாந்தி

லும் நார்டிக்கு இனமக்களின் பண்புகளும், மொழியும் வழக்கத்தி லிருந்து வருகின்றன.

வரலாற்று நோக்கங்களுக்காகப் பிற்காலத்தில் படைக்கப் பட்ட எல்லா வகையான குறியீட்டுச் சொற்களுக்கும் மறுப்பு கள் தோன்றியதைப் போலவே 'நார்டிக்கு' (Nordic) என்னும் சொல்லிற்கும் மறுப்புரைகள் எழலாம். பிரிட்டானிய வரலாற் றினைத் தொகுத்துப் பொதுக் கருத்தினை நேர்மையான முறையில் வெளியிடுவதற்கும் ஜெர்மானியர், ஆங்கில-சாக்சானியர், ஸ்கான்டிநேவிய இனத்தவர்கள் ஆகிய அனைவரையும் சில சம யங்களில் ஒன்றாகச் சேர்த்தும் குறிப்பிடுவதற்கு ஒரு சொல் தேவைப்படுகிறது. இதற்காக 'டியூட்டானியர்' (Teuton) என் னும் சொல்லையோ, 'ஜெர்மானியர்' என்னும் சொல்லையோ பயன் படுத்தினால், பல பகுதிகளையுடைய பொருள் ஒன்றி னுடைய ஒரே ஒரு பகுதிக்கு அளவு கடந்த முக்கியத்துவம் தருவதாக முடியும். ரைன் (Rhine) ஆற்றங்கரையோரத்தில் வாழ்ந்த 'டியூட்டானியர்' அல்லது 'ஜெர்மானியரை' ரோமானி யர் நன்கறிந்திருந்தனர். அவர்கள் பெயரைக் கேட்டபோதே ரோமானியர் பேரச்சம் கொண்டனர். அத்தகைய டியூட்டானி யரும், ஜெர்மானியரும் ஆங்கில-சாக்சானியருடையதும், ஸ்கான்டிநேவியர்களுடையதுமான இனத்தையே சேர்ந்தவர்க ளாவர். மேலும், இம் மூவகை இனத்தவருடைய பண்பாடும் நாக ரிகமும் ஏறத்தாழ ஒரே வகையான இயல்புகளையுடையனவாகும். எனவே, ஓரினத்தைச் சார்ந்த இம் மூவகை மக்களையும் குறிப் பிடுவதற்கு ஒரு சொல்லையே பயன்படுத்துவது நல்லது. ஆனால், இக்காரணத்திற்காக 'டியூட்டானியர்' அல்லது 'ஜெர்மானியர்' என்னும் சொல்லைப் பயன்படுத்தினால், நிலவழியாக இங்கி லாந்தினுள் நுழைந்து ரோமானியப் பேரரசினை வடக்கில் அழித் தொழித்த மக்களே நம்முடைய நினைவிற்கு வருகின்றனர்; காளினைக் கைப்பற்றி அதற்கு 'பிரான்சு' என்னும் பெயரைக் கொடுத்த பிராங்கியரும், ஸ்பெயினுக்கும், பால்கனுக்கும், ஆப்ரிக்காவிற்கும், இத்தாலிக்கும் பிரிந்து சென்ற கோத்து களும் (Goths), வேண்டல்களும் (Vandals), லம்பார்டியரும் (Lombards)நம் மனக்கண் முன்னால் தோன்றுகின்றனர். அது மட்டு மல்லாமல் தங்கள் தாயகத்திலேயே தங்கிவிட்ட ஜெர்மானிய ரும் நினைவிற்கு வருகின்றனர். ஆனால், நம்முடைய கதையில் சிறப் பிடம் பெறுபவர்கள் ஆங்கில-சாக்சானியர்களும், ஸ்கான்டி நேவியர்களுமாவர். அவர்கள் இவ்வினத்தின் வட கிழக்குக் கிளையினைச் சேர்ந்த கடலோடிகளாவர். அவர்களுக்கென்று தனிப் பண்பும், தனி நாகரிகமும் இருந்து வந்தமையும் கருதத்


தக்கது. ஆகவே, அவர்கள் பிரிட்டனைக் கைப்பற்றியதைப் பற்றி நாம் ஆராய்கின்றபொழுது, இவ்வின மக்களின் பிரிவுகள் அனைத்தையும் 'டியூட்டானியர்' அல்லது 'ஜெர்மானியர்' என்னும் பெயரால் அழைப்பது தவறுடையதாகும்.

அக்காலத்திய 'நார்டிக்கு (Nordic) இனம், அயர்லாந்து முதல் கான்ஸ்டான்டிநோபிள் வரையிலும், கிரீன்லாந்திலிருந்து சகாரா பாலைவனம் வரையிலும் ஸ்கான்டிநேவியர், ஆங்கில-சாக்சானியர், பிராங்குகள், டியூட்டானியர்கள் போன்ற எண்ணற்ற பழங்குடி மக்களாகச் சிதறிக் கிடந்தது. அவர்களிடையே காணப்பட்ட தனிப் பண்புகள் அனைத்தும் ஒரு குடும்பத்தின் பண்புகளைப்போன்று தொடர்புடையனவாக இருந்தன.

பிராங்குகளினுடைய மூதாதையரும், கோத்துகளினுடைய முன்னோர்களும், வேண்டல்களின் குல முதல்வர்களும் கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்பிருந்தே, மேற்கிலும் தெற்கிலும் நாடோடிகளாக அலைந்து திரிந்தனர். ஆயினும், நார்டிக்கு இனத்தைச் சார்ந்த மக்கள் பல்வகைக் கிளையினராகப் பிரிந்தபோதிலும், தொல்பழங் காலத்தில் அவர்கள் அனைவரும் பால்டிக்குக் கடற்கரைப் பகுதியில் தோன்றியவர்களே யாவர். இப்பழங்குடி உறவினருக்கிடையே பொதுப் பண்புகள் மிகுதியாக இருந்து வந்தன. அவர்களுடைய மொழிகளனைத்தும் உறவுடையனவாகவே இருந்தன. தோர் (Thor) பழங்குடி மக்களுடைய சமயமும், ஓடன் (Woden) மக்களுடைய சமயமும் தாம், ஒரு வாரத்திலுள்ள நாட்களின் பெயர்களை ஆங்கிலேயருக்கும், ஜெர்மானியருக்கும் முதன்முதல் வழங்கின எனலாம். மேலும், ஐஸ்லாந்திலிருந்து பவேரியாவரையில் போற்றப்படும் சீகர்டு (Sigurd) அல்லது சீய்ஜ்பிரயிடு (Siegfried) போன்ற சிறப்பு மிக்க வீரர்களைக் காப்பியத் தலைவர்களாகப் போற்றிப் பாராட்டுவதைப் பார்க்கின்றோம். தங்கள் இனத்தில் அரும் பெருஞ் செயல்களைச் செய்து வீரவாழ்வு வாழ்ந்த மாபெருந் தலைவர்களைப் போற்றிப் பாடும் இலக்கியம் காப்பிய வடிவில் உருவானதைக் காண்கின்றோம். பியோவுல்பு (Beouwulf) என்னும் கவிஞர் பழங்குடிகளின் அரும்பெருஞ் சாதனைகளைப் போற்றிப் பாடிய பாடல்கள் குறிப்பிடத்தக்கன. இவர்களுடைய கலை கிரேக்க-ரோமானியக் கலைமுறையிலிருந்து வேறுபட்டது; அழகும் நேர்த்தியும் உடையது; அதைக் கெல்ட்டிக்கு மக்களின் கலைமுறைகளிலிருந்து எளிதில் வேறுபடுத்தி அறிய முடியாது. நார்டிக்கு இன மக்களுடைய கலை இத்தகைய சிறப்பு வாய்ந்தது.

அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் கருவிகளையும், அணிகலன்களையும், படைக்கலன்களையும் அவர்கள் பேரழகும் நேர்த்தியும் உடையனவாக விளங்குமாறு செய்தனர். அவற்றை அவர்கள் ஒரே வகையான கலைமுறையில் அழகுபடுத்தினர். இறுதியாக அவர்களுக்கிடையே காணப்பட்ட ஒப்புமைப் பண்பு போர்த்துறையிலும், வேளாண்மையிலும் அவர்கள் பின்பற்றி வந்த பழக்கவழக்கங்களாக உள்ளன. அவற்றுள் காலத்திற்கும், அவர்கள் வாழ்ந்த இடத்திற்கும் ஏற்பச் சிற்சில மாறுதல்கள் காணப்பட்டாலும், போர்த்தொழிலிலும் உழவுத்தொழிலிலும் அவர்கள் பின்பற்றிய பழக்க வழக்கங்கள் பெரிதும் ஒத்திருந்தன. இக்காரணங்களால் ஜெர்மானியரையும், ஆங்கில-சாக்சானியரையும், ஸ்கான்டிநேவியரையும் ஓரினத்தினராகத் தொடர்புபடுத்திக் கூறலாம். ஆனால், இவ்வாறு கூறுவதனால் நடைமுறையில் சில இடர்ப்பாடுகள் உண்டாகலாம். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் பால்டிக்குக் கடற்பகுதியிலும், வடகடலையொட்டியும் வாழ்ந்த நம்முடைய ஆங்கில-சாக்சானியரைத் தாம் சீசரும், டாசிடசும் சந்தித்தனர் என்று சிலர் கூறுவர். நம்முடைய மூதாதையர் இங்கிலாந்திற்கு வருவதற்கு முந்நூறு அல்லது நானூறு ஆண்டுகளுக்கு முன்பே, ஆங்கில-சாக்சானியர் என்னும் தனிக் கிளையினராகப் பிரிந்திருந்தனர் என்று கூறுவது வரலாற்றின் உண்மைக்கு மாறான செய்தியாகும். ஆயினும், அது வரலாற்று அறிஞர்கள் சிலரால் ஒரு காலத்தில் போற்றப்பட்டது. ஆனால், சீசரும், டாசிடசும் எழுதி வைத்துள்ள குறிப்புகளால், அவர்கள் குறிப்பிடும் மக்கள் ஜெர்மானியப் பழங்குடி மக்கள் என்பது புலனாகின்றது. இத்தகைய பொருத்தமில்லாத இலக்கியச் சான்றுகளைத் தற்காலத்திய தொல்பொருள் ஆராய்ச்சி நன்கு ஆராய்ந்து முடிவு காணுமாறு தூண்டுகிறது.

ஃபோர்த் (Forth) கழிமுகத்திலிருந்து காரன்வாலின் (Cornwall) எல்லைப்புறம் வரையிலுமுள்ள பிரிட்டனின் பெரும் பகுதியில் ஆங்கில-சாக்சானியர் நிலைத்து வாழத் தொடங்கினர். கென்டிலும், விகாட்டு திட்டிலும் (Isle of Wighot), ஜூட்டுகள் (Jutes) தங்கி வாழ்ந்தனர். தற்கால அறிஞர்களுள் சிலர் ஆங்கில-சாக்சானியர் ஒரே குடிமரபைச் சேர்ந்த மக்களாக இருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். வேறு சிலர் ஆங்கிலிகளுக்கும்(Angles), சாக்சானியர்களுக்கும் இடையே வேறுபாடு இருப்பதாகப் பீடு (Bede) என்பவர் அன்று காட்டிய காரணங்களை இன்றும் ஒப்புக்கொள்ளுகின்றனர். எது எவ்வாறாயினும் அவர்கள் பிரிட்டனில் குடியேறிய பொழுது




படம் 5.

சோமானியப் பிரிட்டனின் அழிவுச் சின்னங்கள்

எல்பே(Elbe)ஆற்றின் முகத் துவாரத்திற்கு இரு மருங்கிலும் உள்ள, தற்கால டென்மார்க்கின் கடற்கரை யோரத்திலும் ஜெர்மனியின் கடற்கரை யோரத்திலும் அவர்கள் வாழ்ந்து வந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை. அவர்களுடைய மொழியிலும், பழக்க வழக்கங்களிலும் வேற்றுமைகள் மிகச் சிறிதளவே இருந்தன. ஜுட்டுகள் மிகச் சிறிய இனத்தைச் சார்ந்த, ஆனால் நெருங்கிய உறவினையுடைய பழங்குடி மக்களாவர். வடடென்மார்க்கிலுள்ள தங்கள் தாயகமாகிய ஜட்லாந்திலிருந்து அவர்கள் நேரடியாக இங்கிலாந்திற்கு வந்திருக்க வேண்டும்; ஆனால் வேறு சிலர் கருதுவதைப் போல அவர்கள் அண்மைக்காலத்தில் வந்து தங்கிய பிரீசியாவி(Frisia)லிருந்தும் ரைன் ஆற்றின் கீழ்ப் பகுதியிலிருந்தும் இங்கிலாந்திற்கு வந்திருக்கலாம்.[1]

'கற்கால நாகரிகத்தின் பிற்காலம் முதற்கொண்டு, வடகிழக்கு ஐரோப்பாவில் உழவு தொழில் செய்யப்பட்டு வருகிறது. பிரிட்டனின்மீது படையெடுத்து வந்த பெரும்பாலான ஆங்கில-சாக்சானியர் தங்களுடைய வட ஐரோப்பியக் கடற்கரை மணல் வெளிகளுக்கும், பொட்டல்களுக்கும், களர்நிலத்திற்கும், சதுப்பு நிலத்திற்கும், காடுகளுக்கும் மாறாக நல்ல செழிப்பு மிக்க விளை நிலங்களைத் தேடிவந்தவர்களேயாவர். ஆனால், அவர்களுள் பெரும்பான்மையோர் ஆழ்கடலில் அஞ்சாது மரக்கலம் செலுத்தி, கடல் நாய்களையும் (Scal) திமிங்கிலத்தையும் வேட்டையாடுவதில் வல்லவர்களாவர்; அக்காலத்தில் வட கடலில் பொதுவாகக் காணப்பட்ட புயலையும், கடலின் கொடிய விலங்குகளையும், கடற் கொள்ளைக்காரர்களையும் எதிர்த்துப் போரிட்டுப் பழகிப் போனமையால், அவர்கள் எத்தகைய துன்பத்தையும் பொறுத்துக் கொள்ளும் பேராற்றல் வாய்ந்தவர்களாக விளங்கினர். கடலிலாகிலும், நிலத்திலாகிலும் அவர்கள் போருக்குச் செல்லும்போதெல்லாம், பெருங் கடற் கொள்ளைக்காரர்களாகவும், சூறையாடுபவர்களாகவும் அவர்கள் மாறினர். ஆயினும், அவர்கள் தங்கள் நாட்டு மக்களிடையே பேரன்பும், பெருமதிப்பும் உடையவர்களாகப் பழகி வந்தனர் என்பது அவர்களுடைய காப்பியங்களினால் தெரியவருகிறது.

[1] ஆங்கில-சாக்சானியர்களின் தோற்றத்தைப்பற்றியும், ஜுட்டுகளின் தோற்றத்தைப்பற்றியும் அறிவதற்குசாட்விக்கு (Chadwick) எழுதியுள்ள Origin of the English Nation' (Cam Med. Hist. I, PP. 384-5) என்னும் நூலைப் பார்க்கவும். அல்லது Cyril Fox's Cambridge Region. PP. 238, 284-6, 296; Leed's Archaeology of Anglo-Saxon Settlements, and chambers' Widsith, PP. 237-247 என்பனவற்றைப் பார்க்கவும்.

நார்வேயிலிருந்து, உபிரீசியா வரையிலுள்ள கடற்கரைப் பகுதிகளில் பரவி வாழ்ந்த அவர்கள், தங்கள் தலைவரைத் தாங்களே தேர்ந்தெடுத்தனர்; தங்கள் தலைவர்களிடத்துப் பெரிதும் பற்றுறுதி உடையவர்களாக இருந்தனர். அவர்கள் கொள்ளையடிப்பதற்காகப் படையெடுத்துச் செல்லுவதும் உண்டு. அவர்கள் வீரமும், மூர்க்கத்தனமும் உடையவர்களாக இருந்த போதிலும், தாங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட தலைவரிடத்து அசைக்கமுடியாதப் பற்றுறுதியும், ஈடுபாடும் கொண்டிருந்தனர்.

கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட முதல் நூற்றுண்டில், நீரிலும் நிலத்திலும் வாழ்ந்த சுறுசுறுப்பான ஆங்கில-சாக்சானியரின் குடியேற்றப் பழக்கவழக்கங்கள் இவ்வாறு இருந்தன. ஆனால், நாம் அவர்களை நாடோடிகள் என்று கூற முடியாது. ஏனெனில், அவர்கள் நிலைத்து வாழத் தொடங்கிய இடங்களில் எல்லாம் உழவுதொழிலைச் செய்துவந்தனர். நாடோடிகள் உழவு தொழிலை அறியாதவர்கள். ஆங்கில–சாக்சானிய அரசியல் முறை தன் முனைப்பு வாய்ந்த வல்லரசாக இருந்தது. அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யார் வேண்டுமானாலும் அரசராகலாம் என்னும் வழக்கம் அவர்களிடையே இருந்துவந்தது. அத்தகைய வல்லாட்சி அவ்வின மக்களின் பழக்கவழக்கங்களாலும், படையேந்திய வீரர்களின் மனப் போக்காலும், அரசனுடைய தனிப் பண்பு நலன்களாலும் அவ்வப்பொழுது கட்டுப்படுத்தப்பட்டு வந்தது. ஆங்கில-சாக்சானிய வீரர்களிடத்து அடிமைத்தனம் என்பது எள்ளளவும் இருந்ததில்லை. ஆனால், நம்முடைய 'டியூட்டானிய, முதாதையர்கள் முதன்முதல் இங்கிலாந்திற்குள் நுழைந்தபோது, அவர்களிடையே இங்கு சமவுரிமைக் குடியாட்சி நிலவி இருந்தது என்று கூறுவது தவருகும். அவர்களுக்கிடையே, செல்வத்தாலும், உரிமையாலும் பல தகுதிநிலை வேறுபாடுகள் இருந்தன என்பதும், அவர்களை அரசர்கள் தாம் ஆண்டு வந்தனர் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

நம்முடைய முன்னோர்கள் இங்கிலாந்தில், குடியேறுவதற்கு முன்பு, அவர்களை ஆட்சிபுரிந்து வந்த சிற்றரசர்கள் பலருள் சிறப்புற்று விளங்கியவர், 'ஆங்கிலிகளி'ன் (Angle) அரசரான ஒப்பா (offa) என்பவராவர். அவரைத் தலைவராகக் கொண்ட கற்பனைக்கதைகளும், கவிதைகளும், பேரளவில் எழுதிக் குவிக்கப்பட்டுள்ளன. ஆயினும், அவரை வரலாற்றுத் தொடர்புடைய அரசராகவே தற்கால வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இன்று ஸ்கிலீஸ்விக்கு (Schleswig) என வழங்கும் பண்டைய எய்டர் (Eider) ஆற்றங்கரை அக்காலத்தில் ஆங்கிலிகளின்

நாட்டுத் தென் எல்லையாக இருந்தது. அவற்றின் கரையில் டியூட்டானியர்களை எதிர்த்து ஒப்பா (Offa) போர் புரிந்தார். கற்பனையில் இன்பம் காணுவோர் சிறிது உயர்வு நவிற்சியாக ஒப்பாவின் படையெடுப்பு ஜர்மானியர்களை எதிர்த்து ஆங்கிலேயர்கள் செய்த இறுதிப்போர் என்று கூறுவர்.

'இருளும் இன்னலும் நிறைந்தவொருநாள்.
நம் நினைவில் நீங்காது என்றும்
நிலைத்திருப்பதன்றோ அந்நாள்.
அதற்கு என்றும் இல்லை இங்கு ஈடு'

ஆங்கில-சாக்சானியர் இங்கிலாந்திற்குள் நுழைகின்ற பொழுது அரசையும், உயர்குடி மக்களையும் ஒருங்கே பெற்றிருந்தனர். அவர்கள் வேளாண்மைத் தொழில் புரிந்த, குடியாட்சியுடைய மக்கள் அல்லர். அரசிடத்துக் கொண்ட கண்டிப்பான நெருங்கிய தொடர்பும், பரந்த இனத்தினைச் சார்ந்த மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வதும், ஆதிநாளில் மக்களாட்சிக்குரிய அடிப்படையாக இருந்துவந்தன. காவல் புரியும் தங்கள் அரசனுக்கு அவ்வாறு அவர்கள் உதவி புரியாவிட்டால், உழவர்கள் கடன்காரர்களாக மாறுவது உறுதி; அதனால் ஒருவரையடுத்து வாழவோ, அடிமைகளாக மாறவோ நேரலாம். ஆனால், அவர்கள் பிரிட்டனில் குடியேறுவதற்கு முன்பே பழங்குடிப்பண்பின் தனியுரிமைக் கோட்பாட்டிற்குக் (Individualism) கீழ்ப்படிந்திருந்தனர். வீரர்கள் தங்கள் தலைவனோடு கொண்ட நெருங்கியதொடர்பினால் உடைத்தெறியப் பட்ட இனத்தொடர்பு இக்காலத்தில் அழியத்தொடங்கியது. அதற்கு மாறாகத் தனி மனிதன் தன் தலைவனிடத்துக் கொள்ளும் பற்றுறுதியும் ஈடுபாடுமே போற்றப்பட்டது. இப்புதிய தொடர்பே உயர்குடி ஆட்சிக்கும் (Aristocracy), நிலமானியப் படைமுறைக்கும் அடிப்படையாக அமைந்தது. பழைய தாயகத்திலிருந்து வெளியேறிய இப்பிரிவினரிடத்து இம்மனப்போக்கு பெரிதும் வளர்ச்சியடைந்தது. பல்வேறு குடிமரபினைச் சார்ந்த அல்லது சில சமயங்களில் அயல் இனத்தைச் சார்ந்த போர் வீரர்களைத் தம் படையில் அமர்த்தி, அவர்களுடைய நேரடியான தொண்டினை விரும்பிப் போற்றிய இனத்தலைவர்களே, இத்தனியுரிமைக்கோட்பாட்டை வளர்த்தார்கள் என்று கூறலாம். இங்கிலாந்தினுள் வாழ்ந்த ஆங்கிலேயர்கள் என்றுமே தங்கள் பங்காளிகளைப்பற்றிக் கவலைப்பட்டதேயில்லை. அவர்கள், தூர உறவினர்களை என்றுமே புறக்கணித்து வந்தனர். ஸ்காட்டியர் மிக்க வேறுபாடுடைய பழக்கவழக்கங்களையுடையவர்களாக

வாழ்வதற்கு உரிய ஒரு காரணம் அவர்களுடைய உடலிலே கெல்ட்டிக்கு இன மக்களின் குருதி மிகுதியாக ஓடுவதேயாகும்.[1]

அவுசி (Ouse), டிரெண்ட், தேம்ஸ் ஆகிய ஆறுகளின் முகத் துவாரங்களை நோக்கிச் சிறுசிறு கூட்டங்களாகக் குடியேறுவ தற்கு வந்த ஆங்கில-சாக்சானியரின் கடலக வாழ்க்கையும், இராணுவ அமைப்புகளும் பெரிதும் உறவு முறையினை அடிப் படையாகக் கொண்டு அமைக்கப்பட்டவை அல்ல. கப்பலில் பணி புரியும் ஆட்கள் மாலுமியிடத்துக் கொண்டுள்ள பற்றைப் போன்று, கூலிப்படை வீரர்களைக்கொண்டு அயல் நாட்டின் மீது படையெடுப்பதற்கு முயலும் தலைவனிடத்து, அப்படை வீரர்கள் தனிப்பட்ட வகையில் பற்றுறுதி உடையவர்களாக இருந்தனர். படையெடுக்கப்படும் நாடுகளில் நல்ல நிலங்கள் இருக்குமானால், வீரர்களையடுத்து உழவர் குடிமக்கள் தத்தம் குடும்பத்தோடு அப்புதிய நாடுகளில் குடியேறி நிலையாக வாழ முயன்றனர். ஆனால், படையெடுப்பின் முன்னணியில் இருந்தவர் கள் தலைவனும் அவனுடைய வீரர்களுமேயாவர். தலைவன் இரும்புக் கவசத்தையும், காட்டுப் பன்றியின் வடிவில் செய்யப் பட்ட இரும்புத் தொப்பியையும் அணிந்துகொண்டு போருக்குச் சென்றான். அவன் தன் மூதாதையர் வைத்துப்போற்றிய மணிகள் இழைக்கப்பெற்ற பிடிகளுடைய வாளையேந்திப் போர்க் களம் புகுந்தான். அக்காலத்துப் போர்க்கருவிகளை வேலாந்தில் (Wayland) இருந்த கொல்லன் செய்துகொடுத்தான். அவன் ஒவ்வொரு போர்க்கப்பல் தலைவனுக்கும் ஒரு வாளினை வடித்துத் தந்தான். ஒவ்வொரு போர்க்கப்பலிலும் இருந்த படை வீரர்கள் ஒவ்வொருவருக்கும் மரத்திலான கேடயம் ஒன்றையும், இரும்பு முனையினையுடைய நீண்ட ஈட்டியையும் செய்துகொடுத்தான். வீரர்களுக்கு வேண்டிய இறைச்சியையும், ரொட்டியையும் நன்கு புளித்த தேறலையும் (Ale) மரத்தினா லமைக்கப்பட்ட தம்முடைய பரந்த மன்றங்களில் தலைவர்கள் வழங்கி மகிழ்ந்தனர். அங்குக் குழுமியிருந்த வீரர்கள் தங்கள் தலைவனை 'மிக நல்ல பிரபு' என்று போற்றிப் புகழ்ந்தனர். 'பியோவுல்பு' (Beowulf) போன்ற தலைவர்கள், 'குடிவெறியில் தன்னுடன் இருந்த ஆட்களை என்றுமே கொன்றதில்லை' என்னும் காரணத்திற்காகப் பாராட்டப்பட்டனர். வேனிற் காலத்தில், அத்தலைவனே தன்னுடைய வீரர்களுக்குத் தலைமை

[1] சாட்விக்கின் (Chadwick) Origin of English people," Chap. XII என்னும் நூலையும், பில்பாட்சின் (Phillpots) 'kindred and clan' என்னும் நூலையும் பார்க்க.

தாங்கி, அவர்களைப் பெரும் பொருளும், தங்களிடம் இருப்பதை விடச் சிறந்த நிலமும் கிடைக்கக்கூடிய இடத்திற்குக் கொள்ளையடிப்பதற்கும், குடியேறுவதற்கும் அழைத்துச் செல்ல முயன்றான்.[1]

ஜூட்டு இனத்தைச் சார்ந்தவரான ஹெங்கிஸ்ட்டு (Hengist கெண்ட்டினைக் கைப்பற்றியதாகத் தொன்றுதொட்டு வரும் மரபுவழிச்செய்தி ஒன்று கூறுகிறது. அவர் புராண மரபைச் சார்ந்த வீரரா அல்லது உண்மையில் வாழ்ந்தவரா என்பதை உறுதியாகச் சொல்லுவதற்கில்லை. ஆனால்,அவர் இத்தகைய மாபெரு வீரராகவரலாற்றினை உருவாக்கியவராவர். அவரைப் போன்று வரலாற்றினை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்த பலர் இன்று மறக்கப்பட்டனர். தங்கள் உள்ளத்திலே எழும் தீராத பொருளாசையும், வீரதீரச்செயல் புரியவேண்டும் என்னும் புகழ் வெறியும் கொண்டு அலைந்து திரிந்த மாவீரர்களின் வழியிலே வந்தவரே, ஹெங்கிஸ்ட்டு என்பார் எனத் தெரிகிறது. நீதிக்கும் நேர்மைக்கும் முரண்பாடான வகையில், உணவிடத்தும், பொருளிடத்தும், வீர தீரச்செயல்களிடத்தும், பேராசையும், பெருவெறியும் பிடித்து அலைந்த ஆதிமக்கள் இனத்தின் தலைவர்களுள் இவரும் ஒருவராவர்.

[1] பியோவுல்பு (Beowulf) காப்பியத்தின் பாடல்கள், தலைவன் தேறல்மேசை (Ale- board) யருகில் அமர்ந்து வீரர்களுக்கு ஈட்டிகளையும், வாள்களையும், கேடயங்களையும் நல்கியதோடு, இரும்புத் தொப்பிகளையும், இரும்புக் கவசங்களையும், போர்வலைகளையும், அளித்துவந்ததைத் தெரிவிக்கின்றன. பிரிட்டனைக் கைப்பற்றிய பிறகு பியோவுல்பு (Beowulf) என்னும் காப்பியம் எழுதப்பட்டது. அக்காலத்தில் படைக்கலன்கள் மிகுதியாகப் பெருகிவிட்டன. ஹோமர் எக்கில்லசின் (Achilles) கேடயத்தை அல்லது ஆல்சினோசின் (Alcinous) அவையினைப் புகழ்ந்து பாராட்டுவதைப்போல இக்காப்பியத்தை இயற்றிய புலவரும், தம்முடைய தலைவனின் செல்வத்தையும், கொடைத் திறனையும் உயர்வு நவிற்சியாகச் சிறப்பித்துப் போற்றியிருக்கலாம். ஆங்கில-சாக்சானியர் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்த காலத்தில் அமைக்கப்பட்ட கல்லறைகளில், இரும்பினால் செய்யப்பட்ட ஈட்டிகளும், கேடயங்களின் கைப்பிடிகளும், வேறு சில பொருள்களும் கிடைத்துள்ளன. வாள்கள் மிகுதியாகக் கிடைக்கவில்லை. இரும்புத் தொப்பிகளும், கவசங்களும் அங்குக் கிடைக்கவே இல்லை. ஆயினும், படையெடுத்து வந்த படைத் தலைவர்கள் சிலர், இரும்புக் கவசத்தையும், தொப்பியையும் அணிந்திருக்கலாம். ஏனெனில் ஐரோப்பியப்பெருநிலப்பரப்பிலிருந்து ஆங்கில-சாக்சானியர் புறப்பட்டபொழுது, விட்டு வந்த பழம்பொருட் சின்னங்களில் இரும்புக்கவசமும் தொப்பியும் கிடைத்துள்ளன. ஆனால், அவை மிக அருகிய வழக்குடையனவாகவே இருந்தன போலும். மேலும், அவை மதிப்பு மிக்கனவாகவும் இருந்தன. அதனால் ஆங்கில-சாக்சானியர் அவற்றைப் புதைத்துவிட்டனர். ஆங்கில-சாக்சானியர் செயல் திறனும், இறந்தோரிடத்துப் பற்றும் உடையவர்களாக இருந்தனர். அவருடைய கோடரிகள் மிகச்சிறியனவாக இருந்தன. அவை மிக முக்கிய படைக்கலனாகக் கருதப்படவில்லை. ஹாரல்டின் பெரிய போர்க் கோடரியும், ஹேஸ்டிங்ஸ்ஸில் காவல்புரிந்த வீரரின் கோடரியும் பிற்காலத்தில் வைக்கிங்குகள் (Vikings) கொண்டுவந்தனவாகும்.

இத்தகைய சூழ்நிலைகளுக்கிடையே ஹெங்கிஸ்ட்டு, இங்கிலாந்தைக் கைப்பற்றினர். அம் மாவீரர்களின் பண்புகளும், உணர்வுகளும் காலமெனும் வற்ருத பேராற்றில் இன்று வரை அழியாது மிதந்து வந்துகொண்டிருக்கின்றன. பண்டைக் கால ஆங்கில—சாக்சானியரின் கல்லறைகளிலிருந்து இத்தகைய பெயரற்ற தலைவர்களின் எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றிடையே பிரிட்டனிலிருந்து ரோமானியரை விரட்டிய ஈட்டி முனைகளும், கேடயக்கூர்களும் பேரளவில் துருப்பிடித்துக்கிடக்கின்றன. இக் கருவிகளைக்கொண்டே அவர்கள் கெல்ட்டிக்குகளை மேற்குப்பகுதிக்கு விரட்டியடித்திருக்க வேண்டும். இத்தகைய பெயர் அறியப்படாத தலைவர்களுள், நாம் இக்காலத்தில் 'பேரறிஞன்' என்றும் 'செயலாற்றும் திறனுடையவன்' என்றும் போற்றும் தகுதி வாய்ந்த சிலர் இருந்திருக்கவேண்டும். அவர்களுள் தனி மனிதர் ஒருவரின் உண்மை வாழ்க்கை வரலாற்றினை எழுதுவதற்குத் தேவையான சான்றுகள் நமக்குக் கிடைக்காமற்போனமை வருந்தத்தக்கதே யாகும். அவரும் அவருடைய இனத்தவரும் எதற்காக இங்கிலாந்தினுள் குடியேறினர் என்பதையும், முதன்முதல் பிரிட்டனில் எங்குக் காலெடுத்துவைத்தனர் என்பதையும், அவர்கள் எவ்வாறு போரிட்டனர் என்பதையும், எத்தொழில் செய்தனர் என்பதையும், எவ்வாறு சிந்தித்தனர் என்பதையும் அறிவதற்குரிய சான்றுகள் கிடைத்திருக்குமானல், அவற்றைப் பற்றி விரிவாகப் பல நூல்கள் எழுதிப் பிற்காலத்திய நூல் நிலையங்களை நிரப்பிவிட்டிருப்போம்.

ஆனல், கடந்தகாலம் அவர்களைப் பற்றி ஒன்றும் கூருது மௌனம் சாதிக்கிறது. சாக்சானியர் படையெடுப்பினைப்பற்றித் திட்டவட்டமாகக் கூறும் நம்பத்தக்கக் காலவழிச் செய்திக் கோவைகளும் நமக்குக் கிடைக்கவில்லை. வெல்ஷ்மலைப் பகுதிகளில் ஓடிச்சென்று தஞ்சமடைந்த பிரிட்டானியர் கெல்டிக்கு இன மக்களின் காட்டுமிராண்டிச் செயல்களில் மீண்டும் ஈடுபடலாயினர். அவர்களுக்காக 'ஜில்டா' குருமார்கள் இலத்தீன் மொழியில் 'ஒப்பாரி நூல்' எழுதியிருப்பார்களேயானல், வரலாற்றின் தேவைகளை அந்நூல் ஓரளவிற்குக் கூட நிறைவேற்றியிருக்க முடியாது. புறச் சமயத்தைச் சார்ந்த சாக்சானியப் படையெடுப்பாளர்கள் ருனிக்கு (Runic) எழுத்து முறையினை நன்கறிந்திருந்தனர். அவ்வெழுத்துக்களைக்கொண்டு வாளின் மீது மாய மந்திரங்களைப் பொறிக்கவும் அவர்கள் கற்றிருந்தனர். ஆனல், அவ்வெழுத்துக்களைக்கொண்டு ஆண்டு வரலாற்றினை எழுதவோ, உள்ளக்களிப்பு உற்ற பொழுதெல்

லாம் உவந்து வந்து, புதியதாகப் படையெடுத்து வந்த தலைவர்களைச் சிறப்பித்துப் பாணர்கள் பாடிய காப்பியங்களை அழிந்தொழியாமல் எழுத்தில் எழுதிப் போற்றவோ அவர்கள் முயலவில்லை.

வரலாற்றாசிரியர்களுக்கு இதைப்பற்றி அறிவதற்கு மங்கலான இருவகை ஒளிகளே கிடைத்துள்ளன. கி. பி. நான்காம் நூற்றாண்டின் இறுதியில், திறமையாக அமைக்கப்பட்டிருந்த ரோமானிய-கெல்ட்டிக்கு உலகம் பெருங் குழப்பமுற்றது. விரைவில் அது அழிந்துவிடும் என்பதற்குரிய அறிகுறிகளும் தோன்றின. இரு நூற்றாண்டுகள் கழித்து, சாக்சானிய-கெல்ட்டிக்கு இன மக்களின் காட்டுமிராண்டிச் செயல்கள், பெருங் குழப்பத்திற்கிடையே தலை யெடுக்கத் தொடங்கியதை வரலாற்றாசிரியர்களால் காணமுடிகிறது. செயின்ட் அகஸ்டைனும் (St. Augustine), அவருடைய துறவிகளும் இலத்தீன் மொழியினையும், எவற்றையும் எழுத்து மூலம் எழுதி வைக்கும் பழக்கத்தையும் தங்களுடன் கொண்டு வந்தனர். அவ்வாறு அவர்கள் வந்த பொழுது துதிப் பாடல்களைத் தங்கள் பயணத்தின் போது பாடிக்கொண்டு வந்தனர். அவ்வினிய இசையினை வரலாற்றாசிரியர் கேட்டின்புறுகின்றனர். இவ்விரு நிகழ்ச்சிகளுக்கும் இடையே இங்கிலாந்தின் வரலாற்றில் காரிருள் சூழ்ந்து கிடக்கின்றது. நம்முடைய நாட்டின் ஆண்டு வரலாற்று ஏடுகளின் மிக முக்கியமான பக்கம் (இதழ்) வெறுமனே காணப்படுகின்றது. ஹெங்கிஸ்ட்டு, வோர்ட்டி ஜர்ன் (Vortigern), செர்டிக் (Cerdic) ஆர்தர் (Arthur) முதலியோர் கற்பனை மனிதர்களாகவோ, உண்மையில் வாழ்ந்தவர்களாகவோ இருக்கலாம். வரலாற்றேடுகளில் இக்கால இங்கிலாந்தைப்பற்றிய குறிப்புகள் ஒன்றையும் காணேம். ஆயினும், இக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய தலைவர்களுள் முக்கியமானவர்கள் மேற்கண்ட ஹெங்கிஸ்ட்டு முதலியோராக இருக்கலாம். தொல்பொருள் ஆராய்ச்சியாளரும், வரலாற்றாசிரியர்களும் சேர்ந்து ஆராய்ந்த பிறகும், நமக்குப் படையெடுப்புகளில் தலைமை தாங்கிய தலைவர்களையும், அவர்கள் இங்கிலாந்தினுள் முதன்முதல் காலெடுத்து வைத்த இடங்களையும், போரிட்ட போர்க்களங்களையும் சுட்டிக் காட்ட இயலவில்லை. ஆனல் அவர்கள், ரோமானியரின் நாகரிகத்தில் ஊறித்திளைத்த பிரிட்டனை அழித்த போர் முறையின் இயல்புகளையும், எவ்வாறு

ஆங்கிலேயர் இங்கிலாந்தினைக் கைப்பற்றினர் என்பதையும் பொதுவாக அறிவித்துள்ளனர்[1].

கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்சாக்சானிய கடற் கொள்ளைக்காரர்கள், காளிய கடற்கரையையும், பிரிட்டன் கடற் கரையையும் தாக்கிக் கொள்ளையடிப்பதைத் தடுக்கவும், தற்காப் பிற்காகவும் ரோமானியர் பெரியதொரு கப்பற்படையை இங்கி லாந்தில் நிறுவினர். அதே சமத்தில் ரோமானியப் பேரரசுக் குள்ளே தோன்றிய அதனுடைய பேரரசர்களுக்கும் படைகளுக் கும் இடையே உண்டான போட்டியால், ரோமானியரின் ஆட்சி ஆட்டங்கொடுக்கத் தொடங்கியது. இப்பதவிப் போட்டியில், பிரிட்டனில் நிறுத்தப் பட்டிருந்த பெரும்படை, தம் தலைவர்களின் சார்பில் அடிக்கடி கலந்து கொண்டது. இத்தகைய போட்டியில் தனக்கு ஆட்சியுரிமை உண்டு என்று நடித்த கரௌசியஸ் (Carausius) குறிப்பிடத் தக்கவராவார். அவர் இங்கிலாந்தில் சாக்சானியரின் படையெடுப்பை வன்மையாக எதிர்த்துப் போரிட்டார். தம்முடைய நாவாய்ப் படையின் துணையினைக் கொண்டு, அவர் இங்கிலாந்தினை ரோமானியப் பேரரசின் உரிமை பெற்ற தனிப்பகுதியாக்கினார். அதனை கி. பி. 286 முதல் 296 வரை பேராற்றல் மிக்க அரசராக ஆட்சி புரிந்தார். 'பிரிட்டனின் முதல் கடல் - அரசன்' ('The first sea king of Britain') என்று கரௌசியஸ் புகழப்பெற்றார். டியோகிளீஷியன் (Diocletian), கான்ஸ் டண்ட்டைன் போன்ற பேரரசர்கள் ரோமானியப் பேரரசினைச் சீர்படுத்திப் புதுப்பித்தனர். அதற்குப் பிறகு சில ஆண்டுகள் கழித்து ரோமானியப்பேரரசில் இங்கிலாந்து மீண்டும் மாநிலமாகச் சேர்க்கப்பட்டது. அக்காலம் இங்கி லாந்தின் வரலாற்றில் பொற்காலம் என்று போற்றத் தக்க வகை யில் ரோமானிய ஆட்சியின் இறுதிப் பகுதியில் சிறப்புமிக்கதாக

[1] மிக அடிப்படையான கருத்துகள் வாதத்திற்குரியனவாகவே உள்ளன. ஹெங்கிஸ்ட்டு பற்றியும், ஹோர்ட்டி ஜர்ன் பற்றியும் வழங்கும் கதைகள் உண்மையா என்பது குறித்து ஆராய்ச்சிப் பேரறிஞர்கள் மாறுபட்ட கருத்துடையவர்களாகவே உள்ளனர். வெசக்ஸுக்குத் தெற்குக் கரை வழியாக ஆங்கில-சாக்சானியர்கள் இங்கிலாந்திற்கு வந்தார்களா அல்லது தேம்ஸ் ஆற்றின் வடக்குப் பக்கமாக வந்தார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. கி. பி. 407 இல் ரோமானியர் தங்கள் படையை இங்கிலாந்திலிருந்து திரும்பி வருமாறு செய்தனர். அதன் பிறகு பிரிட்டனுக்குப் படைகளை அனுப்பி ரோமானியர் அதைக் காத்து வந்தனர் என்பது உண்மையா? எப்பொழுது எவ்வாறு லண்டன் சாக்சானியரிடத்துத் தோல்வியுற்றது? இங்கிலாந்தின் தெற்கிலும் வடக்கிலும் ஒரே காலத்தில் படையெடுப்புகள் நிகழ்ந்தனவா? இதைப் போன்ற பல ஐயங்கள் இன்று வரை இருந்துவருகின்றன. நான் நாட்டு மக்கள் நன்கறிந்த கதைகளின் கூற்றுகளை ஏற்கவோ, மறுக்கவோ செய்வதாகத் தோன்றினால், அவர்கள் பின்கண்ட நூல்களைப் படிப்பது நல்லது. Haver field: Roman Occupation of Britain, Last chapter entitled: Saxon England. Bury: Later Roman Empire II, P. 201, etc.

இருந்தது. அக்காலத்தில் ‘சாக்சானிய கடற்கரையின் கோமான்’ என்று புகழ்ப்பெற்ற ரோமானிய அதிகாரி ஒருவர் இங்கிலாந்தில் இருந்தார். அவர் வாஷ் (Wash) விருந்து, போர்ட்ஸ்மௌத் (Portsmouth) வரையிலுள்ள கடற்கரை யோரத்தில் பெரிய கோட்டைகள் பத்தினைக் கட்டினர். அதன் முலம் அயலாரின் படையெடுப்பிலிருந்து நாட்டைக் காத்து வந்தார். (பார்க்க : படம் எண் : -2) அவற்றுள் கெண்ட்டிலுள்ள ரிச்பரோ (Rich borough) மிக முக்கியமானதாகும். இக் கோட்டைகளைக் காப்பதற்காக வடமேற்கு இராணுவப் பிரதேசத்திலிருந்து, போதிய அளவிற்குக் காவற்படை கொண்டு வரப்பட்டது. இப்பத்துக் கோட்டைகளுள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறைமுகத்தைக் காவல் புரிநது வந்தது. படையெடுப்பாளர்களைக் கடலிலேயே எதிர்த்துப் போரிடுவதற்கு, ஒவ்வொரு கோட்டையும் கப்பற்படை ஒன்றைக் கட்டிக்காத்துவந்தது. இத்தகைய தற்காப்பு முன்னேற்பாடுகளால் மேலும் ஓர் அரை நூற்றாண்டுக் காலத்திற்கு, நாகரிகமுற்ற தாழ்நிலப்பரப்புகள் சாக்சானியரின் படையெடுப்புகளிலிருந்து காப்பாற்றப்பட்டன. அதனால் அவை கவலையின்றி முன்னேற்றமடைய முடிந்தது. முன்பு எக்காலத்தினும் காணப்படாத அளவிற்கு கி. பி. 300 முதல் 350 வரை பிரிட்டனில் நாட்டுப் புற மாளிகைகள் பேரளவில் கட்டப்பட்டன. அவற்றில் மக்கள் நிலைத்து வாழ்வாங்கு வாழ்ந்தனர். அக்காலத்தில் பிரிட்டனில் விளைந்த தானியங்கள் ரைன் நதியின் கரையோரங்களில் விற்கப்பட்டன ; பிரிட்டனில் நெய்யப்பட்ட துணிகள் லெவாண்ட்டின் (Levant) சந்தைகளில் பேரளவில் விற்பனையாயின. ரோமானியப் பேரரசின் மற்ற மாநிலங்களில் (Coloni) வாழ்ந்த கூலியாட்களும் ரோமானியப் படைவீரர்கள் பதின்மருக்கு அதிகாரிகளாக இருந்தவர்களும் வறுமையால் வாடித் துன்புற்றதைப் போல், பிரிட்டனில் வாழ்ந்த மக்கள் சமுதாயம் அல்லலுறவில்லை என்று மேற்கண்ட வாணிக வளத்தினையும், நாட்டுச் செழிப்பினையும், கொண்டு உறுதியாகக் கூற இயலாது. அதற்குரிய சான்றுகள் இதுவரை இங்கிலாந்தில் கிடைக்கவில்லை.

நான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரோமானியப் பேரரசு வீழ்ச்சியுறத் தொடங்கியது. அக்காலத்தில் பிரிட்டனின் தாழ்நிலப் பகுதிகளில் மக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பேராபத்து உண்டானதைத் தொல்பொருள் ஆராய்ச்சி தெரிவிக்கிறது. வடக்கே இருந்து சிறுசிறு கூட்டங்களாகப் பிக்கட்ஸ் இனமக்களும் படையெடுத்து வந்தனர். வழியிலே காணப்பட்ட நாட்டுப்புற மாளிகைகளை அவர்கள் தீக்கிரையாக்கிப்

பாழாக்கினர். இதே காலத்தில் கொடுமை மிக்க ஐரிஷ் காட்டு மிராண்டிகள், ரோமானியரின் ஆதிக்கத்திற்குட்படாத மேற்குப் பகுதிகளிலிருந்து அடிக்கடி நாகரிகமுற்ற நாட்டுப் பகுதிகளில் நுழைந்து அழிவு வேலைகளில் ஈடுபட்டனர். இந்த ஐரிஷ் பழங் குடி மக்களை அக்காலத்தில் ஸ்காட்டியர் (Scots) என்றே அழைத் தனர். இத்தகைய உள்நாட்டுப் பேரழிவுகளுக்குச் சிறப்பு மிக்க பொதுப்படையான ஒரு காரணத்தைக் கூறலாம். ரோமானியப் பேரரசின் இதயமாக விளங்கிய ரோமாபுரியிலேயே குழப்பமும் கொந்தளிப்பும் உண்டானமையால், நெடுந்தொலைவிலுள்ள மா நிலங்களில் செலுத்திவந்த அதனுடைய ஆதிக்கம் ஆட்டங் கொடுக்கத் தொடங்கியது. பிரிட்டனில் பணிபுரிவதற்காக ஐரோப்பாவிலிருந்து வந்த வீரர்களில் பணிமக்களும் மிகச்சில ரேயாவர்; அவர்களும் திறமை குன்றியவர்களாகவே இருந் தனர். இதன் விளைவாக கெல்ட்டிக்கு இனத்தவர் மீண்டும் புத் துயிர்ப்புப்பெறத் தொடங்கினர். தொடக்க காலத்தில் அவர் களிடைய புத்துயிர்ப்பு மிகவும் மந்தமாக இருந்தது. ஆயினும், பிரிட்டனிலிருந்த ரோமானிய நாகரிகத்தின் நிலைக்களன்களைச் சாக்சானியப் படையெடுப்பாளர்கள் குறிவைத்துத் தாக்கி அழிப்பதற்கு முன்பே, இங்கிலாந்தில் கெல்ட்டிக்கு இனத்தவரின் புத்துயிர்ப்பு, பல துறைகளில் சிறப்புற்றுத் விளங்கத் தொடங் கியது. நடுநிலக் கடற்பகுதியோடு கொண்டிருந்த இராணுவத் தொடர்பும் ஆட்சித் துறைத் தொடர்பும், சீர்குலைந்து போயிற்று. இந்நிலையில் வேல்சிலும், காலிடோனியாவிலும், அயர்லாந்திலும் வாழ்ந்த ரோமானிய நாகரிகத்திற்கு அடிமை யாகாக் கெல்ட்டிக்கு இன மக்கள் விரைவாக நாடு முழுவதிலும் குடியேறத் தொடங்கினர். சாக்சானியரின் தாக்குதல்களால், ரோமானிய சில்செஸ்டர் (Silchester) கைவிடப்படுவதற்குமுன்பே, அந்நகரின் தெருக்களில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டி ருந்ததாகத் தெரிகிறது. அந்நகரின் தெருக்களில் நடப்பட்ட கல்லில் 'ஒகாமிய'[1] எழுத்துகளில் பொறிக்கப்பட்ட கெல்டிக்கு காட்டு மிராண்டிகளின் கல்வெட்டுகள் அகழ்ந்தெடுக்கப் பட் டுள்ளன. இன்னும் அக்கல்வெட்டுகள் முன்னொரு காலத்தில் அங்குச் சில்செஸ்டர் என்றொரு நகரம் இருந்தமைக்குச் சிறந்த சான்றுகளாக இருந்துவருகின்றன.

ஐந்தாம் நூற்றாண்டின் முதல் முப்பது அல்லது நாற்பது ஆண்டுக் காலத்தில், ரோமானியப் பேரரசு, அதன் ஆட்சிக்குட்

[1] 'ஒகாமிய எழுத்துகள்' என்பது பண்டைக் காலத்திய பிரிட் டனில், பிரிட்டானிய மக்களும் ஐரிஷ் மக்களும் எழுதுவதற்குப் பயன் படுத்திவந்த ஒரு வகை எழுத்து முறையாகும். அவ்வெழுத்துகளால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளை 'Ogan Stones' என்று கூறுவது மரபு.

பட்டிருந்த பிரிட்டானியர்களைத் துணையற்றவர்களாகக் கைவிட்டுச் சென்றது. ஆனால் எவ்வாறு அல்லது எத்தகைய சூழ் நிலையில் பிரிட்டானியரை ரோமாபுரி வீரர்கள் கைவிட்டுச் சென்றனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. தங்களால் இனி பிரிட்டனைக் கட்டிக்காக்க இயலாது என்பதை நன்குணர்ந்து, இனி இங்கிருப்பதால் பயனில்லை என்ற முடிவிற்கு வந்த பிறகே, ரோமானியர் பிரிட்டனைக் கைவிட்டிருக்க வேண் டும். இந்நெருக்கடியான காலத்தில் ரோமானியர் தங்களைத் தாங்களே அயலாரின் தாக்குதல்களிலிருந்து காத்துக்கொள்ள வேண்டிய பொறுப்புடையவர்களானார்கள். அக் காலத்தில் தான் ரோமானிய பிரிட்டனை அழித்தொழிப்பதற்காகத் தோன் றிய பேராற்றல் மிக்க சாக்சானியர்கள் இங்கிலாந்தின்மீது படையெடுத்துவந்தனர். இதற்கு முந்தைய நூற்றாண்டிலேயே பிரிட்டனின் வடக்குப் பகுதியிலும், மேற்கு பகுதியிலும் வாழ்ந்த கெல்ட்டிக்கு காட்டு மிராண்டிகள் ரோமானியப் பிரிட் டனை அழித்தொழிப்பதற்குக் காப்புக் கட்டிக்கொண்டார்கள். ஆயினும் அவ்வழிவு வேலை சார்க்சானியர் காலத்தில் உச்ச நிலையை அடைந்தது. கி. பி. 350 முதல் 400 வரை சாக்சானியர் தொடர்ந்து இங்கிலாந்தினைத் தாக்கிக் கொண்டிருந்தனர். எனினும், சாக்சானியர் வெற்றிபெற்றமையால் மேலும்மேலும் தொடர்ந்து தாக்கினரா, அல்லது தோல்வியுற்றமையால் மீண்டும்மீண்டும் படையெடுத்துவந்தனரா என்பது விளங்க வில்லை. ஆனால், ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சாக் சானியர் பேராற்றலும், பெருவீரமும் உடையவர்களாகப் பேரளவில் படையெடுத்து வந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இக்காலத்தில் படையெடுத்து வந்த ஒவ்வொரு முறையும் வெற்றியோடு பெரும் பொருளை ஆங்கில-சாக்சானி யர் கொள்ளையடித்துச் சென்றனர். பிரிட்டன் பிக்ட்ஸ் (Picts) இன மக்களாலும், ஸ்காட்டியர்களாலும் பாழ்படுத்தப்பட்டிருப் பதைப் பற்றியும், ரோமானியரின் உண்மையான ஆட்சி முறை அழிந்தொழிந்ததைப் பற்றியும், ரோமானியப் படைத்தலைவர்கள் வகித்த பொறுப்பினை ஏற்ற செயின்ட் ஜெர்மானசின் (St. Germanus) தலைமையில் கிறிஸ்துவ சமயத் தொண்டர்கள் இங்கிலாந்தினை அயலாரின் தாக்குதல்களிலிருந்து காப்பதற்காக அணிவகுத்து நின்றதைப் பற்றியும், வெற்றியோடு தாயகம் திரும்பிய ஆங்கில-சாக்சானியர், தங்கள் தலைவர்களுடைய மரத்தால் கட்டப்பட்ட மன்றங்களில் உணர்ச்சிப் பெருக்கோடு சொற்போர் புரிந்திருக்கலாம். இங்கிலாந்தின் படையெடுப்பில் கலந்து கொண்டு பெரும் பொருளைக் கொள்ளையடித்து வந்த சாக்சானிய உழவர்கள் அதிக அளவில் மதுவைப் பருகியவுடனே

'நம்மால் தூக்கிக்கொண்டு போகக் கூடிய அளவிற்கு மட்டும் கொள்ளையிட்ட பொருள்களை நாம் எதற்காகச் சுமந்து செல்ல வேண்டும்?' என்று அவர்கள் தங்களுக்குள்ளேயே கேட்டுக் கொண்டனர் என்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டிய தில்லை. சூழ்நிலைகள்யாவும் தங்களுக்கு உதவியாக இருந்த இங்கிலையில்தான், கதகதப்பான நீர் சூழ்ந்த பிரிட்டனில் ஆங்கில-சாக்சானியர் தாங்கள் அனைவரும் பேரளவில் ஒரே சமயத்தில் சென்று குடியேறுவதைப்பற்றி ஆராய்ந்தனர். இங்கிலாந்தின் வளமிக்க பசுமையான வயல்களும், பரந்த புல் வெளிகளும், மான்களும், பன்றிகளும், நிறைந்த சீமைஆல மரக்காடுகளும் (Oak) அவர்களுடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தன. அதனால் அவர்கள் விரைவிலேயே ஒரு நல்ல முடிவிற்கு வந்தனர்.

வேறு எத்தகைய சான்றுகளும் கிடைக்காததால், கடல் வழியாகவும், நில வழியாகவும் சாக்சானியர் படையெடுத்து வந்து இங்கிலாந்தைக் கைப்பற்றியிருக்கவேண்டும் என்று உய்த்துணரலாம். பிரிட்டனைக் கைப்பற்றுவதற்காகப் போரிட வேண்டிய அளவினையும், செய்ய வேண்டிய அழிவு வேலைகளையும் நோக்குமிடத்து, முதலில் பெருந்திரளாகச் சாக்சானிய வீரர்கள் மனைவி மக்களோடு வராமல், போருக்கென்றே ஆண்கள் மட்டும் வந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. அவ்வாறு வந்த வீரர்கள் தான் பிரிட்டனிலுள்ள ஆறுகளின் வழியாகவும், நெடுஞ் சாலைகளின் வழியாகவும் விரைவாக உள்ளே புகுந்து போரிட் டனர். அவர்கள் களிமண்ணால் கட்டப்பட்ட மதில்களையுடைய பாசறைகளையும், கோட்டைகளையும் இடித்தும், பெரு மதில்களை யும் அரண்களையுமுடைய நகரங்களை மண்மேடாகுமாறு அழித்தும் வந்தனர். மேலும், பட்டணங்களையும், நாட்டுபுற மாளிகைகளையும் அவர்கள் தீயிட்டுக் கொளுத்தினர். ரோமானிய நாகரிகத்தில் மூழ்கித்திளைத்த பிரிட்டானியர்களைப் பேரளவில் சாக்சானியர் கொன்று குவித்தனர். அத்துடன் அவர்களுடைய குடியிருப்பு களை விட்டு வெளியேறுமாறு விரட்டியடித்தனர். அயர்லாந்திலும் காலிடோனியாவிலும் இருந்து வந்த பண்டைக் காட்டுமிராண்டி மக்களை மீண்டும் மேற்குப் பகுதிகளுக்கு ஓடிப் பிழைக்குமாறு சாக்சானியர் விரட்டியடித்தனர். நாம் இதையடுத்துப் படை யெடுப்பாளர்களின் குடும்பங்கள் கடல் வழியாக மரக்கலங்களில் வந்து பிரிட்டனில் இறங்கியதையும் நம் மனக்கண்ணால் காண முயல வேண்டும். அவ்வாறு வந்த குடும்பங்களோடு போர் ஆர்வமில்லா உழவர்களும் பெருந்திரளாக வந்திருக்க வேண்டும். இவ்வாறு இரண்டாவது வகையில் வந்த குடியேறிகளே, முழு

வதும் செம்மையாக்கப்படாதப் புதிய நாட்டில், புதுக்குடிகளை அமைத்துத் தங்கள் இனம் இங்கிலாந்தில் தழைத்தோங்குமாறு செய்தனர்.

ஆல்பிரட்டு மன்னரின் காலத்தில், டேனியர்கள் (Danes) இங்கிலாந்தில் குடியேறினர். அப்பொழுது காணப்பட்ட இரு வகைப் பண்புகளைப் போன்றே, ஆங்கில-சாக்சானியர் இங்கிலாந்தைக் கைப்பற்றிய பொழுதும் இருவகைப் பண்புகளைக் காணுகின்றோம். அவற்றுள் ஒன்றை நாம் புறக்கணித்தால், நார்ட்டிக்கு இன மக்கள் பிரிட்டனின்மீது படையெடுத்து வந்ததைப்பற்றி நாம் தவருகப் புரிந்து கொண்டவர்களாவோம். அவர்களுக்குப் பின்னர் வந்த டேனியர்களைப் போன்றே, ஆங்கில-சாக்சானியர்களும் கொலைகாரர்களாகவும், கடற் கொள்ளைக்காரர்களாகவும் இருந்தனர்; அவர்களுடைய நாகரிகத்தைக் காட்டிலும் சிறப்புற்று விளங்கும் பிறிதொரு நாகரிகத்தினை அழித்தொழிப்பதில் பேரார்வமும் பெருமகிழ்ச்சியும் உடையவர்களாக விளங்கினர். அதே காலத்தில் திருப்பயணத் தந்தைகள் இங்கிலாந்தில் குடியேறி நிலையாக வாழத் தொடங்கினர். அவர்கள் நாட்டினைச் சுரண்டுவோர்களாகவோ, அடிமைகளின் தலைவர்களாகவோ தங்களைக் கருதவில்லை. அதற்கு மாருக, அவர்களே நிலத்தினை உழுது உழவுதொழிலில் வல்லமை வாய்ந்த வேளாளர்களாகச் சிறப்புற்றனர். சாக்சானியர் காட்டுமிராண்டி மக்களாக இல்லாமல் இருந்திருந்தால், ரோமானிய நாகரிகத்தை அழித்திருக்க மாட்டார்கள் என்பது உறுதி. அவர்கள் திருப்பயணத் தந்தையாக மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் அவர்களுடைய இனத்தினை மற்றொரு சிறந்த நாகரிக இனமக்கள் மாற்றியிருப்பார்கள் என்பது திண்ணம்.

இன்று இருப்பதைக் காட்டிலும் அன்று, இங்கிலாந்தின் ஆறுகள் ஆழமுடையனவாகவும், கப்பற் போக்குவரத்துக்குப் பெரிதும் பயனுடையனவாகவும் இருந்தன. அவ்வாறுகளின் வழியாகவே ஆங்கிலேயர்கள் தங்கள் பெயரினுல் பிற்காலத்தில் ‘இங்கிலாந்து’ என வழங்கப்போகும் நாட்டின் உள்நாட்டுப் பகுதிகளில் முதன் முதலாக நுழையலாயினர்.[1] அவர்கள்

[1] இக்கருத்திற்குப் பண்டை ஆங்கில-சாக்சானியரின் கல்லறைகளில் செய்யப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சி நேரடியாகச் சான்று பகர்கின்றன. கல்லறைகள் அனைத்தும் கப்பற் போக்குவரத்துக்குப் பயன்படத்தக்க ஆறுகளின் கரையோரங்களிலும், அவற்றினின்று நேராகப் பிரிந்து செல்லும் கிளையாறுகளின் கரையோரங்களிலுமே அகழ்தெடுக்கப்பட்டுள்ளன.

பார்க்க. Thurlow-Leeds : Archaeology of the Anglo Saxon Settlements pp. 17—19.

நேர்த்தியான வேலைப்பாடுகளில்லாத போர்க்கப்பல்களில் ஆழமில்லாத பகுதிகளின் வழியாக வடகடலைக் கடந்து, இங்கிலாந்திற்கு வந்தனர். அச்சிறு கப்பல்களின் மூலமே ஆற்றின் கழிமுகங்களிலிருந்து எளிதாக உள்நாட்டுப் பகுதிகளுக்கு விரைந்து சென்றனர். அவ்வாறு உள்நாட்டிற்கு வந்த பிறகு, சேற்றுப் பகுதிகளில் காணப்பட்ட சிறு திட்டுகளிலும், காடுகளிலிருந்து அவசரமாக வெட்டப்பட்ட மரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பட்டிகளிலும் அவர்கள் தங்கள் மரக்கலங்களை நிறுத்திக் காத்துவந்தனர். அந்நிலையில் இங்கிலாந்திற்குள் புகுந்த போர் வெறிகொண்ட கூட்டத்தினர் வாளையும், நெருப்பையும் கொண்டு பகைவர் நாட்டை அழிப்பதில் ஈடுபட்டனர். இவ்வாறு ஆல்பிரட்டின் ஆட்சிக்காலத்திலும் டேனியர்கள் படையெடுத்துவந்தனர் என்று அறிகிறோம். எனவே, அதைப் போன்றே அவர்களுக்கு முன்பு இங்கிலாந்திற்குள் நுழைந்த ஆங்கில–சாக்சானியர்களும் படையெடுத்து வந்திருக்காலம் என்று கொள்ளுவது தவருகாது.

ரோமானிய இராணுவ அமைப்புகள் அழிந்தவுடனே, படையெடுப்பாளர்கள் விரைவில் பிரிட்டனைக் கைப்பற்றுவதற்கும், அழிவு வேலைகளில் ஈடுபடுவதற்கும் ரோமானியர் அமைத்த நெடுஞ்சாலைகளே பேருதவி புரிந்தன. ஆயினும், ஆங்கில-சாக்சானியரின் பழைய குடியிருப்புகள் அனைத்தும் ஆற்றங்கரையோரங்களை ஒட்டியே அமைக்கப்பட்டிருந்தன என்பது, அவ்விடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல் பொருள் சின்னங்களால் தெரியவருகிறது. நெடுஞ்சாலைகளை ஒட்டி அவர்கள் தங்கள் குடியிருப்புகளைத் தொடக்க காலத்தில் அமைத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆயினும், அவர்கள் பிரிட்டன் முழுவதும் கைப்பற்றுவதற்கு ரோமானியர் அமைத்த நெடுஞ்சாலைகள் பேருதவியாக இருந்தன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.[1] கொள்ளையடிக்கப்பட்ட பெரும் பொருளைச் சுமக்க முடியாமல், கல்லினல் அமைக்கப்பட்ட குறுக்கு வழிகளில் போர்க்கவசம் அணிந்த அவர்கள் தள்ளாடிச் சென்றிருக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய நற்பேற்றை நினைத்து, புன்முறுவல் புரிந்த வண்ணம் சென்று கொண்டிருக்கும்பொழுது, அருகில்

[1] திரு. தர்லோலீட்ஸ் (Thurlow Leeds) ஜூலை 1925 (History, July 1925) வரலாற்று இதழில் ஆதிகாலத்து ஐக்னீல்டு (ICKnield Way) பெருவழி ரோமானியர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. அவ்வழி வாஷிலிருந்து மேலைத் தேம்ஸ் ஆற்றுப் பகுதிகளுக்குப் படையெடுப்பாளர்கள் எளிதில் செல்லுவதற்கு உதவியது. இவ்வழியின் மூலமே வடகிழக்குப் பகுதியிலிருந்து வெஸ்ஸக்ஸ் (Wessex) நகரத்தை அமைக்க முடிந்தது என்று மொழிந்துள்ளார்.

மரங்களுக்கிடையே ஒரு நாட்டுப்புற மாளிகையைக் கண்டிருக்கலாம். அதைக் கண்டவுடன் அதைத் தாக்கிக் கொள்ளையடிக்க அங்குச் சென்றிருப்பர். சென்றவர்கள் மாளிகைகளைத் தீயினால் கொளுத்தியபோது எழுந்த தீச்சுவாலைகளைக் கண்டு, அங்கிருந்த கொழுகொழு என்று வளர்க்கப்பட்ட சேவல்கள் நடுக்கமுற்றிருக்கும்; அத்துடன் காட்டுமிராண்டித்தனமான அக் கடலோடிகளின் கூக்குரலைக் கேட்டு அச்சமுற்று அவை காட்டிற்குப் பறந்தோடியிருக்கலாம். இவ்வான்கோழிகளை ரோமானியர் தங்கள் மாளிகைகளிலுள்ள மேல்மாடிகளை அலங்கரிப்பதற்காக இறக்குமதி செய்து வளர்த்து வந்தனர். இவ்வாறு காட்டிற்குப் பறந்தோடிய வான்கோழிகள் பிற்காலத்தில் வேட்டையாடுவதற்குரிய காட்டுப் பறவைகளாக மாறின. பல்வேறு மாற்றங்களைக் கொண்ட பல நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட இங்கிலாந்தின் சமூக வரலாற்றில் இப்பறவைகள் சிறப்புமிக்க இடத்தைப் பெற்றன.

சாக்சானிய வீரர்கள், வரலாறு என்னும் மாபெரு நாடக மேடையில் முதன் முதலாகத் தோன்றுவதை இப்பொழுதுதான் நாம் காண முடிகின்றது. அவர்கள், தங்கள் வழித்தோன்றல்களைப் போலவே போர் விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். ஆனால் அவர்கள் படைத் துறைக்குரிய வீரர்கள் அல்லர். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே, ஓர் ஈட்டியும், மரக் கேடயம் ஒன்றும் கொண்டு போர் புரிந்தனர். அவர்களிடத்து வாள்கள் மிகக் குறைவாகவே இருந்தன. எங்கோ, யாரிடமோ இரும்புத் தொப்பி ஒன்று மிகமிக அருமையாக இருந்தது. ஆயிரம் பேருக்கு ஒரேஒரு இரும்புச்சட்டை அவர்களிடத்து இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் இங்கிலாந்து முழுவதையும் இச்சில கருவிகளைக் கொண்டே கைப்பற்றியமை சிறப்பு மிக்க செய்தியாகும்.[1] ரோமானியப் பேரரசின் பிற்காலத்தில் செய்யப்

[1] Haver field : Roman Occupation (1924), P. 274.

'ரோமானிய நாட்டுப்புற மாளிகைகளில் சாக்சானியர் வாழ்ந்தனர் என்பதற்கு ஒரு சான்று கூட கிடைக்கவில்லை' என்னும் ஹாவர் பீல்டின் கருத்து இன்று வரை மறுக்கப்படவில்லை. செரில் பாக்ஸ் (Cyril Fox) என்பார் தம்முடைய 'Cambridge Region' என்னும் நூலில் (பக். 282-8) இக் கருத்தினைச் சிறிது மாற்றியுள்ளனர். அவர் 'கேம்பிரிட்ஜ் வட்டாரத்தில். ரோமானிய மனையிடங்களின்மீது, ஆங்கில-சாக்சானிய குடியிருப்புகள் அமைக்கப் பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன. கேம்பிரிட்ஜ் மட்டுமல்லாமல், லிட்லிங்டன் (Litlington) பார்ட்லோ (Bartlow), வை மாண்டலே (Wy mondley), ஸ்டான்ஸ்டெட் (Stansted) போன்ற இடங்கள் ஆங்கில-சாக்சானியக் குடியிருப்புகளைச் சார்ந்தும், சூழ்ந்தும் உள்ளன. ஆனால், அப்பகுதிகள் தொடர்ந்து இருந்தன என்பதற்கு இவற்றைச் சான்றாகக் கொள்ளுவது தவறு. அது பொருளாதாரச் சட்டத்தின் செயற்பாட்டினால் உண்டான விளைவாக இருக்கலாம்' என்பர்.

பட்ட போர்க் கருவிகளையும், போர்க் கவசங்களையும், எறி படைகளையும், நன்கு பயிற்றுவிக்கப்பட்ட காலாட் படையினையும் கொண்டு பிரிட்டானியர்கள், படையெடுப்பாளர்களை எதிர்த்துக் கடும்போர் புரிந்தனர். தற்காப்பிற்காகப் போர் புரிந்த ரோமானியர் பிரிட்டானிய முறையில் போர் புரிந்தனரா அல்லது புத்துயிர்ப்புப் பெற்று விளங்கும் கெல்ட்டிக்கு முறையில் போர் புரிந்தனரா என்பதை நாம் தெளிவாக அறிய முடியவில்லை. பிரிட்டானியரின் அரசரான ஆர்தர் பெரும் படையினைக்கொண்டு ஆங்கில–சாக்சானியர்களை எதிர்த்துப் பெரும்போர் புரிந்தார் என்பதை மட்டும் நாம் அறிகின்றோம். ஆனால் அவ்வரசரைப்பற்றி வழங்கும் கதைகளிலிருந்து, அவர் ஓரளவிற்குக் கற்பனையின் படைப்பாக இருப்பாரோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. பிரிட்டானியர் எவ்வாறு போரிட்டிருந்தாலும், அவர்கள் காலாட் படையினராகிய சாக்சானியரால், கோட்டை கொத்தளங்கள் அற்ற சாக்சானியரால், எறி படைகளையோ, கவசங்களையோ பெற்றிராத சாக்சானியர்களால் எளிதில் தோற்கடிக்கப்பட்டனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சாக்சானியர்களின் வெற்றிக்கு அவர்களுடைய வியப்பிற்குரிய பேராற்றலும், கொண்ட நோக்கத்தினை அடைவதில் காட்டிய பேரார்வமுமே காரணங்களாகும். பிரிட்டானியர்களுக்கு எளிதியில் கைப்பற்ற முடியாத பாசறைகளும், பெரு மதில்களுடைய கோட்டைகளும், நகரங்களும் தற்காப்பிற்குப் பேருதவியாக இருந்தன. ஆயினும், அவையாவும் ஒன்றன்பின் ஒன்றாக, நீண்ட கப்பல்களிலிருந்து வந்து இறங்கிய காட்டுமிராண்டித் தனத்தை முற்றிலும் விடாத, ஆங்கில–சாக்சானியப் படை வீரர்களின் கொடுமையான தாக்குதல்களினால் தகர்த்தெறியப்பட்டன.

அமைதி மிக்க இங்கிலாந்தின் தென் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும், வாழ்ந்த மக்களுள் யாருமே தற்காப்பிற்குரிய படைப் பயிற்சியினை, ரோமாபுரிப் பேரரசு சீரும் சிறப்பும் பெற்று இங்கிலாந்தை ஆண்டபொழுது பெறவில்லை என்பதை முன்னர் நாம் கண்டோம். ரோமானிய ஆட்சி முறையில், ரோமானியப் படைவீரர் அல்லாதாருக்குப் போர் முறைப் பயிற்சி அளிக்கக்கூடாது என்பது பேரரசின் அரசியல் சூழ்ச்சித் திறனாகி இருந்து வந்தது. அதனால் பிரிட்டனின் பழங்குடி மக்கள் போர்க் கலைகளில் வல்லவர்களாக விளங்க முடியாமற் போனது அவர்களுடைய குற்றமன்று. பிற்காலத்திய நில மானியப்படை முறைப் பிரபுக்களைப்போன்று, ரோமானிய நாட்டுப்புற மாளிகைப் பெரு மக்கள் போரிடப் பயின்றவர்கள்

அல்லர். அவர்களுக்குப் போரிடுவதற்கென்று வீரர்களோ, கோட்டை கொத்தளங்களோ இருந்ததில்லை. பெரும்பாலான நகரங்களைச் சுற்றிலும் பெருங் கற்சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. ஆனால், அவற்றுள் வாழ்ந்த குடிமக்கள், இடைக்காலத்திய நகரக்குடிமக்களைப் போன்று, படைப் பயிற்சி பெற்றிருக்கவில்லை. ரோமானியருடைய ஆட்சிக்குட்பட்ட உலகம், இடைக்கால உலகைக் காட்டிலும் நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கியது. ஆயினும், நிலையான பேரரசின் படைக்குப் பேராபத்து உண்டாகிய நேரத்திலும், நாட்டின் மத்திய அரசிற்கு ஊறு நேர்ந்த பொழுதும், நாட்டு மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் திறமையற்றவர்களாவே இருந்துவந்தனர் என்பது கருதத்தக்கது. இவ்வாறு காட்டுமிராண்டிகளின் படையெடுப்புகளால் உண்டான குழப்பத்திலிருந்தே, பையப்பைய, நிலமானியப் படைமுறை (Feudal System) தோன்றி வளர்ச்சியுறலாயிற்று. இவ்வாறு சமுதாய அமைப்பிலே இருந்து வந்த உயிர்நாடியான குறைபாட்டை நாளடைவில் நிலமானியப் படைமுறை போக்கியது.

சாக்சானியர் படையெடுப்பைப் பற்றிப் புதியதொரு வரலாற்றுக் கொள்கை அண்மைக் காலத்தில் வெளியாகியுள்ளது. மாபெரு அழிவு வேலைகளைச் சிறுசிறு கும்பலாகப் பிரிட்டனுக்கு வந்த ஆங்கில-சாக்சானியர்கள் செய்யவில்லை என்பது இப்புதிய கோட்பாடாகும். அதாவது சிறுசிறு கூட்டங்களாக இருந்த சாக்சானியர் அனைவரும் ஒரு மாபெரும் படைத்தலைவனின் கீழ் ஒன்றுப்பட்டுப் பெருங்கூட்டமாக இங்கிலாந்தைத் தாக்கியிருக்க வேண்டுமென்று தற்கால ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். ஆல்பிரட்டின் ஆட்சிக் காலத்தில், டேனியக் கொள்ளைக்காரர்கள், குறிப்பிட்ட சிறிது காலத்திற்கு ஒரு தலைவனுக்கு அடிபணிந்து இங்கிலாந்தினைத் தாக்கி, முழுவதையும் நொடிப்பொழுதில் கைப்பற்றினர் என்பதை நாம் அறிவோம் டேனியர்களின் இத்தகைய படையெடுப்பு, நம்மைச் சாக்சானியரின் படையெடுப்பும் இவ்வாறே இருந்திருக்கலாம் என்று கருதுமாறு தூண்டுகின்றதேதவிர, இவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பதற்கு நேரடியான சான்றுகள் ஒன்றும் நமக்கு இன்றுவரை கிடைக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மேலும், ஆங்கில-சாக்சானிய வீரர் குழுக்களின் அளவைப் பற்றியும் அக்குழுக்களின் இடையே இருந்து வந்த தொடர்பைப்பற்றியும் நாம் ஒன்றும் தெளிவாக அறியமுடியவில்லை. இத்தகைய பேரழிவுகளைக் கண்டு கண்ணீர் வடித்த பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் கில்டாஸ்

(Gildas) தெளிவில்லாத சில கருத்துகளைக் கூறியுள்ளார். அவர் கி. பி. 540 ஆம் ஆண்டு அளவில் பிரிட்டனின் வரலாற்றினை எழுதினர். அவர் வரலாறு எழுதத் தொடங்கிய சமயத்தில் சாக்சானியர்கள் மும்முரமாகப் படையெடுக்கத் தொடங்கி ஒரு நூற்றுண்டு கழிந்துவிட்டது எனலாம். பிரிட்டனின் நடுப் பகுதியின் வழியாக, மேற்குக் கரையில் அவர்கள் ஒரு நிலையை அடைகின்றவரை அழிவுவேலைகள் கடுமையாக நடைபெற்றதாக அவர் கூறுகிறுர். அதன் பிறகு படையெடுப்பாளர்கள் மேற்கி லிருந்து பாழடைந்த பகுதிகளை வெறுமனே கைவிட்டுவிட்டுப் பின்வாங்கி வந்தனர் என்று தெரிகிறது. இந்நிகழ்ச்சி கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின் இடையிலும், கடைப்பகுதியிலும் நடந் திருக்குமானல், நடுநிலப்பகுதிகளிலும், நடுமேற்குப்பகுதி களிலும் ரோமானியர் அமைத்திருந்த நகரங்களும் நாட்டுப்புற மாளிகைகளும், ஆங்கிலேயப் படையெடுப்பாளர்கள் அப்பகுதி களில் நிலையாக வாழத்தொடங்குவதற்கு முன்பே அழிக்கப்பட் டிருந்தமைக்குரிய காரணத்தை நாம் ஒருவாறு உயர்த்துணர லாம். தொல்பொருள் ஆராய்ச்சியால் தெரியவரும் செய்தி ஒன்றை இதற்குச் சான்றுகக் கூறலாம். பாத் (Bath) நகரம் ஆங்கில–சாக்சானியர் வருகைக்கு நெடுங்காலத்திற்கு முன்பே பாழடைந்துவிட்டது என்பதும், அதனுடைய செய்குளங்களில் புதர்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன என்பதும், நீர்ப்பறவைகள் அவற்றிடையே வாழ்ந்தன என்பதும் தொல்பொருள் ஆராய்ச் சியில் கிடைத்த பழம்பொருட் சின்னங்களால் அறியப்படு கின்றது. ஆங்கில–சாக்சானியரின் காலவழிச் செய்திக்கோவை (Chronicle). கி. பி. 577-ல் 'பாத்' நகரம் இறுதியாகக் கைப்பற் றப்பட்டதென்று அறிவிக்கிறது. இவ்வரலாற்றுக் குறிப்பேடு நம்பத்தகுந்ததா என்னும் ஐயம் பலரிடையே இருந்து வருகிறது. அது எவ்வாருயினும், கி. பி. ஆரும் நூற்றுண்டிற்குப் பிறகு சாக் சானியர் 'பாத்' நகரைக் கைப்பற்றவில்லை என்பது உறுதியா கிறது. இதற்கு முற்பட்ட காலத்திலேயே அழிவு வேலையில் ஈடுபடும் வெறிபிடித்த படையெடுப்பாளர் கூட்டமொன்று இங்கி லாந்தைத் தாக்கிப் பேரழிவினை உண்டாக்கி இருக்கவேண்டும். அதன் பிறகு வந்தவர்களுள் ஒரு பகுதியினர் திரும்பிப் போயி ருப்பார்களானல், மேற்கண்ட சிக்கல்களை எளிதில் நாம் தெளிவு படுத்தலாம். ரோமானியர் காலத்திலேயே நடுநிலப் பகுதியில் மக்கள் மிகமிகக் குறைவாக வாழ்ந்தனர். சாக்சானியர் படை யெடுப்பினுல், அங்கிருந்த மக்கள் அவ்விடத்தை விட்டுப் பாது காவலான இடத்தை நாடிச்சென்றிருக்கலாம். எனவே இலத்தீன் மொழி நாகரிகம் இப்பகுதிகளில் இதற்கு முன்பே ஓரளவிற்கு நிலைகுன்றியிருந்தது என்பது புலனுகிறது. அதனை முழுவதும்

அழித்தொழித்த பெருமை சாக்சானியரின் முன்னோடிகளையே சாரும். அவ்வாறு அழிக்கப்பட்ட ரோமானிய நாகரிகத்தினைச் சாக்சானியர் புத்துயிர் பெறுமாறு செய்யவில்லை. பெருந்திரளாக வந்த ஆங்கிலப் படையெடுப்பாளர்கள் தாங்கள் முதலில் பெற்ற பெரு வெற்றிக்குப்பிறகு, மேற்குப் பகுதியிலிருந்து பின் வாங்கிச் சென்றிருக்க வேண்டும். அவ்வாறு பிரிந்த ஒவ்வொரு பிரிவினரும், பிரிட்டனின் கிழக்குப்பகுதியில் தமக்கென்று தனி அரசுகள் அமைத்துக் கொண்டனர். அங்குள்ள நிலங்களைத் தங்களுக்குள் பகிர்ந்து, அவற்றை உழுது பயிரிட்டனர். நாளடைவில் திருமணம் செய்து அவர்கள் வாழத்தொடங்கினர். இத்தகைய புதியதொரு கொள்கையினை அண்மைக் காலத்தில் வரலாற்று அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர்.

இப்புதிய கொள்கை டேனியர்களின் படையெடுப்பில் நிகழ்ந்த 'முன்னேற்றமும் அதனையடுத்துப் பின்னடைந்து ஓய்வெடுத்தலும்' என்னும் கொள்கையைப் பெரிதும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மேலும் உணர்ச்சிவயப்பட்ட கில்டாஸ் (Gildas) என்ற பண்டை வரலாற்றாசிரியன் மொழிந்துள்ள சில கருத்துகளை இதற்குச் சான்றாகக் கொண்டுள்ளனர். இவையாவற்றையும் காட்டிலும், நெடுங்காலத்திற்கு முன்பே இங்கிலாந்தின் பெரும் பகுதி பேரழிவுக்குள்ளாகி இருந்தமை இப்புதிய கொள்கைக்குச் சிறந்த சான்றாக அமைந்திருக்கிறது. இக்கொள்கை மெய்பிக்கப்பட்டது என்றோ மெய்பிக்கப்படவில்லை என்றோ நாம் கூறமுடியாது. பிற்காலத்திய வழக்காறுகளையும், மரபு வழிச் செய்திகளையும் கொண்டு எழுதப்பட்ட ஆங்கில-சாக்சானியரின் காலவழிச் செய்திக் கோவையின் கூற்றுகளைச் சான்றாகக் கொண்டு கிரீன் (Green) என்ற வரலாற்றாசிரியர் பழைய கருத்தினை வெளியிட்டுள்ளார். ஆனால், இன்று (அதைவிடப்) புதிய கொள்கையே பல அறிஞர்களால் சிறந்ததாகப் பாராட்டப்படுகிறது.[1] இக்கொள்கை அழிவு வேலைகளைச் செய்தவர்களும், பிறகு அவற்றைப் புதுப்பித்துக் கட்டியவர்களும், வேறுபட்ட குழுவைச் சார்ந்த ஆங்கில–சாக்சானியர்களாக

[1] ஆல்பிரட்டு மன்னரின் ஆணையின் பேரில் தொடங்கப் பெற்றதே ஆங்கில-சாக்சானிய கால வழிச் செய்திக் கோவை. அவ்வரலாற்றுக் குறிப்பேட்டின் ஆசிரியர்கள் பலரும் வாழ்ந்த காலத்திய நிகழ்ச்சிகளான டேனியர் படையெடுப்பும், அதற்குப் பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் இந்நூலுள் தக்க சான்றுகளோடு எழுதப்பட்டுள்ளன. ஆனால் அந்நூல் எழுதப்படுவதற்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சாக்சானியர் படையெடுப்புகளைப்பற்றிக் கூறும் செய்திகள் அவ்வளவு பொருத்தமானவையாக இல்லை. ஆனால், அப்படையெடுப்பின் உண்மையான முக்கியத்துவத்தை இந்நூலாசிரியர்கள் குறைவாக மதிப்பிட்டமையால் இத்தவறு நேர்ந்திருக்கலாம்.

பார்க்க: The Rise of Wessex by T. Dayzell Reed.

இருக்க வேண்டும் என்றும், அவர்கள் தனித்தனிக் குழுக்களாக தங்கள் வட்டாரங்களில் ஆக்கவேலைகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும் கூறுகிறது. இவ்விருவகைக் கொள்கைகளிலும் ஓர் அளவிற்கு உண்மை இருந்தாலும் இருக்கலாம். அவை இரண்டும் ஒன்ளுெடு மற்ளுென்று தொடர்பற்றவை அன்று. போர்த்து துறை முகத்திலிருந்து ஆங்கிலக் கால்வாய் வரை சாக்சானியர் கைப் பற்றுவதற்கு முயன்ற பொழுது வேறுபட்ட பல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்குத் தேவையான நேரமும், இடமும் வாய்ந்திருந் தன. ஆனல், அந்நிகழ்ச்சிகளைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரி யாது என்னும் உண்மையை ஒப்புக் கொள்ளுவதே அறிவு டைமையாகும்.

படையெடுப்பாளர்களின் கூட்டங்கள் சிறியதாகவோ பெரியதாகவோ இருந்திருந்தாலும், அவர்கள் ஒன்றுபட்டோ, தனித்தோ அழிவு வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் அதைப் பற்றிய கவலை நமக்கில்லை. ஆனல், அவர்கள் இங்கிலாந்தில் செய்துள்ள அழிவு வேலைகள்தான் நம்மை வியப்பில் ஆழ்த்து கின்றன.

வெல்ஷ் கிறிஸ்துவ மரபு வழிச் செய்திகளை, குருதேவர் கில் டாஸ் (Gildas) பின் வருமாறு சுருக்கித் தந்துள்ளார்:

'ஒவ்வொரு குடியேற்றமும் படையெடுப்பாளர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. அங்கு வாழ்ந்த மக்களையும் திருச்சபைக் காவலர்களையும் குருமார்களையும், மற்ளுேரையும் அவர்கள் கொன்று குவித்தனர். நாடெங்கும் வாளின் ஒளி மின்னல் போல் ஒளிவிட்ட நேரத்தில் வெடிப்பொலியோடு தீயின் நடனம் வானைத் தீண்டித் தழுவலாயிற்று. நடுத்தெருக்களில் எல் லாம் கோபுரங்களின் மேற்பகுதிகள் இடிந்து வீழ்ந்த வண் ணம் இருந்தன; புனிதமிக்க பலிபீடங்கள் சிதறுண்டு கிடந்தன; முடமான உடல்கள் இவற்றிடையே சிக்கிச் சீரழிந்தன. கொடு மையின் கோரதாண்டவம், கண்டாரை மெய்சிலிர்க்கச் செய்யும் தன்மையது. பிணங்களில்எல்லாம் காய்ந்துபோன குருதிக் கறைகள் காணப்படுகின்றன. கரும்பினைச் சாறு பிழிந்ததைப் போன்று பிணங்களிலிருந்து பெருகிய பச்சை இரத்தம் ஆருக ஓடியது. இத்தகைய கொடுமைக்காளான மக்களுள், உயிரு டன் இருந்த சிலர் உயிர்தப்பிப் பிழைக்கலாம் என்று அக்கம்பக்கங்களில் இருந்த குன்றுகளை நாடி ஓடினர். ஆனல், வேறு சிலர் பசியாலும் பட்டினியாலும் வாடி வதங்கினர்; பலர் பஞ்சத்தால் மாண்டனர்; சிலர் இவற்றிற்கெல்லாம்

இரையாகாது உயிர் பிழைத்திருந்தனர். சிலர், பகைவரிடத்துப் புகலடைந்து வாழ்ந்து வாழ்நாளெல்லாம் அடிமைகளாக அல்லலுற்றனர்.....................மற்றவர் வெறுப்போடு அழுது கொண்டே கடல் கடந்து வெளிநாடுகளுக்குச் சென்றனர்.'

ரோமானிய நகரங்களும், நாட்டுப்புற மாளிகைகளும் நாடெங்கிலும் ஒன்றுகூட விடப்படாமல் அழித்தொழிக்கப்பட்டன. பழங்காலத்திய ஆங்கில-சாக்சானியர் நகரங்களில் வாழ்ந்தவர் அல்லர். அடிமைகளை அயல் நாடுகளுக்குக் கொண்டுசென்று விற்பதைத் தவிர, வேறு எத்தகைய வாணிகத்திற்குரிய இயல்பூக்கங்கள் அவர்களிடத்து இருந்ததில்லை. நாட்டின் உட்பகுதிகளில் நல்ல பண்ணை நிலங்களைக் கைப்பற்றிப் பயிரிடத் தொடங்கிய சிறிது காலத்திற்குள், அவர்கள் தங்களுடைய பழைய கடலக வாழ்வின் பண்புகளை மறந்துவிட்டனர். அவர்கள் பெரிய நாட்டுப்புறச் சூழல்களில் அமைக்கப்பட்ட பட்டணங்களில் வாழ விரும்பியதும், திறந்த வெளி வேளாண்மை (Open-field system) முறையில் ஊரிலுள்ள நிலங்களைத் தாங்களே உழுது பயிரிட்டமையும் அவர்களுடைய நாகரிக வாழ்வின் சிறப்பியல்புகளாகும். இவையே புதிய ஆங்கில நாகரிகத்தின் சிறந்த அடிப்படையாகும். இவ்வுணர்ச்சியினால் உந்தப்பட்டு அவர்கள் தங்கள் தலைவனின் மரமன்றத்தைச் (Log-Hall) சுற்றிலும் வரிசை வரிசையாகத் தங்களுக்கு மரத்தினால் வீடு கட்டத் தொடங்கினர். காட்டிலிருந்து வெட்டப்பட்ட வைரம் பாய்ந்த மரத்துண்டுகள் ஒன்றையடுத்து ஒன்று செங்குத்தாக நடப்பட்டன. இவ்வாறு சுற்றுப்புறச் சுவர்கள் கட்டப்பட்டன. காட்டு மரங்கள் ஏராளமாகக் கிடைத்தமையாலும், ஆங்கில-சாக்சானியர் சோம்பேறிகளாக வாழாமையாலும், மரங்களைக் கொண்டே வீடுகள் கட்டினர்.[1] இத்தகைய வீடுகளிலேயே அவர்கள், கடலுக்கு அப்பாலிருந்த தங்களுடைய தாயகத்திலும் வாழ்ந்திருக்கவேண்டும். எனவேதான், தற்கால வசதிகளைக் கொண்டிருந்த நேர்த்தி மிக்க நாட்டுப்புற மாளிகைகளையும், பட்டண மாளிகைகளையும் கைப்பற்றித் தாங்கள் வாழாது அவற்றை இடித்தழித்தனர். அவர்கள் வெட்டப்பட்ட ஓக்கு (Oak) மரத் துண்டுகளிலிருந்து வீசும் நறுமணத்தையும் அதிலிருந்து பெறும் ஊற்றின்பத்தையும் பெரிதும் விரும்பினர்.

[1] எப்பொழுது வைரமேறிய காட்டு மரங்கள் கிடைப்பது அருமையாகப் போயிற்றோ, அது முதல் பாதி மரச் சட்டங்களைக் கொண்டும் பாதி மலிவான வேறு பொருள்களைக் கொண்டும் சாக்சானியர் வீடுகள் கட்டினர்.

பார்க்க : **Baldwin Brown Arts in Early England I, 26, 37-42.**

'ரோமானியரின் நாட்டுப்புற மாளிகைகள் ஒன்றில் கூட சாக்சானியர் வாழ்ந்ததில்லை' என்று அறுதியிட்டுக் கூறுவர் ஆராய்ச்சியாளர்.[1] ஆனால், காலமும், தொல் பொருளாராய்ச்சியாளரின் மண் வெட்டியும்தான் இத்தகைய கருத்துகளை மெய்ப்பிக்க வேண்டும். நாட்டுப்புற மாளிகைகளில் சாக்சானியர் வாழாததைப் போன்றே அவர்கள் நகரங்களிலும் வாழவில்லை. புதிதாக வந்த படையெடுப்பாளர் கற்கோட்டைகளினுள்ளே தாங்கள் வாழ விரும்பவில்லை. அங்கு மற்றவர்களை வாழவிடவும் அவர்களுக்கு விருப்பமில்லை. இயற்கைச் சூழ்நிலைகளின் காரணமாகச் சிலசமயங்களில், அந் நகரங்களுள் சில முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்தன. அழிவில்லாத ரோமானிய நெடுஞ்சாலைகள் ஒருங்கே வந்து கூடும் இடத்தில் இருந்த நகரங்களைச் சாக்சானியர் நிலையாகப் புறக்கணிக்க முடியாதவர்களாக இருந்தனர். நாளடைவில் செஸ்டர், பாத், காண்ட்டர்பரி போன்ற நகரங்கள் மீண்டும் மக்களின் உறைவிடங்களாகச் சிறப்புற்றன. லண்டன் மாநகரும், லிங்கனும், யார்க்கும் எப்பொழுதாகிலும் முற்றிலும் புறக்கணிக்கப் பட்டதா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆயினும் அவை சில தலைமுறைகளேனும் மக்கள் நடமாட்டமில்லாத அல்லது முக்கியமற்ற சிற்றூர்களாக இருந்திருக்க வேண்டும் என்பது மட்டும் உய்த்துணரக் கிடக்கிறது. ரோமானிய நெடுஞ்சாலைகளின் சந்திப்பும் ஆற்று வழிகளின் சந்திப்பும், நாகரிகம் மீண்டும் வளர்ச்சியுறத் தொடங்கிய காலத்தில் லண்டன் மாநகரையும், கேம்பிரிட்ஜையும், வேறு பல நகரங்களையும் சிறப்புற்று விளங்குமாறு செய்தன. ரோமானியரின் படைப்புகளை—பணிகளைக் காலமும் காட்டுமிராண்டித்தனமும் நிலையாக அழித்தொழிக்க முடியாமற் போனது சிறப்புமிக்க செய்தியாகும்.

ஆனால், சில்செஸ்டரிலும் (Cilchester), உராக் சீட்டாரிலும் (Wroxeter), வெருளாமியத்திலும் வேறு பல நகரங்களிலும் சாக்சானியரின் அழிவு வேலைகளுக்குப் பிறகு மக்கள் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. ஆற்றின் அக்கரையில் வெருளாமியத்திலிருந்து அரைக்கல் தொலைவில் இக்காலத்தில் செயிண்ட் ஆல்பன்சு (St. Albans) நகரம் இருக்கிறது. அப்பழைய நிலப்பகுதி வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளதைப் போன்று காணப்படுகிறது. இக்காலத்தில் அங்கு வயல்களாகவும், புல்வெளிகளாகவும், சதுப்பு நிலங்களாகவும் உள்ள பகுதிகளில் அடிக்கடி, நாட்டுப்புற மாளிகைகளும், நகரங்களும் தொடர்ந்து

[1] Haver field : Roman Occupation (1924), P. 274.

அகழ்ந்தெடுக்கப் படுகின்றன. ஸ்டுவர்ட்டு (Stuart) மன்னர்கள் காலத்தில் கூரையில்லாது மடாலயங்கள் காட்சி தந்ததைப் போல அழிவுற்ற ரோமானிய மாடமாளிகைகளின் சின்னங்கள் சிறிது காலத்திற்கு அப்படியே நாட்டில் போற்றுவாரற்றுக் கிடந்திருக்க வேண்டும். பகற் பொழுதில் அவை கல் வெட்டி எடுக்கும் இடங்களாக மக்களுக்குப் பயன் பட்டிருக்கலாம். இராக் காலத்தில் தங்கள் முதாதையர் கொன்று குவித்த கெல்ட்டிக்கு இன மக்களின் சீற்ற மிக்க ஆவிகள், பேய், பிசாசுகளாக அங்கு அலைந்து திரிவதாகச் சாக்சானியரின் உள்ளங்கள் அவர்களைக் கற்பனையால் கலங்குமாறு செய்திருக்கலாம். அழிக்கப் பட்ட பெரும்பான்மை இடங்களை மீண்டும் மக்கள் வாழ்க்கைக் குரியதாக அமைத்துக் கொள்ளாமைக்குச் சாக்சானியருடைய அச்சமே காரணமாக இருந்திருக்கவேண்டும். இறந்தோர் தங்கள் போர்வை உடைகளோடு (Togas) தோன்றித் தங்களை அச்சுறுத்தி அலைக்கழிப்பர் என்று அஞ்சிய காரணத்தினுல் தான், சாக்சானியர் அவ்விடங்களில் அடியெடுத்தும் வைக்க வில்லை போலும்.


முதன்முதலாகப் பெருக்கெடுத்த, மிகக் கொடிய காட்டு மிராண்டித்தனமாகிய அழிவுவெள்ளம் கி. பி. ஆறும் நூற்றுண்டில் மெல்ல மெல்ல எழுச்சியற்றுத் தணியலாயிற்று. அதே காலத்தில் இங்கிலாந்தின் மேற்குப் பகுதி எவ்வளவுதான் பாழுடையுமாறு செய்யப்பட்டாலும், அப்பகுதி கெல்ட்டிக்கு இன மக்களின் ஆதிக்கத்திலேயே இருந்துவந்தது. நார்த்தம் பிரியப் பெர்னீசியா (Northumbrian-Bernicia)-விலிருந்து வெஸ்ஸக்ஸ்வரை வரிசையாகத் தனித்தனியான, ஆனல் சங்கிலித் தொடர்போன்று பல ஆங்கில-சாக்சானிய அரசுகள் தோன்றின. பல நூற்றுண்டுகள் அவ்வரசுகள் தங்கள் எல்லைப் புறங்களை அடிக்கடி பல உருவங்களைக் காட்டும் கண்ணுடிக் (Kaleicloscope) கருவி போன்று மாற்றிக் கொண்டிருந்தன. தென் கிழக்கு இங்கிலாந்திலுள்ள எசக்ஸ் (Essex), சஸ்சக்ஸ் (Sussex), கெண்ட்டுப்போன்ற பல கோட்டங்களின் பெயர்களும், நிலைகளும் பண்டைக் காலத்திய அரசுகளின் பெயர்களை நினைவு படுத்துகின்றன.

இவ்வாறு தோன்றிய பண்டைச் சாக்சானிய அரசுகள் திரும்பத்திரும்ப தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டிருந்தன.

இவற்றிற்கிடையே கொடிய வெல்ஷ்[1] (Welsh) இன மக்களோடும் சாக்சானியர் தொடர்ந்து போரிட்டு வந்தனர். இந்த வெல்ஷ் மக்களும் எப்பொழுதுமே தங்களுக்குள் ஒருவரையொருவர் அழித்தொழிக்க முயன்று வந்தனர். நாம் கில்டாசின் (Gildas) வரலாற்றுக் குறிப்புகளை நம்புவோமானால், ஆர்தரின் ஆட்சிக் காலத்திய ரோமானியப் பிரிட்டானியர், தங்களுக்குள்ளே இருந்துவந்த பழம்பகையினாலும், தங்கள் தலைவர்களின் கொடிய செயல்களினாலும் வஞ்சிக்கப்பட்டனர் என்று கருத வேண்டியிருக்கிறது. ரோமானியரின் செல்வாக்கு இங்கிலாந்திலிருந்து நீங்கியவுடன், கெல்ட்டிக்கு இனமக்களின் காட்டுமிராண்டிப் பண்புகள் புத்துயிர்பெற்றன. அவற்றோடு கெல்ட்டிக்கு மக்களின் ; தங்களுக்குள்ளே போரிட்டு மடியும் மனப் பண்பும் எழுச்சியுற்றது. இப்பண்பு சாக்சானியரின் படையெடுப்பு முழு வெற்றி பெறுவதற்குப் பேருதவி புரிந்தது என்பர் பீடு.

பண்டை ரோமானியப் பேரரசின் சிறப்புமிக்க மாநிலமாக விளங்கிய இங்கிலாந்தின் ஒற்றுமையும், அமைதியும் குலைக்கப்பட்டமையே சாக்சானியர் படையெடுப்பினால் விளைந்த பயனாகும். பிரிட்டன் கி. பி. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் எடுத்ததற்கெல்லாம் போர் புரியும் பழங்குடி மக்களையும், அரசுகளையும் கொண்ட குழப்பம் நிறைந்த நாடாக இருந்திருக்க வேண்டும். இத்தகைய கண்டிப்பும், கட்டுப்பாடுமற்ற அரசுகளினுள்ளே குடும்பங்கள் ஒவ்வொன்றும் தங்கள் பழம்பகை காரணமாக ஒன்றையொன்று எதிர்த்துப்போரிட்டு மடிந்து கொண்டிருந்தன. சிற்சில சமயங்களில் தாழ்ந்தவெளி ஊர் நீதிமன்றங்களில் (Folk-moot) இழப்பீட்டைப் பகைவர்களிடம் இருந்து அக்குடும்பங்கள் பெற்றுக் கொண்டன. அதன் மூலம் கொலைகளுக்கு முடிவுகாணமுடியும் என்ற நம்பிக்கையை மக்கள் கொண்டிருந்தனர். தனியார்களுக்குள்ளே போருண்டாதலும், பொது மக்களிடையே போருண்டாதலும் அக்காலத்திய நியதியாக இருந்தது: போர் விதிவிலக்காகக் கருதப்படவில்லை. இத்தகைய குழப்பங்களுக்கு இடையே ஆழமான அடிப்படை அமைக்கப்பட்டது.

[1] சாக்சானியர் ஸ்டிராச்கிளைடிக்கும் (Stratchclydey), வேல்சுக்கும், டேவோனியன் தீபகற்பத்திற்கும் (Devonian Peninsula) இங்கிலாந்தின் பழங்குடி மக்களினத் தலைவரை விரட்டி யடித்தனர். அவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட பழங்குடி மக்கள் இனத்தவரை வெல்ஷ் (Welsh) கள் என்று சாக்சானியர் பெயரிட்டு அழைத்தனர். இது முதல் யானும், அப்பெயரையே பொதுப்படையாக இங்கிலாந்தின் பழங்குடி மக்களைக் குறிப்பிடப் பயன்படுத்துகிறேன்.




படம் 6.

ஏழரசு காலத்திய இங்கிலாந்து

ஆங்கில - சாக்சானியர் தங்கள் படையெடுப்புகளில் மேலும் மேலும் வெற்றி பெற்றுவந்தனர். அதனால் இங்கிலாந்தின் பெரும்பகுதியைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வந்தனர். தாங்கள் கைப்பற்றிய புதிய பகுதிகளில் ஏராளமாகத் தங்கள் மகளிரையும், குழந்தைகளையும், உற்றாரையும், உறவினரையும் தாயகத்திலிருந்து கொண்டு வந்து குடியேற்றினர். தாங்கள் நெடுங்காலமாக வாழ்ந்த நாட்டினை முற்றிலும் காலி செய்து விட்டு, 'ஆங்கிலிக இனத்தைச்' சார்ந்த மக்களனைவரும் இங்கிலாந்திற்குக் கடல் வழியாக வந்து குடியேறினர் என்னும் மரபு வழிச் செய்தி பீடு (Bede) வின் காலத்தில் மக்களிடையே உலவியது. இத்தகைய குடியேற்றத்திற்குத் தலைவனாக இருந்தவன் முதலாம் ஒப்பா(Offa I) என்னும் அரசனாவான். அவன் ஆங்கிலேயே இனத்தின் தலைவனாவான். அவனைப் பற்றியும், அவனுடைய குடும்பத்தைப் பற்றியும் எண்ணற்ற கதைகளும், நாட்டுப் பாடல்களும் நாட்டிலே வழங்கிவருவதை நாம் அறிவோம். ஒப்பா ஸ்கிலீஸ்விக்கிலுள்ள (Schleswig) தன்னுடைய பழைய அரசான 'ஏன்றி'லியிலிருந்து இங்கிலாந்திற்குக் குடியேறினான். இங்கு மெர்சியா (Mercia) பகுதியில் அவன் ஓர் அரசினை நிறுவி ஆளத் தொடங்கினான். இவ்வாறு ஆங்கில-சாக்சானியர் 'ஆங்கிலி நாட்டிற்குத்' (Engle–land) தங்கள் தாய்நாட்டை விட்டு விட்டு வந்து குடியேறியவுடன், டேனியர்கள் இக்காலத்தில் டென்மார்க்கு எனப்படும் சாக்சானியர் நாட்டுக்குப் பேரளவில் ஸ்வீடனிலிருந்து புறப்பட்டு வந்து, அங்குக் குடியேறினர். அக் காலத்திய காட்டு மிராண்டிகளின் இடப் பெயர்ச்சிகளுள், பல்லாயிரக்கணக்கான குடும்பங்களை டென்மார்க்கின் தெற்குப் பகுதியிலிருந்து, இங்கிலாந்திற்குக் கடலினைக் கடந்து குடியேற்றியது மாபெரும் சாதனை யாகும். அவர்கள் கடலினைக் கடப்பதற்குப் பயன் படுத்திய போர்க்கப்பல்களில் பல தளங்கள் இருந்ததில்லை. அத்தகைய கப்பல்களில் கடற் பயணம் செய்து, புதிய நாட்டில் குடியேறிய சாக்சானிய-மகளிரின் உள்ள உரத்தையும், வீரவுணர்வையும் நினைத்தால் நமக்கு வியப்புண்டாகிறது.

அக்காலத்தில் நடைபெற்ற எண்ணற்ற, நார்டிக்கு இன மக்களின் படையெடுப்புகளினால் வேறு நாடுகளில் உண்டாகாத ஒரு சிறந்த மாற்றம் இங்கிலாந்திலுள் உண்டாயிற்று. ஆங்கிலக் குடியேறிகளின் காட்டு மிராண்டித்தனமான அழிவுச் செயல்களோடு இணைந்த குடியேற்ற ஆற்றலும் சேர்ந்து, இங்கிலாந்தின் பழங்குடி மக்களின் நாகரிகத்தையும், இனத் தொகுதியையும் மாற்றியமைத்தது. இத்தாலியின்மீது படையெடுத்துச் சென்ற கோத்துகளும், லம்பார்டியரும், காலின்மீது படை

யெடுத்துச் சென்ற பிராங்கியர்களும் நகர வாழ்க்கையையோ, கிறிஸ்துவ சமயத்தையோ, கைப்பற்றப்பட்ட மக்களின் இலத்தீன் மயமாக்கப்பட்ட மொழியையோ அழித்தொழிக்கவில்லை. ஆனால், சாக்சானிய இங்கிலாந்தில், பண்டைப் பழங்குடி மக்களின் பகுதிகளோடும், ரோமானிய ஆட்சியின் வரம்புகளோடும் ஒருங்கு சேர்த்து நகர வாழ்க்கையும், கிறிஸ்துவ சமயமும், ரோமானிய-கெல்ட்டிக்கு மொழியும் ஆகிய அனைத்தும் அடியோடு அழிக்கப்பட்டன. நகரங்களும், ஊர்களும் இருந்த இடங்கள் முழுவதும் மாற்றப்படவில்லை. என்றாலும், பொதுவாகப் பெரும்பான்மையான இடங்கள் மாற்றத்திற்குள்ளாயின. அவற்றின் பெயர்கள் பத்தில் ஒன்பது சாக்சானிய மொழிப் பெயர்களாக மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இன மாற்றம் முற்றிலும் முடிவுற்றதாக ஓரளவிற்கு உயர்வுநவிற்சியாகக் கூறப்பட்டாலும், மேற்கண்ட மாற்றங்களை ஒன்று சேர்த்து நோக்குகிற பொழுது, அவை இனப்பண்பாட்டில் உண்டான மாபெரும் மாற்றத்தினை உணர்த்துகின்றன.

ரோமானியப் பிரிட்டிஷ் நாகரிகத்திற்கு இழைக்கப்பட்ட தீங்கினை, மற்றொரு பக்கத்தில் உயர்வுநவிற்சியாக மொழிவது சிறிது துன்பமாகவே இருக்கிறது. இருவகைக் காட்டுமிராண்டி மக்களுக்கு இடையே அந் நாகரிகம் சிக்கிக்கொண்டமையால், அழியத்தொடங்கியது. ஒருபக்கத்தில் சாக்சானியப் படையெடுப்பாளர்கள் அந்நாகரிகத்தை அழித்தொழிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். மற்றொருபக்கத்தில் கெல்ட்டிக்குப் பழங்குடி மக்களின் புத்துயிர்ப்பால், ரோமானிப் பிரிட்டிஷ் நாகரிகம் நலிவுற்றது. ரோமானிய நாகரிகம் இங்கிலாந்தின் தாழ்நிலப்பகுதிகளைச் சார்ந்த மாவட்டங்களிலேயே தழைத்து விளங்கியது. அப்பகுதிகளையே சாக்சானியப் படையெடுப்பாளர்கள் குறிவைத்துத் தாக்கிக் கொடிய அழிவு வேலைகளைச் செய்தனர். கெல்ட்டிக்கு மக்கள் அவர்களுடைய பண்ணைகளிலும், நகரங்களிலும் இருந்து விரட்டப்பட்டனர். எனவே நாகரிகச் சிறப்பு வாய்ந்த கெல்டிக்குப் புகலிகள் வெல்ஷ் மலைப் பகுதிகளிலும் கார்னீஷிய சதுப்புநிலங்களிடையேயும் சென்று தஞ்சம் அடைந்தனர். அப் பகுதிகளில் வாழ்ந்த தங்களைக் காட்டிலும் நாகரிகம் அற்றவர்களாக இருந்த தங்கள் பங்காளிகளான கெல்ட்டிக்குப் பழங்குடி மக்களோடு மீண்டும் தொடர்பு கொள்ளலாயினர். அதன் பயனாக இவர்களும் தங்களுடைய நாகரிகத்தின் நற்கலைகளையும், பழக்க வழக்கங்களையும் ஓரிரு தலைமுறைகள் மறந்தே போயினர். தங்கள் பங்காளிகளான சாக்சானியர் காட்டு மிராண்டிகளாக இருப்

பதைக் கண்டு, எள்ளி நகையாடிய இவர்களே, இவ்வாறு மீண்டும் தாங்கள் அடைந்திருந்த நாகரிக முன்னேற்றத்தில் பின் வாங்கினர். ரோமானியர் வளர்த்த தொழிற் கலைகள், அறிவியல், கல்வி முறை ஆகிய அனைத்தையும் இங்கிலாந்து இழக்கலாயிற்று. இதுவே சாக்சானியரின் படையெடுப்பால் விளைந்த முதல் தீமையாகும். மக்கள் தொகை கணிசமான அளவிற்குக் குறையலாயிற்று. அவ்வாறே உழுது பயிரிடப்பட்டு வந்த நிலத்தினுள் பெரும் பங்கு உழுவாரற்றுத் தரிசு நிலமாக மாறியது. அங்கு உயிர் தப்பி வாழ்ந்த கெல்ட்டிக்குகளும், படையெடுத்து வந்த சாக்சானியர்களும் ஏறக்குறைய ஒரே வகையான கொடிய காட்டு மிராண்டிப் பண்புடையவர்களாகவே இருந்தனர். ஆயினும், சாக்சானியர் தாழ் நிலங்களில் தங்கி வாழ்ந்தமையால், அவர்கள் தங்களுடைய தனிப் பண்புகளைக் கொண்டு புதியதொரு நாகரிகத்தினைப் போற்றி வளர்க்கலாயினர். நாளடைவில் அந் நாகரிகம், வெல்ஷ் மலைவாழ்மக்களின் நாகரிகத்தைக் காட்டிலும் சிறப்புடையதாக விளங்கலாயிற்று. கெல்ட்டிக்கு இனமக்கள் காட்டு மிராண்டிகளாகவும், சாக்சானியரை நாகரிகம் அடைந்தவர்களாகவும் மாற்றுவதற்குக் காரணமாக இருந்த நிலவியல், வரலாற்றின் போக்கைத் தலைகீழாக மாற்றிவிட்டது.

இங்கிலாந்தின் வளமிக்க மாவட்டங்களிலிருந்து வெல்ஷ் (Welsh) மக்கள் வெளியேற்றப்பட்டமைக்கு அவர்களுடைய மனப் போக்கே ஓரளவிற்குக் காரணமாகும். அவர்கள் நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கிய ரோமானியரைத் தங்களை விட உயர்ந்தவர்களாகக் கருதி, அவர்களுக்கு அடிபணிந்து வாழ இசைந்தனர். ஆனால், இந்தக் காட்டுமிராண்டிகளான சாக்சானியப் படையெடுப்பாளர்களைத் தங்கள் தலைவர்களாக ஏற்றுக் கொள்ள இவர்களுடைய மனம் இடம் தரவில்லை. எனவே, இறுதி வரை சாக்சானியரை எதிர்த்துப் போரிட்டுச் சாவதே மேல் என்று கெல்ட்டுகள் கருதினர். அல்லது காளிய மக்கள் அர்மோரிக்காவில் (Armorica) அமைத்துள்ள புதிய பிரிட்டனியில் (New Brittany) சென்று குடியேற விரும்பினர். அதற்காக எவ்வாறாகிலும் கடலைக் கடந்து சென்று விடுவது நல்லது என்று முயன்றனர். வேறு சில கெல்ட்டிக்கு இனமக்கள், வேல்ஸ் மாவட்டத்திலுள்ள கொடிய மலைகளில் மறைந்து வாழலாயினர். வெல்ஷ் மக்கள் சாக்சானியரை மிகவும் வெறுத்தனர். அதனால்தான் அவர்களை கிறிஸ்தவர்களாக மாற்றுவதற்குக்கூடச் சிறிதும் முயலவில்லை. இவ்வாறு தங்களைப் புறக்கணித்தமைக்காக பீடு (Bede) வின் காலத்தில் வாழ்ந்த சாக்சானியர், வெல்ஷ் மக்களைக் குறைகூறி வந்தனர். தங்களை வேண்டுமென்றே வெல்ஷ் மக்கள் புறக்

கணித்து வந்தனர் என்பதைச் சாக்சானியர், தங்களுக்கு ரோமாபுரியிலிருந்தும் ஸ்காட்லாந்திலிருந்தும் இயேசுவின் புதுமைச் செய்தி வந்த பொழுது, இங்கிலாந்தில் செவர்னுக்கு அப்பாலிருந்து அச் செய்தி வராமையால் உணர்ந்தனர். வெறி பிடித்த சாக்சானியப் படையெடுப்பாளர்களின் கொடுமையினின்று, தப்பிச் செல்லுவதற்கு 'டிரேல்' எனப்படும் வெல்ஷ் மக்களின் குடிசைகள் மிக உதவியாக இருந்தன. அவர்கள் தங்கள் குடிசைகளை எளிதில் பெயர்த்துக் கொண்டு நெடுந் தொலைவில் உள்ள மலைப் பகுதிகளுக்குச் சென்று வாழலாயினர். வெல்ஷ் மக்கள் நிலத்தொடு கொண்டிருந்த உறவு, தம் இனத்தொடு கொண்டிருந்த உறவை காட்டிலும் உறுதியற்றதாக இருந்தது. அதனால் தான், அவர்கள் தாங்கள் வாழ்ந்த நிலப்பகுதிகளிலிருந்து, தாங்கள் விரும்பும் வேற்று நிலங்களுக்குத் தங்களினத்தோடு அடிக்கடி சென்று குடியேறி வந்தனர்.

முதன் முதலில் சாக்சானியர் கொடிய முறையில் இங்கிலாந்தினுள் நுழைந்தமை தடுத்து நிறுத்தப்பட்டது. பிறகு, சாக்சானியர்களுக்கும், வெல்ஷ் மக்களுக்கும் இடையே அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சியைப் போல, எல்லைப்போர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. நெடுங்காலம் தொடர்ந்து நடந்த இப்போரில் குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்ச்சிகள் சில உள்ளன. செவர்ன் ஆற்றுக் கழிமுகத்தின் அருகில், வெஸ்ஸக்ஸைக் சார்ந்த ஆங்கிலேயர்கள் அவ் இடுக்கான இடத்திலிருந்து வெளியேறினர். கி. பி. 577-ல் அவர்கள் கிளௌசெஸ்டர் ஷையரிலுள்ள டியோராம் (Deorham), என்னுமிடத்தில் வெற்றி பெற்றனர். அதன் பிறகு இவ் இடப் பெயர்ச்சி நடைபெற்றதாகக் கூறுவர். கி. பி. 613-ல் ரோமானியப் படைத்தளமாக விளங்கிய செஸ்டர் (Chester) நகரின் பாழிடத்தில், மீண்டும் வெற்றி பெற்றனர். அதன் பிறகு நார்த்தம்பீரியாவைச் சேர்ந்த ஆங்கிலேயர்கள் மெர்சி, டீ என்னும் ஆறுகளின் கழிமுகங்களுக்குச் சென்று குடியேறினர். இவ்வாறு ஐரிஷ் கால்வாயின் இவ்விரு இடங்களிலும் சாக்சானிய அரசு நிறுவப்பட்டது. அதனால் ஸ்டிராத் கிளைடி (Strath Clyde), வேல்சு, டேவோனியன் தீபகற்பம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த வெல்ஷ் மக்களைத் தொடர்பற்றவர்களாக வாழுமாறு செய்தனர். மேலும், இதனால் சமவெளியில் வாழும் மக்களோடு எத்தகைய உறவும் கொள்ள முடியாமற் போயிற்று. இவ்வாறு இவை மூன்றும் தொடர்பற்ற கெல்ட்டிக்கு இன மக்களின் காட்டு மிராண்டித் தனத்தின் தனித்த பகுதிகளாகத் திகழ்ந்தன.

இவ்வாறு பல நூற்றாண்டுகள் இடைவிடாது சாக்சானியர்கள் படையெடுத்து வந்தனர். அவர்களுக்குப் பிறகு ஸ்காண்டிநேவியர்கள் தொடர்ந்து படையெடுத்து வந்து இங்கிலாந்தின் பெரும் பகுதியைக் கைப்பற்றினர். இவ்விரு இனத்தவரும் செஸ்ஷையர் (Cheshire), லங்காஷையர், கம்பர்லாந்து, வெஸ்ட் மோரிலாந்து (West moreland), செவர்ன் ஆற்றுப் பள்ளத்தாக்கு, சாமர்செட்டு முதலிய பகுதிகளிலும், இறுதியாக டேவோனிலும் நிலையாகத் தங்கி வாழ்ந்தனர். ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகளில்தான், டேவோனில் முற்றிலும் சாக்சானியர்களால் குடியிருப்புகள் அமைக்க முடிந்தது. ஆனால், இக்காலத்திற்குள் சாக்சானியர் பையப்பைய நாகரிகத்தில் வளர்ச்சியுற்று வந்தனர். வெல்ஷ் மக்களும் அவர்களுடன் நெருக்கமாகப் பழகி வந்தனர். ஆங்கிலேயரின் முன்னேற்றம் முடிவடைவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, இவ்விரு பக்கங்களும் கிறிஸ்துவ மயமாயின. எனவே, இந்த மேற்கு மாவட்டங்களில் கெல்ட்டிக்கு இனமும், பண்பாடும், பழக்க வழக்கங்களும் பேரளவில் இன்றுவரை நின்று நிலவலாயிற்று. ஆனால், காரன்வாலிலும், கைப்பற்றப்படாத வெல்ஷ் மலைப் பகுதிகளிலும்தான் கெல்ட்டிக்கு மொழியும், நாகரிகமும் மேம்பாடுடையதாக இருந்து வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நார்ட்டிக்கு இன மக்களுடைய உடலில் எத்துணை விழுக்காடு கெல்ட்டிக்கு மக்களின் குருதி கலந்திருக்கிறது என்பதை வரையறுத்துக் கூறமுடியாது. ஆனால் இங்கிலாந்தின் வடக்குப் பகுதிக்கும், தெற்குப்பகுதிக்கும் பொதுவாகப் பொருந்திவரக்கூடிய விதியொன்றை வகுத்துரைக்கலாம். அதாவது, நாம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லுவோமானால், நாம் முதலில் நார்ட்டிக்கு இனக்குருதி மிகுதியுடைய மக்களைக் காணலாம். அதன் பிறகு படிப்படியாக கெல்ட்டிக்கு இனக் குருதி மிகுதியுடைய மக்களைப் பல நிலைகளில் நாம் சென்று அடையலாம். ஆயினும், இதற்குச் சில விதிவிலக்குகள் உள்ளன. ஹெர்ட்போர்ட்ஷையரிலும், காட்டுப் பகுதியிலும் வெல்ஷ் மக்களின் குடியிருப்புகள் பல உள்ளதைப் போல், கிழக்குப் பகுதிக்குப் பின்னால் வெல்ஷ் மக்கள் குடியிருப்புகள் பல தனித்துள்ளன. வேல்சின் தெற்குப் பகுதியிலும், லங்காஷையரின் வடபகுதியிலும், கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்த வெல்ஷ் மக்களின் கூட்டத்தை வைக்கிங்குகள் (Viking) தங்கள் நெடுங்கப்பல்களைக்கொண்டு விரட்டியடித்தனர். அதைப் போன்று நார்ஸ் மக்கள் (Norse man) மேற்குக் கடற்கரை

யோரத்தின் எல்லையில் வாழ்ந்த வெல்ஷ்களை விரட்டியடித்துத் தங்கள் குடியிருப்புகளை அமைத்துக்கொண்டனர்.[1]

கிழக்குப் பகுதிக்கு அப்பாலுள்ள பழைய சாக்சானிய குடியிருப்புகளில் காணப்படுவதைவிட, வெஸ்ஸெக்ஸிலும், மெர்சியாவிலும் ஏராளமாக வெல்ஷ்கள் உயிர் வாழுமாறு விடப்பட்டிருந்தனர். ஆனல் அப்பகுதியில் வழங்கி வந்த மொழி முற்றிலும் மாற்றப்பட்டு விட்டமை குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் டாமர்செட்டும், சாமர்செட்டும், வெஸ்ஸெக்ஸின் உட்பிரிவுகளாக இருந்தன. அங்கு கி. பி. 693-ல் சாக்சானிய அரசர் ஐனே (Ine) வெல்ஷ் மக்கள் (Welsh man) எனப்பட்ட ஒரு தனி இனத்தவரின் உரிமைகளை ஏற்றுக்கொண்டார். அவர்கள் சிற்சில சமயங்களில் நிலக்கிழார்களாகவும், அரசாங்கத்தின் படைத்துறைப் பணிமக்களாகவும் அக்காலத்தில் வாழ்ந்தனர் என்பதை அறிகிறேம். கெண்ட்டு; கிழக்கு ஆங்கிலியா போன்ற பகுதிகளிலும்கூட, வெல்ஷ் மக்களின் இனக் கூறுகள் பெண்களின் மூலமாக நார்ஸ் இனமக்களிடத்துக் கலந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஜூட்டியரும் (Jutish), ஆங்கில-சாக்சானியரும் முதன் முதல் இங்கிலாந்திற்கு வந்த பொழுது, தங்களுடன் தங்கள் பெண்களையும் பேரளவில் உடன் அழைத்து வந்திருப்பர் என்று கூறுவதற்குப் போதிய சான்றுகள் இல்லை. அவர்களால் கைப்பற்றப்பட்ட வெல்ஷ் இனத்தவரின் பெண்களோடு கூடி இன்புற்றிருக்க

[1] லேக் மாவட்டம் (Lake District) இவ்வாறு அமைந்ததே யாகும். அதனுடைய இடப் பெயர்கள் பெரிதும் நார்ஸ் இனத்தொடர்புடையதாகும்; சிற்சில கெல்ட்டிக்கு இனமக்கள் தொடர்புடையனவாகவும் உள்ளன. ஆனல் ஆதி ஆங்கிலச் சாக்சானியருடைய மொழிப் பெயர்கள் ஒன்றுகூட அங்கு வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெரிதும் கி. பி. தொளாயிரத்திற்கும், ஆயிரத்திற்கும் இடையே தான், சோல்வே (Solway) வழியாக வைக்கிங்குகள் வந்தனர். லேக்லாந்தின் (Lake land) பள்ளத்தாக்குகளில் அவர்கள் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். அவர்களே முதன்முதலில் லேக்லாந்தின் பள்ளப் பகுதிகளிலுள்ள காடுகளை வெட்டி நாடாக்கினர். தண்ணீரை வடிகால்களின் வழியாக வடிந்து போகுமாறு செய்தனர். இன்று வரை அங்கு நிலையாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பண்ணைகளில் பயிரிட்டு வந்தனர். காட்டுப் பகுதிக்குச் செல்லும் பாதி வழியில் அம் மாவட்டத்தின் பழங்குடி மக்களான கெல்ட்டிக்குகள் சதுப்புநிலச் சமவெளிகளில் வாழ்ந்து வரலாயினர். ஒருவரும் இன்று வாழாத அப்பகுதிகளில், அவர்கள் வாழ்ந்தமைக்குரிய சான்றுகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் முழுவதும் அவ்விடத்தை விட்டு விரட்டியடிக்கப் படவில்லை; அழித்தொழிக்கப் படவும் இல்லை. அச்சதுப்பு நிலங்களில் அண்மைக் காலம் வரையில் செம்மறியாடுகள் கெல்ட்டிக்கு எண்மான முறையிலேயே எண்ணப்பட்டு வந்தன. நார்ஸிய உழவர்கள் அவற்றை இடையர்களின் அடிமைகளாக்கியிருந்தனர். W. G. Collingwood's Lake District. History 1925.

வேண்டும். அப்பெண்கள் வெற்றி பெற்றோரின் ஆண்டிரோமகி[1] (Andromache) களாக இருந்திருக்கலாம்.

படையெடுப்பாளர்களால் உயிருடன் விட்டு வைக்கப்பட்ட வெல்ஷ் மக்கள் எத்துணைப்பேர் என்னும் கேள்விக்குத் திட்ட வட்டமாக விடைகூற முடியாது. சாக்சானியர் காலத்திய இங்கிலாந்தில் பேசப்பட்ட மொழியில், புறக்கணிக்கத்தக்க வகையில், ஆறு வெல்ஷ் மொழிச் சொற்கள் கலந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. வெல்ஷ் மக்கள் உயிர் வாழ்ந்தமைக்கு இருந்துவந்த எதிர்ப்பினை அது குறிப்பாகக் காட்டுகின்றது எனலாம். மொழியைப் பேசிவருவதனால், அது எல்லாவற்றையும் மெய்ப்பிப்பதாகக் கொள்ளுவதற்கு இல்லை. இதற்குப் பள்ளிக்கூடங்களையும் அச்சு இயந்திரத்தையும் ஒரு சிலர் காரணமாகக் கூறலாம். ஆனால், கெல்ட்டிக்கு இனப் பண்பு மிகுதியுடைய தென்மேற்கு ஸ்காட்லாந்தில் வாழும் மக்கள், இடைக் காலத்திலேயே ஆங்கில மொழியைத் தங்களுக்குரிய மொழியாக ஏற்றுக் கொண்டனர் என்பதை நாம் மறத்தலாகாது. அவர்கள் ஆங்கில மொழியைத் தங்களுக்குரிய மொழியாக ஏற்றுக்கொண்ட காலத்தில் ஸ்காட்டியர் (Scots) கல்வியறிவில்லாப் பாமர மக்களாகவே இருந்தனர்.

இங்கிலாந்தின் இடப்பெயர்கள் அனைத்தும் நார்ட்டிக்குப் பண்புடையதாக இருந்து வருகிறது. வெல்ஷ் மக்கள் சாக்சானியர் படையெடுப்பிற்குப் பிறகு எங்கும் பரந்து பட்ட நிலையில் வாழவில்லை என்பதற்கு அதை மற்றொரு ஆற்றல் மிக்க சான்றாகச் சிலர் காட்டுவர். ஆயினும் இயற்கைப் பண்புகள்சிலவற்றிற்குரிய பழைய பெயர்களுக்கு மாற்றாகச் சாக்சானிய மொழிச் சொற்கள் கையாளப்பட்டன. சான்றாகப் பள்ளத் தாக்கு எனப் பொருள்படும் 'கூம்பே' (Coombe) என்னும் சொல்லினை, 'வாலிக்குப்' (Valley) பதிலாகப் பயன்படுத்தினர். மேலும் அவர்கள் குறிப்பிட்ட சிலமலைகளையும், ஓடைகளையும் 'பிரிடோன்' (Bredon) என்றும், எவோன் (Avon) என்றும் வழங்கலாயினர். சில மாவட்டங்களுக்குரிய பழைய ஆங்கில-சாக்சானியப்

[1] 'ஆண்டிரோமகி' கிரேக்க நாட்டுப் பழங்கதையில் சிறப்புற்று விளங்கும் ஹெக்டர் (Hector) என்னும் மாவீரனின் மனைவி. அவள் தீபசு (Thebes) நாட்டு அரசனின் மகளாவாள். ஹெக்டர் இறந்த பிறகு 'டிராய்' நகரம் வீழ்ச்சியுற்றது. அதனால் தன் கணவரைக் கொன்ற மாவீரன் எக்கிலசின் மகனான நியோப்டாலிமசிற்கு மனைவியாக்கப்பட்டாள். சில ஆண்டுகளுக்குள் அவளுடைய இரண்டாவது கணவனும் கொலை செய்யப்பட்டான் அதன் பிறகு அவள் ஹெலன்சு என்னும் வீரனை மணந்து வாழ்ந்தாள்.

பெயர்கள்கூட, கடந்த கெல்ட்டிக்கு இனப்பெயர்களாகவே உள்ளமை ஆராயத்தக்கதாகும். கெண்ட்டு (Kent) என்னும் மாவட்டப் பெயரும், லிண்ட்சே (Lindsey) என்னும் மாவட்டப் பெயரும் பெரிதும் சாக்சானிய மொழிச்சார்புடைய பெயர்களாகவே இருக்கலாம். வெல்ஷ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளுக்குப் புறத்தேயுள்ள ஊர்களின் பெயர்களும், குடியிருப்புகளின் (Home steads) பெயர்களும் முற்றிலும் சாக்சானிய மொழிப்பெயர்களாகவே உள்ளன. நார்ட்டிக்குப் படையெடுப்பாளர்கள் இப்பகுதிகளின் அமைதியைக் குறைத்து மறுமுறைக் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர் என்பதற்கு இது மிகச் சிறந்ததொரு சான்றாகும். ஆயினும், இங்கும் நாம் முன்எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஓர் ஆங்கில–சாக்சானியச் சொல்லின் விகுதி, கெல்ட்டிக்குச் சொல்லின் வேரினை மறைப்பதாக இருக்கலாம். இதற்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாக 'டிரம்பிங்க்டன்' (Trumpington), 'மாடிங்கிலே' (Madingley) என்னும் சொற்களின் அமைப்புகளைக் கூறலாம். வால்ட்டன் (Walton), வாலிங்க்டன் (Wallington), வால் வொர்த்து (Walworth), நார்ஸ் பிர்க்கிலி (Norse Birkly) போன்ற சொற்கள் முழுவதும் தூய சாக்சானியச் சொற்களாகும். அவையாவும் வெல்சுக்களின் அல்லது பிரிட்டானியரின் தாயகம் என்னும் பொருளையுணர்த்துவதாகக் கூறுவர்.

ஆங்கிலேயர்கள் சிறப்பாக நார்ட்டிக்கு இனத்தைச் சார்ந்தவர்களாவர். எனினும், அவர்கள் ஜெர்மானியரையும், ஸ்காண்டிநேவியரையும் போன்றில்லாமல், ஒரு கலவை இனமாகவே இருந்துவருகின்றனர். இவ்வினக் கலப்பு எத்துணை விழுக்காடு நார்ட்டிக்கு மக்களினத்தில் உண்டாகியிருக்கும் என்பதை இன்று நாம் அறுதியிட்டு உறுதியாகக் கூற இயலவில்லை. ஆயினும், இனக்கலப்பு உண்டானதைப்பற்றிச் சிறிதும் ஐயம் இல்லை. ஆங்கிலேயத் தாய் தந்தையருக்குப் பிறந்தவர்கள் என்று இன்று கூறிக்கொள்ளும் ஒவ்வோர் ஆங்கிலேயனுடைய உடலிலும் கெல்ட்டிக்கு இனக் குருதியும், ஐபீரிய மக்களின் இனக்குருதியும் ஓரளவிற்கு ஓடிக்கொண்டிருக்கின்றன என்று கூறின் அது தவறாகாது. அக்குருதிக் கலப்பு ஆங்கிலேயருடைய மனப்பண்பினை உருவாக்குவதில் பங்கு கொண்டிருக்கிறது என்பது மட்டும் உறுதி. தற்கால ஆங்கிலேயருக்கும், தற்கால ஜெர்மானியருக்கும், தற்கால ஸ்காண்டிநேவியருக்கும் இடையே காணப்படும் வேற்றுமைகளுக்குப் பல காரணங்கள் உள்ளன. தனிச், சிறப்பு வாய்ந்த வானிலையும், தட்ப வெப்ப நிலையுமுடைய

இங்கிலாந்தில் பல நூற்றுண்டுகளாக ஆங்கிலேயர்கள் வாழ்ந்து வருவது முக்கியமான காரணமாகும். கி. பி. 1066-க்குப் பிறகு யாருமே படையெடுத்து உட்புகாதவாறு பிரிட்டன் காப்பாற்றப்பட்டு வருவதை இரண்டாவது காரணமாகக் கூறலாம். இதனுல், பிரிட்டனின் சமூக அரசியல் பாது காப்பு நிர்ணயிக்கப்பட்டது. ஆயினும் நாம் இன்னும் ஆங்கிலப் பாடல்கள், பண்படாத கெல்ட்டிக்கு மக்களின் கற்பனையிலிருந்து தோன்றியதென்றும், நார்ட்டிக்கு இனங்களின் ஆழ்ந்த உணர் வினையும், அறிவினையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்றும் நம்பி வருகிருேம். வெல்சுக்களுக்கும், சாக்சானியர் களுக்கும் நீங்காத போர் நடந்த பழைய செவர்ன் பள்ளத் தாக்கின் எல்லைப்புறத்தைச் சார்ந்த கோட்டம் (Shire) ஒன்றில் தான், ஷேக்ஸ்பியர் தோன்றினுர். இத்தகைய உய்த்துணர்வுகள் அனைத்தும் வெறும் கற்பனையே என்று கூறினுல் அது தவருகாது. அது உண்மையாக வரையறுத்துக் கூறமுடியாத, ஏதோ ஒரு வகையில் உண்மையோடு ஓரளவிற்குத் தொடர்புடைய கற்பனை யாகும்.

பிரிட்டனின் வரலாற்றில் கெல்ட்டிக்கு இனம் இக்காலத்தில் ஒளி குன்றத் தொடங்கியது. ஆனுல் ரோமானியர் பிரிட்டனின் கதையில் இருந்து வெளியேறி விட்டனர். முன்னர்க் கூறியதைப் போன்று அவர்கள் மூன்று அரிய செல்வத்தை நமக்குரிய மரபுரிமைப் பொருள்களாக விட்டுச் சென்றுள்ளனர். தொன்று தொட்டு லண்டன் மாநகரம் அமைந்திருக்கும் இடம், ரோமானிய நெடுஞ்சாலைகள், வெல்ஷ் கிறிஸ்துவ சமயம் ஆகிய மூன்றும் ரோமானியர் நமக்கு விட்டுவிட்டுச் சென்ற ஈடும் இணையுமற்ற செல்வங்களாகும்.

சாக்சானியர் படையெடுப்பின் கொடுமை மிக்க காலத்தில் லண்டன் மாநகரம் முற்றிலும் கைவிடப்பட்டிருந்ததா என்பது வாதத்திற்குரிய ஒரு கருத்தாகவே இருந்து வருகிறது. ஒருக் கால் லண்டன் மாநகரம் சாக்சானியர் படையெடுப்பின் பிற் பகுதியில், சாக்சானியர் அங்கு மீண்டும் நிலையான குடியிருப்பு களை அமைத்து வாழத் தொடங்கியுமிருக்கலாம். ஏனெனில், காட்டுமிராண்டி மக்களின் ஆட்சியின் பொழுது லண்டன் மாநக ரம் வாணிகத்தில் சிறப்புற்று விளங்கியது. அதைப் போன்று கி.பி.700 அளவில் பீடு (Bede) என்பவரின் காலத்திலும் லண்டன் மாநகரம் வாணிகப் பெரு நகராகச் சிறப்புற்றிருந்தமை தெரிய வருகிறது. லண்டன் மாநகரினைச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கு மாறு அதை நிறுவியவர்கள் ரோமானியர்களே என்று கூறின் அது மிகையாகாது. லண்டன் மாநகரைத் தேம்ஸ் நதியின் கப்பல்

போக்கு வரத்தின் மையமாகவும், உள் நாட்டுப் போக்கு வரத்திற்குரிய மையமாகவும் கொண்டு ரோமானியர் நாடு முழுவதும் தங்களுடைய நெடுஞ்சாலைகளை அமைத்தனர். அதனால் லண்டன் மாநகரம் மீண்டும் தன்னுடைய வாணிக வளத்தில்—புது வாழ்வு பெறுவதற்கு உரிய வாய்ப்புகள் இருப்பதை—இங்கிலாந்தை விட்டுச் செல்லும் நிலையில் ரோமானியர் நன்கு உணர்ந்திருக்கலாம். அவர்கள் இங்கிலாந்தை விட்டுச் சென்ற பொழுது, தாங்கள் அமைத்த நெடுஞ்சாலைகளையும் உடன் எடுத்துக்கொண்டு போகாமையால், அவர்கள் லண்டன் மாநகரின் நல்லதொரு எதிர் காலத்தைப் பற்றிக் கனவு கண்டனர் என்று கூறலாம்.

ரோமானிய நெடுஞ்சாலைகளின் முக்கியத்துவத்தை, அவற்றை அமைத்தவர்கள் இங்கிலாந்தை விட்டுச் சென்ற பிறகு, வேறு யாரும் உணர்ந்து போற்றவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் உண்டாகிய டர்ன்பைக்கு (Turnpike) இயக்கம் வரை, யாருமே இங்கிலாந்தில் கடுமையான போக்கு வரத்துக்குரிய செம்மையான சாலைகளை அமைக்கவில்லை என்றால், ரோமானியர் அமைத்து விட்டுச் சென்ற நெடுஞ்சாலைகளின் முக்கியதுவத்தைப் பற்றியோ, பயனைப் பற்றியோ நாம் சொல்லத் தேவையில்லை. இருண்ட காலம் முழுவதிலும், இடைக்காலத்தின் தொடக்க நிலையிலும் காட்டு மிராண்டிப் பண்புகளினால் ஒற்றுமையில்லாமல் போரும் பூசலும் நிறைந்ததாய்ச் சிதறுண்டு கிடந்த இங்கிலாந்தின் ஒருமைப்பாட்டினைக் கட்டிக்காத்தது இந்த ரோமானியப் பெரு வழிகளேயாகும். ரோமானிய நெடுஞ்சாலைகள் சாக்சானியர்களின் படையெடுப்புகளையும், டேனியர்களின் படையெடுப்புகளையும், நார்மானியப் படையெடுப்புகளையும், விரைவு படுத்தியதோடு, அவர்கள் எளிதில் பழங்குடி மக்களைத் தோற்கடிக்க பேருதவியாகவும் இருந்தன. மேலும் போர்க் காலத்திலும், அமைதிக் காலத்திலும் போக்கு வரத்துக்குரிய சிறந்த கருவிகளாக அவை பயன்பட்டன; அவற்றோடு சாக்சானிய, நார்மானிய அரசர்கள் இங்கிலாந்தினை ஒன்று பட்ட ஒரு நாடாக உருவாக்கவும், அதன் மூலம் ஆங்கிலத் தேசிய உணர்வினை வளர்க்கவும் அவை உறுதுணையாக இருந்தன. ரோமானியர் விட்டுச் சென்ற செல்வத்தின் பயனை இங்கிலாந்தில் ஸ்டூவர்ட்டு மன்னர்களின் ஆட்சிக், காலத்தில் இருந்ததைக் காட்டிலும், சாக்சானியரின் எழுரசுகள் (Heptarchy) காலத்தில் சிறந்த தேசியப் பெருவழிகளை உடையதாக இங்கிலாந்து சிறப்புற்று விளங்கியது. பிற்காலத்தில் குறுக்குத் தெருக்களே அமைக்கப்பட்டன. நிலத்தின் அடிமட்டத்திலிருந்து சிறிதளவு உயர்த்திக் கட்டப்பட்டிருந்த

ரோமானியப் பேரரசின் நெடுஞ்சாலைகள் ஒரு பக்கத்தில் உள்ள கடலில் தொடங்கி, மேட்டு நிலங்களின் வழியாகச் சென்று, மற்றொரு பக்கத்திலுள்ள கடலில் முடிவுற்றன. கண்காணிப்பு இன்மையால், பாலங்கள் தானே உடைந்து வீழ்ந்த இடங்களில் எல்லாம், நன்கு செப்பனிடப்பட்ட சிறு வழிகள் உதவியாக இருந்தன. சீசரின் பெயரை ஏதோ கற்பனைக் கதையில் கேட்டு அறிந்ததைப் போன்று, நினைவில் வைத்துக் கொண்டிருந்த காட்டுமிராண்டி மக்கள், பல நூற்றுண்டுகள் சீசர் அமைத்த மாபெரும் பெரு வழிகளில் இடையருது நடமாடிக் கொண்டிருந்தனர். அவற்றிற்கு வியக்கத் தக்க வால்டிங் (Walting) தெரு எர்மைன் (Ermine) தெரு, பாஸ் வழி (Fossway) என்னும் பெயர்களிட்டு அவர்கள் போற்றி வந்தனர். நாளடைவில் அச்சாலைகளின் சரளைக்கற்கள் நிலத்தினுள் அழுந்திப் போயின. மக்கள் அவற்றை பற்றிய அறிவும், கருத்தும் இல்லாதவர்களாக இருந்தமையால், அந்நெடுஞ்சாலைகள் அழியுமாறு அவற்றைப் புறக்கணித்துவிட்டனர். இடைக்காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு வீடு கட்டுவதற்குத் தேவையான மரங்கள் போதிய அளவில் கிடைக்காமற் போயிற்று. ஆகவே, அவர்கள் கற்களினல் வீடு கட்டத் தொடங்கினர். வீடு கட்டுவதற்குத் தேவையான கற்களை ரோமானிய நெடுஞ்சாலைகளிலிருந்து எளிதில் பெயர்த் தெடுத்துச் சென்றனர். இவ்வாறு ரோமானிய நெடுஞ்சாலைகள் கல்லெடுக்கும் பள்ளங்களாக (Quarry)ப் பயன்படுத்தப் பட்டமை வருந்தத் தக்க செய்தியாகும். அவை சவாரி செய்வதற்குரிய நெடுஞ்சாலைகளாக இருந்த நிலை மாறி, குதிரை வண்டிகள் செல்லுவதற்குரிய தடங்களாக நலிவுற்றன. இறுதியில் சதுப்பு நிலங்களிலும், வயல் வெளிப் பகுதிகளிலும் அவை மறைந்தே போயின. அவற்றின் சில பகுதிகள் பழுது பார்க்கப்பட்டு, தற்கால வசதி மிக்க சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. ரோமானியப் பெரும் படைகள் ஏறுநடை போட்டுச் சென்ற அந் நெடுஞ்சாலைகள் வழியே இக்காலத்தில் மோட்டார்கார்கள் பறந்தோடுகின்றன. ஆனல் பெரிதும் மக்களின் அன்புக்குரிய ரோமானிய நெடுஞ்சாலைகளின் பிற்பகுதிகள் இன்றும் கால்நடையாகச் செல்லும் பிரிட்டானியர்களுக்காகவும், சாக்சானியர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. அவை தோற்றமும் முடிவும் இல்லாப் பசுந் தெருக்களாகப் புல் நிறைந்த வழிகளாகப் பண்டை ஆங்கில மக்களின் நாட்டுப் புறங்களின் வழியாகப் பல கற்கள் குறுக்கும் நெடுக்கும் சென்று கொண்டிருக்கின்றன.

ரோமானியர் நமக்குச் சேமித்து வைத்து விட்டுச் சென்ற அழியாப் பெருஞ் செல்வத்துள் மூன்ருவதாக விளங்குவது

வெல்ஷ் கிறிஸ்துவ சமயமாகும். அது அவர்கள் ஆட்சியின் பிற் பகுதியில் இங்கிலாந்திற்கு இறக்குமதிசெய்யப்பட்டதாகும். அதனுடைய பண்டைப் பண்புகளையும், சிறப்பு மிக்க நிலையங் களையும் அழியாமல் அது பேணிக் காத்து வருகிறது. தொல் பொருள் ஆராய்ச்சியில், ரோமானியர் கண்ட பிரிட்டனில், கிறிஸ் துவ சமயம் பரவியிருந்ததற்குரிய சான்றுகள் மிகச் சிலவாகவே கிடைத்துள்ளன. இதனால் அந்நாகரிகத்தின் சின்னமாக வெல்ஷ் மக்களிடையே மட்டும் கிறிஸ்துவ சமயம் இருந்து வருவது சிறப்பு மிக்க செய்தியாகும். சீசர்களுடைய அரசியல், இராணுவ அமைப்புகளும், நிலையங்களும் பிரிட்டனை விட்டுத் திரும்பிச் சென்ற பொழுது, கிறிஸ்துவ சமயமும் திரும்பி ரோமாபுரிக்குச் செல்லாமையே இதற்குரிய முக்கிய காரணமாகும். வடக்கிலிருந் தும் மேற்கிலிருந்தும் இங்கிலாந்தைப் பிக்ட்ஸ்களும் (Picts), ஸ்காட்டியர்களும், கிழக்கிலும் தெற்கிலும் இருந்து சாக்சானியர் களும் தாக்கிக் கொண்டிருந்த காலத்திலும், நார்த்தம்பிரியாவின் பெருஞ்சுவர் தகர்த்தெறியப்பட்ட இடைக்காலத்திலும், கிறிஸ்துவ சமயத் தொண்டர்கள் இங்கிலாந்திற்கு இடையறாது, இலத்தீன் மொழி நாகரிகத்தில் மூழ்கித் திளைத்த நாடுகளி லிருந்து வந்தவண்ணம் இருந்தனர். இவ்வாறு கிறிஸ்துவ சமயம் இங்கிலாந்திற்குத் திரும்பி வரலாயிற்று. நாகரிக உலகம் முழுவதும் இங்கிலாந்தைக் கைவிட்ட பொழுதும், சமயத் தொண் டர்கள் அதனை மறந்து விடாமல், இடையறாது இங்கிலாந்திற்கு வந்து கொண்டிருந்தனர். அவ்வாறு வந்த சமயத் தொண்டர் களுள் ஒருவரே ஜெர்மானஸ் (Germanus) என்பவராவர். கி. பி. 430-ல் பிக்ட்ஸ்கள், சாக்சானியர்கள் ஆகிய இனத்த வரின் கூட்டணி ஒன்றை ஜெர்மானஸ் ஹால்லிலூஜா (Halle luzah) என்னும் இடத்தில் தோற்கடித்துப் பெரு வெற்றி பெற்றார். இதற்கு முன்பு அவர் காளில் (gaul) இருந்த ரோமா னியரின் படையிலே சிறப்பு மிக்க வீரராகப் பணியாற்றியவரா வர். பிரிட்டனில் உண்டான பேலேஜியன் சமயப் புரட்டர்களை அடக்கியொடுக்குவதற்காக, ஒரு சமயத் தொண்டராக ஜெர் மானஸ் இங்கிலாந்திற்கு வந்தார். பின்னர் படையெடுப்பாளர் களின் தாக்குதல்களால், பிரிட்டானியரின் படைக்குத் தலை வரானார். கொடுமை மிக்க புறச் சமயப் படையெடுப்பாளர்களை எதிர்த்துப் போரிட்டார். அப்போரில் பிரிட்டானியருக்குப் பெரு வெற்றி கிடைத்தது. சமயத் தொண்டர்கள் இங்கிலாந் திற்குச் சென்று அரும்பணியாற்றியதைப் பற்றி வழங்கும் இக் கதை ஓரளவிற்கு உயர்வு நவிற்சியாக இருக்கலாம். ஆயினும், இக்கதை நமக்குக் கிடைக்கவில்லையானால், அக்காலத்தைப் பற்றிய செய்திகளை நாம் வேறு எவ்வகையிலும்

அறிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளோம். அக்காலத்திய சமயநிலையையும், மக்கள் வாழ்க்கையையும், இங்கிலாந்தின் அரசியல் நிலையையும் இக்கதை ஓர் அளவிற்குத் தெளிவாக விளக்குகிறது. ஜெர்மானஸ் பாதிரியார் போன்று கல்வியிலும், போர்த் தொழிலிலும் வல்ல குருமார்கள் கிடைப்பது பிற்காலத்தில் மிக அரிதாகப் போய்விட்டது. பிரிட்டனிலிருந்து ரோமானிய வீரர்களும், ஆளுநரும் தங்கள் நாட்டினை நோக்கித் திரும்பிச்சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது, இங்கிலாந்தின் அரசியல் உலகில் உண்டான வெற்றிடத்தை இச் சமயத்தொண்டர் நிரப்பியதோடு, பிரிட்டனின் மதிப்பைப் பன் மடங்கு உயர்த்தினர். இத்தகைய இன்னலும் இடையூறுமிக்க காலத்தில், வெல்ஷ் மக்களிடத்து கிறிஸ்துவ சமயம் பெருஞ் செல்வாக்குற்றது. ரோமானியர் ஆட்சியின் பிற்பகுதியில் அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற சமயமாகக் கிறிஸ்துவம் விளங்கவில்லை. எனினும், அதனுடைய கொள்கைகள் துன்பத்தில் உழன்று கொண்டிருந்த வெல்ஷ் மக்களுடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தமையால், அவர்கள் அதைப் பேரளவில் போற்றிப் பின்பற்றினர். இதைப் போன்றே சாக்சானியர் புதிதாகக் கிறிஸ்துவ சமயத்தினை ஏற்றுக்கொண்ட பிறகு, புறச்சமயத்தவர்களான டேனியர்களும், நார்ஸியமக்களும், அவர்களைத் தாக்கித் துன்புறுத்தியதைப் பின்னர் விரிவாகக் காணலாம். 'பெருமானே! நம் காலத்தில் அமைதி நிலவ அருள் புரிவாயாக! ஏனெனில் உம்மைத் தவிர எங்களுக்காகப் போரிடக் கூடியவர்கள் உலகில் வேறு யாருமே இல்லை' என்னும் அவர்களுடைய முறையீடு, தற்கால ஆங்கிலமொழி வழிபாட்டுப் பாசுரத்தில் புதுமையான ஒலியுடையதாகக் காணப்படுகின்றது. எல்லா வகையிலும் சீரழிந்து கிடக்கும் இவ்வுலகில் கிறிஸ்துவ சமயக் கடவுளைத் தவிர வேறு யாரும் நேச உறவு கொள்ளத் தகுதி யற்றவர்களாவர். மேலும், அவர் துன்பம் நிறைந்த உலகில், யாருடைய ஆதரவுமற்ற ஏழை எளியவர்களுக்குத் தோன்றாத் துணையாக இருக்கவே தகுதியுடையவராவர். ஆனால் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் டேனியர்களைத் தங்கள் பகைவர்களாகக் கருதியிருந்த சாக்சானியர்களுக்கும் இம்முறையீடு நேர்மையானதாகவே தோன்றியிருக்க வேண்டும்.[1]

இத்தகைய சூழ்நிலையில், கி. பி. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த வெல்ஷ் மக்கள் கிறிஸ்துவ சமயம் தங்களைக்

[1] இச் சொற்கள் உண்மையில் எத்துணைப் பழமையானவை என்பதை உறுதியாகக் கூறுவதற்கில்லை. கி. பி. பதினோராம் நூற்றாண்டு முதற் கொண்டே இவை வழக்கத்திற்கு வந்திருக்கலாம்.

காட்டுமிராண்டிகளான சாக்சானியரிடமிருந்து, வேறுபடுத்திக் காட்டும் சிறப்பு மிக்க அறிகுறியாகக் கருதலாயினர். தங்களைச் சம வெளியிலிருந்து அடியோடு மலைகளும், சதுப்பு நிலங்களும் நிறைந்த கொடிய வேல்சுக்கு விரட்டியடிக்கும் சாக்சானியர்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று கருதினர். அவ்வாறு கருதுவதற்குரிய காரணங்களுள் ஒன்று அவர்கள் பாணர்களின் இசையிலும், பாட்டிலும் கொண்டிருந்த ஈடுபாடாகும்; மற்றொன்று அவர்கள் பின் பற்றி ஒழுகிய கிறிஸ்துவ சமயமாகும். பண்டை வெல்ஷ் மக்களிடையே தோன்றிய பாணர்கள், பிரிட்டனின் தலைவர்களாக வரப் போகிறவர்கள், பண்டை இனங்களின் வருங்காலத் தலை விதியைப் பற்றி முன்னதாகவே அறிந்து,

> "அவர்கள் பரம்பொருளைப் போற்றுவர்;
> அவர்கள் மொழியைப் பேணிக்காப்பர்;
> அவர்கள் நாட்டினை இழப்பர்: ஆயினும்,
> காடு மேடுகள் நிறைந்த வேல்சினை இழவார்"

என்று பாடிச் சென்றனர்.

நெடுந் தொலைவிலுள்ள தீபகற்பமான மேற்கு வேல்சிலும் அல்லது காரன்வாலிலும் இத்தகைய முறையிலேயே கெல்ட்டிக்கு கிறிஸ்துவ சமயம் வளர்ச்சியுற்றது. தகரம் கிடைக்கும் சதுப்பு நிலங்களிலும், அதையடுத்துள்ள காடுகளில், ஓடைகள் பாறைகளின் இடுக்குகள் வழியாகப் பாய்ந்தோடும் நிலப் பரப்பிலும், கிறிஸ்துவ உலகின் பிறபகுதிகள் அறியாத திருத் தொண்டர்கள் தோன்றி, கிறிஸ்துவ சமயத்திற்கு அரும் பெருந் தொண்டுகள் ஆற்றி மறைந்தனர். அவர்களுடைய பெயர்கள் காரன்வாலில் உள்ள ஊர்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய பெயர்களாக இன்றும் வழங்கி வருகின்றன. பிரிட்டிஷ் நாகரிகம் இறந்து கொண்டிருந்த நெருக்கடியான அக்காலத்தில்தான், பிரிட்டிஷ் கிறிஸ்துவ சமயம் அவ்வழிவிற்கிடையே ஆக்கமும், ஊக்கமும் பெற்றுப் பேராற்றலுடன் வளரத் தொடங்கியது. காரன்வாலின் புதுமை உணர்வு மிக்க வரலாற்றின் பகுதிகள் மறைந்தொழிந்தன. அக்காலத்தில் காரன்வால் கடலக வாழ்வில் சிறப்புற்று விளங்கியிருக்க வேண்டும். எதிர்ப் பக்கத்து காலிக் (Gallic) கடற்கரையோரத்தில் உள்ள அர்மோரிக்கா (Armorica) வின் வரலாற்றோடும் சமயத்தோடும் காரன்வால் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரிகிறது. அர்மோரிக்காவிற்கு, இங்கிலாந்திலிருந்து சாக்சானியரின் படையெடுப்பின் பொழுது பேரளவில் பிரிட்டானியர் தப்பியோடினர். அதனால் கெல்ட்டிக்கு இனத்தினரின் மறுமலர்ச்சியின் பொழுது அங்கு வாழ்ந்த ரோமானிய நாகரிகத்தில் ஊறித்திளைத்த காளிய

மக்கள் 'பிரிட்டனி' (Brittany) களாக மாறினர். பின்னர் அவர்கள் இலத்தீன் மொழியின் நாகரிக வாழ்வில் சிறப்புற்ற பிரான்சோடு என்றுமே இரண்டறக் கலக்க வில்லை. பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில், பிரான்சின் மற்றப் பகுதிகளில் எல்லாம் மாபெரும் மாறுதல்கள் உண்டான பொழுதும், அவற்றை வன்மையாக எதிர்ப்பவர்களாகவே இந்த பிரிட்டனிகள் இருந்து வந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

நார்ட்டிக்கு இனத்தவரின் படையெடுப்பு — நார்ட்டிக்கு இனத்தின் இயல்பு — ஆங்கிலிகள், சாக்சானியர், ஜூட்டுகள் — ஆங்கிலிகளின், ஒப்பா — படையெடுப்பாளர்கள் — வரலாற்று ஏட்டின் வெற்றிதழ் — சாக்சானிய கடற்கரை — ரோமானியப் பிரிட்டனின் வீழ்ச்சி — படையெடுப்பாளர்களின் நுழைவு — கைப்பற்றிய விதம் — நகரங்களும் மாளிகைகளும் கைவிடப் படுதல் — அழிவும், புத்தாக்கமும்—மாபெரும் இடப்பெயர்ச்சி— மேற்குப் பகுதியை மெல்லக் கைப்பற்றுதல் — கெல்ட்டிக்கு மறு மலர்ச்சி — ரோமானியர் விட்டுச் சென்ற செல்வம்—ரோமானிய நெடுஞ் சாலைகள் — வெல்ஷ் கிறிஸ்துவ சமயம்.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

1. சாட்விக்கு (Chadwick) :
   Origin of the English Nation.
2. ஹாவர்பீல்டு (Haverfield) :
   Roman Occupation, Last Chapter.
3. லீட்ஸ் (Leeds) :
   Archaeology of Anglo-Saxon Settlements.
4. பால்டுவின் பிரவுன் (Baldwin Brown) :
   Art in Early England (Cam. Med. Hist. I,PP. 380-391 .
5. சாம்பர்ஸ் விட்சித் (Chambers Widsith) :
   A Study in Old English Heroic Legend.
6. ஹாட்கின் (R.H. Hodkin) :
   A History of the Anglo-Saxons, 1935.
7. Introduction to the Survey of Place Names, Place Name Society, Vol. I, 1925.
8. மையர்ச (Myres) :
   The English Settlements, (Oxford History of England 1936)

## இயல் 4

# கிறிஸ்துவ சமயம் இங்கிலாந்திற்குத் திரும்பி வருதல்

மக்கள் சமுதாயம் அறிவினைப் பெறுவதற்கும், செல்வத்தைச் சேர்ப்பதற்கும், உரிமைகளைப் பேணிக் காப்பதற்கும், வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் அடைவதற்கும் தொல் பழங்காலத்தில் மக்களாட்சி, சமத்துவநெறி ஏற்றதாக இல்லை. ஆனால், உயர்குடிமக்களின் ஆட்சியும், அரசும், குருமார்களின் செல்வாக்கும் ஆகிய மூன்றுமே அம்முன்னேற்றத்தை அடைவதற்கு உகந்த வழிகளாக அக்காலத்து இருந்து வந்ததை வரலாறு எடுத்துரைக்கின்றது. புறச்சமய மக்களினமோ, குலமோ சமத்துவத்தின் அடிப்படையில் அமைந்திருக்கலாம். அவற்றின் வறுமையை அவை சமமாகப் பங்கிட்டுத் துன்புறலாம். ஆனால் அவை பெருந்திரளாக நாகரிகத்தின் உயர்ந்த நிலைக்கு எப்பொழுதுமே நகர்ந்து செல்ல இயலாது; அதைப்போலவே, தனி மனிதனின் விடுதலையைப் பெறவும் இயலாது. மக்கள் கூட்டம் முழுவதும் மிகுந்த வறுமையால் வாடுகின்றபொழுது, ஒரு சிலராகிலும் செல்வர்களாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான், நாகரிகத்தின் நற்செயல்களுக்குப் பயன்படுத்துவதற்குப் பொருள் சேமித்து வைக்கப்படும். பெருந்திரளான மக்கள் அறியாமையில் மூழ்கி இருக்கின்றபொழுது, கற்றறிந்த ஒருசிலரின் அறக்கட்டளைகளின் மூலம்தான், முன்னேற்றம் உண்டாகமுடியும். அத்தகைய உலகில், தனி மனிதனின் தனிப்பட்ட முன்னேற்றத்தால்தான் நிலையங்களும், அமைப்புகளும் தோன்றமுடியும். அவற்றிற்குச் சிறப்புரிமைகள் இருந்தால்தான், அவை உலகில் நிலைத்து நிற்க முடியும். கல்வியும், ஆன்மீக வளர்ச்சிக்குரிய சமயமும் அத் தொல் பழங்காலத்தில் மூடநம்பிக்கைகளோடும், பாமர மக்கள்மீது குருமார்கள் செலுத்திய ஆதிகத்தினோடும் பிணைக்கப்பட்டு இருந்தன. இதனை பீடு (Bede) வின் வரலாற்றேட்டின் ஒவ்வொரு பக்கமும் கள்ளங்கபடமற்ற முறையில் நயமாக விளக்குவதைக் காணலாம். குடியாட்சியுலகிலும் — விஞ்ஞான உலகிலும் நாம் வாழுகின்றோம். ஆயினும் நம்மில் சிலருக்குப் பண்டைக் காலத்தில் மக்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு இருந்துவந்த கட்டுப்பாடுகள் வியப்பாகத் தோன்றலாம். ஆனால், அவற்றுள் பெரும்பகுதி பண்டை ஆங்கிலேயருடைய வரலாற்றின் மறைபொருளாகும். அக்காலத்திய ஆராய்ச்சியின் சிறப்புமிக்க மாணவராகிய மெயிட்லண்டு (Maitland) என்னும் அறிஞர்,

'பல நூற்றாண்டுகள் இங்கிலாந்து நிலமானியப் படைமுறையினைப் பின்பற்றியிருந்ததை விளக்குவோமானால், நம்முடைய வரலாற்றிற்கு இயல்பானதும் இன்றியமையாததுமாக நிலமானியப் படைமுறை தோற்றம் அளிக்கும். பதினெட்டாம் நூற்றாண்டின் இங்கிலாந்து, நிலமானியப் படைமுறையால் உண்டான எட்டாம் நூற்றாண்டின் இங்கிலாந்திலிருந்து இடையீடில்லாமல் தோன்றி இருக்குமானால், இங்கிலாந்து மக்களின் வாழ்க்கையிலும், சூழ்நிலைகளிலும் அடிப்படையான மிகப் பெரிய மாற்றங்களை நாம் எதிர்ப்பார்த்திருக்கலாம். இத்தகைய விரிந்த பொருளில், நாம் 'நிலமானியப் படைமுறை' என்னும் சொற்களைப் பயன்படுத்துவோமானால் (காட்டுமிராண்டிகளின் படையெடுப்பு நமக்கு மாற்ற முடியாத பேருண்மையினை உணர்த்துகிறது) அது நாகரிகத்தினையும், தொழில்களைப் பலவகையாகப் பிரித்தமையையும், தொழில் முறைப் பாகுபாட்டினையும், (Division of Labour) நாட்டின் தற்காப்பிற்குரிய வழிவகைகளையும், அறிவியல் இலக்கிய வளர்ச்சியினையும், கற்றறிந்தோருக்குக் கிடைக்கும் ஓய்வு முதலியவற்றையும் குறிப்பதைக் காணலாம். நிலமானியப் படைமுறைக் காலத்தில் தலைமைக் கோயிலும் (Cathedral), திருமுறைகள் எழுதும் இடங்களும் (Scriptorium), நூல் நிலையங்களும், நிலப் பிரபுக்களின் (Baron) கோட்டைகளைப்போன்று கட்டப்பட்டன. ஆகவே, உழவர்கள் பெரு நிலக்கிழார்கள் வழங்கும் நீதிக்குக் கட்டுப்பட்டதையும், தனியுரிமை ஊர்களுக்குப் பதிலாக, உட் குடிகளைக்கொண்ட பண்ணைகளாக அவை மாற்றப்பட்டதையும்பற்றி நாம் பேசும் பொழுது, நாம் அறிந்தோ அறியாமலோ, அச்சமுதாயத்தின் இயல்பு இகந்த சக்திகளைப் பற்றியும், பிற்போக்குத் தன்மைகளைப் பற்றியும், நோய்களைப் பற்றியும் நாம் எள்ளளவும் நினைப்பதில்லை. அதற்குமாறாக இயல்பாக உண்டாகும் நலமிக்க வளர்ச்சியைப்பற்றியே பேசி வருகிறோம் என்பதை நாம் உணரவேண்டும். ஆனால், எதிலும் நிறைவுகாணும் நம்முடைய நோக்கம் நெடுந் தொலைவில் உள்ள நாகரிகத்தின் வளர்ச்சி முறை அடிக்கடி கொடுமை நிறைந்ததாக இருப்பதை நாம் காண மறுக்கிறோம். ஆனால், பதின்மூராம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய இங்கிலாந்து, ஏழாம் நூற்றாண்டுக் காலத்திய இங்கிலாந்தினோடு கொண்டுள்ள நானூறு ஆண்டுக்காலத் தொடர்பினைவிட, பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத்திய இங்கிலாந்தோடு மிகவும் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கிறது' என்பர்.

இவ்வாறு பேராசிரியர் மெயிட்லண்டு முப்பதாண்டுகளுக்கு முன்பு எழுதியுள்ளமை கருதத்தக்கது. அவருடைய 'சிறந்த

சொற்பொழிவிற்கு' விளக்கம் தரும் வகையிலேயே, இந் நூலில் ஆங்கில-சாக்சானியர், நார்மானியர் ஆகியோரின் வர லாற்றை நான் விரிவாக வரைந்துள்ளேன். அரசும் நிலமானி யப் படைமுறையும், திருச்சபை ஆதிக்கமும் ஒருங்கே ஒன் றோடொன்று இயைபு உடையனவாக, ஒரு பொது இயக்கத் தின் மூன்று கிளைகளாக வளர்ச்சியுற்றன. அரசரும் தேனர் களும் (Thegns),[1] பாதிரிமார்களும் தங்களுக்குள்ளே பெரிதும் எதிரிகளாக இருந்துவந்தனர். ஆயினும், ஒருவர் மற் றொருவருடைய அதிகாரத்தை வளர்ப்பதில் முக்கிய பங்கு கொண்டனர். இவர்கள் அனைவரும், வேறு உதவியற்ற மக்கள் சமுதாயத்தைத் தங்கள் நலத்திற்காகச் சுரண்டினர். எனினும் இவர்களையே 'கதி'யாக நம்பி இருந்த மக்கள் சமுதாயத்திற்குக் காவலர்களாகவும் இவர்கள் இருந்து வந்தனர். சாக்சானியர் படையெடுப்புக் காலத்தில் நிலமானியப் படைமுறையும் (Feudalism) அரசபதவியும் (kingship) முதன்முதல் தோன்றிய தைக் கண்டோம். டேனியரின் படையெடுப்பிற்கும், அதன் பிற கும், நிலமானியப் படைமுறையும், அரசபதவியும் நன்கு வளர்ச்சியுற்றன. இவ்வியலில் சாக்சானியரின் கைப்பற்றுதல் முதல் வைக்கிங்குகள் (vikings) வருகைவரை இங்கிலாந்தின் வரலாற்றினை விளக்க முயலுகிறேன். இக்காலத்தில் இங்கிலாந் தின் மக்கள் வாழ்க்கையில் உண்டான மாபெரு மாறுத லே—சமயத்தில் உண்டான மாற்றமே—அவர்களை நாகரிகப் பாதையில் முதன் முதலாகப் பெரும் முன்னேற்றத்தை அடையு மாறு செய்தது. இதை உணர்ந்து போற்றும் அரிய செயலில் அடுத்து நாம் ஈடுபடுவோமாக.

பிரிட்டனைக் கிறிஸ்துவ சமயம் கைப்பற்றியது. அதனால் நடுநிலக் கடற்பகுதியைச் சார்ந்த நாகரிகம் புதிய வடிவில், புதியதொரு நற்செய்தியோடு இங்கிலாந்திற்குத் திரும்பி வந்தது. ரோமாபுரியைச் சேர்ந்த அகஸ்டினும் (Augustine), டார்சைச் சேர்ந்த தியோடரும், (Theodore), ரோமாபுரியின் பெரும் படைகள் வந்திறங்கியும் திரும்பியும் சென்ற, கெண்ட்டு மாவட்டத்திலுள்ள துறைமுகங்களில் வந்து இறங்கி னர். இங்கு, அவர்கள் மறைந்து போன ரோமானியப் பேரர சின் அதிகாரிகளுடைய பழநிலையில் ஒரு திருச்சபை அமைப் பினை நிறுவினர். இதைக் கண்ட ஆங்கிலேய அரசர்கள், குழந் தைப் பருவத்தில் உள்ள தங்கள் அரசுக்குப் பொருத்தமான

[1] சாக்சானியர் காலத்தில் அரசருக்கு அறிவுரை கூறியும், வேறு பல அலுவல்களைச் செய்தும், பெருமக்கள் வகுப்பிற்கு உயர்ந்தவர்களே 'தேனர்கள்' (Thegns) எனப்படுபவராவர்.

முறைகளையும், கொள்கைகளையும் திருச்சபையிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டனர். கிறிஸ்துவ சமயம், கல்விமுறையினை இங்கிலாந்திற்கு மீண்டும் கொண்டுவந்தது. அதனால் காட்டு மிராண்டி மக்கள் இலத்தீன் மொழியின் எழுத்துக்களைக் கொண்டு எழுதவும் படிக்கவும் கற்றனர். அதன் பயனாக அவர் களிடையே அரசியலையும், சட்ட திட்டங்களையும் அடிப்படை யாகக் கொண்ட நாகரிகம் தோன்றி வளரத் தொடங்கியது.[1]

நார்ட்டிக்கு இன மக்களுக்கு முற்றிலும் தெரியாத புதிய செய்திகள் பலவற்றைப் பற்றிக் கிறிஸ்துவ சமயம் எடுத்துரைக்க லாயிற்று. அவை பேரளவிற்குப் பண்டைய ரோமாபுரியின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட செய்திகளாகவே இருந்தன. கிறிஸ் துவ சமயம் முதன் முதலாக அறம், அடக்கமுடைமை, தன்னடக் கம், ஆன்மீகப்பொருள்களிடத்து ஈடுபாடு கொள்ளுதல், தூய்மையான மனச்சான்று, மாசுபடிந்த மனச்சான்று, உடலுக் கும் உயிருக்கும் உள்ள வேற்றுமை, யாக்கை நிலையாமை, நாம் செய்யும் வினைகளுக்கு ஏற்ப அமையப்போகும் மறு பிற வியைப் பற்றிய அச்சமும் நம்பிக்கையும் போன்ற பலவற்றைப் பற்றி மக்களுக்குப் புரியுமாறு விளக்கத் தொடங்கியது. மேலும் அது ஓரளவிற்கு அறிவில் சிறந்து விளங்குவதனால் உரிமையுடன் வாழ்ந்த மனிதன் மூட நம்பிக்கையால் உண்டான அச்சத்தின் காரணமாகக் குருவிற்குப் பணிந்து நடக்குமாறு தூண்டியது; சமயக் கோட்பாடுகளை வலியுறுத்தத் தொடங்கியது; இறுதியாக அக் கிறிஸ்துவ சமயம் உலக சகோதரத்துவத்தைப் போதிக்கும் சமயத்தின் கிளைமுடிபாகக் கடவுள் நம்பிக்கை அற்றவரையும், புறச் சமயத்தைச் சார்ந்தவர்களையும் துன்புறுத்தும் புதுவகை யான கடமையைப் பற்றியும் எடுத்துரைத்தது. இடைக்காலச் சம யம், அரச பதவியையும் நிலமானியப் படைமுறையையும் போன்று நன்மை தீமைகள் ஆகிய இரண்டும் கலந்ததாகவே இருந்தது. ஆனால் இத்தகைய ஆற்றல்கள் சோம்பேறிப்பண்பு மிக்க பழைய

[1] சாக்சானியரின் அரசினுள் கிறிஸ்துவ சமயம் வந்த பிறகே, நமக்கு எழுதப்பட்ட சட்டங்கள், காலவழிச்செய்திக்கோவை' பாடல்கள் முதலியன கிடைக்கத் தொடங்குகின்றன. வரலாற்றிற்குரிய ஒரு வகை ஊற்று கிறிஸ்துவ சமயத்தின் வருகையால் வற்றிப் போய் விட்டது எனலாம். புறச் சமயத்தைச் சார்ந்த சாக்சானியர், போர்க்கருவிகளையும், அணிகலன்களையும் இறந்தோரின் உடல்களோடு வைத்துப் புதைத்து வந் தனர். ஆனால் கிறிஸ்துவ சமயம் அப் பழக்கத்தை கைவிட்டது. அதனால், பெறற்கரிய பழம்பொருள்சின்னங்களை வரலாற்றாசிரியர்கள் இழக்கலா யினர். புறச்சமய சாக்சானியர் காலத்தில் 'இடுகாடுகள்' மிக முக்கியமா கக் கருதப்பட்டன. கிறிஸ்துவ சமயம் செல்வாக்குற்ற பிறகு, அவற் றிற்கு இருந்து வந்த முக்கியத்துவமும் பயனும் குறையலாயிற்று. நல்ல காலமாக நமக்குப் போர்க்கருவிகளும் அணிகலன்கள் பற்றிய இலக்கியச் சான்றுகளும் பேரளவில் கிடைத்துள்ளன.

நார்ட்டிக்கு இனமக்களின் பண்பு நலனில் புதியதொரு மாற்றத்தை உண்டாக்கின. ஆயிரம் ஆண்டுகள் கழித்து அதன் விளைவாகத் தோன்றியவர்களே டியூடர் காலத்திய ஆங்கிலேயர்களாவர். நெடுங் காலத்திற்கு முற்பட்ட நம்முடைய முன்னோர் மரபிற்கு மதிப்புக்குக் குறைவுண்டாகாமல், நாம் அவர்களுடைய குறைகளைக் குறைகளாக ஒப்புக் கொள்ளுவதே நல்லது. அவர்கள் இக்காலம் வரையில் 'கடற்கன்னி' சாராயக்கடையில் பலவற்றைப் பற்றிச் சிந்தித்தார்களே ஒழிய, சாக்சானிய தேறல் மன்றங்களில் (Mead Halls) விட்சித் (Widsith) என்ற பாணன், அவனுடைய சொற்களஞ்சியத்தைத் திறந்து வைத்துக்கொண்டு, இசை விருந்து அளித்த பொழுது அங்குச் சிந்தித்தவர்களாகத் தெரியவில்லை.

ஆங்கில-சாக்சானியர்களும், ஸ்கான்டி நேவியர்களும் ஓடினையும் (Odin), தோரையும் (Thor) வழிபட்டு வந்தனர். இவ்வழிபாடே அவ் ஆதிப் பழங்குடி மக்களின் சமயமாக இருந்து வந்தது. அச்சமயம் சிறப்பாகப் பாமர மக்களின் சமயமாகவும், போர்வீரர்களின் சமயமாகவும் அறிவுச் சுமை மிகாத அருள் உள்ளம் வாய்ந்த அல்லது தங்கள் ஆன்மாவைப் பற்றிக் கவலையுறாத பண்பாளர்களின் சமயமாகவும் இருந்து வந்தது. அதனுடைய தொல்பழங்காலத்திய புராணக் கதைகள் அவ் வினத்தின் சீரிய பண்புகளை மனத்தில் பதியவைப்பனவாகவும், சிந்தனையைத் தூண்டுவனவாகவும் உள்ளன. அவை ஆண்மை, பெருந்தன்மை, தொழிலிலும் நட்பிலும் பற்றுடனிருத்தல், குறிப்பிட்ட ஒரு வகை நேர்மை முதலியவற்றை விரிவாக எண்ணற்ற கதைகளின் மூலம் மக்களுக்கு எடுத்தியம்பின. தற்கால ஆங்கிலேயப் பள்ளி மாணவன் சமுதாயத்தில் பெற்றுள்ள தரத்துடன் சற்றேறக்குறைய இவற்றோடு ஒப்புமையுடையது எனலாம். அவை யாவும் ஓரினத்தின் தொடக்க நிலைப் பண்புகளைப் பெரிதும் விளக்குவனவாக உள்ளன. கோழைமனப் பான்மையால் செய்யப்படும் செயல்களையும், கடமையை மன மறிந்து கைதவறவிடுதல், எவ்வகையிலேனும் இழுக்கு உண்டாகும் வகையில் நடத்தல் ஆகிய அனைத்தையும் டேனியர் ஒரே சொல்லால் குறிப்பிட்டு வந்தனர். 'நைடிங்குஸ் ஓயர்க்கு' (Nidingsvoerk) என்பதே அச்சொல்லாகும். அது சட்டங்களை மீறி நடக்கும் வேறுவகைச் செயல்களிலிருந்தும் பொது மக்கள் கருத்தினில் கடுமையாகத் தண்டிக்கப்படும் செயல்களிலிருந்தும் எளிதில் வேறு படுத்திக் காட்டுவதற்குப் பயன் படுத்தப்பட்ட சொல்லாகும். கொலைகாரனாக வாழ்வதைக் காட்டிலும் 'நைடிங் காக' (Niding) இருப்பது மிகவும் இழிவாகக் கருதப்பட்டது.

பொய் கூறுவோனை மக்கள் போற்றாமல் இழித்தும் பழித்துமே வந்தனர். ஹோமர் வருணித்துள்ள சமுதாயத்திற்கும் பியோ வுல்பு (Beowulf) வருணித்துள்ள சமுதாயத்திற்கும் இடையே மிகுதியான ஒப்புமைப் பண்புகள் காணப்படுகின்றன. ஆயினும் நார்ட்டிக்கு இன மக்கள் தங்கள் மாபெரும் தலைவனை ஜாகோ பிடத்தோ, சூழ்ச்சியே வடிவான ஒடிசீயஸ் (Odysseus) இடத்தோ காணமுடியவில்லை. வீரர் உலகின் விருப்ப மிக்க தலைவர்களுள், கிறிஸ்துவசமயம் ஐஸ்லாந்திற்கு வந்தபொழுது, அங்குச் சிறப் புற்று விளங்கிய நஜால் (Njal) என்னும் தலைவன், 'என்றுமே பொய் பேசியது இல்லை' என்று பாராட்டப்படுகிறான். அக்கார ணத்திற்காக அவனுடைய நாட்டு மக்கள் அனைவரும் அவனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

முதன் முதல் கிறிஸ்துவ சமயம் ஓடினை வழிபட்டு வந்த மக்களோடு தொடர்பு கொண்ட பொழுது, அவர்கள் அடிமை களையும், சிறைப்பட்டவர்களையும் தாங்கள் வழிபட்ட தெய்வத் திற்கு நரபலி இடும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர். இவ்வாறு நரபலியிடுதல் தொல்பழங்காலச் சமயங்கள் அனைத் திற்கும் பொதுவான ஒரு பண்பாகும். இப்பழக்கம் அன்றைய ஐரோப்பாவில் முற்றிலும் அழிந்து விடவில்லை. ஆயினும் சாக் சானியர் இவ்வழக்கத்தை மேற்கொண்டிருந்தமைக்கு எத்த கைய சான்றுகளும் கிடைக்கவில்லை. தெய்வங்களுக்குக் கால் நடைகளை அல்லது குதிரைகளைப் பலியிட்டு, புனிதவிருந்தும் குடியாட்டமும் நடத்துதல் அக்காலத்தில் பெரு வழக்காக இருந்தது. போப்பு கிரிகோரியின் (Gregory) அறிவுரையின்படி இக்கொலையும் விருந்தும், திருச் சபையின் 'விருந்தாகவும், 'திருச்சபை மாத்தேறல் குடி' (Church ale) விழாவாகவும் மாற் றப்பட்டன.

நார்ட்டிக்கு இன மக்களின் சமயம் கிலியூட்டும் சமயமும் அன்று; பகைமிக்க தீய சக்திகளின் சினத்தை மந்திர தந்திரங் கள் மூலம் தணிக்கும் சமயமும் அன்று. முழுவதிலும் நரகத்துக் குச் சென்றவர்கள் எவ்வாறு சித்திரவதை செய்யப்படுகின்ற னர் என்பதைப் பற்றிய புடைப்புச் சிற்பங்களைக் கோயில்கள் முழுவதும் நிறைத்து வைப்பதற்குப் பதிலாக, நார்ட்டிக்கு இன மக்களின் சமயம், இறப்பினைக்கண்டு அஞ்சாது வாழுமாறு தங்கள் மக்களுக்குக் கற்பித்து வந்தது. விருந்திலும் வெற்றியி லும் மட்டும் அல்லாமல், துன்பத்திலும் தோல்வியிலும் கூடத் தன்னுடைய தலைவன், தெய்வங்களோடு தோழமையுடையவ னாக இருக்கவேண்டும் என்பதே அச்சமயத்தின் குறிக்கோ

ளாகும். தெய்வங்களும் ஊழின் ஆற்றலுக்குட்பட்டே இயங்குவதாக அம்மக்கள் நம்பினர். "தெய்வங்களின் அந்தி ஒளி," எனும் ஸ்கான்டிநேவிய அகக்காட்சி, உலகின் அழிவை விளக்குவதாக அமைந்துள்ளது. அழிவுச் சக்திகளை எதிர்த்து, நம்பிக்கையற்ற இறுதிப் போரில் தலைவர்கள் பெரும் வீரத்தோடு அச்சமின்றி, பற்றுடனே போராடி உயிர் துறத்தலையே அது சித்திரிக்கிறது. அது முழுவளர்ச்சி அடையாத சமயமே ஒழிய இழிவான சமயம் அன்று. தற்கால நாகரிகத்திற்கும், கிறிஸ்துவ சமயத்திற்கும்கூட நார்ட்டிக் இன மக்களால் அளிக்கப்பட்ட சிறந்த சமயத் தொண்டின் சிறப்புமிக்க பண்புகளின் கூறுபாடுகளை அது தன்னகத்தே கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

ஆனல், அச்சமயம் எத்துணைச் சிறப்புடையது என்று கூறினும், அது முன்னேற்றத்திற்குரிய உயிர்ப் பண்புகளில் ஒன்றைக்கூடப் பெற்றிராத காட்டுமிராண்டி மக்களின் சமயம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அச்சமயத்தைப் பின்பற்றியவர்கள் தாங்களே விருப்பத்தோடு பேரளவில் கிறிஸ்துவ சமயத்தில் சேர்ந்தனர். இதனல் அச்சமயத்தில் இருந்து வந்த குறைபாட்டினை அச்சமயத்தைச் சார்ந்த மக்களே ஒப்புக் கொண்டமை புலனகின்றது. அப்பண்டைக் காலத்திய சமயம், ஓரினத்துப் பண்புகளின் மரபுவழி வெளிப்பாடாகவே இருந்து வந்தது. அவ்வினப் பண்புகளின் மீது வேருெரு ஆற்றல் அமர்ந்து இயக்கியதாகத் தெரியவில்லை. அச்சமயம் கல்வி கற்பதற்கோ கலைகளை அறிவதற்கோ எத்தகைய உதவியையும் செய்யவில்லை. அது அடக்கமுடைமை பற்றியோ, அறத்தைப்பற்றியோ போதிக்கவில்லை. அதனல் மக்களிடையே சமய ஆர்வத்தைப் பரப்பவோ, வளர்க்கவோ முடியாமற் போயிற்று. ஆயினும் அது சமயப் பொறையுடைமையைப் போற்றியமை குறிப்பிடத் தக்கதாகும். ஆங்கில-சாக்சானியர்களைக் கிறிஸ்துவ சமயத்திற்கு மாற்றிய சமயத் தொண்டர்கள் யாரும் உயிர்த் தியாகம் செய்ததாகத் தெரியவில்லை. இதைவிடச் சிறந்ததொரு சான்று நமக்குத் தேவையில்லை. கிறிஸ்துவ சமயத்தின் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்ளுவதற்குரிய நல்ல வழிகளையோ, தீயவழிகளையோ ஆங்கிலப் புறச்சமயம் அறிந்திருக்கவில்லை சிதறிக் கிடந்த அதனுடைய குருமார்களிடையே ஒருமைப்பாட்டுணர்வும், தனி உரிமை நிலையும் இருந்ததில்லை. யார்க்ஷையர் பகுதியில் ஓடின் வழிபாட்டு நெறியின் தலைமைக் குருவாக இருந்தவர் கோய்பி (Coifi) என்பவராவர். நார்த்தம்பிரியாவிலிருந்த எட்வின்' அரசரிடத்து (Edwin) முதன் முதலாகப்

பாலினஸ் (Paulinus) வந்தபொழுது, கோய்பி, தன்னுடைய தெய்வங்களுக்குச் செய்துவரும் தொண்டினுல் தான் எத்தகைய ஊதியமும் பெறவில்லை என்றும், அரசனது அவைக்களத்தில் முதலிடம்கூட இதுவரை பெற்றது இல்லை என்றும் கூறினர். உடனே, அவருடைய கண்காணிப்பில் இருந்து வந்த கோயிலை உடைத்தெறிவதற்கு வந்த மக்கள் கூட்டத்தின் முதல்வராக ஓடினர்.

கிறிஸ்துவ சமயத்தை ஏற்றுக்கொள்ளுவதற்காகப் பேசப்பட்ட வேருெரு சிறந்த சொற்பொழிவினைப் பீடு (Bede) தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார். அது எட்வின் அரசரின் மூதறிஞர் மன்றத்தில் (Witan) தேனர் (Thegn) ஒருவர் கிறிஸ்துவ சமயத்தைப் பின்பற்றுவதை ஆதரித்துக் கூறிய கருத்துகளாகும்.

'அரசர் பெருமானே! இந்நிலவுலகில் வாழும் இவ்வுயிரை நாம் அறியாத காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, குளிர் காலத்தில் நீங்கள் இரவு உணவு உட்கொள்வதற்கு மூதறிஞர்களோடும் தேனர்களோடும் அமரும் வீட்டினுள், விரைவாகக் குருவி (Sparrow) ஒன்று பறந்தோடுவதைப் போன்றதாகும். அவ்வீட்டின் மன்றத்தின் நடுவே கொழுந்து விட்டுத் தீ எரிகிறது. அதனுல் மன்றம் கதகதப்பாய் இருக்கிறது. ஆனுல் வீட்டிற்கு வெளியே குளிர்காலத்திய மழையும், மூடுபனியும் விரைந்து வீசிக்கொண்டிருக்கின்றன. குருவி ஒரு வாயிலின் வழியாக உள்ளே நுழைந்து, உடனே மற்ருெரு வாயிலின் வழியாக வெளியே பறந்தோடுகிறது. அது வீட்டினுள்ளே இருக்கின்றபொழுது, குளிர்காலப் புயல் காற்றிலிருந்து அது பாதுகாவலாக இருக்கிறது. ஆனுல், சிறிது நேரம் நல்ல வானிலையில் இருந்துவிட்டு திடீரென்று அது கண்ணுக்குத் தெரியாத நெடுந்தொலைவிற்கு ஒரு குளிர்காலத்தின் வழியாக இன்னெரு குளிர்காலத்திற்குப் பறந்துசென்று விடுகிறது. அதைப்போன்றே இம்மனிதனுடைய உயிரும் குறிப்பிட்ட காலத்திற்கு ஓர் உடலில் பொருந்தி இருக்கிறது. ஆனுல், இனி அது எங்கே போகிறது. அல்லது இதற்கு முன்பு எங்கிருந்தது என்பதைப்பற்றி நாம் ஒன்றுமே அறிய முடியவில்லை. ஆகவே, இந்தப் புதிய சமயக் கோட்பாடு நமக்கு அதைப்பற்றி இன்னும் அதிகமாகவும் தெளிவாகவும் கூறமுடியுமானுல், நாம் அதைப் பின்பற்றி ஒழுகுவது நேர்மையானதாகவே தோன்றுகிறது.'

கிறிஸ்துவ சமயத்தொண்டர்கள், அண்டப் படைப்புத் தோற்றத்தைப் பற்றித் தெளிவான கருத்துகளைக் கொண்டிருந்தனர்.

அவ்வாறே அவர்கள் சுவர்க்கம், நரகம் என்னும் கோட்பாடு களையும் வரையறைசெய்து விளக்கம் தந்தனர். சுவர்க்கத்தை அடைவதற்கு உரிய வழியையும் பற்றி அவர்கள் மக்கள் மனத்தில் பதியுமாறு விளக்குவதில் வல்லவர்களாக இருந் தனர். இவ்வாறு வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளுக்கு மாருகப் பண்டைச் சமயம், மறு பிறப்பைப்பற்றித் தெளிவற்ற கற்பனை கலந்த கவிதை நடையில் விளக்கம் தந்தது. பர்னட்டு நஜால் (Burnt Njal) என்னும் ஐஸ்லாந்துக் கதையில் இவையாவும் தெளி வாக விளக்கப்பட்டுள்ளன. அக்கதையில் புதிதாகக் கொல்லப் பட்ட கன்னர் (Gunnar), கல்லறைக் குவியலினுள், முற்பிறவியில் கடைசியாகத் தான் போரிட்டதைப் பற்றிப் பாடிக்கொண்டிருக் கிருன். அதை அவனுடைய மகன் ஹோக்னி (Hogni) ஒட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிருன்.

'ஒருநாள் கன்னரின் கற்குவியல் (Cavin) இருக்கும் தெற்குப் பக்கமாக ஸ்கார்ப்பெடின் (Skarphedinn) என்பவனும், ஹோக்னி (Hogni) என்பவனும் போய்க்கொண்டிருந்தனர். அந்நேரத்தில் நிலவும், விண்மீன்களும் வானத்தில் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஆனல் அடிக்கடி அவற்றை மேகங்கள் மறைத் துக் கொண்டிருந்தன. திடீரென அவர்கள் கற்குவியல் திறந்து கொண்டு எழுந்து நிற்பதாக நினைத்தனர். உடனே கன்னர் (Gunner) கற்குவியலில் இருந்து எழுந்துநின்ருன். வானத்தில் தவழ்ந்து செல்லும் மதியினைக் கண்கொட்டாது பார்த்துக்கொண் டிருந்தான். கற்குவியலில் நான்கு விளக்குகள் எரிவதைப் போன்று அவர்கள் கண்டனர். அவற்றுள் ஒன்றிலிருந்தும் நிழலே விழவில்லை. கன்னர் முகமலர்ச்சியோடு மகிழ்ச்சியாக இருப் பதை அவர்கள் பார்த்தனர். அவன் உரத்த குரலில் பாட லொன்று பாடினன். அப்பாடல் அவர்கள் நெடுந்தொலைவில் இருந்திருந்தாலும் அவர்களுக்குக் கேட்டிருக்கக்கூடும்.

'போரிலே செங்குருதி மழையாகப் பெய்த பொழுது, அவன் அவ் வெள்ளத்தில் மூழ்கி மகிழ்ச்சியுடன விளையாடினன். உள்ள உரத்தோடும் முகமலர்ச்சியோடும் ஹோக்கினியின் தந்தை தன்னுடைய முடிவைச் சிறிதும் அஞ்சாது வரவேற்ருன். கையிலே கேடயத்தைத் தாங்கிய அவன், 'நான் கடும்போர் புரிந்து, போரினைத் தடுக்க உயிர் விடுவேன்; ஆனல் ஓர் அங்குல நிலமும் பகைவருக்கு விடேன்; விரைவில் மடிவேன்; ஆனல் ஓர் அங்குல நிலத்தையும் பகைவருக்கு விடேன்!' என்று கூறி இறந்தான் என்பதே அப் பாட்டின் பொருளாகும்.

அதற்குப் பிறகு அக் கற்குவியல் தானே மீண்டும் மூடிக் கொண்டது.

புறச்சமயத்தினுள் மூழ்கியிருந்த சமுதாயம் இறப்பதற்கு முன்பு பாடிய கடைசிப் பாட்டாக இதைக் கூறலாம். சில ஆண்டுகளுக்குப் பிறகு கிறிஸ்துவ சமயத் தொண்டர்கள் ஐஸ்லாந்திற்கு வந்தனர். அதுவரை நார்ட்டிக்குப் புறச்சமயக் கோட்டையாக ஐஸ்லாந்து இருந்து வந்தது. அத் தீவின் சிறந்த மனிதர்கள் அனைவரும், சிறப்பாக 'பொய்யே பேசாதே' நஜாலும், கிறிஸ்துவ சமயத்தையும், அதன் திருத்தொண்டர்களையும் ஆதரிக்கலானார்கள்.

ஸ்காண்டிநேவிய புறச்சமயம் மடிவதற்கு நானூறு ஆண்டுகட்கு முன்பே, ஆங்கில-சாக்சானியரின் புறச்சமயம் அழிவுற்றது. கிறிஸ்துவ சமயம் டென்மார்க்கிற்கும், நார்வேயிற்கும் ஐஸ்லாந்திற்கும் செல்லுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, இங்கிலாந்திற்குள் நுழைந்தமைக்கு, அதனுடைய நிலவியல் அமைப்பே காரணமாகும். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் ஸ்காட்லாந்திலிருந்து வந்த கோலம்பா (Columba), எய்டன் (Aidan) என்னும் சமயங்கள் வடக்கிலும் தெற்கிலும் ஆற்றலோடு வளைத்துச் சூழ்ந்து கொண்டமையால், ஆங்கில ஓடன் (Woden) சமயம் எடுத்தெறியப்பட்டது. ரோமாபுரியிலிருந்து கிரிகோரியும், அகஸ்டினும் போற்றிய சமயம் வந்தமையால் அது முற்றிலும் அழித்தொழிக்கப்பட்டது. இப்புறச் சமயத் தாக்குதல் மேற்கிலிருந்தே தொடங்கியிருக்கும் என்று ஒருசிலர் நினைக்கலாம். ஆனால் வெல்ஷ் கிறிஸ்தவர்கள் சாக்சானிய படையெடுப்பாளர்களை இன்றும் வெறுத்தே வந்தனர். அதனால் அப்'பாவி'களின் ஆன்மாக்கள் கடைத்தேற வழிகாட்டுவதற்கு வெல்ஷ் மக்கள் விரும்பவில்லை.

ஆயினும், இங்கிலாந்து கிறிஸ்துவ சமயத்தினைத் தழுவுவதற்கு வெல்ஷ் மக்கள் மறைமுகமாக உதவிபுரிந்து வந்தனர். செயிண்ட் பாட்ரிக்கு (St. Patrick) ரோமானிய நாகரிகத்தில் மூழ்கித் திளைத்த பிரிட்டானியராவர். ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் அவர் செவர்ன் பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதியில் தங்கியிருந்தார். அங்கிருந்த அவரை, அயர்லாந்தைச் சார்ந்த ஸ்காட்டியர்கள் சிறைப்படுத்தித் தூக்கிச் சென்றனர். அதனால், அவர் அயர்லாந்தில் வாழநேர்ந்தது. அப்பொழுது பாட்ரிக்கு அயர்லாந்தைக் கிறிஸ்துவ சமயத்திற்கு மாற்றும் பணியில் (432—461) ஈடுபட்டார். ஆங்கிருந்து புறப்பட்ட கிறிஸ்துவ

சமயம் சுற்று வழியாக மீண்டும் வட இங்கிலாந்திற்கு வந்து சேர்ந்தது. அதை அயர்லாந்திலிருந்து கோலம்பா (Columba) ஸ்காட்லாந்திற்குக் கி.பி. 563-ல் கொண்டு சென்றார். அங்கிருந்து கி. பி. 635-ல் எய்டன் (Aidan) தலைமையில் சமயத் தொண்டர்கள் நார்த்தம்பிரியாவிற்குச் சென்று, அங்குக் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்பினர். இவ்வாறு கெண்ட்டில் அகஸ்டின் (Augustine) காலெடுத்து வைத்த (கி.பி. 597) ஒரு தலைமுறைக்குப் பிறகு பிரிட்டன், ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளில் கிறிஸ்துவ சமயம் நன்கு பரவியது.

கொலம்பாவும், எய்டனும் பரப்பிய ஐரிஷ் கிறிஸ்துவ சமயம், கிரிகோரியும், அகஸ்டினும் பரப்பிய ரோமானிய கிறிஸ்துவ சமயத்திற்குப் போட்டியாக இருந்து வந்தது. ரோமாபுரிக்கு எதிராகப் புதியதொரு திருச்சபையை நிறுவப் பாட்டிரிக்கு (Patrick) நினைக்கவில்லை. அவர் 'பாட்டிரிசியஸ்' (Patricius) என்னும் ரோமானியப் பெயரையுடையவராக இருந்தமையாலும், பழைய பேரரசின் குடிமகனாக வாழ்ந்தமையாலும், செயிண்ட்பாலைப் போன்றே ரோமானியர் வழங்கிய உரிமைகளைப் பற்றிப் பெருமையுடையவராகவே வாழ்ந்தார். அவர் காளில் கல்வி பயின்றார். அது முதல் திருச்சபை ஒன்றினால் சமயத் தொண்டராக அமர்த்தப்பட்டார். அத் திருச்சபை சமயத்தொடர்பான சிக்கல் மிகுந்த பிரச்சினைகளைத் தெளிவாக விளக்கவும், அறவுரை கூறவும், ரோமாபுரியின் பாதிரியாரே தகுதியுடையவர் என்று கருதி வந்தது. இதனால் ரோமாபுரிப் பாதிரியார் பேராதிக்கம் செலுத்தும் பெருந்தலைவராக — போப் ஆண்டவராக மாறவில்லை என்பது புலனாகின்றது. பாட்டிரிக்கு சிறந்த கல்விமானாக இல்லையென்றாலும், இலத்தீன் மொழியின் மதிப்பிடற்கரிய பரிசுகளை அயர்லாந்திற்கு அவர் தம்முடன் கொண்டு வந்தார். அதைக் கெல்ட்டிக்கு இன மக்களின் அறிவாற்றல், சமயத் தொடர்பான கல்வியிலும், உலகியல் அறிவுத் துறைகளிலும் மிகச் சிறந்த முறைகளில் பயன்படுத்தியது. அதனால் அது அறிவுலகில் முன்னேற்றம் அடைந்தது. ஸ்லாவ் (Slav) இனமக்களைக் கிறிஸ்துவ சமயத்திற்கு மாற்றிய வீரத்திருத் தொண்டரான சைரில் (Cyril), அவ்வின மக்களுக்காகப் புதியதொரு கிறிஸ்துவ நாகரிகத்தைப் படைத்துத் தந்தார். அதைப் போன்று பாட்டிரிக்கு புதியதொரு நாகரிகத்தினைப் படைத்துத் தரவில்லை. அதற்கு மாறாக, அவர் அயர்லாந்தை ரோமானிய நாகரிகத்தினுடைய ஒரு பகுதியாகவும், ரோமாபுரியின் கிறிஸ்துவ சமயத்தின் ஒரு பகுதியாகவும் விளங்குமாறு செய்ய விரும்பினார். அவர் அவ்வாறு விரும்பிய காலத்தில், ரோமானியப் பேரரசு மேற்குப் பகுதி

களில் தன்னுடைய ஆதிக்கத்தை இழந்து கொண்டிருந்தது. மக்களுடைய மனத்தில் ரோமாபுரி என்று சொன்னால், கிறிஸ்துவ சமயமே நினைவிற்கு வரத் தொடங்கிய காலம் அது. அயர்லாந்தில் கிறிஸ்துவ சமயம் ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கும். பின்னர் இங்கிலாந்து அதைப் பின்பற்றியமைக்கும், உரிய காரணம் யாதெனில் ரோமாபுரியின் பேரரசு வீழ்ச்சியுறுகின்ற நேரத்திலும், அதனிடத்துக் காட்டுமிராண்டி மக்கள் கொண்டிருந்த சிறப்புமிக்க ஈடுபாடேயாகும். ரோமாபுரிக்குரிய பொருள்கள் அனைத்திலும் அவர்கள் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தனர். தற்கால ஆப்பிரிக்க பழங்குடி மக்கள் கிறிஸ்துவ சமயத்தை விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளுவதற்குக் காரணம் அதை ஐரோப்பாவின் பிரதிநிதியாக அவர்கள் கருதுவதனாலேயேயாகும். இதைப் போன்றே அன்றைய பிரிட்டானியாரும் கிறிஸ்து சமயம் ரோமாபுரியின் 'செல்வக் குழந்தை' என்று கருதிய காரணத்தால், எத்தகைய தடையுமின்றி அதனை ஏற்றுக்கொண்டனர்.

ஆயினும், அயர்லாந்தில் திருச்சபை வெற்றி பெற்று விளங்குமாறு பாட்டிரிக்கு செய்தார். அத் திருச்சபை, அவர் இறந்த பிறகு, ரோமாபுரியினின்று மாறுபட்ட வேறுவழியில் செல்லத் தொடங்கியது. மேற்குப் பகுதியில் ரோமாபுரிப் பேரரசு வீழ்ச்சியுற்றமையும், பிரிட்டனைச் சூழ்ந்துள்ள தீவினில் இலத்தீன் மொழி நிலையங்கள் அடியோடு அழித்தொழிக்கப் பட்டமையும், இத்தாலியினையும், பிரான்சையும் காட்டுமிராண்டி மக்கள் கைப்பற்றிக் கொண்டமையும், குறிப்பிட்ட சிறிது காலத்திற்கு அயர்லாந்தினை நடுநிலக்கடலைச் சார்ந்த நாகரிகத்தினின்று பிரிந்து போகுமாறு — தனித்து விளங்குமாறு செய்தது. அதனால் அயர்லாந்திற்கேயுரிய கெல்ட்டிக்கு திருச்சபையும், நாகரிகமும் தோன்றி வளருவதற்குரிய வாய்ப்புக் கிடைத்தது. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வைக்கிங்குகள் படையெடுத்து வரும்வரை உண்மையில் காட்டுமிராண்டி மக்களின் தாக்குதல் அயர்லாந்தினுள் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய அரிய வாய்ப்பும் வசதியும், பழங்கால ஐரிஷ் கிறிஸ்துவ சமயத்தின் கலைகளும், கற்பனைத் திறனும் இலக்கிய வளமும் மிக்க வாழ்க்கையும் பூத்துக் குலுங்குவதற்குப் பேருதவியாக இருந்தன.

ஐரிஷ் மக்கள் சமுதாயத்திடையே, ஐரிஷ் கிறிஸ்துவ சமயம் தழைத்தோங்கியது. ஆயினும், ஆங்கில-சாக்சானிய கிறிஸ்துவ சமயம், ஐரிஷ் மக்கள் சமுதாயத்தை உருமாற்றவில்லை. ரோமாபுரியின் அதிகாரி வரிசை முறையில், சமய அதிகாரிகளை அமர்த்து

வதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகள் அயர்லாந்தின் சமுதாய அமைப்பில் இடம் பெருமற் போயிற்று. எனவே அங்கு இன்று வரை வட்டாரத் திருச்சபை முறையே குறைந்த அளவில் இருந்து வருகிறது. வைக்கிங்குகள் அங்கு வரும் வரை, அயர்லாந்தில் நகரங்கள் என்பதே இருந்ததில்லை. அயர்லாந்திற்கு ஸ்டிராங்போ (Strong bow) வரும் வரை நிலமானியப் படை முறையும் புகுத்தப் பட்டதாகத் தெரியவில்லை. ஐரிஷ் இனமக்கள் பலதிறப்பட்ட போரும் பூசலும் நிறைந்த பழங்குடிகளாகவே இருந்து வந்தனர். ஒவ்வொரு குடியும் உறவு முறை என்னும் தொடர்பினல் ஒன்ருேடொன்று பிணைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு குடியும் ஒரு தலைவனல் ஆளப்பட்டு வந்தது. அத்தலைவர்களுக்கு மேலாக அரசன் (High King) ஒருவன் தாரா (Tara) என்னும் இடத்திலிருந்து ஆண்டு வந்தான். அவன் முழு உரிமை வாய்ந்த அரசன் அன்று. மேலரசுரிமை வாய்ந்த மன்னனுகவே விளங்கினன். ஐரிஷ் கிறிஸ்துவ சமயம் கட்டாயத்தின் காரணமாகக் இனமரபுக் கூட்டமாகவே இருந்து வந்தது. அது மதகுருவின் வட்டாரத்துக்கு உரியதாக—குறுகிய மனப்பண்புடையதாக இல்லை. ரோமானியர்களின் கருத்துப்படி கூறுவது என்ருல், அது சமய தலைமைக் குருவின் ஆட்சிப் பகுதியாக (Episcopal) இல்லை. ஆயினும் ஏராளமான சிறப்பற்ற பாதிரிமார்கள் சமய ஆட்சிக்குரிய பகுதிகளின்றி இருந்து வந்தனர். அப்பகுதிகளின் உண்மை வாழ்வு மடங்களைச் சார்ந்ததாகவே இருந்துவந்தது. இயல்பான ஐரிஷ் மடம் ஒவ்வொன்றும் தனிப்பட்ட ஓரினப் பழங்குடி மக்களோடு தொடர்புடையதாக இருந்தது. அதனுடைய மடாலயத் தலைவரைக் கட்டுப்படுத்தும் சமயத்தலைமை அதிகாரியாக யாரையும் அம் மடங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

செயிண்ட் பெனிடிக்டின் மரபு ஒழுங்கு (Conventual) விதிகளை கெல்ட்டிக்கு மடாலயங்கள் பின்பற்றவில்லை. மேலும் அவருடைய மடத்தின் பிரதிகளாகவும் அவை இருந்ததாகத் தெரியவில்லை. அவை தொடர்பில்லாத நெடுந் தொலைவிலுள்ள இடங்களில் தோற்றுவிக்கப்பட்ட துறவிகளின் திருக்கூட்டமாகும். அவை பெரிதும் பாறைகள் நிறைந்த மலைப் பகுதிகளிலும், தீவுகளிலும் அமைக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு துறவியும் மிளாறுகளாலும் களிமண்ணுலும் கட்டப்பட்டு, புல்வேய்ந்த குடிசைகளில் வாழ்ந்தனர். ஆனல் அக் குடிசைகள் அனைத்தும் மதில் சூழ்ந்த ஊருக்குள் போக்கு வரத்துக்கும், பாதுகாவலுக்கும் ஏற்ற வண்ணம் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஊருக்கும் மடாலயத் தலைவரே (Abbot) தலைவராக இருந்தார். ஒவ்வொரு துறவியும் பல் திறப்பட்ட கடமைகளிலும் செயல்களிலும் ஈடுபட்டிருந்

தனர். அவர்கள் ஒவ்வொருவரும் துறவிகளாகவும், அறிஞர்களாகவும், கலைஞர்களாகவும், போர்வீரர்களாகவும், சமயத் தொண்டர்களாகவும் பணிபுரிந்து வந்தனர். சிற்சில சமயங்களில், துறவிகள் தங்கள் குடியிருப்புக்குப் புறத்தே உள்ள ஊர்களுக்குத் தனித் தனியே சென்று மதபோதனை செய்தனர். அவர்கள் ஊர்மக்களிடையே உண்டான குலப் பகைமையினைப் போக்க முயன்றனர்; தங்களினத்தவருக்குள்ளே போருண்டானால் அவர்கள் அப்போர்களுக்குத் தலைமைத் தாங்கி எதிரிகளை அழித்தொழிப்பதிலும் ஈடுபட்டனர். சிற்சில சமயங்களில் துறவிகள் மடங்களில் அமர்ந்து ஏட்டுச் சுவடிகளைப் படி எடுத்தும், மங்கிப் போன சுவடிகளைப் பொலிவு பெறுமாறு 'பாடம்' செய்தும் தொண்டு புரிந்தனர். இன்னும் சில சமயங்களில் அவர்கள் மிகவும் தனிமையான இடத்தை நாடிச்சென்று தியானத்தில் ஆழ்ந்து விடுவர். செயிண்ட் கத்பர்ட்டு (St. Cuthbert) இவ்வாறு தனிமையை நாடித் தன் சோதரத் துறவிகளை லின்டிஸ் பார்னே (Lindis Farne) விலிருந்து விட்டுப் பிரிந்தார். அவர் அங்கிருந்து நெடுந் தொலைவில் மக்கள் நடமாட்டமே இல்லாமல் இருந்த பார்னே தீவுகளுக் (Farne Islands) குச் சென்றார்.[1]

இவ் ஐரிஷ் மடாலயத் துறவுநெறி, தாயகத்திலும், அது சென்று தொண்டாற்றிய நாடுகளான ஸ்காட்லாந்திலும், நார்த்தம்பிரியாவிலும் ஏராளமான திருத்தொண்டர்களைத் (Saints) தோற்றுவித்தது. அவர்களுடைய கதைகளுள் பெரும்பாலானவை பீடுவினால் பேணிக் காப்பாற்றப்பட்டுள்ளன. அவை யாவும் புதுமை மிக்க கவர்ச்சியுடையனவாக உள்ளன. எய்டன், கத்பர்ட்டு ஆகிய இருவரின் புராணக்கதைகளிலும் அருணோதயத்தின் புதுமையும், ஒளியும் விட்டுவிட்டு ஒளிர்வதைக் காணலாம். இத்தகைய மடாலயத் துறவு நெறியினரே "கெல்சின் திருநூலை" (Book of Kells) உலகிற்கு அளித்தனர். ஆனால் லின்டிஸ் பார்னேவின் கையெழுத்துச் சுவடிகளை எழுதிப் போற்றும் கலைமுறை பாராட்டத்தக்கது. கெல்ட்டிக்கு, சாக்சானிய அலங்கார முறைகள் ஒருங்கிணைந்தும், தெற்கு நாடுகளிலிருந்து வந்த கிறிஸ்துவ சமய மரபுகள் சேர்ந்தும் அக் கையெழுத்துச் சுவடிகளைப் பேரழகும், பெரு

[1] செயிண்ட் கத்பர்ட்டு கி. பி. 664-ல் ரோமாபுரிக்கு அடிபணிந்தார். ஆனால் அவருடைய வாழ்க்கையில் ஸ்காட்டிய ஐரிஷ் கிறிஸ்தவ சமயத்தின் பழக்க வழக்கங்களும், மரபுகளும் பேராற்றல் வாய்ந்தனவாக இருந்தன. இத்தகைய பழக்க வழக்கங்களும் பீடினிடத்தும் (Bede) அழியாமல் இருந்தன. அதனால்தான் 'ஆங்கிலேய மக்களுடைய திருச் சபையின் வரலாற்றினை' எழுதுவதற்கு அவர் சிறப்பு மிக்க பொருத்தம் உடையவராக விளங்கினார்.

வனப்பும் உடையனவாக ஆக்கியுள்ளன. தெற்கு ஐரோப்பாவில் முழுவதும் இறந்துபோன சமயச் சார்பற்ற தொன்மை இலக்கியக் கல்வியினை, ஐரிஷ் துறவிகள் மறுமலர்ச்சி அடையுமாறு செய்தனர். மாண்புமிக்க போப்பு கிரிகோரி (Pope Gregory) இலத்தீன் மொழி இலக்கணத்தையும், பாடல்களையும் பயின்ற காளிக்குப் பாதிரியார் ஒருவரைக் குற்றங்கூறித் தண்டித்துக் கொண்டிருந்த நேரத்தில்தான், ஐரிஷ் கிறிஸ்துவர்கள், போப் பாண்டவரின் சட்ட திட்டங்களைப்பற்றி மக்கள் கேட்டிராத நெடுந் தொலைவிற்கு அப்பால் ஒரு மூலையில் இருந்துகொண்டு தங்கள் உலகிற்கு (நாட்டிற்கு) அறிவுச்சுடர் கொளுத்த விரும்பி இலத்தீன் மொழியினையும், இலக்கியத்தையும் போற்றியாதரித்த தோடு நாட்டிலே பரப்பியும் வந்தனர். அவ்விடத்திலிருந்து அவர்கள் பெனிடிக்ட்டு பிஸ்காப்பும் (Benedict Bishop), பீடுவும் வாழ்ந்த இங்கிலாந்திற்கு அவற்றை எடுத்துச்சென்று பரப்பினர். அங்கு அவை பெரும் பயனளித்தது. இறுதியாக, சார்லமேவின் (Charlemagne) ஆட்சிக்காலத்தில் கல்வியறிவில்லா ஐரோப்பியப் பெரு நிலப் பரப்பினை அது மீண்டும் கைப்பற்றுவதற்காகக் கடல் வழியாக அல்சியனு (Alciun)ல் திரும்பக்கொண்டு செல்லப் பட்டது.

ஐரிஷ் திருச்சபை மக்களுக்கு ஸ்காட்லாந்து, இங்கிலாந்து, ஐரோப்பா ஆகிய மூன்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளன. ஆயினும், அவர்கள் தங்கள் நாட்டின் மக்களை நாகரிகம் அடையுமாறு செய்வதற்குச் சிறிதும் முயலவில்லை; தங்கள் பழங்குடி மக்களை நன்முறையில் திருத்தி அமைக்கவும் இல்லை என்பதும், அப் பழங்குடி மக்கள் என்றும் போலவே காட்டு மிராண்டிச் செயல்களில் ஈடுபட்டு வந்தனர் என்பதும் குறிப்பிடத் தக்கனவாகும். கெல்ட்டிக்கு திருச்சபையின் குறை களும் நிறைகளும் ஒன்ரேடொன்று நெருங்கிய தொடர்புடையன வாகும். அத் திருச்சபை உரிமைகளின் பரப்பும், தனி மனிதன் தேர்ந்தெடுக்கும் முறையும் ஓரமைப்பு தளர்ச்சியுற்ற நிலையில் உள்ளதை உணர்த்துகின்றன. அதனல் திருச்சபையின் பொன்னுன முதல் தூண்டும் ஆற்றல் முழுவதும் செலவழிக்கப் பட்ட பிறகு, அது ஆற்றல் அற்றதாகவே போயிற்று என்பது புலனுகின்றது.

உல்ஸ்டரிலிருந்து (Ulster) ஸ்காட்லாந்தின்மீது படை யெடுத்த கிறிஸ்துவ சமயத்தின் நிலை அவ்வாறிருந்தது. இங்கிருந்து புறப்பட்டுச் சென்ற சமயத்தொண்டர் குழாத்தினுள் பேராற்றல் வாய்ந்தது கி.பி. 563-ல் சென்றதாகும். அக் குழு


விற்குப் போர் வீரராகவும், அரசியல் தலைவராகவும், துறவி யாகவும், சிறப்புற்று விளங்கிய செயிண்ட் கொலம்பா (St. Columba) அக் குழுவின் தலைவராகச் சென்றார். செயிண்ட் கொலம்பா ஐரிஸ் மடாலயக் குறிக்கோளின் சிறப்பு மிக்க தலைவரும், பிறருக்கு எடுத்துக் காட்டாக அமைந்த மடாதி பதியுமாவார். ஸ்காட்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கு அப்பால் உள்ள அயோனு (Iona) தீவில், அவர் குடிசைகளைச் சிறுசிறு கூட்டமாகத் தேனடைகளைப் போல் அமைத்தார். அங்கிருந்து சமயத் தொண்டர்கள் வடக்குப் பிரிட்டனுக்குப் பேரளவில் சென்றனர். ஒவ்வொரு பருவந்தோறும் அயோனு தீவிற்கு அவர்கள் வந்து ஓய்வு எடுத்துக்கொண்டனர்; பொதுவாகத் தங்களுக்குள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். அவ்வப் போது அவர்கள் தனிமையில் தியானத்தில் ஆழ்ந்தனர்.

பிற்கால ஸ்காட்லாந்து கொலம்பாவின் காலத்திலேயே, இருபெரும் பிரிவுகளாகப் பிரிந்து இருந்தது.[1] ஒரு பகுதியில் கெல்ட்டிக்கு இனமக்களும், மற்றொரு பிரிவினில் சாக்சானியரும் வாழ்ந்து வந்தனர். தாழ்நிலங்களின் தென்கிழக்கு மூலையில் சாக்சானியர் தங்கள் குடியிருப்புகளை அமைத்திருந்தனர். இவ் வளமிக்க மாவட்டம் பிற்காலத்தில் 'லோத்தியன்' (Lothian) என்றும் பெயர்பெற்றது. அது நார்த்தம்பிரியா அரசின் வடக்குப் பகுதியாகும். அக்காலத்தில் நார்த்தம்பிரியா அரசு ஹம்பரிலிருந்து (Humber) போர்த்து கழிமுகம் வரையில் பரவி யிருந்தது. நார்த்தம்பிரியாவின் அரசரான எட்வின் (Edwin), எட்வின்பரோ (Edwin Burgh) நகரினைப் (இக்காலத்திய எடின் பரோ நகரம்) புகழ் மிக்க மலைமுகட்டில் அமைத்துக் கோட்டை கொத்தளங்களைக் கட்டிச் சிறந்ததொரு நகரமாக்கினர். அது ஸ்காட்லாந்தின் வட எல்லைப் பகுதியில் நாடுகாவலுக்காக அமைக்கப்பட்ட சாக்சானிய அரசின் எல்லைப்புறக் கோட்டை யாகும். வடக்குப்பகுதியும், மேற்குப்பகுதியும், பிற்கால ஸ்காட் லாந்தின் நடுப்பகுதியும் இன்னும் கெல்ட்டிக்கு இனமக்கள் வாழும் நாடாகவே இருந்துவருகிறது. நாளடைவில் அது பெரிதும் மக்களினத்தில் மாற்றமுண்டாக்காமலே, சாக்சானிய மொழியினை யும் நாகரிகத்தினையும் தனக்குரியதாக ஏற்றுக்கொண்டது. ஸ்காட்

[1] இங்கிலாந்து, ஸ்காட்லாந்து என்னும் பிரிவுகள் ரோமானிய ஆட்சிக் காலத்திலேயே அரைகுறையாக உருவாகியது. ஆனால் இருண்ட காலத்தில் அப்பாகுபாடு தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. சாக்சானிய நார்த்தம்பிரியாவும் செவியட்டு எல்லையின் கிழக்குப் பகு தியும் ஒன்றோடொன்று சந்தித்தன. அதன் மேற்குப் பகுதியினை கெல்ட் டிக்கு ஸ்டிராத்கிளைடு சந்தித்தது. ஸ்காட்லாந்தில் என்றுமே உள் நாட்டு ஒற்றுமை இருந்தது இல்லை.

லாந்தின் வரலாறு பெரும்பாலும் கெல்ட்டிக்குகளை ஆங்கிலேய மயமாக்கும் வரலாறுகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. தென் கிழக்குத் தாழ்நிலங்களில் ஆங்கில-சாக்சானியர் முதன் முதல் தங்கள் குடியிருப்புகளை அமைக்காமல் இருந்திருந்தால், ஸ்காட் லாந்து கெல்ட்டிக்கு இன மக்களுடைய நாடாகவும், காட்டு மிராண்டி மக்கள் வாழும் நாடாகவுமே இருந்திருக்கும். அதன் பயனுக ஸ்காட்லாந்தினுடைய பிற்கால வரலாறும், இங்கிலாந் தோடு ஸ்காட்லாந்து கொண்ட தொடர்பும் அயர்லாந்து அல்லது வேல்சின் கதையைப் போல நெருங்கிய ஒப்புமை உடையதாக இருந்திருக்கும்.

நார்த்தம் பிரியாவைச் சேர்ந்த சாக்சானியர், எட்வின் அரசரின் ஆட்சிக் காலத்திலும் பகைமையுடைய குடியேறி களாகவே கருதப்பட்டனர். டிவிட்டு ஆற்றின் மேலைப் பகுதியிலும், வடக்குப் பகுதியின் எல்லையிலும் இடைவிடாது, கெல்ட்டிக்கு இன மக்களோடு அவர்கள் போராடிக் கொண்டிருந்தனர். கெல்ட்டிக்கு மக்களினமும் இடைவிடாது தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டிருந்தது. கெல்ட்டிக்கு இனத்தவரிடையே எண்ணற்ற பழங்குடி மக்கட் பிரிவுகளும், உட்பகையால் உண்டான சிறு குழுக்களும் இருந்து வந்தன. ஆயினும் பொதுவகையில் மூவகை இனப் பிரிவுகள் கெல்டிக்கு மக்களிடையே இருந்ததாகத் தெரிகிறது. ஸ்காட் லாந்தின் வடபகுதியிலும், காலோவேயிலும் (Galloway) பிக்ட்ஸ் என்னும் பிரிவினைச் சார்ந்தவர்கள் வாழ்ந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் கோல்டெலிக்கு கெல்ட்டிக்கு குடி மரபைச் சார்ந்தவர்களாக இருந்திருக்கலாம். ஸ்டிராத்கிளைடில் வாழ்ந் தவர்கள் பிரிட்டானிய கெல்ட்டிக்குகள் என்பவராவர். இறுதி யாகஅயர்லாந்திலிருந்து வந்த ஸ்காட்டுகள் டால்ரியடா என்ற இடத்தில், அதாவது தற்கால அர்கைல்ஷையர் (Argyllshire) என்னும் இடத்தில் தங்கள் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். கடல் கடந்த நாட்டிலிருந்து வந்து குடியேறிய ஸ்காட்டுகள் (Scots) இத்தீவிற்குத் தங்கள் பெயரினை வழங்கும் நற்பேறு பெற்றிருந்தனர். ஆனல், அவர்கள் தங்கள் நாகரிகத்தை அந்நாடு முழுவதற்கும் அளிக்கும் வாய்ப்பினைப் பெருமற் போயி னர். முதலாம் ஜேம்ஸ் ஆட்சிக்காலத்தில் புராட்டஸ்டண்டு கள் உல்ஸ்டரில் (Ulster) குடியேறியதும், அண்மைக்காலத்தில் கிளைடிசைட்டில் ஐரிஷ் மக்கள் குடியேறியதும், மேற்கு ஸ்காட் லாந்திற்கும், வடகிழக்கு அயர்லாந்திற்கும் இடையே நெடுங்கால மாக இருந்து வரும் தொடர்பு, அவற்றின் வரலாற்றில் ஊடுரு விச் செல்லும் உயிர்ப்பண்பினைப் புலப்படுத்துகின்றது.




படம் 7

**இருண்ட காலத்திய ஸ்காட்லாந்தும்**
**நார்த்தம்பிரியாவும்**

கோலம்பா, ஐரிஷ் ஸ்காட்டிய இனத்தைச் சேர்ந்தவராவர். அவர் டால்ரிட்டா (Dalrida) வில் வாழ்ந்த அவருடைய ஸ்காட்டிய தோழர்களிடத்துப் பெருஞ் செல்வாக்குபெற்று விளங்கினர். அதைப் போன்றே அவர் வடக்கில் வாழ்ந்த பிக்ட்ஸ் மக்களிடத்தும் பெருஞ் செல்வாக்குடையராகத் திகழ்ந்தார். ஸ்டிராத் கிளேடியைச் சார்ந்த பிரிட்டானியர்கள் பையப்பையவே புதிதாக வந்த கிறிஸ்துவ சமயத்தைப் பின்பற்றத்தொடங்கினர். கி. பி. ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் அயோனவைச் சேர்ந்த கிறிஸ்துவ சமயம் கெல்ட்டிக்கு ஸ்காட்லாந்தைச் சார்ந்த பழங்குடி மக்களேயும், அவர்களுடைய தலைவர்களேயும் உறுதியாகப் பற்றிக்கொண்டது. ஆனல் நார்த்தம்பிரியாவைச் சேர்ந்த சாக்சானியர் உறுதியாகக் கிறிஸ்துவ சமயத்தைப் பின்பற்றுது கிடைக்கும் வெற்றி தோல்விகளேயும், தங்கள் அரசர்களின் தனிப்பட்ட விருப்பத்திற்குரிய சமயத்திலேயும் வாய்ப்புகளாகக் கொண்டு ஓடன் (Woden) வழிபாட்டிற்கும், பாலினஸ் (Paulinus) போதித்த ரோமானிய கிறிஸ்துவ சமயத்திற்கும் இடையே எதையாகிலும் ஒன்றைச் சமயத்திற்கும், சூழ்நிலேக்கும் ஏற்பப் பின்பற்றி வாழ்ந்துவந்தனர். செயிண்ட் அகஸ்டினுடைய தொண்டர்களுள் ஒருவரே பாலினஸ் என்பதை நாம் மறத்தலாகாது. நார்த்தம்பிரியா, ஸ்காட்டிய-ஐரிஷ் கிறிஸ்துவர்களால் கிறிஸ்துவ சமயத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்பு, இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் அகஸ்டின் செய்து வந்த சமயத் தொண்டின் திறத்தை நாம் அறிவது நல்லது. இது இங்கிலாந்தின் மீது கிறிஸ்துவ சமயம் படையெடுத்து வந்த வரலாற்றின் பிறிதொரு பகுதியாகும்.

போப்பு ஆண்டவர்களுள் முதல்வரான மாண்புமிக்க கிரிகோரி, இடைக்காலத்தில் போப்பு ஆண்டவரின் ஆட்சியை முதன் முதல் நிறுவிய பெருமையுடையவராவர். கி. பி. 590-ல் வீழ்ச்சியுற்ற ரோமானியப் பேரரசின் அழிவுச் சின்னங்களேச் சுற்றிலும் வெற்றி முரசு கொட்டும் காட்டுமிராண்டிகள் அழிவு வேலேகளில் ஈடுபட்டிருந்த பொழுது தற்காப்பில்லாத, வறுமையுற்ற ரோமானிய சமயத்தின் வட்டார ஆட்சிப் பொறுப்பினேக் கிரிகோரி ஏற்றுர். பன்னிரண்டு ஆண்டுகளில் மறைந்து போன ரோமாபுரிப் பேரரசிற்கு மேற்கில் எத்தகைய மதிப்பிருந்து வந்ததோ, அந்த அளவிற்கு அவர் போப்பு ஆண்டவரின் ஆதிக்கத்தை மனித இனத்தின் கற்பனேயிலே உயர்ந்து விளங்குமாறு செய்தார்.

ஐரோப்பாவின் தலைமைப் பதவி பாமர மக்களிடமிருந்து மதகுருமார்களின் கைகளுக்குச் சென்ற வரலாற்றினை விளக்கும் வகையிலேயே கிரிகோரியின் வாழ்க்கை வரலாறு காணப்படுகிறது. அவர் வளமிக்க ரோமானிய உயர்குடி (Patrician) மகனாக வாழ்க்கையைத் தொடங்கினார். சிறிது காலத்திற்குத் தம்முடைய ஆட்சியில் அறிவாற்றல் நன்கு விளக்கம் பெறுமாறு ரோமாபுரி நகரின் அரசியல் துறைத் தலைவராக (Prefect of the city) அலுவல் புரிந்தார். திடீரென்று அவர் தம்முடைய சமூகச் சிறப்புரிமைகளையும், அரசியல் கடமைகளையும் துறந்து விட்டார். பிறகு கெய்லியன் மலைக்கு (Caelian Hill) அவர் அமைதிமிக்க துறவியாகச் சென்று தங்கினார். அதன் பிறகு அவர் ரோமாபுரியின் பாதிரியாக உயர்த்தப்பட்டார். அந்நிலையில் அவர் சீசரின் அறிவுத்திறனையும், அகஸ்டினுடைய அமைப்புத் திறனையும் கைக்கொண்டு திருச்சபையின் வரலாற்றையே மாற்றியமைத்தார். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்த திருச்சபைகளுக்கு, அக்காலத்திய சமயத்திலும், அரசியலிலும், சமுதாயத்திலும் உண்டான சிக்கல்களைக் குறித்து கிரிகோரி எழுதி அனுப்பிய கடிதங்களை, அத்திருச் சபைகள் போப்பின் சட்ட வரம்பான ஆதிக்கத்திற்கு அடங்கி நடக்க வேண்டும் என்ற காணத்திற்காக ஏற்றுக்கொள்ள வில்லை. அதற்கு மாறாகப் போப்பு ஆண்டவரின் சொற்களை ஒப்பற்ற அறவியல் ஆணையுரிமை உடையதாகக் கருதினர். போப்பு ஆண்டவரின் ஆதிக்கம் என்பது 'அழிந்து போன ரோமானியப் பேரரசின் பூதமே அக் கல்லறையின்மீது போப்பு ஆண்டவராக முடிசூடி அமர்ந்திருக்கிறது' என்று ஹோப்ஸ் (Hobbes) குறிப்பிட்டதைப் போன்று அது உயிருடன் வாழுகின்ற பூதமாக இருந்தது; அது வெறும் கற்பனையின் தோற்றமாகக் காட்சி அளிக்க வில்லை. மேற்கில் ரோமாபுரிப் பேரரசின் ஆட்சியதிகாரம் அழிந்தது முதல் அங்கு வாழ்ந்து வந்த அரசர்களும் பாதிரிமார்களும், துறவிகளும், மக்களும் ஒரு பூதத்தின் மேலாதிக்கத்தை வேண்டி நின்றனர். அம்மேலாதிக்கத்தினால் பேரழிவும் பெருங் கொடுமையும் உலகில் உண்டாக்க வேண்டும். அப்பொழுதுதான் அல்லல் மிக்க உலகில் முன்னேற்றத்தையும், உடன்பாட்டையும் அறத்துறை நடுநிலைமையையும் நிலைநாட்ட முடியும் என்று மக்கள் நம்பிவந்தனர். பழைய ரோமாபுரியைப் பற்றிப் புதிதாக எழுந்த கருத்து, ஆங்கில–சாக்சானியருடைய இங்கிலாந்தினை நிலைக்களமாகக் கொண்டதாகும்.

மாண்புமிக்க கிரிகோரியின் சிறப்பு மிக்க கருவியாக மட்டும் அகஸ்டின் விளங்கவில்லை. 'அகஸ்டின்' ஆங்கிலிகளை', 'ஏன்ஜில்களாக' — தேவ தூதர்களாகமாற்றுமாறு தனிப்பட்ட முறையில்

கிரிகோரி ஊக்குவித்தார். இடர்ப்பாடு மிக்க தங்கள் திருப் பயணத்தினை இனிமேல் தொடர முடியாது' என்ற முடிவுடன் அகஸ்டினும், அவருடைய தோழர்களும் ரோமாபுரிக்குத் திரும்பி வந்தனர். கிரிகோரி அவர்களை அழைத்து எச்சரிக்கை செய் தும், துணிவூட்டியும் மீண்டும் திருப்பயணத்தைத் தொடங் குமாறு தூண்டினார்.

கெண்ட்டு (Kent) அரசிலுள்ள தேனட்டிற்கு அகஸ்டின் கி.பி. 597-ல் முதன் முதலாக வந்து சேர்ந்தார். அப்பொழுது அங்கு வாழ்ந்த மக்கள் இயேசு பெருமானின் நற்செய்தியை ஏற்பதற்குத் தயாராக இல்லை. ஆங்கில நாட்டு அரசுகளுள் மிக்க நாகரிகம் அடைந்ததாகக் கெண்ட்டு இருந்தது. மேலும், அது கிறிஸ்துவ சமயத்தை ஏற்றுக் கொண்ட பிரான்சோடு நெருங்கிய தொடர் புடையதாகவும் இருந்துவந்தது. ஈதல்பர்ட்டு (Ethelbert) என் னும் அரசர் கெண்ட்டை ஆண்டு வந்தார். அவருடைய மனைவி கிறிஸ்துவ சமயத்தை மேற்கொண்ட பிராங்கிய (Frank) இனத் தைச் சேர்ந்தவளாவாள். அக்காலத்திய நார்ட்டிக்கு இனமக்கள் தாம் மேற்கொண்டொழுகிய மூட பக்தி வாய்ந்த சமயத்திடத் தும் உண்மையான பற்றுதல் கொண்டு இருந்ததாகத் தெரிய வில்லை. அதனால்தான் அடிக்கடி அரசர்களுடைய கிறிஸ்துவ சம யத்தைச் சார்ந்த மனைவியர், அவர்களை மக்களினத்தின் மிக்க நாக ரிக மடைந்த பகுதியினரின் சமயமாகிய கிறிஸ்துவத்தைப் பின் பற்றுமாறு தூண்டினர். அவ்வாறு அரசர்கள் புதிய சமயத்தைப் பின்பற்றத் தொடங்கியதைக் குடிமக்கள் எதிர்ப்பதும் மிக அரி தாகவே இருந்தது.

இங்கிலாந்தினைக் கிறிஸ்துவ சமயத்திற்கு அகஸ்டின் மாற்ற வில்லை. அவர் கெண்ட்டினை மாற்றினார். காண்ட்டர்பரியில் சமய ஆட்சி அலுவலகத்தை நிறுவினார். அதன் மூலம் பிற்காலத்தில் ரோமானிய கிறிஸ்துவ சமயம் பிரிட்டன் முழுவதும் பரவுவதற் குச் சிறந்ததொரு அடிப்படையை அமைத்துத் தந்தார். கெண்ட் டிற்கு வெளியே முதலில் கிறிஸ்துவ சமயம் மிக மெல்லவே பர வியது. செவர்ன் ஆற்றின் கழி முகத்தில் வெல்ஷ் கிறிஸ்துவ குருமார்களும், ரோமானியக் கிறிஸ்துவ சமயத்தினரும் ஒரு மாநாடு கூட்டினர். மாநாட்டில் ரோமானிய திருச்சபையின் தலை மைத் தொண்டராகிய அகஸ்டின் பிரிட்டனிலுள்ள கிறிஸ்துவர் கள் அனைவருக்கும் தானே தலைவனாக இருக்கத் தகுதியுடையவன் என்று உரிமை கொண்டாடியதை வெல்ஷ் குருமார்கள் வன்மை யாக எதிர்த்தனர். அதனால் இரு திறத்தாரும் மனநிலையில் தடு மாற்றமுற்று உணர்ச்சி வயப்பட்டனர். சாக்சானிய சிற்றரசு

களின் ஆதிக்கத்திற்கு உட்படாது, தனித்து மீண்டும் தனிச் சிறப்புடன் வரலாற்றேட்டில் தோன்றத் தொடங்கிய லண்டன் மாநகரக் குடிமக்கள், சில ஆண்டுகள் கழித்து, கிறிஸ்துவ சமயத் தொண்டர்களைத் தங்கள் நகரத்திலிருந்து வெளியேற்றினர். கிரிகோரி, லண்டன் மாநகரைச் சமயத்திருநகராக — தலைநகராகக் கொள்ளாது காண்ட்டர்பரியிலே சமயத் தலைமை அலுவலகத்தை நிறுவியதற்குக் காரணம், லண்டன் மக்களிடை மூடபக்தி வாய்ந்த ‘பேகனிசம்’ (Paganism) என்னும் சமயம் செல்வாக்குற்றிருந்தமையாகும்.

கெண்ட்டிற்கு வெளியே ரோமானிய கிறிஸ்துவ சமயம் முதன் முதல் பெற்ற சிறப்பு மிக்க வெற்றி குறிப்பிடத்தக்கதாகும். பாலினஸ், நார்த்தம்பிரியாவின் அரசரான எட்வினைக் கிறிஸ்துவ சமயத்தைச் சார்ந்த அவ்வரசரின் மனைவி ஒருத்தியின் உதவியால் கிறிஸ்துவ சமயத்திற்கு கி. பி. 627-ல் மாற்றியமை ரோமானிய கிறிஸ்துவ சமயத்தின் மாபெரும் வெற்றியாகும். எட்வின் ஹம்பரிலிருந்து (Humber), போர்த்து துறைமுகம்வரை பரவியுள்ள நாட்டை ஆண்டு வந்தமையாலும், அவருடைய ஆட்சிக்குட்பட்ட றுகுநில மன்னர்கள் இங்கிலாந்தின் பிறபகுதிகளிலும் இருந்து வந்தமையாலும், கிறிஸ்து பெருமானின் திருச்சமயம் இங்கிலாந்தின் பாதிக்கு மேற்பட்ட பகுதியை எளிதில் கைப்பற்ற முடிந்தது.

ஆயினும், அரசனது அவைக்களத்திற்கு வெளியே, சமயத் தொண்டர்களின் கருத்துகளும், கொள்கைகளும் வேரூன்றவில்லை. மக்களுடைய உள்ளத்தில் அவை ஆழ வேரூன்றவில்லை. அடுத்த தலைமுறையினர் இச் சமயத்தைப் போற்றி ஆதரிக்கத் தொடங்கிய வரையில், அது இங்கிலாந்தில் நிலைத்த வாழ்வைப் பெறப் போராட வேண்டியதாயிற்று. அக்காலம் வரை போட்டி மிக்க அரசர்களின் விருப்பத்திற்கும் அல்லது அவர்கள் இறந்துவிட்டால் புதிதாக அரசனாகும் ஒருவனுடைய கருத்திற்கும் இணங்க ரோமானிய கிறிஸ்துவ சமயத்தின் வாழ்வு ஊசலாடிக் கொண்டிருந்தது. மெர்சிய (Mercia) அரசு இங்கிலாந்தில் எழுச்சி பெறத் தொடங்கிய நாள் முதல், நெருக்கடியான முப்பதாண்டுக் காலத்திற்கு நார்த்தம்பிரியா தன்னுடைய மேலாண்மையை நிலைநாட்டத் தொடர்ந்து போரிட வேண்டியதாயிற்று. இத்தகைய அரசியல் நோக்கங்களுக்காக நடந்த போர்கள் கிறிஸ்துவிற்கும், ஓடனுக்கும் இடையே போராட்டத்தைத் தோற்றுவித்தன. மெர்சியாவின் அரசரான பெண்டா (Penda), ஓடனின் சமயத்தினைக் காப்பதற்கு முனைந்து நின்றார். அதே காலத்தில்

கிறிஸ்துவ சமயத்தைப் போற்றி ஆதரிக்க நார்த்தம்பிரியாவின் அரசர்களான எட்வினும், ஒஸ்வால்டு (Oswald) ம் முன்வந்தனர். அவ்விருவரும் கிறிஸ்துவ சமயத்தைக் காப்பதற்காகப் பெண்டாவோடு போரிட்டபொழுது உயிர்துறந்தனர். இதனால் இறுதியில் மெர்சியா வெற்றி பெற்றது. ஆயினும் அது கிறிஸ்துவ சமயத்தின் வெற்றியைத் தடுக்க முடியவில்லை.[1] இப்போராட்டத்தைச் சமயப்போர் என்று கூறமுடியாது. பெண்டா கிறிஸ்துவ சமயத்தினரைத் துன்புறுத்தவில்லை. பிற்காலத்தில் ஓடன் வழிபாட்டினைப் பின்பற்றி வாழ்வதற்குக் கிறிஸ்தவர்கள் தடைவிதித்தனர். அதைப்போன்று பெண்டா கிறிஸ்துவ சமயத்தைப் பின் பற்றக்கூடாது என்று தடை ஒன்றும் விதிக்கவில்லை. 'அரசர் பெண்டா, மக்களிடையே இயேசு பெருமானின் திருமொழிகளைப் பிரசாரம் செய்வதற்கு உரிமை அளித்தார். விருப்பம் உடையவர்கள் அவற்றைக் கேட்பதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. ஆனால் அதற்கு மாறாகத் தாங்கள் வழிபடும் ஓடன் தெய்வத்திடத்து உண்மையான பற்றுதல் இல்லாது வாழ்ந்தவர்கள், கிறிஸ்துவ சமயத்தைப் பின்பற்றத் தொடங்கியதைப் பெண்டா வெறுத்ததோடு, அவர்களை இழித்தும் பழித்தும் பேசலானார். தங்கள் கடவுளைப் புறக்கணித்த இக்கயவர்கள், கிறிஸ்துவ சமயத்திடத்து உண்மையான உறுதிப்பாடுடையவர்களாக இருப்பது அரிது.' என்று பீடு (Bede) என்பவர் மொழிந்துள்ளமை பெண்டாவின் பண்பட்ட உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

நார்த்தம் பிரியாவை எதிர்த்துப் பெண்டா போரிட்டபொழுதெல்லாம், வெல்ஷ் கிறிஸ்துவர்களை ஆட்சி புரிந்த கடவல்லோன் (Cad wallon) அவருக்குப்பேருதவி புரிந்து வந்தார்.

[1] கி. பி. 633-ல் ஈத்து பீல்டு போர்க்களத்தில் பெண்டா, எட்வினைத் தோற்கடித்துக் கொன்றார்.

கி. பி. 634-ல் ஆவன் பீல்டு போர்க்களத்தில் ஒஸ்வால்டு வெல்ஷ் அரசனைக் கொன்றார்.

கி. பி. 642-ல் மேசர் பீல்டு போர்க்களத்தில் பெண்டா, ஒஸ்வால்டைத் தோற்கடித்துக் கொன்றார்.

கி. பி. 655-ல் ஒஸ்வால்டின் சகோதரர் ஒஸ்வி, பெண்டாவைத் தோற்கடித்துக் கொன்றார்.

கி. பி. 639-ல் மெர்சியாவின் அரசரான உல்பரே நார்த்தம் பிரியாவின் ஆதிக்கத்தை அழித்தொழித்தார். மெர்சியாவைக் கிறிஸ்துவ சமய நாடாக மாற்றினார்.

நார்த்தம்பிரியாவைச் சேர்ந்த பீடு எழுதிய வரலாற்றிலும் வெஸ்ஸக்ஸ் அரசரான ஆல்பிரட்டின் ஆங்கில-சாக்சானிய காலவழிச் செய்திக்கோவையிலும் மெர்சியாவிற்குரிய முக்கியத்துவமும், அதனுடைய போராற்றலைப் பற்றிய குறிப்பும் தரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அம்மலை வாழ் பழங்குடி மக்கள் தங்கள் இனத்திற்கு உண்டான கேடுகளுக்காக நார்த்தம்பிரியாவின் கிறிஸ்துவர்களைப் பழி வாங்கினர். வெல்ஷ்கள் இழைத்த கொடுமைகள் புறச் சமயத்தைச் சார்ந்த மெர்சியர்கள், தங்கள் சகோதர சாக்சானியருக்குச் செய்த கொடுமைகளைக் காட்டிலும் கடுமையாக இருந்தது. ஆயினும், பெண்டா வெல்ஷ்களின் உதவியைப் பெற்றமையால் அவ்விரு இனத்தவருக்கும் இடையே இருந்து வந்த தடைகள் நாளடைவில் தகர்த்தெறியப் பட்டதாகத் தெரிகிறது. இக்காலத்தில்தான் மெர்சியா, சாக்சானியருடைய ஆட்சியைப் பரப்பத் தொடங்கியது. செவர்ன் பகுதிக்கு அப்பால் இருந்த மெசேட்டஸ் (Magasaetas) என்னும் இடத்தில் சாக்சானியரின் குடியேற்றத்தை அமைத்தது. அக்குடியேற்றத்தின் மேற்குப் பகுதியில் ஒப்பா அரசரின் டைக்கு (Dyke) இதற்கு எல்லையாக இருந்தது.[1]

இத்தகைய போர்களினால் உண்டான அரசியல் விளைவாக நார்த்தம்பிரியா ஆற்றலற்றுப் போயிற்று. மெர்சியா பேராற்றல் மிக்க அரசாக எழுச்சியுற்றது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் மெர்சியா, ஹவைஸ் (Hwice), லிண்ட்சே (Lindsay), நடு ஆங்கிலியா (Middle Anglia) போன்ற சிறிய சாக்சானிய அரசுகளைக் கைப்பற்றித் தன்னுடைய நாட்டின் பரப்பை விரிவு படுத்தியது. எஸ்ஸெக்ஸ், கிழக்கு ஆங்கிலியா ஆகிய இருநாடுகளையும் தன் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்தது. வெஸ்ஸெக்சின் ஆட்சி வரம்பினைத் தேம்ஸ் ஆற்றுக்கு வடக்கே பரவவொட்டாமல் தடுத்து நிறுத்தியது. சிறிய சாக்சானிய அரசுகளை மெர்சியா விழுங்கி விட்டமையால், அவை மீண்டும் உரிமை பெற முயன்றன. அதனால் மெர்சியாவிற்கும் வெஸ்ஸெக்ஸ்க்கும் போருண்டாயிற்று. வைக்கிங்குகளின் வருகைவரை நார்த்தம்பிரியா உரிமையுடைய தனி அரசாக இருந்து வந்தது. எனினும், அவள் அரசியல் தலைமை பெறுவதற்காக நடத்தப்பட்ட போராட்டத்திலிருந்து அந்நாடு ஓய்வு பெற்றது. ஆனால், நார்த்தம்பிரியா கலைகளையும், கல்வியையும், சமயத்தையும் போற்றி வளர்ப்பதில் கத்பர்ட்டு (Cuthbert) பீடு (Bede) ஆகியோரின் காலத்தில் தன்னிகரற்று விளங்கியது. நார்த்தம்பிரியாவின் ஆற்றல் மிக்க கலை வளர்ச்சிக்கு லிண்டிஸ்பானேவின் மறைநூல்களும் பியூகாசலிலுள்ள (Beucastle) சிலுவையும், பிரிட்டிஷ் பழம் பொருட் காட்சிச் சாலையிலுள்ள பிராங்கியரின் பேழையும் சிறப்பு மிக்க சான்றுகளாகும். அக்

[1] பார்க்க: படம் 5.

காலத்திய சாக்சானிய, கெல்ட்டிக்கு இன மக்களுடைய கலை களின் அழகு மிக்க சுருள் முறையும், பின்னணிவண்ண உரு வரைச் சட்டமும் தெற்கு ஐரோப்பியக் கலைமரபின் தொடர்பினால் வளமுற்றது.

ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில் சாக்சானிய இங் கிலாந்தின் அதிகாரம் அனைத்தும் வடக்கிலேயே குவிந்திருந் தமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். தானியங்களைப் பயிரிடும் வயல்களை விட, நிலக்கரியும் இரும்புமே முக்கியமானவை— விலை யுயர்ந்தவை என்று தொழிற் புரட்சி எடுத்துரைக்கும் வரையில் அப் பகுதி வேறு எத் துறையிலும் தலைமைபெற்று விளங்க வில்லை. இங்கிலாந்தின் தெற்குப் பகுதியை வேளாண்மைச் செல் வத்தில் முன்னேற்ற மடையுமாறு செய்வதில், ஆங்கில–சாக்சா னியர் மிகவும் மெல்லவே, ஆனால் நிலையான முன்னேற்றத்திற்கு அடிகோலினர் என்பது தொல்பொருள் ஆராய்ச்சியினால் தெரிய வருகிறது. அவர்கள் அவ்வாறு செய்யும் வரையில் வடக்கே சதுப்பு நிலங்களில் இருந்து வந்த வீரர்கள் இந் நிலப்பகுதியில் நிலையற்ற மேலாண்மை உரிமையை ஒரோவழிக் கொண்டாடிவந் தனர். சுற்றுப்புற அரசுகளின் பிடிகளிலிருந்து லண்டன் மாநகரம் ஓரளவிற்கு உரிமை பெற்றிருந்தாலும், இக்காலத்தில் அது பெருஞ் சிறப்புடையதாக விளங்கவில்லை. டேனியர்கள் இங்கி லாந்திற்குள் நுழைந்த பிறகே,' லண்டன் இங்கிலாந்தின் தலைவி யாகச் சிறப்புறத் தொடங்கினாள். அரசமரபினரின் தலைமை நிலை யமாக என்றுமே லண்டன் விளங்கவில்லை. ஆனால், செல்வத்தின் கருவூலமாகவும், ஆதிக்கத்தின் நிலைக்களமாகவும் பிற்கால வர லாற்றில் லண்டன் பொன்றாப் புகழ் பெற்றது.

பெண்டாவிற்கு எதிராக நடந்த போர்களினால் சமயத்துறை யில் சில மாற்றங்கள் உண்டாயின. முதலாவதாக, நார்த்தம்பிரி யாவிலிருந்து பாலினசு (Paulinus) நிறுவிய ரோமானிய கிறிஸ் துவ சமயம் மறையலாயிற்று. அதற்குப் பதிலாக கி. பி. 653-ல் அரசர் ஓஸ்வால்டின் (Oswald) வேண்டுகோளிற் கிணங்கி அயோனாவிலிருந்து, (Iona) எய்டன் தொண்டர் குழாத்தொடு நார்த்தம்பிரியாவிற்கு வந்து சமயத் தொண்டாற்றினார். மெல் ரோஸ் (Melrose) மடாலயத்தை எய்டன் முதன் முதலாகக் கட்டி முடித்தார். அம்மடத்தில்தான் லோத்தியர் (Lothians) கிறிஸ்துவ சமய அறிவுரையாளர்களாக மாற்றப்பட்டனர். புனிதத் தீவில் (Holy Island) லிண்டிஸ்பர்னே என்னும் மடாலயத்தை, அயோ னாவில் உள்ள மடாலயத்தின் அமைப்பைப் போன்ற சூழ்நிலை யில் எய்டன் நிறுவினார். லிண்டிஸ்பர்னே மடாலயத்தில் எய்-

டனே பாதிரியாகவும், மடாலயத் தலைவராகவும் பணியாற்றினார். இத்தகைய ஆர்வமும் அன்பும் மிக்கவராய், உலகியலைப் பற்றிக் கவலையுறாது சதுப்பு நிலப் பகுதியில் வீரத்திருத் தொண்டு புரிந்த இவர்களுக்குத் துறவற வாழ்க்கை பெரும் மகிழ்ச்சியளிப்பதாகவே இருந்துவந்தமை குறிப்பிடத் தக்கது. அப்பகுதிகளில் வாழ்ந்த சமயத் தொண்டர்கள் முட்புதர்கள் நிறைந்த காடுகளைக் கடந்து நெடுந்தொலைவிற்குச் சென்று நாள் முழுவதும் சமயத் தொண்டு செய்து வந்தனர். மாலைப் பொழுதில் அவர்கள் நெருப்பினை மூட்டிவிட்டு, அதற்கருகில் நின்று மத போதனை புரிந்து வந்தனர். இவ்வாறு அவர்கள் கடும் பனியிலும், மழையிலும், வெய்யிலிலும், ஓயாமல் சமயத் தொண்டு செய்தமை, வடக்குப் பகுதியில் வாழ்ந்த மக்களுடைய உள்ளத்தைக் கவர்ந்தது. கிறிஸ்துவ சமயம் அதன் தொடக்க காலத்தில் மிகவும் கவர்ச்சியுடைதாகத் தோன்றியதைப் போன்று உண்மையில் வேறு எக்காலத்திலும் தோன்றியதில்லை எனலாம்.

ஆங்கிலேய இனத்தினரைக் கிறிஸ்துவராக மாற்றுவதற்கு காண்ட்டர்பரி மடாலயம் ஆற்றிய அரும்பணி அளவிற்கு ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில் அயோனாவிலுள்ள திருச்சபையைச் சார்ந்த துறவிகள் பெருந் தொண்டாற்றியுள்ளனர். இடையில் கிறிஸ்துவ சமயத்தினின்று பழைய சமயத்திற்கு மாறிப் போயிருந்த நார்த்தம்பிரியாவையும், எஸ்ஸக்ஸையும் மீண்டும் அவர்கள் கிறிஸ்துவ சமயத்திற்கு மாற்றினர். மேலும், அவர்கள் மெர்சியாவைக் கிறிஸ்துவ சமயத் தொண்டர்கள் நிறைந்த நாடாக்கினர். ஐரிஷ் துறவிகள் புறச் சமயத்தினர் வாழும் சஸ்ஸக்ஸ் வரையில் தங்கள் குடிசைகளை நிறுவி, சமயப் பிரசாரம் செய்து வந்தனர். ஆனால் அவர்களுடைய அரும்பெருந் தொண்டுகள் அனைத்தும் நெடுங்காலம் நிலைத்து நிற்காமல் போயிற்று. சிறந்த முறையில் அவர்கள் சமய அமைப்புகளையும் நிலையங்களையும் நிறுவி அவற்றைக் கட்டிக் காக்காது போயினர். எனவே, அவர்களுக்குப் பிறகு வந்தவர்களின் சமயப்பணி ஆர்வம் குறைந்தவுடன், அவர்கள் செய்துவிட்டுச் சென்ற அரும் பெருந் தொண்டுகளும் அழிவுற்றன. பீடு என்னும் வரலாற்றாசிரியர் காலத்திலேயே, நார்த்தம்பிரியாவின் உணர்வில் உண்டான மாபெரும் வீழ்ச்சியைப் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார். மடாலய வாழ்க்கை முறை எவ்வாறு சீர்கேடுற்று இருந்தது என்பதையும், எய்டன் காலத்தில் குருமார்கள் பெற்றிருந்த மதிப்பினை எத்துணை அளவிற்கு இக்காலத்திய குருமார்கள் இழந்து விட்டனர் என்பதையும் பீடு தன்னுடைய வரலாற்றேட்டில் குறித்து வைத்துள்ளார். ஆனால், அக்காலத்

திற்குள் இங்கிலாந்து முழுவதும் ரோமாபுரியின் திருச்சபை அமைப்பு வெற்றியுடன் பரவியது. இடை இடையே ஆர்வம் குன்றிப் போனமையால் உண்டான நலிவையும் பொருட்படுத்தாது தொடர்ந்து நின்று நிலவக் கூடிய சிறந்ததொரு அமைப்பாக அது விளங்கியது.

அயோனு சமயத்தொண்டர் குழாம் இங்கிலாந்தில் பெற்ற வெற்றி மீண்டும் கெல்ட்டிக்கு, ரோமானியத் திருச்சபைகளுக்கு இடையே போட்டியையும் பூசலையும் புதுப்பித்தது. செவர்ன் ஆற்றங்கரையோரத்தில் நடந்த பயனற்ற மாநாட்டில், அகஸ்டினும், வெல்ஷ் கிறிஸ்தவர்களும் யாதொரு முடிவிற்கும் வராது. வளர்த்து விட்டுச் சென்ற போட்டியும் பூசலும் மீண்டும் இங்கிலாந்தில் தலைகாட்டத் தொடங்கியது. கெல்ட்டிக்கு திருச்சபை கெல்ட்டிக்கு மக்கள் வாழும் பகுதியில் மட்டும் இருந்துவந்த வரையில், ரோமானியத் திருச்சபை அதை எங்கோ ஒரு மூலையில் கிடக்கும் ஒன்றுக்கும் உதவாத அமைப்பாகப் புறக்கணித்து வந்தது. ஆனல் சாக்சானிய இங்கிலாந்தை எச்சபை உரிமையாக்கிக் கொள்ளுவது என்ற போட்டி உண்டானவுடன், அவ்வழக்கினை நெடுங்காலம் தவிர்க்க முடியாமற் போயிற்று. வெல்ஷ் மக்களைப் போன்றே அயோனுவைச் சேர்ந்த திருச்சபையினரும், ரோமானிய திருச்சபைக்கு மாருக வேருெரு நாளை ஈஸ்டர் விழாவிற்குரிய நாளாகக் கொண்டாடி வந்தனர். அவர்களுடைய குருமார்களான துறவிகள் தலையின் முன்பக்கத்தில் ஒரு காதிலிருந்து இன்னெரு காதுவரை உள்ள மயிரினை மழித்து விட்டிருந்தனர். இம்முறை ஒருகால் துருவீத சமயத்தின் பழைய சின்னமாக இருக்கலாம். அவர்கள் ரோமானியத் திருச்சபைக் குருமார்களைப் போன்று வட்டமாக மழித்த நடு உச்சி மண்டையை உடையவர்களாக இல்லை. இத்தகைய பயனற்ற சிறு சடங்குகளே போட்டியும் பூசலும் உண்டாவதற்குரிய வழக்குகளாகவும், பழி கேடுகளுக்குக் காரணமாகவும் இருந்தன. ஆனல் இவற்றிற்குப் பின்னல் சமய உணர்விலும் அமைப்பிலும் மிக முக்கியமான வேற்றுமைகள் இருந்து வந்தன. அவை அக்காலத்தில் ரோமாபுரிக்கு அடி பணிந்து போவதா என்னும் பிரச்சினையோடு உள்ளடங்கி கிடந்தன.

நெடுநாட்களாக முடிவு செய்யப்படாதிருந்த இவ்வழக்கினை ஒரு பெண்மணி மீண்டும் நாட்டின் ஒரு பெரும் பிரச்சினையாக்கினள். நார்த்தம்பிரியாவினை ஒஸ்வி (Oswy) என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவர் தம்முடைய சகோதரன் இறந்தமையால் முதல் அயோனு திருச்சபையைப் போற்றி ஆதரித்து வந்தார்.

அவருடைய மனைவி, அவர் அயோனு திருச்சபையிடத்துக்கொண்டிருந்த ஈடுபாட்டையும் பற்றையும் பையப்பைய அழித்தொழித்தாள். எனவே கி. பி. 664-ல் ஓஸ்வி, விட்பியில் (Whitby)[1] திருக்கூட்டத்தைக் கூட்டினர். அக்கூட்டத்தில் பீட்டரின் சமயக்குழு ஆற்றிய தொண்டின் வழித்தோன்றலாக ரோமாபுரி விளங்குகின்ற காரணத்தால், அத்திருச்சபையின் உரிமைகளுக்குச் சார்பாக அவர் தீர்ப்பு வழங்கினர். நார்த்தம்பிரியாவின் நண்பர்களால் வேண்டாம் என்று ஒதுக்கப்பட்ட அயோனுவின் திருச்சபைத் தொண்டர்கள் மேற்கொண்டு சிறிதுகாலம் கூட இங்கிலாந்தில்ரோமானியத் திருச்சபையை எதிர்த்துப் போரிடும்ஆற்றலற்றவர்களானர்கள். செயின்ட் கத்பர்ட்டு (St. Cauthbert) போன்ற சிலர் புதிய திருச்சபையின் நெறிமுறைகளை ஏற்றுக் கொண்டனர். மற்றவர்கள் மீண்டும் கெல்ட்டிக்கு காடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். பல தலை முறைகளுக்குகிடையே ஸ்காட்லாந்தும், வேல்சும், அயர்லாந்தும் மெல்ல மெல்ல மேற்கு ஐரோப்பிய கிறிஸ்துவ சமயத்தைப் போற்றிப் பின்பற்றும் நாடுகளாக மாற்றமுற்றன.

பிற்கால ஊழிகள் அனைத்திலும் ரோமாபுரிக்கும் இங்கிலாந்திற்கும் உண்டாகப் போகும் தகராறுகளுக்கு விட்பி திருக் கூட்டத்தில் வித்திடப்பெற்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனல் மக்கள் தாங்கள் வாழும் காலத்தில், அக் காலத்திற்காக வாழ வேண்டிய கடப்பாடுடையவர்களாக இருக்கின்றனர். ஆங்கிலேயே அரசுகள் அனைத்தும் தொடக்க காலத்திலேயே ரோமானியச் சமயநெறியினைப் பின்பற்றத் தொடங்கின. அச் செயல் ஆங்கிலேய இன ஒற்றுமை இயக்கத்திற்கும், அரசனது அதிகாரத்திற்கும், நில மானியப் படைமுறை ஆதிக்க வளர்ச்சிக்கும், சீரான ஆட்சி முறைக்கும், சட்டம் இயற்றுவதற்கும், வரிவிதிப்பதற்கும், பழங்குடி இனமரபு அரசியலுக்கும் மாருக நாட்டின் தேசிய அரசியல் அமைப்பிற்கும் பெருந் தூண்டுதலாக அமைந்தது. நாம் முன்னர்க் கண்டதைப் போல், ஆங்கிலேய மக்கள் பழங்குடி மக்கள் பண்பிலிருந்து கெல்ட்டிக்குகளைக் காட்டிலும் மிக விரைவாகப் பிரிந்து நாகரிகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர். விட்பியில் செய்

[1] 'விட்பி' என்னும் பெயரும் 'பி' (By) என்னும் விகுதியுடன் முடிவுறும் மற்ற இடப்பெயர்களைப் போன்றே இச்சொல்லும் டேனிஷ் மொழிச் சொல்லாகும். எனவே அப் பெயர் பிற்காலத்தியது என்பது தெளிவாகிறது. ஆனல் ஸ்டிரெயினேஷாக்கில் (Straenaeshakh) உள்ள சாக்சானிய மடாலயத்தில் கூடிய திருக்கூட்டத்தை (Synods) மிகவும் பழக்கப்பட்ட அவ்விடத்திற்குரிய டேனிஷ் மொழிப் பெயராலேயே எப்பொழுதும் குறிப்பிடுவது வழக்கமாகும்.

யப்பட்ட முடிவு ஒருகால் கெல்ட்டிக்குத் தொடர்பிலிருந்தும், பழங்குடி மக்கள் பண்பிலிருந்தும் பிரிந்து முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தை ஓரளவிற்கு அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் இருக்கலாம். ரோமானிய நகராட்சி முறை படையெடுத்து வந்த காட்டு மிராண்டிகளால் பிரான்சில் அழித்தொழிக்கப்படவில்லை. எனவே, பிராங்கிய அரசில் நிறுவப்பட்டிருக்கும் மிகச் சிறந்த அவ் ஆட்சியமைப்பினைப் பின் பற்றுவதற்கும் அவ்வாறு விட்பியில் முடிவு செய்யப்பட்டிருக்கலாம். ரோமானியப் பணித்துறை அதிகாரிகளின் படிமுறை அமைப்பிற்கு மாறாகப் புதிய திருச்சபை அதிகாரப் படிமுறை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம். ஆங்கில-சாக்சானியர் இங்கிலாந்தினுள் நுழைந்த கொடுமை நிறைந்த காலத்தில், ரோமானிய நகராட்சி முறையினை அழித்தொழித்தனர் என்பதை முன்பு கண்டோம். அதைக் குறித்து இப்பொழுது அவர்கள் கழிவிரக்கம் கொண்டிருக்கலாம்.

இங்கிலாந்தின் அரசுகள் அனைத்திலும், திருச்சபை அதிகாரங்கள் அனைத்தையும் மையப்படுத்தி, திருச்சபைச் செயல்களில் ஒற்றுமை முறையும், ஒருமித்த நோக்கும் உடையதாக அமைக்கப்பட்டன. இம்முறைகள் அனைத்தும் இங்கிலாந்து ஓர் அரசனின் கீழ் அரசியல் ஒருமைப்பாடுடைய நாடாக விளங்க வழிவகுத்துக் கொடுத்தது எனலாம். திருச்சபை ஆட்சி முறை, நாட்டாட்சி முறைக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக அமைந்தது. நெறிமுறைகளும் மனப்பழக்கமும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டதாகும். இவற்றை அடிப்படையாகக்கொண்டே திருச்சபையினரின் வாழ்க்கை முதலில் அமைக்கப்பட்டது. எழுத்தர்களின் வாழ்க்கை முறையைத் திருச்சபை ஒழுங்கும் கட்டுப்பாடும் உடையதாகக் கண்காணித்து வந்தது. அவ்வாழ்க்கை நெறியின் சிறப்பியல்புகளும், கட்டுப்பாடும், ஒழுக்கமும் திருச்சபையிலிருந்து சமயச் சார்பற்ற மக்கள் வாழ்க்கையில் சென்று பரவின. அக்காலத்தில் திருச்சபையைச் சார்ந்தவர்களே கல்வியறிவுடையவர்களாக இருந்தனர். எனவே, அவர்களே அரசனுக்கு அறிவுரை வழங்குபவர்களுள் முக்கியமானவர்களாக விளங்கினர். அரசரின் செயலாண்மைத் துறையாக (Secretariate) முதன் முதல் திருச்சபை சிறப்புறத் தொடங்கியது. இவ்வாறு ரோமாபுரியில் இருந்து புதியதாக வந்த கருத்துகள் திருச்சபைத் துறையிலிருந்து, நாட்டாட்சித்துறைக்கு எளிதில் சென்று பரவின. அரச பதவியோடு நேச உறவு கொண்ட புதிய பதவிகள் பல தோன்றின. தேனர்கள் தோள்வலியோடு வாளையேந்தித் தொண்டு புரிந்ததைப்

போல, மூளையையும் பேறுவையும் கொண்டு திறமை மிக்க மக்கள் அரசனுக்குத் தொண்டாற்ற முன் வந்தனர். மேலும் அரச பதவி புதியதொரு புனிதத் தன்மையைப் பெற்றது; குடிமக்களுடைய மிகச் சிறந்த பற்றுறுதியையும் ஈடுபாட்டையும் அரச பதவி அடைய முடிந்தது. திருச்சபை அரச பதவியைப் புனிதத் தன்மையுடைய தாக்கியதின் மூலம் அதைச் சிறப்பு மிக்கதாக மக்கள் கருதுமாறு செய்தது. ரோமானியச் சட்டத்தின் கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு அரசனின் தெய்விகத் தனியுரிமையைப் பற்றிய சமயக் கோட்பாட்டினைத் திருச்சபை நாட்டு மக்களிடையே பரப்பி வந்தது. நார்மானியர்கள் படையெடுப்பிற்குப் பிறகு, ஹில்டர் பிராண்டின் காலத்தில்தான் திருச்சபையும் அரசும் பகையும் நட்பும் உடையனவாக மாறி மாறித் திகழலாயின.

புதிய முறையினைப் போற்றிய கிறிஸ்துவ சமயத் தலைவர்கள் அரசியல் விரகராகவும், மாபெருந் தலைமைக் குருவாகவும் பதவியேற்று, இங்கிலாந்தின் முன்னேற்றத்திற்குப் பெருந் தொண்டாற்றினர். ஆனல் நாட்டிலே உண்டான மாற்றம் அவர்களுக்கு இன்னல்களை இழைத்தது; அத்துடன் அவர்களைக் கடுகடுத்த முகமுடைய அதிகாரிகளாக்கியது. நிலத்தின் எல்லாவகைப் பொருள்களையும் அடைய வேண்டும் என்னும் மண்ணுசை பிடித்தவர்களாக அவர்கள் மாறினர். திருச்சபையே பேராதிக்கம் உடையதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். பழைய அயோனிய கிறிஸ்துவ சமயத் தொண்டர்களிடத்துச் சிறப்புற்று விளங்கிய எளிமை, பணிவுடைமை, துறவற வாழ்வு, யாவரிடத்தும் சகோதர அன்பு முதலிய மாண்பு மிக்க சமய உணர்வுகள் புதிய திருச்சபையினரிடத்து எள்ளளவிற்கும் கூட இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வுயரிய பண்புகள் அனைத்தும் ஒரே ஒருவரிடத்தில்தான் காணப்பட்டன. லிண்டிஸ்பர்னேவைச் சேர்ந்த கத்பர்ட்டு என்னும் துறவியே அப்பண்புகளின் நிலைக்களனுக விளங்கினுர். ஆனல் அவர் அயோனிய கிறிஸ்துவ சமயத்திலிருந்து விட்பியில் செய்யப்பட்ட முடிவின் பொழுது ரோமாபுரியின் கிறிஸ்துவ சமயத்திற்கு மாறியவர் என்பதை நாம் மறத்தலாகாது.

இங்கிலாந்தின் திருச்சபையின் புதிய அதிகார வரிசை முறைகளைத் திறமையாகப் பாகுபாடு செய்து அமைத்தவர் டார்சஸ்ஸை சார்ந்த தியோடர் (Theodore of Tarsus) என்பவராவர். அவர் இங்கிலாந்திலிருந்த திருச்சபைகளையும், மடாலயங்களையும் ஒருங்கே காண்ட்டர்பரியின் நேரடியான சமய ஆட்சிக்

குட்பட்டதாகச் செய்தார். அவர் கி. பி. 669 முதல் 690 வரை காண்ட்டர்பரியின் தலைமைக்குருவாக – ஆர்ச் பிஷப்பாகப்— பணியாற்றினர். அவர் அகஸ்டினுக்குப் பிறகுவந்த தலைமைக் குருமார்களுள் மாண்பு மிக்கவராவார். ஆங்கிலேயரின் வரலாற்றில் திருச்சபையின் தன்னிகரற்ற அரசிளங்குமரனாக அவர் விளங்கினர். அக்காலத்திய இங்கிலாந்து போப்பு ஆண்டவரோடு தொடர்பு கொண்டிருந்தமையால் பெற்ற பயனுக்குத் தியோடருடைய வாழ்க்கையின் வெற்றி சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். வட இங்கிலாந்திற்கு ரோமாபுரியின் திருச்சபை, நடுநிலக் கடற்பகுதி நாகரிகத்தின் சீரிய பண்புகள் எவ்வெவற்றை வழங்க முடியுமோ, அவற்றை எல்லாம் திருச்சபையின் தொண்டர்கள் மூலம் வாரி வழங்கியது. பிரான்சும், ஜெர்மனியும் காட்டு மிராண்டித்தனமான அறியாமையில் மூழ்கிக்கிடந்த நேரத்தில், போப்பு ஆண்டவர், சிறிய ஆசியாவிலுள்ள டார்சஸ் நகரைச் சார்ந்த கிரேக்கரான தியோடரை, நம் நாட்டிற்கு அனுப்பி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தம்முடன் ஆப்பிரிக்காவைச் சார்ந்த ஹேட்ரியனை (Hadrian) த் தம்முடைய தளபதியாக உடன் அழைத்து வந்தார். இவ்விரு மனிதர்களும் இத்தாலியிலும் லெவாண்ட்டிலும் சிறப்புற்று விளங்கிய கிரேக்க இலத்தீன் மொழிகளின் கலைஞானங்களில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர். பெனிடிக்ட்டு பிஷ்காப்பு (Benedict Bishop) என்னும் ஆங்கிலேயரின் உதவியால், நடுநிலக் கடற்பகுதியிலிருந்து மிக இன்றியமையாத, அறிவாராய்ச்சிக்குக் கிடைத்தற்கு அரிதான நல்லதொரு நூல் நிலையத்தை இங்கிலாந்திற்குக் கொண்டு வந்தனர். காண்ட்டர்பரி இலத்தீன் மொழிக் கல்வியின் நிலையமாக விளங்கியதோடு அல்லாமல், கிரேக்க மொழியறிவின் ஊற்ருகவும் சிறப்புறத் தொடங்கியது. தெற்கு நாடுகளில் இருந்து வந்த புதிய செல்வாக்கோடு, வட இங்கிலாந்தில் வளர்ச்சியுற்ற முற்போக்கான மரபுகளைக்கொண்ட கெல்ட்டிக்கு மக்களின் அறிவாராய்ச்சி இணைந்தது. அதனால் புதியதொரு கோட்பாட்டுக்கழகத்தை ஜாரோவில் (Jarrow) தோற்றுவித்தனர். அக்கழகத்தின் முன்னேடியே பீடு (Bede) என்னும் வரலாற்ருசிரியராவார். மேலும் யார்க்கிலே புதிதாக நூல் நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. அந்நூல் நிலையத்தினைப் பயன்படுத்தியே அலூசின் (Alucin) சிறந்த அறிஞரானர். அங்கிருந்து சமயக் கலைஞானமும், சமயச்சார்பற்ற கல்வியறிவும், ஐரோப்பியப் பெருநிலப்பரப்பிற்குத் திரும்பிச் சென்றது. சார்லமேயின் (Charlemagne) பேரரசில் வாழ்ந்த மக்களுக்கு இலத்தீன் மொழி இலக்கியத்தைக் கூற்பிக்கும் ஆசானாக இங்கிலாந்து அரும் பணியாற்றியது. ஆனல், அதே சமயத்தில் நார்த்தம்பிரியாவின்

நூல் நிலையங்களையும், அறிவின் சுடர்களாக—விளக்குகளாக —விளங்கிய மடாலயங்களையும் டேனியப் படையெடுப்பாளர் கள் இங்கிலாந்தில் அடியோடு அழித்துக் கொண்டிருந்தனர்.

இருண்ட காலத்தின் (Dark Ages) வரம்புக்குட்பட்ட கல்வி யறிவு அனைத்தையும் தன்னகத்தே கொண்ட பேரறிஞராக பீடு (கி. பி. 673—735) விளங்கினார். ஆனால், தற்காலத்தவர்களாகிய நாம் அவரை 'ஆங்கிலேய வரலாற்றின் சிறப்பு மிக்க தந்தை' யாக மட்டும்தான் அறிந்துள்ளோம். நம்முடைய நாட்டில் இடைக் காலத்தில் எழுதப்பெற்ற காலவழிச் செய்திக் கோவைகளின் நீண்ட பட்டியலில் முதலாவதாக விளங்கும் வரலாற்றுக் குறிப் பேட்டின் ஆசிரியர் பீடு என்பது நாடறிந்த உண்மை. அக் கால வழிச் செய்திக் கோவையில் இங்கிலாந்து நாட்டின் அயோனாவில் சிறப்புற்று விளங்கிய திருச்சபையின் சுவைமிக்க கதையினையும், அதற்குப் போட்டியாகக் காண்டர்பரியில் கிளம்பிய திருச்சபை யின் வரலாற்றையும், விரிவாக எழுதியுள்ளார். அவ்விரு திருச் சபைகளைப் பற்றிய செய்திகள் மக்கள் மனத்தில் நன்கு பதிந் திருந்த காலத்தில் பீடு காலவழிச் செய்திக்கோவை எழுதியமை சிறப்புடையதாகும். எய்டனையும், அவருடைய சீடர்களையும் பற்றி உண்மைக்கு மாறான செய்திகளைக் கூற அவர் மனம் இசைய வில்லை. ஆயினும், அவர்களுடைய வைதிகத் தன்மையற்ற போக்கினை பீடு மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளார். பீடு நார்த்தம்பிரியாவைச் சேர்ந்தவராக இருந்தமையால், தம்முடைய நாட்டு மக்களை யார், எப்படி கிறிஸ்துவ சமயத் திற்கு மாற்றினர் என்பதை நன்குணர்ந்திருந்தார். வேல்சைச் சார்ந்த மக்களிடையே சமயக் கருத்துவேற்றுமையையும், பிளவை யும் உண்டாக்கிய அயோனா திருச்சபையைச் சார்ந்த கிறிஸ்துவ சமயத்தினரிடத்து அவருக்கு இயல்பாகவே ஒருவகை வெறுப் புணர்ச்சி இருந்துவந்தமை அவருடைய காலவழிச் செய்திக் கோவையால் தெரிய வருகிறது.

இங்கிலாந்தில் ரோமானியத் திருச்சபையின் செல்வாக்கு காண்டர்பரியிலிருந்து பரவியது. அத்துடன் திருச்சபை இசைக்கலையும் நாடுமுழுவதிலும் பரவத் தொடங்கியது. அது வரை 'திருச்சபை இசைக்கலை' பெரிதும் கெண்ட்டு (Kent) மாவட்டத்தில் மட்டும் பரவி இருந்தது. சாக்சானியர் அவ்வி சைக்கலையை அன்போடு வரவேற்றனர். கிறிஸ்துவ சமயம் மக்க ளிடையே நன்கு வேரூன்றுவதற்கு அவ்விசைக்கலை பேருதவியாக இருந்தது. ரோமாபுரியின் வெற்றி, திருச்சபைக் கட்டடக்கலையின் வளர்ச்சிக்கு வித்திட்டது. எய்டனின் ஸ்காட்டிய சீடர்கள் மரத்

திஞல் கட்டப்பட்ட திருச்சபைகளைக் கண்டு மனநிறைவு அடைந்தனர். அவர்களுடைய தலைமைக் கோயில் புல்லிஞல் வேயப்பட்ட கூரைகளுடன் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுறும் நிலையிலேயே அவர்கள் வாழ்ந்தனர். ஆஞல், விட்பிக்குப் பிறகு புதியதாகத் தோன்றிய திருச்சபையினர், ரோமாபுரியின் பேரழகினையும் நிலைபேற்றினையும் தங்கள் திருச்சபைக்கு அளிப்பதற்காகப் புதிய கட்டடக் கலை முறையைப் பின்பற்றி, மாபெருங் கோபுரங்களைக் கொண்ட மன்றங்களையும் மாளிகைகளையும் அமைக்க முயன்றனர். கூரையற்ற ரோமானிய நகரங்களின் கூடுகளும், நாட்டுப்புற மாளிகைகளின் கூடுகளும் இங்கிலாந்தின் பல பகுதிகளில் சிதறுண்டு கிடந்தன. அவை காண்பார் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து வந்தன. அக்கட்டிடங்கள், நன்முறையில் செதுக்கப்பட்ட கற்களை எளிதில் தந்துதவின. அதஞல் அவை கல்லெடுக்கும் பள்ளங்களாகப் பயன்படுத்தப்பட்டன. மேலும் ஏழாம், எட்டாம் நூற்ருண்டுகளில் திருச்சபையைக் கட்டிய கட்டடக் கலைஞருக்கு அவை சிறந்த 'மாதிரி' களாகவும் அமைந்திருந்தன. அச்சிற்பக் கலைஞர்கள் தங்கள் நாட்டு ரோமானியக் கட்டடக் கலை அமைப்பினை அடிப்படையாகக்கொண்டு, தாங்கள் இத்தாலிக்கு அல்லது மெர்ரோ வின்ஜியன் காளுக்கு யாத்திரை சென்ற பொழுது கண்ட திருக்கோயில்களுக்கு அடியிலுள்ள புதையிடங்களையும் (Crypts) நெடுமாடக் கோயில்களையும் (Basilicas) நினைவில் இருத்தி, புதிதாகத் திருச்சபைகளைக் கற்களிஞல் கட்டத் தொடங்கினர். சார்லமேவின் காலத்திற்குப் பிறகு ரைன் ஆற்றங்கரைப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய வட்டமாயும் வளைவாயும் இந்திரன் வில்லைப்போன்ற கட்டடக் கலை முறையும், ஜெர்மானியக் கட்டடக் கலை முறையும் இங்கிலாந்தில் பேராற்றல் வாய்ந்தனவாகக் காணப்பட்டன. அவை டேனியரின் படையெடுப்புகளால் இங்கிலாந்து இழந்ததை மீண்டும் பெற உதவின. சாக்சானிய திருச்சபைகள் அனைத்தும், அவற்றுள் மிகப் பெரியதாக இருந்தவையும், நார்மானிய, பிளாண்டாஜெனட்டு படையெடுப்பாளர்கள், தங்கள் படையின் போக்குவரத்துக்கு இடையூருக அவை இருப்பதாகக் கருதி இடித்துத் தரை மட்டமாக்கினர். ஆஞல், பொது மக்கள் தங்கள் வீடுகளையும் குடிசைகளையும் மரத்திஞல் கட்டிக் கொண்டிருந்த காலத்திலேயே, சாக்சானிய இங்கிலாந்தில் கற்களிஞல் திருச்சபைகள் பேரளவில் கட்டப்பட்டதை நாம் புறக்கணிக்க முடியாது.[1]

[1] நார்மானியப் படையெடுப்பின் பொழுது, பெரும்பாலான ஊர்களின் திருச்சபைகள் மரத்திஞல் கட்டப்பட்டிருந்தன. ஆஞல், சில

ஆங்கில திருச்சபையை கி. பி. 669-ல் டார்சஸ்ஸைச் சார்ந்த தியோடர் முதன் முதலாக அமைத்தார். அக்காலத்தில் அவருக்கு வயது அறுபத்தெட்டு. தம்முடைய முதுமைப் பருவத்திலும் அவர் சுறுசுறுப்பாக மேலும் இருபதாண்டுகள் தொடர்ந்து திருச்சபைக்குத் தொண்டு புரிந்து வந்தார். முதலில் அவருக்கு நிறைய எதிர்ப்புகள் இருந்தன. ஆனல், அவற்றிற்கிடையே அவர் சிறந்த பணிபுரிந்து வெற்றிபெற்ருர். போதுமான அளவிற்குப் பாதிரிமார்களின் பதவிகளைப் பெருக்கியதே அவருடைய சீர்திருத்தத்தின் உயிர் நாடியாகும். அப்பாதிரிமார்கள் கெல்ட்டிக்கு திருச்சபையின் சுற்றிவரும் துறவிகளைப் போன்றவர்கள் அல்லர். ஆனல் அப்பாதிரிமார்கள் வரையறுக்கப்பட்ட, ஒன்றுக்கொன்று தொடர்புடைய மதகுருவின் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டுப் பகுதிகளை யுடையவர்களாக இருந்தனர். அவர்கள் அனைவரும் காண்ட்டர்பரி தலைமைக் குருவின் தலைமையில் செயலாற்றி வந்தனர். பொதுச் சமய அமைப்பு முறைக்குள் மடாலயங்களும் சேர்க்கப்பட்டன. அவர்கள் செல்வத்திலும் ஆட்கள் எண்ணிக்கையிலும் பெருகிக்கொண்டே இருந்தனர். ஆனல், அவர்களுடைய உரிமைகளைத் திருச்சபையின் தலைமையிடம் கட்டுப் படுத்தியது. மடாலயங்களின் சிறப்பு மிக்க அதிகாரிகளாகப் பாதிரிகள் அல்லாத வேறு பிறரும் அமர்த்தப்பட்டனர். அதனல், கெல்ட்டிக்கு கிறிஸ்துவ சமயத்தில் பாதிரிமார்கள் பெற்றிருந்த உரிமைகளையும் சிறப்புக்களையும் இவர்கள் அடையமுடியாமல் போயிற்று.

தியோடரின் காலத்திற்குப் பிறகு, சமயத் தலைமைக் குருமார் ஆட்சிமுறையில் அவர் வழிவகுத்துத் தந்ததன் விளைவாக, ஒவ்வொரு ஊரிலும் திருச்சபை தோன்றிற்று. முதலில் சிற்றூர்களிலும் அதன்பிறகு பேரூர்களிலும் திருச்சபைகள் தோன்றலாயின. நார்மானிய படையெடுப்பிற்கு முன்பே, இங்கிலாந்

---

அதற்கு முன்பே கற்களாலும் கட்டப்பட்டிருந்தன. சாக்சானியர் காலத்தில் நாட்டுப் புறங்களில் கற்களினல் திருச்சபைகள் பெரிதாகக் கட்டப்பட்டமைக்கு, பக்சில் (Bucks) உள்ள 'விங்கு' திருச்சபை (Wing church) சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். அதனுடைய திருக்கோயிலுக்கு அடியிலுள்ள புதையிடங்கள், இத்தாலிய அல்லது பிரஞ்சுக் கலைமுறையினைத் தழுவி அமைக்கப் பட்டதாகும். ஏழாம் நூற்றுண்டில், வில்பிரிட்டினல் (Wilfrid) அமைக்கப்பட்ட எக்ஸ்ஹாம் மடாலயமும் இதைப் போன்றதேயாகும். ஹேட்ரியன் சுவர்களுக்கு அருகில் அழிந்து கிடந்த ரோமானிய நகரங்களில் இருந்து எடுக்கப்பட்ட கற்களினலேயே இம்மடாலயம் கட்டப்பட்டது. இன்றும் அதன் அடிப்பகுதி அழியாது இருப்பதைக் காணலாம். நார்த்தாம்டன் ஷையரிலுள்ள பிரிக்ஸ் வொர்த்தில் ரோமானிய நகரங்களின் செங்கற்களைப் பயன்படுத்தியே ஆங்கில-சாக்சானிய திருச்சபையினைக் கட்டியுள்ளனர்.

தின் பெரும் பகுதியில் ஊர்த்திருச்சபைகளும், அவற்றைச் சேர்ந்த குருமார்களும் சிறப்புற்று விளங்கினர். அக் குருமார்கள் துறவிகள் அல்லர். சாக்சானியர் காலத்தில் அவர் திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்தியவர்களாக இருந்தமை நினைவுகூரத்தக்கது.

உலகியல் வாழ்வில் ஆங்கில–சாக்சானியர்களும், டேனியர்களும் காடுகெடுத்து நாடாக்கி, அவ்விடங்களில் சிற்றூர்களை அமைத்தனர். அதைப் போலவே சமயத்துறையிலும் அவர்கள் இங்கிலாந்து முழுவதிலும் திருச்சபைகளை அமைத்தனர்; அவற்றுள் வழிபாட்டு மண்டபத்தை நிறுவினர்; அத்திருச்சபைகளின் குருமார்களுக்கு மானியங்கள் வழங்கியும் வந்தனர். இவ்விரு இயக்கங்களும் சேர்ந்து நாம் அறிந்த நாட்டுப்புற இங்கிலாந்திற்குச் சிறந்தொரு அடிப்படையை அமைத்துத் தந்தன. சிற்றூர்களோடு 'பாரிஷ்' (Parish) எனப்படும் திருச்சபை வட்டம் பெரிதும் ஒத்ததாக இருந்தது. மாவட்டங்களில் பல திருச்சபை வட்டங்கள் சேர்ந்த நகரக் கூடி இருப்புகள் இருந்தன. ஆனால், வட இங்கிலாந்திலும், மேற்கு இங்கிலாந்திலும் ஒரு திருச்சபை வட்டத்திலேயே பல சிற்றூர்கள் இருந்ததாகத் தெரிகிறது. அங்குக் குடியிருப்புகள் வெறும் சிற்றூர்களாக அல்லது பண்ணைகளாக இருந்தமையே அதற்குக் காரணமாகும்.

திருச்சபை வட்டங்களை அமைப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் தேனர்களும் பாதிரிமார்களுமாவர். பாதிரிமார்கள் இக்காலம் முதற்கொண்டு மடாலயத்துறவு நோக்கம் உடையவர்களாக இல்லை. அவர்கள் சமயச் சார்பற்ற—அதாவது மடாலயத் தொடர்பற்ற குருமார்களுக்கும் பேராதரவு தந்தனர். மடாலயத் தொடர்பற்ற குருமார்கள் துறவிகளைக் காட்டிலும், திருச்சபையின் ஆதிக்கத்திற்கு அடிபணிந்து நடப்பவர்களாக இருந்தனர். நாடு முழுவதும் அவர்கள் பரவியிருந்ததோடு, பொதுமக்களோடு தொடர்ந்து நேரடியாகத் தொடர்புகொண்டுமிருந்தனர். தேனர்களும் வட்டாரப் பெருமக்களும் நிலங்களைத் திருச்சபைகளுக்கு மானியங்களாக வழங்கினர். அல்லது அறக்கட்டளைகளை ஏற்படுத்தி வந்தனர். முதன் முதலில் மதகுருமார்கள் தனிப்பட்ட பிரபுக்கள் அல்லது தேனர்களின் திருக்கோயிலில் குருவாகப் பணியாற்றி வந்தனர். ஆனால் நாளடைவில் அவர்களுக்குப் பின்வந்தவர்கள் திருச்சபை வட்டத்தின் சமய குருமார்களாகச் சிறப்புற்றனர். பொதுமக்களுள் குருமார்களை ஆதரித்துப் போற்றியவர்களே, குருமார்களைத் தேர்ந்

தெடுக்கும் உரிமையுடையவர்களாக இருந்தனர். ஆனால், பாதிரியார், குருமார்களைத் திறமையாக அடக்கியாளும் அதிகாரியாக இருந்தார்.

இங்கிலாந்தில் நாட்டுப்புறங்களில் சிறப்புற்று விளங்கிய திருச்சபைகளின் பழம்பொருள் சின்னங்களுள் பெரும்பாலானவை சாக்சானியர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய திருச்சபைகளைச் சார்ந்தனவாகும். ஆனால், அவர்களுடைய இறைவுணர்வுமிக்க வழித்தோன்றல்கள் காலத்தில் பல திருச்சபைகள் அழிந்து போய்விட்டன. சாக்சானிய இங்கிலாந்து கிராம வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டு சிறப்புற்று விளங்கியது. ஊர்த் திருச்சபையைச் சுற்றிலும் கல்லறை அமைக்கப்பட்டது. இவ்வாறு பல்வகைச் செயல்களுக்கும் பயன்படும் திருச்சபை, ஒவ்வோர் ஊரிலும், அதன் நடுநாயகமாக அமைக்கப்பட்டது. ஓடன் வழிபாட்டு நெறியும், தோர் வழிபாட்டு நெறியும் மெல்லமெல்ல மறைந்துபோயின. அல்லது வெற்றிமிக்க சமயப் பொறுமையில்லாத குருமார்களால், அவை 'பேய் வழிபாடு' என்று பழிக்கப்பெற்று, அடக்கியொடுக்கப்பட்டிருக்கவேண்டும். எனவே, ஊரிலுள்ள மக்கள் அனைவரும் வாழ்விலும் தாழ்விலும், திருச்சபையோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, அங்கு ஒன்று கூடிச் செயலாற்றினர்.

திருச்சபையின் அதிகாரமும், செல்வாக்கும் வளர்ச்சியுற்றமையால், ஒரு பக்கம் ஆன்மீக வளர்ச்சியும் முற்போக்குக் கருத்துகளும் சிறப்புற்று விளங்கத் தொடங்கியது; மற்றொரு பக்கம் நிலமானியப் படைமுறை அமைப்பினையும், உயர்குடிமக்கட் பண்பையும் கொண்டு திகழ்ந்தது. ஆனால், அவற்றினை இரு வேறுபட்ட துறைகளாகப் பாகுபடுத்திக் கூறுவது தற்காலச் சிந்தனையின் வளர்ச்சியேயாகும். அவை இரண்டும் ஒரே இயக்கத்தின் பேராற்றல் மிக்க சக்தியாகும். அக்காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு அவற்றிடையே முரண்பட்ட பண்புகள் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. திருச்சபைக்குச் சேரவேண்டிய கடமையைப் பெருந் தண்டம் விதித்துத் தண்டினார்கள். வருமானத்தில் பத்திலொரு (Tithe) பங்கினை அல்லது விளைவில் பத்திலொரு பங்கினை இடைக்காலத் திருச்சபையினர் வருவாயாகப் பெற்றனர். அவற்றைக்கொண்டு திருச்சபையைக் கலைகளின் நிலைக்களனாகவும், சிற்பக்கலைக் கூடமாகவும், கல்வி நிலையமாகவும் நாகரிகத்தின் வளர்ப்புப் பண்ணையாகவும் விளங்குமாறு செய்தனர். திருச்சபை சிந்தனையை வளர்ப்பதற்கு

ஒய்வினை அளிக்கும் நிலையமாகச் சிறப்புற்றது. ஆயினும், திருச்சபை தண்டிய தீர்வைகள் உழவர்களுக்குப் பெருஞ்சுமையாக இருந்தது. அதனால் பல தனியுரிமைக் குடிமக்கள் வறுமையுற்றனர். அவர்கள் அடிமை நிலைக்குத் தாழ்ச்சியுற்றனர்.

முதன் முதலில் மெர்சியா, வெஸ்ஸக்ஸ் ஆகியவற்றினுடைய ஆங்கில-சாக்சானிய அரசர்களும், பிறகு இங்கிலாந்தின் அரசர்கள் அனைவரும் தங்களுக்கு வேண்டிய தலைமைக் குருமார்களின் தூண்டுதலினாலும், தங்கள் ஆன்மா வீடுபேற்றையடைய வேண்டும் என்று அவர்கள் விரும்பியமையாலும், மடாலயங்களுக்கும், திருச்சபைகளுக்கும் பேரளவில் நிலத்தை மானியமாக வழங்கினர். அரசர்களுக்கு மக்களிடத்திலிருந்து எவ்வாறு நிலத்தைப் பிடுங்குவது என்பதையும், எழுத்தின் மூலம் அரசாங்கத்தின் அதிகார வரம்பைப் பட்டயங்களாகப் பெறுவதற்குரிய வழியினையும் குருமார்கள் கற்றுக்கொடுத்தனர். அதன் மூலம் சமயச் சார்பற்ற நிலமானியப் படைமுறைப் பெருமக்களையும், குருமார்களையும் பயனடையுமாறு செய்தனர். ஆங்கில-சாக்சானிய தனி உரிமையாளர்களுக்கு எவ்வாறு உயில் (will) எழுதுவது என்பதைக் குருமார்களே கற்றுக்கொடுத்தனர். உயில்கள் பெரும்பாலும் திருச்சபையை வளமுறச் செய்தன. அன்றாட வாழ்க்கையின் நீதியியல், கல்வியியல் கூறுகளைத் திருச்சபை விரிவுபடுத்தியதன் மூலம், நாட்டு எல்லைக்குட்பட்ட நிலமானியப் படைமுறையை மேம்படச் செய்தது; மக்கள் சமுதாயத்திடையே உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் பிரிவுகளை உண்டாக்கியது; செல்வமும் உரிமையும் சமத்துவமற்ற முறையில் மக்களிடை பரவுவதற்குப் பேருதவிபுரிந்தது. ஒரு திருச்சபை பெருஞ் செல்வம் உடையதாக இருக்கிறதென்றால், உழவர்கள் அதற்கு அடிமைகளாக உள்ளனர் என்பது பொருள் என்பர் மெயிட்லண்டு. நிலவுடைமைப் பேராய்வு செய்யப்பட்ட காலத்தில் ஓர்செஸ்டர், எவேஷம், பெர்ஷோர், வெஸ்ட்மின்ஸ்டர் ஆகிய நான்கு இடங்களிலும் இருந்த திருச்சபைத் தலைவர்கள், ஓர்செஸ்டர் கோட்டத்தில் 7/12 பங்கு நிலத்திற்குரிய பிரபுக்களாக இருந்தனர்.

டேனியர்களின் படையெடுப்பிற்கு முன்னரும் பின்னரும் சிறப்புற்று விளங்கிய ஆங்கில-சாக்சானியர் காலத்திய திருச்சபையையும், அரசையும் தெளிவாக வேறுபடுத்தி அறிவது மிகவும் கடினமாகும். அரசனுடைய பணித்துறை அலுவலகத்தில் பாதிரிமார்களும், குருமார்களும் இடைக்காலம் முழுவதும்

முக்கிய பணிபுரிந்து வந்தனர். ஆனால், நார்மானியர் கைப் பற்றுவதற்கு முன்பு, திருச்சபைக்கு என்று தனி நீதி மன்றங்கள் கிடையாது. கோட்ட முறை மன்றங்களுள் பாதிரியார், கோமகன் அல்லது ஷெரீப்பு பக்கத்தில் அமர்ந்து, ஆன்மீகச் சட்டங் களையும் சமயச்சார்பற்ற சட்டங்களையும் வேறுபாடின்றிச் செயற் படுத்திவந்தார். மக்களிடையே வாய்மொழி வழக்காகப் புகழ் பெற்றிருந்த ஆங்கில-சாக்சானிய சட்டங்களை முதன் முதல் குருமார்கள் எழுதிவைக்கத் தொடங்கினர். அவை இந்நிலை மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆங்கில-சாக்சானிய மொழியில், குருமார்களினால், இலத்தீன் மொழி எழுத்துக் களில் எழுதப்பட்டிருந்தன. அவற்றிற்கு இருவகைப் பண்புகள் இருந்தன. அவற்றுள் ஒரு பகுதி பழங்குடி மக்களின் வழக் காற்றுத் தொகுதியாக இருந்தது. சிறப்பாகப் பழங்குடி மக்களிடையே உண்டாகும் பூசல்களில், மனிதனின் உயிருக்கும், உடைமைக்கும் ஊறு நேர்ந்தால் செலுத்தப்பட வேண்டிய தண்டத்தைப்பற்றி மிக விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'ஒரு மனிதன் மற்றொரு மனிதனைக் கொன்றுவிட்டால், 100 ஷில் லிங்கு தனியாளுக்குரிய மதிப்புப் பணம் (wergeld) கொடுக்கப்பட வேண்டும்' என்றும், 'உடம்பிலுள்ள ஓர் எலும்பு புறத்தே தெரியுமாறு செய்யப்பட்டால் மூன்று ஷில்லிங்குகள் தரப்பட வேண்டும்' என்றும், 'ஒரு காது அறுக்கப்பட்டால், பன்னி ரண்டு ஷில்லிங்குகள் செலுத்தப்பட வேண்டும்' என்றும் சில விதிகள் அச் சட்டத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தன. ஆனால், அச் சட்டங்கள் திருச்சபைகளின் மிக உயர்ந்த உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பற்றிக் குறிப்பிடுகின்றன. மேலும், திருச் சபை 'பாவம்' செய்வோருக்கு மன்னிப்பு அளிக்கும் புதிய அதிகார வரம்பினையும் அது குறிப்பிடுகின்றது. இவையனைத்தும் கோட்ட முறை மன்றத்தில் ஒருங்கே செயற்படுத்தப்பட்டன. அதனால், அம் முறை மன்றம் உலகியல் முறை மன்றமாகவும், சமயத்தொடர்பான முறை மன்றமாகவும் விளங்கியது.[1]

அரசர்களும், மக்களும் சமயத்திடத்துக் கொண்டிருந்த அச்சத்தோடு, திருச்சபையின் அரசியல் செல்வாக்கு இரண்டறக் கலந்து கிடந்தது. மெர்சியா, வெஸ்ஸக்ஸ் ஆகிய அரசுகளின் அரசர்கள் தங்கள் அரசினைத் துறந்து, துறவிகளாகவோ, திருப்பயணிகளாகவோ ரோமாபுரிக்குச் சென்றனர். இதை நாம் ஆங்கில–சாக்சானிய காலவழிச் செய்திக் கோவையில் படிக் கின்றோம். எனவே, அவர்கள் பேரளவில் நிலத்தை மடாலயங்

[1] ஆட்டன் பரோ (Atten borough) எழுதியுள்ள, 'Laws of the Earliest English Kings' (1922) என்னும் நூலைப் பார்க்க

களுக்கு மானியமாக வழங்கியதைக் கண்டு வியப்படைய வேண்டியதில்லை. மெர்சியாவின் அரசரான ஒப்பாவின் அவையிலும், வெஸ்ஸக்ஸின் அரசரான எக்பர்ட்டு அவையிலும், கல்வியறிவுடைய தனித்த இனமாகவும், கடல் கடந்த நாட்டில் உள்ள பிராங்கிய ஆட்சி முறையைத் தாங்கள் மட்டும் புரிந்து கொண்டவர்களாவும், குருமார்கள் இருந்தனர். அரசர்களுக்கும் தேனர்களுக்கும் நீங்காத பெருந் துன்பத்திலிருந்து விடுதலை பெற்றுப் பேரின்பமாகிய வீடுபேற்றை அடைவதற்கு வழிகாட்டி அறிவுரை கூறும் அச்சமய குருமார்களின் பேராதிக்கத்தைக் கண்டு நாம் வியப்புறத் தேவை இல்லை.

ஆயினும் நடுநிலக் கடற்பகுதியைச் சார்ந்த கிறிஸ்துவ சமயத்தின் அறவியல், பண்பாட்டுக் கருத்துகளை முழுவதும் ஆங்கில–சாக்சானிய நாடுகள் பின்பற்றவில்லை. வடக்கே வீரதீரத்துடன் வாழ்ந்த தேனர்கள் வீர மிக்க இலக்கியங்களாலும் கதைகளாலும் வளர்க்கப்பட்டவர்களாவர். அவர்கள் புதிதாகக் கிறிஸ்துவ சமயத்தைப் பின்பற்றத் தொடங்கியவுடன், அவர்கள் பின்பற்றிய புதிய சமயமே ஓரளவிற்கு மாற்றமுறலாயிற்று. ‘சிலுவையின் கனவு’ (Dream of the Rood) என்னும் பாடலைப் பாடிய புலவர் பெரும்பாலும் எட்டாம் நூற்றாண்டில் நார்த்தம்பிரியாவில் வாழ்ந்திருக்க வேண்டும். அவர் கிறிஸ்துவ சமய கவிஞர் என்பது தெரிகிறது. அவர் பழைய வழிபாட்டு நெறி, புதிய சமயம் ஆகியவற்றின் இரு வகைப் பண்புகளையும் நன்கு குழைத்துப் பாடியுள்ளார்.

‘பிறகு இளைஞராகிய நமது தலைவர் தம்மைத் தாமே வருத்திக் கொண்டார். எல்லாம் வல்ல இறைவனே நம்முடைய தலைவராவார். அவர் ஆற்றலும், உள்ள உரமும் உடையவர். பலரும் காணுமாறு, அவர் துணிவுடன் சிலுவையை எடுத்துத் தோளில் தாங்கிக் கொண்டார். மனித இனத்தை அடிமைத் தளையினின்று விடுவிக்க அவர் அவ்வாறு செய்தார். நம் தலைவர் என்னைத் தழுவியபொழுது, நான் நடுநடுங்கிப் போனேன். நிலத்தை நோக்கிக் குனிவதற்கும் துணிவற்றவனாக இருந்தேன்’ என்பது அப் பாட்டின் மொழிப்புரையாகும்.

பெருந்தன்மை வாய்ந்த நார்ட்டிக்கு வீரர்களுள், பெரும்பான்மையோர் பொதுவாக மதகுருமார்களிடத்து மதிப்புடையவர்களாகவே இருந்தனர். எனினும், அவர்களுடைய முன்னோர்களை, அவர்கள் மறந்து விடவில்லை. முன்காலத்தில் அவர்களுடைய முன்னோர்கள் இருந்ததைப் போன்று அவ்வொழுக்கக்

குறிக்கோள்களினுல் பெரிதும் மன நெகிழ்ச்சியுற்றனர். இடைக் கால, தற்காலச் செய்யுள்களைப் போன்றே, ஆங்கில—சாக்சானிய ரின் பாடல்களும் சிறப்பாகச் சமயத்தைக் குறிப்பிடுகின்ற பொழுதெல்லாம், வடிவில் கிறிஸ்துவ சமயத்தைச் சார்ந்தன வாக இருந்தன. ஆனுல், அவை புறச்சமய மரபுகளைப் பின் பற்றிப் பாடப்பட்டன. அவை முழுக்க முழுக்க மனித இனத் தின் உணர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டிருந்தன. மாண்பு மிக்க சாக்சானியக் காப்பியங்களின் சில பகுதிகளே இன்று நமக்குக் கிடைத்துள்ளன. இச் சிறு பகுதிகளே மிகச் சிறந்தவை என்று கருதுவதற்குக் காரணம் ஒன்றும் இல்லை. அவற்றுள் மிக நீண்ட தொடர் நிலைச் செய்யுளான பியோவுல்ப்பு (Beowulf) சிறப்புடையதாகும். அப் பாட்டின் பொருள் குழந்தைப் பண்பு டையதாக இருந்தாலும், அல்சினேவுசின் (Alcinous) மன்றத்தில் ஓடீசியஸ் (Odysseus) கதை சொல்லும் பகுதி, ஹோமரின் உணர்ச் சிச் சிறப்பும், நடையழகும் உடையதாகக் காணப்படுகின்றன.

சாக்சானியரின் காப்பியங்களுள், வீரர் தம்முடைய தலை வரிடத்துக் கொண்டுள்ள நீங்காத பற்றுறுதியும், போரிலே இறப்பதற்குத் தயாராக இருத்தலும், நயநாகரிகமும், வீரமும், உள்ள உரமும், தலைவனின் பெருந்தன்மையும், சிறப்பு மிக்க ஒழுக்க நெறிப் பண்புகளாகப் போற்றப்படுகின்றன. அரசனது மன்றில், அரசனுக்கும் தேனர்களுக்கும் முன்பு அவ் இலக்கியங் கள் பாடப்பட்டமையால், அவை அவ்வாறு உள்ளன. இக் காப்பியங்களின் மாண்பு மிக்க தலைவன், பழங்குடி வழக்காறு களாலும், சமயப் பின்பற்றுதல்களாலும் கட்டுப்படுத்தப்படாத உரிமை மிக்க மனிதனுவான். வீரதீரச் செயல்களே அவனுடைய பேச்சும் மூச்சுமாக இருந்தன. அவன் தாராள மனப்பான்மையும் பொறுமையுணர்வும் உடையவனுகக் காணப்படுகின்முன். அவன் ஏக்கீலசைப் (Achilles) போன்றும் ஹெக்டரைப் போன்றும் மாபெரும் வீரனுவான். ஆனுல், அவன் ஓடீசியஸைப் போன்ற வஞ்சனையும் சூழ்ச்சியும் நிறைந்த தலைவன் அல்லன். பல துறை களில் அக் காப்பியங்களில் காணப்படும் வாழ்க்கை முறை, ஹோமரின் காலத்திய வாழ்க்கை முறையோடு பெரிதும் ஒத்திருக் கிறது. அவை ஒவ்வொன்றும் ஒரு வீர யுகத்தைச் சொல்லோ வியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவற்றுள் வீரர்க ளின் தலைவனுகிய மாவீரன் எதற்கும் அடிமையாகாத பேராற்ற லும், பேருரிமையும் உடையவனுகத் தனது கடமைகளைச் செய்து வந்தான். கிறிஸ்துவ சமயமும், நிலத்தினை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய நிலமானியப் படைமுறையும் தனி மனித னின் உரிமைகளைக் கட்டுப் படுத்தத் தொடங்கியது. ஆயினும்,

அக்காலத்திய ஆங்கில-சாக்சானிய சமூகம் ஒழுங்கற்ற, கொடிய மூர்க்கத்தனமான, பெருந்தன்மை வாய்ந்த, இரங்கத்தக்க பண்புகளை மிகுதியாகப் பெற்றிருந்தது. மிட்லாந்தினை ஒப்பா ஆட்சி புரிந்த பொழுது, தென் இங்கிலாந்தின் வாழ்க்கை நிலையை ஆங்கில-சாக்சானிய காலவழிச் செய்திக் கோவை சொல்லோவியமாகத் தீட்டிக்காட்டுகிறது. அதன் ஒரு பகுதியினை இப்பொழுது நாம் கீழே காண்போம்.

இவ்வாண்டு (கி. பி. 755) சினேவுல்பும், மேற்குச் சாக்சானிய மூதறிஞரும், தங்கள் இனத்தவனை சிக்பர்ட்டின் ஆட்சிக்குட்பட்ட ஆம்ப்ஷையர் தவிர, மற்றப் பகுதிகளைப் பறிமுதல் செய்தனர். அவன் நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டதனாலேயே இவ்வாறு செய்தனர். நெடுங்காலமாக அங்கு வாழ்ந்து வந்த மன்றத் தலைவரை அவன் கொலை செய்தவுடன் ஆம்ப்ஷையரும் பறிமுதல் செய்யப்பட்டது. அதன் பிறகு சினேவுல்பு அவனைக் காட்டு நிலப்பகுதிக்கு இழுத்துச் சென்றார். பன்றி வளர்ப்பவன் ஒருவன் அவனைக் கொன்று பழி தீர்த்துக் கொண்டான்.

டேவோனிலுள்ள சாமர்செட்டு எல்லைப்புறத்தில் அரசர் சினேவுல்பு, வெல்ஷ் மக்களை எதிர்த்துப் பல போர்கள் புரிந்தார். நூற்றுமுப்பது ஆண்டுகள் அவர் நாட்டினை ஆண்ட பிறகு சினியார்டு என்பவரை நாடு கடத்த வேண்டும் என்று அவர் கருதினர். சினியார்டு, சிக்பர்ட்டின் சகோதரராவர். அரசர் ஒரு சிறு படையுடன் சர்ரேயிலுள்ள மெர்டன் என்னும் இடத்தில் வாழும் மங்கை ஒருத்தியைக் காணச் சென்றிருப்பதாக ஒரு நாள் சினியார்டு கேள்வியுற்றான். அவன் அங்குச் சென்று அரசனைச் சுற்றி வளைத்துக் கொண்டான். அவ்வறையினைச் சுற்றிலும் தன்னுடைய ஆட்களை முற்றுகையிடுமாறு செய்தான். இதை அரசனும், அவனுடைய வீரர்களும் அறிந்தவுடன், தற்காப்பிற்காகக் கடும் போர் புரிந்தனர். இறுதியாக அரசனைக் கொன்றொழிக்கும் வரை இரு திறத்தார்க்கும் இடையே கடுமையாகப் போர் நடந்தது. இதைக் கண்ட அம்மங்கை கூக்குரலிட்டாள். அதைக் கேட்டு அக்கம்பக்கத்தில் இருந்த தேனர்கள் ஓடி வந்தனர். அத்தேனர்களுக்குச் சினியார்டு பணமும், நல் வாழ்வும் அளிப்பதாக உறுதியளித்தார். ஆனல், அவர்கள் யாருமே அதற்கு இசையவில்லை. அவர்கள் இறக்கும் வரை சினியார்டை எதிர்த்துப் போரிட்டனர். அவர்களுள் ஒருவர்தான் உயிர் பிழைத்தார். ஆனல், அவரும் படுகாயம் அடைந்திருந்தார்.

அடுத்த நாள் காலையில் அரசர் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி நாடெங்கும் காட்டுத்தீப்போல் பரவியது. இச் செய்தியைக் கேள்வியுற்ற அரசரின் தேனர்கள் நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு ஓடோடி வந்தனர். அரசன் கொலை செய்யப்பட்ட ஊரினுள்ளே கொலைகாரன் இருப்பதை அறிந்தனர். ஆனல், அக்கொலைகாரன், இவர்கள் அவ்வூரினுள் நுழையவொட்டாது ஊரின் வாயிலை அடைத்துள்ளதைக் கண்டனர். ஆனல் அவர்கள் தங்கள் ஆற்றலால் வாயிற் கதவுகளை உடைத்தெறிந்து ஊருக்குள்ளே செல்ல முயன்றனர். அங்கிலையில், தேனர்கள் கேட்கின்ற நிலத்தையும் பணத்தையும் அளிப்பதாக சினியார்டு அறிவித்தான். ஆனல், அவர்கள் தன்னை அரசனுக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தான். அத்துடன், தேனர்களுடைய இனத்தவர்கள் பலர் தனக்கு உடந்தையாக இருப்பதைக் காட்டினன். அவர்கள் தன்னை என்றுமே கைவிட்டுவிட்டுச் செல்லமாட்டார்கள் என்று கொலைகாரன் கூறினன். உடனே அத் தேனர்கள் தங்கள் தலைவனுகிய அரசனுக்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அளிக்கப்போவதாகவும் மிக அன்புடைய தம் இனத்தவர்களைப் பற்றித் தாங்கள் கவலைப் படவில்லை என்றும் கூறினர். எனவே தங்கள் அரசனைக் கொன்ற கொலைகாரனுக்குத் தாங்கள் கையாட்களாக இருக்க மாட்டோம் என்று அறைந்தனர். உடனே கொலைகாரனுக்கு ஆதரவாக இருந்த தங்கள் இனத்தவரை உயிர்மீது ஆசை இருந்தால், அவ்விடத்தை விட்டு ஓடுமாறு அவர்கள் எச்சரிக்கை செய்தனர். ஆனல், அவர்கள் அரசருடன் இருந்த தேனர்களுக்கும் இவ்வாறே எச்சரிக்கை செய்யப்பட்டது. எனவே, தாங்கள் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை என்று அவர்கள் கூறினர்.

இதைத் தொடர்ந்து கடும்போர் நடந்தது. இறுதியில் சினியார்டு கொலை செய்யப்பட்டான். அவனுடன் இருந்த மனிதர்கள் அனைவரும் போரில் மாண்டனர். முந்தைய நாளில் அரசருக்காக உயிர் விட்ட வீரர்களைக் காட்டிலும், இழிந்தவர்களாக அவர்கள் வாழ விரும்பாமையால் கடும்போர் புரிந்து தங்கள் உயிரை விட்டனர். இந் நிகழ்ச்சியால் நாம் ஆங்கில-சாக்சானிய காப்பியங்களின் அறவியல் பண்பு, எவ்வாறு அக்காலத்திய மக்களின் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றப்பட்டது என்பது புலனகின்றது.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

அரசரும், தேனரும், பாதிரியும்—கிறிஸ்துவ சமயமும், புறச் சமயங்களும்—வட இங்கிலாந்தின் பழைய சமயம்—போட்டி

யிடும் சமயங்கள்—செயிண்ட்டு பாட்ரிக்கு—கெல்ட்டிக்கு மடாலயத் துறவறம்—செயிண்ட் கொலம்பா—ஸ்காட்லாந்து கிறிஸ்துவ சமயத்தைத் தழுவுதல்—கிரிகோரியும் அகஸ்டினும்—பெண்டாவும் ஓஸ்வால்டும்—மெர்சியாவின் வெற்றி—விட்பியின் திருக்கூட்டம்—ரோமானிய அமைப்புகள் திரும்பி வருதல்—பீடுவின் நார்த்தம்பிரியா—டார்சஸ்ஸைச் சேர்ந்த தியோடர்—திருச்சபை வட்டங்களின் அமைப்பு முறை—அரசு, திருச்சபை ஆகியவற்றின் சட்டங்கள்—நடுநிலக் கடற்பகுதிப் பண்பும், நார்ட்டிக்கு பண்பும்—வீரயுகம்.

மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

1. பால்டுவின் பிரவுன் (Baldwin Brown) :
   Arts in Early England, Vols. I & II.
2. பேராசிரியர் பியூரி (Prof. Bury):
   Life of St. Patrick.
3. திருமதி கிரீன் (Mrs. Green) :
   The Irish State to 1014, Camb. Med. History, Vol. II, Chap. VIII, B. XVI, B. XVII and Vol. III, Chap. XIX
4. சாட்விக்கு (Chadwick) :
   The Heroic Age.
5. கெர், W. P. (W. P. Ker) :
   English Literature, Mediaeval, Chap. II.
6. பேராசிரியர் சாம்பர்ஸ் (Prof. Chambers)
   Widsith as before, especially Chap. VII.
7. ஆர்.எச். ஹாட்கின் (R.H. Hodkin) :
   A History of the Anglo-Saxon, 1935.
8. எப். எம். ஸ்டெண்ட்டன் (F. M. Stenton) :
   Anglo-Saxon England, 1943.

## இயல் 5

# வைக்கிங்குகளின் (டேனியரின்) படையெடுப்பு

நார்ட்டிக்கு இனத்தினர் இரண்டாம் முறை படையெடுத்தல்—வைக்கிங்குகள் இங்கிலாந்தில் நிலையாகத் தங்குதலும், அதனால் உண்டான விளைவுகளும்.

இங்கிலாந்திற்கு முதன் முதல் வந்த நார்ட்டிக்கு இனத்தினர் அங்கு நிலையாகத்தங்கி வாழ்ந்ததுடன், இந்த அளவிற்கு நாகரிகப் பாதையில் முன்னேற்றமடைந்தனர். மேலும் அவர்கள் தேசிய ஒற்றுமையைப் பெரிதும் போற்றி வளர்த்து வந்தனர். இந் நிலையில் இரண்டாவது முறையாக நார்ட்டிக்கு இனமக்கள் பிரிட்டனின்மீது படையெடுத்து வந்தனர். இங்கிலாந்தின் மடாலயங்களில் சிறப்புற்று விளங்கிய நாகரிகத்தைப் புறச்சமயத்தைச்சார்ந்த டேனியர்களும், நார்ஸிய மக்களும் சிறிது காலத்திற்கு அழித்தொழித்தனர். அத்துடன் சாக்சானியரும் கெல்ட்டிக்குகளும் ஆண்டுவந்த பகுதிகளுக்கு எதிராக அவர்கள் டேனியச் சட்டத்தை (Danelaw) நடைமுறைக்குக்கொண்டு வந்து, இங்கிலாந்தின் ஒற்றுமையைக் கெடுத்து பிளவு மனப் பான்மையை வளர்த்தனர். ஆயினும், ஒரு நூற்றுண்டு கழிவதற்குள் ஸ்கான்டிநேவியர்களின் படையெடுப்புகள் முன்னேற்றச் சக்திகளைப் பெரிதும் வலுப்படுத்தியதாகத் தெரிகிறது. சாக்சானிய இனத்தினரோடு வைக்கிங்குகள் ஓரளவிற்கு நெருங்கிய உறவுடையவர்களாவர். ஆனல், அவர்களைக் காட்டிலும் வைக்கிங்குகள் பேராற்றல் வாய்ந்தவர்கள். மேலும் அவர்கள் கடுமையாக உழைக்கும் திறனும், விடுதலையை விரும்பும் பண்பு நலனும் உடையவர்களாக இருந்தனர். அவற்றோடு கல்வி கேள்விகளில் பேரார்வமும், இலக்கியத்திலும் பாடல்களிலும் ஈடுபாடும் உடையவர்களாக இருந்தனர். மேட்டுநிலப் பண்ணைகளில் நிலையாகத் தங்கியமையால் சாக்சானியர்கள் தங்களுடைய கடலோடி வாழ்க்கையை மறந்துபோயினர். அச் கடலக வாழ்விற்குரிய அஞ்சா நெஞ்சத்தையும், உடல் உரத்தையும், உள்ளத் துணிவையும் வைக்கிங்குகள் இங்கிலாந்திற்கு மீண்டும் கொண்டுவந்தனர். ரோமானியர் இங்கிலாந்தைவிட்டுச் சென்ற பிறகு, முதன் முதலாக இங்கிலாந்தில் சுறுசுறுப்பான பட்டண வாழ்க்கை புத்துயிர்ப்புப் பெறுவதற்கு வைக்கிங்குகளே காரணமாக இருந்தனர். ஒன்பதாம் நூற்றுண்டில் நம்முடைய நாட்டில் உண்டான பெருங்கேடுகளின்மூலம் நம்முடைய இனத்திற்கு ஸ்கான்டிநேவிய இனத்தின் குருதி புகுத்தப் படாமல் இருந்திருந்தால், பிற்காலத்தில் பிரிட்டன் கடல்கடந்த நாடுகளோடு துணிச்சலாகப் பெருவாரியாகத் தொடர்பு கொண்டதையும், பெரியதொரு கடல்கடந்த பேரரசினை நிறுவியதையும் நாம் கண்டிருக்கமுடியாது. அதன் முயற்சி மிகக் குறைந்த அளவிலேயே நடைபெற்றிருக்கும்.

இத்தகைய நிலையான புதிய ஆற்றல் ஊட்டப்படுவதற்கு முன்பு, ஆங்கில-சாக்சானியரின் குறைகள் மிகப் பலவாகவும் பேரளவினதாகவும் இருந்ததை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் தங்கள் கடலகக் கலைத்திறனை முற்றிலும் மறந்து போய் விட்டனர். ஆல்பிரட்டு அரசர் அரசாங்க நாவாய்ப் படையை நிறுவ முயன்றபொழுது, பிரீசியரைக் கூலிவேலைக்கு அழைக்க நேர்ந்தது. லண்டன்மாநகரைத் தவிர, வேறு இடங் களில் என்றுமே சாக்சானியர் நகர வாழ்க்கையைப் போற்றி வளர்க்கவில்லை. அவர்கள் பிற்கால உழவர்களுக்கு முன்னோடி களாக நிலத்தை உழுது பயிரிட்டனர். காடுகளில் உள்ள மரங்களைவெட்டி, நாடாக்கும் நற்பணியில் அவர்கள் ஈடுபட்டிருந் தனர். இவையே சாக்சானியர் பிரிட்டனின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றிய அருந்தொண்டாகும். அவர்கள் விரிந்த ஊர்களிலும் அல்லது தனித்த சேரிகளிலும், காட்டையழித்து நாட்டாக்கிய இடுக்கான பள்ளத்தாக்குகளிலும் வாழ்ந்து வரலா யினர். ஆனால் ஊர்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் நிலங்களுக்கு அப்பால் உள்ள தரிசு நிலங்களிலும், காடுகளிலும் என்ன நடக் கிறது அல்லது அவை எப்படி இருக்கின்றன என்பதைப்பற்றிச் சிறிதும் கருத்தினைச் செலுத்தாதவர்களாக இருந்தனர். அவர் களுடைய விளை நிலங்களுக்கு அப்பாலுள்ள பகுதிகளில் இருந்து வரும் 'அயலாரை' எப்பொழுதும் சாக்சானியர் சந்தேகக் கண்கொண்டு நோக்கிவந்தனர். 'நெடுந் தொலைவில் இருந்து வரும் ஒரு மனிதனோ, அயலூரானோ, காட்டு வழியே உள்ள பெரு வழியில் ஊது குழலை ஊதாதும், கொம்பினை முழக்கி எச்சரிக்கை செய்யாமலும் வருவானானால், அவனை அவ்வழியின் இடையிலுள்ள சிற்றூர்களில் வாழும் மக்கள் திருடனாகவே கருதுவர். உடனே அவனை அம்மக்கள் கொலை செய்வர்; அல்லது மீட்புப்பணம் கொடுத்தால்தான் விடுதலை செய்வோம் என்று அவனைக் கட்டிப்போட்டுக் காவல்புரிந்து வருவர்' என்று கெண்ட்டு, வெஸ்ஸக்ஸ் ஆகியவற்றின் தண்டனை நூற்கள் தெரி விக்கின்றன.

அரசரும், பாதிரியாரும் சேர்ந்து தேசிய உணர்வினை அல்லது குறைந்தது மாநிலப்பற்றினை வளர்க்க முயன்றனர். ஆனால், அம்முயற்சியில் அவர்கள் மிகச் சிறிதளவே வெற்றி பெற்றனர். பழங்குடிமக்களிடையே உண்டான தீராப்பகை யினால் நார்த்தம்பிரியா குழப்பமும் கொந்தளிப்பும் உடைய தாகத் தனித்து விளங்கியது. அது ஒற்றுமையற்ற மக்களையுடைய தாக இருந்தமையால் நலிவுறத்தொடங்கியது. இங்கிலையில் அதை டேனியர்கள் எளிதில் கைப்பற்றுமாறு கைவிட்டுச்

சென்றனர். இரண்டாம் ஒப்பாவின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 757-796), மெர்சியா பிற அரசுகளுக்கு எல்லாம் தலைமை தாங்கிப் பொன்றுப் புகழ்பெற்றது. இவ்வரசன் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலிகளின் அரசனாகச் சிறப் புற்று விளங்கியவனும், கதைகளிலும் பாடல்களிலும் சிறப் பித்துப் பேசப்படும் தலைவனாகத் திகழ்ந்தவனுமான முதலாம் ஒப்பாவின் பன்னிரண்டாவது தலைமுறையில் வந்தவனா வான். எல்லான்டியூன் போர்க்களத்தே (825) மெர்சி யாவின் பேராற்றலை, வெஸ்ஸக்ஸைச் சார்ந்த எக்பர்ட்டு அழித்தொழித்தார். ஆனால், எக்பர்ட்டு, ஒப்பாவைப் போன்று ஆங்கிலேய மக்கள் அனைவருக்கும் அரசனாக விளங்க வில்லை. இவ்வாறு டேனியர்களுக்கு முன்பு தொடர்ந்து விளங்கிய ஏழரசுகளை (Heptarchy), பிரட்வால்டா (Bretwalata)[1] என்னும் பட்டத்தினைக்கொண்டு ஆண்ட அரசர்கள் நார்த்தம்பியாவைச் சார்ந்த எட்வின், மெர்சியாவை ஆண்ட பெண்டா, ஒப்பா, வெஸ்ஸக்ஸின் அரசரான எக்பர்ட்டு முதலியோர் பிரிட்டனில் ஒரு பேரரசின் நிழலையே ஆண்டவராவர். அவர்களுடைய சிறப்பும் மேலாண்மையும் ஒரு தனித்துறையை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது அல்லது அழிக்கப்பட்டது. நெடுந்தொலைவி லுள்ள மாநிலங்களை நிலையாக அடிமைப்படுத்தி யாளுவதற்குத் தேவையான ஆட்சி அமைப்புகள் அக்காலத்தில் இல்லாமல் போயிற்று. அவ்வேளையில் வெற்றி பெற்றோருக்கு அரண் சூழ்ந்த கோட்டை கொத்தளங்கள் இல்லை. கைப்பற்றிய பகைவர் நாடுகளில் நிலையாகப் படையை நிறுத்திவைப்பதற்குத் தேவை யான படைகளும் அவர்களிடத்தில் இருந்ததில்லை. அரசனிடத்து அளவுகடந்த பற்றுறுதியும், ஈடுபாடும் கொண்டிருந்த தேனர்கள் சிலராகவே இருந்துவந்தனர். குடிப்படையின் உதவியை ஒரு சில வாரங்களுக்கே பெறமுடிந்தது. சாக்சானிய உழவர்கள் பிற சாக்சானிய அரசுகளைக் கைப்பற்றி, அங்குக் குடியேறுவதை விரும்பவில்லை. ஆனால் அவர்கள் வெல்ஷ் மக்கள் வாழும் எக்ஸீடருக்கும், செவர்னுக்கும் அப்பாலுள்ள பகுதிகளைத் தாக்கு வதிலும், கைப்பற்றுவதிலும், அப்புதிய நிலங்களில் குடியிருப்பு களை அமைப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.[2]

[1] 'பிரட்வால்டா' என்பது இக்காலத்தில் பிரிட்டனை ஆண்ட அரசர்கள் தம்மேலாட்சியுரிமை தோன்ற மேற்கொண்ட பட்டமாகும். இந்திய வரலாற்றில் வழங்கும் 'சக்கரவர்த்தி', 'திரிபுவனச் சக்கரவர்த்தி' என்னும் பட்டங்களைப் போன்றதாகும்.

[2] பார்க்க, படம் எண் : 6

அயல்நாட்டுப் படையெடுப்பு உண்டான நெருக்கடியான நேரத்தில், ஆங்கிலேய அரசுகள் தங்கள் பழைய பகைமையை மறந்து, ஒற்றுமையுடன் வைக்கிங்களுக்கு எதிராக ஒன்றிற் கொன்று உதவிபுரிந்து கொண்டன. ஆயினும், ஒன்றுபட்ட தேசியத் தற்காப்புத் திட்டம் ஒன்றும் அவர்களிடையே இல் லாமையால், அவை ஒன்றையடுத்து ஒன்று வீழ்ச்சியுற்றன. டேனியரோடு போரிட்ட பிறகு உண்டான விளைவுகளாலேயே ஒன்றுபட்ட ஒரு நாடாக விளங்கவேண்டும் என்ற எண்ணம் அந்நாடுகளுக்கு இடையே தோன்றியிருக்கவேண்டும். நார்த்தம் பிரியாவும், மெர்சியாவும் புறச்சமய வெள்ளத்தில் மூழ்கிப் போன பிறகே இவ்வொற்றுமை உணர்வு உண்டாயிற்று. இத்தகைய போராட்டத்தில் தோன்றிய நெருக்கடியினாலேயே புதிய நிலமானியப் படைமுறை அமைப்புகளும், நகராட்சி மன்ற நிலையங்களும் தோன்றின. அவை எக்பர்ட்டின் வழித் தோன்றல்களைத் தங்கள் குலமுதல்வர் கனவிலும் கருதாததை— இங்கிலாந்தின் உண்மையான அரசர்களாக விளங்குமாறு செய்தது. வெஸ்ஸக்ஸ் அரசகுடும்பம் மாண்பு மிக்க ஆல்பிரட்டு போன்ற மாவீரர்களையும், அரசியல் வீரர்களையும் நெடுங்காலத் திற்குத் தொடர்ந்து அளித்து வந்தது. அவ்வாறு அளிக்காமல் இருந்திருந்தால் வரலாற்றின் போக்கே, வேறு வகையாக மாறிப் போயிருக்கும். விரிவான நிலையங்கள் இல்லாத பண்டைக் காலத்திய மக்கள் சமூகத்தின் செயல்கள்யாவும், அதனுடைய அரசர்களிடத்து எதிர்பாராவகையில் அமைந்து கிடக்கும் பண்பு நலன்களையே சார்ந்திருந்தன. பண்டைக் காலத்தில் வேளாண் மைத்தொழிலில் கிழக்கு ஆங்கிலியா மிகச் சிறப்புற்று விளங்கியது. அது இயற்கை வளமுடையதாக இருந்ததோடு, மக்கள் கூட்டமும் மிகுதியாக உடையதாக இருந்துவந்தது. ஆனால், ஆங்கில-சாக்சானிய இனத்தின் தலைமைப் பதவியை ஏற்க அது தவறியது, நார்த்தம்பிரியாவைச் சார்ந்த எட்வினைப் போன்றோ, மெர்சியாவை ஆண்ட பெண்டாவைப்போன்றோ, வெஸ்ஸக்ஸில் சிறப்புற்று விளங்கிய ஆல்பிரட்டைப் போன்றோ, அறிவாற்றல்களில் சிறந்த அரசர் யாரும் கிழக்கு ஆங்கிலியாவில் தோன்றாமல் போயினர். அதனால்தான் டேனியர்கள் கிழக்கு ஆங்கிலியாவை எளிதில் கைப்பற்றியதோடு அங்கு நிலையாகத் தங்கி வாழ்ந்தனர். அதைத் தங்கள் நிலைக்களனாகக்கொண்டு டேனியர் மெலிவுற்ற நார்த்தம்பிரியாவையும், அழிவுற்றுக் கொண்டிருந்த மெர்சியாவையும் தாக்கிக் கைப்பற்றினர். வெஸ்ஸக்ஸ் அரசு, இவ்விடத்திலிருந்து நெடுந்தொலைவிற்கு அப்பால் இருந்தது. அத்துடன் அக்காலத்தில் பேராற்றலும்

பெருந்திறனும், பேரறிவும் படைத்த அரசர் ஒருவரால், இங்கிலாந்தின் மற்ற அரசுகளைக் காட்டிலும் மிகச் செம்மையாக வெஸ்ஸக்ஸ் ஆளப்பட்டது. ஆல்பிரட்டும், அவருடைய சகோதரர்களும் அக்காலத்தில் வெஸ்ஸக்ஸை ஆண்டு வந்தனர். இங்கிலாந்தின் பிறபகுதிகளை எல்லாம் எளிதில் கைப்பற்றி வெற்றி கொண்ட வைக்கிங்குகள், வெஸ்ஸக்ஸைக் கைப்பற்றியிருப்பார்களானல், இங்கிலாந்து முழுவதும் அவர்களுடைய ஆட்சிக்குட்பட்டிருக்கும். ஆனல், அவர்களுடைய முயற்சி வெஸ்ஸக்ஸில் தோல்வியுற்றது. வெஸ்ஸக்ஸின் வரலாற்றுப் புகழ்மிக்க நிலவியல் அமைப்பு இதற்குச் சிறந்ததொரு காரணமாகும்.

முடிவில் நிலைமைகள் வேறு வகையாக இருந்திருந்தால், பதினேராம் நூற்றுண்டில் கான்யூட்டின் தலைமையில் முன்னேறியதைப் போல, ஒன்பதாம் நூற்றுண்டிலும் ஸ்கான்டிநேவியர் தங்கள் ஆதிக்கத்தைக் காரன்வால், வேல்சு ஆகியவற்றின் எல்லைப்புறம் வரையில் பரப்பி இருப்பார்களா? இவ்வினவிற்கு விடை இறுப்பது எளிய செயலன்று. டேனியர்கள் இங்கிலாந்தில் நிலையாகத் தங்கிய பிறகு, நார்மானியர்களைப் போன்று எப்படியாவது ஓடன் வழிபாட்டிற்குப் பதிலாக இயேசு பெருமானின் சமயத்தைப் பின்பற்றத் தொடங்கி இருப்பர் என்று நாம் கருதலாம். வரலாற்றில் ‘இப்படி இருந்திருக்கலாம்’ என்பது வெற்றிமிக்க நிகழ்ச்சிகளைச் சூழ்ந்த நிழல்களாகவே காணப்படுகின்றன. டேனியரின் படையெடுப்பிற்குப் பிறகு, நாகரிகத்தினை மறுபடியும் நல்ல முறையில் அமைப்பதற்கும், இங்கிலாந்தில் இருந்த நார்ட்டிக்கு இனத்தின் இருகிளைகளையும் ஒன்றுசேர்த்து அவற்றிடையே உடன்பாடுண்டாகுமாறு செய்வதற்கும் உரிய உரிமையினை மாண்புமிக்க ஆல்பிரட்டும், அவருடைய வழித்தோன்றல்களும் பெற்றிருந்தனர்.

‘வைக்கிங்கு’ (Viking) என்னும் சொல்லிற்கு ‘வீரர்’ (Warrior) என்று பொதுவாகப் பொருள் கூறப்படுகிறது. அதற்குக் ‘கடற்கழிமுகத்தைச் சார்ந்த மனிதர்கள்’ (Creek-Man) என்பது பொருளன்று என்று சிலர் கூறுவர். ஆனல், வைக்கிங்குகள் கடற்கழிமுகத்தைச் சார்ந்த மக்களே என்பதில் சிறிதும் ஐயமில்லை. டென்மார்க்கில்[1] மணல் திடல்கள் பல உள்ளன. அவற்றிடையே, கடலின் கழிகள் பல உள் நுழைந்து காணப்படுகின்றன.

[1] அங்கிருந்து பல மாவட்டங்களைக் காலியாகவிட்டு ஆங்கிலிகள் இங்கிலாந்திற்கு வந்துவிட்டனர். அம்மாவட்டங்களைக் கைப்பற்றி, டேனியர்கள் அங்கு நிலையாக வாழ்ந்தமையால் அந்நாட்டிற்கு ‘டென்மார்க்கு’ என்னும் பெயர் உண்டாயிற்று.

நார்வே செங்குத்தான மலைப்பாறைகளுக்கு இடையேயுள்ள இடுக்கமான கடற்கால்கள்—இடுங்கு விடர் கழிகள் (Fiords) பலவற்றை உடைய நாடு. அவ்விடர் கழிகள் நூற்றுக்கணக்கான கற்களுக்குச் செங்குத்தான மலைகளுக்கு இடையே அந் நாட்டினுள் பாய்ந்து சென்றிருப்பதைக் காணலாம். இவ்விடுங்கு விடர்கழிகளுக்கு இடையே இங்குமங்கும் செங்குத்தான கொடும் பாறைகளுக்கும் கடற்கழிகளுக்கும் இடையே உள்ள வளமான நிலப்பகுதிகள் சிறந்த விளைநிலங்களாகவும், காடுகள் நிறைந்த மரமனைகளில் (Chalets) மக்கள் வாழ்வதற்குரிய வாழ்விடங்க ளாகவும் இருந்தன. இருண்ட காடு முதல் கடல் தண்ணீர் வரையில் அங்குள்ள செங்குத்தான சரிவுகள் விறகு வெட்டு வோரையும் கப்பல் கட்டுவோரையும் அழைத்து அவர்களுடைய தொழிலில் சிறப்புறுமாறு செய்தன எனலாம். மரங்கள் வெட்டப் பட்ட மலைச் சரிவுகளில் இழுமென இழிதரும் சிற்றாறுகளும், அருவிகளும் நிறைந்துள்ளன. அவ்விடங்கள் வேனிற் காலத்தில் கால்நடைகளுக்குச் சிறந்த மேய்ச்சல் நிலங்களாகப் பயன் பட்டன. இவற்றிற்கு எல்லாம் மேலாக, தரிசாகக்கிடக்கும் மலைத்தொடர்கள் பனி மண்டலத்தைத் தழுவிய வண்ணம் உள்ளன. இவ்வாறு விண்ணைத் தீண்டித்தழுவும் நீலமலைகள் வெண்ணிறமலைகளாக விளங்குவது நார்ஸியப் பாடல்களுக்கும், கற்பனைக் கதைகளுக்கும் வற்றாத ஊற்றாக இருந்தன. அவை இடுங்கு விடர்கழிகளின் ஊடே சென்று அவற்றைப் பல சிறு அரசுகளாக விளங்குமாறு பிரித்தன. இவ்வாறு அவை நார் வேயின் அரசியல் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பல நூற்றாண்டுகளாக உருவாகவொட்டாமல் தடுத்து வந்தன. மேலும் உடல் உரமிக்க அந்நாட்டு மக்களை உணவுப் பொருள் களையும், வேறு பல செல்வத்தையும் நாடிக் கடலக வாழ்வினை மேற்கொள்ளுமாறு செய்தன.

'பர்' (Fur) என்னும் விலங்கின் மென்மயிர் வாணிகர்களும், திமிங்கில மீன் வேட்டையாடுவோரும், மீன் பிடிப்போரும், வாணிகர்களும், கடற்கொள்ளைக்காரருமாக ஸ்கான்டிநேவியர் விளங்கினர். இத்தொழில்களுக்கு இடையே அரிதின் முயன்று அவர்கள் நிலங்களை உழுது பயிரிட்டும் வந்தனர். இவ்வாறு எப்பொழுதும் ஸ்கான்டிநேவியர் நிலத்திலும் நீரிலும் வாழும் நிலநீர் வாழ் உயிரினங்களாக (Amphibious) இருந்து வருகின்றனர். வலரயறுத்துக் கூறமுடியாத தொல் பழங்காலத்தில்—கற்காலத்தில் அவர்கள் இந்நாட்டைத் தங்கள் தாயகமாகக்கொண்டு வாழத்தொடங்கினர். அக்காலம் முதல் அவர்களுடைய ஒரு குடியிருப்பிலிருந்து இன்னொரு

குடியிருப்பிற்குச் செல்லுவதற்குக் கடல்களே தெருக்களாகப் பயன்பட்டு வருகின்றன. வெளியுலகத்தோடு அவர்கள் தொடர்பு கொள்ளுவதற்குப் பயன்படும் ஒரே வகையான ஒப்பற்ற போக்கு வரத்திற்குரிய வழியாகக் கடல் பயன்பட்டு வருகின்றது. ஆனால், எட்டாம் நூற்றாண்டின் இறுதி வரையில் அவர்கள் பால்டிக்கு கடற்கரைப் பகுதிகளிலேயே கடற்கொள்ளையடித்து வந்தனர். அவர்கள் ஒருவரையொருவர் கொள்ளையடிப்பதிலும், அருகிலுள்ளவர்களைக் கொள்ளையடிப்பதிலும், மனநிறைவு கொண்டு வாழ்ந்தனர். சார்லமேனின் ஆட்சிக்காலத்தில் தான் அவர்கள் முதன் முதலாகப் பெருங்கடலைக் கடந்து, கிறிஸ்துவ சமயத்தைப் பின்பற்றிய மேற்கு நாடுகளைத் தாக்கத் தொடங்கினர்.[1]

நெடுந்தொலைவிலுள்ள புதிய இடங்களுக்குப் பேரளவில் அவர்கள் ஏன் திடீரென்று போக விரும்பினர் என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது.

பலவகையான விடைகள் இதற்குத் தரப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஓரளவிற்கு உண்மையாக இருக்கலாம். மக்கள் வாழ்க்கைக்கு ஏற்றதாக அமையாத அந்நாட்டின் வானிலையால் போதிய அளவிற்கு உணவுப்பொருள்கள் விளையாமல் போயிருக்கவேண்டும். அதைத் தொடர்ந்து பஞ்சமும் பட்டினியும்

[1] அவர்கள் கடல் கடந்து சென்று தங்கிய நாடுகளுக்கும் தங்களுடைய நிலம் நீர் வாழ் வாழ்க்கையின் பண்புகளை உடன் கொண்டு சென்றனர். ஐஸலாந்திற்கு 'Burnt Njal' என்னும் நூலினையும், 'Orkney Saga' என்னும் நூலினையும் பார்க்க. இந்நூலினுள் சுவேயனை (Sweyn) ப் பற்றிய சுவை மிக்க செய்திகள் பல காணப்படுகின்றன. ஓர்க்கனி' (Orkney) முழுவதும் காணமுடியாத பெரிய மது அருந்தும் மன்றத்தைச் சுவேயன் உடையவராக இருந்தார். இளவேனிற் காலத்தில் அவர் கடுமையாக உழைத்தார். மற்றவர்களை மிகுதியாக விதைகளை விதைக்குமாறு அவர் செய்தார். அவற்றை அவரே பெரிதும் கவனித்து வந்தார். அவ்வுழைப்பு முடிந்தவுடன், ஒவ்வொரு வேனிற் காலத்திலும் சுவேயன் தம்முடைய குழுவினரோடு கடற்பயணம்செய்யத்தொடங்கிவிடுவார். தென்பகுதியிலுள்ள தீவுகளிலும், ஐஸ்லாந்திலும்சுற்றித்திரிந்துவிட்டு அவர் நல்ல கோடை காலத்தில் தாயகம் திரும்புவார். அதனை அவர் 'வேனிற்கால வைக்கிங்கு' என்று குறிப்பிடுவார். அதன் பிறகு அவர் அறுவடை செய்வார். அவ்வாண்டினைக் கூதிர்ப்பருவ வைக்கிங்கோடு முடிவடையுமாறு அவர் செய்வார். விடாமுயற்சியுள்ள பலதிறப்பட்ட வாழ்க்கை வாழ்வதிலே அவர் பெரும் விருப்பம் உடையவராக இருந்தார்.

தற்கால ஆங்கில நாவல்களில் வைக்கிங்குகள் சிறப்பிடம் பெற்றுள்ளனர். கிப்ளிங்கு எழுதியுள்ள 'Joyous venture in Putch of Pook's hill' என்னும் நூலில் அவர் வரலாற்றுமாந்தர்களைப் பொருத்தமாகப் பயன்படுத்தியுள்ளார். ஜான் பக்கன் (John Buchan) எழுதியுள்ள 'Path of the king' என்னும் நூலின் முதல் கதையில், வரலாற்றுக் கற்பனை சிறப்புற்று விளங்குவதைக் காணுகின்றோம்.

நாட்டிலே உண்டானமையால், அங்கு வாழ்ந்த மக்கள் அண்டை வரும் புதிய நாடுகளை நாடி, ஒரு பெருங்கூட்டமாகப் புறப்பட்டிருக்கவேண்டும். அக்காலத்திய ஸ்காண்டிநேவிய சமுதாயத்தில் மூவகைப் பிரிவுகள் இருந்தன. அவை அடிமைகளாகப் பிணைப்பு உண்டவர்கள் (Thralls), உழவர் (Carls), கோமான் (Earl) என்பனவாகும். கோமான்களிடையே முக்கியமாகப் பல மனைவியர் மணம் பெரு வழக்காக இருந்தது. அதனால், நிலவுடைமை இல்லாத இளைஞர்கள் நாட்டிலே மிகுதியாகப் பெருகினர். அவ்விளைஞர்கள் பிறருக்கு அடிமைப்பட்டு வாழவும் விரும்பவில்லை; பட்டினியால் செத்துமடியவும் விரும்பவில்லை. வாணிகத்தைக் காட்டிலும் அவர்கள் போரினையும் வீரதீரச் செயல்களையுமே பெரிதும் விரும்பினர். அவர்கள் இயல்பாகப் பெற்றுள்ள மஞ்சள் நிறத் தலைமயிரைப் பற்றிப் பெருமைப் பட்டனர். அவ்விளைஞர்கள் செஞ்சட்டையணிந்து, பொன் அணிகள் பூண்டு, இன்பமாக வாழவிரும்பினர். அவர்கள் தங்களுடைய கைகளிலே ஒளிரும் வாளையும், உடலைக் காத்த இரும்பு வளையச் சட்டையையும் கண்டு பெருமிதம் அடைந்தனர். இவ்வாறு வைக்கிங்குகள் மாசு படிந்தவர்களாக இருப்பதைவிடப் பகட்டான வாழ்க்கை வாழ்வதையே சிறந்ததாகப் போற்றினர். ஆனால், போர்க்கவசம் அணிந்து அவர்கள் போருக்குக் கிளம்பினால், அவர்களைப் போன்ற கொடுமை உள்ளம் படைத்தவர்களை வேறெங்கும் காணமுடியாது. இவையே வைக்கிங்குகள் இயக்கத்தின் மூலப்பொருள்களாகும். எட்டாம் நூற்றாண்டின் இறுதி முப்பதாண்டுக் காலத்தில் சார்லமேயும், அவருடைய பிராங்கிய குதிரைப் படை வீரர்களும் டென்மார்க்கின் தெற்கு எல்லைப்பகுதி வரையில் படையெடுத்து வந்தனர். அவர்கள் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்புவதற்காகவே படையெடுத்து வந்தனர். இப்படையெடுப்பின் பயனாக ஜெர்மானிய-சாக்சானியர் கிறிஸ்துவ சமயத்திற்கு மாறவேண்டும் அல்லது இறக்கவேண்டும் என்ற இக்கட்டான நிலைக்கு ஆளாகி அல்லலுற்றனர். அந்நிலையில் சாக்சானிய நாட்டுப்பற்றாளர்களுக்கு டேனியர் புகலிடம் தந்துதவினர். எனவே சார்லமே தங்கள் நாட்டின் எல்லைப்பகுதிக்குப் பெரும்படையுடன் வந்தபொழுது டேனியர் பெருங் கலக்கமுற்றனர். இவ்வாறு கிறிஸ்துவ மாவீரனை சார்லமே படைக்கலம் தாங்கிப் பெரும்படையுடன் டென்மார்க்கு வரை சென்று டேனியரை அச்சுறுத்தியதால்தான், ஓடனை வழிபட்டுவந்த டேனியர், இங்கிலாந்தின் மீது படையெடுத்துச் சென்று மடாலயங்கள் அனைத்தையும் இடித்து மண்மேடாக்கினர் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், அம் மாபெரும் அழிவு வேலைகளைச்செய்த முதல் படையெடுப்பாளர்கள்

டென்மார்க்கிலிருந்து வரவில்லை; நார்வேயிலிருந்தே வந்தனர். மேலும் ஸ்கான்டிநேவியர்களுக்கு இடையே தேசியவுணர்வாகிய அரசியல் ஒற்றுமை இருந்ததாகவும் தெரியவில்லை. அவர்கள் சமய வெறியர்களாக இருந்ததுமில்லை. உலகம் முழுவதிலும் காட்டுமிராண்டித்தனம் நிலவியிருந்த அக்காலத்தில், அவர்கள் காட்டுமிராண்டிக் கொள்ளைக்காரர்களாக இருந்ததில் வியப்பில்லை. ஆனல், மற்றவர்களிடத்துக் காணமுடியாத சில சிறந்த பண்புகள் அவர்களிடத்து இருந்தன. புதிய நாடுகளைக் காண்பதில் ஒரு வகைப் புத்தார்வமும், கடலகவாழ்வில் வீரதீரச் செயல்கள் புரிவதில் அவர்கள் அளவு கடந்த மகிழ்ச்சியும் அடைந்தனர். வைக்கிங்குகள் படையெடுப்பதற்கு முன்பு, அமைதி மிக்க ஸ்காண்டிநேவிய வாணிகர் இங்கிலாந்திற்குச் சென்று வந்திருக்கலாம். ஆனல், அதற்குரிய சான்றுகள் மிக அருகிய நிலையில் உள்ளமையால், நாம் அவற்றிலிருந்து முக்கிய செய்திகள் எதையும் உய்த்துணர முடியவில்லை.

வைக்கிங்குகள் படையெடுப்புகளுக்கு வரையறுக்கப்பட்ட சில காரணங்களைக் கூறலாம். ஆனல் ஒவ்வொரு இயக்கத்தின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் தற்செயல் நிகழ்ச்சியின் கூறுகள் இடம் பெறுகின்றன. கடற்கழிமுகத்தே தனித்து வாழ்ந்த மக்களின் பேராற்றல் திடீரென்று பொங்கி வழிந்தமையின் பயனுக அவர்கள் கான்ஸ்டாண்டி நோபிளுக்கும் கிரீன்லாந்திற்கும் சென்று குடியேறினர்; நார்மண்டியினை நிறுவினர். இங்கிலாந்தில் டேன்லாவையும், அயர்லாந்தின் பட்டணங்களையும் அவர்கள் அமைத்தனர். இவையாவும் தனிப்பட்ட சில மாவீரர்கள் செய்த முயற்சியில் முதன் முதல் பெற்ற வெற்றியின் விளைவாகும். அம்மக்களினம் அன்றைய ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் சென்று பரவலாயிற்று.

அது எவ்வாருயினும், எட்டாம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியில், மெர்சியாவின் ஒப்பா (Offa) உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில்தான், மேற்கு ஐரோப்பாவில் வரலாற்றுப் புகழ் பெற்ற வைக்கிங்குகளின் படையெடுப்பு நடந்தது. வெஸ்ஸக்ஸின் கடற்கரையோரத்தில் மூன்று நீண்ட கப்பல்கள் இருநூறு, முந்நூறு முரடர்களைக் கொண்டு வந்து சேர்த்தது. அவர்கள் வெஸ்ஸக்ஸ் அரசரின் பிரதிநிதியைக் கொன்று, அவனைக் கடலிலே போட்டுவிட்டுப் போயினர். அவர்கள் ஏன் இங்கு வந்திருக்கிருர்கள் என்பதை அறிவதற்காகச் சென்ற அரசனது அதிகாரிக்கு இத்தகைய எதிர்பாராத முடிவு உண்டாயிற்று. அதன் பிறகு, பல ஆண்டுகளுக்கு அப்பகுதிகளில் வைக்கிங்குகள்

வந்ததாகவே தெரியவில்லை. ஆனால் அத்தகைய தாக்குதல்கள் நார்த்தம்பிரியா ஸ்காட்லாந்து, அயர்லாந்து, வேல்சு முதலிய பகுதிகளின் கடற்கரையோரங்களில் இடைவிடாது நடந்து வந்தன. நீர்வழியே வந்த திருடர்கள் கவர்ச்சிகரமாகக் கட்டப்பட்டிருந்த மடாலயங்களைக் கொள்ளையடித்தனர். அம்மடாலயங்கள் கெல்ட்டிக்கு திருச்சபைகளின் பாணியில் கடலிலிருந்து எளிதில் நுழையத்தக்க திட்டுகளிலும், கரையோரங்களிலும், முனைகளிலும் கட்டப்பட்டிருந்தன. லின்டிஸ்பர்னே, அயோனே, இன்னும் பேரும் புகழும் பெறாத பல மடாலயங்கள் அவற்றின் அரும் பெருஞ்செல்வத்தோடு கொள்ளையடிக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டும், இடித்து மண்மேடாக்கப்பட்டும் வந்தன. அம்மடாலயங்களில் வாழ்ந்த துறவிகள் அங்கேயே கொன்று குவிக்கப்பட்டனர் அல்லது சிறைப்படுத்தப்பட்டு, ஐரோப்பாவில் இருந்த சந்தைகளுக்குக் கொண்டுபோய் அடிமைகளாக ஏலம் போடப்பட்டனர். எனவே நன் முறையில் பாதுகாக்கப்படாத பெருஞ்செல்வத்தை மடாலயங்கள் சேர்த்து வைத்திருந்தமையால், வைக்கிங்குகள் அவற்றை எப்படியாகிலும் பெறவேண்டும் என்பதற்காகப் பேரழிவுகளை உண்டாக்கினர் என்று கொள்ளுவதே பொருத்தம் உடையதாகும். சார்லமே படையெடுத்து வந்து தங்களை அச்சுறுத்தியமையால், இவ்வழிவு வேலைகளை இங்கிலாந்தில் வைக்கிங்குகள் செய்தனர் என்று கூறுவது அக்காலச் சூழ்நிலைக்கும், பழங்குடி மக்கள் பண்புக்கும் பொருந்துவதன்று. மேலும் அவர்கள் செய்த அக்கொடுஞ் செயல்கள் அக்காலத்திற்குப் புதியதோ பொருத்த மற்றதோ அல்ல. அவர்கள் இங்கிலாந்தினைத் தாக்குவதற்கு வந்தபொழுது, இங்கிலாந்தில் இருந்து வந்த ஆங்கில-சாக்சானியரும் அவர்களுக்குள்ளேயே வெட்டி மடிந்துகொண்டிருந்தனர் என்பதை நாம் மறத்தலாகாது. கி.பி. 796 ஆம் ஆண்டிற்குரிய காலவழிச் செய்திக் கோவை கூறும் கருத்துகள் இங்கு குறிப்பிடத்தக்கனவாகும். 'இவ்வாண்டு, மெர்சியர்களின் அரசரான கேனல்பு (Kenulf) சேற்றுநிலம் வரையிலுள்ள கெண்ட்டின் பகுதிகளைக் கைப்பற்றினார். அவர் பிரேனைக் கைப்பற்றி அதன் அரசரைச் சிறைப்படுத்தி மெர்சியாவிற்குக்கொண்டு சென்றார். அங்கு அவ்வரசனின் கண்களைப் பிடுங்குமாறு செய்தார்; கைகளை வெட்டித் துண்டிக்கச் செய்தார்.'

பிரிட்டனின் கடற்கரையோரங்களில் இருந்த மடாலயங்களைத் தாக்கிக் கொள்ளை அடித்தமையே, வைக்கிங்குகளின் படையெடுப்பு இயக்கத்தின் தொடக்கமாகும். இவ்வியக்கத்தின் அடுத்த நிலை எவ்வாறிருக்கும் என்பதை, நாம் இத்தாக்குதல்களுக்குப் பிறகு நார்வேயிலும், டென்மார்க்கிலும் வைக்கிங்கு

களின் வாழ்க்கை நிலை எவ்வாறு இருந்தது என்பதை அறிந்தால் எளிதில் கூறிவிடலாம். வெற்றி பெற்ற படையெடுப்பாளர்கள் பொன்னையும், மணியையும் பெரிய மூட்டைகளாகக் கட்டிக் கொண்டு தாய் நாடு திரும்பினர். ஸ்கான்டிநேவியாவின் கழி முகங்கள்தோறும், இடுங்குவிடர்கழிகள்தோறும் மேற்கிலுள்ள திருச்சபைகள் எல்லாம் பொன்னால் இழைக்கப் பெற்றிருக்கின்றன என்றும், மேலைக்கடல்களில் போர்க்கப்பல்களைக் காண்பது அரிது என்றும் வதந்திகள் உலாவத் தொடங்கின. ஒரு சிறிது இன்பமான வீரதீரச் செயல்களைச் செய்தால் புதிய வழியில் பெருஞ்செல்வத்தைக் கொள்ளையடித்து வரலாம் என்று வைக்கிங்குகள் துடியாகத்துடித்தனர். அவர்கள் வாழும் நாட்டில் காணப்படும் விளைநிலங்களை விடச் செழிப்பும் வளமும் உடைய விளைநிலங்கள் மிகுதியாக அந்நாட்டில் கண்டதை வைக்கிங்குகளால் மறக்க முடியவில்லை. இத்தகைய சூழ்நிலையைக் கோமான்களின் பிள்ளைகள் நன்முறையில் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர். எனவே நாள்தோறும் அவர்கள் தக்க வாய்ப்பினை நாடித் தேறல் மன்றங்களில் இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தனர். அவர்கள் தக்க தலைவர்களையும் பற்றுறுதியுடைய ஆதரவாளர்களையும் தேடிய வண்ணம் பொறுமையாகப் பல நாட்கள் தேறல் மன்றங்களிலே காத்திருந்தனர்.

இவ்வியக்கம் உச்சநிலையை அடைவதற்கு முன்பு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நார்வேயும் டென்மார்க்கும் இங்கிலாந்தின் தீவுகளை அயலார் படையெடுப்பில் இருந்து தடுத்துக் காப்பதற்குரிய கப்பற்படை இங்கிலாந்தில் இல்லாததை நன்குணர்ந்தனர். அதைப்போன்றே புகழ் மிக்க கரோலிங்கியன் பேரரசைக்காப்பதற்கும் அதனிடத்துக் கப்பற்படை இல்லாததை அறிந்தனர். ஆங்கில-சாக்சானியர்களும், பிராங்கியர்களும் நிலத்தினையே நம்பி வாழும் முட்டாள்களாக இருந்தனர். ஐரிஷ் மக்கள் தங்கள் சமயத் தொண்டர்களை அயல் நாடுகளுக்கு அனுப்புவதற்கும், அயல் நாடுகளில் குடியேற்றங்களை அமைப்பதற்கும் சிறிய வள்ளத்தினையும், படகினையுமே பயன்படுத்தி வந்தனர். எனவே அவர்களுடைய உலகம் வைக்கிங்குகளின் கடல் ஆதிக்கத்திற்குத் திறந்தவெளி அரங்காகப் பயன்பட்டது; அவர்களுடைய பேராசைக்கு இரையாகி அந்நாடுகள் அல்லற்பட்டன. அவர்களுடைய மகிழ்ச்சி மிக்க வீரதீரச் செயல்களுக்கு விருப்பமிக்க விளையாட்டுத் திடலாகவும் அவை பயன்பட்டன. விரைவிலே தாய் நாட்டை விட்டு வெளி நாட்டிற்குக் கடற்பயணம் செய்து பொருள்களைக் கொள்ளையடித்துவராத இளைஞர்

கள் ஸ்கான்டிநேவியா—டென்மார்க்குத் 'தேறல் விடுதி' களில் எள்ளி நகையாடப்பட்டனர். மங்கையர்கள் அவர்களுடைய வீரத்தினை இகழ்ந்து பேசத் தொடங்கினர். அம்மங்கையருள் சிலர் தங்கள் ஆடவருடன் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று, போர்க்கவசம் அணிந்து வீரத்துடன் போர்புரிந்து வெற்றியுடன் தாயகம் திரும்பியவர்களாக இருந்தனர். சுவிட்சர்லாந்தின் எளிய உழவர்களிடத்து மோரட்டும் (Morat) நஞ்சியும் (Nanci) எளிதில் வெற்றி பெற்ற பிறகு, புதிதாகத் தோன்றிக்கொண்டிருந்த தலைமுறையினரின் ஆற்றல் அனைத்தையும் உறு துணையாகக் கொண்டு, அயல் நாடுகளில் போரிடுதலும், கொள்ளையிடுவதையுமே தங்கள் தேசிய இனத்தின் தொழிலாகக்கொண்டனர். கொள்ளையடிப்பதற்காகவே அயல் நாடுகள்மீது படையெடுத்துச் சென்று தாக்கிவந்த நிலைமாறி, புதிதாகக் கண்ட நாடுகளுக்குச் சென்று நிலையாகக் குடியிருப்புகளை அமைத்து வாழ வைக்கிங்குகள் முயன்றமை அவர்களுடைய படையெடுப்புகளின் இறுதி நிலையாகும். ஆனால், அது மிக முக்கியமான நிலையுமாகும்.

தாயகத்துக் கடலக வாழ்வில் ஸ்கான்டிநேவியர் ஒரே சமயத்தில் கடற் கொள்ளைக்காரர்களாகவும், வாணிகர்களாகவும், அவர்களுக்குள்ளேயே போரிட்டும், வாணிகம் புரிந்தும் வாழ்ந்து வந்தனர். எனவே இப்பொழுது அயல் நாட்டிற்குரிய கடல் வழி திறக்கப்பட்டவுடன், அவர்கள் பேரளவில் வாணிகம் செய்யவும், கடலில் சென்று கொள்ளையடிக்கவும் விரும்பினர். அவர்கள் வாணிகரின் பெருமிதத்தோடு, மிகவும் வேறுபட்ட மக்களான வீரர்களின் பெருமிதமும் கொண்டவர்களாய் வீறுடன் விளங்கினர். ஹெர்பிரைட்சில் காணப்படும் கல்லறைகளுள், வைக்கிங்குகளின் தலைவனுடைய கல்லறை சிறப்புடையதாகும். அதை அகழ்ந்தெடுத்தபோது, அதனுள் அவ் வீரனுடைய வாளும், போர்க் கோடாரியும் கண்டெடுக்கப்பட்டதோடு, ஒரு தராசும் கிடைத்துள்ளமை சிறப்பு மிக்க செய்தியாகும். அவர்கள் இங்கிலாந்தில் அல்லது அயர்லாந்தில் ஒரு குடியேற்றத்தை நிறுவியவுடன் கோட்டை கொத்தளங்களோடு பட்டணங்களை அமைப்பதைப்பற்றியாகிலும் அல்லது சந்தைக் கடைகளை வைப்பதைப் பற்றியாகிலும் திட்டமிடத் தொடங்கியது அவர்களுடைய உள்ளம் என்பது இதனால் அறியப்படுகிறது. நில வழியாக அல்லது கடல் வழியாகப் புதிதாக வருபவர் யாராக இருந்தாலும் அவரிடத்து வைக்கிங்குகள் வாணிகத் தொடர்பு கொள்ளத் தயாராக இருந்தனர். அல்லது சமய சூழ்நிலை

களுக் கேற்ப வந்தவர்களைக் கொன்று குவித்தனர். பல நூற்றாண்டுகள் வரை இம்முறையே இடைக்கால ஐரோப்பாவின் கடலோடிகளுடைய வாழ்க்கையின் சிறந்த பழக்கமாக இருந்தது. அக்காலத்திய ஐரோப்பியத் துறைமுகங்கள் அனைத்திலும் இத்தகைய கொடுஞ் செயல்கள் நிகழ்வது இயற்கையாக இருந்துவந்தது. இதற்குச் சாசரின் கப்பல்காரர்களோ, எலிசபெத்தின் வீரர்களோ விதிவிலக்கன்று. ஆனால், வைக்கிங்குகள் அவர்களுக்கே சிறப்பாக உரிய ஆற்றலை வாணிகத்திலும் கடற் கொள்ளையிலும் பயன்படுத்தினர். அத்துடன் நிலத்திலே சிறந்த படையியல் ஆற்றல் உடையவர்களாகவும் இருந்தனர். இப்பண்புகள் அனைத்தும் இங்கிலாந்தின் மண்ணிலே வாழ்ந்த ஜாக்கிற்கு (Jack) ஒருசேர அமையவில்லை.

ஒன்பதாம் நூற்றாண்டு முடிவுறும் நிலையில் ஸ்காண்டிநேவிய மக்கள் இனத்தின் பெரும்பான்மையினர் உலகத்தின் பெரும் பகுதிகளுக்குச் சென்று குடியேறி இருந்தனர். பைரேயசில் (Piracus) உள்ள கல்சிங்கத்தின்மீது வைக்கிங்குகள் தங்களுடைய 'ருயனஸ்' (Runes) எனப்படும் பண்டை ஜெர்மனிய எழுத்துகளைச் செதுக்கியுள்ளனர். அதனை இன்றும் வெனிசு நகரிலுள்ள படை வீட்டினைக் காவல் புரியும் சிங்கத்திடத்துக் காணலாம். டூபிளினில் (Dublin) தங்கள் இனத்தவருக்கு இடையே உண்டான பழம்பகை காரணமாக, வைக்கிங்குகள் கான்ஸ்டாண்டிநோபிளின் தெருக்களில் பழி தீர்த்துக்கொண்ட கதையினை உலகம் நன்கறியும். அவர்கள் நெடுந் தொலைவிற்குப் பயணம் செய்தமையால், பெருஞ் செல்வத்தையும், சிறந்த நாகரிகத்தையும், நகரத்தைப்பற்றியும், பல்வேறு வகைப்பட்ட மக்களைப்பற்றிய அறிவினையும் உடன் கொண்டுவந்தனர். அவர்களைச் சாக்சானிய உழவர்கள் அயல்நாடுகளுக்குச் செல்லும் காட்டுமிராண்டிகளாகக் கருதினர். அந்தக் கடலோடிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது, ஸ்காண்டிநேவிய உழவர்கள் அறியாமை நிறைந்தவர்களாகவும், குறுகிய மனப்பான்மையுடையவர்களாகவும் இருந்தனர். அவர்களுடைய 'எட்டிக்கு' பாடல்களைத் தொடர்ந்து (Eddic Poetry) உரை நடையில் தோன்றிய பெருஞ் சிறப்புவாய்ந்த 'சாகா' (Saga) பண்டை வீரர்களின் வரலாற்றினைக் கூறும் உரைநடைக் காப்பியங்கள் உலகப் புகழ்பெற்றனவாகும். அவை, அவர்களுடைய வீர வாழ்வில் தோன்றிய சிறப்புமிக்க உண்மையியல்பினைக் கற்பனை நயத்தோடு விளக்கும் வரலாற்று நாவல்களாகும்.

வைக்கிங்குகள் செல்வாக்குடன் சிறந்திருந்த காலத்தில் ஸ்கான்டிநேவியர் மூவகை வழிகளில் வெளி நாடுகளுக்குச் சென்று வந்தனர். முதலாவதாக அவர்களுள் ஒரு சாரார், கீழ்த் திசை வழியாகப் புறப்பட்டுச் சென்றனர். அவ்வழியாகச் சென்றவர்களுள் பெரும்பான்மையினர் சுவீடர் (Sweder) களேயாவர். அவர்கள் ஸ்லாவ் (Slav) மக்கள் வாழும் நாட்டின் உள்ளே நோவ்கோரோட்டு (Novgorod), கீவ் (Kiev) முதலிய ஊர்கள் வரை சென்றனர். கீவ் என்னும் இடத்தில் அவர்கள் ருசிய அரசினை முதன் முதலாக நிறுவினர். அங்கிருந்து அவர்கள் டினீப்பர் (Dneiper) வழியாகப் படகில் சென்று கருங் கடலைக் கடந்தனர். அதன் பிறகு கான்ஸ்டாண்டிநோபிளைத் தாக்கினர்.

மற்ற இரு வழிகளும் மேற்குத் திசையினை நோக்கிச் செல்லுவனவாகும். நார்ஸிய மக்கள் அல்லது நார்வே மக்கள் மட்டும் பயன்படுத்திய ஒரு வழி இருந்தது. அதை நாம் 'வெளி வழி' எனலாம். அது மிக்க துணிச்சலோடு செல்ல வேண்டிய இடர்ப்பாடுகள் மிகுதியாகவுடைய கடல் வழிகளாகும். அவ்வழிதான் ஐஸ்லாந்திலும், கிரீன்லாந்திலும் குடியிருப்புகளை அமைக்க உதவியது. இறுதியாக அவ்வழி வட அமெரிக்காவிற்குச் சென்று முடிந்தது. அது ஓர்க்னிஸ் (Orkneys), கேய்த்னஸ் (Caithness), ராஸ் (Ross), காலோவ்னி, டம்பிரைஸ் (Dumfries) முதலிய இடங்களுக்குச் சென்றது. அவ்விடங்களில் சிறப்பாக ஸ்காட்லாந்தின் மேட்டு நிலங்களிலும், தென் மேற்குப் பகுதியிலும் முதன் முதலாக நார்ட்டிக்கு இனமக்கள் குடியேறி நிலையாக வாழ்ந்தனர். புதிய கடலாதிக்கத்தின் மால்ட்டா (Malta) வாக, ஐரிஷ் கடலில் இருந்த 'மனிதத் தீவு' (Isle of Man) மக்கள் வாழும் தீவாக மாறியது. இவ்வாறு ஐரிஷ் கடல் ஸ்கான்டிநேவியர்களுடைய ஏரியாக மாறியது. இவ் 'வெளி வழியாகவே' நார்ஸிய மக்களின் முக்கிய குடியேற்றங்களாகிய கம்பர்லாந்து, வெஸ்ட்மோரிலாந்து, லங்காஷையர், செஸ்ஷையர் முதலிய குடியேற்றங்களும், வேல்சின் கடற்கரை யோரத்தில் வேறு சில குடியேற்றங்களும் அமைக்கப்பட்டன. அயர்லாந்தில் ஸ்கான்டிநேவியர், குறிப்பிட்ட சிறிது காலத்திற்குள்ளேயே வெற்றி கொண்டதோடு, அதைக் குறுக்கும் நெடுக்கும் ஓயாது ஒழியாது அளந்துவிட்டனர். டியூப்ளின், கார்க்கு, லிமரிக்கு (Limerick), விக்லோ (Wicklow), வாட்டர் போர்டு (Waterford) முதலிய டேனிய நகரங்கள் அமைக்கப்பட்டன. இவ்வாறு அயர் லாந்தில் நகர வாழ்க்கை தொடங்கியது.


மூன்ருவதாகச் சிறப்புற்று விளங்கிய வழி 'உள் வழி' என்பதாகும். அவ்வழியினைப் பெரிதும் டென்மார்க்கிலிருந்து வெளியேறிய டேனியர்களே பயன்படுத்திவந்தனர். அவ்வழியாகப் படையெடுத்துச் சென்றே அவர்கள் ஐரோப்பாவின் வடக்குக் கடற்கரை யோரத்தினைத் தாக்கினர். அத்துடன் இங்கிலாந்தின் கிழக்கு, மேற்குக் கரையோரங்களையும் தாக்க அவ்வழியையே டேனியர் பயன்படுத்தினர். வெஸ்ஸக்ஸை ஆண்ட ஆல்பிரட்டு அரசரின் காலத்தில் அவ்வழியாகவே வைக்கிங்குகளுள் பெரும்பான்மையினர் உழுது பயிரிடுவதற்கும், ஆட்சி புரிவதற்கும் உரிய பரந்த நிலப் பரப்பினைத் தேடி வந்தனர். இவ்வாறு படையெடுத்து வந்த வைக்கிங்குகளின் படைகள் அரசிளங் குமாரர்களைச் சார்ந்து வாழ்ந்த சிறு குழுக்கள் பலவற்றைக் கொண்டதாகும். அப் பருவகால படையெடுப்பு முடியும் வரையில், அவர்கள் அனைவரும் தங்கள் போர்த் தலைவனுக்குப் பணிந்து நடந்துவந்தனர். அப்படை பிரான்சிலிருந்து இங்கிலாந்திற்கும், இங்கிலாந்திலிருந்து பிரான்சிற்கும் மிக எளிதாகச் சென்றுவந்தன. முதலில் ஆங்கிலக் கால்வாயின் ஒரு பக்கத்தில் எதிர்ப்பு வலுவாக இருக்குமானல், அதனுடைய மற்றொரு பக்கத்திற்குச் சென்றனர். அங்குள்ளவர்கள் எதிர்ப்பார்களானல், மீண்டும் அக்கரைக்குச் சென்று அவர்கள் தங்கினர். அவர்கள் திட்டமிட்டுப் பேராற்றலுடன் செயலாற்றிய படையெடுப்புகளின் விளைவாக இரண்டு டேன்லாக்களை (Danelaw) நிறுவினர். அவை இரண்டும் வரலாற்றில் சிறப்புமிக்க இடத்தை நாளடைவில் பெற்றன. பிராங்கிய அரசிலே அவர்கள் அமைத்த 'டேன்லா' குடியேற்றம் சிறிய அளவினதாகும். அதற்கு 'நார்மண்டி'[1] என்று அவர்கள் பெயரையே இட்டு வழங்கினர். இங்கிலாந்தின் கிழக்குப் பகுதியில் தேம்ஸ் ஆறு முதல் டைனி ஆறு வரையிலுள்ள பகுதிகள் அனைத்தும் சேர்ந்ததே பெரிய 'டேன்லாவா'கும். இறுதியாக லங்காஷையர் முதல் கம்பர்லாந்து வரை குடியேறி வாழ்ந்த நார்ஸிய மக்கள், யார்க்குஷையரில் குடியேறியிருந்த டேனியரோடு நெருங்கிய இனத் தொடர்பு கொண்டனர். இவ்வாறு இக்காலத்தில் ஸ்காண்டிநேவிய இனம் ஒரு கடலிலிருந்து மற்றொரு கடல்வரை பேராதிக்கம் உடையதாக விளங்கியது.[2]

'வெளி வழியிலும்', 'உள் வழியிலும்' சென்றுகொண்டிருந்த வைக்கிங்குகள், சிற்சில சமயங்களில் ஒருவருடைய பாதையில்

[1] நார்மானியர் நிலையாகத் தங்கிவாழ்ந்த பகுதி 'நார்மண்டி' எனப்பட்டது.

[2] மூன்றும் இயலில், 86ஆம் பக்க அடிக் குறிப்பைக் காண்க.

மற்றொருவர் குறுக்கிடுவதும் உண்டு. டேனியரும், நார்மானியரும் சேர்ந்து நார்மண்டியில் தங்கி வாழ்ந்தனர். அதைப் போன்றே தெற்கு அயர்லாந்திலும், வட இங்கிலாந்திலும் அவ்விருவகை இனத்தவரும் சேர்ந்து குடியிருப்புகள் அமைத்தனர்.




படம் 8.

வைக்கிங்குகள் வந்த வழிகள்

அவ்விரு இனத்தவரும் சிறிதும் வேறுபாடின்றி ஸ்பெயினிலும், நடுநிலக் கடற் பகுதியிலும், லெவாண்ட்டிலும் நுழைந்தனர். இத்தகைய வியக்கத்தக்க ஆய்வுப் பயணிகள் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு ஐந்நூறு ஆண்டு


களுக்கு முன்பே வட அமெரிக்கா வரை சென்றுவந்தனர். இவ் வாழ்க்கை முறை வைக்கிங்குகளின் அன்றாட வாழ்க்கையாக மாறியது. நாள்தோறும் அவர்கள் ராத்முனே, எபிரிட்ஸ் முதலிய இடங்களில் வீசிய கொடிய புயலைக் கண்டு அஞ்சாது திறந்த நீண்ட கப்பல்களில், உரிமை மிக்க வீரர் குழுக்களோடு துடுப்பு களைக்கொண்டு தள்ளிச் சென்றனர். காற்று வீசும் பருவத் தினை அறிந்து அதற்கேற்ப அவர்கள் தங்கள் மரக்கலங்களைச் செலுத்திச் சென்றனர். அவர்களுடைய கப்பல்களின் வெளிப் புறத்தில் அடி மட்டத்திற்குமேல் சிறிது உயரம்வரை மிகவும் பகட்டான வண்ணங்கள் பூசப்பெற்றிருந்தன. அதற்கு மேல் வரிசையாகக் கேடயங்கள் கப்பலைச் சுற்றிலும் வரையப்பட்டி ருந்தன. அவை மஞ்சள், கறுப்பு ஆகிய வண்ணங்களால் அடுத் தடுத்து வரையப்பட்டிருந்தன. பறவை வடிவிலேயே செய்யப்பட் டிருந்த அக்கப்பல்களின் முகப்பு அலைகளைக் கிழித்துக்கொண்டு கடலிலே சென்றது. அவ்வாறு அவை ஆடியசைந்து வந்ததைக் கண்ட கிறிஸ்துவர்கள் எல்லாம் பேரச்சம் கொண்டனர். அத் தகைய கப்பல்களில் நெடுந்தொலைவிலுள்ள நாடுகளுக்கெல்லாம் சென்று வந்த வைக்கிங்குகளின் கடல்மறவர்களின் உள்ள உரமும், கடல்களில் கப்பல் செலுத்தும் திறமையும் கடலக வரலாற்றில் ஈடும் இணையுமற்று விளங்குகிறது. அவர்களுடைய அஞ்சா நெஞ்சத்திற்குத் தலைவரியாக அடிக்கடி தங்கள் உயிரையே கொடுத்தனர். ஒரு முறை வைக்கிங்குகள் படை யெடுத்துவந்த (கி. பி. 877) 120 குறுங்கப்பல்கள் கவிழ்ந்தமை யால், ஆல்பிரட்டின் வெஸ்ஸக்ஸ் தாற்காலிகமாக வைக்கிங்கு களின் தாக்குதல்களிலிருந்து தப்பியது.

முதன் முதல் கடற்கரையோரங்களில் சிறப்புற்றிருந்த மடாலயங்களைக் கொள்ளை அடிப்பதற்காக வந்த வைக்கிங்குகள், படைக்கலன்களை அதிகமாகக் கொண்டுவரவில்லை. அவர்களை வளைத்துப் போரிடுவதற்கு ஆற்றல் மிக்க படை திரட்டப்படு வதற்கு முன்பே, அவர்கள் கடலில் குதித்து, தங்கள் மரக் கலங்களில் ஏறி, தப்பிச் செல்ல முயலுவதே அவர்களுடைய வழக்கமாக இருந்துவந்தது. ஆனால், வைக்கிங்குகளின் கூட்டம் பெருகப் பெருக அவர்களுடைய போரியல் அறிவும், படைக் கலன்களும் பெருகலாயின. ஐரோப்பாவில் மிகச் சிறந்த நாக ரிகத்தை அடைந்த நாடுகளோடு அவர்கள் வாணிகத் தொடர்பு கொண்டு, அந்நாடுகளுக்குச் சென்றுவந்தமையாலும், சிற்சில சமயங்களில் கொள்ளையடிப்பதற்கென்றே சென்றுவந்தமையா லும் அவர்களுடைய போர் முறை அறிவு வளர்ச்சியுற்றது.

அவர்களுடைய கப்பற்படை மூன்றிலிருந்து நாற்பது கப்பல்களை உடையதாக இருந்தது. அது முந்நூறு நானூறு கப்பல்களாகப் பெருக்கப்பட்டது. ஒவ்வொரு கப்பலும் குறைந்தது நூறு பேரையாகிலும் கொண்டு சென்றது. இத்தகைய பெரும் படைக்கு, உடற்கவசம் அணிதல் இன்றியமையாத தேவை யாயிற்று. வைக்கிங்குகள் தங்கள் இரும்புச் சங்கிலியால் பின்னப்பட்ட கவசத்தை அணிந்து கையிலே இருபிடிகளை யுடைய மழுவினை ஏந்தித் தங்கள் பேராற்றலைப் பிறருக்குப் புலப்படுமாறு காட்டுவதில் வல்லவர்களாக விளங்கினர். அதைப் போன்றே விற்போர் புரிவதிலும், நிலத்திலே படை வகுத்துப் போரிடுவதிலும் பேராற்றலும் பெருந் திறமையும் அவர்கள் பெற்றிருந்தனர். அவர்கள் 'கல்லுமிழ் கவணைக்' கொண்டு (Mangonel) போர்புரிவதிலும், குழிகளில் பதுங்கி யிருந்து கோட்டைகளை முற்றுகையிடுவதிலும் கைதேர்ந்தவர் களாக இருந்தனர். இதற்கிடையில், வயல்களிலே வேலை செய்து கொண்டிருந்த கம்பளிச் சட்டையணிந்த சாக்சானிய உழவர்கள், பகைவரை எதிர்த்துப் போரிட அழைக்கப் பட்டனர். அவர்களிடத்து ஈட்டியும் கேடயமும் தவிர வேறு படைக் கருவிகள் இல்லை.

படைகளை அணிவகுத்து நடத்துவதிலும் சாக்சானியர், டேனியர்களைப் போன்ற திறமையுடையவர்கள் அல்லர். ஆல் பிரட்டு அரசர் கப்பற் படை ஒன்றை நிறுவத் தொடங் கும் வரை டேனியர் தங்கள் விருப்பம்போல் தட்டிக் கேட்பாரின்றி, ஆறுகளிலும், கடலிலும் தங்கள் நாவாய்ப்படை யினைக் கொண்டு திரிந்தனர். அவர்கள் தங்களுடைய மரக் கலங்களைப் பாதுகாப்பான இடங்களில் நிறுத்திவிட்டு, நாட்டி னுள் நுழைந்தவுடன், கிழக்கு ஆங்கிலியாவில் குதிரையின் வளர்ப்புப் பண்ணையிலிருந்த குதிரைகளைக்கொண்டு விரைவாக ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் சென்றுவந்தனர். அதன் பிறகு ஐந்து ஆண்டுகள் டேனியரின் (கி. பி. 866–871) கொடுமை மிக்க அழிவுச் செயல்கள் இங்கிலாந்தினைப் பாழ் படுத்தின. முதலில் அவர்கள் நார்த்தம்பிரியாவைத் தாக்கிச் சூறையாடினர். அதன் பிறகு மெர்சியாவை டேனியர் தோற் கடித்தனர். இறுதியாக அவர்கள் வெஸ்ஸக்ஸின் மீது படை யெடுத்துச் சென்றனர்.

டேனியரின் போர்முறையை மாண்புமிக்க ஆல்பிரட்டு அரசர் கற்று, அதை அவர்களுக்கெதிராகக் கையாளும் வரை யில், டேனியர் எதிர்பாராத சமயங்களில் திடீர் திடீர் என்று




படம் 9.

**வைக்கிங்குகளின் படையெடுப்புக் காலத்திய இங்கிலாந்தும், ஸ்காட்லாந்தும், அயர்லாந்தும்**

நெடுந் தொலைவிலுள்ள இடங்களை விட்டுவிட்டுத் தாக்கி வந்தனர். ஆங்கிலக் குடியானவர்களைக் கொண்ட குடிப்படை (Fyrd) யினரால், விரைந்தோடும் டேனியப் படை வீரர்களைப் பின் தொடர்ந்து கால்நடையாகச் செல்ல முடியவில்லை; அல்லது எப்பொழுதாகிலும் அவர்களை அருகில் சந்தித்தாலும், கொடிய படைக்கலன்களையுடைய டேனியரை எதிர்த்துப் போரிடுவதற்குப் போதிய திறமையும் ஆற்றலும் அற்றதாக ஆங்கிலேயப்படை அல்லலுற்றது. ஆல்பிரட்டின் ஆட்சியில் இக்குடிப்படை அல்லது படைக்கலம் ஏந்தக்கூடியவர்கள் அனை வரையும் போருக்காகப் படையில் சேர்த்துக்கொள்ளுவது எத்துணைக்காலம் நடை முறையில் இருந்துவந்தது என்பதைப் பற்றித் திட்டவட்டமாக அறிய முடியவில்லை. டேனியர் குதிரை களைப் பயன்படுத்தக் கற்ற பிறகு பன்னிரண்டாண்டுகள் (கி. பி. 877) கழித்து ஆல்பிரட்டு, தம்முடைய படைகளுடன் குதிரைகளில் ஏறி, பகைவர்களை விரட்டிச் சென்றார் என்ற செய்தியைக் கேள்விப்படுகிறோம். ஆல்பிரட்டின் ஆட்சிக்காலத் தில் அவருடைய தேனர்களும், சீழாட்களும் போரிடுவதில் சிறந்த பயிற்சி பெற்றிருந்தனர். அவர்கள் குதிரைகள் மீதமர்ந்து விரைவாகப் பகைவர்களைப் பின் தொடர்ந்து சென்று தாக்கு வதில் வல்லவர்களாக விளங்கினர். அவர்களை நம்பியே ஆல்பிரட்டு அரசர் டேனியர்களைப் புறமுதுகுகாட்டி ஓடுமாறு செய்யத் துணிந்தார். போர் மிகவும் நெருக்கடியான கட்டத்தை அடையுமானால், போரிடுதலே ஒரு தொழிலாகிவிடும். மேலும், அதனால் சமூக அமைப்பினை முழுவதிலும் பாதிக்கும் எதிர்விளைவு கள் உண்டாவது இயற்கை. எனவே, டேனியரின் போர்கள், இங்கிலாந்தில் நிலமானியப் படை முறையின் போக்கிலே மற்றொரு முன்னேற்றத்தை உண்டாக்கியது.

இவ்வாறு இருதிறப் படைகளும் குதிரைகளைப் பயன்படுத்தி ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு விரைவில் செல்லு வதற்குக் கற்றனர். ஆனால், அவர்கள் குதிரைகள் மீதமர்ந்து போர்புரியும் குதிரைப்படை வீரர்களாகச் சிறப்புற்று விளங்க வில்லை. ஆனால், நார்மண்டியில் வைக்கிங்குகள் ஆளுநர்களாகச் சிறப்புற்றனர். அவர்கள் பிராங்கிய மாவீரர்களிடம் இருந்து குதிரைகள் மீதமர்ந்து அதிர்ச்சியடையச் செய்யும் சூழ்ச்சி களின் முறைகளை அறிந்தனர். நாளடைவில் நன்கு வளர்ச்சியுற்ற பிராங்கிய-வைக்கிங்குகளின் காலாட்படை, வெற்றிவீரர் வில்லி யம் தலைமையில் ஹேஸ்டிங்ஸ் போர்க்களத்தே ஆங்கில-டேனிய காலாட்படையை எளிதில் தோல்வியுறச் செய்தது.

மாண்புமிக்க ஆல்பிரட்டு அரசர் சார்லமேவோடு ஒப்பிடத் தக்க பண்பு நலன்களை இயல்பாகப் பெற்றிருந்தார். சார்லமேவின் செயற்கருஞ் செயல்களையும் திட்டங்களையும் பின்பற்றியே ஆல்பிரட்டு இங்கிலாந்தில் பல அரிய செயல்களைச் செய்தார் என்று கூறலாம். இவர்கள் இருவரும் புறச் சமயத்திற்கு எதிராகக் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்புவதில் கண்ணுங் கருத்துமாக இருந்துவந்தனர். தொன்று தொட்டு இருந்து வரும் பெருங் குழப்பங்களுக்கும் ஒழுங்கற்ற நிலைகளுக்கும் இடையே, நாட்டில் புதிய நிலமானியப் படைமுறை அரசினை நிறுவ இவ்விருவரும் பெரிதும் முயன்றனர். சார்லமேவும், ஆல்பிரட்டும் பல திறப்பட்ட அறிவாற்றல் உடையவர்களாக விளங்கினர். இருவரும் சிறந்த போர் வீரர்களாகவும் ஆட்சியாளர்களாகவும், அறிஞர்களாகவும் விளங்கினர். தொழில் வல்லுநர்கள் பெருகுவதற்கு முற்பட்ட அக்காலத்தில், அக்காலத்தின் இயல்புக்கு முற்றிலும் பொருத்தம் உடையவர்களாக அவர்கள் இருந்தனர். நாட்டிலே அமைதி நிலவியபோதும், போருண்டாகிய போதும் அரசர்களாகிய அவர்கள், தங்கள் குடிமக்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களாகவும், ஆளுநர்களாகவும், தலைவர்களாகவும் பலதிறப்பட்ட பணிகளைச் செய்து வந்தனர். ஆல்பிரட்டு குறுகிய நிலவியல் எல்லைக்குட்பட்ட நாட்டிலே அரும் பெரும் பணிகளைச் செய்யவேண்டியவரானார். சார்லமே, நெப்போலியனைப் போன்று பரந்துபட்ட அரசியல் அரங்கில் செயற்கரிய செயல்களைச் செய்து பொன்றாப் புகழ் பெற்றார். ஆனால், ஆல்பிரட்டின் அரிய தொண்டே நெடுநாட்கள் நிலைத்துப் பயன் தந்ததெனில் அது மிகையாகாது. அவரும் அவருடைய பிள்ளைகளும் சேர்ந்து, இங்கிலாந்தை என்றும் புகழொடு நின்று நிலவுமாறு செய்தனர். மக்களுடைய உள்ளங்களில் சார்லமேவின் நினைவு பிரான்சையும் ஜெர்மனியையும் ஒன்றுபடுத்தக் கூடிய ஆற்றலுடையதாக இல்லாமற் போயிற்று. ஆனால், ஆல்பிரட்டின் நினைவு, ஒன்றுபட்ட இங்கிலாந்தை உருவாக்கியது என்று கூறத் தேவையில்லை.

இயற்கையிலேயே ஆல்பிரட்டு அறிஞராகவும், உடல் நலமற்றவராகவும் இருந்தார். அவர் இளைஞராவதற்கு முன்பே அக்கொடிய காலத்தின் கடுமையான போரில் (கி. பி. 871) கலந்துகொள்ளவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. ஆனால், அவர் பெற்ற கொடிய அனுபவங்கள், அவர்களுடைய சிறந்த பண்புகளைப் பாழாக்காது, பல அரிய படிப்பினைகளைக் கற்பித்தன. அவருடைய இருபத்திரண்டாம் வயதில், ஆஷ்டவுன் (Ashdown) போர் முற்றுகையில், இரண்டாவது படைத்

தலைவராக ஆல்பிரட்டு போரிட்டார். அதையடுத்து 'மக்களின் அடிதடிப்போர்கள்' நடந்த எட்டு இடங்களில், டேனியர்களைத் தேம்ஸ் ஆற்றின் சீமைச் சுண்ணாம்புக் குன்றுகளுக்கு அப்பால் அடித்துவிரட்ட ஆல்பிரட்டு அரும்பாடுபட்டார். தேம்ஸ் ஆற்றிற்கு வடக்கே இருந்த இங்கிலாந்தின் பகுதிகள் அனைத்தும் இதற்கு முன்பே டேனியர்களின் கைவசப்பட்டிருந்தது. அவ்விளைஞர் விரைவிலேயே தம்முடைய படைவீரர்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றார். அவ்வாண்டு நடந்த போர்களுக்கு இடையே, அவருடைய அண்ணன் உயிர் துறந்தார். எனவே மூதறிஞர் மன்றத்தினரால் ஆல்பிரட்டு அரசராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அவருடைய அண்ணன் பிள்ளைகள் புறக் கணிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் வயது வராதவர்களாக இருந்தமையால் ஆல்பிரட்டையே அரசராக்கினார்கள். அவ்வாறு வயதுவராத அரசகுமாரர்களைப் புறக்கணிப்பதே, அக்காலத்திய வழக்கமாக இருந்தது. நாட்டு மக்களுக்குத் தலைமை தாங்கி, அவர்களைப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்லுவதே அரசருடைய தலையாய கடமையாக இருந்த அக்காலத்தில், இவ்வாறு வயதிற்கு வராத அரசகுமாரர்களைப் புறக்கணித்ததில் வியப்பில்லை.

ஏழு ஆண்டுகளுக்குப் பின் (கி.பி.878) அவருடையவாழ்க்கைக் குப் பெருங்கேடுண்டாயிற்று. டேனியர் இங்கிலாந்தின் வடக்கி லும், கிழக்கிலும், நடுப்பகுதியிலும் தங்கள் நிலையை நன்கு பலப் படுத்திக்கொண்ட பிறகு, எதிர்பாராவகையில் குளிர்காலத் திற்கு இடையே வெஸ்ஸெக்ஸைத் திடீரென்று தாக்கினர். ஆல்பிரட்டின் குடிமக்கள் கடல்கடந்து அயல்நாடுகளுக்கு ஓடினர். உடனே அவர் சாமர் செட்டைச் சார்ந்த படைவீரர்கள் சிலரைக் கொண்டு பென்லாந்தின் பாரட்டை (Parret) பகைவர்களிட மிருந்து காக்கக் கடும்போர்புரிந்தார். அதற்கு ஐம்பது கற்களுக்கு அப்பால் அக்காலத்திய காரன்வால் இருந்தது. அங்கு வெஸ்ஸெக் ஸிற்குப்பகைவர்களாக இருந்த வெல்ஷ் பழங்குடிமக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அடிக்கடி டேனியர்களோடு சேர்ந்துகொண்டு ஆங்கில-சாக்சானியரைத் தாக்கி வந்தனர். எனவே, இங்கிலாந் தின் உரிமையைக் காப்பது மிக அரிய செயலாகவே தோன்றியது. ஆனால், புதிதாக டெவோனில் குடியேறிய சாக்சானிய தேனர் கள் ஆல்பிரட்டிற்குப் பேருதவியாக இருந்தனர். அவர்கள் அருகில் இறங்கிய டேனியப் படைகளை ஆல்பிரட்டும் தேனர் களும் சேர்ந்து அடியோடு அழித்தொழித்தனர். இத்தகைய நெருக்கடியான இடர்ப்பாடு மிக்க நேரத்தில், ஆல்பிரட்டு பெற்ற வெற்றி, அவருடைய மக்களுக்கு தன்னம்பிக்கையையும், பேராற்

றலேயும் தந்தது. இவ்வாறு கைப்பற்றிய வில்ட்ஸ் (Wilts) ஹாம்ப்ஷையர் பகுதிகளிலிருந்த தேனர்களும், ஆல்பிரட்டின் அழைப்பிற்கு இணங்கி, அவருக்குப் பக்கபலமாக வந்து சேர்ந்தனர். இறுதியாக ஆல்பிரட்டிற்கும், டேனியருக்கும் ஈதண்டன் (Ethandune) என்னும் இடத்தில் கடும்போர் நடந்தது. ஆல்பிரட்டு அப்போரில் வாகை சூடினர். தோற்றேடிய டேனியர்களின் தலைவரான கத்ரம் (Guthrum), வெட்மோர் (Wedmore) என்னும் இடத்தில் ஆல்பிரட் அரசரிடம் உடன்படிக்கை செய்து கொண்டார். அவ் வுடன்படிக்கையின்படி, கத்ரமும் அவருடைய மனிதர்களும் கிறிஸ்துவ சமயத்திற்கு மாற்றப்பட்டனர். அத்துடன் வெஸ்ஸக்ஸினுள் டேனியர்கள் தலையிடுவதில்லை என்னும் உறுதிமொழியை அளித்தனர். டேன்லாவில் மட்டும் டேனியர்கள் தங்கி வாழ்வதற்கு ஆல்பிரட்டு உரிமை அளித்தார்.

அவர்கள் எதிர்பார்த்ததைவிட, தென் இங்கிலாந்தின் படையெடுப்பு மிகக்கடுமையானதாக இருந்ததோடு, பேரழிவை விளைவித்தமையால், டேனிய வீரர்களின் குழுக்கள் பல தங்கள் கருத்தைப் பிரான்சு பக்கம் திருப்பின. சில ஆண்டுகள் கழித்து, ஆல்பிரட்டு அரசர், தமக்கு இன்னும் நன்மை பயக்கத்தக்க உடன்படிக்கை ஒன்றை டேனியர்களின் தலைவரிடத்துச் செய்து கொண்டார். அதன் மூலம் ஆல்பிரட்டு, டேன்லாவின் தென் எல்லையை நன்கு வரையறுத்தார். அவ்வெல்லை வால்ட்டிங்கு தெருவோடு லீ ஆற்றின் போக்கோடு செல்லுமாறு வரையறுக்கப்பட்டது. இதற்கு இடையில் இருந்த லண்டன் நகரை ஆங்கிலேய அரசரிடம் விட்டுவிடுமாறு டேனியர் வற்புறுத்தப்பட்டனர்.

ஆல்பிரட்டின் பிற்கால ஆட்சியின் பொழுது (878–900) அவருடைய அரசின் பரப்பு இவ்வாறு இருந்தது. கிறிஸ்துவர்களாக்கப்பட்ட டேனியர் வடகிழக்கு இங்கிலாந்தின் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அவர்களுக்குத் தெற்கே இருந்த சாக்சானிய அரசுகள் அனைத்தும், ஆல்பிரட்டின் தலைமையின் கீழ் ஒன்றுபட்ட ஒரு நாடாயின. மெர்சியாவும், கிழக்கு ஆங்கிலியாவும், நார்த்தம்பிரியாவும் தனி அரசுகளாக இருந்த நிலை மாறிப்போனமையால், ஆல்பிரட்டின் வழித்தோன்றல்கள் முயன்றிருப்பார்களேயானல், அவர்களே இங்கிலாந்தின் முதல் அரசர்களாக விளங்கி இருப்பார்கள்.

பழைய நார்த்தம்பிரியாவின் சிதைந்த பகுதியான டைனியாற்றுக்கு அப்பால் இருந்த பெர்னீசியாவை மட்டும் வைக்கிங்கு

கள் கைப்பற்ருமல் இருந்தனர். டைனி ஆற்றுக்கும் செவியட்டிற்கும் இடைப்பட்ட இச் சாக்சானிய மாவட்டம் நார்த்தம்பர்லாந்து (Northumberland) என்னும் பெயருடையதாக விளங்கத் தொடங்கியது. பல நூற்ருண்டுகளுக்கு இம்மாவட்டம் இங்கிலாந்திற்கும், ஸ்காட்லாந்திற்கும் இடையே இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் ஆட்பட்டு அல்லலுற்றது. ஆனல் செவியட்டிற்கும் போர்த்திற்கும் இடைப்பட்ட சாக்சானிய அரசு முதன் முதலாக 'லோத்தியன்' (Lothian) என்னும் பெயர் பெற்றது. அதை, டேன்லா இடையே இருந்து, சாக்சானிய அரசிடமிருந்து பிரித்துவிட்டமையால், அப்பகுதி பெரிதும் ஸ்காட்டிய வரலாற்றிலேயே இடம் பெறலாயிற்று. அதே சமயத்தில் மேற்குக் கடற்பகுதிக்குப் படையெடுத்து வந்த நார்ஸிய மக்கள், அயர்லாந்தில் வாழ்ந்த ஸ்காட்டியருக்கும், ஸ்காட்லாந்தில் வாழ்ந்த ஸ்காட்டியருக்கும் இடையே இருந்து வந்த தொடர்பினை அறுத்தெறிந்தனர். வைக்கிங்குகளின் படையெடுப்பு இவ்வாறு ஸ்காட்லாந்தைத் தனிப்பட்ட ஒரு நாடாக்கியது. அவனுடைய போரார்வம் மிக்க மக்களை ஒற்றுமைப் படுத்தி, ஓரினம் என்னும் தேசிய உணர்வினை அவர்களிடையே ஓரளவிற்கு வளர்த்தது. ஒன்றுபட்ட பிக்ட்ஸ்களுக்கும் ஸ்காட்டியருக்கும் அரசனுக விளங்கிய கென்னத்து மாக் அல்பைன் (Kenneth Mac Alpine) ஆண்டகாலம் (கி. பி. 844-860) வைக்கிங்குகளின் படையெடுப்புகள் நிறைந்த ஊழியேயாகும். அயோனுவிலிருந்து செயிண்ட் கொலம்பாவின் பழம்பொருள் சின்னங்களையும், ஸ்காட்டிய சமயத்தின் மையமாக விளங்கிய நிலையத்தையும் பின்நோக்கிய வண்ணம் கடலைப் பார்த்துக்கொண்டிருந்த அயர்லாந்தில் இருந்து, ஒன்றுபட்ட தங்களுடைய அரசின் நடுப்பகுதியிலிருந்த டன்கெல்டு (Dunkeld) என்னும் இடத்திற்குக் கொண்டு சென்ருர்.

கத்ரத்தைக் கிறிஸ்துவ சமயத்தில் மாற்றியும், டேன்லாவின் தென் எல்லையை வரையறுத்தும் ஒருவாறு டேனியர்களை அடக்கியொடுக்கிய ஆல்பிரட்டு அரசரின் வாழ்க்கை, புதுமையும் இன்பமும் உடைய வாழ்க்கையாக அவர் வாழ்நாள் முடியும் (878-900) வரை சிறப்புற்று விளங்கியது. தென் இங்கிலாந்தில் அவருடைய நிலை பெரிதும் தற்காப்பு மிக்கதாக இருந்தது. நாட்டிலே நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் அவருடைய கைகளை மேலோங்கச் செய்தன. டேன்லாவில் இருந்த சாக்சானியர்களாலும், டேன்லாவிற்குப் புறத்தே ஒன்றுபட்ட தென் இங்கிலாந்தில் இருந்த சாக்சானியர்களாலும், 'ஆல்பிரட்டு' தங்கள் குறைகளைப்போக்கி இன்பம் அளிக்க முயலும் 'வீர முதல்வராக'ப் போற்றப்பட்டார்.

தொடர்ந்து எண்ணிக்கையில் பெருகிவரும் கிறிஸ்துவ சமயத்தைச் சார்ந்த டேனியர்களும் இவ் ஆங்கிலேய சார்லமேவிடத்து நாளடைவில் பெரும் ஈடுபாடு கொண்டனர். அக்காலத்தில் கடல்கடந்த நாடுகளிலிருந்து புதிதாகப் பல வைக்கிங்குகளின் படையெடுப்புகள் நடைபெற்றிருக்கக்கூடும். ஆனால், டேன்லாவில் மனைவி மக்களோடு, பண்ணைகளை அமைத்துக்கொண்டு நிலையாக வாழ்ந்த டேனியர்கள், தங்கள் இனத்தவர் புதிதாகப் படையெடுத்து வருவதை முழுமனத்துடன் ஆதரிக்கவில்லை. அவர்களுடைய பண்ணைகளும், குடியிருப்புகளும் புதிய படையெடுப்பாளர்களால் அழிக்கப்படுமே என்ற அச்சத்தால்தான் அவர்களை இங்கிலாந்தின் வைக்கிங்குகள் வரவேற்கத் தயங்கினர். ஆல்பிரட்டு அரசர் டேனிய முறைகளைப் பின்பற்றி லண்டனைச் சுற்றிலும் பெரிய சுவர்களைக் கட்டினார்; அவற்றையடுத்துப் படைகளின் பாசறைகளை அமைத்தார். அப்பாசறைகளில் ஆங்கிலேய நகர மக்கள் இடம்பெற்றனர். அயலாரின் படையெடுப்பிலிருந்து லண்டனைக் காப்பாற்றவேண்டியது அவர்களுடைய தலையாய கடமையாக இருந்தது. இவ்வாறு டேனியர்களுக்கு எதிராக இங்கிலாந்தின் முக்கிய வாயில் அடைக்கப்பட்டமை அவர்களுடைய முன்னேற்றத்திற்கு தடையாக அமைந்தது.

பிற்காலத்தில் நடந்த சிறுசிறு போர்களுக்கு இடையே கிடைத்த இடைவேளைகளில், ஆல்பிரட்டு ஓர் ஆண்டின் முழுப் பகுதியையும் ஓய்வாகப் பெற்றார். அப்பொழுது எல்லாம் அவருடைய உள்ளத்தைக் கவர்ந்த செயல்களிலும், உள்ளத்திற்கு மகிழ்வூட்டிய செயல்களிலும் அவர் ஈடுபட்டார். அவர் முதன் முதலாக ஆங்கிலேய உரைநடை வளர்ச்சிக்கு வித்திட்டார். பீடுவின் இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட காலவழிச் செய்திக் கோவையை ஆங்கிலமொழியில் ஆல்பிரட்டு மொழி பெயர்க்கத்தொடங்கினார். அவருடைய குடிமக்களுக்குப் பயன்படுவதற்காக ஆல்பிரட்டு இறையியல், வரலாறு, நிலவியல் கையேடுகளை மொழிபெயர்த்தும், தொகுத்தும் நூற்களாக உருவாக்கினார். அவர்தான் ஆங்கில-சாக்சானிய காலவழிச் செய்திக் கோவையைத் தொடங்கிவைத்தார். அதைப் போன்று முதல்தர வரலாற்றுப் பதிவேடு ஆங்கில மொழியில் வேறொன்றும் இல்லை எனலாம். அவர் அயல்நாட்டு அறிஞர்களைத் தேடிப்பிடித்தார். வடக்கிலிருந்தும், மெர்சியாவிலிருந்தும் வந்த கற்றறிந்த 'புகலிகளை' அன்போடு அவர் வரவேற்றார். டேனியர் படையெடுப்புகளால் உண்டான பேரழிவினால் அழிந்துபோன நூல்நிலையங்களையும், அறிஞர்களையும் வெஸ்ஸக்ஸிலாகிலும் ஒக்கப்பண்ண

லாம் என்ற நோக்கத்தோடு அறிஞர்களையும் புலவர்களையும் ஆல்பிரட்டு போற்றி ஆதரித்தார். டேனியர்களின் படையெடுப்புகளால் அழிந்துபோன கல்வி முறையைப் புதுப்பிக்க விரும்பினர். அதன்விளைவாகப் பொது வழிபாட்டின் பொழுது பாடப்படும் இலத்தீன் மொழிப்பாடலின் பொருள் புரியாத குருமார்களின் கூட்டம் இங்கிலாந்தில் பெருகியிருப்பதைக் கண்டு ஆல்பிரட்டு வருத்தமுற்றார். நாட்டிலே கல்வியைப் பரப்புவதற்காக ஆல்பிரட்டு அரசர் 'பொதுப் பள்ளிக்கூடங்களை' (Public Schools)த் தொடங்கினர். அவற்றில் முதன் முதல் பிரபுக்களின் பிள்ளைகளும், தேனர்களின் பிள்ளைகளும் கல்வி பயின்றனர். இதுவரை சமயகுருமார்களின் சொத்தாக—தனிவுரிமையாக இருந்து வந்த கல்வியை முதன் முதலாக சமயச் சார்பான ஊழியம் செய்யாத பொது மக்களுள் உயர்ந்த நிலையில் இருந்து வந்தோரின் பிள்ளைகளுக்குரிய தாக்கிய பெருமை ஆல்பிரட்டு அரசரையே சாரும். இவ்வாறு கல்வி பயிற்றுவதன் மூலம் அவர்களைத் தற்கால ஆட்சிமுறைக்குத் தகுந்த தலைவர்களாகச் செய்ய முடியும் என்று அவர் நம்பினர்.

சுறுசுறுப்பும் பேருழைப்பும் உடைய அரசர் தமது அறியாமை நிறைந்த மத குருமார்களுக்கும், மக்களுக்கும் அளிக்க முன்வந்த கல்வியினல், சமயத்துறையிலும், அறிவுத் துறையிலும் உண்டான மறுமலர்ச்சி விரைவற்றதாகவும், செயற்கையாகவும் இருந்தது. அது கத்பர்ட்டு, பீடு, ஆல்சியன் ஆகியோர் காலத்தில் மகிழ்ச்சியோடு நம்பிக்கையுடன் போற்றப்பட்ட நிலையில் இல்லை. நார்த்தம்பிரியா, மெர்சிய மடாலயங்களில் போற்றி வளர்க்கப்பட்ட கல்வி முறை பேரழிவுற்றதை நாம் முன்னர்க் கண்டோம். ஆனல், ஆல்பிரட்டு அரசர் மீண்டும் அக்கல்விமுறை புத்துயிர் பெறுவதற்கு அடிகோலினர். டேனியர்களின் கூட்டுறவால் உண்டான நகரவாழ்க்கையின் புதிய வளர்ச்சிக்கு மடாலயங்கள் புரிந்த உதவிகளைக் காட்டிலும், இறுதியில் சிறந்ததொரு நாகரிகம் அரும்புவதற்கு ஆல்பிரட்டு அரசர் அரும்பணி புரிந்தார்.

அவருடைய ஆட்சியின் இறுதி இருபதாண்டுகளில், ஆல்பிரட்டு போர்க்காலத்திலும், அமைதிக்காலத்திலும் வெஸ்ஸக்ஸின் நிலையங்கள் ஆற்றல் உடையனவாக விளங்குமாறு நன்கு அவற்றைப் பலப்படுத்தினர். அவர் முதன் முதலாக ஒரு கப்பற்படையை நிறுவினர்; என்றும் போரிடத் தயாராக இருக்கும் படை அமைப்பு ஒன்றை அவர் நிலையாக அமைத்தார். டேனியரின் முறையில் கட்டப்பட்ட களிமண் கோட்டைகளில்

அவர் நிலையான அரண்களையுடைய பாசறைகளை நிறுவினர். கோட்டங்களையும், அதன் அதிகாரிகளையும் அடிப்படையாகக் கொண்டு செயலாற்றிய சிறந்ததொரு அரசியல் முறையினை அவர் நிலைநாட்டினார். அது மிகவும்பழங்குடிப் பண்புடையதாக இருந்தது. ஆயினும், இங்கிலாந்தில் அதற்கு முன்பு அத்தகைய சிறந்ததொரு ஆட்சிமுறை இருந்ததில்லை என்பதை மறத்தலாகாது. இவ்வாறு பல வகையில் பக்க பலத்தைத் தேடி அமைத்துக்கொண்ட ஆல்பிரட்டிற்குப் பிறகு, அவருடைய மகனை மூத்த எட்வர்டும் (கி. பி. 900–924), அவருடைய மகளான மெர்சியாவைச்சேர்ந்த மங்கை எதல்பிளட்டாவும் (Ethelfleda), டேன்லாவை மீண்டும் கைப்பற்ற முயன்றனர். அம்முயற்சி எட்வர்டின் மகனும், அவருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அரசருமான எதல்ஸ்டன் (Athelstan) காலத்தில் (924–940) முழுவெற்றி பெற்றது. டேன்லாவில் நிலையாகத் தங்கிய டேனியர்களிடை விரைவிலேயே அரசியல் ஒற்றுமை இல்லாமற் போயிற்று. அவர்களுக்குள் பலர் தலைவர்களாகப் போட்டியிட்டனர். பல குடியிருப்புகள் தங்களுக்குள்ளே பகைமையுடையதாக இருந்து வந்தன. ஒவ்வொரு குடியிருப்பிற்கும் யாராகிலும் ஒரு டேனியர் தம் விருப்பம்போல தம்மை அரசர் என்றும், கோமகன் என்றும் கூறிக்கொண்டார்கள். இவ்வாறு டேனியர்களுக்கிடையே ஒற்றுமையும், ஒருமைப்பாடும் குலைந்து போயிற்று. கொடிய போர்களைச் செய்வதற்குமட்டும் வைக்கிங்குகள், தற்காலிக இராணுவத் தலைவர்களின்கீழ் ஒன்றுபட்டு நிற்கப் பழகியிருந்தனர். ஆனால் இங்கிலாந்தைத் தாக்கியபொழுது அவர்களிடையே இருந்துவந்த ஒற்றுமை, டேன்லாவில் அரசியல் முறைகளைப் பின்பற்றிச் செயலாற்றியபொழுது இல்லாமற்போயிற்று. எனவே, சாக்சானியர் திரும்பப் படையெடுத்து வந்த பொழுது டேன்லா வீழ்ச்சியுறலாயிற்று.

மூத்த எட்வர்டையும், எதல்ஸ்டனையுமே நாம் முதன் முதல் இங்கிலாந்தின் அரசர்கள் என்று கூறுவது பொருத்தம் உடையதாகும், எட்வர்டின் பேரனை எட்கரி (959–975)ன் ஆட்சி அமைதியும், செழிப்பும் உடையதாக விளங்கியது. அதனால் அவரை இங்கிலாந்தின் அரசர் என்று எல்லாரும் போற்றினர். டேன்லா இங்கிலாந்தின் பிற அரசுகளை எல்லாம் தன்னுடைய ஆட்சிக்குட்படுத்தி ஒரு நாடாக்கியது. அதன் பிறகு வெஸ்ஸக்ஸ் டேன்லாவைக் கைப்பற்றி, தன்னுடைய அரசின் ஒரு பகுதியாக அதை மாற்றியது. இன்னும் கெல்ட்டிக்கு வேல்சும் கெல்ட்டிக்கு ஸ்காட்லாந்துமே உரிமையுடைய தனி அரசுகளாக இருந்து வந்தன. அவற்றினுடைய அரசர்கள் சிற்சில சமயங்களில்,

எதல்ஸ்டனையும், எட்கரையும் தங்களுடைய பேரரசர்களாகப் பணிந்து போற்றினர். அதனால் வெஸ்ஸக்ஸின் அரசர்களான அவ்விருவரும் தங்களைப் 'பிரிட்டனின் பேரரசர்களாக' அறிவித்தனர்.

டேனியரின் படையெடுப்புகளால் உண்டான பிளவுகளிலிருந்தும், பூசல்களிலிருந்தும் புதியதொரு ஒற்றுமையுணர்வு வளர்ச்சியுற்றது. வைக்கிங்குகளுடைய போர்க் கோடரிகள் துறவிகளினுடைய மண்டையோடுகளைத் தூள் தூளாக்கிக் கொண்டிருந்த வரையில், டேனியரின் தோலினை உரித்து, ஆங்கிலேயர்கள் திருச்சபையின் கதவுகளில் பொருத்தி ஆணி அடித்துக்கொண்டிருந்த வரையில் ஆங்கில-சாக்சானியருக்கும் டேனியருக்கும் இடையே வெறுப்பும் பகைமையுணர்வும் ஆழமானதாக இருந்து வந்தது.[1] ஆனால் அப்பகைமையுணர்வு நெடுநாட்களுக்கு நிலைத்திருக்கவில்லை. அச்சு இயந்திரம் வருவதற்கு முற்பட்ட காலத்தில் மக்கள் இனங்களுக்கு இடையேயுள்ள குறைகளையும், கொடுமைகளையும் யாரும் செயற்கையாகப் பரப்பியது கிடையாது. ஒரு நிகழ்ச்சி நடைபெற்றால், அதைப் பள்ளி ஆசிரியரும், வரலாற்றாசிரியரும் காணாதபொழுது நிலமடந்தை அதை மறந்துவிடுகிறாள். இவ்விரு நார்ட்டிக்குப் பழங்குடி மக்களும் ஒரே இனத்தைச் சார்ந்த இருகிளையினராவர். அவர்களிடையே பல பழக்க வழக்கங்களும் இயல்பூக்கங்களும் பொதுவாக இருந்து வந்தன. டேனியர் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவிய பிறகு, வெஸ்ஸக்ஸ் அரசமரபின் ஆட்சியின்கீழ் அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கும், கலந்து வாழ்வதற்கும் வசதியாகப் போயிற்று. மேலும் அவர்கள் ஸ்கான்டிநேவிய பேரரசை நிறுவவேண்டும் என்ற நோக்கத்தோடு வராது, தாங்கள் வாழ்வதற்கு வசதியான இடம் வேண்டும் என்று விரும்பிய காரணத்தினால், டேனியர் சாக்சானியரோடு கலந்து இங்கிலாந்தில் நிலையாக வாழ முற்பட்டனர். வெஸ்ஸக்ஸோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, டேன்லாவில் இதுவரை தனியுரிமை மனிதர்களே வாழ்ந்து வந்தனர். அடிமைகள் என்ற பேச்சே இல்லை. அவர்களுடைய பகுதிகளில் டேனியர் தங்கள் டேனியச் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, டேனிய கோமக்களின் தலைமையின்கீழ், டேனியச் சட்ட நிபுணர்

[1]டேனியர்களின் தோலைப்பற்றி எத்தகைய ஐயப்பாடும் இல்லை. H. St. ஜார்ஜ் கிரேயின் ஆராய்ச்சிக் கட்டுரையை, Saga Book of Viking club, Vol. V. anno. 1906-7 என்னும் இதழைப் பார்க்க. அக்காலத்திய கிறிஸ்துவ சமயத்தினரிடமும், புறச்சமயத்தினரிடமும் இருந்து வந்த கொடிய காட்டு மிராண்டிப் பழக்கங்களின் எச்சங்களுள் இதுவும் ஒன்றாகும்.

களுடைய உதவியுடன் செழிப்பாக வாழ்ந்தனர். எனவே அவர்கள் ஆங்கிலேய அரசர்களின் செங்கோலிற்குட்பட்டு வாழ்வதில் வெறுப்படையவில்லை.

அங்கு ஓர் அரசன்தான் இருந்தான். ஆனால், பல தலைமுறைகள் வரை அந்நாட்டில் பல்வேறு வகையான பழக்க வழக்கங்களும் சட்ட திட்டங்களும் பேரளவில் இருந்து வந்தன. இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பொதுவான பொதுச்சட்டம் (Common Law) பிளாண்டாஜனட் அரசமரபின் காலத்திய அரசரது நீதிமன்றத்தில் பணிபுரிந்த வழக்கறிஞர்கள் ஒன்றுசேர்ந்து உருவாக்கியதாகும். ஆனால், ஆங்கில-சாக்சானியர் காலத்தில் அத்தகைய வழக்கறிஞர் குழுவும் இல்லை. நாடு முழுவதற்கும் பொதுவான சட்டங்களும் இல்லை. அரசர், தம்முடைய பாதிரிமார்களின் உதவியைக்கொண்டு சிற்சில சமயங்களில் நாட்டிலுள்ள எல்லா முறைமன்றங்களுக்கும் பயன்படும் வகையில் சில குறிப்பிட்ட சட்டங்களை எழுத்துமூலம் வெளிப்படுத்தியதுண்டு. ஆனால், ஒவ்வொரு கோட்ட முறைமன்றமும், 'நூற்றின்' முறை மன்றமும் தனியார் அதிகார வரம்பிற்குட்பட்ட முறைமன்றமும் தங்களுக்கென்று தனித்தனியே அவ்வவ் வட்டாரங்களின் வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்ட சட்டங்களைச் செயற்படுத்திவந்தன. டேனியர் தங்களுடைய இனமரபிற்குரிய சட்ட திட்டங்களையே உறுதியாகக் கடைப்பிடித்து வந்தனர். எனவே, அவர்கள் வாழ்ந்த பகுதிக்கும் 'டேன்லா' (Dane Law) என்னும் பெயரே வழங்கலாயிற்று.

வேறு பல நல்ல பொருள்களைப்போலவே, டேனியரின் படையெடுப்பினால், சட்டமும் புதிய தூண்டுதலைப் பெற்றது. 'சட்டம்' எனப்பொருள்படும் 'லா' (Law) என்னும் சொல்லே டேனிய மொழிச் சொல்லாகும், அது, அதனுடன் போட்டியிட்ட ஆங்கில-சாக்சானிய மொழிச் சொல்லான 'டூம்' (Doom) என்பதையும், இலத்தீன் மொழிச் சொல்லான 'லெக்ஸ்' (Lex) என்பதையும் வழக்கொழியச்செய்து, தான்மட்டும் இன்று வரை நிலைத்த வாழ்வைப் பெற்றிருக்கிறது. 'வைக்கிங்கு' படையெடுப்புகளில் ஈடுபடாத பொழுது, ஸ்கான்டிநேவியர் வழக்காடுவதிலும், சொற் போர்புரிவதிலும் பெருவிருப்பம் உடையவர்களாக இருந்தனர். அவர்கள் சட்டமுறை வாத விவாதங்களை கேட்பதற்குச் 'சங்கங்களில்' கூடுவது வழக்கமாகும். அவர்களிடையே வழக்கறிஞர் தொழில் செய்த சட்ட நிபுணர்கள் இருந்ததில்லை. ஆனால், நிஜாலைப்போன்று உண்மையே பேசிய உழவுத் தொழில்புரிந்த வழக்கறிஞர்கள் பலர் இருந்தனர். அவர்கள் நாட்டின் வழக்காற்றினை நன்கறிந்தவர்களாகவும்,

அவற்றின் சட்டமுறைச் சிக்கல்களின் நுட்பத்தினை உணர்ந்தவர்களாகவும் இருந்தனர். இங்கிலாந்திலிருந்த டேனியரின் பட்டணங்கள் அடிக்கடி அதனுடைய முக்கிய அதிகாரிகளோடு, பன்னிரண்டு 'சட்ட வல்லுநர்' களையும் உடையதாக இருந்தன. முறைமன்றங்களின் தனியுரிமை வாய்ந்த மக்களைக்கொண்டு குழுக்கள் (Committees) அமைக்கும் முறையினை முதன் முதலாக டேனியர் இங்கிலாந்தினுள் புகுத்தினர். இதை அடிப்படையாகக் கொண்டும் பிற்காலத்தில் நார்மானியர் புகுத்திய பிராங்கியப் பழக்கத்தைத் துணையாகக்கொண்டும் இங்கிலாந்தின் **'தீர்ப்புச் சான்றோர் குழுமுறை'** (Jury System) தோன்றியதாகத் தெரிகிறது. எதற்கும் எப்பொழுதும் தயாராக இல்லாத எதல்ரெட்டின் சட்டங்களில் "ஒவ்வொரு 'வேப்பன் டேக்குகளிலும்' (Wapentake)[1] ஒரு 'கூட்டம்' (Gemot) நடைபெறும். பன்னிரண்டு முதிய தேனர்களும், கோட்டத் தலைவரும் வெளியே செல்லுவர். அவர்களுடைய கைகளில் கொடுக்கப்பட்ட புனிதப் பொருள்களின் மீது ஆணையிட்டு, 'குற்றம் செய்யாதவர்களைக் குற்றவாளிகளாக்கமாட்டோம்' என்றும், 'குற்றவாளிகளைக் குற்றம் செய்யாதவர்கள் என்று மறைக்கவும் மாட்டோம்' என்றும் உறுதி கூறுவர்" என்று கூறப்பட்டுள்ளவை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இம்முறை டேனியர்களுடையதாகும். இது பேரளவிற்கு இடைக்காலத் தீர்ப்புச் சான்றோர் குழுவினர் வழக்கினை எடுத்துரைத்த முறையோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது.

ஆங்கில-டேனியரின் காலத்திய இங்கிலாந்தில் நிலவிய நீதியைப்பற்றிய கருத்துகள், மூவகையான தோற்றங்களையுடையனவாகக் காணப்படுகின்றன. முதலாவதாகச் சாக்சானியர்களுக்கும் ஸ்கான்டிநேவியர்களுக்கும் பொதுவான கருத்தாக விளங்கிய 'வெரிகெல்டு' (Weregild) எனப்படும் தனியாளுக்குரிய மதிப்புப் பணம்கொடுக்கும் வழக்காறு குறிப்பிடத் தக்கதாகும். ஒருவன் ஒரு தவற்றைச்செய்தால், அத்தீமைக்கு ஆளான தனிமனிதனுக்கோ இனத்திற்கோ, உறவினருக்கோ பணத்தைக் கொடுத்து மேற்கொண்டு கொடிய செயல்கள் செய்யாவண்ணம் தடுக்கும்முறையே பழைமையானதாகும். இக்கருத்து ஒரு காலத்தில்-வரலாற்றின் தொடக்க காலத்தில்—நீதி நிர்வாகத்துறை முழுவதிலும் பரவியிருந்தது. ஆனால் முறை மன்றங்களின் அதி

[1] 'நூறு' எனப்படும் சாக்சானிய கோட்டங்களின் உட்பிரிவைப் போன்றதே 'வேப்பன்டேக்கு' என்பதாகும். டேனியர் அவ்வுட்பிரிவை, வேப்பன்டேக்கு என்னும் தங்கள் மொழிச் சொல்லால் குறிப்பிட்டனர்.

காரங்கள் பெருகியதனாலும், இனமரபுகளின் உணர்ச்சி நலிவுற்றமையாலும் இந் நீதிமுறை மறைந்துகொண்டு வந்தது. சாக்சானியர் ஆட்சியின் பிற்பகுதியில், ஒரு குடும்பத்தினர் மற்றொரு குடும்பத்தினரைக் கொன்று குவிக்கும் வழக்கம் மிக அருகியதாகப் போயிற்று. அதற்கு மாறாகக் கொலைசெய்யப்பட்ட இனத்தவருக்கும் கொலைகாரனுக்கும் இடைப்பட்ட விவகாரம் மாற்றமுற்றது.[1] இரண்டாவதாகத் திருச்சபைக் கோட்பாடு சிறப்புறத் தொடங்கியது. இப்பிறவியில் ஒருவன் கொடிய (பாவம்) செயலைச் செய்தால், அதற்கு அவன் பாவம் செய்தவகை, அறத்திற்குப் புறம்பான மறச்செயல் செய்த பாவியாகத் துன்புறுவான் என்னும் கோட்பாடு மக்களுடைய உள்ளங்களில் இடம்பெறலாயிற்று. அவ்வாறு பாவம் செய்தால் அதற்குக் கழுவாய் நோன்பு நோற்பதும் தவம் புரிவதுமேயாகும் என்று திருச்சபையினர் கூறிய கருத்துகள் சிறப்பிடம் பெற்றன. மூன்றாவதாகச் செல்வாக்குப் பெற்ற கருத்து ஸ்கான்டிநேவியர்களுக்கே உரிய சிறந்த கருத்தாகும். அக்கருத்து ஆங்கிலேய—டேனிய சட்டத்தினுள் இடம்பெற்றிருக்கிறது. ஒரு மனிதனுக்கு மானக்கேட்டை உண்டாக்குவனவாகக் குறிப்பிட்ட சில செயல்களைக் கருதினர். போரில் கோழைத்தனமாகப் புறமுதுகிட்டு ஓடுதலும், தன்னுடைய தலைவனைத் தனியே கைவிட்டுவிட்டுச் செல்லுதலும் அத்தகைய இழிசெயல்களுள் குறிப்பிடத் தக்கனவாகும். இக்குற்றங்கள் தனியுரிமை உடைய வீரரிடத்து இருக்கத் தகாதனவாகும். ஒரோவழி, அவர்களிடத்து இக்குற்றங்கள் காணப்படுமானால், அதற்குத் தண்டனையும் கொடுக்கப்பட்டு வந்தது. அவை தண்டிக்கத்தக்க செயல்களாகக் கருதப்பட்டன. ஆல்பிரட்டு அரசர் காலம் முதல் அரசருக்குத் துரோகம் விளைக்கும் கொடுங் குற்றத்திற்கும், அல்லது ஒரு மனிதனுடைய பிரபுவிற்குத் தீமை விளைக்கும்

[1] குடிமரபுப் பகையால் இரத்தம் சிந்தப்படுதலையும், துன்பத்திற்கு ஆளானவர் படை பலம் இல்லாதவர்களாக இருந்தால், குற்றம் செய்தவர்களை முறை மன்றத்திற்கு அழைத்து வருதலும் ஆகிய சட்டம் மிகமிகப் பையவே ஆற்றல் பெறலாயிற்று. இதற்கு ஆல்பிரட்டு அரசரின் சட்டங்கள் சிறந்த எடுத்துகாட்டுகளாகும். 'எதிர்பாராவகையில் யாராவது தன்னுடைய பகைவனை வீட்டிற்கு வெளியே சந்தித்துவிட்டால், அவன் ஊரில் இல்லாதது தெரிந்ததும், அவன் படைக்கலன்களைப் போட்டுவிடுமாறு வற்புறுத்தப்பட்டு, 30 நாட்களுக்குச் சிறைப்படுத்தி வைக்கப்பட்டிருப்பான். அவனுடைய உறவினர்களுக்கு இச்செய்தியை அறிவிப்பர். அவன் தன்னுடைய படைக்கலன்களைக் கொடுக்காவிட்டால் அவனைத் தாக்குவார்கள்'. 'குடிமரபுப் பகைக்கு ஆளாகாது ஒரு மனிதன் தன்னுடைய பிரபு தாக்கப்பட்டால், அவருக்காகப் போரிடுவதும் உண்டு'. எட்மண்டு, கான்யூட்டு ஆகியோரின் சட்டங்கள், அவர்கள் காலத்திலும் குடிமரபுப் பகையால் இரத்தம் சிந்தப்படுதல் ஒரு வழக்காறாக இருந்து வந்ததைத் தெரிவிக்கின்றன.

கொடுங் குற்றத்திற்கும் சிறப்பான தண்டங்களும், வெறுத்தொதுக்கப்படுதலும் பெருவழக்காகியதை நாம் காணுகின்றோம். அரசருடைய அதிகாரமும், பிரபுக்களின் அதிகாரமும் பெருகியதன் பயனாக, அரசத் துரோகக் குற்றச் சட்டமும் வேறு சிறு துரோகக் குற்றச்சட்டமும் வளர்ச்சியுற்றன. குருமார்களின் வழியாக வந்த ரோமானிய சட்டத்தின் செல்வாக்கினால் ஓரளவிற்கு இக்கருத்து இங்கிலாந்தில் சட்டமாக்கப்படும் அளவிற்குச் சிறப்புறத் தொடங்கியது எனலாம். இத்துடன் நார்ட்டிக்கு இனமக்களின் ஆற்றல்மிக்க அறவுணர்வும் இதற்குக் காரணமாக அமைந்தது. அவ்வின மக்கள் அறவுணர்விற்குக் கொடுத்திருந்த சிறப்பிடத்தை ஆங்கில—சாக்சானிய இலக்கியங்களும், ஸ்காண்டிநேவிய இலக்கியங்களும் நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன.

சிறிது காலத்திற்கு டேன்லா உரிமை பெற்ற நாடாக, ஸ்காண்டிநேவிய குடியிருப்புகள் பலவற்றின் கூட்டரசாக விளங்கியது. அக்காலத்தில் அதனுடைய நகரங்களைச் சுற்றிலும் டேன்லா சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. செஸ்டரிலிருந்த ரோமானியப் பெருஞ்சுவர்களை முதன் முதலாக வைக்கிங்குகளின் தலைவர் ஒருவரே பழுதுபார்த்தார். மேலும் செஸ்டர், யார்க்கு நகரங்களின் வாணிக வாழ்க்கையை ஸ்காண்டிநேவியர் தங்கள் முயற்சியினால் மீண்டும் தழைக்குமாறு செய்தனர். சாலைகள் மிகக் குறைவாக இருந்தன. ஆனால் ஆறுகள் மிக ஆழமாக இருந்தன. உள்நாட்டுப் பட்டணங்களுக்குப் படகுகள் மூலமாகக் கொண்டு வரப்பட்ட வாணிகப்பொருள்களைக் கப்பல் துறைகளில் இறக்கினர். டேனியர்களின் 'புகழ் மிக்க ஐந்து நகரங்கள்' (Boroughs) லிங்கன், ஸ்டாம்போர்டு, லீசெஸ்டர், டெர்பி, நாட்டிங்காம் ஆகியவையாகும். அவை இராணுவ அரண்களாகவும், வாணிகத் தலங்களாகவும் பயன்பட்டன. ஒவ்வொரு நகரமும் ஆழமான அகழியையும், கோட்டை மதில் சுவரையும் உடையனவாக அமைக்கப்பட்டது. அவை ஒவ்வொன்றும், தமக்கெனத் தனிப்பட்ட சட்ட வல்லுநர்களையும் படையினையும், ஆற்றல் மிக்க அரசரான 'இளங்கோ'வையோ கோமகனையோ உடையனவாக இருந்தன. டேனிய நகரங்களுக்கு அளிக்கப்பட்ட அரசியல் முக்கியத்துவம் ஸ்காண்டிநேவியப் பழக்கவழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது என்றாலும், ஓரளவிற்கு ரோமானிய ஆட்சியமைப்பினை ஒத்திருக்கிறது.

மூத்த எட்வர்டும், அவருடைய சகோதரியான எதல்பிளட்டாவும் டேன்லாவைக் கைப்பற்ற முயன்ற பொழுது, அவர்

கள் டேனியரின் போர் முறைகளைப் பின்பற்றி, நகர அமைப்பு களை ஒவ்வொன்ருகக் கைப்பற்றினர். ஆல்பிரட்டு டேனியரு டைய முறைகளைப் பின்பற்றி லண்டன் நகரையும், வெஸ்ஸக்ஸில் சில இடங்களையும் நகரங்களாக அமைத்தார். அவருடைய மகனும், மகளும் கோட்டை கொத்தளங்கள் அமைக்கப்பட்ட 'பர்ஹன்' (Burhs) எனப்படும் நகரங்களை மிட்லாந்திற்கு அப் பாலுள்ள செவர்ன் பள்ளத்தாக்கு வரையில் அமைக்கலாயினர். அவர்கள் பாழடைந்த ரோமானிய நகரங்களைப் பழுதுபார்த் தனர். இதற்கு முன்பு பாதுகாப்பாக அமைக்கப்பெருத நகரங் களைச் சுற்றிலும் பெருஞ் சுவர்களை அமைத்தனர். ஒவ்வொரு கோட்டையிலும், நிலையான ஆங்கிலேயப் படை வீரர்களைக் கொண்ட பாசறை ஒன்றை நிறுவினர். அவர்களுக்கு நிலங்கள் நகரவார முறையில் (Burgage tenure) விடப்பட்டன. அந்நிலங் களை மானியமாகப் பெற்ற வீரர்கள், அந்நகரங்களைக் காக்கும் கடப்பாடுடையவர்களாக இருந்தனர். ஆல்பிரட்டின் மக்கள் எவ்வளவு விரைவாக டேன்லாவைக் கைப்பற்றினரோ, அவ் வளவு விரைவில் அப்பகுதியைச் சாக்சானிய வெஸ்ஸக்ஸைப் போன்ற பல கோட்டங்களாகப் பிரித்தனர். புதிதாக அமைக் கப்பட்ட கோட்டங்கள், ஒரு டேனிய நகரை மையமாகக் கொண்டதாக அமைக்கப்பட்டன. அதனுடைய எல்லைகளை டேனிய இராணுவ மாவட்டங்கள் அமைத்திருந்த எல்லைகளோடு பொருந்துமாறு வகுத்தனர். இவ்வாறே கிழக்கு மிட்லாந் திலுள்ள லிங்கன், டெர்பி, நாட்டிங்காம், லீசெஸ்டர், நார்த்தாம்ப் டன், ஹண்ட்டிங்கடன், கேம்பிரிட்ஜ், பெட்போர்டு ஆகிய கோட் டங்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு கோட்டத் தலைவரும் (Reeve), மன்றத் தலைவரும் அதிகாரிகளாக அரசரால் அமர்த்தப்பட்டனர். அவர்களே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெஸ்ஸக்ஸிலுள்ள கோட்டங்களின் ஆட்சிப் பொறுப்பினையுடையவர்களாக அரசருடைய ஆணைக்குக் கட்டுப் பட்டு நடந்தனர். அதைப் போன்றே புதிதாக மீட்கப்பட்ட மெர் சியாவிலிருந்த கோட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தலைமையேற்று ஆட்சி புரிந்தனர். ஆனல் டேனியக் கோமகன், புதிதாக டேன் லாவில் இருந்து தமது நாட்டோடு சேர்த்துக்கொண்ட டேனியக் கோட்டங்களின் பொறுப்பினை ஏற்று ஆங்கிலேய அரசருக்குக் கட்டுப்பட்டவராக இருந்தார்.

ஒப்பாவும் எக்பர்ட்டும் ஆட்சிபுரிந்த நிழற் பேரரசின் காலத்தில் ஒரு குறையாக இருந்து வந்த அரண்மிக்க கோட் டைகளையும், ஆட்சியியல் அமைப்புகளையும் புதிய இங்கி லாந்து இவ்வாறு பெற்றது. அதனல்தான் தற்கால இங்கி

லாந்தின் அமைப்பும், அதன் புகழ்மிக்க கோட்டங்களும் நகரங்களும் ஆங்கில டேனியப் போர் மேகங்களுக்கு இடையே ஒன்றின் கீழ் ஒன்ருகச் சிறப்புற்று விளங்குவதைக் காணுகின்ருேம். இவ்வளவிற்கு நாம் நெடுந்தொலைவில் இருந்து பார்த்தாலும் நன்குபுலனுகும். ஆனல் பத்தாம் நூற்ருண்டின் நாட்டுப்படத்தைக் கூர்ந்து நோக்குவோமானல், மெல்ல மெல்லக் காட்டை அழித்து நாடாக்கப்பட்ட இடங்களிலும், தேங்கிக் கிடந்த நீர் வடிக்கப்பட்டுக் குடியிருப்பு நிலமாக்கப்பட்ட இடங்களிலும் நாட்டுப்புற ஊர்கள் ஒன்றை அடுத்து ஒன்று அடக்கமாகத் தோன்றிக் கொண்டு இருப்பதைத் தெளிவாகக் காணலாம்.

டேனியப் போரின் பொழுது இராணுவத் தேவைகளையும் ஆட்சியியல் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காகவே முதன் முதல் 'பரோக்கள்' எனப்படும் நகரங்கள் அமைக்கப்பட்டன. எனினும், அவை நாளடைவில் வாணிகப் பண்புடையனவாக மாறின. டேனிய வாணிகர்கள் மனச்சோர்வு அற்றவர்கள். அவர்கள் அலைகடலினுள் அஞ்சாது சென்று பொருளீட்டி வந்தனர். அதனல் தங்கள் மதிப்புமிக்க கடற்பயணத்திலிருந்து திரும்பும் பொழுது, தங்களைத் 'தேனராகும் தகுதியுடையோரா'கக் கூறிக்கொண்டனர். இவை யாவற்றையும் விட அவர்கள் வெற்றியோடு கொண்டுவந்த பொருள்கள் விலைபேசப் படாது, அச்சுறுத்தலால் கைப்பற்றப்படுமானல் அவர்கள் 'தேனரைப்' போன்ற வீரமுடையவர்களாக விளங்கினர். அவர்களுடைய வாணிகப் பழக்க வழக்கங்களையும், கருத்துகளையும், சாக்சானியர்களுள் சிலர் கைப்பற்றத் தொடங்கினர். அரசரின் சிறப்புமிக்க அமைதி நகரங்களையும், அவற்றுள் இருந்தவர்களையும் நன்முறையில் காத்து வந்தது. மூத்த எட்டுவர்டு ஒரு பொருளை வாங்குவதும் விற்பதும், நகரத்தின் குறிப்பிட்ட ஓர் இடத்தில் — சந்தைக் கடையில் — நகரத் தலைவர் முன்னிலையில் நடைபெறவேண்டும் என்ற சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்ததன் மூலம், புதிய நகரங்களில் வாணிகம் செழிப்புற்று வளர்வதற்குப் பேருதவி புரிந்தார். அந்நகரங்களின் குடிமக்கள் ஒரே சமயத்தில் வீரர்களாகவும், வாணிகர்களாகவும், பக்கத்திலே உள்ள நிலங்களைப் பயிரிடும் உழவர்களாகவும் விளங்கினர். வருங்காலத்தில் இவர்களுடைய வழித் தோன்றல்கள் வெறும் வாணிகர்களாகவும் உழவர்களாகவும் மட்டும் காணப்பட்டனர். ஆனல் அக்காலத்தில் நார்மானிய வீரர்கள் குதிரைகள் மீது அமர்ந்து போர் புரிதலைத் தங்கள் தொழிலின் ஒரு பகுதியாகக் கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் கடமையைச் செய்து முடித்த பிறகு நகரங்களைப் பற்றிக் கவலையுருது தங்களுடைய

கல்லால் கட்டப்பட்ட நிலவறைகளில் தங்கி வாழ்ந்து வந்தனர். பல நூற்றாண்டுகள் கழிந்தபிறகு, தொழிற் பாகுபாடுகள் சிறப்பாகத் தனிப்பட்ட மக்களால் செய்யப்பட்டு முன்னேற்றம் காணத் தொடங்கிய அக்காலத்தில், நகரக் குடிமக்கள் நிலத்தை உழுவதையும் நிறுத்திக் கொண்டனர். அதன் பிறகு அவர்கள் முழுவதும் வாணிகத்திலும், தொழிற் கலைகளிலுமே ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறு ஆங்கிலேய நகரங்களின் தோற்றத்தின் ஒரு வகைப் பண்பு அமைந்தது. ஆனால், இங்கிலாந்தின் ஒவ்வொரு நகரமும் ஒவ்வொரு வகையான தனிப்பட்ட வரலாற்றையுடையதாகக் காணப்படுகின்றது. பெருங் கற்சுவர்களால் சூழப்பெற்ற பெரிய நகரங்கள் — சிறப்பாக லண்டன் மாநகரம், வெளிப்புறத்தே இருந்துவந்த நிலமானியப் படைமுறை உலகிற்கு முற்றிலும் என்றுமே அடிமையாகவில்லை. ஆனால், வரலாற்றுக்காலம் நெடுக அந்நகரங்கள் தம்முடைய தற்காப்பிற்குரிய படைகளின் அமைப்பையும், கட்டுப்பாட்டையும் பேணிக் காத்து வந்துள்ளன.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

குறைமிக்க அமைப்பினை உடைய தீவு — வைக்கிங்குகளின் வாய்ப்புகள் — தாயகத்தில் வைக்கிங்குகள் — முதற் படையெடுப்புகள் — வைக்கிங்குகளின் வீரதீரச் செயல்களின் பண்புகள் — வைக்கிங்குகள் வந்த வழிகள் — இங்கிலாந்திலும் பிரான்சிலும் இருந்த டேன்லாக்கள் — வைக்கிங்குகள் பின்பற்றிய போர் முறைகள் — வெஸ்ஸக்ஸை ஆண்ட ஆல்பிரட்டு அரசர் — ஆல்பிரட்டும் கத்ரமும் — அமைதிக்காலத்தில் ஆல்பிரட்டு — வெஸ்ஸக்ஸ் டேன்லாவைக் கைப்பற்றுதல் — ஆங்கில டேனிய சட்டத்தின் கூறுகள் — ஆங்கில டேனிய நகர வாழ்க்கை — காடு கெடுத்து நாடாக்கல் — ஆங்கிலேய நகரங்களின் தோற்றம்.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூற்கள்


1. ஜிஜெர்செட்டு (Gjerset) :
History of Norwegian People, Vol. I
2. காலிங்குவுட்டு (W. g. Collingwood) :
Scandinavian Biitain. (S.P.C.K., 1908)
3. பீட்ரிஸ்லீஸ் (Beatrice Lees) :
Alfred (Heroes of the Nations Series)

4. ஓமன் (Oman):
Art of War in the Middle Ages. Cam. Med. Hist. Vol. III, Chaps XIII, XIV, XX
5. ஹாட்கின் (R. H. Hodgkin):
A History of Anglo-Saxons: 1935
6. ஸ்டெண்ட்டன் (F. M. Stenton):
Anglo-Saxon England, 1943

இயல் 6

# சாக்சானியர் ஆட்சியில் இங்கிலாந்தின் மக்கள் வாழ்க்கை

*நிலமானியப் படைமுறை வரம்பு கடந்து வளர்தல்—கான்யூட்டும் (Canute) நார்ட்டிக்கு இன மக்களின் கடல் கடந்த பேரரசும்*

போரும், படையெடுப்பும், இரத்தம் சிந்துதலும் சாக்சானியர் காலத்திய இங்கிலாந்து மக்கள் வாழ்க்கையின் சிறப்பியல்புகளாக இருந்து வந்தன. ஆற்றல் மிக்க நார்மானிய அரசர்களுக்கும் அவர்களைத் தொடர்ந்துவந்து இங்கிலாந்தைக் கைப்பற்றிய நார்மானிய வீரர்களுக்கும், நம் தீவினுடைய இயற்கையமைப்பின் நன்மைகள் ஒன்றும் புலனாகியதாகத் தெரியவில்லை. படையெடுப்பாளர் ஒவ்வொருவருக்கும் கடல் ஒரு சிறந்த பெரு வழியாகத் துணை புரியும் வரை 'இங்கிலாந்து வெற்றி மிக்க கடலுக்கு அடிமைப்பட்டே இருக்க வேண்டிய' அவலநிலை இருந்து வந்தது. அதனால் பிரிட்டன் உதவியற்ற நிலையில் படையெடுப்பாளர்களுக்குப் பலியாகி வந்தது. இத்தாலியின் இயற்கை வளமும், பெருவனப்பும் தெற்கு நாட்டு மக்களுடைய உள்ளங்களை எல்லாம் கொள்ளைகொண்டதைப்போல, இங்கிலாந்தின் இயற்கை வளமும் சிறப்பும் நன்முறையில் பாதுகாக்கப்படவில்லை. அதையறிந்த வடஐரோப்பிய வீரமிக்க இனங்கள் என்றைக்காகிலும் இங்கிலாந்தைத் தாங்கள் தாக்கிப் பெரும் பொருளைக் கொள்ளையடித்துக் கொண்டுவர வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருந்தனர்.

ஆயினும் கொள்ளைக்காரர்களும், கொலைகாரர்களும் ஒரே சமயத்தில் பிரிட்டன் முழுவதிலும் புகுந்து தங்கள் அழிவு வேலைகளைச் செய்ய முடியவில்லை. இப்பொழுது இருப்பதைக் காட்டிலும், அப்பொழுது மக்களின் குடியிருப்புகள் தொடர்பற்று

நெடுந்தொலைவிற்கிடையே சிதறுண்டு கிடந்தன. அக்குடியிருப்புகளைச் சூழ்ந்து காடுகளும் சதுப்பு நிலங்களும் நிறைந்து கிடந்தன. அவை இருக்கும் இடங்களைச் சுற்றிக் காட்டுவதற்குரிய நாட்டுப்படங்கள் அக்காலத்தில் இல்லை. அழிவு வேலைக்காரர்களின் இரையிருக்கும் இடத்திற்கு, அவர்களை எளிதில் அழைத்துச் செல்லுவதற்குப் போதிய தெருக்களும் இல்லை. டேனியர்கள் படையெடுத்ததற்கு மிகப்பிற்பட்ட காலத்தில் தோன்றிய கதையொன்று அடிக்கடி கூறப்படுவதுண்டு. மிக முக்கிய இடமான பிரிங்க் பர்ன் பிரியோரி (Brink burn Priory) காடுகள் நிறைந்த கோகட் (Coquet) பள்ளத்தாக்கின் நடுவே இருந்தது. அதை ஒரு நாள் முழுவதும் ஸ்காட்டியப் பெரும் படையினர் தேடியலைந்து சோர்வுற்றனராம். நல்லகாலமாக மாலை நேரத்தில் அந்நகரின் திருச்சபையில் மணியடிக்கப்பட்ட ஒலி அவர்கள் காதில் விழுந்ததாம். உடனே அவர்கள் மணியோசை வந்த திக்கினை நோக்கிச் சென்று அவ்விடத்தைத் தாக்கினராம். அதனால்தான் டேனிஷ்படையெடுப்பாளர்கள் பெருந்திரளாக வந்தபொழுது, அமைதியான சிற்றூர்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் கோயில் மணிகளை அடிக்கத் தயங்கினர் போலும். அவர்கள் எவ்வளவு விரைவில் மிகக் கூரிய வாளினைக் கொண்டு பழங்குடி மக்களைக் கொன்று குவிப்பதைத் தவிர்க்க முடிந்ததோ,' அதுவரை நாட்டுமக்களால் பொறுமைப்படத்தக்கவராகவே வாழ்ந்தனர். அவர்களுடைய வாழ்க்கை எதைப் போன்று இருந்திருக்கும் என்பதைப் பற்றி நாம் சிந்திப்பதே அரிதாகப் போய் விட்டது. அதற்கு ஒரு காரணம் கூறலாம். இடைக் காலத்தின் பிற்பகுதியிலிருந்த மக்களின் வாழ்க்கை முறையை நாம் அறியமுடியவில்லை. ஏன் பண்டை ரோமானியரின் தொல்பொருள் சின்னங்கள் நம் கண்களுக்கு விருந்து அளிப்பனவாக இருந்தாலும், மேலும் அவர்களுடைய கட்டடக்கலை நம்முடைய கற்பனையைத் தூண்டி அதன் மாண்பினை உய்த்துணருமாறு செய்தாலும், நாம் அவற்றிலிருந்து அக்கால வாழ்க்கை முறையைப் பற்றி அறிவது கடினமாகவே உள்ளமை இங்குக் கருதத்தக்கது. இயற்கைக் காட்சியினின்று சாக்சானியரின் ஆட்சிக்காலம் அறவே மறைந்து ஒழிந்து விட்டது. கைப்பற்றுவதற்கு முற்பட்ட திருச்சபைகள் பல பழுது பார்க்கப்பட்டும், புதிதாகக் கட்டப்பட்டும் விட்டன. சாக்சானியர்கள் வாழ்ந்த மரத்தாலான குடிசைகளும் (Chalet), பெரு மன்றங்களும், தம்முடைய அறிகுறிகளையோ, மரபினையோ நாட்டில் விட்டுச் செல்லவில்லை. அவை ஒருகால் நம்முடைய பழங்காலக் களஞ்சியங்களின் அமைப்பில் கட்டப்பட்டு இருக்கலாம். ஆனால், அக்காலத்தில் அம்மன்றங்களே பெருஞ் சிறப்புடையனவாக இருந்தன. ஸ்வீட்சர்லாந்தின் தாழ்நிலப்பகுதிகளில் இன்று

காணப்படும் பரந்த மர அமைப்புக்களான மாளிகைகள் எவ்வளவு சிறப்புடையனவாக உள்ளனவோ, அதைப் போன்ற நிலையில், சாக்சானியர் கட்டிய மர மன்றங்களும் சிறப்புடையனவாக இருந்திருக்கலாம். கட்டிடங்கள் கட்டுவதற்கு வேண்டிய வேறு பொருள்கள் கிடைக்காத நாட்டில், இயற்கை அளிக்கும் பொருளைக் கொண்டு அமைக்கப்படும் மர மன்றங்கள் கலை மரபுச் சிறப்புடையனவாக அமைக்கப்பட்டுள்ளன. மரங்களை அறுத்தெடுப்பதற்குச் செலவழிக்கப்படும் உழைப்பைத் தவிர இதில் வேறொன்றும் வீணாவதில்லை. சாக்சானிய தேனர்களி (Thegus)ன் பெருமரத் துண்டுகளால் கட்டப்பட்ட மன்றங்களும் டேனியத் தலைவர்களின் (Jarls) மரத்தால் கட்டப்பட்ட மன்றங்களும் உள்ளும் புறமும் சிற்பங்கள் செதுக்கப்பட்டும், வண்ணங்கள் தீட்டப்பட்டும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அவற்றினுள் பளபளப்பான போர்க் கருவிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. ஆயினும் மரக்கழிகளிடையே புகை சுழன்று சுழன்று கூரையிலுள்ள துவாரத்தைத்தேடி வெளிவந்து கொண்டிருந்தமையால், அவற்றின் அழகு மங்கிப் போயிற்று. அவை பகட்டான மாளிகையாகத் தோன்றவில்லை. குடும்பத்தினரும், தேனர்களும் அவர்களுடைய பல் வகைப்பட்ட வண்ண உடைகளை அணிந்து கொண்டனர். நாட்டுத் தொழில் வல்லுநர்களால் அன்றாட வாழ்க்கைக்குரிய தட்டு முட்டுச்சாமான்கள் வியக்கத்தக்க வகையில் அழகாகச் செதுக்கப்பட்டிருந்தன. ஆங்கில நகைத் தொழிலாளரின் கலைத் திறன் மிகவும் நேர்த்தி வாய்ந்ததாக இருந்தது. அதற்கு அழியாத சான்றாக 'ஆல்பிரட்டின் அணிகலனும்' (Alfred's Jewel) வேறு பல பொருள்களும் இன்றும் இருந்து வருவது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

தேனர்களோ, அவர்களைப் பின்பற்றுபவர்களோ எத்தகைய புத்தகத்தையும் உடையவர்களாக இல்லை. அவர்களுள் ஆல்பிரட்டு மன்னரின் கருத்து மிக்க அவைக்கள உறுப்பினர்களாக இருந்தவர்களே புத்தகங்களை வைத்திருந்தனர். ஆனால், அம்மன்றங்களில் நாள்தோறும் மாலைப்பொழுதில் பாணர்கள் தங்கள் காப்பியங்களைப் பாடினர். அங்கு அவற்றைக் கேட்டு இன்புறக் குழுமியிருந்த பார்வையாளர், தங்களுடைய இன்றைய வழித்தோன்றல்களைக் காட்டிலும், மேன்மையான எதிரொலி நயம் நிறைந்த பாடல்களைப் பெரிதும் விரும்பிக் கேட்டனர். நம்முடைய அறிவாற்றல் மிக்க உலக வாழ்வில், நாம் பெறும் இன்பத்தைக் காட்டிலும், எளிமை மிக்க அக்காலத்திய மக்கள் பொருள்களின் வடிவையும் வண்ணத்தையும் கண்டு மகிழ்ந்தனர். அவர்கள் மெல்லிய இனிய சொற்களைக் கேட்டு இன்புற்றனர்.

இவ்வாறு அவர்களுடைய வாழ்க்கையில் இன்பத்தினைப் பெரிதும் நுகர்வதில் ஈடுபட்டிருந்தனர்.

சாக்சானியரும், டேனியரும் வேட்கை மிக்க இனங்களிலிருந்து வந்தவர்களாவர். பல ஏக்கர் நிலங்களில் பயிரிடப்பட்ட பார்லி அரிசியைக் கொண்டு அவர்கள் 'ஏல்' (Ale) என்னும் மாத்தேறலைத் தயாரித்துக் குடித்துவந்தனர். இவ்விரு இனங்களின் பழங்காலப் பழக்கப்படி "பருவகால" (Yuletide) விருந்துகள் நடைபெறுவது பொது வழக்காக இருந்துவந்தது. பிற்காலத்தில் திருச்சபை அதைக் கிறிஸ்து பெருமானின் திருக்காட்சி (கிறிஸ்மஸ் பண்டிகைக் கால) விருந்தாகச் சிறப்புறுமாறு புது மெருகிட்டது. அவ்விருந்து தேனர்களின் மர மன்றங்களில் களியாட்ட மிக்கதாக நடைபெற்றது. பிற்காலத்தில், நார்மானியர்களுடைய கல்லினால் கட்டப்பட்ட நிலவறைகளில் அவ்விருந்து சிறப்பாக நடைபெறலாயிற்று.

ஆனால் ஏழைகளுக்கும், செல்வர்களுக்கும் 'வாழ்க்கை' என்பது, 'முக்கியமாக வீட்டிற்கு வெளியே பண்படுத்தப்படாத இயற்கையோடு உரமிக்க மக்கள் நேருக்கு நேராக நடத்தும் போராட்டமாகவே' இருந்தது. நாட்டிற்குப் பொதுவான போர்களும், தனிப்பட்டவரிடையே பூசல்களும் உண்டாகாத அமைதிக் காலத்தில், உரிமை ஏவலாளர்கள் (Retainers), ஓநாய்களையும் நரிகளையும் ஈட்டிகளைக் கொண்டும், வலைகளைக் கொண்டும் பிடித்தனர். அவர்கள் மான்களையும், முயல்களையும், குழி முயல்களையும், காட்டுக் கோழிகளையும், வேட்டையாடி வந்தனர். இவற்றை இவ்வாறு வேட்டையாடவில்லை என்றால் அவற்றிடமிருந்து பயிர்களைக் காப்பாற்ற முடியாது என்பதையும், உக்கிராணத்தில் (Larders) இறைச்சி சேமித்து வைக்க முடியாது என்பதையும் அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். வேட்டையாடுதல் எப்பொழுதும் மகிழ்ச்சியளிப்பதாக இருந்தது. ஆனால், அது அக்காலத்தில் இன்ப விளையாட்டாகக் கருதப்படவில்லை. போரின் கண்டிப்பான கடமைகளைப் போன்று, அதுவும் ஒரு கடமையாயிற்று. தேனர்களுக்கும் அவர்களுடைய ஏவலாளர்களுக்கும், கடமைகள் நன்கு வரையறுக்கப்பட்ட பிறகும், வேட்டையாடுவது ஒரு இன்றியமையாத கடமையாகவே இருந்து வந்தது. ஆனால் தனக்குரிய நிலத்தில் ஒவ்வொரு உரிமைக்குடிமகனும் வேட்டையாடும் வாய்ப்பினைப் பெற்றிருந்தான். அழிவினைப் பேரளவில் உண்டாக்கும் வேட்டையாடுதலாகிய விளையாட்டில் அடிமை ஊழியர்களும் (Serfs), அடிமைகளாகப் பிணைப்பு உண்டவர்களும்

(Tnralls) ஈடுபட்டு வந்ததை யாரும் கண்டிக்கவில்லை. அவர்களுள் சிலர் வேட்டையாடுவதற்காகவே வேலையாட்களாகப் பிரபுக்களால் அமர்த்தப்பட்டிருந்தனர். இக்காலத்திலும் மக்கள் கூட்டமாகக் காடுகளையும், அதில் வாழும் பழங்குடிமக்களையும் கடந்து முன்னேறுவது என்பது ஒரு கடுமையான போராட்டமாகவே இருந்து வந்தது. இக்காலத்தில் 'உயர்ந்த கலைமான்களைத் தன்னுடைய குழந்தைகளைப்' போன்று இங்கிலாந்தின் அரசர் அன்போடு போற்றி வளர்க்கத் தொடங்கவில்லை. மேலும் நார்மண்டியிலிருந்து 'அரசாங்கக் காடுகளின் காப்புச் சட்டம்' இங்கிலாந்திற்கு இறக்குமதி செய்யப்படவும் இல்லை. விளையாட்டிற்காக நிலத்தை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று நிலக்கிழார்கள் தங்கள் மேல் அதிகாரிகளைத் துன்புறுத்தும் அவாவுடையவர்களாக இன்னும் மாறவில்லை. அக்காலத்தில் அவ்விளையாட்டு தன்னைத் தானே நல்ல முறையில் காப்பாற்றிக் கொண்டிருந்தமையால் அரசு அதில் தலையிடவில்லை. இன்னும் பல நூற்றுண்டுகளுக்குப் பலவகைக் கொடிய விளையாட்டுகளினுல் பெறப்படும் இறைச்சியே மக்களுடைய முக்கிய உணவுப் பொருளாக இருந்து வந்தது. காடுகளில் பாதியளவு கொடிய விலங்குக் கூட்டமாக இருந்த பன்றிகளின் இறைச்சியே பெரும் உணவுப் பொருளாகக் காணப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஆங்கிலேயர்கள் தங்கள் நாட்டில் பயிரிடப்படும் தானியங்களைத் தின்றே உயிர் வாழ வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டதைப் போன்று, பத்தாம் நூற்றுண்டில் இங்கிலாந்தின் மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பார்களானுல், அவர்கள் பழங்கால உழவர்கள் உயிர் வாழ்வதற்காகத் தானியத்தை மட்டும் உண்ணுவதற்கு உடன்பட்டிருக்க மாட்டார்கள் என்று உறுதியாகக் கூறலாம்.

எண்ணற்ற உழவர்களால் கைப்பற்றப்பட்டும், அழித்தொழியாத பரந்த காடுகளைக் கொண்டு இங்கிலாந்து விளங்கியது என்றுல் அது எத்தகைய இயற்கை வளமுடையதாக இருந்திருக்க வேண்டும்? உழவர்களால் அழித்தொழிக்கப்பட்ட காட்டு நிலங்களிலிருந்து கடவுள் அளித்துள்ள பரிசாகிய பல வகைப்பட்ட பறவைகளும், விலங்குகளும், வற்றுத இயற்கைச் செல்வமாகிய மரங்களும், செடிகளும், கொடிகளும், மலர்களும் எஞ்சிய காட்டுப் பகுதிகளுக்குச்சென்று அடைக்கலமாயின. அத்தகைய அரிய செல்வங்களையெல்லாம், தம் மூதாதையர் தமக்கு விட்டுச் சென்றவை என்ற கருத்தின்றி, அவர்கள் அவற்றைத் தற்கால விஞ்ஞானத்தின் உதவியால் கண்டு பிடிக்கப்பட்ட போர்க்கருவிகளாலும் முறைகளாலும் அழிப்பதைப்போன்று விரைவாக அன்றும் அழித்தனர்; இன்றும் அழித்துக்கொண்டே

யிருக்கின்றனர். ஆயினும் மக்கள் மிகச் சிலராக வாழும் பகுதிகளில் பண்டை இங்கிலாந்தின் சிதைந்த இயற்கைச் செல்வம், இன்றும் அதைத் தெய்வ லோகத்தைப் போன்று தோன்றுமாறு செய்கிறது. ராபின் ஹுட்டின் (Robin Hood) ஷெர்க் காட்டைப் (Sher Wood)ப் பற்றியும், ஷேக்ஸ்பியரின் ஆர்டன்(Ardan) காட்டைப் பற்றியும் பேசுகின்ற பொழுது, நாம் இழந்து விட்ட பண்டைக் காடுகளை நினைவு படுத்தி, மகிழ்ச்சியுறலாம். ஆனால், அது ராபின்ஹுட்டின் ஷெர்க் காட்டைக் காட்டிலும் பழமையானதாகவும், ஷேக்ஸ்பியரின் ஆர்டன் காட்டைக்காட்டிலும் பரந்ததாகவும் இருந்தது என்பதை நாம் மறத்தலாகாது. அவ்வியற்கை எழில் மிக்க காட்டுப் பகுதிகள், நாடு கடத்தப்பட்டவர்களுடைய நாடாக மட்டுமல்லாமல், கவிஞர்களின் கற்பனைக்கு வற்றாத ஊற்றாகவும் இருந்தது. மேலும் ஆங்கில-டேனிய மக்கள் அனைவரும் வாழ்ந்த இடமாகவும் அக் காடுகள் இருந்தன. அவர்களுள் யாராகிலும் ஒருவர் தம்முடைய அன்றாடக் கடமைகளில் ஈடுபட்டுச் சென்ற பொழுது, தாங்கள் வாழும் காட்டினிடையே காணப்படும் அழகினைக் கண்டு மகிழும் கலையுணர்வும், சுவைக்கும் கலையார்வமிக்க உள்ளமும் உடையவர்களாக இருந்திருப்பார்களா? சாசரும் (Chaucer), இடைக்கால நாட்டுப் பாடல்களை (Ballads) இயற்றிய கவிஞர்களும் அரும்பாடுபட்டு இறுதியாகத் தங்கள் இனத்திற்கென்று ஒரு மொழியினைக் கண்டனர். அம் மொழியின் மூலம் தாங்கள் கேட்டும், கண்டும் இன்புறுவதற்குக் காரணமாக இருந்த பறவைகளையும், மலர்களையும், காடுகளையும், பசும்புல்வெளிகளையும் முதன்முதல் போற்றிப் பாடினர். டியூடர் காலத்திய மக்களிடையே புகழ் பெற்று விளங்கிய பாடல்களைக் கூர்ந்து நோக்குவோமானால், இங்கிலாந்து நாட்டு மக்கள் அனைவரும் வசந்த விழாவில் ஈடுபட்டவர்களைப் போன்று இன்பத்தில் திளைத்ததாகத் தோன்றும். அத்தகைய இயற்கை இன்பத்தில், காடுகளை அழித்து நாடாக்க முயன்ற சாக்சானியரின் முன்னோடிகள் யாவருமே திளைத்ததில்லையா? உயரமான மரங்களை அவர்கள் வெட்டிச் சாய்த்த பொழுது பிரிம்ரோஸ் (Primrose) என்னும் மஞ்சள் மலரும், புளூ பெல் (Blue Bell) என்னும் நீல மலரும் அவர்கள் கண்ணில் படாமலா இருந்திருக்கும்?

சாக்சானியர் வாழ்ந்த கோட்டங்களிலும், டேனியர்கள் வாழ்ந்த கோட்டங்களிலும் (Shires), புதிதாக முதன் முதல் குடியேறியவர்கள் நிலை, பத்தொன்பதாம் நூற்றாண்டில் வடஅமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் குடியேறிய மக்களுடைய நிலையைக் காட்டிலும் சில வகைகளில் வேறுபட்டிருந்தது. மரம்

வெட்டுவோர் தங்கள் கோடாரிகளுடன், காடு வெட்டி நாடாக்கப் பட்ட இடத்தில் சிறு மரக் குடிசைகளை அமைத்து வாழ்ந்தனர். காட்டிற்கு அப்பால் ஐந்து கல் தொலைவிலுள்ள பண்ணைக்குச் செல்லுவதற்குப் பயன்படும் குதிரைகளும், எருதுகளும் அவர்கள் அருகில் இருந்தன. கோடாரியோடு உழவிற்குரிய கலப்பை களும் அவர்களிடத்து இருந்தன. அவர்கள் கடுமையான சொற் களைப் பேசுபவர்களாகவும், விரைந்து அடிக்கும் முரட்டுத்தனம் உடையவர்களாகவும், எல்லைப்புற மக்களின் நல்ல தோழர்களாக வும் இருந்தனர். பிற்கால அமெரிக்காவில் இருந்ததைப் போல சாக்சானியரின் இங்கிலாந்தில் பழையதும் பெரியதுமான குடி யிருப்புகள் பல அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் முதன் முதல் குடியேறிய முன்னோடிகள், காட்டுப் பகுதிகளின் ஆழ்ந்த பள்ளங் களிலே மனித வாழ்க்கையைத் தொடங்கியவர்களாவர். அவர் களுடைய உள்ளத்தை அக்குடியிருப்புகள் பெரிதும் கவர்ந்தன. அதனால் அவர்கள் அங்கே பெருந்திரளாகக் கூடி வாழத் தொடங் கினர். அமைதியும், அழகும் நிறைந்து தோட்டங்களைப் போன்று காணப்படும் இங்கிலாந்தின் சிற்றூர்கள், ஒரு காலத்தில் குடி யேறிய முன்னோடிகளின் குடியிருப்புகளாக இருந்தன. இயற் கையின் தொல் பழங்காலத்திய ஆட்சியினை எதிர்த்துப் போரிட்டு, முதன்முதல் மனிதன் நிறுவிய எல்லைப்புறக் காவல் மனையே அக்குடியிருப்புகளாகும்.[1]

இங்கிலாந்தில் சாக்சானியர் குடியேறியதற்குப் பின்னர் காடு களை அழித்தலும், குடியேற்றங்களை அமைத்தலும் நிலமானியப் படை முறைத் தலைவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. 'மனிதர்கள் மரங்களை வெட்டி, அவற்றை எடுத்துச் சென்று, தங்கள் தலைவரின் (பிரபு) குத்தகை நிலத்தில் (laen land) அவ ருடைய உதவியினால் குடிசைகள் கட்டிவிட்டால், அங்குச் சிறிது ஓய்வு பெறப் படுத்துக்கிடப்பதற்கு வசதியாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் வேலை செய்து வந்தனர். அங்கு வேட்டையாட வும், கோழிகளைப் பிடிக்கவும், மீன் பிடிக்கவும் தங்களுக்குப் பேரு தவியாக இருக்கும் என்று நினைத்தனர். அவர்கள் விரும்பியபடி தம்முடைய பிரபுவின் நிலத்தினைப் பயன் படுத்தவும், அவரு டைய அருளைப் பெற்று அந்நிலத்தைத் தமக்கேயுரிய பட்டய நிலமாக (Book-land) என்றைக்காகிலும் ஒரு நாள் பெறலாம்

[1] 'டென்' (den) என்னும் விகுதி நம்முடைய ஊர்ப் பெயர்களில் மிகப் பலவாக உள்ளதை காணலாம். அடிக்கடி பன்றி வளர்ப்போர், காடு கெடுத்து நாடாக்கி, குடியேற்றம் அமைத்த பொழுது முதன் முதல் உண்டான ஊரை உணர்த்துவதற்கு 'டென்' என்னும் சொல் பயன் படுத்தப்பட்டது. நன்கு அமைக்கப்பட்ட நாட்டுப்பகுதியிலிருந்து நெடுந் தொலையிற்கு அப்பால் அக்குடியிருப்புகள் இருந்ததாகத் தெரிகிறது.

என்று நம்பி அவர்கள் வாழ்ந்ததில் வியப்பொன்றும் இல்லை' என்று ஆல்பிரட்டு மன்னர் அவருடைய காலத்திய நிலையைக் குறித்து வைத்துள்ளமை இங்குக் கருதக் தக்கதாகும். ஆங்கில-சாக்சானிய முன்னோடிகளுக்கு நிலமானியப் படைமுறைப் பிரபு சிறந்த தலைவராக விளங்கினார். அதைப் போன்று பன்னெடுங் காலத்திற்குப் பிறகு அவர்கள் கால்வழியில் வந்த அமெரிக்கா, ஆஸ்திரேலிய வழித்தோன்றல்களுக்கு 'அரசு' (State) சிறப்புடைய தலைவராக இருந்து பணியாற்றுகிறது. அந்தத் தொல் பழங்காலத்தில் 'அரசு' என்னும் அமைப்பு தற்காலத்திய பொருளுடையதாக விளங்கவில்லை. படைப் பாதுகாப்பினையும், நீதி நிர்வாகத்தையும் நேர்மையாக வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதையும், வேறு பிற உதவிகளையும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பிரபுவிடம் பெற்று வந்தான். இவை யாவற்றையும் விட அடிக்கடி பொருளாதார உதவியினையும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பிரபுவினிடத்துப் பெற்று வாழ்ந்தான். இதற்காக அவர்களுடைய தலைவர்கள் தனி மனிதர்களின் உரிமைகளை வரையறை செய்து கட்டுப்படுத்தினர். அத் தனி மனிதர்களின் உழைப்பினால் கிடைக்கும் பயனில் பெரும் பங்கைப் பிரபுக்கள் எடுத்துக்கொண்டனர்; அல்லது அவர்களுடைய உழைப்பின் பெரும் பகுதியைப் பிரபுக்கள் தங்கள் நல்வாழ்விற்காகப் பயன்படுத்திக் கொண்டனர்.

ஆங்கில டேனிஷ் இனத்தவர் ஆட்சிக் காலத்தில் அரசரின் தேனர்கள் படைக்கலம் ஏந்திய போர் வீரர்களாக இரும்புத் தொப்பியும், இரும்புக் கவசமும் அணிந்து பெரும் படைக்கலன்களைத் தாங்கிப் போரிடும் காலாட் படையினராகப் பணிபுரிந்தனர். படையெடுப்புக் காலங்களில் அரசன் அவர்களையே பெரிதும் நம்பி வாழ்ந்தான். இத்தேனர்கள் உழவர்களின் பிரபுக்களாகவும் இருந்து வந்தனர். தேனர்கள் தங்கள் வாழ்க்கையின் பெரும் பகுதியை வேட்டையாடுவதிலும், போரிடுவதிலும் கழித்து வந்தனர். அவர்கள் தங்களுக்கு மேம்பட்ட தலைவருக்குப் பணிபுரிவதையே தங்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அவர்களுடைய மதிப்பு மிக்க தலைவர் அரசராகவோ பாதிரியாகவோ, மடாலயத் தலைவராகவோ, இவர்களைக் காட்டிலும் செல்வமும் செல்வாக்குமிக்க தேனர்களாகவோ இருக்கலாம். நாட்டுப் பற்றைவிட அவர்கள் தனிமனிதனிடத்து — தலைவனிடத்து மாறாத பற்றுக் கொண்டிருந்தனர். அப்பற்று அவர்களுக்குப் பேரார்வத்தை ஊட்டிப் பணி புரியச் செய்தது. அவர்கள் அரசனிடத்து மட்டும்தான் எப்பொழுதும் மாறாத பற்றுக் கொண்டிருந்தனர் என்று கூற முடியாது.

அவர்கள் பிற தலைவர்களிடத்தும் பற்றுக் கொண்டிருந்தனர். சாக்சானிய தேனர்களைப் போல, நார்மானிய நைட்டுகள் (Knights) என்னும் மாவீரர்கள் பிற்காலத்தில் சிறப்புற்று விளங்கினர். இவர்கள் தேனர்களைப் போன்றில்லாமல், எந்நேரமும் படைக்கலம் தாங்கிய போர் வீரர்களாகவும், முறையாகப் படைக்கலப் பயிற்சி பெற்றவர்களாகவும், குதிரையின் மீது அமர்ந்து போர் புரிவதில் வல்லவர்களாகவும் விளங்கினர். அவர்கள் தங்கள் அயலாரைக் காட்டிலும் போரில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருந்தனர். ஆகவேதான், நார்மானியரின் வெற்றிக்குப் பிறகு, நிலமானியப் படை முறை சிறந்ததொரு சமுதாய அமைப்பாக அமையலாயிற்று. மேலும் அதனுடைய சிறப்பின் உச்ச நிலையை அடையவும் முடிந்தது. நீண்ட விற்களும் வெடிகுண்டு மருந்தும் போரில் சிறப்பிடம் பெறத் தொடங்கியவுடன் நிலமானியப் படைமுறை சட்டத்தின் ஓர் அமைப்பாகவும் — முறையாகவும், நிலவார முறையாகவும் (land-tenure) சிறப்புற்று விளங்கியது. ஆயினும், படைக்கலமேந்திய உயர்குடி மக்களின் படைவன்மையே, நில மானியப் படை முறையின் உயிர் நாடியாக இருந்து வந்ததை மறக்க முடியாது.

இடைக்காலத்தில் பண்டைக்குல அமைப்புகளும், குடி மரபுகளும் அழிவுற்றன. அதன் பிறகு சிறந்ததொரு அரசு தோன்றுவதற்குச் சில நூற்றாண்டுகளாயிற்று. அவ்விடைப்பட்ட காலத்தில் தக்க உதவியின்றி அல்லற்பட்டு ஆற்றாது அழுத மக்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களை நிலமானியப் படை முறை (Feudalism) பாதுகாத்தது. அவ்வமைப்பு போரினைத் திறமையாக நடத்தியது; குடியேற்றங்களைப் பேரளவில் அமைத்தது; அதிகப்படியான ஆதாயத்தினைப் பெறும் வகையில் உழவுத் தொழிலில் முன்னேற்றம் கண்டது. நிலமானியப் படை முறை, போர் வீரர்களுடைய கடமைகளையும் தனித்தனியாக வேறுபடுத்தி வரையறை செய்த ஒரு நன் முறையாகும். ஆங்கில சாக்சானிய உழவர்கள் தங்கள் தொழிலில் திறமையற்றவர்களாக இருந்ததோடு, விருப்பமற்ற வீரர்களாகவும் விளங்கினர். சில மாதங்களுக்கு ஒருமுறை போருக்காகத் தங்களை அழைப்பதை அவர்கள் வெறுத்தும் வந்தனர். அவர்கள் நெடுங்காலமாக நிலைத்து வாழ்ந்து வரும் கௌஸ்டெட்டிலாகிலும், (Cowstead), அல்லது நெட்டில்டன்னிலாகிலும் (Nettledan) தனிமையாக இருந்து நிலத்தினை உழுவதையே பெரிதும் விரும்பினர். ரோமானியரின் அழித்ததற்கரிய நாட்டுப்புற மாளிகைகளை எல்லாம் தங்கள் முதாதையர் பேரார்வத்தோடு அழித்தொழித்தமைக்குக் காரணமாக இருந்த போர் வெறியையும், வீரவுணர்

வையும் பிற்காலச் சாக்சானியர் மறந்தே போயினர்.. ஊர்க் குடியிருப்பிலுள்ள பெருமன்றத்தில் வாழும் அவர்களுடைய பிரபுவாகிய தேனர் (Thegu), உள்ளூர் விவகாரங்களில் அவர்களுக்கு உண்டாகும் துன்பங்களையும், இன்னல்களையும் தீர்க்க வேண்டியவராக இருந்தார். நாட்டுக்குப் பெருங்கேடு உண்டாகிய நேரத்தில், அரசனும், அவனுடைய மற்ற உறுப்பினர்களாகிய தேனர்களும் சேர்ந்து சாக்சானியக் குடிமக்களைக் காப்பாற்றும் கட்டுப்பாடுடையவராக இருந்தனர். தேனர்கள் உழவுத் தொழில் செய்வதை அடியோடு கைவிட்டனர். அவர்களுடைய காலத்தைப் போரிலும், போரைப் பற்றிப் பேசுவதிலும், வேட்டையாடுவதிலும், வேட்டையாடுவதைப் பற்றிப் பேசுவதிலுமே வீணாகக் கழித்தனர். அவர்கள் தங்களைச் சார்ந்துள்ள மக்களுக்குப் பண்டை வழக்கு நெறிச் சட்டத்தையும் மரபுகளையும் கொண்டு திருத்தமற்ற நீதி வழங்கியும் வந்தனர். இதற்கு முன்பே பிற்காலத்தில் சிறப்புற்று விளங்கப் போகும் பெரிய தனக்காரர்களும் (Squires), அமைதி காண் நீதிபதிகளும் (Justices of Peace) தோன்றுவதற்கு உரிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருந்தது. ஆனால், ஆங்கில-சாக்சானிய மூலமுன்மாதிரியான பெரிய தனக்காரர்கள் சிறப்பு மிக்க வீரர்களாகவே விளங்கினர்.

எனவே உழவர்களும் போர்வீரர்களாக இருந்த நிலை மெல்ல மெல்ல மறைந்து போயிற்று. தொழிற்பாகுபாடு மக்களிடையே நிலவிய சமத்துவத்தை அழித்ததோடு, அவர்களுடைய உரிமைகளையும் பறித்துக் கொண்டது. ஆனால், அது நிலையான சமூக அமைப்புகளும், நாகரிகமும் வளர்ச்சியுறத் தூண்டுகோலாக அமைந்தது. மேலும் அது செல்வத்தைச் சேர்ப்பதற்குச் சிறந்த கருவியாகப் பயன்பட்டது. காட்டுமிராண்டி மக்கள் குடியைச் சேர்ந்த தனி உரிமைவாய்ந்த மக்கள் அனுபவித்த உரிமைகளைக் காட்டிலும், தனிமனிதன் நாளடைவில் முழு உரிமையைப் பெறுவதற்கு அது அடிகோலியது

இதற்கிடையில் உழவர் சமூகத்தில் கடை நிலையில் இருந்த மக்களும், அடிமையாகப் பிணைப்புண்டவர்களும், அடிமை ஊழியர்களும் கடுமையான வாழ்க்கைச் சூழலில் சிக்கிச் சீரழிந்தனர். அவர்களுடைய உழைப்பு, பல வகையில் தேனர்களுக்கும் குருமார்களுக்கும் அவர்களுடைய திறமை மிக்க தொழில்களுக்கும் சிறிதளவிற்கேனும் தேவைப்பட்டது.

**'உழவனே நீ என்ன சொல்லுகிருய் ?**
**உன்னுடைய வேலையை நீ எவ்வாறு செய்கிருய் ?'**

'பிரபு ! நான் மிகவும் பாடுபட்டு வேலை செய்கிறேன். விடியற்காலேயில் நான் எருதுகளை ஓட்டிக்கொண்டு வயலுக்குச் செல்லுகிறேன். சென்றவுடன் நிலத்தை உழத்தொடங்கி விடுகிறேன். கடுமையான குளிர்காலத்திலும் நான் வீட்டில் தங்குவதில்லை. என்னுடைய தலைவர் தண்டிப்பார் என்ற அச்சத்திஞல் எப்பொழுதும் சுணங்காமல் நான் வயலுக்குப் போகிறேன். நான் நாள்தோறும் ஓர் ஏக்கர் நிலத்திற்குமேல் உழுது கொண்டு வருகிறேன். அதனல் என்னுடைய எருதுகள் நோய் வாய்ப்பட்டன ; கலப்பையின் கார்கூட மழுங்கிப் போய் விட்டது.'

**'உனக்கு யாராகிலும் தோழர்கள் இருக்கிருர்களா ?'**

'எருதுகளை இரும்புத் தாற்றுக்கோலிஞல் ஓட்டிக்கொண்டு வருவதற்குப் பையன் ஒருவன் எனக்குத் துணையாக இருக்கிருன். குளிரிஞல் அவனுக்கும் தொண்டை கட்டிக்கொண்டது. அதனல் அவன் கூச்சலிடுகிருன்.'

**'பகலில் நீ வேறு என்ன வேலை செய்கிருய் ?'**

'நான் இன்னும் எத்தனையோ வேலை செய்கிறேன். நான் நாள்தோறும் எருதுகளுக்குத் தவிடு காட்டுகிறேன் ; வைக்கோல் போடுகிறேன் ; அவற்றின் சாணத்தைக் கொட்டிலிலிருந்து அப்புறப்படுத்துகிறேன். கடினமானவேலை ! கடினமான வேலை ! எனக்கு ஓய்வு என்பதே கிடையாது.'

இடையன் ஒருவன் அவனுடைய முறை வந்தவுடன் மேற்கண்ட கேள்விகளுக்குப் பின் வருமாறு விடையளிக்கிருன் :

'காலையில் எழுந்தவுடன் முதலில் என்னுடைய ஆடுகளை மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டிச் சென்று, அவற்றை மேயவிடுகிறேன். அடுத்து மழையிலும், வெயிலிலும் என்னுடைய நாய்களுடன் ஆட்டு மந்தையைக் காத்து நிற்கிறேன். இல்லையென்ருல், ஓநாய்கள் அவற்றை அடித்துத் தின்றுவிடும். பிறகு அவற்றை வீட்டுக்குக் கொண்டுவந்து கொட்டில்களில் அடைக்கிறேன். ஒருநாளைக்கு இரண்டு முறை பால் கறக்கிறேன். அக்கொட்டில்களைச் சுத்தம் செய்கின்றேன். பாலிலிருந்து பாலடையும், வெண்ணெயும் எடுக்கிறேன். என்னுடைய தலைவரிடம் உண்மையுடையவஞக இருக்கிறேன்.'

எருது வளர்ப்பவன் :

'உழவர்கள் எருதுகளை ஏரிலிருந்து அவிழ்த்து விட்டதும் அவற்றை நான் மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டிச் செல்லுகிறேன். இரவு முழுவதும் அவற்றின் அருகே உறங்காது விழித்திருந்து, அவற்றைத் திருடர்கள் கைப்பற்ருது காவல்புரிந்து வருகிறேன்.'

மேற்கண்ட உரையாடல் கி.பி. 1000 அளவில் வாழ்ந்த தொழிலாளிகளுடைய வாழ்க்கையின் அவல நிலையைத் தெளிவாக விளக்குகிறது.

பிற்காலத்தில் ஸ்காட்டிய-வெல்ஷ் எல்லைப் பகுதிகளில் நிரை கவர்தல் (Cattle-lifting) அடிக்கடி நடந்து வந்தது. ஆனால், அதற்கு முற்பட்ட இக்காலத்தில் அமைதியற்ற பகுதிகள் அனைத்திலும், நிரை கவர்தல் வாழ்க்கையின் பெரும் பகுதியாக இருந்தது.[1]

இவ்வுரையாடலில் கலந்துகொண்ட நாட்டுப் புறத்தினர் தங்கள் பிரபுவின் வீட்டுப் பண்ணையிலோ அரசின் நிலங்களிலோ (Domain Land)ஏறக்குறைய அடிமை நிலையில் தொன்றுதொட்டுப் பரம்பரையாகத் தொழில் செய்து வந்தவராவர். கி.பி. பத்தாம் பதினோராம் நூற்றாண்டுகளில், ஊழியவார முறையில் (Servib tenure) பலவகை நிலைகள் இருந்தன. நாட்டின் வட்டாரச் சூழ்நிலைகளுக்கும், டேனிய, வெல்ஷிய, சாக்சானிய பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப இவ் ஊழியவாரமுறை, சிற்சில வேற்றுமைகளோடு காணப்பட்டது. குத்தகைக்காரர் (Geneats) நிலக்கூலிகள் (Cottars), வாரத்திற்குப் பயிரிடும் குடியானவர்கள் (Geburs) ஆட்டு இடையர், தேனீ வளர்ப்போர் (தேன்தான் அக்காலத்தில் கிடைத்த சர்க்கரையாகும்), பன்றி வளர்ப்போர், இன்னும் பல வகைத் தொழில்களைச் செய்த தொழிலாளிகள் இருந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் பிரபுவிற்கு ஆண்டிற்கு இத்தனை நாட்கள் இன்ன இன்ன வேலைகளைச் செய்யவேண்டிய கடப்பாடுடையவர்களாக இருந்தனர், அல்லது ஆண்டிற்கு இவ்வளவு குத்தகையைத் தலைவருக்குப் பொருளாகக் கொடுக்கக் கடமைப்

[1] ஆடுகளையும், எருதுகளையும் தனியே மேயுமாறு, இடையனே, காவல்காரனே இல்லாமல் விட்டு விடுவது பிற்காலத்தில் உண்டான பழக்கமாகும். டியூடர் காலத்தில் இங்கிலாந்திற்கு வந்த அயல்நாட்டுப் பார்வையாளர்கள் இம்முறையைக்கண்டு பெரிதும் வியப்புற்றனர். இம்முறையினால் கால் நடைகள் திருடர்களிடமிருந்தும், ஓநாய்களிடமிருந்தும் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளுவதற்குப் பயிற்சி தரப்பட்டதாகச் சிறப்பித்துக் கூறுவர். இம்முறை படிப்படியாகத்தான் இங்கிலாந்தில் வளர்ச்சியுற்றது.

பட்டிருந்தனர். டேன்லாவில் தனி உரிமை நிலவுடைமையாளர்கள் மிகவும் அதிகமாகவும், உண்மையான அடிமைகள் மிகக் குறைந்த அளவினராகவும் இருந்தனர். இதற்கு எதிர்மாறாக மேற்குப் பகுதியிலுள்ள கோட்டங்களிலும், கெல்ட்டிக்கு மக்கள் வாழும் கோட்டங்களிலும் அடிமைகள் மிகுதியாகவும், தனி உரிமை நிலவுடைமையாளர்கள் மிகக்குறைவாகவும் இருந்தனர். படையெடுத்து வந்துகொண்டிருந்த டேனியர்கள் தங்கி வாழத் தொடங்கிய மாவட்டங்களில், நிலமானியப் படை முறையின் எல்லைமீறிய அமைப்புகளை உடைத்தெறிவதிலேயே அவர்கள் நோக்கமுடையவர்களாக இருந்தனர். பாமர மக்களுக்குப் பயன்பட்டதையும், குருமார்களுக்கு உதவியாக இருந்த அமைப்புகளையும் அழித்து, தனி உரிமையைப் போற்றி வளர்க்க அவர்கள் முனைந்தனர். இங்கிலாந்தின் மற்றப் பகுதிகளில் டேனியர் தாக்கிக் கொள்ளையடித்தும், மீட்புப் பணம் பெற்றும் வந்தமை உழவர்களை விரைவிலேயே நலிவுற்று அழியுமாறு செய்தது. அவ்வுழவர்கள் 'உண்ண உணவிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் தேனர்கள் முன்னிலையிலும், மடாலயத் தலைவர்கள் முன்னிலையிலும் தலை குனிந்து நிற்கின்றனர். அவ்வாறு பிறர் உதவியைப் பெறவில்லையானால், வைக்கிங்குகள் அவர்களுடைய பண்ணைகளைத் தீக்கிரையாக்கினர். அதன் பிறகு அவர்களைச் சிறைப்பிடித்துச் சென்று விலைகூறி விற்றனர்; அல்லது அவர்களைக் கொன்றொழித்தனர். தாங்க முடியாத பெருஞ் சுமையாகிய 'டேனிகெல்டு' (Danegeld) எனப்படும் வரியாகிய திறைப்பொருள் செலுத்துதலை அவர்கள் உழவர்களைத் துன்புறுத்திப் பெற்றனர். நார்மானியர்கள் வந்தபொழுது இவ்வாறு பிரிட்டனின் வடக்குப் பகுதியும் கிழக்குப் பகுதியும், மேற்குப் பகுதியையும் தெற்குப் பகுதியையும் காட்டிலும் உரிமையுடையதாக இருப்பதைக் கண்டனர்.

உள்நாட்டு வட்டார வேறுபாடுகள் இருந்தபோதிலும், நாடு முழுவதிலும் சாக்சானியர் ஆட்சியின் பிற்பகுதியில் அரைகுறையான உரிமையுடைய உழவர்களின் பெரியதொரு வகுப்பு, அல்லது வகுப்புகள் தோன்றி வளர்ந்தது எனலாம். அவற்றுள் அடிமைகளும் நில ஊழியர்களும் மேல்நிலைக்கு வந்தனர். ஆனால் தனி உரிமையுடைய உழவர் தாழ்ச்சியுற்றனர். நார்மானியர் படையெடுத்து வந்து இங்கிலாந்தைக் கைப்பற்றிய பிறகு, பிரஞ்சு நிலமானியப் படைமுறை வழக்கறிஞர்கள் அரைகுறையான ஊழிய அடிமைகளின் உரிமைகளையும் கடமைகளையும் ஆராய்ந்து, நாடுமுழுவதிலும் ஒரே சீரான முறையில் அடிமைகளின் „வாழ்க்கை ' நிலையை வரையறுத்தனர். அவர்களுக்கு

'உட்குடிகள்' (Villeinage) என்னும் புதிய பட்டத்தையும் சூட்டினார்கள். அதற்குப் பிறகு இம்முறை தெளிவாகச் சமுதாயத்தில் இடம் பெற்றது.

'ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பிரபு அல்லது தலைவன் இருக்கவேண்டும்' என்பது ஆங்கில-டேனியர் ஆட்சிக்காலத்திய சட்ட ஆட்சிமுறையின் (Rule of Law) சிறப்புமிக்க விதியாகக் கருதப்பட்டது. ஒரு மனிதன் செய்த தவற்றிற்கு, அவனுடைய பிரபுவே மன்னிப்புக் கோரவேண்டும் என்னும் முறை சட்டத்தின் மூலம் வழக்கிற்கு வந்தது. ஒன்றுபட்ட ஆங்கிலேய ஒற்றுமையை இவ்வாறுதான் நிலைநாட்ட முடியும் என்று அரசு நம்பியது. இதனால், நெடுநாட்களாக நலிவுற்றிருந்த பண்டை இனக் குழுக்களும் (Clan) உறவு முறைக் குடிகளும், (Kinship), நாடு காவல் துறையிலும், நீதித் துறையிலும் ஆற்றிய கடைமைகளை அடியோடு கைவிட வேண்டியதாயிற்று. ஒரு மனிதனின் உறவினர்கள், இனி அவன்செய்யும் குற்றத்திற்குப் பொறுப் பேற்றுக் காரணம் கூறமுடியாத காரணத்தினால்—ஒரு மனிதனின் தவற்றிற்கு அவனுடைய பிரபுவே முழுப்பொறுப்பாளியானமையால் இப்பண்டைய அமைப்புகள் அழியவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று.

தொல் பழங்காலச் சமுதாயத்தில் இனக்குழுக்கள் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியும், படைகளைப் பெருக்கியும், அவ்வப்போது போரிட்டும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உரிய வழிவகைகளை வகுத்து உதவியும் வந்தன. அவ்வரிய பணிகளைப் பிரபுவாகவுள்ள தேனரோ, தலைமைக் குருவோ தங்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட இடங்களில் இக்காலத்தில் செய்து வரலாயினர். அனைத்து இங்கிலாந்தின் புதிய அரசர்கள், தேனர்களின் குழுவினை ஓரளவிற்குத்தான் தங்கள் அதிகாரத்திற்குக் கட்டப்பட்டு நடக்குமாறு செய்ய முடிந்தது. அதுவும் நாட்டை அயலார் படையெடுப்பினின்று காப்பதற்குத்தான் தேனர்களின் உதவியைப் பெறமுடிந்தது. வட்டார விவகாரங்களுக்காக அரசர்கள் நீதி வழங்கும் உரிமையையும், நாட்டையாளும் பொறுப்பையும் தேனர்களிடத்து ஒப்படைப்பதில் மகிழ்ச்சியுற்றனர். நாட்டின் மத்திய ஆட்சி அமைப்பு நல்ல முறையில் நிறுவப்பட்டு, மாநில ஆளுநர்களையும், குறுநிலத் தலைவர்களையும் அடக்கியொடுக்கித் தனக்குப் பணிந்து திறைப் பணம் செலுத்துமாறு கட்டாயப்படுத்தமுடியாத நிலையில் இருந்தது. அதனால் இங்கிலாந்தின் அரசர்கள் அப் பொறுப்பினை மாநிலத்தலைவர்களிடத்தும், மாவட்டத் தலைவர்க

ளிடத்தும், கோட்டங்களின் தலைவர்களிடத்தும் ஒப்படைத்தனர். நார்மானியரின் வெற்றிக்குப் பிறகுதான் பிளான்டாஜெனட்டு மரபைச் சார்ந்த அரசர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆட்சி முறை அதிகாரத்தைச் செலுத்தவும், முறைமன்றங்களின் நடைமுறைகளைத் தங்கள் அதிகாரத்திற்குட்பட்டதாகச் செய்யவும் முடிந்தது. இவர்கள் காலத்தில் இங்கிலாந்தின் நாகரிகம் பேரளவிற்கு வளர்ச்சியுற்றிருந்தமை கூட்டாட்சி முறையைச் சிறிது எளிமையும் வசதியும் உடையதாக ஆக்கியது எனலாம். இவ்வரசர்கள் காலத்தில்தான் தற்காலக் கோட்பாடாகிய தேசிய இனமும் (Nation) நாட்டின் ஆட்சி இயந்திரமும் (Machinery of the State) தோன்றியது.

சாக்சானியரின் ஆட்சிக்காலத்தில் நிலமானியப் படைமுறையின் அதிகாரம் வளர்ச்சியுற்றது. அத்துடன் அரசபதவியும் நெருங்கிய தொடர்புடையதாக வளரலாயிற்று. நார்மானியரின் வெற்றிக்குப் பிறகுதான் அரசுக்கும், நிலமானியப் படைமுறையின் அடிப்படை நோக்கங்களுக்கும் இடையே போராட்டம் உண்டாயிற்று. வெஸ்ஸக்ஸின் அரசர் அனைத்து இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டிக்கொண்டார். அப்பொழுதுதான் அரசினுடைய மதிப்புப் பேரளவிற்குப் பெருகியது. இவ்வாறு நாட்டின் பரப்பு மிகப் பெரியதாயிற்று. அதனால் மைய அரசிடத்து அதிகாரங்களைக் குவித்து வைத்துக்கொள்ளாது, மாவட்ட அரசியல் அமைப்புகளிடத்து அதிகாரத்தைப் பரவலாக வழங்கவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. நாட்டு ஆட்சி அமைப்பின் முக்கிய உறுப்பாகக் கோட்டங்கள் விளங்கின. எளிதில் கண்காணிக்கக்கூடிய அளவினதாகப் பண்டை வெஸ்ஸக்ஸ் அரசு இருந்தவரை, ஒவ்வொரு கோட்டமும் ஒவ்வொரு பெருமகனின் (Magnates) பொறுப்பில் அரசர் விட்டிருந்தார். ஆனல் இங்கிலாந்தின் அரசு விரிவடைந்த பிறகு இவ்வரசியல் அமைப்பு புதிய பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டியதாயிற்று. மூத்த எட்வர்டு (Edward the Elder) காலத்திலும், அவருடைய பிள்ளைகள் காலத்திலும், கான்யூட் அரசர் காலத்திலும்கூட ஒன்றிலிருந்து பத்திற்குட்பட்ட கோட்டங்களுக்கு ஆற்றல் மிக்க குடிமக்களைக் கோமான் (Earls) களாக அமர்த்துவதில் அரசர்கள் மகிழ்சியுற்றனர்.[1]

இங்கிலாந்து, பல சிற்றரசுகளும் சேர்ந்து ஒன்றுபட்ட இங்கிலாந்தாக—ஐக்கிய இங்கிலாந்தாக (United England)

[1]கோட்டங்களின் குழுக்களைக் கோமான்கள் ஆட்சி புரிந்தனர். கோமான்களின்கீழ் ஒவ்வொரு கோட்டத்தையும் கோட்ட நிர்வாகிகள்

மாறியது. அவ்வாறு விரிவடைந்த இங்கிலாந்தினை நான்கு, ஆறு, அல்லது எட்டுப் பெரும் பிரிவுகளாகப் பிரித்தனர். ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு கோமானைத் தலைவராக அமர்த்தினர். கோமானின் ஆட்சிக்குட்பட்ட பகுதியை 'ஏர்ல்டம்ஸ்' (Earldoms) என்னும் பெயரால் குறிப்பிட்டனர். (பார்க்க: இங்கிலாந்தின் படம், எண். 9) இங்கிலாந்தின் பண்டை அரசியல் பிரிவுகளான வெஸ்ஸக்ஸ், நார்த்தம்பிரியா, மெர்சியா, கிழக்கு ஆங்கிலியா ஆகியவற்றின் பகுதிகளே, புதிய பெயர்களைக் கொண்ட பகுதிகளாகக் கோமான்களால் ஆளப்பட்டன. ஆயினும் டேனியர்கள் நிறைந்திருந்த மாவட்டங்கள், பெயரளவிற்குத்தான் வெஸ்ஸக்ஸின் ஆட்சிக் குட்பட்டிருந்தது. கோமான்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற ஆட்சியில் நிலமானியப் படைமுறை அமைப்பினையுடையதாக இருந்தது. இத்தகைய விரிந்து செல்லும் பிரிவினை மனப்பான்மையை வெற்றி வீரர் வில்லியம் இங்கிலாந்தில் அடியோடு ஒழித்துக்கட்டினார். இம்முறை இடைக்கால ஜெர்மனியில் பல நூற்றாண்டுகள் தொடர்ந்து இருந்து வந்தமையால், ஜெர்மனியில் பல சிற்றரசுகள் தோன்றுவதற்குக் காரணமாயிற்று. அதைப்போன்றே பிரான்சில் நிலமானியப் படைமுறையால் மாநிலங்கள் பல தோன்றின.

புதிதாக அமைக்கப்பட்ட ஆங்கில-டேனிஷ் அரசில் அரசியல் நிலமானியப் படைமுறை இவ்வாறு வெற்றியடைந்தது. சமூக முறை மன்றங்களும், பொது முறை மன்றங்களும் தங்கள் செல்வாக்கினை இழந்தன. அவற்றின் அதிகாரத்தினை அரசியல் நிலமானியப்படை முறை கைப்பற்றியதோடு, நீதி நிர்வாகத்தையும் கவனிக்கத் தொடங்கியது.

---

நிர்வகித்து வந்தனர். 'கோட்ட நிர்வாகி' (Shire-reeve) 'ஷையர்ரீவ்' என்று அழைக்கப்பட்டனர். அவர் இருதிறப் பணிபுரிந்து வந்தார். அவர் அரசனுடைய விருப்பத்தை நிறைவேற்றும் அதிகாரியாகவும், சிற்சில செயல்களில் கோமனின் அதிகாரியாகவும், பிரதிநிதியாகவும் பணிபுரிந்தார். (W. A. Morris in E.H.R., 1916) நார்மானியரின் கைப்பற்றுதலுக்குப் பிறகு, மிகச் சில கோட்டங்களைத் தவிர மற்றவற்றில் கோமானின் ஆட்சி தானாகவே மறைந்தது. பாதிரிமார்கள், ஆன்மீகத் தொடர்பான வழக்குகளைப் புதிய திருச்சபை முறைமன்றங்களில் விசாரணை செய்யும் அளவோடு ஓய்வுபெற்றார். எனவே, கோட்டங்களை அரசரின் சார்பில் ஆளும் தன்னிகரற்ற தலைவராக ஷெரீப் (Sheriff) விளங்கினார். அவர் அரசருடைய ஆணைகளைமட்டும் செயற்படுத்தும் அதிகாரியாகப் பயன்படுத்தப்பட்டார். சாக்சானியர்களால் 'நூறு' (Hundred) என்னும் ஆட்சிப் பிரிவினை, டேன்லா 'வேப்பன்டேக்' என்று அழைத்தது. அது கோட்டத்தின் நிலப்பரப்பில் ஓர் உட்பிரிவாகும்.

கோட்டங்களிலும், நூறுகளிலும் * இருந்த சமூக முறை மன்றங்களில், மாவட்டங்களுக்குரிய தனித்தனியான சட்ட திட்டங்களையும், பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்கப்பட்டது. டேனியர்கள் வாழ்ந்த பகுதியில் டேன்லாவும் (Danelaw), மெர்சியாவில் மெர்சியச் சட்டமும், அல்லது வெஸ்ஸக்ஸின் சட்டமும் முறை மன்றங்களில் சிறப்பிடம் பெற்றன. தனிவுரிமை மக்களின் வழக்கறிஞர்களே முறைமன்றத்தின் நீதிபதிகளாகப் பணியாற்றினர். அரசரின் சார்பில் கோமான்களும், கோட்டத் தலைவர்களும் (Shire-Reeve), நூற்றின் தலைவர்களும் (Hundred-Reeve), முறை மன்றங்களில் தலைமைதாங்கி வழக்குகளை விசாரித்தனர். இங்கிலாந்து முழுவதிற்கும் உரிய பொதுச்சட்டமும் (Common-law) அரசரின் நீதிபதிகள் மன்றமும் (Courts of King's Bench), பொதுமக்கள் வாதமும் (Common Pleas), குறிப்பிட்ட காலத்தில் கூடும் முறைமன்றங்களும் (Court of Assize), அதன் நீதிபதிகளும் இக் காலம் வரை தோன்றவில்லை. மேற்கண்ட நாட்டுப்புறச் சமூக முறை மன்றங்கள் அனைத்தும் அரசின் முறை மன்றங்களாகவும், நாட்டின் முறை மன்றங்களாகவும் இருந்தன. இவ்வாறு அரசனுக்கும் நாட்டுமக்களுக்கும் பொதுவாகவே முறை மன்றங்கள் அக்காலத்தில் இருந்து வந்தன. அரசுக்கு எனத் தனி முறை மன்றமும், மக்களுக்கெனத் தனி முறை மன்றமும் இக்காலம் வரை தோன்றாமை இங்குக் கருதத்தக்கதாகும்.

ஆனால், அதே காலத்தில் நிலமானியப் படைமுறைக்குரிய நீதியியல், சமூக முறை மன்ற உரிமைகளின் மீதும் அதிகாரம் செலுத்தத் தொடங்கியது. எட்வர்டு அரசர் கால முதல், அரசினுடைய உரிமைகள் ஓயாது நிலமானியப் படைமுறைப் பெருமக்களுக்கும், மடாலயங்களுக்கும் உரியதாக மாற்றப் பட்டு வந்தன. சிறப்பாக நூற்றின் முறை மன்றங்களுக்கு (Hundred Courts) இருந்து வந்த அதிகாரமும், ஆட்சி வரம்புகளும் இடைவிடாது மாற்றப்பட்டன. துறவிகளின் அல்லது பாதிரிமார்களின், கோமான்களின் அல்லது தேனர்களின் நேரடியான நீதி நிர்வாகத்திற்கு மாவட்டங்கள் முழுவதும் விடப்

* நூறு (Hundred) என்பது ஆங்கில-சாக்சானியரால் உள் நாட்டு ஆட்சி முறைக்காக உண்டாக்கப்பட்ட ஒருவகை நாட்டுப்பிரிவின் பெயராகும். கோட்டம் (Shire) என்னும் பெரிய பிரிவிற்கும், பட்டணம் என்னும் சிறிய பிரிவிற்கும் இடைபட்டதே நூறு என்னும் பிரிவாகும். நூற்றினுள் உள்ள சிறு உட்பிரிவுகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இப்பிரிவிற்கு 'நூறு' என்னும் இப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம்.

பட்டன. அதற்காக அவர்களுக்கு உதவித் தொகையாக 'முறை மன்றத்தை நிர்வகிக்கும் உரிமைத் தொகை' (Sac and Soc) என்பதையும், ஒருவர் நிலத்தில் திருடிய திருடனைத் தூக்கிலிடுவதற்குப் பெறும் உரிமைக்குத் தொகை (Infangthef) என்பதையும், வீட்டிற் புகுந்து கொள்ளையடித்தவரைத் தண்டிப்பதற்குப் பெறும் உரிமைக்குத் தொகை (Hamsocne) என்பதையும் அரசு அவர்களுக்கு வழங்கியது. தமது நாட்டிலுள்ள நிலக்கிழார்களுள் யாரிடத்து அரசர்கள் அதிகப் பற்று அல்லது அச்சம் கொண்டிருந்தார்களோ, அவர்களுக்கு நீதி நிர்வாகத்தின் அதிகாரத்தையும் அதனல் கிடைத்து வந்த வருவாயாகிய மதிப்பு மிகுந்த கட்டணங்களையும், தண்டப்பணத்தையும் (Fees and Fines) அளித்து வந்தார்கள்.

இக்காலத்தில் தனி மனிதனுக்குரிய நீதி, அதன் வரம்பு கடந்து பொது நீதியின் மீது ஆட்சி செலுத்தத் தொடங்கியது. இது முன்னேற்றத்தின் அறிகுறியா, அல்லது அதனை எதிர்க்கும் செயலா, என்பது புலனாகவில்லை. அரசர்கள் பொது முறை மன்றங்களின் மூலம் பொது மக்களுக்குரிய நீதியை வழங்குவதற்குப் போதிய ஆற்றலில்லாமல் இருந்தமை வருந்தத் தக்கதாகும். ஆனல், உண்மையில் அரசன் ஆற்றலற்றவனாகவே இருந்தான். எனவே எப்படியாகிலும் யாராவது ஒருவர் நீதி வழங்குவதே நலம் பயப்பதாயிற்று. இல்லை என்ருல் திருடுதல், கொலை செய்தல், நிரைகவர்தல் முதலிய குற்றங்களைச் செய்தோர் தண்டனையிடுவாரின்றித் தான்தோன்றிகளாகப் பெருகிவிடுவர் என்னும் அச்சம் அரசுக்கு இருந்ததாகத் தெரிகிறது. இத்தகைய மாற்றங்கள் செய்யப்பட்ட காலத்தில் அது மக்களால் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டதில் வியப்பில்லை. நெடுந்தொலைவிலுள்ள அரசனிடமிருந்தும் அல்லது ஆற்றலற்ற அவருடைய பிரதிநிதியிடமிருந்தும் தங்களுடைய வழக்குகளின் தீர்ப்பினைக் காலம் தாழ்த்திப் பெறுவதைவிட, நாட்டு மக்கள் தங்கள் அருகிலுள்ள ஆற்றல் மிக்க பிரபுவிடமிருந்தோ, மடாலயத்தலைவரிடமிருந்தோ சிறந்த முறையில், காலதாமதமின்றி நீதி வழங்கப்படுவதையே பெரிதும் விரும்பினர். ஆனல், நெடுங்காலத்திற்குப் பிறகு வாழும் நாம், இந் நீதி நிர்வாகப் பொறுப்பை அரசரிடமிருந்து ஏற்றுக்கொண்ட பெருமக்களும், மடாலயத் தலைவர்களும், அவ்வரும் பணியினை ஆற்றுவதற்கேற்ற தகுதியும் திறமையும் உடையவர்களாக இருந்திருப்பார்களா என்பதைப் பற்றி உறுதியாகக் கூறுவதற்கில்லை. மிகச் சிறந்தவர்களுக்குத்தான் அவ்வுரிமைகள் அளிக்கப் பட்டிருக்கும் என்று கருதவும் இயலாது. பொறாமைப்படத்தக்க அச்சிறப்புரிமைகள் ஆற்றல்

மிக்கவர்களிடத்தும், வஞ்சனையும் சூழ்ச்சியும் நிறைந்த நய வஞ்சகர்களிடத்துமே ஒப்படைக்கப்பட்டிருக்குமாதலால், அதைக் கண்டு நாம் வியப்படைய வேண்டியதில்லை. ஆங்கில டேனிஷ் அரசர்கள் பிரபுக்களுக்கும், மடாலயத் தலைவர்களுக்கும் வழங்கியிருந்த நீதி நிர்வாக உரிமைகளை, மீண்டும் அரசினுடைய தனியுரிமையாக்கிய பெருமையும், பொது மக்களுடைய நீதியைப் பொதுமக்களிடமே திருப்பிக்கொடுத்த சிறப்பும் நார்மானிய, பிளாண்டா ஜெணட் அரசர்களையே சாரும். அரசு இழந்துவிட்டிருந்த அவ்வுரிமைகளைத் திரும்பப் பெறுவதற்காக அவர்கள் ஆட்சி முறை அமைப்புகளை மெல்ல மெல்ல அதற்கேற்ற வண்ணம் மாற்றி, இறுதியில் வெற்றியும் பெற்றனர். இங்கிலாந்தில் அரசருடைய பெயரும், அலுவலகமும் பெரும் புகழ் வாய்ந்ததாக விளங்கி வருவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், டேனிஷ் மக்கள் இங்கிலாந்தின் மீது இடையறாது படையெடுத்துவந்தனர். அவர்களுடைய படையெடுப்புகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இங்கிலாந்தின் சமய வரலாற்றில் மிக முக்கியமான நெருக்கடி ஒன்று உண்டாயிற்று. ஆல்பிரட்டு அரசரின் ஆட்சிக் காலத்தில் டேனிஷ் மக்கள் படையெடுத்து வந்தனர். கிறிஸ்துவ சமய ஆர்வமும் கல்வியும் ஆகிய இரண்டிற்கும் நிலைக்களனாக விளங்கிய மடாலயங்கள் பேரழிவுக்குள்ளாயின. அதனால் திருக்கூட்டங்களின் பணியும், குருமார்களின் வாழ்க்கையும் நலிவுற்றன. பீடு (Bede) தன் காலத்திய நிகழ்ச்சிகளை நன்குணர்ந்திருந்தமையால், தன்னுடைய காலவழிச்செய்திக் கோவையில் அவற்றை வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளார். பென்லாந்திலும், நார்த்தம்பிரியாவிலும் இருந்த மடாலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. அதனால் தேம்ஸ் ஆற்றுக்கு வடக்கே கிறிஸ்துவ சமயத்தின் செல்வாக்கு குன்றியது. மேலும் பல மாவட்டங்களில் மீண்டும் பழைய பழங்குடி மக்களின் புறச்சமயங்கள் தலை தூக்கலாயின. வெஸ்ஸக்ஸில் வாழ்ந்த குருமார்களிடத்துக்கூடசமயவுணர்வும் கல்வியறிவும் குன்றத் தொடங்கியது. ஆல்பிரட்டு அரசர் கல்வியையும், சமயத்தையும் மக்களிடைப் பேரளவில் பரப்புவதற்குப் பெரு முயற்சிகள் செய்தார். அவர் அவ்வாறு பல வகையில் ஆக்கமும் ஊக்கமும் அளித்த பின்னரே, அவை மீண்டும் தழைக்கத்தொடங்கின. முக்கியமாகக் கிறிஸ்துவ சமயத்தைச் சார்ந்த பொது மக்களும், வெஸ்ஸக்ஸ் குடியைச் சார்ந்த சுறு சுறுப்பான அரசர்களும், அவர்களுடைய தேனர்களும் சேர்ந்து செய்த முயற்சியினால் டேன்லா மீண்டும் கைப்

பற்றப்பட்டது; டேனியர் ஓரளவிற்குக் கிறிஸ்துவராக மாற்றப் பட்டனர். ஆல்பிரட்டு அரசரும், எட்வர்டு மன்னரும், எத்தல்ஸ்டன் அரசரும் மதகுருமார்களின் அறிவுரையை நாடியதைப் போன்று, அவர்களுக்கு முன்பிருந்த மன்னர்களோ, பின்னால் தோன்றிய அரசர்களோ இருந்ததில்லை என்று கூறுவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

துறவறநெறியின் தேவைகளை மனித இயற்கை, பால் கவர்ச்சியின் மூலம் பழி தீர்த்துக்கொண்டு வருவதைக் காணலாம். பத்தாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் மடாலயங்கள் தவறான ஒழுக்க முடையனவாகவே இருந்துவந்தன. திருமணம் செய்து கொண்டு சொகுசு மிக்க மாளிகைகளில் இன்பக்களியாட்டத்தில் ஈடுபட்டிருந்த கோயில் குருமார்களால், மடாலயத் துறவு நெறி என்பது அதன் உண்மைப் பொருளில் ஓரளவு கூட அக்காலத்தில் உயிருடன் இருந்ததாகத் தெரியவில்லை. இங்கிலாந்து மக்களிடையே அது செல்வாக்கற்றதாகப் போயிற்று. மடாலய மறுமலர்ச்சியும்-புத்துயிர்ப்பும் உண்டாகாமல் போயிருந்தால், நாட்டுப்புறத் திருச்சபைகளும், குருமார்களும் தோன்றுவதற்குரிய புதியதொரு இயக்கம் இடைக்காலத்தில் உண்டாகியிருக்க முடியுமா என்று சிலர் வினவுகின்றனர். இவ்வினா வாத விவாதங்களுக்கும், உய்த்துணர்வுகளுக்கும் உரியதாகும். ஆனால் வரலாறு முயன்று விடைதரக் கூடிய வினாவன்று இது.

நாளடைவில் மடாலயத் துறவுநெறி புத்துயிர்ப்புற்று, புது வாழ்வு பெற்றது. பிரஞ்சு நாட்டில், குளூனி (Cluny) யிலும், பூளூரியிலும் (Fleury) இருந்த மடாலயங்களிலிருந்து புதியதொரு ஆற்றலும், ஆர்வமும் இங்கிலாந்திற்கு வந்து சேர்ந்தது. மாண்பு மிக்க பெனிடிக்டின் ஆட்சியின் பல்வேறு கிளைகளுள், இக் குளூனி இயக்கமும் ஒன்றாகும். இத்தகைய புத்துணர்ச்சியால் தூண்டப்பெற்ற சில பாதிரிமார்களும், சில மடாலயத் தலைவர்களும் மடங்களைச் சீர்திருத்த முன்வந்தனர். அவர்களுள் டண்ஸ்டன் (Dunstan) என்பவர் பேராற்றலும் பெருந்திறமையுமுடையவராக விளங்கினர். அவர் பயன் தரத்தக்க சீர்திருத்தங்கள் பலவற்றை மடாலயங்களில் செய்யத்தொடங்கினர். அவர் மிகவும் பொறுமைப் பண்பு இல்லாதவர் என்று சிலர் குறைகூறுவர். ஆனால், அது முழு உண்மையாகாது. ஆங்கிலக் கன்னி மாடங்களில் (Convents) அவர் மீண்டும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டியதோடு, துறவற வாழ்வினைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறு செய்தார். அவருடைய சீர்திருத்தப்பணி சில சமயங்களில் குழப்பத்தையும், கொந்தளிப்பையும் நாட்டிலே உண்

டாக்கிது. ஆயினும், அவர் கொண்ட குறிக்கோளினை நிறை வேற்றுவதில் உறுதியாகப் பணிபுரிந்தார். அதே சமயத்தில் அரசர் எட்கரும் (கி.பி. 950–75), அவருக்குப் பின் அரசுக்கு வந்தவர்களும் பென்லாந்திலுள்ள ஏளே (Ely) யிலும், பீட்டர் பரோவிலும் இருந்த மடாலயங்களை மீண்டும் கட்டினர். அவற் றிற்கு அறக்கட்டளைகளை வழங்கினர். மக்களுடைய வேண்டு கோளுக்கு இணங்கியே அவர்கள் இச் செயல்களைச் செய்தனர். மேலும், நாட்டின் பல பகுதிகளிலும் தோன்றியிருந்த புதிய இயக்கத்தைச் சார்ந்த துறவிகளுக்கு, அவர்களைச் சூழ்ந்திருக் கின்ற மக்களை ஆளுவதற்குரிய பரந்த நாட்டாட்சி அதிகாரத் தையும், நீதி நிர்வாகத் துறை அதிகாரத்தையும் அளித்துதவு மாறு அரசர்களைப் பிரபுக்கள் வேண்டிக்கொண்டனர்.[1]

இப்புதிய தூண்டுதலினால் ஏழாம் கிரிகோரி போப்பு ஆண்ட வராக (1073-1085) இருந்த காலத்தில், இங்கிலாந்தின் சமயம் திருச் சபைகளின் புதிய உரிமைகளை நோக்கி முன்னேறியது. இங்கிலாந்தைக் கைப்பற்றிய நார்மானியர்கள் இப் போப்பு ஆண்டவரின் குறிக்கோள்களைப் பேரளவிற்கு இங்கிலாந்தின் மீது சுமத்தினர். இறுதியாக இவ்வியக்கம் சிற்றூர்களின் குருமார்கள்கூடத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று வற்புறுத்தியது; போப்பு ஆண்டவரின் தலைமையின்கீழ் திருச் சபையினை அனைத்துலக அமைப்பாக மாற்றியது. இவ்வியக்கம் பொருள் மாற்றக் (Transubstantiation) கோட்பாட்டினை முழு வளர்ச்சியுறச் செய்தது. கன்னிமேரி வழிபாட்டிற்கு முக்கியத் துவம் அளிக்கத் தொடங்கியது. இவ்வாறு இடைக்கால சமய இயக்கத்திற்குரிய வேறு பல பண்புகளும் இக்காலத்தில் வளர்ச்சியுற்றன. பல நூற்றுண்டுகளுக்குச் சமயக் கருத்து களையும், பழக்க வழக்கங்களையும் வளர்க்கும் வளர்ப்புப் பண்ணை களாக மடாலயங்கள் இருந்து வந்தன. நிலமானியப் படை முறைக் காலத்திய இங்கிலாந்தின், பொருளாதார, சமூக வாழ்வில் மடாலயங்கள் சிறப்பிடத்தைப் பெற்றன.

[1] பென்லாந்திலிருந்த மடாலயங்கள், அச் சதுப்பு நிலப்பகுதியிலுள்ள நீரினை வடிப்பதற்கும், அதன் பிறகு அங்குக் குடியேற்றங்கள் அமைப்ப தற்கும் பேருதவி புரிந்தன. முறை மன்றத்தை (Sac and Soc) நிர்வகிப்ப தற்கு வழங்கப்பட்ட உதவித் தொகை பெரிதும் நீதித் துறைக்குரிய மானியமாகத் தோன்றினும், அது பிரதேச நிலமானியப் படைமுறை யோடு நெருங்கிய தொடர்புடையது என்பதை நாம் மறத்தலாகாது. நில மானியப் படைமுறைப் பிரபுக்களும் குருமார்களும், காட்டு நிலத்தை மீட்டு நாடாக்கி, அதில் குடியிருப்புகளை அமைப்பதற்கும் இவ்வுதவித் தொகையை அளித்து வந்தனர் என்பது இங்கு நினைவுகூரத் தக்க தாகும்.

டன்ஸ்டன் (Dunstan) சிறு பையனாக (கி.பி. 924-988) இருந்த பொழுது, யாருமே மடாலயங்களுக்கு நல்லதொரு எதிர்காலம் வரப்போவதை எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. கிளாஸ்டன்பரி மடாலயத்தின் தலைவராக டன்ஸ்டன் இளைஞராக இருந்தபொழுது பதவியேற்றார். அதுமுதல் மடாலயங்களைச் சீர்திருத்திச் சிறப்புற்று விளங்குமாறு செய்வதற்கு அரும்பாடு பட்டார். அரசு அவரைத் தலைமைக் குருவாக அமர்த்தியது. அதன் பிறகு, மடாலயச் சீர்திருத்த இயக்கத்தில் கலந்து கொண்டு பணியாற்றுவதை அவர் குறைத்துக்கொண்டார். இம் மடாலய சீர்திருத்த வழக்கிலும் வேறுபல நிகழ்ச்சிகளிலும் அவர் பொறுமையற்றவராக நடந்துகொண்டதைப்பற்றி எண்ணற்ற கதைகள் சொல்லப்படுகின்றன. அக்கதைகளே டன்ஸ்டனை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவராக விளங்குமாறு செய்தது என்பர். ஆனால் உண்மை அ∴தன்று. டன்ஸ்டன், சாமர் செட்டைச் சேர்ந்த தேனர் ஒருவரின் மகனவார். அவரிடத்து எளிதில் கிளர்ச்சியூட்டும் கெல்ட்டிக்கு மக்களின் சமய மனப் பான்மை இயல்பாகவே அமைந்திருந்தது. அத்துடன் அரசியல் விரகருக்குரிய அமைதியும், நேர்மையாகத் தீர்ப்பு வழங்கும் திறமையும் அவரிடத்தில் நன் முறையில் அமைந்திருந்தன. அரசனுக்கு அறிவுரை கூறுவோருள் பல்லாண்டுகள் தொடர்ந்து செல்வாக்கு உடையவராக டன்ஸ்டன் இருந்து வந்தார். அரசவையில் அவருக்கு இருந்து வந்த ஆதிக்கம் திருச்சபையின் புது வாழ்விற்குச் சிறந்ததொரு அறிகுறியாகத் தோன்றியது. அச் செல்வாக்கினைப் பயன்படுத்தித் திருச்சபையின் புத்துயிர்ப் புக்காக அவர்செய்த செயல்களனைத்தும் நேர்மையானவையாகக் கருதப்படுகின்றன. எதல்ரெட்டு (Ethelred) என்னும் அரசர் டன்ஸ்டனின் அறிவுரையையும், அறவுரையையும் ஏற்றுச் செயலாற்றாது தன் மனப்போக்கிற்கிணங்க ஆட்சிப்புரியத் தொடங்கினர். அதனல் அரசிற்கு எண்ணற்ற இன்னல்களும், இடுக்கண்களும் உண்டாயிற்று.

புதிய நிலமானியப் படைமுறை, அதனுடைய வளர்ச்சிக் குரிய செயல்களில் பொது மக்களைவிட, குருமார்களுக்குத் தனி மதிப்பு இருப்பதாகக் கருதவில்லை. தேனர்களும், தலைமைக் குருமார்களும் அரசனுடைய நிலங்களைத் தங்களுடைய உடைமையாகப் பெற்றிருந்த பிரபுக்களாவர். அவர்களுக்கிடையே சிறப்பு மிக்க வேற்றுமைகள் இருப்பதாக நிலமானியப் படைமுறை பாராட்டவில்லை. அவர்கள் அரசனுக்குப் போர்க் காலத்திலும், அமைதிக்காலத்திலும் பணிபுரியக் கடமைப்பட்டவர்களாகவே இக்காலத்தில் கருதப்பட்டனர். துறவற வாழ்வுச்

சமயநெறி, மலர்ச்சியுற்றதன் பயனாகப் பக்திநெறி மேலோங்கத் தொடங்கியது. உலகில் புதிதாகத் துறவு மேற்கொண்ட உறுதி மொழி கூறிய துறவிகளுக்கு நிலங்களையும், அதிகார வரம்பினை யும், செல்வத்தையும் கொடையாக அளிப்பது அக்காலத்திய நாண்மரபு வழக்கமாக இருந்தது. நார்மானியரின் படையெடுப் பின் பொழுது, ஓர்செஸ்டர், வில்ட்ஸ் (Wilts), டார்செட்டு போன்ற கோட்டங்களில், பிரபுகளுக்கும், மாவீரர்களுக்கும் எவ்வ ளவு நிலங்கள் இருந்தனவோ அதை விட அதிகமாகவே திருச் சபைகளுக்கு நிலங்கள் இருந்ததாகத் தெரிகிறது. தங்களுக்குரிய தாகக் கருதிய நிலங்கள் அனைத்திற்கும் குருமார்கள் பொய்ப் பட்டயங்களைத் தயாரித்து, பிரபுக்களையும் மற்றவர்களையும் ஏமாற்றி வந்தனர். இவ்வாறு பொய்ப்பட்டயங்களைக் குருமார் கள் தயாரிப்பது அக்காலத்தில் பெரு வழக்காக இருந்தது. குருமார்கள் மேற்கொண்ட இம்முறைக்குப் 'பண்ணை வளைத்தல்' (Esfae Jumping) என்பது பெயராகும்.

திருச்சபையினரின் பணித்துறை ஆட்சி வரம்பினையும், உலகியலில் அவர்கள் தலையிட்டு வந்ததையும் அக்காலத்திய மக்கள் வெறுக்கவில்லை. ஆனால், அவை பிற்காலத்தில் உண்டாகப் போகும் பெருங்கேடுகளுக்கு வித்திட்டன என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. ஆயினும் இடைக்காலத்தின் பிற் பகுதியில் கட்டடக் கலை சிறப்புற்று விளங்குவதற்கு மடங்களே காரணமாக இருந்தன. மடங்களுக்கு வழங்கப்பட்ட அறக் கட்டளைகளைக் கொண்டு, மடங்கள் மாபெருங் கோபுரங்களை யுடைய கோயில்களையும், மன்றங்களையும், மாளிகைகளையும் மடாதிபதிகள் கட்டினர். இக்காலத்தில்தான் ஒவ்வொரு ஊரிலும் திருச்சபைகள் தோன்றின. நாட்டிக்கு இனப்பண்பு களை கண்ணுக்குத்தெரியாத வண்ணம் கிறிஸ்துவ சமயம் மாற்றி யும் திருத்தியும் பண்படுத்திக் கொண்டிருந்தது. கொடுமை வாய்ந்த நிலமானியப் படை முறை ஆட்சிக்காலத்தில் திருச்சபை தம்முடைய இலட்சியங்களுக்கு முற்றிலும் மாறாக அமைந்த நிலமானியப் படை முறை அதிகாரத்தைக் கைப்பற்றாமல் இருந்தி ருந்தால், திருச்சபை நிலைத்து இருக்க முடியுமா என்று ஐயுறவாளர்கள் வியப்புறலாம்.

பத்தாம் நூற்றாண்டில் பெரிதும் வைக்கிங்குகளின் படை யெடுப்புகள் இயக்கம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. பால்டிக் நாடுகளிலிருந்து வைக்கிங்குகள் குடியேறுவது நின்று விட்டது. தங்கள் மூதாதையர் மழுவினைக் கொண்டு கைப்பற்றிய நாடுகளில், ஸ்காண்டிநேவியக் குடியேறிகள் நகரங்களையும்,

பண்ணைகளையும், பல்வேறு நிலையங்களையும் அமைப்பதில் தங்கள் நேரத்தையும், ஆற்றலையும் பயன்படுத்தி வந்தனர். இவ்வாறு அயலார் படையெடுப்பு சிறிது காலத்திற்கு ஓய்ந்திருந்தமையால்தான், ஆல்பிரட்டின் மக்கள் பெயரளவிற்கேனும் அதனுடைய ஸ்கான்டிநேவியப் பண்பிற்கு ஊறு உண்டாகாது, டேன்லாவை மீண்டும் கைப்பற்ற முடிந்தது. எட்கரும், டண்ஸ்டனும் வாழ்ந்த குறுகிய காலத்தினைத் தொடர்ந்து, இங்கிலாந்து அமைதியும் செழிப்பும் மிக்க வளநாடாக விளங்கிற்று. அடுத்து ஆட்சிக்குவந்த திறமையற்றவரும், அறிவுரையை ஏற்க மறுத்தவருமாகிய எதல்ரெட்டின் ஆட்சியில் (கி. பி. 978—1016) மீண்டும் ஒரு முறை இங்கிலாந்தின் அரசியலில் புயல் வீசத் தொடங்கியது.

டென்மார்க்கின் மன்னரான சுவேயன் போர்க்கு பியர்டு (Sweyn Fork beard) என்பவர் தலைமையின் கீழ், வைக்கிங்குகள் மீண்டும் இங்கிலாந்தைத் தாக்கத் தொடங்கினர். இம்முறை அவர்கள் தெற்கு இங்கிலாந்தினைக் குறிவைத்துத் தாக்கினர். அப்பொழுது ஸ்கான்டிநேவியரின் ஆட்சிக்குட்பட்டிருந்த நார்மண்டியையும், ஆங்கில டேன்லாவையும் (988) விட்டு விட்டு மற்றப் பகுதிகளை வைக்கிங்குகள் ஓயாது தாக்கிப் போர் புரிந்தனர். அதே சமயத்தில் யார்க்ஷையரிலும், கிழக்கு ஆங்கிலியாவிலும் இருந்த அவர்களுடைய பங்காளிகள், வைக்கிங்குகளைக் குறுக்கிட்டுத் தடுக்கவும் இல்லை; வெஸ்ஸக்ஸை ஆண்ட ஆங்கில-சாக்சானிய அரசருக்கு வைக்கிங்குகளின் தாக்குதலை எதிர்க்க உதவியும் செய்யவில்லை. இதுவரை இங்கிலாந்தில் சாக்சானிய இனத்திற்கும், டேனிய இனத்திற்கும் இடையே இனக்கலப்பும் உண்டாகாமல் இருந்துவந்தது. இதனால் இங்கிலாந்தில் தோன்றிய புதிய அரசின் குறைபாடுகள் பகைவருக்கு எளிதில் தெரிய நேர்ந்தது. டேன்லாவை, 'பழைய ஆங்கில தேசிய இனம்' என்னும் கப்பல் மோதி உடைவதற்குக் காரணமாக இருந்த பாறை' எனக் கூறுவது மரபு. எதல்ரெட்டு உண்மையில் அறிவும், ஆற்றலுமற்ற அரசராவர். அவருடைய ஆட்சி நெடுங்காலம் பயனற்றதாக நடைபெற்றது. டேனிஷ்காரர்கள் மீண்டும் புதிதாகத் தொடர்ந்து படையெடுப்பதற்கு முன்பு இங்கிலாந்து அழிவுற்றது. அதற்கு எதிர்பாராத சில நிகழ்ச்சிகளைக் காரணங்களாகவும், தனி மனிதரின் குறைபாடுகளால் உண்டான தவறுகளைக் காரணங்களாகவும் கூறுவதை விட வேறு முக்கிய காரணங்களும் இருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

கான்யூட்டு (988-1016) அரசுகட்டில் ஏறுவதற்கு முன்பு நெடுங்காலம் நடைபெற்ற போர்களில் குறிப்பிடத்தக்க இரு வகைச் சிறப்பியல்புகள் காணப்படுகிறன. 'டேனி கெல்டு' (Danegeld) என்னும் திறைப்பொருளும், லண்டன் மாநகரம் இங்கிலாந்தின் வரலாற்றினை உருவாக்குவதில் கொண்ட பங்கும் குறிப்பிடத்தக்க அச் சிறப்பியல்புகளாகும்.

ஆல்பிரட்டின் ஆட்சிக் காலத்தில் 'டேனிகெல்டு' வரி விதிக்கப்பட்டும் தண்டப்பட்டும் வந்தது. ஆனல் அத் தொடக்க காலத்தில் டேனியர் நேரடியாக மக்களையும், நாடு நகரங்களையும் கொள்ளையடித்துப் பெருஞ் செல்வத்தைக் கவர்ந்து செல்வதையே பெரிதும் விரும்பினர். இப்பொழுது இருதிறத்தாரும் மிக்க நாகரிகம் அடைந்து விட்டனர். பிற்காலத்திய வைக்கிங்குகள் ஒவ்வொரு ஊரிலுள்ள மக்கள் அனைவரும் சேர்ந்து மொத்தமாக மீட்புப் பணத்தைப் 'பொன்னுகை'க் கொடுக்குமாறு வற்புறுத்தினர். ஆல்பிரட்டின் ஆட்சிக் காலத்தில் டேனிஷ் கொள்ளைக் கூட்டத்தினர் பண்ணைகளையும் குடியிருப்புகளையும் கைப்பற்றியதைப் போன்று, பிற்காலத்தில் அதைப் பின்பற்றவில்லை. மீட்புப் பணத்தை மட்டும் அவர்கள் பெற்றுச் சென்றனர். வெற்றியாளர்கள் பலர் 'டேனி கெல்டு' திறைப் பொருளைப் பெற்றுக் கொள்ளுவதோடு மன நிறைவு அடைந்தனர். அவ்வாறு பெற்ற செல்வத்தை அவர்கள் ஸ்காண்டிநேவியாவிலுள்ள தங்கள் பண்ணைகளுக்கும் வீடுகளுக்கும் கொண்டு சென்று செலவழித்தனர். பிற்காலத்தில் நார்மானிய, பிளாண்டா ஜெனட் அரசர்களின் கருவூலத்தை நிறைத்த வரிகளால் பெற்ற பொருளைக் காட்டிலும், 'டேனிகெல்டு' திறைப் பொருள் மிகப் பெருந் தொகையாகத் தண்டப்பட்டதைக் கண்டு வரலாற்றாசிரியர்கள் வியப்புறுகின்றனர். அத்திறைப் பொருள் நிலத்தின் வருவாய் மதிப்பின் மீது விதிக்கக் கூடிய வரி வீதத்தைக் காட்டிலும், பன்மடங்கு அதிகமாக இருந்தது. பத்தாம் நூற்றாண்டு முழுவதும் இங்கிலாந்தில் நிலவிய அமைதி தேனர்களையும், திருச் சபையினரையும் பெருஞ் செல்வத்தைச் சேகரிக்கவும், பலதிறப்பட்ட தனிச் சொத்துக்களை அளவுகடந்து பெறுவதற்கும் உதவியாக இருந்தது. ஆங்கிலப் பொற்கொல்லர் செய்து தந்த பேரழகு வாய்ந்த பொன்னுபரணங்களும், அணிகலன்களும், வெள்ளியால் செய்யப்பட்ட தட்டுமுட்டுச் சாமான்களும், வேறு பிற பொருள்களும் அவர்களுடைய கருவூலத்தில் நிறைந்து கிடந்தன. மறுமலர்ச்சி இயக்கக் காலத்திய இங்கிலாந்தில் சேமிக்கப்பட்ட தாம்பாளங்களும், அணிகலன்களும், சார்லசும், கிராம்வெல்லும் நடத்திய போர்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதைப் போன்று

இப்பொழுது டேனிஷ் மக்களின் உருக்குலையில் தேனர்களும், திருச்சபையினரும் சேமித்து வைத்திருந்த பொன்னாலும், வெள்ளியாலுமான பொருள்கள் சென்று குவிந்தன. இன்பக் களியாட்டங்களில் ஈடுபட்ட வைக்கிங்குகளால் ஊதாரித்தன மாகச் செலவழிக்கப்பட்டமையால், மீட்புப் பணத்தின் ஒரு பங்கு இங்கிலாந்திலேயே தங்கியது எனலாம். ஆனால், அவற்றுள் பெரும் பங்கு கடல் கடந்து, ஐரோப்பாவிலுள்ள அவர்களுடைய தாயகத்திற்குச் சென்றது.

உழவர்களைக் கசக்கிப் பிழிந்து வைக்கிங்குகள் பெருந் தொகையை மீட்புப் பணமாகப் பெற்று வந்தனர். அதனால் உழவர் களின் குடும்பங்கள் பல அழிவுறத் தொடங்கின. தனி உரிமைக் குடியானவர்கள் மீட்புப் பணம் கொடுக்க முடியாமையால், நில ஊழிய அடிமைகளாக விரைவில் மாறவேண்டிய நெருக்கடி உண் டாயிற்று. ஆயினும், நம்முடைய சமூக இயல், நீதி இயல், ஆட்சி இயல் வரலாற்றில் 'டேனி கெல்டு' மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. நம் நாட்டில் பழிக்கப்படும் இம்முறையின் மூல மாகத்தான் முதன்முதலாக 'நேர் முகவரி' (Direct Taxation) விதிப்புத் தொடங்கலாயிற்று. ஆற்றலற்ற எதெல்ரெட்டு ஆட்சிக் காலத்தில் டேனியர்களை எளிதில் விலைகொடுத்து வாங்கும் முறை யாக 'டேனி கெல்டு' இருந்து வந்தது. பேராற்றலும் பெருந் திறனும் வாய்ந்த கான்யூட்டு அரசரின் காலத்தில், 'டேனி கெல்டு' நாட்டின் தற்காப்பிற்குத் தண்டப்பட்டப் போர்க்கால வரியாக மாற்றமுற்றது. 'வெற்றிவீரர் வில்லியம்' (William the Conqueror) காலத்தில் அவ் வரிவிதிப்பு அரசாங்க வருவாய்க்குரிய முக்கிய மூலாதாரமாகச் சிறப்புற்றது. அவர் நில உடைமைகளைப் பற்றிய வழக்குகளை முதன் முதல் கடுமையாக விசாரித்ததின் அடிப்படை நோக்கம், அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்குவதேயாகும். அரசர் 'டேனிகெல்டு' வரியை விதிப்பதற்குரிய வழி வகைகளை உணர்த்தவே 'நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேடு' (Domes Day Book) முதன் முதலில் தயாரிக்கப்பட்டது. நாட்டு மக் களுக்குப் பெருஞ் சுமையாக இருந்த இவ் வரிப் பணத்தைத் தண் டும் பொறுப்பை முதன் முதலில் பட்டணக் குடியிருப்புகளிடம் அரசு ஒப்படைத்திருந்தது. நாளடைவில் அப்பொறுப்பு பண்ணைகளைச் சார்ந்த பிரபுக்களுக்கு உரிய கடமையாக மாற்றப் பட்டது. முதன் முதலில் கான்யூட்டும், அவருக்குப் பிறகு வந்த நார்மானிய அரசர்களும், எதையும் ஒரு மனிதனுடைய பொறுப் பில் விட்டு, அவனைத் தமக்குப் பொறுப்பாளியாக இருக்குமாறு செய்வதையே விரும்பினர். ஒரு சமூகத்தின் பொறுப்பில் நாட் டாட்சியின் எத்துறையையும் விட்டு வைக்க அவர்கள் விரும்ப

வில்லை. இதனால் ஒவ்வொரு ஊரையும் முன்பு எப்பொழுதும் இருந்திராத இழிநிலையில் பிரபுக்களுக்கு அடங்கி நடக்குமாறு அரசு செய்தது. அது முதல் மக்கள் பிரபுக்களுக்கு வரி செலுத்தும் பண்ணையாட்களாக மாறினர். பிரபுக்கள் அரசின் ஆட்சிக்குட்பட்ட நிலங்களுக்குரிய வரிப் பொருளைத் தண்டி, அரசிடம் சேர்க்கும் 'வரி வாங்கும் குடியானவராக' மாற்றமுற்றனர். அவ்வாறு, அவ்வரிகளைத் தண்டி, அரசருக்குச் செலுத்தி வந்த பிரபுக்களே அரசரால், அந்நிலங்களுக்குரிய நிலக்கிழார்களாகக் கருதப்பட்டனர். அந்நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு எல்லாம் அவர்களே பிரபுக்களாக — தலைவர்களாக அரசினரால் அமர்த்தப்பட்டனர்.

சிறிது காலத்திற்கெல்லாம் டேனிஷ் படையெடுப்புகள் மீண்டும் தொடங்கின. அப்போர்களில் லண்டன் மாநகரம் கலந்து கொண்டு ஆற்றிய தொண்டே, குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பியல்பாகும். ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆல்பிரட்டு அரசர் லண்டனில் கோட்டைகட்டிக் குடியிருப்புகளை அமைத்தார். மேலும் அவர் அதனை டேனியர்களின் படையெடுப்புகளிலிருந்து காக்கும் இங்கிலாந்தின் தலைவாயிலாக அமைத்தார். அவர் ஆவலோடு எதிர்பார்த்து ஏங்கிய நம்பிக்கைகள் அனைத்தையும் லண்டன் மாநகரம் சிறந்த முறையில் நிறைவேற்றியது. எதல்ரெட்டின் காலத்தில், கோழையும் மடையனுமான அவ்வரசனைக் காட்டிலும், இங்கிலாந்து மக்கள் வன்மையாக அயலார் படையெடுப்பினை எதிர்த்துத் தாக்கினர். தன்னுடைய டேனிஷ் பகைவனை சுவேயன் போர்க்குபியர்ட்டு இறந்த பின் இரண்டாண்டுகள் கழித்து, எதல்ரெட்டும் ஏப்ரல் 1016-ல் உயிர்துறந்தான். இங்கிலாந்தின் அரசுகட்டில் ஏறுவதற்குப் போட்டியும் போராட்டமும் உண்டாயிற்று. மறைந்து போன மன்னர்களுடைய இரு பிள்ளைகளும் தமக்குத்தான் உரிமை உண்டென்று போட்டியிட்டனர். எதல்ரெட்டின் மகன் எட்மண்ட்டு என்பவராவர். அவரையே லண்டன் மாநகர மக்கள் இங்கிலாந்தின் அரசராக்க முயன்றனர். அதனால் சுவேயனின் மகனை கான்யூட்டிற்கும் எட்மண்டிற்கும் இடையே போர் மூண்டது. ஆனால் எதிர்பாராத வகையில் சில மாதங்களுக்குள் (நவம்பர் 1016-ல்) எட்மண்ட்டு இறந்தார். அதனால் அரசுரிமைப் போர் ஒருவாறு முடிவுற்றது.

சாக்சானிய முதறிஞர் அவை (Witan) அவ்வழக்கின் தேவைகளுக்கு அடிபணிந்து கான்யூட்டை அரசனைத் தேர்ந்தெடுத்தது. தென் இங்கிலாந்தில் தோன்றிய போட்டி, டேன்லாவிற்கு அருகில் நடந்தமையால், டேனிஷ்காரரனையே

அரசனாகத் தேர்ந்தெடுத்தது இயல்பேயாகும். மேலும், எட்மண்ட் இறந்தமையால் அது தவிர்க்க முடியாததாயிற்று. இளைஞராகிய கான்யூட்டினிடம் பொதிந்துகிடந்த உள்ளார்ந்த பண்புகள், எதிர்பார்த்ததை விடப் பெரு நன்மை விளையுமாறு செய்தன.

இதற்கு முன்னரோ, பின்னரோ இவ்வாறு அரசர்களைத் தேர்ந்தெடுத்ததை இத்துணைத் தெளிவாக நாம் காணமுடியாது. கான்யூட்டு, ஹாரால்டு, வெற்றி வீரர் வில்லியம் ஆகிய மூவரும் சட்டப்படி அரசராவதற்கு உரிமையற்றவர்களாவர். மூதறிஞர் மன்றங்களும், அந் நாட்டின் பகுதிகளைச் சார்ந்த பெரு மக்களுமே அவர்களை அரசர்களாகத் தேர்ந்தெடுத்தனர். இல்லையென்றால் அவர்கள் அரசர்களாக முடிசூட்டிக் கொண்டிருக்க முடியாது.

ஆனால் அத்தகைய தேர்வு முறை, அயலார் படையெடுப்பினால் உண்டான விளைவுகளால் நாட்டு மக்களின் அன்பார்ந்த விருப்பத்திற்குச் சட்டப்படி செல்லத்தக்க உரிமையினை வழங்கியது. மூதறிஞர் மன்றம், பிற்கால ஆங்கிலேயப் பாராளுமன்றத்தின் 'தாய்' அன்று. பாராளுமன்றம் ஆங்கிலோ-நார்மானிய நிலையங்களின் அமைப்புகளிலிருந்தும், தோன்றி வளர்ந்த ஓரமைப்பாகும். மேலும், மூதறிஞர் மன்றம் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட செல்வாக்கு நிலையமும் அன்று. அது பாதிரிமார்கள், கோமான்கள், அரசாங்க அதிகாரிகள், பெருமக்கள் முதலியோரைக் கொண்ட ஒழுங்கற்ற ஒரு மன்றமாகும். அவ்வுறுப்பினர்கள் தங்கள் பெயருக்கேற்ற வகையில் எப்பொழுதும் அறிவாற்றல் நிரம்பியவர்களாக, மூதறிஞர்களாக இருந்ததில்லை. எப்பொழுதாகிலும் ஒரு சமயம் புதிதாக அரசன் ஒருவன் தோன்றினால், அவனுடைய பண்புநலனையும், சூழ்நிலைகளையும் பொறுத்தே அவனை அடக்கியாளும் ஆற்றல் அம் மன்ற உறுப்பினர்களிடத்து அமையலாயிற்று. சட்டத்தின் விதிகளை அடிப்படையாகக் கொண்டு மூதறிஞர் மன்றம் புதிய அரசனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நாட்டிலே அரசனது அதிகாரத்தினைக் கட்டுப்படுத்தக்கூடிய சட்ட திட்டங்கள் ஒன்றும் இல்லாமையே அதற்குக் காரணமாகும். ஆனால், அரசன் இறந்து விட்டால், அரசுகட்டிலில் புதியதாக ஒருவனை ஏற்றுவதற்குரிய உரிமை வழக்கமாக மூதறிஞர் மன்றம் பெற்றிருந்தது. இவ்வதிகாரம் சாக்சானியர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் அளவு கடந்த உரிமையோடு செயலாற்றப்பட்டது. மரபுரிமைப்படி அரசர்களை அரசராக்கியதோடு, இரண்டு மூன்று முறைகள்

அரச மரபினையே மாற்றிப் புதிய அரசமரபிற்கு நாடாளும் உரிமையை மூதறிஞர் மன்றம் வழங்கியுள்ளமை இங்குக் கருதத் தக்கது. தெய்விக அரச மரபுரிமை ஒரு தனி மனிதனிடத்திலே அமைந்திருக்கிறது; அதை வேறு எந்த மனிதனின் அதிகாரமும் மாற்ற முடியாது என்னும் கருத்து முதலாம் ஜேம்ஸின் அளவு கடந்த அறிவினால் புதிதாகப் படைக்கப்பட்டதாகும்.

பிற்காலத்தில் நிகழ்ந்த டேனிஷ் போர்களில் லண்டன் மாநகரம் தனி இராணுவ, அரசியல் ஆதிக்கம் உடையதாகப் போராடியமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். ஏனெனில், அதனுடைய நகராட்சி மன்ற உரிமைகள் அக்காலத்தில் மிக மிகக் குறைவாகவே இருந்த போதிலும், அந்நகரம் தன் ஆற்றலுக்கு மேற்பட்ட அரும் பெருஞ் செயல்களைச் செய்துள்ளமை வியப்பிற்குரியதாகும். அக்காலத்தில் மாநகராட்சி மன்றத்தலைவரோ (Mayor), 'ஆல்டெர்மன்' (Alderman) என்னும் கோட்ட மன்றத் தலைவரோ லண்டன் மாநகரின் ஆட்சியில் இருந்ததில்லை. அரசினர் அமர்த்திய துறைமுக அதிகாரி (Portreeve) ஒருவர் இருந்தார். பிற்கால லண்டன் மாநகரில் காணப்பட்ட மக்களாட்சிப் பண்பு நிறைந்த 'குடும்புகளு'க்குப் (Wards) பதிலாக லண்டன் பல 'சோக்கு' (Sokes) என்னும் உட்பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அல்லது பெருமக்களுக்கும், குருமார்களுக்கும் அரசரால் அளிக்கப்பட்ட தனி அதிகாரவரம்பினையுடைய பல் வேறு பிரிவுகளையுடையதாக இருந்தது. நகராண்மைத் தன்னாட்சி என்பது மிகப் பிற்பட்ட காலத்தில் தோன்றியதாகும். எனவே உரிமையை எல்லாவற்றிற்கும் மேலாகக் காதலித்த டேனிஷ் பட்டணங்களும் இக்காலம் வரை பரம்பரையாக வரும் 'சட்ட வல்லுநர்' (Lawmen) களால் ஆளப்பட்டு வந்ததெனின், மற்ற வற்றைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? சந்தைக் கடைகள் உள்ள பிற பட்டணங்களும், நகரங்களும் நாட்டுப் புற ஊர்களிலிருந்தும், அரசனின் கோட்டைகளிலிருந்தும் வேறுபடுத்தி அறிய முடியாத நிலையில் இருந்தன. அவை அரசர் அல்லது தேனர்கள் பலரின் நேரடி ஆட்சிக்குட்பட்டனவாகவே இருந்தன.

ஆங்கிலேய நகரங்களுள் லண்டன் மாநகரம் ஒன்றே தன்னுடைய உண்மையான அதிகாரம், செல்வம், துறைமுகமாக இருப்பதனால் பெற்ற உரிமை முதலியவற்றைக் கொண்டு சட்டத்தின் முன், தான் ஒரு நகராட்சி மன்றமுடைய நகரம் மட்டும் அன்று; அதை விடச் சிறந்ததொரு மாநகராட்சிக்குரிய மாபெரு நகரம் என்பதை அறிவித்தது. இங்குமங்குமாக மாறிக்கொண்டிருந்த பேரரசின் தலைநகராக வின்செஸ்டர் இருந்து வந்தது.

அதனால் தேம்ஸ் ஆற்றங்கரையில் அமைந்த லண்டன் மாநகருக்கு இயல்பாகவே அரசியல் உரிமை கிடைக்கலாயிற்று. மேலும், அரசின் அதிகாரத்தின் நன்மை தீமைகளைப் பற்றற்ற நிலையிலிருந்து ஆராய்ந்து, அவற்றைச் சுட்டிக் காட்டுவதற்குரிய சிறந்த தொரு வாய்ப்பினையும் லண்டன் பெற்றது. இவ்வுயிர்ப் பண்பினை உண்மையான பற்றுறுதி, நாட்டுப் பற்று என்னும் வரம்புகளுக்குள் அடக்கி, பல நூற்றாண்டுகள் தொடர்ந்து இப்பணிபுரிவதில் லண்டன் மாநகரம் பேரார்வம் உடையதாக இருந்து வந்தது. அவ்வுயிர்ப் பண்பு இறுதியாக ஸ்டூவர்ட்டு மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் மாபெருஞ் செயல்கள் மூலம் உச்ச நிலையை அடைந்தது. ஆனால், நெடுங்காலமாக அரசர்களின் உறைவிடமாக இருந்து வந்த பாரிஸ் மாநகரின் வரலாறு வேறு வகையானதாகும்.[1]

லண்டன் மாநகர மக்கள் வன்மையாக எதிர்த்த போதிலும், கான்யூட்டே இங்கிலாந்தின் அரசரானார். ஆயினும், அது அவர்களுடைய நற்பேருகவே அமைந்தது. கான்யூட்டின் ஆட்சிக்குட்பட்டிருந்த ஆங்கில, பால்டிக்கு நாடுகளுக்கு இடையே கடல் வாணிகம் பேரளவிற்கு வளர்ச்சியுற்றது. அக்காலத்தில் வடகடலில் இருந்து வந்த கடற் கொள்ளைக்காரர்கள் அடக்கியொடுக்கப்பட்டனர். அதனால் இரு பக்கங்களிலும் இருந்த துறை முகங்கள் ஒன்றோடொன்று நெருங்கிய வாணிகத் தொடர்பு கொள்ள முடிந்தது. டேனிஷ் வாணிகர்கள் லண்டன் மாநகரின் சிறப்பு மிக்க குடிமக்களாயினர். இதற்கு முன்பே அவர்கள் யார்க்கிலும், டேன்லாவிலுள்ள பட்டணங்களிலும் நெடுங்காலமாகத் தங்கி இருந்தனர். பதினோராம் நூற்றாண்டில் டேனிஷ் கடல் மறவர் கடல் கடந்த நாடுகளோடு வாணிகம் செய்வதில் முனைந்து நின்றனர். தற்காப்பிற்குரிய கடற்படையிலும், அரசுரிமைப் போட்டிகள் உண்டானபொழுதும் லண்டன் மாநகர மக்களே முக்கிய இடத்தைப் பெற்றனர். முதலில் அவர்களுள் பெரும்பாலோர் புறச்சமயத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். செயிண்ட் கிளமெண்ட் டேனியரும் (St. Caement Danes), செயிண்ட் ஓலாபிற்கு (St. Olaf)ப்படைக்கப்பட்ட நகரத் திருச்சபைகளும், அவர்கள் கிறிஸ்துவ சமயத்திற்கு

[1] லண்டன் மாநகரப் பெருஞ்சுவர்களுக்குட்பட்ட பகுதியில் சாக்சானிய அரசர்கள் அரண்மனைகள் கட்டியிருந்தனர். சிற்சில சமயங்களில் அவர்கள் அதில் தங்கியும் இருந்தனர். அப்பெருஞ்சுவர்களுக்கு வெளியே அருளாளர் எட்வர்டு தம்முடைய அரண்மனையை வெஸ்ட் மினிஸ்டரில் கட்டினார். அதனால் எதிர்பாரா விளைவுகள் லண்டன் நகர வரலாற்றிலும் இங்கிலாந்தின் வரலாற்றிலும் உண்டாயிற்று. அடுத்த இயலைப் பார்க்க.

மெல்ல மாறிய கதையை எடுத்தியம்புகின்றன. கோலக்னே (Cologne) முதலிய இடங்களிலிருந்து, 'பேரரசருக்கு வேண்டியவர்கள்' லண்டனில் அவர்களுடைய வாணிகப்பணியாளர்களோடு நிலையாகத் தங்கி வாழலாயினர். ரோமானியர் ஆட்சிக்காலத்தில் வட ஐரோப்பியப் பெரு வாணிகத்தின் பண்டகசாலையாக லண்டன் மாநகரம் சீரும் சிறப்புமுற்றுத் திகழ்ந்தது. அவ்விழந்த பெருமையையும், மாண்பினையும் லண்டன் இக்காலத்தில் திரும்பப் பெற்று தன்னிகரற்ற வாணிகப் பெருநகராக வீறுடன் விளங்கத்தொடங்கியது.

கான்யூட்டு, பழைய வைக்கிங்குகளின் தலைவனான சுவேயன் போர்க்கு பியர்ட்டின் மகனாவார். சார்லமேனைப் (Charlemagne) போன்று, அவரும் இங்கிலாந்தின் பேரரசரானார். அவர் (1016-1036) ஆல்பிரட்டினின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாட்டிலுள்ள தலைவர்களோடு புதிதாக நட்பினை உண்டாக்கிக் கொள்ளுவதிலும், பழைய நட்பினைப் புதுப்பித்துக் கொள்ளுவதிலும் ஈடுபட்டார். படையாற்றலினால் அவர் இங்கிலாந்தின் அரசரானார். அவர் ஆங்கிலேயரை டேனியர்களோடு சரிநிகர் சமானமானவர்களாகவே நடத்தினார். அவருடைய குடிமக்கள் அனைவரும் வேறுபாடில்லாது அவரிடம் அன்புடையவராக இருந்தனர். அவருடைய தந்தை பெரிதும் புறச்சமயத்தைச் சார்ந்தவராக இருந்தவராவர்; பெயரளவில் பியர்ட்டு கிறிஸ்துவராக இருந்தாலும், அவருடைய நோக்கங்களும், பழக்க வழக்கங்களும் புறச்சமயச் சார்புடையனவாகவே இருந்தன. அவர் தம்முடைய பிள்ளைகளை ஓடன் (Woden) வழிபாட்டு நெறியில் பழக்கியும் இருந்தார். ஆயினும் கான்யூட் அத்தெய்வத் தன்மையின் நறுமணத்தை இளமையிலேயே இழந்தார். மடாலயக் காலவழிச் செய்திக் கோவையாளர்களுக்கு மிகவும் வேண்டியவராகக் கான்யூட்டு வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. அவர் மடாலயங்களின் மதிப்பு மிக்க புரவலராகவும், காவலராகவும் விளங்கினார். அவருடைய சட்டங்கள் வருமானத்தில் பத்திலொரு பங்கினை (Tithe) மடாலயங்களுக்குச் செலுத்துமாறு அறிவித்தன. மேலும் திருச்சபைக்குச் செலுத்தவேண்டிய கட்டணங்களையும் தவறாமல் மக்கள் கட்டவேண்டும் என்று கடுமையான விதி அச்சட்டத்தில் சேர்க்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையைப் புனிதமான நாளாகக் கொண்டாடவேண்டும் என்று சட்டத்தின் மூலம் கான்யூட்டு வற்புறுத்தினார். டேன்லாப் பகுதியிலும், கான்யூட்டுடன் புதிதாக வந்த டேனியர்கள் தங்கிய பகுதிகளிலும் ஊசலாடிக் கொண்டிருந்த புறச்சமயத்தினரை இறுதியாகத்' துன்புறுத்துவதற்கும் சட்டம் கொண்டுவந்தார். ஆங்கி

லேயர்கள் பல தலைமுறைகளாகப் போற்றிவரும் பழம் பாடல் ஒன்று உண்டு. அதில் கான்யூட்டு அரசரைப்பற்றிச் சில செய்திகள் கூறப்பட்டுள்ளன. கான்யூட்டு அரசர் ஒரு வைக்கிங்கு என்பதை இங்கிலாந்துநாட்டு மக்கள் அடியோடு மறந்து விட்டனர். இதனை அப்பாடல் உணர்த்துகிறது ;

‘ வந்தார் வந்தார் கான்யூட் மன்னர் ;
அலைகடல் வழியே படகில் வந்தார் ;
கண்டனர் துறவிகள் ! கண்டனர் துறவிகள் !
‘‘ஏலை’’யின் துறவிகள் அவரைக் கண்டனர் ;
உள்ளக் களிப்பால் உவந்து போற்றினர்.
ஆடிப் பாடினர் ; பாடிப் புகழ்ந்தனர்;
செலுத்துக படகினை ! செலுத்துக படகினை !
நிலத்தின் அருகே நிறுத்திக்
கேட்போம் நாமும் அவர்பாடிய பாட்டே !’

கான்யூட்டு ஒரு சிறு பையனைத் தன் தந்தையின் போர்ப் படகில் ஆங்கிலக் கால்வாய் வழியாக வந்ததை ஏலையிலுள்ள துறவிகள் பார்த்து இருப்பார்களானல், சிறிது மகிழ்ச்சி குறைந்த பண்ணிலேயே பாடியிருப்பர். கடைசியாக வைக்கிங்குகளின் காலம் ஒரு முடிவிற்கு வந்தது ; இங்கிலாந்து, ஹெப்பிரிட்ஸ் (Hebrides), டென்மார்க்கு முதலிய நாடுகளை ஒரு குடைக் கீழிருந்து ஆட்சிபுரிந்த பெருமை கான்யூட்டையே சாரும் இப் பல்வேறு நாட்டு மக்களின் கொடிய ஆற்றலை எல்லாம், கான்யூட்டு நாட்டிக்குக் கடலோடி மக்களின் நல்வாழ்விற்கு உதவும் ஒரு பேரரசினை நிறுவதற்குப் பயன் படுத்தினர். கடற்கரையில் பகுத்தறிவற்ற தம்முடைய அவையினரைச் சீற்றத்தோடு கான்யூட்டு கண்டித்த உலகப் புகழ்வாய்ந்த கட்டுக் கதை, பழமையானதாக இருந்தாலும் அது ஞாயிற்றுக்கு அருகேயுள்ள ஒரு நாட்டில், அறிவுமிக்க அரசனைச் சுற்றிலும் சிற்றரசர்களும், பேடிகளும் சூழ்ந்திருந்த பொழுது நடந்த கதையாகக் கொள்ளுவதே பொருத்தம் உடையதாகும். கான்யூட்டை வேளக்காரப் படையும் (House Carls), வைக்கிங்குகளும், சாக்சானியத் தேனர்களும் காவல் புரிந்து வந்தனர். அவர்கள் கீழ் நாடுகளில் சிறப்பித்துப் பேசப்படும் கற்பனை யுலகின் அடிமைகளாக இல்லாமல் பேச்சிலும், பணியிலும் வேறுபட்டவர்களாகவே இருந்தனர். எனவே, அக்கதை இங்கிலாந்தில்தான் முதன் முதல் தோன்றியது என்று கூறமுடியாது. எந்நாட்டில் அரசவையினர் இம்மாதிரியாக நாகரிகமற்ற முறையில் புகழ்கிறார்களோ, அங்குக் கடல் அலைகள் மிக விரைவாக வீசுவதில்லை ; அதைப் போலவே நெடுந்தொலைவிற்கும் வீசுவதில்லை.

கி. பி. 1016-க்குப் பிறகு சில ஆண்டுகள் வரை கான்யூட்டு அரசர் அயல்நாட்டுப் படையெடுப்பாளராக, வேலையும் வாளையும் காட்டி அச்சுறுத்தி, இங்கிலாந்தை ஆண்டார். ஆனால் கி.பி. 1200-ல் டேனிஷ் அரசுகட்டிலில் ஏறுவதற்காகத் தம் நாட்டிற்குச் சென்று, மகிழ்ச்சியோடு திரும்பி வந்தார். அதன் பிறகு இரு இனத்தவரையும் சமமாக நடத்துவதன்மூலம், அவர்களிடையே ஒற்றுமையையும் நேச உறவையும் அவர் வளர்த்தார். அவர் திருச்சபையோடு புகழ்மிக்க நேச உடன்படிக்கை செய்து கொண்டார். ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்தைக் கைப்பற்றிய நார்மானியரின் கொள்கைகளிலிருந்து கான்யூட்டு கொண்டிருந்த கொள்கைகள் அடிப்படையிலேயே வேறுபாடுடையவையாக இருந்தன. கான்யூட்டிற்காக இங்கிலாந்தின் அரசுகட்டிலைக் கைப்பற்றிய டேனியரின் படைகளுக்கு, 'டேனி கெல்டு' திறைப்பொருளைக் கொடுத்து, அவர்களைப் போற்றிப் பாராட்டினார். இங்கிலாந்தில் கைப்பற்றப்பட்ட பண்ணைகளையோ ஊர்களையோ படை வீரர்களுக்கு அவர் பரிசாக அளிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். வின்செஸ்டரிலுள்ள அரசரின் மாளிகைப் பூங்காவில் ஆங்கில - சாக்சானிய மொழியும், டேனிய மொழியும் வேற்றுமையின்றிப் பேசப்பட்டு வந்ததைப் போன்றே, அம்மொழி பேசும் மக்களுக்கும் சரிநிகர் சமமான வாய்ப்புகளையும் வசதிகளையும் அரசர் அளித்துவந்தார். ஆங்கில-சாக்சானியரின் சட்டங்களைத் தொகுக்குமாறு கான்யூட்டு கட்டளையிட்டார். அவருடைய ஆட்சிக் காலத்தில் திருச்சபை பெரிதும் ஆங்கில-சாக்சானிய திருச்சபையினராலேயே ஆளப்பட்டு வந்தது. அத்திருச்சபையின் தொண்டர்களை, அரசவையின் பணித்துறை அலுவலர்களாக கான்யூட்டு அமர்த்தி, அவர்களை ஆதரித்தார். மேலும் அப்பதவிகளிலிருந்து பாதிரிமார்களின் பதவிகளுக்கு அவர்களை அரசர் உயர்த்தினார். இங்கிலாந்தின் திருச்சபையினர், அரசருடைய ஆதரவைப் பெற்று, நார்வே, டென்மார்க்கு முதலிய நாடுகளுக்குச் சென்றனர். சென்ற இடமெல்லாம் அவர்கள் சமயப் பணிபுரிந்தனர். அங்கு அவர்கள் நெடுங்காலமாகத் தொடர்ந்து கிறிஸ்துவர்களுக்கும் புறச்சமயத்தினருக்கும் இடையே நடந்துவந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். அதனால் அங்கு முக்கியத்துவம் பெற்றனர். வெற்றிவீரர் வில்லியம் சாக்சானிய சமய குருமார்களைக் காட்டிலும் பிரஞ்சு சமய குருமார்கள் சிறந்த பயிற்சியும், மிக்க திறமையும் உடையவர்களாக இருப்பதைக் கண்டார். கான்யூட்டு ஸ்காண்டிநேவிய சமய குருமார்களைவிடச் சாக்சானிய குருமார்கள் நன்முறையில் பயிற்றுவிக்கப்பட்டிருப்பதைக் கண்

டார். ஆனால் இவ்விரு வெற்றி வீரர்களும், தோல்வியுற்ற ஆங்கில மக்களின் தலைவர்களிடத்து நடந்துகொண்ட முறை முற்றிலும் வேறுபட்டிருந்தது. டேனிய அரசர்கள் திருச்சபையில் மட்டும் அல்லாமல், அரசாட்சியிலும், படைகளிலும் சாக்சானிய தேனர்களுக்குப் பொறுப்புமிக்க பதவிகள் அளித்தனர். மேலும், தேனர்களைப் பல முக்கியமான அரசாங்கக் கடமைகளைச் செய்வதற்குப் பயன்படுத்திக் கொண்டனர். கான்யூட்டின் மதிப்பிற்குரிய நண்பரான காட்வின் (Godwin) சிறப்புமிக்க வெஸ்ஸெக்ஸ் மாநிலத்தை ஆட்சிபுரிந்து வந்தார். இக்காலத்தில்தான் காட்வின் முதன் முதலாக நாடு முழுவதும் போற்றக்கூடிய பெருஞ் சிறப்பினைப் பெற்றார்.

கான்யூட்டு இங்கிலாந்தைக் கைப்பற்றிய டேனிய காலாட் படைக்கும், கப்பற் படைக்கும் கொடுக்கவேண்டிய பரிசுப் பொருள்களைக் கொடுத்துவிட்டார். அதன் பிறகு அவர் நாற்பது கப்பல்களைக் கொண்ட நாவாய்ப்படை ஒன்றை நிறுவினார்; சிறியதொரு நிலையான 'வேளக்காரப்படை' (House Carls) ஒன்றை நிலையாக வைத்துக் காத்துவந்தார். வேளக்காரப் படையினர் அரசனின் மெய்க்காவற்படை வீரர்களாவர். பெரும்படைக் கலன்களைத் தாங்கிய போர் வீரர்களாகப் பணிபுரிவதே அவர்களுடைய தொழிலாகும். அவர்கள் குதிரைகளில் ஊர்ந்து செல்வர். ஆனால் நிலத்திலிருந்து போரிடும் காலாட்படையினராவர். அவர்களுக்கு அரசர் ஊதியம் கொடுத்து வந்தார். வேளக்காரப் படையினர் அனைவரும் படைத்துறைக் கழகம் ஒன்றுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்தனர். அப்படைத்துறைக் கழகத்தில் அரசரும் ஓர் உறுப்பினராக இருந்தார். அக்கழகம் 'காசுப்பண இணைப்புக் குழுவாக' (Cash Nexus) அமைந்து இருந்ததோடு, மதிப்பு மிக்க தோழமைக் கழகமாகவும், நேரடியாகப் பணிபுரிவதற்கு வாய்ப்பளிக்கும் நல்லதொரு அமைப்பாகவும் விளங்கியது. வேளக்காரப் படையினர் சிலர் இங்கிலாந்தில், பண்ணைகளின் உரிமையாளர்களாகவும் இருந்தனர். எனினும், அவர்கள் பண்ணைகளையுடையவர்களாக இருந்தற்காக அரசரிடத்து வேளக்காரப் படையினராகப் பணி புரியவில்லை. எனவே, இக்காலத்தில் நிலமானிய வாரமுறை வழக்கில் இல்லை என்பது புலனாகின்றது. முதலில் அடிப்படை ஸ்காண்டிநேவியர்களைமட்டும் கொண்டதாக இருந்தது. ஆனால், விரைவில் பல சாக்சானியர்களும் அப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அப்படை தோன்றியபொழுது பெரிதும் வைக்கிங்குகளையுடையதாகவும், வைக்கிங்குகளையே உறுப்பினர்களாகக் கொண்டு வளர்ச்சியுற்றபொழுது ஆங்கில-சாக்சானியர்களுடையதாகவும்

இருந்து வந்த வேளக்காரப்படை ஹேஸ்டிங்ஸ் (Hastings) போர்க் களத்தே ஹரால்டுடனே அழிந்தொழிந்தது. நார்மானிய அரசர்கள் காலத்தில் நிலமானியப் படைமுறையே சிறப்புற்று விளங்கியது. இங்கிலாந்தின் பணித்துறை, படையியல் நிலையங்களின் உயிர்நாடியாக நிலவார முறை அமைக்கப்பட்டது. இவ்விரு காரணங்களால் அவர்கள் வேளக்காரப் படையினைப் புதுப்பித்து அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்காமற் போயினர்.

கான்யூட்டு இறந்த பிறகு ஒரு தலைமுறைக்குள் நார்மானியர் இங்கிலாந்தின் மீது படையெடுத்து வந்தனர். ஹேஸ்டிங்ஸ் போரில் அவர்கள் மாபெரும் வெற்றி பெற்றதன் விளைவாக, இங்கிலாந்து அவர்களுக்கு அடிமையாயிற்று. புதிதாக இங்கிலாந்தில் தங்கள் அரசினை நிறுவிய நார்மானியர், கான்யூட்டு திட்டமிட்டுச் செய்து கொண்டிருந்த ஆக்க வேலைகளை அழித்தொழித்தனர். அதனால், கான்யூட்டு ஆற்றிய அரும் பணியின் சிறப்பினையோ, முக்கியத்துவத்தையோ நாம் மதிப்பிட்டுக் கூற இயலவில்லை. கான்யூட்டு நாற்பதாவது வயதில் மட்டும் (கி. பி. 1036) இறவாமல் அறுபது வயது வரை உயிருடன் இருந்திருப்பாரானால், உலகில் தம்முடைய புகழ் நிலை பெற்று விளங்குவதற்குரிய அரும் பெருஞ் செயல்களைச் செய்து பொன்றுப் புகழ் பெற்றிருப்பார். அவர் மாண்புடையவராக விளங்கினார். இங்கிலாந்தையும், ஸ்காண்டிநேவியாவையும் வட கடலின் இருமருங்கும் இரு தூண்களாகக் கொண்டு நார்டிக்குப் பேரரசை நிறுவும் மாபெரும் பணியில் ஈடுபட்டிருந்த பொழுது தான் கான்யூட்டு காலமானார். கடல் ஆதிக்கம் அப்பேரரசினை உறுதியாக இணைக்கும் பசையாகவும், அதனை இயக்கும் தலைமை வாய்ந்த பேராற்றலாகவும் இருந்திருக்கும். அம் முயற்சியில் அவர் வெற்றி பெற்றிருந்தால், உலக வரலாற்றையே அவர் மாற்றி அமைத்திருப்பார். அப்பேரரசு நெடுந்தொலைவிற்குப் பரந்திருந்தது. அதனால் அக்காலத்தில் பேரரசினை நிறுவுவதற்கும், கட்டிக்காப்பதற்கும், தேவையான கருவிகளுக்குப் பெரும் முட்டுப்பாடு இருந்து வந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில் அட்லாண்டிக் பெருங் கடலின் இரு மருங்கும் விரிந்து கிடந்த பேரரசினைக் கட்டிக்காப்பது அரிய செயலாக இருந்ததைப் போன்று, பதினோராம் நூற்றாண்டில் வட கடலின் இரு கரையிலும் சிதறிக் கிடந்த பேரரசை ஒன்றுபடுத்துவது என்பது மிகக் கடினமான செயலாகவே இருந்து வந்தது. ஆயினும் டென்மார்க்கிற்கும், நார்வேயிற்கும், ஹேப் பிரிட்சக்கும், இங்கிலாந்திற்கும் இருந்துவந்த தொடர்பு தனிப்

பட்ட முறையில் அமைந்திருக்கும். அவ்விரு நாடுகளும் ஆற்றல் மிக்க ஒரே அரசரால்தான் ஆளப்பட்டு வந்தன. ஆனல், அக் காலத்து, பொதுமைத் தேசியவுணர்வும், பேரரசிற்குரிய ஆட்சி அமைப்பும் இல்லாமையால், கான்யூட்டு ஆண்ட நாடுகளை ஒன்ருகச் சேர்த்துப் 'பேரரசாக'ச் சிறப்புற்று விளங்குமாறு செய்ய முடியவில்லை. இங்கிலாந்து மட்டும் நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அவற்றை நான்கு கோமான்கள் ஆட்சி புரிந்து வந்தனர். நார்வே ஒரு தனி ஆட்சிப் பகுதியாவதற்குரிய தகுதிகளை இக் காலம் வரை பெருமலேயே இருந்து வந்தது.

கான்யூட்டிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த டேனிஷ் அரசர்கள் ஆற்றலற்றவர்களாகவே இருந்தனர். அவர்கள் ஆண்ட நேச நாடுகளின் கூட்டமைப்பு உறுதியாக அமைக்கப்படாததனல், விரைவில் அந்நாடுகளைச் சிதறிப் போகுமாறு செய்தனர். அருளாளர் எட்வர்ட்டு (கி. பி. 1042--1066) உரிமையற்ற இங்கிலாந்தின் சாக்சானிய முடியரசினை மீண்டும் நிறுவினர். அது முதல் இங்கிலாந்து ஸ்காண்டிநேவியாவின் உதவியை எதிர்பார்க்காது, பிரஞ்சு நாட்டு நார்மண்டியின் உதவியை நாடியது. இவ்வாறு இங்கிலாந்தை ஆண்ட அரசரின் போக்கு நார்மானியரின் படையெடுப்பிற்கு அடிகோலியது. இங்கிலாந்தினை நார்மானியர், பிரான்சின் வலைக்குள் சிக்கவைத்தனர். அதன் விளைவாகப் பல நூற்றுண்டுகளாக இன்ப துன்பங்களிலும், விருப்பு வெறுப்புகளிலும் நெருங்கிய நண்பர்களாகவும், தோழர்களாகவும் விளங்கிய இங்கிலாந்தும், ஸ்காண்டிநேவியாவும் தொடர்பற்றனவாகப் பிரிந்துபோயின. ஸ்காண்டிநேவியாவோடு தொடர்புகொண்டிருந்த இங்கிலாந்து நாவாய்ப் படையுடைய நார்ட்டிக்கு அரசாக விளங்கியிருக்க வேண்டும்; ஐரோப்பாவோடு ஓரளவிற்கே தொடர்புடையதாக இருந்திருக்க வேண்டும். ஆனல், இதற்கு முற்றிலும் மாருகப் பல தலைமுறைகளுக்கு நிலையாக நிலமானியப் படை முறையைப் போற்றும் பிரஞ்சு நாகரிகத்தின் ஒரு பகுதியாக இங்கிலாந்து மாறியது. தன்னுடைய நாட்டின் நன்மை நாடும் நோக்கத்தாலும், அவனுடைய பிரஞ்சு மொழி பேசும் அரசர்கள் ஐரோப்பியப் பெருநிலப் பரப்பின் நன்மையை நாடிய பேரவாவினலும் இங்கிலாந்து பிரான்சிற்கு இரையாகியது. இத்தகைய மாற்றம் தவிர்க்க முடியாதது என்பது அறிஞர்களின் கருத்தாகும். இம் மாற்றத்தால் இழக்கப்பட்டதை விட இங்கிலாந்து புதிதாகப் பெற்ற பயன்களே மிகுதியானவை என்றும் கூறுவர். அது உண்மையானல் மிகவும் நல்லது. ஆனல், இங்கிலாந்தில்

கான்யூட்டு. வேறு வகையில் புதியதொரு ஒழுங்கு முறையினை உண்டாக்க முயன்றார். அம் முயற்சி ஆழ்ந்த கவர்ச்சியும் அக்கறையும் உடையதாகும். அவருடைய பேரரசு இடையிலேயே முறிந்த போதிலும், அவருடைய ஆட்சியால் உண்டான நிலையான நற் பயன்கள் சில உள. அப் பேரரசின் வீழ்ச்சி ஆங்கிலேயே இனத்திலுள்ள ஸ்கான்டிநேவியப் பண்பினையும், வாணிகத் தொடர்புகளையும் மீண்டும் வலிமையடையச் செய்தது என்று கூறினால் அது மிகையாகாது.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

ஆங்கிலோ-டேனிஷ் நாகரிகம்—காடுகளும் குடியேற்ற முன்னோடிகளும்—முன்னோடிகளும் நிலமானியப் படை முறையும்—தேனர்களும் அடிமை ஊழியர்களும் — தொழிலாளர்களின் அடிமை வாழ்க்கை நிலை—'ஒவ்வொரு மனிதனுக்கும் ஒருபிரபு தலைவராக இருக்கவேண்டும்'—கோமான்களின் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்கள்—நிலமானியப் படை முறையின் நீதி நிர்வாகம் அதன் அதிகார வரம்பினைக் கடத்தல்—மடங்களின் புத்துயிர்ப்பு—வைக்கிங்குகள் இரண்டாவது முறை படையெடுத்தல்—டேனிகெல்டு—தேர்ந்தெடுக்கும் முடியரசு—ஆங்கிலோ-டேனிஷ் லண்டன்—கான்யூட்டின் கடல் கடந்த பேரரசு—கான்யூட்டின் வேளக்காரப் படை—கான்யூட் நிறுவிய பேரரசின் வீழ்ச்சி.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூற்கள்


1. ஜிஜெர்செட்டு (Gjerset)
   History of the norwegian People, Vol. I
2. கோலிங்குவுட்டு (Collingwood, W. G.)
   Scandinavian Britain, (S. P. C. K. 1908)
3. லார்சன் (Larson)
   Canute in Heroes of the Nations series.
4. விநோகிரடாப்பு (Vinogradoff) :
   English Society in the 11th Ceutury.
5. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக வெளியீடு :
   Cambridge Med. His. Vol. III chap. XV.
6. ஸ்டெண்ட்டன் (Stenton, (F. M. )
   Anglo-Saxon England, 1943.

## இயல் 7

# ஹேஸ்டிங்ஸ் போர்வரையில் நார்மானியர் பெற்ற வெற்றி

## (கி. பி. 1042—1066)

ஆல்பிரட்டு அரசரின் காலம் முதற்கொண்டு கான்யூட்டின் ஆட்சிக்காலம் வரையில் இங்கிலாந்தின் நாண்மரபு வழக்கினை மாற்றியமைத்த ஆற்றல்கள் அனைத்தும் ஸ்காண்டிநேவியாவிலிருந்து வந்தனவாகும். அருளாளர் எட்வர்டு அரசுகட்டில் ஏறியதை (1042) த் தொடர்ந்து ஒரு நூற்றாண்டிற்கு அவ்வாற்றல்கள் யாவும் நார்மண்டியிலிருந்து இங்கிலாந்திற்கு வந்தன. ஐரோப்பிய வரலாற்றின் முழுவதிலும் ஏறக்குறைய இத்தகைய நிலையே இருந்து வந்தது எனலாம்.

நார்மானிய உயர்குடி மக்களின் முதாதையர்களும் ஸ்காண்டிநேவியாவில் தோன்றியவர்களேயாவர். நார்மானியர் குடியேற்றங்களை அமைப்பதிலும், போர்புரிவதிலும் வைக்கிங்களுக்குரிய பண்புகளில் நன்கு ஊறித் திளைத்தவர்களாகவே இருந்தனர். ஆனால், அவர்கள் இலத்தீன் நாகரிகத்தினையும் பண்பாட்டினையும் மேற்கொண்டு வாழ்ந்தனர். இவ்வேற்றுமையால்தான் நார்மானியர்களிடையே அரசியல் ஒற்றுமையைத் தூண்டும் இயல்பூக்கமும், ஆட்சி இயல் ஒருமைப்பாடும் சிறப்புற்று விளங்கியது போலும். இவ்வரிய பண்புகளை நாம் நார்ட்டிக்கு இனத்தவரிடத்துக் காணமுடியவில்லை. இங்கிலாந்தைக் கைப்பற்றிய வெற்றி வீரர்கள் இங்கிலாந்திற்கு அளித்த பரிசுகளுள் அரசியல் ஒற்றுமையைத் தூண்டும் இயல்பூக்கமும், ஆட்சி இயல் ஒருமைப்பாடும் விலை மதிக்க முடியாதனவாகும்.

ஸ்காண்டிநேவியச் செல்வாக்கு என்னும் அலையை ஐரோப்பாவை நோக்கி வீசுமாறு நார்மானியர்கள் அதைத் திருப்பினர். வைக்கிங்குகளின் முதாதையர் பிரான்சில் அமைத்துக் கொண்ட மாநிலம், மற்றொரு, 'டேன்லா' வாக விளங்கியது. (பார்க்க : நாட்டுப் படம் எண் : 9) பிரஞ்சு நிலமானியப் படைமுறைப் பிரபுக்களும் அரசரும் உலகினைக் கைப்பற்றத் தங்கள் கோட்டையிலிருந்து வெளிக்கிளம்பி குறிப்பாக, நேப்பில்ஸ், சிசிலி, பிரிட்டானியத் தீவுகளைத் தாக்கிய பொழுது, டேன்லா அவர்கள் மொழியையும், படைக்

கலன்களையும், பழக்க வழக்கங்களையும் பாதுகாத்து வந்தது. ஷேக்ஸ்பியர் காலத்தில் 'தானே ஓர் உலகமாக' விளங்கியதைப் போன்று பிரிட்டன் இக்காலம் வரை அவ்வாறு விளங்குவதற்குரிய திறமையற்றதாகவே இருந்தது. இருநூறு ஆண்டுக் காலத்திற்கு அது ஸ்கான்டிநேவியாவிற்கும், ஐரோப்பியப் பெரு நிலப்பரப்பிற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தது. பிரஞ்சு மொழி பேசும் நார்மானியக் கோமகன், இங்கிலாந்தின் நன்மையைக் கருதி அதன் எதிர் கால நிலையைக் கடுமையான முறையில் முடிவு செய்தார். ஹேஸ்டிங்ஸ் போர் இங்கிலாந்தின் வரலாற்றில் மட்டும் அல்லாமல், ஐரோப்பாவின் வரலாற்றிலும் மாபெருஞ் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும். அப்போரின் விளைவாக ஸ்கான்டிவேயர் பிரிட்டனுக்கு வரும் வழி அடைக்கப்பட்டது. ஆனல், பிரான்சிலிருந்து வருவதற்குப் புதிதாக வழி அமைக்கப்பட்டது. வைக்கிங்குகள் செங்குத்தான பாறைகளுக்கு இடைப்பட்ட கடற்பரப்பினையுடைய தங்கள் நாட்டிலிருந்து வெளிவரவொட்டாமல் தடுக்கப்பட்டனர். அதனல் கிறிஸ்துவ சமயத்தைக் கவரவோ, அச்சுறுத்தவோ அவர்களால் முடியாமல் போய்விட்டது. குதிரையின் மீது அமர்ந்த ஈட்டிக்காரர்கள் ஹேஸ்டிங்ஸ் போரிலே வெற்றி பெற்றனர். அவர் தங்களுடைய ஏழை எளியவரிடத்துக் காட்டும் வீரப்பெருந்தகைமைக் (Chivalrig) குறிக்கோள்களையும், நிலமானியப் படை முறைத் தொடர்புகளையும் வட ஐரோப்பிய உலகின் மீது சுமத்தினர். அதனல் வட ஐரோப்பாவில் வைக்கிங்குகள், தேனர் முதலியோரின் நினைவு, கடந்த காலமாகிய அந்தி ஒளியில் மங்கலாகத் தோன்றலாயிற்று. பல நூற்றுண்டுகள் வரை இலத்தீன் மொழியும், இலக்கியமும் சமயமும் போட்டியின்றி ஆட்சிபுரிந்தன. நெடுங்காலத்திற்குப் பிறகு இங்கிலாந்து அவளுக்கே உரிய புதிய வழிகளில் இலத்தீன் மொழியை விட்டுப் பிரிந்து சென்றனள். அதனல் வட இங்கிலாந்திற்கும் தென் இங்கிலாந்திற்கும் இடையே காணப்பட்ட வேறுபாட்டினைப் போக்கி சமநிலைப் படுத்த முடிந்தது.

ஆயினும், நாம் நார்மானிய நாகரிகத்தினை, இலத்தீன் நாகரிகத்தினேடு மிக நெருக்கமான ஒப்புமை உடையதாகக் கருதக் கூடாது. நார்மானியர்கள் இங்கிலாந்தினுள் இறக்குமதி செய்த நாகரிகப் பண்பாடு உண்மையில் பிராங்கோ-இத்தாலியப் பண்பாடாக இருந்தது. பிரஞ்சு நாட்டுப் பாணனை தேய்லேபரின் (Taillefer) பண்பாடும், இத்தாலியத் திருச்சபையினரான லான்பிராங்கு ((Lanfranc), ஆன்சலம் ((Anselm) ஆகியோரின் பண்பாடும் கலந்த ஒன்ருக இருந்தது. ஆனல்,

நார்மானியர் தம்முடன் கொண்டுவந்த முடியரசு, அவர்களுடைய கோமான்களைக் கொண்ட (Duke) வலிமை மிக்க முடியாட்சியாக இருந்ததே ஒழிய, பாரிசில் ஆட்சி புரிந்த ஆற்றலில்லா பிரஞ்சு அரசர்களுடையதைப் போன்று திறமையற்றதாக இல்லை.

நார்மானிய அரசு தன்னிகரற்ற சிறப்புடையதாகும். அதில் காணப்படும் ஆங்கிலேயப் பண்பாட்டின் கூறுகளை ஆராய்ந்து அறிந்த பிறகு அதைப் பற்றிச்சிறந்ததொரு ஆராய்ச்சியை நடத்தலாம். இங்கிலாந்தின் அரசினை முதன்முதல் டேனியரும், நார்ஸ்மக்களும் அமைத்தனர். ஆனால் வைக்கிங்குகள் இங்கிலாந்தின் சில மாவட்டங்களில் அதைப்போன்றே நிறுவிய அரசுகளிலிருந்து பெரிதும் அது வேறுபட்டு விளங்கியது. மேலும், நார்மானிய அரசைப் போன்ற ஒன்றைப் பிரான்சின் பிற பகுதிகளிலும் காணமுடியவில்லை. நார்மண்டியில் (நார்மானியர் குடியேறி வாழ்ந்த நாட்டுப் பகுதி நார்மண்டி எனப்பட்டது) வாழ்ந்த மக்களுள் பெரும்பாலோர் பண்பாலும், தோற்றத்தாலும் பிரஞ்சு நாட்டு உழவர்களாகவே இருந்தனர். அவர்கள் நிலத்தினை உழுது பயிரிடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். ஆயினும் ஸ்கான்டிநேவிய இன மக்கள் சிறு பான்மையினராகவே நார்மண்டியில் இருந்ததாகத் தெரிகிறது. அவர்கள் மீன் பிடித்தும், கடற்கரையோரக் கழிமுகங்களில் வாணிகம் செய்தும் வாழ்ந்தனர். அவர்களுள் சிலர் நிலமானியப் படைமுறை உயர் குடி மக்களாகவும் இருந்தனர். அவர்கள் பிரஞ்சு மொழியையும், சமயத்தையும், பழக்க வழக்கங்களையும் மேற்கொண்ட பிரஞ்சு மக்களாக மாறிய போதிலும், தங்கள் இனப் பண்பாகிய கடலோடி வாழ்க்கையிலும், மூதாதையர்களுடைய தணியாத கடலாதிக்க அவாவினையும் பெரிதும் போற்றிக் காத்து வந்தனர். 'ஜார்ல்' (Jarl) எனப்படும் ஸ்கான்டிநேவிய உயர்குடி மக்கள், நிலமானியப்படைமுறைப் பிரபுக்களாக மாறிக் கொண்டிருந்தனர். அவர்கள் பிரஞ்சு நாட்டுப் பகைவர்களையும், கூட்டாளிகளையும் சேய்னே (Seine) ஆற்றங்கரையில் சந்தித்தது முதல், ஐரோப்பியப் பெரு நிலப்பரப்பிற்குரிய புதிய போர் முறைகளைக் கற்றனர். தங்களுடைய தகப்பனரின் மழுவினைக் கையிலேந்தி (போர்க் கோடரி) நிலத்தில் நின்று போரிடுவதற்குப் பதிலாக. அவர்கள் குதிரையின் மீதமர்ந்து ஈட்டியும் வாளும் கொண்டு போரிட்டனர். மேலும், வட்ட வடிவ மேட்டினை அமைத்து, அதன் உச்சியில் மரத்தினால் ஒரு கோட்டை கட்டிக்கொண்டு மிக்க பாதுகாப்புடன் வாழத் தொடங்கினர். அங்கிருந்து தம்முடைய உழவர்களைக் கண்காணிப்பதற்கு வசதியாகவும், பகைவர்களை எதிர்த்துப் போரிடுவதற்குப் பாதுகாப்பு

உடையதாகவும் இருக்கும் என்று கருதினர். நிலமானியப் படை முறைச் சமுதாயம் முழு வளர்ச்சியுற்றதனால் மலர்ந்த இறுதி மலரே குதிரைப் படைகளும் 'காசில்' (Castle) எனப்படும் காவற் கோட்டைகளுமாகும். இவற்றுள் ஒன்று கூட, இங்கிலாந்தில் நார்மானியரின் படையெடுப்பிற்கு முன்பு இருந்ததில்லை. நார் மானியரே அவற்றை ஆங்கிலக் கால்வாய்க்கு அப்பாலுள்ள இங்கிலாந்திற்குப் புதிதாகக் கொண்டு வந்தனர் [1]

பிரஞ்சு நாட்டுப் பழக்கத்தை மாதிரியாகக் கொண்டு நார் மானியரின் நிலமானியப் படை முறை நாட்டு நிலப்பரப்பினைச் சார்ந்ததாக மாறியது. கோமான்களிடமிருந்து, நிலத்தைப் பெற்று மாநிலங்களில் வாழ்ந்து வந்த பிரபுக்கள், தங்கள் கோமானுக்குப் படைத்தொண்டு புரிந்துவந்தனர். ஆனால், இங்கிலாந்தில் இக்காலத்திலும் பல தேனர்கள் தனிப்பட்ட கடமைகளுக்காகவும், நாட்டுக்கடமைகளுக்காகவும் தொண்டு செய்யக் கடமைப்பட்டிருந்தனர். நார்மானியப் படை முறை அமைப்பு அதை போன்றது அன்று. கோமான்களின் கொடிக்கீழ் பிரபுக்கள் அணி வகுத்துப் போருக்குச் சென்றனர். நார்மண்டி யின் கோமான் இடைவிடாது அஞ்சுவினர் (Anjou), மெய்னே (Maine) அல்லது பிரிட்டானி (Brittany) மக்களை எதிர்த்துப் போர் புரிந்து வந்தனர். அப்போர்களில் பிரபுக்கள் கோமான் களுக்குப் பேருதவியாக இருந்து வந்தனர். ஒவ்வொரு பிரபுவும், தம்முடைய காணியாட்சிப் பகுதியில் (Barony) இருந்து, தம்முடைய பங்கு வீதமாக ஐந்து, பத்து, அல்லது முப்பது, மாவீரர்களை (Knights)ப் போருக்கு அழைத்துச் சென்றனர். படைத்துறையினரின் வசதிக்காக ஐந்து மாவீரர்களைக்கொண்ட ஒரு கூறுகப் பங்கு வீதம் நிர்ணயிக்கப்பட்டது. பிற்காலத்தில் இம் முறையினை வெற்றி வீரர் வில்லியம் இங்கிலாந்தில் ஒரே சீராகச் சிறப்புற்று விளங்குமாறு செய்தார்.

[1] இங்கிலாந்தின் மேட்டுநிலக் காவற்கோட்டைகள் அனைத்தும் நார் மானியருடையன வாகும். (பார்க்க : Baldwin Brown : I ; 106-110) சாக்சானியரும் டேனியரும் பட்டணங்களையும், அரசனுடைய கோட்டை களையும் சுற்றிக்களிமண்ணால் பெரிய மதிற்சுவர்களை எழுப்பி இருந்தனர். ஆனால் அவை நார்மானியப் பிரபுக்களின் மேட்டு நிலக் காவற் கோட்டை களைப் போன்றவை அல்ல. ஆங்கிலத் தேனர்களின் வீடுகளுக்கு மதி லரண்கள் அமைக்கப்படும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. நார் மானியர்கள் இங்கிலாந்திற்கு வந்தவுடன் மேட்டு நிலக் காவற் கோட் டைக்களைக் கட்டியதை இங்கிலாந்தின் மக்கள் எதிர்த்துக் கூக்குரலிட்ட னர், படிப்படியாக நார்மானியக் காவற் கோட்டைகளில், மரங்களுக்குப் பதிலாகக் கற்கள் பயன் படுத்தப்பட்டன. வெற்றி வீரர் வில்லியம் கட் டிய லண்டன் கோபுரம் (Towr of London) போன்ற சில கட்டடங்களே செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. லண்டன் கோபுரம் முழுவதும் செங்கற்களால் முதலிலேயே கட்டப்பட்டதாகக் கூறுவர்.

மாவீரர்கள் தங்கள் பிரபுவிடமிருந்து தங்களுக்கு நிலங்களை மானியமாகப் பெற்றனர். அதற்காக அவர்கள் எப்பொழுதும் தம்முடைய பிரபுவிற்குப் படை உதவி அளிக்கத் தயாராகக் காத்திருந்தனர். ஒருமாவீரன் 'வீரக்கட்டணத்திற்குரிய நிலத்தை மானியமாக பெற்றிருந்தால், அவன் யாரிடமிருந்து நிலத்தை மானியமாகப் பெற்ருனே, அப் பிரபுவின் கொடிக்கீழ் கோமான்களைத் தொடர்ந்து, அப் பிரபுக்கள் போருக்குச் செல்லும்பொழுது அவ் வீரனும் அவர்களுடன் போருக்குச் செல்லுவான். நார்மண்டியில் இத்தகைய நில மானியப் படை முறையே வழக்கத்தில் இருந்துவந்தது.

ஓர் ஆண்டில், நாற்பது நாட்களுக்கு இத்தகைய போருதவி செய்தாக வேண்டும் என்னும் விதியும், கட்டுப்பாடும். வழகத்தில் பெயரளவிற்கு இருந்துவந்தன. ஆனல் போர் நடவடிக்கைகளை முடிப்பதற்காகப் பெரும்பாலும், நெடுங் காலத்திற்கு வீரர்களைக் கட்டாயப்படுத்திப் போர் உதவியைப் பிரபுக்களும், கோமான்களும் பெற்றுவந்தனர். ஒரு பிரபுவிற்கும் மற்ருெரு பிரபுவிற்கும் தனிப்பட்ட முறையில் போருண்டானல் சில வாரங்களுக்கு மட்டும் மாவீரர்களின் உதவியைப் பிரபுக்கள் நாடினர். அல்லது கோமான்கள் பிரிட்டனி அல்லது அஞ்சுவினர்மீது படையெடுத்துச் சென்ருல் அப்படையெடுப்பும் சில வாரங்களிலேயே முடிவதாக இருந்தது. ஆனல், இங்கிலாந்தைக் கைப்பற்றியதைப் போன்ற நெடுங்காலத்திற்கு நடைபெறும் போராக இருக்குமானல் நிலமானியப் படை முறையைக் கடமையோடு, தானுக நெடுங் காலத்திற்குப் போரிட மாவீரர்களை உடன்படுமாறு செய்து, கோமான்கள் பிரபுகளிடத்தும், பிரபுக்கள் மாவீரர்களிடத்தும் சமயத்திற்கேற்பத் திறம்பட உடன்படிக்கை செய்து கொண்டனர். நெடுந்தொலைவிலுள்ள நாடுகளின்மீது படையெடுத்துச் செல்லுவதற்கு, நிலமானியப் படைமுறையின்படி போருதவி செய்யவேண்டிய நாட்கள் போதுமானதன்று. போக்கு வரத்து வசதிகள் முன்னேற்றம் அடைந்தவுடன் நிலமானியப் படைமுறை அழிவுற்றமைக்குரிய காரணங்களுள் இது முக்கியமானதாகும். நாட்டுப் புறங்களில் டேனிஷ் மக்கள் முதலியோரின் படையெடுப்புகளிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கும், தனி மனிதர்களுக்கு, இடையே உண்டாகும் போர்களுக்குப் பேருதவியாக அமையுமாறு உதவிபுரிவதற்கும் தொடக்க காலத்தில் நிலமானியப் படை வகுக்கப்பட்டது. நாடுகள் பெரிதாக வளர்ந்த பிறகு அம்முறை ஏற்றதாக அமையவில்லை. மேலும், நெடுங்

காலம் தொடர்ந்து போர் புரிவதற்கும், பேரளவில் திட்டமிட்டுப் போர் புரிவதற்கும் நில மானியப் படை முறை பொருத்தம் உடையதாக அமையவில்லை.

நார்மண்டியின் மக்கள் சமுதாயத்தில் நிலமானியப் படைமுறையின் அடிப்படையிலேயே ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய பிரபுவிற்கும் இடையேயுள்ள தொடர்பு நிர்ணயிக்கப்பட்டது. அத்தொடர்பு நிலவுடைமை அடிப்படையிலும், மரபுரிமை அடிப்படையிலும் தந்தைக்குப் பின் மகனைச் சார்ந்தது. இந் நில மானியப்படை முறை சமுதாயத்தின் தலைமையிடத்தில் கோமான் வீற்றிருந்தார். அவரையடுத்துப் பிரபுக்களும், பிரபுக்களையடுத்து மாவீரர்களும் இருந்தனர். அவர்களுக்கெல்லாம் அடிமையாக இறுதி நிலையில் நிலத்தை உழுது பயிரிட்டு வந்த உழவர்கள் இருந்தனர். உழவர்கள் நிலத்தினை உழுது பயிரிடும் அடிமை ஊழியர்களாக இருந்தனர். தம்முடைய பிரபுவிடம் அந் நிலத்திற்கு உரியவர்கள் என்ற காரணத்தினால் கட்டுப்பட்டுக்கிடந்தனர். நார்மண்டியில் உழவர்களோ, மாவீரர்களோ தங்கள் விருப்பப்படி தங்களுடைய கீழாள் (Vassal) தன்மையினை ஒரு பிரபுவிடமிருந்து மற்றொரு பிரபுவிற்கு மாற்றிக்கொள்ள முடியாது. ஆனால் இங்கிலாந்தில் ஆங்கில-டேனிஷ் மக்களின் ஆட்சிக் காலத்தில், நில ஆட்சிக்கு ஓர் அளவிற்குட்பட்ட நில மானியப் படை முறையில் பல தனிவுரிமை நிலவுடைமையாளர்கள், தங்கள் விருப்பம் போல் ஒரு பிரபுவிடமிருந்து மற்றொரு பிரபுவிடம் மாற்றிக்கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர். எனவே, ஸ்கான்டிநேவிய அல்லது ஆங்கில-சாக்சானிய சமூகத்தைக் காட்டிலும், நார்மானிய சமூகம் ஓரளவிற்கு உரிமைகளற்றதாகவே இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். ஆனால், அச் சமூகம் நிலையானதாகவும், போர்க் காலத்திற்கும் அமைதிக் காலத்திற்கும் ஏற்ற வண்ணம் மிக்க திறமையோடு அமைக்கப்பட்டதாகவும் இருந்தது.

சாக்சானிய இங்கிலாந்தைக் காட்டிலும் நார்மண்டியில் சமூகப் படைத்துறை அமைப்புகள் பெரிதும் கண்டிப்பான நில மானியப் படைமுறை அமைப்புகளாக இருந்தன. ஆயினும் அரசியல் அமைப்பில் நிலமானியப் படை முறையின் செல்வாக்கு சிறிதளவாகவே இருந்துவந்தது. நில மானியப் படைமுறையின் அடிப்படையில் ஆட்சிபுரியப்படும் எந்நாட்டு அரசனும் கனவிலும் செலுத்தக் கருதமுடியாத அதிகாரத்தினை நார்மானியக்

கோமகன் ஆட்சித் துறையில் பெற்றிருந்தார். அவர்கள் தங்கள் பிரபுக்களிடத்துத் தங்கள் மேலாண்மையைச் செலுத்தத் தொடங்கினர். பிரான்சின் நில மானியப் படை முறை அரசர், நார்மானியக் கோமானிடத்துத் தெளிவில்லாத மேலாண்மையைப் பேரளவிற்குச் செலுத்துபவராக இருந்தார். ஆனால், அவருடைய ஆட்சிக்குட்பட்ட மாநிலங்கள் அனைத்திலும் அவருக்கு எத்தகைய அதிகாரமுமின்றி அவர் வாழ்ந்துவந்தார். அவர் வாழ்ந்த பாரிஸ் நகரைச் சுற்றியுள்ள அரசின் நிலப்பகுதியில் மட்டும், ஓரளவிற்கு அவர் செல்வாக்குடையவராக வாழ்ந்தார். சிறப்பு மிக்க கோமகனுடைய ஆட்சிப் பகுதியில் (Duchy) கோமகன் நிலமானியப் படைத் தலைவராக மட்டும் விளங்காமல் அதற்கு மேற்பட்ட பேராற்றலும் பெருஞ் சிறப்பும் உடைய குறுநில மன்னரைப் போன்றும் வாழ்ந்தார். நார்மண்டியில் சிறப்புற்று விளங்கிய முடியாட்சின் உண்மையான சிறப்பியல்பு, அது ஸ்காண்டிநேவிய முடியாட்சிப் பண்பினையோ பிரஞ்சு முடியாட்சிப் பண்பினையோ பின்பற்றி அமைக்கப் படாமையாகும். வெற்றி வீரரும், அவருடைய பிள்ளைகளும் தங்கள் நாட்டின் இத்தகைய தனிச் சிறப்பு வாய்ந்த முடியாட்சிப் பண்புகளை இங்கிலாந்திற்குத் தங்களுடன் கொண்டு வந்தனர். அவற்றை அடிப்படையாகக் கொண்டு அங்கு இருந்த ஆங்கில அரச பதவியை அவர்கள் வலிமைபெறச் செய்தனர்; பிரான்சு, ஜெர்மனி அல்லது ஸ்பெயின் முதலிய நாடுகளில் எல்லாம் காணமுடியாத மாண்பு மிக்க இடைக்கால முடியாட்சியை இங்கிலாந்தில் அவர்கள் வளர்த்தனர்.

நார்மானியரின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதியில் பெரிய பிரபுக்களின் காணியாட்சி (Baronies)ப் பகுதிகள் இருந்தாகத் தெரியவில்லை. கோமான்களைத் தனிப்பட்ட எந்தப் பிரபுவும் செருக்குடன் எதிர்ப்பதற்குப் போதிய ஆற்றல் உடையவர்களாக இல்லை. அருளாளர் எட்வர்டின் ஆட்சிக்காலத்தில், இங்கிலாந்தில் சிறப்புற்று விளங்கிய கோமான்களின் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களும், பிரான்சில் காணப்பட்ட இம்மாநில அரசுகளும், நார்மண்டியில் இதுவரை இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நார்மானியக் கோமகன் தமக்கென உண்மையான ஆட்சித்துறை அதிகாரிகளைத் தம்முடைய பொறுப்பில் அமர்த்தியிருந்தார். அவர்கள் பொதுமக்களுக்குரிய கடமைகளைச் சீராகச் செய்வதில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடைய கடமைகள் கோமகனின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் வழக்கு மன்றத் தலையாரிகள் (Bailiff) செய்து வந்த வேலைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டனவாகும். இவ்வதிகாரிகள் விகாம்டிகள் (Vicomtes)

எனப்படுவர். அவர்கள் கோமானின் வருவாயாகிய வரிகளைத் தண்டினர்; படைகளுக்குத் தலைமை தாங்கினர். மேலும், அவர்கள் கோமகனின் முறை மன்றங்களில் நீதி வழங்கினர்; நாட்டிலே அவர்கள் அமைதியை நிலைநாட்டினர். இத்தகைய அதிகாரிகள் பிரான்சு நாட்டின் அரசரிடத்தில் இருந்ததில்லை. நார்மானியர் இங்கிலாந்திற்குள் நுழைந்த பிறகு, நார்மானிய விகாம்டிகளைப் பழைய ஆங்கிலேய நாட்டாண்மைக்காரர் (ஷெரிப்புகள்) களோடு ஒப்புமையுடையவர்களாகக் கருதினர். அதனால் நாட்டாண்மைக்காரர்களின் நிலை வலிமையுடைய தாக்கப்பட்டது. இடைக்கால ஆங்கிலேய முடியாட்சியினைத் தாங்கும் முக்கிய தூணாகை நாட்டாண்மைக்காரர்களின் ஆட்சி நிலவியது. ஐரோப்பாவில் நார்மானியரின் நிதிநிலை மிகச் சிறப்புற்றிருந்தது; அதற்கேற்ற விதத்தில் கோமகன் ஆற்றல் மிக்கவராக இருந்தார். அவர் தமக்குச் சேரவேண்டிய வரிகளைப் பணமாகவே தண்டினார். ஆனால் அதேசமயத்தில் கோமகனின் தலைவராக விளங்கிய பிரான்சின் அரசர் தீர்வைகளைப் பலவகையான பொருள்களாகப் பெற்றுக்கொண்டார். அத்தீர்வைகளை நம்பியே வாழ வேண்டி இருந்தமையால், அரசர் தம்முடைய நாட்டிலுள்ள ஒரு பண்ணையிலிருந்து பிறிதொரு பண்ணைக்குத் தம்முடைய பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு ஆண்டு முழுவதும் ஊர் ஊராகப் பயணம் செய்த வண்ணம் இருந்தார். நார்மண்டியில் கோமகனைத் தவிர வேறு யாரும் நாணயங்களை அச்சடிப்பது கிடையாது. காவற்கோட்டைகளைத் தனியாக யாரேனும் நார்மண்டியில் கட்ட விரும்பினால், அவர்கள் இசைவினைப் பெற்றே கட்டவேண்டும். கோமகன் அவற்றைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டால், உடனடியாக யாதொரு மறுப்புமின்றி ஒப்படைக்க வேண்டும் என்னும் கட்டுப்பாட்டின் மீதே தனியாகப் பிரபுக்கள் காவற்கோட்டைகள் கட்டிக் கொள்ளுவதற்கு இசைவு கொடுக்கப்பட்டது. தனியார் தங்களுக்குள்ளே போரிட்டுக் கொள்ளுவது சட்டத்திற்கு முரணானது என்று நார்மண்டியில் அறிவிக்கப்படாவிட்டாலும், கோமகனின் அதிகாரத்தினால் அவை கட்டுப்படுத்தப்பட்டும், குறைக்கப்பட்டும் இருந்தன.

கி.பி. 1066-ல் இங்கிலாந்தின் மீது நார்மானியர்கள் படையெடுத்தனர். ஒரு தனிப் படைத் தலைவன் கீழ், தற்சமயம் போருக்குப் பதிவு செய்து கொண்ட உலகக் குடிமகக் கோட்பாடும் துணிவும் மிக்க வீரர்களின் கூட்டம் இங்கிலாந்தைத் தாக்கியது, நார்மானியப் படையெடுப்பில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியாகும். ஐரோப்பியப் பெருநிலப் பரப்பில் அந்நாளில்

மிகச் சிறந்த முறையில் நிறுவப்பட்டிருந்த அரசு ஒன்றினால் இங்கிலாந்து தாக்கப்பட்டது என்பதனை நாம் மறத்தலாகாது. அவ்வரசிடத்துப் புதிதாகக் கைப்பற்றப்பட்ட பரந்த, நன்கு ஒற்றுமையடையாத நாட்டில், விரைவாகப் பரவும் திறமையும் தனிச் சிறப்புமுடைய நிலையங்கள் பல நார்மானியரிடத்து இருந்தன. நார்மானிய அரசின் நிலையங்களைக் காட்டிலும் இங்கிலாந்திற்கு நார்மானியக் கோமகனும், மக்களும் தங்களுடன் கொண்டு வந்த மனப் பழக்கமும், செயற் பழக்கமும் மிக முக்கியமானவையாகும். வில்லியம் இங்கிலாந்தின்மீது படையெடுப்பதற்கு நெடுங் காலத்திற்கு முன்பே, நார்மண்டியிலிருந்த கலகக்காரப் பிரபுக்களை அடக்கியொடுக்கினர். தம்முடைய பெற்றோர்களைப் பற்றித் திட்டவட்டமாகக் கூறமுடியாதநிலையில் 'வைப்பாட்டி மகன்' என்று இழித்துப் பேசப்பட்ட வில்லியம் எட்டு வயதுப் பையனாக இருந்த பொழுதே நிலமானியப் படைமுறையினால் உண்டான சீர்கேடுகளையும், அரசியல் குழப்பத்தையும் கண்டு உள்ளம் வருந்தினர். அதனால்தான் அவர் பிற்காலத்தில் மக்களை அவமதித்து நடந்ததோடு, தம்மை அடிபணிந்து நடக்குமாறு அவர்களை வற்புறுத்தலானார்.

நார்மண்டியிலுள்ள திருச்சபை, கோமகனின் அதிகாரத்தோடு நேசவுறவு கொண்டிருந்தமை இறுதியாகக் குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க செய்தியாகும். பிற்காலத்திய கோமகன்கள் டேனிய ஓடன் வழிபாட்டு நெறியிலிருந்து புதிதாகப் பிரெஞ்சுக் கிறிஸ்துவ சமயத்திற்கு மாற்றப்பட்டனர். அதனால் சமயப் பேரார்வம் உடையவர்களாக இருந்தனர். எனவே, அவர்கள் தங்கள் புறச்சமய முன்னோர்களால் அழிக்கப்பட்ட மடாலயங்களையும் திருக் கோயில்களையும் பழுது பார்த்துப் புதுப்பித்தனர்; அவற்றைப் புதிதாகவும் கட்டினர். மீண்டும் அவற்றிற்கு அறக் கட்டளைகளை அவர்கள் அளித்தனர். அவர்கள் திரும்பவும்எல்லாப் பாதிரிமார்களையும், மடாலயத் தலைவர்களையும் அவரவர்களுடைய இடங்களில் அமர்த்தினர். எனவே திருச்சபையின் தலைவர்கள் அனைவரும் கோமகனின் கருத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் அலுவலர்களாயினர். அவர்களுள் சிலர் திருச்சபையினர் உடையில் போரிடும் பிரபுக்களாக இருந்தமை மறுக்க முடியாத உண்மையாகும். வெற்றி வீரரின் ஆற்றல் மிக்க குடிமகன் விலங்குத் தன்மை வாய்ந்த கலகக்காரரான ஒடோ (Odo) என்னும் அவருடைய இளவலாவார். அவர் சிறு பையனாக இருந்தபொழுதே வில்லியம் பேயாவின் (Bayeu) பாதிரியாக அவரைக் கட்டாயப் படுத்தி அமர்த்தினர். ஒடோ தம்முடைய 'நூறு' வட்டத்தையும், இருபது மாவீரர்களையும் கொண்டு போருக்குச் சென்றார். குரு

மார்கள் வாளினைக் கையிலேந்திக் குருதியைச் சிந்துவதைத் திருச்சபை கண்டித்தது. அதனால் அவர் ஹேஸ்டிங்ஸ் போர்க் களத்தே தம்முடைய பதவியைத் துறந்து போரிட்டார்.

நார்மானியத் தலைமைக் குருமார்களுள் மற்றவர்கள் எல்லாரும் மிகச் சிறந்த நிலையிலிருந்தனர். பதினோராம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் சமயத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற ஆற்றல் மிக்க இயக்கம் ஒன்று உருவாகி வந்தது. குளூனிய மடாலய மறு மலர்ச்சி கோமகன்களால் போற்றப்பட்டது. அதற்கு அவர்கள் வழிகாட்டிகளாகவும் இருந்தனர். நாட்டுச் சமய, கல்வி நிலையங்களிலிருந்து நெடுந் தொலைவிலுள்ள இங்கிலாந்தில், கிறிஸ்துவ அல்லது புறச்சமயச் சார்புடைய மக்கள் இடையே நெடுங்காலமாகக் காட்டுமிராண்டித்தனம் அமைதியாக ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் இங்கிலாந்தில் [1] ஆல்ப்ஸ் மலைக்கு அப்பாலுள்ள பேரறிஞர்களுடைய கருத்தைக் கவரத்தக்க, பெக்கு (Bec) போன்ற பேராற்றல் வாய்ந்த மடங்கள் பல தோன்றின. பேவியாவைச்சார்ந்த லான் பிராங்கும் (Lan frank of Pavia), ஏவோஸ்டாவைச் சேர்ந்த ஆன்சலமும் (Anselm of Aosta) போன்றோர் பெக்கிற்கும், காண்டர்பரி தலைமைக் குருமார்களுக்கும் முன்னோடியாக அமைந்தனர். இடைக்காலத்திய கல்வியும் சமயமும் உலகக் குடிமகக் கோட்பாடுடையனவாக இருந்தன என்பதைத் தெளிவாக விளக்கும் நிகழ்ச்சிகள் பற்றிய சான்றுகள் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. இதற்கு மாறாகப் பெரும்பாலான மக்கள் தங்கள் ஊர்களில் தனித்தே வாழ்ந்ததற்கும், தங்கள் ஊரை விட்டு வெளியே போக முடியாமல் இருந்தமைக்கும் காரணம் தாங்கள் அடிமை ஊழியர்களாக இருந்தமையாலா, அல்லது போக்குவரத்துக்குரிய வசதிகள் இல்லாமையாலா, என்பதும் தெரியவில்லை. அக்காலத்தில் ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையே தொடர்புண்டாவதற்கு நிலவியல் சமூகத் தடைகள் பெரு முட்டுக்கட்டைகளாக இருந்தன. ஆனால் தேசியத் தடைகள் அக்காலத்தில் அரிதாகவே இருந்தன. நெடுந்தொலைவிலுள்ள இத்தாலிய நாட்டிலிருந்து லான்

[1] கி. பி. 1001 அளவில், நார்மண்டியில் இருக்கும் குருமார்களுள் படிக்கத் தெரிந்தவர்கள் மிக அரியராகவே உள்ளனர் என்று பார்க்கண்டியில் இருந்த துறவி ஒருவர் அறிவித்துள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது.

Haskins : Normans in European History P. 164

பிராங்கு, ஆன்சலம் ஆகியோர் ரோமானியச் சட்டத்தைப் பற்றிய அறிவையும், அண்மைக் காலத்துத் தோன்றி வழக்கி லுள்ள சமய சித்தாந்தத்தையும், தத்துவத்தையும் முதலில் நார் மண்டிக்கும், அதன் பிறகு அங்கிருந்து இங்கிலாந்திற்கும் கொண்டுவந்தனர். அவர்களை 'அயல் நாட்டவர்' என்று இங் கிலாந்து நாட்டு மக்களுள் யாருமே குறை கூறியதில்லை. பல் கலைக் கழகங்கள் சிறப்புற்று விளங்கிய காலத்திற்கு முன்பு, பெக்கு (Bec) போன்ற மடங்களே முக்கிய கல்வி நிலையங் களாக மக்களுக்குத் தொண்டாற்றின. அச்சமயத்தில் நார் மானிய நிலப் பகுதிகளில் எல்லாம், சிற்பக்கலை அதனுடைய மாபெரும் அழியாத முத்திரைகளைப் பொறித்துக் கொண்டிருந் தது. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில்தான் மாபெரும் கற்கோட்டைகள் கட்டும் வழக்கம் தொடங்கியது. எனினும், வெற்றி வீரர் இங்கிலாந்தினுள் நுழைவதற்கு முன்பே, நார் மானிய மடாலயங்களையும், தலைமைக் கோயில்களையும் இங்கி லாந்து மக்கள் கட்டத் தொடங்கியிருந்தனர்.

இங்கிலாந்தின் பிற்கால முன்னேற்றத்திற்கு உதவிய முக்கியமான சில துறைகளில், ஐரோப்பியப் பெருநிலப் பரப்பி லுள்ள பிற காட்டுமிராண்டி மக்களைக் காட்டிலும் நார்மானியர் கள் முதன் முதல் முன்னேற்றம் அடைந்தவர்களாக இருந்தனர். ஆயினும், நாம் அவர்களை நாகரிகம் அடைந்த மக்கள் என்று கூற முடியாது. ஒரு சில நார்மானியக் குருமார்கள்தான் கல்வி கற்றிருந்தனர். அவர்களைத் தவிர, மற்ற நார்மானிய உயர் குடி மக்கள் தொடக்க நிலைக் கல்வியை அறியாதவர்களாகவே இருந்தனர். அவர்களுள் வாதாடுவதற்கு வழக்கறிஞர்கள் கிடையாது; குருமார்களைத் தவிர வேறு அலுவலர்கள் இல்லை. இடைக் காலத்தின் பிற்பகுதியில் சிறப்புற்று விளங்கிய சொகுசு மிக்க ஆடம்பர வாழ்க்கை, கலை, பெருவாணிகம், ஏழை எளி யோரைக் காக்கும் வீரப்பெருந்தகைமை (Chivaly) முதலியன இக்காலம் வரை நார்மானியர்களிடத்துத் தோன்றியதாகத் தெரியவில்லை. அத்தகைய கலையின் சாயலைச் சிறிதளவுகூட நார்மானியப் பண்டைப் பிரபுக்களின் மரக்கோட்டைகளிலும், சிற்சில சமயங்களில் கற்களால் கட்டிய நிலவறைகளிலும் (Don Jons) காண்பது அரிதாகும். நார்மானியர்கள் அதே காலத்தில் இங்கிலாந்தில் வாழ்ந்த ஆங்கில-சாக்சானியர் களைப் போன்று மனிதத் தன்மையற்ற கொடியவர்களாகவே இருந்தனர். இங்கிலாந்து மக்களைக் காட்டிலும் கொடிய செயல் களைச் செய்வதிலும், கலகமும் குழப்பமும் உண்டாக்குவதிலும், நார்மானியர் பெரிதும் ஈடுபட்டிருந்தனர். கலகக்காரர்கள்

சிறைப்படுத்தப் பட்டோர் முதலியவர்களுடைய கை கால்களை வெட்டுவதும், கண்களைப் பிடுங்கியெடுப்பதும், மக்கள் கூட்டத்தை மொத்தமாகக் கொன்று குவிப்பதும், மாவட்டங்கள் முழுவதையும் வெளிப்படையாக அழித்தொழிப்பதும் நார்மானியப் போர் முறையில் காணப்பட்ட சிறப்பியல்புகளாகும். இங்கிலாந்து தன்னுடைய மக்களை இத்தகைய கொடுமைகளுக்குப் பலியிட்டுத் தானும் அவற்றை நார்மானியரிடமிருந்து கற்றுக் கொண்டது. இக்காலத்தில் நார்மானியர் திருச்சபையிடத்துப் பெரும் ஈடுபாடுடைய கிறிஸ்தவர்களாக மாறியிருந்தனர். ஆயினும் அவர்களிடத்துப் புறச் சமயத்தைச் சார்ந்த வைக்கிங்குகளிடத்துக் காணப்படாத, மனிதப் பண்பிற்குப் புறம்பான பல கொடிய காட்டுமிராண்டிப் பழக்க வழக்கங்கள் இருந்துவந்தன. ஆனால் அறிவிலும், அமைப்புமுறைத் திறனிலும் நார்மானியர் மிகவும் முன்னேற்றம் அடைந்தவர்களாக இருந்தனர். காட்டுமிராண்டி மக்களுக்குச் சமுதாயத்தை அமைக்கும் முறைகளைத் திருச்சபை கற்றுக் கொடுத்தது. திருச்சபையே மக்களை மனித இனத்தையும் நீதியையும் நோக்கி முதன் முதலில் அடிவைத்து நிற்குமாறு கற்பித்தது. இவ்வாறு இதற்கு முன் மாதிரியாக அமைந்த திருச்சபையைக் காட்டிலும், நார்மானியரிடத்துச் சமுதாய அமைப்பே சிறப்புற்று விளங்கத் தொடங்கியது.

நார்மண்டியின் கோமகனுக்குரிய அதிகாரம் இங்கிலாந்திற்கு மாற்றப்பட்ட பொழுது, அது இங்கிலாந்தில் 'அரசர் பெருமானின் அமைதி' பெருஞ் சிறப்புற்று விளங்க உதவியது உண்மை. ஆனால், வெற்றி வீரரின் நார்மண்டி எப்பொழுதும் அமைதியற்றதாகவே இருந்து வந்தமை கருதத்தக்கது. இடைவிடாது அந்நாட்டில் தனிப்போர்களும், பொதுப் போர்களும், கொடுமை நிறைந்த மானக் கேட்டிற்குரிய பல வகையான நிகழ்ச்சிகளும் நடந்து கொண்டிருந்தன. இவ்வாறு நார்மண்டி இடைக்கால நிலமானியப்படை முறை மாநிலத்திற்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாக விளங்கியது. இடைக்கால உலகில் வாழ்ந்த மக்கள் கிறிஸ்துவ சமய ஆட்சியின் ஒருமைப் பாட்டை நன்குணர்ந்திருந்தமையால், அக்காலத்திய உலகம் அமைதியும், பாதுகாவலும் உடையதாக இருந்திருக்கும் என்று எண்ணுவது தவறாகும். தற்கால உலகில் தேசிய இன அடிப்படையில் நடத்தப்படும் பெரும்போர்க் கொடுமைகளினாலும், இன வெறியால் உண்டாகும் வெறுக்கத்தக்க கொடுமைகளினாலும் அக்கால உலகம் துன்புற்றிருக்காது என்பது மட்டும் உண்மை. அதற்கு ஒரு காரணம் உண்டு என்பதையும் நாம் மறத்தலாகாது. அமைப்புத் திறனில் இருந்து வந்த குறைபாடும் போக்குவரத்து

முறையில் அக்காலத்தில் இருந்து வந்த இடர்ப்பாடுகளும், இன்னல்களும், பிரான்சையும், ஜெர்மனியையும் இன அடிப் படையில் நாட்டுப்பற்றைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டவில்லை. மேலும், அவை ஓரினம் மற்றோர் இனத்தை எதிர்த்துப் போரிடவும் தடைகளாக இருந்து வந்தன. ஆனால், அவை எப் பொழுதுமே தன் நாட்டினுள் உள்ள குறுநிலத் தலைவர் களோடு இடைவிடாது போரிட்டுக் கொண்டே இருந்தன. தனி மனிதரின் தன்னல வெறியின் காரணமாக அப்போர்கள் நடை பெற்றாலும், அவை மிகமிகக் கடுமையானதாகவும், மூர்க்கத் தனமானதாகவும் இருந்தன. நிலமானியப் படைமுறை உலகில், அண்டை வீட்டுக்காரர்கள் ஒருவரோடு ஒருவர் போரிடத் தயாராகக் காத்துக்கொண்டிருந்தனர். இறப்பும், அநீதியும், மானக் கேடுமே அக்காலத்திய மக்கள் வாழ்க்கையின் சாபக் கேடாக இருந்துவந்தன. ஆனால் நார்மானியக் கோமகன் தன்னுடைய அலுவலகத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்து முற்றிலும் மாறானதாகும். நெடுந் தொலைவிலுள்ள சிறந்த வாழ்க்கை நிலைகளை நோக்கித் தங்கள் கருத்துகள் பயணம் செய்வதாக அவர்கள் கருதினர். இத்தகைய சிறந்த எண் ணத்தை ஒரு சிறிய தீவின் அரசு, செயலில் நிறைவேற்றுவது அரிது. ஒரோவழி அது நிறைவேற்றப்படுமானால், சில தலைமுறை களில், இடைக்காலத்திய அரசுகளில் வழக்கமாகக் காணப்படும் கலகமும், பேரழிவுமில்லாத சிறந்ததொரு சமுதாயத்தினை அமைப்பதற்கு அது வழிகாட்டியாக அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இதற்கிடையில் இங்கிலாந்து நாட்டு மக்கள், அயலார் படை யெடுப்புகளால் உண்டாகும் அல்லல்கள் ஒன்றும் இல்லாமல் அமைதியாக வாழ்ந்தனர். ஆயினும் அவர்கள் பிரிட்டானியத் தீவின் ஒற்றுமையை நிலைநாட்டுவதைப் பற்றியும், ஆற்றல்மிக்க முடியாட்சியை அமைப்பதைப் பற்றியும் சிறிதளவும் சிந்திக் காமலும் நாட்டின் முன்னேற்றைப் பற்றிக் கருதாமலும் என்றும் போலவே இருந்து வந்தனர். கான்யூட்டின் பிள்ளைகள் தங்கள் தந்தை நிறுவிய நார்ட்டிக்கு இனத்தின் கடல் கடந்த பேரரசைத் தொடர்ந்து கட்டிக்காக்கத் தவறினர். மேலும், அவர்கள் இங்கிலாந்தை டேனியருக்குரிய நாடாக டேனிய சட்டத்தைக் (Dane law) கொண்டு ஆளவும் தவறினர். அதனால் ஆல்பிரட்டின் அரச மரபிலே வந்தவர்கள் மீண்டும் இங்கிலாந்தின் ஆட்சியைக் கைப்பற்றினர். அவ்வரச மரபில் தோன்றிய எட்வர்டு என்னும் அரசிளங்குமரன் இங்கிலாந்தில் டேனியர்களின்

ஆதிக்கத்திற்குச் சமாதி கட்டினன். அவ்வரசனையே நெடுங் காலத்திற்குப் பிறகு வந்த மக்கள் அருளாளர் (Confessor) எட்வர்டு (கி. பி. 1042—1066) என்று போற்றிப் புகழ்ந்தனர். அவர் எந்நிலையையும் எப்பொழுதும் சமாளிக்கும் திறனில்லாதவரான எதெல்ரெட்டு (Ethelred the Redeless) என்னும் அரசருக்கும், நார்மண்டியின் முன்னைய கோமகனுடைய மகளான எம்மா (Emma) என்னும் அரசிக்கும் பிறந்த மகனவார்.

ஆங்கிலேய இனத்தவர் ஆட்சிக்குத் திரும்ப வந்தமையால் ஸ்காண்டிநேவியருடைய ஆதிக்கம் இங்கிலாந்தில் அழிந்தொழிந்தது. ஆயினும், இவ்வரச மரபினர் மீண்டும் ஆங்கில-சாக்சானிய நாட்டினை முன்னேற்றப் பாதையினுள் செலுத்தத் தவறினர். ஆல்பிரட்டாகிலும் அல்லது ஹாரால்டாகிலும் அத்தகைய ஏற்ற சூழ்நிலையில் போட்டியின்றி அரசராகி இருப்பாரானால், நார்மானியர் தலையிடாவண்ணம் இங்கிலாந்தை ஒன்றுபடுத்தவும், சீர்திருத்தி அமைக்கவும் அவர்கள் அரும்பாடுபட்டு ஒரு வழியைக் கண்டுபிடித்திருப்பர். ஆனால் அருளாளர் வெளிக்குத்தான் ஆங்கிலேயரின் அரசராக விளங்கினரே ஒழிய அவர் உள்ளூர மனத்தளவில், தாம் ஆங்கிலேயர்களின் அரசர் என்ற எண்ணம் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை; அவர் பிரஞ்சு நாட்டுத் துறவியாகவே உள்ளத்தாலும் உடலாலும் வாழ்ந்தார். அவருக்குச் சிறிதளவு கூட அரசியல் அறிவு இருந்ததாகத் தெரியவில்லை; அரசியலில் செயற்கருஞ் செயல்களைச் செய்து சிறப்புற வேண்டும் என்ற பேரார்வமும் அவருக்கு இல்லை. நார்மானியக் குருமார்களிடத்தே தோன்றிய கோட்பாடுகளைக் கண்ட எட்வர்டின் உள்ளம், அப்புதிய சமய வாழ்வினல் தூண்டப்பட்டது. டேனியர் இங்கிலாந்தினை ஆண்டபொழுது, அவரை நாடு கடத்தி இருந்தனர். அப்பொழுது நார்மண்டியில் இருந்த துறவிகளுடனே நெடுங்காலம் அவர் நெருங்கிப்பழகினர். அவர்களுடன் சேர்ந்து உணவினை உண்டும், ஒன்றாக உறைந்தும் வாழ்ந்தார். அவர் சிறு பிள்ளையாக இருந்த பொழுது, நாடு கடத்தப்பட்டமையால் எட்வர்டு நார்மண்டியில் சென்று தங்க நேர்ந்தது. அவர் இங்கிலாந்திற்கு நடுத்தர வயதுடைய மனிதராகவே திரும்பி வந்தார். அவருடைய தாயார் நார்மானிய இனத்தைச் சார்ந்தவராக இருந்தமையால், எட்வர்டு பிறக்கும் பொழுதே பாதி நார்மானியக் குருதிக் கலப்பு உடையவராக இருந்தார். எனவே அவர் இங்கிலாந்தின் அரசுகட்டிலைத் திரும்பக் கைப்பற்றிய பொழுது, டோவரில் முதன்முதல் காலெடுத்து வைத்த இரண்டாம் சார்லசைவிட மிகக் குறைந்த அளவில் ஆங்கிலேய இனப் பண்புகளும் இன உணர்ச்சியும் தம்மிடத்து உடையவராக

இருந்தார். ஒரு கால் எட்வர்டு பிரஞ்சு மொழியில் சிந்தித்தும், பிரஞ்சு மொழியிலேயே பேசியும் வாழ்ந்து இருக்கலாம். நார்மானியர் இங்கிலாந்தினை எளிதில் கைப்பற்றுவதற் குரிய வழி வகைகளை அமைத்துத் தந்த பெருமையே எட் வர்டிற்கு உரியதாகும். நார்மானியர் இங்கிலாந்தின் மீது படையெடுத்து, எளிதில் அதைக் கைப்பற்ற வழி வகுத்துத் தந்த பெரியார் அருளாளர் எட்வர்டு என்று ஆங்கிலேய மக்களின் வரலாறு பேசுமாறு அவர் நடந்துகொண்டார். நார் மானியர் படையெடுத்து வருவதற்காக எட்வர்டு ஆற்றிய அரும் பணிகள் மிகச் சிலவாயினும், அவர் செய்யாமல் விட்டுச் சென்ற செயல்களே நார்மானியருக்குப் பேராதரவும், பேருதவி யும் தரும் வகையில் அமைந்தமை, இங்கு நினைவு கூரத்தக்க தாகும்.

நார்மானியர்களுக்கு மிக உயர்ந்த பதவிகளை அளிப்பதே அவருடைய சிறப்பு மிக்க கொள்கையாகும். இங்கிலாந்தின் அரசிலும், திருச்சபையிலும் எத்துணை அளவிற்கு நார்மானியர் களுக்கு இடம் அளிக்க முடியுமோ, அத்துணை அளவிற்கு அவர் மிக உயர்ந்த பதவிகளில் நார்மானியரை அதிகாரிகளாக அமர்த்தினர். அவருடைய வாழ்க்கையின் சிறந்த பகுதியினை நார்மண்டியில் கழித்தமையால், நேரடியாகப் பழகிய நார்மானி யருக்கும் நண்பர்களுக்கும், தாம் இங்கிலாந்தின் அரசரானவுடன் பெரும் பதவிகளை எட்வர்டு அளித்துவந்தார். அத்துடன் இங்கிலாந்தில் தமக்குப் பகைவனைத் தோன்றிய பெருஞ் செல் வாக்கும், பேராற்றலும் வாய்ந்த காட்வின் கோமனுக்கு எதிராகத் தம்மைப் போற்றி ஆதரிக்கும் ஆதரவாளர் கூட்டம் ஆற்றலுடையதாகவும், மிகப் பெரியதாகவும் இருக்க வேண்டும் என்று எட்வர்டு கருதினர். அதனால், தம்மிடத்து நம்பிக்கையும் பற்றுறுதியும் உடைய நார்மானியர்கள் பலரை இங்கிலாந்திற்கு அழைத்து வந்து, உயர்ந்த பதவிகளில் அமர்த்திச் சிறப்புற்று விளங்குமாறு செய்தார். எட்வர்டை இங்கிலாந்தின் அரச ராக கோமகன் காட்வினே அமர்த்தினர். உலகில் 'அரசர்களைப் படைப்போ' ராகச் (King makers) சிறப்புற்று விளங்கிய மற்ற வர்களைப் போலவே, காட்வினும் அரண்மனையின் மேயராக (Mayor) விளங்க விரும்பினர். எனவே தம்முடைய நார்மானிய மக்களின் உதவியில்லாமற் போனல், தம்முடைய பேராற்றல் வாய்ந்த குடிமகனுகிய காட்வினை எதிர்ப்பதற்கு அறிவாற்றலும் உள்ள உரமும் அற்ற அருளாளர் எட்வர்டு ஒன்றும் தம்மால் செய்ய இயலாது என்று அஞ்சினர்.

பல நார்மானியர்களை எட்வர்டு மிக உயர்ந்த பாதிரிகளாக்கினர். அவர்களுள் சுமேகியைச் சேர்ந்த ராபர்ட்டு (Robert of Jumeiges) என்பவரை எட்வர்டு இங்கிலாந்தின் தலைமைக்குரு (Primate) வாக்கினர். ஐரோப்பாவிற்குத் தலைவாயில்களாக இருந்த சஸ்ஸக்ஸ் துறைமுகக் குழுவினை, அரசர் நார்மானியர் கையில் ஒப்படைத்தார். நார்மானியக்கோமகன் ரால்ப்பு (Ralph) என்பவரிடத்து ஹெர்போர்டு ஷையர் ஒப்படைக்கப்பட்டது. இதனல் வெல்ஷ் மார்ச் (Welsh March) குடும்பிற்கு அவர் தலைவராக்கப்பட்டார். நெடுந்தொலைவிற்கப்பால் முல்லை நிலத்தின் இடையேயுள்ள அப் பகுதியில், ரால்ப்பு நார்மானியப் படை இயல் முறையினைப் புகுத்தினர். அதே சமயத்தில் அவருடன் வந்தோருள் சிலர், அப் பகுதியில் வாழ்ந்த மக்களை நார்மானியரின் கொடுமையையும், பேராவலையும் முன்னதாகவே சுவைக்கச் செய்தனர். ரால்ப்பும் அவருடைய மாவீரர்களும் தனி மனிதரின்பொருட்டுக் காவற்கோட்டைகளை (Castle)க் கட்டினர். அப் புதிய கட்டடங்களைப் பின்னல் உண்டாகப்போகும் தீமையின் அறிகுறியாக ஆங்கில-சாக்சானியத் தனியுரிமை மக்கள் தங்கள் வெறுப்பினைத் தெரிவிக்கும் வகையில் நோக்கினர். சாக்சானியத் தேனர்களைக் குதிரைமீது அமர்ந்து, வெல்ஷ் பழங்குடி மக்களோடு போர் புரியுமாறு ரால்ப்பு பல முறை பயிற்றுவித்தார். சாக்சானியர் அவ்வாறு போரிட விரும்பவில்லை. அதனல் ரால்ப்பின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றன. இவ்வாறு ஆங்கிலேயர்கள் இக்காலத்திற்கு இன்றியமையாத குதிரைப் படைப் போர் முறையை விரும்பிக் கற்கவும், பின்பற்றவும் மறுத்தமை, ஹேஸ்டிங்ஸ் போர்க்களத்தில் அவர்கள் வீழ்ச்சியுறுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

முறை மன்றங்களில் அருளாளரின் செயலாளர்களாகவும் குடும்பப் புரோகிதர்களாகவும் (Chaplain) நார்மானியர்களே அமர்த்தப்பெற்றனர். லண்டன் மாநகரின் நடுப்பகுதியில் ‘ருயனில்’ (Rouen) இருந்த ‘ஒயின்’ (Wine) என்னும் இன் தேறல் வாணிகர்கள், வால்புருக் கழிமுகத்தில், தங்களுக்குரிய சரக்கு ஏற்றிச் செல்லும் கப்பல்களை வைத்துக் காத்து வந்தனர். எனவே, வெற்றி வீரர் வில்லியம் பேவன்சியில் (Pevensy) முதன் முதல் வந்து இறங்கிய பொழுது, இருபத்தைந்து ஆண்டுகளாக இங்கிலாந்து நாட்டு அரசியலில் தலையிட்டு வரும் நார்மானிய மக்கள் குழு ஒன்று வாழும் தீவிற்குத் தாம் வந்திருப்பதை உணர்ந்தார். மேலும் அங்கு நார்மானிய முறைகளும், பழக்க வழக்கங்களும் நன்கு பழக்கப்பட்டனவாக இருந்ததோடு அவற்றைக் கண்டு அஞ்சுபவர்களும், போற்றிப் பின் பற்றுபவர்களும் இருப்பதைக் கண்டார்.

ஆனால் எட்வர்டு செய்த செயல்களைக் காட்டிலும், செய்யாமல் வாளாப் புறக்கணித்து விட்டுச் சென்ற செயல்களே நார்மானியரின் படையெடுப்பிற்கு வழி வகுத்துக் கொடுத்த சிறப்பினையுடையதாகும். முதலாவதாகஅவர் செய்த மாபெருங் குற்றம் தமக்குப்பின் அரசுகட்டில் ஏறுவதற்குப் போட்டியுண்டாக வேண்டும் என்று விரும்பினர். அதனால் துறவு வாழ்க்கையில் தூய கற்பு நெறியை எட்வர்டு மேற் கொண்டு வாழ்ந்தார். அவர் கோமான் காட்வினுடைய மகளை மணம் புரிந்து கொண்டும், பிள்ளைப் பேற்றை விரும்பாது துறவு வாழ்க்கை வாழ்ந்தது மன்னிக்க முடியாத மாபெருங்குற்றமாகும். இரண்டாவதாக அவர் ஆட்சித் துறை மூலம் இங்கிலாந்தினை ஒன்றுபடுத்த முயலவில்லை; அதனுடைய சட்டதிட்டங்களைக் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்பத் திருத்தி யமைத்து நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பணியாற்றவில்லை. அவர் நெடுங்காலமாக இருந்து வரும் இங்கிலாந்தின் நிலையங்களைத் திருத்தி அவற்றை முன்னேற்றப்பாதையில் செலுத்தவும் இல்லை. அவ்வரும்பெரும் பணிகளைச் செய்து முடிப்பது என்பது மிக அரிய செயல் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவற்றைப் படைக்கல மேந்திய அயல் நாட்டுப் படையெடுப்பாளர் அரிதின் செய்து முடித்தனர். அவ்வாருயின், எட்வர்டு எப்பொழுதாகிலும் ஒரு முறை அவற்றைத் தொடங்கியாகிலும் வைத்திருக்கலாம் அல்லவா ?[1]

[1] பிற்காலத்தில், புனிதமான, ஆனல் மூடனை எட்வர்டை மக்கள் சமயத் தொண்டராகப் போற்றத் தொடங்கினர். இத்தகைய சிறப்பிற்கு அவர் தகுதியுடையவராக ஒருகால் இருந்திருக்கலாம். ஆனல் 'சட்டமியற்றுவதில் அவர் மாபெரும் வல்லுநர்' என்று போற்றப்படும் புகழிற்கு எட்வர்டு சிறிதும் தகுதியுடையவர் அல்லர். அவர் வளர்த்த மந்திரி பதவிக்கு வந்த மந்திரிகளை அரசர் ஒவ்வொருவரும் அருளாளரின் சட்டதிட்டங்களுக்கு அடி பணிந்து நடப்பதாக உறுதி மொழி தருமாறு கட்டாயப்படுத்தி வந்தனர். நாம் அறிந்த வரையில் எட்வர்டு எத்தகைய சட்டங்களையும் இயற்றியதாகத் தெரியவில்லை. அவர் சட்டங்களை முதன்முதலாக இயற்றிச் செயற்படுத்தியிருந்தாலும், அல்லது முன்னேர் இயற்றிய சட்டங்களைக் கடைப்பிடித்துச் செயலாற்றியிருந்தாலும், இங்கிலாந்தினை நார்மானியர் கைப்பற்றியிருக்க முடியாது. ஆனல், அவ்வாறு நார்மானியர் இங்கிலாந்தின் மீது படையெடுக்காமல் இருந்திருந்தால், எட்வர்டுக்கு இத்தகைய கற்பனையான புகழ் உண்டாகி இருக்காது. பிற்காலத்திய மக்கள் தங்களுடைய ஆங்கிலேய அரச மரபில் தோன்றிய கடைசி அரசன் எட்வர்டு என்று கருதினர். அதனல், அவரிடத்து அளவு கடந்த மதிப்பும் பற்றும் கொண்டனர். ஹாரால்டு இறுதியாக ஆண்ட ஆங்கிலேய அரசராவர். ஆனல்அவர் இங்கிலாந்தின் அரசராவதற்கு அரசுரிமையற்றவர்; தம்முடைய சூழ்ச்சித்திறனல் அரசைக் கைப்பற்றிக் கொண்டார் என்று மக்கள் நினைத்தனர். எனவே அவருக்கு முற்பட்ட எட்வர்டையே ஆங்கிலேய அரச மரபைச் சார்ந்த கடைசி அரசராகக் கருதினர். எனவே தங்கள் பிரஞ்சு நாட்டுத் தலைவர்கள் தொந்தரவு செய்தமையால் இங்கிலாந்தின் மக்கள் செயிண்ட்டு எட்வர்டின் சட்டத்தில் கையொப்பம் இட்டனர். 'எட்வர்டின் சட்டம்' என்பதை இங்கிலாந்து மாற்ருருக்கு அடிமையாகாது உரிமையோடு

இங்கிலாந்து ஆறு பெரும் மாநிலங்களாக (Earldoms) ப் பிரிக்கப்பட்டிருந்தமை நாட்டின் பல துறை முன்னேற்றத்திற்கு மாபெருந் தடையாக இருந்தது. அவ்வாறு கோமான்களின் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களாக (Earldoms) இங்கிலாந்து பிரிக்கப்பட்டமை நாட்டின் ஒற்றுமையைக் குலைத்தது. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நிலமானியப் படைமுறைப் பெருமகன் தலைவனாக அமர்த்தப் பட்டிருந்தான். ஒவ்வொரு கோட்டத்திற்கும் இருந்து வந்த தலைவனுக்குப் பதிலாக, மாநிலங்களுக்கே தலைவர்கள் அமர்த்தப்பட்டமை வேறு விளைவுகளுக்குக் காரணமாக அமைந்தது. ஒவ்வொரு மாநிலமும் ஓர் அரசாங்க அதிகாரியால் ஆளப்பட்டது. எட்வர்டின் ஆட்சிக்காலத்தில் தீமைகள் என்பது புதிய செய்தி அன்று. ரோமானியர் திரும்பிச் சென்ற நாள் முதல் இங்கிலாந்து என்றுமே உண்மையான வகையில் ஒன்றுபட்ட நாடாக விளங்கவில்லை. ஜெர்மனியிலும், பிரான்சிலும் இத்தகை முறையே இன்னும் இழிந்த நிலையில் இருந்து வந்தது. ஆனால் இங்கிலாந்து அருளாளரின் ஆட்சிக் காலத்தில் இருபதாண்டுகளுக்கு மேல் வெளி நாட்டாரின் தலையீடும் படையெடுப்பும் இல்லாமல் அமைதியாக இருந்தது. அக்காலத்தில் இங்கிலாந்தினை நார்மண்டியோ, ஸ்காண்டிநேவியாவோ தாக்கவில்லை. இவ்வாறு பொதுவாகப் பெறுதற்கரிய அமைதியையும், ஓய்வினையும், ஆற்றல் மிக்க அரசராக எட்வர்டு இருந்திருந்தால், நாட்டுமக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை வளர்ப்பதற்கும், சிதறுண்டு கிடக்கும் இங்கிலாந்தினை ஒன்றுபடுத்தி வலிமை மிக்க ஒரு நாடாக விளங்குமாறு செய்வதற்கும் பயன் படுத்தியிருக்கலாம். அதன் மூலம் அடுத்து வரப்போகும் (தவிர்க்க முடியாத) அயலாரின் படையெடுப்பினின்று இங்கிலாந்தைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால், நார்மானியரை இங்கிலாந்தின் அரசியல், திருச்சபை ஆகியவற்றுள் உயர்ந்த அதிகாரிகளாக நியமிப்பதே எட்வர்டின் அரசியல் கொள்கையாக இருந்து வந்தது. வேறு எத்தகைய அரசியல் கொள்கையும் அவருக்கு இருந்தாகத் தெரியவில்லை. மக்களிடையே குறுகிய மாநிலப்பற்றை வளர்த்து, அதன் மூலம் வடக்கிற்கும் தெற்கிற்கும் வெறுப்புணர்ச்சியை உண்டாக்கி, அவற்றைப் பிரிந்து போகுமாறு செய்வதே அவருடைய மற்றொரு அரசியல் கொள்கையாக இருந்திருக்கவேண்டும் என்று நாம்

---

இருந்த காலத்து, நடைமுறையில் இருந்து வந்த சட்டம் என்று இங்கிலாந்து மக்கள் சிறப்பாகக் கருதினர் என்று பேராசிரியர் மெயிட்லண்டு மொழிந்துள்ளார்.

Maitland : Social England, I P. 169.

கருதுமாறு அவர் நடந்து கொண்டார். காட்வின் குடும்பத்தின ரின் தலைமையின் கீழ் வெஸ்ஸக்ஸ் முதலிய கோமகன் ஆட்சிக்குட் பட்ட மாநிலங்கள் இருந்துவந்தன. அவற்றிற்கு எதிராக வட இங்கிலாந்தில் சிறப்புற்று விளங்கிய நார்த்தம்பிரியா, மெர்சியா போன்ற மாநிலங்களைத் தூண்டிவிட்டுப் போரும் பூசலும் உண்டாக்குவதில் எட்வர்டு பெருமகிழ்ச்சியுற்றார்.

இத்தகைய முயற்சிகள் ஒன்றினுள் காட்வினையும் அவர் குடும்பத்தினரையும் நாட்டைவிட்டு ஓடுமாறு (1051) எட்வர்டு செய்தார். ஆனால், அதற்கு அடுத்த ஆண்டு எட்வர்டுக்கு எதிராக ஒரு புரட்சி உண்டாயிற்று. பிளாண்டாசிலும், அயர் லாந்திலும் தலைமறைவாக வாழ்ந்து வந்த காட்வினும், அவரு டைய மகன் ஹாரால்டும் நாட்டிற்குத் திரும்பி வந்தனர். அவர்கள் கப்பலில் வந்து பல இடங்களில் இறங்கி, அக் காலத்திய கொடிய போர் முறையினைப் பின்பற்றிக் கொள்ளை யடித்தும், பகைவரைக் கொன்று குவித்தும் தாங்கள் இழந்த அரசினை மீட்கத் தொடங்கினர். அவர்கள் வருகையை அறிந்த தென் இங்கிலாந்து எழுச்சியுற்றுக் கிளர்ச்சிசெய்தது; காட்வின் சார்பாக வடஇங்கிலாந்தை எதிர்த்துப் போருக்குக் கிளம்பியது. ஆங்கிலக் கால்வாயின் கரையிலிருந்த துறைமுகங்களிலிருந்து எண்ணற்ற கடல் மறவர் தங்கள் சிறிய கப்பற்படையை ஒருங்கு திரட்டிக்கொண்டு போருக்குப் புறப்பட்டனர். அதே சமயத்தில் கோமகன் காட்வினுடைய படைகள் சஸ்ஸக்ஸ், சர்ரே ஆகிய பகுதிகளிலிருந்து ஒருங்கு திரண்டு லண்டனை நோக்கிப் புறப் பட்டன. அப்படையின் வீரர்கள் ஒவ்வொருவரும், 'வாழ்ந்தால் உரிமையோடு வாழ்வது, இல்லையென்றால் போரிலே உயிர் விடுவது' என்று வஞ்சினம் கூறிப் போர்க்களத்திற்குச் சென்றனர். இறுதியாகக் காட்வின் தேம்ஸ் ஆற்றில் தம்முடைய கப்பற் படைகளைச் செலுத்திய பொழுது, லண்டன் மாநகர மக்கள் (1052) தங்கள் 'லண்டன் பாலத்தின்' வழியாக அப்படை செல்லுவதைத் தடுக்கவில்லை. அதற்கு மாறாகக் காட்வினையே ஆதரித்தனர். அரசருக்கு உதவியாக யாரும் போரிடத் தயாராக இல்லை. இங்கிலையில் காட்வின், அரசரைத் தம்மோடு உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு கட்டளை யிட்டார். காட்வினுக்கு எதிரிகளாக இருந்த நார்மானியர் நாட்டைவிட்டு ஓடினர். காட்வினுடைய குடியைச் சார்ந்தவர்கள் அரசாங்கப் பதவிகளிலும், பண்ணைகளிலும் மீண்டும் தலைமையும் செல்வாக்கும் பெறத் தொடங்கினர்.




படம் 10

நார்மானியப் படையெடுப்பின் பொழுது இங்கிலாந்தில் இருந்த கோமகன் ஆட்சிப் பகுதிகள்

இன்னலும் இடையூறு மிக்க இவ்வாட்சியின் அடிப்படையில் அமைந்து கிடக்கும் அரசியல் உட்கோள் என்னவென்பது தெரியவில்லை. நமக்குக் கிடைத்துள்ள சான்றுகள் தொடர்பற்றனவாக உள்ளன. இதை நன்குணர்ந்த தற்கால வரலாற்றுசிரியர்களும், அக்கால அரசியல் நாடகத்தில் நடித்த முக்கியமான நாடக மாந்தரின் பண்பு நலன்களையும், கொள்கைகளையும் மதிப்பிடுவதில் பெரிதும் கருத்து வேற்றுமை உடையவர்களாக உள்ளனர். காட்வினை எளிதாகச் சட்டத்தின்மூலம் அரசர் வெளியேற்றினர். அதை தொடர்ந்து அடுத்த ஆண்டில் இங்கிலாந்து முழுவதும், நார்மானியர்மீது பெரும் வெறுப்பு உண்டாயிற்று. மக்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். அதன் விளைவாகக் காட்வினை மக்கள் நாட்டிற்குத் திரும்பி வருமாறு அழைப்பு விடுத்தனர். மேலும் அவருக்குப் பேராதரவு தந்து வரவேற்றனர் என்றும் கொள்ளுவதே பொருத்தம் உடையதாகும். ஆனால் அவரையும், அவருடைய மகனை ஹாரால்டையும் தேசிய வீரர்கள் என்று புகழ்வது தவருகும். ஏனெனில், அக்காலத்திய இங்கிலாந்தில் நாம் அறிந்தவரை 'தேசிய' உணர்வு என்பதே அரும்பவில்லை. வெஸ்ஸக்ஸில் வாழ்ந்த மக்களும், செவர்ன் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களும், டேன்லாவில் வாழ்ந்த மக்களும் ஒவ்வொருவராகவும், ஒன்றுபட்ட சமூகமாகவும் நார்மானியர்களை வெறுத்திருக்கலாம். ஆனல், அவர்கள் ஒருவரையொருவர் அறிந்திலர்; மேலும் அவர்களுக்கிடையே எத்தகைய பற்றுறுதியும் ஈடுபாடும் இருந்து வந்ததாகவும் தெரியவில்லை. பதினேராம் நூற்றுண்டில் இங்கிலாந்தைப் பாதுகாக்க வேண்டும் என்று இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்களை யாரும் தூண்டவும் இல்லை; அத்தகைய ஒற்றுமை உணர்வு இங்கிலாந்து மக்களிடையே எழவும் இல்லை. அக்காலத்திய மக்கள் தேசிய ஒருமைப்பாட்டை அறியாமலிருந்ததே அதற்குரிய காரணமாகும். இங்கிலாந்தின் ஒற்றுமை இன்றியமையாதது என்பதை அக்காலத்திய மக்கள் உணர்ந்திருப்பார்களானல், இரண்டு அல்லது மூன்று ஆயிரம் குதிரைகளைக் கொண்ட படை வீரர்களை ஹேஸ்டிங்ஸ் போரில் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்திருப்பார்கள் என்பது திண்ணம். அதன் பிறகு அவர்கள் இங்கிலாந்தைக் கைப்பற்றிப் பங்கு போடவும் விட்டிருக்க மாட்டார்கள் என்பது உறுதி.

வெற்றியோடு இங்கிலாந்திற்குத் திரும்பிய அடுத்த ஆண்டே (கி. பி. 1053ல்) காட்வின் இறந்தார். தமக்குப்பின் தம்முடைய அருமை மகனை ஹாரால்டை அரசருக்குச் சிறந்த வழிகாட்டியாகவும், வெஸ்ஸக்ஸின் கோமகனுகவும், தேம்ஸ் ஆற்றின்

தெற்கே வாழும் மக்கள் அனைவருடைய அன்பிற்குரிய இளை ஞனாகவும், பல கோட்டங்களில பரவிக்கிடக்கும் பண்ணைகளின் தலைவனாகவும் விளங்குமாறு விட்டுச் சென்றார். மேற்கண்ட பண்ணைகளை ஒரே தலைமுறையில் அவர் மிகப் பேரளவில் சேர்த்த தாகத் தெரிகிறது. அவற்றை எவ்வாறு சேர்த்தார் என்று கடுமையாக ஆராய்ந்தால், அவற்றிடத்து அவருக்குள்ள உரிமை நிலைத்து நிற்க இயலாது. ஏனெனில், காட்வினுடைய செல்வம் அனைத்தும் அவரால் சேர்க்கப்பட்டனவாகும். தொடக்க காலத்தில் அவர் சஸ்ஸக்ஸைச் சார்ந்த ஒரு தேனராகவே இருந் தார். அவருடைய அளவற்ற செல்வத்தையும், வேறு எக்குடி மகனுக்கும் இல்லாதப் பேராற்றலையும் அவர் தம்முடைய வாழ் நாளிலேயே பெற்றார். அவற்றைத் தம் பிள்ளைக்கு விட்டுச் சென் றார். அவர் ஒரு மாண்பு மிக்க மனிதராக வாழ்ந்திருக்க வேண் டும். ஆனால், அவருடைய பண்பு நலனையும், பணிகளையும் நாம் மதிப்பிடுவதற்குப் போதிய சான்றுகள் ஒன்றும் கிடைக்க வில்லை.

காட்வின் இறந்த பிறகு பன்னிரண்டு ஆண்டுகள் வரை ஹாரால்டை வெளிப்படையாக எதிர்த்துப் போரிட, அரசர் ஆற்றலற்றவராகவே இருந்தார். தேசிய ஒருமைப்பாட்டிற்கான உண்மை முயற்சிகள் அனைத்தையும் அழித்தொழிக்கும் அமைதி யின் சமநிலையாக அக்காலம் இருந்தது. அவ்விடைக் காலத்தில் எல்லா நார்மானியர்களும் இங்கிலாந்தை விட்டுப் போய் விட வில்லை. எட்வர்டு இறந்த காலத்தில் மெர்சியா, நார்த்தம் பிரியா மாநிலங்கள் எட்வின், மோர்கார் என்னும் நார்மானியர் கள் இருவரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. அவர்கள் ஹாரால் டின் ஆதிக்கத்தினை வெளிப்படையாக எதிர்க்கவில்லை. எனி னும், அவர்களுடைய நாட்டம் அனைத்தும் அயலாரின் ஆட்சிக்கு இங்கிலாந்தினை இரையாக்குவதிலேயே இருந்து வந்தது. கிழக்கு ஆங்கிலியாவின் கோமகன் ஆட்சிப் பகுதி ஹாரால்டின் உடன் பிறந்தவரான கைரித்து (Gyrth) என்பவரிடம் ஒப்படைக் கப் பட்டிருந்தது. ஆனால், அவருடைய சகோதரர்களுள் இரு வரான சுவேயன் (Sweyn), தோஸ்திக்கு (Tostig) என்போர் என்றுமே நல்லவர்களாக இருந்ததில்லை. அதனால் அவர்கள் பொது மக்களுடைய நம்பிக்கையை விரைவில் இழந்தனர். இவ் வாறு காட்வின் குடும்பத்தினரின் ஆதரவில் இங்கிலாந்து முழு வதும் ஒன்றுபட்ட ஒரு நாடாக விளங்குவதற்குரிய வாய்ப்புகளை இழந்ததோடு, நாட்டிலே அதற்கு எதிர்ப்புகளும் தலையெடுக்கத் தொடங்கியது.

இத்தகைய அரசியல் சூழ்நிலைகளுக்கு இடையேதான், புதிதாக வெஸ்ட்மின்ஸ்டரில் கட்டிய அரண்மனையில், மென்மையான உள்ளம் படைத்த எட்வர்டு, ஜனவரி 1066ல் இம்மண்ணுலக வாழ்வைவிட்டு விண்ணுலகை எய்தினர். அவருடைய ஆட்சிக் காலம் பயனற்ற ஒன்றாகப் போயிற்று. தம்முடைய அரச மரபினை இங்கிலாந்தின் அரசியல் அரங்கில் சிறப்புறச் செய்வதற்குக் கிடைத்த இறுதி வாய்ப்பையும், சாக்சானிய இங்கிலாந்து வீணாக்கியது. அரசியல் வாழ்வில் உண்டான தோல்வியின் ஒரு கூறாகவே ஆங்கில-சாக்சானிய உரைநடை, செய்யுள் இலக்கியங்கள் நலிவுற்றுக் காணப்படுகின்றன. நார்மானியப் படையெடுப்பு ஆங்கில-சாக்சானிய இலக்கியத்தை நலிவுறச் செய்யவில்லை. ஆனல், அவற்றை மீண்டும் வளர்ச்சியுருது தடுத்தது எனலாம். ஐம்பதாண்டுகளுக்கு முன்பு டேனியர்கள் படையெடுத்து வந்து இங்கிலாந்தைக் கைப்பற்றியதே, ஆங்கில-சாக்சானிய மொழி இலக்கியத்தின் நலிவிற்குக் காரணமாகும்.

மூன்ரும், ஆரும், ஹென்றிகளைப் போன்றும், மனவேதனை உண்டாகுமாறு அரசுகட்டில் ஏறிய சமயத் தொண்டர்களைப் போன்றும் அருளாளர் எட்வர்டு, அவருடைய அரசியல் தோல்விகளுக்கு இடையே, அவருக்குச் சிறப்பினைத் தேடித்தரும் சில நல்ல செயல்களையும் செய்துவிட்டுச் சென்ருர். வெஸ்ட்மின்ஸ்டர் மடாலயம் சிறந்த கட்டடக் கலை வளர்ச்சியுற்றிருந்த பிற்காலத்தில், நன்முறையில் புதுப்பிக்கப்பட்டது. என்ருலும், கிறிஸ்துவ சமய வரலாற்றில் அது சிறப்பிடத்தைப் பெறுவதற்கும் அரசியல் முன்னேற்றத்தில் முக்கிய இடத்தைப் பெறுவதற்கும் முதன்முதல் கட்டிய கட்டடங்களும், அம்மடாலயத்திற்கு அளித்த நன்கொடைகளுமாகும். எட்வர்டு நகரப் பெருஞ் சுவர்களுக்கு இடையே இருந்த தம்முடைய உறையுளை, நகருக்கு வெளியே, ஆற்றுக்கு மேல் பக்கம் இரண்டு கல் தொலைவில் முட்புதர்கள் நிறைந்திருந்த நாட்டுப்புறச் சூழலுடைய இடத்தில் கட்டப்பட்ட புதிய அரண்மனைக்கு மாற்றினர். இவ்வாறு அவர் நகருக்கு வெளியே புதிதாக ஓர் அரண்மனையை அமைத்ததற்கு ஒரு சிறந்த காரணமுண்டு. எட்வர்டு தம் வாழ்நாள் முழுவதும், தம்முடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஒருங்கே பயன்படுத்தி, செயின்ட்பீட்டருக்கு ஒரு மாபெருந் திருச்சபையைக் கட்டிக்கொண்டிருந்தார். அத்திருச்சபைக்கு அருகே தம்முடைய மாளிகை இருந்தால் பல வகையிலும் பயனுடையதாக இருக்கும் என்று கருதினர். அதனல் அவர் நகரத்திற்கு வெளியே புதியதாக ஓர் அரண்மனையைக் கட்டி, அங்கு வாழ்ந்தார். திடீரென்று அரசரது மாளிகை

வெஸ்ட்மின்ஸ்டருக்கு மாற்றப்பட்டமையால் மாபெரும் விளைவுகள் உண்டாயின. நாளடைவில், பழைய வெஸ்ஸெக்ஸின் தலைநகரான வின்செஸ்டரிலிருந்து, அரசாங்கத்தின் தலைமையிடம் மெல்லமெல்ல லண்டன் மாநகரை நோக்கி நகரவேண்டிய இன்றியமையாமை உண்டாயிற்று. சாக்சானிய முன்னோர்களைப் போன்று நார்மானியர்களும், லண்டன் மாநகரின் சுற்றுப்புறத்திற்கு வந்தபொழுது, லண்டன் மாநகரிலேயே தங்கி வாழ்ந்திருப்பார்களானால், லண்டன் மாநகரின் அரசியல் உரிமை முளையிலேயே கிள்ளி எறியப்பட்டிருக்கும். ஆனால், லண்டன் மாநகர மக்கள் நுகர்ந்து வந்த அரசியல் உரிமையே இங்கிலாந்தின் உரிமைகளைப் பேணிக் காப்பதற்குரிய பேரரணாக மன்னர் பெருமான் ஜான் காலம் முதல் ஸ்டூவர்ட்டு மன்னர்களின் ஆட்சிக் காலம்வரை இருந்து வந்தது. எனவே, பிரிட்டனின் உரிமையைக் காப்பதற்காகத் தோன்றிய பிளான்டா ஜெனட்டு பணித்துறை ஆட்சி, அரசரின் அரண்மனையைச் சுற்றி வளர்ந்தது. அது லண்டன் மாநகரில் ஆழ வேரூன்றி வளர்ந்ததோடு மட்டுமல்லாமல், வெஸ்ட்மின்ஸ்டரிலும் தழைத்தோங்கியது. வருங்காலத்தைப் பற்றிக் கணித்து அறியும் சிறந்த அரசியல் தத்துவ ஞானத்தால் இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்தனர் என்று கூற முடியாது. இறைப்பற்று மிக்க எட்வர்டின் மனத்திலே தற்செயலாகத் தோன்றிய எண்ணமே இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்தற்குரிய காரணமாகும்.


சாக்சானியர் ஆட்சியின் இறுதிக்காலத்தில் லண்டன் மாநகரம், ரோமானியரின் ஆட்சிக்குப் பிறகு, முதன் முதலாக வட ஐரோப்பிய வாணிகத்தின் பெரும் நிலையமாக விளங்கத் தொடங்கியது. இங்கிலாந்தின் பெரிய நகரங்கள் எனப்படும் மீன்களிடையே ஒரு திமிங்கிலத்தைப் போன்று லண்டன் மாநகரம் திகழ்ந்தது. ஐந்நூறு ஆண்டுகளாகப் பழுது பார்க்கப்படாது பெரிதும் காலியாக இருந்து வந்த ரோமானியப் பெருஞ் சுவர்களுக்கு இடையே இடைப்பட்ட நிலையில் லண்டன் மாநகரம் இருந்தது. இக்காலத்தில் லண்டனில் காணப்படும் இடங்களிலேயே, போக்கு வரத்துக்குரிய முக்கிய தெருக்களும், குறுக்குச் சந்துகளுள் பலவும் அக்காலத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அந்நகரில் வீடுகள் மரங்களாலேயே கட்டப் பெற்றன. அவற்றுள் பெரும்பாலானவை சந்தைக்கடைக் கூடாரங்களைப் போன்று இருந்தன. ஒவ்வொரு வீட்டின் பின்புறத்திலும், சுற்றுப்புறத்திலும் நிறைய திறந்த வெளி விடப்பட்டிருந்தது. ஆனால் சுறுசுறுப்பான, உலகக் குடிமகக் கோட்பாடுடைய இத்துறைமுகப் பட்டினத்தின் இச்சிறப்பியல்பே, வருங்காலத்தில் அது 'லண்டன்' மாநகரமாகச்

சிறப்புற்று விளங்கப் போவதை எடுத்தியம்பியது. அவ்விடத்தில் ஸ்காண்டிநேவியர், பிளமிங்குகள், ஜெர்மானியர்கள், நார்மானியர்கள் ஆகிய அனைவரும் தங்கி வாழ்ந்தனர். ஆனால், பொது மக்களிடை கிழக்கு ஆங்கிலிய வாழ்க்கை நெறியும், நாண் மரபும் செல்வாக்குற்றிருந்தன. நகரப் பெருஞ் சுவர்களை அடுத்து மூர்பீல்டு (Moorfield), ஸ்மித் பீல்டு போன்ற பல வெளிகள் (Fields) உணவுப் பொருள்களைப் பயிரிடுவதற்கும் ஆடு மாடுகளை மேய்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன. தேம்ஸ் ஆற்றில் சென்று கலக்கும் ஓடைகளில் பொருத்தப்பட்டிருந்த நீரினால் ஓட்டப்பெற்ற ஆலைகளிலிருந்து (Water-Mills) உண்டாகும் ஒலி எங்கும் எதிரொலித்தது. லண்டன் நகரின் வடக்கு எல்லைப் புறத்தில் காடுகள் நிறைந்த மலைகள் இருந்தன. செயின்ட்ஜான், ஹாம்ஸ் டெட்டு, என்பீல்டு சேஸ், ஹெர்ட்போர்டு ஷையர் முதலிய காடுகளிலும், அவற்றிற்கு அப்பால் இருந்த வேறு காடுகளிலும் நாரைகளையும், கலைமான்களையும், காட்டுப் பன்றிகளையும் காட்டு எருதுகளையும் வேட்டையாட லண்டன் நகரத்தின் பிரபுக்களும், வாணிக வீரர்களும் கழுகுகளைப் போன்று வட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

மாசற்ற எட்வர்டு இறந்தமையால், யார் அரசராவது என்பது குறித்து வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த குழப்பம் உண்டாயிற்று. அரசர் ஆவதற்கு எட்கார் ஏதலிங்கு (Edgar the Atheling) என்பவர் மிக்க உரிமையுடையவராக இருந்தார். ஆனால், அவர் சிறு பையனாக இருந்தமை சிக்கலை உண்டாக்கியது. ஆங்கிலேயரின் அரசு உண்மையிலேயே மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்குமானால், ஆங்கிலேயர்கள் தேசிய உணர்வினால் உந்தப்பட்டிருப்பார்களானால், அவர்கள் அச்சிறு பிள்ளையையே அரசராக ஏற்றுக்கொண்டிருப்பர். அவ்வரசைச் சுற்றி ஒருங்கு திரண்டு படையெடுப்பாளர் அனைவரையும் எதிர்த்துப் போரிட்டிருப்பார்கள். ஆனால், அன்றைய உலகச் சூழ்நிலையில் நாட்டில் கலகமும் குழப்பமும் உண்டாவதைக் கண்டு மக்கள் பெரிதும் அச்சமுற்றிருந்தனர். எனவே, தங்கள் நாட்டில் ஒரு சிறு பையன் அரசனானால் எத்தகைய கலகமும் குழப்பமும் உண்டாகுமோ என்று அஞ்சினர். மேலும் அப்பையனுக்கு, ஆற்றல் மிக்கவரோடு தொடர்போ, அவனை ஆதரிப்பதற்கென்று நாட்டில் தனிப்பட்ட கட்சியோ இல்லாமையால் அவர்கள் பெரிதும் தயக்கமுற்றனர். எனவே திறமை மிக்கவனாக நெடுங்காலம் அரசரிடத்து ஆதிக்கம் செலுத்திவரும் ஹாரால்டை நாடி மக்கள் சென்றதில் வியப்பு ஒன்றும் இல்லை. அவர் அரச மரபினோடு நெருங்கிய தொடர்பு உடையவர் அல்லர் என்பது உண்மை. ஆயி

னும், அவருடைய தாய் வழியாக அவர் உடலில் ஸ்காண்டிநேவிய அரசர்களின் குருதி ஓடிக்கொண்டிருந்தது. மேலும் தென் இங்கிலாந்தில் அவருக்குக் குடும்பச் சொத்தாகப் பேரளவில் பரந்த பண்ணைகள் இருந்து வந்தன. இவை யாவற்றையும் விட, அன்றைய அரசியலில் அவர் நேரடியாகப் பத்தாண்டுகளுக்கு மேல் தொடர்பு கொண்டிருந்தமையால், சிறந்த அனுபவ அறிவினைப் பெற்றிருந்தார். எனவே, ஏதலிங்கைக் காட்டிலும் நெருக்கடியான நேரத்தில் நாட்டினைப் பகைவர்களிடமிருந்து காப்பதற்கும் செம்மையாக ஆட்சி புரிவதற்கும் ஏற்ற தகுதி திறமைகள் மிக்குடையவராக ஹாரால்டு விளங்கினர்.[1]

ஹாரால்டு செயற்கரும் சாதனைகளைச் செய்து தம்முடைய பெயரை நிலைநாட்ட வேண்டும் என்னும் பேராசைக்கு அடிமையாகாது, ஏதலிங்கின் சிம்மாசனத்தைக் காக்கும் சிங்கமாக இருந்திருப்பாரானால், அவர் மிக நல்லதொரு செயலைச் செய்தவராகச் சிறப்புற்று விளங்கியிருக்க முடியும். ஆனால், அவர் தவறான முறையில் அறிவுறுத்தப்பட்டமையால், நாட்டின் அரசராக முடிசூட்டிக்கொள்ள ஒத்துக்கொண்டார். எனினும், அக்காரணத்தினால் அவர் அரசினைக் கைப்பற்றிக் கொண்டார் என்று இழித்தும் பழித்தும் கூறுவது தவறாகும். இங்கிலாந்து ஒருவர் அரசராவதற்குரிய மரபுரிமையைப் பற்றிய சட்டத்தைக் கண்டிப்பாக என்றுமே பின்பற்றியதில்லை. வயது வராத சிறு பிள்ளைகளை



அரசராக ஏற்காமல் புறக்கணிப்பது கட்டாயப்படுத்தவில்லை யென்றாலும், பொது வழக்காக இருந்து வந்தது உண்மையாகும். மரணப் படுக்கையிலிருந்த அருளாளர் எட்வர்டு தமக்குப் பின் அரசராவதற்குத் தகுதியுடையவராக ஹாரால்டை அமர்த்தி விட்டு இறந்தார். இவை யாவற்றையும் விட மூதறிஞர் மன்றம் (Witan) ஹாரால்டை அரசராகத் தேர்ந்தெடுத்தது. ஆனால் அவருடைய வலுவற்ற அரசுரிமை, ஸ்காண்டிநேவியாவை யும், நார்மண்டியையும் இங்கிலாந்தின் மீது படையெடுத்து வந்து அவர்களுடைய நாடு பிடிக்கும் பணியை நிறைவேற்றுமாறு அழைத்தது. ஏதலிங்கு அரசராக முடிசூட்டப்பட்டிருந்தாலும், அவர்கள் படையெடுத்து வந்திருக்கலாம். ஒருகால் எட்வர் டிற்குப் பிறகு அவருக்கு மகனிருந்து, ஆட்சிக்கு வந்திருந்தாலும், அவனை எதிர்த்து ஸ்காண்டி நேவியர்களும், நார்மாண்டியர் களும் படையெடுத்து வந்திருப்பார்களானால் வியப்பு அடைவதற் கில்லை. கி.பி. 1066-ஆம் ஆண்டின் கூதிர்ப்பருவத்தில், நார்வேயின் அரசரான ஹாரால்டு ஹர்டிராடா (Harald Hardrada) பெரும் படையுடன் வந்து இங்கிலாந்தைத் தாக்கினார். அதே சமயத்தில் நார்மண்டியின் கோமகனான வில்லியம் இங்கிலாந்தினைத் தாக் கினார். ஸ்காண்டிநேவியாவும் இலத்தீன் ஐரோப்பாவும் இங்கிலாந் தினைக் கைப்பற்றவேண்டும் என்று நெடுங்காலமாகப் போட்டி போட்டுக்கொண்டிருந்தன. அப்போட்டி இச்சமயம் உச்ச நிலையை அடைந்தது. ஹாரால்டு இரு பகைவர்களையும் தனித் தனியே வெவ்வேறு சமயங்களில் எதிர்த்துப் போரிடவேண்டிய நெருக்கடி உண்டாகியிருந்தால், எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றிருப்பார். ஆனால், இருமுனைத் தாக்குதல்களுக்கிடையே இச்சமயம் சிக்கிக் கொண்ட ஹாரால்டு தப்பிப் பிழைப்பது அரி தாயிற்று. நற்பேற்றினாலும், நற்பண்பினாலும் நார்மானியரே வெற்றிபெற்றனர்.

வில்லியம் இங்கிலாந்தின் அரசராவதற்குப் பெற்றிருந்த உரிமை, ஹாரால்டினுடைய உரிமையை விட அரசமரபுரிமைப் படி சிறப்புடையதாகும். ஆனால் அது ஏதலிங்கினுடைய உரி மையை விட மிகவும் இழிந்ததாகும். இந்நிலையில் நாம் வில்லியம் வைப்பாட்டியின் மகன் என்பதைப் பற்றிக் கவலைப்படாமலிருந் தால், அவன் அரசனாவதற்கு ஓரளவு உரிமையுடையவனாக இருந் தான் என்று கூறலாம். ஆனால் ஹாரால்டினை இங்கிலாந்தின் மூதறிஞர் மன்றமே அரசனைத் தேர்ந்தெடுத்தது; வில்லியம் தானா கவே அரசன் என்று அறிவித்துக்கொண்டார். ஆயினும், ஐரோப்பியப்பெருநிலப் பரப்பில் ஆட்சி செலுத்திய கிறிஸ்துவ சமயத்தவரின் அன்பையும், ஆதரவையும் எவ்வாறோ வில்லியம்

பெற்றார். அவர் அதற்காகக் காட்டிய காரணங்கள், தற்கால சிந்தனையாளரிடை இரக்கத்தை உண்டாக்குவதாக இல்லை. ஆனால், அவை பல நூற்றாண்டுகள் வரை ஹாரால்டு பொய்யான முறையில் இங்கிலாந்தின் அரசு கட்டிலை வன்முறையில் கைப் பற்றியவன் என்று தூற்றுவதற்குப் பயன்பட்டுவந்தன.

வில்லியம் இங்கிலாந்தினைக் கைப்பற்றிய உடனே, எட்வர்டு ஒரு சமயத்தில் தம்மையே இங்கிலாந்தின் அரசனுக்கு மாறு கூறிவிட்டுச் சென்றதாக அறிவித்தார். அது அவ்வாறே இருந்தாலும், எட்வர்டு கடைசியாக ஹாரால்டையே அரசனுக்குமாறு கூறிவிட்டுச் சென்றது மறுக்க முடியாத உண்மையாகும். எவ்வாறாயினும், இறக்கும் நிலையிலுள்ள அரசனுக்குத் தன்னுடைய முடியினைப் பிறருக்கு வழங்கும் உரிமை கிடையாது. மூதறிஞர் மன்றமே ஆராய்ந்து அதைப்பற்றி முடிவிற்கு வரவேண்டிய உரிமையுடையதாகும். இரண்டாவதாக, எட்வர்டு இறப்பதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னர், வில்லியம் எதிர்பாரா வகையில் தன்னுடைய கைகளில் சிக்கிய ஹாரால்டை இனி தன்னுடைய கையாளாக இருக்க வேண்டும் என்றும், தான் இங்கிலாந்தின் அரசனாவதற்குப் பல வகையிலும் உதவி புரியவேண்டும் என்றும் வற்புறுத்தினான். அதை உறுதிப்படுத்தும்பொருட்டுச் சில பழஞ் சின்னங்களின்மீது ஹாரால்டை ஆணையிட்டு உறுதிமொழி தருமாறு கேட்டு வில்லியம் வாக்குறுதி வாங்கிகொண்டார். அத்தகைய வீறுமிக்க ஆணையும், அதனை வெளிப்படையாக ஹாரால்டு மீறி இங்கிலாந்தின் அரசரானமையும் அக்காலத்திய மக்களுடைய உள்ளங்களில் ஆழப் பதிந்து விட்டன. அவர்களுடைய அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும், நீதி நிர்வாகத்திலும், நம்முடைய காலத்தைப் போன்று அல்லாமல், சமயத்தின் அடிப்படையில் ஆணையிட்டு அளிக்கப் பட்ட உறுதிமொழிகள் பேரளவிற்கு முக்கியத்துவம் உடையனவாக இருந்து வந்தன[1]. தற்காலத்திய மக்களுடைய மனம் எத்தகைய கட்டுப்பாட்டையும் விரும்புவதில்லை. அத்தகைய உள்ளங்களில் வில்லியம் நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டதுதான் நல்லது என்று தோன்றிலும் தோன்றும். ஒரு முறை ஹாரால்டு எதிர்பாராத வகையில் வில்லியமிடத்து விருந்

[1] விசாரணைக்கு வந்திருக்கும் வழக்கின் உண்மையினை அறியாமலேயே நல்லொழுக்கச் சான்று கூறுவோர் (Compurgators) ஒரு மனிதனின் குற்றமற்ற தன்மைக்காகவோ, பண்பு நலனுக்காகவோ ஆணையிட்டுரைப்பர். தற்காலத்திய குற்ற இயல் நீதித் துறையில் 'சான்றுகளைச் சோதித்தல்' என்பதுடன் அக்காலத்திய ஆணையிட்டுரைத்தல் ஒப்புமையுடையதாகும். ஆனால், அம்முறையே பெருமதிப்பு உடையதாக அக்காலத்தில் போற்றப்பட்டது.

தினைகை அகப்பட்டுக்கொண்டார். அப்பொழுது அவர் உயிர் பிழைத்துச் செல்லவேண்டும் என்ருல் ஓர் உறுதிமொழி தர வேண்டும் என்று அவரை வில்லியம் வற்புறுத்தினன். வேறு வழியின்றி ஹாரால்டு அவர் வற்புறுத்தலுக்கு இசையவேண்டியதாயிற்று. தனக்கு இங்கிலாந்தின் மன்னனவதற்கு வாய்ப்புகள் கிடைத்தாலும், தான் அரசனைகப் போவதில்லை என்று உறுதிமொழி அளித்தார். மேலும் எட்கார் ஏதலிங்குக்கு உதவி செய்வது இல்லை என்றும், தம்முடைய நாடே அதனுடைய தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ளுமாறு விட்டு விடுவதாகவும் அவர் உறுதி மொழி அளிக்கவேண்டியதாயிற்று. இடைக்கால அறநெறிக் கோட்பாடும், தற்கால அறநெறிக் கோட்பாடும் அடிப்படையில் மாறுபடும் இடங்களுள் இத்தகைய சிக்கலான உறுதிமொழிப் பிரச்சினையும் ஒன்ருகும்.

காட்வின் குழுவினர் ஸ்டிகாண்டு (Stigand) என்பவரை ஒழுங்கற்ற முறையில் இங்கிலாந்தின் சிறப்புமிக்க தலைமைக் குருவாக்கினர். இதை ஒரு கருவியாகப் பயன் படுத்திக்கொள்ள வில்லியம் முயன்ருர். இறுதியாக ஹாரால்டு, ஸ்டிகாண்டை ஆதரிப்பதாக வில்லியம் குறைகூறி ஹாரால்டின்மீது மக்களுடைய வெறுப்புணர்ச்சியை அவர் கிளப்பிவிட்டார். ஐரோப்பாவிலிருந்த போப்பு ஆண்டவரைச் சார்ந்த குழுவினர் ஸ்டிகாண்டு போப்புக்கு எதிரான கிளர்ச்சிக்காரர்களோடு தொடர்பு கொண்டிருந்தமையால், அவரைத் தம்முடைய கொள்கைக்கு மாறுபட்ட போக்குடைய சமய உட்பிரிவினரைவிட எவ்வகையிலும் சிறந்தவர் அன்று என்றே கருதினர். ஐரோப்பியப் பெருநிலப் பரப்பில் ஹில்டிபிராண்டின் (Hildebrand) ஆட்சி தொடங்கும் காலம் நெருங்கிக்கொண்டே இருந்தது. அம் மா பெரும் மனிதர் இன்னும் போப்பு ஆண்டவராகப் பதவியேற்கவில்லை. ஆனல், அதற்குள்ளாகவே அவர் ரோமாபுரியில் பெருஞ் செல்வாக்கு உடையவராகத் திகழ்ந்தார். இத்தகைய நெருக்கடி நேரத்தில், அவர் தம்முடைய செல்வாக்கினை, வில்லியத்தை ஆதரிப்பதற்காகப் பெருந் திறமையோடு பயன் படுத்தினர். திருச்சபையினைச் சீர்திருத்த விரும்பிய ஹில்டிபிராண்டின் குழுவினர் எப்போதுமே எதைப்பற்றியும் கவலைப்படாத ஆங்கிலேயக் கிறிஸ்தவரிடத்து குருமார்கள் பிரமசாரிகளாக இருப்பதை வற்புறுத்தவும், போப்பின் ஆதிக்கத்தை நிலைநாட்டவும் முயன்று வந்தனர். அவர்கள் தொன்றுதொட்டு நார்மண்டியோடு நேச உறவு உடையவர்களாக இருந்துவந்தனர். ஆனல் அவர்கள் நெடுங்காலமாகக் காட்வின் குடும்பத்தினரோடு பகைமை பாராட்டி வந்தனர். இவ்வாறு போப்பு ஆண்டவரின்

கொடிக்கீழ் நின்று அவருடைய வாழ்த்துதலை வில்லியம் பெற்றார். அதனால் அவர் இங்கிலாந்தைக் கைப்பற்றுவதற்கு மக்களுடைய பேருதவி எளிதில் கிடைத்தது. இவ்வாறு சமயப் போர்வை யைப் போர்த்துக்கொண்டு வில்லியம் செயலாற்றாமல் இருந் திருந்தால், அவர் மேற்கொண்டிருந்த செயல் சிலுவைப் போராகத் தோன்றி இருக்காது. அதற்கு மாறாகப் படைக்கலம் தாங்கி, மாற்றார் நாட்டில் கொள்ளையடிப்பதற்காகப் புகுந்த கொள்ளைக் கூட்டத்தினரின் கொடுஞ் செயலாகவே அக் காலத்திய மக்கள் கருதியிருப்பர்.

நிலமானியப் படைமுறையின் அடிப்படையில் பல சிற்றரசு கள் நிறைந்து விளங்கிய அக்காலத்தில், நார்மண்டி ஐரோப் பாவின் ஆற்றல் மிக்க அரசாகக் கருதப்பட்டது. அதனுடைய அரசர் அயல்நாட்டு அரசியல் சிக்கல்களை நன்குணர்ந்த அரசியல் விரகராகப் போற்றப்பட்டார். ஆறு நூற்றாண்டுகளுக்குப் பிறகு வந்த அவருடைய பெயரையுடைய வில்லியத்தைப் போன்றே, நார்மண்டியைச் சார்ந்த இவ்வில்லியமும், நெடுந்தொலைவிலுள்ள நாடுகளில் எல்லாம் இங்கிலாந்திற்கு எதிராகப் பல செய்திகளை அரசியல் சூழ்ச்சித்திறனோடு பரவச்செய்துவந்தார். இதன் மூலம் தாம் இங்கிலாந்தின்மீது படையெடுப்பது நேர்மை யான செயல் என்று பிறநாட்டு மக்களை நம்புமாறு வில்லியம் செய்தார். அத்துடன் தம்முடைய அயல்நாடுகளோடு திறமை யான முறையில் உடன்படிக்கைகள் செய்துகொண்டார். அதனால் அவர் தாம் நாட்டில் இல்லாத சமயத்தில் அயலார் தம் நாட்டின்மீது படையெடுக்காமல் பார்த்துக்கொண்டார். ஹாரால்டின் நேர்மையான வழக்கினைக் கடல் கடந்த நாடுகளில் யாரும் கேட்பாரில்லை. அங்கெல்லாம் அவரைப்பற்றிய உண் மைகள் திரித்துக் கூறப்பட்டிருந்தன. எனவே, பிரஞ்சுமொழி பேசிய நிலமானியப் படைமுறை உலகம், அறத்தின் அடிப் படையில் எழுந்த பேரார்வத்தினால் மாபெருந் தலைவனின் தலைமையின்கீழ் ஒன்றுசேர்ந்து அறப்போர் புரிவதாக அக் கொள்ளைக் கூட்டத்தினரின் கூட்டமைப்பைக் கருதலாயிற்று.

பேவென்சியில் பெரும் படை வந்திறங்கியது. அது நில மானியப் படைமுறையின்படி திரட்டப்பட்டது அன்று. ஆயினும் அதனுடைய உறுப்பினர்கள் நிலமானியப் படைமுறைக் கோட் பாட்டில் ஊறித் திளைத்தவர்களாக இருந்தனர். புதிதாகக் கைப் பற்றப்பட்ட நாட்டில் நிலமானியங்களே வீரர்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டது. எனினும் அவர்களுடைய படை நிலமானியப் படைமுறையினால் திரட்டப்பட்டதன்று என்பது கருதத்தக்கது.

நாற்பது நாட்களுக்குமேல் தொடர்ந்து இங்கிலாந்தில் நடக்கக் கூடிய போருக்குத் தம்முடைய நிலமானியப் படைத் தலைவர்களையும், மாவீரர்களையும் உதவி புரியுமாறு கட்டளையிடுவதற்கு அதிகாரம் அற்றவராக இருந்தார். நிலமானியப் படைமுறைச் சட்டத்தில் இதற்கு இடம் இல்லை என்பதை வில்லியம் நன்குணர்ந்திருந்தார். ஆனால் நார்மண்டியைச் சேர்ந்த மாவீரர்களும் பிரபுக்களும் மட்டுமல்லாமல், வில்லியத்திற்கு எத்தகைய முறையிலும் அடிமையாகாது இருந்த பிரிட்டனி, பிளாண்டர்சைச் சார்ந்த பிரபுக்களும், மாவீரர்களும் தாங்களாகவே இங்கிலாந்துப் படையெடுப்பிற்காகத் திரட்டப்பட்ட படையில் வந்து சேர்ந்தனர். அது இங்கிலாந்தின் நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ளுவதற்காகச் செய்யப்பட்ட கூட்டு முயற்சியாகும். கிராம்வெல்லின் ஆட்சிக் காலத்தில் இத்தகைய குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டே, அயர்லாந்தின்மீது ஆங்கிலேயர் படையெடுத்தனர். அப்படையெடுப்பும் அக்காலத்திய மக்களால் சிறந்ததொரு சமயப் பணியாகவே கருதப்பட்டது. அப்போருக்குத் திரண்டு வந்த வீரர்களுக்கு, அவர்களுடைய போர்ப்பணிக்காகக் கைப்பற்றப்பட்ட நாட்டின் பண்ணைகள் பரிசாக வழங்கப்பட்டன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு கடன்கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

கி.பி. 1066-ன் இளவேனில்—முதுவேனிற் பருவங்களில், வில்லியமும், அவருடைய கூட்டாளிகளும் பெரியதொரு கப்பற்படையை நிறுவிக்கொண்டிருந்தனர். கப்பல்கள் படை வீரர்களை ஏற்றிச் செல்லுவதற்கும், நன்கு பயிற்சி பெற்ற குதிரைப்படையினை ஏற்றிச் செல்லுவதற்கும் இன்றியமையாது தேவைப்பட்டன. இக்குதிரைப் படையினைக்கொண்டே ஹாரால்டின் சிறப்புமிக்க வேளக்காரப் படையினரை அழித்தொழிக்கலாம் என்று நார்மானியர் நம்பினர்[1].

நார்மானியர் ஒரு பெரும் படையுடன் வந்திருந்தனர். ஆனால், அப்படையினுடைய ஆற்றல், அதனுடைய எண்ணிக்கையைப் பொறுத்து அமையவில்லை. அப்படை பெற்றிருந்த பயிற்சியும், போர்க் கருவிகளுமே அதனுடைய ஆற்றலுக்கும் வெற்றிக்கும் அடிப்படையாக அமைந்தன. அக்காலத்தில் வாழ்ந்த அதிகாரிகளே பேரெண்களைச் சரிவர எண்ணத் தெரியாதவர்களாக

[1] ஆல்பிரட்டு காலத்தில் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்த டேனியர்களும் குதிரைகள்மீது ஏறிச்செல்லும் காலாட் படையினராக இருந்தனரே ஒழிய, நார்மானியர்களைப் போன்று குதிரைப் படை வீரர்களாகப் போரிடவில்லை என்பது நினைவு கூரத்தக்கது.

இருந்தனர். ஆனல், தற்கால வரலாற்ருசிரியர்கள், நார் மானியரின் படையெடுப்பில் பன்னீராயிரம் வீரர்களுக்கு மேல் கலந்துகொண்டிருக்க முடியாது என்று கணக்கிட்டுக் கூறு கின்றனர். அப்பெரும் படையினருள் அரைப்பங்கிற்கும் குறை வாகக் குதிரைப்படை வீரர்கள் இருந்திருக்கலாம். வெற்றி பெற்ற படைவீரர்கள் இங்கிலாந்தைத் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டனர். அவ்வாறு ஹேஸ்டிங்ஸ் போருக்குப் பிறகு நிலத்தை மானியமாகப் பெறுவதற்கு வந்த மாவீரர்கள் ஐயாயிரத்திற்கு மேற்பட்டவரல்லர்[1].

பதினைந்து நூருயிரம் மக்கள் தொகையுடைய இங்கி லாந்தினை, ஒரு சிறு கூட்டம் கைப்பற்றிக் கொள்ளையடித்தது. இங்கிலாந்து மக்களை அது அடக்கியொடுக்கியதற்கு அதனுடைய படையாற்றல் மட்டும் காரணமாகாது. இங்கிலாந்தின் அரசியல் முறையையும் இராணுவ முறையையும் (நார்மானியருடைய முறைகளோடும் அமைப்புகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது,) பிற்போக்கு வாய்ந்தனவாகவும் திறமையற்றன வாகவும் இருந்து வந்தமையே நார்மானியர் எளிதில் வெற்றி பெறுவதற்குப் பேருதவியாக இருந்தது.

மேலும் வில்லியம் ஓரளவிற்கு நற்பேறு பெற்றிருந்தார் என்றே கூறவேண்டும். ஹேஸ்டிங்ஸில் நடந்த கொடிய போரில் நல்லூழினலேயே வில்லியம் வெற்றிபெற்ருர். ஆறு வாரங்கள் எதிர் திசையில் காற்று வீசிக்கொண்டிருந்தமையால், நார் மண்டியின் துறைமுகத்திலிருந்து அவருடைய கப்பல்கள் புறப் படுவதற்கு முடியாமற்போயின. புயல் ஓயும் வரை அவர் பொறுமையாகக் காத்திருக்க வேண்டியதாயிற்று. இவ்விடைக் காலத்தின்தான், நார்வேயின் மன்னரான ஹாரால்டு ஹர்டி ராடா பெரும் படையுடன் இங்கிலாந்தினுள் நுழைந்தார். அவர் எட்வின், மோர்கார் முதலிய கோமகன்களை, யார்க்கிற்கு இரண்டு கல் தொலைவில் பெரும் படையுடன் தோற்ருேடுமாறு செய்தார். அதே சமயத்தில், இங்கிலாந்தின் அரசரான ஹாரால்டு தெற்குக் கரைப் பகுதியில் நார்மானியக் கப்பற்படை திடீரென்று வந்து இங்கிலாந்தைத் தாக்காதவாறு காத்து வந்தார். ஆனல், வடக்கே நார்வே அரசர் வெற்றி பெற்றதைக்

[1] Round : Feudal England, pp. 265, 289—292
Haskins : Norman Institutions, P. 78
Oman : England, befoie the conquest P. 641
Stentone : William, P. 196.

கேட்டவுடனே அவர் தம்முடைய படையில் பாதியை உடன் அழைத்துக் கொண்டு வடதிசை நோக்கிச் செல்லவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. அவருடைய வேளக்காரப் படையினர் ஐரோப்பாவிலேயே மிகச் சிறந்த முறையில் பயிற்சிபெற்றவர்களாவர். அவர்கள் குதிரைகளின் மீதமர்ந்து மிக விரைவாக யார்க்கு நகரின் வாயிலை நோக்கி, விரைந்து சென்றனர். வைக்கிங்கு படை வீரர்களை நேருக்கு நேராக இங்கிலாந்தின் வீரர்கள் ஸ்டாம்போர்டு பிரிட்ஜில் (Stamford Bridge) எதிர்த்துப் போரிட்டனர். இறுதியில் நார்வேயின் படை 1066ஆம் ஆண்டு செப்டம்பர் இருபத்தெட்டாம் நாள் அழித்தொழிக்கப்பட்டது. ஆங்கிலேயர் வெற்றிபெற்றனர். இவ் வெற்றிக்குப் பிறகு மூன்று நாட்கள் கழித்து (28-9-1066) வில்லியம் பாவேன்சியில் பெரும் படையுடன் வந்து இறங்கினர்.

ஹாரால்டு நார்மானியர்களின் வழியில் நின்றிருந்த வெல்லுவதற்கு அரிய பகைவனை அழித்தொழித்தார். அவ்வாறு அவனை அழித்தொழிப்பதற்காகத் தம்முடைய அரும்பெரும் வீரர்களைப் போர்க்களத்தில் பலியிட்டு, ஹாரால்டு தம்முடைய ஆற்றலைக் குறைத்துக் கொண்டார். அங்கிருந்து நான்கு நாட்களில் ஹாரால்டும், அவருடைய வேளக்காரப் படையினரும் லண்டன் நோக்கித் திரும்பி ஓடி வந்தனர். அக்டோபர் ஆறும்நாள் அவர்கள் லண்டன்மாநகரை அடைந்தனர். வடக்கே போரிட்டுக் களைத்துப் போன படை வீரர்கள் அவர்களைத் தொடர்ந்து மெல்லக் கால் நடையாக வந்து கொண்டிருந்தனர். வடமேற்கிலிருந்து குடிப்படை (Fyrd) இன்னும் வந்து சேரவில்லை. உடனடியாகச் சஸ்ஸக்ஸில் வில்லியத்தை எதிர்த்துப் போரிட வேண்டுமென்று ஹாரால்டு முடிவிற்கு வந்தார். அம்முடிவு சரிதானு, அல்லது தவருக இருக்குமா என்பதைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. அங்நிலையில், அவருக்கு அழியாது எஞ்சி நின்ற ஆற்றல் மிக்க வேளக்காரப் படையோடு தென் கிழக்குக் கோட்டங்களில் இருந்து வந்த குடிப்படையுடன் தேனர்கள் சிலரும் துணையாக இருந்தனர். ஹாரால்டின் காலாட்படை, நார்மானியரின் குதிரைப் படையை எதிர்த்துப் போரிட வேண்டியதாயிற்று. இவ்வாறு காலாட்படை குதிரைப் படையோடு போரிடுவது என்ருல், காலாட்படை தன்னுடைய தற்காப்பிற்குரிய இடத்திலிருந்து போர் புரியவேண்டும் என்பதை ஹாரால்டு நன்குணர்ந்திருந்தார். எனவே, ஹேஸ்டிங்ஸிற்கு ஆறுகல் தொலைவிலுள்ள கிளை மலைத் தொடர்களுள்ள சிறந்ததொரு இடத்தினைத் தேர்ந்தெடுத்து, அங்கிருந்து வில்லியத்தின் படைகளை அவர் தாக்கினர். அம்மலை ஆண்டிரட் சுவயால்டு காட்டின் தென்முனையில்

இருந்தது. அங்கிருந்தே நார்மானியரின் படை திடீரென்று வெளிப்பட்டது. பிற்காலத்தில் அம்மலையில் ஹேஸ்டிங்ஸ் என்னும் ஊரும், மடாலயமும் விளங்கின. ஆனால் இப்போர் நடந்த அக்காலத்தில் அங்கு மக்கள் குடியிருக்கவும் இல்லை; அதற்குப் பெயர் ஒன்றும் இருந்தாகத் தெரியவில்லை. அங்கு வளர்ந்திருந்த முதிர்ந்த ஆப்பிள் மரங்களைக் கொண்டே, அவ்விடத்தைக் குறிப்பிட்டுக் கூறும் வழக்கம் அக்காலத்தில் இருந்து வந்தது.[1]

ஆயிரத்து அறுபத்தாறும் ஆண்டு, அக்டோபர்த் திங்கள் பதினான்காம் நாள் முழுவதும் (14-10-1066) அம்மலையினைச் சூழ்ந்து படையெடுப்பாளர்கள் முற்றுகையிட்டுச் சோர்வுற்றனர். அவர்கள் படைக் கருவிகளிலும், போர்த் தந்திரங்களிலும் சிறப்புற்று விளங்கிய போதிலும், அம்மலையைக் கைப்பற்றமுடியாது களைப்புற்றனர். இவ்விருதிறப் படைகளும் பழைய நார்ட்டிக்குப் போர் முறையினைப் பின்பற்றியே போரிட்டன. எனினும், முறைகளில் உண்டான இருவகைப்பட்ட போர்முறை வளர்ச்சியினை அவை விளக்குவனவாக அமைந்திருந்தன. நார்மானிய மாவீரர்களும் ஆங்கிலேய வேளக்காரப் படை வீரர்களும் ஒரேவகையான தற்காப்புக் கருவிகளை அணிந்து கொண்டிருந்தனர். தொல் பழங் காலத்தில் தங்கள் மூதாதையர் அணிந்திருந்த இரும்புக் கவசத்தைக் குதிரைகள்மீது ஏறி இவர்ந்து செல்லுவதற்கு ஏற்ற முறையில் முழங்கால் அளவிற்குத் தொங்கும் இரும்புச் சட்டைகளாக மாற்றி அமைத்துக் கொண்டிருந்தனர். இருதிறத்தாரும் அக்காலத்தில் வழக்கிலிருந்த கூருருளை வடிவில் அமைந்த இரும்புத் தொப்பிகளைத் தலையில் அணிந்திருந்தனர். அவர்கள் மூக்கிற்கும் ஓர் இரும்பு உறை அணிந்து கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும். அவர்கள் கையிலேந்திய கேடயங்கள் பழங் காலத்தைப் போன்று வட்ட வடிவினதாக இல்லை. அக்காலக் கேடயங்கள் அனைத்தும் நீண்ட சதுர வடிவில் செய்யப்பட்டிருந்தன. குதிரைமீது அமருகின்ற பொழுது வீரர்கள் அவற்றை முழங்காலுக்குக் காப்பாகக் கட்டிக்கொண்டனர். அதற்கு ஏற்ற

[1] இடைக்காலத்தில் அங்கு நடந்த நிகழ்ச்சியை ஹேஸ்டிங்ஸ் போர் என்று கூறுவது மரபாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான் பிரீமென்னும் (Freeman) அவருடைய கோட்பாட்டினரும் முதன் முதல் அதைச் 'சென்லாக்' (Senlac) என்று அழைத்தனர். பார்க்க: Round : Feudal England, PP. 333-340. இப்போரைப்பற்றி இந்நூலில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் ஆங்கிலேயர் செயற்கைத் தற்காப்பு வசதிகளைப் பெற்றிருக்க வில்லை என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

வகையில் அவை செய்யப்பட்டிருந்தன. இருதிறப் படைகளிலும்
படைக்கலம் முழுவதுமே இல்லாத அல்லது ஒரு சில படைக்
கலங்களை மட்டும் தாங்கிய வீரர்கள் பலர் இருந்தனர். பக்கத்தி
லுள்ள கோட்டங்களிலிருந்து திரட்டப்பட்ட நாட்டுப் படையி
லிருந்த வீரர்களே படைக்கல மற்றவர்களாக இருந்தனர். அவர்
பெரிதும் சாக்சானியர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்
தக்கது. ஆனால், இங்கு இருதிறத்தாருக்கும் இடையே பொது
வாக இருந்து வந்த ஒற்றுமைப் பண்புகள் குலையலாயிற்று.
ஆங்கில-டேனிஷ் மக்கள் தங்கள் குதிரைகளைப் பாதுகாவ
லான இடத்தில் விட்டுவிட்டுக் கேடய வட்டங்களை வகுத்து நின்று
போரிட்டனர். அவர்கள் இன்றும் டேனியப் போர்க் கோடரி
(மழுவினை)யையே சிறந்த போர்க் கருவியாகக்கொண்டு இருந்
தனர். ஹாரால்டு தம்முடைய இறுதிப் போரில் அப்போர்க்
கோடரியை வீரத்தோடு பயன்படுத்திச் செயற்கருஞ் செயல்
களைச் செய்தார். நார்மானியர்கள் குதிரைகள்மீது அமர்ந்து
ஈட்டியை எறிந்தும், பகைவர்மீது குத்தியும், போரிட்டனர்;[1]
அவர்கள் வாளினைக்கொண்டு பகைவர்களை வெட்டி வீழ்த்தினர்.
ஆனால் அதிர்ச்சியடையச் செய்யும் சூழ்ச்சிகள் நிறைந்த குதிரைப்
படை, வேறொரு படையின் உதவியில்லாமல், மலையின்மீது
ஆங்கிலேயர் அமைத்த கேடயப் படை அரணைத் தகர்க்க
முடியாது துன்புற்றன. நார்மானியர் படை வீரர் என்ற முறை
யில் புதிய முறைகளைக் கற்றதோடு பழைய முறைகளையும் மறந்து
விடாமல் பேணிக் காத்துவந்தனர். பிரஞ்சுக்காரர்களிடமிருந்து
அவர்கள் குதிரைப்படைப் போர்முறைச் சூழ்ச்சிகளைக் கற்றுக்
கொண்டனர். ஆனால், அவர்கள் பண்டை ஸ்காண்டிநேவிய வில்
வித்தையை மறவாது நன்கு பயின்றிருந்தனர். அவ்வில்வித்தையை
ஆங்கில—டேனியர்கள் முற்றிலும் புறக்கணித்து வந்தமையால்,
மறந்துபோயினர். எனவே ஹாரால்டின் படைகள் ஒரு பக்கத்தில்
குதிரைப்படையின் நெருக்குதலுக்கும், மற்றொரு பக்கத்தில் விற்
படையினரின் அம்புமாரியின் தாக்குதலுக்கும் இலக்காகப்பேரழி
வுற்றது. அவ்விற் படைவீரர்கள் பிற்காலத்தில் நீண்ட வில்லினை
ஏந்திப் புகழ்பெற்ற கிரேசி (Crecy)யின் திறமைக்குப் பல
மடங்கு தாழ்ந்த நிலையில் இருந்தனர். ஆயினும், அன்றைய
இங்கிலாந்தின் படை வீரர்களைவிட அவர்கள் தேர்ச்சியுடைய
வர்களாக இருந்தனர். இங்கிலாந்தின் படை வீரர்களுள்
விற்பயிற்சிபெற்ற ஒருவரும் இலலாமற் போனது அவர்

[1] வீரக் களியாட்டக் காட்சியில் பயன்படுத்தப்படுவதைப் போன்ற பாரமான நீண்ட ஈட்டி இடைக்காலத்தின் பிற்பகுதியில்தான் முதன் முதலாகப் போரில் பயன்படுத்தப்பட்டது.

களுக்குப் பேருதவியாக இருந்தது. எறி படைகளைக் கொண்டிருந்த குதிரைப் படை வீரர்களைத் தாக்கும் படைக் கருவியைக் கொண்டிருந்த காலாட் படையினர் எதிர்த்துப் போரிடுவது மிகவும் கடினமாக இருந்தது. வாட்டர்லூ போர்க்களத்தில் ஆங்கிலேயப் படையெடுப்பாளர்கள் எறி படைகளை ஏந்திப் போரிட்டனர். பிரான்சின் உடற் கவசம் அணிந்த வீரர்கள் தாக்கும் போர்க் கருவிகளைக் கொண்டே போரிட்டனர். ஆனல், ஹேஸ்டிங்ஸ் போர்க்களத்தில் இம்முறை முற்றிலும் மாறுபட்டிருந்தது.

கதிரவன் மேற்குத் திசையில் மறையும் நேரத்தில் ஹாரால்டும், அவருடைய வேளக்காரப் படையினரும் மலையின் உச்சியில், (பிளாடன் போர்க்களத்தில் ஸ்காட்டியர் தங்கள் அரசனைச் சூழ்ந்து இறந்து கிடந்ததைப் போன்று) இறந்து கிடந்தனர். உயிருடனிருந்த குடிப்படை (Fyrd) வீரர்கள் போரினல் புண்பட்டும், மனச் சோர்வுற்றும் இருந்தனர். அவர்கள் நெடுந் தொலைவிலுள்ள தங்கள் வீடுகளுக்கு இருள் சூழ்ந்த ஆண்டிரட்சு வயால்டு ஒற்றையடிப்பாதைகளின் வழியாகப் பல திக்குகளை நோக்கி ஓட முடியாது நடந்து சென்றனர்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

நார்மானிய அரசு—நார்மானியரின் நிலமானியப் படைமுறை—நார்மண்டியின் படையாற்றல்—நார்மண்டியின் அரசும் திருச்சபையும்—போர் முறை அறிந்த காட்டுமிராண்டிகள்—அருளாளர் எட்வர்டு— இங்கிலாந்திலுள் நார்மானியரின் செல்வாக்கு—கோமகன் காட்வின்—அருளாளரின் இறுதி ஆண்டுகள்—வெஸ்ட்மின்ஸ்டரும் லண்டனும்—ஹாரால்டு அரசராகத் தேர்ந்தெடுக்கப் படுதல்—வில்லியமும் ஹாரால்டும்—வில்லியத்தின் போர்க்கருவிகளின் தொகுதி—ஸ்டாம்போர்ட்பிரிட்சும் பேவன்சியும்—ஹேஸ்டிங்ஸ்போர்.

## இயல் 8

# நார்மானியரின் வெற்றியும் நார்மானிய நிலையங்களின் அமைப்பும் (1066—1135)

*அரசர்கள் :*

*முதலாம் வில்லியம்*, 1066—1087.
*இரண்டாம் வில்லியம்*, 1087—1100.
*முதலாம் ஹென்றி*, 1100—1135.

ஹேஸ்டிங்ஸ் போரினால் உண்டான அதிர்ச்சி, நிலமானியப் படை முறையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இங்கிலாந்தின் அரசுகளை ஒன்று சேர்த்திருக்க வேண்டும். அதன் மூலம் மக்கள் சக்தியை ஒருங்கு திரட்டிப் பகைவரை எதிர்த்துப் போருக்குக் கிளம்புமாறு செய்திருக்க வேண்டும். அது நாட்டின் தேசிய உணர்வினை எழுப்பி, அயலாரின் படையெடுப்பிலிருந்து தாயகத்தைக் காக்குமாறு மக்களைத் தூண்டியிருக்க வேண்டும். ஆனால், ஹேஸ்டிங்ஸ் போர் ஆங்கில–டேனிஷ் அரசினுள் அத்தகைய விளைவுகள் எதையும் உண்டாக்கவில்லை. கோமகன்களும், தேனர்களும், பாதிரிமார்களும், கோட்டத்தலைவர்களும், நகரத் தலைவர்களும் தனித்தனியே வெற்றி வீரர் வில்லியத்தோடு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளுவதைப் பற்றியே சிந்தித்தனர். ஹாரால்டின் கட்சியில் முக்கிய உறுப்பினனாக இருந்த ஸ்டிகாண்ட்டு, வாலிங்கு போர்டில் வில்லியம் தேம்ஸ் ஆற்றைக் கடந்து வருவதாகக் கேள்வியுற்றவுடன், உடனடியாக வில்லியத்திற்கு அடி பணிந்து, தன்னுடைய காண்ட்டர்பரியின் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு வீண் முயற்சி செய்தான். போப்பின் நண்பர்களான நார்மானியர்கள் ஹாரால்டை எதிர்த்தற்குரிய காரணங்களுள் ஒன்று, ஸ்டிகாண்டைக் காண்ட்டர்பரியின் தலைமைக் குருவாக, ஹாரால்டு அமர்த்தியமை என்பதை நாம் மறத்தலாகாது. ஹேஸ்டிங்ஸ் போரில் ஹாரால்டிற்கு உதவி செய்வதற்காக வட கோடியிலிருந்து எட்வினும், மோர்கரும் மெல்ல வந்து சேர்ந்தனர். அவர்கள் காலம் தாழ்த்தி வந்தமைக்குக் காரணம் அவர்களுடைய நம்பிக்கைத் துரோகமா ? கவலையற்ற மனப்போக்கா ? அல்லது தவிர்க்க முடியாத இடையூறுகளால் காலதாமதம் உண்டாயிற்றா ? என்பதைப் பற்றி இன்று வரை ஒன்றுமே தெரியவில்லை. இந் நெருக்கடியான நிலையைக் கண்ட அவர்கள் சொல்லாமற்

கொள்ளாமல் பின்வாங்கிப் போயினர். தென் இங்கிலாந்து அதனுடைய தலைவிதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ளுமாறு அதைத் தனியே விட்டுச் சென்றனர். வெஸ்ஸக்ஸ் நாட்டின் தேம்ஸ் ஆற்றங் கரையோரத்தில் யார் முடி சூட்டிக் கொண்டால் நமக்கு என்ன என்று அவர்கள் நினைத்தனர்போலும். யார் ஆண்டாலும் மெர்சியா, நார்த்தம்பிரியாவின் கோமகன்களாகவே தாங்கள் இருக்கப் போகின்றோம் என்ற இறுமாப்பினாலும், சுயநலத்தினாலும், அவர்கள் வில்லியத்தை எதிர்க்காது, வாளா திரும்பிச் சென்றிருக்கலாம். ஆனால், அவர்கள் நினைத்ததைப் போன்று யாதும் நடைபெறவில்லை. வில்லியம் தாம் கைப்பற்றிய நாட்டின் அரச பதவியைத் தாமே ஏற்றுக் கொண்டு இங்கிலாந்தின் எஞ்சிய பகுதிகளைத் தம் நேரடியான ஆட்சியின் கீழ்க் கொண்டுவர முயன்றார்.

இதற்கிடையே தென் இங்கிலாந்து நார்மானியரை எதிர்க்கும் ஆற்றலற்றுப் போயிற்று. பழைய வெஸ்ஸக்ஸின் தலைநகரான வின்செஸ்டர் வில்லியத்திற்கு அடி பணிந்ததன் மூலம் மற்றவருக்கு வழிகாட்டியாக அமைந்தது. லண்டனைத் தாக்கிக் கைப்பற்றுவதற்குப் போதிய படை பலம் அற்றவராக வில்லியம் இருந்தமையால், அவர் எட்வர்டின் 'வாரிசு' என்று கூறிக் கொண்டு அமைதியான முறையில் லண்டன் மாநகரினுள் நுழையத் திட்டமிட்டார். எனவே, அந்நகரைச் சுற்றி மேற்கிலும் வடக்கிலும் இருந்த ஊர்களை அழித்தொழித்தார். அவ்வாறு அழிக்கப்பட்ட ஊர்களுள் பக்கிங்காம் ஷையர், ஹெர்ட் போர்டு ஷையர் முதலியன குறிப்பிடத்தக்கனவாகும். இவ்வாறு அவர் ஆங்கிலேயர்களை விரைவில் சரணடையுமாறு செய்தார். அவருடைய திட்டம் வெற்றி பெற்றது. எட்கார் ஏதலிங்கை அரசராக அறிவித்து, சில வாரங்கள் வரை அவரை அரசராக ஏற்றுக் கொண்டிருந்த லண்டன் மாநகரம், தயங்கித்தயங்கி, பின்னர் வில்லியத்தை அரசராக ஏற்றுக் கொள்ளுவதாகத் தெரிவித்தது. மேலும், அவரை வெஸ்ட்மின்ஸ்டருக்கு வந்து முடி சூட்டிக் கொள்ளுமாறு லண்டன் நகரம் அழைத்தது.

கி. பி. 1066-ன் கிறிஸ்துமஸ் விழா நாளன்று, அவர் சட்டப்படி அருளாளரின் 'வாரிசு' என்று அறிவிக்கப்பட்டு, இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டப்பெற்றார். அதேநேரத்தில் அவருடைய படையினர் அரசத்துரோக நிகழ்ச்சிகள் உண்டாகப் போகின்றன என்று தவறுதலாக எழுந்த வதந்தியை நம்பி, சுற்றுப் பக்கத்திலிருந்த ஆங்கிலேயர்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்திக் கொண்டிருந்தனர். வெளியே உண்டான கலகத்தால்

மூர்க்கத்தனமான பேரிரைச்சல் நகரின் பல பகுதிகளில் எழுந்தது. அவை முடிசூட்டு விழா மண்டபத்தினுள், அப்புனித நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அடிக்கடி இடையூறாக இருந்து வந்தது. ஒரு முறை வெளியே உண்டான கூக்குரலைக்கேட்டு மண்டபத்தினுள் இருந்த அனைவரும் வெளியே ஓடினர். வில்லியத்தையும் முடிசூட்டு விழாவின் சடங்குகளைச் செய்து கொண்டிருந்த மதகுருவையும் தவிர மற்றவர்கள் மண்டபத்தை விட்டு வெளியே ஓடிவிட்டனர் என்றால், வில்லியத்தின் நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? இந் நிகழ்ச்சி வெற்றிவீரர்வில்லியம் நாடகப்பாணியில் இங்கிலாந்தின் அரசுரிமை கொண்டாடிய கொள்கைக்கு, எத்துணை எதிர்ப்பு நாட்டில் இருக்கிறது என்னும் உண்மையைக் குறிப்பாகப் புலப் படுத்தியது. 'எட்வர்டின் வாரிசு' என்பதும், 'அவருடைய சட்டதிட்டங்களைக் காப்பதற்காகவே, நான் முடிசூட்டிக் கொள்கிறேன்' என்பதும், பகைவர் நாட்டை அழித்தொழிக்கும் அவருடைய கொடுஞ் செயல்களை முற்றிலும் மூடி மறைத்து விடவில்லை. இங்கிலாந்து பிரஞ்சுக் கொள்ளைக்காரர்களின் கொடுஞ் செயல்களுக்கு இரையாகிப் பெருந் துன்பத்திற்காளா கியது. இருந்த போதிலும் வெற்றி வீரரின் காலத்திலும், அவருக்குப் பின்னர் அவருடைய பிள்ளைகள் காலத்திலும் கலகக் காரர்களான பிராங்கோ-நார்மானியப் பிரபுக்களுக்கு எதிராக, நார்மானிய அரசர்கள் தங்கள் சாக்சானிய குடிமக்களிடத்து ஒரோவழி நேச உடன்படிக்கை செய்துகொண்டனர். நார்மானிய அரசர் அவ்வப்போது குடிப் படையைப் புதுப்பித்தும், பலப் படுத்தியும்வந்தனர். அவ்வாறேகோட்டங்களின் முறைமன்றத்தை (Shire-Court) ப் புதுப்பித்துப் போற்றிக் காத்தனர். இவை அனைத்தும், வில்லியம் அரசு கட்டில் ஏறுவதற்கும் இங்கிலாந்தின் அரசுரிமையைப் பெறுவதற்கும் காட்டிய, அரசியல் அமைப்பின் ஒழுங்கு முறை விதிக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அமைந்தன.

ஆங்கிலேய மக்கள் அனைவரும் ஒன்று கூடி எதிர்ப்பதற் குரிய வாய்ப்பினை இழந்த ஹேஸ்டிங்ஸ் போருக்குப் பிறகு நெருக் கடியான சில மாதங்கள் வரை, ஆங்கிலேய மக்கள் பகற்கனவு கண்டு வந்தனர். நார்மானியர்களுக்குத் தாங்கள் அடிமைப் பட்டு விட்டால், கான்யூட்டும் டென்மார்க்கிலிருந்து வந்த அவருடைய தோழர்களும் இங்கிலாந்தைக் கைப்பற்றி ஆட்சி புரிந்த பொழுது தங்களுடைய உரிமைகளுக்கும், நிலவுடைமை களுக்கும் உண்டானதைப் போன்ற கேடுகள் ஒன்றும் இப் பொழுது உண்டாகாது என்ற தவறான நம்பிக்கையுடையவர்

களாக அவர்கள் இருந்து வந்தனர். விரைவில் அவர்கள் பெரும் ஏமாற்றமடைந்தனர். வன்முறையில் இங்கிலாந்தின் அரசைக் கைப்பற்றிய ஹாரால்டினை, அரசராக ஏற்றுக் கொண்டது மக்களுடைய குற்றம் என்று வில்லியம் கூறினர். இம்மாபெருங் குற்றம் செய்ததற்காக, வில்லியம் நாட்டு மக்களின் உடைமைகள் அனைத்தையும் பறிமுதல் செய்தார். சாக்சானியரின் பண்ணைகளையும், உடைமைகளையும், செல்வத்தையும் நார்மானிய வெற்றி வீரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதற்காக, மறைமுகமாகப் பறிமுதல் செய்யும் பணியில் வில்லியம் ஈடுபட்டார் என்று கூறுவதே பொருத்தம் உடையதாகும். இப்பறிமுதல் இயக்கம் யாதாகிலும் ஒரு காரணத்தை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

கூன்யூட்டிற்கும் அவருடைய கோமகன்களுக்கும் இங்கிலாந்து மக்கள் ஊழியம் செய்ததைப் போன்று, நார்மானிய அரசருக்கும் அவருடைய பிரபுக்களுக்கும் ஊழியம் செய்வது எளிய செயலாக இல்லை. புதிய முடியாட்சியும், புதிய நிலமானியப் படை முறையும் புதிய இராணுவ அமைப்பு முறையால் கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. இன்றும் லீவிசில் (Lewes) காணப்படுவதைப் போன்ற நாடு முழுவதும் உள்ள வட்ட வடிவமான மேட்டுப் பகுதிகள் அனைத்திலும், சாக்சானிய குடிமக்களைக் கட்டாயப் படுத்தி உழைக்குமாறு செய்து, முதலில் மரத்தினாலும் பிறகு கற்களினாலும் அரசருக்கும், தனிப்பட்ட பிரபுக்களுக்கும் தேவையான காவற் கோட்டைகளை நார்மானியர் கட்டிக் கொண்டனர்.[1] அம்மேட்டுப் பகுதிகளுக்கு முன்னால் இடைவெளி முற்றம் ஒன்று அமைக்கப்பட்டது அதை உட்பாதுகாப்பு இடைவெளி முற்றம் (Bailey) என்று அழைத்தனர். அம்முற்றத்தைச் சுற்றிலும் மதில் ஒன்று மண்ணால் கட்டப்பட்டிருந்தது. இத்தகைய கைப்பற்ற முடியாத சேம அரண்களிலிருந்து, படைக்கலம் ஏந்திய குதிரை வீரர்கள் நாட்டுப்புற மக்களை அடக்கியொடுக்க அடிக்கடி வெளிக்கிளம்பினர். சில சமயங்களில் நாட்டிலே அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்குச் சென்றனர். பல சமயங்களில் நாட்டிலே அமைதியை நிலை

[1] அம்மேட்டு நிலக்காவல்கோட்டையை 'மோட்டு' (Motte)என்றும் கூறுவர். அதன்மீது மரத்தினாலோ, கல்லினாலோ கட்டப்பட்ட கோபுரம் 'தூரிசு' (Turris) என்றும், 'டன்ஜன்' (Donjon) என்றும், 'கீப்பு' (Keep) என்றும் வழங்கப்பட்டன. படையெடுப்பாளர்கள் அக்கோட்டைகளைத் தீக்கிரையாக்கத் தொடங்கியதனாலும், நார்மானியர் டினன்ட் காவற் கோட்டையில் அவ்வனுபவத்தைப் பெற்றமையாலும், மரத்தினால் கோட்டை கட்டுவது பேராபத்தாகும் என்பதை உணர்ந்தனர். அதனால் ஸ்டீபன் காலத்தில் நார்மானியரின் கட்டடக் கலை முறையில் 'கற்காலம்' விரைவாகத் தொடங்கியது.

நாட்டுவதாகக் கூறிக்கொண்டு அவ்வீரர்கள் கொள்ளையடிப் பதிலும், தவறான வகையில் நடப்பதிலும் ஈடுபட்டனர். தங்கள் நகரின் கிழக்குப் பெருஞ் சுவர்களை மறைக்குமாறு 'டன்ஜன்' கோபுரம் அரசினரால் கட்டப்படுவதைக்கண்டு லண்டன் மாநகர மக்கள் மலைவுற்றனர். அதனால் தாங்கள் போற்றி வளர்த்த உரிமைகள் அழிக்கப்படவில்லை என்றாலும், அவை தடை செய்யப் படுவதை உணர்ந்து மனம் புழுங்கினர்.

காட்வினுடைய மரபைச் சார்ந்தவர்களும், அவர்களுடைய அதிகாரமும், பண்ணைகளும் நிறைந்திருந்த தென்மேற்கு இங்கிலாந்தினை முற்றுகையிட்டு வெற்றிபெற்ற பிறகு, கி. பி. 1068-ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், வில்லியம் தென் இங்கிலாந்து முழுவதற்கும் போட்டியற்ற உண்மைத் தலைவனாக விளங்கினார். வட இங்கிலாந்து பெயரளவிற்கேனும் அவரை அரசராக ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனால், அதுவரை நாட்டின் நிலவுடைமை களின் மிகச் சிறிய பகுதியே நார்மானியரின் கைகளுக்கு மாறி இருந்தது. சிறப்பாக மெர்சியாவும், நார்த்தம்பிரியாவும் ஹேஸ் டிங்ஸ் போருக்கு முன்பிருந்த நிலையில் சிறிதும் மாற்றம் அடைந்ததாகத் தெரியவில்லை. வடக்குப் பகுதியில் இருந்த இரு கோமகன்களும் அரசிடத்துப் பற்றுறுதியுடையவர்களாக அமைதியுடன் இருந்திருப்பார்களானால், இந்நடைமுறை நிலைமை இன்னும் நெடுங்காலத்திற்கு அவ்வாறே அமைதியாகத் தொடர்ந் திருக்கலாம். ஆனால், அவர்கள் இருவரும் கிளர்ச்சி செய்தனர். அரசன் அக்கிளர்ச்சிக்காரர்களை அடக்கி யொடுக்கி அவர்களை மன்னித்தருளினான். ஆனால், அவர்கள் மீண்டும் கலகம் செய் தனர். அச்சமயத்தில் டென்மார்க்கிலிருந்து வைக்கிங்குகள் கி.பி. 1069-ல் இங்கிலாந்தின் மீது படையெடுத்து வந்தனர். அப்படை யெடுப்பாளரின் உதவியினை இக்கோமகன்கள் பெற்றனர். மெர்சியாவின் முரட்டு வெல்ஷ் மக்கள், நார்மானியரின் ஆட்சிக்கு எதிராகப் போரிட ஆஃபா அணையை (Offa's dyke)க் கட்டுவதற் குப் பேரளவில் அங்குச் சென்று வேலை செய்தனர்.

அத்தகைய சூழ்நிலையில்தான் வில்லியம் வடதிசை நோக்கி மாபெரும் படையுடன் புறப்பட்டுச் சென்றார். அப்போரில் கொடுமைகள் பல புரிந்து அவர் பழிக்குப்பழி வாங்கினார். அவர் யார்க்கிற்கும் டர்ஹாமிற்கும் இடையே இருந்த வீடுகள் அனைத்தையும் இடித்தழித்தார்; அங்கு வாழ்ந்த மக்களுள் ஒரு வரையும் விட்டு வைக்காமல் கொன்று குவித்தார். பதினேழு ஆண்டுகளுக்குப் பிறகு தயாரிக்கப்பட்ட 'நிலவுடைமைப் பேராய் வுக்கணிப்பேடு' (Domesday) நூற்றுக்கணக்கான கிராமங்களில்

அக்காலம் வரை மக்களே இல்லாமல் பாழடைந்து கிடப்பதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையால் வில்லியத்தின் அழிவு வேலைகளின் கொடுமையை நாம் நன்குணரலாம். யார்க்ஷையரின் வடக்குப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் வாழ்ந்த மக்கள் அனைவரும் வில்லியத்தின் படைவீரர்களால் படுகொலை செய்யப்பட்டனர். டர்ஹாம் கோட்டங்களில் வீடுகளும், கால் நடைகளும் அழிக்கப்பட்டன ; ஆனால், மக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். அவர்களுள் பலர் டைனியாற்றைக் கடந்து தப்பியோடினர். பலர் தங்களை அடிமைகளாக விற்றுக்கொண்டனர். இதனால் ஸ்காட்லாந்திலுள்ள லோத்தியன் மாவட்டத்தில் ஸ்காண்டிநேவியக் குருதிக் கலப்பு பேரளவில் உண்டாயிற்று. செஸ்ஷையரிலும், மிட்லாந்து ஷையரிலும் அழிவு வேலைகளும், படுகொலை புரிதலும் வலிப்பு நோய்போன்று விட்டுவிட்டு நடைபெற்றன. அக்காலத்திய மரக்குடிசைகள் அழிக்கப்பட்டால், அவற்றைப் பக்கத்துக் காடுகளில் உள்ள மரங்களைக் கொண்டு வந்து எளிதில் புதிதாகக் கட்டிவிடலாம். நாகரிகமிக்க வீடுகளை அவ்வாறு கட்டுவது மிகவும் அரியதாகும். ஆனால், மக்களுக்கும், கால் நடைகளுக்கும், பாத்திரங்களுக்கும் உண்டான கேட்டினையும், இழப்பினையும் எளிதில் பழுது பார்க்க முடியாத நிலையில் அன்றைய மக்கள் அல்லலுற்றனர். 'வடக்கினைக் கொள்ளையிடல்' (Harrying of the North) என்ற வில்லியத்தின் செயல், துருக்கிய நாட்டுக் கொடுங்கோல் மன்னர்களின் கொடுஞ் செயலைப் போன்றதொரு பழிவாங்கும் செயலாகவே காணப்படுகிறது. ஆனால், இடைச்கால ஐரோப்பாவில் பொறுமை மிக்க போர்வீரர்கள் பின்பற்றிய கருத்துக்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் ஒத்ததாகவே வில்லியத்தின் கொடுமை மிக்க அழிவு வேலைகள் இருந்தன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இக்கொடுஞ் செயல்கள் அதனுடைய நோக்கத்தை நிறைவேற்றின. இவ்வாறு வட இங்கிலாந்து முழுவதும் அழிக்கப்பட்ட பிறகு, அங்குக் கலகங்கள் உண்டாவதற்கு வாய்ப்பில்லாமற்போயிற்று. அது வில்லியமும், அவருடன் வந்த சில ஆயிரம் மாவீரர்களும் இங்கிலாந்து முழுவதையும் கைப்பற்றி, அதன் குடிமக்களைப் புதிய வாழ்க்கை நெறியை மேற்கொள்ளுமாறு கட்டாயப்படுத்த முடியுமா என்ற கேள்விக்கு விடை கூறியது எனலாம். நெடுங்காலமாக வட இங்கிலாந்தும் டேன்லாவும் தனித்துப் பிரிந்து, வெஸ்ஸக்ஸிலும் லண்டனிலும் இருந்த அரசினை எதிர்த்துப் போரிட்டு வந்ததனைத் தடுத்து நிறுத்தியது. நார்மானியரின் நிலமானியப் படைமுறையை எதிர்த்துவந்த ஸ்காண்டிநேவிய சமுதாயத்தை அது முறியடித்தது. நாம் நன்

கறிந்த டர்ஹாம் காசிலும் (Durham Castle), மாவட்டத் தலைமைக் கோயிலும் (Cathedral) புதிய இலத்தீன் நாகரிகத்தின் அறிகுறியாகத் தோன்றின. அப்புதிய நாகரிகத்தைப் பண்படாத நார்ட்டிக்கு இன மக்கள்மீது படைவீரர்களையும், மத குருமார்களையும் கொண்டு வில்லியம் சுமத்தினர். 'வடக்கினைக் கொள்ளையிட்ட ஒரு தலைமுறைக்குள், அங்குள்ள பாறைகளைக் கொண்டு நார்மானியரின் அழகு மிக்க கட்டடக் கலைச் சிறப்புற்று விளங்கத் தொடங்கியது. அப்பகுதி இக்கொடிய பேரழிவு உண்டாவதற்கு முன்பே, காட்டுமிராண்டித் தன்மையுடையதாகவும், வறுமையுடையதாகவும், இருந்து வந்தது. அத்தகைய வறண்ட பகுதியில் மாபெருங் கட்டடங்களும், கோட்டைகளும் கட்டப்பட்டமை, பிரஞ்சு மொழி பேசும் ஆட்சியாளர்களின் பேராற்றலுக்கும், திருச்சபையினரின் திருப்பணிக்கும், கட்டடக்கலை வல்லுநரின் கைவண்ணத்திற்கும், வில்லியத்தின் அரசியல்ஆட்சித் திறமைக்கும் அழியாத பெருஞ் சான்றுகளாக அவை இன்றும் நின்று நிலவுகின்றன.

ஹம்பரில் மட்டும் அல்லாமல் இங்கிலாந்தின் நிலவளமிக்க மாவட்டங்களான லிங்கன்ஷையரிலும் கிழக்கு ஆங்கிலியாவிலும், புதிய நாகரிகம் எளிதில் புகுத்தப்பட்டது. ஆனால், அது மக்களுடைய உரிமைகளைப் பெரிதும் பாதித்தது. இதுவரையில் டேன்லாவில் இருந்து வந்த தனியுரிமைக் குடிமக்கள், ஆங்கில-சாக்சானிய நிலமானியப் படைமுறையைப் பின் பற்றுவதற்கு மாறாக, அதைப் புறக்கணித்தே வந்தனர். அவர்கள் எந்தத் தலைவனிடம் பணிபுரிந்த பொழுதும் தங்கள் நிலத்தோடு தாங்களே நேரடித் தொடர்புடையவர்களாக இருந்து வந்தனர். அவர்களுடைய ஊர்களுள் சிலவற்றிற்குத் தலைவனே கிடையாது. இங்கிலாந்தின் பிறபகுதிகளைக் காட்டிலும், டேன்லா மாவட்டத்திலும், நார்ஸிய மாவட்டத்திலும் தனியுரிமைக் குடிமக்களின் வீத அளவு மிக அதிகமாகவே இருந்து வந்தது. இத்தகைய பழங்கால உரிமை மரபினை நார்மானியர் தங்களுக்கு அடிபணியச் செய்தனர். ஸ்காண்டிநேவியர் நிறைந்திருந்த இங்கிலாந்தின் வடக்கிலும் கிழக்கிலும், சாக்சானியர் மிகுதியாக வாழ்ந்த இங்கிலாந்தின் தெற்கிலும் மேற்கிலும், நார்மானியர் பிரஞ்சு நாட்டு நிலவுடைமை முறையினை அடிப்படையாகக் கொண்ட நிலமானியப் படை முறையினைக் கண்டிப்பாகப் புகுத்தினர். பெரும் பான்மையான நிகழ்ச்சிகளில் டேனியத் தனியுரிமைக் குடிமக்கள் தம் நிலை கெட்டு மேனர் பண்ணைகளி (Manor)ன் உட்குடிகளாக (Villeins) மாறினர். ஆயினும், வளமிக்க லிங்கன்ஷையரில் வாழ்ந்த உட்குடிகளுள் சிலர் வளமான வாழ்க்கை

யுடையவர்களாகவும், சட்டத்திற்குட் பட்ட சில தனியுரிமைகளை யுடைய குடிமக்களாகவும் வாழ்ந்து வந்தனர்.

இங்கிலாந்தில் இருந்த டேனியர்களின் எண்ணிக்கையை 'வடக்கினைக் கொள்ளையிடல்' பேரளவில் குறைத்து விட்டது. ஆனால், காலப் போக்கில், மேற்குக் கடற்கரையோரத்திலுள்ள கம்பர்லாந்திலும், லங்காஷையரிலும் மிக நெருக்கமாக வாழ்ந்து வந்த நார்ஸியமக்கள், மக்கள் வாழ்க்கையே அற்றுப் போன கிழக்குப் பகுதிகளில் சென்று குடியேறினர். அதனால், இங்கிலாந்தில் ஸ்கான்டிநேவியர் கைப்பற்றியிருந்த நிலப் பரப்பு இறுதியில் பேரளவில் குறைக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது.[1] ஆனால் ஸ்கான்டிநேவியக் குறிக்கோள் களும், நாகரிகமும் நார்மானிய நாகரித்திற்கு வழி விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. இடைக் காலத்திய வட இங்கிலாந்தில் உம்ஃபிரவில்லா (Umfraville) பெர்சி (Percy) போன்ற பெருங் குடும்பங்கள் இருந்தன. அங்கு மாபெரும் யார்க்ஷையர் மடாலயங்களும், டர்ஹாமின் நில ஆட்சியுரிமைப் பகுதிகளும் இருந்தன. இவற்றை யெல்லாம் பெற்றிருந்த வட இங்கிலாந்து முற்றிலும் நிலமானியப் படை முறைத் திட்டத் திற்குட் பட்டதாகவும், நார்மானிய நாகரிகத்தில் ஊறித்திளைத்த ஆளும் வகுப்பினரைக் கொண்டதாகவும் இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

ஸ்காட்லாந்தை டேவிட் (1124—1153) என்பவர் ஆட்சிபுரிந்து வந்தார். அப்பொழுது இச் செல்வாக்கு மிக்க பண்புகள், அமைதியான முறையில் அந் நாட்டின் எல்லையைக் கடந்து உள்ளே நுழைந்தன. அவ்வாறு அவை ஸ்காட்டிய சமுதாயத்தி லும், சமயத்திலும் நார்மானிய அரச குடும்பத்திய நாகரிகத்தின் முத்திரையைப் பொறித்தன. புரூசுக்கள் (Bruces) பலியோலக் கள் (Balliols), மெல் ரோசு (Melrose), ஒலிருட்டு (Holyrood) முதலியன நார்மானியப் படையெடுப்பாளர் கைப்பற்றிய இடங் களின் (1124—1153) தொடர்ச்சியாகவே இருந்தன. வட இங்கிலாந்தைக் காட்டிலும் தென் இங்கிலாந்தில், டியூடர்கள் ஆண்ட பொழுது நிலமானியப் படை முறைச் சமுதாய அமைப்பி லிருந்து மிக விரைவில் முன்னேற்றம் அடைந்தது. பொருளாதா

[1] நார்மானியரின் கைப்பற்றுதலுக்குப் பிறகே லாங்காஷையர் ஒரு மாவட்டமாக (County) ஆக்கப்பட்டது. இங்கிலாந்தின் புதிய ஷையர் களுள் அது மிகப் புதியதாகும். ரத்லாந்தும் கைப்பறறுதலுக்குப் பின்னரே மாவட்டமாக்கப்பட்டது. மேற்கிலிருந்து நார்ஸிய மக்கள், மக்களே இல்லாத யார்க்ஷையர் மாவட்டங்களில் குடியேறியதைப் பற்றி அறிய. W. G. Colling wood எழுதியுள்ள 'Scandinavian Britain' என்னும் நூலின், 178-181 ஆம் பக்கங்களைப் பார்க்க.

ரத்துறையில் தென் இங்கிலாந்து மிக விரைவில் முன்னேற்றம் அடைந்ததே இத்தகைய சமுதாய முன்னேற்றத்திற்குக் காரண மாகும். வட இங்கிலாந்து முற்றிலும் நிலமானியப் படைமுறைச் சமுதாய அமைப்பினைப் பின்பற்றுமாறு மாற்றப்பட்டது. ஆயினும், அக்காலம் நெடுகத் தனி மனித உரிமையாகிய பழைய நார்ட்டிக்கு மக்களினத்தின் மனப்போக்கினை, நிலமானிய படை முறைச் சமுதாய அமைப்பினை, விடாமல் அது போற்றிக் காத்து வந்தது. ஸ்காட்லாந்திலும், வட இங்கிலாந்திலும் வாழ்ந்து வந்த குடியானவர்கள் அன்பினாலும், கட்டாயத்தினாலும் தங்கள் பிரபுவிற்கு எவ்வளவுதான் கட்டுப்பட்டவர்களாக இருந்த போதிலும், அவர்களுடைய உரிமை உணர்விற்குச் சிறிதளவும் ஊறு உண்டாகாமல் கண்ணுங் கருத்துமாகக் காத்து வந்தனர். ஆனால், சாக்சானியர் மிகுதியாக இருந்த தென் இங்கிலாந்தில் வாழ்ந்த குடியானவர்கள் நெடுங்காலமாக நில மானியப் படை முறைக்கு அடிமையாகிக் கிடந்தமையால், அவர்கள் உரிமை உணர்வற்றவர்களாக மாறினர் போலும்.

ஏலைத் (Ely) தீவினை ஹெரிவர்டு (Heriward) என்பவர் ஆண்டு வந்தார். அத்தீவினைக் கைப்பற்றுவதற்கு வில்லியம் (1070—1) இட்ட முற்றுகையோடு, வெற்றி வீரரின் இராணுவ நாடகம் முடிவடைந்தது எனலாம். பென்லாந்து மாவட்டத்தைச் சார்ந்தவர் ஹெரிவர்டு. அத்தகைய இடர்ப்பாடுகள் மிகுதியாக வுள்ள நாட்டில் நீரிலும் நிலத்திலும் கொரில்லாப் போரிடுவதற் கேற்ற பேராற்றலும் பேரறிவும் அவர் வாய்க்கப் பெற்றிருந்தார். ஆனால் இங்கிலாந்தின் மற்றப் பகுதிகள் அனைத்தும் நார்மானியர் களால் கைப்பற்றப்பட்ட பிறகே, அவருடைய எதிர்ப்புக் கிளம்பியது. எனவே, அவர் வெற்றி பெற முடியாமற் போயிற்று. நார்மானியருக்கு எதிராகக் காலங் கடந்த நிலையில் இங்கிலாந்தின் பல பகுதிகள் தொடர்ந்து கிளர்ச்சி செய்தன: அவற்றுள் சிறப்புடையது; ஹெரிவர்டினுடைய ஆற்றல் மிக்க எதிர்ப்பாகும். நாடு முழுவதிலும் பொதுவான ஒரு தேசிய இயக்கம் நாட்டுப் பற்றின் அடிப்படையில் தோன்றாமல் போயிற்று. அன்றைய இங்கிலாந்தில் வாலேசோ (Wallace) ஆர்க்கு நகரைச் சேர்ந்த 'ஜோன்' (Joan of Arc) என்னும் நங்கையோ தோன்றவில்லை. இன்னும் இங்கிலாந்து ஒரு நிலவியல் தோற்றமாகவே இருந்து வந்தது. அது வரை இனத்தைச்சார்ந்த மக்களின் கூட்டுத் தொகுதியாகவும், வட்டாரங்களின் தொகுதியாகவும், தனிப்பட்டோரின் ஆட்சி எல்லைகளையுடையதாகவும் இருந்து வந்தது. இன்னும் இங்கி லாந்து தேசிய இனமக்களைக் கொண்ட ஒரு நாடாக உருவாக்கப்

படவேண்டிய நிலையில் இருந்தது. இங்கிலையில், அவனை அவ்வாறு மாற்றியமைக்கும் திறம் படைத்த தலைவர்களின் தோற்றத்தை அவள் நெடுங்காலமாக எதிர்பார்த்திருந்தாள். அத்திறம் படைத்த தலைவர்கள் தோன்றி இருப்பதை அவள் இப்பொழுது கண்டாள்.

இங்கிலாந்து நார்மானியரால் சிறுகச் சிறுகக் கைப்பற்றப் பட்டது. அம் முறையால் வில்லியத்திற்குப் பெரு நன்மை உண்டாயிற்று. அவ்வப்போது கலகங்களும் குழப்பங்களும் உண்டாகிய பொழுது, அவ்வப் பகுதிகளுக்குப் படைகளை அனுப்பி அவர் அவற்றைக் கைப்பற்றி வந்தார். அவ்வாறு கைப்பற்றிய பகுதிகளில், அவர் ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்டுவதற்காக, மாவீரர்களை அங்கு நிலையாகத் தங்கி யிருக்குமாறு அனுப்பி வைத்தார். கைப்பற்றிய பகுதிகளில் வாழ்ந்த நிலக்கிழார்கள் சமயத்தலைவர்கள் முதலியோரின் நிலங் களையும், உடைமைகளையும், 'அவர்கள் கலகம் செய்தனர் அல்லது அதற்கு உடந்தையாக இருந்தனர்' என்று அவர்கள் மீது குற்றத்தைச் சாற்றி, வில்லியம் பறி முதல் செய்து வந்தார். இவ்வாறு ஆங்கிலேய நிலக்கிழார்களும், மடாதிபதிகளும், குருமார்களும், தேனர்களும் தங்கள் நிலங்களை இழந்தனர். ஆனல், பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களை மாவீரர்களின் தொண்டிற்காக, அரசர் அவர்களுக்கு நிலமானியக் கொடையாக அளித்துள்ளார். இவ்வாறு ஒவ்வொரு கோட்டத்திலும் பிரஞ்சு மொழி பேசும் மாவீரர்கள், பிரஞ்சு மொழி பேசும் காணியாளர் களிடமிருந்தும், குருமார்களிடமிருந்தும் கொடைப் பொருளைப் பெற்றனர். இவர்கள் அனைவரும் சேர்ந்து பிரஞ்சு மொழி பேசும் தங்களுடைய இனத்தைச் சார்ந்த நார்மானிய அரசருக் குக் கடப்பாடுடையவர்களாக வாழ்ந்தனர்.

படிப்படியாகப் பல ஆண்டுகள் இங்கிலாந்தின் பகுதிகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டமையும், நிலங்கள் பறி முதல் செய்யப் பட்டமையும் ஆங்கிலேய நிலமானியப் படை முறையில் காணப்படும் சிறப்பியல்பிற்குக் காரணமாகும். நாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்த ஒவ்வொரு காணியாட்சியாளரும் பெரு நிலக்கிழார்களாக இருந்து வந்தனர். ஐரோப்பியப் பெரு நிலப் பரப்பில் காணப்பட்டதைப் போன்று இங்கிலாந்தில் இருந்த காணியாட்சியாளர்களின் பண்ணைகள் ஒரு மாநிலத்திற்குட் பட்டதாக இருந்ததில்லை. நாடு முழுவதிலும் அவை சிதறுண்டு கிடந்தன. இவ்வாறு இங்கிலாந்தில் நார்மானியப் பெரு மக்களின் பண்ணைகள் அருகிலும், தொலைவிலும் பரவி இருந்த

மையால், கோட்டங்களில் வாழ்ந்த குடி மக்கள் ஒவ்வொருவரின் ஆற்றலைக் காட்டிலும் அரசினுடைய ஆதிக்கம் பேராற்றல் வாய்ந்ததாக இருந்து வந்தது. எனவே அவற்றைக் காணியாட்சி யாளர் தகுதி பெற்றிருந்த 'ஷெரீப்பு' என்னும் கோட்ட ஆட்சி அதிகாரியால் ஆளுவது எளிதாக இருந்தது. அவ்வதிகாரி அரசனுடைய அதிகாரியாகவே தம் கடமைகளைச் செய்து வந்தார். அவரை எப்பொழுது வேண்டும் என்றாலும் அரசர் வேலையிலிருந்து நீக்கி விடுவதற்கு உரிமை பெற்றிருந்தார். பழைய ஆங்கிலக் கோட்டத் தலைவர்(Shire—Reeve) பதவி இது முதல் புதிய நார்மானிய 'விகாம்டே' (Vicomte) வொடு ஒப்புமை யுடையதாகக் கருதப்பட்டது. பழைய ஆங்கில நாட்டுச் 'ஷையர்' (கோட்டம்), அயல் நாட்டு மொழிச் சொல்லால், 'கவுண்ட்டி' (கோட்டம்) என்று அழைக்கப்பட்டது. நார்மானிய அரசர்களின் ஆட்சிக் கருவியாக இருந்த ஷெரீப்பின் ஆட்சி, நாளடைவில் அரசியல் ஆதிக்கத்தின் கொடுமுடியை எட்டிப் பிடித்தது. அதனுடைய வளர்ச்சி, சாக்சானிய மக்களுக்கும், நார்மானியருக்கும் மனநிறைவை அளிக்காது, அவர்களிடையே வெறுப்புணர்ச்சியை வளர்த்தது.

ஒவ்வொரு ஷையரிலும் நேரடியாக அரசரின் ஆட்சியை நிறுவுவதற்காகவே சாக்சானிய இங்கிலாந்தின் பிற் பகுதியில், ஆறு மாநிலங்களாகப் (Earldoms) பிரிக்கப் பட்டிருந்த இங்கிலாந்தின் நாட்டுப் பகுதிகளை வில்லியம் உடைத்தெறிந் தார். வில்லியம் வெளிப்படையாகவே அழித்தொழித்தார் முதலில் காட்வினின் குடும்பத்தோடு வெஸ்ஸக்ஸ் மறைந் தொழிந்தது. [பார்க்க: படம் எண்: 9] அது பின்னர் எப் பொழுதும் தனிமாநிலமாக விளங்கவில்லை. திரு. தாமஸ் ஹார்டி யின் (Thomos Hardy) [1] நாவல்களில்தான் வெஸ்ஸக்ஸை மீண்டும் தனி மாநிலமாகக் காண முடிகிறது. எட்வினும், மோர்கரும் இரண்டாம் முறை (கி. பி. 1069-ல்)கலகம் செய்த பொழுதே மெர்சியாவும், நார்த்தம்பிரியாவும் (1069-ல்) அழித்தொழிக்கப் பட்டது. நார்மானியக் கோமகன் ஒருவன் தலைமையின் கீழ் கிழக்கு ஆங்கிலியா சிறிது காலம் தொடர்ந்து இருந்து வந்தது. ஆனால் அந் நார்மானியக் கோமகன் கி. பி. 1075-ல் அரசருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவுடன் அம் மாநிலங்களும் பல

[1] இங்கிலாந்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைப்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சிறப்புற்று விளங்கிய நாவலாசிரியர். எளியஇனிய நடையில் மக்கள் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுவதில் அவர்வல்லவர். அவருடைய நகரங்களில் மிகச் சிறந்தவை. For From the Madding Crowd, The Trumpet Major, The Mayor of caster bridge என்பனவாகும்.

கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. வில்லயம் ரூபஸ் (Rufus) எனப்படும் இரண்டாம் வில்லியம் இறந்த பொழுது மூன்றே கோட்டங்கள்தான் தனிப்பட்ட கோமான்களால் ஆளப்பட்டு வந்தன. அவற்றுள் செஸ்டர் மாநில ஆட்சியுரிமையும், ஷீருஸ் பரிமா நில ஆட்சியுரிமையும் பரம்பரையாக வரும் கோமகன் குடும்பங்களுக்கு உரியனவாக இருந்து வந்தன. டர்ஹாம் கோட்டத்தின், நில ஆட்சியுரிமை உலகியலுக்கும் ஆன்மீக இயலுக்கும்தலைவராக இருந்துவந்த இளங்கோ பாதிரியாருடைய (Prince Bishop) தாக இருந்தது. இவ்வாறு இவற்றை விதி விலக்குகளாக நார்மானிய அரசர் விட்டுவைத்ததற்குக் காரணம் வெல்ஷுக்களுக்கும், ஸ்காட்டியர்களுக்கும் எதிராக அம்மாநிலங்கள் தத்தம் படையாற்றலைப் பெருக்கிக் காத்துக் கொள்ளுவதற்கே யாகும்.

நில ஆட்சியுரிமைக் கோட்டங்களுக்கு உட்படாதிருந்த இங்கிலாந்தின் பிற பகுதிகளில், வெற்றிவீரர் வில்லியம் இருவகை முறையினைக்கொண்ட ஆட்சியை நடத்தினர். தம்முடைய கீழாட்கள் (Vassals) மூலமாக அவற்றை மறைமுகமாக அரசர் ஆண்டு வந்தார். நேரடியாக ஷெரீப்புகள் மூலமாகவும், நிலவுடைமைப் பேராய்வுக் (Domes day) கணிப்பினைச்செய்த ஆணையாளர்களைப் போன்ற, பல ஆணையாளர்கள் மூலமாகவும் நார்மானிய அரசர் தம்முடைய ஆட்சியை நடத்தினர். நாடெங்கும் சுற்றித்திரிந்து கடுமையாக நிலவழக்கினை விசாரித்த அவ்வாணையர்கள் சார்லமே பேரரசில் சிறப்புற்று விளங்கிய 'மிஸ்ஸி' (Missi) என்னும் அதிகாரிகளைப் போன்றவர்களாவர். அவர்கள் பிற்காலத்தில் தோன்றப்போகும் ஊர்ஊராகச்சுற்றிவரும் நீதிபதிகளுக்கும் (Justices in Eyre),சட்டமியற்றும் நீதிபதிகளுக்கும் (Justices of Assize)' மூல முதல்வராக அமைந்தனர். சாக்சானிய இங்கிலாந்தில் இத்தகைய அமைப்புகள் ஒன்றுமே இருந்ததில்லை. அவர்கள் ஒரு கால் சாக்சானிய அரசின் துணிவுமிக்க ஊழியராக இருந்திருக்கலாம். ஷெரீப்பின் மூலம் தகவல்களை ஆராயும் ஊழியர்களாகவும் அவர்கள் இருந்திருந்தால் நாம் வியப்படைவதற்கில்லை. பட்டணக் குடி இருப்புகளின் நல்ல மனிதர்களாக அவர்கள் வாழ்ந்திருக்கலாம். காட்வினுடைய வெஸ்ஸக்ஸிலும், எட்வினுடைய மெர்ஸியாவிலும் மேற் கண்ட பணிகளைப் புரிபவர்களாக அவர்கள் இருந்திருக்கலாம்.

பிரஞ்சு மொழி பேசிய காணியாட்சியாளர்கள் தங்கள் சாதியைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பாவில் பெற்றுள்ள சிறப்

புரிமைகளை, இங்கிலாந்திலும் தாங்கள் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். அவர்களுள் சிலர், வில்லியம் தங்கள் ஆதிக்கத்திற்கு வரம்பிடுவதை உணரத் தொடங்கினர். அதனால், அவர்கள் அரசரிடத்துச் சீற்றம் கொண்டனர். வில்லியத்தின் இறுதிப் பன்னிரண்டு ஆண்டுக்கால ஆட்சியில் சினமுற்ற அப்பிரபுக்கள் வாய்ப்புக்கிடைத்த பொழுதெல்லாம் அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து வந்தனர். அவர்களை அடக்கி யொடுக்குவதே வில்லியத்திற்குப் பெரும் வேலையாய்ப் போயிற்று. அக்கலகக்காரர்களை அடக்கி யொடுக்குவதற்கு அரசர் தம்மிடத்துப் பற்றுறுதியுடைய சில நார்மானியப் பிரபுக்களின் ஆதரவையும், தாம் வென்ற நாட்டில் வாழும் ஆங்கிலேய மக்களின் உதவியையும் நாட வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. அக்காலத்தில் இன உணர்வு என்பது சிறிதளவிற்குக்கூட வளர்ந்திருந்ததாகத் தெரியவில்லை. தங்கள் இனத்தைச் சார்ந்தவர்கள் ஆட்சிபுரிந்த காலத்திலேயே சாக்சானியர், வலியோர்களின் கொடுமைகளால் அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் சிந்தப் பயிற்றுவிக்கப் பட்டிருந்தனர். எனவே பிரஞ்சுமக்கள் இங்கிலாந்தைக் கைப்பற்றிய பொழுது செய்த கொடுஞ் செயல்களை விரைவிலேயே அவர்கள் மறந்துவிட்டனர். அதனால் இங்கிலாந்தின் அரச மரபினைச் சாராத வில்லியத்தோடு, ஒன்றுபட்டு நின்று நாட்டிலே உண்டாகும் கிளர்ச்சிகளை அடக்க ஆங்கிலேயர் முன் வந்தனர். எனினும், பிற்காலத்தில் சிக்கல்கள் மிகுதியான பொழுதும் ஐரிஷ் மக்கள் மட்டும் நார்மானியர் செய்த கொடுமைகளை மறந்து அவர்களை மன்னிக்க மறுத்தனர். இதனால் வில்லியம் இங்கிலாந்து மக்களுக்கு இழைத்த இன்னல்களும், கொடுமைகளும், அழிவு வேலைகளும் அளவிடற்கரியது என்பது தெளிவாகிறது.

கி. பி. 1075-ல் காணியாட்சியாளர் கிளர்ச்சி செய்தனர். அதை உடனே அரசர் அடக்கி யொடுக்கினர். இதனால் நார்மானியர் இங்கிலாந்தில் முழு வெற்றி பெற்றுவிட்டனர் என்பது புலனாகிறது. நாட்டு மக்களைக் கொள்ளையடித்து அவர் பொருள்களைக் கைப்பற்றிய நார்மானியக் கொள்ளைக்காரர் இப்பொழுது தங்கள் கொடுஞ் செயல்களுக்கு இரையாகித் துன்புற்ற மக்களை நோக்கி, வேண்டுகோள் விடுக்கத் தொடங்கினர். யார் அடுத்து அரசராவது என்பது குறித்து வில்லியத்தின் பிள்ளைகளுக்குள்ளே போரும், பூசலும் உண்டாயிற்று. அதனால் முதலாம் ஹென்றி, இன வேறுபாடு, தகுதி வேறுபாடு கருதாது நாட்டு மக்களைத் தம்மை ஆதரிக்குமாறு வேண்டும்படி நேர்ந்தது.

பொதுவும் சிறப்புமான உரிமைப் பட்டயங்களை (Charter of Liberties) அரச பதவிக்குரிய விலையாகக் கொடுத்து அரசர் மக்களின் ஆதரவைப் பெறவேண்டிய நெருக்கடி நாட்டிலே உண்டாயிற்று. அரசுரிமைப் போட்டிகளுக்கு இடையே சம நிலையை நிறுவும் முக்கிய பொறுப்பினை லண்டன் மாநகரம் ஏற்றுக் கொண்டிருந்தது. அதனால் நார்மானிய அரசர்கள் லண்டன் மாநகரின் சிறப்புரிமைகளைப் பறிக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாதவர்களாக இருந்தனர்.

வெற்றி வீரர் நிலவார முறையாகிய (land-tenure) நில மானியப் படைமுறையை இங்கிலாந்தில் கண்டிப்பாக நிறுவினர். அப்பொழுது, ஐரோப்பியப் பெருநிலப் பரப்பில் அரசியல் நில மானியப் படை முறையால் உண்டான குழப்பத்தையும், கலகங்களையும் போன்று இங்கிலாந்தில் தோன்றாமல் பார்த்துக் கொண்டார். இது அவருடைய ஆற்றலுக்கும், திறமைக்கும் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். அவர் பிற்காலத்தில் மா பெரும் முடியாட்சியின், மையக்குவிமுக ஆட்சி படிப்படியாக வளர்ச்சியுறுவதற்கு வழி வகுத்துக் கொடுத்தார். ஆனால், அவர் வரம்பற்ற வல்லாட்சிக்குரிய அதிகாரங்களைப் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. அவருக்குப் பிறகு அரசரானவர்களும் வல்லாட்சி நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வில்லியம் இருவகையில் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு இருந்தார். சாக்சானிய சட்டத் திட்டங்களைத் தாம் கடைப்பிடித்து ஒழுகுவதாக அவர் சாக்சானிய மக்களிடையே வெளிப்படையாக உறுதி மொழி அளித்து இருந்தார். அடுத்து ஐரோப்பியப் பெருநிலப் பரப்பில், வழக்கிலிருந்து வந்த நிலமானியப் படை முறை மரபினைப் பின்பற்ற வேண்டியவராக இருந்தார். அவருடன் கடல் கடந்து வந்திருந்த அவருடைய ஆதரவாளர்கள் அனைவரும் அச்சட்ட திட்டங்களிலே மூழ்கித் திளைத்தவர்களாக இருந்தனர். எனவே, வில்லியம் இருவகைச் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டு ஆட்சி புரிய நேர்ந்தது. இவ்விரு சட்டங்களும் இணைந்து பல நூற்றாண்டுகளுக்கு இடையே, தற்கால இங்கிலாந்தின் சட்டங்களையும், உரிமைகளையும் படிப்படியாகத் தோற்றுவித்தன. சமயச் சார்பற்ற செயல்களில் அதிகாரம் அனைத்தையும் ஒரு மனிதனிடத்தில் குவிப்பதும், சட்டங்கள் அனைத்தையும் தனி மனிதன் ஒருவனே தன் மனத்தில் கொண்டிருப்பதும் — அதாவது தனி மனிதன் ஒருவன் தான் சொல்லுவதும் செய்வதுதான் சட்டம் என்று கூறுவது — இடைக் காலத்திய உலகின் மனப் போக்கிற்கு முற்றிலும், மாறானது. பெருந் திறமையுடைய தற்கால அரசு பற்றிய கோட்பாடும், எல்லாம் வல்ல அரசன் 'ஆட்சியும்

அரசும் நானே' ('L' e'tat c'est moi') என்று கூறுவதும் இடைக் காலத்திய மக்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. மக்களிடமிருந்து பிரிக்க முடியாத தனியுரிமைகளையும் கூட்டு ரிமைகளையுமே இடைக்கால உலகம் பொதுச் சட்டமாகக் கருதியது. அரசருக்கும் பிரபுக்களுக்கும் இடையே திருச்சபை இருந்து வந்தது. அது இருதிறப்பட்ட சமயச் சார்பற்ற சக்தி களைத் தன்னுடைய விருப்பத்தையும் அறவுணர்வையும் ஒரே சமயத்தில் நிறைவடையுமாறு செய்து கொள்ளுவதன் மூலம் அவற்றைச் சமநிலையில் இருக்குமாறு செய்து வந்தது. லான் பிராங்கு காலம் முதல் லாங்டன் மூலமாக குரோஸ்ஸெட்டேய்த்தே (Grossetete) வரை மீண்டும் திருச்சபை அரசியல் அமைப்பினைச் சமநிலை பிறழாது காத்துவருவதைக் காணுகின்றோம். பொது மக்களைக் கொடுமைப் படுத்துவதையும், பொது மக்கள் கலகம் செய்வதையும் திருச்சபை எப்பொழுதும் வெறுத்து வந்தது. அதனால், திருச்சபை வாயிருந்தும் 'ஊமைகளாக' இருக்கும் பெருந்திரளான பொதுமக்களின் சார்பில் அரசிடத்துப் பேசும் உரிமையுடையதாக இருந்தது. அவ்வாறு பரிந்து பேசுகின்ற பொழுது, தன்னுடைய நலவாழ்வினை அச்செயல் என்றும் பாதிக் காது இருக்குமா என்பதைக் கண்ணுங் கருத்துமாகத் திருச் சபை கவனித்தது.

இடைக்கால அரசில் வல்லாட்சியை விட, கலகமும் குழப்பமுமே பேராபத்துடையதாகக் கருதப்பட்டது. ஆனால், இதற்கு முற்றிலும் மாறாக, இடைக்காலத் திருச்சபையின் நோக்கம் இருந்து வந்தது. இடைக்கால அரசு, அரசன், பிரபுக் கள், தலைமைக் குருமார்கள் ஆகியோரின் 'கலவை ஆட்சி முறையினை' யுடையதாக இருந்தது. நிலமானியப் படை முறை அரசியலின் அடிப்படைப் பண்பான தனி மனிதனுக்கும் பிரபு விற்கும் இடையே உள்ள தொடர்பு, ஒருவருக்கொருவர் கொண் டிருந்த கடப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இரு திறத்தாரும் தங்கள் உடன்பாட்டினை மீறுவார்களானால், அதற் காகத் தண்டவரி செலுத்தி வந்தனர். அக்காலத்தில் சட்டம் நன்கு வரையறுக்கப்படாமல் இருந்தமையாலும், நன்முறையில் நீதி நிர்வாகம் நடைபெறாமல் இருந்தமையாலும் நிலமானியப் படை முறையின் உரிமைகளைப்பற்றிமுடிவு செய்வதற்குப்போரில் இறங்குவதைத் தவிர சிறந்த வழி வேறொன்றும் இருந்ததாகத் தெரியவில்லை. இறைவனால் அரசனாக அபிடேகம் செய்யப்பட்ட அரசரை எதிர்ப்பது இடைக்காலத்து மக்களுடைய சிந்தனைக்கும் செயலுக்கும் பெருங்குற்றமாகத் தோன்றவில்லை. ஒருவருக்கு ஒருவர் கடப்பாடுடையவராக வாழும் நிலமானியப் படை

முறையில், வரலாற்று உண்மையாகிய 'மக்களுக்கும் அரசருக்கும் இடையே தொடக்க காலத்திலேயே ஒரு வகை உடன்படிக்கை' செய்யப்பட்டிருக்கிறது என்னும் கோட்பாட்டின் கருமுதல் காணப்படுகின்றது. இக் கோட்பாட்டினை நெடுங் காலத்திற்குப் பிறகு மறுமலர்ச்சிக் காலத்திய கொடுங்கோல் மன்னர்களை எதிர்த்து, விக்கு (Whig) கட்சியைச் சார்ந்த தத்துவ ஞானிகள் 'சமுதாய ஒப்பந்தம்' (Social Contract Theory) என்னும் அரசியல் கொள்கையாக அறிவித்தனர்.

ஒரு காலத்தில் அரசன் தன்னுடைய நிலங்களைக் குத்தகை எடுத்துள்ள மக்களின் தலைவனைக் கலந்து செயலாற்ற வேண்டும் என்ற நியதி இருந்தது. அது அரசனுடைய சிறப்புரிமையாகவும், கடமையாகவும் கருதப்பட்டது. 'குத்தகைக் காரர்களின் தலைவுன்' என்பவன் அரசனிடமிருந்து நேராக நிலங்களைப் பயிரிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவனுவான். குத்தகைக் காரர்களின் தலைவனும், அவ்வாறே தன்னுடைய பிரபுவாகிய அரசனைக் கலந்து, உழவுத்தொழில் செய்வோருடைய வழக்குகளை முடிவு செய்வான். அது அவனுடைய சிறப்புரிமையாகவும், கடமையாகவும் இருந்து வந்தது. இதிலிருந்தே அரசரது ஆலோசனை அவை (Consilium) அல்லது 'கியூரியா' (Curia) என்னும் 'மன்னரின் பேரவை' அமைப்பு தோன்றியது. இவ்வமைப்பு நிலமானியப் படை முறை நாடுகளில் இருந்ததைப் போன்றதேயாகும். வில்லியத்தின் 'கவுன்சில்' எனப்படும் மன்றமும் இவற்றைப் போன்றதேயாகும். முதறிஞர் மன்றம் (Witan) ஓரளவிற்கு நில மானியப் படை முறைப் பண்பினை உடையதாக இருந்தது. எனவே, முதறிஞர் மன்றம், மேற்கண்ட அவைகள் கண்காணித்து வந்த செயல்களையும் கவனித்து வந்தது. ஆனால் ஆற்றல் மிக்கவர்களான நார்மானிய அரசர்கள் தன் முனைப்பு மிக்குடையவர்களாக இருந்தமையால், தங்கள் கீழாட்களின் (Vassals) ஆதிக்கத்திற்கு உட்படாது தங்கள் விருப்பம் போலவே நடந்து கொண்டனர். சாக்சானிய அரசர்கள் தங்கள் முதறிஞர் மன்றத்தின் உறுப்பினர்களான பெருமக்களுடைய விருப்பிற்கிணங்கிச் செயலாற்றி வந்தமை இங்கு நினைவு கூரத்தக்கது.

நார்மானியர் ஆட்சிக் காலத்தில் 'கான்சீலியம்' (Consilium) என்னும் சொல்லும், 'கியூரியா' (Curia) என்னும் சொல்லும் எத்தகைய வேறுபாடுமின்றி அரசனுக்கு அறிவுரை கூறும் உறுப்பினர்களைக் கொண்ட 'அவையினைப்' பொதுவாகக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப் பட்டது. அம்மன்றம் நார்மானியர்

காலத்தில் ஆட்சியியல், நீதியியல், சட்டவியல் மன்றங்களான பிரிவி கவுன்சில் (Privy Council), மன்னர் முறை மன்றம் (King's Bench), பாராளு மன்றம் என்ற முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படவில்லை. கூர்த்த மதிவாய்ந்த அக்காலத்திய எழுத்தாளர்களால்கூட ஆட்சியியல் செயலுக்கும், நீதியியல் செயலுக்கும், சட்டவியல் செயலுக்கும் இடையே எத்தகைய வேறுபாட்டையும் காணமுடியாத நிலை அக்காலத்தில் இருந்து வந்தது. அரசர் எந்தச் சிக்கலாக இருந்தாலும், அருகிலிருக்கும் உறுப்பினர் யாராக இருந்தாலும் அவரைக் கலந்து அவ்வச் சமயங்களுக்கேற்பச் செயலாற்றி வந்தார். எத்தகைய வழக்காக இருந்தாலும் அரசர் தேவைக்கேற்ப ஒரு குழுவினை நியமித்தும், ஆணையர்களை நியமித்தும் அவர்களைக்கோட்டங்களுக்கு அனுப்பி அச்சிக்கல்களை விசாரித்து முடிவு காணுமாறு செய்து வந்தார். இவ்வாறு செயலாற்றுவதில் அக்காலத்தில் எத்தகைய விதி முறைகளையும் பின்பற்றியதாகத் தெரியவில்லை. அதுவரை வரையறுக்கப் பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பிரபுக்கள் சபையைப் போன்றும், பொதுமக்களின் முறை மன்றத்தைப் (Court of Common Pleas) போன்றும் ஒரு கழகமோ, அவையோ இருந்ததில்லை. அவறறை அக்காலத்தில் கடமையும் உரிமையும் உடையதாகக் குறிப்பிட்ட பருவத்தில் செயல்களைநெறி முறையோடு கவனிக்கக் கூட்டப்படும் பழக்கம் வழக்கமாக இருந்ததாகவும் தெரியவில்லை. 'கியூரியா' போன்ற தெளிவில்லாத அவையின் கடமைகள், ஆற்றல் மிக்க அரசருக்குப் பேரதிகாரத்தை நல்கியது. ஆனால், ஆங்கில–நார்மானிய உலகில் காணப்பட்ட குழப்பமான நிலையினை மாற்றி, ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டவே, அரசர் அவ்வதிகாரங்களைப் பயன்படுத்தி வந்தார்.

முதலாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில்தான் அரசன், தன் கடமைகளை முதன் முதல் பாகுபடுத்திச் செயலாற்றத் தொடங்கினன். அப்பொழுது சில 'கருவூலப் பிரபுக்கள்' (Barons of Exchequer) தங்களுக்கென்று ஒரு முறையும் அலுவலகமும் அமைத்துக் கொண்டனர். அவ்வமைப்பு 'கவுன்சிலின்' ஓர் உட்பிரிவாக இருந்தது. அது நாட்டாட்சியின் மிக முக்கியமான வருவாய்த்துறை விவகாரங்களைக் கவனித்து வந்தது. அரசனுக்கு நியாயமாகச் சேர வேண்டிய பலதிறப் பட்ட தீர்வைகளைத் தண்டுவதே அதனுடைய கடமையாகும். ஷெரீப்புகள் செலுத்திய பணக் கட்டணங்களையும், குறுநிலத் தலைவர்களும் பட்டயங்கள் பெற்ற பேரூர்களும், நிலமானியப் படைமுறைக் கோட்டங்களும் ஆண்டுதோறும் அரசருக்குச் செலுத்திவந்த வரிகளையும், திறைப் பொருளையும் ஒருங்கு திரட்டி, அவற்றை முறை

யாகக் குறித்து வைப்பதே 'கருவூலப் பிரபுக்கள்' செய்துவந்த பணியாகும்.

அக்காலத்தில் சட்டம் இயற்றல், ஆட்சி புரிதல், நீதிநிர்வாகம் போன்ற பிற ஆட்சியியல் கடமைகள் நன்கு வரையறுக்கப்படாமலேயே இருந்தன. குறிப்பிட்ட ஒரு வழக்கிற்குப் பின்பற்ற வேண்டிய முறை என்ன என்பதை, அரசர் தம்முடைய விருப்பப்படி கூறுவது வழக்கமாகும். அவருடைய விருப்பமும், தங்களுடைய உரிமையை வாளினைக் கொண்டு நிலை நாட்ட விரும்பும் பிரபுக்களினால் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டது. ஆயினும், அரசர் தமது தலைமைக் குத்தகைக்காரரைக் கலந்தே முடிவிற்கு வரவேண்டும் என்னும் கொள்கை சட்டத்தினால் வலியுறுத்தப் படாமையும், செயலில் ஒழுங்கற்ற முறையில் பின்பற்றப்பட்டு வந்தமையும் என்றும் மறுக்க முடியாத உண்மையாகும். பிளாண்டா ஜெனட்டு அரசர் காலத்தில் நிகழ்ந்த அரசியல் அமைப்புப் போராட்டங்களினால் முதன் முதலாக வளர்ச்சியுறத் தொடங்கிய, இங்கிலாந்தின் உரிமைகளுக்குரிய வித்தாக அவை அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரசருடைய அதிகாரத்தின் மூலம் கடுமையாக ஆராயப்பட்ட வழக்குகளுள் மாபெருஞ் சிறப்புடையது 'டூம்ஸ்டே (Domes day) நில அளவையாகும். கி. பி. 1086-ல் நிலவுடைமைப் பேராய்வு இங்கிலாந்து முழுவதும் நடைபெற்றது. நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேட்டில் (Domes day Book) காணப்படும் கருத்துகள் வெற்றிவீரர், இங்கிலாந்தின் பலதிறப்பட்ட மக்களையும் தமக்கு அடிபணிந்து நடக்குமாறு செய்தமைக்குச் சிறந்த சான்றாக உள்ளன. முரட்டு மனிதரான வில்லியம் நார்மானியர்களையும், சாக்சானியர்களையும், கெல்ட்டிக்கு இனமக்களையும் நெடுந் தொலைவிற்கு அப்பால் மலைப் பகுதிகளிலும், காட்டு நிலங்களிலும், இருந்த கார்னீஷியக் குடிசைகளை விட்டுக் கரி படர்ந்த பட்டணக் குடியிருப்புகளிலும், யார்க்கு ஷையரில் தரிசாகக் கிடந்த பள்ளத்தாக்குகளிலும், ஆற்று இடை வெளிகளிலும் வந்து குடியேறுமாறு செய்தார். இத்தகைய கண்டிப்பான நில மதிப்பீட்டுத் திட்டம் ஐரோப்பாவில் எம்மாவட்டத்திலாகிலும் செயற்படுத்தப் பட்டிருந்தால், ஒரே சீராக இங்கிலாந்தில் நடந்ததைப் போல் வெற்றி பெற்றிருக்க முடியாது. ஏன், இங்கிலாந்திலேயே இரண்டாம் ஹென்றியின் மையக்குவிமுக ஆட்சி நிறுவப்படுவதற்கு முன்பு, நில ஆய்வுத் திட்டம் மீண்டும் செயற்படுத்தப் பெற்றிருந்தால், அது வெற்றி பெற்றிருக்க முடியாது என்பது உறுதி. 'நில அளவையை மிகக் குறுகிய காலத்திலேயே செய்து

18

முடிக்குமாறு' அவர் செய்தார் என்று சாக்சானியக் கால வழிச் செய்திக் கோவை ஓலமிடுகிறது. 'அவர் இங்கிலாந்தில் அளக்காதுவிட்ட நிலம் ஓர் அங்குலம்கூட இல்லை' எனலாம். 'கணக்கில் எழுதப்படாமல், நாட்டில் ஓர் எருதோ, பசுவோ, பன்றியோ இருக்கக் கூடாதென்று கருதினர். நமக்கு இதைச் சொல்லவே வெட்கமாக இருக்கிறது. ஆனால் ஹென்றி அதைச் செய்வதில் கூட வெட்கப் படவில்லை' என்பது அக்கால காலவழிச் செய்திக் கோவையின் கருத்துரையாகும்.

நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேடு, அடிப்படையில் ஒரு 'வரிப்புத்தக'மாகும். அது அரசிறை வருவாய்க்குரிய செய்திகளை எல்லாம் தொகுத்துரைக்கும் ஒரு குறிப்பேடாகும். இக் குறிப்பேட்டின் துணையைக் கொண்டு 'டேனிகெல்டு' (Denegeld) என்னும் திறைப் பொருளை ஒழுங்காகத் தண்டுவதே அரசினுடைய அடிப்படை நோக்கமாக இருந்தது. எனினும், வெற்றி வீரர் வில்லியத்திற்கு இதைத்தவிர நிலவுடைமைப் பேராய்வுக் கணக்கெடுப்பில் வேறெந்த உள்ளார்ந்த நோக்கமும் இருந்ததில்லை என்று கூறுவது பொருத்தமற்றதாகும். மூலக் கருத்துகள் அனைத்தும் சேகரிக்கப்பட்ட பிறகு, மாற்றியும் திருத்தியும் இறுதியாக அமைக்கப்பட்ட நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேட்டின் அமைப்பு முறையே, வேறு சில கருத்துகளை மனத்திலே கொண்டு அது தயாரிக்கப்பட்டது என்பதை எடுத்துரைக்கின்றது. அக்குறிப்பேடு நாட்டிலுள்ள நிலங்கள் அனைத்திற்கும் உரிமையுடையவனாகிய அரசனுக்கு—நிலமானியப் படைமுறையின் தலைவனாக விளங்கும் அரசனுக்கு—அவனுடைய குறுநிலத்தலைவர்கள், கீழாட்கள் முதலியோரின் அதிகாரத்தையும், வருவாயையும் பற்றிய விவரத்தைச் சிறிதும் பிழையின்றி விளக்குகின்றது. சாக்சானியரின் நாட்டாட்சி முறைக்குப் பதிலாக, புதிய நிலமானியப் படைமுறை அமைப்புகளான இராணுவம், வருவாய்த்துறை, நீதி நிர்வாகம், நாடு காவல் போன்றவற்றைக் கண்காணித்துவரப் புதியதொரு நாட்டாட்சி முறையை நிறுவுவதில் அவ்வரசாங்கம் முனைந்திருந்தது. நிலவுடைமைப் பேராய்விற்காக முதன் முதல் தீர்ப்புச் சான்றுளர் குழுவினரை, ஆணையிட்டு உண்மைச் செய்திகளை உரைக்குமாறு அரசனின் ஆணையர் செய்தனர். அவற்றை அரசரின் ஆணையர்கள் குறிப்பெடுத்துக் கொண்டனர். அத்தீர்ப்புச் சான்றுளர் குழுவில் ஒவ்வொரு ஊரின் குடியிருப்பைச் சார்ந்த மத குருவும், நாட்டாண்மைக்காரரும், ஆறு உட்குடிகளும் உறுப்பினர்களாக இருந்தனர். ஆயினும் அக்கணிப்பேட்டில் சேகரிக்கப்பட்ட கருத்துகள் வகுத்தும் தொகுத்தும் அமைக்கப்பட்டிருக்கும் முறை, ஒவ்வொரு ஊர்க்

குடியிருப்புகளையும் ஒருங்கு சேர்த்து அல்லது அதன் ஒரு பாதியை ஒருங்கு சேர்த்து, நிலமானியப் படைமுறை அமைப்பின் புதிய கூறான மேனர் பண்ணைகளை (Manor) அமைத்துள்ளமை கருதத்தக்கது.

சாக்சானியர் வாழ்வின் ஓர் அமைப்பாக விளங்கும் கோட்டத்தைப் (Shire) பற்றி நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேடு நன்ருகக் கவனித்துக் குறிப்பெடுத்துள்ளது. எல்லா வகையான செய்திகளையும் 'ஷையர்' அல்லது 'கவுண்ட்டி' (County) எனப் படும் கோட்டத்தின் தலைமையின் கீழ் திரட்டிச் சேர்த்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும். அதனல் அரசன் கோட்டங்களின் மூலமாகவே தன்னுடைய ஆட்சியை நிலைநாட்டத் திட்டமிட்டிருந்தான் என்பது புலனகின்றது. ஆனல் ஒவ்வொரு கோட்டத்தினுள்ளும் சிறப்புடைய உட்பிரிவாக விளங்குவது தலைமைக் குத்தகைக்காரனுடைய நிலவுடைமையாகும். அவனுடைய நிலங்கள் கோட்டங்களிலுள்ள எண்ணற்ற நூறுகளில் (Hundreds) சிதறுண்டு கிடந்தாலும் அவனுடைய நிலமானியப் படைமுறை உடைமைக்கே முதலிடம் தரப்பட்டுள்ளது. நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேட்டின் மிகச் சிறிய அலகு பட்டணக்குடி எனப்படும் ஊர் அன்று; தலைமைக் குத்தகைக் காரனகவோ, கீழாளாகவோ, உள்ள பிரபுவின் ஆட்சிக்குட் பட்ட மேனர் (Manor) பண்ணைகளே சிறப்பிடம் பெற்றுள்ளன. இவ்வாறு நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேடு முற்றுப் பெற்ற நிலையில் எழுதப்பட்ட அறிக்கையில் நெடு நாட்களாக நாட்டிலே வழங்கி வரும் 'தலைவனில்லாத நிலமில்லை' (Nulle terre Sans Seigneur) [1] என்னும் பழமொழிக்கு இதற்கு முன்பு என்றுமே கண்டிராத அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது.

நார்மானிய அரசரும், அவருடைய ஆலோசனை அவையினரும் சேர்ந்து, ஒவ்வொரு கோட்டமும் 'டேனிகெல்டு' திறைப் பொருளை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மொத்தமாகச் செலுத்த வேண்டும் என்று அறிவிப்பர். அத் தொகையினைக் கோட்டங்களின் உறுப்புகளாக இருந்த நூறுகள் (Hundreds) தனித் தனியே தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு, ஆண்டுதோறும் தத்தம் தொகையைக் கோட்டத் தலைவரிடம் செலுத்தி வந்தன. ஊர்க்குடியிருப்புகளிடம் இருந்து நேரடியாகக் கோட்டங்களின் அதிகாரிகளோ, நூற்றின் அதிகாரிகளோ தீர்வையைத் தண்ட

[1] 'No land without its lord' என்பது பொருள்.

வில்லை. அதற்கு மாருக, ஒவ்வொரு பண்ணையின் தலைவராக இருந்த பிரபுக்களிடமிருந்தே அதைத் தண்டி வந்தனர். அப் பிரபுவே அரசருக்கு வரிகளைச் செலுத்தக் கடமைப்பட்டவராக இருந்தார். ஆனால் அவர் தம்முடைய குத்தகைக்காரர்களைக் கசக்கிப் பிழிந்து எத்துணைப் பொருளை வேண்டுமானாலும் வரியாகப் பெற்றுக்கொள்ளும் உரிமையுடையவராக இருந்தார். கோட்ட அதிகாரிகள் அப் பிரபுக்களைக் கண்டிக்கவோ அச்சுறுத்தவோ முடியாது. பண்ணைகளின் பொறுப்பை ஏற்றுகொண்டிருக்கும்பிரபுவே சட்டத்தின் முன்னணிநிலையில் பண்ணைகளின் உரிமையாளராகத்தோற்றமளித்தார். இதனால் பழைய ஊராட்சி அமைப்பிற்கு இருந்து வந்த பொறுப்பும் சிறப்பும் புறக்கணிக்கப்பட்டன. சாக்சானியர் காலத்திற்கு முன்பே இம் முறை தொடங்கப் பட்டது. ஆனால் அது இக்காலத்தில் கொள்கை அளவில் முழு நிறைவுற்றது. எதிர்ப்பு மிக்க டேன்லா பகுதி முதற்கொண்டு நாடு முழுவதும் ஒரே சீரான தண்டல் முறையினை நிறுவியது.[1]

புதிய இங்கிலாந்தின் அடிப்படை மூல அளவு பிரபுவின் மேனர் பண்ணையாகக் கொள்ளப்பட்டது.[2] அதனுள் குடியிருப்புகள் இடமாற்றம் செய்யப்பட்டன. ஒவ்வொரு மேனர் பண்ணையும் (Manor) ஒரு மேனர் முறை மன்றத்தைக் (Manorial Courts) கொண்டிருந்தது. நார்மானிய இங்கிலாந்தில் தனியார் அதிகாரத்திற்குட்பட்ட முறை மன்றங்களுள் அதுதான் சிறப்புடையது அல்லது முக்கியம் வாய்ந்தது என்று கூறுவதற்கு இல்லை. நிலமான்யப் படை முறையின் முழு உரிமைக் கட்டுப்பாட்டிற்காகப் பல உயர்தர முறை மன்றங்கள் விரைவில் தோன்றின. தலைமைக் குத்தகைக்காரர் ஒருவர் தம்முடைய கீழாட்களிடையே உண்டான வழக்கினை நிலமானியப் படைமுறைச் சட்டப்படி தீர்ப்பதற்காக முறை மன்றங்களைக் கூட்டும் உரிமையைப் பெற்றிருந்தார். இறுதியாக, சாக்சானியர் காலம் முதல் இருந்து வரும் சிறப்பு மிக்க பல வகை வாக்குரிமைகள், பிரபுக்களுக்கும், தலைமைக் குருமார்களுக்கும், நூற்றின் முறை மன்றத்திற்கும் உரிய குற்ற இயல் அதிகாரவரம்பிற்கு ஒத்த உரிமைகளை அளித்தன. நார்மானியரின் வெற்றிக்குப் பிறகு மூன்று நூற்றுண்டுகள் கழித்தே படிப்படியாக அரசரின் முறை மன்றம், மேற் கண்ட தனியார் முறை மன்றங்களின்

[1] நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேட்டின் முக்கிய குறிப்புகளை இவ்வியலின் இறுதியில் உள்ள குறிப்பில் காண்க.

[2] அடுத்த இயலின் இறுதியில் உழவுத் தொழில் முறைகளைப் பற்றியும் மேனர் பண்ணைகளின் சமூக அமைப்பைப் பற்றியும் விளக்கப்பட்டுள்ளதைக் காண்க.

உரிமைகளையும், அதிகாரவரம்பினையும் பேரளவில் கைப்பற்றியது. அரசருடைய தீர்ப்பு வழங்கும் முறையே சாலச் சிறப்பு உடையதாக மக்கள் கருதினமையாலும், தனியார் முறைமன்றங்களைக் காட்டிலும் குறைந்த செலவிலும், குறித்த காலத்திலும் தீர்ப்பினைப் பெற முடிந்தமையாலும் அரசர் தனியாருடைய முறை மன்றங்களின் கடமைகளையும் உரிமைகளையும் தாமே மேற்கொண்டு சிறந்த முறையில் நீதி நிர்வாகத்தை நடத்த முன் வந்தார். நார்மானியர் காலத்தில் நூறிலும், கோட்டத்திலும் இருந்து வந்த முறை மன்றங்களே பொது முறை மன்றங்களாக இருந்து வந்தன. நார்மானியப் படையெடுப்பிற்குப் பிறகு நூறின் முறை மன்றம் விரைவில் நலிவுற்றது. கோட்டத்தின் முறை மன்றத்திற்கு அரசரின் அதிகாரியான ஷெரீப்பு தலைமை தாங்கினார். ஆனால், அக்கோட்டத்தில் வாழ்ந்த தனியுரிமைக் குடிமக்களுள் முக்கியத்துவம் வாய்ந்தோரே நீதிபதிகளாகப் பணியாற்றினர். அவர்கள் அம்மாவட்டத்தில் தொன்றுதொட்டு வழக்கத்தில் இருந்துவரும்வழக்காற்று நெறிச்சட்டத்தைஅடிப்படையாகக் கொண்டு நீதி வழங்கி வந்தனர். அத்தகைய சட்டத்துணுக்குகள் அக்கோட்டம் முழுவதிலும் நன்கு அறியப்பட்டதாகவும், ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் இருந்தன. ஆனால் இங்கிலாந்தின் 'பொதுச் சட்டமும்' (Commom Law), அரசருடைய முறை மன்றத்தில் சட்ட இயல் முறைப்படி வழக்காடும் சிறப்புமிக்க தொழிலும் இன்னும் கால மென்னும் கருப்பையினுள் கருவாகவே இருந்து வந்தது.

அரசின் முறை மன்றங்களுள் ஒரு வகையை வெற்றி வீரர் வில்லியமே முதன்முதல் அமைத்தார். அதைக் 'கானக முறை மன்றம்' (Forest Court) என்பர். தனியார் முறை மன்றங்களைக் காட்டிலும் இம் மன்றம் நார்மானியராலும் சாக்சானியராலும் பெரிதும் பழிக்கப்பட்டது. அம் மன்றத்தில் அரசன் ஒருவனே தனியுரிமையும் தன்னலத் திறமையும் வாய்ந்த உறுப்பினனாக இருந்து வந்தமையால்தான், மக்கள் அதை வெறுத்தனர். நார்மண்டியின் கானகச் சட்டமும், கானக முறை மன்றமும் இங்கிலாந்திற்கு நார்மானியரால் கொண்டு வரப்பட்டன. அவற்றின் விளைவாக மனிதர்களின் துன்பமும், அடிமைத்தனமும் கலந்து பெரும் அவலநிலை உண்டாயிற்று. அடுத்த நூற்றாண்டில் நார்மானிய அரசின்நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்குக் காடாக இருந்தது. அதில் 69 காடுகள் அரசனுக்குரியனவாக இருந்தன. பரந்த, ஆனால் மக்கள் மிக மிகக் குறைந்த அளவில் வாழ்ந்த அக்காடுகளில் அரசருடைய அமைதி, கடவுளும் மனிதனும் வெறுக்கும் வகையில் நிலை

நாட்டப்பட்டிருந்தது. கானக முறை மன்றங்களின் அதிகார வரம்புக்குட்பட்டிருந்த பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு, பொதுக் குடி மகனுக்கு உரிய உரிமைகளை வழங்க அம் முறை மன்றங்கள் மறுத்தன. வெற்றி வீரரின் ஆட்சியில் அரசரின் காட்டில் புகுந்து, மான்களைத் திருட்டுத்தனமானமாக வேட்டையாடும் குற்றத்திற்காக (வேட்டை ஆடியவரின்) கைகால்கள் குறைக்கப் படும் தண்டனை அளிக்கப்பட்டது. வில்லியத்திற்குப் பிறகு அரசரானவர்கள் அக் குற்றத்திற்கு மரண தண்டனை விதித்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டு மக்களுக்குப் பயன்படாவண்ணம், அவர்கள் உரிமை களைப் பறிப்பதைப் போன்று, நாட்டில் மூன்றிலொரு பங்கு நிலப்பரப்பில் அரசர் தனி அதிகாரம் செலுத்தினர். அதனல் நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு அரசருக்கும் மக்களுக்கும் இடையே அடிக்கடி போரும் பூசலும் உண்டாயிற்று. படிப் படியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் காடுகள் அழிக்கப்பட்டு வந்தமையால், நாட்டின் பொருளாதார, ஒழுக்கவியல் முன் னேற்றம் வளர்ச்சியுறத் தொடங்கியது. ஸ்டுவர்ட்டு மன்னர்கள் காலத்தில் அரசருடைய இவ்வதிகாரம் ஊர்ப் பெரிய தனக் காரர்கள் கைகளுக்குச் சென்றது. 'வேட்டைச் சட்டங்கள்' (Game Laws) முறை கேடானவர்கள் வழுக்கி விழுவதைப் போன்று, பேரளவில் வளர்ச்சியுற்றன. பிளாக்ஸ்டன் என்னும் வயது முதிர்ந்த அறிஞர் அச்சட்டங்களை 'முறை கேடானவர் வழுக்கி விழுதல்' என்றே இழிவாகக் குறிப்பிட்டு வந்தார். அரசரின் கானகச் சட்டங்கள் சிறிதுகொடுமைகள் குறைந்ததாக இருந்த போதிலும், அக்காலத்திய ஆங்கிலேய மக்களுக்குச் சட்டங்கள் வழங்கிய உரிமையுணர்விற்கு அவை எதிர்ப்பாக இருந்தன என்பதை மக்கள் நன்குணர்ந்திருந்தனர்.

'அவர் மான்களுக்காகக் காடுகளைப் பெரிதாக்கினர். அத னேடு கானகச் சட்டங்கள் இயற்றினர். அச்சட்டத்தின் மூலம் யாராவது கலைமானையோ, பெண் மானையோ கொன்றுவிட்டால், அவர்களுடைய கண்களைக் குருடாக்குமாறு கட்டளையிட்டார். மான்களைக் கொல்லக் கூடாது என்று அவர் தடை விதித்ததைப் போலவே காட்டுப் பன்றிகளையும் கொலை செய்யக்கூடாது என்று தடை விதித்தார். அவர் உயர்ந்த கலைமான்களை, 'அவற்றின் தந்தையைப் போன்று' அன்புடன் வளர்த்தார். முயல்கள் தம் விருப்பம் போல் காடுகளில் ஓடுவதற்குக் கண்காணிப்பாளர்களை அவர் அமர்த்தியிருந்தார். இதைக் கண்டு செல்வர் அரச ரிடத்துத் தங்கள் குறையை எடுத்துக் கூறினர்; வறியவர் முணு

முனைத்தனர். ஆனால், அவர் உறுதி மிக்கவராக இருந்தமையால், இருதிறத்தாரின் சொற்களையும் கேட்டு அதற்கு இணங்கவில்லை' என்று ஆங்கில சாக்சானிய காலவழிச் செய்திக் கோவை ஆசிரியர் மொழிந்துள்ளார்.

வெற்றிவீரர் அரசியலில் உண்டாக்கியப் புரட்சிகரமான மாறுதல்களைப் போன்றே, மிக முக்கியமான சீர்திருத்தங்களைத் திருச் சபையிலும் செய்துள்ளார். பிரஞ்சுப் பிரபுக்களும், மா வீரர்களும் சாக்சானிய கோமகன்களையும், தேனர்களையும் பதவியிலிருந்து நீக்கியதைப் போன்று அயல் நாட்டுக் குருமார்கள், பாதிரிகளின் அலுவலகம், மடாலயங்கள், மாவட்டத் தலைமைக் கோயில்கள் ஆகியவற்றிலிருந்த ஆங்கிலேயர்களுக்குப் பதிலாகத் தாங்களே ஆளத் தொடங்கினர். ஹில்டர் பிராண்டு காலத்திய ஐரோப்பாவில் சீர்திருத்தக் கட்சியின் கோட்பாடுகளுக்கும், படி நிலைகளுக்கும் அடிபணிய வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டது. இத்தகைய சில மாற்றங்கள் பேரளவிற்குச் செயலாற்றும் திறமையையும், கல்வியின் தரத்தையும், ஆர்வத்தையும் உயர்த்தின. சிறப்பாக அதிகாரிகளின் படி நிலையில் செய்யப்பட்ட மாற்றங்கள் பெரும் பயன் தந்தன. அதைத் தொடர்ந்து நான்கு நூற்றாண்டுகள் சிறப்பு மிக்க சமயக் கட்டடக் கலை நார்மானியர் காலம் முதல் வளர்ச்சியுற்றது. நார்மானியர்தான் முதன் முதல் சாக்சானியரின் பெரிய திருச் சபைகளையெல்லாம் விரைவிலே இடித்துப் புதிதாக அங்கு அழகு மிக்க கட்டடங்களைக் கட்டத் தொடங்கினர். ஆனால் அயல் நாட்டுத் திருச் சபையினரால் செய்யப்பட்ட மாற்றங்கள் சமயத்தினை இன்னும் பேரளவிற்கு இலத்தீன் நாகரிக மயமாக்கியது. அம் முறைகள் நார்ட்டிக்கு மக்களின் அறிவாற்றலுக்கும், மனப் போக்கிற்கும் நிலைத்த பயனைத் தருவதாக அமையவில்லை.

'எட்வர்டு அரசர் வாழ்ந்த நாளிலும், இறந்த நாளிலும்,' இங்கிலாந்தின் கிராமங்களில் இருந்த குருமார்களும் பிரம சரிய ஒழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டனர். இதனால் நீடித்த போராட்டம் ஒன்று வெற்றி வீரர் ஆட்சிக் காலத்திலும், அவருடைய பிள்ளைகளின் ஆட்சிக் காலங்களிலும் தொடர்ந்து நடைபெற்றது. அக் கட்டளையின் படி கிராமப் பாதிரிமார்கள் மட்டுமல்லாமல், தொழில் செய்கின்ற அனைவரும் அல்லது கற்றறிந்தோர் அனைவரும் சட்டத்திற்குட்பட்ட முறையில் குழந்தைகளைப் பெறக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. மடாலயங்களின் குறிக்கோளாகிய கற்பு-ஒழுக்கம், அக்காலத்திய ஆர்வம் மிக்க திருச் சபையினருக்கு

எவ்வாறேு பொருத்தம் உடையதாக அமைந்தது. அக்காலத்திய பொது ஊழியர்களுள் பெரும்பாலோர், குருமார்களாக இருந்து வந்தனர். எனவே அவர்களுடைய மனப் பாங்கிற்கும் வாழ்க்கை நெறிக்கும் இது முற்றிலும் மாறுபட்டிருந்தது. கல்வி கற்ற ஆண்கள் அனைவரையும் திருமணம் செய்து கொண்டு குழந்தைகளைப் பெறக் கூடாது என்று தடுத்தமை இனப் பெருக்கத்திற்குப் பெருந் தடையாயிற்று. அதனால், திருச் சபையின் அறவுணர்வின் பண்டைய நிலையில் வருந்தத் தக்க விளைவுகள் உண்டாயின.

வெற்றி வீரரின் மாபெருந் திருச்சபைச் சீர்திருத்தம், அவர் முறை மன்றங்களைத் திருச் சபை முறை மன்றம் என்றும், சமயச் சார்பற்ற முறை மன்றம் என்றும் பிரித்தமையேயாகும். இது வரை கோட்ட முறை மன்றங்களில் பாதிரியாரும் ஷெரீப்பும் சேர்ந்தே தலைமை தாங்கி நடத்தி வந்தனர். அம் மன்றத்தில் உலகியல், ஆன்மீகத் தொடர்பான வழக்குகளை விசாரிக்கத் தொடங்கினர். திருச்சபையின் அதிகார வரம்பு பிரிக்கப் பட்டது. தற்காலத்தில்அரசனது முறைமன்றங்களுக்கும்,நாட்டுச் சட்டத்திற்கும்இருந்துவரும் அதிகாரங்கள் அனைத்தும்திருச்சபையின் புதிய உரிமைகளில் அடங்கிக் கிடந்தன. மேலும் திருச் சபையின் அதிகாரம் மக்கள் வாழ்க்கையின் பெரும் பகுதியைத் தழுவியதாகவும் இருந்தது. எடுத்துக் காட்டாகத் திருச்சபை முறை மன்றம் திருச்சபைகளிலும் மடங்களிலும் இருப்போர் செய்யும் கொடிய குற்றங்கள் (Felony) திருமண வழக்குகள், இறுதி விருப்பப் பத்திரம் (Testament) அவதூறு, பழி (Slauder) முதலிய வழக்குகளைக் கவனித்து வந்தது. மேலும், அது தற்காலத்தில் எம் மன்றங்களும் விசாரிக்காத வேறு சில சிறப்பான வழக்குகளையும் விசாரித்து வந்தது. அவற்றுள் குறிப்பிடத்தக்கன, பாவம் செய்தால் அதற்குத் தவம்செய்ய வேண்டும் என்று வற்புறுத்தும் அதிகாரத்தையும், சமயத்திற்கு எதிராகப்பேசுதல், சமயவேறுபாட்டுணர்வு ஆகியவற்றிற்காகத் தண்டித்தல் முதலிய அதிகாரங்களையும் பெற்றிருந்தது.

பொது முறைமன்றங்களுக்கும், சமயத் தொடர்பான முறை மன்றங்களுக்கும் உள்ள கடமைகளைப் பாகுபடுத்தி அரசர் வரையறுத்தார். அச் செயல் சிறந்த சட்டவியல் நாகரிகத்தின் உயர்ந்ததொரு படிநிலையாக அமைந்தது. அப்பாகுபாடு இல்லாமல் இருந்திருந்தால், திருச்சபையோ, அரசோ நீதி நிர்வாகத்தினையும், சட்ட திட்டங்களையும் உரிமையோடு வளர்த்

திருக்க முடியாது. மேலும் அவற்றிடையே காரண காரியத் தொடர்பும் அமைந்திருக்க முடியாது. ஆங்கிலேயப் பொதுச் சட்டம் அதன் இன மரபு ஆற்றலோடு என்றுமே முழுவளர்ச்சியைப் பெற்றிருக்க முடியாது. அச் சட்டத்தின் வளர்ப்புப் பண்ணை திருச்சபை வழக்கறிஞர்களாலும், நீதிபதிகளாலும் பங்கிடப்பட்ட ஒரு முறைமன்றமாக இருந்து, அம் முறைமன்றத்தில் ஆங்கிலேயச் சட்டத்தை ரோமானிய விதிகளால் அளந்து பார்த்திருப்பார்களானல் பொதுச் சட்டம் நாற்றாக இருக்கும் பொழுதே, வாடி வதங்கி, உலர்ந்து கருகிப் போயிருக்கும். திருச்சபைக்கென்று தனி முறை மன்றங்கள் இருந்தமையால், அது ஐரோப்பாவில் இயற்றப்பட்ட திருச்சபைச் சட்டங்களை (Canon Law) மிக விரைவில் இங்கிலாந்தில் செயற்படுத்த முடிந்தது. இடைக் காலத்தின் பிற்பகுதியில் இங்கிலாந்தின் திருச்சபைகள் அனைத்திலும் போப்பு ஆண்டவரின் திருச்சபைச்சட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. திருச்சபை, ஓர் ஆன்மீக அமைப்பு என்கின்ற காரணத்தால், அது போப்பு ஆண்டவருக்கே கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதே அச் சட்டத்தின் தலையாய நோக்கமாகும். ஆனல், அரசர் திருச்சபையின் சமயச் சார்பற்ற மற்றொரு கையாகக் கருதப்பட்டார். போப்போடு மதிப்புடையவராகவே அரசர் நடத்தப்பட்டார். ஆனல், நடைமுறையில் அரசு ஒரு போட்டி சக்தியாகவே இருந்து வந்தது. எனவே, போப்பின் அதிகாரத்திற்குத்திருச்சபை வரம்பு அமைக்கவில்லை. அரசன் தன்னுடைய ஆதிக்கத்தைத் தற்காத்துக் கொள்ளுவதற்காகவே, போப்பின் ஆதிக்கத்தினை இங்கிலாந்தில் வரம்புக் குட்பட்டதாகச் செய்தார். பல ஆங்கிலேய குருமார்களின் நல்லெண்ணத்தைத் துணையாகக் கொண்டே அரசர் போப்பு ஆண்டவரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த முயன்றார்.

'அரச பதவி' என்ன என்பதைப் பற்றி வில்லியம் ஒரு வகையான கோட்பாடுடையவராக இருந்தார். அவர் பாதிரிமார்களையும், மடாலயத் தலைவர்களையும் நியமிக்கும் உரிமை, செயல் முறையில் அரசனிடத்து இருக்க வேண்டும் என்று கருதினர். இச் சிறப்புரிமை இல்லாது, அவர் இங்கிலாந்தைத் தம் அதிகாரத்திற்கு உட்படுத்தியிருக்க முடியும்; ஆனல் அரசு செலுத்தி இருக்க முடியாது. திருச்சபையின் சீர்திருத்தங்களுக்காக அவர் இச்சிறப்புரிமையைப் பயன்படுத்தினர். ஆனல், அரசின் சமயச் சார்பற்ற செயல்களிலும் அரசர் இச் சிறப்புரிமையைப் பயன் படுத்தினர். அவருடைய செயலாளர்களும், நீதிபதிகளும் பணித்துறை அலுவலர்களில் பெரும்பான்மையோரும், திருச்சபையைச் சார்ந்தவர்களாகவே இருந்

தனர். இவ்வாறு திருச்சபையைச்சார்ந்தவர்களையே அரசன் அதிகாரிகளாக அமர்த்தியதற்குக் காரணம், பொது மக்கள் கல்வி யறிவு அற்றவர்களாக இருந்தமையே ஆகும். கற்றறிந்த மக்களாக இருந்தவர்கள் திருச்சபையின் அலுவலகத்தில் வேலை செய்பவர்களாக இருந்தனர். சீர்திருத்த இயக்க காலம் வரையில், அரசரும் அவருடைய வழித் தோன்றல்களும், தம் செல்வத்தின் பெரும் பகுதியையும், திருச்சபையின் செல்வாக் கையும் அரசுக்குத் திருச்சபையினர் தொண்டு செய்யுமாறு தூண்டுவதற்கே பயன்படுத்தி வந்தனர். நீதிபதிகளும் பணித் துறை அலுவலர்களும் மானியங்களையும், திருச்சபை அலுவல கப் பொறுப்பையும் ஊதியமாகப் பெற்றனர். தற்காலச் சமய உணர்வினை அடிப்படையாகக் கொண்டு அவற்றை ஆராய்ந்தால், அம் முறை பெரும் பழியுடையதாகத் தோன்றும். ஆனால், அம்முறை நாட்டிற்கு நல்ல முறையில் தொண்டாற்றியது. டியூடர் காலத்திற்கு முன்பே புரட்சி செய்திருக்கக் கூடிய மக்கள் சமூகத்திற்கு, அம்முறையால் இடைக்காலத் திருச்சபை யின் பெருஞ்செல்வம் நன் முறையில் பயன்பட்டது. அதனால் திருச்சபையின் செயல்களை மக்கள் பொறுமையோடு கவனித்து வந்தனர். இடைக்காலத் திருச்சபை, கடவுள் பற்றையும், சமயத்தையும் வளர்த்து அரும் பணி புரிந்தது; அத்துடன் அறிவை வளர்ப்பதற்கும் கல்வியைப் பரப்புவதற்கும் உரியவழி வகைகள் அனைத்தையும் மேற் கொண்டது. கல்வியும், அறிவும் பொது மக்களிடையே பரவிய பிறகுதான், குருமார்களுக்கு மட்டும் கல்வி கற்பிப்பதற்குரிய ஒரு முறையும், திருச்சபையின் செல்வத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டிய தேவையும் உண்டாயிற்று.

வெற்றி வீரர் வில்லியம் தாராளமாக மானியங்கள் வழங்கித் திருச்சபையைப் போற்றிப் புரந்தார். ஆனால் அதே சமயத்தில் அவர் அரசின் உரிமைகளைக் காக்கும் ஆற்றல் மிக்க காவலராக விளங்கினார். சிற்சில சமயங்களில் இவர்களுக்குக் கிடையே பூசல்கள் இருந்து வந்த போதிலும், லான்பிராங்கைத் தமது வலது கையாகக் கொண்டு அவர் ஆட்சி புரிந்தார். ஆனால், வில்லியம் ரூபசு (கி. பி. 1087—1100), அரசருக்குரிய பண்புகளை உடையவராக இருந்த போதிலும், கொடியமுரடனாக இருந்தார். அவருடைய மரணப் படுக்கையில்தான், அவர் இறைப்பற்று உடையவராகக் காணப்பட்டார். தம்முடைய அரசாங்க வரு வாயைப் பெருக்கிக் கொள்ள முயன்ற பொழுது, திருச்சபை யோடு தம்முடைய தகப்பனார் கொண்டிருந்த தொடர்பினைப் பழிக்கத் தொடங்கினார். மேலும், அவர் தம்முடைய கீழாட்களை

நிலமானியப் படை முறை உரிமைகளைக் கொண்டு துன்புறுத்தி வந்தார். லான் பிராங்கு (1089—1093) இறந்த பிறகு புதியதொரு தலைமைக் குருவை அவர் அமர்த்தவில்லை. அதனால் ஐந்து ஆண்டுகள் காண்ட்டர்பரி திருச்சபையின் வருவாய்கள் அனைத்தையும் அரசரே பெற்று இன்புற்று வந்தார். பிறகு அவர் நோய்வாய்ப்பட்டு, மரணப் படுக்கையில் இருந்தார். அச்சமயத்தில் விருப்பமே இல்லாத ஆன்சலம் (Anselm) என்பவரைத் தலைமைக் குருவாக அமர்த்தினார். ஆனால், நாட்டு மக்கள் வியப்பும், துன்பமும் அடையுமாறு அரசர் பிழைத்தெழுந்தார். அது முதல் பல ஆண்டுகள் ஆன்சலமை அரசர் ஆட்டிப்படைத்தார். விருப்பமில்லாது தலைமைக் குருவின் பதவியை ஏற்றுக் கொண்ட ஆன்சலம் அரசரை எதிர்ப்பதற்கு உள்ள உரம் அற்றவராக இருந்தமையால், பன்னெடுங்காலம் அரசரின் கைப்பொம்மையாக அல்லலுற்றார். ஆயினும் நாட்டு மக்கள் அவருடைய இக்கட்டான நிலைக்காக இரக்கம் காட்டினர். தீமை செய்யத்தயங்காத உணர்ச்சி வயப்பட்ட அரசன் ஒருவனிடத்தில், சமயச் சார்பற்ற அதிகாரம் குவிந்தால், நாட்டின் சமய வாழ்வு சீர்குலைந்து விடும் என்பதற்கு இந்நிகழ்ச்சிகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இத்தகைய கருத்துகளை மனத்திற் கொண்டு, திருச்சபையின் உரிமைகளை மீட்பதற்கு வரையறையின்றி ஹில்டர்பிராண்டு போன்றவர்கள் போராடியது நேர்மையானதா என்பதை ஆராய்ந்து முடிவிற்கு வர வேண்டும். இவ்வுரிமைகளுக்காகப் போராடிய ஹில்டர்பிராண்டு என்னும் புகழ்மிக்க ஏழாம் போப்பு கிரிகோரி, தம்முடைய வழித் தோன்றல்களுக்கு இவ்வுரிமைகளை அழியாத பெருஞ் செல்வமாகத் தேடி வைத்து விட்டுச் சென்றார்.

முதலாம் ஹென்றியின் (கி.பி. 1100—1135) ஆட்சிக்காலத்தில் அரசுக்கும் திருச்சபைக்கும் இடையே தவிர்க்க முடியாத மோதுதல் உண்டாயிற்று. 'எழுத்தாளர்' ஹென்றி காட்டுமிராண்டித் தன்மையுடைய தம்முடைய சகோதரரைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டவராக இருந்தார்.[1] ஆனால் அவர்

[1] இடைகாலத்தில் இங்கிலாந்தினை ஆண்ட அரசர்களுள் அரசியலில் தோல்விகண்ட ஒவ்வொருவரும், சிறப்பாகக் கற்களில் சிறந்த பெருங் கட்டடங்களை அமைத்து நமக்கு விட்டுச்சென்றுள்ளனர். ஆங்கிலப் பொதுச்சட்டத்தை வளர்ப்பதற்குரிய பரந்த வளர்ப்புப் பண்ணையாக விளங்குமாறு வெஸ்ட்மின்ஸ்டர் மன்றத்தை ரூபசு கட்டி விட்டுச்சென்றார். இரண்டாம் ரிச்சர்டு, அகனுடைய தூண்களை அகற்றி இன்றைய வடிவில் அதனை அமைத்தார். மூன்றாம் ஹென்றி அருளாளரின் திருமடத்தைக் கட்டினார். ஆறாம் ஹென்றி அரசர் கல்லூரியின் தொழுகையிடத்தைக் கட்டத்தொடங்கினார்.

அரச பதவியைப் பழித்துரைக்கவில்லை. அரசினுடைய உரிமைகளை அவர் ஒரே சீராக நிலைநிறுத்தி வந்தார். அதே சமயத்தில் ஆன்சலம் திருச்சபையின் புதிய உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருந்தார். தலைமைக் குருமார்கள் அரசரால் அமர்த்தப் படுவதா? அல்லது போப்பு ஆண்டவரால் அமர்த்தப் படுவதா என்ற பிரச்சினை எழுந்தது. இப் பதவி அமர்த்தல் சடங்கு அக்காலத்திய ஐரோப்பாவில் உண்டான வலிப்பு நோயாக இருந்து வந்தது. கொடியதொரு போராட்டத்திற்குப் பிறகு, இருதிறத்தாரும், கி. பி. 1106-ல் ஓர் உடன்பாட்டிற்கு வந்தனர். இங்கிலாந்தின் அரசர், போப்பு ஆண்டவருக்குச் சமய குருமார்களை ஆன்மீகச் செங்கோலோடு பதவியில் அமர்த்தும் உரிமையை வழங்கினர். ஆனல், அக்குருமார்கள் நிலப் பிரபுக்கள் என்னும் முறையில் அரசராகிய தம்மிடத்து நிலமானியப் படை முறைப்படி பற்றுறுதியுடையவர்களாக இருக்க வேண்டும் என்னும் உரிமையைத் தமக்குரியதாக்கிக் கொண்டார். குருவாக்கப் படுவதற்கு உரிய மனிதரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை மறைமுகமாக அரசரே கைக்கொண்டிருந்தார். மாவட்டத் தலைமைக் கோயிற் குருமார்கள் கூட்டத்தினர் தேர்ந்தெடுக்க வேண்டிய குருமார்களின் பெயர்களைக் குறிப்பிடும் அதிகாரத்தை அரசர் பெற்றிருந்தார். ஆனல் அவ்வுரிமைக்கு வரம்பிருந்து வந்தது. அடிக்கடி போப்பின் இசைவினைப் பெற்றே பாதிரிமார்களாகிய குருமார்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இவ்வாறு திருச்சபைக்கும் அரசுக்கும் இடையே நட்புறவு உண்டாகத் தொடங்கியது. பொது மக்கள் அறியாமை நிறைந்தவர்களாகவும், ஐரோப்பிய அரசுகள் சிறியனவாகவும், ஆற்றலற்றனவாகவும் இருந்த நூற்றுண்டுகளில், இடைக்காலத் திருச்சபை உண்மையிலேயே ‘அனைத்துலகப் பண்புடையதாக'வும், கருத்துகளை வலியுறுத்தும் அதிகாரம் உடையதாகவும், அறிவிலும் செல்வத்திலும் பேராற்றலுடையதாகவும் இருந்தது. மேலும் போப்பின் தலைமையில் திருச்சபை ஆற்றல் மிக்க ஓர் அமைப்பாக விளங்கியது. வாழ்க்கையின் பல்வகைத் துறைகளிலும் திருச்சபை பேராதிக்கம் செலுத்தி வந்தது. தற்காலத்திய சமயங்கள் யாதாகிலும் அப்பெறற்கரும் உரிமைகளையும், ஆதிக்கத்தையும் பெற்றிருக்குமானல், மக்கள் சமுதாயம் முழுவதையும் குருமார்களின் ஆட்சிக்கு அடிமையாக்கி விட்டிருக்கும். அவ்வாறு திருச்சபை செய்ய வொட்டாது இடைக்கால அரசர்கள் தடுத்தனர் என்று கூறலாம். இக்காலத்திற்குப் பின்னர், மூன்று நூற்றுண்டுகள் கழித்து, அரசர் ஊர்களில் வாழ்ந்த குருமார்களைக் கவர்ச்சி மிக்க சொல்லோவியமாகப் பாடியதைப் போன்று, நார்மானியர் காலத்தில் திருக் கோயில் குருமார்களைப்

பற்றி அறிவதற்குரிய சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு ஊரிலும் இருந்த சமய குரு ஏழைச் சாக்சானியராக, நார்மானியரால் தோற்கடிக்கப்பட்ட இனத்தைச் சார்ந்தவராக இருந்தனர். திருச்சபையின் செல்வங்கள் வெற்றி பெற்ற நார்மானியர்களுக்குள்ளே பங்கிடப் பெற்றதே ஒழிய, கிராமப் புற ஏழை மதகுருமார்களுக்கு அதிலிருந்துஒரு செல்லாக்காசும் கிடைக்கவில்லை. மேனர் பண்ணையில் அவர்களுடைய நிலை உட்குடிகளின் நிலையோடு பெரிதும் ஒத்திருந்தன.[1]

நார்மானியரின் படையெடுப்பு முதல் பத்தொன்பதாம் நூற்றுண்டு வரை, இங்கிலாந்தின் ஊர்க் குருமார்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சமூகம் நிலையாக மேன்மையுற்றுக் கொண்டு வந்தது. இடைக் காலத்தின் பிற்பகுதியில் தனியுரிமைக் குடிமக்களின் எண்ணிக்கை பெருகலாயிற்று. அந்நிலையில் உட்குடிகள் குருமார்களாகக் கூடாது என்று திருச்சபை கட்டளை பிறப்பித்தது. டியூடர், ஸ்டுவர்ட்டு அரச மரபினர் காலத்தில், பெரிதும் ஊர்க்குருமார்கள் உழவர் குடியைச் சார்ந்தவர்களாக இருந்தனர். அல்லது அக்காலத்திய பலதிறப்பட்ட நடுத்தர வகுப்பினரில் ஒரு வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தனர். சிற்சில சமயங்களில் பண்பாளர் வகுப்புகளிலிருந்தும் ஊர்க்குருமார்கள்அமர்த்தப்பட்டனர். ஜேன் ஆஸ்டின் (Jane Austen) காலத்தில் இம்முறை தலைகீழாக இருந்தது. கிராமத்துக் குரு பொதுவாக உயர்தர மக்கள் இனத்தைச் சார்ந்தவராக, பெரிதும் ஊர்ப் பெரிய தனக்காரரின் (Squire) மகனுகவோ, நண்பனுகவோ இருந்ததாகத் தெரிகிறது.

நார்மானியப் படையெடுப்பின் விளைவுகளுள் ஒன்று ஆங்கில மொழி செம்மொழியாக்கப் பட்டமையாகும். ஹேஸ்டிங்ஸ் போரின் விளைவாக ஆங்கில-சாக்சானிய மொழி, ஆல்பிரட்டும், பீடும் பேசிய மொழி, மன்றங்களிலிருந்தும் வேனில் மாளிகைகளிலிருந்தும், அரசவை, மடங்கள் முதலியவற்றிலிருந்தும் வெளியேற்றப்பட்டது. ஆங்கிலத்தை நாட்டுப்புற மக்களின் 'பிதற்றல் மொழி" என்றும், அறிவில்லாத அடிமைகள் பேசும் மொழி என்றும் இழித்தும், பழித்தும் பேசும் நிலையுண்டாயிற்று. அம்

[1] கிராமக் குருமார்கள், உட்குடிகளின் நகர இருப்புகளின் பங்குதாரர்களாக இருந்தனர். சிலர் நிலமுடையவர்களாகவும் இருந்தனர். அவர்கள் மக்களுக்குச் சிறப்பான கடமையின்காரணமாக வழிபாட்டுக் கூட்டத்தை நடத்தி வந்தமையால் அவர்களுக்கு அக்குடியிருப்புகளில் இலவசமாக வீடு அளிக்கப்பட்டிருந்தது.

மொழியினை எழுதிப் பழகுவார் - போற்றுவார் இல்லாமல் போயினர். கற்றவர்களும், கல்விச் செருக்குடையவர்களும் அம் மொழியினைப் பேசுவதில் ஆர்வம் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் பாதிரிமார்கள் இலத்தீன் மொழியையும், பண்பாளர் கள் பிரஞ்சு மொழியையும் பேசியமையேயாகும். எப்பொழுது ஒரு மொழி எழுதப்படுவது அரிதாகிறதோ, அறிஞர்களால் புறக்கணிக்கப் படுகிறதோ, அப்பொழுது, அம்மொழி பாமர மக்களின் அன்றாட வாழ்வின் தேவைக்கேற்பப்பயன்படும் மொழி யாகத் தானே மாறிவிடுகிறது. இது சூழ்நிலைகளுக்கேற்ப நன்மையும் பயக்கலாம்; அல்லது தீமையும் இழைக்கலாம். இலக்கண அமைப்பில் குறைபாடுடையதாகவும், அழகற்றதாக வும் இருக்குமானால், மாற்றம் செய்வதை எதிர்க்கும் இலக்கண ஆசிரியர்கள் தோன்றாத பொழுது மிக எளிதில் அம்மொழியை மாற்றியமைத்து விடலாம். எனவே, அவ்வாறு அன்றைய இங்கிலாந்தில் ஆங்கில மொழி மாற்றியமைக்கப்பட்டது. நம் முடைய நாட்டு மொழி, அக்காலத்தில் முந்நூறு ஆண்டுகள் நாட்டுப்புற மக்கள் பேசும்மொழியாக இருந்து வந்தது. அக் காலத்தில், அது குறைபாடான சொல் திரிபுகளையும், பேரளவில் செய்யப்பட்டிருந்த பால்பாகுபாட்டையும் இழந்தது. அதனு டைய சிறப்பியல்புகளுள் முக்கியமான நயமிக்க அழகையும், குழைவையும், சூழ்நிலைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளும் பண்பினையும் அரிதின் முயன்று இக்காலத்தில் பெற்றது எனலாம். அதே சமயத்தில் பிரஞ்சு மொழிச் சொற்கள், கருத் துகள் பலவற்றால் ஆங்கில-சாக்சானிய மொழி, வளம் பெற்றது. ஆங்கிலச் சொற்றொகுதியில், போர், அரசியல், நீதி, சமயம், வேட்டையாடுதல், சமயல்கலை முதலியவற்றைக் குறிப் பிடும் சொற்களுள் பெரும்பாலானவை பிரஞ்சு மொழிச் சொற் களேயாகும். இவ்வாறு திருத்தம் பெற்ற நமது தேசிய மொழி, கற்றறிந்த பண்பாளர் சமூகத்தில் மீண்டும் நுழையலாயிற்று. சாசரின் (Chucer) கதைகளாகவும் விக்கிளிப்பின் (Wycliffe) விவிலிய நூலாகவும் மக்களிடையே நடமாடத்தொடங்கியது. வருங்காலத்தில் ஷேக்ஸ்பியரின் ஆங்கிலமாகவும், மில்டனின் ஆங்கிலமாகவும் சிறப்புறுவதற்கேற்ற முறையில் வளர்ச்சியுற லாயிற்று. இழிவாகக் கருதப்பட்ட இங்கிலாந்தின் நாட்டுப்புற மொழி, மறைமுகமாக வளர்ச்சியுற்றதையும், தன்னுணர்வு இல்லாமல் தானே தகுதி பெறுவதற்கு ஆயத்தம் செய்துகொண் டதையும் போன்ற சுவைமிக்க கற்பனைக் கதை, மக்களின வரலாற்றில் வேறொன்றும் கிடையாது. குறுகிய காலத்தில் ஆங்கில மொழி பெரும்புகழ் பெற்றுச் சிறப்புற்றமையும், நில வுலகின் ஒவ்வொரு மூலையிலும் பேசப்படும் பெருஞ் சிறப்பினைப்

பெற்றமையும் வியக்கத் தக்கதாகும். அம் மொழியின் இலக்கியத்தோடு பண்டைக் கிரேக்க இலக்கியத்தையே ஒப்பாகக் கூறக் கூடிய அளவிற்கு, ஆங்கில மொழி வளர்ச்சியுற்றமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். ஹேஸ்டிங்ஸ் போருக்குப் பிறகு ஆங்கிலேய இனத்திற்கு உண்டாகிய நற்பேற்றின் அறிகுறியாக, ஆங்கிலம் விளங்குகிறது. ஆங்கிலேயர்களைப் போன்றே அம் மொழியும் தாழ்ச்சியுற்றது; ஆனால் விரைவில் மிகச் சிறந்த மொழியாக வீறுகொண்டு எழுந்தது. முதலில் நார்மானியரின் கால்களினால் அம் மொழி மிதித்து அழிக்கப்பட்டது. ஆனால், அவ்வாறு மிதிக்கப்பட்டமையால், பின்னர், புத்துருவம் பெற்றுச் சிறப்புற்று ஓங்கத் தொடங்கியது.

## நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேட்டுக் குறிப்பு

இலத்தீன் மொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்ட நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேட்டின் சுருக்கம் இது. அது பெரிதும் வேளாண்மை மேனர் பண்ணை முறையில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. ஐம்பத்திரண்டு நகர மூதறிஞர்களைக் கொண்ட வாணிகப் பட்டணம் ஒன்றை அது குறிப்பிடுகின்றது.

'மார்ட்டெய்ன் (Mortain) பெருமகனாரின் நிலம் (Count) டிரிங்கு நூறில் இருக்கிறது. மார்ட்டெய்ன் பெருமகனுக்கு உரியது பர்க் காம்ஸ்டெட்டு. அதில் 1300 ஏக்கர் பரப்புள்ள நிலம் இருக்கின்றது. உழுது பயிரிடத் தக்க நிலம் 26 ஏர்ப்பாசன அளவுடையதாகும் (Caraucates). குத்தகைக்காக விடப்பட்ட 600ஏக்கர் நிலம் பிரபுவிடம் இருக்கிறது. நிலத்தை உழுவதற்கு மூன்றுசோடி எருதுகள் இருக்கின்றன. இன்றுமூன்று பேருக்குப் போதுமான நிலம் அங்கு இருக்கிறது. இங்கு 14 உட்குடிகளையும், 15 நிலையான வீடுகளையுடைய எல்லைப் பகுதியில் குடியிருக்கும் உட்குடிகளையும் உடைய ஒரு குரு இருக்கிறார். நிலத்தை உழுவதற்கு அவரிடத்து 12 சோடி எருதுகள் உள்ளன. இன்னும் எட்டுப் பேர்களுக்குத் தேவையான நிலம் அங்கிருக்கிறது. அங்கு ஆறு அடிமைகள் உள்ளனர். வடிகாலில் வேலை செய்யும் ஒருவனுக்கு அரை மனை அளவு நிலமும், கோமகனின் வேலைக்காரன் ஒருவனுக்கு முப்பது ஏக்கர் நிலமும் இருப்பது குறிப்பிடத்தக்கது.'

இப்பேரூரில் 52 நகர முதறிஞர்கள் உள்ளனர். அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 4 பவுண் சுங்க வரியாகச் செலுத்துகின்றனர். அவர்கள் ஐம்பது ஏக்கர் நிலம் உடையவர்களாக இருக்கின்றனர். ஆண்டிற்கு இருபது ஷில்லிங்குகள் வாடகை வரும். அவர்கள் இரண்டு இயந்திரங்களை வைத்திருக்கின்றனர். அங்கு இரண்டரை ஏக்கர் நிலத்தில் திராட்சைத் தோட்டங்கள் உள்ளன. எட்டு ஏர்ப்பாசன நில அளவில் (Carucates) புல் வெளி இருக்கிறது. அது கிராமத்தின் கால் நடைகள் மேய்வதற்குப் பொதுவான மேய்ச்சல் நிலமாகும். ஆயிரம் பன்றிகள் வளருவதற்குரிய காடொன்றும் இருக்கிறது. ஆண்டிற்கு அதற்கு ஐந்து ஷில்லிங்கு வாடகை கொடுக்கப்படுகிறது. அது மொத்தமாக 16 பவுண் மதிப்புடையதாகும். பெருமகன் 20 பவுண்கள் அதனிடமிருந்து குத்தகை பெறுவார். எட்வர்டு அரசர் காலத்தில் 24 பவுண்கள் மதிப்புடையதாக அது இருந்தது. அரசர் ஹாரால்டின் தேனரான எட்மர் (நார்மானியர் கைப்பற்றுவதற்கு) முன்பு இம் மேனர் பண்ணைக்குரியவராக இருந்தார்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

ஆங்கிலேயர் அடிபணிதல் — எட்வினும் மோர்கரும் — வடக்கினைக் கொள்ளையிடல் — வட இங்கிலாந்து நிலமானியப் படை நாடாக்கப்படுதல் — கோமக்களின் மாநிலங்கள் அழிக்கப் பெறுதல் — அரசரும், நிலப் பிரபுவும், ஆங்கிலேயரும் — நில மானியப் படை முறையின் அரசியல் அமைப்பு — அரசரின் கியூரியா — நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேடு — நில மானியப் படை முறைச் சட்டமும் — கோட்டங்களின் சட்டமும், கானகச் சட்டமும் — குருமார்களின் பிரமசரியம் திருச்சபை நீதி மன்றங்களும், பொது நீதி மன்றங்களும் தனித்தனியே பிரிக்கப்படுதல் — ருபசும் ஆன் சலமும் — 'பதவியமர்த்தல்' உடன்பாடு — ஆங்கில மொழி.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்
(கடந்த இரு இயல்களுக்கும் உரியவை)

1. சி. எச். ஹஸ்கின்ஸ் (C. H. Haskins)
The Normans in European History, (Honghton Mifflin, 1915.)

2. ஸ்டெண்ட்டன் எப். எம். (Stenton F. M.)
William the Conaqueror, (Heroes of the Nations Series)
3. ஓமன் (Oman)
(a) England Before the Norman Conquest.
(b) The Art of War.
4. எச். டபிள்யூ. சி. டேவிஸ் (H. W. C. Davis)
England under the Normans
5. ஜே. எச். ரவுண்டு (J. H. Round)
Feudal England
6. டீன் சர்ச் (Deen Church)
Anselm
7. பால்டுவின் J. F. (Baldwin J. F.)
The King's Council. Chap. I.
8. மெயின்ட்லண்டு (Maintland)
Domesday Book and Beyond.
9. விநோகிராடாப்பு (Vinogradoff)
The Manor, Book III. PP. 291-300.
10. பியர்சல் ஸ்மித்து (Pearsal Smith)
The English Language, (Home University Library Series)
11. ஸ்டெண்ட்டன் எப். எம். (Stenton, F. M.)
Anglo-Saxon England, Chaps. XVI—XVIII.

# இரண்டாம் பிரிவு

## நார்மானியர் படையெடுப்பு முதல் சமயச் சீர்திருத்தஇயக்கம் தோன்றிய காலம் வரையில் இங்கிலாந்தில் உருவாகிய தேசிய இனம்

### தோற்றுவாய்

இருண்ட காலத்திலிருந்து இடைக்காலம் மிக்க வேறுபாடுடையதாக விளங்கியது. முதல் சிலுவைப் போரின் பொழுது இடைக்காலம் தொடங்கியதாகக் கூறலாம். நிலமானியப் படைமுறையால் (1095–1099) திருத்தியமைக்கப்பட்ட புதிய ஐரோப்பாவில் உண்டான சூழ்நிலைகளின் தாக்குதல்களால் திடீரென்று திடுக்கிடுமாறுதோன்றியதே முதல் சிலுவைப்போராகும். நிலமானியப் படைமுறை இடைக்காலத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு நிலையமாகும். சமூகத்தின் ஒரு பகுதியினர், மற்றொரு பகுதியினருக்குச் சட்டத்துக்குட்பட்ட முறையில் நிலையாக அடி பணிந்து நடக்குமாறு செய்வதைச் சிறப்பாகக் கொண்டதே நிலமானியப் படைமுறையாகும். காட்டுமிராண்டித்தனமான அரசியல் குழப்பங்களை அழித்தொழிப்பதன் மூலம், அது நாகரிக வாழ்க்கை முறையைப் பெற முயன்றது. நிலப் பிரபுக்களுக்கும், மாவீரர்களுக்கும், பாதிரிமார்களுக்கும், மடாலயத் தலைவர்களுக்கும், நிலமானியப் படைமுறைச் சமூகம், கிராமப்புற அடிமை ஊழியர்களின் உழைப்பால் கிடைத்தனவும், தேவைக்கு மிகுதியாக உற்பத்தி செய்யப்பட்டதுமான பொருள்களைப் பகிர்ந்தளித்தது. நிலத்திலிருந்து கிடைத்த வருமானத்தில் காணப்பெற்ற ஏற்றத் தாழ்வுகளை, மாறுநிலைப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் நிலமானியப் படைமுறை முயன்றது. இதனால் பிரபுக்களிடத்திலும், மத குருமார்களிடத்திலும் செல்வமானது

சென்று குவியத் தொடங்கியது. நிலமானியப் படைமுறை, செல்வர்கள் சொகுசு மிக்க வாழ்க்கைக்குரிய தேவைகளைப் பெற்று இன்புறுமாறு அவர்களைத் தூண்டியது. கலைகளும் கைத்தொழில்களும் வாணிக நகரங்களில் வளர்ந்தோங்கின. இவ்வாறு இருண்ட காலம் இடைக்காலத்தை நோக்கி முன்னேற்றம் அடைந்துகொண்டிருந்தது. அங்கேயில்தான் காட்டு மிராண்டித்தனம், நாகரிகமாக மாற்றமுற்று வளர்ந்து கொண்டிருந்தது. ஆனால் அவ் வளர்ச்சி உரிமையையும், சமத்துவத்தையும், அடிப்படையாகக்கொண்டு வளர்ந்த வளர்ச்சியன்று.

வட்டார அடிப்படையில், படையியல் அரசியல், நிதித்துறை அமைப்புகளை வரையறுத்து அமைத்தது நிலமானியப் படை முறையின் மற்றொரு சிறப்பியல்பாகும். ரோமானியர் காலத்தியப் பேரரசைப் போன்றே, இங்கிலாந்தின் அதிகார வரம்பின் அடிப்படை அளவாகக் காணியாட்சிப் பகுதிகளையும், மேனர் பண்ணைகளையும் நிலமானியப் படைமுறை வகுத்தது. அது தற்காலத்திய தேசிய இனப் பாகுபாட்டைப் போன்றதன்று. பேரரசு சிதறுண்டு போவதை உண்மையென ஒப்புக்கொள்ளும் முறையாகவே நிலமானியப் படைமுறை அமைந்தது. மேலும் அரசின் எல்லை மீறிய பலவீனத்தால் தோன்றியதே நிலமானியப் படைமுறை என்றும் கூறலாம். மாவீரர்களையும், நிலப் பிரபுக்களையும் கொண்டிருந்த சமயச்சார்பற்ற நிலமானியப்படைமுறைச் சமூகம் இவ்வாறு சிதறுண்டு போயிற்று. இவ்வாறு அது சிதறுண்டதற்குக் காரணம் அதனுடைய மாகாணம் அல்லது அதனுடைய மேனர் பண்ணையைப் பற்றி மட்டும் குறுகிய நோக்குடன் இருந்தமையேயாகும். இதற்கு மேலாக ஒற்றுமையுணர்ச்சியை ஐரோப்பியத் திருச்சபைகளின் தலைமையிடமான ரோமாபுரி அமைத்தது. ஆயினும், சமயச் சார்பற்ற சமூகத்தின் அதிகாரம் ஒரு முகமாகக் குவிக்கப்பட்டதைப் போன்று இதனுடைய அதிகாரம் பன்முகப் படுத்தப் பட்டதனால் இவ் விளைவு உண்டாயிற்று. எனவே, இக் காரணத்தினால்தான் சமயத்தின் தலைமைப் பதவியை ரோமாபுரி கைப்பற்ற முடிந்தது. மேலும், குருமார்கள் கல்வி கற்றலையும், எழுத்தாளர் வேலையையும் தங்களுக்கேயுரிய தனிமை உரிமையாகக் கொண்டாடி வந்த காரணத்தினாலும், இடைக்காலத்தில் திருச்சபை அரசினைப் பெரிதும் கட்டுப்படுத்தி, தமது ஆதிக்கத்திற்கு உட்பட்டு நடக்குமாறு செய்தது.

மாவீரர்கள், திருச்சபையினர், அடிமை ஊழியக் குடியானவர்கள் முதலியவர்களுக்கு இடையே முரட்டுத்தளமான

ஒருவகை உடன்பாட்டைக் காண்பதற்கு இடைக்காலச் சமூகம் முயன்றது. அது வறுமையால் நலிந்து துன்புறும் கிராம மக்களைப் பேய்கள், கொள்ளைக் கூட்டத்தினர் முதலியோரிட மிருந்து காப்பாற்ற முயன்றது. அதற்குக் கைம்மாருக மாவீரர் களையும், திருச்சபையினரையும் கிராமங்களைச் சுரண்டி நன்மையடையுமாறு செய்தது. அது வன்முறையையும் ஏமாற்று தலையும் கருவியாகப் பயன்படுத்தும் ஒரு முறையாக அமைந்தது. மேலும் அது சமயக் கருத்துக் கொள்கையையும், வீரத்தையும் சமூகத்தின் தற்காப்பாகப் பெற்றிருந்தது. ஆனால், மெல்ல மெல்ல இந்தத் தொல் பழங்கால நிலமானியப் படைமுறை அமைப்பிலிருந்து, இடைக்காலம் முன்னேற்றமடையத் தொடங் கியது. அவ்வாறு முன்னேற்றத்தை நோக்கி அது வளர்ந்ததன் மூலம், தாந்தேவும் (Dante), சாசரும் (Chaucer) வாழ்ந்த ஐரோப் பாவை நிறுவியது; மாவட்டத் தலைமைத் திருச்சபைகளையும் பல் கலைக்கழகங்களையும் அமைத்தது; இங்கிலாந்தின் முடியாட்சி யையும் பாராளுமன்றத்தையும் உலகிற்கு அளித்தது. மேலும் அது திருச்சபை விதிகளையும், சிவில் சட்டங்களையும், ஆங்கிலேய சட்டதிட்டங்களையும் தந்தது. அத்துடன் இத்தாலியிலும், பிளாண்டர்சிலும் அது வாணிகச் சமுகத்தினரைத் தோற்றுவித்த தோடு, 'நகரங்களுக்குள்ளே மலர்' என்று போற்றப்படுகின்ற லண்டன் மாநகரை நிறுவியது. இவ்விருவகை ஓவியங்களுள் எது உண்மையான இடைக்காலத்தின் ஓவியமாகும்? அல்லது அச்சமே வடிவாகவும், கந்தலே ஆடையாகவும், மூட நம்பிக் கையே அறிவாகவும் கொண்டு அரை வயிற்றுக் கஞ்சிக்கு அல்லற் படும் அடிமைகளைக் கொண்ட நிலமானியப் படைமுறைக் கிராமம் உண்மையான இடைக்காலத்தைப் படம்பிடித்து காட்டுகிறதா? அடிமை ஊழியர்கள் புகைப்போக்கிகளற்ற சிற்றறைகளிலிருந்து விரட்டப்பட்டும், படைவீரர்களைக் கண்டு காடுகளுக்கு ஓடிச் சென்றும் வாழ முற்பட்டது இடைக்காலத்தின் உண்மைநிலை ஆகுமா? அல்லது தாந்தே வாழ்ந்த பிளாண்டர்சு, வேன் ஆர்டி வெல்டேவினுடைய (Van Artevelde) பிளாண்டர்சு, கிராஸ்த தேயின் (Grossetete) ஆக்ஸ்போர்டு, விக்ளிப்பு காலத்திய ஆக்ஸ்போர்டு ஆகியவை உண்மையான இடைக்காலத்தைப்படம் பிடித்துக் காட்டுகின்றனவா? எது உண்மையான இடைக் காலத்தின் பண்பு? 'இவை இரண்டும் இணைந்த ஒன்றே' இடைக்காலத்தின் உண்மையான ஓவியமாகும் என்று நாம் கூறலாம். ஒன்று மற்றென்றிலிருந்து வளர்ந்தது; ஆனால் இரண் டும் ஒரே சமயத்தில் அருகருகே தொடர்ந்திருந்து வந்தன. வரலாற்றுச் சிறப்புமிக்க நான்கு நூற்றாண்டுகளில், இருண்ட காலம் மெல்ல மெல்ல மறைந்து பேரொளி மிக்க மறுமலர்ச்சிக்

காலமாகத் தோன்றத் தொடங்கியது. ஆயினும் புதிய ஐரோப்பாவின் பல மாவட்டங்களில் வறுமையும் அறியாமையும் இன்னும் கோரதாண்டவமாடிக் கொண்டிருந்தன.

இடைக்காலத்துத் தோன்றிய மாபெரும் சிந்தனையாளர்கள் மக்களுக்கு, நிலையான அமைதி பெறுவதற்குரிய சிறந்த மாற்ற முடியாத அமைப்புகளையும், மாற்ற முடியாத நம்பிக்கைகளையும் அளிக்கவேண்டுமென்னும் நோக்கம் உடையவர்களாக இருந்தனர். ஆனால், அவர்களுடைய உண்மையான சாதனைகள் வேறு வகையாக அமைந்தன. இடைக்காலக் கிறிஸ்துவ உலகத்தினை, இஸ்லாமியச் சமயத்தோடும், பிராமணச் சமயத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, உண்மையிலேயே அது முன்னேற்றப் பாதையிலே சென்று கொண்டிருந்ததை நாம் காணுகின்றோம். அந்தச்சமூகம் கி.பி. 1100லிருந்து 1500வரை தொடர்ந்து முன்னேற்றப் பாதையிலே சென்று கொண்டிருந்ததையும், புதிய வாழ்க்கை அமைப்பினை அடைந்து கொண்டிருந்ததையும் நாம் காணுகின்றோம். அது ஒரே சீர்மையான வாழ்க்கை முறையிலிருந்து, பலவகையாகப் பெருகியதைக் காணுகின்றோம். அது நிலமானியப் படைமுறை உலகக் குடிமகக் கொள்கையிலிருந்து தேசிய முடியாட்சி முறையாக வளர்ந்ததைக் காணுகின்றோம். அது புரோகிதத்துவத்தின் கூட்டுத் தலைமையிலிருந்து பாமர மக்களின் விடுதலையை நாடிச் சென்றதைக் காண்கிறோம். மாவீரர்களின் ஆட்சியிலிருந்து தொழில் வினைஞர்களின் உலகத்திற்கும், முதலாளிகளின் உலகத்திற்கும், உழவர்களின் உலகத்திற்கும் முன்னேறிக் கொண்டிருந்ததைக் காண்கிறோம். இடைக்கால ஐரோப்பாவில் உயர்நிலை, நிலைத்து ஒன்றாக நின்று விடாது, இயங்கும் ஒன்றாக வளர்ந்து கொண்டே இருந்ததைக் காணுகின்றோம். இடைக்காலத்தின் சிறப்பும் இழிவும் அன்றைய சமூகத்தில் நிறைந்திருந்த ஓநாய்களின் வாழ்க்கையாலும், ஆற்றலாலும் அறியப்படுகின்றன. அவர்களுடைய பாவங்கள் முதுமை வளர்ச்சியினால் உண்டானவையல்ல. ஆனால், இளமையின் துடிப்பாலும், வேண்டுமென்றே கொடுமை செய்யும் உணர்ச்சியினாலும்உண்டானவையே யாகும். இடைக்காலத்தில் பக்தியும், அமைதியும், சோதர அன்பும் விளங்கும் பொற்காலத்தைக் காண முயல்வது பயனற்ற செயலாகும். அதைப் போன்றே அம்மாபெரும் ஊழியை இழிந்ததாகக் கருதுவதும்தவறாகும். அவ்வாறு நாம் கருதினால் பதினெட்டாம் நூற்றாண்டின் மக்கள் செய்த பெருந் தவற்றை நாமும் செய்தவர்களாவோம். ஏனெனில், அக்காலத்தில் மக்கள் காட்டுமிராண்டித் தனத்திலிருந்து விடுதலைபெற்று, புதியதொரு

நாகரிக ஒளியைப் பெற்று, முன்னேறிக் கொண்டிருந்தனர். எனவே அக்காலத்தை நாம் இழித்தும் பழித்தும் பேசுவது பொருத்தமற்றதாகும். இவ்விடைக்கால ஊழியை நாம் நிலையான ஒரு நிலையாகக் கருதாது, வளர்ச்சி பொருந்திய ஒரு வழக்கு முறையாகவே கருதவேண்டும். மாரீஸ் திரைச் சீலையில் காணப்படும் அசையாத திரைப்படமாக நாம் அதைக் கருதக் கூடாது. ஆனால் தொடர்ந்து மாறிக்கொண்டேயிருக்கும் எழில் மிக்க காட்சியாக, பேரொளியும், பெருஞ்சிறப்புமுடைய காட்சியாக, உயிர்த்துடிப்பும், உணர்ச்சிப் பெருக்கும் நிறைந்த வாழ்க்கை ஓவியமாக நாம் அதைக் காணவேண்டும்.

இடைக்காலம் முழுவதிலும், பிரிட்டிஷ் தீவுகள் எல்லா நாடுகளுக்கும் வடமேற்குக் கோணத்தின் எல்லைப்புறத்திலேயே இருந்து வந்தன. அட்லாண்டிக் கடல் அலைகளுக்கு அப்பால், புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டிய நிலப்பரப்புகள் இருக்கின்றன என்று அந்தக் காலத்தில் யாருமே கனவுகூடக் கண்டதில்லை. நெடுந் தொலைவிலுள்ள ஐஸ்லாந்து, நார்வே கடற்கரைகளில் வாழ்ந்த வைக்கிங்குகளிடையே 'வைன்லாந்து' நாட்டைப் பற்றிய கதைகள் வழங்கி வந்தன. அவ் வைக்கிங்குகளின் வழித்தோன்றல்களாகிய மக்கள் கிறிஸ்து பிறந்த ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, தங்களுடைய நீண்ட கப்பல்களை வடமேற்குக் கடற்கரைகளிலே கொண்டுபோய் நிறுத்திய காலம் வரையிலும் யாரும் புதிதாகக் காணவேண்டிய நாடுகள் உலகத்திலே இருப்பதாக நினைக்கவே இல்லை.

ஆனால், சீஸர் முதன்முதலாக டோவரின் செங்குத்தான பாறைகளைக் கண்டு வியந்த நிலையைக் காட்டிலும், பேவன்சேயில் வில்லியம் முதன்முதலாகக் காலினை வைத்த பொழுது, இங்கிலாந்து உலகத்தின் எல்லைக்கு அப்பால் இருக்கின்ற ஒரு நிலப்பரப்பாகவே கருதப்பட்டு வந்தது. காலப்போக்கில், உலகம் அதனுடைய நோக்கத்தினை வட பகுதிக்கு மாற்றியதனால், அது இங்கிலாந்தை நெருங்கலாயிற்று. கிரேக்க, ரோமானியப் பேரரசர்கள் காலத்தில் இருந்ததைப்போல், மேல்நாட்டு நாகரிகம் இக்காலத்து நடுநிலக்கடற்பகுதிக்குரிய நாகரிகமாகக் காணப்படவில்லை. ஆனால், அது முற்றிலும் ஐரோப்பிய நாகரிகமாகவே தோற்றமளித்தது. (படம் 3, 4. ஆகியவற்றைப் பார்க்க) வட ஆப்பிரிக்கா, லெவாண்ட், ஸ்பெயினின் ஒரு பகுதி இக்காலத்தில் இழக்கப்பட்டன. அப்பகுதிகள், ஆசியாவின் பகுதிகளாகவும் இஸ்லாமிய சமயத்தினை ஏற்றுக் கொண்ட நாடுகளாகவும் மாறின. இருந்தபோதிலும், இதனால் ஜெர்மனி

பயன் அடைந்தது. அது முதற்கொண்டு ஐரோப்பாவின் அரசியலின் வட பகுதி உறுப்புக்களாக பிரிட்டனும், ஸ்காண்டி நேவியாவும் விளங்கலாயின. இத்தாலியும், பிரான்சும் பண் பாட்டுத் தலைமையைத் தங்களுக்குள்ளே பகிர்ந்து கொண்டன. ஆனால், ஆல்ப்ஸ் மலைக்கு வடக்கே, அரசியல், படையியல் அதிகாரங்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருந்தன. இவ் அரசியல், படையியல் அதிகாரம் பிரெஞ்சு நாட்டு நிலமானியப் படைமுறை மாவீரர்களிடத்தும், ஜெர்மானிய அரசுகளிடத்தும் குவிந்து இருந்தன. அரசியல், வாணிகம், இலக்கியம் முதலிய துறைகளில்தென் இங்கிலாந்தோடு பிளாண்டர்சும் நார்மண்டியும், பாரிசும் மிக நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தன. இவ்வாறு இடைக்கால நாகரிகத்தின் வளர்ச்சிக்கு இத்தாலி செய்த பேருதவியைப் போன்று, இங்கிலாந்தும் தன்னால் இயன்ற உதவியைச் செய்தது. ஏனெனில், நடுநிலக் கடற்பகுதியி லிருந்து ஐரோப்பாவின் நடுமையம் வடதிசை நோக்கி மாற்றப் பட்டமையால், இங்கிலாந்தோடு தொடர்பு கொண்டே மேற்கண்ட நாடுகள் வாழவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. இவ்வாறு ரோமானியர்கள் விட்டுச்சென்ற நிலையான அடிச் சுவடுகளைக் காட்டிலும், நார்மானியப் படையெடுப்பாளர்கள் நிலையான பல அடிச்சுவடுகளை நம் நாட்டு வாழ்க்கையில் பொறித் துச்சென்றுள்ளனர்

பதினோராம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை, இங்கிலாந் தும் ஸ்காண்டிநேவியாவும் ஐரோப்பிய நாகரிகத்தோடு ஓரள வுக்கு நெருங்கிய தொடர்பு கொள்ளாமலே இருந்துவந்தன. இடைக்காலத்தின் சிறப்புமிக்க படைப்பான நார்ட்டிக்கு இனப் பழக்க வழக்கங்களையும் இலக்கியத்தையும் அவர்கள் தங்கள் உரிமையாகப் பெற்றிருந்தனர். அவற்றுள் வீரகாவிய உணர்வுத் துடிப்பு மிகுந்து இருந்தது. ஆனால், நார்மானியப் படையெடுப்பு பிரிட்டன் ஸ்காண்டிநேவியாவோடு கொண்டிருந்த தொடர்பினை அறுத்தெறிந்தது. அதற்கு மாறாக, நிலமானியப் படைமுறை மாவீரர்களைக் கொண்ட பிரான்சோடு அது இங்கிலாந்தைத் தொடர்புகொள்ளச் செய்தது.

ஹேஸ்டிங்ஸ் போருக்குப் பிறகு நானூறு ஆண்டுகள் வரை இடைக்கால ஐரோப்பாவோடு இங்கிலாந்து நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. அதனால் சமூக, சமய, பண்பாட்டு நிலையங்களில் மட்டுமே இங்கிலாந்து ஒற்றுமைஅடைய முடிந்தது. பழையரோமானிய உலகத்தைப்போன்று இணைக்கப்பட்ட ஓர் அரசாக இல்லாமல் அது தனித்தே இருந்து வந்தது. அதனுடைய

சட்டவியல் சார்புடையதாகவும், நிலமானியப் படைமுறையினால் உண்டான அரசியல்குழப்பம் நீங்கி ஒழுங்குமுறையுடையதாகவும் அமைக்கப்பட்டது. கிறிஸ்துவ உலகம் என்ற ஒரு பெயராலேயே அன்றைய ஐரோப்பா தன்னைத்தான் அறிந்திருந்தது. போப்பு ஆண்டவரின் ரோமாபுரியைத் தலைநகரமாகக் கிறிஸ்துவ உலகம் பெற்றிருந்தது. அக்காலத்திய ஐரோப்பாவுக்கு ஓர் அரசியல் தலைநகரம் இருந்ததில்லை. 'பேரரசு' என்று சொல்லப்பட்டது கொள்கையளவில்தான் இருந்துவந்ததே ஒழிய அது ஆட்சி முறை அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. போர்த்திலிருந்து (Forth) டேகஸ் (Tagus) வரையிலும், கார்ப்பேத்தியனிலிருந்து (Carpathians) பிஸ்கே வளைகுடா (Bay of Biscay) வரையிலும் இருந்த எல்லா நாடுகளிலும் பரவியிருந்த ரோமானிய கிறிஸ்துவ சமயமும், வீரப்பெருந்தன்மையும், நிலமானியப் படைமுறையின் பழக்க வழக்கங்களும் உண்மையான ஒற்றுமையை நிலைநாட்டின. பிரபுக்களையும், உட்குடிகளையும் கொண்ட வேளாண்மைச்சார் புடைய நிலமானியப் படைமுறைப் பொருளாதாரத்தையும், நீதித்துறை அதிகாரத்தையும் சமூகச் சிறப்புரிமைகளையும் கொண்ட குருமார்களின் சங்கங்களையும், நிலமானியப் படை முறைப் பழக்க வழக்கங்களையும், திருச்சபை விதிகளையும், ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டன. நடுத்தர வகுப்பினரின் எழுச்சிக்கும் தேசிய இனவுணர்வு தோன்றியதற்கும் பிறகு, இவற்றிற்கு ஒப்பான முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்கள் வேறொன்றையும் ஏற்றுக் கொள்ளமுடியாத வகையில் பலதிறப்பட்ட வேறுபாடுகள் ஐரோப்பிய மக்களின் வாழ்க்கையில் தோன்றியமையால் அவர்கள் இவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களானார்கள். ஒரு மடாலயத்திலிருந்து இன்னொரு மடாலயத்திற்கும், ஒரு காவல் கோட்டையிலிருந்து இன்னொரு காவல்கோட்டைக்கும் ஆங்கிலேய திருச்சபையினர் இலத்தீன் மொழியைப் பேசிக்கொண்டும், ஆங்கிலேய மாவீரர்கள் பிரெஞ்சு மொழியைப் பேசிக்கொண்டும் ஐரோப்பா முழுவதிலும் பயணம் செய்வது அக்காலத்தில் எளிதாக இருந்தது. ஸ்டுவர்ட்டு மன்னர்கள் ஆட்சிக் காலத்தோ, அனோவரியரின் ஆட்சிக் காலத்தோ[1] அப்பகுதிகளில் பயணம் செய்த ஆங்கிலே

[1] அரைகுறையாகப் பிரிக்கப்பட்டிருந்த கிறிஸ்துவ உலகத்தில், பைசண்ட்டைன் பேரரசில் அல்லது கீழை ரோமனியப் பேரரசில்ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் இடையே வேற்றுமைகள் குறைவாக இருந்ததாகக் கூறப்படும் கருத்து உண்மையாகாது. கான்ஸ்டாண்டி நோபிளில் சிறப்புற்று விளங்கிய கீழை ரோமனியப் பேரரசு இஸ்லா மியர்களின் தாக்குதல்களால் இறுதியாக வீழ்ச்சியுற்றது. அதனுடைய

யர்கள் கண்ட வேற்றுமைகளைவிடக் குறைந்த அளவிலேயே மேற்கண்ட மாவீர்களும் திருச்சபையினரும் புதுமைகளைக் கண்டு வியந்திருக்கவேண்டும்.

நார்மானியரின் வெற்றிக்குப்பிறகு பிரிட்டன் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. அக்காலத்திலிருந்து குறுகிய கடல்களுக்குப் பின்புறமாகப் பிரிட்டன் தன்னைத் தானே தற்காத்துக் கொள்வதற்குரிய பேராற்றல் உடையதாக விளங்கலாயிற்று; அந்தக் குறுகிய கடல்கள் ஒரு வீட்டைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள அகழியைப் போன்று இங்கிலாந்துக்கு தற்காப்பு அரணைத் தொண்டுபுரிந்தது எனலாம். மேலும், இங்கிலாந்தின் பகைவர்களுக்கு, அக்கடல்கள் திறந்த நெடுஞ்சாலையாக இக்காலம் வரை இருந்துவந்த நிலை மாறியது. அந்நாடு பேராற்றல் பொருந்திய நாடாக மாறியது முதல், கொல்லனது உலைக்களமாக இல்லாது, அவன் பயன்படுத்துகின்ற சம்மட்டியாக விளங்கத் தொடங்கிற்று. இதன் பயனைப் பிரான்சில் இருப்பவர்கள் இங்கிலாந்தின் மீது படையெடுத்து வருவதே வழக்கமாயிருந்தமை இங்கு நினைவுகூரத்தக்கதாகும். நார்மானியர் வெற்றியின் விளைவாகப்பிரெஞ்சுப் பண்பாட்டின் கூறுகள் இங்கிலாந்தின் இயல்பிற்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டது. பிறகு நார்மானியத் தலைவர்கள் தங்களைச் சூழ்ந்துள்ள ஆங்கிலேய மக்களுடைய வாழ்க்கையைத் தங்களுக்கு உகந்ததாக்கிக் கொண்டனர். சிறப்பாக, ஜான் மன்னர் ஆட்சிக் காலத்து நார்மாண்டியை நார்மானியர் இழக்க நேரிட்டது முதல், நார்மானியர்கள் இங்கிலாந்தின் குடிமக்களோடு தங்களையும் ஒன்றாக வைத்துக் கருதத் தலைப்பட்டனர். ஐரோப்பிய அரசுகள் எல்லாவற்றிலும் தேசியஉணர்வு தோன்றாத காலத்திலேயே, இங்கிலாந்தில் தேசிய உணர்வு அரும்பத் தொடங்கியது. அத்தேசிய உணர்வு இங்கிலாந்திற்கே உரிய தனிசிறப்பு வாய்ந்த பண்புகளையும், சட்டதிட்டங்களையும், நிலையங்களையும் அடிப்படையாகக் கொண்டு மலர்ந்து மணம் பரப்பலாயிற்று. இங்கிலாந்து தீவாக இருந்த

---

ஆட்சி ஒருமுக மைய ஆட்சியாகவும், எராஸ்டியன்* வல்லாட்சியாகவும் இருந்ததோடு வைதிக சமயத்தினாலும்' கிரேக்கப் பண்பாட்டினாலும் ரோமானிய அரசியல் அமைப்புக்களாலும் பெரிதும் ஊக்குவிக்கப் பட்டு வந்தது.

2. * எராஸ்டியன் (Erastian) என்பதற்கு சுவிட்சர்லாந்து நாட்டில் பதினாறும் நூற்றாண்டில் தோன்றிய எராஸ்டஸின் (Erastus) கொள்கையைச்சார்ந்தது என்பதுபொருள். எராஸ்டஸ் முதன் முதலாகத் திருச்சபை அரசியல் ஆட்சிக்கு உட்பட்டது என்னும் கொள்கையையெடுத்துரைத்தவராவர்.

காரணத்தினால், மீண்டும் அதனுடைய வாழ்க்கை ஐரோப்பாவிலிருந்து வேறுபட்டுத் தனித்த நிலையில் வளருவதற்கு முடிந்தது. ஹேஸ்டிங்ஸ் போர்க்களத்து வாகை சூடிய வெற்றி வீரர்களின் வழித்தோன்றல்களாக இருந்த நிலப்பிரபுக்கள், இதுவரை ஆங்கிலேயப் பண்புகளையும், வழக்காறுகளையும் நாகரிகப் பண்பாட்டையும் இழித்தும் பழித்தும் பேசி வந்தனர். அவர்கள் மூன்றும் ஹென்றியின் காலத்திலேயே பழைய பழக்க வழக்கங்கள் மாறுவதை அல்லது மாற்றப்படுவதை விரும்பவில்லை. பழைய இங்கிலாந்தின் பழக்கவழக்கங்கள் மாற்றப்படுவதைத் தாங்கள் விரும்பவில்லை என்று கூறும் அளவிற்கு ஈடுபாடுடையவர்களாக மாறிப்போயிருந்தனர்.

நார்மானியர் ஆட்சிக்காலத்தும் பிளாண்டாஜெனட் மன்னர் ஆட்சியின் தொடக்கத்திலும் ஆங்கிலேயர்களின் முன்னேற்றம் அயல் நாட்டு வீரப்பெருந்தன்மை, அயல்நாட்டு புரோகிதத்துவம் ஆகிய இரு பெரும் முறைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சாக்சானிய உட்குடிகளின் மரக் குடிசைகளின் மீது வேயப்பட்டிருந்த கூரைகளுக்கு மேல் மாபெருங் கற்கோட்டைகளும் புதிய பெருங்கல்லினால் அமைக்கப்பட்ட மாவட்டத்தலைமைக் கோயில்களும் மிக உயர்ந்து தோன்றலாயின. அவையனைத்தும் மாண்புமிக்க பெரும் வேலைபாடுகளையுடையனவாக விளங்கின. அவற்றை அமைத்து அவற்றுள் வாழ்ந்த மக்களின் அறிவு நுட்பத்திற்கும் பேராற்றலுக்கும் அவை அழியாத சான்றுகள் ஆகும். இருந்தபோதிலும் இறுதியில் இழிவாகக் கருதப்பட்ட ஆங்கிலேயர்களுக்கு, ஆசிரியர்களாக வந்த அயல்நாட்டவர் அவற்றில் நிலைத்து வாழவில்லை. ஆனால் இழித்தும்பழித்தும் பேசப்பட்ட ஆங்கிலேயருக்கே அவை உரியவையாயின. மீண்டும் பேராற்றலும், பேரறிவும், பெருந்திறனும் கொண்ட புதியதொரு சமுதாயத்தை உடையதாக இங்கிலாந்து உருவாகியது. அதன் மூலம் வில்லியமும், லான்பிராங்கும் கண்டு வியக்கத்தக்க மாபெருஞ் செயல்களைச் செய்ய தன்னைத்தானே இங்கிலாந்து தகுதியுடையதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த மாபெரும் பரிணாம வளர்ச்சித் திட்டத்தில் தலைமை தாங்கி, இங்கிலாந்தினை முன்னேற்றப்பாதையில் செலுத்தியவர்கள் ஆங்கிலேயப் பிரெஞ்சு அரசர்களாவர். நார்மானியப் படையெடுப்பும், அஞ்சுவினரின் அரச மரபு அவர்களைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தமையும், ஐரோப்பாவில் காண முடியாத பேராற்றலும் பேரறிவும் வாய்ந்த, சிறந்ததொரு அரச மரபை இங்கிலாந்திற்குத் தொடர்ந்து அளித்தது

எனலாம். வரலாற்றிலே வழிகாட்டுகின்ற எதிர்பாராத வாய்ப்புகளுக்குள், இது இங்கிலாந்துக்குக் கிடைத்த சிறந்ததொரு வாய்ப்பாகும். அவ்வரசர்கள் நிலமானியப் படைமுறைத் திட்டத்தை, தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்குப் பெரிதும் பயன்படுத்தினர். ஆனால், பிற நாடுகளில் நிலமானியப்படைமுறை என்பது தேசிய ஒற்றுமையைத் தகர்த்து எறிவதாக இருந்து வந்தமை இங்குக் கருதத்தக்கதாகும். அவர்கள் வல்லமை பொருந்திய, ஆனால் அதேசமயத்தில் எளிதில் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளகூடிய மையக் குவிமுக ஆட்சிமுறையினை இங்கிலாந்தில் நிறுவினர். அவ்வாட்சிமுறை பெரிதும் மத்திய அரசிடத்தே அதிகாரங்களைக் குவிப்பதாக அமைந்திருந்த போதிலும், நாட்டின் பல்வேறு பகுதிகளிடத்தும் அவ்வப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கையோடும் நெருங்கிய தொடர்பு உடையதாகவே அமைந்திருந்தது இதன் சிறப்பியல்பாகும். நாடு முழுவதற்கும் ஒரே வகையான நாட்டுச் சட்டத்தை அவர்களுடைய நீதிமன்றங்கள் படிப்படியாக வளர்த்துவந்தன. அடிமைப்படுத்தப்பட்ட ஆங்கிலேய மக்களிடத்து அரசர் தம்முடைய கைகளை ஆதரவோடு நீட்டி அணைக்குமாறு செய்தது இச் சட்டங்களேயாகும். மேலும் இந்த நாட்டுச் சட்டங்கள் நிலமானியப் படைமுறைக் கொடுமையாளர்களிடமிருந்து மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தது; நகரங்களிலும், பாராளுமன்றத்திலும் இங்கிலாந்து நாட்டு மக்களின் தனி உரிமையையும் வெளிப்படுத்துவதற்குப் புதிய உறுப்புகளைத் தந்து உதவியது. இவற்ருேடு அயல் நாடுகளில் நீண்ட விற்படையை ஏந்திய ஆங்கிலேய வேளாளர் பெற்ற வெற்றிகளுக்கும் இச்சட்டங்கள் பேருதவியாக இருந்தன.

அயல்நாட்டு அரசர்களின் ஆட்சியும், செல்வாக்கும் மிக்க இத்தகைய நூற்ருண்டுகளில், சிறப்புமிக்க பேரரசர்களின் தலைமையின் கீழ், இங்கிலாந்து தனிமனிதனுடைய வாழ்க்கையில் இதற்கு முன்பு கனவில்கூடக் கருதமுடியாத மாபெரும் நிலையங்களைப்பெற்றுச் சிறப்புறத் தொடங்கியது. அவை பிரதிநிதிகளைக் கொண்ட சட்ட மன்றங்கள், பல்கலைக்கழகங்கள், அமைதிகாண் நீதிபதிகள் முதலியனவாகும். நம்முடைய தற்கால நாகரிகம் இந்தப் புதிய நிலையங்களை அடிப்படையாகக் கொண்டே, வளர்ச்சியடைந்து இன்றைக்குச் சிறப்புற்றிருக்கிறது என்பதை நாம் மறத்தலாகாது. இடைக்காலத்தில் நிலையங்களைச் சார்ந்த வாழ்வும், கூட்டர்ண்மை வாழ்க்கையும் செழித்திருந்ததோடு, வளர்ந்தும் வந்ததைக் காண்கிருேம். ஆனல், தனி மனிதன் இக்காலத்து எத்தகைய சிறப்பும் உடையவனுகக் கருதப்பட

வில்லையென்பது இங்கு நினைவு கூரத்தக்கதாகும். பல்கலைக் கழகங்கள், நீதித்துறைத் தொழில், நகரத் தொழிற்குழுக்கள் கம்பெனிகள், பாராளுமன்றம், போன்றவற்றுள் சில, பிற நாட்டு நிலையங்களின் அமைப்பினைத் தனக்கு மாதிரியாகக் கொண்டோ, பிற நாட்டில் தோன்றி வளர்ந்தோ இந்நாட்டிற்கு வந்திருக்க வேண்டும். அவையனைத்தும் மொத்தத்தில் இடைக்காலக் கிறிஸ்துவ உலகம் உலகிற்குப் புதிதாகத் தந்த சிறப்புமிக்க பொருள்களாகும். ஆனால், நம்முடைய பொதுச்சட்டம் இங்கிலாந்திற்கே உரிய தனிப் பண்பாட்டுடன், இங்கிலாந்திலே வளர்ந்து சிறப்புப்பெற்ற ஒன்றாகும். பாராளுமன்றம், பொதுச் சட்டத்தோடு கூட்டுறவு கொண்டு, இறுதியில் நமக்கே உரிமை யாக உடைய சிறப்புமிக்க ஓர் அரசியல் வாழ்வினை நமக்கு அளித்தது. அது பிற்கால இலத்தீன் நாகரிகத்தின் வளர்ச்சியில் இருந்து பெரிதும் மாறுபட்டு விளங்குவது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

இருந்தபோதிலும், பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டு களுக்குப் பிற்பட்ட காலத்திலும், இங்கிலாந்து தன்னுடைய வாழ்க்கை தனித்த ஒன்றாக வளர்வதை முற்றிலும் உணர்ந்த தாகத் தெரியவில்லை. மேலும் தான் தனித்த ஒரு தீவாக அமைந்திருப்பதினால் உண்டாகக்கூடிய சிறப்புக்களையும் உணரவில்லை எனலாம். பிற்கால பிளாண்டாஜெனட் அரசர் கள் ஆட்சிக்காலத்து அயர்லாந்தையும், ஸ்காட்லாந்தையும், சேர்த்து ஒருமைப்பட்ட பிரிட்டானியப் பேரரசை நிறுவும் பணியை முற்றுப் பெறச் செய்யாது அவள் கைவிட்டு விட்டாள். இதற்கு மாறாக ஐரோப்பாவில் நார்மானியர், அஞ்சுவினர் ஆகியோரின் பேரரசினைப் புதுப்பிக்கும் முயற்சியிலே அவள் தன்னுடைய கருத்தைச் செலுத்திவந்தாள். இங்கிலாந்து நூறு ஆண்டுப் போரில் தம்முடைய முழுக் கருத்தையும் செலுத்திவந்த காரணத்தினால், ஸ்காட்லாந்து முழு விடுதலையைப் பெற்றது எனலாம். ஆனால், அதே சமயத்தில் அயர்லாந்து முற்றிலும் கைப் பற்றப் படாது, நிலையான குழப்பங்களும் கலகங்களும் நிறைந்த நாடாக விளங்குமாறு விடப்பட்டது. நூறு ஆண்டுபோர் பிரான் சிலும், இங்கிலாந்திலும் இடைக்காலச் சமுதாயத்தின் அழிவினை விரைவுபடுத்தியது. இவ்விரு இனத்தவரிடையேயும் அது தேசிய உணர்வினைத் தூண்டியெழச் செய்தது. அகின்கோர்ட்டு (Agincourt) வெற்றியாளர்கள் தேசிய உணர்வின் மரபுக்கு நிலைக்களனாக இருந்தார்கள் என்ற நினைவை இருநூறு ஆண்டுகள் கழிந்துத் தோன்றிய ஷேக்ஸ்பியர் பெருமிதத்தோடும் மகிழ்ச்சி யோடும் நோக்குமாறு நூறு ஆண்டுப் போர் செய்தது. இப்

பெருமிதத்திற்கும், மகிழ்ச்சிக்கும் பிற்காலத்திய ஆர்மடா கதை ஓரளவுக்கு ஈடாக அமைந்திருக்கலாம்.

அதே சமயத்தில் சாசரிடத்தும் (Chaucer) விக்ளிப்பிடத்தும் புதியதோர் ஆங்கிலேயப் பண்பாடு, வெளிப்படுவதற்குப் போராடிக் கொண்டிருந்ததை நாம் காணுகின்றோம். அப்பண் பாடு பழைய சாக்சானிய வீரர்களான பியோ உல்ஃப், பீடு, ஆல்பிரட்டு ஆகியோரிடத்து வெளிப்பட்ட பண்பாடு அன்று. ஆனால், அதைக் காட்டிலும் இப்பண்பாடு பேராற்றலும், பெருஞ் சிறப்பும், வளமும் உடையதாக இருந்தமை குறிப்பிடத் தக்கது. இப்பண்பாட்டினை உருவாக்குவதற்கு உதவியாக இருந்தவர்கள், பிரெஞ்சு நாட்டுப் பள்ளியாசிரியர்களும் இத்தாலியில் உள்ள ஆசிரியர்களுமேயாவர். அவர்களுக்கு நாம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். முழு வளர்ச்சி அடைந்த டியூடர் கால இங்கிலாந்தில், அவர் ஆசிரியர்களைத் கண்டிப்பாக வேலையிலிருந்து நீக்கிவிட்டமை வருந்தத்தக்க செய்தியாகும். பதினைந்தாம் நூற்றாண்டில் இடைக்கால சமுதாயம் அமைதியாகக் கலைந்து கொண்டிருப்பதற்குரிய சூழ்நிலைகள் அனைத்தும் தோன்றி விட்டதை நாம் காணுகின்றோம். வரப் போகின்ற புரட்சிக்கு இது சிறந்ததொரு பீடிகையாகத் தோன்றியது. புதிய பொருளாதார முறையினால் உட்குடிகள் தங்களுடைய விடுதலையை முயன்று பெறலாயினர். பட்டணங் களிலும் நாட்டுப் புறங்களிலும் தோன்றிய புதிய நடுத்தர வகுப்பினர் பிரபுக்களுக்கும் அடிமை ஊழியர்களுக்கும் (Serfs) இடையே சமுதாயத்தில் தாங்கள் சிறப்பு மிக்கவர்களாக விளங்குவதற்கு முயன்று கொண்டிருந்தனர். பிரபுக்களும் அடிமை ஊழியர்களும் தனித்தனியே பிரிந்துவிட்ட பழைய நிலமானியப் படைமுறை அமைப்பின் இருதூண்களாகவே இருந்து வந்தனர். துணி வாணிகத்தோடு, அயல்நாட்டு வாணிக மும் உற்பத்திப் பெருக்கமும் வளர்ந்து கொண்டிருந்தன. அவை இடைக்காலப் பேரூர்களிலும், தொழில் கழகங்களிலும் இருந்த எல்லைகளை மீறி, எங்குப் பார்த்தாலும் வளர்ந்து வரலாயின. பொதுமக்கள் எல்லோரும் கல்வி கற்றவர்களாக மாறிக் கொண்டிருந்தனர். அதனால் அவர்கள் தாங்களே சிந்திக்கத் தொடங்கினர். காக்ஸ்டன் கண்டு பிடித்த அச்சு இயந்திரம் மடாலய எழுத்தாளர்களை உதறித் தள்ளிவிட்டு, அவர்களுடைய இடங்களைப் பிடித்துக் கொள்ளலாயிற்று. ஆங்கிலேய வேளாளர்களின் நீண்ட விற்கள், நிலமானியப் படைமுறையின் மாவீரர்களின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தி யது. அரசரின் பீரங்கிப் படைகள் மாவீரர்களின் நிலவறைகளி

னுடைய சுவர்களைத் தகர்த்தெறியத் தொடங்கின. அட்லாண்டிக்கு அலைகடலைக் கடந்து, அப்பாலுள்ள பெருங்கடலின் இடையேயுள்ள புதிய உலகங்களைக் கண்டுபிடித்தமை இம் மாபெரும் மாறுதல்களுக்கெல்லாம் சிறந்த முடிமணியாக விளங்குகிறது. இக் கண்டு பிடிப்பு, கடந்த பல தலைமுறைகளில் மெல்ல மெல்ல முயற்சி செய்யப்பட்டு வந்ததன் முடிந்த பயனாகும். ஆனால், அது இக் காலத்தில் தொடர்ந்து எங்கும் பரவியிருந்த காரிருளைக் கிழித்துக் கொண்டு புதிய உலகங்களைக் காண்பதற்குப் பேருதவி புரிந்தது. இது முதற்கொண்டு இங்கிலாந்து எல்லாவற்றிற்கும் கடைக்கோடியில் இருந்துவந்த நிலை மாறிப் போயிற்று. ஆனால், ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றின் கடலக வாழ்வின் இதயமாகவும், நடுமையமாகவும் இங்கிலாந்து சிறப்புறத் தொடங்கிற்று. நெடுங்காலமாக, இங்கிலாந்து ஐரோப்பாவின் ஒரு பாதியாக இருந்து, ஐரோப்பிய நாகரிகத்தில் ஊறித் திளைத்ததைக் கண்டோம். ஆனால், இப்போது அவள் கடலக நாடாகவும், மேற்குப் பண்பாட்டில் ஊறிய அமெரிக்கப் பெண்ணாகவும் விளங்கத் தொடங்கினாள். ஆயினும் இக்காலம் எல்லாம் ஆங்கிலேயப் பண்புடையவளாகவே இருந்து வந்தாள்.

## இயல் 1

# அரசியல் குழப்பங்களும், அரசின் அதிகார மீட்சியும்

*இரண்டாம் ஹென்றி—மேனர் பண்ணையில் மாவீரர்களும் உட்குடிகளும்—கிராமப் பொருளாதாரம்.*

அரசர்கள் : (1) ஸ்டீபன் 1135–1154
(2) இரண்டாம் ஹென்றி 1154–1189

நார்மானிய அரசர்கள் தங்களுடைய நிலப்பிரபுக்களை ஒழுங்குமுறைக்குட்பட்டு நடக்குமாறு செய்திருந்தனர். அரசரின் ஆட்சிக்குப் பயன்படும் சிறந்த கருவியாகக் கோட்ட அமைப்புக்களை அவர்கள் புதுப்பித்து வந்தனர். அரசருக்குச் சேரவேண்டிய பல திறப்பட்ட வருவாய்களைத் தண்டுவதற்குரிய திறம்மிக்க ஒரு முறையினை நிறுவி, அதன் மூலம் அரசரின் கருவூலத்தை நிறைப்பதற்கு அவர்கள் முயன்றனர். ஆனால், நாட்டின் அமைதி இன்னும் அரசரின் தனிப்பட்ட செயல்முறைகளைப் பொறுத்தே

நிலவுவதாக இருந்து வந்தது. இதற்குக் காரணம் என்னவென்றால் முட்டாள் ஒருவன் அரசனான பொழுதிலும், நாட்டு ஆட்சியை நல்ல முறையிலே திறமையாக நடத்துவதற்குரிய வகையில் தானே இயங்கும் ஆட்சி இயந்திரங்கள் இக்காலம் வரையில் அமைக்கப்படாமையேயாகும். முதலாம் ஹென்றிக்கும், இரண்டாம் ஹென்றிக்கும் இடையிலும், நார்மானியருக்கும், அஞ்சுவின அரச மரபினர் ஆட்சிக்கு இடையிலும் அரசியல் குழப்பம் மிகுந்த ஓர் ஆட்சிக்காலம் இடையீடாக அமைந்தது. அதுதான் ஸ்டீபன் என்னும் அரசனின் (1135—1154) ஆட்சிக் காலமாகும். உண்மையில் அதை ஓர் ஆட்சிக் காலம் என்று கூறமுடியாது. ஆனால் அது பிளாய்ஸ் (Blois) குடியைச் சேர்ந்த ஸ்டீபனுக்கும், பிளாண்ட்டாஜெனட் பெருமகனும் அஞ்சுவின மரபைச் சேர்ந்தவருமான ஜாப்பரே (Geoffrey) என்பவரின் மனைவி மாட்டில்டா என்பவளுக்கும் இடையே நடைபெற்ற அரசுரிமைப் போரேயாகும். மாட்டில்டா முதலாம் ஹென்றியின் மகளாவாள். அவள் பேரரசர் ஐந்தாம் ஹென்றியை மணம்புரிந்து கொண்டிருந்தாள். அவர் இறந்த பிறகு, மாட்டில்டா அஞ்சுவின மரபைச்சேர்ந்த ஜாப்பரேவை மறுமணம் புரிந்து கொண்டிருந்தாள்.[1]

[1]

வெற்றி வீரர்
வில்லியம்
ஆட்சி 1066-1087

| இராபர்ட்டு நார்மண்டியின் கோமகன்- இறப்பு : 1134. | முதலாம் ஹென்றி ஆட்சி 1100-1135 | அடிலா-ஸ்டீபன் பிளாய்சின் கோமான் |
|---|---|---|
| வில்லியம் ஆட்சி : 1087-1100 | | ஸ்டீபன் ஆட்சி : 1135-1154 |

(1) பேரரசர்
ஐந்தாம் ஹென்றி-மாட்டு
அல்லது
மாடில்லா — (2) ஜாப்பரே
பிளாண்ட்டாஜெனட்டு
அஞ்சுவினக் கோமான்
இறப்பு : 1151

இரண்டாம் ஹென்றி
ஆட்சி : 1154-1189

ஸ்டீபனை ஆதரிக்கும்வகையில் லண்டன் மாநகரக்குடிமக்கள் அரியணையில் அமர்த்துவதற்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதைப் பற்றிய தங்கள் உரிமையை ஓரளவிற்கு வெற்றியுடன் நிலைநாட்டினர். தெய்விக மரபுரிமைக் கோட்பாட்டிற்குப் பொருந்தாத வகையில் அரசுக்குரிய மணிமுடி யார்யாருக்கோ உரிமையாக அளிக்கப்பட்டதை இந்நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது. மேலும், இத்தகைய வழக்குகளையும், சிக்கல்களையும் ஆராய்ந்து தீர்த்துவைப்பதற்குரிய பாராளுமன்றம் போன்ற நிலையம் அக்காலத்தில் இங்கிலாந்தில் இல்லாமல் இருந்ததை இந்நிகழ்ச்சியால் தெரிய வருகிறது.

இக்காலத்திய மக்கள் பெருந் துன்பத்திற்கு ஆளானார்கள். அதனால்தான் இரண்டாம் ஹென்றி மையக்குவிமுக ஆட்சி முறையிலும், நீதி நிர்வாகத்துறையிலும் செய்த சீர்திருத்தங்களை மக்கள் விரும்பிப் போற்றினர். பிற்காலத்தில் இரண்டாம் ஹென்றி, அரசரின் நீதி மன்றத்தினது அதிகாரத்தை விரிவுபடுத்தியும், பொதுச்சட்டத்தின் அடிப்படையை அமைத்து வந்தமையும் உண்மையான நிலமானியப் படைமுறைப் போக்குக்கு முற்றிலும் தொடர்பற்றதாகும். ஸ்டீபன் ஆட்சிக் காலத்து இங்கிலாந்தில் உண்மையான நிலமானியப் படைமுறை போதிய அளவுக்கு செயல்முறையில் இருந்துவந்தது.

அரியாசனத்தில் ஏறுவதற்கு தகுதியற்றவர்களாக இருந்த ஓர் ஆணுக்கும், ஒரு பெண்ணுக்குமிடையே உண்டான போட்டியினால்நாட்டிலே நிலமானியப்படைமுறைக் கலகங்களும், குழப்பங்களும் தோன்றின. ஸ்டீபனும், மாட்டில்டாவும் தங்களை ஆதரிக்கின்ற நிலப்பிரபுக்களுக்கு அளவு கடந்த உரிமைகளைக் கொடுத்து பகையுணர்வு மிக்க இரு பெரும் படைகளைத் திரட்டினர். மேலும் நார்மானிய அரசர்கள் அரும்பாடுபட்டுப் பெற்ற அரசுக்குரிய சிறப்புரிமைகள் அனைத்தையும் தனி மனிதர்களுக்கு வழங்குவதன் மூலம் இவ்விருவர்களும் தங்கள் கட்சிக்கு ஆதரவாகப் படை திரட்டலாயினர். இதற்குப் பிறகு, இரண்டு நூற்றாண்டுகள் வரையில் நாட்டாண்மைக்காரர் (Sheriff) அரசரின் உண்மையான அதிகாரியாகவே இருந்துவந்தார். மன்னரின் பேரவையில் (Curia) அவர் மீது கொடிய குற்றங்கள் சாட்டப்பட்டு, வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக்கூறிய பிறகே அரசர் நாட்டாண்மைக்காரரைத் தம் விருப்பப்படி பதவியிலிருந்து நீக்கமுடியும் என்ற நிலை உண்டாயிற்று. இப்புது யுகத்தின் பொருத்தமிக்க தலைவராகத் தோன்றியவர் மேண்டிவில்லேவைச் சேர்ந்த ஜியோபிரி என்பவராவார். அவரை ஸ்டீபனும், மாட்டில்டாவும் அடுத்தடுத்து பரம்பரை நாட்டாண்மைக்காரராகவும், எஸ்ஸெக்ஸின் ஜஸ்டீசியராகவும் பணிபுரியுமாறு உயர்ந்த பதவிகளை அளித்துப் போற்றியதோடு, கோட்டங்களில் அரசருக்கு இருந்து வந்த நீதி நிர்வாக முறையையும் ஆட்சி உரிமைக்குரிய அதிகாரங்களையும் அவருக்கும் அவருடைய வழித்தோன்றல்களுக்கும் உரிய உரிமைகளாக வழங்கினர். அவர் இடைவிடாது தாம் ஆதரவு தருவதை இவ்விருவருக்குமிடையே மாற்றிக் கொண்டே வந்தார். அதன்மூலம் தம்முடைய பற்றுறுதிக் கட்டுப்பாட்டிற்குத் தர வேண்டிய விலையை உயர்த்திக் கொண்டுவந்தார். இறுதியில் ஸ்டீபனிடமிருந்து, அவர் அரசுக்குரிய உரிமைகளை எஸ்ஸெக்ஸில் மட்டும் அல்லாமல், ஹெர்ட்

போர்ட்ஷையர், மிடில்செக்ஸ் முதலிய நகரங்களில் பெற்றார். அத்துடன் இங்கிலாந்து நாட்டின் இதயமாக விளங்கிய லண்டன் மாநகரிலும் அவர் இவ்வுரிமைகளைப் பெற்றார். அவர் மிக மட்டமான ஒரு முரடனாக இருந்தார். எனினும் இங்கிலாந்தில் கிழக்குப் பகுதியில் அவர் போராற்றல் வாய்ந்த மனிதராக இருந்தார் என்பதில் சிறிதும் ஐயுறவில்லை. உண்மையைக் கூறுவது என்றால், அரசரைவிட அவரே பெருஞ் செல்வாக்குடையவராக அப்பகுதியில் விளங்கினார். ஆனால் அரசரின் பட்டயங்கள் பலவற்றை அவர் பெற்றபோதிலும், அவருடைய 'வழித் தோன்றல்கள் என்றைக்கும்' அந்தத் தனி உரிமைகளை அனுபவிக்கக் கூடிய நற்பேற்றினையும், அந்தப் பகுதிகளைப் பெறுவதற்குரிய நல் ஊழினையும் உடையவர்களாக விளங்கவில்லை.

நாட்டின் பல்வேறு வட்டாரங்களில் மேலாண்மையையும் பெருஞ் செல்வாக்கையும் பெற்றிருந்த இத்தகைய மனிதர்களால், பல மாவட்டங்கள் முழுவதும் மக்கள் குடியிருப்புகளே இல்லாமல் காலி செய்யப்பட்டன. தேம்ஸ் நதிப்பள்ளத்தாக்கும் தென் மேற்கு இங்கிலாந்தும் மிட்லாண்டு பகுதியும் இதனால் பெருந் துன்பத்தை அடைந்தன. இவை யாவற்றையும்விடச் சதுப்புநிலப் பகுதியில் மிகக் கொடிய காட்சிகள் உண்டாயின. அங்கு ஜியோபிரி நிலையான ஒரு படையினை நிறுத்தி, நாட்டுப்புறப் பகுதிகளைக் கொள்ளையிடுமாறு செய்தமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய துன்பம் நிறைந்த இந்தப் பகுதியின் இதயமாக விளங்கிய பீட்டர்பரோவின் மடத்தில் ஓர் ஆங்கிலேயத் துறவி வாழ்ந்தார். அவர் ஆங்கிலேயச் சாக்சானிய கால வழிச் செய்திக்கோவையில் (Chronicle) இறுதியாகச் சேர்க்கப்பட்ட வருந்தத்தக்க பதிவுக்குறிப்புகளைக் கண்டறிவதிலேயே ஈடுபட்டிருந்தார். இந்தக் கால வழிச் செய்திக் கோவை மாண்புமிக்க அரசர் ஆல்பிரட்டினுடைய ஆதரவில் முதல் முதலாகத் தொடங்கப்பட்டது. ஆனால் இப்பொழுது புறக்கணிக்கப்பட்டும் அடக்கியொடுக்கப்பட்டும் அல்லலுறும் மக்களின் வரலாற்றுக் குறிப்பு ஏடாக வெறுத்து ஒதுக்கப்பட்டது. அயல்நாட்டு வீரப்பெருந்தன்மைக்கு எதிராக ஆங்கிலேயப் பொதுமக்கள் எழுப்பிய வெறுப்புமிக்க கூக்குரலை அந்தக் கால வழிச் செய்திக் கோவையில் நாம் கேட்கின்றோம். அயல் நாட்டு அரசர்கள் சிறிது காலம் வரை பிரான்சு நாட்டின் மாவீரர்களின் நல்வாழ்விற்காக இங்கிலாந்தின் மக்களைப் புறக்கணித்தே வந்தனர். அதனால் அவர்கள்சீற்றம் அடைந்தனர். இச்சீற்றத்

தால் எழுந்த ஒலி காலவழிச் செய்திக் கோவையில் ஒலிப்பதை நாம் கேட்கின்றோம்.

'இந்தக் காவல் கற்கோட்டைகளில் அந்த அயல் நாட்டு வீரப் பெருந்தகையாளர்கள், இந்நாட்டுப் பழங்குடி மக்களைப் பெரிதும் துன்புறுத்தி வேலை வாங்கினர். அந்தக்காவல் கற்கோட்டைகள் கட்டி முடித்தவுடன், அதனுள்ளே பேய்களையும் கொடிய மனிதர் களையும் அவர்கள் கொண்டுவந்து நிறைத்தனர். அதன் பிறகு அவர்கள் யார் யாரிடம் பொன்னும் பொருளும் குவிந்து கிடப்ப தாக ஐயுற்றார்களோ, அவர்களை இராப்பகலாகப் பிடித்துச் சென்றனர். ஆணாகயிருந்தாலும் பெண்ணாகயிருந்தாலும் கவலைப் படாது அவர்களிடத்தே அவர்கள் வைத்திருக்கும் பொன்னுக் காகவும் வெள்ளிக்காகவும் அவர்களை அவ் வீரப் பெருந்தகை யாளர்கள் சிறையில் அடைத்தனர்; இவ்வாறு சிறையில் அடைத்து அவர்களைச் சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாக்கிச் சித்திரவதை செய்தனர். இவர்களைப் போன்று மனவேதனைக் கும் உடல் துன்பத்திற்கும் ஆளான உயிர்த்தியாகிகளை நாம் வேறெங்கும் காணமுடியாது.'

நம்முடைய வரலாற்று நூல்களில் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகின்ற கருத்துக்கள் அடுத்துத் தொடருகின்றன. சித்திரவதை செய்வதைப் பற்றிய நீண்ட பட்டியல் தரப்பட்டிருக் கின்றது. அவற்றுள் மிக மென்மையான தண்டனையாகப் பட்டினி போடுதலும், இருட்டறைகளில் அடைத்து நச்சுப் பாம்புகளையும், தேரைகளையும் விட்டுக்கடிக்குமாறு செய்வதும் குறிப்பிடப்பட்டுள் ளன. இரண்டு தலைமுறைகள் கழித்த பிறகு அரசர் ஜான் உயர்குடியில் பிறந்த ஒரு மங்கையையும், அவளுடைய மகனையும் பட்டினிபோட்டு இறக்கச் செய்ததை நாம் நினைவு கூர்வோ மாறுல் அரசியல் குழப்பங்களின்பொழுது உற்றார் உறவினர் களும், நண்பர்களும் மற்று வறுமையில் வாடிய மக்கள் பெற்ற தண்டனைகளைப் பற்றிய அருவருப்பான கதைகளை நாம் உண்மையெனவே நம்புவோம்.

இக்காலத்து நாடு முழுவதும் கட்டப்பட்டிருந்த காவல் கற் கோட்டைகளில் அத்தகைய அட்டூழியங்கள் அன்றாட நிகழ்ச்சிகளாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதே சமயத்தில் அவற்றைப் போற்றி வளர்த்த நிலமானியப்படை முறைப் பிரபுக்கள், புதிதாக மடங்களைக் கட்டுவதிலும், கட்டப் பட்டிருந்த மடங்களுக்கு அறக்கட்டளைகள் வழங்குவதிலும் புதியதோர் ஆர்வம் கொண்டிருந்தனர். ஸ்டீபன் ஆட்சிக்

காலத்தில் மட்டும், நூற்றுக்கு மேற்பட்ட பல புதிய மடாலயங்கள் கட்டப்பட்டன. அரசியல் குழப்பத்தை உண்டாக்கி, அதன் மூலம் மக்களைச் சுரண்டி வாழ்ந்தவர்களே, சிஸ்டர்சியன் துறவிகளுக்கு (Cistercian Monks) அருள் உள்ளத்தோடு பல்வகையான மானியங்களை வழங்கிக்கொண்டு இருந்தனர். இந்த சிஸ்டர்சியன் துறவிகள், இக்காலத்தில்தான் முதன் முதலாக பிரான்சிலிருந்து இங்கிலாந்திற்கு வந்து குடியேறினர். மிக உயர்ந்த சமயக் குறிக்கோள் எப்பொழுதும் மக்களைச் செயலில் ஈடுபடுமாறு தூண்டிவந்ததாக நாம் நினைப்பதற்கு இல்லை. இதைப்போன்றே இச் சமயக்குறிக்கோள் என்றுமே மக்களிடை இருந்ததில்லை என்று நினைப்பதும் தவறாகும். திருச் சபைகளின் கரடுமுரடான சுவர்களில் வரையப்பட்டிருந்த ஓவியங்களில், நீண்ட நகங்களையுடைய பூதங்கள், படைக் கலன்களை ஏந்திய மாவீரர்களை எடுத்துப் பரந்து செல்லும் கற்பனைக் காட்சியைக் கண்ட நிலப்பிரபுக்களின் மனம் குழப்பமும் தடுமாற்றமும் உற்றதில் வியப்பில்லை; எனவே, தங்களுக்கும் அத்தகைய கொடிய துன்பங்கள் உண்டாகாமல் முன் கூட்டியே தடுப்பதற்குரிய சிறந்த வழி, மடாலயங்களுக்கு மானியங்கள் வழங்குவதே யாகுமென்று அவர்கள் நம்பியிருக்க லாம். உழவர்களைச் சித்திரவதை செய்த காரணத்தினாலும், கிராமக் குடிமக்களை ஊரைவிட்டு விரட்டியடித்த காரணத்தினாலும் தங்களுக்கு இத்தகைய தண்டனை கிடைக்குமோ என்று அவர் கள் அஞ்சி நடுங்கினர். எனவேதான், இக்காலத்து நாடு முழு வதிலும் மடாலயங்கள் பல கட்டப்பட்டன போலும்.

கடைசியாக, அரச உரிமைக்காகப் போட்டி போடுபவர் களுக்கு இடையே ஆர்ச்பிஷப் கியோப்பால்ட் அவர்களின் உதவி யால் ஒருவகை உடன்பாடு 1153-ல் காணப்பட்டது. ஸ்டீபன் இறக்கும்வரையில் இங்கிலாந்தின் அரியாசனத்தில் அரசராக வீற்றிருக்க வேண்டுமென்றும், அவருக்குப்பிறகு மாட்டில்டாவின் மகன் இரண்டாவது ஹென்றி அரசுகட்டில் ஏறவேண்டுமென்றும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தனர். இதற் கிடையே அரசரிடத்து அனுமதி பெறாது கட்டப்பட்ட ஆயிரத் திற்கும் மேற்பட்ட காவல் கற்கோட்டைகள் அனைத்தையும் தகர்த்தெறிய வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. இருதரப் பினரும் கட்டுப்பாடு இல்லாத நிலமானியப் படை முறையினால் உண்டான துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளமுடியாது உடன்பாட்டுக்கு வந்ததன்மூலம் ஒரு கூட்டிணைப்பு ஆட்சி முறை அமையலாயிற்று. நாட்டின் நோய்களைப் போக்கக்கூடிய பேராற்றல் வாய்ந்த அரசராக ஸ்டீபன் விளங்கவில்லை.

அத்தகைய அரசர் அடுத்த ஆண்டிலேயே இறந்து விட்டார் அவர் இறந்தமை இங்கிலாந்திற்கு மாபெரும் நற்பேருக அமைந்தது. அவர் இளமையும் வீரமும் உடையவராகவும், காதல் புரியும் நோக்குடைய மாவீரராகவும் விளங்கினர். புதிய வீரப்பெருந்தகைமைக் கோட்பாடுடைய துணிகரச் செயல் புரியும் மாவீரராக அவர் திகழ்ந்தார். தமக்குத்தாமே ஒரு மாபெரும் தீமையை இழைத்துக்கொள்வதன் மூலம் அவர், மாட்டில்டா மங்கைக்குத் தம்முடைய அரசினை ஆட்சி புரிவதற் குரிய ஒரு வாய்ப்பை அளிக்கும் திறமையுடையவராக இருந் தார். ஆனல் பொதுமக்களின் நலத்தைப் பற்றிச் சிறிதும் அக்கறை இல்லாமல் இருந்ததோடு, அவர் அரசராக இருப்ப தற்கே முற்றிலும் தகுதியற்றவராகவும் இருந்தார்.

இங்கிலாந்தின் அரசராக மணிமுடி தரித்து நாடாண்ட அரசர்களுள், அஞ்சுவினக் குடியைச் சேர்ந்த பெருமக்களான ஹென்றி பிளாண்ட்டாஜனட்டைப் போன்று நிலைபெற்ற வாழ்வையுடைய பெருஞ் செயல்களைச்செய்த அரசர்கள் மிகச் சிலரே எனலாம். கடந்த இருபது ஆண்டுக் கால அரசியல் குழப்பத்தால் இங்கிலாந்து சோர்வு அடைந்து போயிருப்பதை அவர் கண்டார். நாட்டிலே உண்டான குழப்பத்தாலும் (1154-1189) அரசுரிமைப்போரினுலும், நார்மானிய ஆட்சி இயந்திரத் திலுள்ள சக்கரத்தின் ஒவ்வொரு பல்லும் உடைந்து இருப்பதை அல்லது பயன்படுத்தப் படாமையால் துருப்பிடித்துப் போயிருப்பதை அவர் கண்டார். நிலமானியப்படை முறையின் தவருன ஆட்சியினுல் மக்கள் எல்லோரும் வெறுப்பு அடைந்திருப் பதை அவர் நன்கு உணர்ந்தார். நல்ல முறையில் நாட்டில் அமைதி யையும் ஒழுங்கையும் நிலை நாட்டாவிட்டால், நாட்டு மக்கள் மீண்டும் காட்டுமிராண்டி நிலைக்கு எச்சமயத்திலும் நழுவிவிட லாம் என்பதை அவர் நன்கறிந்திருந்தார். அவர் இங்கிலாந்தை விட்டுச் செல்லுகின்றபொழுது சிறந்ததொரு நீதி நிர்வாகத் தையும், ஆட்சி முறை அமைப்பையும் நிலைநிறுத்தி விட்டு மறைந்தார். மேலும், அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு அடங்கி நடக்கும் பழக்கத்தினை நாட்டு மக்களிடத்தில் உண்டாக்கிவிட்டு அவர் சென்ருர். அதனுல்தான் நெடுங்காலம் அரசர் ரிச்சர்ட் நாட்டில் இல்லாமலிருந்த காலத்திலும், கொடிய தீமைகள் பலவற்றைச் செய்த அரசர் ஜானின்ஆட்சிக் காலத்திலும் இங்கிலாந்தில் குழப்பமும் கொந்தளிப்பும் தோன்றவில்லை. முதலாம் ஹென்றியின் இறப்புக்குப் பிறகு, தீய ஆட்சிமுறையின் விளைவாகக் குழப்பமும், கொந்தளிப்பும் நாட்டில் தோன்றின. இரண்டாவது ஹென்றியின் மறைவுக்குப் பிறகு, தவருன

அரசியல் அமைப்பின் விளைவாக அரசியல் அமைப்புக்குரிய சீர் திருத்தங்கள் உண்டாயின. இவற்றுக்கிடையே காணப்படும் வேறுபாடு, சிறப்பு மிக்க அஞ்சுவின அரசரின் போற்றத் தக்க பணியினால் உண்டான விளைவாகும்.


நார்மானியர்களைப்போன்றும், டச்சுக்காரரான வில்லியத்தை போன்றும் இரண்டாம் ஹென்றி மிக அருகிய ஆங்கிலேயப் பண்புடையவராக விளங்கினார். அயல் நாட்டு ஆட்சியாளர் ஒருவரை அரசராகப் பெறுவதனால் நன்மைகளும், அவற்றோடு தீமைகளும் இருப்பது உண்மையாகும். மரங்கள் நிறைந்த காடு களுக்கிடையே பிறக்காத காரணத்தினால் அவர் புதிதாகக் கண்ட காட்டினை நன்கு கூர்ந்து நோக்க இயலும். அதைப்போன்றே தாம் வந்திருக்கும் புதிய நாட்டில் காணப்படுகின்ற கேடுகளை மிகத் தெளிவாக அவர் காண முடிந்தது. அஞ்சுவின மரபைச் சேர்ந்த அவ்வரசர் தம்முடைய ஆதிக்க மனப்பான்மையையும், கடுமையும், சோர்வுமற்ற தமது ஆற்றலையும் இங்கிலாந்து நாட்டின் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தினார். அத்து டன் அக்காலத்திய ஐரோப்பாவின் சிறந்த கல்வி முறையில் அவர் நன்கு பயிற்சி பெற்ற மதகுருமார்களின் மனநிலை வாய்க்கப் பெற்றவராக இருந்தார். சிறப்பாக அக்காலத்திய இத்தாலியப் பல்கலைக் கழகங்களில் இருந்து ஐரோப்பா முழுவதிலும் பரவிக்கொண்டிருந்த நீதித்துறை மறுமலர்ச்சிக் கருத்துக்களை அவரே இங்கிலாந்தின் நோய்களைத் தீர்ப்பதற்குரிய மருந்தாகக் கொண்டு வந்தார். எனவே, தம்முடைய ஆட்சிக் காலம் வரை யில் தம் நாட்டு சட்டங்களுக்கே பெயர் பெற்றிருந்த அந்த நாட்டில், புதிதாகச் சட்ட இயலினைக் கொண்டு வந்து புகுத்திய முன்னோடியாக அவர் விளங்குகின்றார். அவர் ஆட்சிபுரிந்த பேரரசின் பல்வேறு மாநிலங்களின் ஆட்சிமுறைக் கலைகளிலும் தேர்ச்சிமிக்கவராகக் காணப்பட்டார். அவர் இதற்கு முன்பு நார் மண்டியின் கோமகனாக மட்டுமில்லாமல், மேற்கு பிரான்சு முழு வதையும் ஆட்சி புரிந்த ஓர் அரசராக இருந்தமையே இதற்குக் காரணமாகும். திருமணத்தின் மூலமும், அரசியல் சூழ்ச்சித் திறத் தாலும், போரினாலும் பாரிசில் இருந்த முடியாட்சியும், புனித ரோமானியப் பேரரசும் சிறிது காலத்திற்கு மதிப்பற்றுப் போகும் அளவிற்கு அஞ்சுவின அரச மரபினர் பரந்த நிலப் பரப்பைத் தங்களுக்குரிய உரிமையாகப் பெற்றிருந்தனர்.

ஹென்றி, செவியட்சிலிருந்து பிரனீசு வரையில் ஆட்சி புரிந்து வந்தார். அவர் ஆங்கிலேய நிலப் பிரபுக்களை அடக்கி ஒடுக்கு வதில் திறமையுடையவராக விளங்கினார். ஆங்கிலேய நிலப்பிரபுக்

கள் மிகப் பேரளவில் நிலங்களைப் பெற்றிருந்த தமது அரசரை எதிர்க்கும் துணிவு அற்றவர்களாயினர். பழைய நிலமானியப் படை முறை அமைப்பில் இறுதியாகத் தோன்றிய நிலப்பிரபுக் களின் கலகம் 1173-ல் நடைபெற்றதாகும். ஹென்றி அதை அடியோடு அடக்கி ஒடுக்கிவிட்டார். இவ்வாறு ஆங்கிலேய அரசர்கள் ஐரோப்பிய நாடுகளின்மீது கொண்டிருந்த ஆதிக்கம், இங்கிலாந்தின் உள்நாட்டு ஆட்சியில் வளர்ச்சிக்கு மறைமுக மாகத் தொண்டு புரிந்தது எனலாம். அக்காலத்திய இங்கிலாந் திற்கு ஆற்றல் மிக்க முடியாட்சியே மிக இன்றியமையாத தேவையாக இருந்துவந்தது.

ஹென்றி எப்பொழுதும் இயங்கிக்கொண்டிருக்கும் அவைக் களத்தை உடையவராக இருந்தார்.[1] அந்த அவையில் வணிகர் களும், இன்பத்தை அளிப்போரும், அறிஞர்களும் நிரம்பியிருந் தனர். அவர்கள் அனைவரும் கிழக்கு ஐரோப்பாவில் இருந்துவந் தவர்களாவர். அம்மாபெரும் அரசருக்கு இங்கிலாந்து, அவரு டைய ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்களில் பரந்ததொரு மாநில மாகவே இருந்துவந்தது. ஆனால், அவருடைய ஆட்சி இங்கிலாந் தின் நிலையங்களில் என்றும் அழியாத அடிச்சுவடுகளை பொறித் திருப்பதைக் காணலாம். அவர் ஆட்சி புரிந்த அரசுகள் தெளி வான தேசிய உணர்வுமிக்க பல்வேறு மாநிலங்களாகப் பிரிக் கப்பட்டிருக்கவில்லை. ஆனால், ஒரே வகையான பண்பாட்டைக் கொண்ட நாகரிகத்தின் பல பகுதிகளாக அவை விளங்கின. இங்கி லாந்தில் இன்னும் உயர் வகுப்பினர் பிரஞ்சு மொழியையே பேசிக்கொண்டிருந்தனர். அம் மொழியை மூன்றும் எட்வர்டு

[1] இரண்டாம் ஹென்றியின் அரசவைக் குழுவினராக இருப்பதனால் ஊதியம் ஒன்றும் கிடைக்கவில்லை. அவ்வவைக்கள வாழ்வில் பங்கு பெற்ற பிளாய்சைச் சேர்ந்த பீட்டர், பின்வருமாறு அரசவை வாழ்வினை விளக்கியுள்ளார். 'அரசர் எங்காகிலும் அவர் விருப்பம் போல் ஒரு நாளைக் கழிக்க விரும்பி ஒருமுடிவிற்கு வருவார். அம்முடிவினைப் பொது மக்களிடையே கட்டியங்கூறுவோன் வெளிப்படையாக அறிவித்து விடுவானானால், அரசர் அன்று வைகறைப் பொழுதிலேயே துயிலெழு வார் என்பதை நீ உறுதியாக நம்பலாம். இத்தகைய திடீர் மாற்றம், மற்றவர்களுடைய திட்டங்களை எல்லாம் குழப்பம் அடையச் செய்யும்...... மனிதர்கள் அங்குமிங்கும் விரைந்தோடுவதையும், பொதி சுமக்கும் குதிரைகளை விரைந்தோடுமாறு விரட்டுவதையும், ஒரு தேரினை மற் றொரு தேருக்குள் ஓட்டுவதையும், எல்லாம் ஒரே குழப்பமாக இருப் பதையும் நீ பார்க்கலாம்....சிறிதும் அச்சமின்றிச் சொல்லுவது என்றால், மிக்க இக்கட்டான நிலையில் அரசவைக் குழுவினர் சிக்கிச் சீரழிவதே அரசருக்கு இன்பம் அளிப்பதாகும். பெரிதும் இருள் நிறைந்த முன்பின் அறியப்படாத காட்டினுள் மூன்று அல்லது நான்கு கற்கள் சுற்றித் திரிந்த பிறகு, அருவருக்கத்தக்க எளிய குடிசை ஒன்று காணப்படுமானால் எங்களுடைய வேண்டுகோள் பயன்தரப் போகிறது என மகிழ்ச்சியடை வோம். இக்குடிசைகளில் தங்குவதற்கு அடிக்கடி கொடிய பூசல்களும் எங்களிடையே நடைபெறுவது உண்டு. பன்றிகளும் தங்குவதற்கு வெட்கப்படத்தக்க அக்குடிசைகளுக்காக அரசவையினர் உருவிய வாளுடன் போர் புரிவர்.'




*The possessions of Henry II.*

*Boundary of nominal dominions of King of France*

*Lands directly ruled by King of France*

MAP X.—The Angevin Empire

படம் 11

அஞ்சுவினப் பேரரசு

ஆட்சிக்காலம்வரையில் அவர்கள் தொடர்ந்து பேசி வந்தனர். ஆங்கிலேய கிராமங்களில் பிரபுக்களுக்கும் உட்குடிகளுக்கிடையே இடைவெளியும் வேற்றுமையும் இருந்ததாக வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டதைக் காண்கின்றோம். ஆனால், இவ்வற்புறுத்தல் நெடுங்காலம் இன உணர்வின் அடிப்படையில் அமைந்திருந்த தென்றோ ஹேஸ்டிங்ஸ் போரின் நினைவினால் அமைந்திருந்ததென்றோ கூறுவதற்கில்லை. ஆனால், என்றும் நிலைபெற்று விளங்கிய வேற்று மொழியினால் அமைக்கப்பட்ட வேலியினாலேயே இந்த வேறுபாடு இருந்து வந்தது. நிலமானியப்படை முறையின் பண்பாகிய ஆழ்ந்த சமுதாயப் பிளவு பன்னிரண்டாம் நூற்றாண்டில் வேளாளர் அல்லது வணிகர்கள் நிறைந்திருந்த எண்ணற்ற நடுத்தர வகுப்பினரிடையே காணப்படவில்லை. அவர்கள் அவ்வாறிருக்க. மேலாட்களாகவும், எடுபிடிகளாகவும், இடைத்தரகர்களாகவும், பிரபுக்களுக்கும் அடிமை ஊழியர்களுக்கும் இடையே பழகி வந்தவர்கள் பிரெஞ்சு மொழியையும், ஆங்கில மொழியையும் பேசக் கூடியவர்களாகவும் இருந்திருக்கவேண்டும். எனினும், மத குருமார்கள் மூன்றாவது மொழியாகிய இலத்தீன் மொழியின் மூலமே எல்லாச்செயல்களையும் செய்துவந்தனர். எனவே, இலத்தீன் மொழியே பணித்துறை ஆவணங்களை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மொழியாக இருந்துவந்தது. இடைக்கால இங்கிலாந்து பன்மொழி பேசும் மக்களைக் கொண்ட சமூகங்களையுடையதாக இருந்தது. பழைய ஆங்கிலத்திற்கும் இடைக்கால ஆங்கிலத்திற்கும் இடையே காணப்படுகின்ற மாவட்ட வேறுபாடுகளையும், வேல்சிலும், காரன்வாலிலும் கெல்ட்டிக்கு மொழிகள் பேசப்பட்டதைப் பற்றியும் சேர்த்துக் கணக்கிடாமல் போனாலும், அன்றைய இங்கிலாந்தில் பலமொழிகள் பேசப்பட்டதை மறுக்க முடியாது.

இங்கிலாந்தின் உயர் வகுப்பினரின் நாகரிகத்தை சமூகத்தின் பல நிலைகளில் வாழும் மக்களிடையே பரப்பும் சிறந்த பணியினை, நெடுங்காலமாக முடிவின்றி ஆங்கிலேயப் புறத்தோற்றப் பகட்டு நன்மை பயக்கும் வகையில் செய்துவந்தது. மிகப் பிற்பட்ட காலமான மூன்றும் எட்வர்டு காலத்தில் வாழ்ந்த காலவழிச் செய்திக் கோவையாளர் ஒருவர், 'மேட்டு நிலத்தில் வாழ்கின்ற மக்கள் தாங்களே பண்பாளர்கள் என நினைத்துக் கொள்ளுவதையும், பிரஞ்சு மொழியைப் பேசுவதற்காகத் துடிதுடித்துக் கொண்டிருப்பதையும் பண்பாளர்களாக விளங்குவதற்குப் பிரஞ்சு மொழியினைப் பேச வேண்டும் என்று உள்ளமையையும் நான் கேள்வியுற்றேன்' என்று மொழிந்துள்ளமை இங்குக்

கருதத்தக்கதாகும். அஞ்சுவின அரசர்கள் காலத்தில், இவ்வழக்காறு பெரு வழக்காக இருந்தது என்று நாம் உறுதியாகக் கூறலாம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதிலும் பெருக்கெடுத்து ஓடி எங்கும் பரவிய பிரஞ்சுக் கவிதைகளும், பிரஞ்சுக் கதைகளும் ஆகிய பேரலை, இங்கிலாந்தின் மீது படையெடுத்து வெற்றி கொண்டதில் வியப்பில்லை. பியோவுல்பு இலக்கிய மரபைச் சார்ந்த எதுகை, மோனை முதலிய பண்புகளைக் கொண்ட அழகு மிக்க கவிதைகளைப் போற்றுவார் இல்லாமல், அவை இழி நிலையை இக்காலத்து அடைந்திருக்க வேண்டும். ஏனெனில் இரு நூற்றாண்டுகள் கழித்து லாங்லாந்து (Langland) இயற்றிய "கடற் கழி உழவன்" (Piers Plowman) என்னும் நூலில் பியோவுல்பின் இலக்கிய மரபு, மீண்டும் புதுபிக்கப்பட்டது. இரண்டாம் ஹென்றியின் காலத்திலும் அவருடைய பிள்ளைகள் ஆட்சி புரிந்த காலத்திலும் இங்கிலாந்திற்கு வந்த அயல் நாட்டினர் குறிப்பிட்டதைப் போன்று இங்கிலாந்தில் நல்ல நகைச்சுவையை விரும்பும் பொதுமக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வெளிப்புற விளையாட்டுகளையும், வீரதீரச் செயல்களையும் பெரிதும் விரும்பும் இயல்புடையவராக இருந்தனர். அத்தகைய மக்கள் பிரஞ்சு மொழியை எழுதியும், படித்தும் வந்தனர். மேலும், பிரஞ்சு மொழியின் இனிய இசைப் பாடல்களினாலும், நாட்டியங்களினாலும், பிரெஞ்சு மொழியின் உயிர்ப் பண்பாகிய காப்பியங்களாலும், கதைகளாலும், வேடிக்கைப் பேச்சுக்களினாலும் அவர்கள் பெரிதும் கவரப்பட்டனர். எனவே, இங்கிலாந்தில் பிரெஞ்சு மொழி இலக்கிய மரபை அடியொற்றிப் பல ஆங்கிலப் பாடல்கள் இயற்றப்பட்டதைக் காண்கின்றோம். பிற்காலத்தில் மாண்புமிக்க ஆங்கில மொழிக் கவிதைகள் தேர்ந்தெடுத்திருந்த வடிவ அமைப்புகளின் தோற்றத்தை நாம் இங்குத்தான் தேடிப்பார்க்க வேண்டும்.

நெடுந்தொலைவிற்கப்பாலுள்ள ஐஸ்லாந்தில் பிரஞ்சுமொழிக் காதல் கவிதைகளுக்கும், மகிழ்ச்சிச் சிந்துகளுக்கும் சிறிதும் தரம் குறையாது இலக்கியம் செழிப்புற்று விளங்கியது. அது நாளடைவில் நலிவுற்றும் போயிற்று. ஆனால் அதை உலகின் பிற பகுதிகள் புறக்கணித்து வந்தன. இங்கிலாந்து மக்களுக்கு, அந்நாட்டின் உரைநடை வீரகாப்பியங்களும் காதல் கவிதைகளும் தெரிந்திருக்குமானால், அவற்றை இங்கிலாந்தின் மக்கள் போற்றி இருப்பார்களானால், உலக இலக்கிய வரலாற்றிலேயே மாபெரும் மாறுதலை அவர்கள் செய்திருப்பார்கள். ஆனால், இந்த ஐஸ்லாந்து மக்கள் ஒரு சிறு இனமக்களாக எங்கோ ஒரு மூலையில் புயல்காற்று வீசும் கடல்களினால் சூழப்பட்டுத் தனித்து

வாழ்ந்தனர். அக்காலத்திய இங்கிலாந்தும் ஜெர்மனியும், இத்தாலிய பிரஞ்சு நாடுகளினுல் கைப்பற்றப்பட்டன. அதன் விளைவாக ஐரோப்பா முழுவதும் ஒரே வகையான சமயப் பண்பாடு நிலவியதைப் போன்று, இவ்விலக்கியங்களும் ஒரே வகையான பண்பாட்டைப் பரப்பி வந்தன. நார்ட்டிக்கு இன மக்களின் நகைச்சுவையும், கவிதையும் சாசர் (Chaucer) காலத்திலும் ஷேக்ஸ்பியர் காலத்திலும் மீண்டும் புத்துயிர்ப்புற்றன. அதனுல் இலத்தீன் இலக்கிய வடிவங்களில் புதியதொரு ஆற்றல் வேகமாகப் பாய்ந்து ஓடியது. இப் புதிய ஆற்றல் அவற்றைப் புதுமையும் செழிப்பும் மிக்க இலக்கியங்களாக மாற்றியமைத்தன.

இடைக்கால இங்கிலாந்து கலைகளிலும், கைத்தொழில்களிலும், செல்வத்திலும் நாகரிகப் பண்பாட்டிலும், நகைச் சுவையிலும் முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்தது. இடைக்கால ஐரோப்பாவின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும், இங்கிலாந்து நல்லதொரு அமைதியையும் இன்ப வாழ்வையும் இக்காலத்தில் பெற்றிருந்தமையே இத்தகைய முன்னேற்றத்திற்கு உரிய காரணமாகும். ஆங்கிலச் சாக்சானியர் ஆட்சிக் காலத்தில் அடிக்கடி நடைபெற்றுவந்த படையெடுப்புகளை எல்லாம், இங்கிலாந்தில் பிரஞ்சுமொழி பேசிய அரசர்கள், நடைபெருமல் தடுத்து நிறுத்தினர். மேலும் ஸ்டீபன்சு என்னும் அரசரின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு, ஐரோப்பிய நிலமானியப்படை முறையின் பண்பாக விளங்கிய தனிப்பட்டோரின் போர்கள் அடியோடு நிறுத்தப்பட்டன. இங்கிலாந்தில் ஒரு நிலப்பிரபு மற்ருெரு நிலப்பிரபுவினை எதிர்த்துப் போரிடுவதற்குரிய உரிமையைப் பெற்றிருக்கவில்லை. மேலும், அவர்கள் மானியங்கள் வழங்குவதன் மூலம், தங்கள் சார்பில் அரசருக்குப் பணிபுரியுமாறு அமர்த்தப்பட்ட மாவீரர்கள், நிலப்பிரபுக்களின் தனிப்பட்ட போர்களில் கலந்து போரிடுவதற்கு அனுமதிக்கப்படாததோடு, அரசரை எதிர்த்து நிலப்பிரபுக்கள் போரிடுகின்றபொழுதும் அம்மாவீரர்கள் நிலப்பிரபுக்களுக்கு உதவிபுரிய அனுமதிக்கப்படவில்லை.

நிலமானியப்படை முறைப் பணிக்காக மாவீரர்களை உதவி புரியுமாறு அழைக்கின்ற வழக்கு, மெல்ல மெல்லக் குறைந்து கொண்டு வந்தது. அரசர்கள் போரில் ஈடுபடுகின்ற பொழுதும் கூட மாவீரர்களை அழைத்துப் போரிடுமாறு ஏவுகின்ற முறை மெல்ல மெல்ல மறையலாயிற்று. அயல் நாட்டினரான மாண்பு மிக்க இரண்டாம் எட்வர்டு நிலமானியப் படைமுறை வழக்கப்படி

நாற்பது நாட்களுக்கு மட்டும் வெளியூர்களில் பயன்படுத்த வேண்டும் என்னும் கட்டுப்பாடுடைய படைவீரர்களை அவர் பயன்படுத்த விரும்பவில்லை. அதற்குமாறாக, நிலையான ஒரு படையை அமைத்து, அதைக்கொண்டு அக்கியுட்டெய்ன் (Aquitaine) அல்லது அதற்கும் அப்பாலுள்ள நிலப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்கு விரும்பினார். எனவே, முதலாம் ஹென்றி முதன்முதலாகத் தொடங்கிய புதிய முறையினை இவர் சிறிது விரிவுபடுத்தினார். அதாவது நிலப்பிரபுக்களும் மத குருமார்களும் அரசருக்குச் செய்யவேண்டிய போர்ப்பணிக்காக மாவீரர்களுக்கு மானியங்கள் வழங்குவதற்குப் பதிலாக அரசருக்கு நேராகவே ஸ்கூட்டேஜ் (Scutage) எனப்படுகின்ற படைத்தொழில் மாற்றுப் பணத்தை வரியாகச் செலுத்துமாறு செய்தார். அப்பொருளைக் கொண்டு அவர் நிலையான ஒரு படையினைக் கட்டிக்காக்க விரும்பினார். அந்தப் பொருளைக் கொண்டு ஆங்கிலேயக் கூலிப்படையையோ, அயல்நாட்டு கூலிப் படையையோ தேவைப்படுகிறபோது பயன்படுத்திக்கொள்ள அரசர் விரும்பினார்.

இதனால் இரண்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்திலும் அவருடைய பிள்ளைகளின் ஆட்சிக் காலத்திலும் குதிரையின்மீது அமர்ந்து போரிடும் பயிற்சி பெற்றிருந்த மாவீரர்கள் தங்கள் வாழ்நாளில் என்றுமே ஒரு முற்றுகையையோ, ஒரு போர்க் களத்தையோ காணமுடியாதவர்களானார்கள். அதனால், நாள் தோறும் அமைதியான வாழ்வை நடத்துவதிலும், வேளாண்மைத் தொழிலில் பெரிதும் ஈடுபடுவதிலுமே அவர்கள் ஆர்வங் கொண்டனர். அவர்கள் எப்போதும் தம்முடைய கண்காணிப் பிற்குரிய பண்ணை நிலத்தின் வருவாயை மிகுதிப்படுத்துவதற் குரிய வழிவகைகளைப் பற்றியே சிந்திக்கலாயினர். தங்கள் வயல்களில் வேலை செய்கின்ற உட்குடிகள் ஒழுங்காக வேலை செய்கின்றனரா என்பதை வயல்களைச் சுற்றித் தங்கள் நண்பர் களோடும் மேலாட்களோடும் சென்று பார்த்து வருவதிலும், தலைப்பக்கத்தில் உள்ள தனையில் செந்நிறக் கோதுமையை விதைக்குமாறு மேலாட்களுக்கு கட்டளையிடுவதிலும் அவர்கள் தங்கள் காலத்தைக் கழித்து வந்தனர். இவ்வாறு சிறப்பு மிக்க ஆங்கிலேயரான நாட்டுப்புறப் பண்பாளராக மாவீரர்கள் மாறிக்கொண்டிருந்தனர்.

இக்காரணங்களினால் ஸ்டீபன் ஆட்சிக் காலத்தின் சிறப் பியல்பாக அமைந்திருந்த எண்ணற்ற காவல் கற்கோட்டைகள் படிப்படியாக மேனர் பண்ணை மாளிகைகளாக மாற்றப்

பட்டன. இம்மேனர்பண்ணை மாளிகைகள் பிளாண்டா ஜெனட்டு அரசமரபினரின் ஆட்சிக் காலத்திற்குரிய சிறப்பு இயல் பாகும். இரண்டாம் ஹென்றி, அரசரின் அனுமதியைப் பெருமல் கட்டப்பட்ட காவற் கோட்டைகளை இடித்து எறிந்ததன் மூலம் கல்லினுல் அமைக்கப்பட்ட மேனர் பண்ணை மாளிகைகள் கட்டும் இயக்கம் விரிவுப்படுத்தப்பட்டது. அத்துடன் இரண் டாம் ஹென்றி புதிதாகக் காவற் கோட்டைகளைக் கட்டு வதற்கு அனுமதி தராமை இந்த இயக்கத்திற்குப் பெரிதும் நன்மையாயிற்று. காற்ரேட்டமற்ற விறைப்பான சில அறை களுக்குப் பதிலாக, கல்லினுல் உயர்ந்த கூரைகளையுடைய பெரிய மன்றங்கள் கட்டப்பட்டன. அவை பெரிதும் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் காணப்படுகின்ற உணவுக் கூடத்தைப் போன்று இருந்தன. அவை ஆங்கில டேனிஷ் தேனர்கள் மரங்களினுல் அமைத்துவந்த பெரிய மன்றங்களின் நேரடியான வழித் தோன்றல்களாகும். அவற்றின் முன்னுல் ஒரு பகுதியில் கட்டடங்களால் ஓரளவிற்குச் சூழப்பெற்ற முற்றம் காணப்படுகின்றது. அந்த முற்றத்தைச் சுற்றிச் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. மேனர் மாளிகைக்கு உள்ளே நுழை வதற்கு இந்த முற்றத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும். இந்த மேனர் மாளிகை பெரும்பாலும் அகழிகளை உடையதாக அமைக்கப்பட்டிருந்தன. அவ்வகழிகள் மேனர் மாளிகைகளுக் குப்பாதுகாப்பு அளிக்கும் அரண்களாக இருந்தன. மக்கள் கூட்டத்தின் தாக்குதல்களிலிருந்தும், குதிரைப்படை வீரர் களின் தாக்குதல்களிலிருந்தும் தற்காத்துக்கொள்வதற்கேற்ற வகையில் அவை கட்டப்பட்டிருந்தன. ஆனுல், அவை காவல் கற்கோட்டைகளைப்போன்று, முற்றுகையிடப்பட்டாலும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையனவாக அமைக்கப்படவில்லை. பிளாண்டாஜெனட் அரசமரபினர் காலத்து மேனர் பண்ணை மாளிகைகளைக் கட்டிய மக்கள் எப்போதும் படைக்கலன் தாங் கிய அயலவர்களிடையே வாழ்ந்து வந்தனர். அப் படைக்கலன் ஏந்திய அயலவர்கள் எப்போதும் சிறிது தூண்டப்பட்டாலே கொடுஞ்செயல் புரிபவர்களாக இருந்தனர். ஆனுல், அவர்கள் எப்போதும் போரிலே மும்முரமாக ஈடுபடும் கருத்துடையவர் களாக இருந்திலர். நிலத்தின் பயனை அமைதியாகவும் தற்காப் புடனும் அனுபவித்து இன்புறுவதும், அமைதிக்குரிய கலைகளை யும் கைத்தொழில்களையும் போற்றி வளர்த்தலுமே அவர் களுடைய தலையாய விருப்பமாக இருந்துவந்தது.

அன்றைய இங்கிலாந்தை உண்மையில் எண்ணற்ற வகை களும் தரங்களுமுடைய மேனர் பண்ணைமாளிகைகளும், மன்றங்

களும் அணிசெய்தன. வாழ்க்கையில் வளம் பெற்ற பெருங்குடி மக்கள் வாழ்ந்த மாளிகைகளையும் மன்றங்களையுமே முன்பு நான் விளக்கினேன். ஆனால் அவற்றுள் சில இடைக்காலத்தில் மிக எளிய குடில்களாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், டியூடர் கால இங்கிலாந்தில் பெருங்குடி மக்களுடைய மன்றங்களாக இருந்தவை சில இன்னும் களஞ்சியங்களாகவும், மிகப்பல பண்ணை வீடுகளாகவும் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

ஆங்கிலேய மாவீரர்கள் சாசர் காலம் வரையிலும், அதற்குப் பிறகும் ஸ்காட்லாந்திலும், பிரான்சிலும், அதற்கப்பாலுள்ள வேறு பல நாடுகளிலும் போரிடுவதற்குத் தங்களைத் தாங்களே கூலிப் படையினராகப் போரிடச் சென்றனர். ஆனால், அவர்கள் போர்ச்செயல்களில் ஈடுபடுகின்ற பொழுதுதான் வீரர்களாக விளங்கினர். எனவே போர் முடிந்தவுடன் அவர்கள் அமைதி தவழும் தங்களுடைய நாட்டுப்புறத்து இருந்த இல்லங்களுக்குத் திரும்பிச் சென்றனர். மற்றவர்கள் கோட்ட நீதிமன்றங்களுக்கும் அல்லது மாவட்ட வழக்குகளையும், நிகழ்ச்சிகளையும் கவனிப்பதற்காக அல்லாமல் வேறு எதற்காகவும் தங்கள் பண்ணைகளை விட்டு வெளியே செல்லுவதில்லை. வீரதீரச்செயல்களில் பெரிதும் ஈடுபாடு உடையவர்களாகவும், வெளிப்பகட்டிலும், பெருமிதத்திலும் ஆர்வம் கொண்டவர்களாகவும் இருந்த மாவீரர்கள் சிலர், பிரான்சில் இருந்து இங்கிலாந்திற்குப் புதிதாக வந்த வீரப்பெருந்தகைமை மரபின் பண்புகள் நிறைந்த வீர விளையாட்டுப் போட்டிகளிலும், சூதாட்டங்களிலும், காதல் களியாட்டங்களிலும் தங்கள் காலத்தைக் கழித்து வந்தனர். அவர்கள் உண்மையான போர்களில் ஈடுபட்டு, தங்கள் ஆற்றலையும் வீரத்தையும் வெளிப்படுத்தி, பேரும் புகழும் பெறுவதற்குப் பதிலாக இவ்வீர விளையாட்டுகளிலும், காதல் களியாட்டங்களிலும் ஈடுபடுவதைப் பொழுது போக்காகக் கொண்டிருந்தனர்.

இத்தகைய நிலை குறைந்தது இங்கிலாந்தின் தெற்கு மாவட்டங்களிலும் மத்திய மாவட்டங்களிலும் ஆகிலும் இருந்திருக்க வேண்டும். ஆனால், வெல்ஷ் எல்லைப் பகுதியிலும், ஸ்காட்டிய எல்லைப் பகுதியிலும் நிலவிய சமூக நிலை மிகவும் கடுகடுப்பு வாய்ந்ததாக வளர்ந்து கொண்டிருந்தது. அங்கு உயர்ந்த காவல் கற்கோட்டைகளில் எல்லைப்புறத்துத் தலைவர்களான பிரபுக்கள் வாழ்ந்து வந்தனர். அப்பிரபுக்களின் படைவீரர்கள் (Marcher Lords) எப்பொழுதும் அடையாளக் குறிக் காட்டும் ஒளியைக் கூர்ந்து நோக்கியவண்ணமே இருந்து வந்தனர். அதைப் போன்றே தங்கள் இனத்தில் கொள்ளையடிப்பதற்கு எதிரிகள்

வருகின்றனரா என்று கூர்ந்து கவனித்து வந்தனர். இத்தகைய வெல்ஷிய, ஸ்காட்டிய எல்லைப் பிரபுக்கள்தான், பிளாண்ட்டா ஜெனட்டுஅரசர் காலத்து உண்டான அரசியல் குழப்பங்களை அடக்குவதற்கு வீரர்களை அனுப்பிவைத்தனர். இம்முறையில் போலி நிலமானியப் படைமுறைப் போரான ரோசாப்பூ அணிந்து போரிட்ட போர் நடந்தபொழுது தங்கள் வீரர்களை அவர் அனுப்பிவைத்தனர்.

உண்மையில் ஆங்கிலேய நாட்டுப்புற பெருங்குடி மக்கள் நில மானியப் படைமுறையாலும், வீரவுணர்வாலும் தோன்றி வளர்ந்ததன் விளைவாகக் குறிப்பிடத்தக்க ஒரு பெரும் விளைவு உண்டாயிற்று. நார்மானியர் படையெடுப்புக்குப் பிறகு இந் நாட்டில் மூத்த மகனுக்கே தாய உரிமை என்னும் விதி நிலவுரி மைக்கும் மேற்கொள்ளப்பட்டது. ஏனெனில், ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட மானியம் அவருடைய பல்வேறு பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுக்காமல் காப்பாற்றபடுவதற்காகவும், மேலும் அவ்வாறு பகிர்ந்து கொடுத்தால் பிரபுவிற்குச் செய்யவேண்டிய படைத்துறைப் பணியில் இடர்பாடு உண்டாகும் என்று கருதிய காரணத்தாலும் இவ்வாறு மூத்த மகனுக்கே தாய உரிமை என்னும் விதியை உறுதியாகக் கடைபிடிக்கலாயினர். சாக்சா னியர் காலத்தில், பண்ணைகள் ஒவ்வொன்றும் அப்பண்ணை குத்தகைக்காரருடைய பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப் பட்டது. பிளாண்ட்டாஜெனட்டு அரச மரபினர் காலத்துப் பண்ணை நிலங்கள் அல்லது மானியங்கள் பொதுவாக மூத்த மகனுக்கே உரிய மரபுவழிச் சொத்தாயிற்று. எனவே, இளைய பிள்ளைகள் மேனர் பண்ணையின் குழந்தைகளாக வளர்க்கப் பட்டார்கள். மேலும், அவர்களுடைய செல்வத்தையும் நல் வாழ் வினையும் அவர்களே தேடிக்கொள்ளுமாறு கைவிடப்பட்டனர். இதன் விளைவாக ஆங்கிலேய தேசிய இனத்தில் துணிகரச் செயலாற்றம், வீரவுணர்வும், உலகைச் சுற்றித் திரிந்து புது வாழ்வை அமைத்துக்கொள்ள விரும்பும் அவாவும் மக்களிடையே பெருகலாயின. மேலும், ஜெர்மனி அல்லது பிரான்சில் இருந்தது போல் இல்லாமல் இந்நாட்டு மக்களுள் ஒருவகுப்பினர் பிற வகுப் பினரோடு நெருங்கிப் பழகி ஒன்றாகச் சேர்ந்து வாழும் மக்க ளாகச் சிறப்புற்றனர். இங்கிலாந்தின் உயர் வகுப்பினர் என்றுமே ஒரு வரையறுக்கப்பட்ட சாதியினராக இருந்ததில்லை. ஆனால் ஐரோப்பாவின் பிரபுக்கள் தங்கள் வகுப்பினர்களுக்குள்ளேயே பெண் கொடுத்தும் பெண்கொண்டும் வந்ததோடு வாணிகர் களையும் கடல்கடந்த அயல்நாட்டு வாணிகத்தையும் இழித்தும், பழித்தும் வந்தனர். ஆனால், இங்கிலாந்தின் பிரபுக்கள் இதற்கு

முற்றிலும் மாறாக இருந்தனர். இங்கிலாந்தின் வரலாறு இதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு வழியைப் பின்பற்றியது. மூத்த மகனுக்கே தாய உரிமை உரியதென்னும் வழக்காறு இதற்குரிய காரணங்களுள் முதன்மையானதாகும். இவ்வழக்காறு நில மானியப் படை முறைத் தேவையை ஒழுங்குபடுத்துவதற்காகத் தோன்றியதேயாகும். நாளடைவில் நிலமானியப் படைமுறை அமைப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முயன்றுகொண்டிருந்த இங்கிலாந்தின் நிலச் சட்டத்தில் இவ்வழக்காறு ஒரு பகுதியாயிற்று.

அக்காலத்தில் ஓய்வு மிக்க வகுப்பினர் இங்கிலாந்தில் புதிதாகத் தோன்றிப் பெருகிக் கொண்டிருந்தனர். நாகரிகத்தில் உயர்நிலை வளர்ச்சியில், இது முக்கியமான ஒரு படிநிலையாகும். இன்றைய நியூசிலாந்தில் எத்துணை மக்கள் இருப்பார்களோ அத்துணை பேர்தான் அக்காலத்திய இங்கிலாந்தில் இருந்தனர். அச்சிறு தொகையினருள் மிகப் பேரளவினர் வறியவர்களாகவே இருந்துவந்தனர். எனவே, அம்மக்கள் சமுதாயத்துள் ஓய்வு மிகுந்த வகுப்பினரை நாம் எதிர்பார்க்க முடியது. மேலும், நில மானியப் படைமுறை அமைப்பு, போரிடுவதற்கென்றே ஒரு தனிப்பட்ட வகுப்பினரைத் தோற்றுவித்தது. அவர்கள் நிலத்தினைப் பயிரிடும் குடியானவர்களின் உழைப்பை உறிஞ்சி வாழ்ந்து வந்தனர். ஆனால், இப்போது இந்நாட்டில் நிறுவப் பட்ட முடியாட்சி நாட்டிலே போரிடுவதை அடியோடு நிறுத்திக் கொண்டமையால், போருக்கென்றே, வாழ்ந்து வந்த வகுப்பினரான மாவீரர்கள் தங்களுடைய போர்த் தொழிலைச் செய்வதற்கு வாய்ப்பற்றவர்களாக இருந்தனர். எனவே, போரிடும் பணிக்குத் தங்களை ஆயத்தம் செய்து கொள்வதிலே இம்மாவீரர்கள் செலவழித்த காலமும் பொருளும் ஓய்வுக்கு வழங்கப்பட்ட அறக்கட்டளையாக மாறியது. பிளாண்ட்டாஜெனட்டு மேனர் மாளிகைகளில் அமைதியால் கட்டுண்டு வாழ்ந்த மாவீரர்களுக்குப் பொழுதைப் போக்குவதே பெருந் தொல்லையாக இருந்தது. பொழுதைப் போக்குவதற்காகவே, அவர்கள் பல்வேறு முறைகளைக் கடைப்பிடிக்கலாயினர். தங்களுடைய விருப்பத்திற்கும், ஆர்வத்திற்கும் ஏற்பக் குடித்தும், போட்டிகளிலும், விளையாட்டுக்களிலும் கலந்து கொண்டும், பந்தயங்களில் ஈடுபட்டும் வந்தனர். இசை பயில்வதிலும், கல்வி கற்பதிலும், கலைகளைச் சுவைத்து மகிழ்வதிலும் அவர்கள் ஈடுபடலாயினர். தொல்பழங்கால சாக்சானியர் காலத்தில், காடுகளில் வேட்டையாடுவது தேனர்களுக்கு உரிய கடமையாக இருந்துவந்தது. இப்போது வேலையில்லாத மாவீரர்களின் பொழுது போக்கிற்காக வேட்டை ஆடுதல் ஒரு கலை

யாக மேற்கொள்ளப்பட்டது. விளையாட்டுகள் அருகிப் போன மையாலும், தரிசு நிலங்கள் கிடைப்பதற்கு அருமையாகிவிட்ட காரணத்தினாலும் தங்களுடைய கருத்தைச் செலுத்துவதற்குரிய (வேட்டையாடுவதற்குரிய) காட்டு நிலத்தைக் காப்பதற்காகத் தங்களுக்கு மேலே உள்ள அரசரிடத்தும் தங்களுக்குக் கீழே உள்ள உழவர்களிடத்தும் மாவீரர்கள் ஓயாது போராடிக்கொண்டே இருந்தனர். மேனர் பண்ணை வேளாண்மை முறையினால் அவர்களுக்குச் செல்வம் மேலும் மேலும் பெருகிக் கொண்டே வந்தது. மக்கள் தொகை பெருகிக் கொண்டிருந்த காரணத்தினாலும், உழவு செய்யப்படும் நிலத்தின் அளவு மிகுதிப்பட்டுக் கொண்டிருந்த காரணத்தினாலும், மூத்த மகனுக்கே தாய உரிமை என்னும் சட்டத்தைக் கடைப்பிடித்தமையால் இளைய சகோதரர்களுக்கு மேனர் பண்ணைகளில் உரிமையில்லாமல் போன காரணத்தினாலும் இவர்கள் நாளடைவில் பெரும் செல்வர்களாகச் சீரும் சிறப்பும் பெற்றனர். எனவே, அவர்கள் தங்களிடத்துத் தேவைக்கு மிகுதியாக இருந்த பொருளை, வாழ்க்கை வசதிகளுக்கும் இன்பவாழ்வுக்குரிய சொகுசு மிக்க பொருள்களுக்கும், தாங்கள் வாழ்கின்ற மாளிகைகளை அலங்கரிப்பதற்கும் செலவழித்தனர். தங்களுடைய மேனர் பண்ணைகளில் உள்ள மன்றங்களைக் கலைகளைக் கொண்டு அலங்கரிப்பதற்கும், பாணர்களின் இசையை வளர்ப்பதற்கும் தாங்கள் பெற்ற செல்வத்தை மாவீரர்கள் பயன்படுத்தினர். இவ்வாறு புதிது புதிதாக ஆயிரம் வழிகளில் நாகரிகமற்ற காலத்தில், தங்கள் வகுப்பினர் பெற்ற ஆதாயத்தைக் கொண்டு, மனித வாழ்க்கையை விரிந்ததும் அழகு மிக்க ஒன்றாகவும் மாற்றுவதில் அவர்கள் முனைந்து இருந்தனர். இவ்வாறே செல்வவளம் மிக்க மடாலய முதல்வர்களும் பாதிரிமார்களும் செய்து வந்தனர். நிலமானியப் படைமுறை வகுப்பினரிடையே செல்வம் குவிந்தமையால் அவர்கள் சொகுசு மிக்க இன்ப வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை நாடி அலைந்தனர். அதனால், நாட்டிலே புதிய ஆங்கிலேயப் பட்டணங்களும், உற்பத்தி செய்வதிலும் உள்நாட்டு வாணிகத்திலும், கடல் கடந்த வெளிநாட்டு வாணிகத்திலும் ஈடுபட்டுச் சிறப்புற்ற புதிய நடுத்தர வகுப்பினரும் தோன்றலாயினர். நிலமானியப் படைமுறை அமைப்பிலும், மேனர் பண்ணைமுறை அமைப்பிலும் செல்வம் சமநிலையற்ற பங்கீட்டு முறையினால் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அதனால் செல்வம் பண்ணையார்களிடமே சென்று குவிந்தது. அச்செல்வத்தால் இடைக்கால இங்கிலாந்தில், நாகரிக வாழ்வின் சிறப்புமிக்க கலைகள் நன்கு போற்றி வளர்க்கப்படுவதற்குரிய சூழ்நிலை உருவாயிற்று. இத்தகைய கடுமையான சமுதாய ஏற்பாடுகளினாலும், நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறந்ததொரு அமைதியான இன்ப

வாழ்வை அரசர் அளித்தமையாலும், இங்கிலாந்தில் மக்கள் வாழ்க்கை நாகரிகம் அடைந்தது மட்டுமல்லாமல், கலைகளில் கருத்தைச் செலுத்தும் சிறந்த நிலையும் அமைந்தது[1] எனலாம்.

மேனர் பண்ணைகளின் நிலமானியப் படைமுறை அமைப்பினைக் குடியானவர்களின் கண்கொண்டு ஆராயவேண்டும். குடியானவரைப் பொறுத்தவரையில் சிறிதும் அம்முறை கலப்பற்ற நன்மையாக அமையவில்லை. ஆனால், சிறப்புரிமை பெற்ற வருப்பினரான பொதுமக்களுக்கும் குருமார்களுக்கும் பெரும் நன்மை பயப்பதாக அம்முறை அமைக்கப்பட்டிருந்தது. அவர்களுக்குப் பேராதரவு தரவேண்டுமென்ற நோக்கத்தோடு வகுக்கப்பட்டதாகவே மேனர் பண்ணைமுறை இருந்து வந்தமை இங்குக் குறிப்பிடத் தக்கது.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேய மேனர் பண்ணைகளில் இருந்த தனியுரிமை நிலக்கிழார்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைந்த அளவினதாகவே இருந்தது. பழைய மேனர் பண்ணைமுறை இடையிலே மறைந்தொழிந்த நிலையில் தான் தனியுரிமை நிலக்கிழார்களுக்கு நல்ல காலம் உண்டாயிற்று எனலாம். மேலும், இக்காலத்து நிலமானியப் படைமுறைப் பொருளாதாரநிலை இங்கிலாந்தில் நன்கு வேரூன்றி நிலவியிருந்தமையால் அது வேளாளர்களுக்கு நன்மை பயக்க முடியவில்லை. இவ்விரு முறைகளும் அஞ்சுவின அரசர் காலத்து, முழுவலிமையும், பேராற்றலும் உடையனவாக இருந்து வந்தமை, வேளாளர்களின் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் தடையாகவே இருந்தது. டூம்ஸ்டே பதிவேடு (Domes day records) எனப்படும் நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேட்டில் பொறிக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்குப்படி அன்றைய இங்கிலாந்தின் மக்களுள் ஒன்பது விழுக்காடே அடிமைகள் இருந்ததாகத் தெரியவருகிறது. இவ்வடிமைகள் மெல்ல மெல்ல உட்குடிகள் நிலைக்கு உயர்ந்து, தங்கள் வாழ்க்கையை ஓரளவுக்குச் செம்மைபடுத்திக் கொண்டனர். ஆனால், தனியுரிமையாளர்கள் குறிப்பிடத்தக்க அளவிற்குப் பெருகியதாகத் தெரியவில்லை. மேனர் பண்ணைகளையும் மேனர் பண்ணைகளில் கிடைத்த பயனாகிய விளை பொருள்களையும் பிரபுக்களும், உட்குடிகளும் தங்களுக்குள்ளே பகிர்ந்து கொண்டனர்.

[1] செல்வருக்குரிய இன்பவாழ்க்கைப் பொருள்களையே, இடைக்கால அயல்நாட்டு வாணிகம் பெரிதும் வழங்கிவந்தது. ஏழை மக்களுக்குத் தேவையான உணவு, மரச்சாமான்கள், உடை முதலியன உள்நாட்டில் இருந்த கிராமங்களில் உற்பத்தி செய்யப்பட்டுவந்தன. தற்காலத்துத் தோன்றிய தொழிற்புரட்சிதான் முதன்முதலாகப் பொது மக்களின் தேவையை நிறைவேற்றும் வகையில் பேரளவில் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் அவைகளை மக்களிடத்துக் கொண்டு சென்று வழங்குவதற்கும் உரிய வழிவகைகளை வகுத்துத்தந்தது.

அடிமை ஊழியர் அல்லது உட்குடிகள் அக்குடியில் பிறந்த காரணத்தினலேயே நிலத்தை உழவேண்டும் அல்லது நிலத்தினை நம்பியே வாழவேண்டுமென்ற அவலநிலைக்கு ஆளாயினர். இவ்வாறு அவர்கள் நிலத்தோடு பிணைக்கப்படுவதுதான் அவர்களுடைய மரபுரிமையாக இருந்து வந்தது. ஒருவர் கையிலிருந்து மற்ருெருவர் கைக்கு பண்ணையொன்று மாற்றப்படுமானல், அந்தப் பண்ணையில் வேலை செய்து வந்த உட்குடிகளும், அடிமை ஊழியர்களும்அவர்தம் குடும்பங்களோடு புதிய பிரபுவிடம் வேலை செய்வதற்காக விலைக்கு விற்கப்பட்டனர். அந்த உட்குடிகளுக்குள் ஒருவர் தம்முடைய மகளுக்குத் திருமணம் செய்வதற்குக் கூட அவர் பிரபுவினுடைய அனுமதியைப் பெறவேண்டும். அவ்வனுமதியைப் பெறுவதற்கு அவர் பெரும் தண்டத்தொகை செலுத்தவேண்டும். அந்த உட்குடிகளுள் யாராகிலும் இறப்பார்களானல் அவ்வுட்குடி மகன், இறந்து போனமைக்குரிய தண்டத் தொகைக்கு (Heriot) மாற்றுக அவருடைய மிகச் சிறந்த விலங்கு (பெரும்பாலும் அது அவருடைய ஒரே பசுவாக இருக்கலாம்) அந்த மேனர் பண்ணையின் பிரபுவினல் கைப்பற்றப்படும். மேலும், உட்குடிகள் ஒரு பண்ணையிலிருந்து மற்ருெரு பண்ணைக்குக் குடிபெயர்ந்து செல்ல முடியாது. அதைப்போன்றே, அவர்கள் விருப்பப்படி தங்கள் பிரபுவிடம் தாங்கள் வேலை செய்ய முடியாது என்று கூறும் உரிமையும் அற்றவர்களாக இருந்தனர். அவர்கள் வேலை நிறுத்தம் செய்யவும் உரிமையற்றவர்களாக இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஓர் ஆண்டில் எத்துணை நாட்கள் வேலை செய்ய முடியுமோ அத்துணை நாட்கள் அவர்கள் தம்முடைய பிரபுவினுடைய பண்ணையில் கூலியின்றி வேலை செய்தாக வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர். அவ்வாறு வேலை செய்கின்றபோது தங்களிடம் உள்ள எருதுகளைக் கொண்டுவந்து, அவற்றை ஏரில் பூட்டி அந்த நிலங்களை அவர்கள் உழவேண்டும். பெரும்பாலும் அவர்களிடம் ஓர் எருதுக்குமேல் இல்லாமல் இருந்தால், தங்கள் எருதைக் கொண்டுவந்து பண்ணைப் பிரபுவினுடைய எருதோடு பூட்டி, அவர்கள் நிலத்தினை உழுது வந்தனர். உட்குடிகளின் இத்தகைய தொண்டினல்தான், மேனர் பண்ணைகளைச் சார்ந்த பிரபுக்களின் பண்ணைகளில் உழவுத் தொழில் நடைபெறலாயிற்று. இவ்வேலைகளுக்காக ஒரு சிறு காசும் பிரபுக்களால் கூலியாகக் கொடுக்கப்படவில்லை என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. எனவே இப்பிரபுக்கள் இலவசமாகவே உட்குடிகளின் உழைப்பைப் பெற்றுத் தங்கள் பண்ணைகளின் வேலைகளை நன்முறையில் செய்துமுடித்தனர். பிரபுவினல் அமர்த்தப்பட்டிருந்த மேலாள் வேலைசெய்யவிரும்பாத உட்குடிகளைக் கருத்தாகக் கண்காணித்து வந்தான். அவ்வாறு அவன் கண்காணிக்கவில்லையென்ருல்,

நிலத்தினை ஒரு சால் உழுதவுடன், அந்த உட்குடிகள் வேலை செய்யாது அரை மணி நேரம் வாளா உட்கார்ந்துவிடுவார்கள் என்று அவன் அஞ்சினன்.

இவ்வகையில் உட்குடிகள் பாதியளவிற்கு அடிமைகளாகவே இருந்து வந்தனர். ஆனல் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நிலங்களை அவர்கள் பெற்றிருந்தார்கள். தங்கள் பிரபு ஓராண்டில் எந்நாட்களில் தங்களை வேலைக்கு அழைக்கவில்லையோ, தங்கள் எருதுகளை இழுத்துச் செல்லவில்லையோ, அந்நாட்களில் இந்த உட்குடிகள் தங்கள் நிலங்களை உழுது பயிரிட்டனர். மேலும் ஊர்ப்புறத்தே இருந்த புல்வெளியினைப் பயன்படுத்திக் கொள்வதற்கும், அதில் கிடைக்கின்றவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கும், உட்குடிகள் உரிமை பெற்றிருந்தனர். அதைப் போன்றே ஊருக்குப் புறத்தேயிருந்த காட்டு நிலத்திலும், தரிசு நிலத்திலும், பன்றிகளையும் பெண் வாத்துகளையும் மேய்ப்பதற்குரிய உரிமையையும் அவர்கள் பெற்றிருந்தனர்.

எவ்வாறு அவர்கள் இவ்வுரிமையைப் பெற்றனர்? 'சட்டத்தின் முன் சமத்துவம்' என்கின்ற சிறப்புரிமையை அவர்கள் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. மிகப் பிற்காலத்தில் ஆட்சி புரிந்த ஜான் அரசர் காலத்திய மாபெரும் பட்டயத்தில் 'தனியுரிமையாளர்களுக்கு' வழங்கப்பட்ட காப்புரிமைகளும் அவர்களுக்குப் பயன் தரவில்லை. அரசரின் முறைமன்றங்களில், இவர்கள் தங்கள் பிரபுவின் மீது வழக்குத் தொடுக்க முடியாதவர்களாக இருந்தனர். ஆனல், இத்தகைய தவருன வழியில் தாங்கள் துன்புறுத்தப்படாமல் காப்பாற்றப்படுதற்கு உரிய இருவகைக் காப்புகளை இவர்கள் உரிமையாகப் பெற்றிருந்தனர். முதலாவதாக, இவர்களிடமிருந்து இவர்கள் விருப்பத்திற்கு மாருக உழைப்பைப் பெறுவதைப் பிரபுவும், பிரபுவினுடைய கையாளான மேலாளும் தங்களுக்கு நன்மை தராது என்பதை நன்கு அறிந்திருந்தனர். இதனல் அவர்கள் தங்கள் நிலத்தை உழுது வாழுகின்ற பண்ணையிலிருந்து வேறு பண்ணைகளுக்கு ஓடிப்போக வேண்டுமென்ற எண்ணமில்லாமல் அங்கேயே நிலையாகத் தங்கி வாழ்ந்தனர். இந்தக் கருத்தினை மனத்தில் கொண்டுதான் பிரபுக்களும் அவர்களுடைய மேலாட்களும் அவர்களிடத்து ஓரளவுக்கு விட்டுக்கொடுக்கும் தாராள மனப்பான்மை உடையவர்களாக இருந்தனர். உட்குடிகள் ஒரு பண்ணையைவிட்டு வெளியேறி விடுவார்களானல், அவர்களுக்குப் பதிலாக வேறு ஓர் உட்குடியை அந்தப் பண்ணையில் கொண்டுவந்து குடியேற்றுவது மிகவும் அரியதொரு செயலாக இருந்துவந்தது. ஆனல் ரோமா

புரியிலும், வில்பர் போஸ் என்றபெரியார் தோன்றுவதற்கு முன்பு மேற்கிந்தியத் தீவுகளிலும், வாழ்நாள் முழுவதும் உழைத்துக் களைத்துப்போன அடிமைகளை மிக எளிதிலேயே மாற்றிப் புதிதாக அடிமைகளை அமர்த்தி வந்ததைப் போன்ற முறையை இங்கிலாந்தில் கையாள முடியவில்லை. மேலும் கசையடி கொடுப்பதன் மூலம் உட்குடிகளிடத்து வேலை வாங்குவது மிகவும் அரியசெயலாகவே இங்குக் கருதப்பட்டது. இரண்டாவதாக, மேனர் பண்ணைகளின் வழக்காறு எனப்படுகின்ற சட்ட முறைக்கு உட்பட்ட கிராமிய வழக்காற்று நெறி என்ற காப்பினை உட்குடிகள் பெற்றிருந்தனர். இவ் வழக்காற்று மரபு பிரபுக்களின் மன்றங்களில் கூடிய மேனர் பண்ணை நீதிமன்றங்களின் மூலம் நாட்டிலே செயற்படுத்தப்பட்டு வந்தது. இந்த மேனர் பண்ணை நீதி மன்றங்கள் சில சமயங்களில் நெடுங்காலமாகச் சிறப்புற்று விளங்கும் ஓக் எனப்படும் சீமை ஆலமரங்களின் அடியில் கூடி உட்குடிகளின் உரிமையை நாட்டுக்கு அறிவித்ததாகத் தெரிகிறது. உட்குடிகளுக்கு மேனர் பண்ணை நீதி மன்றங்கள் எந்த அளவுக்குப் பாதுகாப்பு அளித்தன என்பது ஆராயத்தக்க செய்தியாகும். அந் நீதிமன்றம் அரசருடையது அன்று. உட்குடிகளின் பிரபுக்களால் நடத்தப்பட்ட நீதி மன்றங்களே யாகும். ஆனால், திறந்த நீதி மன்றங்களாக, எல்லோரும் கலந்து கொள்ளக்கூடிய நீதி மன்றங்களாக, அவை இருந்துவந்தமை சிறப்புமிக்க செய்தியாகும். ஆனால், குடியுரிமை உடைய மக்களைப் போன்றவர்கள் நீதிபதிகளாகவும், தீர்வை விதிப்பவர்களாகவும் பணிசெய்யும் பேற்றினைப் பெற்றிருந்தனர். அப்பேற்றினை உட்குடிகள் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் பிரபுவோ, அவருடைய மேலாட்களோ உட்குடிகளுக்கும், பிரபுக்களுக்குமிடையே தோன்றும் வழக்குகளை ஆராய்ந்து, சொற்களினால் தீர்வு சொல்வதைக் காட்டிலும் இம்முறை ஓரளவுக்குச் சிறந்த தொன்றேயாகும். கொடுமையும், கொள்ளையிடும் நோக்கமும் உடைய பிரபுக்களுக்கு எதிராக, உட்குடிகளுக்குத் தரப்பட்ட இப் பாதுகாப்பு மிகமிகச் சிறியதாகவே இருந்தது. அக்காலத்துப் பிரபுக்கள் ஈவு, இரக்கம் இன்றிப் பல பெரும் கொடுஞ் செயல்களைச் செய்துவந்தார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஸ்டீபன் அரசர் காலத்து பிரபுக்களின் கொடுஞ் செயல்கள் கோரதாண்டவம் புரிந்ததைக் காண்கிறோம். ஆனால், பிளாண்டாஜெனட் அரச மரபினர் ஆட்சிக் காலத்து ஆங்கிலேயக் குடியானவர்கள் பிரெஞ்சு நாட்டு சழாக்குரே (Jacquerie) எனப்பட்ட குடியானவர்களின் இழிநிலைக்குத் தாழ்த்தப் படவில்லை யென்பதுமட்டும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

அந்தப் பழைய முறையை நாம் தற்கால அளவுகோல்களைக் கொண்டோ கருத்தளவில் நின்றோ ஆராய்ந்து முடிவுக்கு வருதல் பொருந்தாது. தொல் பழங்கால வெறியுணர்வும், கொடிய பழக்கவழக்கங்களும் கொண்டிருந்த மக்களிடையே மேனர் பண்ணை முறைகள் நிலைத்த தன்மையையும், உறுதி மனப் பான்மையையும், நீதி நெறி முறையையும் வளர்த்துவந்தன. அக் காலத்து மேனர் பண்ணை முறையினால் விளைந்த மாபெரும் நன்மை இஃதேயாகும். அக்காலத்திய நீதிமன்றங்கள் பொது மக்களின் கருத்தையும் அவர்களுடைய வழக்காற்று நெறியையும் கருத்தில் கொண்டு, வழக்குகளை விசாரித்து நீதி வழங்கியதைக் காண்கிறோம். பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் அந்நீதிமன்றங் களில் எழுதப்பெற்ற பதிவேடுகளை அவை போற்றிக் காப் பாற்றி வருவதைக் காணுகின்றோம். ஆங்கிலேய நாட்டுக் கிராமத் தின் அன்றாட வாழ்வில் வழக்கமான ஒரு பகுதியாக அம் மன்றங் கள் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது ஆகும். அம்முறை ஒழுங்காகச் செயல்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், ஒவ்வொரு குடியானவனும் தன்னுடைய பிரபுவுக்குத் தான் செய்யவேண்டிய தொண்டுகள் எவையென்பதை நன்கு அறிந்திருந்தான். மேலும், தான் செய்யவேண்டியதற்கு அதிகமாக மேலாட்கள் தம்மிடம் வேலை வாங்க மாட்டார்கள் என்பதை அன்றைய உழவர்கள் நன்கறிந்திருந்தனர். அக்காலத்தில் குடியானவர் கள் வேலை நிறுத்தம் செய்யமுடியாது என்பது உண்மைதான். அதைப் போன்றே தன்னுடைய பிரபுவின் இசைவினைப் பெறாது ஓர் உழவன் ஒரு பண்ணையிலிருந்து மற்றொரு பண்ணைக்குச் சட்டப்படி வெளியேற முடியாது என்பதும் உண்மையாகும். ஆனால், அவனுடைய பிரபுவும் தம்முடைய விருப்பப்படி ஓர் உழவனுக்குரிய பண்ணையிலிருந்து காலி செய்யமுடியாது என் பதும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். ஆனால், கொள்கை யளவில் இது எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். மேனர் நீதிமன்றங்களின் வழக்காற்று நெறிப்படி, ஒரு தடவை குடியானவர்கள் செலுத்தவேண்டிய வரித் தொகையும் தொண்டும் வரையறுக்கப் படுமானால் அதற்குப் பிறகு ஒரு பிரபு தம் விருப்பப்படி அவற்றை மேலும் அதிகப்படுத்த முடியாது என்பதும் நாம் நினைவுகூரத்தக்க செய்தியாகும்.

இங்கிலாந்தில் இம்முறை நன்கு தழைத்தோங்கிய நூற்றாண்டு களில் மெல்லமெல்லச் செல்வம் குவிந்து ஓங்கியதைக் காணுகின் றோம். இக்காலத்தில் பயிரிடப்பட்ட நிலங்கள் பெருகிக் கொண்டு வந்தன. ஆடுமாடுகளுக்கு நோய்கள் உண்டாகி அவை இறந்து கொண்டிருந்தபோதிலும், பயிரிடப்படும் நிலங்கள் பன்மடங்

காக பெருகிக் கொண்டு வந்தன. அடிக்கடி பஞ்சமும், கொடிய கொள்ளை நோய்களும் நாட்டிலே தோன்றிக் கொண்டிருந்த போதிலும் மக்கள் தொகை பெருகிக் கொண்டிருந்தது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்நோய்களுக்கும், பஞ்சத்திற்குமிடையே நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேடு கணித்த காலத்தில் (1086) பன்னிரண்டரை அல்லது பதினைந்து லட்சம் மக்கள் தொகை கொண்டிருந்த இங்கிலாந்தில், 1349-ஆம் ஆண்டு பெரும் கொள்ளைநோய் தற்காலிகமாக மக்கள் தொகையைக் கட்டுப் படுத்தியும், சற்றேறக்குறைய 40 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை உடையதாக இங்கிலாந்து இருந்தமை இங்கு ஆராயத் தக்கது ஆகும்.

ஆனால் செழிப்புமிக்க காலத்திலும் மேனர் பண்ணையில் வேலை செய்வது என்பது மிகக் கடுமையான செயலாக இருந்தது. ஆங்கிலச்சாக்சானியர் காலத்திய கிராமியக் காட்டுமிராண்டித் தனத்திலிருந்து மகிழ்ச்சி மிக்க பிற்கால ஆங்கிலேய உழவர் களின் சமுதாய நிலையை உட்குடிகள் மிகமிகப் பையவே அடைய முடிந்தது. உறுதியற்ற மனப்போக்கும், அச்சமும் உடையவர் களாக இருந்த அவர்கள் கிறித்துவ சமுதாய மூட நம்பிக்கை களிலும், கிரேக்க, ரோமானிய சமுதாயத்தின் மூட நம்பிக்கை களிலும், நினைவுக்கெட்டாத பழங் கதைகளிலும், மாயமந்திரங் களிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். அதனால் அவ்வூழிய அடிமைகள் வறுமையால் வாடி வதங்கிய 'வாடிய பயிர்களாக' இருந்தனர். அவர்கள் சில சமயங்களில் தங்கள் பிரபுவையோ அதிகாரியையோ ஏமாற்றியும் கொலை செய்தும் வந்தனர். அவர்கள் பற்றுக்குறையினால் திறமையற்றவர்களாகவும், ஊழ் வினையில் அசைக்கமுடியாத நம்பிக்கை உடையவர்களாகவும் இருந்து வந்தனர். மேலும் அவர்கள் ஊர்களில்பிளேக் நோயாலும் நன்முறையில் பேணிக்காக்கப்படாத ஆடுமாடுகளுக்கு உண்டான நோய்களாலும் அவர்கள் அல்லலுற்றனர். அவர்கள் வாழ்ந்த நிலப் பகுதி சேறும் சகதியுமாக இருந்ததோடு, நாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவில் சதுப்பு நிலமாக இருந்து வந்தது. ஊருக்குள்ளே காடு பெருகிக் கொண்டிருந்தது; வயல் களிலே களைகள் செழித்து வளர்ந்து கொண்டிருந்தன. இவற்றைப் பற்றி அடிக்கடி பிரபுக்களின் மேலாட்கள் தங்கள் பிரபுக்களிடத்து முறையிட்டு வந்தனர். அக் காலத்து, திறந்த-வயல் வேளாண்மை முறையில் அறிவியல் முறைக்கு ஒவ்வாத, பயிரிடும் முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. பல நூற்றாண்டு களாக நிலங்களை உழுது உழுது பயிரிட்டு வந்தமையால், அவை வளமற்றனவாக, சாரம் குறைந்தனவாக மாறிக் கொண்டிருக்

தன. அதனால் ஓர் ஏக்கருக்குக் கிடைக்கக்கூடிய விளைச்சல் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்தது.

நம் காலத்தில் காணப்படுவதைப்போன்று அந்தக் காலத்திய இங்கிலாந்து நாட்டின் தட்ப வெட்ப நிலையும் இவ்வளவிற்கேனும் தீமையுடையதாக இருந்திருக்கவேண்டும். மழையோடு கூடிய கோடை காலத்தை அடுத்து, அடிக்கடி பயிர்கள் பாழாகப் போவது இயல்பாகிக் கொண்டு இருந்தது. கிராமங்களில் அடிக்கடி பஞ்சம் தோன்றியதைத் தடுப்பதற்கு வழியே இல்லாமலிருந்தது. நார்மானிய அரசர்களின் பரந்த காடுகளும், அவர்களுடைய கீழாட்களின் தனிப்பட்ட காடுகளும் போதிய சட்டதிட்டங்களினால் காக்கப்பட்டு வந்த காரணத்தினால், விலங்கு இறைச்சி கூட சாக்சானியர் காலத்தில் கிடைத்ததைப் போல் இக்காலத்திய மக்களுக்குக் கிடைக்கவில்லை. வனப் பறவைகள், போற்றி வளர்க்கப்பட்ட புறாக்கள், முயல்கள், மற்றும் பல விலங்குகள் இங்கிலாந்து நாட்டில் பேரளவில் இருந்து வந்தனவாகும். அவை உழவர்கள் அரும்பாடுபட்டுப் பயிரிட்ட பயிர்களை அழித்து அடிக்கடி தீங்கிழைத்து வந்தன. சட்டதிட்டங்களும், கடுமையான தண்டனைகளும் விதிக்கப்பட்டிருந்த போதிலும், அப் பறவைகளும், விலங்குகளும் நய வஞ்சகமாகப் பிடிக்கப்பட்டு அவற்றைச் சமைத்து மக்கள் உண்ண வேண்டிய நெருக்கடிக்கு ஆளானார்கள். ஆடுமாடுகளின் இறைச்சியை ஏழைக் குடியானவர்கள் உண்ணக்கூடிய நிலையில் இல்லை. ஆனால், மேனர் பண்ணைகளில் பிரஞ்சு மொழி பேசிய பிரபுக்களின் உணவுப் பட்டியலில் மாட்டிறைச்சியும், ஆட்டிறைச்சியும் சிறப்பிடம் பெற்றிருந்தன. சிறு குடிசைகளில் பன்றி இறைச்சி பொதுவாக உண்ணப்பட்டதைக் காண்கிறோம். சதுப்பு நில வட்டாரங்களில் மீன்பிடிப்போரும் பறவை வேட்டையாடுவோரும், விலங்குகளையும் நீர்க்கோழிகளையும் மலிவாகவும் நல்லதாகவும் வழங்கி வந்தனர்.

சேறும் சகதியுமான பாட்டைகளின் இறுதிப் பகுதியில் மேனர் பண்ணைகளின் எல்லையோரங்களில் ஆங்கிலேயரின் சிற்றூர்கள் இருந்தன. அங்கு வாழ்நாள் முழுவதும் உட்குடிகள் அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீருடன் வாழ வேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் அறிவாற்றலாலும், உடல் உரத்தாலும் பிரித்து ஒதுக்கப்பட்ட ஒரு பகுதியினராக மேனர் பண்ணைகளைச் சார்ந்து தனித்து வாழ நேர்ந்தது. இவ்வாறு இடைக்கால இங்கிலாந்தில் கிராமப்புறங்கள் காட்சியளித்தன. ஒவ்வொரு சிற்றூரும் தனித்தனியே ஒதுக்கிடங்களில் அமைக்கப்

பட்டதன் சிறப்புமிக்க விளைவாக ஒவ்வோர் ஊரும் தத்தமக்குத் தேவையான பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. அதனால் உட்குடிகளுக்கு இடையே கைத்திறன் வாய்ந்த தொழிலாளிகள் பலர் இருந்தனர். ஆனால், அவர்கள் அனைவரும் உழவுத் தொழில் செய்து வந்தார்கள் என்று சொல்லுவதற்கு இல்லை. கம்மியர்கள் அல்லது தச்சர்கள் தங்கள் கிராமத்தின் குடிசைகளையும், தங்களுக்குத் தேவையான மரச்சாமான்களையும், தங்கள் பண்ணைகளுக்கு வேண்டிய மரச்சாமான்களையும் செய்துவந்தனர். அன்று ஒரு கிராமத்தில் வாழ்ந்த மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கூரை வேய்வோனும், தச்சுவேலை செய்வோனும் செய்து கொடுத்தனர். மகளிரும் குழந்தைகளும், நூல் நூற்போர்களாக இருந்தனர். இவ்வாறு வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொல் பழங்காலம் முதல் இங்கிலாந்தில் முரட்டுத் துணிகளை நெய்யும் நெசவுத் தொழில் கிராமங்களில் தழைத்தோங்கியிருந்தன. இதன் விளைவாக, இங்கிலாந்தில் மிக மென்மையான துகில்கள் பிற்காலத்திலே நெய்யப்படுவதற்கு வேண்டிய அறிவும், திறனும் பெற்ற மக்கள் சிறப்புற்று விளங்க முடிந்தது. குடியானவர்களின் உடைகளுள் பெரும்பான்மை திருத்தமற்ற முறையில் பதப்படுத்தப்பட்ட தோல்களாகவே இருந்து வந்தன. பக்கத்தில் வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்த ஊர்களில் கூடிய சந்தைகளில் கிராமப்புற மக்களுக்குத் தேவையான பிற பொருள்கள் அனைத்தும் கிடைத்துவந்தன. மேனர் பண்ணைகளில் வாழ்ந்து வந்த பெரும் குடிமக்களே இவற்றையெல்லாம் பேரூர்களுக்கொண்டு சென்று, தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கி வந்தனர். அவர்கள் அயல்நாட்டு வாணிகத்தையும் பெரு நகரங்களில் நடைபெற்ற உள்நாட்டு வாணிகத்தையும் போற்றி வளர்த்தனர் எனலாம்.

இரண்டாம் ஹென்றி ஆட்சிக் காலத்தில் பிரபுக்கள் வாழ்ந்த இடம் மடாலயமாகவோ, காவல் கோட்டையாகவோ, மேனர் மாளிகையாகவோ இருந்தாலும், அது கற்களினால் கட்டப்பட்ட சிறந்த காவல் பொருந்திய அமைப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், உட்குடிகளுடைய குடிசைகள் குச்சிகளாலும், கீற்றுக்களாலும் கட்டப்பட்டனவாய், புகைப்போக்கிகளோ, கண்ணாடிகளோ இல்லாதவனவாய் இருந்து வந்தன. அவற்றின் வாயிலில் வாசற்படியும், கதவுகளும் இருந்ததில்லை. அவற்றின் வாயில் ஒரு துவாரம்போல் இருக்கும். அந்தத் துவாரத்தை ஒரு படலைக்கொண்டு

அவர்கள் மூடி வந்தனர். அந்தப் படலை அவர்கள் சுதவாகக் கருதினர். அக்குடிசைகளைச் செதுக்கப்பட்ட பெரும் மரத் துண்டுகளைத் தொடர்ச்சியாகப் அருகருகே நடுவதன் மூலம் அமைத்து வந்தனர். இம்முறை பழைய சாக்சானியருடைய காலத்தில் குடிசைகள் அமைக்கப்பட்ட முறையாகும். சிற்சில சமயங்களில் காட்டு மரங்களும் போதிய அளவுக்குக் கிடைக்கா மற்போனால், அரைப் பகுதி மரங்களைப் பயன்படுத்திச் சுவர்களை அமைத்து, அதற்குமேல் ஓக் மரச்சட்டத்தில் களிமண்ணைப் பூசி தங்கள் வீடுகளின் சுவர்களை அந்த ஏழை மக்கள் அமைத்துக் கொண்டனர். செங்கற்களைச் சூளையிட்டுப் பயன்படுத்தும் கலை, இங்கிலாந்தில் ரோமானியர்களோடு மறைந்துபோயிற்று. இக் காலம் வரை அக்கலை மீண்டும் புத்துயிர்ப்புப் பெறவில்லை. அந்த எளிய மக்களின் குடிசைகளின் கூரைகள் புல்லினாலும் ஓலைகளினாலும் வேயப்பட்டிருந்தன. அந்தக் குடிசைகளைச் சுற்றிச் சிறிய பழத்தோட்டம் அல்லது ஒரு சிறுதோட்டம் இருந்தது. அதைச் சுற்றி ஒரு சிறு தாழ்வாரம் அமைக்கப்பட் டிருந்தது. அந்தக் குடிசைகள் ஊரின் தெருக்களை நோக்கியமைக் கப்பட்டிருந்தபோதிலும், உட்குடிகளின் இல்லங்களாகிய இக் குடிசைகள் மிக எளிய, வறிய காட்சி அளித்தமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

இங்கிலாந்தின் வடக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும், மற்றும் பேரளவில் காடுகள் செழித்து வளர்ந்திருந்த மாவட்டங் களிலும் ஆறுக்கு மேற்படாத விளைச்சல் நிலக் குடியிருப்புகளைச் சூழ்ந்து, குடிசைகள் பலவற்றைக் கொண்ட சிறிய சேரிகள் காணப்பட்டன. ஒவ்வொரு சிறிய குடியிருப்பும் அதனுடைய நிலங்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்க்கப்பட்ட ஒரு திடலாக அமைக்கப்பட்டிருந்தன. சில சமயங்களில் நிலையான வேலி யடைப்புகளையுடையனவாகவும் இருந்தன. ஆனால், நடு இங்கி லாந்தும் கிழக்கு இங்கிலாந்தின் மாவட்டங்களும் வேளாண்மை யில் தலைசிறந்த பகுதிகளாகும். அப்பகுதிகளில் ஒரு பெரிய ஊர் என்றால், அவ்வூரில் இருநூற்றுக்கும் ஐந்நூற்றுக்கும் உட் பட்ட மக்களே வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஊரின் வட்டாரத் திருச்சபைகளைச் சுற்றி வாழ்ந்தனர் அல்லது மேனர் மாளிகையை அடுத்த திறந்த வயல்வெளிகளின் நடுப்பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இந்தத் 'திறந்த' அல்லது 'பொது வயல் வெளிகள்' இன்றைய இங்கிலாந்தின் கிராமப்புறப் பகுதிகளில் காணப்படு வதைப் போன்று, சதுரங்க விளையாட்டுப் பலகையைப் போல சிறுசிறு துண்டுகளாக வேலியடைப்புகளை யுடையனவாக அக் காலத்தில் இல்லை. அவை நூற்றுக்கணக்கான சிறு தனி

களாகப் பகுக்கப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் அரை அல்லது ஓர் ஏக்கர் பரப்புள்ளதாகப் புல்நிறைந்த விரிப்புகள் அல்லது ஒற்றையடிப் பாதைகளால் பிரிக்கப்பட்டிருந்தன. அவை தற்காலத்தில் பிரித்துக் கொடுக்கப்பட்ட பல பகுதிகளைக் கொண்டதொரு தொகுதியைப் போன்று தோற்ற மளித்திருக்க லாம். ஆனால் அவை மிகப் பேரளவில் அமைக்கப்பட்டதாகவும், தானியங்கள் நிறைந்ததாகவும் இருந்திருக்கவேண்டும்.


ஒவ்வொரு தளையும் தனிப்பட்ட ஒவ்வொருவரின் உடைமை யாக இருந்துவந்தது. இவை ஒவ்வொன்றும் வேளாண்மை முறைக்கும், நிலவுடைமை உரிமைக்கும் உரிய அடிப்படை மூல அளவாக இருந்துவந்தன. ஒவ்வோர் உழவனும் தனக்குரிய நிலங்களை மிகப் பரந்த வயல்வெளியில் இங்குமங்கும் சிறுசிறு தளைகளாகப் பெற்றிருந்தான். ஒவ்வோர் உட்குடியும், குடியுரிமை யாளரும் ஒரு தளையிலிருந்து எத்துணை தளைகளை வேண்டு மானாலும் தம்முடைய உடைமையாகப் பெற்று உழுது பயிரிடக் கூடிய உரிமையுடைவர்களாக இருந்தார்கள். பொதுவாக முப்பது தளைகளைக் கொண்ட விளைநிலம் அவர்களுடைய உடைமை யாக இருந்துவந்தன. பிரபுக்குரிய நிலப்பகுதிகள் ஊர் வயல் வெளிக்கு அப்பால்'தனித்திருந்தாலும், அவற்றின் சில பகுதிகள் உழவர்களுடைய உடைமைகளுக்கிடையே சிதறுண்டு கிடந்தன.

'பொது நிலங்களில்' பயிரிடுவதைப்பற்றி அந்த ஊர் மக்கள் எத்தகைய கொள்கைகளைக் கொண்டிருந்தனரோ, அந்தக் கொள்கைகளுக்குப் பிரபுக்களும், குடியுரிமையாளர்களும், உட் குடிகளும் கடமைப்பட்டு, தங்கள் நிலங்களை உழுது பயிரிட வேண்டியவர்களாக இருந்தனர். பொது வயல் வெளிகளில் தனியாரின் தளைகள் பெரும் பகுதியாக இருந்து வந்தன. நடை முறையில் அக்காலத்து மூன்று வகையான வயல்கள் இருந்து வந்தனவாகத் தெரிகிறது. அவை ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு மனிதனும் குறைந்த அளவிலோ, பேரளவிலோ பங்குடையவனாக இருந்து வந்தான். இம்மூன்று வகையான வயல்களுள் யாதா கிலும் ஒன்று, ஆண்டுதோறும் பயிரிடப்படாமல் கால் நடைகள் மேய்வதற்குரிய புல்வெளியாக விடப்பட்டன. மற்றொன்றில் கோதுமையும், ரை (Rye) என்னும் தானியமும் பயிரிடப்பட்டு வந்தன. மூன்றாவது வகையான வயலில் ஓட்ஸ் அல்லது பார்லி பயிரிடப்பட்டு வந்தன. வயல்களில் பயிர் ஏறியிருக்கின்ற காலத்தில் அவற்றைச் சுற்றிலும் வேலியடைப்புகள் இடப்பட் டிருந்தன. இத்தகைய முறையினால் வேளாண்மைத் தொழில் முறையின் முன்னேற்றமும் தனியாரின் துணிவுமிக்க முயற்சி

களும் பெரிதும் தடைப்படுத்தப்பட்டன. எனினும், இங்கிலாந்தின் மிகச் சிறந்த உழவுத்தொழில் வளம்மிக்க மாவட்டங்களில், நார்மானியரின் படையெடுப்புக் காலம் முதல் மாபெரும் வேளாண்மைத் தொழில் மாற்றங்கள் உண்டான பதினெட்டாம் நூற்ருண்டு வரையில் இத்தகைய முறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கதாகும். பிரபுவினுடைய தனிப்பட்ட தொகுதியாகவிருந்த வயல்களில்மட்டும், முக்கியமான மாற்றங்கள் செய்யப்பட்டுவந்தன. அவற்றைத் தனித்த முறையில் வேலியிட்டு அடைக்கவும் அல்லது குத்தகை உடைமையாளர்களிடம் தனித் தொகுதிகளாக ஒப்படைப்பதற்கும் ஏற்ற வகையில் அவை அடக்கமாக அமைக்கப்பட்டிருந்தன.

இவ் 'வயல்' வெளிகளுக்கு அப்பால் புல்வெளி அமைந்திருந்தது. அப் புல்வெளி பெரிதும் ஓடைகளையும், ஆறுகளையும் அடுத்தே அமைந்திருந்தது. அப் புல்வெளிகள் பொதுவான உலர்ந்த புல்வெளியாகவும், பொது மேய்ச்சல் நிலங்களாகவும் இருந்து வந்தன. மேனர் முறை மன்றங்களின் ஆராயப்பட்ட விதிகளுக்கும் செயல்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டவனவாக அவை இருந்தன. அந்த ஓடைகளுக்குப் புறத்தே தாண்டிச் சென்ருல், நீரினல் ஓட்டப்பெறும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருந்ததைக் காணலாம். அவை பொதுவாகப் பிரபுக்களுக்கு உரியனவாக இருந்தன. அந்த இயந்திரங்களில் உட்குடிகளின் தானியங்களைக் கொண்டு வருமாறு செய்து, அவற்றை மிக உயர்ந்த கூலிக்குப் பிரபுக்கள் அரைத்துக் கொடுத்தனர். அவர்கள் தானியங்களை அரைப்பதற்கு அதிகப்படியாகக் கூலிகொடுத்து பிரபுக்களுடைய இயந்திரங்களில் அரைக்கவேண்டிய நெருக்கடியிருந்த காரணத்திஞல், பல உட்குடிகள் தங்கள் வீடுகளிலேயே கை இயந்திரங்களை வைத்துத் தானியங்களை அரைத்தனர். ஆனல் அவ்வாறு உட்குடிகள் தாங்களே தங்கள் தானியங்களை அரைத்துக்கொள்வது மிகமிக அரிய ஒரு தனியுரிமையாக இருந்துவந்தது. இடக்கால இங்கிலாந்தில் காற்றினல் இயக்கப்படும் இயந்திரங்கள் மிக அருகிய வழக்கில் இருந்ததாகத் தெரிகிறது. முதலாம் ரிச்சர்டின் (Richard I) சிலுவைப் போருக்குப் பிறகு முதன் முதலாகக் கிழக்குப் பகுதியிலிருந்துதான் இங்கிலாந்திற்கு அவ் வியந்திரங்கள் வந்தன என்பர்.

இவற்றிலிருந்து அச் சமுதாயம் பொதுவுடைமைச் சமுதாய மன்று என்பது புலனுகின்றது. மேலும் மிகப் பொருத்தமான பொருளில் காண்போமாஞல் அது 'கிராமிய சமுதாயமாகவும்'




படம் 12

கௌஸ்டெட்டு : மேனர் பண்ணைமுறை அமைப்பில் இங்கிலாந்துக் கிராமம் பற்றிய ஒரு கற்பனைப் படம்

இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், இக்காலத்தில் தனிநிலைக் கொள்கை தகர்த்தெறியப் பட்டதைக் காண்கிறோம். மேனர் பண்ணைகளில் தனி உடைமையாளர்கள் பலர் இருந்துவந்தனர். அவர்களுள் பிரபுக்களும் குறிப்பிடத் தக்கவராவர். அவர்கள் தங்களுக்கு இடையே கொண்டிருந்த உறவிலும், செல்வத்திலும் சமநிலையற்றவர்களாக இருந்துவந்தமை இங்குக் குறிப்பிடத்தக்க செய்தியாகும். ஆனால், அவர்களை மிக நெருக்கமாகப் பிணைத்த உரிமைகளாலும், கூட்டுறவு முறையாலும், அவர்கள் பண்டைய வழக்காற்று முறையின்படி ஒருவர் மற்றொருவரை எதிர்பார்த்து வாழ வேண்டியிருந்தது. கொடுக்கல் வாங்கல் தொடர்பு, உழைப்பின் நெகழ்ச்சி ஆகியவை விதி விலக்குகளே ஒழிய பின்பற்றப்பட்ட விதிகளல்ல என்பது கருதத்தக்கதாகும்.

அவ்வயல் வெளிகளுக்கு அப்பால் நெடுந்தொலைவில் 'தரிசு' நிலம் இருந்தது. அத் தரிசு நிலத்தில் சேறும், புதர்க் காடுகளும் நிறைந்து கண்ணுக்கு எட்டிய தொலைவுக்கு ஒரே காடாகக் காட்சி அளித்தது. அந்தக் காலத்தில் இருந்ததைவிட அரைப் பங்குக்கு மேலாக இன்றும் இங்கிலாந்தைக் காடுகள் மறைத்துக் கொண்டிருப்பதைக் காணலாம். அக் காட்டின் இதயமான இருளினைச் சாக்சானிய முன்னோடிகள் கிழித்து எறிந்து உள்ளே நுழைந்தனர். அவர்கள் தங்களுடைய கோடாரிகளையும் வேறு பிற கருவிகளையும் கொண்டு காடு வெட்டி, நிலம் திருத்தி நாடாக்கினர். அப்பகுதியில் எங்கும் தங்கள் குடிசைகளையும் சிறு சிறு குடில்களையும் அமைத்து அவர்கள் வாழ்ந்தனர். இங்கிலாந்தின் வரலாற்றுக் கால முழுவதிலும் அடுத்தடுத்துத் தோன்றிய ஒவ்வொரு தலைமுறையினரும் புதர்களையும், சதுப்பு நிலங்களையும், காட்டு நிலப்பகுதியையும் அழித்து அழித்து, புதிய புதிய சேரிகளையும் குடியிருப்புகளையும் அமைத்து வந்தனர். இவ்வாறு கிராமங்களின் 'வயல் வெளிகள்' விரிவுபடுத்தப்பட்டும், பன் மடங்காகப் பெருக்கப்பட்டும் வந்தன. இதனால் வேட்டையாடுவதில் விருப்பம் கொண்ட அரசர்கள் தங்கள் நாட்டுப் பகுதியில் மக்கள் கவர்ந்துகொண்ட காட்டுப் பகுதியை மீண்டும் தம்மிடத்தில் ஒப்படைக்குமாறு ஒவ்வொரு காட்டின் எல்லைப் பகுதியை அடுத்து மற்றொன்றில் தொடர்ந்து வற்புறுத்தத் தொடங்கினர்கள். நாளடைவில் ஹனோவரிய அரசர்கள் காலத்து 'தரிசுநிலம்' ஒரு குடியிருப்பை மற்றொரு குடியிருப்பிலிருந்து பிரித்துக் காட்டும் அளவுக்குச் சிறிதாகச் சிதைந்ததோடு, இரண்டு மூன்று ஊர்களுக்குப் பொதுவான நிலப்பரப்பாகவும் கருதப்படும் நிலைமை அடைந்தன. இறுதியாக வேலியடைப்பு வயல் வெளிகளை மிகுதியாகக்கொண்ட பதினெட்டாம்

பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத்தில் இங்கிலாந்தில் எஞ்சியிருந்த பொதுக் காட்டு நிலம் மிக விரைவில் மறைந்துபோயிற்று. பல சமயங்களில் ஓர் ஊருக்கும் மற்றோர் ஊருக்கும் இடையேயிருந்த ஒவ்வோர் ஏக்கர் நிலமும் சதுரங்க விளையாட்டுப் பலகை போன்று சிறுசிறு தளைகளாகத் துண்டாடப்பட்டன. பட்டணக் குடியிருப்புகள் தரிசு நிலங்களையும் காட்டு நிலங்களையும் விழுங்கி நகரங்களாகச் சிறப்புறத் தொடங்கின. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தின் வானுற உயர்ந்து வளர்ந்த மரங்களின் உச்சிகளை மதிப்பிட்டு வானவெளியில் பறந்துதிரிந்த பறவைகளுள் ஒன்றாகிலும் இந்நிகழ்ச்சியைக் கண்டிருக்க இயலாது.

## இவ்வியலில் கூறப்பட்ட கருத்துகள்

ஸ்டீபன் ஆட்சிக் காலத்து உண்டான குழப்பங்களும் கலகங்களும்—மெண்டவில்லேவைச் சேர்ந்த ஜாபிரே—அராசரிகத்தின் முடிவு—அஞ்சுவின மரபைச் சார்ந்த ஹென்றி—பன்மொழி வழங்கிய இங்கிலாந்து—நாட்டுப்புறப் பெருமக்கள்—மூத்த மகனுக்கே தாய உரிமை—மேனர் பண்ணையில் ஓய்வு நேரம்—பிரபுவும் உட்குடிகளும்—மேனர் முறை மன்றங்கள்—தன் தேவை நிறைவுபெற்ற ஊர்கள்—திறந்த வயல் வெளிகள் துண்டாடப்படுதல்—ஊரின் தரிசு நிலம்.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

### இரண்டாம் பிரிவுக்குரிய பொது நூல்கள்

(பொதுவாக இடைக்காலத்திற்கு உரியன)

1, டேவிசு (Davis)
England under the Normans and Angevins.

2. விக்கர்சு (Vickers).
England in the Later Middle Ages.

3. ஸ்டப்சு (Stubbs)
Lectures and Constitutional History–(மூன்று தொகுதிகள்)

4. பொல்லாக்கும் மெயிட்லாண்டும் (Pollock and Maitland)
History of English Law (இரண்டு தொகுதிகள்)

5. மெயிட்லண்டு (Maitland)
(1) Constitutional History of England.
(2) Canon Law in the Church of England.

6. ஓல்ட்ஸ்வொர்த் (Holdsworth)
A History of English Law, தொகுதிகள் I, II. (வழக்கறிஞர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்நூலின் சட்டவியல் சார்பு குறைந்த பகுதிகள், வரலாற்று மாணவருக்குப் பெரும் பயன் தருவனவாகும்.)

7. ஓமன் (Oman)
Art of War in the Middle Ages.

8. போலண்டு (W.C. Bolland)
The General Eyre, (Cam. Press 1922).

9. ஸ்மித் (A.L. Smith)
Church and State in the Middle Ages.

10. மெரிடித்து (H.O. Meredith)
Outlines of the Economic History of England.

11. கௌல்டன் (Coulton)
(1) Social Life in Britain from the Conquest, to the Reformation.
(2) The Mediaeval Village.
(3) Five Centuries of Regligion.

12. டிரெய்ல் (பதி) Trail (Ed)
Social England, (தொகுதிகள் I, II).

13. கெர் W.P. (W.P. Ker)
English Literature, Mediaeval (Home University Library)

14. டவுட் (Tout)
Relations of France and England in the Middle Ages.

15. குயுன்னல் (Quennell)
A History of Everyday Things in England

16. பால்டுவின் (J.F. Baldwin)
The King's Council.

17. மாக் இல்வெய்ன் (Mc Ilwain)
The High Court of Parliament (Yale Univ. Press)

18. ஸ்டாவெல்லும் மார்வினும் (Stawell and Marvin)
The Making of Western Mind.

19. போலார்டு (A.F. Pollard)
Evolution of Parliament.

20. பார்னர்டு (Barnard)
Mediaeval England (ed. 1924 (H. W. C. Davis).

21. டீன்னெஸ்லி (M. Deanesly)
A History of Mediaeval Church, (1926).

முதலாம் இயலிற்குமட்டும்
மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

மேலே குறிப்பிடப்பட்ட நூற்களில் இவ்வியலுக்குத் தொடர்புடையனவற்றைப் படிக்கவும். சிறப்பாக,

1. டேவிசினுடைய (Davis)
'England' under the Normans and Angevins.

2. ஜே. எச். ரவுண்டு (J.H. Round)
Geoffrey de Mandeville, a Study of Anarchy.

3. ஹூபர்ட் ஹால் (Hubert Hall)
Court Life under the Plantagenets (reign of Henry the Second).

இயல் 2

# இரண்டாம் ஹென்றி

(தொடர்ச்சி)

1. வட இங்கிலாந்தில் சிஸ்டர்சியர்கள்
2. பெக்கட்டு
3. அரசரின் முறை மன்றங்கள்
4. பொதுச் சட்டமும் தீர்வுச் சான்றுளர் குழுவும்
5. அரசர் : இரண்டாம் ஹென்றி 1154-1189.

சென்ற அதிகாரத்தில் விளக்கப்பட்ட மேனர் பண்ணை முறையின் சில சிறப்பியல்புகள் அஞ்சுவின அரசமரபைச் சார்ந்த ஹென்றியின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு வளர்ச்சியடைந்தனவாகும். அவருடைய பேரப் பிள்ளையின் ஆட்சியில்தான் இத்தகைய வளர்ச்சியும் முன்னேற்றமும் உண்டாயிற்று. மூன்றும் ஹென்றியே இவருடைய பேரப் பிள்ளையாவார். அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் மேனர் முறை மன்றங்களில் எல்லா வகையான செயல் முறைகளையும் பதிவேடுகளில் எழுதிவைக்கும் வழக்கம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இவ்வரசரின் ஆட்சிக்காலத்தில்தான் வேளாண்மைத் தொழில் முறை பற்றிய அறிவியல் கலை நூற்களும் பண்ணைகளை மேலாட்சி புரிவதைப் பற்றிய ஆராய்ச்சி நூற்களும் மக்களிடையே புழக்கத்திற்கு

வந்தன. நிலமானியப் படைமுறையின் மாவீரர்கள் இக் காலத்தில் தங்கள் மாளிகையிலேயே தங்கி வாழும் ஓய்வுபெற்ற நிலையை அடைந்ததை முன்பு கண்டோம். அவர்கள் தங்கள் பண்ணைகளின் விவகாரங்களைப்பற்றித் தாங்களே கணக்குகள் எழுதிவைக்கத் தொடங்கினர். அரசரின் நீதிபதிகள், கோட்டத் தலைவர்கள், அரசரின் கருவூலப் பிரபுக்கள் தாங்கள் கணக்கு எழுதிவைத்த முறைகளையும், பதிவேடுகளை எழுதும் முறையையும் மாவீரர்கள் அறிந்து பின்பற்றத் தொடங்கினர். மேலும், அவர்கள் திருச்சபைப் பண்ணைகளைச் சிறப்பாக சிஸ்டர்சிய (Cistercian) மடாலயங்களைக் கண்காணித்துவந்த மேலாளர்களிடமிருந்து கணக்கு எழுதிவைக்கும் முறையைக் கேட்டறிந்தனர்.

இரண்டாம் ஹென்றியின் காலத்திலும் ஸ்டீபன் ஆட்சிக் காலத்திலும் பேரார்வத்தோடு மடாலயங்கள் நிறுவப்பட்டு, அறக்கட்டளைகள் வழங்கப்பட்டன. எனினும் அம் மடாலயங்களின் துறவிகள் நெடுங்காலம் ஒழுக்க நெறியிலும் அறிவாற்றலிலும் சிறந்தவர்களாக, மக்களுடைய வாழ்க்கை முறையை முறைப்படுத்தி நல்ல வழியில் செலுத்தக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்களாக, இருக்கவில்லை. அவர்களிடத்துத் தொடக்க காலத்தில் ஆங்கிலேய சிஸ்டர்சியர்களுக்குரியதாக இருந்துவந்த தூய்மை இயல்பு கடுமையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. ஆனால், நாளடைவில் அவர்களுடைய ஆர்வமும் ஈடுபாடும் பையப்பையக் குறைந்து போயிற்று. இவர்களைப் போன்றே அடுத்த நூற்றாண்டில் சோதரத் துறவிகளும் (Friars) தொடக்க காலத்தில் பேரார்வமும் பெரும் ஈடுபாடும் உடையவர்களாக விளங்கினர். ஆனால், காலப்போக்கில் அவர்களுடைய ஒழுக்கநெறியும், அறிவாற்றலும், தொண்டுள்ளமும், செயலாற்றும் திறனும், நாட்டுக்குப் பயன்படாமல் போனதைப் பிறகு காணலாம். இந்த மடாலயத் தலைவர்கள் பண்ணைகளைக் கண்காணிப்பதற்கு வழிவகைகளை வகுத்துத் தந்தனர். பிளமிய மக்களின் தறிகளுக்கு ஏற்ற மிக நேர்த்தியான கம்பளி நூல்களை உற்பத்திசெய்வதை இவர்கள் சிறப்பாக இங்கிலாந்து நாட்டு மக்களுக்குக் கற்றுக்கொடுத்தனர். பக்குவம் செய்யாத கம்பளிநூலினை ஏற்றுமதி செய்வதில் பிளாண்டாஜெனட் அரச மரபினரின் ஆட்சிக்கால இங்கிலாந்து 'இடைக்கால ஆஸ்திரேலியாவாகச்' சிறப்புற்று விளங்கியது எனலாம். துறவிகளே இங்கிலாந்தில் முதன் முதல் தோன்றிய சிறப்புமிக்க தரகர்களாக (Squatters) இருந்தனர். ஆழ்ந்து அகன்ற முகடுகள் நிறைந்த யார்க்ஷையர் பள்ளத்தாக்கில் சிறப்புற்று விளங்கிய மடாலயங்களே இவ்வியக்கத்தை முதன்முதலாகத் தொடங்கி வைத்தன. இவ்வியக்கம் நானூறு, ஐந்நூறு

ஆண்டுக் காலத்திற்குள்ளாக வட இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும் பயன்படுத்தப்படாது இருந்த தரிசு நிலங்களை எல்லாம், செம்மறியாடுகளை வளர்க்கும் பண்ணைகளாக மாற்றியமைத்ததைக் காணுகின்றோம். ஆனால், இம்முறை கூர்ந்து கவனிப்பதற்கோ ஆராய்ந்து பார்ப்பதற்கோ மிகமிக மந்தமான முறையாக இருந்து வந்தது எனலாம். குட்டையான ஓக் மரக் கிளைகளையெல்லாம் கொறித்துத் தின்னும் ஆட்டு மந்தைகள் காடுகளை அடியோடு அழித்தன. இவ் ஆட்டு மந்தைகளால் இங்கிலாந்தின் பிர்ச் மரங்களும் புதர்க் காடுகளும் பாழடைந்துபோயின. இந்தக் காடுகள் நினைவுக்கெட்டாத காலம் முதல் சேறும் சகதியுமாக இருந்த வட இங்கிலாந்தின் தரிசு நிலங்களில் செழிப்புற்று விளங்கிய நிலை மெல்லமெல்ல மறைந்துபோயிற்று. இதன் விளைவாக எவற்றையும் உலர்த்துகின்ற மேல் காற்றினால், வன்மையான பெரும் புல்வெளியையும் ஒருவகைப் புதர்ச் செடியையும் இன்றைக்கு நாம் காணும் நிலை உண்டாயிற்று.

இங்கிலாந்தின் சிஸ்டர்சிய துறவிகள் வேறு வகையில் செய்யக்கூடிய உதவியைக் காட்டிலும் பண்ணைகளைக் கண்காணிக்கும் முறையில் அவர்களால் இயன்ற அளவுக்கு நன்மை செய்துள்ளனர். அவர்களால் நாட்டுக்கு உண்டான நன்மை தீமைகளை எளிதிலே பிரித்து அறிந்து கூறுவது மிகவும் கடினமான செயலாகும். இத் துறவிகளின் மடங்கள், அவற்றின் அளவு கடந்த பேராசை காரணமாக, அக்காலத்தில் வாழ்ந்த மக்களால் மனமார இழித்தும் பழித்தும் பேசப்பட்டதைக் காணுகின்றோம். அந்தத் துறவிகளும் தங்கள் பேராசை காரணமாகக் கள்ளக் கையெழுத்திடுதலிலும், மக்களைக் கொடுமைப்படுத்துவதிலும், ஏமாற்று வித்தைகளிலும் ஈடுபட்டு இருந்ததாகத் தெரிகிறது. ஆனால், பண்ணையின் கணக்குகளை எழுதிவைப்பதற்கும், மற்ற நிலப்பிரபுக்களைக் காட்டிலும் விரைவில் செம்மறி ஆட்டுப் பண்ணைகளைப் பெருக்குவதற்கும் உரிய வழி வகைகளை இங்கிலாந்து மக்களுக்கு அந்தத் துறவிகள் காட்டிச் சென்றனர் என்பது மறக்க முடியாத உண்மையாகும். அறத்தைப்பற்றிக் கவலைப்படாத மக்கள் எவ்வாறாகிலும் பொருளைச் சேர்த்துக் குவித்துச் செல்வர்களாக விரும்புவதைப் போன்று, உலகப் பற்றையும் பகட்டான வாழ்க்கை முறைகளையும் முற்றிலும் துறந்துவிட்டு, துறவிகள் இத்தகைய இழிசெயல்களிலும் கொடுஞ் செயல்களிலும் ஈடுபட்டார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்வோமானால், பழியும் பாவமும் கலந்த வசைச் சொற்களையே இந்தத் தொடக்க கால சிஸ்டர்சிய துறவிகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். இத்தகைய பழியும்

பாவமும் கலந்த வசைச் சொற்களினாலேயே டியூடர் ஆட்சிக் காலத்திய சமயச் சார்பற்ற நிலப்பிரபுக்களையும், பதினெட்டாம் நூற்றாண்டில் விளங்கிய நிலப்பிரபுக்களையும் நாம் குறிப்பிட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

புதியதாக நிறுவப்பட்ட மடாலயங்களுள் பல ஆங்கிலேயப் பாதிரிமார்களின் கண்காணிப்புக்கு உட்பட்டவனவாக இருக்க வில்லை. அவை அனைத்தும் தத்தம் மடாலயத் தலைவர்களுக்கும், போப்பு ஆண்டவர்களுக்குமே அடிமைப்பட்டனவாக இருந்தன. எக்காலத்திற்கும் உரியதாக திருச்சபைக்கு வழங்கப்பட்ட ஐயுறத்தக்க சலுகைகளான உரிமையை இந்த மடங்களும் பெற்றிருந்தன. இவ்வுரிமையே இங்கிலாந்தின் மடாலயங்கள் விரைவில் அழிவதற்குரிய இறுதிக் காரணமாக அமைந்தது. ஆனால், சில மடாலயங்கள் பாதிரிமார்களின் ஆட்சி வரம்புக்குட்பட்டனவாக இருந்ததைக் காணுகின்றோம். ஆங்கிலேய மடாலயங்களின் வெறுப்புமிக்க சிக்கல்களைப்பற்றி நாம் ஆராய்ந்து ஒரு முடிவு காண்பதற்கு வேறு வகையில் உதவியாக இருப்பன சமயத் தலைவர்கள் அவ்வப்போது மடாலயங்களுக்குச்சென்று, அவற்றின் நடைமுறைகளை ஆராய்ந்து எழுதி வைத்துள்ள குறிப்புக்களேயாகும். அந்தக் குறிப்புக்களிலிருந்தும், அறிக்கைகளிலிருந்தும் இங்கிலாந்தின் மடாலயங்கள் சில பாதிரிமார்களின் ஆட்சிக்குட்பட்டு இருந்ததை நாம் அறிகிறோம்.

இதைப் பற்றி ஜிரால்டஸ் கேம்பிரேனிஸ் (Giraldus Cambrensis) என்பவர் வன்னெஞ்சத்தோடு எழுதியுள்ள 'திரு மடங்களின் ஆய்வு' (Speculum Ecclesiae) என்ற நூலில் காணப்படும் கதை ஒன்று இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு நாள் இரண்டாம் ஹென்றி வேட்டைக்குச் சென்றுவிட்டு, குதிரையின் மீது திரும்பி வந்து கொண்டிருந்தார். வின்செஸ்டரில் உள்ள செயின்ட் சுவித்தீன் (St. Swithin) என்னும் மடாலயத் துறவிகளும், அவர்களுடைய தலைவர்களும் அரசரின் முன்னால் ஓடி வந்து மண்டியிட்டு வணங்கினர். அவர்கள் கண்ணீர் விட்டுக் கொண்டே தலைமைக் குருவின் கொடுமையிலிருந்து தங்களைக் காப்பாற்றுமாறு அரசரை வேண்டினர். அவர்கள் தங்கள் தலைமைக் குருவின்மீது சுமத்திய குற்றம் என்னவென்றால், உணவு வகைகளில் இதுவரை இருந்துவந்த 13 வகையான உணவுகளில் மூன்றை அவர் குறைத்துவிட்டார் என்பதேயாகும். அம் முறையீட்டைக் கேட்ட அரசர், 'கடவுள் அருள் புரிவாராக! இந்தத் துறவிகளைப் பாருங்கள். இவர்கள் கூக்குரலிடுவதைக் கண்டு நான் இவர்களுடைய மடாலயம் தீக்கிரையாக்கப்பட்டது

போலும் என்று நினைத்தேன். ஆனல், அவர்கள் கூறிய கதை இதுதான். அவர்களுடைய உணவு வகையை மூன்ருகமட்டும் தலைமைக்குரு குறைக்காமல் போவாராஞல் அவர் அழிந்தொழிவாராக! ஏனெனில் என்னுடைய அரசாங்க விருந்துகளில் மூன்று வகைக்கு மேற்பட்ட உணவு வகைகளை நான் உண்பதே யில்லை!' இக்கதை உண்மையாகவோ, பொய்யாகவோ இருக்கலாம். ஆனல் இதைப்போன்று பல கதைகள் நகைச்சுவை மிகுந்தனவாகவும் கேலிக் கூத்தாகவும் இருந்தாலும், அக்காலத்திய மடாலயங்கள் எந்த அளவுக்குப் புனிதத் தன்மையற்றனவாக இருந்தன என்பதைப்பற்றி மக்கள் கொண்டிருந்த கருத்தினை விளக்குவதற்குப் போதிய சான்றுகளாகக் காணப்படுகின்றன. மேலும் சாசர் காலத்தில் இருந்ததைவிட ஹென்றியின் ஆட்சிக் காலத்தும், அவருடைய பிள்ளைகளின் ஆட்சிக் காலத்தும் மடாலயங்கள் மதிப்பற்றனவாக இருந்தன என்பதற்கு இவை சிறந்த சான்றுகளாகும். ஆனல், தொடக்க காலத்தில் சில மடாலயங்கள் மாபெரும் தொண்டினைச் செய்து வந்ததாகத் தெரிகிறது. ஆங்கிலேயப் பல்கலைக் கழகங்கள் தோன்றுவதற்கு முன்பு, அவை கல்வி நிலையங்களாக அரும்பெரும் பணியாற்றியதை அறிகிருேம். மேலும் சமயச் சார்பற்ற வரலாற்று ஆசிரியர்களும் எழுத்தாளர்களும் பதிப்பகத்தாரும் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தில், அவை காலவழிச் செய்திக் கோவை ஆசிரியர்களும் படி எடுப்போரும் வாழ்ந்த வீடுகளாக விளங்கின. செயின்ட் எட்மண்ட்ஸ்பரியைச் சார்ந்த மாண்புமிக்க மடாலயத் தலைவர் சாம்சனை (Samson) கார்லைல் (Carlyle) தம்முடைய நூலில் சிறப்புமிக்கத் தலைவராகப் போற்றியிருக்கின்ருர். அம் மாபெரும் மடாலயத் தலைவர், அக்காலத்தில் செயின்ட்சுவித்தீன் மடாலயத்தில் வாழ்ந்த துறவிகளின் கட்டுப்பாடற்ற வாழ்க்கையைக் கண்டார். அதனல் அவர் தம்முடைய மடாலயத் துறவிகள் ஒழுங்கையும், நேர்மையையும் கடைப்பிடித்து ஒழுகுமாறு செய்வதில் மிகவும் கண்டிப்பாகவும், கருத்தாகவும் இருந்து வந்தார் என்று தெரிகிறது. ரிச்சர்டு அரசரின் ஆட்சிக் காலத்திலும் ஜான் அரசர் ஆட்சிக் காலத்திலும் தோன்றிய எவேஷம் (Evesham) வழக்கினல் உண்டான அவதூருன கதைகளிலிருந்து மடாலயத் தலைவர்கள் தங்களுடைய எதேச்சாதிகாரத்தை எவ்வாறு மிக எளிதில் எடுத்ததற்கெல்லாம் பயன்படுத்தி வந்தார்கள் என்பதையும், அத்தகைய பெரும் பொறுப்புக்கு எவ்வாறு அவர்களுள் சிலர் தகுதியற்றவர்களாக இருந்தார்கள் என்பதையும் அறிகிருேம். ஒரு மேனர் பண்ணைக்கும் மற்ருெரு மேனர் பண்ணைக்கும் இடையே காணப்பட்ட பல திறப்பட்ட வேறுபாடுகளைப் போன்று, ஒரு மடாலயத்திற்கும் மற்ருெரு

மடாலயத்திற்கும் இடையே பல வகையான வேற்றுமைகளும் வேறுபாடுகளும் இருந்து வந்தன. எனவே குறிப்பிட்ட எக்காலத்தைப் பற்றியும் — அது நிகழ்காலமாக இருந்தாலும் சரி, அல்லது இறந்த காலமாக இருந்தாலும் சரி—இலட்சிய நோக்குடன் அதை வன்மையாகக் கண்டித்துரைப்பது மிகவும் இடர்ப்பாடு மிக்கசெயலாகும்.

இரண்டாம் ஹென்றி மடாலாய மடைப்பள்ளியில் சமைத்துப் படைக்கப்படும் உணவு வகைகள் எத்தனை தான் இருக்கவேண்டுமென்பதைப் பற்றி ஒரு முடிவுக்கு வருவதிலும், நிதித் தொடர்பான வேறு சிறப்புமிக்க சொத்துகளைப் பற்றி ஆராய்வதிலும் தாம் பதவியில் அமர்த்திய பாதிரிமார்களோடு கலந்து ஓர் உடன்பாட்டிற்கு வந்திருப்பார். ஆனல், தம்முடைய பெருமைக்குரிய நண்பரும், சான்சலருமான (Chancellor) தாமஸ் பெக்கட் (Thomas Becket) என்பவரை காண்ட்டர்பரி திருக்கோயிலின் ஆர்ச் பிஷப்பாகப் பதவியில் அமர்த்திய (1162) மாபெரும் தவற்றின் காரணமாக, இம்மடாலய பிரச்சினையில் அவர் பெரிதும் ஈடுபடவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. இப் புதிய தலைமைக்குரு அரசருடைய பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டதோடு, போப்பு ஆண்டவருக்கும் திருச்சபைக்கும் உரிய பிரதிநிதியாகவே தம்மை உலகிற்கு அறிவித்துக் கொண்டார். போராடும் இயல்பும் வழக்காடுவதற்குரிய அறிவாற்றலும் வாய்க்கப்பெற்ற பெக்கட், அரசரும், நிலப்பிரபுக்களும், வேறுபட்ட வீதத்தில் பாதிரிமார்களும் ஒன்ருகச் சேர்ந்து தம்மை எதிர்ப்பதை, தாம் தனித்து நின்று அக்கூட்டணியை எதிர்த்துப் போராடுவதில் மகிழ்ச்சியுற்ருர்.

ஆங்கிலேயத் திருச்சபையின் கருத்துக்களும், நாட்டு மக்களின் கருத்துக்களும் வேறுபாடுடையனவாக விளங்கின. ஆனல் அவை அரசரை ஆதரிப்பதில் நாட்டம் செலுத்தின. தம்முடைய வாழ்க்கையில் பெக்கெட் மூர்க்கத்தனமும், முரண்பாடு மிக்க பண்பும் உடையவராகவே காட்சி தந்தார். தீவினைப் பயனல் அடக்கியாள முடியாத மன நிலையையுடைய ஹென்றியின் கூக்குரல் நான்கு மாவீரர்களை வெறி கொண்டவர்களாக மாற்றியது. அம் மாவீரர்கள் அரசரின் அவையிலிருந்து திடீரென்று மறைந்து போயினர். அவர்கள் காண்ட்டர்பரி திருக்கோயிலுக்குச் சென்று (1170) அரசரின் பகைவரான தாமஸ் பெக்கெட்டைக் குத்திக் கொன்றனர். இத்தகைய அதிர்ச்சி உண்டாக்கும் கொடுஞ்செயலால், நாடு முழுவதும் எதிர்ப்புச் சக்திகள் ஒருங்கு திரண்டு அலை அலையாய் பெருகிக்கொண்டிருந்தன. அதன் விளை

வாக அரசு பல முக்கிய உரிமைகளை இழக்க நேர்ந்தது. அவ்வுரிமைகளைச் சீர்திருத்த இயக்கக் காலத்தில்தான் அரசு மீண்டும் பெற முடிந்தது. உயிர்த்தியாகி செயின்ட் தாமஸ் பெக்கட்டின் வழிபாட்டு நெறி மூன்று நூற்றாண்டுகளுக்குமேல் இங்கிலாந்தில் சிறப்புமிக்க வழிபாட்டு நெறியாக விளங்கியதைக் காணுகின்றோம். எண்ணற்ற மக்கள் வீடுபேறு அடைந்த புனித உயிர்த்தியாகியின் அருளைப்பெறுவதற்குக் காண்ட்டர்பரிக்குத் திருப்பயணம் செய்துவந்தனர். சாசர் எனப்படும் ஆங்கிலேய கவிஞரும் காண்ட்டர்பரிக்குச் சென்று வழிபாடு செய்து வந்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்க செய்தியாகும். பெக்கெட்டைப் பற்றி நாள்தோறும் புதிது புதிதாக தோன்றிக் கொண்டிருந்த கதைகள், இங்கிலாந்தில் யாத்திரை செய்யும் யாத்திரிகர்கள் தவறாது சென்று வரும் இடமாகக் காண்ட்டர்பரியைச் சிறப்புறச் செய்தது. இவ்வழிபாட்டு நெறி பெரிதும் மாற்றம் அடைந்து, பிற்காலத்தில் பேராற்றலும் பெருந் திறனும் வாய்ந்த ஹென்றி என்னும் மற்றோர் அரசர் இப்புனிதச் சின்ன வழிபாடு கலந்ததாக இருந்த பெக்கெட்டின் திருக்கோயிலைத் தகர்த்து (1538) தவிடுபொடியாக்கினர். மறுமலர்ச்சி இயக்கத்தின் மாணவர்களாகத் தோன்றிய சீர்திருத்தக்காரர்களால் இந்தப் புனிதச் சின்ன வழிபாட்டுக் கோயில் அழித்து ஒழிக்க வேண்டுமென்று விரும்பியதன் விளைவாக, இக்கோயில் இடித்து மண்மேடாக்கப் பட்டதாகத் தெரிகிறது. இதைவிட இக் கோயில் அரசனுடைய உரிமைக்கும், அரசனுடைய சட்டதிட்டங்களுக்கும் மேலாக மதகுருமார்களின் தனி உரிமைகள்பெற்ற வெற்றியின் பழம்பெரும் சின்னமாக இருந்து வருவதை மறுமலர்ச்சிக் காலத்திய மக்களும் மன்னரும் விரும்பவில்லை என்பதுவே உண்மையாகும்.

இறந்து போன மனிதன், குற்றம் செய்த குருமார்களின் மீது எடுத்திருந்த நடவடிக்கைகளை இரண்டாம் ஹென்றி அறிந்ததன் விளைவாக இத்தகைய கொடிய செயல் நடந்தது எனலாம். 1164-ஆம் ஆண்டு கிளாரண்டனில் கூடிய பேரவையில் நிலப்பிரபுக்களும் குருமார்களும் ஒருங்கு கூடி, அரசருக்கும் திருச்சபைக்கும் இடையேயுள்ள அதிகார வரம்பினைவரையறுத்தனர். மேலும், அரசர் குற்றம் செய்த மத குருமார்களை முதலில் பொது முறைமன்றங்களில் விசாரணை செய்து, அதற்குப் பிறகு திருச்சபை நீதிமன்றத்திற்கு அனுப்பி, தண்டனை வழங்கவேண்டுமென்ற உரிமையைப் பெற்றார். திருச்சபை நீதிமன்றத்தில் குற்றம் செய்த குருமார்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவர்கள் செய்த குற்றத்திற்காகத் தலைமைக் குருவினால் கண்டிக்கப்பட

வேண்டும். அதற்குப் பிறகு இறுதியாக அரசர்களின் அதிகாரிகள் அவர்களைப் பொது நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்து அவர்களுக்குத் தண்டனைகளும், தீர்ப்பும் அளிக்க வேண்டுமென்ற முடிவிற்கு அவர்கள் வந்தனர். இப்பேரவையில் நிறைவேற்றப் பட்ட முடிவுகளே கிளாரண்டன் சட்டங்கள் (Constitutions of Clarendon) என்பனவாகும். இச்சட்டத்தின் விதிமுறை இங்கிலாந்தின் பண்டைப் பழக்கவழக்கங்களுக்கு ஏற்றதும் பொருத்தமுடையதுமாகும் என்றும் திருச்சபை விதிகளுக்கு மாறுபட்டது அன்று என்றும் அரசர் வாதித்தார். சமய சங்கங்களில் இருக்கின்ற மக்களைப் பொது முறை மன்றங்களில் வழக்கு விசாரணைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற உரிமையை அரசர் தமக்கு வேண்டுமென்று கேட்கவில்லை.

பெரும்பாலான மக்களுக்கும் மத குருமார்களுக்கும் கூட அரசரின் இவ்வேண்டுகோள் அறிவுக்குப் பொருத்தமானதாகவும் உடன்படுவதற்குரியதாகவும் தோன்றியது. ஆனால், பெக்கெட் இதற்குத் தற்காலிகமாக உடன்பட்டார். சிறிது காலத்திற்கெல்லாம் அவர் இவ்வுடன்பாட்டை மீறி, அரசரின் விருப்பத்திற்கு மாறாக நடந்துகொண்டார். அவருடைய இணக்கமற்ற பண்பு அவருடைய உயிர்த் தியாகத்தினால் நிலைபேறுடையதாயிற்று. அவர் இறந்த பிறகு அவர் பெற்ற வெற்றியின் விளைவாகத் துறவிகளும், வட்டாரக் குருமார்களும் மட்டும் அல்லாமல் மடங்களிலும் திருச்சபைகளிலும் வேலை செய்து வந்த வேலையாட்களும், ஏராளமான ஊழியர்களும், திருச்சபை நிலையங்களில் பணிபுரிந்த சிறு அதிகாரிகளும், பிற்காலத்து ஓரளவிற்குப் படிக்கத் தெரிந்த அனைவரும், திருடினாலும், கற்பழித்தாலும், கொலை செய்தாலும் அவர்கள் செய்கின்ற முதல் குற்றத்திற்காகக் கட்டாயத் தண்டனைகள் பெறாமல் தப்பித்துக் கொண்டனர். சிறுசிறு கட்டளைகளை அரசர்களிடமிருந்து பெறுவது மிக எளிதாகப் போய்விட்டது. இழிந்த பண்புடையவர்களுக்கு இத்தகைய தனி உரிமைகளும், பாதுகாப்பும் பெறுவதில் நாட்டம் அதிகம் உண்டாயிற்று. ‘இடைக்காலத்தின் பிற் பகுதியில் காணப்பட்ட மிகக் கொடிய தீமைகளுள் திருச்சபைச் சலுகை மிக மிகத் தீமையானதாகும்’ என்பது மெயிட்லண்டு (Maitland) என்னும் அறிஞருடைய கருத்தாகும்.

ஹென்றியின் பதற்றத்தாலும், அவருடைய மாவீரர்களின் கொடிய செயலாலும் மாபெரும் குற்றங்களைச் செய்த மத குருமார்கள் பத்துத் தலைமுறைகள் தண்டனை பெறாது காப்பாற்றப் பட்டனர். எனினும், மத குருமார்களின் ஆதிக்கத் தலையீட்டிற்கு

எதிராக, பொது நீதிமன்றங்களின் அதிகார வரம்பாகிய தடையை ஹென்றி வெற்றியுடன் நிலைநாட்டி வந்தார். ஸ்டீபன் ஆட்சிக் காலத்திய அரசு ஆற்றல் அற்றுப்போயிருந்ததால் இயல்பான முறையிலும், பாராட்டத்தக்க வகையிலும் தன்னுடைய நிலையையும் மதிப்பையும் திருச்சபை நன்கு பெருக்கிக் கொண்டது. கடல் கடந்த நாட்டில் வாழ்கின்ற போப்பு ஆண்டவரின் சிறப்புமிக்க உரிமை வேண்டுகோள்களின் உதவியால் திருச்சபை நீதிமன்றம் தொடர்பில்லாத பல விவகாரங்களில் தலையிடப் போவதாக அச்சுறுத்தி வந்தது. இவ் அலையினை ஹென்றி தங்கியிருக்குமாறு செய்தார். இவர் வற்புறுத்துதலுக்காக உடன்பட்ட 'திருச்சபைச் சலுகை' கொடிய குற்ற வழக்குகளைப் பாதித்தது. அவ்வுடன்பாட்டின்படி கொடிய சூற்றங்கள் செய்த குருமார்களுக்கு அரசரால் தண்டனை விதிக்க முடியாது என்ற உரிமை கிடைத்தது. சிறிய குற்றங்களுக்கும், ஒப்பந்தங்கள் தவிர்தல், சட்டம் மீறுகை முதலிய செயல்களுக்காகக் குருமார்கள் குற்றம் சாட்டப்படுகின்ற பொழுது, அவர்கள் இங்கிலாந்தின் பொது நீதிமன்றங்களுக்கு வந்து, திருச்சபையின் உயர் அதிகாரிகள் தங்கள்மீது சாட்டியிருக்கின்ற அவதூறான குற்றச்சாட்டுகளிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டியவர்களானார்கள்.

இவை யாவற்றையும் விடத் திருச்சபை மானியங்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருள்கள் எல்லாம் பொது மக்களுக்குரிய சொத்தாக்கப்பட்டது. திருச்சபைக்கு வழங்கப்பட்ட மானியங்களைப்பற்றிய வழக்குகளை பொது முறைமன்றங்களிலேயே விசாரித்துத் தீர்ப்பு வழங்கவேண்டுமென்ற முறை பின்பற்றப்பட்டது. திருச்சபைச் சட்டங்களின்மீது பொதுமக்கள் பெற்ற இந்த வெற்றி இங்கிலாந்தின் திருச்சபை மீது போப்பு ஆண்டவர் செலுத்தி வந்த அதிகாரத்தினை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தியது எனலாம். ஆன்மீக முறைமன்றங்களில் விசாரிக்கப்பட்ட வழக்குகள், ரோமாபுரியிலுள்ள போப்பு ஆண்டவரிடத்து முறையிட்டுக்கொள்வதன்மூலம், போப்பு ஆண்டவராலேயே விசாரணை செய்து தீர்ப்புக் கூறப்படலாம் என்ற வழக்கம் இருந்து வந்தது. திருச்சபைத்தொண்டர்கள்மீது வழக்குகள் இங்கிலாந்தில் நடந்து கொண்டிருக்கின்ற பொழுது, அவ்வழக்குகளை நடைபெறாமல் தடுக்கவோ, முடிந்து விட்ட வழக்குகளை ரோமாபுரிக்குக் கொண்டு வரவோ, தம்மால் இங்கிலாந்தில் நிறுவப்பட்ட தனிப்பட்ட வழக்குமன்றத்தில் விசாரணை செய்து முடிவு கூறுமாறோ, செய்யக்கூடிய பேராற்றலைப் போப்பு ஆண்டவர் பெற்றிருந்தார். இம் முறையினை எதிர்ப்

பதற்குரிய ஆற்றலைத் திருச்சபை பெற்றிருந்தாகத் தெரிய வில்லை. ஏனெனில், இம் முறையின் சட்டப்படியான ஒழுங் கினைத் திருச்சபை ஏற்றுக் கொண்டிருந்தமையால் எதிர்க்க முடி யாது போயிற்று. ஆன்மீகத் துறைச்சார்பான செயல்களில் திருச்சபை போப்பு ஆண்டவருக்குக் கீழ்ப்பட்டதாகவே இருந்து வந்தது. எனவே போப்பு ஆண்டவரின் அதிகார வரம்பினை ஆன்மீகத்துறையில் கட்டுப்படுத்துவதற்குரிய ஒரே வழி 'சமயத் தொடர்பற்ற அதிகாரத்தைப் பெற்ற அரசரின் முறை மன்றங்களில், தான் அடைக்கலம் அடைவதே என்றும் இதைத் தவிரவேறு வழியில்லை என்றும் இங்கிலாந்தின் திருச் சபை நன்கு உணர்ந்திருந்தது.

இரண்டாம் ஹென்றி திருச்சபைக்கு விடப்பட்ட மானியங் களைப்பற்றி உறுதியான கருத்துடையவராக இருந்த காரணத்தி னால், இங்கிலாந்தின் திருச்சபைகளுக்கு வழங்கப்பட்ட மானியங் கள் — எல்லாம் பொதுமக்களால் தரப்பட்ட சொத்துக்களெல் லாம்—திருச்சபை நீதிமன்றங்களின் வழியாக ரோமாபுரியின் அவைக்களத்திற்கு மொத்தமாக மாற்றப்படுவது தடுத்து நிறுத் தப்பட்டது.

இது இவ்வாறிருக்க, விரைவில் போப்பு ஆண்டவர் இத்தா லிய நாட்டு மத குருமார்களுக்கு நன்மை அளிக்கத்தக்க விதிகளின் மூலம் மத குருமார்களை நியமிக்கும் வழிவகைகளைக் கண்டறிந் தார். ஆங்கிலேய வழக்கத்துப் புரவலர்களுக்கும், போப்பு ஆண்ட வருக்குமிடையே நடைபெற்றுவந்த போராட்டத்தில், அரசர் சில சமயங்களில் ஆங்கிலேய மக்கள் வாழ்க்கையை ஆதரித்தும், வேறு சில சமயங்களில் ஆங்கிலேய மக்களுக்கு வஞ்சகமாகப் போப்பை ஆதரித்தும் வரலாயினர். இத்தகைய போராட்டம் பல நூற்றுண்டுகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. இறுதியாக இப் போராட்டம் முன்பாதுகாப்புச்சட்டங்களைப் (Statutes of Praemunire) பாராளுமன்றத்தில் இயற் றிய பிறகு, போப்பு ஆண்டவருக்கு எதிராக அவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் முடிவுற்றது. இவ்வரிய சட்டங்களை பிளாண்ட்டாஜெனட் அரச மரபில் தோன்றிய பிற் காலத்திய அரசர்கள் இயற்றி, நடைமுறைக்குக்கொண்டு வந்த னர். இப் போராட்டத்திற்கு நிலையான ஒரு முற்றுப்புள்ளியை வைப்பதற்கும், இச்சிக்கலுக்குச் சிறந்ததொரு தீர்ப்பைக் காண்ப தற்குமுரியதாக டியூடர் ஆட்சிக்காலம் நெடுங்காலத்திற்குப் பின் னர் அமையலாயிற்று. அவ் ஆட்சிக் காலத்தை நோக்கி இச்சட்

டங்களும் வேறு பல நிகழ்ச்சிகளும் இங்கிலாந்து நாட்டு மக்களை அழைத்து கொண்டு சென்றன.[1]

இரண்டாம் ஹென்றி இங்கிலாந்திற்கு அளித்த மாபெரும் நன்மைகள் பலவற்றுள் சட்டத்துறையில் செய்த சீர்திருத்தம் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். அவர் புதிய ஒரு நீதித்துறை நடப்பு முறையை இங்கிலாந்தில் செயல்முறைக்குக் கொண்டு வந்தார். இப் புதியமுறை இங்கிலாந்தின் சமுதாயத்தையும் அரசியலையும் உருவாக்கக்கூடிய தலைவிதியாக அமைந்தது. மேலும் அது ஆங்கில மொழியினைப் பேசுகின்ற இன்னும் தோன்ருத பல அரசுகளையும், அவற்றின் உரிமைக்குரல்களையும் உருவாக்கக்கூடிய சிறப்பு மிக்க சிந்தனையை ஆங்கிலேயமக்களிடத்து வளர்த்தது எனலாம். இரண்டாம் ஹென்றி, அரசருடைய மத்திய நீதி மன்றங்களுக்கு உரிய அதிகாரத்தையும் அதிகார எல்லையையும் அதிகப்படுத்தினர். மேலும் இந்நீதிமன்றங்களின் கிளைகளாகக் கோட்டங்களில் எல்லாம் பயணம் செய்து கொண்டிருந்த நடமாடும் நீதிமன்றங்கள் ஆங்கிலேயப்பொதுச்சட்டத்தை விரைவிலே வளர்த்துச்சிறப்பு அடையுமாறு செய்வதற்குப் பேருதவி புரிந்தன. பொதுச் சட்டம் என்பது நாடு முழுவதற்கும் பொதுவான சட்டமாகும். ஒவ்வொரு கோட்டத்திலும், நூறின் முறை மன்றங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டுவந்த பல்வகையான பழக்க வழக்கங்களுக்கும் எண்ணற்ற தனிப்பட்ட அதிகார எல்லைகளுக்கும் பதிலாக நாடு முழுவதற்கும் பொதுவான ஒரு தேசிய முறையின் அடிப்படையில் வகுக்கப்பட்ட சட்டமே பொதுச் சட்டமாகும்.

கோட்டங்களிலும் நூறுகளிலும் இருந்துவந்த சமூக நீதி மன்றங்கள் பண்டைக் காலத்திய ஆங்கிலேய-டேனிய மக்கள் வாழ்க்கையின் உறுப்புகளாகும். அவை பொதுச் சட்டத்தின் மேலாண்மையை நாட்டிலே நிலைநாட்டுவதற்குரிய கருவிகளாக என்றுமே பயன்பட்டிருக்கமுடியாது. அவை நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெரு மக்களுக்கு உரிய நீதிமன்றங்களாக இருந்துவந்தன. பேரதிகாரத்தையும் பெரு மதிப்பையும் அவற்றிற்குக் கொடுத்து, பெரும் பிரபுக்களும் தலைமைக்குருமார்களும் நடத்தி வந்த நீதிமன்றங்களின் அதிகார வரம்பிலிருந்து அவற்றைப் பிரித்துக் காட்டுவது மிகவும் அரிய செயலாக இருந்தது. மேலும் மாவட்ட நீதிமன்றங்களில் நீதிபதிகளாகப் பணியாற்றிய மாவீரர்

[1] மெயிட்லண்டு: Canon Law in the Church of England (சிறப்பாக பக். 57-75)

களும், உரிமைக்குடிமக்களும் இவ்வட்டாரப் பழக்கவழக்கங்களோடு மிக நெருங்கிய தொடர்பு உடையவர்களாக இருந்துவந்தனர். அத்துடன் அவர்களுடைய அறிவாற்றல் மிகவும் பயிற்சியற்றதாகவும், குறுகிய நோக்கமும் வட்டார அடிப்படையில் அமைந்ததாகவும் இருந்துவந்தது. அதனால், இங்கிலாந்து முழுவதிற்கும் உரிய புதிய சட்ட இயலின் அறிவுஎல்லையைக்கொண்டு ஆராய்ந்து தீர்ப்புக்கூறுவது அவர்களுக்குப் பெரிதும் இடர்ப்பாடாகவே இருந்திருக்கும். அம்முறை மன்றங்களுக்குத் தலைமை தாங்கிய கோட்டத் தலைவர்களாகிய ஷெரிப்புகள், அரசர்களின் நீதிபதிகளைப் போன்று தனிப்பட்ட நீதித்துறைப் பள்ளிகளில் பயின்று திறமை பெற்ற வழக்கறிஞர்கள் அல்லர். எனவே நாடு முழுவதிற்கும் பொதுவான ஒரு பொதுச் சட்டம் இயற்றப்பட வேண்டுமானல், அது தனிப்பட்ட ஓர் ஊற்றிலிருந்தே சுரக்க வேண்டியதாக இருந்தது. அத்தகைய சட்டத்துறையின் ஊற்ருக இருந்தது அரசரின் முறை மன்றமான மன்னரின பேரவையே (Curia) [1] ஆகும்.

இரண்டாம் ஹென்றி அயல்நாட்டில் சட்ட இயல் கல்வி அறிவைப் பெற்றவராவர். 'இதனை இதனல் இவன் முடிக்கும் என்ருய்ந்து' அதற்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் தனிப்பேற்றை அவர் பெற்றிருந்தார். எனவே அவர் பண்பும் தகுதியும் மிக்க நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்து, புகழ்மிக்க அரசரின் நீதிபதிக் குழு ஒன்றை நிறுவினர். அக் குழுவைச் சார்ந்த நீதிபதிகளில் சிலர் சமய நிலையங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். ஆனல், கிளான்வில் போன்ற மற்றவர்கள் பெரிதும் நிலமானியப் படைமுறையைச் சார்ந்த வீரர் வகுப்பினை சேர்ந்தவர்களாகவே இருந்தனர். இரண்டாம் ஹென்றியின் ஆட்சிக்குப் பிறகு தோன்றிய அறிஞர்களும், அவர்களுடைய அறிவாற்றலில் சிறந்து விளங்கிய கால்வழியினரும் அரசரின் மைய நீதிமன்ற அமைப்பு முறையில் இருந்துபொதுச் சட்டம்என்னும்புதியசட்டஇயல்முறையைவகுத்தனர். இக்குழுவைச் சார்ந்த நீதிபதிகளே நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்குகளுக்கும் சென்று சுற்றி வரும் நீதிபதிகளாகவும் (Justices of Eyre) அல்லது சட்டம் இயற்றும் நீதிபதிகளாகவும் (Justices of Assize) பணிபுரிந்தனர். அவர்கள் தங்களுடன் புதிதாகச்செய்யப்பட்ட பொதுச் சட்டத்தை எடுத்துச் சென்று நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அப் புதிய கொள்கைகளை விளக்கினர்; அவற்றை மக்களுக்குக் கற்பித்தனர். அவர்கள் ஒவ்வொரு

[1] முதற்பிரிவின் எட்டாம் இயலில் 'மன்னர் பேரவை'யைப்பற்றி கூறப்பட்டுள்ள கருத்துக்களைக் காண்க.

கோட்டத்திலும் வாழும் 'மேட்டு நில மக்களைப்' பொதுச்சட்டத்தின் புது முறைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு செய்தனர்.

ஆங்கில மொழி பேசும் மக்களினத்தின் மாண்புமிக்க மரபுரிமையாக இப்பொதுச் சட்டம் வீறு பெற்று விளங்குகிறது. தற்கால ஆங்கிலேயர்களை ரோமானிய பழக்கவழக்கங்களிலிருந்தும், இலத்தீன் மொழி பேசிய உலகின் வழக்காற்று நெறியிலிருந்தும் பெரிதும் வேறுபட்ட சிந்தனையும் பழக்கவழக்கங்களும் உடையவர்களாக விளங்குமாறு பிரித்துக் காட்டுவது இப்பொதுச் சட்டமேயாகும். இருந்தபோதிலும் நார்மானியப் படையெடுப்பின் விளைவாகத் தோன்றியதே இம்முறையாகும். இரண்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்திற்கும் மூன்றும் எட்வர்டின் ஆட்சிக் காலத்திற்கும் இடையே வாழ்ந்த வழக்கறிஞர்களே இச்சட்டத்தை இயற்றியவராவர். அவர்கள் பிரஞ்சு மொழியில் சிந்தித்தும், பிரஞ்சு மொழியில் வழக்காடியும் வந்தனர். ஆனால், அவர்கள் தங்களுடைய அலுவலகக் குறிப்புகளை இலத்தீன் மொழியிலேயே எழுதி வந்தனர். டெட் (Debt), காண்ட்ராக்ட்(Contract), ஹையர் (Heir), டிரஸ்பாஸ் (Trespass), பே (Pay), மணி (Money), கோர்ட் (Court), ஜட்ஜ் (Judge), ஜூரி (Jury) முதலிய சொற்களைக் கையாளாது ஒருவர் சட்டத்தைப்பற்றி ஒரு வாக்கியமாகிலும் எழுத முடியுமா என்று மெயிட்லண்டு என்னும் அறிஞர் மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும். ஆனால், இச் சொற்கள் அனைத்தும் பிரஞ்சு மொழியிலிருந்து நம் மொழிக்கு வந்தவை என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும். பரந்த இவ்வுலகில் எங்கெல்லாம் ஆங்கிலச் சட்டம் நடைமுறையில் இருந்துவருகின்றதோ, அங்கெல்லாம் நார்மண்டியைச் சேர்ந்த வில்லியத்திற்கும், அஞ்சுவின அரசமரபைச் சேர்ந்த ஹென்றிக்கும் வணக்கம் செலுத்தப்படுகிறது எனலாம்.

ஆங்கிலேய-டேனியச் சட்டத் தொகுப்பிலிந்து பொதுச் சட்டம் பெற்ற கருத்துக்கள் மிகச் சிலவேயாகும். ஏனெனில், அவர்களுடைய நாகரிகமற்ற பழக்க வழக்கங்களும், குற்றச் சாட்டை நீக்கும் முறையும் (Compurgation), இழப்பீடும் (Were-gild), அவர்களுடைய கடந்தகாலச் சமுதாய நிலையைக் காட்டுவனவாகவே இருந்தன. ஆனால், அது ஐரோப்பா முழுவதிலும் வழக்கத்தில் இருந்து வந்த நிலமானியப் படை முறைப் பழக்கவழக்கங்களை ஓரளவிற்கு ஏற்றுக் கொண்டிருந்ததைக் காண்கிறோம். சிறப்பாக நிலக் குத்தகை முறை அச்சமுதாயப் பழக்கவழக்கங்களில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ஆனால், பன்னிரண்டாம் நூற்றாண்

டில் பழைய ரோமானியப் பேரரசரின் 'சிவில்' சட்டங்களையும் திருச்சபையின் சிறப்புச் சட்டங்களையும், படிப்பதில் மக்கள் பேரார்வம் கொண்டிருந்தனர். அவை இரண்டும் இக்காலத்தில் தான் பேரளவில் விளக்கப்படும் நிலையினை அடைந்து கொண்டிருந்தன. நீதித் துறை நிர்வாகத்தில் அவ்விரு ரோமானியச் சட்டங்களே ஒப்பற்ற கருவிகளாகப் பயன்பட்டு வந்தன. அத்துடன் அவற்றிலிருந்து வேறுபட்ட பொதுச் சட்டத்தை இங்கிலாந்திற்காக உருவாக்கிக் கொண்டிருந்த மக்களுக்கு, அவை சிறந்த அறிவியல் நூல்களாகப் பயன்பட்டன. சற்றேறக்குறைய கி. பி. 1150-ல் இருந்து 1250 வரை போலக்னுவிலும் (Bologna) பாரிசிலும் (Paris) சிறப்புற்று விளங்கிய பல்கலைக் கழகங்களில் 'இவ்விரு ரோமனியச் சட்டங்களும்'[3] நன்கு பயிற்றுவிக்கப்பட்டு வந்தன. கடல்களுக்கு அப்பாலிருந்தும், ஆல்ஃப் மலைகளுக்கு அப்பாலிருந்தும் ஆங்கிலக் குருமார்களும், வழக்கறிஞர்களும் நூறுகளைச் சேர்ந்த மேற்றிராணியார்களும் (Archdeacons) பேரளவில் ரோமாபுரிக்குச் சென்று சட்டக்கலையைப் பயின்று பயன் பெற்றனர். அவர்கள் சட்டக்கலைப் பயிற்சியைப் பெற்றுத் தாய் நாடு திரும்பியபிறகு, இங்கிலாந்து மக்களுள் இத்தாலி நாட்டிற்குச் சென்று வந்த ஆங்கிலேயரிடத்து அயல்நாட்டுக்கு உரிய நேர்மைக் கேடுகளும் தீயப்பழக்க வழக்கங்களும் மிகுதியாக இருப்பதாகக் குறை கூறினர்; அதே நேரத்தில் புத்தம் புதிய சட்ட இயல் அறிவினை அவர்கள் பெற்று வந்திருப்பதாகவும் அவர்களைப் பாராட்டினர். ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக்கழகம் தோன்றிய சிறிது காலத்திற்கெல்லாம் அது சிவில் சட்டத்தையும், திருச்சபைச் சிறப்புச் சட்டங்களையும் கற்பிக்கும் சிறப்புமிக்க கலைக்கூடமாகப் பேரும் புகழும் பெறலாயிற்று.

அப்படியானால் இங்கிலாந்தின் சட்டம் தோன்றி வளர்ந்து நெருக்கடியான நூற்றாண்டில் பிற நாட்டு அறிவாற்றல்களின் கவர்ச்சியால் பாதிக்கப்பட்டும், ஆற்றல்மிக்க இவ்வயல்நாட்டு சக்திகளால் உருவாக்கப்பட்டும், அது எவ்வாறு தனிப்பட்ட தேசிய அமைப்பும், உணர்வும், உரிமையுமுடையதாக வளர்ந்தது என்னும் வினா எழலாம். இங்கிலாந்தின் நிலப்பிரபுக்கள் இதற்கு முன்பே ஆங்கிலேயப் பண்புடையவர்களாகவும் பழமைப் பற்றுடையவர்களாகவும் மாறியிருந்தனர் என்பது உண்மை. அவர்கள் சிவில் சட்டத்தை அயல் நாட்டுக்கு உரியது என்று வெறுப்புடன் நோக்கினர். மேலும், அச்சட்டம் எதேச்சாதிகார அரசினை ஆதரிக்கின்றதைக் கண்டு அவர்கள் அதன்மீது வெறுப்பும் கொண்டனர். தாமஸ்பெக்கெட் கொலை செய்யப்பட்டதினுல் உண்டான சிக்கலின்போது இந்தப் பிரப்புக்கள் தங்களுக்குத் திருச்சபை

நீதிமன்றங்களிடத்தில் நம்பிக்கையோ, ஈடுபாடோ இல்லை என்பதை வெளிப்படையாகக் காட்டிவிட்டனர். நாட்டுப் பெருமக்களிடத்துத் தோன்றிய இத்தகைய உணர்வுகளை அரசர்களின் வழக்கறிஞர்கள் மதித்துப் போற்ற வேண்டியவரானார்கள். அந்த வழக்கறிஞர்களில் பலர் நாட்டுப் பெருமக்களின் கருத்துக்களில் ஓரளவிற்கு உடன்பாடு உடையவர்களாக இருந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே அவர்கள் சிவில் சட்டத்தையும் திருச்சபைச் சிறப்புச் சட்டத்தையும் பாடப் புத்தகங்களாக்கும் முறையில் உண்மை நோக்கும் ஆர்வமும் கொண்டு முயன்ற போது அவற்றில் காணப்பட்ட உறுதியான தெளிவுமிக்க கருத்துக்களை ஏற்றுக்கொள்ள இசைந்தனர். ஆனால், அவற்றுள் எதற்கும் பயன்படுத்தத்தக்க மாபெரும் நீதி மொழிகளை மட்டும் விரும்பி யேற்றனர்; தெளிவில்லாமல் இருந்த பிறவற்றை அவர்கள் விலக்கிவிட்டனர். ஆங்கிலேயப் பொதுச் சட்டம் ஜஸ்டினியன் சட்டத் (Code of Justinian) தொகுப்பைப் பார்த்துப் பின்பற்றிச் செய்யப்பட்ட தொகுப்பன்று. ஆனால், புதிர்கள் நிறைந்த முன் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டும், நாட்டில் சிறப்புற்று விளங்கிய அரசருடைய நீதிமன்றங்களின் வழக்கு முடிவுகளை அடிப்படையாகக் கொண்டும், வழக்கறிஞர்கள் பலராலும் குறிப்புகளைக் கொண்டு எளிதில் வாதிட்டு வெல்லமுடியாத புதிர்களைக் கொண்ட வழக்காற்று நெறியை அடிப்படையாகக் கொண்டும் இச் சட்டம் அமைக்கப்பட்டது எனலாம். பிளாண்ட்டாஜெனட் அரசமரபின் ஆட்சிக்காலத் தொடக்கம் முழுவதும் மன்னர் பேரவை அல்லது நீதி மன்றம் பல உட்குழுக்களை அமைப்பதன் மூலம் தம்முடைய கடமைகளைச் சிறப்புறச் செய்து திறம்பெற்றது. இவ்வுட் குழுக்கள் ஒவ்வொன்றும் நாளடைவில் கடமைகளைச் செய்வதில் திறமையுடையனவாகவும் தமக்கு என ஒரு நெறி முறையைப் பின்பற்றிச் செயலாற்றுவனவாகவும் சிறப்புறத் தொடங்கின. முதலாம் ஹென்றி ஆட்சிக் காலத்திலேயே தோன்றி வளர்ந்த சிறப்பு மிக்க கருவூல நிதிக் குழுவைப் போன்று இவை செயலாற்றி வந்தன. பிற்காலத்துப் பொதுமக்களின் முறையீட்டு மன்றம் (Court of Common pleas) என்னும் பெயரால் அறியப்பட்ட நீதிமன்றம் இக்காலத்து, சில நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழுவாகவே இருந்தது. ஜான் அரசர் ஆட்சிக் காலத்து வெஸ்ட்மின்ஸ்டரிலுள்ள குடிமக்களின் வசதிக்காக இந் நீதிபதிகளின் குழு நிறுவப்பட்டது. அவ்வூரிலேயே கருவூல நிதிக் குழுவும் கூடிவந்தது. இவ்வாறு இங்கிலாந்திற்கு 'ஒரு தலைநகரை இக் குழுக்கள் அளித்தன' எனலாம் இல்லையென்றால், 'மன்னர் பேரவையில்' வழக்குத் தொடுத்திருக்கின்ற வாழக்காடுவோர் அரசர் எங்கெங்கெல்லாம் பயணம்

செய்து கொண்டிருக்கின்றாரோ, அங்கெல்லாம் அவரைப்பின் தொடர்ந்து சென்று, தங்கள் வழக்கினைத் விசாரித்து தீர்ப்புக் கூறுமாறுவேண்டி அல்லல்பட்டு வந்தனர். இன்னும் அரசருடைய நீதிமன்றம், மன்னர் பேரவையில் நீதி நிர்வாகக் குழுக்களாகவே இருந்தவந்தன. இக்காலத்திய நீதிமன்றங்களைப் போன்று அக்காலத்திய அரசரின் நீதிமன்றங்கள் தனி சிறப்புடையனவாக இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆனால் அந் நீதிபதிகளும், நாடு முழுவதும் உள்ள கோட்டங்களில் சுற்றிச்சுற்றி வந்த நீதிபதிகளும் (Itinerant justices) 'வழக்கு சட்டத்தை' (Case law) உருவாக்குவதற்கு வேண்டிய ஒழுங்கான வழி முறைகளை அறிந்திருந்தனர். அவ்வழக்கு சட்டங்களே இங்கிலாந்துப் பொதுச் சட்டத்தை அமைப்பதற்கு பயன்பட்ட முந்திய நடைமுறை நிகழ்ச்சிகளாகும்.

இரண்டாம் ஹென்றி வெளியிட்ட கட்டளைகளில் அறிவிக்கப்பட்ட முறைகள் வட்டார முறை மன்றங்களுக்கும் தனியாரின் முறை மன்றங்களுக்கும் வழக்குகளைக் கொண்டு செல்லாது, எல்லா வகையான வழக்குகளையும்அரசருடைய நீதிமன்றத்திற்கு நேராகக் கொண்டுவரக் குடிமக்களுக்குப் பேருதவி புரிந்தன. இக்காலத்திய அரசு அத்தகைய கட்டளைகளை அது வழங்காலம் என்பதற்குரிய முழு அதிகாரத்தையும் பெற்றிருந்தது ஆங்கிலேயச் சட்டத்தின் மாபெரும் ஊற்றாக அக்கட்டளைகள் அமைந்தன. அரசியல் சட்டத்திட்டங்கள் மிகுதியாக இயற்றப்பட்ட காலமாகிய மூன்றாம் ஹென்றி, டி. மாண்போர்ட்டு ஆகியோர் காலதது அரசருடைய அதிகாரம் ஒரு வரம்புக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. அக்காலத்தில்தான் அரசர் வெளியிடக் கூடிய கட்டளைகளின் அமைப்பு எப்படி இருக்கவேண்டுமென்று வரையறுக்கப்பட்டது. அரசர் புதிதாக அறிவிக்கும் கட்டளைகள் எவ்வாறு இருக்கவேண்டுமென்பது பற்றி இக்காலத்துத் தெளிவாக வரையறுக்கப்பட்டது. ஆனால், அக்காலத்து அரசரின் நீதிமன்றங்கள் நாட்டின் பொது நீதிமன்றங்களாகப் பேரளவில் வளர்ச்சியடைந்து சிறப்புற்று விளங்கியதைக் காண்கிறோம்.

இரண்டாம் ஹென்றியின் ஆட்சிக்காலம் முதல் மூன்றாம் ஹென்றியின் ஆட்சிக்காலம் வரை அரசர்கள் கட்டளைகள் வழங்குவதன் மூலமும், அசைஸ் என்னும் அரசியல் தீர்ப்புகள் மூலமும், அல்லது பெருங்குடி மக்களின் அவையைக் கூட்டுவதன் மூலமும் புதிய சட்ட இயல் பரிகாரங்களை அரசர்கள் தேடி வந்தனர். இந்தக் கட்டளைகளும், சட்டங்களும் சட்டமன்றக் கூட்டத்தின் போது அல்லது நாட்டுப் பெருமக்கள் கூடிய அவைகளில் வெளி

யிடப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. இவ்வாறு புதிய வழக்குத் தொடுக்கும் முறைகளையும், புதிய முறையில் செயலாற்றும் உரிமைகளையும் நிலமானியப்படை முறை நீதிமன்றங்களினுடைய அதிகாரத்திற்கும், திருச்சபை நீதிமன்றங்களின் அதிகாரத்திற்கும் கேடுண்டாகும் வகையில் இவ்வரசர்கள் புதிய கட்டளைகளையும் சட்டங்களையும் இயற்றி வந்தனர். 'சட்டம் இயற்றுதல்' என்னும் சொல்லுக்கு இக்காலத்து வழங்கும் பொருளில், அக்காலத்து ஒருவித சட்டமும் இயற்றப்படவில்லை. ஆனால், இரண்டாம் ஹென்றி தம்முடைய 'அசைஸ்' என்னும் சட்டங்களின் மூலம் அரசரது முறையீட்டு மன்றத்தில் பின்பற்றுவதற்குரிய மாற்று முறைகளின் வகைகளையும் உரிமைகளாக மக்களுக்கு அளித்தார். அதன் விளைவாக நிலமானியப்படை முறை நீதிமன்றங்கள் நாட்டு நிலங்களோடு கொண்டிருந்த உரிமையையும், உடைமையையும் அவர் மறைமுகமாகப் பிடுங்கி, அரசரின் நீதிமன்றங்களுக்குக் கொடுத்தார். சுற்றுப் பக்கத்திலிருந்த பெரிய நிலமானியப் படை முறையாளர்களின் பேராசைக்கு இரையாகித் துன்புற்ற சிறிய நிலக்கிழார்களுக்கு இதன்மூலம் அரசர் அரசினுடைய நேர்மையான பாதுகாப்பை அளித்தார்.[1]

இரண்டாம் ஹென்றி இந்தச் சட்டத்தை இயற்றியதன் மூலம் தீர்ப்புச் சான்றுளர் குழுவினரால் வழக்கு விசாரணை செய்யப்படும் புதிய முறையையும் இதனுடன் நீதிமன்றத்தில் புகுத்தினர்.

ஆங்கிலச்சாக்சானியரின் காட்டுமிராண்டித்தனமான குற்றச்சாட்டு நீக்கமான பரிசோதனை (compurgation) என்னும் வழக்கு விசாரணை முறை அக்காலம் வரையில் நடைமுறையில் இருந்து வந்தது. ஒரு மனிதன் தன்னுடைய வழக்கினை மெய்ப்பிப்பதற்காகத் தேவையான அளவிற்குத் தங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் கொண்டுவந்து தீர்ப்புச் சான்றுளர் குழுவின் முன்பு வாக்குறுதியளிக்கச் சொல்வாரானல், அதைக் கண்டு அந்

[1] நாவல் டிச்சிசின் (Assize of Novl Disseisin) சட்டங்களும் (1166), மார்ட்டி ஆன்செஸ்டர் சட்டங்களும் தேவையற்ற முறையில் வெளியேற்றப்படுவதிலிருந்து, நிலவுடைமையாளர்களையும் அவர்களுடைய மரபுரிமையாளர்களையும் காப்பாற்றியது. 1179-ல் இயற்றப்பட்ட மாபெரும் சட்டம் (Grand Assize) நிலக்கிழார்களின் செயல்களை ஒழுங்கு முறைக்கு உட்பட்டு நடக்குமாறு செய்தது. டேரியன் பிரசண்ட்மெண்ட்டு (Darrein presentment) சட்டங்கள் திருக்கோயில் நிலங்களுக்கு ஆளமர்த்துவதில் உண்டான வழக்குகளைத் தீர்த்து வைத்தது. இவை அனைத்தும் அரசருடைய நீதிமன்ற அதிகாரவரம்பினைப் பெரிதும் விரிவாக்கியது.

நீதிபதிகள், அவ்வாறு ஆணையிட்டு ஈட்டு உறுதிமொழி கூறியவர்கள் மீது நம்பிக்கைகொண்டு, தீர்ப்புக் கூறுவது வழக்காருக இருந்துவந்தது. பழுக்கக் காய்ச்சிய இரும்பினைக் கையில் கொடுத்துப் பிடிக்குமாறு செய்யும் 'துன்பப் பரிசோதனை' மூட நம்பிக்கை வாய்ந்தது மட்டுமன்று; புறச் சமயச் சார்புடையதுமாகும். ஆனால், அது பிற்காலத்து, கிறிஸ்துவ சமயத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் காணுகின்றோம். இங்கிலாந்து நாட்டு மக்களிடையே நார்மானிய வீரர்கள் பெரிதும் விரும்பிப் போற்றிய, 'போரிட்டு வெற்றி காண்கின்ற விசாரணை' செல்வாக்குப் பெறவில்லை. போரிட்டு வெற்றி காணும் விசாரணை முறையில், ஒருசாரார் இன்னொரு சாராரைத் தொல் பழங்கால மரக் கருவிகளாலும் கொம்புகளாலும் தாக்கிப் போரிடும் நாகரிகமற்ற முறையை ஆங்கிலேய மக்கள் வெறுத்தனர். அந்தப் போர் முறையில், ஒருசாரர் இறுதியில் மற்றொரு சாராரைக் 'கோழைகள்' என்று கூக்குரலிட்டு மகிழ்வதையும் ஆங்கிலேய மக்கள் அருவருப்போடு நோக்கினர். இம் முறைகள் எல்லாம் அடிக்கடி கையாளப்பட்டதோடு, பெரிதும் தவருன தீர்ப்பினை வழங்கியதாகவும் தெரியவில்லை. அவ்வாறு வழங்கப்படுகின்ற தீர்ப்பு நேர்மையற்ற முறையில் ஒரு மனிதனுடைய உறுப்புகளைக் குறைத்தலையோ, அவனுக்கு மரண தண்டனை விதிப்பதையோ அளித்ததாகத் தெரியவில்லை. மனிதன் உயிர்த் தியாகம் செய்த தொல் பழங் காலத்தினைத் திரும்பிப் பார்க்கின்ற பொழுது நீதி மன்றங்களில் பகுத்தறிவுக் கண்கொண்டு உண்மையினை அறிய செய்யப்படும் ஆராய்ச்சி தற்கால நாகரிகத்தின் இன்ப வாழ்க்கைப் பொருளாக அது நம்மைத் திகைக்கச் செய்கிறது. இம்முறை பழங்கால மக்களிடத்து மிகமிக அருகிய வழக்காகவே இருந்தது எனலாம். இடைக்கால இங்கிலாந்தில் இரண்டாம் ஹென்றி, காலம் கடந்த-கவைக்கு உதவாத முறைகளுக்கு மாருகத் தீர்ப்புச் சான்ருளர் குழுவினை அமைத்ததன் மூலம் இக் கால நீதி மன்ற அமைப்பு முறையினை நோக்கி முதல் அடியினை எடுத்து வைத்தார் எனலாம்.

ஹென்றி நிறுவிய தீர்ப்புச் சான்ருளர் குழு முறை, இக் காலத்து நாம் காணுகின்ற தீர்ப்புச் சான்ருளர் குழு முறை அன்று. இக்காலத் தீர்ப்புச் சான்ருளர் குழுவினர் வழக்காடுவோரும், எதிர் வழக்காடுவோரும் தங்களுடைய சான்றுகளை எடுத்துச் சொல்லுவதைக் கேட்டு, தங்களுக்கு முன்னல் வைக்கப் பட்ட கருத்துக்களை நன்கு சிந்தித்து ஆராய்ந்து, அதற்குப் பிறகு ஒரு முடிவிற்கு வந்து, தங்கள் தீர்ப்பினை வழங்குகின்றனர். ஹென்றியினுடைய தீர்ப்புச் சான்ருளர் வழக்குகளுக்குரிய

உண்மைகளுக்குத் தாங்களே சான்று கூறுகின்றவர்களாக இருந்தனர். எனினும், இம்முறையே ஒரு மாபெரும் முன்னேற்றமாக அமைந்தது என்று கூறலாம். ஏனெனில் இதுவரையில் நீதிமன்றங்களில் ஒரு சொத்தின் உண்மையை ஆராய்ந்து அறிவதற்குச் சான்று அளிப்பதற்கு மக்களை அழைப்பது மிகமிகஅருகிய வழக்காக இருந்து வந்தமையால், இம்முறை இங்கிலாந்தின் நீதிமன்ற வழக்கு விசாரணை முறையில் ஒரு பெரும் முன்னேற்றமாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஹென்றி இயற்றிய (1179) மாபெரும் சட்டம் (Grand Assize) ஒரு தனி மனிதனின் நில உடைமையை எதிர்த்து, வழக்குத் தொடுப்போருக்கு எதிராக உண்மையை நிலை நாட்டுவதற்கு உதவி புரிந்தது. இதனால் வழக்குத் தொடுக்க வேண்டியவனும் எதிர் வழக்காடுகின்றவனும் தனிப்பட்ட முறையில் ஒருவரை ஒருவர் எதிர்த்துநின்று போரிட்டு வெற்றி பெறுவதன் மூலம், தன்னுடைய உரிமையை நிலைநாட்ட வேண்டிய நெருக்கடி இல்லாமல் போயிற்று. எனவே, நிலத்திற்கு உண்மையான உரிமை உடையவன் தீர்ப்புச் சான்றோர் குழுவின் முன்னிலையில் தன்னுடைய உரிமையை நிலைநாட்டி வெற்றி பெறுவது எளிதாயிற்று. தீர்ப்புச் சான்றோர் குழுவின் முன்னால் தன்னுடைய உண்மையான உரிமையை நிலைநாட்ட விரும்புகின்ற ஒருவன், தன்னைப்பற்றியும் தன்னுடைய உடைமைகளைப்பற்றியும் நன்கு அறிந்த பன்னிரண்டு பேரை அரசருடைய நீதிபதிகளின் முன்னால் அழைத்துச் சென்று நிறுத்தினன். அவர்கள் நில உடைமை காரணமாக உரிமை கோரும் இருவருள் யாருக்கு அந்த நிலம் முற்றிலும் உரிமையுடையது என்பதைத் தக்க சான்றுகள் தந்து நிறுவினர்.

கிளாரண்டன் சட்டத்திலும் (1166), நார்த்தாம்ப்டன் (1176) சட்டத்திலும் வேறொரு வகையான தீர்ப்புச் சான்றோர் குழு அமைக்கப்பட்டது. அக் குழுவைச் சார்ந்த உறுப்பினர்கள் குற்றம் செய்தவரை அரசரின் நீதிபதிகள் முன்பு கொணடுவந்து நிறுத்தி, அதன்மூலம் தீர்ப்புக் கூறுவதையும் அல்லது ஒருவர் குற்றம் செய்தவர் என்பதை நீதிபதிகள் முன்னால் குற்றம் சாட்டி மெய்ப்பிப்பதையும் தங்களுடைய கடமையாகக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு நூறிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு மனிதர்கள் ஆணையிட்டுத் தங்கள் பதவியை ஏற்றுக் கொண்டிருந்தனர். தங்களுக்கு அக்கம்பக்கத்தில் வாழுகின்றவர்கள் செய்த குற்றத்திற்காக அவர்கள் விசாரிக்கப்படுகின்ற நீதிமன்றங்களுக்குச் சென்று, அவர்கள் தாங்கள் அறிந்ததைத் தெரிவிக்க வேண்டியவர்களாக இருந்தனர். மாபெரும் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட தீர்ப்புச் சான்றோர்களைப்போல்

அல்லாமல் குற்றவாளிகளைக் கொண்டுவந்து நிறுத்தும் இத்தீர்ப்புச்சான்றுளர்கள் தீர்ப்புக் கூறுகின்ற நீதிபதிகளாக அமையாது, சான்று கூறுகின்றவர்களாகவே இருந்தனர். குற்றம் சாட்டப்பட்டவருக்குத் தன் வட்டாரத்தில் இருக்கின்ற மதிப்புக்கு அவர்கள் சான்று கூறுகின்றவர்களாக இருந்தனர். அவர்கள் நீதிமன்றங்களின் முன்பு தோன்றி சான்று கூறிய பிறகு, குற்றவாளிகள் என்று கருதப்பட்டவர்கள் கடும் சோதனைக்கு அனுப்பப்பட்டனர். அச் சோதனைக்குப் பிறகு ‘கடவுளின் தீர்ப்பு’ என்று வழங்கப்படுகின்ற அத்தீர்ப்பு குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டது. அதன் பிறகு அந்தத் தீர்ப்பின் மூலம் குற்றவாளி தூக்குத் தண்டனை பெறாது தப்பித்துப் போனாலும், அவன் தனக்குரிய உடைமையை ஆணையிட்டுக் கைவிடுமாறு வற்புறுத்தப்பட்டான். கி. பி. 1215-ஆம் ஆண்டில் லேட்டரின் கவுன்சில் (Lateran Council) நெடுங்காலமாகப் பழக்கத்தில் இருந்து வந்த இக்கடும் சோதனையை அடியோடு ஒழித்துவிட்டது. குருமார்கள் இனிமேல் பழுக்கக் காச்சிய இரும்பினைக் குற்றவாளிகள் என்று கருதப்படுபவர்களின் கையில் கொடுத்துக் கடும் சோதனை செய்யக்கூடாது என்று அக்கவுன்சில் தடை விதித்தது. அதனால் தீர்ப்புச் சான்றுளர் குழு மேற்கொண்டு வளர்வதற்குரிய வழிகள் இங்கிலாந்தில் திறக்கப்பட்டன எனலாம். இடைக்கால இங்கிலாந்தின் பிற்பகுதியில் ஆணையிட்டுச் சான்று கூறும் தீர்ப்புச் சான்றுளராக இருந்த நிலையில் இருந்து, பிறர் கூறும் சான்றுகளை ஆராய்ந்து அறிந்து தீர்ப்புக் கூறும் தீர்ப்புச் சான்றுளரின் நிலையினை இவர்கள் பையப்பைய அடைந்தனர். நாம் இன்றைக்குப் பெற்றிருக்கின்ற முறையைப்போல் பெரிதும் ஒப்புமை உடையதாகப் பதினைந்தாம் நூற்றாண்டிலேயே தீர்ப்புச் சான்றுளர் குழு சிறப்புற்று விளங்கிற்று. அக்காலத்திலேயே ஆங்கிலேயர் தீர்ப்புச் சான்றுளர் குழு முறை தங்களுக்கேயுரிய தனிச் சிறப்பு வாய்ந்த வழக்கு விசாரணை முறை என்று பெருமைப்பட்டுக் கொண்டனர். அக்காலத்தில் பிரான்சு நாட்டில் குற்றவாளிகளைச் சித்திரவதை செய்து புலன் விசாரணை செய்த முறையோடு தங்கள் நாட்டு இம்முறையை ஃபார்ட்டஸ்கியூ (Fortescue) என்னும் தலைமை நீதிபதி பெருமிதத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்து கூறியதைக் கேட்டு ஆங்கிலேயர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.[1]

[1] பிளாண்ட்டாஜெனட்டு அரசர்களால் தோற்றுவிக்கப்பட்ட தீர்ப்புச் சான்றுளர் குழு முறையும், நீதிபதிகளும் நார்மானிய அரசர்களால் பட்டணங்களில் நிலவுடைமைப் பேராய்வு மதிப்பீடு செய்யப்பட்டபொழுதும், கடுமையான நீதிமன்ற விசாரணைகளின் பொழுதும் கடைப்பிடித்த முறைகளை முன்மாதிரியாகக்கொண்டு அமைக்கப்பட்டனவாகும். இரண்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் வழக்கில் இருந்த

ஹென்றி வழங்கிய நீதிமுறை மக்களிடத்துச் செல்வாக்குப் பெற்றதோடு, மக்கள் அதை ஆர்வத்தோடு வரவேற்றனர். காட்டுமிராண்டித்தனத்திலிருந்து மெல்ல மெல்ல முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்த அன்றைய சமுதாயத்தில் கொடுமையும் வன்முறைச் செயலும், துன்புறுத்தலும் அன்றாட நிகழ்ச்சிகளாக இருந்துவந்தன. அந்நிலையில் தற்காப்பு அற்றோர்க்கும், ஆதரவு அற்றோர்க்கும், அரசர்பிறப்பித்த இக்கட்டளை ஓரளவிற்கு ஆதரவு தந்துவுதவுவதாகவும், பரிகாரம் அளிப்பதாகவும் இருந்தது. எனினும் அரசர் வழங்கிய நீதிமுறையில் கவர்ச்சி குறைந்த ஒரு பகுதியும் இருந்துவந்தது. அவர்களுடைய நீதிமன்றங்கள் என்றும் பற்றாக்குறையுடையதாக இருந்து வந்த அரசரின் கருவூலத்தை நிறைப்பதற்கு மக்களிடம் இருந்து பொருள்களைக் கைப்பற்றுவதற்குரிய கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. தம்முடைய குடி மக்களுக்கு உண்மையான — நேர்மையான — தீர்ப்பினை வழங்கவேண்டுமென்ற எண்ணத்தால்தான்,—பற்றற்ற ஆசையினால்தான்—இரண்டாம் ஹென்றி அரசரின் நீதிமன்றங்களுடைய அதிகார வரம்பினை விரிவுபடுத்தினார் என்று கூறுவதற்கில்லை. ரிச்சர்ட்டும், ஜானும், மூன்றாம் ஹென்றியும், இரண்டாம் ஹென்றியைவிட மிகக் குறைந்த அளவிற்கே உண்மையான முறையிலும், நேர்மையான வகையிலும் நீதி வழங்குகின்ற முறையைப் பற்றி அக்கறை கொண்டிருந்தனர். அவர்கள் கருத்தெல்லாம் பணத்தைப் பேரளவில் பெறுவதில் ஈடுபட்டிருந்த காரணத்தினால், அவர்கள் அரசின் அதிகார வரம்பினைத் தொடர்ந்து பெருகுமாறு வளர்த்தனர். ஜஸ்டிசியார் (Justices) என்று சொல்லப்படுகின்ற அவ்வரசரின் அதிகாரிகள், அரசினுடைய அமைதியை நிலை நாட்டுவதில் நாட்டம்கொண்டு சுறுசுறுப்பாக வேலை செய்தார்கள். அதைப்போன்று அரசரின் வருவாய்க்குரியப் பொருள்களைத் தண்டுவதிலும் அவர்கள் முனைந்து ஈடுபட்டிருந்தனர். இவ்வாறு ஒரு செயலின் இருவகைத் தோற்றங்களை நாம் அங்குக் காணுகின்றோம்.

மூன்றாம் ஹென்றியின் காலம் முதல் பொது நீதிமன்றத்தின் நடைமுறைகள் பெரிதும் மக்களுடைய பொருளைக் கைப்பற்றுவதாகவும், கொடுமை நிறைந்ததாகவும், மக்களுடைய வெறுப்

குற்றவாளிகளைக் கொண்டுவந்து நீதிபதிகளின் முன்னர் நிறுத்தும் தீர்ப்புச் சான்றாளர் குழு முறையைப் போன்று எதல்ரெட்டு காலத்திலேயே ஆங்கிலேய—டேனிய வழக்காற்று நீதிமுறையில் ஒரு புதுவகையான தீர்ப்புச்சான்றாளர் குழுமுறை இருந்து வந்ததைக் குறிப்பிடத்தக்கதாகும். இந்நூலின் முதற்பிரிவில் ஐந்தாம் இயலின் இறுதிப் பகுதியில் இதைப்பற்றிய விளக்கத்தைக் காண்க.

புணர்ச்சியைத் தூண்டுவதாகவும் இருந்துவந்தன. அரசரின் ஆணையைப் பெற்ற ஆணையர் ஒருவரை இடர்ப்பாடுமிக்க கோட்டம் ஒன்றுக்கு அனுப்பி, அந்தக் கோட்டத் தலைவரின் நீதி நிர்வாகத்தையும், நிதி இயல் செயல்முறைகளையும் ஆராய்ந்து பார்க்குமாறு செய்தனர். அத்துடன் அந்தப் பகுதியில் வாழ்கின்ற தனி உரிமைக்குடிமக்களின் கணக்கு வழக்குகளையும் ஆராய்ந்து ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் கூடிய நீதிமன்றத்திற்குப் பிறகு அவர்களிடத்துக் காணப்படுகின்ற ஊழலைக் கண்டுபிடித்து, அதற்காகப் பெரும் தண்டத் தொகையைக் கைப்பற்றி வருமாறு அவ்வதிகாரிகள் அனுப்பப்பட்டனர். இத்தகைய கொடிய அதிகாரிகளின்பிடியிலிருந்து தப்புவதற்காக 1523-ஆம் ஆண்டு காரன்வாலில் வாழ்ந்த மக்கள் தங்கள் குடும்பத்தை விட்டு, காட்டிற்கும், சதுப்பு நிலப் பகுதிகளுக்கும் ஓடித் தலைமறைவாக வாழமுற்பட்டனர். மூன்றும் ஹென்றியின் ஆட்சிக் காலத்து ஓரளவிற்கு மக்களிடத்திலே செல்வாக்கு இழந்துவிட்ட காரணத்தினால் பொது முறை மன்றங்கள் (General Eyres) கலைக்கப்பட்டது அது முதல் ஊர்ஊராகச் சுற்றி நீதி வழங்கிவந்த நீதிபதிகள் சிறு சிறு குழுக்களாகவே பணியாற்றி வரலாயினர். பிளாண்டாஜெனட் அரசமரபினர் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் அரசரின் நீதிமுறை (Royal Justice) தலை சிறந்த முறையாக முன்னேறிக்கொண்டிருந்தது. ஆயினும், மனிதர்களால் அமைக்கப்பட்ட மற்ற நிலையங்களுக்கு இல்லாத பெரும் புகழினைப் பெறுவதற்கு அது தகுதியுடையதன்று.

இரண்டாம் ஹென்றி எதேச்சாதிகார ஆட்சியாளர். ஆனால் தம்முடைய பெயரையே கொண்டிருந்த பிற்கால டியூடர் அரசமரபைச் சார்ந்த அரசர்களின் காலத்து நாட்டு மக்கள் யாவற்றையும்விட ஆற்றல் மிக்க அரசு ஒன்றையே வேண்டி நின்றதைப் போன்று, இவருடைய காலத்து மக்களும் ஆற்றல் மிக்க அரசையே வேண்டி நின்றனர். டியூடர் மன்னர்களைப் போன்று இவரும்எதேச்சாதிகாரியாக இருந்ததோடு சட்டத்திற்குட்பட்டு ஆட்சி புரிபவராகவும் இருந்தார் இரண்டாம் ஹென்றி. மக்களிடத்து நம்பிக்கை கொண்டிருந்தார். நிலையான படை ஒன்றை இவரும் அமைத்துக் காக்கவில்லை. ஆனால், செல்வாக்கற்ற வல்லாட்சி புரிவோராயுள்ளவர்கள் உறுதியுடன் கூறுவதற்கு அஞ்சத்தக்க ஒரு செயலை இவர் வீரத்தோடு செய்தார். தம் நாட்டுக் குடிமக்கள் எல்லோரையும் படைக்கலம் தாங்கிப் போருக்கு ஆயத்தமாக இருக்குமாறு இவர் அடிக்கடி அவர்களை ஊக்கி வந்தார். 1181-வது ஆண்டு, படைக்கலச் சட்டம் இயற்றப்

பட்டது. அச்சட்டத்தில் மிகத் தாழ்ந்த உரிமைக்குடிமக்கள், கைத்தொழிலாளர்கள் முதல் மிக உயர்ந்த பதவியில் இருந்த அதிகாரிகள் வரையில் ஒவ்வொருவரும், அரசருக்குத் தேவை உண்டாகின்றபொழுது தொண்டு செய்வதற்கு அத்தகைய படைக்கலங்களை ஏந்திப் போரிட ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி மிக விளக்கமாகக் குறிப்பிடப்பட்டது. அச் சட்டத்தின் போக்கு நிலமானியப்படை முறைக்கு எதிரான ஒரு செயல் முறையாக இருந்தது. அதனுடைய அமைப்பு, பண்டைய சாக்சானிய குடிப்படை முறையையும், வருங்காலத்தில் உண்டாகப் போகும் புதிய இங்கிலாந்தின் அமைப்பு இயல்புகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது.

நம் நாட்டு வரலாற்றின் பொழுதுபுலர் காலையில்உண்டான அரசியல் குழப்பங்கள், அஞ்சுவின மரபைச் சேர்ந்த ஹென்றியால் அடக்கி ஒடுக்கப்பட்டது. ஐரோப்பாவில் நிலமானியப் படை முறையைப் பின்பற்றிய நாடுகளில் இத்தகைய அரசியல் குழப்பங்கள் நல்ல நண்பகல் வேளையில்தான் அடக்கி ஒடுக்கப் பட்டன. நம் நாட்டுக்குரிய பொதுச் சட்டத்தின் மூலம் நாடு முழுவதும் அரசரின் அமைதி நிலைநாட்டப்படுவதற்கு ஹென்றியே காரணமாவார். இப்பொதுச் சட்டம் ரோமானியப் பேரரசர்களின் 'சிவில்' சட்டத்திலிருந்து நேரடியாகப் பல கருத்துகளையும் வதிகளையும் கொண்டு அமைக்கப்பட்ட பிறநாட்டுச் சட்ட முறைகளைப்போல் அமைக்கப்படவில்லை. மேலும், அரசரின் விருப்பத்தினைச் சட்டத்தின் அளவுகோலாகக் கொள்ளாது, சட்டத்தையே ஒப்பளவுக் கருவியாகக் கொண்டு இப்பொதுச் சட்டம் இயற்றப்பட்டமை போற்றத்தக்கதாகும்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

சிஸ்டர்சியர்களும் செம்மறியாட்டு மேய்ச்சல் நிலங்களும் — ஆங்கிலேய மடாலய நெறி — ஹென்றியும் பெக்கெட்டும் — திருச்சபைச் சலுகை — பொதுச் சட்டத்தின் தோற்றம் — அரசருடைய நீதிபதிகள் அதிகாரவரம்பினைக் கடத்தல் — தீர்ப்புச் சான்றுளர் குழுவின் தோற்றம் — படைக்கலச் சட்டம் — நிலமானியப்படை முறைக்கு ஐரோப்பாவின் கடப்பாடு.

## இயல் 3

# முதலாம் ரிச்சர்ட்டும் சிலுவைப் போர்களும்

1. ஹூபர்ட்டு வால்டேரும் நடுத்தர வகுப்பினரும்.
2. நிலமானியப் படைமுறையிலிருந்து அரசியல் முறைமைக் கோட்பாட்டின் வளர்ச்சி.
3. அரசர் ஜானும், மாபெரும் பட்டயமும்
4. மூன்றும் ஹென்றியும், சைமான்டிமான்ட்போர்ட்டும்.

அரசர் : 1. முதலாம் ரிச்சர்ட்டு 1189 - 1199 ;
2. ஜான் 1199 - 1216 ;
3. மூன்றாம் ஹென்றி 1216 - 1272.

ஒன்பதாவது, பத்தாவது நூற்றாண்டுகளில் கிறிஸ்துவ உலகினைச் சுற்றிலும் கிழக்கு, வடக்கு, தெற்குப் பகுதிகளில் அதனுடைய பகைவர்கள் சூழ்ந்து முற்றுகையிட்டனர். அம் முற்றுகையின் மூலம் அதனுடைய உரிமைகளைப் பறிக்க முயன்றனர். ஐரோப்பா அக்காலத்துத் தாக்கப்படும் பொருளாக இருந்ததே ஒழிய, பிறரைத் தாக்கும் ஆற்றல் உடையதாக இல்லை. அதைப் போலவே, பிறரால் ஆய்ந்து காணப்படும் பொருளாக இருந்ததே ஒழிய, தானகப் பிறவற்றை ஆய்ந்து காணக்கூடிய நிலையில் இல்லை. சார்லமேனின் காலத்திற்குப் பிறகு அவளுடைய பகைவர்கள், அவளை அச்சுறுத்தவில்லை. மேலும், கடலினை அவள் பயன்படுத்திக் கொள்ளுவதை அவர்கள் மறுக்கவில்லை. அத்துடன் கடற்கரைப் பகுதிகளில் உள்ள அவளுடையஉரிமைகளையும், உடைமைகளையும் அவளுக்கே அவர்கள் அளித்தனர். அதனல் கடல் கடந்த அயல் நாட்டு வாணிகமும், உலக விரிவும் செழிப்பதற் குரிய வாய்ப்புகள் உண்டாயிற்று. இவ்விரு வாய்ப்புகளுமே ஐரோப்பிய மக்களின் தலைவிதியை நிர்ணயித்தது. வட பகுதியில் புறச் சமயத்தைச் சேர்ந்த வைக்கிங்குகள் கடலிலும் கடற்கரைப் பகுதிகளிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். சாரசேனியரின் ஆட்சியின்கீழ் ஸ்பெயின், சிசிலி ஆகியவற்றின் பெரும் பகுதிகள் இருந்து வந்தன. நடுநிலக் கடற்பகுதி முஸ்லீம்களும், வைக்கிங்குகளும், தங்கள் கைத்தொழிலினல் பெருவாழ்வு பெற்றனர். டான்யூப் ஆற்றின் கீழ்ப்பகுதியிலிருந்து புறச் சமய மகேயர்ஸ் (Magyars) ஜெர்மனியின் நடுப் பகுதிக்குப் பேரளவில் சென்று குடியேறினர். அதற்கு அப்பாலுள்ள லொம்பார்டியச் சமவெளியிலும்

அவர்கள் சென்று தங்கினர். மேற்கு ஐரோப்பா வெளியேயுள்ள எல்லா நாடுகளிடத்திருந்தும் கடல் வழியாலும், நில வழியாலும் துண்டிக்கப்பட்டது. கீழைக் கிறிஸ்துவ சமுதாயத்திற்கும், கல்விக்கும் நிலைக்களமாக இருந்த கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்தும் அது துண்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பதினொன்றும், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளின் போக்கில் இந்நிலை முற்றிலும் தலைகீழாக மாற்றப்பட்டது. ஸ்பெயின் மெல்ல மெல்ல வடக்கிலிருந்து தெற்கு வரையுள்ள பகுதிகளைக் கைப்பற்றத் தொடங்கியது. சார்சானியர்களுக்குப் பதிலாக நார்மானியர்கள் சிசிலியை ஆண்டனர். வைக்கிங்குகள் எதிர்த்து போரிடப்பட்டனர்; அல்லது வெறுத்து ஒதுக்கப்பட்டனர். எனவே, அவர்களுடைய சிறப்புமிக்க ஆற்றல் நார்மானியப் படைவீரர்களிடத்து அரசியல் சூழ்ச்சித்திறன் வாய்ந்த அரசியல் விரகர்களிடத்தும் புதுமைப் பொலிவு பெற்று விளங்கத் தொடங்கியது. இவ்வாறு வைக்கிங்குகளின் பேராற்றல் கிறிஸ்துவ வீரப் பெருந்தகைமையின் ஈட்டி முனையாக மாறியது. மாகேயர்கள் கூட ஞான முழுக்குச் செய்யப்பட்டனர். பால்கன் பகுதியில் நடந்த சிலுவைப் போருக்கு மாகேயரின் அரசான ஹங்கேரியைக் கடந்து படைகள் செல்ல அனுமதிக்கப்பட்டன. அப்படைகள் பைசன்ட்டைன் பேரரசைக் (Byzantine Empire) கடந்து, அதற்கப்பால் உள்ள ஆசியாமைனரில் புகுந்து, அதற்கு அப்பால் உள்ள புனித நாட்டினை அடைந்தது. ஜெனோவாவிலும் (Genoa), வெனிஸ்நகரிலும் சிறப்புற்று விளங்கிய இத்தாலிய கடலகக் குடியரசுகளின் கைகளில் கடலாதிக்கம் சென்று சேர்ந்தது. எனவே அவர்கள் சிலுவைப் போர் வீரர்களை லெவாண்ட்டிற்குக் கொண்டு போய் எளிதில் சேர்த்தனர்.[1]

ஐரோப்பாவின் முன்னேற்றத்தில் உண்டான இம் மாபெரும் மாறுதல், பெரிதும் நிலமானியப் படைமுறையினால் சாதிக்கப்பட்ட சாதனையாகும். பல குறைகளையுடையதாக இருந்தபோதிலும் நிலமானியப் படைமுறைக் கிறிஸ்துவ சமயம், அதனுடைய இலட்சியங்களை வைக்கிங்குகளிடத்தும் மாகேயர்களிடத்தும் புகுத்தியதைக் காண்கிறோம். இவ்விரு பழங்குடி மக்களும், அவர்களுடைய சமூக நிலையைக் காட்டிலும் கிறிஸ்துவ சமயத்தை உயர்ந்ததொன்றாகப் போற்றி வரவேற்றனர். இதன் விளைவாக

[1] பார்க்க : படம் : 4.

முஸ்லீம்களின் முன்னேற்றத்தை இது தடுத்து நிறுத்தியது என லாம். இக்காலத்தில் நிலமானியப் படைமுறையைச் சார்ந்த மாவீரர்கள் தங்களுடைய பளுவான ஈட்டியை நல்ல முறையில் திறமையாக வீசுவதற்கு அறிந்திருந்தனர். அப்படி அவர்கள் தங்கள் படைகளைக் கொண்டு போராடத் தொடங்கியபோது, அவர்களுடைய முன்னேற்றத்தை யாராலும் தடுக்க முடியவில்லை. ஆங்கிலேய வில் வீரர்கள் சிறப்புற்று விளங்கத் தொடங்கிய காலம் வரையில், காலாட் படையினர் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகக் கருதப்படவில்லை. பன்னிரண்டாம், பதின்மூன்றும் நூற்றுண்டுகளில் நிலமானியப் படைமுறையின் போர் இயல் ஆதிக்கம், காவல் கற்கோட்டைகளைக் கட்டுவதில் அடைந்த முன்னேற்றமாகிய சிறப்பினைப் பெற்றிருந்தது. நார்மண்டியில் முதலாம் ரிச்சர்ட்டால் கட்டப்பட்ட சட்டோகெய்லார்டு (Chateau Gaillard) என்ற புகழ்மிக்க கோட்டையும், கீழை நாட்டில் சிலுவைப் போர்வீரர்கள் அவ்வப்போது நிறுவிய கோட்டைகளும் சிறப்பு மிககனவாகும். அவை நார்மானியர்கள் இங்கிலாந்தினைக் கைப்பற்றிய காலம் முதல் இதுவரை கட்டிவந்த மண்ணலான மதிலை உடைய அரண்களைக்கொண்ட கோட்டைகளைக் காட்டிலும் பேரளவு திண்மையும் சிறப்பும் மிக்கதாகும். ஸ்டீபன் ஆட்சிக் காலத்து உண்டான அரசியல் குழப்பத்தின்பொழுது நாடெங்கும் முளைத்தெழுந்த சதுரவடிவில் அமைக்கப்பட்ட நிலவறைகளைக் காட்டிலும் இவை பன்மடங்கு உயர்ந்தனவாகும். இப்புதிய போரியல் கட்டடங்களில் நீண்ட பெரும் மதில் சுவர்கள் சிறப்பிடம் பெற்றன. அம்மதில் சுவரைச் சுற்றிலும் இடையிடையே அவற்றைத் தற்காப்பதற்கு வேண்டிய விமானங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தையும் ஒருங்குசேர்க்கும் வகையில் ஒரு நீண்ட பெரிய முற்றம் அமைக்கப்பட்டிருந்தது. இத்தகைய முறையில் அமைந்த தற்காப்பு மிக்க கோட்டை அரணை கான்வே (Conway) கார்னர்வான் (Carnarvon) ஹார்லிட்ச் (Harlech) முதலிய இடங்களில் காணலாம். இவற்றைக் கொண்டே பிளாண்ட்டாஜெனட் அரச மரபினரின் ஆட்சிக் காலத்திய இங்கிலாந்து, வெல்சினைத் தன்னாட்சிக்குட்பட்டதாக அடக்கி வைத்திருந்தது. சசக்ஸில் போடியம் கேசில் (Bodiam Castle) எனப்பட்ட காவல்கோட்டையையும் இங்கிலாந்து உடையதாக இருந்தது.

இவ்வாறு போர் முறையில் பலவகை மாறுதல்களும், முன்னேற்றங்களும் உடையதாகப் பெரிதும் மாற்றப்பட்ட புதிய சூழ்நிலைகளில் நிலமானியப்படைமுறைக் கிறிஸ்துவ சமயம் மீண்டும் தன்னம்பிக்கைக் கொண்டது. அதனல் வெளியில் பரவுவதற்கு

முயற்சி செய்யத் தொடங்கியது. சிலுவைப் போர் வீரர்கள் பக்தி மிக்கவர்களின் கட்டளையை ஏற்றுச் செயலாற்றுவதற்கு ஆயத்தமாக இருந்தனர் அதைப் போலவே போர் வெறி கொண்டவருடைய கட்டளையையும், புதிய நாடுகளைக் கண்டு பிடிக்கவேண்டுமென்ற பேரவாக் கொண்டவர்களின் கட்டளைகளையும், கொள்ளையடிக்க வேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டிருந்தவர்களின் கட்டளையையும் ஒரே சமயத்தில் விருப்புடன் ஏற்றுச் செயலாற்ற அவர்கள் ஆயத்தமாக இருந்தனர். இத் திட்டங்கள் தேசிய உணர்வுமிக்க அரசியல் சூழ்ச்சித்திறன் வாய்ந்தோரின் கொள்கைகள் அன்று. ஆனால் பன்னிரண்டாம், பதின்மூன்றும் நூற்றுண்டுகளில் வாழ்ந்த மக்களின் உண்மையான வாழ்க்கையில், சிறப்பு மிக்கப் பண்புகளையுடையவர்களாகக் கருதப்பட்ட வீரதீரச் செயல் புரியும் மாவீரர்களின் திட்டமே இக்கொள்கைகளாகும். அமைதியற்ற ஆற்றல்மிக்க புதிய ஐரோப்பிய இளமக்களின் ஆற்றல் அனைத்தும் வெளிப்படுவதற்கு உரிய ஒரு வழியாகச் சிலுவைப் போர் அதன் முதல் தோற்றத்தில் காணப்பட்டது. அவ் வமைதியற்ற ஐரோப்பியர்களின் பேராற்றல் உலக உருண்டை முழுவதையுமே ஒரு முறை கீழ்மேலாகச் சுற்றி வருகின்ற வரையில் ஓய்வு பெற்றதாகத் தெரியவில்லை. அவ் வுணர்வே வைக்கிங்குகளுக்குப் பேர் ஊக்கத்தையும் உள்ள உரத்தையும் அளித்தது எனலாம். ஆனால், அது இனி மேல் ஐரோப்பாவின் உயிர்நாடிப் பகுதிகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்படவில்லை. அப்பேராற்றல் அயலவராகிய ஆசியா மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது.

இத்துணிவுமிக்க பேராற்றல் புதிதாகத் திறக்கப்பட்ட டான்யூப் நடுநிலக் கடல் பகுதிப் படைகளின் வழியைத் திருப்பிவிட்டன. இவ்வாற்றலே ஒரு நாள் அட்லாண்டிக் பெருங்கடலையும், பசிபிக் பெருங் கடலையும் கடந்து செல்லத் தூண்டியது. உலகின் வடமேற்கு கோடிப் பகுதியில் உப்பங்கழியின் இடையே இங்கிலாந்து தனித்ததொரு தீவாக இருந்துவந்தது. நெடுங்காலம் தொடர்ந்து ஆங்கிலேய மாவீரர்கள் தனித்தனியே சிலுவைப் போர்களுக்குச் சென்று கொண்டிருந்தனர். ஆனால் பிரான்சில் நடந்ததைப் போல், அது என்றுமே இங்கிலாந்தின் தேசியத் திட்டமாகவோ, மரபாகவோ செயற்படவில்லை. இதற்குரிய காரணம் வெளிப்படையானதாகும். பிரான்சுக்கு நடுநிலக் கடற்கரைப் பகுதியில் உள்ள பல நாடுகளின் பகுதிகள் உடைமைகளாக இருந்து வந்தன. ஆனால், இங்கிலாந்திற்கு நடுநிலக் கடற்கரைப் பகுதியில் ஒரு சிறு பகுதியும் உரிமை யுடையதாக இல்லை என்பது இங்கு நினைவுகூரத் தக்கது.

சிலுவைப் போர்களில் (1095-1099) வெற்றி மிக்க சிலுவைப் போராகவும், முதல் சிலுவைப் போராகவும் நடந்த போரில் இங்கிலாந்து உண்மையிலேயே எத்தகைய பங்கும் பெறவில்லை. இப்போர்களின் பிறகு, போயிலனைச் சேர்ந்த காட்பிரே (Godfrey of Bouillon) எருசலேமை விடுதலைப் பெறச் செய்து, சிரியாவில் பிராங்கிய அரசுகளை அமைத்தார். சிறிது காலத்திற்குள்ளெல்லாம் அவ்வரசுகளில் பெரும்பகுதி சேலடின் ஆட்சிக்குட்பட்டதாக மாறியமையாமல் மூன்றாவது சிலுவைப் போர் மூண்டது. அப் போரில் ரிச்சர்ட்டு சிங்க நெஞ்சினன் (Richard Coeur de Lion) வீர தீரச் செயல்களில் ஈடுபடும் மாவீரர்களுள் மாண்புமிக்கவராகத் தனிப்பட்ட முறையில் (1190-1193) பெரும் புகழும் பெற்றுச் சிறப்புற்றார். அவர் அங்குச் சென்றபோது துணிச்சலான மனநிலையையுடைய ஆங்கிலேயர் பலரைத் தம்முடன் அழைத்துச் சென்றார். ஆனால், பிரபுக்களின் முக்கியமான பெரும்பகுதியினரை உடன் அழைத்துச் செல்லவில்லை. அவ்வாறு அரசரோடு செல்ல வாய்ப்பில்லாமல் தங்கிய அந்தப் பிரபுக்கள்தான் அரசர் இல்லாத காலத்தில் இங்கிலாந்தை ஆட்சி புரிந்துவந்தனர். மூன்றாவது சிலுவைப் போர் ஆங்கிலேயப் பொதுமக்களின் உள்ளத்தே யூதர்களுக்கு எதிராக ஒரு பெரும் கலகம் செய்யப்படுகின்றது என்னும் அதிர்ச்சிமிக்க உணர்வினை உண்டாக்கியது.

ஆனால், சிலுவைப் போர்களினால் இங்கிலாந்தின் நிலைமையில் உண்டான மறைமுக விளைவுகள் பெருஞ்சிறப்புடையனவாகும். ஏனெனில், அப்போர்கள் இடைக்காலக் கிறிஸ்துவ உலகத்தின் மன நிலையைச் சிறப்புறச் செய்ததோடு, விரிவுபடுத்தியமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். மேலைநாட்டில் அரைகுறையாக வளர்ச்சியடைந்திருந்த சமுதாயத்தைச் சார்ந்த ஆற்றல் மிக்க மக்களுள் பலரை, அப்போர்கள் கீழை நாட்டு வாணிகத்தோடும், கலைகளோடும், அறிவியலோடும், அறிவு உலகத்தோடும் பயன்மிக்க தொடர்பினைக் கொள்ளுமாறு செய்தது. பைசண்ட்டைன் நேச நாட்டு மக்களும், சார்சானியப் பகைவரும் அக்கால ஐரோப்பாவில் காணப்பட்ட நாகரிகத்தைவிட மிக்க பழமையானதும், நல்ல வசதிகளையும் சிறப்பியல்புகளையும் உடைய நாகரிகங்களின் வழித்தோன்றல்களாக விளங்கினர். சிரியாவில் பிராங்கியர்கள் அமைத்த குடியேற்றங்களும் துறைமுகங்களும், இவ்விரு கண்டங்களுக்கும் இடையே கடல் வாணிகம் நடைபெறுவதற்குப் பெரும் தூண்டுதலாக அமைந்தது. சிலுவைப் போர்கள் வெனீஸ் நகரினைக் கடல் வாணிகத்தைத் தலைமை தாங்கி நடத்திச் சிறப்படையுமாறு செய்ததோடு, அதனுடைய

செல்வத்தையும் புகழையும் உச்ச நிலையை அடையுமாறு செய்தன. மேலும் அதனுடைய குடிமகனை மார்க்கோ பாலோவும், புகழ்மிக்க இத்தாலிய வாணிகர்களும், சமயத் தொண்டர்களும் ஆசியாவின் இதயம் வரையிலும் சென்றுவந்தனர். சிற்சில சமயங்களில் ஆசியாவின் நெடுந் தொலைவிலுள்ள சீனக் கடற்கரைப் பகுதிகள் வரையிலும் சென்றுவருமாறு செய்தது. அதன் விளைவாகக் கீழைநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அல்லது அவற்றைப் போன்று பின்பற்றிச் செய்யப்பட்ட இன்ப வாழ்வுக்குரிய பல பொருள்களையும், கைத்திறன் வாய்ந்த அரிய பொருள்களையும் இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் பேரளவில் கொண்டுவந்து குவித்தது எனலாம். அக்காலத்தில்தான் மேலை நாட்டினரின் முதிர்ச்சியடையாத மதிநுட்ப ஆர்வம் பல்கலைக் கழகங்களிலும், சமய மரபு இயக்கங்களிலும் உருவாகிக் கொண்டிருந்தது. கீழை நாட்டின் தீவிர ஞானத்தாலும், அறிவியலாலும், ஐரோப்பாவும், இங்கிலாந்தும் பெரிதும் பாதிக்கப்பட்டன. இடைக்கால வாழ்வின் பிற்பகுதியில் பல திறப்பட்ட நிலையில் இருந்த செல்வவாழ்க்கை தாந்தேவும் சாசரும் கண்ட உலகமாக விளங்கியது. சிலுவைப் போர்களுக்கு முன்பு ஐரோப்பா தம்மைத் தாமே தடுத்து நிறுத்திக் கொண்டு இருந்ததைப் போன்று, பிற நாட்டோடு தொடர்பு கொள்ளாத நிலையில் இருந்திருக்குமானால், காட்டுமிராண்டிப் பண்புமிக்க ஐரோப்பா தாந்தேவும் சாசரும் கண்ட உலகமாக இக்காலத்தில் சிறப்புற்றிருக்க முடியாது என்று உறுதியாகக் கூறலாம்.

கீழை நாட்டிலிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டுவந்த பரிசுகள் இத்தகைய சிறப்புடையனவாகும். அதனுடைய ஆர்வம் புனிதக் கல்லறையின் நிலையான விடுதலையை அளிக்கத் தக்க சிறப்பினை யடையவில்லை. மேலும் கிறிஸ்துவ உலகின் சகோதர ஒற்றுமையைத் தந்து, கிறிஸ்துவ உலக நாடுகளுக்கு இடையே ஒற்றுமையை உண்டாக்கவில்லை என்பது சிலுவைப் போர்களைப் பற்றிய கதைகளினால் தெரியவருகிறது. அது மட்டுமல்லாமல் இஸ்லாமிய சமயத்தின் தாக்குதலுக்கு எதிராகச் சிறப்புற்று விளங்கிய நாகரிகத்தின் ஊற்றான பைசண்ட்டைன் பேரரசினை நிலையான முறையில் ஆற்றல் மிக்கதாகப் பலப்படுத்தவில்லை. மேலும் 1203-வது ஆண்டு சிலுவைப் போரில் கலந்து கொண்டவர்கள் தங்களுடைய குறிக்கோள்களை அடைவதற்காகப் பைசண்ட்டைன் பேரரசைமிக்க கீழ்த்தரமான முறையில் நயவஞ்சகமாக ஏமாற்றினர். சிலுவைப் போர் வீரர்கள் கொட்டிய குருதியும், கொண்டிருந்த ஆர்வமும் அவர்களுடைய பிற்கால வழித்தோன்றல்களுக்கு வாணிகத் துறையிலும், கைத்தொழில் வளர்ச்

சியிலும், இன்ப வாழ்வுக்குரிய பொருள்களைப் பெறுவதிலும் பேருதவிபுரிந்தது; மேலும் கண்ணுக்கும் காதுக்கும் பெரு விருந்து அளிக்கத்தக்க காம உணர்வையும், அறிவாற்றலால் உண்டான செருக்கையும் அறிவியலில் தோற்றத்தையும் அவர்களுக்கு அளித்தது எனலாம். இவை அனைத்தும் முதன்முதல் சிலுவைப் போரைப்பற்றி மக்களிடத்து அமைதியாகவும், ஆரவாரமற்ற முறையிலும் ஆர்வத்தைத் தூண்டியவரான பீட்டர் முதலிய முன்னோடிகளால் இழித்தும் பழித்தும் பேசப்பட்டனவாகும். முதன்முதல் சிலுவைப் போர் இயக்கத்தைப் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்த பேரார்வம் வாய்ந்த அவருடைய உள்ளங்கள் எல்லாம் எளிமை நிறைந்தனவாக இருந்தன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தின் அரசர் என்ற வகையில் ரிச்சர்ட்டு (1189-1199) புறக்கணிக்கத்தக்கவராவார். அவர் நெடுங்காலம் இங்கிலாந்தில் இருந்ததே கிடையாது. அவர் பெரிதும் வீர தீரச் செயல்புரியும் நாட்டமுடைய மாவீரராக இருப்பதற்கே பெரு விருப்பம் உடையவராகக் காணப்பட்டார். நாட்டின் ஆட்சியைச் செம்மையாக நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து விட்டு, அவர் நெடுங்காலம் சிலுவைப் போருக்காக இங்கிலாந்தைவிட்டு ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தார். அக்காலத்து அவருடைய தம்பியான ஜான் என்பவரால் இங்கிலாந்து பெருங் குழப்பத்திற்கு ஆளாகி அல்லற்பட்டது. இதற்கு முன்பே துரோகியாகவும், ஒழுக்கமற்றவராகவும் நாட்டு மக்களால் நன்கு அறியப்பட்டிருந்த ஜானிடத்து, அரசர் ரிச்சர்ட்டு தம் கோட்டங்களின் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றார். அந்தக் கோட்டங்கள் அரசின் கருவூலத்திற்குச் சிறிதுகூட வரி செலுத்த வேண்டாததாகவும், அரசின் நீதிபதிகள் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கவேண்டிய தேவையற்றனவாகும் இருந்தன. இது இரண்டாம் ஹென்றியினால் அமைக்கப்பட்ட நேர்முக அரசின் ஆட்சிமுறைக்கு ஒரு பேரிடியாக அமைந்தது. ஆனால், அவ்வாட்சிமுறை இங்கிலாந்தில் நன்கு ஆழ வேரூன்றித் தழைத்து விளங்கிய காரணத்தினால், நாட்டிலே தன் அண்ணனுக்கு எதிராக ஜான் ஒரு பெரும் புரட்சி செய்வதற்குத் திட்டமிட்டு முயன்றபோதும் அவரால் நாட்டு அரசினைச் சிறிதுகூட அசைக்க முடியால் போய்விட்டது. யூபர்ட்டு வால்ட்டர் (Hubert Walter) என்பவரைரிச்சர்ட்டு அப்போதுதான் காண்ட்டர்பரியின் தலைமைக் குருவாக அமர்த்தியதோடு, அரசின் தலைமை அதிகாரியாகவும், ஜஸ்டிசீயராகவும் பணிபுரியுமாறு (1193-1194) கட்டளையிட்டிருந்தார். அதிகாரத்திலிருந்த பிரபுக்

களாலும், லண்டன் மாநகர மக்களாலும், லண்டன் நகரத்து மேய ராலும் பெரிதும் ஆதரிக்கப்பட்ட யூபர்ட், ஜானின் சதித் திட் டத்தை அறிந்து அவரை அடக்கி ஒடுக்கினர். ஆஸ்திரிய அரசி னல் சிறையிலிடப்பட்ட ரிச்சர்ட்டு அரசரைப் பெரும் பொருள் கொடுத்து அவர் விடுதலைபெறச் செய்தார். ரிச்சர்ட்டு அரசர் சிலுவைப் போரில் வெற்றிபெற்றுத் தம் நாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, அவருடன் சிலுவைப் போரில் கலந்து கொண்ட பிறநாட்டு அரசர்கள், அவரை ஆஸ்திரியாவின் சிறை யில் தள்ளினர். ரிச்சர்ட்டு அரசர் இங்கிலாந்து தன்னிடத்தில் கொண்டிருக்கின்ற அன்பிற்கும், பேராற்றலுக்கும் சிறந்த பரிசாக மீண்டும் அதனுடைய பெரும் பொருளை வற்றச் செய்தார். மறு முறையாக தாம் பெற்ற அஞ்சுவின மரபு உரிமையைக் காப்பதற் காக அவர் பிரான்சுக்குப் படையெடுத்துச் சென்றார். சென்றவர் மீண்டும் இங்கிலாந்துக்குத் திரும்பவே யில்லை. ஐந்து ஆண்டு களுக்குப் பிறகு ஒரு கீழ் ஆளுடன் அவர் கொண்ட ஒரு சிறு தக ராறில் (1199) மரணப்புண் பெற்றார். மிகச் சிறிய ஒரு கோட்டை யின் சுவர்களுக்குள்ளே அவர் தம்முடைய கீழ் ஆளினல் தாக்கப் பட்டு உடலில் காயங்களுடன் வீழ்த்தப்பட்டார்.

உண்மையிலேயே ரிச்சர்ட்டு நேரடியாக இங்கிலாந்தை ஆண்டிருந்தால் எப்படியிருந்திருக்குமோ, அதைவிட மிகச் சிறந்த முறையில் யூபர்ட் வால்ட்டர் இங்கிலாந்தை ஆட்சிபுரிந் தார். அவர் நாட்டிலே அரசின் அமைதியை நிலைநாட்டியதோடு, பட்டணங்களிலும் கிராமங்களிலும் உள்ள நடுத்தர மக்களிடத்து நம்பிக்கை கொள்ளும் புதியதொரு திட்டத்தினைத் தொடங்கிச் செயலாற்றிவந்தார். இத்திட்டம் அடுத்த இரு அரசர்களின் ஆட்சிக் காலத்து நடைபெற இருக்கும் மாண்புமிக்க அரசிய லமைப்பின் மாறுதல்களுக்கு முக்கியமாக வழிவகுத்துக்கொடுத் தது எனலாம்.

ரோமானிய பழம்பொருட் சின்னத்தின் மீது சிறப்புற்று விளங்கிய இங்கிலாந்தின் நகரங்களுள் சிலவற்றில்கூட ரோமா னிய நகராட்சியின் எச்சங்கள் (Roman municipia), பிரான்சிலும், இத்தாலிய நகரங்களிலும் இருந்ததைப் போன்று நிலைபெற்றி ருந்தாகத் தெரியவில்லை. இதற்கு ஐயுறத்தக்க விதிவிலக்காக லண்டன் மாநகரையும் வேறு இரு ஆங்கிலேய நகரங்களையும் குறிப்பிடலாம். ஆங்கிலேய நகரங்கள் பெரிதும் சாக்சானியர் காலத்துக் கிராமங்களிலிருந்து அல்லது கோட்டைகளிலிருந்து வளர்ச்சியுற்ற சந்தைப் பட்டணங்களாகவே இருந்தன. எனவே, பன்னிரண்டாம் நூற்றுண்டில் அவை அமைக்கப்பட்டிருந்த நிலங்

களுக்குரிய உரிமையாளர்களுக்கு ஏற்ப அப்பட்டணங்கள் பெரும் நிலக் கிழார்களுக்கு உரியதாகவோ, தலைமைக் குருவுக்கு உரியதாகவோ, அரசர் ஆட்சிக்கு உட்பட்டதாகவோ இருந்து வந்தன. அக் காலத்தில்தான் அவற்றின் விடுதலை யுகம் தொடங்கியது எனலாம். ஆனால், அரசின் நிலப்பகுதியில்தான் அது மிக விரைவில் தொடங்கிற்று எனில் மிகையாகாது.

இரண்டாம் ஹென்றியின் திட்டங்களில் நிலமானியப்படைமுறை தன்னாட்சி உரிமையை ஆதரிப்பதைவிட, நகராட்சி மன்றங்கள் ஆதரிக்கப்படவேண்டுமென்ற நோக்கம் ஒரு சிறிதும் இருந்ததாகத் தெரியவில்லை. அரசரின் நேர்முக ஆதிக்கத்தினை இவ் விரண்டும் வன்முறையில் கைப்பற்றத்தக்கனவாக இருக்கின்றன என்று அவர் ஐயுற்றார். ஆனால் யூபர்ட் வால்ட்டரின் செயல்களிலிருந்து அவருடைய உள்ளக் கருத்தினை நாம் உய்த்துணருவோமானால், அறிவு சிறந்த தலைமைக் குருவும், அரசியல் சூழ்ச்சித் திறமும் வாய்ந்தவர் என்பது புலனாகும். அவர் நிலமானியப் படைமுறைச் சிறப்புரிமைகளில் அரசின் ஆதிக்கம் பலவீனப்படும்போது, நகராட்சி மன்றங்களின் வளர்ச்சியின் மூலம் அரசின் ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்ற நோக்கம் உடையவராக அவர் இருந்திருக்கவேண்டுமென்பது தெரியவருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளின் மூலம் பல பட்டணங்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்வதற்கு உரிய சிறப்புரிமைகளைப் பட்டயங்களின்மூலம் அவர் வழங்கி வந்தார். பழைய ஆங்கிலச் சொல்லான ஆல்டர்மென் (Alderman) என்பதும், பிரான்சிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'மேயர்' என்ற சொல்லும், இடைக்கால இங்கிலாந்தின் பட்டணங்களின் உரிமைகளின் இரட்டைத் தோற்றத்தை நமக்கு அறிவுறுத்துகின்றன. லண்டன் மாநகர மக்கள், தங்கள் செல்வத்திலும் மக்கள் பெருக்கத்திலும், நிலஇயல் நிலையிலும், பெற்றுள்ள சிறப்பு வாய்ந்த ஆதிக்கத்தைக் கண்டு, தனக்கு முன்பு இரண்டாம் ஹென்றி எவ்வாறு அச்சப்பட்டாரோ அதைப் போன்று யூபர்ட்டும் பெரிதும் அஞ்சி நடுங்கினர். ஆயினும், ஜானின் சதியாலோசனை நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்து, தங்களுடைய மேயரைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் உரிமைகளை லண்டன் மாநகர மக்கள் பெற்றனர். தலைமை அதிகாரியை 'மேயர்' என்று அழைப்பது இங்கிலாந்தின் மரபு. ஜான் அரியணை ஏறியபோது, பட்டணங்களுக்கு நகராட்சி உரிமையை விலைக்கு விற்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தியதோடு, அதைப் பேரளவில் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார்.

அரசின் கருவியாக நடுத்தர மக்களை நம்புவதும், பயன் படுத்துவதும் ஆகிய ஹூபர்ட்வால்ட்டரின் திட்டம் கோட்டங்களின் செயல் முறைகளில் சிறப்புற்று விளங்கியது. அறிவுமிக்க ஜஸ்டிஸியர்களால் கோட்டங்களின் செயல்முறைகளைக் கவனிப் பதற்கு நாட்டுப்புறப் பெரு மக்களையும், மேனர் பண்ணைகளில் வேளாண்மைத் தொழிலிலும், அமைதியான செயல்முறை களிலும் ஈடுபட்டு வாழ்ந்துவந்த மாவீரர்களையும் பேரளவில் பயன் படுத்தி வந்தனர். ஆங்கிலேய ஆட்சி முறையின் சிறப்பு மிக்க பண்பு, அரசரின் அமைதியை நாட்டில் நிலை நாட்டுவதற்குக் கோட்டத் தலைவர்களையும் நீதிபதி களையும் முழுவதிலும் நம்புவதேயாகும். பிற்காலத்திய ஐரோப் பிய முறையான மத்திய அரசின் அதிகார இனத்தினரிடத்து நம்பிக்கை கொள்வதைவிட நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள பயிற்சி பெருத பெருமக்களின் தொண்டினைப் பெற்று ஆட்சிபுரிவதே இங்கிலாந்து ஆட்சிமுறையின் சிறப்பியல்பாகும். அத்தகைய ஆட்சிமுறையின் முதல் அறிகுறியை நாம் இங்குக் காண்கிறோம். அத் திட்டம் பிற்காலத்தில் அமைதி காண் நீதிபதிகள் (Justices of Peace) அமர்த்தப்படுவதற்குரிய முழு வளர்ச்சியினைப்பெற்று உச்சநிலையை அடைந்தது. அப்பெயரினால் முதலாம் ரிச்சர்ட்டின் ஆட்சிக் காலத்தில்கூட பெருமக்கள் தங்கள் கடமைகளைச் செய்துவரவில்லை. ஆனால் அண்மைக் காலத்தில் அப் பெருமக்கள் அரசாங்கத்திற்காகக் காரனர்ஸ் (Coroners) என்ற கொலை ஆய்வு அதிகாரிகளாகச் செயலாற்று மாறு வற்புறுத்தப்பட்டனர் என்பதைக் காணுகின்றோம். அதாவது 'காரனர்ஸ்' என்பவர்கள் அரசரின் நீதியை நாட்டிலே நிலைநாட்டவேண்டியவர்களாகக் கருதப்பட்டனர். இதை வேறு வகையில் கூறுவது என்றால் மாவட்டங்களிலும், கோட்டங்களி லும் நீதித்துறை உரிமைகளையும், நிதித்துறை உரிமைகளையும் தற்காத்து வரவேண்டியது அவர்களுடைய கடமைகளாகக் கருதப் பட்டது. அவர்களுடைய தொண்டு எல்லாச் சமயத்திலும் அவர் களே விரும்பிவந்து செய்ததாக அமையவில்லை. உண்மையில் இடைக்கால அரசு, ஆங்கிலேய மக்களைத் தன்னாட்சி முறைக்குரிய பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தச் செய்வதில் ஈடுபடுத்திய செயல்முறையாகவே அது காணப்படு கின்றது. மாவட்டத்தின் தலைவர்களாகிய ஷெரீப்புகளின் அதி காரத்தை அவ்வப்போது சோதிப்பதற்கு மாவீரர்களே சிறந்த கருவியாக அரசினால் கருதப்பட்டது. மாவட்டத் தலைவர்களாகிய ஷெரீப்பு தங்களுடைய பெரும் அதிகாரத்தைத் தவருன வழியில் அடிக்கடி பயன்படுத்தி வந்த காரணத்தினால், அரசரும் மக்களும் ஒருங்கே அவரிடத்தில் ஐயுறவுகொள்ள நேர்ந்தது. எனவே,

மாவட்டத்தின் தலைவருடைய அதிகாரத்தை அவ்வப்போது ஆராய்ந்து கண்காணிப்பதற்கு ஏற்ற கருவியாக மாவீரர்களை அரசு பயன்படுத்தியது எனில், அது தவறாகாது.

'காரனர்ஸ்களை'ப் பதவியில் அமர்த்துகின்ற உரிமையை யூபர்ட்டுவால்ட்டர் தம்முடைய கைகளிலோ, ஷெரீப்பினுடைய கைகளிலோ இருக்குமாறு செய்யவில்லை. அவர் மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கறிஞர்கள்—அதாவது அவ்வட்டாரத்தைச் சேர்ந்த பெருமக்கள்—ஒன்றுசேர்ந்து தங்களைப்போன்று நான்கு பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை மேற்கூறிய 'காரனர்ஸ் களாகப்' பணியாற்றுமாறு செய்வதற்குக் கட்டளையிடும் உரிமையை அவர்களுக்கு யூபர்ட்டு வழங்கினர். இதுவரை கோட்டத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வசதியுள்ள சான்றோர் குழுவினை மேற்கண்ட முறையிலே தேர்ந்தெடுக்கு மாறு அவர் (1194 – 1198) கட்டளையிட்டார். அக்குழு நான்கு மாவீரர்களைக்கொண்ட குழு ஒன்றினால் தேர்ந்தெடுக்கப்படுமாறு செய்தார். அம்மாவீரர்களும் மாவட்ட நீதிமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருந்தனர்.

இவ்வாறுகோட்டங்களின் தனிஆட்சிமுறை நிலப்பிரபுக்களின் மூலமாக நடத்தப்படாது, பெரு மக்களின் மூலமாக நடத்தப் பட்டதைக் காணுகின்றோம். மேலும் இங்கு பிரதிநிதித்துவக் கோட்பாடு பின்பற்றப்பட்டமை சிறப்புமிக்க செய்தியாகும். பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திற்குள், அதாவது சாசர் இயற்றிய முன்னுரை (Prologue) நூலில், தலைவன் பிராங் கிளின் தோன்றுவதற்கு இருநூறு ஆண்டுக் காலத்திற்கு முன்பு, இங்கிலாந்தின் நாட்டுப்புறப் பகுதியில் நடுத்தர வகுப்பு ஒன்று இவ்வாறு தோன்றி வளர்ந்ததைக் காணுகின்றோம். அவ்வகுப்பி னர் பொது அலுவல்களில் தங்கள் கருத்தினைச் செலுத்திய தோடு, தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்து ஊராட்சி நடைமுறைச் செயல்களைச் செய்து வந்ததாகத் தெரி கிறது. வட்டார ஆட்சிமுறைப் பகுதியில் அச்சீரிய பெருமக்க ளால் பிரதிநிதித்துவக் கொள்கை முதன்முதலாகப் பயன் படுத்தப்பட்டது. அம்முறை நாட்டின் பேரளவுகேற்ப தேசியப் பாராளுமன்ற முறையாக விரிவுபடுத்தப்பட்டபோது, இங்கி லாந்திலும், உலகத்திலும் அதைத் தொடர்ந்து மாபெரும் விளைவுகள் உண்டாயின.

ஜான் அரசரின் ஆட்சிக்காலத்து (1199 – 1216) அரசு அளவு மீறிய தொகையினை மக்களிடமிருந்து பெறுவதற்கு முயன்றது

அப்பொழுது நிலப்பிரபுக்கள் நிலமானியப் படைமுறை அமைப்பின் சார்பில் அவரை எதிர்த்தனர். அவ்வெதிர்ப்பு மெல்ல மெல்ல உரிமைக்குடிமக்கள் அனைவரையும் ஒருங்கு சேர்த்து அரசுக்கு எதிராக, அரசியல் அமைப்புக்குக் கீழ்ப்படிந்து செய்யும் எதிர்ப்பாக உருவெடுத்தது. அரசர் தம்முடைய முழு அதிகாரத்தினைக் கொண்டு நாடு முழுவதிலும் பொதுச் சட்டத்தினைப் பற்றிய கருத்தினை மக்களுக்குத் தெளிவுறுத்தினர் ஜானின் ஆட்சிக் காலத்தும் அவருக்குப் பிறகு மூன்றும் ஹென்றியின் ஆட்சிக் காலத்தும் மக்கள் சட்டத்தைப் பற்றிய புதிய, ஒரு வறையறுக்கப்பட்ட கருத்தினைக் கொண்டவர் களாக விளங்கினர்கள். சட்டம் தனக்கு எனத் தனி வழிவகை உடையதென்றும், அது அரசுடைய அதிகாரத்திலிருந்து வேறு பட்டது என்றும், அது அரசனைக் காட்டிலும் உயர்ந்தது என்றும், அரசன் அச்சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து ஆட்சி செய்ய வேண்டுமென்றும் அவர்கள் கருதினர்.

பதின்மூன்றும் நூற்றுண்டு முழுவதிலும் நாம் இக்காலத்தில் கூறுகின்ற அரசியலமைப்புக் கருத்துக்கள் மெல்ல மெல்ல வளர்ந்துகொண்டிருந்தன. ஆனல், அவை நிலையாகத்தொடர்ந்து வளர்ந்து கொண்டிருந்ததைக் காணுகின்றேம். நம்முடைய அரசி யலமைப்புச் சட்டம் நிலமானியப் படைமுறையின் குழந்தை யாகும். அக்குழந்தை பொதுச்சட்டத்தை மணம்புரிந்த பின்னர்ச் சிறப்புற்று விளங்கலாயிற்று. நிலமானியப் படைமுறை வல் லாட்சிக்கு நேர் எதிரானதாகும். நிலமானியப் படைமுறை பெரி தும் கொடுங்கோன்மையாக இருக்கலாம்; சில சமயங்களில் அது குழப்பமும் கொந்தளிப்பும் அராசரிகமும் நிறைந்த வொன்றுகவும் இருக்கலாம். ஆனல், அது எப்போதும் வல்லாட்சியாக இருந்த தில்லை. நிலமானியப் படைமுறை நன்கு வரையறுக்கப்பட்ட உரிமைகளையும் கடமைகளையும் அரசருக்கும் நிலக்கிழார்களுக் கும் இடையே நன்கு பகிர்ந்து அளித்து இருப்பதைக் காணுகின் றேம். நிலப்பிரபுக்களும் மாவீரர்களும் அரசரின் நிலமானியப் படைமுறைச் சட்டத்தாலும், பழக்க வழக்கத்தாலும் நன்கு காக்கப்பட்டனர். மரபுக்கு மாருக எப்போதாகிலும் அரசர் தொண்டையோ, உதவித்தொகையையோ, நன்கொடையையோ பேரளவில் தமக்குக் கொடுக்குமாறு கேட்பாராஞல் அவர்கள் அரசரை நிலமானியப் படைமுறைச் சட்டத்தின்படி எதிர்த்து வரலாயினர். அவ்வெதிர்ப்புத்தான் அரசியலமைப்பு இயக்கத் தின் தோற்றமாகவும், பாராளுமன்ற இயக்கத்தின் தோற்ற மாகவும் அமைந்தது எனலாம். அரசர் தனிப்பட்ட ஒரு வழக்கி னையும் அதற்குரிய தனிப் பிரபுவோடு கலந்தாலோசித்து முடிவு

காண்பதற்குப் பதிலாக, அவர்கள் குழுவாகக் கூடியிருக்கின்ற கவுன்சிலின் மூலமாகவோ பாராளுமன்றத்தின் மூலமாகவோ விரைவில் ஒரு முடிவுக்கு வருவது எளிதாக அவருக்குத் தோன்றியது.

ஆங்கிலேய அரசியலமைப்பு நிலமானியப் படைமுறையிலிருந்து தோன்றியது என்பதற்குஇன்னொரு வகையான பொருள் விளக்கமும் தரப்படுகின்றது. பதின்மூன்றும் நூற்றாண்டில் அரசரின் வல்லாட்சியை எதிர்த்து நடைபெற்ற கிளர்ச்சி வெற்றிபெற்றது. அதற்குக் காரணம் தற்காலத்திய பெரிய தனக்காரர்களைப் போன்று அல்லாமல், நிலமானியப் படைமுறைப் பிரபுக்கள் ஓரளவுக்கு அக்காலம் வரையில் போர் வீரரின் இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்தமையாகும். அவர்களுக்குள் பெரும்பாலோர் போரில் பழகாதவர்களாக இருந்தாலும், அவர்கள் எல்லோரும் போர்க்குதிரைகளையும், சங்கிலி படைக்கலங்களையும் தங்கள் உடைமைகளாகப் பெற்றிருந்தனர். அவர்களுள் சிலர் சிலுவைப் போர்களுக்குச் சென்று திரும்பியவர்களாவர். அவர்களுள் பெரும்பாலோர் தங்கள் பக்கத்தேயுள்ள வெல்ஷ், ஸ்காட்டிய பழங்குடி மக்களோடு தீராதபெரும் பூசல்களை உடையவர்களாக இருந்து வந்தனர். இக்காரணத்தினால்தான் மாக்னா கார்ட்டா (Magna Carta) என்னும் மாபெரும் பட்டயத்தைப் பெறுவதற்குக் காரணமாக இருந்த பிரபுக்களும், சைமன்டி மாண்ட்போர்டு என்பவரின் ஆதரவாளர்களும் அரசருக்கு எதிராகப் போரிடும் ஆற்றல் பெற்றிருந்தனர். எனவேதான் முதலாம் எட்வர்டு அரசர் அச்சுறுத்தியபோது போகன் (Bohun) நிலப்பிரபுவும் பிகாட் (Bigod) நிலப்பிரபுவும் பெரும் நம்பிக்கையோடு அரசருக்கு மறுமொழி கூறினர். அவர்கள் அரசரை நோக்கி 'அரசே! ஆண்டவனின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றோம். நாங்கள் யாரும் போகவும் மாட்டோம்; தூக்குப்போட்டுக் கொள்ளவும் மாட்டோம்' என்று அரசருக்கு மறுமொழி பகர்ந்தனர். முதலாம் சார்லஸிடத்துஇத்தகைய சொற்களை சர் ஜான் ஈலியட் என்றுமே உள்ள உரத்துடன் மறுமொழியாகக் கூறியது இல்லை. பைமும் (Pym), கிராம்வெல்லும், பாராளுமன்ற உறுப்பினர்களாவர். இடைக்காலத்தில் பொதுவாகவும், சட்டப்படியும், தங்களுக்கு உடையதாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வைத்திருந்த படையினைப் பெறுவதற்காகப் புரட்சிப் பாதையில் அடிவைத்துச் செல்ல வேண்டியவர்களானார்கள்.

அரசியலமைப்புத் திட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத் தொடங்கியவர் ஜானே ஆவார். அவர் தவறான தன்னலம் மிக்க கொடிய இயல்பு வாய்ந்த மனிதர் என்பதில் சிறிதும் ஐயமில்லை, அவர் பிறரால் வெறுக்கத்தக்க பண்புடையவராக விளங்கினர். அவர் பிடிவாதம் தந்திரம் மிக்க அறிவாற்றலும் உடையவராக இருந்தமையால், அவருடைய திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்த முடிந்தது. ஆனல், அவருக்குப் பரந்த அரசியல் சூழ்ச்சித் திறனே, எதிர்காலத்தைக் கூர்ந்து அறியக்கூடிய மதி நுட்பமோ இருந்ததாகத் தெரியவில்லை. அவர் நிலமானியப் படைமுறைச் சட்டத்தை வன்முறையில் கூடியவரை பின்பற்றிய காரணத்தினல் அரசின் மதிப்பிற்குரிய ஆட்சி இயந்திரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தி, குடிமக்களாகிய எல்லா வகுப்பினரையும் கசக்கிப் பிழிந்து பொருளை உறிஞ்சி வந்தார். இவ்வாறு துன்புறுத்தப்பட்ட மக்கள் பாமரமக்களாகவும், சமயகுருமார்களாகவும், 'செல்வர்களாகவும், ஏழைகளாகவும், பெரியதனக்காரர்களாகவும், நிலப்பிரபுக்களாகவும் இருந்தார்கள் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். அதற்குப் பிறகு தெளிவற்ற தோல்வியைத் தேடிவந்த செயல்முறைகளில் ஈடுபட்டு, பிரான்சில் எழுச்சி பெற்றுக்கொண்டிருந்த கேபட்டு அரசர்களை (Capet kings) எதிர்த்துத் தம்முடைய மூதாதையரின் சொத்தாகிய அஞ்சுவினத்தைக் காப்பதற்குப் பெரிதும் அவர் முயன்றார். கி. பி 1204ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களுடைய கையிலிருந்த நார்மண்டியை பிலிப்ஸ் அகஸ்டஸ் என்னும் பிரஞ்சு அரசர் கைப்பற்றிக் கொண்டார். இதற்குப் பத்து ஆண்டுகளுக்குப் (1214) பிறகு, பிரான்சுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகளை ஒருங்கு கூட்டித் தாம் இழந்த நாட்டுப் பகுதியைப் பெறுவதற்கு ஜான் ஒரு திட்டமிட்டார். ஆனல் எதிர்பாராத வகையில் இவருடைய கூட்டாளிகளான ஜெர்மானியர்கள் போவினேசில் (Bouvines) தோல்வியுற்ற காரணத்தினல், அவருடைய திட்டங்கள் தவிடுபொடியாயின. இந் நிகழ்ச்சிகளும் நெடுங்காலமாகப் போப்பு ஆண்டவரோடு ஜான் தொடர்ந்து செய்துவந்த போரும் பூசலும், இங்கிலாந்தைக் கிறிஸ்துவ உலகத்தினின்று விலக்கி வைக்கும் தடை விதியைப் போப்பு ஆண்டவர் விதிக்குமாறு செய்தது. இவையனைத்தும் மாக்ன கார்ட்டா என்னும் மாபெரும் பட்டயத்தின் தோற்றத்திற்குச் சிறந்த ஓர் அடித்தளத்தை அமைத்துத் தந்தன. நார்மண்டியின் இழப்பு, ஜானின் மதிப்பினைச் சிதறச் செய்தது. இந்நிகழ்ச்சிக்கு முற்பட்ட இங்கிலாந்தின் அரசர்கள் தங்களுக்கு வேண்டிய ஆற்றலை நார்மண்டியிலிருந்து பெற்றுவந்தனர். ஆனல் இப்போது அது அவருடைய ஆற்றலின்மையைக் காட்டிக்கொடுத்துவிட்டது.

போவினேசி போர், இங்கிலாந்தினை அரசியலமைப்புக்குட்பட்ட ஒரு நாடாக விளங்குமாறு உதவியதோடு, பிலிப்ஸ் அகஸ்டஸ் பேரரசின் ஆட்சியில் பிரான்சு முழுவதும் ஒன்றுபட்ட நாடாக விளங்குவதற்குரிய உரிமையை அளித்தது. கவிதைகளை விரும்பிப் போற்றும் பிரஞ்சு அவைக்களமும் பல்கலைக்கழகமும் பாரிஸிலிருந்த கட்டடக்கலைப் பள்ளிகளும், வீரப் பெருந்தகைமையும் சிலுவைப்போர் புரிகின்ற ஐரோப்பாவின் பண்பாட்டின் நிலைக்களன்களாக விளங்கின. போவினேசி போருக்குப் பிறகு, அரசரின் அவைக்களம் பிரஞ்சு நாட்டு நிலமானியப் படைமுறை மாநிலங்களின் அரசியல் மையமாக விளங்கவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. ஆனால் பிளாண்டாஜெனட் அரச மரபினர் ஆங்கிலேய அரியணையைப் பேராற்றல் வாய்ந்ததாகச்செய்வதற்கு நிறுவிய ஆட்சியியல் நிலையங்களை,வளர்ப்பதில் அது தோல்வியுற்றது. எனவே கிரேஸி, அகின்கோர்ட் ஆகிய இவ்விரு போர்களின் காலத்திலும், பிரஞ்சு முடியாட்சி, ஆங்கிலேயர் மீண்டும் தங்களைவெளியிலிருந்து தாக்குவதற்கு முன்பும், தங்கள் நாட்டின் உள்ளே உள்ள நிலமானியப் படைமுறையினரின் சதித் திட்டங்களால் தாக்கப்படுவதற்கு முன்பும் இங்கிலாந்தின்மீது படையெடுப்பதற்கு அது ஏதுவாயிற்று.

இதற்கிடையில் ஜானின் ஆட்சிக் காலத்தும், மூன்றாம் எட்வர்டு அரசரின் ஆட்சிக் காலத்தும் ஆங்கிலேய அரசர்கள் கடல் கடந்த நாடுகளில் கொண்டிருந்த உடைமைகளின் அளவு பெரிதும் குறைந்துவிட்டது. அவர்களுடைய அஞ்சுவினப் பேரரசு மறைந்தே போயிற்று. ஆனால் அவர்கள் இன்னும் காஸ்கனியையும் (Gascony) போர்டோ (Bordeau) துறைமுகத்தையும் தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்டதாக வைத்திருந்தனர். அத்துடன் கடல் கடந்த நாடுகளோடு வாணிகம் செய்வதற்குரிய ஊக்கத்தையும், இனிய தேறலுக்கும், மாத்தேறலுக்கும் பதிலாக மலிவான சிறந்த 'ஒயின்' என்னும் மதுவினை இங்கிலாந்தின் நடுத்தர வகுப்பினருக்கு வழங்குவதற்கு அது உதவி புரிந்தது. இதனால் நம்முடைய முன்னோர்கள் கதிரவனது ஒளி இல்லாத வானத்தின்கீழ் திராட்சைக் கொடிகளைப் பயிரிடுவதற்கு முயன்ற முயற்சி இறுதியாகக் கைவிடப்பட்டது. காஸ்கனியோடு இங்கிலாந்தின் அரசர்கள் கொண்டிருந்த தொடர்பு, நார்மண்டியோடு அவர்கள் கொண்டிருந்த தொடர்பைப் போன்று மிக நெருக்கமான இயல்புடையதன்று. அக்காலத்தில் நார்மண்டியில் பல காணியாட்சியாளர்களும், பிரபுக்களும் பேரளவில் நிலங்களையோ, உறவினர்களையோ உடையவர்களாக இருந்தனர். நார்மண்டியை இழந்ததற்கும், நூறு

ஆண்டுப் போர் தோன்றுவதற்கும் இடைப்பட்ட இடைக்கால மாகிய 150 ஆண்டுகளில் ஆங்கிலேய அரசர்களும், பிரபுக்களும், மாவீரர்களும் இன்னும் பிரஞ்சு மொழியில் நையாண்டி விரிவுரை செய்துகொண்டிருந்தனர். எனினும் அவர்கள் இங்கிலாந்தில் சிக்கல் மிக்க விவகாரங்களில் பேரார்வம் காட்டத் தலைப்பட்டனர். அவர்கள் இங்கிலாந்திற்கும், வேல்ஷுக்கும், ஸ்காட்லாந்திற்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றியும், இங்கிலாந்தின் சட்ட வளர்ச்சி பற்றியும், இங்கிலாந்தின் பாராளுமன்ற வளர்ச்சி பற்றியும் கருத்துடையவர்களாக வாழத் தொடங்கினர். இவ்வாறு தீவு வாழ்க்கையின் மனப்போக்கை மீண்டும் அவர்கள் விரும்பி ஏற்றுக்கொண்ட செயல், பிரான்சோடு மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்த முறையிலிருந்து நம்மைக் காப்பாற்றியது.

பதின்மூன்றும் நூற்றாண்டு காலத்திய இங்கிலாந்து, பிரான்சு அரசர்களுக்கு எதிராக அஞ்சுவினப் பேரரசைக் காப்பாற்றிக் கொள்ளுவதில் பெரிதும் ஈடுபட்டிருக்குமானால் நம்முடைய தலைவர்களின் ஆற்றலும் எண்ணமும் தேசிய நல்வாழ்வில் அக்கறை கொள்வதிலிருந்தும், உள்நாட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பதில் கருத்தினைச் செலுத்துவதிலிருந்தும் வேறு இடத்திற்கு அவர்களுடைய நோக்கத்தைத் திருப்பி இருக்கும். இறுதியாக 1337 ஆம் ஆண்டு மூன்றும் எட்வர்டு பிரான்சின்மீது படையெடுப்பதை மீண்டும் தொடங்கினர். அக்காலத்தில் ஆங்கிலேயச் சட்டம் நன்கு முயற்சிசெய்து அமைக்கப்பட்டதுடன், பாராளுமன்றமும் விரைந்து தேசிய அமைப்பு முறையில் வளர்ச்சி சிறந்து விளங்கியது. அத்துடன் ஆங்கிலேய மக்களும் மேற்கண்டவற்றின் தனித்தன்மையைப் பற்றித் தெளிந்தஅறிவுடையவர்களாக இருந்தனர்

அரசியலமைப்புச் சட்டப் பெருவழியில் எடுத்து வைக்கப்பட்ட முதல் அடியாக (1215) மாபெரும் பட்டயத்தைக் (Magna Carta) கூறலாம். ரன்னிமேடு என்னும் இடத்தில் அரசர் ஜானிடமிருந்து அப் பட்டயத்தைப் படைக்கலம் ஏந்திய நிலப் பிரபுக்கள் வற்புறுத்திப் பெற்றனர். அப்பிரபுக்களுள் நாம் அறிந்த வரையில் ஒருவர்கூட சிறப்பு மிக்க மனிதர் அல்லர். ஆனால், அவர்களுடைய கூட்டாளியான ஆர்ச் பிஷப் ஸ்டீபன் லாங்டன் அறவொழுக்கச் சிறப்பியல்பும், அறிவாற்றல் சிறப்பியல்பும் ஒருங்கே அமையப் பெற்றவராக இருந்தார். பெரும் மனிதர்களுக்குள் எல்லாம் அவரே மிகப் பெரியவராக விளங்கினர். ஏனெனில், மூன்றுவது போப்பு இன்னொசென்ட் என்னும் போப்பு

ஆண்டவர் விருப்பத்திற்கு மாருக ஆர்ச் பிஷப் தம்முடைய ஆதரவை அரசியலமைப்புச் சட்டக் கொள்கைக்குத் தந்துதவினர் 1213வது ஆண்டு ஜான் மிகத்தாழ்மையோடு பணிந்த பொழுதும், இதற்குப் பதிலாக அவர் ஜானுக்கும் அவர் குடிகளுக்கும் இடையே உண்டான பூசல்களின் போதும், அவர் அரசரை ஆதரித்துவந்தார். அத்துடன் மாபெரும் பட்டயத்தைப் பயன் அற்றது என்றும், வீணனது என்றும் அவர் அறிவித்தார். காண்ட்டர்பரி ஆர்ச் பிஷப்பாக ஸ்டீபன் லாங்டனைத் தேர்ந்தெடுக்கப் படுவதற்குப் போப்பின் பேராதரவு காரணமாக இருந்தது. இதை நாம் கூர்ந்து நோக்குகின்றபோது, இங்கிலாந்தின் அரசியல் சிக்கலில் அவர் உறுதியாகப் பொறுப்பேற்றுப் போராடியது இருவகைச் சிறப்புடையதாக விளங்கியதைக் காணுகின்றோம்.

தொடர்ந்துவரும் நூற்ருண்டுகளில் 'நமது மகிழ்ச்சிக்குரிய அரசியலமைப்பு' வளர்ந்துகொண்டிருந்த காலத்து, இங்கிலாந்தின்பிற வகுப்பினரும் கட்சியினரும் தங்களுடைய உரிமையைநிலை நாட்டிக்கொள்ள முயன்று செயல்முறையில் உடன்பாட்டுக்கு வந்தனர். அதைப்போன்று ஒரு சிறிதும் கூடுதலாகவோ, குறைவாகவோ இல்லாமல் நிலப்பிரபுக்கள் அனைவரும் தன்னலத்தோடும் வகுப்புஉணர்வோடும் தங்கள் உரிமையைப் பெறுவதற்குமுயன்று கொண்டிருந்தனர். மாபெரும் பட்டயத்தில் இலட்சிய நோக்குடன் தவருக விளக்கம் தரப்பட்ட கருத்துகள் சில, ஸ்டூவர்ட்டு அனைவரிய அரசகுடும்பங்கள் ஆட்சிபுரிந்த காலத்தில் நாட்டிலே பெரிதும் செல்வாக்குற்றன. எடுத்துக்காட்டாக மாபெரும் பட்டயத்தின் முப்பத்தொன்பதாவது விதி மிகமிகத் தாழ்ந்த உட்குடிக்குக் கூடத் தீர்ப்புச் சான்ருளர் குழுவின் மூலம் வழக்கு விசாரணை செய்யவேண்டுமென்றும், 12, 14 வது விதிகளின் படி தேசியப்பாராளுமன்றத்தில் எல்லா வரிகளும் வாக்குக்கு விடப் படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதைப்போன்றே அப்பிரபுக்களும், நிலப்பிரபுக்களும் குறிக்கோள் விளக்கமாகத் தவருன வகையில் விளக்கப்பட்ட கருத்துகளைப் புரிந்துகொள்ளுமாறு செய்திருந்தால் அவர்களும் வாய்நிறைய ஆணையிட்டு உறுதிமொழி கூறியிருப்பார்கள். அவர்களுடைய உரிமை வேண்டுகோள்கள் மிக்க குறைந்த அளவினதாகவும், செயல்படுத்தத் தக்கனவாகவும் இருந்தன. அக்காரணத்திஞல் தான் அவர்கள் ஓர் இயக்கத்தை வெற்றியுடன் தொடங்கினர். அதன் விளைவாக இறுதியில் நாம் எல்லோரும் கனவிலும் கருதமுடியாத உரிமைகளைப்பெற முடிந்தது.

அரசர் நிலமானியப் படைமுறை நிகழ்ச்சிகளைத் தவருன வகையில் பயன்படுத்திக் கொள்வதைத் தடுப்பதற்கும் அவருடைய நிலங்களிலிருந்து நிலமானியப் படைமுறை மரபின்படி உதவித் தொகைகளையும், நன்கொடைகளையும் அவர் பெறுவதைத் தடுப்பதற்கும் பிரபுக்கள் ஒன்று கூடினர். ஆனால், பெரு நிலக் கிழாரான அரசரை எதிர்த்துக் கொடுமைப் படுத்தப்பட்ட உயர் வகுப்பினராகிய பிரபுக்கள் 'குத்தகைதாரர்களுக்குரிய உரிமையைப்' பெறுவதற்குத் தொடங்கிய இயக்கம் என்று அழைக்கப்படுகின்றது. ஆனால், அரசர் நேர்மையற்ற முறையில் பிரபுக்களைக் கசக்கிப் பிழிந்து பெற்ற பொருளில் பெரும் பகுதி, பிரபுக்களால் அவர்களுக்குக் கீழே இருக்கின்ற வகுப்பினரிடமிருந்து உறிஞ்சப்பட்ட பொருள் என்பதை நாம் இங்கு நினைவுகூரவேண்டும். தங்கள் வழக்கு மன்றங்களிலிருந்து ஒரு வழக்குக்குப் பிறகு மற்றொரு வழக்காக அரசரின் நீதிமன்றத்திற்கு மாற்றுவதன் மூலம் அரசரின் முழு அதிகாரத்தினைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று நிலப்பிரபுக்கள் விரும்பினர். அவ்வழக்குகளை நிலப்பிரபுக்களின் மன்றங்களிலிருந்து அரசர் தம்முடைய சிறப்புக் கட்டளைகளின் மூலமாகத் தம்முடைய நீதிமன்றத்திற்கு மாற்றிக் கொள்வதை அவர்கள் விரும்பவில்லை. நான் முதலில் கூறிய காரணத்தைக் காட்டிலும் இந்நோக்கத்திற்காக நிலப்பிரபுக்களிடத்து நாம் ஓரளவுக்கு இரக்கம் காட்டலாம். ஆனால், அக்காலச் சூழ்நிலையைக் கூர்ந்து நோக்குகின்றபோது, அரசரின் முழு அதிகாரம் அக்காலத்துக் குறைக்கப்பட்டது அல்லது தேசிய மயமாக்கப்பட்டதைக் காணுகின்றோம். பிரபுக்களை அல்லாமல் வேறு யாரும் அத்தகைய இயக்கத்தினைச் செயற்படுத்தி, விரும்பிய பயனை அடைந்திருக்க முடியாது.

தன்னுடைய நிலப்பிரபுக்கள் ஆகிய கூட்டாளிகளுக்கு ஸ்டீபன் லாங்டன் அறிவாற்றல் மிக்க வழிகாட்டியாக விளங்கினர். ஆனால், அக்காலத்திய சூழ்நிலையில் அவர் பிரபுக்களுக்குத் துணையாக இல்லாமல் இருந்திருந்தாலும் இங்கிலாந்தின் நிலப்பிரபுக்களை உண்மையான முன்னேற்றப் பாதையில் கொண்டு செலுத்தியிருக்கும். பிளாண்ட்டாஜெனட் அரசின் ஆட்சி அமைப்பின் பேராற்றல், தூய்மையான நிலமானியப் படைமுறைக்கு மீண்டும் இங்கிலாந்தினைச் செல்லவொட்டாது தடுத்தது எனலாம். மேலும் நிலப்பிரபுக்களும் தங்கள் உள்ளத்தில் அத்தகைய எண்ணங்களை உடைவர்களாக இருந்ததாகத் தெரியவில்லை. தங்கள் வாழ்வின் ஒரு பகுதியாகவும், தங்கள் இனவாழ்வின் பகுதியாகவும் மாறிவிட்ட இரண்டாம்

ஹென்றியின் ஆக்கப்பணிகள் அனைத்தையும் நிலப்பிரபுக்கள் அழித்து விடவேண்டுமென்ற விருப்பம் உடையவர்களாக இல்லை. அவர்கள் அம்முறையை அழிக்கமுடியாது என்பதை நன்கு அறிந்திருந்த காரணத்தினால், அம் முறையை யாதாகிலும் ஒருவகைக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி நடப்பதற்குரிய சில முறைகளைக் கையாண்டு, அதன்மூலம் ஒரு தனி மனிதனின் விருப்பத்தின் கருவியாக அது செயல்படுவதைத் தடுத்து நிறுத்த அவர்கள் விரும்பினர்.

இங்கிலாந்தில் நூறு ஆண்டுகளுக்கு முன்பும், இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகளிலும் இக் காலத்திலும் நிலப் பிரபுக்களினுடைய நோக்கம் எல்லாம் தங்களுடைய தனி உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளுவதிலும் தங்களுக்குரிய சிறப்புரிமைகளில் அரசரின் அதிகாரிகள் தலையிடா வண்ணம் தடுத்து, தங்கள் பண்ணைகளைத் தாங்களே காத்துக் கொள்ளுவதிலும் இருந்து வந்தது. ஆனால், இரண்டாம் ஹென்றிக்குப் பிறகு இங்கிலாந்தில் அதைப்பற்றி அவர்கள் கனவில்கூட கருதமுடியாமல் போய்விட்டது. மாபெரும் பட்டயத்தில் அறிவிக்கப்பட்ட புதிய ஆங்கிலேயப் பிரதிநிதித்துவக் கொள்கை, பொது உரிமைகளைப் பெறுவதற்கு உரியனவாகக் காணப்பட்டது. மேலும் பொதுச் சட்டத்தின் மூலமும், பிரபுக்களின் சங்கங்களின் மூலமும், பிரபுக்கள் பிற வகுப்பினரோடு கொள்ளுகின்ற நேச உணர்வின் மூலமும், அரசரின் அதிகாரத்தைக் கட்டுப் படுத்துவதாகவும் காணப்படுகின்றது. இப் பிரபுக்கள் 'கடமையாற்றுப் பணமோ, உதவித் தொகையோ நம்முடைய நாட்டின் மீது அளவுகடந்த முறையில் விதிக்க நம்முடைய அரசர் பொதுக் குழுவின் இசைவினைப் பெற்றுத்தான் செய்ய வேண்டுமென்று' அரசரிடமிருந்து அச்சுறுத்திப் புகழ்மிக்க சிறப்புரிமைகளைப் பெற்றனர். அவை யாவும் நிலமானியப் படைமுறைத் தலைமைக் குத்தகையாளர்கள் சங்கத்தின் நோக்கமாகக் காணப்படுகின்றன. 'இதைப் போன்று லண்டன் மாநகரிலிருந்து பெறவிரும்பும் உதவித் தொகைக்கும் செய்யப்படவேண்டுமென்ற' விதியும் அதில் இடம் பெற்றுள்ளது. 'பொதுக்குழு' என்பதைத் தலைமைக் குத்தகைக்காரர்களின் சங்கமாக விளங்கிய நிலமானியப் படைமுறை அமைப்பாக அதை வரையறுத்துள்ளனர். இருந்தபோதிலும் பாராளுமன்றக் கோட்பாடுகளை நோக்கி அப் பிரபுக்கள் இதன் மூலம் ஒரு படி முன்னேறினர். அதைப் போன்றே 'மக்களின் இசைவு பெறாது வரி விதித்தல்' என்னும் கோட்பாட்டினைப் பின்பற்றத் தொடங்கினர். இது முன்னேற்றப் பாதையில் தொடங்கிய மிகக் குறுகிய பயணமாகும். ஆயினும்

அது முன்னேற்றப் பாதையில் தொடங்கிய முதற்பயணம் என்பதை மறுத்தலாகாது. எப்போதும் முதல் முயற்சிதான் சிறப்பு மிக்கதாகப் போற்றப்படும்.

இரண்டாம் ஹென்றியின் மகனை ஜானை எதிர்த்து ரன்னிமேட்டைச் சேர்ந்த நிலப் பிரபுக்கள் கிளர்ச்சி செய்வதற்கு வேண்டிய ஆற்றல் அற்றவர்களாகவே இருந்தனர். ஆனால் ஜானால் துன்புறுத்தப்பட்டுப் பண்ணைகளிலிருந்து வெளியேற்றப் பட்ட பிற வகுப்பினரைச் சேர்ந்த மக்களுடைய உதவியைப் பெற்று, நிலப் பிரபுக்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். லண்டன் மாநகர மக்கள் தங்களுடைய நகரின் தலைவாயிலை இப் பிரபுக்களின் படைகளுக்குத் திறந்துவிட்டனர். அத்துடன் அவர்கள் போரில் அணிவகுத்துப் போர்களத்திற்குச் சென்றனர். குருமார்கள் தங்களுடைய அற இயல் ஆதரவையும், அரசியல் ஆதரவையும் தந்து உதவினர். ஒரு பொருட்டாகக் கருதப்படாத உட்குடிகளுக்கு மேல்நிலையிலிருந்த உரிமைக் குடிமக்கள் அனைவரும் முழுப்பற்ற இரக்கத்தைத் தந்து உதவினர். இரண்டாம் ஹென்றி பிரபுக்களின் கலகங்களுக்கு எதிராகத் தம்முடைய உரிமையாளர்களைக்கொண்ட குடிப்படையைப் படைகள் சட்டத்தின்படி அழைத்திருப்பார். ஆனால், ஜான் அரசர் தம்முடைய குடிப்படையைப் பிரபுக்களுக்கு எதிராகப் போராடுமாறு அழைப்பது பயனற்றுப்போயிற்று. ஆங்கிலேய மக்கள் முதன் முதலாக அரசுக்கு எதிராக நிலப் பிரபுக்களை ஆதரித்தனர். அந்த விருப்பத்தின் மூலம் நிலமானியப் படைமுறை அரசியல் குழப்பம் மீண்டும் தலையெடுக்குமோ என்ற அச்சமின்றி அவர்கள் வாழமுடியும் என்ற நம்பிக்கையால், அவர்கள் அரசருக்கு எதிராக ஆதரவு தந்தனர் எனலாம்.

இவ்வியக்கத்திற்கு உதவியாகவும், தூண்டுகோலாகவும் இருந்த ஒவ்வொரு வகுப்பினரும் மாபெரும் பட்டயத்தின் விதிகளுள் தங்களுக்குரிய பங்காகப் பல நன்மைகளைப்பெற்றனர். இக்கருத்தின் அடிப்படையில் அப்பட்டயத்தை நாம் தேசியப் பட்டயமாகக் கூறலாம். ஆனால், மக்களின் சார்பாகவோ, தேசிய இனத்தின் சார்பாகவோ, ஓர் உரிமையும் வேண்டப் படவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், பொதுமக்கள் உள்ளத்தில் இவ்விதிகளால் பயன் விளையும் என்ற நம்பிக்கை உண்டாகாததே இதற்குக் காரணமாகும். எல்லா உரிமைக் குடிமக்களுக்கும் அரசின் அதிகாரிகளுக்கு எதிராகப் பாதுகாப்பும் நீதி முறைக்குட்பட்ட வழக்கு விசாரணை உரிமையும் இதனால் வழங்கப்பட்டது. 1215ஆம் ஆண்டில்

வரையறுக்கப்பட்ட எல்லையினையுடையதாக அந்தப் பட்டயம் இருந்தது. ஆனால், அடுத்து வந்த 300 ஆண்டுக் காலத்திய பொருளாதாரத்துறையிலும், சட்டயியல் துறையிலும் உண்டான பரிணாம வளர்ச்சியால் நாட்டிலிருந்த ஒவ்வொரு உட்குடியின் மரபிலே வந்த வழித்தோன்றல் அனைவருக்கும் இவ்வுரிமைகள் வழங்கப்பட்டன. பிற்காலத்தில் சட்டத்தின் முன்னால் எல்லா ஆங்கிலேயர்களும் 'உரிமைக் குடிமக்களாகவே' கருதப் பட்டனர்.

மாபெரும் பட்டயத்தின் பல விதிகள் தனி மனிதனின் உரிமை வேட்கையை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இங்கிலாந்தில் அப்பட்டயம் வழங்கப்பட்ட காலம் முதல், அது தனி மனிதனின் உரிமையை நிலைநாட்டுவதற்கு வழங்கப்பட்டதென்றே நம்பப்பட்டு வருகிறது. இந்த வீறுமிக்க சொற்கள், மீண்டும் மீண்டும் பல நூற்றாண்டுகள் வரையில் திரும்பத் திரும்ப (அச்சொற்களின் நுட்பமான பொருளை உணராத) மக்களால் கூறப்பட்டுவந்த காரணத்தினால், தேசிய இனப்பண்பினை உருவாக்குவதற்கு அவை பேருதவி புரிந்தன. ஆனால், அச்சொற்களின் நுட்பமான பொருளை முதன்முதல் இந்தப் பட்டயத்தை எழுதிய மக்கள்தான் அறிவார்கள். பிற்காலத்து மக்கள் தங்கள் வாழ்க்கைக்கும், சூழ்நிலைக்குமேற்ப அவற்றுக்கு புத்தம் புதிய விளக்கங்கள் தந்தனரெனில் அது மிகையாகாது:

> 'எந்த உரிமைக் குடிமகனையும் சிறைப்பிடிக்கவோ, கொலை செய்யவோ, நாடு கடத்தவோ, கைப்பற்றவோ, காப்பாற்றவோ மாட்டோம். நாங்கள் அவன்மீது ஆட்களை ஏவவும் மாட்டோம். மேலும் பிரபுக்களின் சட்டத்திற்குட்பட்ட முடிவுக்கு இணங்கியும், நாட்டின் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டும் அவ்வுரிமைக் குடிமக்கள் யாரையும் சிறைப் பிடிக்குமாறு ஆட்களை அனுப்பமாட்டோம்'.

இதைப்போன்ற எண்ணற்றவிதிகள் அரசரின் காடுகளிலும், நாட்டிலும் நடமாடிய சட்டத்திற்கு உட்பட்டதாய்க் கொடுமை நிறைந்த அரசாங்க அதிகாரிகளின் உரிமையைக் கண்டிப்பாகவும், அவர்களுடைய கொடுஞ்செயல்களைத் தடுத்து நிறுத்துவனவாகவும் அமைந்துள்ளன. அந்த அரசாங்க அதிகாரிகளுடைய கொடுமைகளைப் பொறுமையோடு பொறுத்துக் கொண்டிருந்தால், ஐரோப்பிய நாடுகளில் காணப்படுகின்ற மிக இழிந்த ஆட்சித்துறைச் சட்ட (Droit administratif) மரபு இந்த நாட்டிலும் தோன்றியிருக்கும்.

தற்காலிகமான துன்பங்களுக்கு இப்பட்டயம் நிலையான, செயல் முறையில் வெற்றி பெறக்கூடிய, பரிகாரங்களை வழங்கிய காரணத்தினால், இப்பட்டயம் முக்கியம் வாய்ந்ததாகப் போற்றப் படுகிறது. பிற்காலத் தலைமுறையினர் நம்பியதைவிட மிகக் குறைந்த அளவில்தான் இப்பட்டயத்தின் விதிகள் கருத்துச் செறிவுடையனவாக இருந்தன. ஆனால், ரன்னிமேடு என்னும் இடத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி, வரலாற்றிலேயே மாபெரும் செல் வாக்கினைப் பெற்றதன் விளைவாக, கருத்தியல் முறையில் பொதுப் பண்பு நிறைந்த ஒன்றாக இந்தப் பட்டயம் அமைந்திருக் கிறது. நிலமானியப் படைமுறைப் பிற்போக்கு விதிகளின் எதிர்ப்புக் கிளர்ச்சியினால், அரசர் ஒழுங்கு முறைக்குக் கொண்டு வரப்படவில்லை. அதற்குமாறாக நிலப்பிரபுக்களின் தலைமையின் கீழ்க் கூடிய நிலக்கிழார்களின் சமூகம் அரசரை எதிர்த்து, கிளர்ச்சி செய்து வெற்றி பெற்றதைக் காணுகின்றோம். இது வரையில் நாட்டின் சட்டத்தைத் தன்னுடைய சிறப்பு உரிமைக் கும், விருப்பத்திற்கு மேற்ற வகையில் பயன்படுத்துவதையும், விதிகளை மாற்றுவதையும் தனது பொழுதுபோக்காக கொண் டிருந்த கொடுங்கோலனை, மக்கள் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு ஆட்சி புரியுமாறு மாற்றியமைத்தனர். இவ்வாறு தொடங்கிய இம்முறை அரசரின் அதிகாரங்களையெல்லாம் மக்கள் சமூகத் தின் கைகளில் பேரளவில் ஒப்படைப்பதன்மூலம் ஒருவாறு முடிவுற்றது.

இதற்குப் பிற்பட்ட காலம் முழுவதிலும் மனிதருடைய உரிமையைப்பற்றி ஒன்றுமே அறியாத பாமர மக்களிடத்து ஆழ்ந்த நிலையான செல்வாக்கினை இப்பட்டயம் பெற்றது. பொதுப்படையான கருத்துகளையும், நுட்பமான உரிமைப் பிரச்சினைகளையும் விளக்கும்வகையில் இப்பட்டயம் அமைந்திருந்த மையால் மக்களிடையே பெருஞ்செல்வாக்குப் பெற்றது. பிற் காலத்தில் வழங்கப்பட்ட 'மக்களின் உரிமை' அறிக்கை (Rights of Man) பொதுப்படையான கருத்துகளைத் தன் னகத்தே கொண்டிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இந் தப் பட்டயம் மக்களுடைய கற்பனையில் ஆழ்ந்த, நிலையான செல்வாக்கினைப் பெற்றிருப்பது முற்றிலும் உண்மையாகும். பதின்மூன்றும் நூற்றாண்டு முழுவதிலும் இப்பட்டயத்தினைத் திருப்பி வழங்குமாறும், அதைச் செயலில் விரைவாகப் பின்பற்று மாறும், சில விதிகளை மாற்றியமைக்குமாறும் 'பட்டயத்திற்காகப் போராட்டம்' நடைபெற்றது. இப்பட்டயத்தின் விதிகளைமீறி நடப்பதைக் கண்டித்தும் கட்சிகள் பல போராட்டங்கள் நடத் தின. இவ்வாறு இப்பட்டயம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த

தாக விளங்கியது. இப்பட்டயத்தில் பன்னிரண்டாவது, பதினான்காவது விதிகளில் கூறப்பட்ட நிலமானியப் படைமுறை ‘உடன்பாட்டிலிருந்து’- இருதிறத்தினரின் கருத்துகளும் பெரிதும் விலகிப் போனதைக் காணுகின்றோம். இவ்வாறு மக்களுடைய நோக்கம் மிக விரிந்த குறிக்கோளான தேசியப் பாராளுமன்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஆனால், எட்வர்டு அரசர் காலத்தில் பாராளு மன்றம் முழுவடிவில் அமைக்கப்படும்வரை இப் பட்டயம் மக்களின் எண்ணங்களில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் அதனுடைய பணி முற்றிலும் செயல்படுத்தப்பட்ட காரணத்தினால், முக்கியத்துவ மற்றதாகப் போயிற்று. ஒரு காலத்து இப் பட்டயம் மக்களுடைய உள்ளங்களையெல்லாம் கொள்ளைகொண்டிருந்ததைப் போன்று, பாராளு மன்றம் இக் காலத்திய மக்களின் உள்ளங்களில் சிறப்பிடம் பெற்றதைக் காணுகின்றோம். பிற்காலப் படி எழுதுவோரும், முதன் முதலாக அச்சிட்டு வழங்கியவர்களும் இம் மாபெரும் பட்டயத்தின் சிறந்த ஆங்கில மொழிபெயர்ப்பினை வெளியிடுவதற்கு முன் வரவில்லை. டியூடர்களின் ஆட்சிக் காலத்தில் இப் பட்டயம் வழக்கு இறந்த ஒன்றாகக் கருதப் பட்டது. ஏனென்றால், இப்பட்டயத்தில் அரசனுக்கும் மக்களுக்கும் இடையே அவர்களுக்குரிய நலன்களை வேறுபடுத்தி உணர்த்தியமையால் டியூடர்கள் காலத்திய மக்கள் இம்மாபெரும் பட்டயத்தை வெறுத்தொதுக்கினர். பதினாறும் நூற்றாண்டு முழுவதிலும் அரசரும் மக்களும் தங்களுடைய தனி நன்மைகளை வேறுபடுத்திக் காட்டுவதை மறுப்பதில் பேரார்வம் காட்டலாயினர். ஷேக்ஸ்பியர் இயற்றிய அரசர் ஜான் (King John) என்னும் நாடகத்தால், அந்நாடக ஆசிரியர் மாபெரும் பட்டயத்தைப் பற்றிச் சிறிதுகூட அறியவில்லை என்பதும், அதைப்பற்றி அறிந்துகொள்ள அவர் கவலைப்படவில்லை என்பதும் புலனாகின்றது. ஆனால், இரண்டாம் ரிச்சர்ட்டின் பதவி நீக்கத்தைப் பற்றியும், அவருடைய இறப்பைப்பற்றியும் மிக விளக்கமாக அவலச் சுவை ததும்ப அவர் நாடகம் எழுதியிருப்பதை நாடறியும்.

ஆனால், முதலாம் ஜேம்ஸ் ஆட்சிக் காலத்தில் அரசரும் மக்களும் ஒருவரையொருவர் எதிர்க்கத் தொடங்கினர். இங்கிலையில் பழமைச் சிறப்பைவிட புதுமைப் பொலிவுடன் மாபெரும் பட்டயம் மக்களிடையே செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தது. பழமை

அறிஞர்களும் வழக்கு அறிஞர்களும் கோக்கின் (Coke) காலத்திலும் செல்டன் (Selden) காலத்திலும் நம்முடைய பாராளுமன்ற உரிமைகளை வற்புறுத்தியபொழுது, காலம் என்னும் மூடுபனிக்கிடையே தெளிவு இல்லாது மாபெரும் தோற்றத்துடன் விளங்குகின்ற பட்டயத்தை அவர்கள் ஆங்கிலேயரின் உரிமைத்தேவதையாக நோக்கினர். அவர்கள் அப் பட்டயத்தின் விதிகளைத் தவருகப் புரிந்துகொண்டு விளக்கம் தந்தமை, அக் காலத்திய உரிமைக் கோட்பாட்டிற்குப் பெரிதும் பயனுடையதாக இருந்தது. இக் காலத்திய இடைக்கால மக்களுக்கு அது பெரும் வியப்பூட்டியதைவிட அவர்களுக்குப் பெரும் பயனுடையதாக இருந்தது.

பதினெட்டாம் நூற்றுண்டு, மக்களின் குறித்த நோக்கும், எதிர்க்க முடியாத பட்டய உரிமைகளையும் பெற்ற ஒரு சிறப்புமிக்க காலமாகும். அக்காலத்தில் எல்லாப் பட்டயங்களிலும் மிகப் பெரிதாகக் கருதப்படும் இம் மாபெரும் பட்டயத்தைப் பிளாக்ஸ்டனும் (Blackstone), பர்க்கும் (Burke) இங்கிலாந்து முழுவதும் போற்றி வழிபட்டதைக் காணுகின்றோம். நம்முடைய அரசியல் அமைப்புச்சட்டங்கள் அனைத்திற்குமுரிய உயிர்நாடியின் அறிகுறியாக அது மாறியது. எனவே, முயற்சி மிக்க ஒரு பொது ஊழி தோன்றத் தொடங்கியவுடனே, நன்கு நிறுவப்பட்ட முறைக்கு மாருக மக்கள் ஆட்சி அதனுடைய இடத்தைக் கைப்பற்றியதோடு வெற்றியும் பெற்றது எனலாம். இவ்வாறு போரிட்ட இருதிறத்தினரும் தங்களுடைய பேழையில் மாபெரும் பட்டயத்தை வைத்துப் போர்க்களத்திற்கு எடுத்துச் சென்றனர். பிட்டிடீஸ் (Pittites) என்பவர் உரிமை மிக்க ஆற்றல் பொருந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ரன்னிமேடின் (Runnymede) பாசறையில் இருந்து வழங்கப்பட்டது என்று பெருமையடித்துகொண்டார். அத்தகைய மாபெரும் பட்டயத்தை ஒன்றுக்கும் உதவாதவர்களாகிய யாக்கோவியர்களும் (Jacobins), லெவல்லர்களும் (Levellers)[1] இப்போது தாக்குவது பொருளற்றதென்று அவர் கூறினர். தீவிரவாதிகள் மாபெரும் பட்டயத்தின் சொற் பொருளையும், அதன் நோக்கத்தையும் மக்கள் மன்றத்தில் தெளிவாக உணர்த்துவதன் மூலம், காட்டுமிராண்டித்தனமாகக் கூச்சலிட்டுக்கொண்டு இருப்பவர்களுடைய செயல்களையும், பேரளவில் குழுமி இருக்கின்ற நீதிபதிகளுடைய செயல்களையும்,

[1] சமநிலைப்படுத்துவோர் என்னும் பொருளுடைய லெவல்லர்கள் (Levellers) என்பார் 1647ல் இப் பாராளுமன்றப் படையில் சிறப்புற்று விளங்கிய ஆங்கிலேய இராணுவ-அரசியல் கட்சியைச் சேர்ந்தவராவர். இக்கட்சி மக்களுடைய உரிமைகளுக்காகப் போராடியது குறிப்பிடத்தக்கதாகும்.

வாக்குரிமையில் கட்டுப்பாட்டைப் புகுத்தியவர்களின் செயல்களையும் எதிர்த்து வரலாயினர். அமெரிக்காவில் நடந்த புரட்சி, மாபெரும் பட்டயத்தின் பெயரால் நடந்ததாகும். அப்பழமை நினைவுடன், நம்முடன் ஆன்மிகத் தோழமை கொள்ள அமெரிக்காவிழைகிறது. நம்முடைய மயக்கமற்ற ஊழியில் அந்தப் பட்டயத்தை ஒரு வரலாற்று ஆவணமாக ஆராயுமாறு விடப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. அவ்வாறு ஆராய்கின்ற பொழுது அதனுடைய வரலாறுமுழுவதும் 1215 ஆம் ஆண்டு, பட்டயம் வழங்கப்பட்ட காலத்திய மக்களுக்கு அதனுடைய விதிகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருந்தன என்று கருதாமல் எக்காலத்திற்கும் பயன்படக் கூடியது என்னும் நோக்கத்தோடு ஆராயவேண்டும். அவ்வாறு ஆராய்கின்றபொழுது அந்த மக்களின் வழித்தோன்றல்களின் உள்ளங்களில் எழுந்த கற்பனைகளினால் எத்தகைய விளைவுகளை இந்தப் பட்டயம் உண்டாக்கியது என்பதையும் நாம் முக்கியமாகக் கருத்தில் கொள்ளவேண்டும்.

பாராளுமன்ற நிலையங்களைப்பற்றி நிலப்பிரபுக்கள் ஒன்றும் அறிந்தவர்களாக இல்லை. எனவே, அவர்கள் செம்மையற்ற முறையில் அருவருப்பான வகையில் திட்டத்தை வகுத்து அவ்வுடன்படிக்கையைச் செயற்படுத்த முயன்றனர். தங்களுடைய பேராற்றல் மிக்க எதிரியும், எளிதில் மாறக்கூடிய பகைவனுமான அரசரின் அதிகாரத்தைத் தற்காலிகமாகக் கட்டுப்படுத்தித் தாங்கள் தங்களுக்குத் தேவையான உரிமைகளைப் பெற அவர்கள் முயன்றனர். இப் பட்டயத்தின் இறுதி விதிகளுள் ஒன்றின் மூலம் இருபத்தைந்து நிலப்பிரபுக்களைக் கொண்ட புரட்சிக் குழுவினரின் உரிமை வேட்புகளை அரசர் ஜான் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தப்பட்டார். ‘இப்பட்டயத்தின் விதிகளுள் யாதாகிலும் ஒன்றுக்கு மாறாக அவர் நடப்பாரானால்—இயன்ற வழிகளில் எல்லாம்—எங்களைத் துன்புறுத்தியும் எங்கள் பொருளையும் சூறையாடுவாரானால்சொத்தினைப் பறிமுதல் செய்வார்களானால்—அதாவது எங்கள் காவல் கோட்டைகளைக் கைப்பற்றுவார்களானால் நிலையங்களையும் வேறு பல உடைமைகளையும் பலதிறப்பட்ட வழிகளில் பறிமுதல் செய்வார்களானால்—மேலே குறிப்பிட்ட 25 உறுப்பினர்களைக் கொண்ட புரட்சிக் குழுவினரின் உரிமைக்கு அவர் அடிமைப்பட்டவராவார்.’ ரன்னிமேடு நிகழ்ச்சிக்குப் பிறகு உடனடியாகச் சூழ்நிலை எத்துணை அளவிற்குத் தீமைதரத்தக்கதாகவும், நெருக்கடியுடையதாகவும் மாறக்கூடுமோ அத்துணை அளவிற்குத் துன்பம் தரத்தக்கதாக மாறியது. அதே சமயத்தில் நன்மை விளையத் தக்க சூழ்நிலைகளும் தோன்றியிருக்கலாம். ஆனால், அது

தோன்றுமை இங்குக் குறிப்பிடத் தக்கது. போப்பு ஆண்டவரும் அவருடைய திருத் தூதர்களும் அரசர் ஜானை, அவர் வழங்கிய மாபெரும் பட்டயத்தின் விதிகளுக்கு மாறாக நடந்துகொள்ளு மாறு தூண்டலாயினர். அந் நிலையில் நிலப்பிரபுக்கள் அனைவரும் பிரஞ்சு நாட்டு அரசரைப் படைக்கலம் ஏந்தித் தங்கள் நாட்டு அரசியல் நெருக்கடியில் தலையிடுமாறு அழைத்தனர். ஆனால், நல்ல காலமாக அயல்நாட்டு ஆட்சி முறைக்கும் உள்நாட்டுக் கொடிய வல்லாட்சி முறைக்குமிடையே எதைத் தேர்ந்து எடுக்கவேண்டுமென்ற இக்கட்டான நிலையி லிருந்து காப்பாற்றப்பட்டோம். அவ்வாறு நம்மைக் காப்பாற்றி யது நம்நாட்டுத் தெவிட்டுதல் நிறைந்த பழ வகையும், பீச்சு எனும் பழமும், புதிய சைடர் (Cider) என்னும் மது வகையும் ஆகும். 1216-ஆவது ஆண்டு ஜான் இறந்தார். அவர் இறப்பு மாபெரும் பட்டயத்தின் அடிப்படையில் நம் நாடு மீண்டும் ஒன்றுபட்டு விளங்குவதற்குரிய ஒரு வாய்ப்பினை நல்கியது எனலாம்.

அவருக்குப் பிறகு சிறு பையனை மூன்றாம் ஹென்றி அரசரானர். அவருக்கு உதவியாகத் தேசப்பற்றுமிக்க அரசியல் விரகர்களான வில்லியம் மார்ஷலும், யூபர்ட்டு டிபர்க்கு, லாங்டன் ஆகிய மூவரும் இருந்தனர். லாங்டன் இருதிறப் பட்ட கட்சியினருக்கு இடையே நடுவராக இருந்து தொண்டாற் றினர். அம்மூவரும் சேர்ந்து, குழந்தையாக இருந்த மூன்றாம் ஹென்றியின் சார்பாக நாட்டுமக்களை நோக்கி வெற்றிமிக்க வேண்டுகோள்களை விடுத்தனர். சில ஆண்டுகளுக்கு எல்லாம் நாட்டிலே அமைதி நிலைநாட்டப்பட்டது. அம் மாபெரும் பட்டயம் சிற்சில மாற்றங்களோடு மீண்டும் வெளியிடப்பட்டது. அதன் விளைவாக பிரஞ்சுமக்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டனர். அதே சமயத்தில் நம்நாட்டு அரசியல் சிக்கல்களில் போப்பு ஆண்டவர் செல்வாக்கு வளர்ந்து கொண்டு வருவது தடுத்து நிறுத்தப்பட்டது. நிலமானியப்படைமுறை வகுப்பினைச் சேர்ந்தவர்கள் தங்களுக்காகக் கட்டிக்கொண்ட கோட்டைகளை அல்லது அவர்கள் அரசரிடமிருந்து உள்நாட்டுப்போரின்போது வன்முறையில் கைபற்றிய காவல்கோட்டைகளை அடியோடு இடித்துத் தள்ளினர்; அல்லது அவற்றைக் கைப்பற்றி அரசரிடம் ஒப்படைத்தனர். பெரும்பாலும் பெரிய முற்றுகைக்குப் பிறகு அந்தக் கோட்டைகளைக் கைப்பற்றி அரசரிடம் ஒப்படைத்தனர். ஆட்சிபுரிவதற்குரிய பருவம் அடையாத மூன்றாம் ஹென்றியின் ஆட்சி (1216 – 1227) போருக்கு இடையே தொடங்கியது. மேலும் நாட்டில் உண்டாகக்கூடிய குழப்பங்களையும் கொந்தளிப்புகளையும்

ஒருவாறு அடியோடு மாற்றிவிட்டது. இதற்குக் காரணம் நேர்மையும், திறமையும் மிக்க அந்த அரசியல் வீரர்கள், அரசரின் பெயரால் தங்கள் அதிகாரத்தை நன்முறையில் பயன்படுத்தி நாட்டிலே அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டியமையே யாகும். அவ்வரசன் பெயரால் அவர்கள் கொண்டாடிய உரிமைகளை இதற்குப் பிறகு எப்போதுமே அவ்வரசன் பயன்படுத்திக் கொண்டதில்லை. இக்காலத்தில் அரசருடைய 'கவுன்சிலின்' அதிகாரம் வளர்ச்சிபெற்றது. அந்த கவுன்சிலின் மூலமே அரசரின் காப்பாளர்களாக இருந்த மார்ஷலும், டீபர்க்கு என்பவரும் நாட்டினை நல்ல முறையில் ஆண்டு வந்தனர். இவ்வாறு இருந்த போதிலும் அக்கவுன்சில் இக் காலம்வரை முற்றிலும் வரையறுக்கப்படாத உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கழக மாகவே இருந்துவந்தது.

மூன்றும் ஹென்றி, அருளாளர் எட்வர்ட்டிடம் அளவற்ற மதிப்பும், வழிபாட்டுணர்ச்சியும் உடையவராக இருந்தார். இவ் அரசர் எட்வர்ட்டுடன் பல வழிகளில் ஒப்புமை உடையவ ராகக் காணப்பட்டார். முதலாவதாக வாழ்நாள் முழுவதும் அரும்பாடுபட்டு அருளாளர் எட்வர்டு கட்டி நிறுவிய திருச் சபைகளையெல்லாம் இவர் உடைத்தெறிந்தார். அத்துடன் தம் முடைய ஆட்சியின் நினைவாகவும், தமக்கு நன்கு பெருமை தரும் வகையிலும் வெஸ்ட்மினிஸ்டர் திருக்கோயிலைச் சுற்றி அவர் கட்டிய பல திருச்சபைகளையும் இவர் அழித்தொழித்தார்.

ஹென்றியின் தனிப்பட்ட பக்தி நெறி அவருடைய அரசியல் செயல்முறைகளையெல்லாம் கட்டுப்படுத்தி வந்தது. அந்தப் பக்தி நெறியே அவரை இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் போப்பு ஆண்டவரின் பேரவாவினைச் செயல்படுத்துவதற்குரிய கருவியாக இவரைமாற்றியது. அக்காலத்தின் போப்புஆண்டவருக்கு எதிராக அரசர் அதிகாரத்தைத் தவிர, எத்தகைய பாதுகாப்பையும் குருமார்கள் பெற்றிருக்கவில்லை. அரசரின் செயல்கள் ரோமானியர்களின் பேரவாவினைச் சிதறடித்துவிட்டது. பெரிதும் இழிந்த பண்புகளை உடையவர்களும், பொதுவாக என்றுமே இங்கிலாந்திற்கு வராதவர்களும், இங்கிலாந்தில் ஆன்மாக்களுக்கு உண்டான நோய்களைப் போக்குவதற்கு எப் போதுமே தகுதியற்றவர்களுமான இத்தாலியரும் பிற அயல் நாட்டினரும் இங்கிலாந்தில் போப்பு ஆண்டவரின் கட்டளைகளின் படி எண்ணற்ற சலுகைகளுக்கு உரிமையற்ற வகையில் உரியவர்க ளானர்கள். ரோமானியர்கள் தம்மிடத்துப் பற்றுறுதியுடைவர்

களாக இருப்பதற்காக இங்கிலாந்தில் தொடர்ந்து தோன்றக் கூடிய 300 குருமார்களின் காலியிடத்தை அவர்களுக்கு அளிப்ப தாக ஒருமுறை வாக்களித்தார். இதற்கிடையில் இரண்டாம் ஃபெடரிக் பேரரசுக்கும் வேறு அரசர்களுக்கும் எதிராகப் போப்பு ஆண்டவர் அரசியல் திட்டத்தை வெறுக்குமாறு ஆங்கி லேயக் குருமார்கள் ஈவிரக்கம் இன்றித் துன்பறுத்தப்பட்டனர். இந்த அனுபவங்கள் இங்கிலாந்துநாட்டுப் பொதுமக்களிடையே போப்பு ஆண்டவருக்கு எதிரான ஒரு வெறுப்புணர்ச்சியை உண் டாக்கிற்று. அவ்வெறுப்புணர்ச்சி மெல்லமெல்லப் பேராற்றல் வாய்ந்ததாக வளர்ந்து சீர்திருத்த இயக்கமாக மலர்ந்தது. வர லாற்றின் தொடக்க காலத்தில்—சிறப்பாக நார்மானியர் படை யெடுப்புக் காலம் முதல் ஆங்கிலேய மக்கள் போப்பு ஆண்டவ ரிடத்து சிறப்புமிக்க வகையில் பற்றுறுதி உடையவர்களாக இருந்துவந்தனர். இப்போது ரோமானியத் திருச்சபையின்மீது அவர்களுக்குப் புதிதாகத் தோன்றிய வெறுப்புணர்ச்சி விக்ளிப்பு காலம் வரையில் சமயக்கோட்பாட்டில் தருக்கத்தின் மூலம் சிறந்த இடத்தினைப் பெறவில்லை. ஆயினும், அம்மக்களுடைய கருத்தினைக் குருமார்களுள் பெரும்பாலோர் போற்றி ஆதரித்து வந்தனர். விக்ளிப்பு தோன்றுவதற்கு முன்பு ஒரோவழி அரசின் செயல்முறைகளின் மூலம் அம்மக்கள் தங்களுடைய வெறுப்பை யும் குறையையும் வெளிப்படுத்தி வந்தனர்.

போப்பு ஆண்டவரின் பேரவாவினை ஐரோப்பாவிலும் இத் தாலியிலும், மேலும் தொடர்ந்து செயல்படுத்த விரும்பிய மூன் றாம் ஹென்றி தம்முடைய இரண்டாம் மகனும், லங்காஷ்டரின் எட்மண்டு என்றழைக்கப்பட்டவனுமான இளவரசருக்கு எதிர்ப்புமிக்க சிசிலியின் முடியை 1255 இல் வழங்க முற்பட்டார். அத்துடன் அவருடைய தம்பியான கார்ன்வாலைச் சேர்ந்த ரிச்சர்ட்டு பேரரசின் அரியணைக்கு ஏறுவதற்குரிய ஒரு வேட்பாள ராக 1257 ல் அறிவிக்கப்பட்டார். ஒருவர் அரியணை ஏறுவதற் காகத் தொடங்கிய அரசுரிமைப் போருக்கும், மற்றொருவர் வெற்றி பெறுவதற்குக் கையூட்டு வழங்குவதற்கும் இங்கிலாந்து வேண்டிய பொருள்களைத் கொடுத்துதவவேண்டுமென்று அவர் கள் எதிர்பார்த்தனர். இந்த உரிமைக் கோரிக்கை ஆங்கிலேய ரின் மறைமுகமான நலன்கள் எத்துடனும் தொடர்புடையதாக இல்லை. எனவே அது நிலப்பிரபுக்களையும் நாட்டு மக்களையும் சீற் றம் கொள்ளுமாறு செய்தது.

அரசர் ஆட்சி உரிமைக்குரிய வயதினை அடைந்த பிறகு இவ் வாறு ஒரு தலைமுறைக் காலம் வரை ஒழுங்கீனமான ஆட்சி

தொடர்ந்து நடைபெற்றது. அவ் வாட்சியில் மன நிறைவு பெருத மக்களை அப்படியே அரசு அடக்கியொடுக்கியது. அதன் விளைவாக இன்னொரு உள் நாட்டுப் போரும், அரசியலமைப்பினை நிறுவ வேண்டிய (1258-1265) நெருக்கடியும் வெளிப்படையாக உண்டாயிற்று. ஜான் தன் ஆட்சிக் காலத்து வழங்கிய பட்டயத்தின் உரிமைகளைத் தொடர்ந்து பெறுவதற்குரிய போராட்டமாகவே அது இருந்தது. ஆனல், அது சிறப்புமிக்க ஒருமாற்றத்தையுடையதாகக் காணப்படுகிறது. ஜான் அரசர் ஆட்சிக் காலத்து ஒரு பக்கம் அரசருக்கும், மற்ருெரு பக்கம் பொதுமக்களால்வெறுக்கப்பட்டநிலப்பிரபுக்களுக்கும் இடையே தனிப்போர் நடைபெற்றதைக் கண்டோம். மூன்ரும் ஹென்றியின் ஆட்சிக் காலத்து, அது மும்முனைப் போராட்டமாக வளர்ச்சி அடைந்ததைக் காணுகின்ருேம். மாவீரர்களும், பிற மக்களும், பெரிதும் பிரமசாரிகளாகவே இருந்தனர். அவர்கள் தங்கள் வட்டாரப் பணிகளைக் 'காரனர்ஸ்கள்' ஆகவும், அமைதிகாண் நீதிபதிகளாகவும் இருந்து கவனித்து வரும் சிறந்த பழக்கத்தைப் பெற்றிருந்தனர். எனவே இப்போது தேசிய அரசியலில் தங்களுக்கென்று ஒருதனிப்பட்ட வாழ்க்கையைக் கைப்பற்றத் தொடங்கினர். 1258-ல் இயற்றப்பட்ட ஆகஸ்போர்டு ஏற்பாடுகள் (Provisions of Oxford) நிலப்பிரபுக்கள் வழங்கிய தன்னலம் கொண்ட உரிமைகளைக் கண்டு அவர்கள் பெரிதும் வெறுப்பும், மனநிறைவு அற்ற தன்மையும் உடையவர்களாக இருந்தனர். அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடினர். இறுதியில் தங்கள் உரிமைகளையும் பெற்றனர். நிலப்பிரபுக்கள் பெரும் நிலக்கிழாரான அரசரிடத்துத் தங்களுக்கு எவ்வாறு உரிமைகளை அச்சுறுத்திப் பெற்றனரோ அதைப் போன்றும் தங்களிடத்துள்ள கீழ் ஆட்களும், குத்தகைக்காரர்களும் எவ்வாறு தங்களுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனரோ அதைப் போன்றும் நிலப் பிரபுக்கள் தங்களுக்குக் கடமைப் பட்டவர்களாகவும், கீழ்ப்படிந்து நடப்பவர்களாகவும் செய்வதில் 'பிரமசாரிகள்' வெற்றிபெற்றனர். பெரு நிலக்கிழார்களுக்கு எதிராக அரசர் உரிமைகளைப் பெறுவதைப் பற்றி ஆராய்ந்து அப் 'பிரமசாரிகள்' அரசரின் நீதிமன்றங்களைப் போற்றி ஆதரித்தனர்.

ஹென்றியின் கட்சியைச் சேர்ந்தவர்களின் உண்மையான ஆற்றல், அவர்களின் எதிரிகளிடையே உண்டான பிளவுகளைப் பொறுத்தே யமைந்தது. எதிரிகளுக்கிடையே உண்டான பூசல்களையும், உட்பிரிவுகளையும் அவருடைய அருமை மகனை எட்வர்டு தம்முடைய நலத்திற்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ளும் பேராவல் உடையவராக இருந்தார். மக்களிடத்துப்

பெரும் செல்வாக்குப் பெற்ற இந்த இயக்கத்திற்கு எதிராக, உண்மையிலேயே நிலப்பிரபுக்களுள் பலர், அரசனுடைய பக்கத்தைச் சார்ந்து அரசாங்கத்திற்கு ஆதரவு தந்தனர். அதே சமயத்தில் அரசியலமைப்புச் சட்டத்தை அமைக்கவேண்டுமென்று கோருவோர் அல்லது சீர்திருத்தம் வேண்டுமென்று கூறும் கட்சியினர் சைமன் டிமாண்ட்போர்ட்டு என்பவரின் கொடியின்கீழ் ஒருங்கு திரண்டனர். ஆனால், நிலப்பிரபுக்களாக விளங்கியதைப் போலவே, பேரளவுக்கு மக்களாட்சிப் பண்பைப் பெற்றவர்களாகவும் அவர்கள் இருந்தனர். இப் போட்டி ஸ்டூவர்ட்டு அரசர் ஆட்சிக் காலத்து உண்டான உள்நாட்டுப் போரைப் போல் மாறியது. ஆனால் ஸ்டூவர்ட்டு மன்னர்கள் காலத்திய கருத்துப் போராட்டத்தைப்போன்று இல்லாமல், ஓரளவுக்குக் குறைந்த நிலையில் இது வகுப்புப் போராட்டமாக இருந்ததைக் காண்கிறோம்.

லூயிஸ் (Lewes) என்றவிடத்தில் டி மாண்ட்போர்ட்டு 1264-65 ஆண்டுகளில்பெற்ற வெற்றிகளைச் சூழ்ந்து இறுதியான ஒரு நெருக்கடி உண்டாயிற்று. அடுத்த ஆண்டு அதாவது 1265வது ஆண்டு எவேஷம் (Evesham) என்றவிடத்து அவர் தோற்கடிக்கப்பட்டார். அவருடைய கட்சி சீர்திருத்தத்தை விரும்பிய நிலப்பிரபுக்களைக் கொண்டிருந்தது. அதனுள் பெரிதும் அரசியல் மனப்போக்கினைக் கொண்ட மாவீரர்களும் பெருமக்களும் சேர்ந்திருந்தனர். மேலும் போப்பு ஆண்டவரும், அரசரும் இயற்கைக்கு மாறாகக் கூட்டுச்சேர்ந்து இருக்கின்ற கொடுமையை எதிர்த்துப் புரட்சிசெய்ய விரும்பிய சிறப்புமிக்க குருமார்களும், இவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இறுதியாக ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்து மாணவர்களும் இப் போராட்டத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தனர். இவர்கள் அல்லாமல் ஏழை மக்களுக்கு இடையே சிறந்த மக்களாட்சி ஆர்வத்தையூட்டி மக்களிடையே தொண்டு புரிந்து சிறப்புற்ற சோதரத்துறவிகள் ஊட்டிய ஆர்வத்தால் உந்தப்பட்ட மக்களும் இப் படையில் சேர்ந்திருந்தனர். போப்பு ஆண்டவர் சைமனைச் சமய விலக்குச் செய்தபோதிலும், சைமனுக்கு ஆதரவாக அவர் பக்கத்தில் ஆற்றல்மிக்க சமயத் தொடர்பான சக்திகள் பல உதவியாய் இருந்தன. அவருடைய கூட்டாளிகளுள் லண்டன் மாநகரத்துக் குடிமக்கள் விரல்விட்டு எண்ணத்தக்கவர்களாவர். விரைவாக உயரும் அவருடைய பதவிகள் லூயிஸ் என்னும் இடத்தில் அரசிளங்குமரர் எட்வர்டு ரூபர்ட்டு முறையினைப் பின்பற்றிச் செய்தனர். அதே நேரத்தில் அரசர் படையின் முக்கிய பகுதியை ஆலிவரைப் போன்று சைமன் அழித்துக் கொண்டிருந்தார்.

அக்காலத்திய அரசியல் சுலோகங்களும், கட்டுரைகளும் சைமனின் இறுதி ஆண்டுகளில் சீர்திருத்தக் கட்சியினர் சட்டம் அரசரைவிட உயர்ந்ததாகக் கருதியதை நமக்குத் தெரிவிக்கின்றது. அவர்களுள் பெரும்பாலோர் தங்கள் தலைவரைப் போன்று சமய உணர்வு நிறைந்தவர்களாக இருந்தனர். எனவே அவ்வுணர்வினைக் கடவுளின் விருப்பத்திற்குரியதாகக் கருதிச் சீர்திருத்தம் செய்வதற்காக முற்றிலும் பயன்படுத்துமாறு செய்தார்.

லீஸ்டரின் கோமானை சைமன் டி மாண்ட்போர்ட்டு பிரஞ்சு பண்பாட்டின் பிழிவாகவும், பிரஞ்சு மொழிக் கல்வியில் ஊறித் திளைத்தவராகவும் விளங்கினர். ஆனல், அக்காலத்தில் இங்கிலாந்து நாட்டின் உயர் வகுப்பினர் தம்முடைய சிறப்புமிக்க தொடர்புகளில் பிரஞ்சு மொழி பேசுவதில் ஈடுபட்டுக்கொண்டிருந்த காலத்தில், அவர் பிரஞ்சு மொழிக் கல்வியில் ஊறித் திளைத்தவராகவும், பிரஞ்சு டண்பாட்டின் பிழிவாகவும் இருந்தாலும் அவரை உள்ளத்தால் ஆங்கிலேயராக விளங்குவதை அதனல் தடுக்க முடியவில்லை. அவர் கிராம்வெல் அல்லது சாத்தாம் (Chatham) போன்று பிறரை அடக்கியாளும் இயல்புகள் வாய்ந்த தலைமைப்பண்புடைய தலைவர்களுள் ஒருவராக விளங்கினர். அவர்களைப்போன்று இவரும் எத்துறையிலும் முதன்மை உடையவராக விளங்குவதிலேயே பெரிதும் ஈடுபாடுடையவராக இருந்தார். அவர் பேரவா உடையவராக இருக்கிறர் என்று பிறர் குற்றஞ்சாட்டியதைப் பொருத்தமற்றதாகக் கருதினர். அத்தகைய மனிதர்கள் பலரைப் போன்றுஅவர் அளவுக்கு மீறிச் செயலாற்றுவதில் அளவுகடந்த ஆயுறவு கொண்டவராக இருக்கவில்லை. ஆனல், தம்முடைய கொள்கையையும், தம்முடைய நன்மையையும் நாட்டின் கொள்கையாகவும், நாட்டின் நன்மையாகவும் ஒன்றுபடுத்திக் காண அவர் முயன்ருர். அதை நாடு அறிந்தது மட்டுமன்றி, உணரவும் செய்தது. குராஸ்ததே (Grossetete) என்பவரோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்த காரணத்தினல் அவரிடமிருந்த பரந்த தேசப்பற்று உணர்வினை இவர் மிகப் பெரிதும் பெற்றிருந்தார். அந்த குராஸ்ததே என்பவர் லிங்கனின் பாதிரியாக இருந்தவராவர். அந்நூற்ருண்டில் சிறப்புடையவராகவும், பெருந்தன்மையாளராகவும், பேரறிஞராகவும், மிகப் பரந்த கல்வியறிவு உடையவராகவும் அவர் விளங்கினர். அந்தப் பெரியவர் பல ஆண்டுகளாக இங்கிலாந்தில், அரசும், போப்பு ஆண்டவரும் கொடுங்கோல் ஆட்சி புரிவதைக் கண்டித்துரைக்கும் அளவிற்கு உள்ள உரம் படைத்தவராகச் சிறப்புற்று விளங்கினர். அவர் 1253 ஆவது ஆண்டு இறந்

தார். அந்தப் பெரியவர் சைமனின் மிக நெருங்கிய நண்பர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமல்லாமல் அந்தச் சான்றோருக்கு அடுத்து அப்பதவிக்கு வந்தவர் சைமன் என்பது இங்குக் கருதத் தக்கது. ஹாம்டனுக்குப் (Hampden) பிறகு கிராம்வெல் அப்பதவிக்குச் சென்றதைப் போலவே, குராஸ்தேவிற்குப் பிறகு, சைமன் அப்பதவியை ஏற்றுச் சிறப்புறச் செயலாற்றினர். சைமன் வாழ்ந்த முறை அனைத்தையும் அவருடைய முன்னோடி முற்றிலும் ஏற்றுக் கொண்டார் என்று யார் சொல்லமுடியும்?

இறுதி இரண்டு ஆண்டுகளில் சைமன் தலைமை தாங்கி நடத்திய அக்கட்சி உண்மையிலேயே சிறப்புமிக்கதாகும். கிராம்வெல்லின் ஆதரவாளர்களைப் போன்று பேராற்றலும், அதே நேரத்தில் பெரும் குறைகளையும் உடையதாக அக்கட்சி இருந்தது. மக்களாட்சி தோன்றுவதற்கு முன்பு, அவர்கள் மக்களாட்சி வாதிகளாக விளங்கினர். அவர்கள் தாங்கள் கருதியதைச் செயற்படுத்த முடியாத இக்கட்டான நிலையிலிருந்த காரணத்தினால், அவர்களால் எத்தகைய உடன்பாட்டிற்கும் வரமுடியாமல் போயிற்று. ஆனால், அவருடைய செயல்கள் வருங்காலத்தை உருவாக்குவதற்குரிய கட்டளைகளை எதிர்மறை முறையில் வழங்கியது எனலாம். நேஸ்பி (Naseby) போரில் வெற்றி பெறுவதற்கு வழிபாடும், பாசுரங்களைப் பாடுதலும், எஃகுக் கருவிகளும் பயன் தந்ததைப் போன்று லூயிஸ் போர்க்களத்தில் வெற்றிபெறுவதற்கும் அது பயன்படுத்தப்பட்டது. அவ்வுண்மையை நாம் என்றுமே மறந்துவிட முடியாது; அல்லது அழித்துவிட முடியாது. மூன்றும் ஹென்றி மீண்டும் அரசராக ஆக்கப்பட்டமை பழைய வல்லாட்சி முறைக்குத் திரும்பிச் செல்ல வாய்ப்பு அளித்ததென்று சொல்லுதற்கு இல்லை. இரண்டாம் சார்லஸ் மீண்டும் அரசராக்கப்பட்ட காலத்தில் அத்தகைய நெருக்கடியான சூழ்நிலை இருந்ததைப் போன்றே இக்காலத்தும் காணப்பட்டது. இவ்விரு காலத்திலும் பதவியிலிருந்து விரட்டப்பட்டவர் மீண்டும் அரசர் ஆக்கப்பட்டமை, மக்கள் இசைவுபெற்ற அரசாங்கத்தை அமைப்பதற்குரிய ஒரேவழியாக இருந்தது எனில் தவருகாது. வேறொரு சிறந்தவழி இல்லாத காரணத்தினால்தான் இவ்வாறு விரட்டப்பட்டவர்களுக்கு மீண்டும் அரசுரிமை வழங்கப்பட்டது.

ஆனால், அவற்றிற்கு இடையே சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. கிராம்வெல் மிக்க மதிப்பு வாய்ந்தவை என்று கருதிய அனைத்தும் கிராம்வெல்லோடு அழிந்து போயிற்று. ஆனால்,

மாண்ட்போர்ட்டு வழக்கில் இவ்வாறு அவருடைய மதிப்புமிக்க ஆற்றல்கள் எல்லாம் அழிந்துபோயின என்று கூறுவதற்கு இல்லை. இதற்குக்காரணம் சைமனைவிட, ஆலிவர் கிராம்வெல் நாட்டை ஆளுகின்ற ஆட்சியாளர் என்ற முறையில் பெரும் வெற்றி பெற்றவர் என்று சொல்லுவது முரணுரையாகாது. கிராம்வெல்லின் ஆட்சி பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதின் மூலம் நீடிக்கப்பட்டது. எனவேதான், இறுதியில் அவருடைய செயல்கள் அனைத்திற்கும் எதிர்ப்பாக மக்கள் புரட்சி செய்தபோது, அவருடைய செயல்களுடன் தொடர்புடைய அனைத்தும் அழித்தொழிக்கத்தக்க நிலையில் மக்களுடைய ஆற்றல், பேராற்றல் வாய்ந்ததாக விளங்கலாயிற்று. சைமனுடைய ஆட்சிஓர் ஆண்டுகாலம்கூட நிலைபெற்றிருக்கவில்லை. உண்மையில் சொல்லுவது என்றால் வட இங்கிலாந்திலும், இங்கிலாந்தின் மேற்குப் பகுதியிலும் அவர் தம்முடைய அதிகாரத்தை நிலைநாட்ட முடியாது பெரும் துன்புற்றார். இவ்வாறு எவேஷம் போர்க்களத்தில் விடுதலைக்காக சைமன் உயிர் துறந்தார். பொதுமக்களுடைய உள்ளத்திலே அவர் மக்களின் அன்புக்குரிய உயிர்த் தியாகியாகச் சிறப்பிடம் பெற்றார். முதலாம் சார்லஸுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் கிராம்வெல் பெற்ற புகழில் ஒரு பகுதியைச் சைமன் பெற்றார் எனலாம்.

சைமன் செய்யத்தொடங்கிய ஆக்க வேலைகள் எல்லாம் அவர் இறந்தபிறகு பெரும்பயன் தந்தன என்பதற்கு இன்னும் சில காரணங்கள் உள்ளன. அவர் தம்முடைய மாபெரும் பகைவரும் எவேஷம் போர்க்களத்தில் தம்மை வெற்றிகொண்டவருமான அந்த அரசரின் அறிவாற்றலை இவர் கவர்ந்துகொண்டார். மூன்றும் ஹென்றியின் மகனும், அவருக்குப் பிறகு அரியணை ஏறிய அரசர் எட்வர்டு என்பவராவர். அவர் புரட்சியின் படிப்பினைகளைப் பெற்றுச் சிறந்த பல ஆட்சியாளர்களுள் ஒருவராவர். இவ்வரசர் அரசர்கள் பொதுவாகச் சட்டத்திற்குட்பட்டும் சட்டத்தின் மூலம்தான் நாட்டை ஆளவேண்டும் என்றும் அரிய உண்மையைக் கற்றார். மேலும் நாட்டுமக்களுக்கு எதிராக விளங்கும் அரசு, பாராளுமன்றத்தில் சிறப்புறும் அரசரைவிட ஆற்றல் குறைந்தது என்பதை நன்கு உணர்ந்தார்.

பாராளுமன்றம் என்பது அக்காலத்து எப்படியிருந்தது? பார்லிமெண்டம் ('Parliamentum') என்னும் பெயரை கார்லைல் (Carlyle) 'பேசும் கடை' என்று மொழி பெயர்த்தார். 'பேச்சு' அல்லது 'வாதம்', 'சொற்போர்' என்பதே மேற்கண்ட சொல்லுக்குரிய நேரான மொழிபெயர்ப்பாகக் கூறலாம். அச்சொல் மூன்

றும் ஹென்றியின் ஆட்சியில் மன்னர் பேரவையின் பிற உறுப்பி னர்களோடு, நிலமானியப் படைமுறை மன்றத்தைச் சார்ந்த தலைமைக் குத்தகைக்காரர்கள் ஒருங்கு சேர்ந்து அமர்ந்து, செயல்முறைகளை ஆராய்ந்த கூட்டங்களைக் குறிப்பிடுவதற்கே சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டது. அக்காலத்தில் பாராளுமன் றம் என்னும் சொல் 'தேர்தல்' என்ற கருத்தையோ, 'பிரதிநிதித் துவம்' என்ற கருத்தையோ தன்னிடத்துக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. அல்லது அச் சொல் சட்டமியற்றும் அவை யென்ற பொருளையோ, வரி விதிப்பதற்கு வாக்கு எடுக்கும் சட்டசபை யென்ற பொருளையோ உணர்த்தியதாகவும் தெரியவில்லை. அது வெறும் மன்னர் பேரவையாகவோ, மன்றமாகவோ இருந்தது எனலாம். அதனுடைய இயல்பு அடிக்கடி எளிதில் மாறக் கூடிய தாகவும், திரியக் கூடியதாகவும் இருந்தது. அதனுடைய மாண்பு மிக்க அமைப்புமுறைகள் வரையறுக்கப்பட்டதாகத் தெரிய வில்லை; நிலப்பிரபுக்களும், அரசருடைய ஊழியர்களும் ஒருங்கு சேர்ந்து அயல் நாட்டுச் சிறப்புமிக்க அரசுகளைப்பற்றியும், உள் நாட்டுச் சிறப்புமிக்க அரசியல் விவகாரங்களைப் பற்றியும் பேசு வதற்கும் சொற்போர் புரிவதற்கும் உரிய மன்றமாக அது விளங் கியது. அவர்கள், தங்களிடத்து தங்கள் மாவட்டங்களைச் சேர்ந்த குடிமக்களால் செய்யப்பட்ட விண்ணப்பங்களையும், தங்களுடைய பொறுத்தற்கரிய துன்பங்களையும், அவற்றைப் போக்குவதற் குரிய வழிவகைகளையும் பொதுமுறையான கட்டளைகளையும் ஆராய்வதற்குரிய பொது மன்றமாக அது விளங்கியது. மேலும் அரசு வழக்குவிசாரணைகளை நடத்துவதற்குரிய மன்றமாகவும் அது விளங்கியது. அம்மன்றம் ஆட்சியமைப்பு மன்றமாக இருந் ததைப் போலவே, சட்டமியற்றுகின்ற மன்றமாகவும் இருந்தது எனலாம். அது பெரிதும் நிதி விவகாரங்களைக் கவனித்ததே யொழிய, நீதிமுறை விவகாரங்களைக் கவனித்தது என்று சொல்லமுடியாது. அம் மன்றத்தில் உறுப்பினர்கள் அனைவரும் கூடிப் பேசிய பிறகு, நாட்டின் அதிகாரங்கள் அனைத்திற்கும் தலைமையிடமாக இருந்து அது செயலாற்றியது எனலாம். ஆனால் அதன் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை இதுவரை இன் னும் வரையறுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

மூன்றும் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு மாவட் டத்திலும் இருந்து, கோட்டமுறை மன்றங்களின் உறுப்பினர் களான மாவீரர்கள் இரண்டு அல்லது மூன்று பேரைத் தேர்ந் தெடுத்து இம்மன்றத்திற்கு அனுப்புகின்ற முறை அருகிய வழக் கில் இருந்தது. ஆனால், அது நிலையான பழக்கமாக இருக்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆனால், அச் செயல் புதிய

ஒரு சட்டசபையை அமைப்பதற்காக நடைபெற்றது என்றோ, பாராளுமன்றத்தைத் தோற்றுவித்தது என்றோ சொல்லுவதற்கில்லை. பழைய மன்னர் பேரவையின் முழுக்கூட்டத்தின் போது, புதிதாகச் சில மக்களை அழைத்து அக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செய்வதற்கே மேற்கண்ட முறை கையாளப்பட்டது. அது அரசருடைய அல்லது அவருடைய எதிரிகளுடைய வகுப்பைச் சார்ந்ததாகவும் இல்லை. இரு திறத்தினரும் பிரமசாரிகள் ('Bachelors') என்போர் என்ன நினைக்கிறார்கள் என்பதை நன்கு அறியவேண்டுமென்ற நோக்கம் உடையவர்களாக இருந்தனர். அது இயல்பாக பரிணாம வளர்ச்சிப்படி வளர்ந்த வளர்ச்சியே யாகும். எனவே, அது மக்களுடைய கருத்தைப் பெரிதும் கவராது இருந்ததில் வியப்பில்லை. இரு தலைமுறைகள் கழிந்தவுடன் கோட்டமுறை மன்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாவீரர்கள் அரசரின் நீதிபதிகளோடும், அதிகாரிகளோடும் சேர்ந்து தங்களுடைய மாவட்டங்களில் நாட்டாட்சியை நடத்திவந்தனர். ஒரு நடுநாயகமான இடத்தில் அரசரின் நீதிபதிகளோடும், அதிகாரிகளோடும் சேர்ந்து கலந்தாலோசிப்பதற்கு வரவழைக்கப்படும் ஒரு சிறு முன்னேற்றச் செயலாக முதலில் இம்முறை தோன்றியது. இருந்த போதிலும் தனிக் கோட்டங்களிலிருந்தும், உரிமை நகரங்களிலிருந்தும் பிரதிநிதிகளாக வந்து மன்னரின் பேரவையில் தங்களுடைய சமூகத்தின் செயல் முறைகளை ஆராய்ந்து செயல்படுவதற்காகப் பலர் வந்து கலந்து கொள்வது நாடெங்கிலும் பெருவழக்கமாக இருந்துவந்தது. வருங்காலத்தில் நிகழப்போவதை நன்கு அறிந்திருக்கின்ற நன்மக்களோடு அவர்களைக் கூட்டாகவும், அதிகார வரன்முறையிலும், ஒருங்குசேருமாறு வரவழைத்த இம்முறை பெரும் சிறப்பினையும், பிற்கால விளைவுகளையும் உடையதாகத் தோன்றுகிறது. ஆனால், இடைக்கால உலகில் குறிப்பிட்ட சமூகத்தினரின் பிரதிநிதிகளைக் கொண்டே அரசர் தம்முடைய செயல்களைச் செய்து கொள்ளுவது ஒரு பொதுவான வழக்கமாக இருந்துவந்தது. அம்முறையை நாட்டின் நடுமையமாக விளங்கிய சட்டசபைக்கு உரியதாகப் பொருத்தியது சிறப்புமிக்க செய்தியாகப் போற்றுவதற்குரியதாகும். காற்று ஆலம்விதையைக் கொண்டுவந்து தூவுகின்றபோது காட்டில் வாழ்வோர் அதைச் சிறிதும் கவனிப்பது இல்லை. அதைப் போன்று மக்கள் இம்முறையைக் கருத்தூன்றிக் கவனித்தார்கள் என்று சொல்லுவதற்கில்லை.

அக்காலத்திலும், அதற்குப்பிறகு நெடுங்காலம் வரையிலும், பாராளுமன்றத்தின் அமைப்பு ஒரு பெரும் சுமையாகவே மக்களால் கருதப்பட்டது. மேலும் பொது நன்மைக்கு விருப்பமில்

லாது செல்ல வேண்டியிருப்பதை நினைத்து அக்கால மக்கள் வெறுப்படைந்தனர் என்றே தெரிகிறது. அக்காலத்திலும் பாராளுமன்றத்துடன் தொடர்பு உடைய கடமையாகக் கருதப் படுகின்ற அமைதிகாண் நீதிபதிகளின் பணி இன்னும் மக்களால் வெறுக்கப்பட்டு வந்ததை நாம் காண்கிறோம். சமூகங்கள்—சிறப் பாக உரிமைபெற்ற நகரங்கள் பெரும்பாலும் தங்களுடைய பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைப்பதைப் புறக்கணித்தே வந்தன. கோட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட மாவீரர்கள், சில சமயங்களில் பணி புரியவேண்டுமே என் னும் காரணத்திற்காகப் பாராளுமன்றத்திற்கு வராது தலைமறை வாக இருந்துவந்தனர். அச்செயல் தெளிவாக மக்களின் விருப்ப மின்மையை எடுத்தியம்புகிறது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினரை, அகவிலையும் இடர்ப்பாடு மிக்க அவருடைய மதிப்பினைக் கண்டு பாராட்டுவதற்காகக் கோட்ட நீதிமன்றங் களில் தேடுவீரானால், அவர் அவ்விடத்தை விட்டு அமைதியாக வெளியே நடுங்கிச்சென்று குதிரையின் மீது ஏறிக் கோயில் திரு விடத்திற்குச் சென்று மறைந்துகொள்வதை அக்காலத்தில் காண லாம். இவ்வாறு அவர் அவ்விடத்தைவிட்டுச் செல்லுவதன் மூலம், அவருடைய இடத்தில் யாரை அமர்த்துவது என்பதை நீதிமன் றமே தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு விட்டுவிட்டுச் சென்றனர். அக்காலம் வரையில் தேர்ந்தெடுக்கும் 'வாக்குரிமை ஒரு சிறப் புரிமை' ஆகவோ, 'மனிதனின் பெறுதற்கரிய உரிமையாகவோ' கருதப்படவில்லை. மூன்றாம் எட்வர்டு ஆட்சிக்காலத்து டேவோ னில் (Devon) நெடுந்தொலைவிலிருந்த டோர்ரிங்டன் (Torrington) என்னும் நகரம் ஒரு விண்ணப்பத்தைச் செய்து கொண்டதன் மூலம், பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை அனுப்பவேண் டாம் என்னும் தனியுரிமையைப் பெற்றது. அக்காலத்துப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை அனுப்புவதனால் உண் டான செலவினை அவ்வுறுப்பினர்களை அனுப்பி வைத்த சமூகத் தினரே கொடுத்து வந்ததைக் காணுகின்றோம்.

எனினும், பாராளுமன்றத்திற்குக் கோட்டங்களிலிருந்து மாவீரர்கள் உறுப்பினர்களாக வந்திருந்தமை பாராளுமன்றப் பெருமக்களின் அதிகாரத்தைப் பலப்படுத்தியதோடு அவர் களுக்குள்ளே கலந்து ஆலோசிப்பதற்கு உதவியாகவும் இருந் தது. நாட்டில் உள்ள ஒவ்வொரு சமூகமும் அல்லது பொதுமக் கள் குழுவும் தம்முடைய பிரதிநிதிகளை அனுப்பிவைப்பதைக் கட்டாயப்படுத்துவது அரசுக்கு வசதியாகவும், நன்மையாகவும் இருந்தது. எனவே லூயிஸ் புரட்சிக்குப் பிறகு சைமன் டி மாண்ட் போர்ட்டுகோட்டங்களின் மாவீரர்களை (1265) வருமாறு அழைத்த

தோடு, முதன்முதலாக பட்டயங்கள் பெற்ற ஒவ்வொரு நகரத்தி திருந்தும் இரண்டு பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறு கட்டளை யிட்டார். நகர மக்கள் தங்களுடைய கட்சியை ஆதரிப்பவர் களாக இருப்பார்கள் என்பதை அவர் நன்கறிந்து இருந்தார் என்பது இதனால் தெரிய வருகிறது. அத்துடன் ஆட்சியாளர்கள் நாட்டின் பல்வேறு சமூகங்களின் உறுப்பினர்களையும் ஒன்றாக அழைத்து அவர்களோடு ஒன்றாகக் கலந்து பேசுவதன்மூலம் கட்சியாட்சி அமைப்பினை நன்கு பலப்படுத்தமுடியும் என்பதை இவர் நன்கு உணர்ந்து இருந்தார். வேறுவகையாகச் சொல்லுவ தென்றால் சட்டசபையில் சொல்லப்பட்ட நிதியியல், நீதியியல் செயல்களுக்குச் சிறந்ததொரு விளம்பரத்தைத் தேடித்தரும் செயலாக, முறையாக அது இருந்தது. நகர மக்கள் வரவழைக்கப் பட்ட கட்டளைகளிலிருந்து இதனை நாம் அறிகின்றோம். ஆனால், எத்தனைபேர்கள் வந்தனர் அல்லது அவர்கள் என்ன செய்தார் கள் அல்லது யாதாகிலும் செய்தார்களா என்பதைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. அக்குறிப்பிட்ட பாராளுமன்றம் புரட்சிகரமான சட்டசபையாகவே விளங்கியது. அப் பாராளு மன்றத்திற்கு சைமனின் கட்சியைச் சேர்ந்த நிலப்பிரபுக்களும் அழைக்கப்பட்டனர். ஆனால், பிற்காலத்தில் பாராளுமன்றங் களைக் கூட்டுகின்றபோது நகர மக்களை அழைப்பதற்குரிய ஒரு முன் நிகழ்ச்சியை இக்கூட்டம் நமக்கு அமைத்துக்காட்டியது எனலாம். முதலாம் எட்வர்டு ஆட்சிக்காலத்தில் கூடிய பாராளுமன்றக் கூட்டங்களின்போதெல்லாம் ஒழுங்காக நகரப் பெருமக்கள் அம் முறையைப் பின்பற்றி அழைக்கப்பட்டதைக் காணுகின்றோம்.

ஆங்கிலேயப் பாராளுமன்றம் தனி ஒரு மனிதனால் படைக்கப் பட்டது அன்று. சைமனோ, எட்வர்ட்டோ அப் பாராளுமன்றத் தைத் தோற்றுவித்தார்கள் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியாது தனி மனிதன் யாரும் அதைத் தொடங்கவில்லை. அது தானாகவே தோன்றி வளர்ந்தது. ஆங்கிலேய மக்களின் நல்ல இயற்கைப் பண்புகளாலும் பொது அறிவினாலும், கடந்த பல நூற்றாண்டுகளில் பெற்ற அனுபவத்தினாலும், இயற்கை யாகத் தோன்றியதே அப்பாராளுமன்றமாகும். ஆங்கிலேயப் பொதுமக்கள் பொதுவாக சர்வாதிகாரிகளைவிட எப்போதுமே குழுக்களையே பெரிதும் விரும்பிப் போற்றினர். அதைப் போலவே தெருக்களில் போரிடுவதைவிட, அவர்கள் தேர்தல் முறையைப் பெரிதும் விரும்பினர். மேலும் புரட்சிகரமான தனிப் பட்ட வழக்குகளை ஆராய்ந்து தீர்ப்பளிக்கும் மன்றங்களுக்குப்

பதிலாகப், பேசும் கதைகளையோ அவர்கள் பெரிதும் விரும்பிப் போற்றினர்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

நிலமானியப் படைமுறைக்கு ஐரோப்பா கடமைப்பட்டுள்ளமை — சிலுவைப் போர்கள் — அதன் விளைவுகள் — முதலாம் ரிச்சர்ட்டும் இளவரசர் ஜானும் — நகரத் தந்தைகளும் காரனர்ஸ்களும் — இடைக்கால அரசியலமைப்பில் மக்களாட்சிப் பற்றுடைய கோட்டுபாடு — நார்மண்டியின் இழப்பு — ஸ்டீபன் லாங்டன் — மாபெரும் பட்டயம் — பிற்கால வரலாற்றில் மாபெரும் பட்டயம் — மூன்றும் ஹென்றியின் கொடுங்கோலாட்சி — சைமன் டி மான்ட்போர்ட்டு — சைமனும் ஆலிவரும் — பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் — பாராளுமன்றத்தில் நகரப் பெருமக்கள்.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

1. கேட் நார்கேட்டு : (Kate Norgate)
   John Lackland.
2. எப். எம். போவிக்கு: (F. M. Powicke)
   The Loss of Normandy.
3. மாக் கெக்னி : (Mc Kechnie)
   Magna Charta.
4. கிரைட்டன் முதலியோர்: (Greighton, Charles, Bemont and G. W. Prothero)
   Lives of Simon de Montfort.

மேலும் இப்பிரிவின் முதலாம் இயலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நூற்களைப் பார்க்க.

## இயல் 4

# இடைக்காலத்திய கூட்டுரிமை வாழ்க்கை நெறி

1. பல்கலைக் கழகங்கள், 2. சோதரத் துறவிகள் 3. யூதர்கள், 4. பொதுச் சட்டமும் வழக்கறிஞர்களும், 5. எட்வர்டு அரசர்களின் ஆட்சியில் பாராளுமன்றத்தின் நிலை, 6. மக்கள் சபை, 7. அமைதிகாண் நீதிபதிகள்.

**அரசர் :** முதலாம் எட்வர்டு 1272-1307
இரண்டாம் எட்வர்டு 1307-1327

இடைக்காலத்தில் மக்கள் கூட்டமாகச் சேர்ந்து சிந்தித்தும், செயலாற்றியும் வந்தனர். ஒவ்வொரு மனிதனின் நிலையும், அவன் வாழுகின்ற சமூகக் குழுவின் நிலைக்கேற்ப உறுதி செய்யப்பட்டது. அதாவது மேனர் பண்ணைகளிலோ, பேரூர்களிலோ, வணிகக் கழகங்களிலோ, கற்றறிந்தோர் இருக்கும் பல்கலைக் கழகங்களிலோ, கன்னி மாடங்களிலோ ஒரு மனிதன் இருப்பானுைல், அவன் இருக்கும் அந்தச் சமூகக் குழுவின் அமைப்பு முறைக்கு ஏற்ப, அவனுடைய நிலை சிறந்து விளங்கலாயிற்று. சட்டத்தின் முன்பு உட்குடிகளும், துறவிகளும் சிறப்புடன் தெரியவில்லை. ஆனுல், மேனர் பண்ணையின் பிரபுக்களின் மூலமும், மடாலயத்தலைவர்களின் மூலமுமே உட்குடிகளும் துறவிகளும் சட்டத்தின் முன்னுல் சிறப்பிடம் பெற முடிந்தது. மனிதன் என்னும் முறையிலோ, ஆங்கிலேயக் குடிமகன் என்னும் முறையிலோ, ஒரு மனிதனுக்கு வேலை செய்வதற்கோ, வாக்குரிமை அளிப்பதற்கோ, கிருஸ்துவ சமயத்திற்குரிய சிறிதளவு தருமத்தைத் தவிர வேறெதையும் செய்வதற்குக்கூட அவர்கள் உரிமையுடையவர்களாக இல்லை. இடைக்காலச் சமுதாயத்தின் மூல அளவுகோல் தேசிய இனம் என்ருே, தனி மனிதன் என்ருே கூறுவதற்கில்லை. ஆனுல், அவற்றிற்கு இடையே ஏதோ ஒன்று மூல அளவுகோலாக இருந்தது என்பது மட்டும் தெரிகிறது. அதை நாம் கூட்டுரிமைக் குழு (Corporation) எனலாம்.

இவ்வாறு கண்டிப்பாகக் கூட்டினக் கொள்கையை உருவாக்கியதின் மூலம், ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தோழர்களோடு கொண்டிருந்த தொடர்பு இருண்ட காலக் காரிருளிலிருந்து, இடைக்கால அந்தி ஒளியை நோக்கி நாகரிகம் முன்னேறியதையும் காணுகின்ருேம். உட்குடிகள் விடுதலை பெற்ற பிறகு மறுமலர்ச்சி இயக்கமும், சீர்திருத்த இயக்கமும் சிறப்புற்று விளங்கிய பிற்காலத்தில்தான், நிலமானியப் பண்முறை உலகத்தைச் சார்ந்திருந்த பொருளாதார முறை அடியோடு அழிக்கப்பட்டது. அங்கிலேயில்தான் மனித இனம், தனியுரிமை என்பதை நோக்கி மற்ருெரு அடியினை எடுத்துவைத்து முன்னேற முடிந்தது. ஒரு பக்கம் எல்லாம்வல்ல வல்லரசின் முன்னர், இடைக்கால கூட்டுரிமைக் குழுக்கள் எல்லாம்உண்மையிலேயே அழிந்து போயின. அதே சமயத்தில் மற்ருெரு பக்கத்தில் தன் உரிமையை வெளிப்படுத்திய தனி மனிதன் மெல்ல மெல்ல மறையலாஞன். இங்கிலாந்திலிருந்த மடாலயங்களும் சோதரத் துறவிகளின் சங்கங்களும் மெல்ல மறைந்து போயின. அதே சமயத்தில் பட்டணத்துக் கூட்டுரிமைக்குழுக்களும் வணிகக் கழகங்களும் தங்களுடைய மிக முக்கியமான கடமைகளையெல்

லாம் தனி மனிதனும் அரசும் தங்களுக்கு இடையே பகிர்ந்து கொண்டுள்ளதைக் கண்டன. ஆனால், இடைக்கால நிலையங்களில் சில சிறிதும் பழுதடையாமல் இருந்து வந்தன. சமயச் சார்பற்ற குருமார்களும், வழக்கறிஞர்களும் பல்கலைக்கழகங்களும் புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் தேசிய இனத்திற்குத் தாங்கள் தொண்டாற்றுவதற்கு ஏற்ற வகையில் தங்களை முற்றிலும் திருத்தியமைத்துக்கொண்டன. மேலும் மக்கள் சபை (House of Commons) அந்நாட்டுப் பொது மக்களும், சமூகப் பிரதிநிதிகளும் இடம் பெற்றிருந்த பேரவையாகவும், தேசிய இன வாழ்வின் முதன்மையான உறுப்பாகவும் செயற்படலாயிற்று.[1] சிறப்பும் திறமையும் வாய்ந்த இடைக்காலக் கூட்டுரிமைக் குழுக்களின் செயல் முறைகளிலிருந்து இத்தகைய விலை மதிக்க முடியாத மரபுரிமையை இங்கிலாந்து பெற்றது.

இந்த இயலில் மாண்புமிக்க நான்கு நிலையங்கள் இங்கிலாந்தில் தோன்றியதை நாம் சிறப்பாகக் காண்போம். அவற்றுள் ஒன்று, இங்கிலாந்தில் அழிந்துவிட, மற்ற மூன்றும் இன்றுவரை நின்று நிலைபெற்று வருவதை நாம் காணுகின்றோம். பல்கலைக்கழகங்கள், சோதரத் துறவிகளின் சங்கங்கள், நீதிமன்றக் கழகத்தோடு தொடர்பு கொண்டிருந்த வழக்கறிஞர்கள், பாராளுமன்றம். சிறப்பாக மக்கள் அவை அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும். இருண்ட காலத்தில் காட்டுமிராண்டித் தனத்திற்கு எதிராகத் தோன்றியதே மடாலய அமைப்புகளும், நிலமானியப் படைமுறைகளுமாகும். ஆனால், இடைக்காலச் சமூகம் அதன் கொடுமுடியை அடைந்தகாலத்து, அப் புதிய அமைப்புகள் மிகவும் கனிந்துவிட்ட பழங்களாகக் காணப்பட்டன.

நமது முன்னோர் அறிந்திராத பல்கலைக்கழகங்களும், பாராளுமன்றங்களும் இடைக்காலத்தின் புதிய படைப்புக்களாகும். அக்காலத்தில் சாக்ரடீஸ் பட்டங்களோ, வேறு பிற நற்சான்றுகளோ, வழங்கவில்லை. எந்த சீடனுகிலும் இவ்வாறு பட்டமோ, வேறு பல சான்றுகளோ கேட்டிருப்பானுனால் அவனை

[1] 'இன்று வாக்களிப்போர் பலருடைய வாக்குகளை மொத்தமாகப் புள்ளி விவரப்படிப் பெற்றவர்கள் உறுப்பினர்களாக இருப்பதைப் போன்று தொடக்க காலத்தில் 'மக்கள் சபை' உறுப்பினர்கள் இதில் இடம் பெறவில்லை. ஆனால், லண்டன் மா நகரம், யார்க்கின் கோட்டம் போன்று வரையறுக்கப்பட்ட சமூகக் குழுக்களே மக்கள் சபையில் இடம் பெற்று இருந்தன. இதற்கு ஓரளவிற்கு ஒப்பாக அமெரிக்காவின் 'செனட்டு' மன்றத்தைக் குறிப்பிடலாம். அம் மன்றத்தில் தனிப்பட்ட மாநிலங்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

மனக்கலக்கத்தை உண்டாக்கக்கூடிய வினாவிடை முறையைக் கையாண்டு உண்மையான அறிவின் இயல்பு என்ன என்பதை அவர் நன்கு விளங்கியிருப்பார். இடைக்காலத்தில் மீண்டும் புத்துயிர்ப்புப் பெற்றதைக் காட்டிலும், பேரளவிற்குத் தத்துவமும், அறிவியலும் கிரேக்க நாட்டில் பண்டைக் காலத்துத் தோன்றி வளர்ந்ததைக் காண்கிறோம். ஆனால் பண்டைக் கல்வியும் அறிவும் என்றுமே பல்கலைக்கழகங்களினால் திட்டமிட்டு அமைக்கப்பட்டவை அல்ல. இக்காரணத்தினால்தான் ஓரளவிற்கு அக்கல்வி முறையும், பண்பாடும் அழிந்தொழிந்தன. அணிவகுக்கப்பட்ட கிறித்துவக் குருமார்களின் தாக்குதலையெல்லாம் எதிர்த்து நின்று அவை வெற்றி பெறமுடியாது அழிந்தொழிந்தன.

அதற்குப் பிறகு பல நூற்றாண்டுகள் வரை திருச்சபை மனிதனுக்குத் தேவையான எல்லா அறிவையும் ஒரு சிறு பொருளாகவே மதித்து வந்தது. உலகமும், திருச்சபையின் கருத்தை ஏற்றுக்கொண்டது. அதனால்தான் மடாலய ஓதுக்கிடங்களுக்கும், குருமார்களின் கூடங்களுக்கும் வெளியே கல்வி கற்பிப்பதற்குரிய அமைப்புகளை நிறுவவேண்டுமென்ற நோக்கமோ, தேவையோ, மனிதர்களிடையே தோன்றாமல் இருந்தது போலும். ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டில் மக்கள் சிந்தனையெல்லாம் கல்வி கற்பதிலும் மறுமலர்ச்சி அடைந்ததைக் காணுகின்றோம்.

இதற்குக் காரணம் ஓரளவுக்குச் சிலுவைப் போர் வீரர்கள் ஐரோப்பிய நாடுகளோடு கொண்டிருந்த தொடர்பும், ஓரளவுக்கு வளமும் பாதுகாப்பும் மிக்க ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த மக்களிடையே இயல்பாகவே அறிவு வளர்ச்சியும், சிந்தனை முதிர்ச்சியும் உண்டானமையுமேயாகும். ரோமானியரின் சட்டப் படிப்பும், திருச்சபைச் சட்டக் கல்வியும், இலக்கிய வளமிக்க இலத்தீன் மொழியும், அரிஸ்டாட்டிலின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த தத்துவக் கல்வியும், அராபிய எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த கணிதமும், மருத்துவமும், வேறு பல விரிவுரைகளும், கட்டுரைகளும் அக்காலத்துத் தனக்கென்று புதியதொரு கட்டுரிமைக்குழு வாழ்க்கையை நாடியலைந்தன. அக்காலத்திய மக்கள் சிலுவைப் போர் புரிவதில் காட்டிய ஆர்வத்தைப்போன்று, கல்வி பயலுவதிலும் பேரார்வம் கொண்டிருந்தனர். இந்த இரு அறிவுகளும், ஆன்மாவின் இத்தகைய உணர்ச்சிப்பெருக்கும், தொழிலுக்குரிய பேரவாவும், திருக்கோயில் மானியங்களைக் கவரவேண்டுமென்ற ஆசையும், உயர்ந்ததைப்பற்றியும் தாழ்ந்ததைப்பற்றியும் அறியவேண்டுமென்ற ஆர்வமுள்ள இயல்பும் வீரதீரச்

செயல்களைச் செய்ய வேண்டும் என்ற துடிப்பும், புதியநாடுகளைச் சென்று காண வேண்டுமென்ற ஆர்வமுமாகிய பலவும் சேர்ந்த வொன்றாக மக்கள் உள்ளங்கள் இருந்ததன் விளைவாகக் கல்வி கற்க வேண்டுமென்ற பேராவல் நாட்டுமக்களிடையே மேலோங்கி நின்றது. தங்கள் ஊர்களைவிட்டுப் புறப்பட்டு, ஆலப்ஸ் மலைகளைச் சுற்றியும், கடல்களிலே சுற்றி உலாவியும் மக்கள் அறிவுப் பசியைப் போக்கிக்கொள்ள முயன்றனர். அவ் அறிவுப் பசி, சிலுவைப் போர்களைப் போன்றே அனைத்துலகத் தூண்டுகோலாக இருந்தது. ஐரோப்பாவில் உண்டான அவ்வறிவாற்றல் குழப்பத்திலிருந்து திடீரென்று பல்கலைக்கழகங்கள் தோன்றின. முதலில் இத்தாலியிலும், அதன்பிறகு கிறிஸ்துவ சமயத்தைச் சார்ந்த எல்லா நாடுகளிலும் அவை தோன்றி வளர்ந்தன. இடைக்காலத்தின் அறிவாற்றல் ஒரு கருத்துக்கு இவ்வாறு கூட்டுரிமைக் குழு வாழ்வினை அளிக்கத்தக்க பேராற்றல் உடையதாக இருந்தது. ஒவ்வொரு நாடும் தனக்குரிய பல்கலைக்கழகங்களை நிறுவிக் கொண்ட பிறகும், மாபெரும் புகழ்மிக்க பல்கலைக் கழகங்கள் ஆக விளங்கிய நிலையங்கள் எல்லாம், தம்மிடையே அயல்நாட்டு மாணவர்களாகிய 'தேசிய இனங்களைப்' பெற்றிருந்தது. கல்வி கற்ற ஒவ்வொருவரும் இலத்தீன் மொழியில் எழுதுவதற்கும், பேசுவதற்கும் நன்கு தேர்ச்சி பெறுகின்ற வரையில், கல்விமுறை அனைத்துலக நோக்கம் உடையதாக இருந்துவந்தது.

தற்காலப் பல்கலைக் கழகத்திலிருந்து இடைக்காலப் பல்கலைக் கழகம் வேறுபட்டு விளங்குகின்றது. தற்காலப் பல்கலைக் கழகம் கற்களாலும், சாந்தினாலும் கட்டப்பட்டு இருக்கின்றது. அது கல்லூரிகளையும், ஆய்வுக்கூடங்களையும், நூல் நிலையங்களையும் தம்முடைய உறுப்புக்களாகக் கொண்டிருக்கின்றது. மேலும் முதலாளிகள் வழங்கும் அறக்கட்டளைகளைப் பெற்றும் அரசு வழங்குகின்ற மானியங்களைப் பெற்றும் அது அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இடைக்காலப் பல்கலைக்கழகம் மனிதர்களால் மட்டும் அமைக்கப் பட்டதாகும். மேலும் அப்பல்கலைக்கழகம் அளவுகடந்த தேர்தல் முறையாகிய சுமையினைத் தாங்கிக்கொண்டிருக்கவில்லை. அதைப் போலவே, மிகப் பலவீனமான ஒழுங்கு முறைகளும், சட்டதிட்டங்களும் அதை ஆட்சி புரியவில்லை. திருச்சபை மட்டும் அன்றைய பல்கலைக்கழகத்தைச் சமய மறுப்பு நிலையமாகவும், கடவுள் வெறுப்பு நிலையமாகவும் மாறிவிடாமல் இருக்குமாறு கண்காணித்துவந்தது. அக்கண்காணிப்பு மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், உலகிலேயே மிகப் பேரளவில் உரிமை வாய்ந்த மனித சமூகமாகப் அப்பல்கலைக்கழகம் விளங்கியிருக்கும். ஆனால், திருச்சபையின் கண்காணிப்பு கூர்ந்து ஆராய்

வதற்குரிய திறமையைக் குறுகிய ஒருதலைமுடிவான ஒரு கால் வாயின் வழியாகப் பாயச் செய்து பயனற்றுப் போகுமாறு செய்தது.

முதன்முதல் அமைக்கப்பட்டப்பல்கலைக்கழகங்கள் கட்டிடங் களையோ, அறக் கட்டளைகளையோ நம்பி வாழவேண்டிய நெருக்கடி யில்லாதிருந்த காரணத்தினால் பன்னிரண்டாம், பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா முழுவதிலும் தம் இனத்தினை எங் கும் பரப்புவதில் பேராற்றலும் பெரும் திறமையும் பெற்றிருந் தன. நாம் எல்லாம் கண்டு வியக்கத்தக்க வகையில் மிக விரை வில் பல்கலைக்கழகங்கள் ஐரோப்பா முழுவதிலும் தோன்றின. இவ்வாறு விரைவில் பல பல்கலைக்கழகங்கள் தோன்றியமைக் குக் காரணம் என்னவென்றால் அவை செல்வத்தின் ஆதரவைப் பெறவேண்டுமென்று காத்துக் கொண்டிருக்காமையே ஆகும். அது இவ்வாறாக, இரண்டாம் ஹென்றிக்கும் பிரான்சு நாட்டு அர சருக்கும் உண்டான மனக்கசப்புக் காரணமாகப் பிரான்சு பல் கலைக் கழகத்தில் கல்வி பயின்றுவந்த ஆங்கிலேய மாணவர்கள், சிறிதளவு அப்பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேறி, தங்கள் தாயகத்திற்குத் திரும்பி வந்தனர். அதன் விளைவாக அவர்களால் ஆக்ஸ்போர்ட்டில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. அது தெற்கு இங்கிலாந்திலிருந்தும், மேற்கு இங்கிலாந்திருந்தும் எளி தில் வந்து பயில்வதற்கு ஏற்ற வசதிமிக்க இடத்தில் அமைக்கப் பட்டது. மேலும், அப் பல்கலைக்கழகத்தில் பல வீடுகள் அமைக் கப்பட்டன. ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஒவ்வோர் அறையி லும் ஆறு மாணவர்கள் தங்கியிருந்து கல்வி பயில முடிந்தது. அத்துடன் மாணவர்கள் ஒருங்குசேர்ந்து அமர்ந்து தேறலினைக் குடித்து, சொற்போர் புரிந்தும் ஆடியும், பாடியும் மகிழ்வதற் கும், தங்களுக்குள்ளே பூசலிட்டுக் கொள்வதற்கும் ஏற்றவகை யில் பல தேறல் விடுதிகள் அங்கு அமைக்கப்பட்டிருந்தன. அதைப்போன்றே திருச்சபைகள் அங்கு நிறுவப்பட்டன. பல் கலைக்கழக விழாக்களுக்கும், வேறு பல செயல்களுக்கும் அவர்கள் திருச் சபையின் இடத்தை அடிக்கடி பயன்படுத்திக் கொண்ட னர். தங்களுக்கு முன், கிடைத்தற்கரிய சிறப்புமிக்க நூல்களை வைத்துக்கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சொற் பொழிவு ஆற்றுவதற்கு ஏற்ற அறைகளும் அப் பல்கலைக்கழகத் தில் இருந்தன. ஆசிரியர்கள் சொற்பொழிவாற்றுகின்றபோது தரையிலேயே அமர்ந்து மாணவர்கள் ஆசிரியர்களின் சொற் பொழிவுகளைக் குறிப்புகள் எடுத்தும், கைகளைத் தட்டி ஆர வாரம் செய்தும் வந்தனர். அல்லது இன்றைய திரைப்படக் கொட்டகையில் பார்வையாளர்கள் சிலர் கலகம் செய்யும்

நோக்குடன் ஆரவாரம் செய்வதைப்போன்று ஒலி எழுப்பியும், அவர்கள் தங்கள் ஆசிரியர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தனர்.

இவ்வாறு ஆக்ஸ்போர்ட்டில் நகர மக்களுக்கும், நாட்டு மக்களுக்கும் இடையே உண்டான கொடிய உட்பகையின் காரணமாக, மாணவர்கள் சிலர் கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டிருக்கலாம். இவ்வாறு நகர மக்களுக்கும், நாட்டுப்புற மக்களுக்குமிடையே பகைமை உண்டாவது அக்காலத்தின் இயல்பாக இருந்து வந்தது. இத்தகைய செயலே ஆக்ஸ்போர்ட்டுக்கு எதிராக இன்னொரு பல்கலைக்கழகத்தைத் (1209) தோற்றுவித்தது என்றால் அது தவறாகாது. புதிதாக அமைக்கப்பட்ட பல்கலைக்கழகத்துக்கு கேம்பிரிட்ஜ் (Cambridge) பல்கலைக்கழகம் என்பது பெயராகும். கேம்பிரிட்ஜ் ஆற்று வழிகள் பலவும் ஒன்றாக வந்து சேரும் இடமாக இருந்தது. அதைப்போன்றே இங்கிலாந்தின் வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் ரோமானியர்கள் அமைத்த வசதியான நெடுஞ்சாலைகள் வந்து ஒன்று சேருகின்ற இடமாகவும் கேம்பிரிட்ஜ் அமைந்திருந்தது. லண்டன் மாநகரத்திலிருந்து ஆக்ஸ்போர்ட்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்கள் முறையே 50 மைல்களுக்குச் சிறிது அதிகமான தொலைவுடையனவாக இருந்தன. லண்டன் மாநகரில் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில், அதற்கென ஒரு தனிப்பல்கலைக்கழகம் இருந்ததில்லை. வேல்ஸ், ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்திற்குத் தங்களுடைய மாணவர்களை அனுப்பி வைத்தது. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் ஸ்காட்லாந்து தன்னுடைய மாணவர்களைப் பாரிசுக்கும் படுவாவுக்கும் அனுப்பி வைத்தது. பதினைந்தாம் நூற்றாண்டின் ஸ்காட்டியர்கள் தங்களுக்கென்று ஒரு தனிப் பல்கலைக்கழகத்தை செயின்ட் ஆண்ட்ரூஸ் (St. Andrews) என்னும் இடத்தில் நிறுவினர்.

பழங்காலத்தில் பல்கலைக் கழகங்கள் பெரிய அறக் கட்டளைகளின் உதவியையோ, பரிசுப் பொருள்களையோ மக்களிடமிருந்து பெறவில்லை. எனவே அவை ஊழல் மலிந்தனவாக இருக்கவில்லை. அதைப் போன்றே ‘செல்வம் மிக்க இளைஞர்கள்’ பல்கலைக்கழகங்களில் சேர்ந்து ஒழுங்கீனமாக இக்காலத்தில் நடந்து கொள்ளுவதைப் போன்று, அக்காலத்தில் செல்வர் வீட்டுப்பிள்ளைகள் பல்கலைக் கழகங்களில் சேர்ந்து, அவற்றிற்குப் பழியைத் தேடித்தரவில்லை. ஆனால் இவையனைத்தும் பிற்காலத்தில் பல்கலைக்கழகங்களில் நடைபெற்றதைக் காணுகின்றோம். இடைக்காலத்தில் ஆக்ஸ்போர்ட்டும் கேம்பிரிட்ஜும்

ஏழை மக்களுக்குரிய பல்கலைக் கழகங்களாக விளங்கின. ஏழை மக்களுக்குரியது என்று சொல்வதற்குக் காரணம் உயர் வகுப்பினர் அப்பல்கலைக்கழகங்களைப் பயன்படுத்திக் கொண்டது மிகமிகக் குறைந்த அளவிலேயேயாகும். மாவீரர்களும், நிலப்பிரபுக்களும் பல்கலைக்கழகக் கல்விக்கு மேற்பட்ட உயர்ந்த கல்வியைத் தாங்கள் பெற்றிருப்பதாக நினைத்துக் கொண்டனர். ஆனால், மேனர் பண்ணைகளில் உழன்றுகொண்டிருந்த உட்குடிகள், அப்பல்கலைக்கழகப் படிப்பினைப் பெறுவதற்கு மிகக் கீழ்ப்பட்டவர்களாக இருந்தனர். உண்மையாக அங்குப்படித்த மாணவர்களுள் பெரும்பாலோர் உழவர்கள், உரிமை ஏவலாளர்கள், குடிமக்கள் ஆகியோரின் மதிநுட்பம் வாய்ந்த பிள்ளைகளாக இருந்தனர். அப்பிள்ளைகள் தங்கள் தகப்பனரின் பண்ணைகளையும் கைத்தொழில்களையும் கைவிட்டு, அறிவைத் தேடும் முதல் முயற்சியின் பயனாகச் சிறுசிறு பதவிகளைப் பெற்றனர். உண்மையில் அவர்கள் குருமார்களாகவும், ஏழைப் புலவர்களாகவும் மாறினர். இவர்கள் எல்லாம் பட்டயம் பெற்ற கல்வி இரவலர்களாக அன்றைய சமுதாயத்தில் இடம்பெற்றனர்.

அத்தகைய மனிதர்களுக்குப் பல்கலைக்கழகங்கள், தொழில் துறை மதிப்பினையும் உயர்வினையும் பெறுவதற்குரிய வழியாக இருந்தது. பிரபுக்கள் குடும்பங்களில் பிறக்காத மக்களுக்குத் திருச்சபையில் மிக உயர்ந்த பதவிகளைப் பெறுவதற்குரிய ஒரே வழியாகப் பல்கலைக்கழகங்கள் பயன்பட்டன. தங்களுடைய சொல் திறன், அறிவாற்றல் முதலியவற்றால் சிறந்து விளங்கியவர்கள் பணித்துறையாளர்களாக உயர் பதவி பெற வேண்டுமென்ற குறிக்கோளுடையவர்களாக இருந்தனர். அவர்கள் பெரிய மனிதர்களின் செயலாளர்களாகவும், மருத்துவர்களாகவும், கட்டிடக் கலைஞர்களாகவும், திருச்சபைக்குரிய வழக்கறிஞர்களாகவும், திருச்சபைப் பாதிரிமார்களாகவும் விளங்க விரும்பினர். அவர்களுக்குப் பல்கலைக் கழகம் ஒரு பெரும் வாய்ப்பை அளித்தது எனலாம். பல்கலைக் கழகப் படிப்பினைப் பெற்றுத்தேர்ச்சியுற்றோர் மேற்கொண்டு வேலை வாய்ப்புகளை அக்காலத்தில் எளிதில் பெற முடிந்தது. பதின்மூன்றாம் நூற்றாண்டு முழுவதிலும் பல்கலைக் கழகப் படிப்பு பெற்றவருக்கு எளிதில் கிடைக்கக்கூடிய முதல் தொழிலாக இருந்தது வழக்கறிஞர் தொழிலாகும். பட்டம் பெற்றோர் வழக்கறிஞர் குழுவிலும், குற்ற நடுவர் ஆயத்திலும் இடம் பெறுவது எளிதாக இருந்தது. இன்றும் அப்பதவிகளுக்கு ஆக்ஸ்போர்ட்டிலும், கேம்பிரிட்ஜிலும் படித்துப் பட்டம்பெற்ற மக்களே தேர்ந்தெடுக்கப்படுவதைக் காணுகின்றோம். இத்தகைய சிறு பதவிகள் குருமார்களுக்கு

உரிய அழிக்க முடியாத பண்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கவில்லை.

எனவே, முதன்முதலாக பட்டப்படிப்புக்குப் பயின்று கொண்டிருந்த மாணவர்களைப்பற்றி நாம் கற்பனை செய்துபார்க்கும்போது, ஏதோ ஒரு வகையில் அவர்கள் பெரிதும் குருமார்களாகவே இருந்தார்கள் என்று நினைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்கள் அரசரின் முறை மன்றங்களிலிருந்தும், தூக்கிடுவோரிடமிருந்தும் பெக்கெட்டின் நிழலால் பாதுகாக்கப் பட்டனர். ஆனால் தற்காலத் திருச்சபையினர் முறைப்படுத்தப் பட்ட பண்புகளில் சிலவற்றைக்கூட அவர்கள் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன்பு உண்மையான மாணவன் நடுத்தர வகுப்பின் கடை நிலையிலே தோன்றி, மதிநுட்பம் உடைய சிறுவனாகவும், வறுமையால் வாடுபவனாகவும் இருந்தான். அவன் பதினான்கு வயது அளவில் ஆக்ஸ்போர்ட்டுக்கோ, கேம்பிரிட்ஜுக்கோ கல்வி கற்க வந்து சேர்ந்தான். இருபத்தொரு வயது அல்லது அதற்கு மேலும் சில ஆண்டுகள் வரை அங்குத் தங்கிக் கல்வி பயின்றான். அவ்வாறு கல்வி பயின்ற காலத்து, பள்ளி நிலையங்களின்—கல்லூரிகளின் பண்புகளான கட்டுப்பாடு மிக்க ஒழுங்குமுறைக்கு முழுவதிலும் கட்டுப்பட்டவனாக இருந்தான். அவனுடைய அற வாழ்வினை மில்லர்ஸ் கதையையும் (Miller's Tale, Reeve's Tale) ரீவ் கதையையும் எழுதிய ஆசிரியர் விரிவாக விளக்கியுள்ளார். இன்னும் பலர் இதைவிடச் சிறிது சிறப்புற்ற வகையில் அப்பல்கலைக்கழக மாணவர்களைப் பற்றி எழுதியுள்ளனர். சாசர் என்னும் கவிஞர் தம்முடைய 'முன்னுரை' (Prologue) என்னும் நூலில் பெருந்தன்மையாக மாணவர் ஒருவரைப் படைத்ததின் மூலம் அக்காலத்தியப் பல்கலைக் கழக மாணவர்கள் வாழ்க்கையைத் தெளிவாக விளக்கி இருக்கின்றார். எனினும் அவரைவிட மேற்கண்ட கதைகளின் ஆசிரியர் அன்றைய மாணவர்களுடைய நிலையை உள்ளவாறு எடுத்துரைத்துள்ளார். எல்லாப் பல்கலைக்கழகங்களும் பொதுவான மாணவர்களின் பாடல்களும், இலத்தீன் மொழிச் சுலோகங்களும் மாணவர் 'தேறல் விடுதிகளில் இறப்பதைப்பற்றிய' சூளுரைகளைப் பெருமைப்படுத்துகின்றன. அப்பாடல்கள் இடைக்காலக்குருமார்களின் கும்மாளப் பாட்டு ('Goliardic') என்று கூறுவர். இதற்கிடையே சாலையிலும், நகரிலும், நாடோடி வாழ்க்கையின் இன்பங்கள் அனைத்தையும் மாணவர்கள் அனுபவிப்பதில் பெரிதும் ஈடுபாடு உடையவர்களாக இருந்தனர். அவர்கள் சமயத்திடத்துச் சிறிது கூட ஈடுபாடு கொண்டவர்களாக இருந்ததில்லை. அவர்களுடைய சமயம் எல்லாம் காதல் தெய்வங்களான பாக்

கெஸையும் (Bacchus), வீனஸையும் (Venus) வழிபடும் நெறிகளாகவே இருந்தன. ஓவிட் (Ovid) புறச் சமயப் படி மரபில் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டிய தெய்வங்களே அவர்கள் வழிபட்டனவாகும். இருந்தபோதிலும் அவர்களுள் பெரும்பாலோர் கடவுள் பற்றுடையவர்களாக இருந்தனர். அவர்கள் எல்லாரும் கொள்கையளவில் கல்வி பயில்வதிலேயே தங்கள் கருத்தைச் செலுத்தி வந்தனர்.

பிற்கால ஆக்ஸ்போர்ட் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் செல்வச் செருக்கும் மதிப்பும் ஆகிய இருபகுதிகளை உடைய கல்லூரியின் நிலையைப் போன்று இல்லாமல் அக்காலத்திய சூழ்நிலை இலத்தீன் மொழி வினவிடைக் கல்வி முறையாகவே (Quartier Latin) இருந்தது. இடைக்கால மாணவன் இவை இரண்டையும் சாராதவனுக இருந்தான். சைமன் டிமான்ட்போர்ட்டு தன்னுடைய புரட்சிக் கொடியை உயர்த்திய வுடனேயே, ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்புக்காகப் பயின்று கொண்டிருந்த மாணவர்கள் எல்லாரும் பெரும் திரளாகத் தங்கள் கிழிந்த உடைகளுடன், உரிமைகளுக்காகப் போராடுவதற்கு அணி வகுத்து நின்றனர். 1848-ஆம் ஆண்டு தடை அரண்களின்மீது பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி ஆகியநாடுகளின் (ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் கட்டுப்படாத) மாணவர்கள் எவ்வாறு அணிவகுத்து நின்றனரோ அவ்வாறே ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக்கழகத்து மாணவர்கள் சைமன் டிமான்ட்போர்ட்டுக்கு ஆதரவாக அணி வகுத்து நின்றனர். சைமன் காலத்தில் இளைஞர்கள் ஒரே சமயத்தில், கல்வி பயில்பவர்களாகவும், கட்டற்ற விடுதலை உடையவர்களாகவும், உரிமையுடையவர்களாகவும், சமய உணர்வு கொண்டவர்களாகவும், குறுகிய மனப்பான்மையுடனும் இருக்க முடிந்தது. இத்தகைய தங்களுடைய பண்புகளுக்கு இடையே முரண்பாடும் இருப்பதை அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

நலமும் பெருந்தன்மையும் வாய்ந்த இயல்பூக்கும் தற்கால மக்களை, இடைக்காலப் பல்கலைக்கழகத்தின் ஏழைக் குருமார்களோடு தங்களை நலமற்ற முறையில் ஒப்பிட்டுக் காணத்தூண்டியது. இடைக்காலப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் அறிவினைப் பெறும் முயற்சியில் ஈடுபட்ட காலத்து, மிகமிகக் கொடிய வறுமையால் துன்புற்றுக் கொண்டிருந்ததை நாம் இங்கு மறந்துவிடக்கூடாது. ஆனல், அந்நிலைக்கு மாருக மற்ருெரு நிலையும் அக்காலத்தில் இருந்தது. பதினன்கு வயதுப் பிள்ளைகள் சிறிதளவு பணத்துடனே பணம் இல்லாமலோ, அறிவுரை அளிக்கப்

பட்டோ, பாதுகாப்பின்றியோ, பெரிதும் கொலையும், ஒழுக்கக் கேடும், குழப்பமும் கலவரமும் நிறைந்த அரங்கில் அவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளுமாறு அனுப்பி வைக்கப் பட்டனர். அம் மாணவர்களுக்கிடையே சிறு 'குழந்தைத்தன மான மாணவர்களை' ஏமாற்றியும் கைப்பற்றியும் வாழ்வோர் பலர் இருந்தனர். இதிலிருந்து அம் மாணவர்கள் கல்வி பயில் வதனால் பெறக்கூடிய நன்மைகள் எவ்வளவோ அவ்வளவிற்குத் தீமையையும் பெறக் கூடியவர்களாகவும் இருந்தனர்.

பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், முதன் முதலாக கல்லூரிகள் தொடங்கப்பெற்றன. அந்தக் கல்லூரி களில் படிப்பதற்கு வந்திருக்கின்ற மாணவர்களுக்கு உணவும் தங்குவதற்கு வசதியும் செய்து தர முயன்றனர். விரைவில் அவர் களுக்குத் தரப்பட்ட பண உதவியைக் காட்டிலும் பாதுகாப்பும் கட்டுப்பாடும் பெரும்பயன் உடையகாக இருப்பதை உணர்ந்த னர்.[1] எனவே, எச்சரிக்கைவாய்ந்த ஆங்கிலேயப் பெற்றோர் கள் மேலும் மேலும் தம்முடைய பிள்ளைகளை இத்தகைய காப்பு மிக்க கல்லூரிகளில் சேர்ப்பதிலேயே பேரார்வம் காட்டத் தொடங்கினர். பட்டப்படிப்புக்குப் பயின்றுகொண்டிருந்த மாண வர்களின் எண்ணிக்கை மிகுதியாகப் பெருகிற்று. அவர்கள் அக் கல்லூரிகளின் அமைப்புக்களின் மாணவர்கள் அல்லர். ஆனால், அக்கல்லூரிகளில் இடத்தினை வேண்டி, பொருமைப்பட்டுத் தக்க அக் கல்லூரிகளில் இடம் பெற்றனர். இயற்கையாக இருந்த தேவையை நிறைவேற்றுவதற்காக அடுத்தடுத்துத் தலைமுறைகள் தோறும் இந் நிலையங்களின் எண்ணிக்கையும், செல்வமும், முக்கி யத்துவமும் வளர்ந்துகொண்டே வந்தன. இது அமைதி மிக்க நிலையான வாழ்க்கை வசதிகளிடத்து ஆங்கிலேயர்களுக்குள்ள பெரும் நாட்டத்தை எடுத்துரைக்கிறது எனலாம். பதினைந்தாம் நூற்றுண்டு முதல் கல்லூரியை நிறுவியவர்களுக்கு கூடுதலான ஒரு குறிக்கோள் அமையலாயிற்று. லோலார்டிய முறைகளிலிருந் தும், போப்பு ஆண்டவரிடமிருந்தும், தூய்மை நெறியினரின் முறை களிலிருந்தும், ஆர்மீனியரின் நெறிகளிலிருந்தும் மாணவர்களைக்

[1] பலியோல், ஆக்ஸ்போர்ட்டு, 1261-6. மெர்ட்டன், ஆக்ஸ்போர்ட்டு, 1263. பீட்டர்அவுஸ், கேம்பிரிட்ஜ் 1284. இடைக்காலத்தில் ஆக்ஸ் போர்ட்டு பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றவரின் எண்ணிக்கை மூவா- யிரத்திற்கும் குறைவானதாக இருந்திருக்கலாம். கேம்பிரிட்ஜில் இன்னும் இதைவிடக் குறைவாக இருந்திருக்கவேண்டும். இவ்வெண்ணிக்கையை மிகைப்படுத்திக் கூறுவாரும் உளர். இடைக்காலத்திய வேறுபிற நிலையங் களின் எண்ணிக்கையை மிகைப்படுத்திக் கூறுவதைப்போன்று, இதை யும் மிகைப்படுத்திக் கூறினர் என்று கொள்ளுதலே பொருத்தமுடைத் தாகும்.

காக்கவேண்டிய பொறுப்பு கல்லூரிக் காப்பாளர்களுக்குரிய தாயிற்று. இவ்வாறு கடந்து கொண்டிருக்கும் பட்டியின் ஆட்டிடையர்களும் ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் மாணவர்களை காக்கவேண்டியவர்களானார்கள். பட்டியில் ஆட்டிடையர்கள் இருப்பார்களானால் ஓநாய்கள் எளிதிலே ஆடுகளைக் கவர்ந்து செல்ல முடியாது. அதைப் போன்று மாணவர்களை இத்தகைய கொள்கைகளின் செல்வாக்கிலிருந்து, காப்பாற்றுவதற்குக் கல்லூரிகளில் அறக்கட்டளையினர் இருப்பார்களானால் அவர்களை எளிதில் யாவரும் ஏமாற்றிவிட முடியாது.

கல்லூரிகள் ஆக்ஸ்போர்ட்டுக்கும், கேம்பிரிட்ஜுக்கும் உரிய தனிச்சிறப்பு என்று கருதுவது தவறாகும். இத்தாலியப் பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளை அல்லது அறக்கட்டளைகளைப் பெற்ற மாணவர்கள் விடுதிகளை உடையனவாக விளங்கின. ஆனால் அவற்றுள் ஒரு சில நீங்கலாக மற்றவையெல்லாம் மறைந்து போயின. பாரிஸ் பல்கலைக் கழகத்தில் 1180-ஆவது ஆண்டு முதல் 1500-ஆம் ஆண்டுவரை ஐம்பதுக்கு மேற்பட்ட கல்லூரிகள் நிறுவப்பட்டன. ஆனால், அவை என்றுமே அளவிலும், செல்வத்திலும், முக்கியத்துவத்திலும் அவற்றோடு நெருங்கிய தொடர்புடைய இங்கிலாந்தின் கல்வி நிலையங்களுடைய சிறப்பினை அடையவில்லை. அவை மெல்ல மெல்ல உதிர்ந்து அழிந்து போயின. அத்துடன் அவற்றிற்குரிய சொத்தினைக் கட்டிக் காக்காமலும் போயின. அவை இறுதியாக விட்டுவிட்டுச் சென்ற எச்சங்கள் அனைத்தும், பிரஞ்சுப் புரட்சியின்போது முற்றிலும் மறைந்தொழிந்தன. ஸ்டுவர்ட்டு காலம் வரை ஆங்கிலேயக் கல்லூரிகள் செல்வத்திலும், எண்ணிக்கையிலும், வளர்ந்து கொண்டே வந்தன. இதன் விளைவாக அவற்றின் தாயாகிய பல்கலைக்கழகத்தையே விழுங்கி விட்டன.

இடைக்காலப் பல்கலைக் கழகங்களில் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டப் பாடங்களுள் தனிச் சிறப்பு வாய்ந்தது அளவை நூல் (Logic) என்பதாகும். அது அரிஸ்டாட்டிலினுடைய கோட்பாடுகளைத் திருச்சபையின் எதிர்த்துரைக்க முடியாக் கோட்பாடுகளோடு பொருந்துமாறு செய்ய வேண்டியிருந்தது. இவ்வருஞ் செயலினை செயின்ட் தாமஸ் அக்கியூனஸ் (St. Thomas Aquinas) பொதுவாக மன நிறைவு அளிக்கக்கூடிய வகையில் செய்து முடித்தார். பன்னிரண்டாம் நூற்றாண்டு மாண்புமிக்க இலத்தீன் மொழி, இலக்கியத் துறையில் நம்பிக்கை அளிக்கின்ற வகையில் மறுமலர்ச்சி அடைந்தது. அம்மறு மலர்ச்சி புதிய பல்கலைக் கழகங்களில் ஆழ வேர் ஊன்றாத காரணத்தினால் விரை

வில் அழிந்தொழிந்தது. கிரேக்க, ரோமானிய நாடுகளின் கவிஞர்களையும், சொற்பொழிவாளர்களையும், வரலாற்று அறிஞர்களையும் போற்றிப் பின்பற்றக்கூடிய காலம் இன்னும் இங்கிலாந்தில் அரும்பவில்லை. பதினைந்தாம் நூற்றுண்டில் தோன்றிய இரண்டாவது மறுமலர்ச்சி இயக்கத்தின்போது தங்கள் பழைய உலகத்தைப்பற்றிச்-சிறப்பாக மாண்புமிக்க கிரேக்கத்தைப்பற்றிய உண்மையான தோற்றத்தை இங்கிலாந்து மக்கள் காணத் தொடங்கினர். அத்தகைய மறுமலர்ச்சி உண்டானபோது அது இடைக்கால அமைப்புமுறை முழுமைக்கும், ஆன்மீகத்துறையின் பேரிடியாக அமைந்தது. கடந்த காலத்தில் இக்காலத்தைவிட அறிவில் சிறந்த, பெருந்தன்மை வாய்ந்த பெரிதும் உரிமைமிக்க உலகமாக இருந்ததைத் தங்கள் அனுபவத்தில் மக்கள் கண்டனர்; அல்லது அவர்கள் கண்டதாக நினைத்தனர். ஆனால், தொடக்கக் காலத்து அறிஞர்களும் மாணவர்களும் அத்தகைய தொல்லை தரும் தோற்றத்தைக் காணவில்லை.

கடவுள் கொள்கை என்ற போர்வையினுல் பருப்பொருள் அறிவியல் கலை பெரிதும் மூடப்படவில்லை. ஆக்ஸ்போர்ட்டில் சிறப்புற்று விளங்கிய அறிவாற்றல் மிக்க ரோஜர் பேக்கன் (Roger Bacon) என்னும் சோதரத் துறவி காரிருள் சூழ்ந்த இரவு வானிலே ஒளி விட்டு மிளிரும் விண் மீனினைப் போன்று விளங்கினுர். ஆனுல், பதின்மூன்ரும் நூற்றுண்டில் நியூட்டன் இருந்ததைப் போன்று இவர் அறிவியலின் கருவிகளை மட்டும் கொண்டிருந்தார். அதனுல், அவர் காலத்திய வெறுப்புணர்ச்சிக்கு இரையாகி, ஆற்றலற்றும், புகழற்றும் வாழ நேர்ந்தது. விக்கிளிப் (Wycliffe) என்பவர் கலைப்பள்ளிக்கு உரிய பகுத்தறிவு ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கினுர். அவர் தமக்குப் பிற்பட்ட ஒரு நூற்றுண்டுக் காலம் வரையில் மக்களுடைய உள்ளங்களிலே பிறரால் வெல்ல முடியாத அளவிற்குப் பெரும் செல்வாக்கினைப் பெற்று விளங்கினுர்.

இடைக்கால ஐரோப்பாவின் பண்படாத அறிவாற்றலைப் பயிற்சியின் மூலம் பண்படுத்தி நுட்பமாக்குவதற்கு அளவை நூலும். அறிவு ஆராய்ச்சியும் பெரும் பணி புரிந்தன. இடைக்காலத்தின் அறிவாற்றல் முன்னேற்றத்தை, அடியோடு சிந்தனையின் விளைவுகளைக் கொண்டு நாம் அளந்து அறியக்கூடாது. ஏனெனில், இடைக்கால அறிவாற்றலின் முன்னேற்றம் தடைப்படுத்தப்படும் அல்லது கண்டிப்பாக சிறைப்படுத்தப்படும் என்னும் நிலை இருந்து வந்த காரணத்தினுல் அதை வேறு வகையிலே நாம் மதிப்பிட முயல வேண்டும். நம் மக்கள் தங்க

ளுடைய தத்துவக் கருத்துகளை என்று திறமையாகக் கையாள முயன்றனர் என்பதை அறிவதன் மூலம் அக்காலத்திய அறிவு வளர்ச்சியை நாம் அளவிட்டு உரைக்கலாம். அவர்களுடைய வழக்காறும், ஆராய்ச்சிக்குரியனவாக இருந்துவந்தசெய்திகளும், கருவிகளும் நமக்கு வீணானவையாகவும் சிறுமைத்தன்மை வாய்ந்தனவாகவும் தோன்றலாம். இதற்கு எடுத்துக்காட்டாக, 'ஒரு ஊசி முனையின் மீது எத்தனை தேவர்கள் நிற்கலாம் என்பதைப் பற்றி அவர்கள் பெரிதும் சொற்போர் புரிந்ததைக் கூறலாம்.' ஆயினும் இந்தப் பழைய அளவை நூல் வல்லுநர்களுக்கு நாம் எத்தனை அளவு கடப்பாடுடையவர்களாக இருக்கின்றோம் என்பதை உண்மையில் அளவிட்டுரைப்பது அரிய செயலாகும்.[1]

பதின்மூன்றும் நூற்றாண்டில் இங்கிலாந்தில் உண்டான சமூக மாறுதல்களுள் மிகப் பெரியவை இரண்டாகும். ஒன்று பல்கலைக் கழகங்கள் தோன்றி வளர்ந்தமையாகும். மற்றொன்று, இங்கிலாந்தினை நோக்கி, பிரான்சிலிருந்து சோதரத் துறவிகள் (Friars) பேரளவில் வந்தமையாகும். ஆயினும் ஐரோப்பாவில் திருச்சபையின் அழிவினைத் தடுத்து நிறுத்திக் காத்த பெருமை செயின்ட் டொமினிக்கு (St. Dominic), செயின்ட் பிரான்சிஸ் (St. Francis) சங்கங்களுக்கே உரியதாகும் என்று

[1] சிறப்புமிக்க 'ஆங்கிலேய மொழி' (English Language) என்னும் நூலின் ஆசிரியர் திரு பியர்சால்ஸ்மித் (Pearsall Smith) என்பவர் பின்வருமாறு (பக். 187) கூறியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்: 'பண்டைக் காலத்திய அல்லது இடைக்காலத்திய தத்துவ நூல்களில் கையாளப் படும் மாண்புமிக்க கலைச்சொற்களின் வரலாற்றை நாம் அறியவேண்டும் என்றால்... அச்சொற்கள் பொதுமக்களின் தன்னுணர்ச்சிக் கேற்ப பொருள் விளக்கத்தில் திரட்சியுற்றதனால் உண்டான விளைவுகளையும், சிறந்த, நுண்பொருட் பேறுடைய சிந்தனையாக மாறியமையின் விளைவுகளையும் நாம் கூர்ந்து நோக்கும் திறமையுடையவர்களாக இருக்கவேண்டும். நாம் பொதுவாகப் பொருள்புரிந்து கொண்டிருக்கின்ற அச்சொற்களைப் பற்றிய எண்ணங்களையும், அவற்றிற்கு இடையே காணப்படுவதாகக் கருதுகின்ற வேறுபாடுகளையும் எளிமையானது என்றும், அவை தாமாகவே வேறுபட்டு விளங்குவன என்றும் நாம் இப்பொழுது நினைப்பதைப் போன்று, உண்மையில் இல்லை என்பதை ஆராய்ந்து அறியும் மதிநுட்பம் உடையர்களாக இருக்கவேண்டும். இதற்கு மாறாக, அவை பன்னூறாண்டுகளாக நடந்து வரும் கடுமையான அறிவாற்றல் போராட்டத்தின் விளைவாகவே அவை இந்நிலை அடைந்திருக்கின்றன என்பதை உணரவேண்டும். மேலும் நாம் அருகிய வழக்காகப் பயன்படுத்தும் சொற்களுள் சில நெடுங்காலத்திற்கு முன்பு வாழ்ந்த, பண்டைத் தத்துவ ஞானிகளாலும், சித்தாந்திகளாலும், வழக்கறிஞர்களாலும் உருவாக்கப்பட்ட கருவிகள் என்பதையும், அவர்களுள் ஒருவர் மற்றொருவரின் மூளையாகிய சாணைக்கல்லில் தேய்த்துக்கூர்மையாக்கிய கருவிகள் அவை என்பதையும் நாம் மறத்தலாகாது.''

கூறியதைப் போல் இங்கிலாந்தினைப் பற்றி நாம் உறுதியாகச் சொல்ல முடியாது. மூன்றும் ஹென்றியின் ஆட்சிக் காலத்து இங்கிலாந்தில், திருச்சபை மிகுந்த பாதுகாப்புடைய ஒரு நிலைய மாகவே இருந்துவந்தது. அதில் அறியாமையும், புறக்கணிப்பும் நடைமுறையில் புறச் சமயச் சார்பும் மிகுதியாக இருந்ததைக் காணுகின்றோம். ஆனால், சமய நிந்தனையோ குருமார்களுக்கு எதிரான வெறுப்புணர்ச்சியோ அங்குச் சிறிது கூட இருந்ததில்லை. அல்பிஜேன்சியன் (Albigensian) வால்டென்சியன் (Waldensian) முதலிய இயக்கங்கள் ஐரோப்பாவில் செயின்ட் டொமினிக்குச் சங்கத்தைச் சேர்ந்த துறவிகளின் அறிவுத் தூண்டுதலால் பெரிதும் மக்களைக் கடும் குற்றத்திற்கு ஆளாக்கி, இரக்கமற்ற முறையில் கொடுமைப்படுத்தி, துன்புறுத்தியதைப் போன்று இங்கிலாந்தில் இரங்கத்தக்க நிகழ்ச்சிகள் ஒன்றும் நடைபெறவில்லை. இங்கிலாந்தில் டொமனிசிய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சிறப்புற்று விளங்கினார்கள். ஆனால், அக்கால முறையில் இங்கிலாந்தில் சமய நிந்தனையாளர்கள் ஒருவரும் தோன்றவில்லை. எனவே கடவுளின் பெயரால் மக்களை வேட்டையாடுகின்ற 'கடவுளின் வேட்டைநாய்களான' வேட்டைக்காரர்களும் அக்காலத்தில் தோன்றவில்லை. பண்புமிக்க பிரான்சிஸிய சங்கத்தைச் சேர்ந்தவர்களே அவர்களுடைய அம்பெரியின் (Umbrian) சமயத் தொண்டர்களும் கி.பி. 1224 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் குடியேறினர். அவர்கள் விரைவில் ஆங்கிலேய மக்களுடைய உள்ளங்களை முழுமையாகத் தங்கள் தொண்டின் மூலம் கவர்ந்து விட்டனர்.

இங்கிலாந்தில் போப்பு ஆண்டவரின் அதிகாரத்தை இச் சோதரத் துறவிகள் காப்பாற்றிவிட்டார்கள் என்று நாம் சொல்லுவதற்கில்லை. மூன்றும் ஹென்றியின் ஆட்சிக்காலத்து இத்துறவிகள் மக்களுடைய உள்ளங்களை எல்லாம் பெரிதும் கவர்ந்து கொண்டிருந்த அதே காலத்தில், இங்கிலாந்து மக்களின் உள்ளங்களில் எல்லாம் போப்பு ஆண்டவரை எதிர்க்கும் வெறுப்பு உணர்ச்சியே மேலோங்கி வந்தது சிறப்புமிக்க செய்தியாகும். இவ்விரு இயக்கங்களையும் எதிரிடையான இயக்கங்களாக ஆங்கிலேய மக்கள் கருதவில்லை. குராஸ்தேதே இவ்விரு இயக்கங்களிலும் மிக முக்கிய பங்கேற்றுச், செயலாற்றி வந்தார். போப்பு ஆண்டவரிடமிருந்து வந்த சிறப்புக் குழுவினரும் இச் சோதரத் துறவிகள் இங்கிலாந்து நாட்டு மக்களின் உரிமையுணர்ச்சியிடத்து இரக்கம் காட்டுவதை வேண்டாமென்று தடுக்கவுமில்லை. மேலும் சைமண்டிமான்ட் போர்ட்டின் கட்சியோடு இவர்கள் சேர்ந்துகொண்டு கிளர்ச்சி செய்வதையும் அவர்கள்

பொருட்படுத்தவில்லை. சைமண்டிமாண்ட்போர்ட்டின் கட்சி சமயப் பற்றுடையதாகவும், வைதிக நெறிகளைப் பின்பற்று வதாகவும் இருந்தபோதிலும், ரோமானிய திருச்சபையோடு வெளிப்படையாகவே பகைமை பாராட்டி வந்தது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆனல், இங்கிலாந்தில் சோதரத் துறவிகள் போப்பு ஆண்ட வரையும் திருச்சபையையும் காப்பாற்றவில்லை. எனினும், அவர் கள் சமயத்திடத்து மக்களுக்குப் புதியதொரு ஆர்வமும் புத் துணர்ச்சியும் உண்டாகுமாறு தோற்றுவித்ததோடு, பல புதிய முறைகளைச் சமயத்திலே புகுத்தித் தொண்டாற்றினர் என்பதை நாம் மறத்தலாகாது. தொடக்க காலத்து இங்கிலாந் தில் தோன்றிய பிரான்சிஸிய சங்கத்தினர்கள் அனைவரும் பெரு மக்கள் வகுப்பிலிருந்து அச்சங்கத்தின் உறுப்பினர்களாக மாறி யவர்களாவர். அவர்கள் ஏழை மக்களிடத்து மாபெரும் சமய மறு மலர்ச்சியை உண்டாக்கினர். இம் மாபெரும் மறு மலர்ச்சி இயக்கத்தினர், தூய்மை வாதிகளின் இயக்கத்தோடும் வெஸ்லி யன் (Wesleyan) இயக்கத்தோடும் அருள் மீட்பு இயக்கத்தின ரோடும் (Salvation Army) பல்வகைகளில் ஒப்பிடத் தக்கவர் களாக இருந்தனர். அச்சங்கத்தை நிறுவின தம் குருநாதரின் தலையாய குறிக்கோளுக்கிணங்க, அவர்கள் வறியவர்களையும், பெரிதும் புறக்கணிக்கப்பட்டவர்களையும் பெரிதும் நீண்ட பிணி யால் துன்புறுவோரையும் நாடி அலைந்து, அவர்களுடைய துன்பத் தைத் துடைக்க முயன்றனர். சிறப்பாகப் பெரிய பட்டணங்களி லுள்ள சேரிகளிலும், திருச்சபை வட்டாரங்களில் பெரும் பற்றுக் குறையோடு அல்லலுற்ற மக்களின் கண்ணீரையும் துடைக்க அவர்கள் முயன்றனர்.

பொதுமக்கள் எளிதிலே உணர்ந்து புரிந்துகொள்ளத் தக்க வகையில், பேச்சு மொழியில் பயிலும் எளிய சொற்களின் மூலம் உபதேசம் செய்தமை இச் சோதரத் துறவிகள் செய்த பிரசாரத் தின் வெற்றிக்குரிய மறை பொருளாகும். அக்காலத்தில் திருச் சபை வட்டாரத்துக் குருமார்கள் மக்களுக்குக் கருத்துகளை எடுத் துரைக்கும் திறமை பெரிதும் அற்றவர்களாகவே இருந்தனர். அங்கிலையில் உயர்ந்த பதவிகளில் இருந்த குருமார்கள், திருச் சபை விவகாரங்களிலும், அரசியல் விவகாரங்களிலும் தங்களு டைய முழுக் கவனத்தைச் செலுத்தியும் செல்வாக்கைப் பயன் படுத்தியும் வந்தனர். தங்களுடைய மடங்களிலே தங்கியிருந்த குருமார்கள் இன்ப வாழ்க்கையிலும், உலகியல் வாழ்விலும் ஈடு பட்டுத் தம்மை மறந்திருந்தனர். பிரான்சு நாட்டிலிருந்து இச்

சோதரத் துறவிகள் வருவதற்கு முன்பு, சமயச் சடங்குகளையே பெரிதும் இங்கிலாந்தின் சமயம் கொண்டிருந்தது. அச் சடங்கு களைச் செய்யவேண்டுமென்று நினைப்பவர்களுக்கு எளிதில் செய்து முடிப்பதற்குரிய வசதியுடையதாகவும் அவை இருக்க வில்லை. இத் துறவிகள், இச் சமயச் சடங்குகளை மக்கள் எளிதில் செய்வதற்கு உதவியதோடு, மக்கள் அனைவரும் எளிதில் பெறுவ தற்குரிய பெரு வாழ்க்கைக்கான உபதேச முறையினை பின்பற்றி வந்தனர். பிற்காலத்திய லோலார்டியர்களும் (Lollards) புராடஸ் டண்ட்டுகளும் பின்பற்றுவதற்குரிய முறைகளை இவர்கள் முன் கூட்டியே ஏற்பாடு செய்தனர். மேடைப் பேச்சின் முக்கியத்து வத்தை உயர்த்துவதன் மூலம் சோதரத் துறவிகள், நாட்டில் மாற்றப்பட வேண்டியவர்களையும், அழிக்கப்பட வேண்டியவர் களையும் மக்களுக்குக் காட்டிக் கொடுத்தனர். ஏனெனில், அவர் கள் சமயத்தினைப் பொதுமக்களிடத்துக் கொண்டுசென்று அவர் கள் எளிதில் புரிந்துகொள்ளுமாறு விளக்க முயன்றனர். அத னால், மக்களின் வாழ்நாள் முழுவதும் அச்சமயக் கருத்துக்கள் அவர்களுடைய உள்ளங்களில் ஆழப்பதிந்து, அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்துமாறு செய்தனர்.

மடாலய இயக்கம் நான்காம் நூற்றாண்டு முதல் பன்னிரண் டாம் நூற்றாண்டு வரை காட்டுமிராண்டித்தனம் நிறைந்த காலத் திலும் அல்லது நலிவு மிக்க காலத்தும், பக்தி மிக்க மக்களின் நம்பிக்கையற்ற மூலாதாரமாக இருந்தது. அவர்கள் தங்களுடைய ஆன்மாக்களைக் கடைத்தேறுமாறு காப்பதோடு, உலகின் பரந்த பாலையிடையே, கடவுளின் கனி தரும் சோலையை அமைக்க முயன்றனர். அடிக்கடி அச்சோலை வறண்ட பாலையைப்பயன் படுத்துவதற்குரிய ஒரு முன் மாதிரியாகப் பயன்பட்டது, ஆனால், அவற்றிற்கிடையே இருந்த தடுப்புச் சுவர் என்றும் நிலைபெற்று இருக்குமாறு காக்கப்பட்டது. ஆனால், இப்போது நாம் ஓரள விற்கு நம்பிக்கை மிகுந்து சிறந்ததொரு உலகினை உண்டாக்க இச் சோதரத் துறவிகள் முயன்றனர். இவ்வுலகு தொடர்ந்து தலைமுறை தலைமுறையாகப் பல்வகையான துறவிகளின் சங்கங் களைத் தோற்றுவித்தது. அச் சங்கங்களைப் போன்றல்லாமல்,, இச் சோதரத் துறவிகளின் சங்கம் இவ்வுலகையே இறைவனின் எழில் மிக்க பூங்காவாகக் கருதிப் போற்றிற்று. அவர்கள் சந்தைக் கடைகளுக்கும், சேரிகளுக்கும் சென்று ஆடவர்கள், மகளிர் ஆகிய வர்களுடைய ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக மற்போர் புரிந் தனர். மடாலயத் துறவிகள் கொள்கையளவில் தங்களுடைய மடத்தின் உள்ளே அமர்ந்து, கதவுகளைத் திருக்காப்புச் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் வாழ்க்கையில் சலிப்பு உண்டா

வதைப் போக்கிக் கொள்வதற்காகவே எப்பொழுதாகிலும் வெளியே சென்று சுற்றிவருவார்கள். இவ்வாறு அவர்கள் அடிக்கடி வெளியில் சென்று அலைந்து திரிந்ததாக தெரிகிறது. ஆனால், இப் புதுவகைப் துறவிகள் ஒவ்வொரு பட்டணத்திற்கும் நடந்து சென்று, நோயாளிகளுக்கு மருந்து தந்து அவர்களைக் குணம் அடையச் செய்வதையும், மக்களுக்கு சமய உண்மைகளை எடுத்து விளக்குவதையும், மக்கள் தங்களிடத்து வேண்டிய பாவ மன்னிப்புகளைக் கேட்டலையும் தங்களுடைய கடமையாகக் கொண்டிருந்தனர். மடாலயத் துறவிகள் பரந்த விளை நிலங்களில் இருந்து கிடைத்த வருமானத்தைக்கொண்டும், காளை மாடுகள் மேய்வதற்குரிய நிலங்களில் இருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டும் கவலைபற்று வாழ்ந்துவந்தனர். ஆனால், இப் புதிய துறவிகள், ஒவ்வொரு வீடாகச் சென்று இரந்து பெற்ற உணவினை உண்டு வாழ வேண்டியவர்களாக இருந்தனர்.

கொள்கை அளவில், இச் சோதரத் துறவிகள் சொத்துகளை உடையவர்களாக இருக்கக்கூடாது என்று வழக்காறு இருந்து வந்தது. ஆனால், செயின்ட்பிரான்சிஸின் உண்மைநோக்கங்களுக்கு மாருக, அவருடைய சீடர்கள் கன்னிமாடங்களை மட்டுமல்லாமல், பெரும் நூலகங்களையும் பெரிய திருச்சபைகளையும் தங்களுக்குரிய உடைமையாகப் பெற்றிருந்தனர். அவர்களுடைய புகழ் பெருகப் பெருக, அவர்களுடைய குருநாதரின் குறிக்கோள்களை அவர்கள் மறக்கலாயினர். அல்லது இடைக்காலத்திற்கே உரிய நுட்பமான வகையில் அவற்றிற்கு அவர்கள் தத்துவார்த்தம் கூறினர். இவ்வாறு அச்சங்கத்தினரிடையே பழைய கொள்கையில் உறுதிப்பாடு உடையவர்களாய்த் தொண்டு புரிந்தோர், அச் சங்கத்தினரால் துன்புறுத்தப்பட்ட காலம் வரையில் மேற்கண்ட அவலநிலை இருந்துவந்தது. சமயத் தொண்டர் குழுவின் தூய்மை, கல்வி கற்ருல் பாழாகிவிடுமென்று பிரான்சிஸ் கல்வி கற்றலைக் கண்டித்துப் பேசி வந்தார். ஆனால், ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்து கம்பளப் போர்வை அணிந்த இச் சோதரத் துறவிகளால் கல்வி கற்றல் போற்றி ஆதரிக்கப்பட்டதன் விளைவாகச் சிறப்பு மிக்க விளைவுகள் உண்டாயின. ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்து புகழ் மிக்க பாதிரியரான குராஸ்தடேவின் ஆதரவாலும், துணையாலும் இச்சோதரத் துறவிகள் கல்வியில் மேன்மையுற்று விளங்கினர். ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்து பிரான்சிஸ் சங்கத்தைச் சேர்ந்தவர்களுள் தொடக்க காலத்தில் சிறப்புற்று விளங்கிய ஆடம். டி. மார்ஷ் (Adam de Marsh) என்பவரும், ரோஜர் பேக்கன், (Roger Bacon) என்பவரும் அவருடைய நெருங்கிய நண்பர்கள் ஆவர். பிற்காலத் தலைமுறையிலும்

ஆக்ஸ்போர்ட்டு துறவிகள் சங்கத்தில் டன்ஸ் ஸ்கோட்டஸ் (Duns Scouts), ஓக்காமைச் சேர்ந்த வில்லியமும் (William of Ockham) சிறப்புற்று விளங்கினர். செயின்ட் பிரான்சிஸின் ஆங்கிலேயச் சீடர்களே தத்துவம், பௌதீக அறிவியல், மருத்துவம் முதலிய கலைகளைப் பெரிதும் வளர்த்துச் சிறப்புறுமாறு செய்தனர்.

எல்லா இயக்கங்களைப் போன்றே, உண்மையான விரதீரத் தொண்டுணர்வு மெல்ல மெல்ல தீயிலிட்ட மெழுகினைப் போன்று மறைந்து போயிற்று. ஆனால் அவ்வியக்கத்திற்குரிய நிலையங்கள் நின்று நிலைபெற்றன. பதினான்காம் நூற்றாண்டில் ஆங்கிலேயச் சோதரத் துறவிகளும் பிரான்சிஸிய சங்கத்தைச் சார்ந்தவர்களும், டொமினிசியன் சங்கத்தைச் சார்ந்தவர்களும், பேராற்றல் வாய்ந்த இரு பெரும்கூட்டுரிமைக்குழுக்களாக விளங்கினர். ஆனால், ஒரு பெரும் பகைவர் கூட்டம் அவர்களுக்கு எதிராக இருந்து வந்தது இங்குக்குறிப்பிடத் தக்கதாகும். சமயச் சார்பற்ற குருமார்களின் திருச்சபை வட்டாரங்களின் சோதரத் துறவிகள் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டத் தொடங்கினர். அந்தக் குருமார்களின் கண் முன்பே, தங்களுடைய கால்நடை மந்தைகளையும், அவற்றிற்குரிய கட்டணங்களையும் பெற்று வாழ்ந்தனர். ஆனால், அவர்கள் சோதரர்களை விக்ளிப்பின் சீர்திருத்த இயக்கத்தினரைப் போன்று கடுமையாகத் தாக்குதல் மிக்க அருமையாகவே இருந்தது. பிரான்சிஸிய சங்கத்தினரையும் டொமினிசியரின் சங்கத்தினரையும், விக்ளிப்பின் சீர்திருத்த இயக்கத்தவர்கள் தங்களின் புகழ்மிக்க எதிரியாகக் கருதிய காரணத்தினால், கடுமையாகச் சோதரர்களைத் தாக்கிவந்தனர். அக்காலத்து வாழ்ந்த மக்களுள் சாசரைப் போன்றவர்கள் 'சோதரர்களின்' வெளிவேடச் சூழ்ச்சி முறைகளைக் கண்டு எள்ளி நகையாடினர். பாமர மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி, சமயத் தொண்டர்களுக்குரிய வறுமை வாழ்வில் தாங்கள் வாழ்வதாக நடித்து, சோதரத்துறவிகள் பெரும் செல்வாக்கு பெற்றனர் என்று அக்காலத்து மக்களுள் ஒருசாரார் கருதினர். அக்காலத்தைச் சார்ந்தவரும், கடவுள் பற்று மிகுதியாகக் கொண்டவரும், வைதிக நெறியிலேயே பெரும் நம்பிக்கை யுடையவரும் ஆக விளங்கிய கோவர் (Gower) என்பவர் 'ஒழுக்கமின்மை, வெறும் புகழ்ச்சி, வெளிவேடம் சோதரத் துறவிகளின் சமயமாக இருந்தது. இத்தகைய செயல்களைச் செய்வதில் பரிவுகாட்டுதல் முதலிய பண்புகள் சோதரர்களின் கோயில்களையும் மடங்களையும், உயர்வற்ற கன்னி மாடங்களையும் சிறப்புற்று விளங்குமாறு செய்தன' என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கது.

பதினான்காம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் சோதரத் துறவிகள் நாட்டிலே ஆற்றல்மிக்க ஆதரவாளர்களை மிகுதியாகப் பெற்றிருந்தனர். சோதரத் துறவிகளின் உடையிலே இறப்பது சொர்க்கத்திற்குப் போவதற்குப் பயண அனுமதிச் சீட்டு வாங்கித் தருகின்ற செயல் என்று இன்னும் பல மனிதர்கள் நம்பி வந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டில் சோதரத் துறவிகளின் எதிரிகளான லோலார்டியர்கள் (Lollards) அழித்தொழிக்கப் பட்ட போதிலும், இவர்களுடைய செல்வாக்கு மெல்லமெல்ல நலிவுறத் தொடங்கியது. சீர்திருத்த இயக்கம் என்ற சூறாவளி வீசத் தொடங்கியவுடனே, தங்களை ஆதரிப்பார் இல்லாமல் அல்லலுற்றனர். சமயச் சார்பற்ற குருமார்கள் என்றும், சோதரத் துறவிகளைத் தங்களுக்கு எதிரிகளாகவும், காரணம் இன்றி இடையே தலையிடுபவர்களாகவும் கருதி வந்தனர். எட்டாம் ஹென்றி போப்பு ஆண்டவரின் அதிகாரத்தை அழித்தொழிக்கத் திட்டமிட்டு முயன்றபோது, அத்திட்டத்தின் மிக முக்கிய பகுதியாக சோதரத் துறவிகளின் சங்கங்களைக் கலைத்தல் இடம் பெற்றது. ஏனெனில் சோதரத் துறவிகள் போப்பு ஆண்டவரின் ஆதரவில் இருப்பவர்களாகவும், அவருடைய தொண்டர்களாகவும் இருந்து வந்த காரணத்தினால் அவர்களுடைய சங்கங்களும், மடங்களும் அழித்து ஒழிக்கப்படவேண்டிய அவல நிலையை அடைந்தன.

நார்மானியப் படையெடுப்புக்காலம் முதல் இதுவரை இங்கிலாந்தில் பெருக்கெடுத்து ஓடிய அயல்நாட்டு வெள்ளத்தின் கடைசி அலையே இந்தச் சோதரத் துறவிகளின் வருகையாகும். அதற்குப் பிறகு அவ்வெள்ளம் மெல்ல மெல்ல வடிந்து போயிற்று. அதன் விளைவாக, செழிப்புமிக்க வண்டல் மண்ணாகிய அயல்நாட்டுப் பண்புகள் இங்கிலாந்தின் வாழ்விலும் பண்பிலும் படிந்தது. அக்காலத்து உள் நாட்டுக் காடுகளிலிருந்து வீசும் காற்று அவ் வண்டல் மண்ணை இடம் பெயர்த்து எங்கும் பரவுமாறு செய்து கொண்டிருந்தது. எட்வர்டு மன்னர்களின் ஆட்சிக் காலத்தும், பிளாண்ட்டாஜெனட் மன்னர்களின் ஆட்சிக் காலத்தும் இங்கிலாந்து ஓயாது அயல்நாட்டு மக்களையும், பண்பாட்டையும் வரவேற்றுக்கொண்டிருக்கின்ற செயலுக்கு மாறாகத், தம்மிடத்தில் மிகுதியாக இருக்கின்ற பொருள்களை வெளியாருக்கு வழங்கத் தலைப்பட்டதைக் காணுகின்றோம். தம் நாடு தேசியஇன முறைகளை அமைத்துக் கொள்ளுவதில் இங்கிலாந்து தாராள மனப் பண்புடையதாக விளங்கலாயிற்று. முதலாம் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்து, இங்கிலாந்திற்கே உரிய சட்டமும் பாராளுமன்றமும் வளரத் தொடங்கியது. அதைப்போன்று மூன்றாம் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்து, அவருடைய நாட்டு மொழியும்,

இலக்கியமும் தோன்றி வளரலாயின. சாஸரும் விக்ளிப்பும் இங்கிலாந்தின் கலை உலகிலே ஒரே சமயத்தில் தோன்றினர். அது முதல் சமயத்திற்கு ஆங்கிலேயர்கள் சிறப்பாக வழங்கிய கருத்துகள் தோன்றத்தொடங்கின. இதற்கிடையில் ஆங்கிலேய வேளாளர் தம் நாட்டுப் போர்க்கருவிகளைக்கொண்டு பிரான்சைக் கைப்பற்றினர். காட்டு நில மக்களின் பொதுக் கற்பனையில் வில்வீரனை ராபின்ஹூட் நிலையான சிறப்பிடத்தைப் பெறத் தொடங்கினன். வெளிநாட்டு இயல்பூக்கமும் தொண்டு செய்வதில் நாட்டமும், இயற்கையில் நற்பண்பும் நிறைந்த எழுச்சிமிக்க வீரனுகவும், நாடுகடத்தப்பட்ட தீவிரப் பண்புடையவனுகவும்விளங்கிய ஆங்கிலேயனே ராபின்ஹூட் ஆவான்.[1]

இத்தகைய முன்னேற்றங்கள் அனைத்தும் இங்கிலாந்தின் உட்குடிகள் விடுதலை பெற்றதின் மூலம், ஆங்கிலேய நாட்டில் தோன்றி வளர்ந்த உரிமையின் உதவியால் நடைபெற்றன எனலாம். மேலும் பதப்படுத்தப்படாத கம்பளியை வெளிநாடுகளுக்கு இங்கிலாந்து ஏற்றுமதி செய்ததற்கு மாருக, உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தொடங்கியது. இக்காரணத்திஞல் ஆங்கிலேயரின் செல்வம் பெருகியது. இச் செல்வச் செழிப்பும் முன்னேற்றத்திற்குரிய ஒரு சிறந்த காரணமாகும். அதே சமயத்தில் பதிஞன்காம் பதிணைந்தாம் நூற்றுண்டுகளில் ஆங்கிலேய நிதியும், பணம் கடன் கொடுத்த

[1] ராபின்ஹூட் முதலில் காட்டு நிலத்தின் காலங் கடந்த பழமையுடைய சிறு தெய்வமாகக் கருதப்பட்டான். இடைக்காலத்தின் இறுதிப் பகுதியில் அவனுடைய புகழ்மிக்க காலத்தில் 'சிறந்த வேளாளனுக' விளங்கினன். பதினன்காம் நூற்றுண்டிற்குப் பிறகுதான் அவன் ஹண்டிங்க்டன் கோமகன் மாறுவேடத்தில் ராபின் ஹூட்டாக இருப்பதாக இழித்துரைக்கப்பட்டான். நாம் இன்று அறிந்துள்ள அவனுடைய கதை பிளாண்ட்டாஜெனட்டு அரசர்களது ஆட்சியின் பிற்பகுதியிலிருந்து டியூடர் மன்னர்களது ஆட்சியின் முற்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் தோன்றியதாகும். பழைய கதைப்பாடல்கள் ராபின்ஹூட்டுடன்தொடர்புபடுத்திக் கூறிய அரசர் முதலாம் ரிச்சர்ட்டு அன்று; ஆனல் அவ்வரசர் மூதலாம் எட்வர்ட்டாக இருக்கலாம். நீண்ட வில்லினையேந்தி ராபின் ஹூட் செய்த செயற்கருஞ் செயல்களும், செல்வச் செழிப்புமிக்க திருச்சபையினருக்கு எதிராக அவன் கொண்டிருந்த பகைமையும் பதின்மூன்ரும் நூற்றுண்டிற்குப் பிற்பட்ட காலத்திய நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவனுடைய 'சோதரரான' தக்கு (Tuck) தீவின் சூழ்நிலைகளுக்கேற்பத் தன்னை தானே மாற்றியும், திருத்தி அமைத்துத் கொள்ளுவதற்குப் போதிய காலமும் கிடைத்தது. 1500க்கு முன்பு ராபினுடைய குழுவில் மேரியன் (Marian) என்னும் கன்னி இடம் பெறவில்லை. ஆனல், அவள் தன்னுடைய தனிப்பட்ட வரலாற்றினை உடையவளாக, இதற்கு முன்பே நாட்டு மக்களால் அறியப்பட்டிருந்தாள் என்று தெரிகிறது எனினும், அவளைப் பற்றிய கருத்து முழுவளர்ச்சியுற்றது சிறப்பாக ஆங்கிலேயரால் என்பது குறிப்பிடத்தக்கது. அவளைப் பற்றி வழங்கும்கற்பனைக்கதையின் எப்பகுதியிலும் இதைக் காணலாம். அவள் பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த பீகாக்கு (Peacock) என்பவருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிருள்.

லும் ஆங்கிலேயரின் கைகளுக்கே மெல்ல மாறின. இத்தகைய மாற்றத்திற்குக் காரணம் முதலாம் எட்வர்டு யூதர்களை இங்கிலாந்திலிருந்து நாடு கடத்தியமையாகும். அதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நல்லதொரு வழியினை அவர் அமைத்துத் தந்தார் எனலாம். யூதர்கள் பல்வேறு நாடுகளைச் சார்ந்த அயல்நாட்டு மக்களைப் போன்று, வெற்றி வீரரின் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்துக்கு வந்து குடியேறினர். சாக்சானிய இங்கிலாந்து மிகமிகப் பழமைப் பண்புடையதாக இருந்த காரணத்தினால், அதற்கு வட்டிக்குப் பணம்கொடுப்போர்தேவைப்படவில்லை. ஆனால்நார்மானிய அரசர்களின் காலத்திலும், அஞ்சுவின அரசர்களாலத்திலும் ஐரோப்பிய நாட்டு அரசர்களைப் போன்ற இவர்கள் தாங்கள் எதிர்பார்க்கின்ற வருவாய்க்கு ஏற்ப யூதர்களைத் தங்களுக்கு வேண்டிய பொருளையும், பணத்தையும் தந்துதவச் செய்தனர். யூதர்கள் பணத்தினை வட்டிக்குக் கொடுப்பதன் மூலம் பெரும் செல்வர்களாகச் சீரும்சிறப்பும் பெற்றனர். இவ்வாறு வட்டிக்குப் பணத்தைக் கொடுப்பது திருச்சபையினால் தடைசெய்யப்பட்டு வந்தது. கிறிஸ்துவ வாணிகர்கள் வட்டிக்குக் கொடுப்பதற்குப் போதிய பொன் இல்லாத காரணத்தினால் அப்பொன்னைப் பெற்று, புறச் சமயங்களைப் பழித்து ஒதுக்குவதன் மூலம் தாங்கள் மகிழ்ச்சியடைந்து வந்தனர். யூதர்கள் அரசரை உறிஞ்சிப் பிழைப்பவர்களாக இருந்துவந்தனர். அரசரின் குடிமக்களுடைய பணத்தை அவர்கள் உறிஞ்சிக் கொண்டிருந்தனர். தங்களுடைய பணத்தைக் கடுமையான வட்டிக்கு விடுவதன் மூலம், அவர்கள் வேறு நாட்டு மக்களின் பொருளையெல்லாம் உறிஞ்சுபவர்களாக இருந்தனர். தங்களிடம் கடன் வாங்குகின்ற மக்களுடைய சீற்றத்திலிருந்து அரசனுடைய ஆற்றல்மிக்க ஆதரவினால் அவர்கள் காப்பாற்றப்பட்டு வந்தனர். இதற்கு மாறாக அரசன் தனக்கு வேண்டிய பொருளை என்றும் மேலும் மேலும் குவிந்து கொண்டேயிருந்த அவருடைய செல்வத்திலிருந்து பெற்றுக் கொண்டான். அவர்கள் நிலப் பிரபுக்களும், உட்குடிகளும் எவ்வாறு அரசரிடத்து ஈடுபாடுடையவர்களாக இருக்கிறார்களோ, அதைப்போன்று அரசரிடத்து ஈடுபாடும் பற்றுறுதியும் உடையவர்களாக இருந்தனர். கொள்கையளவில் யூதர்கள் பெற்றிருந்த எல்லாப் பொன்னும் பொருளும் அரசனுடையதாகவே கருதப்பட்டு வந்தது. யூதர்களின் கருவூலம் அரசருடையதாகவே கருதப்பட்டது. அவர்கள் மக்களிடத்துக் கொடுத்த கடன்களைத் தண்டுவதற்கு அரசன் பேருதவி புரிந்தான். அவர்கள் பெரிதும் அரசனுடைய கருணைக்குரியவர்களாகவே இருந்தனர். ஏனெனில், பகைவர்களே நிறைந்திருக்கின்ற நாட்டில் அரசன் ஒருவன்தான் அவர்களுக்குற்ற நண்ப

னாக இருந்துவந்தான். அந்த யூதர்களின் புகழுக்கு இரு திறக் காரணங்களைக் கூறலாம். வேறு யாரும் கடுமையான வட்டிக்குக் கடன் கொடுப்பதற்கு வேண்டிய பணத்தைப் பெற்றிராத காலத்தில் அவர்கள் பேரளவில் கடன் கொடுத்துதவும் தலைசிறந்த கடன் கொடுப்பாளர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதைப் போன்றே மற்ற எல்லாரும் கிறிஸ்துவ சமயத்தினிடத்து நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டிருந்தபோது, யூதர்கள் கிறிஸ்துவ சமயத்தை நம்பாதவர்களாக இருந்துவந்தமை மற்றொரு காரணமாகும்.

அரசரோடு அவர்கள் கொண்டிருந்த உறவு முறைகளுடன் இங்கிலாந்தில் அவர்கள் நிலப்பிரபுக்களுக்கும், காணியாட்சியாளர்களுக்கும், போர் வீரர் வகுப்பினருக்கும் பெரும் தொகையான பணத்தை வட்டிக்காகக் கொடுத்துவந்தனர். அவர்கள் போரில் ஈடுபட்ட அரசர்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்துதவியதோடு, நாட்டு அரசு நல்ல முறையில் நடைபெறுவதற்குத் தேவையான அளவுக்குப் பொருளையும் கடனாகக் கொடுத்து உதவினர். ஆனால், அவர்களுடைய உதவியை இன்னும் வாணிகமோ, பெரும் தொழில் நிறுவனங்களோ நாடி நிற்கவில்லை. அக்காலம் வரை வாணிக முதலாளித்துவம் சிறந்த நிலையை அடையாமல் இருந்ததே இதற்குக் காரணமாகும். பிற்காலத்தில்தான் வாணிக முதலாளித்துவம் மெல்ல வளர்ந்து தலையெடுக்கலாயிற்று.

இரண்டாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்து லிங்கனைச் சேர்ந்த ஆரோனைப் (Aaron) போன்று, ஆங்கிலேய யூதர்களில் சிலர் பெரும் செல்வர்களாக, வாழ்வில் வளம்பெற்று விளங்கினர். இரண்டாம் ஹென்றி, 'கருவூல மன்றத் துறை' என்ற ஒரு சிறப்புத் துறையை உடையவராக விளங்கும் பெருமையுடையவர். அதற்கு 'சக்கேரியம் 'ஆரானிஸ்' ('Scaccarium Aaronis') என்பது பெயராகும். செல்வ வளம்மிக்க கிழக்கு ஆங்கிலியாவின் பல பட்டணங்களில் யூதர்களின் கல் மாளிகைகள் கட்டப்பட்டிருந்தன. அவற்றை எளிதில் உடைத்துத் திறக்கமுடியாது. அவை காவல்கற்கோட்டைகளுக்கும் ஏழைக் கிறிஸ்துவ மக்களின் களிமண்ணாலும் மரத்தாலும் கட்டப்பட்ட குடிசைகளுக்கும் இடையே காணப்பட்ட கல்லினால் கட்டப்பட்ட திருச்சபைகளுக்கும் எதிராகப் போட்டியிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் யூதர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடிய கலகங்களும், அவர்களைப் பற்றி மக்கள் கொண்டிருந்த வெறுப்பும் எவ்வப்போது

அரசர் தம்முடைய ஆற்றல்மிக்க ஆதரவை அவர்களுக்குத் தந்தாரோ அப்போதெல்லாம் அவை முடிவுக்கு வந்தன.

முதலாம் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்து கி. பி. 1290-ல் இத்தகைய வருந்தத்தக்க முறை கொடியதொரு முடிவுக்கு வந்தது. எட்வர்டு யூதர்களை இங்கிலாந்திலிருந்து விரட்டி அடித்தார். அக்காலத்திய இங்கிலாந்தில் அவர் பெற்ற அறிவுரையாகிய மொழியினைக் கொண்டுதான் எட்வர்டு இவ்வாறு செய்திருக்க வேண்டும். இவ்வாறு யூதர்கள் நாடுகடத்தப்பட்டமை அவரைப் பொறுத்தவரையில் தன்னலத் தியாகமாகவே போற்றப்பட்டது. அத்துடன் மக்களிடத்தும் அது பேராதரவைப் பெற்றதைக் காணுகின்றோம். அக்காலத்திய அரசர்களுள் அவருடைய பிரபுக்களுக்கும், கிறிஸ்துவ கடனளிப்போர்களிடத்திருந்து அவர்களுக்குத் தேவையான பொருளைப் பெறுவதற்குரிய வசதிகள் உண்டாயிருந்த காரணத்தினால், எட்வர்ட்டின் திட்டம் செயல்முறையில் வெற்றிதரத் தக்கதாகவே அமைந்தது. முதலில் இங்கிலாந்தில் பணத்தை வட்டிக்குக் கொடுக்கும் வாணிகம் பேரளவில் பிளமிங்குகளின் கைகளுக்கும், இத்தாலியர்களின் கைகளுக்கும் சென்று சேர்ந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக மூன்றும் எட்வர்டு பேரளவில் கடன் வாங்கிய பார்டி (Bardi)லும் பெருசீ (Peruzzi)யிலும் இருந்து வந்த பிளாரன்டைனைச் சேர்ந்த வாணிகக் கழகங்களைக் குறிப்பிடலாம். அதற்குப் பிறகு வாணிகர்கள் பையப்பைய மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக வளர்ந்து வந்தனர். ஹல் (Hull) என்ற ஊரைச் சேர்ந்த வாணிகரான வில்லியம் டி லாபோல் என்பவர் முதன் முதலாக ஆங்கிலேய பிரபுக் குடும்பத்தினை நிறுவிய முதல் வணிகத் துறை அமைப்பாளராவார். லண்டன் மாநகரில் நகரத் தந்தையும் பூனையைப்பற்றிய கட்டுக்கதையை எழுதிய தலைவராகவும் விளங்குகின்ற ரிச்சர்ட் விட்டிங்டன்னும் சிறந்த கடனளிப்போராக விளங்கினர். இவ்விருவர்களும், அரசருக்கும் நிலப்பிர பிரபுக்களுக்கும் பேரளவில் வட்டிக்குப் பணம் கொடுப்போர்களாக இருந்துவந்தனர். இவர்கள் இருவரும் நூறுண்டுப் போருக்கும் பிற்காலத்திய ரோஜாப்பூ அணிந்து போரிட்ட போருக்கும் தேவையான பெருந் தொகையினை அரசருக்குக் கடனாகக் கொடுத்து உதவி வந்தனர். நான்காம் எட்வர்டு லண்டன் மாநகரக் குடி மக்களோடு மிக நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். அதற்குக் காரணம் அவர் லண்டன் மாநகரக் குடி மக்களின் மனைவிமார்களை விரும்பியது மட்டுமின்றி அவர்களுடைய பணத்தை இவர் பெரிதும் கடன் வாங்கி வந்தமையுமாகும். எனவே டியூடர்களின் ஆட்சிக் காலத்து

வாணிக முதலாளித்துவம் மெல்ல ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியபோது, இங்கிலாந்து நாட்டு மக்களின் கைகளிலே பெரும் நிதி இருந்தது என்று தெரிகிறது.

ஸ்டுவர்ட்டு மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும், அனோவரிய குடும்பத்தினரின் ஆட்சிக் காலத்திலும் யூதர்கள் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்தனர். அந்நிலையில் ஆங்கிலேய மக்கள் தங்களுடைய பணச் சந்தைகளையும், வேறு பிற அறிவாற்றல் மிக்க வாழ்க்கைத் தேவைகளையும் தங்கள் அதிகாரத்துக்குள் கட்டுப் படுத்தி வைத்திருப்பதைக் கண்டு அவர்கள் வியந்தனர். மேலும் அக்காலத்துத் தோன்றிய புதிய விவிலிய நூல்களைப் படிக்கும் பண்பு, யூதர்களுக்கு எதிராக ஆங்கிலேய மக்களிடையே இருந்துவந்த சமய வெறுப்புணர்ச்சியை மிகவும் குறைத்துவிட்டிருந்தது. அக்காரணங்களினால்தான் இதற்கு முன்பு என்றுமே இராத நல்ல மகிழ்ச்சிக்குரிய நெறிகளுடன் ஆங்கிலேயருக்கும் யூதர்களுக்குமிடையே தொடர்பு புதுப்பிக்கப் பட்டதைக் காணுகின்றோம். அக்காலத்திய ஆங்கிலேய மக்கள் தங்களுடைய செயல்முறைகளையெல்லாம் தாங்களே கண்காணித்துச் செயல்படுத்துவதற்கு உரிய வாய்ப்பையும் வசதிகளையும் பெற்றிருந்தனர்.

முதலாம் எட்வர்டு (1272 — 1307) 'ஆங்கிலேய ஜஸ்டினியன்' என்று போற்றப்படுகின்றார். ரோமாபுரிப் பேரரசு வீழ்ச்சியுற்றுக் கொண்டிருந்த காலத்து ஜஸ்டினியன் என்ற பேரரசர், ரோமாபுரியின் பழைய சட்டங்களையெல்லாம் ஒருங்கு திரட்டி, அவற்றை முறைப்படுத்தி, சட்டத் தொகுப்பினைச்செய்து தந்தார். அவரைப்போன்று திறமையும், சிறப்பும் முதலாம் எட்வர்ட்டுக்கு உரியதாக மக்கள் கருதிய காரணத்தினால், எட்வர்ட்டை 'ஆங்கிலேய ஜஸ்டினியன்' என்று போற்றிப் புகழ்ந்தார்கள். உண்மையில் எட்வர்டு அரசரின் காலத்திய ஆங்கிலேய சட்டத்தை, ஜஸ்டினியன் ரோமானியச் சட்டத்தோடு ஒப்பிடப் பார்ப்பது, குழந்தைப் பருவத்தை இரண்டாவது குழந்தைப் பருவம் ஆகிய முற்றிய முதுமையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது போன்றதாகும். ஆனால், எட்வர்டு ஜஸ்டினியனைப் போன்று அரசகுடியில் பிறந்த அரசராகவும், சட்ட முறைக்கு உட்பட்டிருந்த பொருள்களை வரையறுத்து உரைக்கும் அதிகாரியாகவும் இருந்தார். அவர் நன்கு வரையறுக்கப்பட்டு, தொகுக்கப் பட்டதொரு சட்டத் தொகுப்பினை அமைத்துத் தந்தார் என்று உறுதியாகச் சொல்வதற்கு இல்லை. அவர் காலத்தில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் சட்டத்

தொகுப்பு, ஒரு தேசிய இனத்தின் குழந்தைப் பருவத்திற்கோ, நெகிழும் சிறப்புத்திறமை வாய்ந்த ஆங்கிலேயச் சட்டத்திற்கோ பொருந்தி வருவதாக அமையவில்லை. ஆனால், நம்முடைய நிலச் சட்டத்துக்கும் பொதுச்சட்டத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் அவர் மிக நெருங்கிய ஒரு வரையறுத்த விளக்கத்தினைத்தந்தார். அவருடைய ஆட்சியின் கீழ், இடைக்கால அரசின் நிலையங்களாக இதுவரை நெகிழ்ச்சியுற்றுக் கொண்டிருந்த அனைத்தும், முதன் முதலாக நிலையான வடிவத்தைப் பெறத் தொடங்கின. இது முதல் பாராளு மன்றத்திற்கும் மன்னரின் அவைக்கும் இடையே உள்ள சிறப்பு மிக்க வேறுபாடுகள் செயல் முறை நோக்கத்தில் தெளிவாக விளங்கலாயின. முதலாம் எட்வர்ட்டின் முதல் பதினெட்டு ஆண்டுகால ஆட்சியில் பட்டயச் சட்டம் (Statute Law) தோன்றத் தொடங்கியதைக் காணுகின்றோம். அயல் நாட்டிலிருந்தும் தன் நாட்டிலிருந்தும் வந்த மாண்புமிக்க வழக்கறிஞர்கள் அவரைச் சுற்றிச் சூழ்ந்திருந்தனர். சட்டமியற்றுவதில் பெரும் நாட்டமுடைய அரசர் தம்முடைய மாண்பு மிக்க ஆண்மை நிறைந்த இளமைப் பருவத்தில், பாராளு மன்றத்தின் மூலம் ஒரு சட்டத்தை அடுத்து இன்னொரு சட்டமாக, பலவற்றைச் சட்டமாக நிறைவேற்றிக் கொண்டு வந்தார். அவருடைய சட்டமியற்றவேண்டு மென்னும் ஊக்கத்திற்கு இணையாக, சீர்திருத்த மசோதாவுக்குப் பிறகு சில ஆண்டுக் காலங்களில் விக் கட்சியினரிடத்திருந்த ஊக்கத்தைதான் ஒப்புமையாகக் கூறலாம் என்பது பேராசிரியர் மெயிட்லண்டின் கருத்தாகும்.

அச்சட்டங்கள் பழைய சட்டத்தின் அடிப்படை நோக்கத்தையே மாற்றியமைக்கக் கூடிய குறிப்பிடத்தக்க புதிய இயல்புகளை உடையனவாக இருந்தன. இதுவரை ஆங்கிலேய -டேனிய இன மரபின் வழக்காற்றிலிருந்து தோன்றிய சட்டமே இங்கிலாந்தின் நடைமுறையில் இருந்துவந்தது. அச் சட்டம் மரபு வழக்கையும், வழக்காற்று நெறியையும் அடிப்படையாகக் கொண்டு அவை வளங்கும் வட்டாரங்களுக்கு ஏற்ற வகையில் ஓரளவுக்கு வழக்கிறந்த எழுதாச் சட்டமாக இருந்துவந்தது. இத்துடன், இங்கிலாந்தில் நிலமானியப் படைமுறைச் சட்டம் மரபு வழக்குச் சட்டமாக இருந்ததைக் காண்கிறோம். மிகவும் அண்மைக்காலத்து அரசரின் புகழ் மிக்க நீதிபதிகள் வழங்கிய அறிவிப்புகளினால் 'வழக்குச் சட்டம்' என்பது உருவாவதைக் காணுகின்றோம். கிளான்வில், (Glanvill) பிராக்டன் (Bracton) என் போரின் தொழில் முறைக் கட்டுரைகளில் இச்சட்டம் விளக்கப் பட்டிருப்பதைக் காணலாம். இவற்றுடன் பொது உடன்படிக்கை

களான கிளாரன்டன் சட்டங்களும் (Constitutions of Clarendon) மாபெரும் பட்டயமும் (Magna Carta) சிறப்புற்று விளங்கின. அவை சட்டத்தினை மீண்டும் எடுத்துக் கூறவும் மீண்டும் மக்களிடத்துக் கட்டாயப்படுத்துவதற்காகவும் வெளியிடப் பெற்றன. ஒருகால் அவை மீண்டும் வெளியிட்ட போது சிறிது விவரமாக விளக்கப்பட்டிருக்கலாம். இவற்றோடு அவ்வப் போது அரசர் பிறப்பித்த அவசரச் சட்டங்களும், 'அசைஸ்' என்னும் சட்டமும் சிறப்பிடம் பெற்றிருந்தன. அரசரின் அவசரச் சட்டம் நீதிமன்ற நடைமுறைகளில் மாற்றத்தைச் செய் வதற்கு வழங்கப்பட்டனவாகவே காணப்படுகின்றன. எடுத் துக்காட்டாகப் போரின் மூலம் விசாரணை செய்யப்படுவதற்குப் பதிலாக, சான்றோர் குழுவின் மூலம் விசாரணை செய்யப்படு வதை நடைமுறையில் கொண்டு வருவதற்கு வழங்கப்பட்டதைப் போன்ற பலவற்றைக் கூறலாம். ஆனால் இப்போது முதலாம் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்தில் நாம் முதன் முதலாக 'சட்டங்கள்' அப்பழைய சட்டத்தை மாற்றுவதற்குரிய பெரும் தகுதியுடையனவாக இயற்றப்பட்டன. அச் சட்டங்கள் 'அடிப்படைச் சட்டத்தின்' எஞ்சிய வரையறுக்கப்படாத பகுதியை எளிதில் மாற்றமுடியாத வகையில் இருந்தன. அதற்குக் காரணம் அரசரோ, பாராளுமன்றமோ இன்னும் எல்லாம் வல்ல பேராற்றல் உடைய நிலையமாக விளங்காததே யாகும்.[1]

அரசர் இத்தகைய முதல் சட்டங்களில் சிறப்பாகக் கட்டுப் பாட்டிற்குட்பட்டுச் சொத்து மாற்றம் (De Donis condition-alibus) என்னும் சட்டத்தாலும், குயாஎம்ப்டோரிஸ் (Quia Emptores) என்னும் சட்டத்தாலும் நிலமானியப் படை

[1] 'முதலாம் எட்வர்ட்டின் ஊக்கத்தின் மிகுதியால் இயற்றப்பட்ட சட்டங்கள், இயற்றப்படாத சட்டங்களின் வளர்ச்சியைத் தடைப் படுத்துவதில் முக்கியமான விளைவினை உண்டாக்கிற்று.' — மெயிட்லண்டு (Maitland) Constitutional History, P. 21. பட்டயச் சட்டம் இல்லாத காலத்தில் சட்ட மன்றங்கள், பிறகு எந்தக் காலத்திலும் செய்யாத அள விற்குச் சட்டங்களை மாற்றியும் திருத்தியும் அமைப்பதில் முழு உரிமை உடையனவாக இருந்தன. எடுத்துக்காட்டு: பதினொன்றாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் கொலைகாரர்களையும் கொடுங் குற்றவாளிகளையும் அவர்கள் செய்தகுற்றத்திற்காக அவர்களுடைய கண் களைக் குருடாக்குவதா, உறுப்புக்களைக் குறைப்பதா அல்லது தூக்கிலிடு வதா என்பதைப் பற்றி அரசரும், அவருடைய நீதிபதிகளுமே முடிவு செய் யும் பொறுப்புடையவர்களாக இருந்தனர். முதலாம் வில்லியம் உறுப்பு குறைப்பையே தீர்ப்பாக வழங்கினார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்த நீதிபதிகள் மரண தண்டனை விதித்தனர். ஆனால், பிற்காலத்தில் பாராளுமன்றம் பட்டயங்களின் மூலம் கொடுங்குற்றங்களுக்கு எத்தகைய தண்டனை கொடுப்பது என்பதைப்பற்றி முடிவு செய்யப் பட்டது. இச்சட்டத்திற்குக் கீழ்ப்படிந்தே நீதிபதிகள் தீர்ப்பு வழங்கலாயினர்.

முறையாகச் சிற்சில மாற்றங்களோடு மீண்டும் எடுத்துரைத்தார். நம்முடைய தற்கால நிலச் சட்டத்தின் தொடக்கமாக அமையுமாறு அது மாற்றியும் திருத்தியும் அமைக்கப்பட்டு இருந்தது. எட்வர்டுடைய இரண்டு பெரும் சட்டங்கள் உண்மையிலேயே இன்றுவரை நம்முடைய நிலையான சொத்துக்களுக்குரிய சட்டமாகச் சிறப்புற்று விளங்கிவருகின்றன. அச்சட்டங்களைப் பற்றிய அறிவு ஆங்கிலேய வழக்கறிஞர்களுக்கு இன்றுவரை மிக இன்றியமையாததாக இருந்துவருகின்றது. டிடோனிஸ் (De Donis) என்னும் சட்டம் சொத்தின் மரபுரிமையைக் கட்டுப்படுத்தும் (1275) பழக்கத்தைத் தோற்றுவித்தது. மரபுரிமைச் சொத்தினைக் கட்டுப்படுத்தும் வழக்கம் கடந்த பல நூற்றாண்டுகளாக இங்கிலாந்தின் நாட்டுப்புறப் பகுதிகளில் எங்கும் பரவிய குறும்புச் செயல்களுக்கும், தீங்குகளுக்கும் காரணமாக இருந்துவந்தது. முதலாம் எட்வர்டும் அவருடைய தலைமைக் குத்தகைதாரர்களும் சேர்ந்து குயா எம்ப்டோரிஸ் (Quia Emptores) எனப்படும் மூன்றாவது வெஸ்ட் மின்ஸ்டர் சட்டத்தை நிறைவேற்றினர். நிலமானியப் படைமுறைக் கட்டணங்களைத் தாங்களே பெறுவதற்காகவும், மேற்கொண்டு தங்களுக்கு கீழே சிறிய பிரிவுகள் ஏற்படாமல் தடுப்பதற்காகவும் இத்தகைய சட்டத்தை அவர்கள் இயற்றினர். ஆனால் இச்சட்டம் நிலமானியப் படைமுறையின் வீழ்ச்சியை விரைவுபடுத்தியது. தலைமைக் குத்தகைதாரர்கள் தங்களுடைய நிலத்தை விற்கவேண்டுமென்று விரும்பினால் அச்சட்டம் இயற்றப்பட்ட காலத்திற்குப் பிறகு தங்கள் நிலத்தை வாங்குவோரைத் தங்களைப்போன்ற தலைமைக் குத்தகைதாரர்களாக ஆக்க வேண்டுமென்ற நெருக்கடி உண்டாயிற்று. இதன் விளைவாக அரசரிடமிருந்து நேரடியான நிலங்களை உடைமையாகக் கொண்டிருக்கின்ற மக்களின் தொகை மிகப் பேரளவில் பெருகிக்கொண்டு போயிற்று. அத்துடன் பல திறப்பட்ட வகுப்பினருக்கிடையே இருந்துவந்த வேற்றுமை நீக்கப்பட்டு ஒரு வகையான சமநிலை செய்யப்பட்டது. இதன் விளைவாக நிலமானியப் படைமுறையின் உணர்வு மேலும் சிதறடிக்கப்பட்டது[1] இதற்கு முன்பு எல்லாம் தனி மனிதன் ஒருவனை பாராளுமன்றத்திற்கு அழைப்பதை அக்குத்தகைதாரர்கள் பெரிதும் தங்களுக்

[1] 'குயா எம்ப்டோரஸ்' சட்டம் நிலத்தினை எத்தகைய கட்டுப்பாடும் இன்றி விற்பதற்கு உரிமை அளித்தது. ஆனால் நிலத்தினை வாங்குபவர் அரசரின் கீழாளாகவோ, பிரபுவின் கீழாளாகவோ இருக்கவேண்டுமேயன்றி, நிலத்தினை விற்பவரின் கீழாளாக இருக்கக் கூடாது என்று வற்புறுத்தியது. ஸ்காட்டிய சட்டம் நிலமானியப்படை முறை உட்குடிகள் நிலவுடைமையாளர்களாக இருப்பதற்குத் தொடர்ந்து அனுமதி அளித்தது. இங்கிலாந்தைக் காட்டிலும் ஸ்காட்லாந்து பெரிதும் நிலமானியப் படைமுறைப் பண்புடையதாக இருந்து வந்தமைக்கு இதுஒரு காரணமாகும்.

குரிய தனி மதிப்பாகக் கருதி வந்தனர். ஆனால், அச்சட்டத்திற்குப் பிறகு எண்ணற்ற தலைமைக் குத்தகைதாரர்கள் அரசருடைய பாராளுமன்றத்தில் இடம் பெறுவதை அவர்கள் விரும்பவில்லை. அத்துடன் அனைத்துலக நிலக் கிழார்களாகப் பாவிக்கப்பட்டு வந்த அரசரின் மதிப்பையும், ஆட்சிப் பொறுப்பின் தலைவர் என்ற சிறப்பையும், பாராளுமன்றத்தினைக் கூட்டுகின்ற தலைவர் என்ற பெரும்பேற்றையும் தந்தது. இவ்வாறு நாம் நிலமானியப்படை-முறைச் சமுதாயத்திலிருந்து பாராளுமன்றத் தேசிய இனமாக மெல்ல மாறிக் கொண்டிருந்தோம்.

எட்வர்டு நிலச் சட்டத்தை நன்கு வரையறுத்து விளக்கினார். அத்துடன் சட்டமன்றங்களை வரையறுக்கும் முறையும் மிக முன்னேற்றத்தை அடைந்து கொண்டிருந்தது. இவருடைய ஆட்சியிலேயே அம் முன்னேற்றம் காணப்பட்டது குறிப்பிடத் தக்கது. பதின்மூன்றும், பதினான்காம் நூற்றாண்டுகளில் கருவூல மன்றமும், பொது வழக்குகளை விசாரிக்கும் மன்றமும் (Common Pleas), அரசனின் முறை மன்றமும் ஒன்றையடுத்து மற்றொன்றாகத் தனிச் சிறப்பு வாய்ந்த மன்றங்களாகச் சிறப்புற்று விளங்கத் தொடங்கின. இவை ஒவ்வொன்றும் தமக்கெனப் பதிவேடுகளையும், நடைமுறை விதிகளையும், நிலையான அதிகாரிகளையும், நீதிபதிகளையும் கொண்டு நடத்தப் பெற்றதைக் காண்கிறோம். பிற்காலத்தில் சான்சரி நீதிமன்றம் (Court of Chancery) தோன்றியது. அது நாட்டின் உயர் நீதிமன்றமாக விளங்கலாயிற்று. அது தனிப்பட்ட சிறப்பியல்களை உடையதாக விளங்கியது.[1]

முதலாம் எட்வர்டு ஆட்சிக்காலம் முதல் பொதுச்சட்ட முறை மன்றங்கள் (Courts of Common Law) உயர் நீதி மன்றங்களிலிருந்தும், திருச்சபை முறை மன்றங்களிலிருந்தும் வேறுபட்ட நிலையில் தனிச்சிறப்போடு விளங்கின. இவற்றில் பணியாற்றிய மக்கள் எல்லாம் சமயச் சங்கங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. கடந்த சிறிது காலமாக போப்பு ஆண்டவர் சமயச் சார்பற்ற சட்டத்தைக் குருமார்கள் கற்பிப்பதையும், தொண்டு செய்வதையும் எதிர்த்து வந்தார் அரசருடைய நீதிபதிகள், ஒரு தனி விதிக்குட்பட்டவர்களைப் போன்று, பிராக்டனைப் (Bracton) போன்று, திருச்சபைத் தொடர்பு உடையவர்களாகவோ, கிளான்விலைப் (Glanvill) போன்று வீரம்மிக்க அரசியல்

[1] இவ்வியலின் இறுதியில் காணப்படும் குறிப்பினைக் காண்க.

சூழ்ச்சித் திறன் உடையவர்களாகவோ இருந்துவந்த நிலை மெல்ல மறையலாயிற்று. இங்கிலாந்தில் பொதுவாக நீதிமன்ற அதிகாரிகளின் வேலையில் உள்ளவர்களுக்குத் தரும் உயர்வு வெளியிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களுக்குத் தரப்படவில்லை. அதற்கு மாறாக, வழக்கறிஞர்களாக இருந்தவர்களே வேலை உயர்வு பெற்று வழக்கு மன்றங்களில் நீதிபதிகளாகப் பணியாற்றினர். ஆனால், ஐரோப்பாவின் பல நாடுகளில் இன்று வரை நீதிபதியும் வழக்கறிஞரும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இருவகைக் குழுக்களைச் சார்ந்தவர்களாகவே இருந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும். அரசரின் முறை மன்றத்தில் தொழில் முறைச் சூழ்நிலை என்றும் மாறிக்கொண்டிருந்தது. அரசரின் முறை மன்றம் வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் கூடியது. அங்கு ஆங்கிலேயச் சட்டம் பழுக்கக் காய்ச்சிய உலைக்கூடத்தில் உருமாற்றியமைக்கப்படும் நிலையிலேயே தொடர்ந்து இருந்து வந்ததைக் காண்கிறோம். இடைக்காலத்து கூட்டுரிமைக்குழு உணர்வு, வழக்கறிஞர்களையும் நீதிபதிகளையும் ஒரு தனிப்பட்ட தனியுணர்வு மிக்க சமுதாயமாக உருவாக்கிக் கொண்டிருந்தது. வெளியாரைப்பற்றிப் பொறாமையுடையவர்களாகவும், சமயத் துறை வழக்கறிஞர்களுக்குப் போட்டியாகவும், அவர்களுள் ஒருவர் மற்றொருவருக்குக் கற்றறிந்த சோதரராகவும், அறிவாற்றல் மிக்க வாழ்க்கைக்குரிய மரபுகளைப் படைப்பவர்களாகவும், காப்பவர்களாகவும் அவர்கள் சிறப்புற்று விளங்கினர். மேலும் அவர்கள் பேராற்றல் மிக்க உயர்ந்த முறையில் அமைக்கப்பட்ட தொழிலினால் எல்லா வகையான குற்றங்களையும், பழிகளையும் தேடிக் கொண்டனர். அவர்கள் 'சட்டைக்கு ஏற்ற பெருந்தன்மை' யுடையவர்களாக இல்லை. ஆனால், அறிவும் பேருழைப்பும் உடைய எந்த ஆங்கிலேயனும் திருச்சபையைப் போன்ற கவர்ச்சி மிக்க செல்வத்தையும் சிறப்பையும் அடைவதற்கு ஓர் ஏணியைத் தந்து உதவியது நீதிமன்றத் தொழிலாகும்.

பொதுவழக்கறிஞர்கள் ஒரு தனிப்பட்ட வகுப்பினராக விளங்கினர். அவர்கள்தான் சமயச்சார்பற்ற பொதுமக்களில் முதன்முதலாகக் கல்வி கற்றவர்களாக விளங்கியவர்களாவர். அக்காரணத்தினால் தேசிய இனம் தோன்றி உருவாவதற்குரிய பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக அவர்கள் இருந்தனர். இங்கிலாந்தின் வரலாற்றில், பாராளுமன்றத்தில் பங்கு கொண்ட மனிதர்களுக்குச் சிறிது தாழ்ந்த நிலையில் அவர்களுக்குரிய இடம் தரப்பட்டிருக்கிறது. இத்தகைய வழக்கறிஞர்கள் இல்லாமலிருந்திருப்பார்களானால், சீர்திருத்த இயக்கமோ

ஸ்டுவர்ட்டு மன்னர்களுக்கு எதிராகப் பாராளுமன்றம் பெற்ற வெற்றியோ, இங்கிலாந்தில் முழு வெற்றி அடைந்திருக்க, முடியாமல் போயிருக்கலாம். ஆயினும், அவர்களுடைய பழக்க வழக்கங்களும், சமூகமும் இடைக்கால உலகத்தில் படைக்கப்பட்ட சிறப்புமிக்க பண்புகளை உடையனவாகவே இருந்து வருகின்றன. அவற்றைப் பல்கலைக்கழகங்களின் பண்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஆங்கிலேயப் பல்கலைக் கழகங்கள் கல்லூரிகளை வளர்த்ததைப் போன்று, ஆங்கிலேய வழக்கறிஞர்கள் நீதிமன்றக் கழகங்களை (Inns of Court) அமைத்து வந்தனர். முதல் மூன்று எட்வர்டு அரசர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் தங்களுடைய மன்றங்களையும் நூல் நிலையங்களையும், உறைவிடங்களையும் டெம்பிளர்ஸ் (Templars) சோலைகளின் உள்ளும்புறமும் திரள் திரளாக அமைத்து வந்தனர். அவர்கள் பொதுவாகத் தொண்டாற்றவேண்டிய இடம் அங்கிருந்து இரண்டு கற்கள் மேற்கே அரசருடைய அரண்மனையின் நிழலில் இருந்துவந்தது. அவர்கள் அரச மரபுப்படி வெஸ்ட் மின்ஸ்டர் மண்டபத்தில் இடம் கொடுக்கப்பட்டனர். அருளாளரின் அரண்மனையை ஒட்டி வில்லியம் ருபஸ் மாண்புமிக்க அம்மண்டபத்தை இணைத்தார். அம் மண்டபமே அக் காலத்து வெஸ்ட் மின்ஸ்டர் மண்டபம் என்ற பெயரால் வழங்கப்பட்டது. அது மடாலயத்திற்கு ஒரு எதிரியாக இருந்து வந்தது. ஆனால், வழக்கறிஞர்கள் தங்களுடைய நீதிமன்றங்களில் உறங்கியும், உண்டும், படித்தும் வந்தனர். அந் நீதிமன்றக் கழகம் வாணிசத் தலைநகரான லண்டன் மாநகரத்திற்கும், அரசியல் தலைநகரமான வெஸ்ட்மின்ஸ்டர்க்கும் இடையே பாதித் தொலைவிலிருந்தது. அந்நில இயல் அமைப்பு ஆங்கிலேய வழக்கறிஞர்கள், மக்களுக்கும் அரசுக்கும் இடையே நடுவர்களாக இருந்து பணிபுரியும் உண்மையான அரசியல் கடமையைக் கண்டு அறியுமாறு செய்தது எனலாம்.[1]

முதலாம் எட்வர்டு ஆட்சிக் காலத்தில் புகழ் மிக்க ஆண்டுத் தொகுப்புகள் (Year books) தொடங்கப்பட்டன. அவை பணித்துறைச் சார்பற்ற, சொல்லுக்குச் சொல் சரியாகத் தெரிவிக்கும் சட்டயியல் நடைமுறைகளின் அறிக்கையாகும். நீதிமன்றங்களில் வழக்கு நடைபெறுகின்றபோது அவ்வழக்குகளை பிரஞ்சு மொழியிலே குறித்து வைக்கப்பட்ட குறிப்புகளின்

[1] பேரரசி விக்டோரியாவினுடைய ஆட்சியின் பிற்பகுதியில் சட்ட நீதிமன்றங்கள் வெஸ்ட்மின்ஸ்டரிலிருந்து நீதிமன்றக் கழகங்களுள்ள 'டெம்பிளர்' மாளிகைக்கு அருகில் மாற்றப்பட்டது.

தொகுதியே அத்தொகுப்புகளாகும். அக்காலத்திய உயர் வகுப்பினர் பிரஞ்சு மொழியைப் பேசிவந்த காரணத்தினால், வழக்கறிஞர்கள் தங்களுடைய வழக்குரைகளை அம் மொழியிலேயே வழங்கி வந்தனர். அதனால்தான், அத் தொகுப்புகளைத் தொகுத்தவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பிரஞ்சு மொழியிலே குறித்து வைத்தனர். இதைப்போன்று முழு அறிக்கைகளை வேறெந்த நாட்டிலும் காணமுடியாது ஆங்கிலேயரின் வேறு பல வாழ்க்கைத் துறைகளில் அரசியல் துறையிலோ சமயத் துறையிலோ பல நூற்றாண்டுகள் வரை இத்தகைய அறிக்கைகளின் தொகுப்பினைக் காண்பது அரிது. தொழில் துறைத் தொடர்பு உடையனவும், மனிதத் தன்மையில் ஆர்வம் ஊட்டுவதாயும் உள்ள பல செய்திகள் சொல் சொல்லாகப் பேசப்பட்ட முறையிலேயே குறிப்பெடுத்து வைக்கப்பட்டிருக்கின்றது. அத தொகுப்புகளில் சாக்குப்போக்குக் கூறி வழக்காடுதலையும், எதிர்த்துக் கூறிய சுடுசொற்களையும், குத்தலான சிலேடைப் பேச்சுகளையும் அசைச் சொற்களையும்' காணலாம். இவ்வறிக்கைகள் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குக் கருத்துக்களைக் கொண்டு சென்றதைக் காணுகின்றோம். இவை ஜஸ்டீனிய அரசரின் சட்டத் தொகுப்புக்குரிய சிறப்பிடத்தைப் பெற்றன. மேலும் போப்பு ஆண்டவரின்கட்டளைகள் தொகுக்கப்பட்டுச் சிறப்பாகப் போற்றப்பட்டதைப் போன்று, இவ் வாண்டுத் தொகுப்புகளும் 'சிறப்புற்று விளங்கின. வரலாற்றுக் காலம் நெடுக, வீரத்திருத் தொண்டு உணர்வுடன் ஆங்கிலேயச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டிருந்த சிறப்பு மிக்க மாணவர்கள் அனைவரும், அத் தொகுப்புகளைத் தங்களுக்குச் சிறந்ததொரு சான்றாகவும், தங்களுக்கு ஆர்வத்தை யூட்டும் தனிச் சிறப்பு வாய்ந்த நூற்களாகவும் கருதி வந்தனர்.

முதலாம் எட்வர்டு தம்முடைய நீதிமன்றச் சட்டங்களைப் பற்றிப் பெரிதும் பெருமைப்பட்டார். ஆனால் அதே சமயத்தில் பொதுவான மேனர் முறையீட்டு மன்றங்களுக்கு மாறாக, மிக விரிந்த அளவில் நிலப்பிரபுக்கள் வாக்குரிமை பெறக்கூடுமோ என்று பொறாமைப்பட்டார். அவர் ஒழுங்கு முறைக்குட்பட்ட வழக்கு விசாரணையைக் கடைப்பிடிக்கச் செய்தார். அதற்கு 'எத் தகுதிபற்றிய' வழக்கு விசாரணை (Quo Warranto) என்பது பெயராகும். அவ் வழக்கு விசாரணை (1278-1279) பிரபுக்களின் தனி அதிகார வரம்புகளை ஆராய்ந்தது. பலவழக்குகளில் நினைவுக்கெட்டாத நெடுங்காலமாக இருந்து வருகின்ற வழக்காற்று உரிமை என்று கூறிய பொழுது, அதற்குப் பட்டயங்களைச் சான்று காட்டுமாறு செய்தது. ஆனால் அம் முயற்சி பெரிதும் முயற்சியடையாத

ஒன்றுக இருந்தது. மேலும் இம்முயற்சி அரசியல் அதிகாரத்திணை துணிவு மிக்க வகையில் ஒரேயடியாகப் பெற முயன்றது. இதனைக் கண்ணுக்குப் புலனுகாக் காலத்தினிடத்து விட்டுவிட்டு இருக்கலாம். நம்பத்தகாத வகையில் கதையொன்று கூறப்படுகிறது. நீதிபதிகளின் விணுக்களுக்கு விடை கூறும்போது கோமான் வாரன் (Earl Warenne) தம்முடைய துருப்படிந்த வாளினை உருவி, அவருடைய நிலத்தையும் வாக்குரிமைகளையும் பட்டயத்தின் மூலம் உரிமையாகப் பெற்றதாக கூறப்படுகிறது. இக்கதை முற்றிலும் நம்பத்தக்கதாக இல்லை. அவ் வழக்கினை அரசர் எட்வர்டு கண்டிப்பாக வற்புறுத்தவில்லை. ஏனெனில், அவருடைய இளமைப் பருவத்திலேயே போதிய அளவுக்கு நிலப்பிரபுக்களின் போர்களை அவர் கண்ணுல் கண்டிருந்தமையால் இவ்வழக்கினை அவர் மேற்கொண்டு வற்புறுத்த விரும்பவில்லை. அவருடைய 'எத்தகுதிபற்றிய' என்னும் வழக்கு விசாரணை அண்மைக்காலத்திலோ எதிர்காலத்திலோ எல்லைமீறத்தக்க செயல்களையாகிலும் அரசரின் உயர் நீதிமன்றங்களால் தடுத்து நிறுத்துவதற்குப் பயன்பட்டது. வழக்காடுபவர்கள் அரசரின் நீதிபதிகளை நாடிச் சென்ற காரணத்திஞல் மெல்ல மெல்ல தனியார் முறை மன்றங்கள் அழியத் தொடங்கின. ரோஜாப்பூ அணிந்து நடத்திய போர்க் காலத்தில் (1455-1485) மீண்டும் அரசியல் குழப்பம் உண்டாயிற்று. ஆனல் அது இங்கிலாந்தின் வரலாற்றில் இறுதியாக நிகழ்ந்த அரசியல் குழப்பமாகும். பெரும் பிரபுக்கள் தங்களுக்கேயுரிய பரந்துபட்ட அதிகார எல்லைகளைக் கேட்கவில்லை. ஆனல், தங்களுடைய உரிமை ஏவலாளர்களை வேலைக்குப் பயன்படுத்துவதன்மூலம், அரசரின் முறை மன்றங்களில் பணியாற்றிய நீதிபதிகளையும் தீர்ப்புச் சான்ருளர் குழுவினரையும் பேரச்சம் கொள்ளுமாறு செய்துவந்தனர்.

பாராளுமன்றம் இங்கிலாந்தின் தனிப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த ஒரு நிலையமாகும். அது திடீரென்று ஒரு நாள் உண்டான புரட்சியில், நாட்டின் ஒரு சக்தி மற்ருெரு சக்தியை வெற்றி கொண்டதனுல் அமைக்கப்பட்டது அன்று. அது அரசர், திருச்சபை, நிலப்பிரபுக்கள், பொதுமக்களின் குறிப்பிடத்தக்க வகுப்பினரான நகர் மக்கள், மாவீரர்கள் முதலியோருக்கு இடையே இருந்துவந்த வேற்றுமைகளைச் சரிப்படுத்தவும், அவற்றின் ஆற்றலைக் குறைப்பதற்கும் உரிய வசதி மிக்க வழியாக பாராளுமன்றம் பையப்பைய வளர்ந்து வந்தது. உட்குடிகளை யாருமே அக்காலத்தில் மதிப்பதில்லை. எனவே, அவர்கள் பாராளுமன்றத்தில் பங்கு பெறவில்லை. பாராளுமன்றம் தங்களுக்கு எதிரானது என்பதை அவர்கள் அறிந்தனர். எனவே,

அவர்கள் 'தொழிலாளர்கள்' என்னும் தன்னுணர்ச்சி பெற்றவுடன், 1381 ஆம் ஆண்டில் நாட்டில் உண்டான கிளர்ச்சியினைப் போன்று அவர்கள் 'நேரடியாகச் செயலில்' ஈடுபட்டனர். ஆனல், உட்குடிகளை ஒடுக்கிவிட்டும் பாராளுமன்றம் நட்புமிக்க ஆதிக்கச் சமநிலை உடையதாகப் பிரதிநிதிகளைப் பெற்றிருந்தது. ஆங்கிலேய மக்கள் என்றுமே 'குழு, மனப்பான்மையில்' நம்பிக்கை உடையவர்கள் என்பதில் தனிப்புகழ் வாய்ந்தவர்களாக விளங்கி வருகின்றனர். அதனல்தான் அவர்கள் வட்டமாக அமர்ந்து, தங்களுக்கிடையே உடன்பாடு அல்லது உரிமைகளை விட்டுக் கொடுப்பது உண்டாகும் வரையில் தங்கள் பிரச்சினைகளை எல்லாம் பேசிப்பேசித் தீர்வு காண்பதில் பேரார்வம் உடையவர்களாக இருந்து வருகின்றனர். இந்தத் தேசிய இனத்துக்குரிய சிறப்பியல்பே ஆங்கிலேயப் பாராளுமன்றம் தோன்றுவதற்கு நிலைக்களனாக அமைந்தது.

முதல் மூன்று எட்வர்டு அரசர்கள் ஆட்சிக் காலங்களில் பாராளுமன்றம் இன்றைய வடிவினை ஓரளவுக்கு மெல்ல முயன்று பெற்றது எனலாம். டி மான்ட்போர்ட்டு காலத்தில் தான் பெற்ற அனுபவத்திற்குப் பிறகு, முதலாம் எட்வர்டு ஆட்சி இயந்திரத்தினை இடர்ப்பாடு இன்றி இயக்குவதற்கு அடிக்கடி நாட்டுச்சபையினைக் கூட்டுவது சிறந்தது என்று அறிந்தார். அவருடைய நோக்கம் அரசின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதோ, அரசின் அதிகாரத்தைப் பொது மக்களின் விருப்பத்திற்கு அடிமைப்படுத்த வேண்டும் என்பதோ அன்று. ஆளப்படுகின்ற மக்களுடைய வாழ்க்கையோடு நிலையாகத் தொடர்பு வைத்துக்கொள்வதன் மூலம் அரசின் அதிகாரத்தைத் திறமையுடையதாகச் செய்ய வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாகும். எட்டாம் ஹென்றி பாராளுமன்றத்தின் சிறப்பினை உயர்த்துவதற்கு அரும்பாடுபட்ட மற்றோர் அரசர் என்று நம்முடைய வரலாற்று ஏடுகள் உரைக்கின்றன. அவரைப் போன்று நம்முடைய எட்வர்டும் மாவட்டங்களிலும், பட்டணங்களிலு வாழுகின்ற நடுத்தர மக்களின் ஆதரவு, தமக்கு ஒப்புயர்வற்ற சிறந்த பேருதவியாகும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார்.

தம்முடைய தகப்பனரின் கொந்தளிப்பு மிக்க ஆட்சிக் காலத்து எப்போதோ ஒரு முறை பரிசோதித்துப்பார்க்கப்பட்ட முறையினை, முதலாம் எட்வர்டு தொடர்ந்து பின்பற்றுவது என்றும், அதை நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறியச் செய்ய வேண்டுமென்றும் முடிவுக்கு வந்தார். கோட்டங்களில் பிரதிநிதிகளையும், பேரூர்களின் பெரு மக்களையும் அரசர் பெருமான்

கூட்டுகின்ற பெருமக்களின் மாநாட்டிற்கு வருமாறு வரவழைக்கும் முறையை அவருடைய தந்தை முதன் முதலாக மேற்கொண்டார். அதை இவர் தொடர்ந்து பின் பற்றுவதன் மூலம், மக்களுடைய ஆதரவை நன்கு பெறமுடியும் என்பதை உணர்ந்தார். இவ்வாறு மாநாடுகள் கூட்டுவதன் மூலம் குறிப்பிட்ட சில வரிகளை மிக எளிதிலே தண்டிக்கொள்ள அவர் விரும்பினர். கடுமையான வரி விதிப்புகளை, அவ்வவ் வட்டாரத்தைச் சார்ந்த மாவீரர்களுடைய துணையையும், நகர மக்களின் உதவியையும் பெருமலும் அவர்களுடைய சிறப்புமிக்க அறிவுரைகளைக் கொள்ளாமலும் நன்முறையில் தண்ட முடியாது என்பதை அரசர் அறிந்திருந்தார். பிரதிநிதிகள், அரசரின் முன்னிலையில் கூடிய மாநாடுகளிலிருந்து தத்தம் சமூகத்திற்கும் வட்டாரங்களுக்கும் திரும்பிச் செல்கின்ற போது மதிப்பும் அச்சமும் உடையவர்களாகச் சென்றனர். அதே சமயத்தில் தங்களுடைய முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாகவும், பொதிய தேசிய ஒற்றுமை உணர்வினை உடையவர்களாகவும், தேசிய சாதனைகளைச் சாதிக்கவேண்டுமென்ற ஆர்வம் உடையவர்களாகவும் திரும்பிச் சென்றனர். இந்த மன நிலையில், தங்கள் வட்டாரத்தில் விதிக்கப்பட்டிருக்கின்ற தீர்வைகளைத் தண்டுவதற்கு உரிய ஏற்பாடுகளையும், அவற்றை அரசரிடத்துச் செலுத்துவதற்குரிய வழிகளையும் செய்துவந்தனர். அவர்கள் அரசரின் திட்டங்களைத் தங்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு (வேறு எவ்வகையிலும் செய்திகளை அறிய முடியாத அவர்களுக்கு) மிகத் தெளிவாக விளக்கி வந்தனர்.

இக்காலத்தைப் போன்று செய்தித்தாள்கள் இல்லாத காலம் அது. அக்காலத்துக் கடிதப் போக்குவரத்தும் மிகமிகக் குறைவாகவே இருந்தது. மேலும் பயணம் செய்வது கடினமானதாகவும், இடர்ப்பாடு மிக்கதாகவும் இருந்துவந்த காலம் அது. அத்தகைய இன்னல்கள் நிறைந்த காலத்தில் நாட்டுச் சமூகங்களிலிருந்த மாவீரர்களும், நகரமக்களும், புதுப்புது அணிகளாக வெஸ்ட்மின்ஸ்டருக்குத் தவருது வந்து போய்க் கொண்டிருக்க வேண்டுமென்று அரசர் கட்டாயமாக வற்புறுத்தி வந்தமை, ஆங்கிலேயமக்களுக்குத் தொடர்ந்து அரசியல் கல்வி அறிவினை கற்பிக்கத் தொடங்கியது எனலாம். சாசராலும் நூறு ஆண்டுப் போரினல் உண்டாக்கப்பட்டதைவிட தேசிய ஒற்றுமையைப் பேரளவில் இம்முயற்சி உண்டாக்கியது எனலாம். இத்தகைய ஓர் ஆட்சி இயந்திரம் எளிதாக வரிகளைத் தண்டுவதற்கில்லாமல் போயிருந்தால், எட்வர்ட்டுகள் ஆட்சிக்காலத்து நடைபெற்ற ஸ்காட்டிய-பிரஞ்சுப் போர்களில், ஆங்கிலேயர் கலந்து கொண்டு வெற்றி பெற்றிருக்க முடியாது என்பது உறுதி. இங்கிலாந்து

தன்னுடைய பாராளுமன்றத்தைப் படைக்கவில்லையென்றும், பாராளுமன்றமே இங்கிலாந்தினைப் படைத்தது என்றும் கூறப் படுகின்ற கருத்து ஒன்று நாட்டிலே நிலவிவருகின்றது. இந்தப் பொருண் மொழியில் ஓரளவுக்கு உண்மையிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

மாவட்டங்களின் பிரதிநிதிகளையும், பட்டணங்களின் பிரதி நிதிகளையும் அரசர் அடிக்கடி வரவழைத்ததற்கு நிதித்துறைப் பற்றுக்குறை ஒன்றே காரணமென்று கூறமுடியாது. முதலாம் எட்வர்டு சில சமயங்களில் தம்முடைய பிரதிநிதிகளை அழைத்து, அவையைக் கூட்டியபோது அவர் உண்மையிலே தமக்குப் பணம் வேண்டுமென்று அவர்களைக் கேட்காத கூட்டங் கள் பல கூடின என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஏற் கெனவே அவர் இன்னொரு நோக்கத்தைக் கருத்தில் கொண்டே இந்த அவையை அடிக்கடி கூட்டி வந்தார் என்பதை அறிகிறோம். தம் நாட்டுக் குடிமக்களின் குறைகளையும், விண்ணப்பங்களையும் ஒன்றாகத் திரட்டி, அவற்றை ஆராய்வதின்மூலம் ஒவ்வொரு வட்டத்திற்குரிய தேவைகள் என்ன என்பதை அறிந்து, அதற் கேற்ப ஆட்சி செய்ய அவர் விரும்பினார் என்பது புலனாகின்றது. மேலும் வட்டார அதிகாரிகளின் தீய செயல்களைத் தடுப்பதற் கும், கண்டிப்பதற்கும் அவர் இதைச் சிறந்த கருவியாகக் கையாண்டார். இவ்வாறு தொடக்கக் காலத்தில் கூட்டப்பட்ட பாராளுமன்றத்தின் விவகாரங்களில், பெரும் பகுதி தனி மனிதர் களிடத்திலிருந்தும் தனிச் சமூகத்திலிருந்தும் தங்கள் குறைகளைத் தீர்க்குமாறு விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பக் குவியல்களை ஏற்றுக் கொள்வது சிறப்புமிக்கபணியாக இருந்துவந்தது. ஆனால் பதினான்காம் நூற்றாண்டின் காலப்போக்கில், மக்கள்சபை முழு வதுமே மேலும் மேலும் தங்கள் குறைகளை விண்ணப்பத்தின் மூலம் தெரிவிக்கத் தொடங்கியதைக் காணுகின்றோம். முதலாம் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்து, அவ் விண்ணப்பங்கள் பாராளு மன்றத்திற்கு அனுப்பப்படவில்லை. ஆனால், அரசருக்கோ, அர சரின் பேரவைக்கோ அவை அனுப்பப்பட்டன. அவை பாராளு மன்றத்தில் அரசராலும், அரசருடைய அமைச்சர்களாலும் அல்லது கவுன்சிலர்களின் குழுக்களாலும், நீதிபதிகளாலும், நிலப்பிரபுக்களாலும் ஆராயப்பட்டன. இந்தக் குழு, கவுன்சிலர் களும், நீதிபதிகளும், நிலப்பிரபுக்களும் சேர்ந்தவொரு அமைப் பாக, இருந்தமையால், இதனை 'முக்கூட்டு அமைப்பு' என்று அக் காலத்தில் வழங்கி வந்தனர். அத்தொடக்க காலத்து, தங்கள் குறைகளை விண்ணப்பம் செய்து கொண்டவர்களுக்கு அளிக்கப் பட்ட குறையைப் போக்கும் தீர்ப்புகள், நீதிமுறைச் சார்புடைய

தாகவோ, சட்டமுறைச் சார்புடையதாகவோ, நிர்வாகத் தொடர்புடையதாகவோ இருந்திருக்க வேண்டும். ஆனால் அக்காலத்து அம் மூவகைப் பாகுபாடு செய்யப்படவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. ஆனால் காலப்போக்கில் தனியாரின் விண்ணப்பங்கள் சான்சரி நீதிமன்றத்திலோ (Court of Chancery) வேறு முறை மன்றங்களிலோ நீதி முறை நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. ஆறும் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் மக்களிடமிருந்து வெளிப்பட்ட மக்கள்சபை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியதுடன், மக்களுடைய குறைகளை எல்லாம் சிறுசிறு மசோதாக்களாக (Bills) பாராளுமன்றத்தின் மூலம் அவற்றைச் சட்டமாக்கத் தொடங்கினர். இவ்வாறு மக்கள் சபையின் சட்டமியற்றும் உரிமை தோன்றிவளர்ந்தது எனலாம்.

ஆனால், முதலாம் எட்வர்டு ஆட்சிக் காலத்தில் நாம் இரு பெரும் 'சபைகளைப்' பற்றிப் பேசுவதற்கு இல்லை. அக்காலத்து ஒரே ஒரு சபைதான் இருந்து வந்தது. அச் சபைக்கு அரியாசனத்தில் அரசர் அமர்ந்து தலைமை வகித்து வந்தார். அல்லது அவருடைய சான்சலர் கம்பளக் கட்டிலில் அமர்ந்து, அவ்வவைக்குத் தலைமை தாங்கி, அதன் நடைமுறைகளை நடத்தி வந்தார். அரசின் மற்ற முக்கிய அதிகாரிகள் எல்லாம், அலுவலாளர் உரிமைபெற்று உறுப்பினர்களாக அச்சபையில்குழுமியிருந்தனர். அவர்களுடன் தனிப்பட்ட கட்டளைகளின் மூலம் வரவழைக்கப்பட்ட சமயச் சார்பற்ற நிலப்பிரபுக்களும், ஆன்மீகத் தொடர்புடைய நிலப்பிரபுக்களும் கூடியிருந்தனர். அவர்களுடன், அவர்களுக்குப் பின்னால் ஒவ்வொரு மாவட்டத்தின் தலைவராலும் அனுப்பப்பட்ட மாவீரரின் பிரதிநிதிகளும், நகர மக்களின் பிரதிநிதிகளும் அமர்ந்திருந்தனர். இந்த மாவீரர்களும், நகர மக்களும் இத்தகையோர் முன்னிலையில் முன்னால் பேசி இருந்தால் தான் இங்குப் பேச அனுமதிக்கப் பட்டனர். இது 'பாராளுமன்றத்தின் உயர்தர மன்றமாக' ('High Court of Parliament') இருந்தது. இதனை இன்றும் தற்காலப் பிரபுக்களின் சபையிலே (House of Lords) அரியாசனத்தையும், கம்பளக் கட்டிலையும் காணலாம். இக்காலத்து இந்தச் சபையில் அரசரின் அமைச்சர்களுள் சான்ஸலர் ஒருவரே பெரும் குடி மக்கள் வகுப்பினைச் சாராதவராக இருந்தாலும், அதிகாரி என்ற அலுவல் முறையினால் இங்கு அமர்ந்திருக்கலாம். ஆனால் இங்குள்ள அரியாசனத்தில் பாராளுமன்றம் திறக்கப்படுகின்றபோதும், பாராளுமன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்படுகின்றபோதும், அரசரைக் காணலாம். அதற்குப் பிறகு பொதுமக்கள் அரசரின் சொற்களைக் கேட்பதற்காகத் திரள் திரளாக வந்து குழுமியபொழுது

தொடக்க காலத்திய பிளாண்ட்டாஜெனட் பாராளுமன்றம் மீண்டும் கூடியதைக் காண்கிறோம்.

முதலாம் எட்வர்டு ஆட்சியின் காலத்து, மக்களின் பிரதிநிதிகள் தனிப்பட்ட ஒரு சபையைச் சார்ந்தவர்களாக இருக்கவில்லை. ஆனால், அவர்கள் பெரிதும் பாராளுமன்ற அமர்வுகளின் போது ஒருங்குதிரண்ட ஒரு கூட்டமாகவும், பிரிக்கமுடியாதவர்களாகவும், ஒன்றுபட்ட நோக்குடையவர்களாக வந்து குழுமினர். பெருமக்களால் பாராளுமன்றத்தில் பரிசோதனை செய்யப்பட்ட முக்கிய செயல்களுக்கு அவர்களுடைய வருகை இன்றியமையாததாகக் கருதப்படவில்லை. சட்டமியற்றப்படுவதற்கு அவர்களுடைய இசைவு எப்போதும் கேட்கப்படவில்லை. இந்த அரசரின் ஆட்சிக்காலம் சிறப்புமிக்க சட்டங்களுக்கு (Statutes) பேர் பெற்றதாகும். அவற்றுள் சில, குறிப்பாக மூன்றும் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் போன்ற சட்டங்கள் நிறைவேற்றப்பட்டபோது, பொதுமக்களின் பிரதிநிதிகள் யாருமே பாராளுமன்றத்தில் அமர்ந்திருக்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டுத் திட்டங்களும், அயல் நாட்டுக் கொள்கைகளும் அமைச்சர்களாலும், நிலப்பிரபுக்களாலும், தலைமைக் குருமார்களாலும் ஆராயப்பட்ட சமயங்களில் அங்கு அமர்ந்த மாவீரர்களுக்கும், நகர மக்களுக்கும் யாதாகிலும் புரிந்திருக்குமா என்பதே ஐயப்பாட்டிற்குரியதாகும். ஆனால், அங்குப் 'பேசாத ஊமைகளாக—அவையோர்களாக' அவர்கள் அமர்ந்திருந்தனர் என்பது தெரிகிறது.

மாவீரர்களும், நகரமக்களும் தனிப்பட்ட முறையில் கூட்டங்கூட்டமாகக் கூடி, தாளிடப்பட்ட அறைகளுள் தங்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்த கூட்டங்களிலிருந்தே மக்கள் சபை (House of Commons) என்னும் தனிச்சபை தோன்றியது எனலாம். அவர்கள் தனிப்பட்ட முறையில் கூட்டங்கூட்டமாகக் கூடி, கடினமான கேள்விகளுக்கு என்ன பதில் கூறுவது அல்லது மேல் அதிகாரிகளினால் தாங்கள் துன்புறுத்தப்படுவதிலிருந்து விடுதலை பெறுவதற்கு என்ன உரிமைகளைக் கேட்பது என்பதைப்பற்றிக் கலந்து சிந்தித்து வந்தனர். அப்படி அவர்கள் கூடிக் கலந்து சிந்தித்தபோது, தங்களுடைய கூட்டத்தின் நடைமுறைகளைப்பற்றி அறிக்கைகளை வெளிப்படுத்தாது, மிக எச்சரிக்கையுடன் இருந்துவந்தனர். இதனால்தான் தொடக்க காலத்தில், மக்கள் சபையின் உள் வளர்ச்சி எப்படியிருந்தது என்பதை நாம் அறியமுடியவில்லை. மேலும் எப்போது, எவ்வாறு, மக்கள் சபைக்கு 'சபாநாயகர்' (Speaker) தலைவராக

அமர்த்தப்பட்டார் என்பதும் நமக்குத் தெரியவில்லை. பாராளு மன்ற முழு உறுப்பினர் கூட்டத்தின்போது, மக்கள் சபை யினருக்காகப் பரிந்து பேசுவதற்கு அமர்த்தப்பட்ட அதிகாரி யாகத் தொடக்க காலத்தில் இருந்தவரே, பிற்காலத்தில் 'சபா நாயகர்' எனப்பட்டார். இவ்வாறு மக்களுக்குப் பேசுவதற்கு என்று ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டதற்குக் காரணம், தங்களை விட உயர்ந்தவர்கள் முன்னிலையில் மாவீரர்களும், நகர மக்களும் வாய் திறந்து 'பேச' அஞ்சி மௌனமாக இருந்து வந்தமையே யாகும். ஆனல், ஸ்டூவர்ட்டு மன்னர்களின் ஆட்சிக் காலம் வரை யில் மக்கள் சபையின் ஊழியராக இல்லாமல், சபாநாயகர் அர சின் ஊழியராகவே இருந்து வந்தார். மூன்றும் எட்வர்டு ஆட் சியின் தொடக்கத்தில்தான், அரசரின் வீட்டு விவகாரங்களைக் கண்காணித்து வந்த அதிகாரிகள் மாவட்டங்களின் மாவீரர் களாகப் பாராளுமன்றத்தில் இடம் பெற்றதைக் காண்கிறேம். பிற அரசரின் அதிகாரிகள் மாவட்டங்களின் மாவீரர்கள் ஆக நியமிக்கப்படுவதற்கு உரிய காரணம், மக்கள் சபையில் நடை பெறும் சொற்போர்களையும் எடுக்கப்படும் முடிவுகளையும் அர சருக்கு நன்மை தரத்தக்க வகையில் மக்களிடையே எடுத் துரைப்பர்என்பதே. இதைப் போன்றே டியூடர்களின் ஆட்சிக் கா லத்து பிரிவி கவுன்சிலர்கள் (Privy Councillors) திடீரென்று பேராற்றலுடன் அரசரின் சார்பாகச்செயலாற்றி வந்ததைக் காண் கிறேம். மேலும், மூன்றும் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்தில் தான் வெஸ்ட்மின்ஸ்டரில் உள்ள திருக்கோயில் குருமார்களின் கூட்டத்திற்குரிய அறை, மக்கள்சபை உறுப்பினர்கள் வழக்க மாகக் கூடும் இடமாகக் கருதப்பட்டது.

நம்முடைய நிலையங்களின் தொடக்க கால வரலாற்றில் குறிப் பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த செயல் என்னவென்றல், அக்காலத்திய ஐரோப்பாவில் நம்முடைய ஆங்கிலப் பாராளு மன்றத்தோடு ஒப்புமை உடையதாக காணப்பட்ட மன்றங்கள் பிரிக்கப்பட்டிருந்ததைப் போன்று நம்முடைய பராளுமன்றம் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. ஐரோப்பாவில் அக்காலத்திய மன்றங்கள் குருமார்கள், பிரபுக்கள், நகர மக்கள் மன்றம் எனப்படும் பெரும் அரசியல்மன்ற மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டு இருந்தன. அதைப்போன்று அல்லாமல் பிளாண்ட்டா ஜெனட் அரசர்களின் பிற்கால ஆட்சியில், நம்முடைய பாராளு மன்றம் இரு பெரும் சபைகளாகப் பிரிக்கப்பட்டது. அவை பிரபுக்கள் சபை என்றும், மக்கள் சபை என்றும் பெயர் பெற்றன. இத்தகைய மாண்புமிக்க ஏற்பாட்டின் காரணமாக வோ விளைவாகவோ நம்முடைய அரசியலமைப்புச் சட்ட வர

லாற்றின் பெரும் பகுதியும், சமூக வரலாற்றின் பெரும் பகுதியும் அமைந்திருப்பதைக் காணுகின்றோம்.

ஐரோப்பிய நாட்டு 'அரசியல் மன்ற மண்டல' முறையில் நாம் பொதுவாக அழைப்பதற்குரிய 'பெருமக்கள்' எல்லாரும் உரிமையுடைய பிரபுக்களுக்குரிய மண்டலத்தில் இடம் பெற்றிருந்தனர். ஆனால், ஐரோப்பாக் கண்டத்தில், 'பிரபுக்கள்' என்னும் சொல் பரந்த பொருளில் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்தப் பரந்த பொருளில், வழங்கப்பட்ட 'உரிமையுடைய பிரபுக்களே' ஆங்கிலேயப் பாராளுமன்றத்தில் இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தனர். பெரும்பான்மையான நிலப்பிரபுக்கள் (Barones Majores) தனிப்பட்ட அழைப்பாணைகளின் மூலம் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் மேல் சபையிலேயே இடம் பெற்றனர். சிறுபான்மையோரான நிலபிரபுக்களுக்குத் (Barones Minores) தலைமைக் குத்தகைதாரர்களாக இருந்தனர். அவர்கள் மாவீரர்களோடும், பெருமக்களோடும், கோட்டங்களில் மாவீரர்களாகத் தேர்ந்தெடுப்பதற்கு உரிய தகுதியுடைய 'பிராங்கிளின்'களோடும் ஒன்றாகக் கூடி, கீழ்ச்சபையில் அமர்ந்தனர். இவ்வாறு ஆங்கிலேயப் பாராளுமன்ற வாழ்க்கை, நிலமானியப் படைமுறையினால் உண்டாக்கப் பெற்றிருந்த ஏற்றத்தாழ்வுகளை அடியோடு அழித்துவிட்டது. ஒரு தலைமைக் குத்தகைக்காரர் பட்டணங்களைச் சார்ந்த நகர மக்களோடு ஒன்றாக உட்கார்ந்து கீழ்ச்சபையில் செயலாற்றி வந்ததைக் காணலாம்.

இத்தகைய சிறப்புமிக்க தனிப்பண்பு வாய்ந்த பதினான்காம் நூற்றாண்டின் ஆங்கிலேயப் பாராளுமன்றம், நாம் முன்பே கண்ட தொடக்க கால வளர்ச்சிகளைச் செயல்முறைக்கு உகந்ததாகச் செய்துவிட்டதைக் காணுகின்றோம். மாவட்டங்களின் விவகாரங்களில் ஆர்வத்தோடு பங்குகொண்டு பணிபுரிந்த சிறு பெருமக்கள் (Smaller Gentry) அடிக்கடி நகரக் குடிமக்களோடும் மிகப் பண்புமிக்க நாட்டுப்புற இறையில மானியக் குடிமக்களோடும் தொடர்பு கொள்வதற்கு உதவி புரிந்தது.[1]

[1] நகரக் குடிமக்கள் உட்பட்ட கீழ்ச்சபை உறுப்பினர்கள் அனைவரும் மாவட்டத் தலைவரின் மூலமாகவே அழைக்கப்பட்டனர். தனிப்பட்ட பட்டணங்களுக்கு அனுப்பப்பட்ட தனித்தனியான அழைப்பாணைகளின் மூலம் அவர்கள் அழைக்கப்படவில்லை. இதனால் மாவீரர்களுக்கும் நகரக் குடிமக்களுக்கும் இடையே ஒரு வகையான தொடர்பு உண்டாயிற்று. ஒரு வகையில் அவர்களிருவரும் ஒரு மாவட்டத்தின் இருவகைப் பிரதிநிதிகளாவர். ஒருவர் கிராமத்தையும், மற்றொருவர் பட்டணத்தையும் சார்ந்தவராக இருந்தனர். மாவட்டமும், மாவட்டத் தலைவரும் அரசரின் ஆட்சியில் சிறப்புமிக்க பணியாற்றினர். இவ்வேற்பாடு எல்லாருக்கும் இயல்பானதாகவே தோன்றியது.

ஆங்கிலேயர்கள் மூத்த மகனுக்கே சொத்துரிமை என்னும் முறையினைப் பின்பற்றி வந்தனர். இம்முறை, பிரபுக்களின் குடியில் பிறந்த பிற பிள்ளைகள், பரந்த உலகில் சென்று பலருடன் பழகுவதற்கும், வாணிகம் முதலிய வேறு பல துணிகரச் செயல்களில் ஈடுபடுவதற்கும், வாய்ப்பு அளித்தது; காவல் கற்கோட்டைகளில் வாழ்ந்த மக்களையும், மேனர் பண்ணைகளில் வாழ்ந்த மக்களையும் உள்நாட்டு வாணிகத்திலும் அயல் நாட்டு வாணிகத்திலும் பேரார்வம் கொள்ளச் செய்தது; அவ் வகுப்பினருக்கிடையே கலப்பு மணம் நடைபெற்றது. அத்துடன் உயர்தர வகுப்பினருக்கும் சமுதாயத்தின் இடை கடைப் பகுதியில் இருந்த வகுப்பினருக்குமிடையே அடிக்கடி தொடர்பு உண்டாயிற்று. சமுதாயத்தின் பல்வேறு நிலையில் உள்ளவர்கள் ஒன்று கூடிக்கலந்து உறவாடுவதற்குரிய வாய்ப்பும், வசதியும் இங்கிலாந்தில் வேறுஎங்கும் காண முடியாத அளவுக்கு இதனால் அமைந்தது எனலாம். பான்னக்பர்ன் (Bannockburn) அல்லது கிரேசி (Crecy) போர்களுக்கு முற்பட்ட நெடுங்காலத்திற்கு முன்பு, மக்கள் சபை ஆங்கிலேயருக்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்த அவ்வியல்புகளை உடையதாக விளங்கியது. இதற்கு முன்பே மாவட்டங்களைச் சார்ந்த அரைகுறையான நிலமானியப் படை முறை வகுப்பினராக விளங்கிய மாவீரர்கள், நாட்டுப்புற வேளாளர்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகச் செயலாற்றத் தொடங்கினர். அவர்கள் நகரக் குடி மக்களோடு ஒன்றாக அமர்ந்து பணியாற்றி வந்தனர். எனவேதான், மிகப் பழங்காலத்திலேயே மக்கள் அவை, தன்னுடைய முக்கியத்துவத்தை வற்புறுத்தி, உரிமையைப் பெறமுடிந்தது. அக்காலத்து நகர மக்களும், வேளாளர்களும் மாவீரர்களோடு சேர்ந்து செயலாற்றினால் ஒழிய, வேறு வகையில் சிறிதளவு கூட அரசியல் மதிப்பினைப் பெறமுடியாதவர்களாக இருந்தனர். ஸ்டூவர்ட்டு அரசர்களின் ஆட்சிக்காலத்திய இங்கிலாந்தில் நடந்த உள்நாட்டுப் போர் இங்கிலாந்திலிருந்த பல வகுப்பினருக்கிடையே நடைபெற்ற வகுப்புப் போராக அமையாததற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும். மேலும் பர்க்கின் (Burke) காலத்திய ஆங்கிலேய மக்கள் உலகில் பிரஞ்சுப் புரட்சி எதற்காக நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் இருந்ததற்கும் இதுவே காரணமாகும்.

ஆங்கிலேயப் பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாகப் பண்ணைகளோ, குருமார்களின் மடங்களோ, தனி இடம் பெறவில்லை. குருமார்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு தனிக் குழுவாகக் கூடித் தங்களுடைய குறைகளைக் கேட்கவேண்டுமென்ற எண்

ணத்தை ஆன்மிக உணர்வினால் கைவிடவும் இல்லை. ஆனால், மக்கள் அவையில் தங்களுக்கிருந்த இருக்கைகளை அவர்கள் வேண்டாமென்று தாங்களே கைவிட்டனர். அதைப்போன்று பிரபுக்களுடைய அவையிலிருந்த பல இருக்கைகளை அவர்கள் வேண்டாமென்றே கைவிட்டதாகத் தெரிகிறது.

மேல்சபையில் பாதிரிமார்களும், மடாலயத் தலைவர்களும் தொடர்ந்து அமர்ந்து வந்தனர். அவர்கள் நிலமானிப் படைமுறைசட்டசபையில் சமயச்சார்பற்ற நிலப்பிரபுக்கள் என்ற முறையில் இச்சபையில் இடம் பெற்றனர். இருந்தபோதிலும் சில பாதிரிமார்கள் அரசியல் அமைச்சர்களாகவும் பணித்துறை அலுவர்களாகவும் பணியாற்றி வந்தனர். ஆனால் தலைமைக் குருமார்கள் முக்கியமாகத் திருச்சபையோடு தொடர்பு உடையவர்களாக இருந்து வந்தனர். எனவே, அவர்கள் பாராளுமன்றத்தில் இடம் பெறவில்லை. பெரும்பான்மையான மடாலயத் தலைவர்களும், அவர்களுடைய உதவியாளர்களும் தம் வட்டார மடாலயங்களின் நல்வாழ்வில் ஆர்வம் உடையவர்களாக இருந்து வந்தனர். எனவே நெடுந்தொலைவு பயணம் செய்வதனால் உண்டாகின்ற தொல்லையையும், செலவையும் வெறுத்ததோடு, போப்பு ஆண்டவருக்கே தாங்கள் கடமைப் பட்டவர்களாக அவர்கள் கருதினர். அதனால் அவர்கள் அரசரைப் புறக்கணித்தனர்; அரசரின் கட்டளைக்குட்பட்டு செயலாற்றத் தயங்கினர். இவ்வாறு அவர்கள் தேசிய வாழ்வினைப் புறக்கணித்து, சமய வாழ்விற்கே சிறப்பிடம் கொடுத்தனர். அதனால் பாராளுமன்றத்தில் தங்களுக்கு இருந்துவந்த இடங்களைக் கைவிட்டனர். இதனால் உண்டான விளைவுகள் எட்டாம் ஹென்றியின் பாராளுமன்றச் சீர்திருத்தப் புத்தகத்தினால் (Statue Book) தெளிவாகப் புலனாகின்றது.[1]

இவ்வாறு குருமார்களுள் ஒவ்வொரு வகுப்பினரும், அதாவது கீழ்நிலைக் குருமார்களாக இருந்தவர்களின் பிரதிநிதிகள் மக்கள் சபையின் நிலையான பகுதியாக விளங்கத் தவறினர். நாளடைவில் அவர்கள் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ள வருவதை அடியோடு நிறுத்திவிட்டனர். குருமார்களுக்

[1] முதலாம் எட்வர்டு அரசர் காலத்தில் பாராளுமன்றத்தில் மடாலயத் தலைவர்களும், குருமார்களும் எழுபதுபேர் இடம்பெற்றிருந்தனர். ஆனால், மூன்றும் எட்வர்டு காலத்திலும், அவருக்குப்பின் ஆட்சி புரிந்த அரசர்களின் காலத்திலும் குருமார்களின் எண்ணிக்கை இருபத்தேழாகக் குறைந்து போயிற்று.

குரிய சொத்தில் அரசருக்குச் சேரவேண்டிய கடமையாகிய பதினைந்தில் ஒரு பங்கு (Fifteenth) பத்தில் ஒரு பங்கு ஆகிய வற்றை வாக்களிப்பதற்கு விடும் வேலையை காண்ட்டர்பரி, யார்க் திருக்கூட்டங்களில் செய்யப்படுவதற்குப் பதிலாக, பாராளு மன்றத்திலேயே வாக்கிற்கு விடப்பட்டதைக் காணுகின்றோம். அந்தக் கூட்டங்கள் சமயத் தொடர்பு உடையனவே யன்றி, அரசியல் சார்பு உடையன அல்ல. அவை 1789 ஆம் ஆண்டு கூடிய கூட்டத்தின்போது (Etats Generaux) பிரான்சுநாட்டுக் குருமார் களின் மண்டலத்தைப் போன்று இது பாராளுமன்றத்தின் மண்ட லக் கூட்டமாகக் கருதப்படுவது பொருத்தமற்றதாகும். சீசருக் குரிய பொருள்கள், கடவுளுக்கு உரிய பொருள்கள் என்னும் அடிப் படைக் குறிக்கோளினை நன்குணர்ந்திருந்த ஆங்கிலேயக் குருமார் கள் வெளிப்படையாகவே அரசியல் வாழ்விலிருந்து வெளியேறி னர். அதன் மூலம் இடைக்காலத்தின் பிற்பகுதியில், தேசிய வாழ் விலிருந்து அவர்கள் விடைபெற்றுச் சென்றனர். ஆனால் அது முதல் அவர்களும் தங்களுடைய சிறப்பு மிக்கதும் பொறாமைப் படத் தக்கதுமான செல்வத்தைப் போற்றிக் காத்து வந்ததோடு பழங்காலச் சிறப்புரிமை பலவற்றையும் தங்களுக்குரியதாகப் பேணிக் காத்தனர். அவ்வுரிமைகள் முற்றிலும் மாறிப்போன பழக்கவழக்கங்கள் புது உலகில் பழித்துரைக்கப்பட்டன. அப் புதிய உலகில், அவருடைய நிலை தனித்த ஒன்றாகப் பிறரோடு கலந்து பழக முடியாத, புறக்கணிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. சீர்திருத்த இயக்கம் தோன்றியபொழுது பெரிதும் பிறருடைய தாக்குதலுக்கு உரியதாக அவர்கள் நிலையிருந்து வந்ததை நாம் காணுகின்றோம்.

முதலாம் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்து மிகத் தாழ்மை யான நிலையிலிருந்து தோன்றி வளர்ந்த மக்கள்சபை, அடுத்த நூற்றைம்பது ஆண்டுகளில் அரசியலமைப்பிலேயே சிறப்புமிக்க இடத்தைப்பெற்று விளங்கலாயிற்று. எல்லா வகையான சட்டங் களை இயற்றுவதற்கும் தன்னுடைய உறுப்பினர்களின் இசை வைப் பெற்றாகவேண்டுமென்ற இன்றியமையாத நிலை உண்டா யிற்று. மேலும், எல்லாவகையான அளவுமீறிய வரி விதிப்பு களும், தன்னுடைய உறுப்பினர்களுடைய இசைவைப் பெற்றுத் தான் விதிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டாயிற்று. பாராளுமன்றத்தில் வீற்றிருக்கின்ற அரசரின் இசைவினைப்பற்றி அவர்களுடைய சொந்த விண்ணப்பங்கள் அடிக்கடி பல ஏற்றுக் கொள்ளப்பட்டன. நாட்டின் சிறப்புமிக்க மிகச்சிறந்த செயல் களாகிய அரசரைப் பதவியிலிருந்து விலக்குவது அல்லது அர சரைத் தேர்ந்தெடுத்தல் போன்ற முக்கிய செயல்கள் எல்லாம்

மக்கள் சபையினரே ஓர் ஆற்றல்மிக்க கட்சியாகக் கொண்டு செயலாற்ற வேண்டிய இன்றியமையாத நிலை உண்டாயிற்று. ரோஜாப்பூ அணிந்து போராடிய போர் தொடங்கிய காலத்தில் அவர்களுடைய அரசியலமைப்புச் சட்ட அதிகாரம் உண்மைக்கு மாருக மேலீடாகத் தோற்றம் அளித்தது. ஏனெனில், அன்றைய அரசியலில் ஆற்றல்மிக்க சக்திகளாக விளங்கியவை அரசு, நிலப் பிரபுக்கள், திருச்சபையினரேயாவர். பொதுமக்கள் அன்று என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆனல் நாட்டின் பொதுச்சட்டத்தில் அவர்கள் பெற்றிருந்த சிறப்புமிக்க நிலை நன்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. அச்சட்டத்தின் நடைமுறை கீழ்ச்சபை உண்மையான அதிகாரத்தைச் செயல்முறையில் மேற்கொள்வதற்குரிய முன் நிகழ்ச்சிகள் பலவற்றை நமக்குத் தந்து உதவுகின்றன. டியூடர் பேரரசர் காலத்தில் திருச்சபையின் உரிமைகளும், நிலப்பிரபுக்களின் அதிகாரங்களும் குறைக்கப்பட்டன. அதற்குப் பிறகு மக்கள்சபையும் பேராற்றல் வாய்ந்த ஒரு சக்தியாக நாட்டிலே தன்னிகரற்ற நிலையை அடைந்தது.

பிளாண்ட்டாஜெனட் அரசர்களின் ஆட்சியின் பிற் பகுதியில், மக்கள் சபையினர் உண்மையான அதிகாரத்தை மிகப் பேரளவிலும், பெயர் அளவிற்குரிய அதிகாரத்தை அதிகமாகவும் பெற்றிருந்தனர் என்பதற்குரிய காரணத்தை நாம் கூர்ந்து ஆராயவேண்டியதில்லை. அவர்கள் நாட்டின் சமநிலையை நன் முறைப்படுத்தும் மூன்ருவது கட்சியாகச் சிறப்பிடம் பெற்றனர். அரசின் போர்களிலே அவர்கள் சில முக்கிய கொள்கைகளைப் பின்பற்றி அரசுக்கு உதவியாக இருந்துவந்தனர். மூன்று எட்வர்ட்டுகளின் ஆட்சிக் காலத்துத் தொடர்ந்து அரசருக்கும், நிலப் பிரபுவுக்கும் இடையே போராட்டம் நடந்தது. மக்கள் சபையின் உறுப்பினர்கள் அப்போராட்டத்தைப் புலன் விசாரணை செய்து என்றைக்கும் நடு நிலையிலேயே இருந்து வந்தனர். இதைப் போன்றே லங்காஸ்டர் அரண்மனையைச் சார்ந்தோர் ஆட்சி புரிந்த காலத்தில் ஆட்சியுரிமையைக் கைப்பற்றுவதற்காக இடைவிடாதப் போராட்டம் நடந்து வந்தது இங்கு நினைவுகூரத் தக்கதாகும். இத்தகைய போராட்டச் சூழ்நிலையில், தங்களுக்குத் தேவையான நன்மைகளைப் பெறுவதற்குரிய உறுப்பினர்களாக மக்கள்சபை உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களுடைய ஆர்வம் எல்லாம் அரசரையோ, நிலப்பிரபுக்களையோ சார்ந்ததாக இல்லாமல் தங்களுடைய நலனிலேயே நாட்டம் இருந்து வந்ததைக் காணுகின்ருேம்.

முதலாம் எட்வர்டு தம்முடைய நிலப்பிரபுக்களுக்கு எதிராகத் தம்மை ஆதரிக்குமாறு மக்கள் சபையினர் ஆதரவை நாடி இருக்கலாம். ஆனால், அரசருக்கு எதிராக நகர மக்களும் தங்களுடைய துன்பங்களையும் கவலைகளையும் உடையவர்களாக இருந்தனர். காஸ்கனிக்கோ (Gascony) ஸ்காட்லாந்திற்கோ உடனடியாகக் கம்பளி நூலினை அனுப்பி வைக்க வேண்டுமென்று அரசர் கருதினால், 'சுங்க வரியினர்' வேண்டுமென்று தெரிவித்ததற்கு மாறாக, ஏற்றுமதிக்குரிய கம்பள நூலின் பெரும் பகுதியினைக் கைப்பற்றி அந்நாடுகளுக்கு அனுப்பி வைப்பது எட்வர்ட்டின் பழக்கமாக இருந்து வந்தது. மேலும் 'அவ் வற்புறுத்திக் கைப்பற்றுதல்' ('Maltoltes') அல்லது 'தவறான வழியில் கைப்பற்றுதல்' சட்டத்திற்கு மாறானதாக 1297ஆம் ஆண்டு நகர மக்களால் அரசருக்கு அறிவிக்கப்பட்டது. சிறப்புமிக்க அவ்வேளையில் நகரமக்கள் அனைவரும் ஒருங்குசேர்ந்து தங்களுக்கே உரிய இழப்புகள் பலவற்றின் காரணமாக வெறுப்புற்று இருந்த நிலப்பிரபுக்களோடும் குருமார்களோடும் சேர்ந்துகொண்டு அரசரின் ஆராய்ந்து பாராது பொருள் கேட்கும் முறையை எதிர்த்தபோது (1297) இவ்வாறு நகர மக்கள் அரசரின் தவறான செயலை இடித்துரைத்தனர்.

ஆயினும் முதலாம் எட்வர்ட்டு இறந்தபோது (1307), இங்கிலாந்துக்கும் ஸ்காட்லாந்துக்கும் வரம்பற்ற அதிகாரங்களையுடைய தனிப் பெருந் தலைவராகத் தாம் விளங்குவதற்குரிய வழிவகைகளில் அவர் முன்னேறிக் கொண்டிருந்ததைக் காணுகின்றோம். அவருடைய ஆட்சியின் இறுதிப் பகுதியில் தன் நாட்டிலே உண்டான நிலப்பிரபுக்களின் எதிர்ப்பினை உடைத்தெறிவதற்குப் பெரிதும் முயன்றார். அத்துடன் வாலசினால் (Wallace) தூண்டிவிடப்பட்டதும், புரூஸினால் (Bruce) மீண்டும் கொழுந்துவிட்டு எரியுமாறு கிண்டிவிடப்பட்ட தணலினை அவர் காலால் மிதித்து அழிக்க முயன்றார். ஆற்றல் மிக்க ஒருவர் இவருக்கு அடுத்து அரசராக வந்திருந்தால், இங்கிலாந்தில் சட்டத்துக்குட்பட்ட உரிமையையும், ஸ்காட்லாந்தில் தேசிய இன உரிமையையும் அடியோடு அழித்தொழித்திருக்க முடியும். பாராளுமன்றம் எதிர்ப்புச் சக்தியாகவும், அரசரின் செயல்களை ஆராய்ந்து குறைகூறும் நிலையினையும் அடையாது அரசின் ஆட்சி இயந்திரச் சக்கரத்தில் பயனுள்ள ஒரு பல்லாக அது இடம் பெற்றிருக்கலாம். பாராளுமன்றத்தை எட்வர்டு ஆட்சி இயந்திரம் எளிதாக இயக்குவதற்குரிய ஓர் உள்ளுறுப்பாகவே கருதிவந்தார் என்பதில் ஐயமில்லை. அவருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த கள்ளம் கபடமற்றவரும், சோம்பேறித்தன்மை உடையவரும், திறமை

யற்றவருமான அவருடைய மகனின் ஆட்சிக் காலத்து (1307-1327) அந் நெருக்கடியான நிலை ஒருவாறு காப்பாற்றப்பட்டது. அவருடைய மகன் இரண்டாம் எட்வர்டு சிறப்புற்று விளங்கினர். இரண்டாம் ஹென்றி, முதலாம் எட்வர்டு அல்லது டியூடர்களைப் போன்ற பேராற்றலும், பெரும் திறனும் உடைய பேரரசர்கள் இடைவிடாது தொடர்ந்து ஆட்சிக்கு வருவது ஒரு நாட்டுக்கு நல்லதன்று. ஜானும் இரண்டாவது எட்வர்ட்டும், ஸ்டூவர்ட்டு மன்னர்களும் இங்கிலாந்தின் தலைவிதியை நிர்ணயிக்கத் தங்களுக்குத் தரப்பட்ட இடத்தினைப் பெற்றனர் போலும்.

இளமை மிக்க இரண்டாம் எட்வர்ட்டும், அவருடைய நண்பரான பியர்ஸ் கேவஸ்டன் (Piers Gaveston) ஆகிய இருவரின் சோம்பேறித்தனமான கண்டிப்பற்ற கலையுணர்வு மிக்க மனப்போக்கும், அதனால் உண்டான திறமையற்ற ஆட்சியும் நிலப்பிரபுக்களுக்கு மீண்டும் எழுச்சி பெறுவதற்கு ஒரு வாய்ப்பினை நல்கியது. கேவஸ்டன் என்பவர் எவ்வகையிலும் முதன்மை வாய்ந்த செல்வராகவோ, புதிய 'பணக்காரராகவோ' விளங்கவில்லை. அல்லது அயல்நாட்டிலிருந்து வந்து குடியேறிய மிகப் புதியவர் ஒருவர் திடீரென்று இங்கிலாந்தின் ஆட்சிக்குரிய தலைமை இடத்தினைக் கைப்பற்றிக் கொண்டவராகவோ அவர் காணப்படவில்லை. ஆனால், அவருக்கு எதையும் முன்கூட்டிச் சிந்தித்து, அறிந்து ஆராயக்கூடிய அறிவுத் திறனோ, செயலாற்றும் செயல் திறனோ இருந்ததாகத் தெரியவில்லை. அவர் முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பிரபுக்களுக்கு சாட்டுப் பெயர்கள் (Nicknames) இட்டு அழைத்து வந்தமை இதற்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். இதற்குக் கைம்மாருக அந்நிலப்பிரபுக்களுள் சிலர் 1312 ஆவது ஆண்டில், நம்பிக்கைக் கேடான நிலையில் அவர் உயிரையே வாங்கிவிட்டனர். இரண்டாம் எட்வர்ட்டும் கேவஸ்டனும், முதலாம் சார்லஸையும் பக்கிங்காமையும் போன்று இங்கிலாந்தினை ஆட்சிபுரிவதற்குரிய தகுதி அற்றவர்களாக இருந்திருக்கலாம். ஆனால், அரசரை எதிர்த்த நிலப்பிரபுக்களின் இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய தலைவர்களுள், சிறப்பாக லங்காஸ்டரைச் சேர்ந்த கோமான் தாமஸ் அறிவு அற்றவராகவும், தன்னலம் உடையவராகவும், முரட்டு மனிதராகவும், உயர் குடியில் பிறந்தோம் என்னும் செருக்குக் காரணமாக மமதை உடையவராகவும் விளங்கினர். அரசரின் அன்பிற்கு உரியவராக அடுத்த நிலையில் இருந்தவர் டெஸ்பென்சர் (Despenser) என்பவராவார். அவர் கேவஸ்டனைப் போன்று 'புதிய பணக்காரர்' அல்லர். ஆனால், அவர் மெல்ல மெல்ல கொடுங்கோல் ஆட்சிபுரியும்

கொடுங்கோலராக மாறினர். இவ்வாறிருந்த போதிலும் நம்பிக்கையற்ற எதிரிகளுக்கும் அரசருக்கும் இடையே நடந்து வந்த போராட்டம் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குரிய நன்மைகளை அளிக்கும் வகையில் நடைபெற்று வந்ததைக் காண்கின்றோம். ஆட்சி முறைக்கு உரிய இயந்திரம் நன்முறையில் வளர்ச்சியடைந்ததைக் காண்கின்றோம். அவ்வாட்சி இயந்திரம் குறைபாடுடைய நிலப்பிரபுக்களுக்குக் கட்டுப்பட்டு இயங்காது, உரிமையுடன் இயங்கத் தொடங்கியது. ஆனால், மையக் குவிமுக ஆட்சிக்குரிய சீர்திருத்தங்கள் சிலவற்றால் அவ்வாட்சி இயந்திரத்தின் இயக்கம் முறைப்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. அக் காலத்தில் இரண்டாம் எட்வர்ட்டு பலமுறைகள் சிறப்புமிக்க சமயங்களில் பாராளுமன்றத்தைக் கூட்டினார். இவ்வாறு பாராளுமன்றம் கூட்டப்படுவதன் விளைவாகப் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் பேரளவில் பெருகின. மேலும், அரசருக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையே நடைபெற்றுவந்த போராட்டத்தின் விளைவாகப் பாராளுமன்றம் அடிக்கடி கூட்டப்பட்டது. அத்துடன் மாறிமாறி இவ்விரு திறத்தாரும் வாக்குரிமை மூலமும், சட்டங்களின் மூலமும் தாங்கள் பெற்ற வெற்றியை ஒழுங்குப்படுத்துவதற்கும், முறைப் படுத்துவதற்கும் பாராளுமன்றத்தினைக் கூட்டுமாறு செய்தனர். இத்தகைய பாராளுமன்றத்தின் புதிய பெருமையில் மக்கள்சபையினரும் தங்கள் பங்கினைப் பெற்றனர்.

நிலப்பிரபுக்களின் குழப்பங்கள் முடிந்ததன் விளைவாக மகிழ்ச்சியற்ற இந்த அரசரின் ஆட்சிக் காலத்தில் அரசின் அதிகாரமோ, நிலப்பிரபுக்களின் அதிகாரமோ வளர்ச்சி அடைந்ததாகத்தெரியவில்லை. இந்த அரசர் காலத்தில் நடைபெற்ற நிலப்பிரபுக்களின் கிளர்ச்சிகள் எல்லாம், நிலப்பிரபுக்களுக்கும் அரசருக்கும் இடையில் நடந்த போர்கள் என்று சொல்லத்தக்க சிறப்புஉடையன அல்ல. இடைக்காலம் முழுவதும் மீண்டும் மீண்டும் நிலப்பிரபுக்கள் முயன்றும் அவர்களால் அரசரின் ஆலோசனைக் குழுவினையும், அரசரின் மன்றத்தையும் முறையாகத் திட்டமிட்டுக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்த முடியாமல் போயிற்று. நிலமானியப் படைமுறைக் கொள்கைகளின்படி, அரசர் நிலமானியப் பிரபுக்களாகிய தங்களுடைய சிறப்புமிக்க அறிவுரையை ஏற்று ஆட்சிபுரிய வேண்டுமென்று அவர்கள் தெரிவித்தபோதிலும், அரசர் அவர்களைப் புறக்கணித்தே வந்தார். இப்பிரபுக்கள், பயிற்சி பெற்ற எழுத்தாளர்கள், பணித்துறை அலுவலாளர்கள் ஆகியோருடைய உதவியைப் பெற்று அரசர் ஆட்சி புரிவதை வன்மையாகக் கண்டித்தனர். இந்த அலுவலர்களுடைய ஒரே தகுதி அரசனுடைய செயல்களைப்

புரிந்து கொள்வதே; வேறு அன்று என்பது அவர்களுடைய குற்றச்சாட்டு ஆகும். ஆயினும் நிலப்பிரபுக்கள் நாட்டினை ஆட்சி புரிவதற்குரிய தங்கள் உரிமையை நிலைநாட்டுவதில் தோல்வியுற்றனர். ஏனெனில், அரசாங்கம் என்பது நிலையாகப் பல்வகைச் செயல்களைப் பொருத்தமுறச் செயலாற்றி வருவதாகும். அத்தகைய செயல்முறைகளுக்கு ஏற்ற செயல்களை நிலப்பிரபுக்கள் செய்வதே மிக அரிதாக இருந்தது. அவருடைய காவல் கற்கோட்டைகள், அவருடைய வேட்டைப்பண்ணைகள், ஏவல் வேலையாட்கள் வாழ்க்கையின் பழக்கவழக்கங்கள், மேனர் பண்ணைகள் ஆகிய அனைத்தும் இங்கிலாந்தின் பாதிக்கு மேற்பட்ட பல கோட்டங்களில் பரவியிருந்தன. இக்காரணத்தினால் அவர்கள் அவற்றைக் கண்காணிப்பதற்குத் தங்களுடைய கருத்தையும், நேரத்தையும் செலவழிக்க வேண்டியவர்களாக இருந்தனர். எனவே, அவர்கள் அரசருடைய பொறுப்புமிக்க அமைச்சராகவும், ஆலோசனை சபையின் அமர்வுகளின்போது தவறுதுவந்து கலந்துகொண்டும் பணியாற்ற முடியவில்லை. இதற்குக் காரணம் அவர்கள் இவ்வாறு பல கடமைகளையும், வேறு பலவகையான இன்ப நாட்டங்களை உடையவர்களாகவும் இருந்தமையே யாகும்.

புரட்சி உண்டாகின்ற நேரங்களில் அல்லாமல் மற்றச் சமயங்களில் நிலப்பிரபுக்கள் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தோல்வி யுற்றதற்குரிய இரண்டாவது காரணம், அரசருடைய நீதிமன்றமும், குடும்ப அமைப்பும் மிகப் பரந்ததாகவும், பெரியதாகவும் இருந்தமையாகும். அவ்வாறு அவை பரந்தும், விரிந்தும் இருந்த காரணத்தால் சிக்கல் மிக்குடையதாக இருந்தது. எனவே அவற்றை எளிதில் கட்டுப்படுத்தி ஆட்சி புரிவது என்பது அரிய செயலாகவே இருந்தது. எடுத்துக் காட்டாக அரசருடைய அலுவலகங்களில் ஒன்றான 'சான்சரி' என்பதைக் குறிப்பிடலாம். அவ் வலுவலகம் பெரிய முத்திரை அதிகாரி (Great Seal) ஒருவரை உடையதாக இருந்தது. அவ் அலுவலகம் நிலப்பிரபுக்கள் அரசருக்கு எதிராகச் செய்த கிளர்ச்சியின் விளைவாக அரசர் அமைத்துக் கொண்டதாகும். அந்த அலுவலகத்தின் மூலம், அரசர் தலை மறைவாக இருந்து கொண்டு அவருடைய உடைகள் வைக்கும் அறையில் மன்னர் முத்திரையைப் பொறிப்பதின்மூலம் நாட்டினை ஆட்சிபுரிந்துவர முடிந்தது. அரசரின் நீதிமன்றம் நெகிழ்ச்சியும், இணக்கமும் உடைய ஓர் அமைப்பாக விளங்கியது. இருந்தபோதிலும் அது மிகச் சிறந்த பணித்துறை அலுவலகமாகச் சிறப்புற்று விளங்கியது. அலுவலகத்தில் முற்றிலும் பயிற்சிபெற்றுத் திறமையுடைய மக்களிடம் ஆட்சிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர்கள்

அமைதியாக நாட்டினை ஆட்சிபுரிவதில் கருத்துடையவர்களாக இருந்தனர். அவர்களுக்கும் மேல் கேவஸ்டன், லங்காஸ்டரைச் சேர்ந்த தாமஸ், டெஸ்பென்சர், மார்டிட்மர் போன்ற அறிவிலிகளோ, போக்கிரிகளோ தலைமையதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அதைப் போலவே தம்முடைய தலைமை அதிகாரிகள் உரத்தகுரலில் ஒருவருக்கொருவர் பூசலிட்டுக் கொண்டும், வருங்கால நன்மைக்காக ஒருவரையொருவர் கொலைபுரிந்துகொண்டிருந்த போதிலும் இந்த ஆட்சித் துறை அலுவலர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாது நாட்டு ஆட்சியிலே கண்ணும் கருத்துமாக இருந்தனர். மேலதிகாரிகளாக இருந்தவர்களுடைய போரும், கொலையும் எலிசபெத்து அரசி காலத்து வாழ்த்த நாடக ஆசிரியர்களின் நன்மைக்கும், வருங்கால மக்கள் இனத்தின் நன்மைக்குமே பயன்பட்டது எனலாம். இதற்கிடையில் அமைதி மிக்க நாட்டின் பல்வேறு மூலைகளில் கல்லினால் கட்டப்பட்ட மேனர் மாளிகைகள் தோன்றிய வண்ணம் இருந்தன. அதே சமயத்தில் இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதியாகும் கம்பளி நூல் அளவில் பெருகிக்கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும். இத்துடன் நாட்டு மக்கள் தொகையும் பெருகிக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் நாடு முழுவதும் அரசருடைய அமைதி, விருப்பு வெறுப்பு இன்றி நடைமுறையில் நிலைநாட்டப்பட்டு வந்த காரணத்தினால், எல்லா வகுப்பினையும் சேர்ந்த மக்கள் வறுமையில் வாடுவது குறையலாயிற்று. அவர்கள் ஓரளவிற்கு வயிறார உணவு உண்ணக்கூடியவர்களாகவும் வாழ முடிந்தது.

மூன்றும் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்திய அரசில், ஆட்சி இயந்திரத்தில் மற்றொரு பகுதி புதிதாகச் சேர்க்கப்பட்டதைக் காண்கின்றோம். அது பெரும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகப் பிற்கால வரலாற்றில் சிறப்பிடம் பெற்றதைக் காண்கிறோம். ஒவ்வொரு கோட்டத்திலும் அமைதியை நிலைநாட்டுவோரும் (Keepers of Peace) அல்லது அமைதி காண் நீதிபதிகள் (Justices of Peace) எனப்படும் அலுவலாளர்கள் மத்திய அரசினுக்கு உதவியாக நாட்டினை ஆளுவதற்கு அமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு முன்பு அமர்த்தப்பட்ட 'காரனர்களைப்' போன்று (Coroners) இவர்கள் பணித்துறை ஆட்சியாளர்களாக இல்லாமல், உரிமைமிக்க நாட்டுப்புற பெருமக்களாக இருந்தனர். எழுச்சி பெற்றுவரும் மாவீரர்களும், பெருங்குடி மக்களும் சேர்ந்து உருவாக்குகின்ற நடுத்தர இனத்தின் சிறப்புமிக்க பிரதிநிதிகளாக இவர்கள் விளங்கினர். இந்த அமைதி காண் நீதிபதிகள் இதற்கு முன்பு ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு

மிக்க மனிதர்களாக விளங்கிய மாவட்டத் தலைவர்களும் (Sheriff) அல்லது சுற்றிப் பயணம் செய்து வந்த நீதிபதிகளும் செய்து வந்த கடமைகளை மென்மேலும் தங்களுக்குரியதாகப் பெற்றுச் செயலாற்றி வந்தனர். இந்த அமைதிகாண் நீதிபதிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆழவேரூன்றிச் சிறப்புற்றுவிளங்கத் தொடங்கினர். இவர்கள் தேசியப் பண்புடைய நாட்டுச் செடியாக வளர்ந்து ஓங்கினர். தங்களுடைய அக்கம்பக்கத்தாரிடையே பெரும் புகழ் உடையவர்களாகவும், அரசரின் ஆலோசனை மன்றத்தில் புகழ் மிக்கவர்களாகவும் இவர்கள் சிறப்புற்றனர். அரசருக்கும் அவருடைய ஊரைச் சேர்ந்த மக்களுக்குமிடையே அரசரின் திட்டங்களை இவர்கள் எடுத்து விளக்குவதே இவர்களுடைய கடமையாக இருந்து வந்தது. நானூறு ஆண்டுகள் வரையில் அவருடைய அதிகாரம் பல திறப்பட்ட கடமைகளினாலும், தனிப்பட்ட அதிகாரத்தினாலும் மேன்மேலும் பெருகி வளர்ந்து கொண்டேவந்தது. இறுதியாக, பதினெட்டாம் நூற்றாண்டில் மத்திய அரசரைக் காட்டிலும் இந்த அமைதிகாண் நீதிபதிகள் ஒருவகையில் பேரதிகாரம் உடையவர்களாகச் சிறப்புற்று விளங்கினர். கடந்த நீண்ட கால எல்லைக்கு இடையே ஆங்கிலேய மக்களின் தேவைகளையும் பண்புகளையும் நன்கு அறிந்து, அதற்கு ஏற்பச் செயலாற்றி வந்த காரணத்தினால் இத்தகைய பெரும் சிறப்பை இவர்கள் பெற முடிந்தது. இன்றைய ஆங்கிலேயர்கள் சட்டத்திடத்துக் கொண்டிருக்கிற பெரும் மதிப்பினை, மெல்ல மெல்ல வளர்த்துப் பெருகச் செய்த பெருமை அமைதிகாண் நீதிபதிகளை அது அமர்த்திய 'தொழில் பயில் நீதிபதிகளின்' முறைக்கே உரியதாகும் என்பது பேராசிரியர் மெயிட்லண்டு என்பவருடைய கருத்தாகும். பொதுமக்களின் பொது வழக்குகளை ஆராய்ந்து, பொது மக்களுக்குச் சட்டத்தைத் தெளிவாக விளக்கி, அவர்களை அச்சட்டத்திற்குக் கீழ்ப்படியுமாறு செய்துவந்த நடுவர்கள் பலருக்குச் சட்டத்தைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது. ஆனால், தங்கள் ஊரிலுள்ள மக்களைப்பற்றி அவர்கள் மிகுதியாக அறிந்திருந்தனர். அத்துடன் தமக்கு அருகிலுள்ளவர்களுடைய உடமைகளைப்பற்றி இவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

பாராளுமன்றத்தில் நகர மக்கள்—இடைக்காலத்திய கூட்டுரிமைக் குழுக்கள்—இடைக்காலத்திய பல்கலைக் கழகங்கள்—ஆக்ஸ் போர்ட்டும் கேம்பிரிட்ஜும்—கல்லூரிகளின் தோற்றம்—பல்கலைக் கழகப் படிப்பு—சோதரத்துறவிகளின் வருகை—சோதரத் துறவி

களும், மடாலயத் துறவிகளும், சமயச் சார்பு அற்றோரும், சோதரத் துறவிகளும் அவர்களுடைய திறனுய்வாளர்களும்—யூதர்கள்—முதலாம் எட்வட்ர்டு யூதர்களை நாடு கடத்துதல்—ஆங்கிலேய ஜஸ்டினியன்—குயா எம்போரசின் விளைவுகள்—ஆண்டுத் தொகுப்பு நூல்கள்—எத்தகுதி பற்றிய விசாரணை—பொதுமக்களை வரவழைப்பதற்குக் காரணம்—இரு சபைகள் பிரிக்கப்பட்டமை—பிரிவுகளின் சிறப்பு இயல்புகள்—குருமார்களின் மண்டலம்—சம நிலையை மக்கள் சபையினர் கட்டுப்படுத்தி வைத்தல்—இரண்டாம் எட்வர்ட்டும் நிலப்பிரபுக்களும்—அமைதி காண் நீதிபதிகள்.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

1. ராஸ்டல் (Rashdall)
The Universities of Europe.

2. ஹஸ்கின்ஸ் (Haskins)
The Rise of the Universities (Holt, NewYork.)

3. ரெஜினல்டு பூல் (Reginald Poole)
Illustrations of the History of Mediaeval Thought.

4. ஜெஸ்ஸாப்பு (Jessopp)
The Coming of the Friars.

5. சபேசியர் (Sabatier)
Life of st. Francis.

6. ஸ்மித் (A. L. Smith)
Church and State in the Middle Ages.

7. டவுட்டு (Tout)
(1) Edward I.
(2) Place of Edward II in English History.

8. மெயிட்லண்டு (Maitland)
(a) Year Books of Edward II, Introd. (Selden Soc.)
(b) Memoranda de Parl; 1305 (Rolls Series), Introd.

9. பாஸ்குவித்து (Pasquet)
Essay on the Origins of House of Commons) (Translated 1925, Cam. Press).

10. எம். வி. கிளார்க்கு (M. V. Clarke)
Mediaeval Representation and consent.

## சான்சரி நீதிமன்றத்தைப்பற்றிய குறிப்பு

இதற்கு முன்பு இல்லையென்றாலும், முதலாம் எட்வர்ட்டின் நண்பரான ராபர்ட் பர்னலின் காலம் முதற்கொண்டாகிலும் சான்சலர் பிரபு, அரசின் மிக முதன்மையான அதிகாரியாகச் சிறப்புற்றிருக்கவேண்டும். இக்காலத்திய நிதித்துறைக் கருவூல அலுவலகத்தோடு, அரசாங்கத்தின் மற்றத் துறைகள் அனைத்தும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதைப் போன்று, அக்காலத்தில் சான்சலர் பிரபுவின் அலுவலகமாகிய, மன்னரின் மாண்பு மிக்க 'முத்திரை அலுவலகம்' பிற துறைகளோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது. சீர்திருத்த இயக்கம் தோன்றிய காலம்வரை சான்சலராகப் பணிபுரிந்தவர்கள் சமயத் தொடர்புடையவர்களாகவும் வழக்கறிஞர்களாகவும் இருந்து வந்தனர். பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் அவருடைய சான்சரி நீதிமன்றம் சிறப்புமிக்க முறையீட்டு உயர்நீதிமன்றமாயிற்று. இம்முறை மன்றம் பொதுச்சட்ட நீதிமன்றங்களின் நடைமுறையில் எதிர்பாராவகையில் காணப்பட்ட குற்றங்குறைகளுக்கும் அவதூறுகளுக்கும் நேர்மையான முறையில் தீர்வு காணத் தொடங்கியது. அரசருடைய ஆலோசனை மன்றத்தின் சார்பாக, சான்சலரின் நீதிமன்றம் தீங்கிழைக்கப்பட்ட குடிமக்களின் விண்ணப்பங்களை ஏற்று, நீதிமுறைப்படி அவர்களுடைய குறைகளைப் போக்கியது. அரசர் தனிப்பட்ட அதிகாரத்தைப் பெறுதக் கட்டளைகள் வழங்குவதன் மூலம் வழக்குகளைத் தம்மிடத்துக் கொண்டுவரச் செய்வதையும் வழக்கு முறைகளை மாற்றுவதையும் இப்பொழுது பாராளுமன்றம் தடுத்துவிட்டது. மேலும் பொதுச்சட்டம், அரசரின் துணிவாற்றலுக்குக் கட்டுப்படாதத் தனித்ததொரு தனிச் சட்டமாகவும், நெகிழ்ச்சியற்ற சட்டமுறையாகவும் மாறிவிட்டது. இந்நிலையில், நேர்மையும் திருத்தும் நோக்கும் உடைய சான்சலரின் நீதிமன்றம் அரசருக்குப் பெரும்பயனுடையதாக இருந்தது. இம் மன்றத்தினை அரசர் பொது வழக்கறிஞர்கள், பாராளுமன்றத்தினர் ஆகியோருடைய திட்டங்களைத் தலைகீழாக மாற்றுவதற்குரிய ஒரு கருவியாகப் பயன்படுத்தி வந்தார். ஆனால், இம்முறையினை மக்கள் வன்மையாகக் கண்டிக்கவில்லை. இந்நீதி மன்றத்தின் மூலம் தனி மனிதர்கள் பெரும் நன்மைகளைப் பெற்று வந்தமையால், இம் முறையினை அவர்கள் எதிர்க்கவில்லை. டியூடர்கள் அரியணை ஏறுவதற்கு முன்பே அரசியலமைப்பின் சிறப்புமிக்க ஒரு பகுதியாக—சான்சரி நீதிமன்றம் சிறப்புற்று விளங்கியது. மேலும் பிற்காலத்தில் பொதுச் சட்டத்தின் குறையைப் போக்கும் வகையில் நிறுவப்பட்ட விண்மீன் மன்றத்தின் முறை

மன்றம் போன்றதாக அரசரின் சிறந்த கருவியாக அது விளங்கலாயிற்று.

பதினைந்தாம் நூற்றாண்டில், பிற நீதிமன்றங்களில் பின்பற்றப்பட்டு வந்த தொழில் நுட்ப நடைமுறைகளுக்கு மாறாகச் சான்சரி நீதிமன்றம், பொது அறிவினைப் பயன்படுத்துவதற்குரிய விண்ணப்ப முறையைக் கடைப்பிடித்து வந்தது. நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, எல்டன் (Eldon), சார்லஸ் டிக்கன்சு போன்றோர் நாட்களில் சான்சரி நீதிமன்றம் தன்னுடைய தொழில் நுட்ப நடைமுறைச் செயல்களுக்கே அடிமையாகி விட்டது. குடிமக்களின் குறைகளைப் போக்குவதற்காகப் பாராளு மன்றத்தில் சட்டமியற்றும் தற்கால முறையினைப் பின்பற்ற வேண்டியதாயிற்று.

## இயல் 5

# கெல்ட்டிக்குகளும் சாக்சானியர்களும்

1. தீவுப் பேரரசினை நிறுவுதல்.
2. இடைக்காலத் தோல்விகளுக்குக் காரணங்கள்.
3. அயர்லாந்தும், வேல்ஸூம், ஸ்காட்லாந்தும்.

இடைக்காலத்தின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் பெரிய அரசுகள் மிகச் சிறப்பாக அமையப்பட்டிருந்ததைக் காட்டிலும் இங்கிலாந்து சிறப்புமிக்கதாகத் தோன்றியது. இங்கிலாந்தின் பக்கத்தில் உள்ள கெல்ட்டிக்குப் பழங்குடி மக்களின் இன உறவுடைய வேல்ஸூம், அயர்லாந்தும், ஸ்காட்லாந்திற்கு எதிரான நாடாக இருந்துவந்தன. ஸ்காட்லாந்து வறுமைமிகுந்தும் மிகக்குறைவான மக்கள் தொகையினையுடையதுமாக விளங்கியது. இங்கிலாந்தின் மக்களினம் கெல்ட்டிக்கு இன மக்கள் என்றும் சாக்சானிய இன மக்கள் என்றும் வேறுபடுத்தியுணரத்தக்க வகையில் இரு பெரும் பிரிவினை உடையதாகக் காணப்பட்டது. ஆனால் இதற்கு முன்பே மொழி அமைப்பிலும், நிலையங்களின் அமைப்பிலும் ஆங்கிலேய–நார்மானியப் பண்பினை உடையதாக ஸ்காட்லாந்து மாறிக்கொண்டிருந்தது. இத்தகைய சூழ்நிலையில், இங்கிலாந்தினைச் சுற்றியுள்ள பிற தீவுகளைக் கைப்பற்றி, ஒரு

பேரரசை நிறுவுவதற்கு உரிய முயற்சியில் இங்கிலாந்து ஈடுபடுவது தவிர்க்கமுடியாத செயலாக இருந்துவந்தது.[1]

பிரிட்டனில் பண்டைக்காலத்தில் தங்கியிருந்த ரோமானியர்கள் இத்தகைய நில இயல் பிரச்சினையால் அல்லலுற்றனர். அவர்களுடைய திறமை மிக்க அறிவாற்றல் அயர்லாந்தைப் பேரரசில் சேர்ப்பதால் நன்மை உண்டாகாது என்பதை உணர்த்தியது போலும். எனவே அவர்கள் அம்முயற்சியைக் கைவிட்டனர். அவர்கள் பலமுறை ஸ்காட்லாந்தைக் கைப்பற்ற வீணாக முயன்றனர். ஆனால் அவர்கள் தங்களுடைய இராணுவ நெடுஞ் சாலைகளையும், கோட்டைகளையும் அமைக்கும் திறமைமிக்க முறையினால், வேல்ஸை விரைவில் அடக்கியாளத் தொடங்கினர். ஆனால், இங்கிலாந்தின் பிற பகுதிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலத்தீன் மொழியின் சிறப்புமிக்க நாகரிகத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வேல்ஸ் நாட்டுமக்களை வற்புறுத்தவில்லை. ரோமானியப்பிரிட்டன் எத்துணை அளவிற்கு வெற்றி பெற்றதோ அதைப்போன்று அத்துணை அளவிற்குத் தான் இடைக்கால இங்கிலாந்து வெற்றி பெற்றதென்று கூறலாம். ரோமானியப்படைப் பகுதிகளைக் காட்டிலும், ஆங்கிலேயரின் நிலமானியப் படைமுறை வீரப்பெருந்தகைமை மிக மிகப் பையவே, பின்னல்போன்ற தம்முடைய காவல் கற்கோட்டைகளைக் கட்டியும், பெரும் இராணுவத்தின் உதவியினைக் கொண்டும் வேல்ஸைக் கைப்பற்றியது. ஆனால், வேல்ஸ் மக்கள், சாக்சானிய நாகரிகத்தை ஏற்று அதற்கு ஏற்றவாறு தங்களை மாற்றி அமைத்துக்கொள்ளுவதற்கு டியூடர் ஆட்சிக் காலம் வரையிலும், அதற்குப் பிற்பட்ட ஹனோவரிய அரச மரபினர் ஆட்சி வரையிலும் சரியாக இருந்துவந்தது. ஸ்காட்லாந்தை அடிமைப்படுத்த இங்கிலாந்து முயன்ற முயற்சி முழுத் தோல்வியாக முடிவுபெற்றது. செயின்ட் ஜார்ஜ் கால்வாய்க்கு அப்பால் இங்கிலாந்து கைப்பற்றிய பகுதி என்றுமே கிடையாது. ஆனால் அயர்லாந்தின் நடுப்பகுதியில் தமது வீரர்கள் பிடித்த இடத்தை இங்கிலாந்து பாதுகாத்துக் கொண்டது. இவ்வாறு வேட்டைநாய் ஒன்று கலைமானைப் பிடித்து, அதனுடைய தலையைத் தன்னுடைய கோரப்பற்களுக்கு இடையே வைத்துக் கொண்டிருப்பதைப் போன்று இங்கிலாந்து அயர்லாந்தில் கைப்பற்றிய பகுதி காணப்பட்டது.

[1] இவ்வியலில் 'கெல்ட்டிக்கு' என்னும் சொல்லினை, இந்நூலின் முதல் இயலில் பயன்படுத்தியுள்ளதைப் போன்று பண்டை 'ஐபீரிய' இனத்தினரும், 'கெல்ட்டிக்கு' இனத்தினரும் கலந்தமையால் உண்டான புதிய கலப்பு இனத்தைக் குறிப்பிடவே பயன்படுத்தியுள்ளேன்.

ஸ்காட்லாந்திலும், அயர்லாந்திலும் இடைக்கால ஆங்கிலேயர்கள் தோல்வியுற்றதற்குரிய முக்கிய காரணம் அது ஐரோப்பியப் பிரச்சினைகளில் ஈடுபட்டிருந்தமையேயாகும். இவ்வாறு வேல்ஸை முற்றிலும் அடக்கி, அந்நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டாததற்குரிய காரணத்தையும் ஐரோப்பிய நாட்டுச் சிக்கலிலிருந்துதான் நாம் கண்டறிய வேண்டும். அரசர் ஜானின் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலேயர் நார்மண்டியை இழந்தனர். அதை இழக்கின்ற வரையில் இங்கிலாந்தை ஆண்ட நார்மானிய அஞ்சுவின அரசர்களுடைய ஆற்றல் அனைத்தும், பிரான்சில் உள்ள மாநிலங்களைத் தற்காத்துக் கொள்ளுவதில் அல்லது அவற்றை மீண்டும் கைப்பற்றுவதிலுமே செலவழிக்கப் பட்டதைக் காண்கிறோம். நார்மண்டி இறுதியாக இழக்கப் பட்ட பிறகுதான் பிளாண்டஜெனட் அரச மரபினர் உண்மையிலே தங்களுடைய சிறந்த சிந்தனையையும், பேராற்றலையும், பெருந் திறனையும் பிரிட்டனின் பிரச்சினைகளுக்கே பயன் படுத்தக்கூடிய வாய்ப்பினைப் பெற முடிந்தது. அது நார்மண்டியின் இழப்பிற்குப் பிறகு நூறு ஆண்டுப் போர் தோன்றுவதற்கு முற்பட்ட இடைக்காலம் முழுவதும் (1214-1337) பிரிட்டனின் பிரச்சினைகளே அவர்களுடைய கருத்தைக் கவர்ந்தது. அக்காலம் முழுவதிலும் ஒரே ஒரு சிறப்புமிக்க அரசர் இங்கிலாந்தினை ஆட்சி புரிந்தார். அவர் முதலாம் எட்வர்டு என்பவராவர். அவருடைய ஆட்சிக் காலத்து, நாம் எல்லாம் எதிர்பார்ப்பதைப் போன்று, வேல்ஸிலும், அயர்லாந்திலும், ஸ்காட்லாந்திலும் இடைக்கால இங்கிலாந்தின் அதிகாரம் அதனுடைய உச்ச நிலையை அடைந்ததைக் காணுகின்றோம். அவருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த இரண்டாம் எட்வர்டு திறமையற்றவராக இருந்தார். மேலும் அவருக்குப் பிறகு டியூடர் அரச மரபினர் ஆட்சிக்கு வருகின்ற வரை, அரசாண்ட மன்னர்கள் எல்லாம் பிரான்சைக் கைப்பற்றுவதிலும் அல்லது தங்கள் உள்நாட்டில் உண்டான குழப்பங்களின் விளைவுகளிலும் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்திவந்த காரணத்தினால் அவர்கள் முதலாம் எட்வர்டு தொடங்கி வைத்த நற்பணியைத் திறமையுடன் செய்து முடிக்க முடியாமல் துன்புற்றனர். இடைக்காலத்து உண்டான இன்னல்களும் இடையூறுகளும் இங்கிலாந்து முழுவதும் நிலை நாட்டப்பெற்றிருந்த ஆங்கிலேயருடைய அதிகாரத்தினையும், அயர்லாந்தின் பெரும் பகுதியில் நிலைநாட்டப்பெற்ற ஆட்சியையும் அழித்தொழித்தன; அதைப் போன்றே வேல்ஸில் நடைபெற்று வந்த ஆங்கிலேயரின் ஆட்சி பலவீனப்படுமாறு செய்தன.

முன்பு நாம் இறுதியாக அயர்லாந்தைப் பார்த்தபோது இடைக்காலத்தின் கருமேகம் சூழ்ந்த நள்ளிரவிலே அது மூழ்கிக் கிடந்ததைக் கண்டோம். அந்நிலையில், உலகின் நெடுந் தொலைவிலுள்ள மூலையில் கல்வியின் ஒளி, ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியதையும் கண்டோம். அவ்வறிவு ஒளி உட்சென்று நுழைய முடியாத அறியாமை நிறைந்து இருக்கின்ற ஸ்காட்லாந்திலும், இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும், பிரான்சிலும் திரும்பி மின்னொளி விட்டு விளங்கியதைப் பார்த்தோம். அயர்லாந்தின் மடாலயங்களைச் சார்ந்த திருத் தொண்டர்களும், கலைஞர்களும், அறிஞர்களும் தம்முடைய தனித் திறமையினாலும் இடையறாத தொண்டிலும் அயர்லாந்தினை விழிப்புறச் செய்தனர். மேலும் அவர்களுடைய அமைப்பு, இன்னும் அடிமைத் தளையிலிருந்து விடுதலைபெற்ற உரிமை வீரர்களாக இருந்த காரணத்தினால், அவர்கள் தொண்டாற்றுவது மிக எளிதாகவும் இருந்தது. தொல் பழங்கால அயர்லாந்தின் திருச்சபையினருக்கு, நிலையங்களின் கொள்கை வெறுப்பினை உண்டாக்குவதாக இருந்தது. அதைப்போன்றே அயர்லாந்தில் தோன்றி வளர்ந்த பழங்குடி மக்கள் பண்பு முறையும், திருச்சபையினருக்கு வெறுப்பைத் தோற்றுவிப்பதாக இருந்தது. சாக்சானியக் குருமார்கள் தங்கள் இனத்தவரை ஒன்றுபடுத்தி ஒரு திருச்சபைக்கு உட்பட்டவர்களாகச் செய்ததைப் போல், அயர்லாந்தின் குருமார்கள் என்றுமே உதவியது இல்லை என்பது இதனால் புலனாகிறது. பண்டைத் திருத்தொண்டர்களின் ஆர்வமும், ஊக்கமும் மெல்ல மறைந்தொழிந்த பிறகு, அவர்களுக்குப் பின்னால் அவர்கள் நிலையாக விட்டுச் சென்றது அவர்களுடைய நினைவைத் தவிர வேறொன்றும் இல்லாது போயிற்று. எனவே, அயர்லாந்து இதற்கு முன்பெல்லாம் அவர்கள் இருந்து வந்த காலத்தைவிட இந்நிலையில் குறைந்த இருளிலே சிக்கி, பல்வேறு துறைகளில் கருத்தைச் சிதறவிட்டு, அல்லலுற்றுக் கொண்டிருந்தது.

தாராவிலிருந்த (Tara) பெரும் அரசர்கள் 'மற்றத் தலைவர்களின் மீது பெயரளவுக்கு மேல் அரசுரிமை செலுத்திவந்தது கூட பதினோராம் நூற்றாண்டில் வெறும் பட்டப்பெயராகப் போயிற்று. மன்ஸ்டரைச் சார்ந்த காஷலின் அரசரான பிரியன் பொரு (Brian Boru) வைக்கிங்குப் படையெடுப்பாளர்களுக்கு எதிராகத் தம் இனத்தலைவராக இருந்து, தம் மக்களைத் தம் தலைமையின் கீழ் ஒன்று சேர்த்து, பகைவர்களை எதிர்க்கச் செய்தனர். அவருடைய அரிய முயற்சியும், பெரிய அரசபதவியை நிலையாகப் பலப்படுத்தவோ, கெல்ட்டிக்கு இன மக்களை நிலையாக ஒன்று சேர்க்கவோ முடியாமல் போயிற்று. அவர் இறந்த நாள்

அன்று குளோன்டார்ப் (Clontarf) என்னும் இடத்தில் அவருடைய மக்கள் வெற்றி பெற்றனர். அந் நாள் (1014) அயர்லாந்தை நார்மானிய மக்களிடமிருந்து காப்பாற்றியது. அத்துடன் டேனியர்கள் அமைத்துக்கொண்ட நகரங்களான டூப்ளின் (Dublin) வாட்டர்போர்ட் (Waterford), லிமிரிக் (Limerick) என்னும் நகரங்களுக்குள்ளே அவர்களை அடைந்து கிடக்குமாறு செய்தது. அந் நாட்டு மக்களுக்குப் பட்டண வாழ்க்கையும், வாணிகமும் கவர்ச்சியுடையதாக அமையவில்லை. கால்நடைகளை வளர்த்தலும், கால்நடைகளைக் கவர்ந்து செல்லுதலும், பழங்குடி மக்கள் இனங்களிடையே போரிடுதலும் அவர்களுடைய தொழில்களாகும். மேலும், குடும்பப் பகைமையும், பாணரின் கலைத் தொழிலும் ஒரு சிறிதளவு உழவுத் தொழிலும் அவர்களுடைய சிந்தனையையும் எண்ணத்தையும் இன்னும் பேரளவில் கவர்ந்து இருந்ததைக் காணுகின்றோம். அவ் இடைக்காலப் பழங்குடி மக்களினத்தைப் போன்றே, உலகின் பல்வேறு பகுதிகளில் வேறுபட்ட பல பழங்குடி மக்கள் பல ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு மேலாக இவ்வாறிருந்ததாகத் தெரிகிறது. அமைதியற்ற புதிய ஐரோப்பாவின் மக்கள் சிலுவைப் போர்களாலும், இல்டி பிராண்டைன் (Hildebrandine) இயக்கங்களாலும் அல்லலுற்றதைக் காட்டிலும், இந்த இழிந்த மக்கள் நன்முறையில் வாழ்ந்து வந்தனரா? இல்லையா? என்பது ஆராய்ச்சிக்குரிய கருத்தாகும். அக்காலத்திய ஐரோப்பா காவல் கற்கோட்டைகளையும், மாபெரும் திருக்கோயில்களையும், நிலமானியப்படைமுறைகளையும், பட்டயங்களையும், வாணிக வழிகளையும், தற்காலத்திய தொல்லைகள் எல்லாவற்றையும் கொண்டு அல்லலுற்ற அக்காலத்து வாழ்ந்த அயர்லாந்தின் பழங்குடி மக்கள், சிறப்பாக வாழ்ந்தனரா? இல்லையா? என்பதை நாம் உறுதியாகச் சொல்லவியலாது. அது அவரவர்களுடைய விருப்பத்தையும் கருத்தையும் அடிப்படையாகக் கொண்டு சொல்லப்படுகின்ற கூற்றாகக் காணப்படுகிறது. ஆனால் நன்மைக்கோ, தீமைக்கோ ஐரோப்பாவின் மிகப்பழைய இனமொன்று தொல் பழங்காலநாகரிக நிலையிலேயேதொடர்ந்து இருக்கமுடியாத சூழ்நிலை காலப்போக்கில் உண்டாயிற்று. ஸ்டராங்போவின் காலத்து, தற்காப்புப்படைகளையும் காவல் கற்கோட்டைகளையும் நிலமானியப்படைமுறையையும் விலக்குவது எத்துணை இடர்ப்பாடு உடையதாக இருந்ததோ, அதைப் போன்றே நம் காலத்திலும் இயந்திரத் துப்பாக்கிகளையும், தொழில் புரட்சியையும் வேண்டாமென்று விலக்குவது பெரும் துன்பம் தருவதாக இருந்து வருகிறது.

எனவே அயர்லாந்து மக்கள் நாகரிகமற்றவர்களாகக் கருதப்பட்டனர். அத்துடன் போப்பு ஆண்டவரின் கிறிஸ்துவ உலகின் எல்லைக் கப்பால் உள்ள பகுதியிலேயே அவர்கள் பெரிதும் வாழ்ந்து வந்தனர். பன்னிரண்டாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் செயின்ட் மாலச்சியும் (Saint Malachy) மற்ற அயர்லாந்து மக்களும் திருச்சபையைச் சீர்திருத்தம்செய்ய ஓர் இயக்கத்தினைத் தொடங்கினர் என்பது உண்மையாகும். மிகுந்த எண்ணிக்கையற்றதாக இருந்து வந்த அயர்லாந்துப் பாதிரிமார்கள், எண்ணிக்கையில் மிகவும் குறைக்கப்பட்டனர். இதன் மூலம் தலைமைக் குருமார்களின் ஆட்சி அதிகாரத்தை மிகுதிப்படுத்த அவர்கள் முயன்றனர். பாமர மக்களின் சமய ஆர்வத்தை மீண்டும் தூண்டுவதற்குரிய நேர்மையான முயற்சிகள் அவர்களால் செய்யப்பட்டன. பத்தில் ஒரு பங்கு வரி வாங்குவதை மக்களிடத்தில் கட்டாயப்படுத்துவதற்காகவும், ரோமாமானியத் திருச்சபையைப்போன்று தங்கள் திருச்சபையை ஏறக்குறைய சமநிலையில் நிறுத்துவதற்கும் அவர்கள் முயன்றனர். ஆனல், இங்கிலாந்திலிருந்து படைக்கலம் தாங்கிப் படையெடுத்து வந்த மக்கள், இச்செல்வாக்கிற்கு முழு அதிகாரத்தையும் வழங்கினர். அதன் விளைவாக இறுதியில் அயர்லாந்து ரோமாபுரியோடு மீட்க முடியாத பெரும் தொடர்பினை உடையதாக மாறியது. அயர்லாந்தில் தோன்றிய திருச்சபைச் சீர்திருத்த இயக்கத்தினர், உண்மையான ஆற்றல் மிக்க தேசிய உணர்வு உடையவர்களாக இல்லாத காரணத்தினல், ஸ்ட்ராங்போவையும், ஆங்கிலேயரையும் தங்கள் நாட்டுக்கு வரவழைத்து, தீச்செயலைச் செய்யத் தூண்டினர். வரலாற்றிலே தன்னிகரற்ற ஒரே ஆங்கிலேயப் போப்பு ஆண்டவராக விளங்குபவர் நான்காம் ஏட்ரியன் (Adrian IV) என்பவர் ஆவார். அவர் இரண்டாம் ஹென்றிக்குத் தம்முடைய கட்டளை ஒன்றினை அனுப்பிவைத்தார். இரண்டாம் ஹென்றி விருப்பப்பட்டால் அயர்லாந்தைக் கைப்பற்றுமாறும், அப்படிக் கைப்பற்றுவதின் மூலம் அதை ரோமானிய திருச்சபையின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடாக்குவது மிகச் சிறந்த முறையாகுமென்றும் தெரிவித்திருந்தார்.

இரண்டாம் ஹென்றியும், தாமும் அயர்லாந்தின் பிரச்சினையை ஐரோப்பாவுக்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அவருடைய ஆட்சியில் (1169-1171) தனிப்பட்ட துணிகரச் செயல் வீரர்கள் பலர் வேல்ஸைச் சார்ந்த ரிச்சர்டு டீகிளார் (Richard de Clare) என்பவரின் தலைமையின் கீழும் பெம்புரோக்கின் கோமானின் தலைமையின்கீழும் படையெடுத்துச் சென்று நாட்டைக் கைப்பற்றத்தொடங்கினர். பெம்பு

ரோக்கின் கோமானுக்கு ஸ்ட்ராங்போ (Strongbow) என்னும் சாட்டுப் பெயர் வழங்கி வந்தது. இரண்டாம் எட்வர்ட்டின் கூட்டாளிகளாக நார்மானியப் படையெடுப்பின் இறுதி முயற்சியில் ஈடுபட்டு இருந்தவர்கள் அனைவரும் இத்தகைய நார்மானியர்களும் அல்லர் அல்லது இத்தகைய ஆங்கிலேய நார்மானியர்களும் அல்லர். அவர்களுள் பெரும்பாலோர் புகழ்மிக்க பிட்ஸ்ஜெரால்ஸ்களைப் (Fitzgeralds) போன்று வேல்ஸ் தாய்மார்களுக்குப் பிறந்த மக்களாவர். இவர்கள் சிறப்பு மிக்க எல்லைப்பகுதியின் இனப்பெருக்கில் தோன்றியவர்களாவர். இவர்கள் 'எல்லைப் பிரபுக்களாகச்' (Marcher Lords) சிறப்புற்று விளங்கினர். அவருடைய படைவீரர்களுள் பெரும்பாலோர் வேல்ஸ்களாகவோ, அல்லது பிளமிங்குகளாகவோ இருந்து வந்தனர். அயர்லாந்தை முதன் முதலாகக் கைப்பற்றிய இந்த ஆங்கிலேயர்களின் உடலிலும், அனுபவத்திலும் ஊறிக்கிடந்த கெல்ட்டிக்கு இனக்கூறு அவர்களுடைய வழித்தோன்றல்களை அயர்லாந்தின் பழங்குடி மக்களோடு எளிதில் கலந்து வருமாறு செய்தது. மேலும், அவர்களுக்கே உரிய நிலமானியப் படைமுறை நிலையங்களை டுப்ளின் எல்லைக்கு அப்பாலிருந்த பழங்குடி மக்கள் பண்பு நிறைந்த கெல்ட்டிக்கு உலகுக்கு ஏற்ப மாற்றியும் திருத்தியும் அமைத்துக்கொள்ள அது பேருதவியாக இருந்தது. பிறநாடுகளில் தோற்கடிக்கப்பட்ட மக்களிடத்துச் செய்ததைப் போன்று இத்தகைய நார்மானியர்கள் அல்லது ஆங்கிலேய-நார்மானியர்கள் தங்கள் இனத்திற்கு உரிய பண்புகளையும் நிலையங்களையும் இந்நாட்டில் நிலைபெற்று விளங்குமாறு செய்திருக்கலாம்.

ஆனால், இங்கிலாந்திலும் சிசிலியிலும் அல்லது ஸ்காட்லாந்திலும் தலையிட்ட நார்மானிர்கள் ஸ்ட்ராங்போவின் ஆதரவாளர்களைக் காட்டிலும் எப்போதுமே போர் இயல் திறமையில் சிறப்புமிக்கவர்களாக இருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் அவர்களுடைய படைமுறையும் போரிடும் சூழ்ச்சித் திறனும், மேற்கண்ட நாட்டு மக்களின் திறமையைவிடச் சிறந்திருக்கவில்லை. ஸ்ட்ராங்போவின் சங்கிலி உடை உடுத்திய மாவீரர்களுக்குத் துணையாக வில் வீரர்கள் போரிலே கலந்துகொண்டனர். அவ் வில்வீரர்களின் திறமை அக்காலத்து இங்கிலாந்துக்குரிய புகழாக இல்லாமல் வேல்ஸுக்கே உரியதனிப் பெரும் சிறப்பாக இருந்துவந்ததைக் காண்கின்றோம். அயர்லாந்தின் பழங்குடி மக்கள் படைக்கலம் தாங்காத காலாட் படையினராகடேனியர்களின் போர்க்கோடரி, கவண்கற்கள், வேல்கள் முதலியவற்றைக் கொண்டும் போராடினர். எனவே அவர்கள் பெரும்

திறமை வாய்ந்த வில்வீரர்களை எதிர்த்தும், ஐரோப்பாவிலேயே சிறப்புற்று விளங்கிய குதிரைப்படை வீரர்களுள் சிலரை எதிர்த்தும் போராடியதனால் வெற்றிபெற முடியாமல் துன்புற்றனர். எனவே தோல்வியுற்று அந்நாட்டு மக்களுக்கு உரிய அடைக்கலமாகச் சதுப்பு நிலக்காடுகளையும், மீட்கப்படாத தீவுகளையும் சாலைகளற்ற மலைகளையும் அவர்கள் நாடிச்சென்று தலைமறைந்து வாழ்ந்தனர். அவர்கள் கொரில்லாப் போர் முறைக்குரிய எல்லாக் கலைகளையும் நன்கு அறிந்திருந்தனர். காட்டு வழியிலும் சதுப்பு நிலங்களிலும் உள்ள குறுகிய பாதைகளை வெட்டப்பட்ட மரங்களையும் மண்மேடுகளையும் கொண்டு அடைத்து, பகைவர் அவ்வழியாக முன்னேறவொட்டாது தடுத்து நிறுத்துவதில் அவர்கள் வல்லவர்களாக விளங்கினர். ஆனால், படையெடுப்பாளர்களுக்கு எதிராகப் போரிட, நாட்டு மக்களிடையே உண்மையான தேசிய உணர்வு இருந்ததாகத் தெரியவில்லை. படையெடுப்பாளர்கள் அயர்லாந்து நாட்டுப் பழங்குடி மக்களில் சிலரையும், திருச்சபையினரில் சிலரையும் தங்கள் கூட்டாளிகளாக மாற்றிக் கொண்டனர். ஸ்ட்ராங்போவினைத் தம் நாட்டுக்கு வருமாறு அழைத்தவர் டெர்மோட் (Dermot) என்பவராவர். நாட்டு மக்கள், அவரை நாட்டைக் காட்டிக் கொடுத்த துரோகியென்று வெறுத்துரைக்கவில்லை. ஆனால் பிற்காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் நாட்டு வரலாற்றினைப் பின்னோக்கிக் கண்டபோது, அவர்கள் எல்லாரும் டெர்மோட்டை நாட்டின் துரோகியென்று பழித்துரைத்தனர்.

அயர்லாந்தில் காவல் கற்கோட்டைகளைக் கட்டினர். ஆங்கிலேய நார்மானியரின் ஆட்சியை வேரூன்றச் செய்வதற்குரிய முறையாக அது கையாளப்பட்டது. அம்முறை இங்கிலாந்தை நார்மானியர் கைப்பற்ற முடியாத காலத்திலும், கடைப்பிடிக்கப் பட்டதை நாம் அறிவோம். அயர்லாந்திலும் கெல்ட்டிக்குகளுக்கு இதனால் பெரிதும் தீமையே உண்டாயிற்று. நிலையான கோட்டைகளுக்குப் பின்னால் படையெடுப்பாளர்கள் எதிர்த்து நேருக்கு நேராகப் போராட வேண்டிய நெருக்கடி டேனியர்களின் துறைமுகப் பட்டினங்களிலேயே உண்டாயிற்று. ஆனால் குளோன்டார்ப் (Clontarf) துறைமுகப் போருக்குப் பிறகு அயர்லாந்திலிருந்த டேனியர்கள் வீரம் மிக்க வைக்கிங்கு வீரர்களாக வாழ்ந்த நிலை மாறி, அமைதியை நாடும் வாணிகர்களாகக் காலம் கழித்து வந்தனர். மேலும் அவர்கள் மிகச் சிலராகவே இருந்து வந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அவர்களுடைய பட்டணங்கள் மிக எளிதில் கைப்பற்றப்பட்டன. ஒரே முயற்சியில் அவை ஸ்காண்டிநேவியப் பண்பிலிருந்து ஆங்கிலேயப் பண்பாட்

டிற்கு மாற்றப்பட்டன. பிரிஸ்டல் நகர மக்கள் டூப்பிளினில் வாழ்வதற்குரிய உரிமை வழங்கப்பட்டிருந்தது. டூப்பிளினில் காவல் கற்கோட்டையை முதன்முதலாக வைக்கிங்குகள் கட்டினர். பன்னிரண்டாம் நூற்றுண்டு முதல் பதினைந்தாம் நூற்றுண்டுவரை அக் காவல்கற்கோட்டை அயர்லாந்தில் சாக்சானிய ஆட்சி நடைபெறுவதற்குரிய நடுநாயகமாக விளங்கியது.

டேனியர்கள் படையெடுப்பாளர்களால் படுகொலை செய்யப்பட்டனர். உயிர் தப்பிய சிலர் படையெடுப்பாளர்களை முன்னேறுமாறு வழி விட்டு, ஸ்காண்டிநேவியாவிற்கு ஓடிச் சென்றனர். அது முதல் இந்தத் தீவுக்குள் நுழைவதற்குரிய வாயிலாக விளங்கிய துறைமுகப் பட்டினங்களைத் தங்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகவே வைத்திருந்தனர். இதற்குப் பிறகு கெல்ட்டிக்கு இன மக்களின் நகர வாழ்க்கை அழிந்து போயிற்று. மேற்கே நெடுந்தொலைவிலுள்ள கால்வே போன்ற நகரங்கள்கூட ஆங்கிலேய-நார்மானியர்களால் நிறுவப்பட்டனவாகும். இடைக்காலத்தின் இறுதிப்பகுதியில்தான் டூப்பிளின் எல்லைக் கப்பாலிருந்த நகரங்களில் வாழ்ந்த ஆங்கிலேய மக்கள், மெல்லமெல்ல தங்களைச் சூழ்ந்திருக்கின்ற மக்களின் மொழிகளை ஏற்றுக்கொண்டுபேசத் தொடங்கினர். அம் மக்களோடு ஆங்கிலேய மக்கள் பண்டமாற்று வாணிகம் செய்து வந்தனர்; கலப்பு மண உறவும் கொண்டு வாழ்ந்தனர். இல்லை என்றால் ஐரிய மக்கள் பண்பைவிட ஆங்கிலேய மக்கள் பண்பே மிகுதியாக இருந்திருக்கும்.

ஸ்ட்ராங்போ அயர்லாந்தைக் கைப்பற்றியகாலத்தும், அதற்குப் பிறகு நெடுங்காலமும் அயர்லாந்து மக்களிடையே தேசிய உணர்வு இருந்ததாகத் தெரியவில்லை. எனவே, அயலாரின் ஆட்சியில் காணப்படுகின்ற சிறப்பு காரணமாக மக்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கவேண்டும். அப்பழங்குடி மக்கள் இனங்களை ஒன்றுக்கொன்று நட்பு முறையில் புரிந்து கொள்வதற்கு உரிய வழிவகைகள் அனைத்தும் ஆற்றலோடு செய்யப்பட்டது. அத்துடன் அங்கு நேர்மையான அரசாங்கம் நிறுவப்பட்டதையும் காணுகின்றோம். ஆனால், இடைக்காலம் முழுவதிலும் அயர்லாந்தில் ஆற்றல்மிக்க அரசாங்கத்தையும், நேர்மையான அரசாங்கத்தையும் நாம் காணமுடியவில்லை. புரட்சிமிக்க பிள்ளைகளின் தகப்பனுரான இரண்டாம் ஹென்றி, மேலைக் கிறிஸ்துவ உலகின் செம்பாதிக்குத் தொல்லைகொடுத்துத் துன்புறுத்திய ஆட்சியாளரான இரண்டாம் ஹென்றி, ஸ்ட்ராங்போ தமக்காக வாங்கிய கடன்களைக் கட்டுப்படுத்த விரும்பினுர். ஏனெனில் அந்தத் தீவுக்

குள் தம்முடைய ஆட்சியைப் பெயரளவில் மட்டும் அல்லாமல், செயலில் நிலைநாட்டுவதற்கு வேண்டிய பணமும் பொருளும் மக்கள் பலமும் இல்லாதவராக அவர் அல்லலுற்றார். எனினும், அவரால் திறமைமிக்க அரசரின் அரசினை நாட்டில் நிறுவ இயலவில்லையென்றாலும், ஸ்ட்ராங்போவையோ, நிலமானியப் படைமுறைத் தலைவர்களையோ அத்தீவில் அரசப்பிரதிநிதியாக ஆதிக்கம் பெறுமாறு விட்டுவிட அவர் சிறிதும் விரும்பவில்லை. எனவே அந்தத்துணிகரச் செயல் மிக்க வீரர்கள் அத் தீவின் பழங்குடி மக்களைத் தொடர்ந்து தங்களுக்கு இரையாக்கிக் கொண்டு வந்தார்கள். தங்களுக்கென்று அத்தீவுக்குள் வேண்டிய நிலங்களை அவர்கள் வரையறுத்துக் கொண்டனர். இவ்வாறு ஆங்கிலேய அரசரின் நேரான ஆதரவோ, நேர்முகமான கட்டுப்பாடோ இல்லாமல் தங்களுடைய செல்வாக்கும், செல்வமும் பெருகுவதற்காக அவர்கள் போராடிக் கொண்டிருந்தனர். இவ்வாறு ஒரு நூற்றாண்டுக்கு மேல் அயர்லாந்தில் ஆங்கிலேயரின் படையெடுப்பு முன்னேறிக் கொண்டிருந்தது. பையப்பைய அதனுடைய எல்லையானது மேற்குப் பகுதியிலும் விரிந்து கொண்டு சென்றது. அந்நாட்டுப் பழங்குடி மக்களிடமிருந்து, ஆற்றல்மிக்க எதிர்ப்பில்லாது அவர்கள் எளிதில் வெற்றிபெற்று முன்னேறிக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்களுடைய நோக்கம் உறுதியற்றதாகவும் பிளவுபட்டதாகவும் இருந்துவந்தது. அதனால், அக் கைப்பற்றுதலினால் நேர்மையையோ, வலிய கொடுங்கோல் ஆட்சியையோ அவர்கள் அங்கு நிலைநாட்ட முடியவில்லை.

இத்தகைய சூழ்நிலைகளில் அத் தீவில் மூன்று வகையான பிரிவு முறை வளர்ந்து வரலாயிற்று. தொடர்ந்து தனது எல்லையமைப்பில் சிற்சில மாறுதல்களோடு இடைக்காலத்தின் எஞ்சிய பகுதி முழுவதும் அது நிலமானியப் படைமுறையிலேயே இருந்து வந்தது. டூப்ளினைச் சுற்றிலும் ஆங்கிலேயரின் சட்ட வரம்புக்குட்பட்ட பகுதி இருந்துவந்தது. அங்கு ஆங்கிலேய மாவட்டங்களில் ஆங்கிலச் சட்டம் ஆட்சிபுரிவதைப் போன்றே, இங்கும் ஆட்சி புரிந்ததைக் காணுகின்றோம். மேற்குத் திசையில் நெடுந்தொலைவில் இத்தகைய கெல்ட்டிக்குப் பழங்குடி மக்களும் அவர்களுடைய தலைவர்களும் வாழ்ந்து வந்தனர். படையெடுப்பாளர்களால் அவர்கள் அவ்வப்போது அச்சுறுத்தப்பட்டபோதிலும், இன்னும் படையெடுப்பாளர்களால் தாக்கப்படாதவர்களாகவே அவர்கள் இருந்து வந்தனர். இவ்விரு அயர்லாந்தின் பிரிவுகளுக்கும் இடையே கலவையாட்சி நடைபெற்ற பகுதி இருந்துவந்தது. அப் பகுதி மேற்கொண்டு இரு அயர்லாந்தின் பகுதிகளோடு ஓர் அளவிற்குக் கலந்தும் இருந்தது. அப் பகுதி


யினை நிலப்பிரபுக்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்கள் ஸ்ட்ராங்போ போன்ற மாண்புமிக்க வீரதீரச் செயல்புரிந்த படையெடுப்பாளர்களின் வழியிலே வந்தவர்களாவர். ஆனால், அவர்கள் தங்கள் காவல் கற்கோட்டைகளிலிருந்து அந்நாட்டுப் பழங்குடி மக்களை ஆண்டுவந்தனர். ஆனால், அவருடைய நார் மானிய வேல்ஸின் நிலமானியப்படைமுறை மெல்ல மெல்ல கெல்ட் டிக்குப் பழங்குடி மக்கள் பண்பாகப் பெரிதும் மாற்றமுற்றது. அக் கெல்ட்டிக்குப் பழங்குடி மக்கள் பண்பினை மாற்றி, நார்மானிய வேல்ஸ் நிலமானியப் படைமுறை அமைப்பினை நிறுவ வேண்டும் என்பதே அவர்கள் நோக்கமாக இருந்தது. அந் நோக்கத்திற்கு மாறாக வரலாற்றின்போக்கு அமைந்ததைக் காணுகின்றோம். நெடுங்காலத்திற்குப் பிறகு சமயத்துறையில் காணப்படும் எல்லா வகையான வேறுபாடுகளுக்கும் இடையே, கிராம்வெல்லின் பெருந்திரளான படைவீரர்களும் விரைவில் தங்களைச் சூழ்ந்து இருக்கின்ற கெல்ட்டிக்குப் பண்பாட்டினால் உறிஞ்சப்படுவார்களானால், ஆங்கிலேய ஐரிஷ் நிலப்பிரபுக்கள் காலத்திலும் இத்தகைய பரிணாம வளர்ச்சி உண்டானதில் வியப்பொன்றுமில்லை. அத் தீவின் பெரும் பகுதியில், அயர்லாந்தின் சதுப்புநிலத்தை அடிப்படையாகக் கொண்டே ஆங்கிலேயருடைய ஆட்சி நிறுவப் பட்டிருந்தது.

முதலாம் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்தில் தீவுக்கு உரிய செயல்களில் பெரும் கருத்துச் செலுத்தப்பட்டு வந்த காரணத்தால் அயர்லாந்து குறுகிய கால அளவிற்குச் செழிப்பும், வளமும் பெற்று விளங்கலாயிற்று. சிறப்பாக ஆங்கிலேயருடைய அக்கறை மிகுதியாகக் காட்டப்பட்ட லீன்ஸ்டரும் (Leinster) மீத்தும் (Meath), சீரும் சிறப்பும் பெற்று விளங்கத் தொடங்கின. காவல் கற்கோட்டைகளின் காவல் நிழலில் கிராமங்கள் பல தோன்றின. வேளாண்மை நாடெங்கிலும் பரவியது. டுப்ளினின், வாட்டர் போர்ட்டு, கார்க்கு போன்ற வாணிகப் பட்டணங்கள் தங்களுடைய வாணிகப் பொருள்களைக் கடல் கடந்த நாடுகளுக்கெல்லாம் கொண்டு சென்று விற்றதைக் காணுகின்றோம்.

அதற்குப் பிறகு அயர்லாந்தின் வரலாற்றில் இயல்பாகக் காணப்படும் விரைவுமிக்க தவறான ஒரு திருப்பம் உண்டாயிற்று. முதலாம் எட்வர்டு ஸ்காட்லாந்தைக் கைப்பற்ற முயன்ற முயற்சி அவருடைய ஆற்றல் அற்ற மகன் காலத்து பறிவாங்கப் பட்டதைக் காண்கிறோம். பான்னக்பர்ன் வெற்றிக்குப் பிறகு உடனடியாக ஸ்காட்டியர்கள் புரூஸ் சகோதரர்களின் தலைமையின் கீழ், உல்ஸ்டரின் வழியாக அயர்லாந்தின் (1315-1318) முன்

னேற்றத்தை இடையிலேயே தடைப்படுத்தினர். எல்லாக் காலத்திலும் அவர்கள் உல்ஸ்டரோடு ஆற்றல்மிக்க தொடர்புடையவர்களாக இருந்துவந்தனர். புதிய அயர்லாந்தின் நேர்த்தியான செழிப்பு வாளினாலும், தீயினாலும் அழித்தொழிக்கப் பட்டது. அதற்குப் பிறகு இரண்டு நூற்றாண்டுகள் வரையில் ஆங்கிலேயருடைய செல்வாக்கு அயர்லாந்தில் மேலோங்க முடியாமல் போயிற்று. ஆங்கிலேயரின் ஆட்சி அழிவுக்கு புரூஸ்களின் படையெடுப்பு வாய்ப்பினைத் தந்தது. அப்படையெடுப்பு ஆங்கிலேய ஆட்சியின் அழிவிற்கு ஒரு காரணமாகாது. ஆங்கிலேயரின் ஆட்சி அழிந்ததற்குக் காரணம் ஆங்கிலேய, ஐரிய நிலப்பிரபுக்களின் அடிப்படைப் பண்புகளும், ஆதிக்கமுமே காரணமாகும். அப் பிரபுக்களை கெல்ட்டிக்குத் தலைவர்களின் கொடுஞ் செயல்களிலிருந்து பிரித்தறிவது மிகமிகக் கடினமாகவேயிருக்கிறது. ஆனால், உண்மையான ஆங்கிலேயக் குடியேற்றங்களை அழிப்பதின் மூலம், தங்களுடைய ஆட்சி எல்லையினை அவர்கள் விரிவுபடுத்திக்கொண்டு வந்தனர்.

அவருடைய ஆட்சி எல்லை பரப்பாலும் உணர்வாலும் குறுகிக் கொண்டே வந்தது. அங்குக் குடியேறியிருந்த ஆங்கிலேய அதிகாரிகளும் மக்களும் அயல்நாட்டிலேயுள்ள கோட்டையில் வைக்கப்பட்ட பாதுகாப்புப் படையினரே தாங்கள் என்பதை நாளடைவில் மிகுதியாக உணரத் தொடங்கினர். தங்களைக் கூண்டில் அடைத்துப் பெரும் துன்பத்திற்குள்ளாக்கி விட்டதாகவும் அவர்கள் உணர்ந்தனர். அதனால் அவர்களுடைய பழக்க வழக்கங்களிலும் வாழ்க்கையின் குறிக்கோள்களிலும் குறுகிய நோக்கம் உடையவர்களாக மாறினர். தங்களுடைய அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட வெளிப்பகுதியிலுள்ள ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொருவரையும் ஆங்கிலேயர் நன்மையை நாடாதவர்களாகவும், ஆனால் அயர்லாந்து மக்களின் நல்வாழ்வை விரும்பிச் செயலாற்றுகின்றவர்களாகவுமே அவர்கள் கருதி வந்தனர். இத்தகைய வேறுபாடு பல நூற்றாண்டுகள் வரை குறும்புத்தனத்தை விளைவிக்கும் திட்டத்திற்குக் குரல் கொடுத்தது எனலாம். அப்போது இருந்ததைவிட இக்குடியேற்ற மக்கள் இரண்டு இனங்களுக்குமிடையே மிகக் கண்டிப்பான வேற்றுமை வேலியை இட்டுக் கொண்டனர். அந் நாட்டின் சட்டத்தையும் மொழியையும் பழக்கவழக்கங்களையும் பின்பற்றாது புறக்கணித்து வந்தனர். டியூடர்களுக்கு முற்பட்ட காலத்து அவர்களுடைய அதிகாரம் எந்த அளவுக்குப் பரவியிருந்ததோ, அந்த அளவுக்கு அவர்கள் அந்நாட்டுப் பழங்குடி மக்களின் பண்பாட்




படம் 13.

**இடைக்காலத்தின் இறுதியில் அயர்லாந்து**

டையும் மொழியையும் தங்கள் பகுதியில் பரவவொட்டாமல் தடையாணை விதித்து இருந்தனர்.

கடல்கடந்த நாடுகளில் பெற்றிருந்த ஆதிக்கத்தினின்று இங்கிலாந்தின் கருத்தினை வேறு பக்கம் நூறு ஆண்டுப் போர் திருப்பியது எனலாம். அக் கடல்கடந்த நாட்டு உடைமைகளிடத்து அவர்கள் உண்மையாகச் செய்யவேண்டிய கடமைகள் பல இருந்தன. ஆயினும், பிரான்சோடு தொடங்கிய போரின் காரணத்தினால், அவர்கள் தங்களுடைய கருத்தினை வேற்றிடத்து செலுத்த முடியாது போயிற்று. அந்த நீண்ட நெடுங்காலப் போராட்டத்தின் இடைவேளைகளுக்கு இடையே இரண்டாவது ரிச்சர்ட்டு பெரும்படையுடன் அயர்லாந்தின் மீது படையெடுத்து வந்தார். பிறகு அவர் வீழ்ச்சியுற்றார். அதற்குப் பிறகு ஆரஞ்சு அரசமரபைச் சார்ந்த வில்லியம்தான் அயர்லாந்தின்மீது படையெடுத்துச் சென்ற அடுத்த ஆங்கிலேய அரசராவார். போட்டிமிக்க லங்காஸ்டர், யார்க்கிய அரச மரபுகளைச் சார்ந்த

அரசர்கள் அயர்லாந்தை முற்றிலும் புறக்கணித்து வந்தனர். அதன் விளைவாக ஆங்கிலேய மக்கள் தங்கி வாழும் எல்லைக்குப் புறத்தே கெல்ட்டிக்கு மக்களின் பண்பு மீண்டும் நலை விரித்தாடு வதை முழுநிறைவடையுமாறு செய்தனர். அயர்லாந்தில் குடி யேறிய குடியேற்ற மக்களுள் ஒரு பகுதியினர் அயர்லாந்து மொழியையும், பழக்க வழக்கங்களையும் ஆங்கிலேய மக்களிடத் துப் பரவாமல் தடுத்து நிறுத்தியபோதிலும், அவர்களுடைய ஆற்றலையும் மீறி அயர்லாந்தின் மொழியும் பழக்கவழக்கங்களும் ஆங்கிலேயக்குடியிருப்புக்களில் பரவலாயின. படையெடுப்பாளர் களால் அந்நாட்டு நாகரிகம் உண்மையிலேயே பெரும் பயன் அடைந்தது. அப்படை யெடுப்பாளர்களை இந் நாகரிகம் தம் வயப்படுத்திக் கொண்டதைக் காணுகின்றோம். பட்டண வாழ்க்கை முதன்முதலாக அக்காலத்தில் தோன்றியது. டேனி யர்களும், நார்மானியர்களும் தோற்றுவித்த பெரும்பான்மை யான பட்டணங்களுள்; சில பகுதிகளில் ஆங்கில-ஐரிஷ் மொழி பேசப்பட்டதாகத் தெரிகிறது. அந்நாட்டு ஆட்சிமுறைச் செயல் களை ஆங்கிலேய-ஐரிய பிரபுக்கள் தலைமையேற்று நடத்தி வந்த னர். அம் முறையால் பதினைந்தாம் நூற்றாண்டில் அயர்லாந்து முரட்டுத்தனமான சமூகச் செழிப்பினை அடைந்தது எனலாம்.

ஆனால், அயர்லாந்தில் பேரளவிற்கு இங்கிலாந்து தங்கி யிருந்தமை அந்நாட்டில் தேசிய ஒற்றுமைத் திட்டம் அந்நாட்டு இயல்பிற்கேற்ற முறையில் உருவாகுவதைத் தடுத்தது. டப்ளி னிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் ஆங்கிலேயர் பெற்றிருந்த சிறு செல்வாக்கும், ஆங்கிலேய அரசர் மேலாண்மை வாய்ந்த பிரபுவாக அந் நாட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டமை யும் அந்நாடு ஒற்றுமைப்படுவதைத் தடுப்பதற்குப் போதிய கருவியாக அமைந்தன. பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி யில் உண்மையிலேயே அந்நாட்டு அரசரின் பெயரால் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளைக் கொண்டு ஆளப்பட வேண்டுமென்ற ஓர் இயக்கம் தோன்றியதைக் காணுகின்றோம். அப்பிரதிநிதிகள் மாண்புமிக்க ஆங்கிலேய ஐரியக் குடும்பங்களிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தப் பட்டனர். அவர்கள் குறிப்பாக உல்ஸ்டரின் கோமான்களான ஃபிட்ஜெரால்ட்டு குடும்பத்தினராக இருக்கவேண்டுமென்று அவ்வியக்கத்தினர் அறிவித்தனர். ஆனால் ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள், அவ்வேற்பாடு இங்கி லாந்து நாட்டின் அரசருடைய பாதுகாப்புக்கு மாறுபட்டது என் பதை மெய்ப்பித்தது. ஆனால், அயர்லாந்தின் உள்நாட்டு விவ காரங்களில் அதன் விளைவு எதுவாக இருந்தாலும் பரவாயில்லை

யென்ற கருத்தினைத் தோற்றுவித்தது. ஏனெனில் இங்கிலாந்து அரச மரபின் பழம் பெரும் பகைவர்களாக இருந்தவர்கள் ஃபிட்ஜெரால்ட்டு குடும்பத்தினர். மேலும் ஏமாளிகளான ஐரிஷ் மக்கள் யார்க்கிய சச்சரவுகளின்போது அவர்களுக்குக் கூட்டாளிகளாக இருந்தனர். மேலும் லாம்பர்ட் சிம்னல் (Lambert Simnel) போன்ற போலி உரிமைவாதிகள் சிறப்பாக இங்கிலாந்தின் மீது படையெடுப்பதற்கும் (1487) அயர்லாந்து தயாராக இருந்தது. இக் காரணங்களினால் அயர்லாந்தைத் தனிப்பட்ட பிரதிநிதிகளின் மூலம் அரசரின் பெயரால் ஆட்சி செய்துவருவது ஆபத்தானது என்பதை ஆங்கிலேய அரசர்கள் உணர்ந்தனர். எனவே உயர்குடி மக்களின் கூட்டாட்சி ஒருபெரும் தோல்வியாக முடிந்தது. ஏனெனில், உரிமை மிக்க அயர்லாந்து தனித்து பக்கத்தே யிருக்கின்ற பெரிய நாடான இங்கிலாந்தைத் தாக்குதற்கும் தொல்லை தருவதற்கும் மாற்றாரால் ஒரு கருவியாகப் பயன் படுத்தப்பட்டது. 'போயினிங்ஸ் சட்டம்' (Poynings law) அப் பரிசோதனைக்கு ஒரு (1494) வரையறையை அமைத்தது; ஐரிஷ் பாராளுமன்றத்தினை ஆங்கிலேய ஆட்சித் துறையினைப் பெரிதும் சார்ந்து நிற்குமாறு ஆணை பிறப்பித்தது; அச் சிக்கலுக்குத் தீர்வு காண முயன்று முயற்சியில் தோல்வியுற்றது. ஆனால், அயர்லாந்தினை உண்மையாக மறுபடியும் கைப்பற்றுதல் என்பது அடுத்த நூற்றாண்டுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அயர்லாந்தினைக் கைப்பற்றி ஆட்சி செய்வதற்குப் போதிய ஆற்றல் அற்றதாக இங்கிலாந்து இருந்தமை இதனால் புலனாகின்றது. ஆனால் அயர்லாந்து தன்னைத்தானே ஆட்சிசெய்வதற்குத் தக்க முறைகளைக் கற்றுக் கொள்ளாதவாறு செய்வதற்கான முறைகளில் இங்கிலாந்து ஈடுபட்டதாக இதிலிருந்து தெரிய வருகிறது. அத் தீவு ஒரு காலத்தில் ஐரோப்பாவின் அறியாமையைப் போக்குவதற்கு 'அறிவொளி' தரக்கூடிய திருவிளக்காக விளங்கியதை நாம் முன்னர்க் கண்டோம். ஆனால் அதே நாடு இப்போது இடைக்காலத்தின் முடிவு வரையில் ஐரோப்பிய நாடுகளிலே பல்கலைக்கழகத்தினைப் பெறாத ஒரு நாடாக இருந்தமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். சீர்திருத்த இயக்க காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு, இடைக்கால ஆங்கிலேயர்கள் வைத்து விட்டுச்சென்ற வருந்தத்தக்க கடல்கடந்த நாட்டு மரபுரிமை இவ்வாறு இருந்தது. ஆங்கிலேயர்கள் பல நூற்றாண்டுகள் அயர்லாந்தைப் புறக்கணித்தே வந்தனர். முற்போக்கான முயற்சி மிக்க திட்டம் ஒன்று அப்போது தீட்டப்பட்டிருக்குமானால் அயர்லாந்தினை அச்சிக்கலிலிருந்து விடுவித்து இருக்கும். டியூடர் அரசர்கள் ஆட்சிக்காலத்து அயர்லாந்தைக் கைப்பற்ற வேண்டு

மென்ற திட்டம் கடைப்பிடிக்கப்பட்டபோது, அது காலத்தால் மிகப் பிற்பட்ட ஊழியாக இருந்தது. ஏனெனில், அக்காலத்தில் சமயப் பிரிவினைகளும் வாணிகப் போட்டியும், தேசியத் தன்னுணர்வுமாகிய அனைத்தும் அவற்றின் நாகரிகமற்ற வடிவிலே உருக்கொண்டிருந்ததை நாம் காண்கின்றோம்.

கெல்ட்டிக்குகள் தங்கள் அயலவர்களிடத்து கொண்டிருந்த தொடர்பு அயர்லாந்தைக் காட்டிலும் பிரிட்டனில் பெரும் மகிழ்ச்சி அளிப்பதாக அமைந்தது. இதற்குக் காரணம் என்ன என்பதை நாம் மீண்டும் இடைக்கால வரலாற்றிலேயே கூர்ந்து நோக்கிக் காணவேண்டும்.

ஆங்கில சாக்சானியப் படையெடுப்பின் பிற் பகுதியில், கைப்பற்றப்படாது சிம்றி அல்லது வெல்சின் நாட்டுப்பகுதிகள் விடப்பட்டு இருந்தது. ஆங்கிலேயரின் முன்னேற்றத் தாக்குதலினால் அப்பகுதி மூன்று தனிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வடக்கே ஸ்ராட்கிளைடும், நடுவில் வேல்ஸும், தெற்கில் டெவோனியன், கார்னிஷ் தீபகற்பமும் இருந்தன. (பார்க்க : படம் எண் : 6) அவர்களுடைய இன எதிர்ப்புக் கூட்டுச் சக்தி அவர்களுடைய நில இயல் பாகுபாட்டின் தனிமைப் பண்பினால் பெரிதும் குறைக்கப்பட்டது. அவர்களுடைய பகைவர்கள் ‘மனிதச் சிறு திட்டிலிருந்தும் (Isle of Man) வைக்கிங்குகளின் நடுமையமாக விளங்கிய அப்பகுதியிலிருந்தும், மிகச் சிறந்த துறைமுகப் பட்டினங்களாக இருந்த செஸ்டரிலிருந்தும் கடலிலே தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்திய காரணத்தினால் அவர்களுடைய பேராற்றலை முற்றிலும் அழித்தொழித்தனர். நார்மானியப் படையெடுப்புக்கு முன்பு ஸ்காண்டிநேவியர் அங்குக் குடியேறி நிலையாகத் தங்கி வாழ்ந்து வந்தனர். அவர்கள் ‘லேக்’ மாவட்டத்திற்கும் வட லங்காஷையருக்கும் இதற்கு முன்பே முழுமையான நார்ட்டிக்கு இனப் பண்பாட்டு வண்ணத்தைப் பூசியிருந்தனர். அதே சமயத்தில் வெசக்ஸிலிருந்து வந்த சாக்ஸானியர்களால் டெவோனில் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அது முதல் அப்பகுதி இங்கிலாந்து நாட்டு வாழ்க்கையின் முழுமையாக்கப்பட்ட சிறப்புமிக்க பகுதியாகக் கருதப்பட்டுவந்தது. காரன்வால் இவற்றிற்கு இடையே துண்டுபட்ட கெல்ட்டிக்கு இனமும் மொழியும் வழங்கும் நாடாகத் தனித்து இருந்தது. அது மிகச் சிறிதாகவும், தனித்தும் இருந்தமையால் அவ் வடிப் படையில் தொல்லை கொடுக்க முடியாமலிருந்தது. ஆங்கிலச் சாக்சானியர் காலத்தில் அது கைப்பற்றப்பட்டு ஆங்கிலேய அரசுடன் நெருக்கமாக அது இணைக்கப்பட்டிருந்தது. நிலவுடைமை

பேராய்வுக் கணிப்பேட்டின்படி அது நார்மானியரின் நிலமானியப் படைத் திட்டத்திற்குட்பட்டு இருந்ததாகத் தெரிகிறது. அதற்குப் பின்னர் இடைக்கால ஆங்கிலேயச் சட்டத்தின் ஆதிக்கத்திற்கு அது உட்பட்டிருந்தது. ஆனல் ஸ்டுவர்ட்டு அரசர்கள் ஆட்சிக்காலம் வரை அப்பகுதியில் கெல்ட்டிக்கு மொழி இனத்தைச் சார்ந்த ஒருவகை மொழி பேசப்பட்டு வந்தது. இக்காலம் வரையிலும் அதனுடைய மக்களிடத்து கெல்டிக்கு இனப் பண்புகள் போற்றிக் காப்பாற்றப்பட்டு வருவதைக் காணுகின்றோம்.

வேல்ஸின் மிகப் பெரிய சிக்கல் தீர்க்கப்படாமலே இருந்து வந்தது. ஓ·ப்·பா டைக்குக்கு (Offa's Dyke) அப்பால் தன்னுடைய விரிந்த பரந்த மலைப்பகுதியில் சாக்சானியர்களின் படையெடுப்பு தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனல் ஆங்கிலேயரை முன்னேற வொட்டாது தடுத்த மலைகளே, வேல்ஸ் ஒற்றுமைப்பட்ட ஒரு நாடாக விளங்குவதைத் தடுத்து வந்தது எனலாம். அருளாளர் எட்வர்டு ஆட்சிக்காலத்து மேற்கு நோக்கி ஹாரால்டு முன்னேறினர். எப்போதுமே குடும்பப் பகையினல் போராடிக் கொண்டிருந்த கெல்ட்டிக்குப் பழங்குடி மக்களுள் சிலருடைய நட்புறவினை அவர் பெற்றார். இவ்வாறு நார்மானியர்கள் காலத்தில் மேலும் முன்னேறுவதற்குரிய வழியினை அவர் அறிந்திருந்தார்.

வெற்றி வீரர் வில்லியம் காலம் முதல் முதலாம் எட்வர்டு அரியணை ஏறியது வரை, வேல்ஸினை அடிமைப்படுத்துவதற்கு வெற்றிமிக்க முயற்சிகள் செய்யப்பட்டுவந்தன. ஆனல், இத்தகைய முயற்சிகளைச் செய்தவர்கள் இங்கிலாந்தின் அரசர்கள் அல்லர். எல்லைப்புறத்து நிலப்பிரபுக்களே வேல்ஸினை அடிமைப்படுத்த அரும்பாடுபட்டு வந்தனர். இந்த எல்லைப்புறப் பிரபுக்களிடத்து ஸ்ட்ராங்போ, பிட்ஸ்ஜெரால்டு போன்ற ஆற்றல் மிக்க மக்களைக் கொண்ட தனிப்படைகள் இருந்து வந்தன. அப்படைகளைக் கொண்டு அவர்கள் வேல்ஸினை எப்படியாகிலும் கைப்பற்ற வேண்டுமென்று முயன்று வந்தனர். அவர்களுடைய உடலிலே நார்மானியரின் குருதியும் ஆங்கிலேயரின் குருதியும் வேல்ஸின் மக்களுடைய குருதியும் கலந்தோடிக் கொண்டிருந்தன. அவர்கள் நிலமானியப்படைமுறை அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக விளங்கினர். அதே சமயத்தில் ஆங்கிலேய முடியாட்சியை ஊடுருவும் செயலாக அது அமையாமல், ஆங்கிலேயப் பொருளாதாரத்தின் ஊடுருவலாகவே அமைந்தது. ஒரு காலத்தில் அங்கு 143 எல்லைப் பிரபுக்கள் இருந்தனர் என்று கணக்கிடப்பட்டது. அந்த எல்லைப் பிரபுக்களுள் ஒருவர் இங்குத் தம்முடைய வாளினைக் கொண்டு தமக்குரியதாக ஒரு பண்ணையை

வரையறுத்துக் கொள்வது வழக்கம் ஆகும். தம்முடைய ஆற்றலால் தாம் பிடித்த நாட்டுப் பகுதியில் அப் பிரபு ஒரு காவல் கற்கோட்டையைக் கட்டுவார். அதன் பிறகு தம்முடைய ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதியில் வாழுகின்ற மக்களிட மிருந்து நிலமானியப் படைமுறைக் கொடையைத் தண்டுவதற்கு முயலுவார். மேலும் தம்முடைய முறை மன்றத்தில் நிலமானியப் படைமுறைச் சட்டத்தை, அல்லது ஆங்கிலேயச் சட்டத்தை அல்லது வேல்ஸ் பழங்குடி மக்களின் வழக்காற்றுச் சட்டத்தைச்செயற் படுத்த முயலுவார். இவ்வாறு அவருடைய பாதுகாப்பின் கீழ், ஆங்கில மொழி பேசிய குடியேறிகள் அப்பகுதியில் நிலையாகத் தங்கி வாழலாயினர். அவ் ஆங்கிலேயக் குடியேறிகள் படைவீரர் களாகவும், உழவுத் தொழில் செய்பவர்களாகவும், வாணிகம் செய்கின்றவர்களாகவும் வாழ்க்கையை நடத்தினர். உண்மையில் அப்பிரபு உரிமைகள் மிக்க ஒரு சிற்றரசராகவே விளங்கினர். மேலும் அவர் ஒரு புதிய இனமும் மிக விரிந்த ஒரு நாகரிகமும் அந் நாட்டிற்குள் நுழைந்ததற்குச் சிறந்த ஒரு பிரதிநிதியாகவும் விளங்கினர்.

ஆங்கிலேய-நார்மானியரின் படையெடுப்பின் பொழுது வீரர் கள் தாழ்நிலப் பகுதிகளைக் கைப்பற்றினர். அத் தாழ்நிலப் பகுதிகளுக்குக் கீழே உள்ள பள்ளத்தாக்குகள் வரை அப்படை வீரர்கள் முன்னேறிச் சென்றனர். ஏனெனில் பாதையற்ற மலை களுக்கு அப்பள்ளத்தாக்குகள்தான் வாயில்களாக இருந்தன. மேலும், அப்பள்ளத்தாக்குகளில் வாழ்வதற்குரிய நிலங்கள் மிகுதியாக இருந்தன. ஆனால் அப் பள்ளத்தாக்குகள் முற்றும் பெரும் காடுகளும், சேற்று நிலங்களும் நிறைந்த ஒன்றாக இருந்த மையால் அப்படைவீரர்கள் விரைவாக முன்னேற முடியவில்லை. அப்பகுதியில் ஆங்கிலேயர்கள் உழவர்களின் முன்னோடிகளாக வும் அதே சமயத்தில் விழிப்புமிக்க வீரர்களாகவும் செயலாற்ற வேண்டியிருந்தது.

ஆங்கிலேய-நார்மானியர்கள் வருவதற்கு முன்பு, வேல்ஸ் மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடாத முல்லைநில மக்க ளாகவே இருந்துவந்தனர். அவர்கள் அக்காலத்தில் வீடு களிலோ, ஊர்களிலோ பட்டணங்களிலோ வாழவில்லை. ஆனால் சில மாதங்களுக்கு மட்டும் தங்குவதற்கு ஏற்றவகையில் கொம்பு களைக் கொண்டு வளைத்துக் கட்டப்பட்ட குடிசைகளில் தங்கி யிருந்தனர். குளிர் காலத்திலிருந்து கோடை காலம் வரை மலை களுக்குப் பக்கத்தே இருந்த திறந்த வெளிகளில் அவர்கள் தங்க ளுடைய கால்நடைகளையும், ஆட்டு மந்தைகளையும் தொடர்ந்து பின்


னல் சென்று கொண்டிருந்தனர். ஆனால், தங்களுடைய பள்ளத் தாக்கில் நார்மானியருடைய காவல் கோட்டை கல்லினலோ, மரத்தினலோ கட்டப்பட்டிருப்பதை அப் பழங்குடி மக்கள் கண்ட போதெல்லாம், அவர்களுள் ஒரு பிரிவினர் பக்கத்தேயிருக்கின்ற மலைகளின் உயர்ந்த பகுதிகளுக்கு தங்கள் உரிமைகளை இழக்க விரும்பாது ஓடிச்சென்றனர். மற்றவர்கள் தங்களுடைய புதிய தலைவரிடத்துக் கீழாட்களாகத் தங்கி வாழ்ந்தனர். ஆனல், அடிக் கடி தலைமறைவாக இருக்கின்ற தங்கள் தலைவரிடத்திலேயே தங்களுடைய மனமார்ந்த நன்றியறிதலை உடையவர்களாக அவர் கள் இருந்து வந்தனர். அச்சுற்றுப் பக்க மலைகளிலிருந்து அந் தலைவர்கள் இடையருது அப்பள்ளத்தாக்குகளின் மீது, அழிவு மிக்க தாக்குதல்களை நடத்திவந்தனர்.

வேறுபட்ட ஐம்பது பள்ளத்தாக்குகளில் இத்தகைய நிலை தொடர்ந்து நடைபெற்றதை நாம் கற்பனை செய்து பார்ப்போ மானல் பன்னிரண்டாம் நூற்றுண்டில் வேல்ஸ் எத்தகைய குழப் பத்திற்குட்பட்டிருந்தது என்பதைப்பற்றி நாம் சிறிதளவு அறிய முடியும். பழங்குடிமக்களின் பண்பும், நிலமானியப்படைமுறையும் தத்தம் நலத்திற்காகப் போராடிக் கொண்டிருந்தன. மலைகள் ஒரு மாவட்டத்தை இன்னெரு மாவட்டத்திலிருந்து வேறுபடுத் தும் தடுப்புச் சுவர்களாக இருந்தன. இதனல் பழங்குடி மக்கள் பண்பிலும், நிலமானியப் படைமுறையிலும் உள்ளார்ந்த நோக்க மாக இருந்த அரசியல் அதிகாரத்தைப் பல சிறுசிறு பிரிவுகளா கப் பிரிக்கவேண்டுமென்ற எண்ணத்தை மேலும் அது பெருகச் செய்தது. மலைகளில் ஒரு பிரிவைச் சார்ந்த பழங்குடி மக்கள் மற் ருெரு பிரிவைச் சார்ந்த பழங்குடி மக்களை எதிர்த்துப் போராடி னர். பள்ளத்தாக்குகளில் ஒரு நிலப்பிரபு இன்னெரு நிலப் பிரபுவை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தார். இவ்வாறு நிலப்பிரபுக்களின் ஆட்சிக்குட்பட்ட பள்ளத்தாக்குகள் அனைத் திலும் பழங்குடி மக்களைக் கொண்டிருந்த மலைகளோடு அக்காலத் துப் போராடிக்கொண்டிருந்ததைக் காணுகின்றேம்.

ஆயினும், மிகத்தாமதமாகவும், குருதியைக் கொட்டும் முறை யிலும் நாகரிகம் முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்தது. காலம் படையெடுப்பாளர்களுக்கு நன்மை பயப்பதாக இருந்தது. அவர் கள் தங்களுடைய நிலக்களங்களுக்கு அருகிலேயே இருந்தனர். அவர்கள் இடையருது கடல்வழியாகவும் நிலவழியாகவும் அந் நாட்டுக்குள் புதுப்படைவீரர்களைக் கொண்டு வந்தனர். ஆங்கி லேய-நார்மானிய நாகரிகத்தின் கைவிடப்பட்ட நம்பிக்கையைப் போன்றல்லாது, அயர்லாந்தின் சதுப்பு நிலங்களிலே அவர்கள்

துணையற்றவர்களாக இல்லை. கடலில் சென்று வேல்ஸின் பள்ளத்தாக்கு வாயில்களில் பெரிய துறைமுகப்பட்டினங்களாகிய பிரிஸ்டலிலிருந்தும், ஜெஸ்டரிலிருந்தும் அவர்கள் கப்பல்களைக் கொண்டுவந்து நிறைத்தனர். அதே சமயத்தில் உள்நாட்டிலே மேட்டு நிலப்பள்ளத்தாக்காக இருந்த செவர்ன் (Severn) பள்ளத்தாக்கு சுரூஸ்பரியிலிருந்து (Shrewsbury) அந்நாட்டின் உட்பகுதிக்குச் செல்வதற்கு எளிய வழியைத் தந்து உதவியது. அவ்வழியில் சென்ற போவைஸைக் (Powys) கடந்து வடக்கில் உள்ள குவைனட்டை (Gwynedd) டைன்பாரி (Dinefawr) விருந்து துண்டித்து விட்டது. உழைப்புமிக்க பல ஆங்கிலேயர்களால் பெம்புரோக்கு (Pembroke) கடலிலேயே கைப்பற்றப்பட்டது. முயற்சி மிக்க ஆங்கிலேயர்களாலும், பிளமிங்குகளாலும் அங்கு கெல்ட்டிக்குமொழி வழங்குவது மறைந்துபோயிற்று. அவை'வேல்ஸுக்கு அப்பால் உள்ள இங்கிலாந்து' என்று போற்றப் பட்டது. எல்லைப் புறப் பிரபுக்கள் தங்களுடைய ஆதிக்கத்தின் கொடுமுடியில் இருந்தபோதும் உறுதிமிக்க 'ஸ்னோடன்' பிரதேசத்திற்குள் அவர்கள் நுழைந்ததில்லை. உள்ளே நுழைய முடியாத ஸ்னோடன் காடுகளுக்கு இடையேயிருந்த குவைனட்டு மாவட்டத்தை அடிமைப்படுத்த அவர்களால் முடியவில்லை.

எல்லைப்புறப் பிரபுக்கள் இங்கிலாந்திலிருந்ததைக் காட்டிலும் மிகப் பிற்போக்கான ஒருவகை அரசாங்கத்தினை அங்கு நிறுவினர். ஆனால் அது அங்கிருந்த வேல்ஸின் பழங்குடி மக்களின் அரசாங்கத்தைக் காட்டிலும், மிக முன்னேற்றம் அடைந்ததாக விளங்கியது. ஆங்கிலேய ஆட்சி முறையில் போகன் (Bohun) மார்ட்டிமர் மற்றும் எல்லைப்புறக் குடும்பங்களைச் சார்ந்த பலரும் தொல்லைமிக்கவர்களாக இருந்து வந்தனர். ஏனெனில், அவர்கள் நிலமானியப் படைமுறையிலும், போரிடுவதிலும் நன்கு கைத்தேர்ந்தவர்களாக இருந்தமையாலாகும். அதே சமயத்தில் இங்கிலாந்தின் பிரபுக்களும், பெருங்குடி மக்களும் அமைதியையும், மத்திய ஆட்சியையும் ஏற்றுப் போற்றுவதில் பழக்கம் பெற்றுக் கொண்டிருந்தனர். ஆனால் எல்லைப்புறப் பிரபுக்களால் வன்முறையில் இறக்குமதி செய்யப்பட்ட நாகரிகம் கெல்ட்டிக்குப் பழங்குடி மக்களுக்கு முன்னேற்றத்தை விளைவிப்பதாகத் தோன்றியது. இடைக்காலம் முழுவதிலும் வேல்ஸ் நாட்டு மக்கள் தங்களுடைய ஆங்கிலேயப் பிரபுக்களையும் சுற்றுப்புறங்களிலுள்ள ஆங்கிலேயரையும் பார்த்து, அவர்களைப் பின்பற்றி வேளாண்மைத் தொழிலையும், வீடுகளை நிலையாகக் கட்டுவதையும், சந்தைகள் உள்ள பட்டணங்களில் வாணிகம் செய்வதையும் பின்பற்றினர். ஆங்கில மொழி பேசும் மக்களால் நிர்வகிக்கப்படும் அனைத்தையும் அவர்களிட-




படம் : 14

**இடைக்காலத்திய வேல்ஸ்**

இங்கிலாந்து அரசரின் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடு (வண்ணம் தீட்டப்பட்டபகுதி) முதலாம் எட்வர்ட்டினால் இருபகுதிகளாக வரையறுக்கப்பட்டது. அவை குவைனட்டு, கார்டிகன்-கார்மார்த்தன் என்பனவாகும்.

ஆங்கிலேயப் எல்லைப்புற நாடுகள், அரசரின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதி ஆகியவை நீங்கலாக உள்ள மற்றவை அனைத்தும் பொதுவாக எல்லைப்புறப் பிரபுக்களுடைய அரசுகளாகும்.

சிறப்புமிக்க எல்லைப்புறப் பிரபுக்களினுடைய அரசுகள் சிலவற்றின் பெயர் இவ்வாறு (போகன்) அடைப்புக்குறிகளுக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

மிருந்து மிகத் தாமதமாக இவர்கள் கற்று வந்தனர். இவ்வாறு மெல்ல மெல்ல அவர்கள் பழங்குடி மக்களுக்குரிய இரத்தம் சிந்தும் பூசல்களில் இருந்து விடுதலைபெற்று, ஆங்கிலேயச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் முன்னேற்றம் அடைந்தனர். ஆயினும், அவர்கள் தங்களுடைய மொழியினைப் போற்றிக் காத்தனர். 'இறுதித் தீர்ப்புக்' கூறும் நாளில் வேல்ஸின் சார்பாக அம்மொழியிலேயே பதில் கூறவேண்டுமென்று அவர்கள் பெருமைப்பட்டனர். மேலும் அவர்கள் தங்களுடைய பாணரின் பாடல்களைத் தொடர்ந்து போற்றிவந்தனர். அதைப் போன்று, அவர்களுடைய இசையும் நன்கு பேணிக் காக்கப்பட்டது. இவை யாவும் நம்முடைய நாளிலும் தற்கால உலகக் குடிமகக் கோட்பாட்டின் முரட்டுத்தனத்தில் வேல்ஸ் மக்களின் அறிவாற்றலும், குறிக்கோளும் அழிந்து போகாதவாறு பாதுகாக்கும் ஆற்றல் உள்ளதாக இருந்துவருவது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.[1]

இதுவரை பல நூற்றாண்டுகளாக நடந்துவந்த போரினை எட்வர்ட்டின் கைப்பற்றுதலுக்கு முற்பட்டதென்றும், பிற்பட்டதென்றும் நாம் வரையறுத்துக் கூறலாம். அப்போர்கள் அனைத்தும் நாகரிகம் அடைந்த படைகள், மலைவாழ் பழங்குடி மக்களை எதிர்த்து நடத்திய போராட்டத்தைப் பெரிதும் ஒத்திருந்தது. வேல்ஸ் இனத்தைச் சார்ந்த ஜிரால்டஸ் (Giraldus) என்பவர் தம் நாட்டு மக்கள் அஞ்சத்தக்க வகையில் ஆரவாரம் செய்துகொண்டும், நீண்ட கொம்புகளைப் போர் என்று அறிவிப்பதற்காக ஊதிக் கொண்டும் எப்படி விரைந்து ஓடினர் என்பதை வருணிக்கிறார். அவர்கள் தராதரம் அறியாத வீரர்களாகத் தங்களைத் தாங்களே தாக்கிக்கொண்டு எவ்வாறு இறந்தனர் என்பதையும், பாதிக்குமேல் படைக்கலம் ஏந்தாத காலாட்படைகளாக இரும்புக்கவசம் அணிந்த குதிரை வீரர்களை எப்படி எதிர்த்து அவர்கள் போராடினர் என்பதையும் அவர் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். உடனடியாக அவர்கள் வெற்றிபெறவில்லையென்றால், அவர்களுடைய ஆற்றல் எல்லாம் அப்போதே குன்றிவிட்

[1] கி. பி. 1200 அளவில் வெல்ஷ் மக்களினத்தைச் சேர்ந்த ஜிரால்டஸ், தம்முடைய நாட்டுமக்களைப்பற்றி எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ளதைப் போன்றே, அவருடைய நாட்டுமக்கள் இன்றும் இருந்துவருவதைக் காணுகின்றோம். அவர் மொழிந்த அனைத்தும் முற்றிலும் உண்மையாகத் தோன்றுகிறது: 'அவர்களுடைய இசையரங்குகளில், மற்ற நாட்டு மக்களைப் போன்று அவர்கள் ஒத்து இசைப்பதில்லை. ஆனால், அவர்கள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து பாடுவர். எனவே, வேல்ஸில் அடிக்கடி ஒருவர் சந்திக்கக் கூடிய இசைவாணர் குழு ஒன்றில் எத்தனை இசைவாணர்கள் உள்ளனரோ, அந்த அளவிற்குப் பல்வேறுபட்ட இசைப்பகுதிகளையும், குரல்களையும் அவர்களுடைய இசையரங்கில் ஒருவர் கேட்கலாம்.'

டது என்றும், அதனால் எப்படியோ மானக்கேடான பேரச்சத்தோடு அவர்கள் போர்க்களத்தை விட்டுப்பறந்தோடிவிடுவார்கள் என்றும் ஜிரால்டஸ் குறிப்பிடுகிறார். ஆனால், அவர்கள் மீண்டும் இழந்த தன்னம்பிக்கையை திரும்பப் பெற்றவுடன், நீண்ட கடுமையான கொரில்லாப் போர் முறையில் ஈடுபட்டுப் பகைவர்களைத் தாக்குவர் என்றும், மரங்கள் அடர்ந்த தங்களுடைய மலைப்பகுதியில் பகைவர்கள் தங்களை வெல்லமுடியாது செய்து விட்டனர் என்றும், அவர்களுடைய வாழ்க்கை நாகரிகமற்ற துணிவுடையதாக இருந்தது என்றும், அவர்கள் வேளாண்மைத் தொழிலைப்பற்றிக் கவலைப்படாதவர்களாகவும், அமைதி வாழ்வுக்குரிய கலைகளை அறியாதவர்கள் ஆகவும் இருந்தனரென்றும் அவர் குறிப்பிடுகிறார். ஆங்கிலேயர்கள் நார்மானியரின் படையெடுப்பின்போது இத்தகைய முறையில் எதிர்த்துப் போரிடவில்லை. வேல்ஸின் மீது படையெடுத்துச் சென்றவர்கள் உண்மையிலேயே வெல்ல முடியாதவர்களாக இருந்தனர். அவர்கள் சமவெளிப் பிரதேசத்தில் எதிர்த்துப் போராடுவதில் வல்லவர்களாக இருந்தனர். ஆனால் வேல்ஸ் நாட்டில் சமவெளிப் பிரதேசமே மிகக் குறைவாக இருந்தது. அப்படியிருந்த பகுதியும் பெரிதும் சதுப்பு நிலமாகக் காணப்பட்டது. காடுகளால் மூடப்பட்ட செங்குத்தான குன்றுகளின் மீது, குதிரைகளையும் படைகளையும் கொண்டு செல்வதே மிகக் கடினமாக இருந்தது. எனவே, ஆங்கில-நார்மானியப் படைவீரர்கள் தங்களால் ஏளனமாகக் கருதப்பட்ட பகைவர்களிடமிருந்து பலவற்றைக் கற்றுக் கொள்ளவும் கடன்வாங்கிக் கொள்ளவும் வேண்டியவர்களாக இருந்தனர்.

இவை யாவற்றையும் விட, வேல்ஸ் மக்களிடமிருந்து ஆங்கிலேயர் நீண்ட வில்லினைப் பயன்படுத்தும் முறையைக் கற்றுக் கொண்டனர். வையி (Wye) ஆற்றின் மலைப்பகுதிக்கும் பிரிஸ்டல் கால்வாய்க்குமிடையே யுள்ள வேல்ஸின் தென்கிழக்கு மூலையில் தான் புகழ்மிக்க 'வில்' என்று சொல்லப்படுகின்ற படைக்கருவி அவ்வட்டாரப் புகழ்பெற்ற படைக்கலனாக இருந்துவந்தது. இரண்டாம் ஹென்றியின் ஆட்சிக்கால முதலே விற்படை வேல்ஸ் மக்களின் கைகளிலே இருந்தது என்பதை ஆங்கிலேயர் அறிவர். அந்த வில்லினைக் கொண்டு வேல்ஸ் மக்கள், குதிரைகளின் மீது படைக்கலம் தாங்கி அமர்ந்திருக்கின்ற மாவீரர்களின் தொடைகளை அவர்களுடைய சேணத்தின் மீது குதிரையின் பக்கத்திலிருந்து அசையவொட்டாது அம்பினால் தைத்துவந்தனர். எண்பது ஆண்டுகளுக்குப் பிறகு லூயிஸ் போர்க் களத்தில் சைமனுக்கு உதவியாக வேல்ஸின் விற்படை வீரர்கள் போரிட்டதைக்

காணலாம். ஆனால், இங்கிலாந்தில் 'குறுக்கு வில்லினை' ஏந்திய விற்படையாளர்களைக் காட்டிலும், அவர்கள் கவர்ச்சி அற்றவர்களாகவே இருந்துவந்தனர். முதலாம் எட்வர்டு வேல்ஸ் படையெடுப்பால் பெற்ற அனுபவத்தினால், ஸ்காட்டியப் போர்களில் நீண்ட வில்லினைக் காலாட் படையின் சிறப்புமிக்க படைக்கலனாகப் பயன்படுத்துவது என்ற முடிவுக்கு வந்தார். மூன்றாம் ஹென்றியின் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட படைக்கலச்சட்டத்தில் முதன் முதலாக ஆங்கிலேய உரிமைக் குடிமக்கள் வகுப்பினரில் சில பகுதியினர், யாதாகிலும் ஒருவகை விற்படை ஏந்தியவர்களாக இருக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டது உண்மையாகும் ஆனால், முதலாம் எட்வர்ட்டுக்கும் அவருடைய குடி மக்களுக்கும் நீண்ட வில் என்பது என்ன என்பதை வேல்ஸ் மக்கள்தான் அறிமுகப்படுத்தி வைத்தனர். பதினான்காம் நூற்றாண்டு வரையில் அந்த நீண்ட வில்லினை நாம் ஆங்கிலேயரின் தேசியப்படைக்கலனைக் குறிப்பிடுவதற்கு இல்லை. கடல்கடந்த ஐரோப்பாவில் கிரேசியிலும் (Crecy) பாய்ட்டியர்சிலும் (Poitiers) இருந்த நிலமானியப்படைமுறை வீரப்பெருந்தகையாளர்களை அச்சுறுத்தச் சென்றபோதுதான், அதாவது பதினான்காம் நூற்றாண்டில் அப்படை இங்கிலாந்தின் சிறப்புமிக்க படைக்கலனாகப் போற்றப்பட்டதைக் காணுகின்றோம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் வேல்ஸ் மக்களின் தேசிய மறுமலர்ச்சி அரும்பியது. அது பாணர்களின் பாடல்களில் பசுமையாக நுரைத்துப் பொங்கியது; அத்துடன் லெவிலியன் இளவரசரின் (Llewelyn) கூட்டுத் தலைமையின்கீழ் வேல்ஸின் பழங்குடி மக்கள் அனைவரையும் ஒருங்குசேர்த்து ஒற்றுமையுடைய ஓர் இனத்தை உருவாக்கும் இயக்கத்தையும் உருவாக்கியது. மிக உயர்ந்த மலைத்தொடர்களினால் காக்கப்பட்ட செழிப்புமிக்க தானியங்களின் விளைச்சலுக்குரிய ஆங்கிலிசே (Anglesey) தீவிலும், உறுதிவாய்ந்த ஸ்னேடன் காட்டிலும் ஆட்சி செய்து வந்தவர்களே லெவிலியன் இளவரசர்களாவர். அவர்கள் ஆண்ட பகுதிக்கு குவைனட்டு (Gwynedd) என்பது பெயராகும். இவ்வாறு மறுமலர்ச்சி இயக்கத்தின் தூண்டுதலால் வடக்கு வேல்ஸின் பல பகுதிகளையும் ஒன்றுபடுத்தி, உரிமை வாய்ந்த ஒன்றுபட்ட வேல்ஸாக விளங்கச் செய்வதற்கு முயன்றனர். மாண்புமிக்க லெவிலியன் அரசர் (1194-1240) எல்லைப்புறப் பிரபுக்களின் ஆதிக்கத்திலிருந்த போவைசின் (Powys) பெரும் பகுதியைத் திரும்பக் கைப்பற்றினர். அவர் கூர்ந்த மதியுடைய அரசியல் வாதியாகவும், சிறந்த போர் வீரராகவும் விளங்கினர். அவரை அந்நாட்டுப் பாணர்கள் தேசிய அரசராகப் போற்றி ஆர

வாரம் செய்தனர். அவர் தம்முடைய நாட்டு மக்கள் அனைவரையும் அழைத்து, தங்கள் ஆற்றலை ஒருங்குதிரட்டித் தமக்கு உதவுமாறு வேண்டினார். ஆனால், அதேசமயத்தில் தாம் ஒரு நிலமானியப் படைமுறைப் பெருமகன் என்பதையும், அரசுக்கு அடிமைப்பட்ட பற்றுடைய ஒருவன் என்பதையும் அவர் மறந்துவிடவில்லை. அத்தகைய நிலையிலும் ஆங்கிலேயரின் உட்பகை மிகுதியாக இருக்கின்ற காரணத்தினால்தான் வேல்ஸ் மக்களின் நாட்டுப்பற்றுமிக்க தலைவராகத் தொண்டாற்ற முடியுமென்று அவர் நம்பினார். இங்கிலாந்தின் நிலப்பிரபுக்களின் கட்சியில் சேருவது என்று நடுநிலை பிறழாத திட்டத்தினால், ஜான் அரசரின் மாபெரும் பட்டயத்தில் வேல்ஸ் மக்களின் உரிமைக்காக அவர் மூன்று பெரும் விதிகளைப் பெற்றார்.

லெவிலியன் அப்கிரிப்பித்து (Llewelyn ap griffith) என்னும் அவருடைய பெயரன், அவருடைய இருவகைத் திட்டத்தையும் தொடர்ந்து செயற்படுத்தி வந்தார். அதன்மூலம் அவர் சைமன்டி மான்ட்போர்ட்டின் கூட்டாளியாக விளங்கினார். அவர் மேலும் (1246-1283) போரும் பூசலுமிக்க எல்லைப்புறப்பிரபுக்களின் நாட்டுப்பகுதியைப் பங்கிட்டுக் கொள்வதன்மூலம் வேல்ஸ் மக்களின் சிற்றரசினை மேலும் மேலும் விரிவுபடுத்தினர். காலப் போக்கில் எல்லைப்புறப் பிரபுக்களுள் பலர், இவருடைய ஆதிக்கத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாக அடங்கி நடக்கலாயினர். காலப்போக்கில் இங்கிலாந்திலிருந்து முற்றிலும் பிரிக்கப்பட்ட உரிமைமிக்க வேல்ஸ் நாட்டினை நிறுவுவதற்கு அவர் கனவுகாணத் தொடங்கினார். எனவே, அவர் தம்முடைய வழியிலிருந்து பிறழ்ந்து முதலாம் எட்வர்ட்டை எதிர்க்கத் தொடங்கினார். முதலாம் எட்வர்டு அவ் அறைகூவலைக் காட்டிலும், வேறு யாது வந்தாலும் ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருந்த ஒருவராவர். எனவே அவ் அறைகூவல் வேல்ஸ் மக்களின் உரிமை வாழ்வின் முடிவுக்குத் தொடக்கமாக அமைந்தது.

முதலாம் எட்வர்டு வேல்ஸின் மீது பலமுறை படையெடுத்துச் சென்றார். அவற்றுள் மிகச் சிறப்பு வாய்ந்தது 1277 ஆம் ஆண்டில் நடைபெற்ற படையெடுப்பாகும். அப்படையெடுப்பின் போது எளிதில் உள்ளே நுழையமுடியாத உறுதியான அரண்களைக் கொண்ட ஸ்னோடன் கோட்டையை நிலத்திலும் நீரிலும் தம் படைகளைக் கொண்டு வளைத்து முற்றுகையிட்டார். அதனால் லெவிலியனும் அவருடைய மலைவாழ் மக்களும் பட்டினியால் வாடினர். இறுதியில் அவர்கள் எட்வர்ட்டிடம் அடைக்கலம் அடைந்தனர். கெல்ட்டிக்குச் சட்டங்களையும், அவற்றை இயக்குந்

தன்மைகளைப்பற்றியும் கவலைப்படாது கடுமையாக நடத்தப்பட்ட ஆட்சியின் தூண்டுதலால், மற்றொரு கலகம் வேல்ஸில் உண்டாயிற்று. அதன் விளைவாக மற்றொரு போர் மூண்டது. அப்போரின் (1282-1284) விளைவாக மற்றும் புதிதாகப் பல பகுதிகள் கைப்பற்றப்பட்டதோடு, சிறந்த குடியேற்றங்கள் அங்கு அமைக்கப்பட்டன. அரசரின் அதிகாரத்தை வடக்கு வேல்ஸ் பகுயில் பாதுகாப்பு உடையதாக அமைப்ப தற்கு கான்வேயிலும் கார்னர்வானிலும் (Carnarvon), போமரிசிலும் (Beaumaris), ஹார்லிச்சிலும் (Harlech) அரசரின் காவல் கற்கோட்டைகள் கட்டப்பட்டன. நடுப்பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் நிலமானியப்படைமுறை ஆதிக்கம் பாதுகாப்போடு இருப்பதைப்போன்று, அக்கோட்டைகளைக் கட்டுவதின்மூலம் அப் பகுதிகளில் ஆங்கிலேயரின் ஆட்சி பாதுகாப்பு உடையதாகச் செய்யப்பட்டது. லெவிலியன் ஆட்சிக்குட்டபட்டிருந்த சிற்றரசினை எட்வர்டு இங்கிலாந்தில் காணப்படுகின்ற மாவட்டங்களைப் போன்று பல பிரிவுகளாகப் பிரித்தார். அவை கார்னர்வான் (Carnarvon) ஆங்கிலேஸே (Anglesey), மெரியோனெத் (Merioneth), பிளின்ட் (Flint), கார்டிகான் (Cardigan), கார்மார்த்தன் (Carmarthen) என்பனவாகும். அதற்குப் பிறகு, சிறிது காலத்திற்கு எல்லாம் கார்னர்வானில் பிறந்த தம்முடைய மகனை குழந்தை எட்வர்ட்டுக்கு வேல்ஸின் இளங்கோ (Prince of Wales) என்னும் பட்டத்தைச் சூட்டினர். அவர்களுடைய 'சிற்றரசுப் பகுதியை' இன்னும் இங்கிலாந்தின் ஒரு பகுதியாக இணைக்கவில்லை. வேல்ஸின் பிற பகுதிகள் அனைத்தும் எல்லைப்புறப் பிரபுக்களுக்கே உரியதாக இருந்துவந்தது.[1]

எல்லைப்புற பிரபுக்களின் நிலமானியப் படைமுறை உரிமையை முதலாம் எட்வர்டு அழித்தொழிப்பதில் மகிழ்ச்சியடைந்திருப்பார். அவருடைய அதிகார வரம்பைக் கண்டிப்பான 'எத்தகுதிபற்றிய' விசாரணை முறைக்கு உட்படுத்துவதன் மூலம் அவர்களை அடக்கி ஒடுக்கி இருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்வதற்குத் தேவையான அதிகாரத்தை அவர் பெற்றிருக்கவில்லை. மேலும் வேல்ஸ் மக்களுடைய கொடுஞ்செயல்களையும், உணர்வினையும் அடக்கி ஒடுக்குவதற்கு எல்லைப் புறத்து பிரபுக்களின் கூட்டுறவினை அவர் பெரிதும் நாடவேண்டிய நெருக்கடியிருந்தது. வேல்ஸ் மக்கள் லெவிலியன்

[1] வேல்ஸ் முழுவதும் இக்காலத்தில் 'சிற்றரசு' எனப் பொதுவாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்தில் ஆறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த பகுதியே 'சிற்றரசு' என்று அழைக்கப்பட்டது.

அரச மரபினர் காலத்திய மாண்பினையும் பெருமையினையும் பற்றித் திரும்பத்திரும்பப் பாணர்களின் பாடல்களில் பேசப் படுகின்ற காரணத்தினால், இடையறாத எழுச்சி மிக்கவர் களாகவே இருந்து வந்தனர். டியூடர் காலத்தில் சீர்திருத்தங் கள் செய்யப்படும் வரையில் வேல்ஸில் எல்லைப்புறத்துப் பிரபுக் களின் நிலமானியப்படைமுறைப் பிரதேசங்கள் என்னும் ஒரு பிரிவும், ஆங்கிலேயச் சட்டத்தினால் பெரிதும் விரும்பத்தக்க வகையில் ஆட்சி செய்யப்பட்டு வந்த கெல்ட்டிக்குச் சிற்றரசர்கள் என்னும் மற்றொரு பிரிவும் இருந்துவந்தன. கெல்ட்டிக்குச் சிற்றரசில் ஆங்கிலேயச்சட்டம் விரும்பத்தக்க வகையில் நிர் வாகத்திற்குப் பயன்படுத்தப்பட்டது என்றாலும், அதே சமயத் தில் பழங்குடி மக்களின் வழக்காற்று நெறிக்குச் சலுகை கொடுக்கப்பட்டு வந்ததையும் காணுகின்றோம். இவ்விரு மா வட்டங்களிலும், ஆங்கிலேயரும் வேல்ஸ் மக்களும் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகுவதற்கும் ஒத்துழைப்பதற்கும் மெல்ல மெல்லப் பழகிவந்தனர். பட்டணங்களும் வாணிகமும், வேளாண்மைத் தொழிலும் வளர்ச்சியடைந்ததன் மூலம் நாகரிகம் மெல்ல ஊர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தது.

ஆயினும், பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வேல்ஸ் பழங்குடி மக்கள் இனத்தவர்களிடையே போரும் பூசலும் நிறைந்தும், நிலப் பிரபுக்களின் கொடுமைகள் நிறைந்தும் இருந் தன. அதிகாரிகளின் துன்புறுத்தலும், கொடுங்கோன்மையும் கோர தாண்டவம் புரிந்தன. இதை ஆங்கிலேயரின் ஆட்சியோடு எந்நிலையில் ஒப்பிட்டாலும் நன்குணரலாம். நான்காம் ஹென்றி யின் தொல்லை மிக்க ஆட்சிக் காலத்து (1400-1415) ஓவன் கிளண் டோவர் (Owen Glendower) மாண்புமிக்க லெவிலியின் திட்டங் களைப் புதுப்பிக்க முயன்றார். ஆனால், ஆங்கிலேயர்களுக்கு எதிரி களான பிற கட்சியினரோடு அவர் சேர்ந்துகொண்டார். அதே நேரத்தில் அவர் தம்முடைய இனத்து மக்களின் நம்பிக்கையை- யும், துன்பங்களையும் தமக்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயரை எதிர்க்க முயன்றார். இவ்வியக்கத் தக்க மனிதர் மனத்தில் இழிந்த இயல்பும், தன்னலமும் மிக்க அர சியல் சிறப்புற்று விளங்கிய காலத்து, கவர்ச்சி மிக்கவராயும் தன்னிகரற்ற பெரிய மனிதராயும் விளங்கினார். தம்முடைய பெரும் பகுதி சில ஆண்டு காலம் மீண்டும் உண்மையான விடு தலை பெற்று விளங்குமாறு அவர் செய்தார். இவ்வாறு அவர் தொடுத்த உரிமைப் போர் வேல்ஸ் நாட்டின் பொருளாதார வாழ்வுக்குப் பெரும் கேடு சூழ்வதாக அமைந்தது. இப் பொரு ளாதாரச் சீர்கேடு எல்லைப்புற பகுதிகளில் மட்டுமல்லாமல், சிற்

ற்ரசு நாடுகளிலும் பரவியது. வேல்ஸ் மாவட்டங்களும், ஆங்கிலேயர் மாவட்டங்களும் அக்காலத்து ஒரே நாட்டில் அடுத்தடுத்து இருந்து வந்தன. ஒரே மேனர் பண்ணையில் வேல்ஸ்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் உரிய நிலங்கள் இருந்து வந்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். அவை மீண்டும் ஒன்று சேருவதற்குரிய முயற்சிகள் செய்யப்பட்டன. தற்கால வேல்ஸ் மக்களின் இனம் உருவாவதற்கு ஏற்ற வகையில் இவ்விரு இனங்களும் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு கலவை இனம் தோன்றுவதற்குரிய காலம் மீண்டும் தாமதப்படுத்தப்பட்டது. கிளண்டோவர் இறந்த பிறகு, ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கம் வேல்ஸ் முழுவதிலும் நிலை நாட்டப்பட்டது. ஆனால், அரசரின் அமைதி அப்பகுதியில் செம்மையாக நிலைநாட்டப்படவில்லை. இவ்வாறு கெல்ட்டிக்குகளினாலும், நில மானியப்படை முறை அதிகாரிகளினாலும் உண்டான குழப்பங்களுக்கிடையே கொலைகாரர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் வேல்ஸ் ஒரு பெரும் சுவர்க்கமாக இருந்தது. இந்நிலை, இங்கிலாந்தின் அரசர் பிரான்சு நாட்டில் வீர தீரச் செயல்கள் புரிவதில் தம்முடைய கருத்தினைச் செலுத்தி வந்த காலம் வரையிலும்—இங்கிலாந்தில் அரசமரபுப் பூசல் முடிவுறும் வரையிலும்—தொடர்ந்து இருந்து வந்தன.

இத்தகைய குழப்பங்களும் கொந்தளிப்புகளும், முறையற்ற ஆட்சியும் எல்லையற்ற நாடுகளிலும், சிற்றரசு நாடுகளிலும் நெடுங்காலம் வேல்ஸ் மக்களுடைய படையியல் பழக்கவழக்கங்களைப் போற்றிக் காத்து வந்தது. இதனால்தான் டியூடர் காலத்திற்குப் பிறகு அமைதியை நாடுகின்ற நிலையினை இம்மக்கள் அடைந்த பிறகும் வேல்ஸ் நாட்டு கவிஞர்கள்,

> 'பழமையும் செருக்கும் படைத்ததோர் இனம்
> படைக்கல மேந்திப் பரணிபாடும் இனம்'

என்று போற்றிப் பாடினர் போலும்.

அவர்கள் தாயகத்தில் மட்டுமல்லாமல் ஸ்காட்லாந்து, பிரான்சு முதலிய நாடுகளில் அரசர்களுடைய படைகளிலும் சேர்ந்து, படையியல் வாழ்க்கையையே விரும்பி வாழ்ந்தனர். அதைப்போன்றே இங்கிலாந்து நாட்டில் மூன்றாம் ஹென்றியின் காலம் முதல், முதலாம் சார்லஸ் காலம் வரை நடைபெற்று வந்த உள்நாட்டுப்போர்களின்போது எல்லாம், நிலையாகவும் அமைதியுடனும் வாழும் ஆங்கிலேய மக்களைப் படையில் சேர்ப்பதைவிட, ஏழ்மையில் வாடுகின்ற வேல்ஸ் மக்களை எளிதாகப்

பெயரளவில் காலாட் படையில் சேர்த்துக் கொண்டதைக் காணுகின்றோம். ரோஜாப் பூ அணிந்து செய்த போர், பெயரளவிற்கு எல்லைப்புற வாழ்நர்களிடையே நடந்த சச்சரவு களின் விளைவினால் உண்டானதேயாகும். ஏனெனில் எல்லைப் புறப் பிரபுக்களில் சிறப்பு மிக்கவர்கள் ஆங்கிலேய அரியணை யோடு மிக நெருங்கிய தொடர்பு உடையவர்களாக இருந்தனர். அத்துடன் இங்கிலாந்திலும் வேல்ஸ் எல்லைப்புறத்திலும் அவர் கள் பண்ணைகளை உடையவர்களாக இருந்தனர். அதனால், இவ்விரு நாட்டு அரசியல் சிக்கல்களிலும் அவர்கள் பேரார்வமும், ஊக்கமும் உடையவர்களாக இருந்துவந்தனர். ஹாரிபாலிங் புரோக்கு (Harrybalingbroke) என்பவர் ஹெர்போர்ட்டு லங்காஸ்டர் ஆகியவற்றின் நிலப் பிரபு ஆவார். அவருக்கு வேல்ஸ் நாட்டு நிலங்களில் பெரும் பகுதி உரியதாக இருந்துவந்தது. அதைப்போன்றே அவருடைய எதிரிகளான மார்ட்டிமர் களுக்கும் பெரும் நிலப்பரப்பு உரிமையாக இருந்து வந்தது. யார்க்கிய அரச மரபினருக்கும், அரசரியற்றியான வார்விக் கிற்கும் (Warwick) மூன்றும் ரிச்சர்ட்டினுடைய பக்கிங்காமிற் கும் ஏதோ ஒருவகையில் வேல்ஸ் நாட்டிடத்தும், எல்லைப்புறப் பகுதிகளிடத்தும் தொடர்பு இருந்துவந்ததாகத் தெரிகிறது. இத்தகைய மனிதர்கள் ஆங்கிலேய அரசியல் அமைப்புத் துறை யிலும், அரச மரபு உட்பகையிலும் போரிடக் கூடிய உட்கூறு களாக இருந்துவந்தனர். ஏனென்றால், வேல்ஸ் நாட்டினை முற்றிலும் நாகரிக நாடாக மாற்றாது, இடைக்கால இங்கிலாந்து அதை அரை அளவிற்கு நாகரிக வாழ்வினைப் பெறுமாறு செய்து புறக்கணித்தது. அதனால் வேல்ஸ் நாட்டு மக்கள் இன்னும் பழைய நாகரிகமற்ற போரியல் பண்புகளை மிகுதியாக உடையவர்களாக இருந்துவந்தனர். வேல்ஸ் பழங் குடி மக்கள் பண்பும், நிலமானியப்படை முறைப்பண்பும் சேர்ந்து பாராளுமன்ற வழக்கில் நஞ்சினைக் கலப்பதன் மூலமும், புறக் கணிக்கத்தக்க மேலாட்சியாளர்களால் நடத்தப்படும் ஒரு முகப் படுத்தப்பட்ட ஆட்சியைச் சீர்குலைப்பதன் மூலமும் பழி வாங்கிக் கொண்டன. ஆனால், இக் காலத்து பாஸ்வர்த் போர்க் களத்தில் (Bosworth Field) வேல்ஸ் மக்களின் படை வேல்ஸ் மரபைச் சேர்ந்த டியூடர் இளவரசரை அரியணையில் ஏற்றியது. அதன் மூலம், ஆங்கிலேய அரசியல் அமைப்பில் பலவகையான குழப்பங்களை உண்டாக்குவதற்குக் காரணமாக இருந்துவந்த வேல்ஸ், அக்குழப்பங்களையும், அக்குறைகளையும் போக்கப் பரி காரம் காண முயன்றது.

ஸ்காட்லாந்தின் வரலாறு, சாக்சானியர்களுக்கும், கெல்டிக்கு களுக்கும் இடையே இருந்துவந்த தொடர்பு, மற்றொரு வகையான படிப்பினையை நமக்குக் காட்டுகிறது. வேல்ஸும், அயர்லாந்தும் முடிவாக இங்கிலாந்திற்கு முற்றிலும் அடிபணிந்து நடக்குமாறு அடக்கி ஒடுக்கப்பட்டன. ஸ்காட்லாந்தைக் காட்டிலும் அவை நெடுங்காலம் இங்கிலாந்தின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. ஆயி னும், அவை இரண்டும் இந்நாள் பெரிதும் கெல்ட்டிக்குப் பண் புடையனவாகவே இருந்து வருகின்றமை வியப்பிற்குரியதாகும். இத்தகைய வெளிப்படையான முரணுக்குக் காரணம் என்ன என்பதை அறிய நாம் வரலாற்றினைப்பொறுமையுடன் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஸ்காட்லாந்தில் செல்வச்செழிப்புக்கு முக்கியத் துவமானதும், மிக முக்கியமானதுமான மாவட்டங்கள் அனைத் தும் கெல்ட்டிக்கு இன மக்களின் வாழ்வு இடங்களாக இருந்தன என்பதை நாம் நினைவுகூர்தல் வேண்டும். இம் மாவட்டங்கள் முதலாம் எட்வர்டு ஆட்சிக் காலத்தில் தோன்றிய தேசிய விடு தலைப் போராட்டத்திற்கு முன்பே, ஆங்கிலேய-நார்மானிய மொழியையும், நிலையங்களையும் விரும்பிப் பெற்று, தயக்கமற்ற வகையில் அமைத்துக்கொண்டதைக் காணுகின்றோம். எனவே, இடைக்கால அயர்லாந்திலும் வேல்ஸிலும் காண்பதைப் போன்று இங்கு இங்கிலாந்திற்கு எதிர்ப்பு என்பதை, கெல்ட்டிக்கு மொழி யிடையே, கெல்ட்டிக்கு பழங்குடிமக்களின் பழக்கவழக்கங்களி டையே ஒன்றாக வைத்து நோக்க வேண்டிய நெருக்கடி இல்லா மல் போயிற்று. எட்வர்டு அரசர்களுக்கும் வாலசுக்கும் இடையே நடந்த போர்களும், எட்வர்ட்டுகளுக்கும் புரூஸுக்கு மிடையே நடந்து வந்த போர்களும் உறவு மிக்க ஒரு தேசிய இனங்களுக்கிடையேயும், நிலமானியப் படைமுறையில் அமைக் கப்பட்ட இரு முடியரசுக்கும் இடையேயும் நடந்துவந்தபோராட்ட மாகவே காணப்பட்டன. இடைக்கால வரலாற்றில் அயர்லாந்து அல்லது வேல்ஸ் போராட்ட முறையின் ஒப்புமை இங்கிலாந்து கல்லோடன் (Culloden) போர்க்களத்து, மேட்டு நில மக்களை வெற்றிக் கொண்டதிலேயே காணமுடியும்.

இருண்ட காலத்தில் ஸ்காட்லாந்து தனது கீழ்க் கரைப் பள் ளத்தாக்குப் பகுதியில் சாக்சானியரைக் கொண்டு, கெல்ட்டிக்கு அரசாகத் திடீரென்று தாக்குவதற்குரிய சூழ்நிலையை அமைத் திருந்தது. ஏனெனில், பழங்குடி மக்களின் பிக்ட்சுக்களும், ஸ்காட் டியர்களும், ஒன்றாக இணைந்து கென்னத் மேகல்பைன் (Kenneth Macalpine) என்னும் ஸ்காட்டியரின் தலைமையில் கெல்ட்டிக்குகள் தலைநகரான ஸ்கோனில் (Scone) இருந்து ஆட்சி புரிவதற்குரிய ஓர் அரச மரபைப் பெயர் பெற்று விளங்குமாறு செய்தது.




படம் 15.

இடைக்காலத்திய ஸ்காட்லாந்தும் வட இங்கிலாந்தும்

ஆனால், வரலாறு வேறு வகையாக மாறத் தொடங்கியது. சாக்சானியரின் நார்த்தம்பரியாவின் பகுதியான லோத்தியன், டுவீட் நதிக்கும், செவ்வியட்டு ஆற்றுக்கும் வடக்கே அமைந்திருந்தது. அதனுடைய தென்னாட்டுத் தொடர்புகள் அனைத்தும் அறுக்கப்பட்டு, ஸ்காட்லாந்தினை முழுமை ஆக்குவதற்குரிய பகுதியாக அது மாற்றப்பட்டது. இம் மாற்றம் வைக்கிங்குகளின் படையெடுப்புகளாலும், தாக்குதல்களாலும் நார்த்தம்பிரிய அரசு சிதைந்து போன இயற்கை விளைவினால் உண்டானதாகும். ஸ்காட்லாந்தின் இதயமாகிய இப் பகுதியில் பல தலை முறைகள் கெல்டிக்குகளுக்கும், சாக்சானியர்களுக்கும் இடையறாது போர்கள் நடந்த பின்னர், கானியூட்டு (Canute) அரசர் காலத்தில் (1018) ஸ்காட்டிய அரசின் உடைமையாக லோத்தியன் பகுதி ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஆங்கில மொழி பேசும் லோத்தியரின் பகுதி புதிதாக ஸ்காட்லாந்தோடு இணைக்கப்பட்ட பிரதேசமாகும். அங்குச் செழிப்பு மிக்க வேளாண்மைக்குரிய நில வளமும், எடின்பரோவின் மலைக் கோட்டையும் சிறப்புடையதாக விளங்கின. இதுவரை ஸ்காட்டிய அரசபதவி கெல்ட்டிக்குப் பழங்குடி மக்கள் பண்புடையதாகவும்,வட மேற்குப் பகுதியில் தோன்றியதாகவும் இருந்துவந்தது. அதற்குமாறாக, இப்போது ஆங்கிலேய நார்மானியரும், நிலமானியப்படை முறையும் தென் கிழக்கில் தோன்றிய அரச மரபும், ஸ்காட்லாந்தினை ஆட்சி புரியத் தொடங்கின. முடியாட்சியினால் ஸ்டிராத்கிளைடு, காலோவே முதலிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட அல்லது விரட்டப்பட்ட இனத்தினர் பெயரளவிற்கு கெல்ட்டிக்குகளாக இருந்தனர். இம்மக்கள் முடிவாக ஆங்கிலேயமொழியினையும், நிலமானியப் படை முறை அமைப்புகளையும் பின்பற்றலாயினர். இத்தகைய வெளிப்படையான, நீண்ட சிக்கலான தெளிவில்லாத பரிணாம வளர்ச்சியில் ஒன்று அல்லது இரண்டு நிலைகளை நாம் காண முடிகின்றது.

ஆங்கிலேய-நார்மானியரின் செல்வாக்கு தொடங்கிய காலத்திற்கு முன்பு, முதலாவதாக பதினொன்றும் நூற்றாண்டின் கடைப் பகுதியில் ஆங்கிலேயரின் தூய செல்வாக்குக் காலம் இங்குத் தொடங்கியது எனலாம். மூன்றும் மால்கம் (Malcolm III, 1057-1093) என்பவர் மாக்பெத்தினை அரியணையிலிருந்து விரட்டுவதற்கு முன்பு, தம்முடைய இளமைப் பருவத்தின் பெரும் பகுதியை, இங்கிலாந்தில் நாடு கடத்தப்பட்டவராக இருந்து கழித்து வந்தார். அக் காலத்தில் அருளாளர் எட்வர்ட்டு இங்கிலாந்தினை ஆண்டு வந்தார். அவர் பெற்ற ஆங்கிலேயச் சார்புடைய கல்விப்

பயிற்சி, அவரது பிற்கால வாழ்க்கையில், எட்கர் ஏத்திலிங் என்பவரின் தங்கையான புனித ஒழுக்கமும், உறுதியான உள்ளமும் படைத்த மார்க்கரெட் (Margaret) என்னும் பெண்ணை இரண்டாவது மணம் புரிந்து கொண்டதன் மூலம் மிகுதிப்படுத்தப் பட்டது. அரசி என்ற முறையில், ஸ்காட்லாந்தில் கெல்ட்டிக்கு மரபுகளுக்கு எதிராக அவள் ஆங்கிலேய மொழியையும் ரோமானியச் சமய முறைகளையும் பலப்படுத்துவதற்குப் பலவாறு தொண்டாற்றினாள். அவளுடைய பிடிவாதமான முயற்சி ஸ்காட்லாந்தின் கெல்ட்டிக்குப் பழங்குடி மக்களுக்கும், குருமார்களுக்கும் அவளிடத்து வெறுப்பினை உண்டாக்கியது. ஆனால், அவள் ஹேஸ்டிங்ஸ் போருக்குப் பிறகு இங்கிலாந்தில் தம் இனத்தவர்களுக்கும், தம் மரபினருக்கும் உண்டான பேரழிவினைக் கருத்தில் கொண்டு ஸ்காட்லாந்தில் விடாமுயற்சியுடன் ஆங்கிலேய மொழியையும் பண்பாட்டையும் வளர்ப்பதில் முனைந்திருந்தாள். நார்மானியப்படையெடுப்பின் முதல் விளைவாகத் தெற்குப் பகுதியின் எல்லைப்புறத்தில் தங்கியிருந்த சாக்சானிய, ஸ்காண்டிநேவிய நாடு கடத்தப்பட்ட மக்கள் எல்லைப்புறத்திற்கு விரட்டி அடிக்கப்பட்டனர். மார்க்கரெட் இருந்த யாக்சையரின் பின்புறத்திற்கும் டர்ஹாமிற்கும், வில்லியமும் அவரது வீரர்களும் வடக்கினைக் கொள்ளை அடிப்பதைப் பொறுக்கமாட்டாமல் அவர்கள் பரந்து ஓடினர். இவ்வாறு புகல் அடைந்த மக்களால் லோத்தியனைச் சேர்ந்த சாக்சானியர்களை அடிப்படையாகக் கொண்டிருந்த ஸ்காட்லாந்தில் நார்ட்டிக்கு இனக்கூறு பெரிதும் வலுப்படுத்தப்பட்டது.

ஆங்கிலேய செல்வாக்கு ஆங்கிலேய-நார்மானியரின் விரிவான நுழைவிற்கு வழிவகுத்துத் தந்தது. மால்கம், மார்க்கரெட் ஆகிய இருவருக்கும் பிறந்த மாண்புமிக்க மகனே முதலாம் டேவிட் (1124–1153). ஸ்டீபன் (Stephen) காலத்தில் இங்கிலாந்திற்கு உண்டான கேடுகளைப் பயன்படுத்திக் கொண்டு, டேவிட், ஸ்காட்லாந்தினைப் புதிதாக நார்மானியரின் நிலமானியப் படைமுறை முடியாட்சி முறையில் அமைக்கத் தொடங்கினர். உரிமை வழக்கிற்குரிய கம்பர்லாந்து, நார்த்தம்பர்லாந்து, டர்ஹாம் பிரதேசங்களில் இயன்ற வரை தமதாக்கிக் கொண்டார். டுவீட் நதிக்கும் செவ்வியட் ஆற்றுக்கும் அப்பால் அவர் பெற்ற வெற்றி நிலை பெற்றிருக்கவில்லை. இங்கிலாந்து பிளாண்ட்டா ஜெனட்டு அரசமரபினர் காலத்து மீண்டும் தன்னுடைய இழந்த ஆற்றலைப் பெற்றுச் சிறப்புற்றது. அக்காலத்து இவ்விரு அரசுகளுக்கு இடையே உள்ள எல்லைப் பகுதிகள் இன்றையதின அமைப்பினை மெல்ல மெல்லப்பெற்று உருவாக்கியதாகத் தெரிகின்றது. ஆனால்,

ஸ்டீபன் காலத்தில் உண்டான குழப்பத்தின்போது, டேவிட் வட இங்கிலாந்தின் மீது படையெடுத்துச் சென்றார். அது ஸ்காட்லாந்து நகர்ப்புறப் பழங்குடி மக்களின் ஒழுங்கு முறைக்கு உட்படாத அவர்களுடைய முயற்சி எப்படி வீணாயிற்று என்பதை நமக்கு விளக்குகின்றது. அவர்கள் தங்களுடைய களிமண் சட்டைகளை அணிந்து இங்கிலாந்தைச் சேர்ந்த இரும்புக்கவசம் அணிந்த நிலமானியப் படைமுறை மாவீரர்களை எதிர்த்துப் போராட முயன்ற முயற்சி பயன்படாது போனதைப் பார்க்கின்றோம். இதை நார்த்தலர்ட்டன் (Northallerton) என்னும் இடத்திற்கு அருகில் 1138-ல் நடந்த ஸ்டாண்டர்டு போரினால் (Battle of Standard) அறிகிறோம். ஸ்காட்டிய அரசர்கள் வேண்டுமென்றே மாற்றம் செய்யப்பட்ட திட்டங்களுடன், பழங்குடி மக்கள் பண்பினை அழிப்பதையும் கெல்ட்டிக்கு நிலையங்களை அழிப்பதையும் நோக்கமாகக் கொண்டு புதியதொரு செயலில் இறங்கியிருப்பது வியப்பிற்குரியதாகும்.

அரசர் டேவிட்டினால் புரூசுக்கள், பல்லியோக்கள் (Bruces and Balliols) போன்ற நார்மானிய அல்லது ஆங்கிலேய இனத்தைச் சேர்ந்த வீரர்கள் எல்லைப்புறத்திற்கு அழைக்கப்பட்டனர். ஸ்காட்லாந்தின் அரசரிடத்து தனிப்பட்ட முறையில் அவர்கள் நிலமானியப்படைமுறைப் பணிபுரியுமாறு நிலப்பிரபுக்களாக்கப்பட்டனர். அதற்காக ஸ்காட்லாந்தில் அவர்கள் பண்ணைகளைப் பெற்றனர். ஹேஸ்டிங்ஸ் போருக்குப் பிறகு இங்கிலாந்தில் நடைபெற்றதைப் போன்று, அக்காலத்திலிருந்த நிலப்பிரபுக்கள் பெரிதும் இடம் பெயர்ந்து மாற்றப்படவில்லை. ஏனென்றால், இது நார்மானியரின் நுழைவே அன்றி, நார்மானியரின் வெற்றி அன்று. அரசர் டேவிட் ஆட்சிக்குட்பட்டிருந்த பெரும் பண்ணைகளின் பயன்படுத்தப்படாத நிலங்களில் புதிதாகக் காணியாட்சிப் பகுதிகள் உண்டாக்கப்பட்டன. எனவே டேவிட் முற்றிலும் நிலத்தினைப் பறிமுதல் செய்கின்ற முறையினைப் பின்பற்றாது, புதிதாக வந்த பிரபுக்களுக்குப் பல காணியாட்சிப் பகுதிகளை வழங்கினார். ஆனால், புதிய அரசு நிலத்தில் புதிதாகச் சென்று குடியேறியவர்களும் அல்லது அங்கு நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்ற கெல்ட்டிக்கு குடிமக்களும், தங்களுடைய ஆங்கிலேய நிலமானியப் பிரபுக்களிடம் தாங்களே கட்டுப்படியான நிலமானியப் படை முறைத்தொடர்பு உடையவர்களாக்கப்பட்டுள்ள அவல நிலையினைத் தாங்களே அறிந்தனர். அந்தப் புதிய ஆங்கிலேய நிலமானியப் பிரபுக்களும், புதிதாகப் பெற்ற பகுதியில் தங்களுடைய உரிமையைப் பிறர் மதிக்கும்படி செய்வது எப்படி என்பதை நன்கு அறிந்திருந்தனர். அக்கால இங்கிலாந்தினைப்

போன்றே, அப்பகுதியில் எங்கும் வட்டவடிவமான மண் மேடுகள் அமைக்கப்பட்டு, அதன்மீது மரத்தினலோ, கல்லினலோ கோட்டைகள் கட்டப்பட்டன. அங்கிருந்த படைக்கலம் ஏந்திய குதிரைப் படையினர் நாட்டுப்புறத்தினை ஆட்சி புரிந்து, வழக்குகளை விசாரித்து, நீதி வழங்கிவரலாயினர்.

இத்தகைய காவல் சுற்கோட்டைகளுக்கு பக்கத்தே, திருச்சபை வட்டாரங்கள் அமைக்கப்பட்டன. அங்கு ஆங்கிலேய முறைப்படி ஆங்கிலேய-நார்மானியரின் ஆதரவில் திருச்சபைகள் அமைக்கப்பட்டன. புதிய பிரபுவின் மானியத்தின் தேவைக்கு உதவக் கூடிய வகையில் திருச்சபை வட்டாரங்கள் பெரிதும் அமைந்திருந்தன. சமயம் மட்டுமல்லாமல், அரசாங்கமும் நாட்டின் பல்வேறு பிரிவுகளுக்கேற்ப அமைக்கப்பட்டன. செயின்ட் கொலம்பாவின் திருச்சபை புனித ஆவியாகவும், பழம் பெரும் நினைவாகவும் மாறியது. அதைப்போன்றே திருச்சபையை நிறுவுவதற்கு உழைத்த மக்களும் மெல்ல மெல்ல மறைந்து போயினர். அரசர் டேவிட்டும் அவருடைய பிரபுக்களும் புனித மானியங்களை நார்மானியர்களுக்குக் கட்டளைகளாக வழங்குவதில் ஒருவரோடொருவர் போட்டியிட்டனர். பன்னிரண்டாம், பதின்மூன்ரும் நூற்ருண்டுகள் ஸ்காட்லாந்தின் திருச்சபைக் கட்டடக்கலையின் மாண்புமிக்க காலமாகும். வீறுமிக்க திருக்கோயில்களும், மடாலயங்களும் பல ஸ்காட்லாந்தில் இக்காலத்தில் கட்டப்பட்டன. அவை அனைத்தும் பிற்காலத்து ஆங்கிலேயப் பாசிப்படை வீரர்களாலும் அல்லது ஸ்காட்டிய சீர்திருத்த இயக்கத்தினராலும் அழித்து ஒழிக்கப்பட்டன. முதலிலிருந்தே பிறநாட்டுக் குருமார்களின் நன்மைக்காகத் தங்கள் மீது டேவிட்டு அரசரால் சுமத்தப்பட்ட, வருமானத்தில் பத்திலொரு பங்கான 'தித்தே' (Tithe) என்னும் வரியையும், புதிய வரிகளையும் ஸ்காட்லாந்து மக்கள் வெறுத்து வந்தனர். மேலும் நிலப்பிரபுக்களின் நோக்கமெல்லாம் முதலிலிருந்தே சமய அறக் கட்டளைகளைத் தங்களுடைய குடும்ப நலன்களுக்கு எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பதிலேயே பெரிதும் ஈடுபட்டிருந்தது. அவர்கள் கொண்ட பெரு விருப்பம் பல விந்தையான திட்டங்களின் மூலம், நிறைவேற்றப் பட்டதைக் காணுகின்ரேம். இதற்கு எடுத்துக்காட்டாக நேரிடையான முறைகளில் சீர்திருத்த நோக்கம் இந்நாட்டினுள் புகுத்தப் பட்ட காலம் வரையில் போர்வீரர்களான பிரபுக்கள் திருச்சபையினராகத் தங்களைக் கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றும் செயல்களில் ஈடுபட்டிருந்தனர்.

டேவிட்டும் அவருக்கு அடுத்து ஆட்சிக்கு வந்த அரிமாவில்லியமும் (William the Lion) ஆங்கிலேய அரசின் பல்வகைப் பண்புகளையும் முறைகளையும் தங்கள் நாட்டு ஆட்சியில் புகுத்தி, குறிப்பிடத்தக்க அளவிற்கு வெற்றியும் அடைந்தனர். மாவட்ட ஆட்சி முறையும், அரசரின் முறை மன்றம் நீதி வழங்குதலும் பையப் பைய ஸ்காட்லாந்தில் பின்பற்றப்பட்டதைக் காணுகின்றோம். ஆனால், அவை நிலப் பிரபுக்களின் வாக்குரிமையினால் பெரிதும் வரையறுக்கப்பட்டு, கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஒன்றாகவே இருக்க நேர்ந்தது. ஸ்காட்டிய உரிமைபெற்ற நகரங்கள் (Burghs) தங்களுடைய நடுவர்களைத் தாங்களே தேர்ந்தெடுப்பதற்கு, அரசரிடமிருந்து பட்டயங்களைப் பெற்றன. இங்கிலாந்தின் செல்வமும் மக்கள் தொகையும் மிகுதியாக உடைய நகரங்களான பரோக்களைக் (Boroughs) காட்டிலும் மிக எளிதில் இவை இவ்வுரிமையைப் பெற்றன.

எத்தனை நெடுங்காலம் இங்கிலாந்தினோடு தாராள மனப்பான்மையுடன் தொடர்பு கொண்டு இருந்ததோ, அதுவரை ஸ்காட்லாந்து தம்மை உருவாக்கிக் கொள்வதிலும், உறுதிப்படுத்திக்கொள்வதிலும், ஆற்றலுடையதாக விளங்கியது. உரிமைப் போர்களுக்கு முந்திய நூற்றைம்பது ஆண்டுக் காலத்தில் (1124–1286) ஸ்காட்லாந்தின் பிரபுக்கள் தங்கள் அரசருக்கும், நாட்டிற்கும் தாங்கள் வேறு எப்போதுமே தொண்டு புரியாத அளவிற்கு மிகச் சிறந்த அளவில் பணியாற்றி வந்தனர். அவர்களும் அவர்களுடைய கீழாட்களும் ஆங்கிலேய மொழியைப் பரப்புவதிலும் ஆங்கிலேயப் பெயர்களையும், நிலையங்களையும் நாடு முழுவதிலும் அமைப்பதிலும் வெற்றி பெற்றனர். இவர்களுடைய இம்முயற்சி வாலசின் ஆட்சியிலும் புரூஸின் ஆட்சியிலும் ஸ்காட்டியர் இத்தகைய நிலையங்களை அமைப்பதற்குத் தங்களுடைய உயிர்களைக் கொடுக்க முன் வந்தனர் என்று சொல்லுமாறு செய்தது. மேற்குத் தாழ் நிலங்களுக்கு அப்பால் கெல்ட்டிக்குப் பழங்குடி மக்களின் பண்பு மெல்லமெல்ல மறைந்து விட்டது. அவர்கள் நாம் எதிர்பார்த்ததை விட மிகக் குறைந்த முறையிலே படைக்கலன் ஏந்தி இவற்றை எதிர்த்தனர். இதற்கு விதி விலக்காகக் கொடிய காலோவேயினைக் (Galloway) குறிப்பிடலாம். அங்குக் கெல்ட்டிக்கு இனத்தோடு தொடர்புடைய பொருள்கள் அனைத்தும், நீண்ட நெடுங்காலம் வாழ்ந்ததோடு அழிவதும் மிகமிகக் கடினமாகவே இருந்தது. வெல்ல முடியாத இரும்புக் கவசம் அணிந்த நிலமானியப் படை முறைக் குதிரைப் படையினரைத் துணைக்குக் கொண்டு, தம்மிடத்து நிலமானியப் படை முறைப் பிரபுக்களாக பணி புரிய மறுத்த கெல்ட்டிக்கு

இனத் தலைவர்களை அரசர் எளிதில் புறக்கணிக்க முடிந்தது பழைய வாழ்க்கை முறை அனைத்தும் மெல்லமெல்லச் சுருங்கி வடக்கு மேட்டுநில மலைப்பகுதிகளில் மட்டும் அழியாத வாழ்வினைப் பெற்றது. அங்கு ஸ்காட்லாந்தின் பழங்குடி மக்கள் பண்பும் செயலும் 1746–ஆவது ஆண்டு வரையில் நிலைத்து வாழ்ந்ததைக் காணுகின்றோம். அம்மேட்டு நில எல்லையின் மேற்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த மக்கள் பையப்பைய புதிய ஆட்சி முறைக்குரிய பெயர்களையும் பழக்கவழக்கங்களையும் மொழியினையும் ஏற்றுத் தங்களுடையதாக்கிக் கொண்டனர்.

இத்தகைய மாபெரும் மாற்றங்கள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்த அக்காலத்தில், அரசும் நிலப்பிரபுத்துவமும் ஒன்றுக்கு மற்றொன்று மிக இன்றியமையாததாக இருந்து வந்தது. அவை இரண்டும் இளமைப் பருவத்திலிருந்து நாட்டினரின் நன்மைக்கு இன்னும் மிக இன்றியமையாதனவாக இருந்து வந்தன. முதலாம் எட்வர்ட்டுக்கு எதிராக உரிமைப் போர் தொடங்கிய காலத்தில்தான், புதிதாக அமைக்கப்பட்ட நாடு சோதனைக்கு ஆளாகியது. நிலப் பிரபுக்களை விட, பொது மக்களே புதிய கொள்கையான நாட்டுப் பற்று என்பதனை உணர்ந்து, அதற்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்ய முன்வந்தனர். நிலப்பிரபுக்கள் இங்கிலையில் நாட்டுப் பற்று அற்றவர்களாக இருந்தமைக்குக் காரணம், நிலமானியப் படைமுறை அனைத்து நாட்டு முறையாக இருந்தமையும், அவர்களுடைய பண்ணைகள் இங்கிலாந்திலும் இருந்து வந்தமையுமாகும். இதனால் அவர்கள் இரு நாட்டு அரசர்களிடத்தும் இருதிறப்பட்ட பற்றுறுதி உடையவர்களாக இருக்க வேண்டிய நெருக்கடி இருந்து வந்தது. ஸ்காட்டிய முடியாட்சி, நாட்டு மக்களின் உள்ளங்களிலும், பழக்கவழக்கங்களிலும் நிலையான இடத்தைப் பெற்ற பிறகுதான், நிலப் பிரபுத்துவம் முடியாட்சியின் மாறாத, மிக ஆபத்தான, பகையாக விளங்கத் தொடங்கியது.

மூன்றாம் அலெக்சாண்டரின் குதிரை அவரைக் கடலின் செங்குத்தான பாறைக்குத் தூக்கி சென்றதோடு (1286) இடைக்கால ஸ்காட்லாந்தின் போர்களும் ஒரு முடிவிற்கு வந்தன. அவருக்குப் பிறகு ஆட்சி உரிமைக்கு உரியவராக இருந்தவர், அவருடைய பேர்த்தியான மார்க்கரெட் என்பவள் ஆவாள். அவளை "நார்வே நங்கை' (The Maid of Norway) என்று கூறுவது மரபு. அவளுடைய மிகக் குறுகிய ஆட்சிக் காலத்து, ஸ்காண்டிநேவியாவில் அவள் இருந்தாள். பிருகாம் (Brigham) உடன்படிக்கையின்படி (1290) முதன் முதல், வேல்ஸின் இளவரசராக விளங்கிய ஆங்கி

லேயரான இரண்டாம் எட்வர்ட்டினை அவள் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாறு அமைதியான முறையில் இங்கிலாந்து தீவுகளின் கூட்டமைப்பு மிக அருகிலே உருவாகிக் கொண்டிருந்தது. இங்கிலாந்து, ஸ்காட்லாந்து ஆகிய இரண்டு நாடுகளின் முடிகளும் இனி ஒருவருடைய தலையிலே சூட்டப்படும் என்ற நிலை உண்டாயிற்று. ஆனால், இரு நாட்டினரும் தனிப்பட்ட ஆட்சி பகுதிகளாகவே அரசாளப்பட்டுவருவர் என்பது உறுதியாயிற்று. ஆனால், இவையனைத்தும் மிகப் பிற்பட்ட காலத்தில் ஸ்காட்லாந்தின் அரசரான ஆறும் ஜேம்ஸ், இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸாக அரியணை ஏறிய போதுதான் செயற்படுத்தப்பட்டது. வரலாற்றின் போக்கு இவ்வாறு முன்கூட்டியே குறைக்கப்பட்ட ஒன்றாக இருக்குமாறு விடப்படவில்லை. ஸ்காட்டியர்கள் அப்போதே கப்பல் கடந்து, வெளி நாட்டிலிருந்து தங்களுடைய இளமை பொருந்திய அரசியை அழைத்து வருகின்ற பொழுது நற்பேறுடையவர்களாக இருக்கவில்லை. அதே ஆண்டு கூதிர்ப் பருவத்தில் ‘நார்வேயின் நங்கை’ தாயகத்திற்குக் கப்பல் வழியாக வருகின்ற பொழுது ஓர்க்நேசு (Orkneys) என்னும் இடத்தில் உயிர் நீத்தாள்.

அக் கன்னிப் பெண்ணுடன், இத்தனை பிரச்சினைகளுக்கும் அமைதியான வழியில் முடிவு காண்பதற்குரிய வாய்ப்பும் இல்லாமல் போயிற்று. முதலாவது எட்வர்டு பழைய ஆங்கிலேய அரசர்களுக்கு ஸ்காட்லாந்தின் மீது இருந்த மேலாட்சி உரிமையை மீண்டும் வற்புறுத்தத் தொடங்கினர். அவர் ஸ்காட்லாந்தின் அரியணைக்குப் போட்டியிட்ட பல்வேறு வகையாக உரிமை கொண்டாடியவர்களுக்குத் தீர்ப்பு வழங்கும் உரிமை தமக்கே உண்டு என்று அறிவித்தார். இந்நிலையில் ஸ்காட்லாந்தின் அரசு கட்டில் ஏறுவதற்குப் போட்டியிட்டோருள் ஜான்பாலியல் (John Balliol) என்பவரும், ராபர்ட் புரூஸ் (Robert Bruce) என்பவரும் குறிப்பிடத்தக்கவராவர். முதலாம் எட்வர்டு ஜான்பாலியலை ஆதரிப்பது என்று முடிவு செய்தார். அவருடைய முடிவும் நேர்மையானதாகவே தோன்றியது. ஆனால், அவர் அத்துடன் மனநிறைவு அடையாது, பாலியலை ஸ்காட்லாந்து அரியணையில் வீற்றிருக்கும் கைப்பாவையாக நடத்தினர். மேலும் ஸ்காட்லாந்து தன்னுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்ட அடிமை நாடாகவே எட்வர்டு கருதி வந்தார் பொறுக்கமுடியாத தொல்லைகளாலும், இடையூறுகளாலும் மனம் உடைந்த பாலியல் தம்மைத் துன்புறுத்தும் தமது மேலாட்சியாளரிடத்து தாம் வைத்திருந்த பற்றுறுதியைத்

துறந்தார். ஆனால் பாலியலும் உட்பகை உடையவர்களாக விளங்கிய அவருடைய பிரபுக்களிடமிருந்து சிறிதளவும் ஆதரவு பெற முடியாது அல்லற்பட்டார். எனவே, எட்வர்ட்டினால் 1296 ஆம் ஆண்டு எளிதிலே பாலியல் ஸ்காட்லாந்தின் அரச பதவியிலிருந்து விரட்டப்பட்டார். எட்வர்ட்டு ஸ்காட்லாந்து முழுவதிலும் வெற்றியுடன் படையெடுத்துச் சென்று வெற்றி விழாக் கொண்டாடினார். ஸ்காட்லாந்திலுள்ள ஸ்கோனில் (Scone) இருந்த முடி சூட்டு விழாவிற்குரிய ஆரியாசனத்தை வெஸ்ட்மின்ஸ்டருக்கு எடுத்துச் சென்றார். அங்கு எட்வர்டு ஒரு முடி சூட்டுவிழாவினை நடத்தி, தம்மை ஸ்காட்லாந்தின் அரசர் என்று அறிவித்துக் கொண்டார். அந்தச்சமயத்தில் அவருக்கு வணக்கத்தோடு மரியாதை செலுத்திய ஸ்காட்டிய பிரபுக்களைப்பற்றிய பட்டியல் ராக்மென் பட்டியலில் (Ragman Roll) காணப்படுகின்றது.

எல்லாம் ஒரு முடிவிற்கு வந்ததாகத் தோன்றுகிறது. உண்மையில் எல்லாம் இதற்குமேல்தான் தொடங்கப்பட போகின்றது. தங்களுடைய பிரபுக்களால் கைவிடப்பட்ட ஸ்காட்லாந்து தன்னைத்தானே கண்டுணர்ந்து கொண்டாள். முதலாம் எட்வர்டு தனக்குப் பிறகு விட்டுச் சென்ற ஆளுநர்கள் ஸ்காட்லாந்தில் திறமையற்றவர்களாகவும், கொடுங் கோலர்களாகவும் இருந்துவந்தனர். இத்துடன் ஸ்காட்லாந்தில், அயல்நாட்டுப் படை வீரர்களைக்கொண்ட படை தங்கியிருப்பது ஸ்காட்டியர்களுக்குத் தாங்கள் அடிமை நாட்டவர் என்ற உணர்வினை ஊட்டிக் கொண்டிருந்தது. அடுத்த மே மாதம் முதல் (1297) அறிவுத் திறன் வாய்ந்த கொரில்லாப் போர் முறையில் வல்ல தலைவர் ஸ்காட்டிய அரசியல்தன்னிலே தோற்றம் அளித்தார். அவர் வீரம் மிக்கவராயும் ஆற்றல் உடையவராகவும் விளங்கினார். அவர் திடீரென்று வரலாற்று ஏடுகளில் எங்கேயோ இதுவரை இருந்து திடீரென்று தோற்றம் அளிக்கின்றார். அவர் நிலமானியப்படை முறையில் மாபெரும் குற்றங்களைச்செய்துகொண்டு இருந்தவரான வார்னே (Warenne) கோமகன் என்பவராவார். அவருடைய தலைமையில் தம்மை எதிர்த்த ஆங்கிலேயப்படையை ஸ்டர்லிங்கு பிரிட்ஜ் (Stirling Bridge) என்னுமிடத்தில் தோற்று ஓடுமாறு செய்தார். வார்னே கோமகன் எத்தகுதி பற்றிய (Quo Warranto) வழக்கு விசாரணை முறையினால் அக் காலத்துப் பெரும் புகழ் பெற்றிருந்தவராவர். அவ்விடத்திலிருந்த வில்லியம் வாலசு (William Wallace) என்னும் ஸ்காட்டியத் தலைவர் நார்த்தம்பாலாந்து, கம்பர்

லாந்து ஆகிய பகுதிகளைப் பாழாக்கிப் பெரும் படையுடன் முன்னேறிச் சென்றார்.

முன்பின் அறியாத இம்மாபெரும் மாவீரர் சிறிதளவு தொண்டாற்றிய போதிலும், வரலாற்றிலே பெரும் புகழ்மிக்க வகையில் தம்முடைய பெயரினைப் பொறித்துச் சென்றவராவர். அவர் மூட்டிய நாட்டுப் பற்று என்னும் தீ, அன்று முதல் இன்று வரை, அணைக்கப்படாது கொழுந்து விட்டுக் கனன்று கொண்டிருப்பதைக் காணுகின்றோம். ஸ்காட்லாந்தில் இத்தகைய நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த அதே காலத்தில், ஸ்விட்ஸார்லாந்திலும் இத்தகைய நாட்டுப் பற்று என்னும் தீ நாடு எங்கும் பரவி, மக்களுடைய உள்ளங்களை எல்லாம் கவர்ந்து கொண்டு இருந்தது. வேறு புதியதொரு குறிக்கோளும் வியக்கத்தக்க ஆற்றல்மிக்க வழக்காற்று மரபும் உலகில் தோன்றி வளரலாயிற்று. அக்காலத்து அதற்கெனத் தனிப்பெயர் வழங்கப்படவில்லை. ஆனால், நாம் இன்று அதை மக்கள் ஆட்சிப் பண்பு மிக்க 'நாட்டுப் பற்று' என்று போற்றுகிறோம். அது ஒரு கொள்கையின் வெளிப்பாடன்று. ஓரின மக்களின் தன் உணர்வுற்ற பண்புகள், சட்டத்தின் முக்கியத்தினால் திடீரென்று வெளிப்பட்டபொழுது அதற்கு ஓர் உண்மையான வடிவம் கொடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு நாட்டினப் பண்புக் (Nation hood) கொள்கைகளும் மக்களாட்சிக் கொள்கைகளும் தொடர்ந்து தோன்றி, நாட்டுப்பற்று நேர்மையானது என்பதை வலியுறுத்தவும் அதைக் காரணம் காட்டி விளக்கவும் தொடங்கியதைச் சரித்திரம் பேசுகிறது.

முதலாம் எட்வர்டு அக்காலத்திய நிலமானியப் பண்முறைத் துணைக் கருவியின் மூலம், ஸ்காட்லாந்தினை இங்கிலாந்திற்கு அடிமைப்படுத்தப் போவதாக நினைத்தது இயல்பேயாகும். ஏனென்றால், அக்காலத்திய மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்காற்று முறைப்படி அவர் மேற்கொண்ட நடவடிக்கை இயல்பு கடந்ததாகக் கருதப்படவில்லை. ஆனால், வாலஸ் ஸ்காட்டிய மக்களாட்சிப் பண்பிற்கு, வியக்கத்தக்க வகையில் ஸ்காட்டிய இனத்தைக் காக்குமாறு வேண்டுகோள் விட்டமையே இயல்பு கடந்ததாக அந்நாளைய மக்களுக்குத் தோன்றியது. இக்காலத்தில் தேசிய உணர்வும், மக்களாட்சி இயல்பு ஊக்கங்களும் ஐரோப்பாவின் ஒவ்வொரு பகுதியிலும் நடைமுறையிலே இருக்க வேண்டுமென்பதை நாம் உண்மையிலேயே எதிர்பார்க்கின்றோம். ஆனால், இடைக்காலத்தில் மக்களுடைய கருத்துக்களும் கொள்கைகளும் வேறு வகையாக இருந்தன. மக்கள் சமுதாயம் செங்குத்தான தேசிய இனங்களாக அக்காலத்தில் பிரிக்கப்படவில்லை.

அதற்குமாருகப் படுக்கை மட்டமான நிலமானியப் படை முறை அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டு இருந்ததை நாம் எல்லாம் அறிவோம். மேலும், முதலாம் எட்வர்டு ஸ்காட்லாந்தின் நிலமானியப்படை முறையைச் சேர்ந்த பெருமக்களே பெரிதும் தங்களுடைய கட்சியை ஆதரிக்குமாறு செய்திருந்தார். ஆங்கிலேய நார்மானியர்கள் இங்கிலாந்தில் மட்டுமல்லாமல், ஸ்காட்லாந்திலும் பெரும் பண்ணைகளை உடையவர்களாக இருந்த காரணத்தினுல் ஸ்காட்டிய நாட்டுப் பற்றில் அவர்கள் கருத்தைச் செலுத்தாது இருந்தது மன்னிக்கத்தக்கதுற்றமாகும். அதே நேரத்தில் அவர்கள் இங்கிலாந்தின் அரசரோடு சிறு பூசல்களில் ஈடுபடாமல் இருக்கப் பெரிதும் விரும்பினுர்கள். ஏனென்றுல், அவர்களுடைய இங்கிலாந்தின் நிலங்கள் எல்லாம் ஆங்கிலேய அரசரின் மேலாண்மையின் கீழ் அவர்கள் பெற்றிருந்தமையால், ஆங்கிலேய அரசரின் கருத்துக்கு மாருக நடப்பதற்கு அவர்கள் அஞ்சினர்.

ஆனுல், ஸ்காட்டிய மக்கள் தேசிய உணர்வும், மக்கள் ஆட்சி உணர்வும் ஒருங்கே உடையவர்களாக விளங்கினர். இதுவரை அப்பண்புகள் தன்னுணர்வற்ற அவர்களிடையே இருந்ததோடு, பயிற்சி செய்யப்படாததாகவும் இருந்துவந்ததைக் காண்கின்ருேம். வாலஸ் அத்தகைய உயர்ந்த உணர்வுடைய மக்களைச் செயலாற்றுவதற்கு அழைத்தார். நகர மக்களும் உழவர்களும் ஸ்காட்லாந்தின் நிலக் கிழார்களின் தலைமையின் கீழ் அல்லது சிறிய பெருமக்களின் கீழ் ஒருங்கு திரண்டு இங்கிலாந்தின் ஆதிக்கத்தை எதிர்த்தனர். மேலும் நெருக்கடி நேர்ந்த போது எல்லாம் தங்களுடைய ஸ்காட்டிய பிரபுக்களின் ஆதிக்கத்தையும் அவர்கள் துணிவுடன் எதிர்த்துப் போராடினர். ஸ்காட்டிய மக்களின் தலைவராக விளங்கிய வாலஸ் ஸ்காட்லாந்தின் நிலக்கிழார் மரபிலோ, சிறிய பெருமக்கள் குடியிலோ தோன்றிய ஒருவரேயாவார். ஸ்காட்டிய பெரு வீரர்கள் 'ஸ்கில்டிரன்சு' (Schiltrons) என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் மிக நெருக்கமான பொது மக்கள் மரபிலே தோன்றிய ஈட்டிப் படையினராவர். ஆனுல் ஒருவரோடு ஒருவர் மிக நெருங்கி நின்று படைக்கலம் ஏந்தி ஆங்கிலேயரின் மாவீரர்களையும், குதிரைப் படையினையும் எதிர்த்துத் தாக்கிப் போர்க்களங்கள் பலவற்றிலே மிக்க பயிற்சி பெற்றிருந்தனர். ஆங்கிலேய மாவீரர்கள் வேல்ஸிலும், அயர்லாந்திலும் கெல்ட்டிக்குப் பழங்குடி மக்களை எளிதில் தாக்கி, விரைவில் வெற்றி கொண்டதைப் போல, இவர்களை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற முடியவில்லை. இங்கு நிலையான எழுச்சியும், ஊக்கமும் வாய்ந்த மக்கள் போர்க்கோலம் பூண்டிருந்தனர்.

அத்துடன் மிகச் சிறந்த முறையில் நன்கு நிலைபெற்ற நாகரிகத்தின் ஒழுங்கு முறையை உடையவர்களாக ஸ்காட்டியர்கள் இருந்தனர். ஆனால், மற்ற சமயங்களில் ஸ்காட்டிய ஈட்டிப் படையினர் எதிர்த்து வெல்ல முடியாத ஆங்கிலேயர் அல்லது வெல்ஷ் வில் வீரர்களைக் கொண்ட நார்மானியப் படையினை எதிர்த்துப் போரிட முடியாது துன்புற்றனர். இதற்குக் காரணம் இங்கிலாந்தின் நீண்ட வில்லேந்திய வீரர்கள் அகால இறப்பு என்னும் வரிசையின் ஊடே குதிரை வீரர்களுக்கு வழி அமைத்துக் கொடுத்தமையாகும். ∴பால்கிர்க்கு என்னும் போர்க்களத்தில் 1298 ஆம் ஆண்டு வீரம் மிக்க வாலசின் வெற்றி வாழ்க்கைக்கு ஒரு முடிவு உண்டாயிற்று. ஆனால், இவ்வெற்றி இத்தகைய சூழ்ச்சித் திறன்களைக் கையாளுவதன் மூலம் ஆங்கிலேயர்கள் பெற்ற பல வெற்றிகளுள் முதல் வெற்றியாகும்.

ஆனால், விட்டு விட்டு ஸ்காட்டியப் படையினை வெற்றிகொண்டது ஸ்காட்லாந்தினைக் கைப்பற்றியதாக முடியவில்லை. ஸ்காட்டியப் பொதுமக்கள் போர் நிலைக்கு நன்கு பழக்கப்பட்டிருந்தனர். ஸ்காட்லாந்தின் ஒவ்வோர் உழவனும் போர் வீரனைக் காட்சி அளித்தான். இந்த வகையிலாகிலும் ஸ்காட்லாந்து அமைதி மிக்க இங்கிலாந்தோடு ஒப்புமைப் பண்புடையதாக இல்லாமல் முரட்டுத்தனம் வாய்ந்த வேல்ஸோடு நெருங்கிய ஒற்றுமையுடையதாக காணப்படுகின்றது. படையெடுப்பாளர்களின் முன்னால், ஸ்காட்டியர் தங்களுடைய குடிசைகளையெல்லாம் தீயிட்டுக் கொளுத்தித் தங்கள் நாட்டினை பழாக்கிச் செல்லுவதற்குத் தயாராய் இருந்தனர். ஆனால், தங்கள் நாட்டையும், உரிமையையும் பகைவரிடத்து ஒப்படைப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. மீண்டும் மீண்டும் இத்தகைய கண்டிப்பான முறையினைக் ஸ்காட்டியர்கள் பின்பற்ற வேண்டியவர்களாக இருந்தனர். நெடுங்காலமாக ஐயுறத்தக்க நிலையில் இருந்து வந்த ஸ்காட்டிய விடுதலைக்கு ஆதரவாக இரு சக்திகள் முடிவு அடையச்செய்தன. முதலாவது ராபர்ட் புரூஸின் ஆளுமை ஸ்காட்லாந்தின் வெற்றிக்குக் காரணமாக அமைந்திருந்தது. அவருடைய இறப்புக்கு பிறகு, மூன்றும் எட்வர்ட்டின் கருத்து எல்லாம், இங்கிலாந்து பிரான்ஸோடு தொடங்கிய நூறு ஆண்டுப்போரில் செலுத்தப்பட்டமை மற்றொரு காரணமாகும்.

1290-ல் ஸ்காட்டிய அரியாசனத்திற்கு உரிமை கொண்டாடிய அரசரின் பேரரே ராபர்ட் புரூஸ் என்பவராவர். அவர் மிக உயர்வாகக் கருதப்பட்ட ஸ்காட்டிய தேசிய மரபிலே வளர்க்கப்பட்டவர் அல்லர். அவரும் அவருடைய தந்தையும்

பிரபுக்களிடையே பொதுவாகக் காணப்பட்ட பகட்டு மிக்க ஆடம்பர ஆரவார அரசியலுக்கே உரியவர்களாகக் காணப் பட்டனர். வாலசின் காலத்தில், அவர் சிற்சில சமயங்களில் நாட்டுப்பற்று மிக்க மக்களை ஆதரித்து வந்தார். மற்றும் சில சமயங்களில் தன்னலம் மிக்க பிரபுக்களின் பக்கம் சேர்ந்து கொண்டு, இங்கிலாந்திற்கு ஆதரவாக இருந்து வந்தார். ஆனல் கடமை நெறியிலும் வீர உணர்விலும் தம்முடைய கொடுமை மிக்க மன நிலையால் அவர் வஞ்சிக்கப்பட்டார். திருச்சபையில் 1306 ஆம் ஆண்டு ரெட்கோமையன் (Red Comyn) என்பவரைக் கொலை செய்தமையால் சமூகத்திலிருந்து மக்களால் விரட்டப் பட்டதோடு, அவரைத் துரத்திச் சென்று கொல்லுவதற்கு மக்கள் முயன்றனர். எனவே வேறு வழியின்றி ஸ்காட்டிய மக்களின் நாட்டுப்பற்றினைப் போற்றுபவராக மாறி, அவர் மக்களின் ஆதரவைப் பெற்ருர். அதன் விளைவாக வாலசின் தேசப்பற்று மரபினை மீண்டும் கிளர்ந்து எழச் செய்யும் முயற்சியில் அவர் ஈடு பட்டார். இம் முயற்சியின் மூலம் புரூஸ் தம்முடைய நாட்டின் ஈடேற்றத்திற்கும், தம்முடைய ஈடேற்றத்திற்கும் வழி கண்டார். வாலசின் மக்கள் ஆட்சி பண்புமிக்க மரபினேடு நெடுங்கால மாகத் தேவைப்பட்டு வந்த நார்மானியப் படை முறையின் கூறு கிய அரசு என்னும் பண்பினைச் சேர்த்து வழங்கினர். இத்தகைய இன்றியமையாத பண்பினைப் புரூஸும் 'நல்லவரான சர் ஜேம்ஸ்' டுகிளசு (The Good Sir James Doglus) என்பவருமே ஸ்காட்டிய சமுதாயத்திற்குத் தந்துதவக் கூடிய ஆற்றல் உடையவர்களாக அக்காலத்தில் இருந்தனர். மேலும் உண்மையான அரசபதவிக் குரிய கூறு புரூஸிடமே அமைந்திருந்தது. வேறு எங்கும் ஸ்காட்டிய மக்கள் அப் பண்பினைக் காணமுடியாது நெடுங்காலம் அல்லலுற்று வந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

நல்ல சமயத்தில் 1307 ஆம் ஆண்டு, முதலாம் எட்வர்டு காலமானர். அதன் விளைவாக ஸ்காட்டிய மக்கள் இரண்டாம் எட்வர்ட்டுடன் சம நிலை ஆற்றல் உடைவர்களாக விளங்க முடிந்தது. தங்களுடைய உரிமைக்கு நம்பிக்கையற்ற நிலையில் அவர்கள் போரிட்டுக் கொண்டிருந்த நிலைமாறி, போரிடும் இரு தரத்தாரின் இடையேயும் சமநிலை ஆற்றல் அமைந்ததாகத் தெரிகிறது. எந்தக் காவல்கற்கோட்டைகளைக்கொண்ட ஸ்காட்லாந்தின் பெரும் பகுதியை ஆங்கிலேயர்கள் தங்கள் ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தார்களோ, அவற்றையெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக ஸ்காட்டிய மக்கள் கைப்பற்றினர். போருக்கு என்றே பிறந்தவர்களான டுகிளசு, புரூஸ் என்னும் தலைவர்கள் இருவரும் அக் காவல் கற்கோட்டைகளை அழித்

தொழித்தனர். இறுதியாக ஸ்காட்டியர்கள் 1314 ஆம் ஆண்டு பான்னக்பர்ன் (Bannockburn) போர்க்களத்தில் மாபெரும் வெற்றி பெற்றனர். இப்போரில் ஆங்கிலேயர்கள் பெரும் திரளான தங்கள் குதிரைப்படையைப் பரவலாகப் பயன்படுத்தத் தவறினர். அல்லது தங்களுடைய வில் வீரர்களை நன் முறையிலே பயன்படுத்தாமல் போயிருக்கவேண்டும். இக் காரணத்தினால் தாயகத்திலேயிருந்து போரிட்ட ஸ்காட்டிய ஈட்டிப் படையினர் ஆங்கிலேய நிலப் பிரபுக்களையும், மாவீரர்களையும் ஈட்டியின்முனையைக்காட்டி அச்சுறுத்தி, சதுப்பு நிலங்களுக்கும் ஓடைப் பகுதிகளுக்கும் ஓடிச் சென்று மறையுமாறு விரட்டி அடித்தனர். இதைப்போன்று இதற்கு முன்போ இதற்குப்பிறகோ ஆங்கிலேயவீரப் பெருந்தகைமையின் பேரிழிவினை நாம் இங்கிலாந்தின் வரலாற்றிலேயே காணமுடியாது. அதற்குப்பிறகு எஞ்சியிருந்த தங்கள் விற் படையாளர்களையும், படைவீரர்களையும் ஆங்கிலேயர்கள் கப்பல் வழியாகத் தெற்குப் பகுதிக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்த ஸ்காட்டிய உழவர்களிடத்து மேற்கண்ட ஸ்காட்டிய மக்களின் நாட்டுப் பற்றுணர்வு சிறிது கூட இருந்ததாகத் தெரியவில்லை.

பான்னக்பர்ன் வெற்றிக்குப் பிறகு தொடர்ந்து இங்கிலாந்திற்கும், ஸ்காட்லாந்திற்கும் இடையே நடந்து வந்த எல்லைப்போர் அனைத்தும் ஸ்காட்டியர்களுக்குப் பெரும் நன்மை விளைவிப்பதாகவே அமைந்தன. இப்போர்களில் ஸ்காட்டியர்கள் கொரில்லாப் போரினைப்பின்பற்றிப் போரிட்டுவந்த காரணத்தினால் அவர்கள் வெற்றி அடைவது எளிதாக இருந்தது. 'நல்ல அரசர் ராபர்ட்டின் இறுதிவிருப்பம்' என்னும் நயமற்ற பாடல் ஒன்று புரூஸினால் தம்முடைய மக்களுக்கு அளிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அப்பாட்டில் பான்னக்பர்ன் போர்க் களத்தில் மாபெரும் வெற்றி பெற்றிருந்தபோதிலும், அதை ஒருவிதி விலக்காகக் கருதி, தம் நாட்டு மக்களை திறந்தவெளியில் போரிடவேண்டாமென்று ராபர்ட் புரூஸ் வேண்டிக்கொண்டதாகவும், தம் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் மீண்டும் தங்களுடைய வீடுகளையும், உடைமைகளையும் படையெடுத்து வருகின்ற பகைவர்களை ஏமாற்றுவதற்காகத் தியாகம் செய்ய வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. உண்மையில், அச் சூழ்நிலைகள் ஸ்காட்டியர்களுக்குப் பொருத்தமற்றதாக இருந்தது. அவர்கள் வியக்கதக்க பொறுமைப் பண்பினை உடையவர்களாக இருக்க வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. ஆனால் அவர்கள் பெரிதும் தரிசு நிலங்களாக இருந்த நார்த்தம்பர்லாந்து, கம்பர்லாந்து, டர்ஹாம் போன்ற

பகுதிகளைச் சிறிது நேரத்தில் படையெடுத்துச் சென்று கொள்ளை யடித்துவந்தனர். அதே சமயத்தில் ஆங்கிலேயரின் பெரும் திரளான படைகள் மேலும் ஸ்காட்லாந்தின் வளம் மிக்க பகுதிகளைக் கொள்ளையடித்துச் சூறையாடிக் கொண்டிருந்தது. அப் பகுதிகள் ஆங்கிலேயர்கள் தொடர்ந்து இரண்டு நாட்களுக்குள் எளிதில் அடையக் கூடியனவாக இருந்தன.

மதிப்பு மிக்க பல பொருள்கள் எவ்வாறு அகவிலை கொடுத்துப் பரிசாகப் பெறப்படுகின்றதோ, அதைப்போன்றே ஸ்காட்டியர் தங்களால் கொடுக்க முடியாத பெரும் விலையினைக் கொடுத்து தங்கள் விடுதலையினைப் பெற்றனர். பான்னக்பர்ன் வெற்றிக்குப் பிறகு, இருநூற்றைம்பது ஆண்டுகள் வரையிலும் ஸ்காட்லாந்து நம்பிக்கையற்ற வறிய நிலையில் வாடியது. நாகரிகமற்ற இரத்தக் கறை படிந்த நார்மானியப்படை முறைக் குழப்பம் நிறைந்த நாடாக அல்லலுற்றது. கொள்ளையும், கொலையும், பல குழப்பங்களும், வன் செயலும், உட் பகையும் உடைய நாடாக அல்லற் பட்டது. அடிக்கடி இங்கிலாந்தோடு எல்லைப்புறத்தில் போர்புரிய வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. நாட்டிலே சிறப்பான வகையில் ஊழல் மிக்க திருச்சபையினை உடையதாகவும் செல்வச் செழிப்பற்ற நகரங்களை உடையதாகவும், பாராளுமன்றம் என்று சொல்லத்தக்க மதிப்புடைய அமைப்பினைப் பெறுததாக வும் ஸ்காட்லாந்து இருந்தது. மேலும் மாண்புமிக்க நல்லதொரு எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கை யூட்டக்கூடிய நிலையங்கள் எதையும் ஸ்காட்லாந்து உடையதாக இல்லை. அவர்களுடைய வீறு மிக்க மக்களாட்சி உணர்வு இங்கிலாந்துடன், ஸ்காட்லாந்து இணைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தியது. ஸ்காட்லாந்து இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டு இருக்குமானால், இங்கிலாந்து தன்னுடைய செல்வத்தினையும் நாகரிகத்தையும் ஸ்காட்லாந் திற்கு வழங்கியிருக்கும். ஆனால், ஸ்காட்லாந்தின் மக்களின் நாட்டுப்பற்று அரசியல் துறையில் வேறு எத்தகைய நன்மை யையும் செய்யவில்லை. அவர்களுடைய நிலமானியப் படை முறைப் பிரபுக்களை ஒழுங்காகவும், நேர்மையாகவும் இருக்கு மாறு செய்யவில்லை. இன்றைக்கு காணப்படுகின்ற பிரதிநிதித் துவ முறைகளில் ஒன்றிலும் தேசிய உணர்வின் வெளிப்பாடு மிகக் குறைந்த அளவிலும் வெளிபடவில்லை. அவர்கள் பிரான் சோடு கொண்ட நட்புத்தொடர்பு இங்கிலாந்திற்கு எதிராகப்

படையியல் ஆற்றலைப் பெருக்கிக்கொள்ளுவதற்குப் பயன்பட்டதே ஒழிய, பண்பாட்டுத் துறையிலே இயற்கைக்கு மாறுபட்டதாக அமைந்தது. மேலும் தங்களுடைய அண்மை நாட்டில் கொண்டிருந்த தொடர்பு அற்றுப் போனதற்கு மாற்ருகப் பிரான்சோடு கொண்ட தொடர்பு உண்மையான வகையில் உதவிபுரிவதாக அமையவில்லை. அவ்வாருயின் இங்கிலாந்தினை எதிர்ப்பதன் மூலம் ஸ்காட்லாந்து அடைந்த நன்மைதான் என்ன? ஒன்றும் இல்லை என்று கூறிவிடலாம். அதனுடைய ஆன்மா ஒன்றைத் தவிர வேறொன்றையும் பெற்றதாகத் தெரியவில்லை. தம்முடைய ஆன்மாவைப் போற்றிக் காப்பதன்மூலம் ஏதாவது பொருள்கள் இறுதியில் அதிலிருந்து தோன்றலாம் என்ற நம்பிக்கையைத் தவிர வேறொரு பலனையும் ஸ்காட்லாந்து அடையவில்லை.

குறிப்பு :—

## ராபர்ட் புரூஸின் இறுதி விருப்பம்

## (பாடலின் பொழிப்புரை)

'ஸ்காட்டியர் அனைவரும் காலாட் படையினராகப் போர்புரிய வேண்டும்; குன்றுகளையும் பள்ளங்களையும் அவர்கள் கடந்து செல்ல வேண்டும். காவல் கற்கோட்டைகளின் சுவர்களை அவர்கள் தற்காப்பு அரணாக அமைத்துக் கொள்ளாது காடுகளையே தங்களுடைய தற்காப்பிற்கு உரியதாகக் கொள்ளவேண்டும். அப்பொழுது அப்பகைவர்கள் அஞ்சாநெஞ்சுடன் போர் புரியமாட்டார்கள். இடுக்கான இடங்களில் ஸ்காட்டியர் தங்களுடைய தளவாடங்களைச் சேர்த்து வைக்கவேண்டும். பிறகு சமவெளிப் பிரதேசங்களைத் தீயிட்டுக் கொளுத்தவேண்டும். அப்பொழுது பகைவர்கள் விரைந்து அவ்விடத்தை விட்டு ஓடுவார்கள். அச்சமயத்தில் அவர்கள் பாழடைந்த பகுதியைத் தவிர வேறொன்றும் காணமுடியாது. இருள் சூழ்ந்த இரவு வேளையில் ஓநாய்களையும், பிறவிலங்குகளையும்தான் அவர்கள் காண்பார்கள். அவ்விலங்குகளின் உறுமலும், ஓசையும், படையெடுப்பாளர்களை அஞ்சியோடுமாறு செய்யும். அந்நிலையில் அவர்களை விரட்டியடித்துத்தோற்றேடுமாறு செய்யலாம். இதுதான் பண்புமிகு அரசர் ராபர்ட்டின் இறுதி விருப்பம்."

மேற்கண்ட விருப்பாவணத்தின் முதலில் கூறப்பட்டதற்கு மாருக, ஸ்காட்டியர் இங்கிலாந்தின்மீது படையெடுத்தபொழுது, குதிரைமீதமர்ந்து போர்க்களம் செல்லும் காலாட்படையினராக

இருந்தனர். போரிடும்பொழுது குதிரையை விட்டு இறங்கி, அவர்கள் போர்புரிந்தனர். மூன்றும் எட்வர்டு அரசர் காலத்தில் ஸ்காட்டியர் இவ்வாறு படையெடுத்து வந்ததை ஃபிராய்சார்ட்டு (Froissart) என்பவர் 'அவர்கள் எல்லாம் குதிரையின்மீது அமர்ந்தே வந்தனர். நடந்து வந்தவர்கள் வீரர்கள் அல்லர்; படையினருக்குத் தேவையான பொருள்களைக்கொண்டு வருபவராவர். மாவீரர்களும், ஊர்ப்பெரு மக்களும் குதிரைகள்மீது ஊர்ந்து வந்தனர். பொதுமக்களும் மற்றவர்களும் சிறிய வண்டிகளிலும், விதையடிக்கப்பட்ட விலங்குகளின்மீதும் ஏறிவந்தனர். அவர்கள் தங்களுடன் பெரிய வண்டிகளையும், தேர்களையும் உடன் கொண்டு செல்லவில்லை. குன்றுகள் நிறைந்த பகுதிகள் வழியில் மிகுதியாக இருந்தமையால் அவர்கள் நார்த்தம் பர்லாந்தின் வழியாகவே சென்றனர்' என்று வருணித்துள்ளார். இதற்குமேல் அவர் அவ்வீரர்கள் தங்களுக்கு வேண்டிய உணவிற்காக 'ஓட்ஸ்' தானியத்தின் சிறு மூட்டையையும், சமைப்பதற்கு உலோகத் தகடு ஒன்றையும் உடன் எடுத்துச்சென்றதையும், அவர்கள் அதை வயிறுபுடைக்க உண்டதையும், தானியத்திற்குப் பதிலாகத் தாங்கள் வந்த வழியில் தாங்கள் கைப்பற்றிய கால்நடைகளின் அரைகுறைப் பசுமையுடனிருந்த இறைச்சியை உண்டு உயிர் வாழ்ந்ததையும் அவ்வாசிரியர் குறிப்பிடுகின்றார்.

(ஃபிராய்சார்ட்டு—பெர்னர் பிரபுவின் மொழிபெயர்ப்பு.)

மேலும் அவர் இரண்டாம் ரிச்சர்ட்டின் ஆட்சிக் காலத்தில் ஒரு சமயம், தாழ்நிலப் பகுதிகள் அனைத்தும் ஆங்கிலேயருடைய படைபெடுப்பினால் பாழ்படுத்தப்பட்டிருப்பதைப் பிரஞ்சு மாவீரர்கள் கண்டதைப்பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்: 'தங்கள் நாட்டுப் பகுதி பாழாக்கப்பட்டதைப்பற்றி அம்மக்கள் சிறிதும் கவலைப்படவில்லை. ஆறு அல்லது எட்டு முளைகளை அடித்து எளிதில் தங்களுக்கு வேண்டிய வீட்டினை அமைத்துவிடமுடியும் என்று அவர்கள் கருதினார்கள். காட்டில் கிடைக்கின்ற பொருள்களுக்கு ஏற்பத் தேவையான அளவிற்கு அவர்கள் கால்நடைகளைப் பேணி வளர்த்தனர். தங்களுடைய பாதுகாப்பிற்காக அவர்கள் காட்டினையே புகலிடமாகக் கொண்டிருந்தனர்.' இக்கருத்து நல்ல அரசர் ராபர்ட்டின் இறுதி விருப்பத்தில் காணப்படும் அறிவுரைகள் எவ்வாறு கடைப் பிடிக்கப்பட்டன என்பதைத் தெளிவாக விளக்குகின்றது. ஸ்டுவர்ட்டு அரசமரபினர் காலத்தில் இருந்ததைவிட வடக்குப் பிரிட்டனில் பேரளவில் பெருங்காட்டுநிலம் இக்காலத்தில் இருந்தது என்பது இதனால் தெரியவருகிறது.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

பிரிட்டிஷ் தீவுகள்—பழங்குடி மக்கள் நிறைந்த அயர்லாந்து—அயர்லாந்தில் ஸ்ட்ராங்போ—ஆங்கிலேய ஐரிய நிலப்பிரபுக்கள்—ஆங்கிலேயக் குடியேற்ற வரம்பு—போய்னிங்கின் சட்டம்—வேல்ஸில் கெல்ட்டிக்குகளும் சாக்சானியர்களும்—ஆங்கிலேய நார்மானியரின் படையெடுப்பு—எல்லைப்புறப் பிரபுக்கள்—வெல்ஷ் மக்களின் போர்முறைகள்—லெவிலியனும் முதலாம் எட்வர்ட்டும்—ஓவன் கிளண்டோவர்—இங்கிலாந்தின் மீது வேல்ஸின் எதிர்வினைவு—லோத்தியனைச்சேர்ந்த சாக்சானியர்கள்—முதலாம் டேவிட்டு நிலமானியப் படைமுறையைப் புகுத்தல்—ஸ்காட்லாந்தினை உருவாக்குதல்—வில்லியம் வாலசு—ராபர்ட் புரூஸ்—விடுதலைக்குக் கொடுக்கப்பட்ட விலை—நல்ல அரசர் ராபர்ட்டின் இறுதி விருப்பம்.

## மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்


1. பேராசிரியர் கி. கார்ட்டிஸ் : (Prof. E. Curtis) History of Mediaeval Irealand.
2. ஸ்டீபன் குவைனே : (Stephen Gwynne) History of Ireland.
3. திருமதி ஜே. ஆர். கிரீன் : Mrs. J. R. Green) (a) The Irish State to 1014, (b) The Making of Ireland.
4. ஜிரால்டசு காம்பிரேனிசிஸ்: (Giraldus Cambrensis) Description of wales (trans. Everyman Library)
5. வில்லியம்ஸ் (W.Ll. Williams) Making of Modern Wales.
6. ரைஸும் ஜோன்ஸும் : (Rhys and Jones) The Welsh People.
7. W. ரீஸ் (W. Rees) South Wales and the March, 1284—1415.
8. டவுட்டு : (Tout) Edward I.
9. ஹூம்பிரவுன் : (Hume Brown) History of Scotland, Vol. I.
10. ஆண்ட்ருலாங் : (Andrew Long) History of Scotland, Vol. I.
11. ஓமன் (Oman) Art of war in the Middle Ages.
12 ஸ்காட் : (Scott) Tales of a Grandfather, Vol. I.

## இயல் 6

# நூறுண்டுப் போர்

1. நூறுண்டுப் போருக்குரிய காரணங்களும், அதன் விளைவுகளும்; 2. தேசிய உணர்வின் பிறப்பு; 3. வில்வித்தையும் வீர வேளார் படையும்; 4. ஆங்கில மொழியும், தேசியவுணர்வும்.

**அரசர்கள் :**

| | |
|---|---|
| மூன்றும் எட்வர்டு | 1327–1377 |
| இரண்டாம் ரிச்சர்டு | 1377–1399 |
| நான்காம் ஹென்றி | 1399–1413 |
| ஐந்தாம் ஹென்றி | 1413–1422 |
| ஆறும் ஹென்றி | 1422–1461 |

பதினும் நூற்றுண்டு முதற்கொண்டு இருபதாம் நூற்றுண்டு வரையிலும் ஐரோப்பாவில் பெரும் சேதத்தை விளைவிக்கத் தக்க போர்கள் தோன்று வண்ணம் இடைக் காலக் கிறிஸ்துவ உலகின் ஒற்றுமை காத்துவந்ததாகச் சிலசமயங்களில் கூறப்படுகிறது. ஆனல், உண்மையில் அக்காலத்து மக்களிடையே ஒருவரை எதிர்த்து ஒருவர் போராடவேண்டுமென்ற விருப்பம் இருந்ததைக் காணுகின் ரேம். இக்காலத்தைவிட அக்காலத்திய போர்களில் பெருங் கொடுமைகள் செய்யப்பட்டதாகக் கேள்விப்படுகின்ரேம். கொலை செய்யவேண்டுமென்ற ஆவல், மனச்சான்று அல்லது வழக்காற்று மரபுக்குச் சிறிதும் கட்டுப்பட்டிருந்ததாகத் தெரிய வில்லை. ஆனல், கொலை செய்வதற்குரிய வழிவகைகள் மிகவும் இருந்தன. எனவே, கிறிஸ்துவ உலகின் ஒற்றுமைதான் இடைக்காலத்தின் பிற்பகுதியில் போர்கள் தோன்ருமல் தடுத்தது என்பதைவிட, இயற்கைச் சக்திகளை மனிதன் கட்டுப் படுத்தி ஆளும் ஆட்சித்திறன் குறைபாடே அதற்குக் காரண மென்று கூறலாம். அக்காலத்து ஓரிடத்திலிருந்து இன்னேர் இடத்திற்குப் படைகளையும், வேறு பல கருவிகளையும் எடுத்துச் செல்லுகின்ற முறை இடர்ப்பாடுடையதாக இருந்தது. அத்துடன் நெடுந்தொலைவிற்கு அப்பால் நடைபெறுகின்ற போர்க்களங் களில் வாழ்கின்ற மக்களுக்குவேண்டிய, உணவினை அனுப்பி வைப்பதும் பெரும் பிரச்சினையாக இருந்துவந்தது. மேலும், அரசியல் ஆட்சியமைப்பு இயந்திரம் தேவைக்கேற்ற அளவில் அமையாது இருந்தமையும், நிதிநிலையைப் பெருக்கிக்கொள்ளு

வதற்குரிய வழிவகைகள் குறைவாக இருந்தமையும் இதற்குத் தலையாய காரணங்களாகும். அக்காரணங்களினால்தான், அக் காலத்து மாபெரும் போர்கள் நடைபெறவொட்டாமல் தடுக்கப் பட்டன. அக்காலத்திலும் ஐரோப்பா போற்றத்தக்க பெரிய ஆட்சிமுறையினை உடையதாக இல்லை. அதைப்போன்றே, அது மிக வறிய நிலையிலேயே இருந்து வந்தது குறிப்பிடத் தக்க தாகும். அதனுடைய பெருந்திரளான இளைஞர்கள் உழவுத் தொழிலைவிட அழிவுத் தொழிலைத் திறமை மிக்க வாணிகமாக மேற்கொள்ளுவதற்குரிய போற்றத்தக்க சிறந்த முறையினை, அக் காலத்தில் ஐரோப்பா அறிந்திருக்கவில்லை. நிலமானியப்படை முறைப்பிரபுக்கள் வகுப்பைச்சார்ந்த வீரர் குழுவும், மாவீரர் களும், அனைத்திலும் ஆற்றல் மிக்கவர்களாக அக்காலத்து விளங் கினர். ஏற்கெனவே நிலமானியப் பிரபுக்களும், அவர்களுடைய கூலிபெற்ற ஆதரவாளர்களுமே படைக்கலம் எந்திப் போரிடும் தொழிலில் தனியுரிமை பெற்றிருந்தனர். பதினோராம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டுவரை ஐரோப்பாவில் எண்ணற்ற போர்கள் நடைபெற்றன. அவை பெரிதும் உள்நாட்டுப் போர் களாகவே இருந்தன. அவை மிகச் சிலவாகவும், தற்காலத்திய போர்களைப் போன்று பேரளவிலும் நடைபெறவில்லை யென்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. அக்காலத்துப் போர்க் கடவுளின் (Mars) கைகள் குறுகியனவாக இருந்தன. ஆனால், அக்கைகள் தொடர்ந்து செயலாற்றி வந்ததைக் காணுகின்றோம். இக்காலத் தில் துன்புறுத்தப்படுவதைவிட, அக்காலத்திய உழவர்கள் பெரிதும் தொடர்ந்து படைவீரர்களால் துன்புறுத்தப் பட்டு வந்தனர்.

ஐரோப்பாவில் நடைபெற்ற போர்களுள் தேசிய இனப் போர் என்று சொல்லத்தக்க முதல் போராக நூறாண்டுப் போரினைக் (1337—1453) கூறலாம். அப்போர் இங்கிலாந்தினால் தொடங்கப்பட்டதாகும். நெடுந்தொலைவுக்கு அப்பால் பாழாகக் கிடக்கின்ற பிரான்சு நாட்டின் பகுதிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் இங்கிலாந்து படையினை அனுப்பிக் கொண்டிருந்தது. அப்படை பிரான்சிலேயே பகைவர்களை எதிர்த்துப் போரிடுவ தோடு, பிரான்சு நாட்டைக் கொள்ளையடித்துச் சூறையாடியது. இவ்வாறு அனுப்பப்பட்ட படை உண்மையில் மிகச் சிறிய அளவினதாகவே இருந்தது. ஆனால் அவர்கள் ஐரோப்பிய படைவீரர்களை விடத் திறமையும், ஆற்றலும், கட்டுப்பாடும் உடையவர்களாகக் காணப்பட்டனர். அதற்குக் காரணம் இங்கிலாந்து நாட்டின் தேசிய அமைப்பும் இங்கிலாந்து நாட்டு மக்களிடையே ஊற்றெடுத்த நாட்டுப் பற்றுமே யாகும். இங்கி

லாந்து ஐரோப்பாவின் ஒரு மூலையில் நெடுந்தொலைவிற்கப்பால் தீவாக அமைந்திருந்ததோடு, நார்மானியர் படையெடுப்பு முதற் கொண்டு அவர்களுடைய ஆற்றல் மிக்க அரசர்கள் எஞ்சிய ஐரோப்பா முழுவதையும் விஞ்சிய மேம்பாடுடைய நாடாக இங்கிலாந்தில் உள் நாட்டு அமைதியும், ஒழுங்கும் நின்று நிலவுமாறு ஆட்சி புரிந்ததுவந்தனர். அக் காலத்தில் இங்கிலாந்து நிலமானியப் படைமுறை அமைப்பிலிருந்து பையப் பைய தேசிய இனப் பண்பு வாய்ந்த நாடாக மாறிக் கொண்டிருந்தது. அரசரும், பாராளுமன்றமும் இங்கிலாந்தில் எவ்வளவு விரைவில் ஆட்சி இயந்திரத்தையும் தேசியத் தன்னுணர்வினையும் அமைத்தார்களோ, அவ்வளவு விரைவில் இங்கிலாந்து தான் பெற்ற இத்தகைய புதிய ஆற்றல் அனைத்தையும் பிரான்சு நாட்டு நிலமானியப் படைமுறை அரசான அருவருக்கத்தக்க அரக்கனை அழித்தொழிப்பதில் பயன்படுத்தியது. சிறிது காலத்திற்கு இங்கிலாந்து ஐரோப்பிய நாட்டிலுள்ள அயலாரைக் கொள்ளை அடிப்பவர்களாகவும், கொடுமைப்படுத்துபவர்களாவும் விளங்க நேர்ந்தது. ஐரோப்பியர்களைக் காட்டிலும் இங்கிலாந்து மக்கள் மனச்சான்று குறைவாகப் பெற்றிருந்தார்கள் என்பது இதற்குக் காரணமன்று. இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் அதிக ஆற்றல் உடையதாக இருந்தது என்பதே இதற்குரிய சிறந்த காரணமாகும். டியூடர்கள் ஆட்சிக் காலத்து ஒன்றுபட்ட பிரான்சும் ஒன்றுபட்ட ஸ்பெயினும் இங்கிலாந்தைக் காட்டிலும் பேராற்றல் வாய்ந்தனவாக விளங்கிய காரணத்தினால் இங்கிலாந்தினுடைய நிலை அக்காலத்தில் தலைகீழாக மாற்றமுற்றது. ஆனால், அவளுடைய தீவு நில இயல் அமைப்பு இங்கிலாந்தைப் பகைவர்களால் பழி வாங்கப்படுவதிலிருந்து காப்பாற்றியது எனலாம். அத்துடன் தம்முடைய நாட்டு மக்களின் தேசிய உணர்வு ஆற்றல்களுக்கு, கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று செய்யப்படும் வாணிகத்தையும், பெருங் கடல்களுக்கப்பால் புதிய நாடுகளைக் கண்டு பிடிப்பதும் ஆகிய மிக ஆதாயமுள்ள வழிகளை இங்கிலாந்து குறிப்பாகக் காட்டியது எனலாம். எனவே, நூற்றாண்டுப் போர் என்பது அரசியல் ஆற்றலின் இயக்கமாக அமைந்தது. அதனைக் குறிக்கோள் நெறியாக்குவது பயனற்றதாகும். ஆங்கிலேயரின் நான்கு தலைமுறையினர் கொள்ளை யடிப்பதற்காகப் படையெடுத்துச் சென்று வந்தமை, மூன்றாம் எட்வர்ட்டும் ஐந்தாம் ஹென்றியும் பிரான்சின் அரியணை ஏறுவதற்குக் கொண்டிருந்த அரச மரபுரிமையைக் காப்பதற்காக நடத்தப்பட்ட நேர்மையான செயலாகச் சிலரால் வற்புறுத்தப்படுகிறது. ஆனால், இடைக்காலத்தில் அச்செயல் 'நேர்மையானது என்னும் எண்ணம்' அக்காலத்து மக்களி

டையே இருந்தது என்பதை இது காட்டுகிறதேயொழிய, மாண்புமிக்க பிரடரிக் அரசர், சைலேசிய அரசின் ஆட்சியுரிமை இவ்வாறே அரசத் தொடர்பினால் தமக்குரியது என்று பதினெட்டாம் நூற்றாண்டில் உரிமை கொண்டாடுவதற்குரிய முன் நிகழ்ச்சியாக இதைக் கொள்ளலாகாது. ஆங்கிலேயரின் செயல்முறை அனைத்தையும் கொண்டு போற்றிய ஃபிராய்சார்ட்டு (Froissart) என்பவர் இத்தகைய மயக்கத்தில் ஆழாது, தன் வாழ்நாள் முழுவதும் ஆங்கிலேய அரசர்களின் செயல் முறைகளைக் குறித்துப் போற்றியிருப்பதைக் காண்கிறோம்.

> 'போரிலே வெற்றி பெறுவோர்களாகவும், படைக்கலம் தாங்குவதில் ஆர்வம் உடையவர்களாகவும் தங்கள் அரசர்கள் இருப்பார்களானால், ஆங்கிலேயர்கள் தங்கள் அரசர்களை விரும்பிப் போற்றி மதித்தனர். சிறப்பாகத் தங்களைக்காட்டிலும் மாண்புடைய அயல் நாடுகளையும், செல்வ வளம் மிக்க அயல் நாடுகளையும் எதிர்த்துத் தங்கள் அரசர்கள் வெற்றி பெறுவார்களானால் தங்கள் அரசர்களை அவர்கள் பெரிதும் போற்றி மகிழ்ந்தனர். அவர்கள் போரிடுவதிலும் படுகொலை புரிவதிலும் மனமகிழ்ச்சியும் மன நிறைவும் அடைந்தனர். ஆங்கிலேயர்கள் பேராசையும் பொறாமையும் உடையவர்களாக இருந்தனர். பிற மனிதர்களுடைய செல்வத்தைக் காட்டிலும் தாங்கள் அதிகமான செல்வத்தை உடையவர்களாக, மதிப்பினை உடையவர்களாக இருக்கவேண்டுமென்று அவர்கள் நினைத்தனர். இங்கிலாந்து நாட்டின் அரசர் தம்முடைய மக்களுக்கு அடங்கி நடக்க வேண்டியவராக இருந்ததோடு, மக்களுடைய விருப்பங்கள் அனைத்தையும் செயலிலே செய்து வந்ததைக் காணுகின்றோம்.'

என்று அவர் எழுதியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

உண்மையில் எந்த அரசனும் நான்கு தலைமுறைகளுக்குக் கடல் கடந்து அயல்நாட்டில் போர்புரிய விரும்பாத மக்களை, வற்புறுத்திப் போருக்கு அனுப்பி இருக்க முடியாது. நூற்றாண்டுப் போரின் அடிப்படை அரச மரபுரிமையின் பேரவாவின் விளைவினால் அமைந்தது அன்று. ஆனால், பொது மக்களின் விருப்பத்தாலும், தேசிய இன உணர்வின் எழுச்சியினாலும், பாராளுமன்ற நிலையங்களினாலும் உண்டான விளைவுகளின் எதிரொலியே நூற்றாண்டுப் போராகும். புதிய இங்கிலாந்து படையியல் விரிவு ஆக்கக் கோட்பாட்டின் முதல் பிரிவுதனை அச்செயல் அடைந்திருந்தது. அக்கோட்பாடு இங்கிலாந்துக்கு முதலில் ஆதாயமாக இருந்தது; ஆனால் இறுதியில் பேரழிவினை அது உண்டாக்கியது என்பதை யாரும் மறுக்க முடியாது!

மூன்றும் எட்வர்ட்டு ஆட்சியின் தொடக்கக் காலத்தில் ஆங்கிலேயரின் பேரவா அனைத்தும் ஸ்காட்லாந்திலிருந்து பிரான்சுக்குத் திருப்பப்பட்டது. கட்டுக்கடங்காத முட்செடிகளைப் பறிப்பதைக் காட்டிலும், புகழ்மிக்க அல்லி மலரைப் பறிப்பது மிக்க ஆதாயத்தைக் தருவதோடு எளிமையானதாகவும் மதிப்பு மிக்கதாவும் கருதப்பட்டது. கடல் கடந்த நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய ஆங்கிலேயப் பிரபுக்களும், இளைஞர்களும், உழவர்களும் தத்தமக்குரிய கொள்ளைப் பொருளில் வீரர்களின் பங்கினைப் பேரளவிற்குக் கொண்டு வந்தனர். அவர்கள் கொண்டு வந்த பொருள்கள் மடாலயத்தில் பொன்னால் செய்யப்பட்ட சாமான்களாவும், வாணிகர் வீடுகளில் தொங்க விடப்பட்டிருந்த ஓவியத் திரைச் சீலைகளாகவும் இருந்திருக்க லாம். அல்லது செல்வம் மிக்க பிரஞ்சு நாட்டு மாவீர்களிட மிருந்து பெற்ற மீட்புப் பணமாகவும் இருந்திருக்கலாம். இவ்வாறு தாயகம் திரும்பிய ஒவ்வொரு ஆங்கிலேயனும், தற்காலத்திய சமுதாயத்தில் புத்தகங்களும் செய்தித் தாள் களும் பெற்றிருக்கின்ற பெரும் செல்வாக்கைப் போன்று அக் காலத்து வியப்புடன் தங்களைப் போற்றுகின்ற பார்வையாளர் களுக்கு அவர்கள் அயல் நாடுகளில் கண்டவற்றைப் பல கதை களாகக் கூறிப் பெரும் செல்வாக்கு பெற்றனர். அவர்கள் கூறிய கதைகள் துணிகரச் செயலைப் பற்றிய சிறப்புமிக்க கதை களாவும், போர் பற்றியும், இலவச இருப்பிடங்களைப் பெற்ற தைப் பற்றியும், புகழ்மிக்க நகரங்களில் இலவசமாகக் காதலைப் பெற்றதைப் பற்றியும், ஐரோப்பாவின் கொடிமுந்திரித் தோட்டத்தினைப் பற்றியும் விளக்கும் கதைகளாக இருந்தன. இவ்வாறு தம் உற்றார் உறவினர் அயலார் உள்ளங்களில் அக் காலத்திய ஆங்கிலேயப் படைவீரர் அயல்நாட்டுப் போருக்குச் சென்று வருவதன் மூலம் பெரு மதிப்பினைப் பெற்றனர். அவர் கள் ஸ்காட்லாந்தின் சதுப்பு நிலங்களை மும்முறை சூறையாடிய பொழுது, அங்குக் காலியாக இருந்த சில குடிசைகளையும் ஓட்சு அல்லது பார்லி முதலிய தானியங்களின் அம்பாரங்களையும் தீக்கிரையாக்கி வந்தனர். எனவே, அங்கு காட்டுக்குள் ஓடிச் சென்று மறைந்து கொள்ள முடியாது நொண்டியாகக் கிடந்த பசுக்களின் தோலினைத் தவிர வேறு ஒன்றையும் ஆங்கிலேயர் கள் கைப்பற்றிக் கொண்டுவர முடியாதவர்களாக இருந்தனர்.[1]

1 பிரான்சிலும், ஸ்காட்லாந்திலும் ஆங்கிலேயரின் படை முன் னேறியதை விளக்குகின்ற பொழுது, இதைப் ஃபிராய்சார்ட்டு மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். 1346-ல் ஆங்கிலேயர் பிரான்சின் மீது படையெடுத்துச் சென்ற பொழுது, அவர்கள் 'எவ்வாறு வளமிக்க நார்மண்டியைக் கொள்ளையடித்து, தீக்கிரையாக்கிப் பாழாக்கினர்' என்

ஆனால், பிரான்சில் ஒருமுறைப் போரிடச் சென்றாலும், அவர்கள் பெரும் பொருளுடன் திரும்பி வந்தனர்.

தற்கால மக்கள் உள்ளம் தேசிய இன உணர்வின் கோட்பாட்டினால் வளர்க்கப்பட்டும், செயலில் ஈடுபடுத்தப்பட்டும் வருவதைக் காணுகின்றோம். அத்தகைய உள்ளம் ஆங்கிலேயர்கள் என்றாகிலும் ஒரு காலத்தில் பிரான்சினைக் கைப்பற்றித் தங்கள் நாட்டோடு இணைக்க முடியுமென்று நினைத்தார்களா என்பதை நினைத்து வியப்படைகிறது. ஆனால் நம்முடைய மொழியைப் பேசிய ஸ்காட்டியர்கள் நம்மை எதிர்த்ததுபோல் இல்லாமல், பிரஞ்சு மக்கள் பல ஆண்டுகள் விருப்பத்தோடும். கடுமையாகவும் நம்மை எதிர்த்துப் போரிடவில்லை. ஸ்காட்லாந்து இதற்கு முன்பே தேசிய இனம் என்னும் உணர்வினைப் பெற்றிருந்தது. ஆனால், பிரான்சு நிலமானியப் படைமுறை, மானியங்கள் பலவற்றைக்கொண்ட சிக்கல் மிகுந்த தொகுதியாக இருந்தது. 1337ஆம் ஆண்டு நூறாண்டுப்போர் தொடங்கப்பட்டபோது மூன்றாம் எட்வர்ட்டும் அவருடைய பிரபுக்களும் பிரஞ்சு மொழியினைப் பேசி வந்தார்கள். அத்துடன் ஸ்காட்லாந்தில் இருப்பதைக் காட்டிலும், காஸ்கனியில் இருந்தபோது தாயகத்தில் இருப்பதைப் போன்ற மனநிலையை அவர்கள் உடையவர்களாக இருந்தனர்.

மூன்றாம் எட்வர்டு பிரஞ்சு நாட்டு அரியணைக்கும் தமக்கும் உரிமை உண்டு என்று உரிமை கொண்டாடிய காரணத்தைக்


---

பதை ஃபிராய்சார்ட்டு தெளிவாக விளக்கியுள்ளார். 'வீரர்கள் தாங்கள் கைப்பற்றிய பொன்னையும், பொருளையும் பற்றித் தங்கள் அதிகாரிகளுக்கோ, அரசருக்கோ தெரிவிப்பதில்லை; கணக்குக் காட்டி ஒப்படைப்பதும் இல்லை. அவர்கள் கொள்ளையிட்ட பொருள்களை அவர்களுக்குரியதாகச் சேமித்து வைத்துக் கொண்டனர்' என்று ஃபிராய்சார்ட்டு குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத் தக்கது. தற்காலத்திய துருக்கியக் கும்பலைப் போன்று கொள்ளை யடித்தல், படுகொலை செய்தல், தீயிட்டுக் கொளுத்துதல் போன்ற அழிவுச்செயல்களில் பதினான்காம் நூற்றாண்டுக் காலத்திய ஆங்கிலேயப் படை ஈடுபட்டிருந்தது என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. ஆயினும், ஆங்கிலேயர்கள் மட்டும் சிறப்பாக மனிதப் பண்பற்றவர்களாக இல்லை. இடைக்காலத்தியப் போர்களில் மனிதப் பண்பிற்கு மதிப்புக் கொடுப்பதோ போர் அறநெறியைப் பின்பற்றுவதோ கடைப் பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 'உங்களுடைய கிறிஸ்துவர்களுக்குக் கூட' தயை தாட்சணியம் காட்டப்படவில்லை. ஆனால், மாவீரர்களின் வகுப்பைச் சார்ந்த ஆண்களும், பெண்களும் மதித்துப் போற்றப்பட்டனர். அவ்வாறே குருமார்களும், கன்னிப் பெண் துறவிகளும் மதிக்கப் பெற்றனர். இவர்கள் எல்லாரும் இவர்கள் பெற்றிருந்த செல்வத்திற்காகப் பெரிதும் மதித்துப் போற்றப்பட்டனரே ஒழிய, பண்புமிக்க மனிதர்கள் என்பதற்காக அன்று என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

காட்டிலும் மிகச் சிறந்த காரணங்கள் இங்கிலாந்து பிரான்சோடு பகைமை கொள்வதற்கு இருந்ததாகத் தெரிகிறது. மூன்றும் எட்வர்டு பழைய அஞ்சுவினப் பேரரசின் இறுதி அழிவுச் சின்னமாகிய காஸ்கனியைத் தம்முடைய உடைமையாகக் கொண்டிருந்தார். அது, பிரஞ்சுநாட்டு அரசரின் கருத்தைக் கவர்ந்தது. அவர் எப்படியாகிலும் காஸ்கனியைக் கைப்பற்ற வேண்டுமென்ற பேராசை கொண்டார். அதன் விளைவாக ஸ்காட்டியர்களை நமக்கு எதிராகப் போரிடுமாறு தூண்டிவிட்டு, அவர்களுக்கு உதவி செய்தார். மேலும் வான் ஆர்டிவெல்டே (Van Arteveldе) என்னும் நகரம் பிளாண்டர்ஸில் சிறப்புமிக்க வணிகத் தலமாகும். அந்நகரில் நகர மக்களாட்சி சீரும் சிறப்பும்பெற்று விளங்கி வந்தது. அந்த நகரக் குடியாட்சிக்கு எதிராக பிரான்சு சில செயல் முறைகளைக் கையாளத்தொடங்கியது. அப் பகுதிகளில் பிரான்சின் ஆதிக்கம் மேம்பட்டு விளங்கியமை நம்முடைய வணிக நன்மைக்கு இடையூருக இருந்தது. நம் நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாகிய இங்கிலாந்தின் கம்பளி நூல் கெண்டிலும், புருகஸ்ஸிலும் (Bruges), யப்பிரிசிலும் (Ypres) இருந்த தறிகளின் தேவையை நிறைவேற்றுவதற்காக விற்கப்பட்டு வந்தது. ஏனென்ருல் அக்காலத்தில் நம் நாட்டில் துணி உற்பத்தி இன்னும் குழவிப் பருவத்திலேயே இருந்து வந்தது. அதனுல் நம் நாடு கம்பளி நூல்களைக் கொண்டுசென்று அயல் நாடுகளில் விற்க வேண்டிய நெருக்கடி நம் நாட்டுக்கு இருந்து வந்தது. அக்காலத்து, கடலிலே ஆங்கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் ஓயாது ஒருவரை ஒருவர் கொலை செய்துகொண்டிருந்தனர். சிறப்பாக ஆங்கிலக் கால்வாயின் வளைகுடாவுக்கு அப்பால் உள்ள வழியில் சென்று, காஸ்கன் நாட்டு ஒயின் என்னும் தேறலைக் கொண்டுவருவதற்காகவும் பிரஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் போட்டியிட்டுக்கொண்டிருந்தனர். நூறுண்டுப் போரின் சிறப்புமிக்க செயலாக 1340ஆவது ஆண்டு சுலூயிஸ் (Sluys) என்னும் இடத்தில் நடந்த போரினைக் குறிப்பிடலாம். அப்போரில் ஆங்கிலேய வாணிகக் கப்பல்படை வெற்றி பெற்றது. அதற்குப் பிறகு மூன்றும் எட்வர்டு தம்மை ஆங்கிலேயக் கடலின் தலைவராக உரிமை கொண்டாடிக் கொண்டார். அவர் வெளியிட்ட பொன் நாணயத்தில் ஒரு கப்பலில் அவர் முடி சூட்டிக்கொண்டு நிற்பதைப் போன்ற வடிவினைப் பொறித்து வழங்கினர்.

'நானில மேத்தும் நமது பொற் காசு
வாளொடு தோன்றி வையகமாள் வேந்தன்
நீலத் திரைக்கடல் நித்தம் நமதெனும்
நாவாய் நாளும் பலவோட்டி நாடாளும்
சீர்த்தியினைச் செப்பு மன்றே.'

என்று 'ஆங்கிலேயரின் திட்ட வழக்கு' என்னும் நூல் ஆசிரியர் எழுதியுள்ளார். நூறாண்டுப் போரின் பிற்பகுதியில் இங்கிலாந்திற்குக் கடல் ஆதிக்கம் மிக இன்றிமையாதது என்பதை முதன் முதலாக ஆராய்ந்து எடுத்துரைத்த பெருமை மூன்றும் எட்வர்ட்டுக் குரியதாகும். கடல் ஆதிக்கம் அப்போரின் பலவகை




பிரெடிக்னி உடன்படிக்கையால் ஆங்கிலேயர்பெற்ற பகுதிகள், 1360

பிரஞ்சு அரசரின் எல்லைக்கோடு

படம் 16.

நூறாண்டுப் போரின் முற்பகுதியில் பிரான்சு
(மூன்றும் எட்வர்ட்டு ஆட்சியின் உச்சநிலை)

நோக்கங்களுள் ஒன்றேயாகும். ஆனால் அதுவே முக்கிய நோக்கமாக அமையவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

அப்போர் நிலமானியப் படைமுறைப் போரைவிட அல்லது அரச உரிமைக்காக அரசமரபினர்களுக்குள்ளே நடைபெறும் போரைவிட மிகப் பெரியதாக இருந்தமையால் இடையிடையே நின்று, பிறகு போர்தொடங்கி ஒரு நூறுண்டு காலத்திற்கு நடைபெறக்கூடிய நிலை உண்டாயிற்று. தன்னுடைய நார்மானிய அஞ்சுவின உடைமைகளின் தற்காப்புக்காக ஆங்கிலேய மக்களை வற்புறுத்திப் போராடுமாறு செய்வதில் ஜான் தோல்வியுற்றார். ஆனால் மூன்றும் எட்வர்ட்டின் காலம் முதல் ஆறும் ஹென்றியின் காலம் வரையில் பாராளுமன்றக் கூட்டங்கள் ஒன்றை அடுத்து ஒன்று கூடியபோதெல்லாம் அக்கூட்டத்தில் போருக்கு வேண்டிய பொருளை வழங்குவதற்குத் தேவையான பொருள்களையும், ஆற்றலையும் அரசருக்கு அளிப்பதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்து வந்தனர். அந்தச் செயல்களை வெற்றியோடு செய்யத் தவறிய மந்திரிகளைக் காரணத்தோடுகூடிய விளக்கம் தருமாறு அம்மன்றத்தினர் கேட்டனர். 'எல்லா பிரஞ்சுக்காரர்களும் பெருமைப்படும்' ஆணவத்தை அழித்த ஆங்கிலேய விற்படையினரின் வெற்றியிலே பெருமை கண்டது இங்கிலாந்து.

> 'அருளாளரும், வீரப் பெருந்தகைமை ஆற்றலும் உடைய நமது அரசர் நார்மண்டியை நோக்கி முன்னேறுகிறார் என்பதைக் கண்டு'

இங்கிலாந்தின் மக்கள் பெருமகிழ்ச்சியுற்றனர். அரசர் தாயகம் திரும்பியபோது லண்டன் மாநகரத் தெருக்களின் வழியாக ஊர்வலமாக வந்தார். அப்படி அவர் வெற்றியுடன் திரும்பிய காலத்து, ஐரோப்பாவின் செருக்குமிக்க இளவரசர்களையும், பிரபுக்களையும் சிறைப்பிடித்துக் கொண்டு வந்ததைக் கண்டு மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். அச்செயல் பலதிறப்பட்ட மக்களைக் கொண்ட இங்கிலாந்து ஒன்றுபட்ட செறிவு மிக்க தேசிய உணர்வினைப் பெற்ற தேசியஇன நாடாக விளங்குமாறு செய்தது. இரு மொழிகளைப் பேசிவந்த உயர் வகுப்பினரைக் காட்டிலும், இங்கிலாந்தின் பொதுமக்களிடையே பிரான்சு நாட்டின் மீது உண்டான வெறுப்பு மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்ததோடு, ஆற்றல் மிக்கதாகவும் மாறியது. எனவேதான் நாம் அப் பேர் அழிவு மிக்க முயற்சியில் நெடுங்காலம் பிடிவாத

மாக ஈடுபட்டிருந்தோம். நம்முடைய நன்முறையில் அமைக்கப் பட்ட இடைக்கால சமுதாயம் சீரழிகின்ற வரையிலும், இரு முறை பிரஞ்சுக்காரர்கள் நம்மைத் துன்புறுத்துகிற வரையிலும் இவ்வாறு இந்த அழிவு முயற்சியில் ஈடுபட்டிருந்தோம். இந்தப் போராட்டத்தின் இடையே ஒரு முறை டுகேஸ்கிளின் (Du Guesclin) என்பவரின் தலைமையின் கீழும், அதற்குப் பிறகு ஐம்பது ஆண்டுகள் கழித்து டூனைய்ஸ் (Dunois) என்பவரின் தலைமையின் கீழும், ஜோன் ஆர்க்கு (Joan of Arc) என்னும் நங்கையின் தலைமையிலும் பிரஞ்சுக்காரர்கள் நம்மை எதிர்த்துப் போராடித் தொல்லை தருமாறு நாமே செய்துகொண்டோம். அதன் மூலம் அவர்களுடைய இனப் பற்றினை நாம் தூண்டிவிட்டு, அவர்கள் இனப் பற்றுடையவர்கள் என்பதை நாமும் உணர்ந்து கொண்டோம். அத்துடன் அவர்களுடைய நிலமானியப்படை முறைத் தந்திரங்களையும், அவர்களுடைய படைக்கலங்களைப் பயன்படுத்தும் முறைகளையும் அவர்களே மாற்றிக்கொள்ளும் வரையில் நாம் தொடர்ந்து போராடி வந்தோம். நூறாண்டுப் போர் அரசியல் சூழ்ச்சித்திறனும் படைத்திறனும் வாய்ந்த இடைக்கால மாறுபாட்டின் சிறப்புமிக்க சின்னமாகும். நிலமானியப் படைமுறை அமைப்பிலிருந்து தேசிய உணர்வினைப் பெறும் வகையிலும், இடைக்காலத்தில் இருந்து மறுமலர்ச்சிக் காலத்திற்கு மெல்ல மாறிக்கொண்டிருந்த மாறும் காலத்தின் அரசியல் சூழ்ச்சித்திறனையும் படையியல் அமைப்பு முறையினையும் விளக்கும் வகையிலே நூறாண்டுப் போர் வரலாற்றில் இடம் பெற்றிருப்பதைக் காணுகின்றோம்.

போர்களில் பெரும்பாலும் நடைபெறுவதைப் போல் இரு திறப் படையினரும் பயன்படுத்திய படைக்கலன்களும், சூழ்ச்சித் திறன்களும் இருதிறத்து மக்கள் சமுதாயத்தின் அடிப்படையில் அமைந்துள்ள சில உண்மைகளை வெளிப்படுத்துவனவாக இருந்தன. அத்துடன் அப்போரினால் படையியல் துறையில் மட்டும் அல்லாமல் வேறு பல துறைகளிலும் பெரும் மாறுதல் உண்டாயின.

பிரான்சு இங்கிலாந்து அரசினைக்காட்டிலும் மிக வேறுபட்ட இயல்புகளையும், அமைப்பினையும் உடையதொரு அரசாக விளங்கியது. பிரான்சில் மாவட்டப் பிரிவுகள் கிடையாது. மாவட்டப் பிரிவுகளில் அரசரின் நீதிபதிகளும், மாவட்டத் தலைவர்களான ஷெரீப்புகளும் 'காரனர்களும்' அரசருடைய முறை மன்றங்களிலே அமர்ந்து நீதி வழங்குவதும் அங்குக் கிடையாது. பிரான்சு பல மாநிலங்களாகப் பிரிக்கப்

பட்டிருந்தது. ஒவ்வோர் இளவரசருக்கும் பிரபுவுக்கும் உரிமையுடைய காணி ஆட்சியாளர் பகுதிகள் நிமாலனியப் படைமுறை அமைப்பிலே பிரிக்கப்பட்டிருந்தன. பிரான்சு நாட்டின் பிரபுக்களால் உழவுத்தொழில் புரிந்த அடிமை ஊழியர்கள் பெரிதும் துன்புறுத்தப்பட்டதோடு, இழிவாகக்கருதப்பட்டும் வந்தனர். அங்கு முக்கியத்துவம் வாய்ந்த நடுத்தர வகுப்பு ஒன்று என்றும் இருந்ததில்லை. அத்துடன் உழவுத் தொழில் புரிந்த ஆற்றல் மிக்க வேளாளர்களும் இருந்ததாகத் தெரியவில்லை. ஒரே சமயத்தில் அரசுக்குத் தொண்டுபுரிவதில் பழக்கப்பட்டும், தம்முடைய வகுப்புக்கு மேலும் கீழும் உள்ள பிற வகுப்பினர்களோடு தொடர்பு கொண்டபோது கடமைகளைச் செய்வதில் பயிற்சிபெற்ற பெருமக்கள் இனத்தைச் சார்ந்த சிறுபான்மையினரும் பிரான்சிலே இருந்ததில்லை. ஆனல் பிரான்சில் செல்வச் சிறப்புமிக்க நகரங்கள் பல இருந்தன. ஆனல், அவற்றிற்கிடையே தொடர்பு என்பதே மிக அருகிய ஒன்ருக இருந்தது. அந் நகரங்கள், நகர மக்களை அவர்களைச் சூழ்ந்திருக்கின்ற நிலமானியப் படைமுறைச் சமுதாயத்தோடு தொடர்பு படுத்தியது. அங்கு நகரக் குடிமக்களுக்கும் இரண்டாம் நிலையில் இருந்த பிரபுக்களுக்குமிடையே நெருங்கிய கூட்டுறவு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனல் இங்கிலாந்தில் ஆங்கிலேய மாவட்டங்களுக்கும் ஆங்கிலேய மக்கள் சபைக்கும் இடையே நெருங்கிய கூட்டுறவு அக்காலத்தில் இருந்து வந்ததை நாம் காண்கிருேம்.

கிரேசி (Crecy), பாயிட்டியர்ஸ் (Poitiers), அகின்கோர்ட்டு (Agincourt) ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களில் தோல்வியுற்ற பிரஞ்சுப் படைகளில் அச்சமுதாய முறைகள் பிரதிபலிப்பதை நாம் காணலாம். அப்போர்களில் கலந்துகொண்ட படையினர், நிலமானியப் படைமுறைக் கடமையின்படி போருக்காக அழைக்கப்பட்ட ஒரு கும்பலாகவே இருந்தனர். நிலமானியப் படைமுறைச் செருக்கின் பண்பு ஆகிய ஒழுங்கின்மை அரசர் படை இயல் ஆணவம் முதலியவற்றை அவர்கள் இயல்பாகப் பெற்றவர்களாகக் காணப்பட்டனர். பிரான்சின் அரசரும், அவருடைய படை வீரர்களும் இதே வகையான துன்பத்தினை ஸ்காட்லாந்து தலைவர்களோடு போரிட்டபோது தங்கள் கட்டளைப்படி அனுப்பப்பட்ட மான்டோர்ஸ் அல்லது இளவரசர் சார்பில் சென்று படைப் பிரிவுகளில் இக் குறைபாட்டினைக் கண்டனர். உதவியற்ற குதிரைப்படை வீரர்களின் தாக்குதலைத் தவிர, நிலமானியப் படைமுறையினல் நிறுவப்பட்ட படைகளுக்கு வேறு எத்தகைய போரியல் சூழ்ச்சித் திறனும் இருந்ததாகத் தெரியவில்லை. குதிரைப் படையின் தாக்குதலால் உண்டான

அதிர்ச்சி அப்போரின் வழக்கினைப் பல நூறுண்டுகள் கழித்து முடிவுசெய்யத் தூண்டியது. ஆனல் 1346-ஆவது ஆண்டு கிரேசி போர்க்களத்தில் திறமை மிக்க ஆங்கிலேய வில் வீரர்கள் பிரஞ்சு நாட்டுக் குதிரைப்படையின் சிறப்பினை அழித்தொழித்தனர்.

பிரான்சு நாட்டில் சிறப்புற்று விளங்கிய எறிபடைக் கருவிகளைத் தாங்கிய படைவீரர் பகுதி இத்தாலிய நாட்டுக் கூலிப் படைகளைக் கொண்டது ஆகும். சிறப்பாக ஜெனேவாவைச் சேர்ந்த குறுகிய வில்லினை ஏந்திய வீரர்களும் அந்தப் படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அக்காலத்து இழிவாகக் கருதப்பட்ட பிரஞ்சு நாட்டு உழவர்கள் போர்க்காலத்தில் சிறிதும் மதிக்கப் படவில்லை. அவர்கள் போர்க்காலத்தில் தங்கள் பண்ணையின் சார்பில் மீட்புப் பணத்தைக் கொடுத்து, ஆங்கிலேயர்களால் சிறைப்படுத்தப்பட்டு, ஆங்கிலேய மேனர் பண்ணைகளுக்குக் கொண்டு போகப்பட்ட தங்கள் தலைவர்களாகிய நிலப் பிரபுக்களை மீட்பதே அவர்களுக்குரிய கடமையாக இருந்து வந்தது. மீட்புப் பணத்துக்குரிய தொகை முழுவதும் சேர்க்கப் படுகின்ற வரையில் சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட தம்முடைய நிலப் பிரபுக்களின் குடும்பத்தோடு மோதியும் முரண்டியும் துன்புற வேண்டியவர்களாக அவர்கள் இருந்து வந்தனர். போர்க்காலத்தில் இத்தகைய முறையில் இழப்பீடுகளைப் பெறுவது பெரு வழக்காக இருந்தது. சிறப்பாக பாயிட்டியர்ஸ் போர்க்களத்தில் (1356) சிறைப் பிடிக்கப்பட்ட உயர்குடிப் பிரபுக்களை மீட்பதற்காகப் பேரளவில் இழப்பீட்டுத் தொகையை இந்த உழவர்கள் கொடுத்தாகவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. இவை அல்லாமல் போர்க்காலத்து, படைவீரர்கள் இடையிடையே கொடிய முறையில் உழவர்களுடைய பொருள்களைக் கொள்ளையடித்துத் துன்புறுத்தி வந்தனர். இவை எல்லாம் சேர்ந்து பட்டினியால் வாடும் பிரான்சின் உழவர்களை 1358 ஆவது ஆண்டு கலகம் செய்யுமாறு தூண்டியது. அக்கலகத்திற்கு ஷாக்குரி கலகம் (Jacquerie Revolt) என்னும் பெயர் வழங்கலாயிற்று. அக்கலகம் சொல்லொணுத் துன்பத்திலும் நம்பிக்கையற்ற வகையிலும் உழவர்கள் பெரும் கொடுமைக்காளாகி அல்லல் பட்டதை எதிரொலிப்பதாக அமைந்தது.

படையெடுத்துச் சென்ற ஆங்கிலேயருடைய படைகளில் ஆங்கிலேயர் சமுதாயத்தின் அமைப்பு முறை, படையெடுத்துச் சென்ற படை அணிவகுப்பின் அமைப்பிலும், அவர்கள் கையாண்ட சூழ்ச்சித் திறனிலும் பேரளவுக்குப் பிரதிபலித்ததைக் காணுகின்றோம். எட்வர்டு அரசர்கள் இங்கிலாந்தினை

ஆண்ட காலத்து இங்கிலாந்தின் கடற்கரையோர நிலங்களை உழுது பயிரிட்ட உழவர்கள் (Piers Plowman) ஆங்கிலேயக் கால்வாய்க்கு அப்பக்கத்து ஷாக்குரி பான்னமே (Jacques Bonhomme) என்னும் பிரான்சு நாட்டு உழவர்களைக் காட்டிலும் சிறந்த நிலையில் இருந்தார்கள். இங்கிலாந்து நாட்டு உட்குடி மக்கள் கூட பிரான்சு நாட்டு உழவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது சிறந்த செல்வர்களாகவும், வயிறார உண்டு வாழ்பவர்களாகவும் இருந்தனர். அத்துடன் உட்குடிகளுக்கு மேல், சமுதாயத்தில் சிறப்புற்று விளங்கிய உழவுத் தொழில் புரிந்த உரிமைக் குடிமக்களின் எண்ணிக்கை நாளடைவில் பெருகிக் கொண்டு வந்ததைப் பார்க்கிறோம். இங்கிலாந்தில் அடிமை ஊழியரின் விடுதலை இயக்கத்தின் பெரும் பகுதியை நூற்றாண்டுப் போர்க்காலம் தழுவியிருப்பதைக் காணலாம். அக்காலத்து பிளாண்ட்டாஜெனட்டு அரசு மரபைச் சேர்ந்த அரசர்கள் அனைவரும் உரிமைக்குடி மக்கள் அனைவரையும் கட்டாயப்படுத்திப் படைக்கலப் பயிற்சி பெறுமாறு செய்து வந்தனர். ஆனால், இம்முறை நிலமானியப்படைமுறையினைப் பின்பற்றி வற்புறுத்தப்பட்ட கட்டாயப் படைக்கலப் பயிற்சி அன்று. ஆனால் சாக்சானியக் குடிப்படைக் குறிக்கோளை அடிப் படையாகக் கொண்டு படைக்கலச் சட்டங்கள் (Assizes of Arms) இயற்றப்பட்ட காலத்திற்கு ஏற்ற வகையிலே தனியுரிமைக் குடிமக்கள் அனைவரையும் பயிற்சி பெறுமாறு செய்தனர். ஒவ்வொரு மனிதனும் கட்டாயமாகத் தம்மிடத்துச் சில படைக் கலங்களை வைத்திருக்கவேண்டுமென்று படைக்கலச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் வற்புறுத்தியதை நாம் முன்பு கண்டோம். அந்தச் சட்டத்திற்கு இணங்க அக்காலத்து நாட்டு மக்களுள் பெரும்பான்மையினர் தாங்கள் வைத்திருக்கின்ற படைக் கலங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பற்றி நல்ல முறையில் பயிற்சி பெற்று, ஓரளவிற்குச் சிறந்த படைவீரர் களாகச் சிறப்புற்றனர். குடிசைகளினும், பண்ணைகளிலும் வாழ்ந்த பொது மக்களுள் பெரும் பான்மையோர் தங்கள் குடிசைகளில் வைத்திருந்த படைக்கலங்களை எப்படிப் பயன் படுத்துவது என்பதை அறிந்து கொண்டனர். இங்கிலாந்து அரசியல் துறையிலும், சமுதாய விடுதலை வேட்கையிலும் புதிய ஒரு முறையினை உலகுக்கு அளித்ததற்கு உரிய காரணங்கள் பலவற்றுள்ளும் இச்செயலே மிகச் சிறந்த காரணமாகும்.

பதினான்காம் நூற்றாண்டில் நீண்ட வில்லினை மக்கள் ஏந்திச் செல்லும் முறை மிகுதியாகப் பெருகியதோடு, அந்தப் படைக்கலத்தினை மக்கள் தங்கள் கையிலேயே ஏந்திச் செல்ல

வேண்டுமென்று அரசரால் வற்புறுத்தப்பட்டனர். திருச்சபைத் தோட்டங்களில் வில்லினைக் கொண்டு மக்கள் விற்போர் புரிந்து பழகுவது அக்காலத்து மக்களின் விளையாட்டுகளுள் தலைசிறந்ததாக விளங்கியது. அது மக்களுக்குக் கிராம வாழ்க்கையில் உள்ளக் கிளர்ச்சியை ஊட்டுவதாகவும் அமைந்திருந்தது. மூன்றும் எட்வர்ட்டு அரசர் பேரறிக்கைகளின் மூலம் அவ்விற் பயிற்சியைப்பற்றி ஆதரித்தும், ஊக்குவித்தும் வந்தார். மேலும்,

'கைப்பந்து, காற்பந்து, அல்லது வலைப்பந்து விளையாட்டையும் சடுகுடு என்னும் விளையாட்டையும்,கோழிச் சண்டையையும் அல்லது அதைப் போன்ற சோம்பேறித் தனமான விளையாட்டுகளையும் விளையாடினால் சிறைப் பிடிக்கப்படுவர்''

என்று அவர் ஆணை பிறப்பித்ததன் மூலம், அவ்விளையாட்டுகளுக்கு அவர் தடைச்சட்டம் வகுத்தார்.

மேற்கண்ட விளையாட்டுகள் திருச்சபைத் தோட்டங்களில் நடைபெற்ற விற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த மக்களைக் கவர்ந்து வந்த காரணத்தினால், இவ்வாறு அரசர் அவ் விளையாட்டுகளைத் தடைசெய்தார் போலும்! பிற்காலத்தில் இயூ லாட்டிமர் (Hugh Latimer) மேடைப் பேச்சு அரங்கின் மீதிருந்து, உழவராகிய தம்முடைய தந்தையைப்பற்றிப் பின்வருமாறு பலமுறை கூறியிருக்கின்றார்.

'எம்முடைய தந்தை வில்லினை எப்படி இழுப்பது அல்லது வளைப்பது என்பதையும், வில்லின்மீது என்னுடைய உடலை எப்படிச் சாய்க்க வேண்டுமென்பதையும், பிற நாட்டு மக்கள் செய்வதைப் போல் படைக்கலங்களைக் கைகளின் ஆற்றலோடு இழுக்கக்கூடாது என்பதையும் எனக்குக் கற்பித்தார். அவர் உடலின் ஆற்றலைக் கொண்டுதான் வில்லினை வளைத்து நாணினை இழுக்க வேண்டுமென்று பலமுறை எனக்குக் கூறியுள்ளார். என்னுடைய வயதுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப, நான் பல விற்களைத் தாங்கிப் பயன்படுத்தி இருக்கின்றேன். வயதிலும் ஆற்றலிலும் நான் வளர்ந்தபோதெல்லாம் அதற்கேற்ப என்னுடைய விற்களும் பெரிது பெரிதாக மாறிக் கொண்டே இருந்தன. மக்கள் இம்முறையில் பயிற்சி அளிக்கப்படவில்லை என்றால் அவர்கள் எப்போதுமே நல்ல முறையில் திறமையாக அம்பினை எய்ய முடியாது என்பது எம்முடைய தகப்பனாரின் கருத்தாகும்.'

கிரேசி போர்க்களத்தும், அகின்கோர்ட் போர்க்களத்தும் நம்முடைய நாட்டினர் பெரு வெற்றிபெற்றனர். அவ்வெற்றி

இத்தகைய முன்னெச்சரிக்கையுடைய லாட்டிமர் தந்தைகளைப் போன்ற பெரியோரின் முயற்சியினுல்தான் கிடைத்து இருக்க வேண்டுமென்று நாம் உறுதியாக நம்பலாம். ஏனென்றுல் நீண்ட வில்லினை ஏந்திப் போரிடுவது என்பது மிகவும் கடினமான செயலாகும். அயல்நாட்டு மக்கள் என்றுமே அந்த நீண்ட வில்லின் வளைந்த இரும்புத் தகட்டின் துவாரத்தின்வழியே அம்பினை எய்யக்கூடிய கைத்திறத்தினைக் கற்றவர்களாக இல்லை. ஆனல், ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஐரோப்பியப் போர்களில் தலைசிறந்த படைக்கலமாக நீண்ட வில் பயன்படுத்தப்பட்டும், அவர்கள் இவ்வாறு அதைத் திறமையாகப் பயன்படுத்தக் கற்காமல்போனது குறிப்பிடத்தக்க செய்தியாகும். நீண்ட வில் ஆங்கிலேயருக்கே உரிய தனியுரிமைப் படைக்கலனுக என்றுமே சிறப்புற்று விளங்கியதைக் காணுகின்றேம். இங்கிலாந்திலும் கூட, டியூடர் அரசர் மரபினர் காலத்தில் திறமையாகக் கைத்துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்ட காரணத்தினுல் மெல்லமெல்ல நீண்ட வில் பயன்படுத்தப்படுவது குறைந்துபோயிற்று. இதற்குக் காரணம் கிராம மக்கள் விற்போர் பயிற்சியைப் புறக்கணித்துக் 'கால்பந்து, காமவெறி ஊட்டுகின்ற விளையாட்டுகள்' ஆகியவற்றில் கருத்தைச் செலுத்தியமையே யாகும். அல்லது லாட்டிமர் கருதியதைப்போல் நாட்டுமக்கள் முடப்பந்து விளையாட்டு, குடித்தல், பரத்தையரோடுகூடி இன்புறுதல் ஆகியவற்றிலேயே தங்களுடைய பொருளையும், நேரத்தையும், ஆற்றலையும் பாழாக்கியமையே காரணமாகலாம். ஆயினும் நாட்டிலே சட்டங்களும், சட்டங்களின் பேரறிக்கைகளும் விற்பயிற்சியினைப் போற்றி ஆதரித்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

மூன்றும் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்து, பிறரால் வெல்ல முடியாத அப்படைக்கலம் ஏந்திய வீரர்கள் அவர்களுடைய திறமையின் உச்ச நிலையை அடைந்திருந்தனர். எச்சமயத்திலும் அவர்கள் போருக்கு அழைக்கப்படுபவர்களாக இருந்தனர். 1346-ஆவது ஆண்டு இங்கிலாந்தின் அரசரும், அவருடைய பிரபுக்களும் பிரான்சிலே இருக்கின்ற சமயத்தில், ஸ்காட்டியர்கள் இங்கிலாந்தை மிக எளிதிலே தாக்கிக் கைப்பற்றிவிடலாம் என்று கருதி, பெரும் படையுடன் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்தனர். அதே சமயத்தில் மக்களாட்சிப் பண்பு மிக்க மாவட்டங்கள் திரட்டிய ஆட்களைக்கொண்டு படைவீரர்கள் டர்ராமுக்கு அருகில் நெவில்லிகிராஸ் (Neville's Cross) என்னுமிடத்தில் படையெடுப்பாளர்களுக்குச் சிறந்ததொரு பாடத்தைக் கற்பித்தனர். அவர்கள் நார்த்தலர்ட்டன் (Northallerton) என்னும் இடத்தில் கற்ற அதே பாடத்தை, மீண்டும் ஒரு முறை பிளாடனிலும்

கற்றனர். இங்கிலாந்து ஸ்காட்லாந்திற்கு நினைவுபடுத்துவதற்குரிய தேசிய மேற்கோள் வாசகம் ஒன்றை உடையதாக இல்லையென்றாலும், இனிமேல் பணிவச்சம் இல்லாது இங்கிலாந்தினை தேசிய உணர்ச்சி பெறுமாறு சினமூட்ட முடியாது என்பதை ஸ்காட்லாந்தைக் காட்டிலும் இங்கிலாந்து நன்கு உணர்ந்தது.

இந்தப் பெருவாரியான படைக்கலம் ஏந்திய விற்படையாளர்களையும் அரைகுறையாகப் படைக்கலம் தாங்கிய தனியுரிமைக் குடிமக்களையும் மூன்றாம் எட்வர்டு தேர்ந்தெடுத்தார். அதற்கு அரசரின் ஆணையைப் பெற்ற அர்ரே (Commission of Array) என்னும் குழுவின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அறிவித்து, கடல் கடந்த நாட்டோடு போரிடுவதற்குப் படைவீரரின் தொகுதிகள் பலவற்றைத் தேர்ந்தெடுத்தார். இதற்காக அவர் முதலில் கட்டாயமாகப் படைக்கு ஆள் சேர்க்கும் முறையினைக் கையாண்டார். பிறகு விருப்பப்பட்டுப் படையில் சேர விரும்புகிறவர்களையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு குழுவினை அமைத்தார். ஆனால், பிரஞ்சு நாட்டுப் போர் நெடுங்காலம் தொடர்ந்து நடைபெற்று வந்த காரணத்தினால், அரசரின் ஆணையைப் பெற்ற அர்ரே குழுவினர் தேர்ந்தெடுத்த படைவீரர்களும், கட்டாயமாகப் படையில் சேரவேண்டுமென்ற குறிக்கோளின்படி படைவீரர்களாகச் சேர்க்கப்பட்ட முறையையும் மெல்ல அவர் கைவிட நேர்ந்தது. அதற்குப் பதிலாகப் போரிடுவதையே தொழிலாகக் கொண்ட வீரர்களைப் போருக்கு அனுப்புவதற்கு முன் வந்து தனியார் நடத்திய 'கம்பெனிகள்' பலவற்றில் கூலிக்காகப் படைவீரர்களைப் பெற்று அவர்களை அரசர் பிரான்சுக்கு அனுப்பி வைத்தார். ஆங்கிலேயர்கள் நெடுங்காலம் தொடர்ந்து பிரான்சோடு போரிட்டு வந்த காலத்தில், இந்தக் கம்பெனிகள் தான் அப்போரின் முதுகெலும்பாக இருந்து வந்தன. அவை நிலமானியப் படைமுறையில் திரட்டப்பட்ட படைவீரர்களைக் கொண்ட குழுக்கள் அல்ல. கட்டாய இராணுவ சேவை என்னும் திட்டத்தின்படி சேர்க்கப்பட்ட வீரர்களைக் கொண்ட குழுக்களும் அல்ல. ஆனால், நெடுங்காலமாகப் போரிடுவதிலேயே ஈடுபட்டு திறமையும், அனுபவ முதிர்ச்சியும் பெற்ற எண்ணற்ற வீரர்களைக் கொண்ட பணித்துறையாக அவை இருந்தன. இந்தப் படைவீரர்கள் சிலர் பிரபுக்களாலோ மாவீரர்களாலோ, அரசியலிலோ போரிலோ தங்களுடைய செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு பொருள் கொடுத்துப் படைக்கலப் பயிற்சி தரப்பட்டமையால் நெடுங்காலம் படைக்கலப் பயிற்சி பெற்ற படைவீரர்களாவர். அரசர் இத்தகைய படைக்கல வீரர்களைக் கொண்ட கம்பெனிகளின்

தலைவரை எளிதிலே சந்தித்து, அவர்களிடத்துக் குறைந்த கூலி வீதத்திற்கு உடன்படிக்கை செய்து கொண்டு, அந்த வீரர்களின் உதவியைப் பெறுவது மிக எளிதாக இருந்தது. இதற்கு அந்தத் தலைவர்கள் உடன்பட்டதற்குக் காரணம், போர்களில் தங்கள் வீரர்கள் ஈடுபடுவதன் மூலம் பகை நாடுகளைக் கொள்ளையடித்தும், பகைநாடுகளில் மீட்புப் பணத்தைப் பெற்றும் இலவச இருப்பிடங்களைப் பெற்றும் வந்தால் தாங்கள் மேன்மேலும் செல்வர்களாகச் சிறப்புற முடியும் என்று நம்பியமையாகும். சிறப்பாக பிரான்சுக்கும், இங்கிலாந்திற்குமிடையே சமாதான உடன்படிக்கையாகப் போர் நிறுத்தப்பட்டிருந்த காலங்களில் சில சமயங்களில் தங்களுடைய தன்னலத்திற்காகவே அப்படை வீரர்கள் ஐரோப்பாவில் போரிட்டும், கொடிய செயல்களில் ஈடுபட்டும் வந்ததாகத் தெரிகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு இத்தாலியில் ஹாக்வுட் (Hawkwood) என்பவரின் தலைமையில் ஆங்கிலேயக் கம்பெனியைச் சார்ந்த படைவீரர்கள் செய்த கொடுஞ் செயல்களைக் குறிப்பிடலாம். ஆறும் ஹென்றியின் ஆட்சிக் காலத்து அப்படை வீரர்கள் ஐரோப்பாவிலிருந்து இங்கிலாந்திற்குத் திருப்பி விரட்டப்பட்டனர். அதன் விளைவாகத் தாயகத்தில் சமுதாய அரசியல் சீர்கேடுகள் உண்டாயின. இத்தகைய தீமைகளுக்குக் காரணமாக இந்தப் படைக் கம்பெனிகள் விளங்கின. ரோஜாப்பூ அணிந்து பிற்காலத்துப் போரிட்ட போர்களில் இந்தக் கம்பெனிப் படைவீரர்களை விலைகொடுத்துப் பிரபுக்கள் வாங்கி, தங்கள் உரிமை ஏவலாளர்களாக அவர்களைப் பயன்படுத்திக் கொண்டனர்.[1]

ஆங்கிலேயருடைய சூழ்ச்சித் திறமை உழவர்களைப் போராடும் வீரர்களாகவும், நீண்ட வில்லினைப் போர்க்கருவியாகவும் அவர்கள் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டதை அறிவிக்கின்றது. முதல் இரண்டு எட்வர்டு அரசர் காலத்தில் ஸ்காட்டியப் படையெடுப்புகளின் மூலம் ஆங்கிலேயர் பெற்ற படிப்பினையின் விளைவாக, ஆங்கிலேயர்கள் தங்கள் உழவர்கள் மீதும், நீண்ட

1. இத்தகைய கம்பெனிகளுள் அயல்நாட்டில் பணிபுரிந்த ஒன்றைப் பற்றி கானன்டாயில் ((Conan Doyle) எழுதியுள்ள 'White Company' என்னும் கதை மிகத் தெளிவாகவும், சிறிது இலட்சிய நோக்குடனும் விளக்குகிறது. அதைப் போன்றே ஸ்டீவன்சன் (Stevenson) எழுதியுள்ள 'Black Arrow' என்னும் கதை, தாயகத்தில் சர் டேனியல் பிராக்கிளி (Sir Daniel Brackley) என்னும் பிரபுவைப் பற்றியும், அவருடைய உரிமை ஏவலாட்களைப் பற்றியும், பேரளவிற்கு வரலாற்று உண்மையினை அடிப்படையாகக் கொண்டு விளக்குகிறது.

வில்லின் மீதும் நம்பிக்கைக் கொண்டனர். ஐரோப்பாவைச் சார்ந்த நிலமானியப் படைமுறைப் போர்வீரர்கள் இத்தகைய முன்பின் அறியாத நாகரிகமற்ற போர்களில் ஆர்வங்கொள்ள வில்லை. எனவே, கிரேசி போர்க்களத்தில், இழித்தும் பழித்தும் உரைக்கப்பட்ட பிரிட்டானிய தீவைச் சார்ந்த ஆங்கிலேயர்கள் ஐரோப்பா முழுவதும் படைக்கலப் பயிற்சியில் தாங்களே தலைவர்கள் என்பதை வெளிப்படுத்தியபோது ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்த நிலமானியப் படைமுறை வீரர்கள் பெரிதும் வியப்புற்றனர்.

ஸ்காட்டியப் போர்களில் ஆங்கிலேயர்கள் பெற்ற படிப்பினைகள் இருதிறப்பட்டனவாகும். ஸ்டர்லிங் பிரிட்ஜ் (Stirling Bridge), பான்னக்பர்ன் ஆகிய இரு இடங்களிலும் நிகழ்ந்த போர்களில் ஸ்காட்டிய விற் படையாளர்கள் தங்களுடைய ஈட்டிகளைக் கொண்டு நன்மை தரத்தக்க சூழ்நிலையில், தன்மானம் மிக்க அக் காலாட் படையினர், நிலமானியப் படைமுறை மாவீரர்களை நேருக்கு நேர் நின்று போரிட்டுத் தோற்கடிக்க முடியுமென்பதைச் செயல் மூலம் காட்டினர். ஆனால், அதே சமயத்தில் பால்கிர்க்கு (Falkirk) போன்ற இடங்களில் ஆங்கிலேயர் பெற்ற வெற்றிகள் நீண்ட வில்லின் நற்பயனை நன்கு எடுத்துரைத்தது. ஸ்காட்டியப் போரின் இவ்விரு படிப்பினைகளும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. மூன்றும் எட்வர்ட்டின் படைத் தலைவர்கள் புதிய போர் முறையொன்றைப் புதிதாகக் கையாளத் தொடங்கினர். அதாவது வில் வீரர்களையும், நிலமானியப் படைமுறை மாவீரர்களையும் ஒன்றாகக் கொண்ட படையமைப்பினை நிறுவி, அதன்மூலம் மாற்றார் தன்னுடைய அம்புகளையோ, வாள் விளையாட்டுகளையோ வெற்றி காணமுடியாது செய்தனர். ஆங்கிலேயப் படைவீரர்கள் பிரஞ்சுப் படைவீரர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு ஏற்ற எண்ணிக்கையில் குறைவாக இருப்பதை அவர்கள் உணர்ந்தனர். பிரஞ்சுப் படையினரின் குதிரைப் படைகளும் ஈட்டிகளும் தங்களைத் தாக்கி அதிர்ச்சியுறச் செய்வதை நன்கு அவர்கள் உணர்ந்தனர். அதனால் குதிரைகளை விட்டு இறங்கித் தங்களுடைய படைக்கருவிகள் அனைத்துடன் நேரிடையாக, அரைகுறையாகப் படைக்கலன் ஏந்திய வில் வீரர்களைக் கொண்ட காலாட் படையினர் முன்னால் இருந்த பிரஞ்சுப் படைவீரர்களை எதிர்க்க முயன்றனர். அப்படி அவர்களுக்கு வில் வீரர்களுக்கு உதவி புரிகின்ற முறையில் போரிட்டால் அவ்வில் வீரர்கள் தங்களுடைய விரைந்தோடும் அம்புகளைக் கொண்டு போரில் எளிதில் வெற்றி பெறுவரென்று கண்டனர். பிரஞ்சு மாவீரர்கள் பகைவர்களின் அம்புகள் பாயப்

பெற்று உயிருடன் துன்புற்றுக் கொண்டிருந்ததால், ஆங்கிலேய ரின் அணிக்குக் கைக்கெட்டிய தொலைவில் அவர்கள் வந்து சேர்ந்தனர். நமது வில் வீரர்கள் தம்முடைய வாளினை உருவிப் போர்க்கவசங்கள் அணிந்த பிரஞ்சு நாட்டு மாவீரர்களோடும் பிரபுக்களோடும் பெரும்பாலும் முள்வேலிகளுக்குப் பின்னால் அல்லது கழு மரங்கள் இருக்கக்கூடிய வரிசைகளுக்கு அருகில் நேருக்கு நேராக எதிர்த்து நின்று போராடினர்.[1]

இத்தகைய சூழ்ச்சிகளால் கிரேசி போர்களத்தில் பிரஞ்சு காரர்கள் படுதோல்வி யடைந்தனர். இதுவரை தங்களை வெற்றி கொண்டவர்களைப் போன்று, தாங்களும் நிலத்திலிருந்து போராட அவர்கள் முடிவு செய்திருந்தமை அவர்களுக்குப் பெரும் இடர்ப்பாட்டை உண்டாக்கியது. ஆனால், ஆங்கிலேயரின் வெற்றிக்கு இதுதான் உள்ளார்ந்த மறைபொருள் என்று கூறு வதற்கு இல்லை. ஏனென்றால் பாயிட்டியர்ஸ் போர்க்களத்தில் அவர்கள் வேறு வகையில் போராடியும் வெற்றிபெறாமல் போனது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே, அம்புகள் பாய்வதிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காகத் தங்கள் போர்க்கவசங்களின் பருமனை அவர்கள் அதிகப்படுத்தியதோடு உடல் முழுவதும் இரும்பினால் செய்யப்பட்ட கவசங்கள் அணிந்து, தகடுகளால் செய்யப்பட்ட போர்க்கவசங்களையும் அணியத் தொடங்கினர். ஆனால் இதன் மூலம் அவர்கள் தற்காப்பில் நன்மையைப் பெற்றிருந்தார்கள் என்றாலும், அவர்கள் விரைவில் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எளிதில் செல்லமுடியாதவர்களாகத் துன்புற்றனர். பதினைந்தாம் நூற்றாண்டின் மாவீரர்கள் இவ்வாறு தங்களால் சுமக்கமுடியாத பெரும் பளுவான கவசங்களை அணிந்து பெரிதும் துன்புற்றனர். அம்முறை வீரப் பெருந்தகைமையின் நலிவினை விரைவு படுத்தியது எனலாம்.

பிரஞ்சுக்காரர்கள் எப்போதுமே ஆங்கிலேயக் காலாட் படையினை நேரிடையாக எதிர்த்துப் போராடி வெற்றி

1. வில்வீரர்கள் சிறந்த படைவீரர்களாகக் கருதப்படும் நிலை உண்டானவுடன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் போர்க் கவசமும், குதிரையும் அளிக்கப்பட்டன. இதனால் ஒரே சமயத்தில் எல்லாக் காலாட் படையினரும் பிரான்சின் மீது படையெடுத்துத் தாக்குகின்ற பொழுது பாய்ந்து செல்ல முடிந்தது. ஆனால் நிலத்தில் நின்று போரிட வேண்டும் என்ற நெருக்கடி உண்டானால் அரசர் முதல் சமையல் வேலைக்காரன் வரை எல்லாரும் நிலத்தில் நின்று போரிட ஆயத்தமாக இருந்தனர்.

பெறுவதற்குரிய வழிவகைகளை வகுக்கவில்லை. ஒரே ஒரு முறை தாங்கள் எங்கிருந்து போரிடுவது என்பதை முடிவு செய்து கொண்ட அந்த நிலப்பகுதியில் மரப்பலகைகளைத் தற்காப்புக் காக அமைத்துக் கொண்டனர். ஆனால், கரும் கவச இளவரச ரால் விரைவுபடுத்தப்பட்ட ஆங்கிலேயர் போர்முறை ஒரு பெருங் குறையை உடையதாக இருந்தது. போர்க்களத்தில் வெல்லிங்டன் னுடைய மிக மெல்லிய செந்நிற அணியைப்போன்று அது எளிதில் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்ல முடியாததாக இருந்தது. குதிரைமீது அமர்ந்து தாக்குகின்ற மாவீரர்களை எதிர்த்துப் போராட அது முன்னேறமுடியாது அல்லலுற்றதாகத் தெரிகிறது. குதிரைமீது போராடிய மாவீரர் கள் ஆங்கிலேயப் படைகளை எளிதிலே சிதறி ஓடுமாறு செய் தனர். சுருங்கச் சொல்லுவது என்றால் ஆங்கிலேயப் படைகள் நல்ல நிலையில் இருக்கின்றபோது பிரஞ்சுக்காரர்கள் முட்டாள் தனமாகத் தாக்குவார்களானால், அப்போது அந்த ஆங்கி லேயர்கள் வெற்றிபெறக் கூடியவர்களாக இருந்தனர்.

இத்தகைய போரியல் சூழ்ச்சித் திறன்பற்றிய கருத்துகளை யெல்லாம் நன்குணர்ந்து புரிந்துகொண்டவரான டுகேஸ்கிளின் பிரான்சுக்கு முதன் முறையாக அப்போரிலிருந்து விடுதலையளித் தார். அவர் மூன்றாவது எட்வர்ட்டின் இறுதிக் காலத்தில் (1369-1377) பிரெடிக்னி (Bretigni) என்னுமிடத்தில் செய்யப்பட்ட சமா தான உடன்படிக்கையை மீறி ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார். பிரெடிக்னி என்னும் இடத்தில் 1360-ஆவது ஆண்டு ஆங்கிலேயர்களுக்கும், பிரஞ்சுக்காரர்களுக்கும் சமாதான உடன்பாடு உண்டாயிற்று. அதன்படி பிரான்சு இங்கிலாந் திற்குத் தென்மேற்கு பிரான்சின் பகுதியை அளித்ததைக் காண் கிறோம். (பார்க்க : படம் 16) டுகேஸ்கிளின் என்ற தலைவர் ஒழுங்கு முறையற்ற நிலமானியப் படை வீரர்களை நம்பியிருப்ப தற்குப் பதிலாக 'உரிமை மிக்க படைவீரர்கள் கம்பெனிகளை'க் கூலிக்குப் பேசிப் போருக்குப் பயன்படுத்தினர். அவர் பொது வாகப் போராடுவதைத் தவிர்த்து வந்தார். ஆங்கிலேயர்களைத் தம்மால் வியப்படையச் செய்யுமாறு விரட்டமுடியுமானல் அல்லது, ஆங்கிலேயர்களுடன் போரிடுவதன்மூலம் தமக்கு ஏதாவது நன்மை உண்டாகுமா என்று ஆராய்ந்தறிந்து, அதற் கேற்ற வண்ணம் அவர் இரண்டொரு இடங்களில்தான் போரிட் டார். அவருடைய முக்கிய திட்டம் ஆங்கிலேயர்கள் அந்த நாட்டில் கட்டியுள்ள காவல் கோட்டைகளை முற்றுகையிடுவதே யாகும். ஏனென்றால் அக்காவல் கற்கோட்டைகளிலிருந்துதான் ஆங்கிலேயர் பிரான்சு நாட்டை ஆண்டுவந்தனர். அவற்றைக்

கைப்பற்றிவிட்டால் ஆங்கிலேயர்களைப் பிரான்சு நாட்டிலிருந்து விரட்டுவது எளிது என்று அவர் நம்பினர். அந்த வகையில் பிரஞ்சுக்காரர்கள் நமக்குச் சரிசமமாகப் போராடக்கூடியவர்களாக இருந்தனர். தொடக்க காலத்தில் வெடி மருந்துகளையும் பீரங்கிகளையும் பயன் படுத்துவதில் அவர்கள் தங்கிகரற்று விளங்கினர். திறந்த இடங்களில் நடந்த போர்களில் வெடி மருந்து இன்னும் திறமையாகப் பயன்படுத்தப் படவில்லை. ஆனால் அது கோட்டைகளை முற்றுகையிட்டுத் தகர்த்தெறிவதற்குச் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டது. அவ் வெடிமருந்தே பிரான்சு நாட்டினை அடிமைத் தளையிலிருந்து விடுதலையுறச் செய்தது. ஆனால், அது நிலமானியப் படைமுறை அதிகாரியின் உயிர் ஆற்றலை உறிஞ்சிவிட்டது. பீரங்கிப் படையில் தம்முடைய வீரர்களை நன்கு பயிற்சி பெறுமாறு செய்யக்கூடிய அரசர் ஒருவர், மிக எளிதில் நிலமானியப் படைமுறைப் பிரபுவின் காவல் கற்கோட்டையில் ஒரு சிறு துளையினை உண்டாக்குவதன் மூலம் எளிதில் அப்பிரபுக்களை அழித்தொழிக்க முடிந்தது.


இவ்வாறு இருந்தும், பிரான்சில் மிக எளிதில் நிலமானியப் படைமுறை அழிந்தொழியவில்லை. நிலமானியப் படைமுறைச் சூழ்ச்சிகளுக்குப் பதிலாக, டுகேஸ்கிளின் புதிய முறைகளைக் கையாண்டு தம் நாட்டு மக்கள் விடுதலை அடையுமாறு செய்தார். இவ்வாறு அவர் புதிய முறைகளைக் கையாண்டதற்குக் காரணம் கிரேசி போர்க்களத்திலும், பாய்ட்டியர்ஸ் போர்க்களத்திலும் நிலமானியப் படைமுறைச் சூழ்ச்சித்திறன் பயனற்றுப் போனதை அவர் நன்கு உணர்ந்திருந்தமையே யாகும். இதன் விளைவாக நிலமானியப் படைமுறையின் அழிவினைக் கண்ட பிரஞ்சு தேசிய இனமுடியாட்சி வளர்வதற்குரிய சூழ்நிலை, நூற்றாண்டுப் போரின் இடையே உண்டான அமைதியில்லாப் போர் நிறுத்தகாலத்தில் உருவாகியது. ஆயினும், இக்காலத்தில் விட்டுவிட்டுப் போர் நடந்து வந்தது. இவ்வாறு நூற்றாண்டுப் போரினை இரு அரைப் பகுதிகளாக அவ்வமைதியில்லாத போர்நிறுத்தம் பிரித்ததைக் காணுகின்றோம். ஆனால், நாம் எதிர்பார்த்ததைப் போன்று அத்தகைய பிரஞ்சு தேசிய இன முடியாட்சி முறை வளர்ச்சியடையவில்லை. அந் நிலையில் ஐந்தாம்ஹென்றி 1413 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் அரசராக முடி சூட்டிக்கொண்டார். உடனே மூன்றாவது எட்வர்டு பிரான்சு நாட்டின் முடிக்குத் தமக்கு உரிமை யிருப்பதாக உரிமை கொண்டாடிவந்ததை, இவர் மீண்டும் புத்துயிர்ப்புப் பெறுமாறு செய்தார். மயக்க மனம் கொண்ட மக்களின் மனத்தினை அயல்நாட்டுப் போர்களில் செலுத்துவதற் வதற்காகவே இவ்வாறு அவர் முயன்றார். இவ்வாறு கருங்கவச

மணிந்த இளவரசரின் சூழ்ச்சித் திறனோடு, போருக்குச்சென்ற ஆங்கிலேயப் படைவீரர்கள் டுகேஸ்கிளினின் போர் முறையினைப் பின்பற்றித் தங்களை பிரஞ்சு மக்கள் எதிர்க்கவில்லை என்பதைக் கண்டனர். ஆனால் கிரேசியிலும், பாய்ட்டியர்ஸிலும் எவ்வாறு முட்டாள்தனமான நிலமானியப் படைமுறையின் அணி வகுப்பினைக்கொண்டே பிரஞ்சுக்காரர்களை இவர்கள் எதிர்த்தனரோ, அதைப்போலவே இப்போது அவர்கள் தங்களை எதிர்ப்பதைக் கண்டனர். இதனால் 1415-ஆவது ஆண்டு அகின்கோர்ட் (Agin-court) என்னுமிடத்தில் ஆங்கிலேயர்கள் பெரு வெற்றி பெற்றனர்.

நூறாண்டுப் போரின் இரண்டாவது பகுதியில் ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரர்களும் பின்பற்றிய போர் முறைகளை நூறாண்டுப் போரின் முதல் பகுதியில் இவ்விரு திறத்தினரும் பின்பற்றிய போர்முறையோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால், இரண்டாவதாகப் பின்பற்றிய முறை மிகச் சிறப்பு வாய்ந்ததாகத் தோன்றும் என்பதில் ஐயமில்லை. நெடுங்காலம் பிரஞ்சு மக்கள் யாதாகிலும் கற்கவோ, எதையாகிலும் நினைவில் இருத்திக் கொள்ளவோ மறுத்து வந்தனர். ஐந்தாம் ஹென்றி ஒரு மாபெரும் வீரர் ஆவார். அவரை 'தற்காலத்தின் முதல் படைத்தலைவர்' என்று கூறுவர். அவர் நார்மண்டியைக் கைப்பற்றி அதனை ஆங்கிலேயருடைய ஆட்சிக்குப்பட்ட ஒரு மாகாணமாக ஆக்கினர். அங்கிருந்து லோயிர் (Loire) ஆற்றின் கரைகள் வரையில் தம்முடைய ஆதிக்கத்தைப் பரப்பினர். அச்சமயத்தில் பிரான்சின் மாபெரும் நிலமானியப் படைமுறைக் குடும்பங்களாக இருந்து வந்த ஆர்லியன்ஸும் (Orleans) பர்க்கண்டியும் (Burgundy) தமக்குள்ளே பூசலிட்டுக் கொண்டன. இதனால் பிரான்சு நாடு இரண்டாகப் பிரிந்து நின்றது. அந்நிலையில் பர்க்கண்டியும் பிளாண்டர்ஸும் இங்கிலாந்துடன் நட்புறவு கொண்டன. இதனால் ஆங்கிலக் கால்வாயின் இரு பகுதிகளிலும் வாழ்ந்து வந்த கம்பளி நூல் வாணிகர்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர். 1420ஆம் ஆண்டு டிராய்ஸ் (Troyes) என்னுமிடத்தில் உண்டான உடன்படிக்கையின்படி, ஐந்தாம் ஹென்றி பிரான்சின் அரியணை ஏறுவதற்கு உரிமையுடையவர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கெல்லாம் ஐந்தாம் ஹென்றி காலமானர். இவ்வாறு தவறான வழியில் தான் பெற்ற மரபுரிமையைச் சிறு குழந்தையிடம் அவர் விட்டுவிட்டுச் சென்றார். அவரை அரசராகப் பிரான்சின் வடபகுதி ஏற்றுக் கொண்டமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

ஆறும் ஹென்றியின் வயது வராத ஆட்சிக்காலத்தில் பிரான்சில் இரண்டாவது முறையாகப் புத்துயிர்ப்பு உண்டாயிற்று. அப்போது டூகேஸ்கிளின் கையாண்ட முறைகளைத் திறமையாகப் பின்பற்றி பிரான்சு மக்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடத் தொடங்கினர். அக்காலத்தில் டூகேஸ்கிளினுக்கு அடுத்தத் தலைவராக இருந்த டூனைய்ஸ் (Dunois) என்பவர் தலைமையேற்ருர். அவர் டூகேஸ்கிளினுக்குப் பலவகையிலும் ஒப்புமை உடையவரல்லர். அத்துடன் அவரைக் காட்டிலும் இவர் மிகக் கடுமையான போரினை மேற்கொள்ள வேண்டியவராக இருந்தார். ஆனல், எதிர்பாராத வகையில் அளவு மீறிய ஒரு கூட்டாளியைப் பெற்ருர். பெருமைக்குரிய கூட்டாளி ஜோன் என்னும் நங்கையாவாள் (Joan of Arc). அவள் ஓர் ஆண்டுப் பெரும் புகழினைப் பெற்றும், மற்ருேர் ஆண்டு உயிர்த் தியாகம் (1429-1431) செய்தும் பிரான்சில் தேசிய இன உணர்ச்சியினையும், மரபினையும் ஊற்றெடுக்கச் செய்தாள். அத்தகைய தேசிய உணர்வுக்குப் பிறகு இன்றும் அங்கிலை தோன்றவில்லை என்று கூறலாம். ஆன்மீகத் துறையில் அவள் பிரான்சின் வாலேசாக (Wallace) விளங்கினுள். ஆனல் அவள் இறந்த இருபதாண்டுகளுக்குப் பிறகுதான் ஆங்கிலேயருடைய அதிகாரம் பிரான்சிலிருந்து மறைய முடிந்தது. டூனைய்ஸினுடைய போரினை வளர்க்கும் சூழ்ச்சியும் கோட்டைகளை முற்றுகையிடும் திறனும் காலப்போக்கில் ஆங்கிலேயர்களைத் தோல்வியுறச் செய்தது. 1453ஆம் ஆண்டு காஸ்கனி போர்க்களத்தில் ஆங்கிலேய டால்பட்டும் (Talbot) அவருடைய மகனும் அழிந்ததன் மூலம் நூறுண்டுப் போர் இறுதியாக முடிவடைந்தது. இதனுடைய பின்விளைவாக இரண்டு ஆண்டுகள் கழித்து இங்கிலாந்தில் ரோஜாப்பூ அணிந்து போரிட்ட போர் செயின்ட் ஆல்பன்ஸில் தொடங்கியது. இவ்வாறு பதினைந்தாம் நூற்ருண்டு முழுவதும் நன்முறையில் ஆட்சி செய்யப்படாத இங்கிலாந்து அமைதியற்று அல்லலுற்றது.

ஐரோப்பாவில் நெடுங்காலம் இடையருது தொடர்ந்து ஆங்கிலேயர் பேரரசினை நிறுவுவதற்கு முயன்றதனுல் நாம்பெற்ற பயன் என்ன? இடைக்காலத்து நம் நாட்டிலிருந்த நம்முடைய சமுதாயத்திலிருந்து நாம் தொடர்பினை அறுத்துக் கொண்டோம். அத்துடன் நாட்டிலே அரசியல் குழப்பமும், ஒழுங்கீனமும், நலிவும் உண்டாயிற்று. மேலும் காலெய்ஸ் துறைமுகத்தினை நாம் இப்போரில் கைப்பற்றினேம். இன்னும், ஒரு நூற்ருண்டுக் காலம் வரையில் நம்முடைய ஆட்சிக்குட்பட்ட ஒன்ருகவைத்து அதைக் கட்டிக் காத்து வந்தோம். அது பிரான்சில் ஆங்கிலேயர்




படம் 17.

**நூறுண்டுப் போரின் பிற்பகுதியில் பிரான்சு**

கள் முற்காலத்து செலுத்திய ஆட்சிக்குரிய தனிப்பட்ட குறுரை யாக இருந்துவந்தது. அது ஸ்காட்லாந்தில் ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கத்தை இழந்ததற்கு அறிகுறியாக டுவிட் நதி ஓரத்தில் உள்ள பெர்விக்னைப் பெற்றிருந்ததைப் போன்று, பிரான்சில் ஒருகாலத்து ஆங்கிலேயர்கள் ஆதிக்கமுடையவர் களாக இருந்தார்கள் என்பதை நினைவுறுத்திவந்தது. நம்நாட்டுப் பதப்படுத்தப்படாத கம்பளி நூல்கள் ஒன்றுகத் திரட்டப்பட்டு விற்பனைக்குச் செல்லுவதற்கு முன்பு வரிவிதிக்கப்பட்டு, அதற்குப் பிறகு காலெய்ஸ் துறைமுகத்தின் மூலமாக வெளிநாடு களுக்கு அனுப்பப்பட்டது. இதற்காக இங்கிலாந்து நாட்டின் அரசரால் நமது கம்பளி நூலின் முக்கிய பகுதி, தரம் ஆராய்ந்து

முடிவு செய்யப்பட்டது. ஆனால், நம் நாட்டில் துணி உற்பத்தி பெருகிய காரணத்தாலும் கடல் கடந்த நாடுகளில் நம் நாட்டவர்கள் வாணிகத் தொடர்பு கொள்ள முடியாமையினாலும் காலெய்ஸ் துறைமுகத்தின் வாயிலாக நமக்குக் கிடைத்துவந்த வருவாயின் தரம் குறையலாயிற்று. இதற்கிடையே பிரான்சு நாட்டு மண்ணில் ஆங்கிலேயரால் உறுதியாக அமைக்கப்பட்டிருந்த பாலத்தின் தலைப்பாக காலெய்ஸ் இருந்துவந்தது. அது கூர்த்த மதியும், முன்னெச்சரிக்கையுடன் சிந்திக்கும் திறமும் கொண்டயார்க்கிய, டியூடர் மரபுகளைச் சார்ந்த அரசர்கள் பிரான்சில் தங்களுக்கு உரிமையுண்டு என்பதை மறந்து விடாதவாறு நிலைத்த ஆர்வத்தை உண்டாக்கியும், பழைய உரிமையைப் புதுப்புத்தும் வந்தது. மேரி அரசியாரின் ஆட்சிக் காலத்து காலெய்ஸ் இங்கிலாந்தினால் இழக்கப்பட்டது. ஆனால் அவ் இழப்பு ஒரு நல்ல ஆதாயமாகும். அந்த இழப்புத்தான், எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்திய ஆங்கிலேயர்களை மேற்குத் திசையை நோக்கிப் புதிய நாடுகளைக் காணுமாறு உதவியது.

அப்படியானால் நூறாண்டுப் போர் நமக்குத் தீமை இழைத்ததே யொழிய, நன்மைகள் ஒன்றையும் செய்யவில்லையா? அப்போர் நமக்கு இழப்பீடு செய்யும் வகையில் யாதாகிலும் நன்மை செய்திருக்குமானால் அது புரிந்துகொள்ள முடியாத அறிவாற்றல் அமைப்பு முறையை, ஆற்றல் மிக்க தேசியத் தன்னுணர்ச்சியை, நிலமானியப் படைமுறைப் பழக்க வழக்கங்களுக்கு மாறாக மக்களாட்சிப் பண்புமிக்க வகையில் நமக்கு அளித்தது எனலாம். அத்துடன் மிகச் சிறந்த நினைவுகளையும் குறிப்புகளையும் அப்போர் நமக்குத் தந்துதவியது. இவை யாவற்றையும்விட, நமது தீவின் தனிப்பண்புகளிலே நமக்கு ஒரு நம்பிக்கையை அப்போர் உண்டாக்கியது எனலாம். அத்தகைய நம்பிக்கைதான் அடுத்த நூற்றாண்டில் பிரான்சிலும், ஸ்பெயினிலும் பிறைச் சந்திரனைப் போன்று வளர்ந்து கொண்டிருந்த முடியாட்சிகள் எல்லாம் மெல்ல நலிவுற்று மறைந்த காலத்தும், ஆங்கிலேயர்களைப் பெருமையோடு சிறப்புற்று விளங்குமாறு செய்தது. அகின்கோர்ட்டு போர்க்களத்து ஆங்கிலேயர் பெற்ற வெற்றியின் நினைவினால் உண்டான ஆர்வம் எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்து, சிறந்த வழியில் முறைப்படுத்தப்பட்டு, தேசிய இன உணர்ச்சியாக உருவாகியதை 'ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் நாம் காணுகின்றோம். ஆனால், அரசி பெஸ்ஸியின் ஆட்சிக் காலத்து ஆங்கிலேயர்கள் நூறாண்டுப் போர் நிலை எப்படியிருக்கும் என்பதை அடியோடு மறந்து விட்டனர். அவர்கள்

நூறுண்டுப் போரின் கசப்பு மிக்க உண்மைகள் அனைத்தையும் மறந்து விட்டனர் என்று கூறினல் அது மிகையாகாது. சாசர் ஒருவர்தான் அவருடைய நூலிலே நூறுண்டுப் போரின் கசப்பு மிக்க உண்மைகளையும் கொடுமைகளையும் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளதைக் காணுகின்றோம் :

'புதர்கள்தோறும் பிணங்கள் இருக்கும். அவற்றின் கழுத்துகள் நெரிக்கப்பட்டு இருக்கும். ஆயிரக்கணக்கானவர் இவ்வாறு கொலை செய்யப்பட்டனர். நோயினுல் அவர்கள் மடியவில்லை. கொடியோரின் ஆற்றலுக்கு அவர்கள் இரையாக்கப்பட்டனர். இவ்வாறு நகரம் முழுவதும் அழிக்கப்பட்டது. அங்குப் பாழ்படுத்தப்படாத பொருள்கள் ஒன்றுமே இல்லை.'

ஆனல் ஷேக்ஸ்பியரின் சம காலத்தில் வாழ்ந்தவர்கள் ஆங்கிலேய வேளாளர்களைப் பற்றிப் பின்வருமாறு பெருமையாகக் கூறியுள்ளனர் :

'அவ் உழவர்களே கடந்த காலத்தில் பிரான்சு முழுவதையும் அல்லோலகல்லோலப்படுமாறு செய்தனர். அவ்வாறு இருந்தபோதிலும், அவர்கள் பெருமக்களைப் போன்று 'தலைவர்' (Master) என்றோ, 'ஐயா' (Sir) என்றோ, மாவீரர்களுக்குப் பொருந்திய மதிப்பிற்குரிய சொற்களினுலோ அழைக்கப்படவில்லை. ஆனுல், அவர்கள் வெறும் ஜான் என்றும், தாமஸ் என்றுமே அழைக்கப்பட்டனர். இருந்த போதிலும் அவர்கள் நம் நாட்டுக்காக மிகச் சிறந்த தொண்டினை ஆற்றியிருக்கின்றனர். இங்கிலாந்து நாட்டின் அரசர்கள் போர்க்களங்களில் போரிட்ட போதெல்லாம் தங்களைச் சூழ்ந்து உழவர் படையினரே இருக்கவேண்டுமென்று விரும்பினர். அதற்கு ஏற்ப அவ் உழவர்கள் அரசரைச் சூழ்ந்த காலாட் படையினராக இருந்து கடும் போர் புரிந்துவந்தனர். பிரான்சு நாட்டு அரசர்கள் இதைப் போன்றே தங்களைச் சூழ்ந்து குதிரை வீரர்களை இருக்குமாறு செய்தனர் என்பதை அறிகிறோம். இதன் மூலம் அரசர் தம்முடைய தலையாய ஆற்றல் எங்கேயிருக்கிறது என்பதை எடுத்து விளக்கினுர்.'

நூறுண்டுப் போர்க் காலத்தில் இருந்த 'வேளாளர்களின் தலைமைக் கருத்து, ஆங்கிலேய எண்ணத்திலும், இலக்கியத்திலும், அரசியலிலும் செல்வாக்குமிக்க உயிரூட்டும் ஆற்றலாகச் சிறப்புமிக்க இடத்தைப் பெற்றது. அந்நிலை தொழிற்புரட்சி உண்டாகின்ற வரையில், நிலைத்து நீடித்து வந்ததைக் காணுகின்றோம்

இடைக்காலத்தின் தொடக்கப் பகுதியில் தென்னுட்டைச் சேர்ந்த அயலூரில் அல்லது அம்மாவட்டத்தில் அல்லது பட்டணத்தில் உள்ளவர்களிடத்து மக்கள் இயல்பாகப் பகைமை கொண்டவர்களாக இருந்து வந்தனர். இத்தகைய அயலார் என்ற எண்ணமானது இங்கிலாந்தின் தேசப்பற்று வளரத்

தொடங்கியதும் மெல்ல மறையலாயிற்று. அத்துடன் ஆங்கிலேய மக்களின் உள்ளத்தை விரிவுபடுத்தி, பிரஞ்சுக்காரர்கள் அல்லது ஸ்பானியர்களே உண்மையான அயலவர்கள் என்பதை தேசிய உணர்வு சுட்டிக் காட்டியது. நூறுண்டுப் போர்க் காலத்து பிரான்சோடு ஆங்கிலேயர் கொண்ட தொடர்பினுல் உண்டான பழக்க வழக்கங்களான சிந்தனையும், உணர்ச்சியும் இத்தகைய புதிய தேசிய உணர்வினைப் பிரஞ்சு மக்களினத்திற்கு வரையறுத்ததாகத் தெரிகிறது. நூறுண்டுப் போர்க்காலத்தில் உண்டான வெறுப்பு செறிவு குறைந்ததாக இருந்தது. ஆனல் அண்மையில் நாம் ஜெர்மனியோடு போரிட்ட காலத்தைக் காட்டிலும் இருபத்தைந்து மடங்கு நீண்ட ஒன்ருக இருந்தது என்பதை நாம் மறக்கலாகாது. அத்தேசியவுணர்வு டுரேக்ஸ் கிளின் காலத்து, பிரஞ்சு நாட்டுப் பகைவர்கள் நம்நாட்டின் தெற்குக் கடற்கரை யோரங்களில் தொடர்ந்து படையெடுத்து வந்து அழிவுச் செயல்களைச் செய்ததன் மூலம் செறிவு மிக்கதாக ஆக்கப்பட்டது. அத்துடன் டுரேக்ஸ்கிளின் காலத்தில் நம்முடைய கப்பல்களை எதிர்த்துப் போரிட்டு பிரஞ்சுக்காரர்கள் தோல்வி யுற்ற நிலையிலும், நம்முடைய தேசியவுணர்வு வீறுகொண்டு விளங்கத்தொடங்கியது. பிரஞ்சுக்காரர்களுக்கு எதிராக நமக்கு உண்டான வெறுப்புணர்ச்சி போரைக் காட்டிலும் நீடித்து இருந்தது. அத்துடன் நார்மானியப் படையெடுப்பு, நம் நாட்டில் பிரஞ்சுப் பண்பாட்டுக்கு, ஆங்கிலேய பண்பாட்டை அடிமைப்படுத்தி இருக்குமாறு செய்த கொடுமையை அழித்தொழித்தது. அக்காலம் முதல் அயல் நாட்டவர்கள் ஆங்கிலேய பொது மக்களின் தீவுப் பண்புகளையும், ஐரோப்பிய பண்பாட்டோடு தொடர்பு கொள்ளாது தனித்து, சிறப்புற்ற பண்பாடு உடையவர்களாகவும் இருக்கின்றனர் என்று நம்மைப் பற்றிக் குறை கூறத் தொடங்கிஞர்கள். ஏழாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் வெனிசில் இருந்து தூதர் ஒருவர் நம் நாட்டுக்கு வந்திருந்தார். அவருடைய குறிப்பில்,

> 'அவர்கள் தங்களைக் காட்டிலும் சிறந்த மனிதர்கள் உலகில் இல்லையென்று நினைக்கின்றனர். இங்கிலாந்தைக் காட்டிலும் வேறு ஒரு உலகம் இருப்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் கூறலாம். அவர்கள் அழகான ஓர் அயல்நாட்டவரைக் கண்டால், உடனே அவர்கள் ''அவன் ஆங்கிலேயரைப் போன்று காணப்படுகின்றுன்'' என்று கூறுவர். அத்துடன் அவன் ஆங்கிலேயனுக இருக்கக் கூடாதா? ஐயோ பாவம்! என்று அவர்கள் வருந்தினர். எப்போதாகிலும் அவர்கள் ஓர் அயல் நாட்டாஞெடு கலந்து மென்மையாக உறவாடுகின்றபோது ''இத்தகைய பொருள் உங்கள் நாட்டில் செய்யப்படுகின்றதா'' என்று வினவுவர்.'

என்று குறித்துள்ளார்.

டியூடர் ஆட்சிக்காலத்து இடைப்பகுதியில் பிரான்சு நாட்டுப் பயணி ஒருவர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> 'இந்த நாட்டு மக்கள் தங்கள் பழைய பகைவர்களைப் போன்று பிரஞ்சுக்காரர்களை வாழ்நாள் பகைவர்களாகக் கருதுகின்றனர். அவர்கள் எப்போதும் நம்மைப் பிரான்சுநாட்டின் போக்கிரிப்பயல்கள் என்றும், பிரஞ்சு நாய்கள் என்றும் அழைக்கின்றனர்.'

எலிசபெத் ஆட்சிக்காலத்தில் இத்தகைய உணர்ச்சிகள் ஸ்பெயினுக்கு எதிராகச் சிறிது காலத்திற்குச் செலுத்தப்பட்டன. இருந்தபோதிலும் ஆங்கிலேயருடைய தேசிய உணர்வில் நல்லியல்பு ஓரளவுக்கு இருந்துவந்தது. ஸ்பெயினோடு எலிசபெத்து போராடிக் கொண்டிருந்த உச்ச காலத்தில் ஷேக்ஸ்பியர் டான் ஆர்மடோ (Don Armado) என்பரை 'முரண்பாடு மிக்க நம்பத்தகாத ஸ்பானியர்' என்று 'காதல் உழைப்பின் இழப்பு' (Love's Lobour's Lost) என்னும் நாடகத்தில் அன்புடன் கேலிச் சித்திரமாக வரைந்து இருக்கின்றார். இது போர்க்காலத்திலும் நம்முடைய மக்களின் மனநிலை எப்படிச் சிறந்திருந்தது என்பதற்குச் சிறப்பு மிக்க சான்றாகும்.

பொதுமக்களின் விழிப்புணர்ச்சியைப் பின்பற்றி உயர் வகுப்பினர் மெல்ல ஆங்கிலேயக் கால்வாய்க்கு அப்பாலிருந்து வருகின்ற பொருள்கள் அனைத்தையும் வெறுக்கத் தொடங்கினர். மேல்நாட்டுக்குரிய பெருமக்கள் என்ற சிறப்புமுறை, அக்காலத்தில் வளர்ச்சி அடையத் தொடங்க இருந்ததேயொழிய, முழு மறுமலர்ச்சி யடையவில்லை. நார்மண்டியும் அஞ்சுவினப் பேரரசும் இழக்கப்பட்ட காலம் முதல், பிரஞ்சு மொழி பேசிய இங்கிலாந்தின் உயர்குடி வகுப்பினர் கடல் கடந்த நாட்டிலிருந்த பண்ணைகளோடும் உரிமைகளோடும் அவர்கள் கொண்டிருந்த தொடர்பு அறுக்கப்பட்டது. மேலும், அவர்கள் போற்றிப் பின்பற்றிய அயல்நாட்டிற்கே உரிய பண்பாட்டின் வேர்கள் பிரான்சிலே இருந்து வந்தன. அத்தகைய பண்பாட்டு வேரும் இதனால் அறுத்தெறியப்பட்டது. சாசரின் 'பிரியோரஸ்' (Prioress) என்னும் நூல் எழுதப்படுவதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு பாரிசில் பிரஞ்சு மக்கள், தங்கள் மொழிக்குப் பதிலாக ஆங்கிலேயப் பெருமக்களின் வாய்களிலே புதுமையான கலவை மொழி வெளிப்படுவதைக்கண்டு நகைக்கலாயினர். இருந்தபோதிலும், அது அவ்வாறே இருந்து வந்தது. மூன்றாம் எட்வர்ட்டின் ஆட்சிக்காலம் வரையில் ஆங்கிலேய உயர்குடி மக்களின் அன்றாடப் பேச்சுக்குரிய மொழி

யாக பிரஞ்சுமொழி இருந்து வந்ததைக் காணுகின்றோம். மேலும் சிறந்த பண்பாளர்களுக்கு உரிய சிறப்பியல்பாகப் பிரஞ்சு மொழி பேசுவது கருதப்பட்டு வந்தது. அங்கிலே நூறுண்டுப் போர்க்காலத்தில் தேசிய உணர்வின் பெருக்கத்திறல் எல்லா மக்களும் பிரஞ்சு மொழியினைப் பகைவனுடைய மொழியாகக் கருதவேண்டுமென்ற நெருக்கடியை உண்டாக்கிற்று. அதுவரையில் ஆங்கிலேய உயர்குடி மக்கள் பிரஞ்சு மொழியில் பேசுவதையே தங்களுக்குப் பெருமை தருவதாகக் கருதி வந்தனர்.

பாய்ட்டியர்ஸ் வெற்றிக்குப் பிறகு ஆறு ஆண்டுகள் கழித்து ஆங்கிலேயப் பாராளுமன்றத்திலே சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தில் நாட்டில் வாழும் மக்களுக்குப் பெரிதும் புரியாத மொழியான பிரஞ்சு மொழியை வழக்கு மன்றங்களில் பயன்படுத்தக்கூடாது என்றும், வழக்கு மன்றங்கள் அனைத்திலும் மக்கள் பேசும் ஆங்கில மொழியிலேயே வழக்காடுதலும், தீர்ப்பு வழங்குதலும் நடைபெறவேண்டும் என்றும் அவற்றை இலத்தீன் மொழியில் எழுதிப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருந்தது. அக்காலம் முதல் வழக்கறிஞர்கள் அவர்களுடைய தாய்மொழியிலேயே வழக்காட வேண்டுமென்று அச்சட்டம் குறிப்பிட்டது. இங்கு 'அவர்களுடைய தாய்மொழியில்' என்பது புதுமையானதும், சிறப்பு மிக்கதுமான கருத்தாகும். முதலில் அச்சட்டத்திற்குச் செம்மையாகக் கீழ்ப்படிந்து யாரும் நடக்கவில்லை. ஆயினும், அது நெடுங்காலத்திற்கு முன்பே நடைமுறையில் ஏற்றுப் போற்றப் பட்டதைக் காணுகின்றோம். வழக்கறிஞர்கள் தங்களுக்கே உரிய தொழில் துறைப்பழமைப் பற்றினல் நெடுங்காலம் வரையில் தங்களுடைய ஆவணங்களை 'நீதிக்குரிய பிரஞ்சு மொழியில்' தொடர்ந்து எழுதி வரலாயினர். அவர்களுடைய முன்னோர்கள் அதே மொழியில்தான் வழக்கு மன்றங்களில் வழக்காடி வந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

இதைவிட மிகச் சிறந்த அடிப்படையான ஒரு பெரும் புரட்சி மொழித் துறையில் பள்ளிகளிலே நடைபெற்றுக்கொண்டிருந்ததைக் காணுகின்றோம். ஆங்கிலம் ஹேஸ்டிங்ஸ் போருக்குப் பிறகு ஒன்றுமே விளங்காத நிலையில் உயர் வகுப்பினர் மொழியாகவும், படித்தவர்களின் மொழியாகவும் மீண்டும் சிறப்புப் பெறத் தொடங்கியதை நாம் காண்கின்றோம்.

பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் பிற நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களுக்கு மாறாகத் தங்களுடைய மொழியைக் கொண்டு வாழுமாறு வற்புறுத்தப்பட்டனர். அவர்களுடைய பாடங்களையும்

வேறு பலவற்றையும் பிரஞ்சு மொழியில் பயிலலாகாது என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். பிரஞ்சு மொழி நார்மானியர் இங்கிலாந்துக்கு வந்த நாள்முதல் பள்ளிகளின் பாடமொழியாக இருந்துவந்தது. அந்நிலை இக்காலத்தில் மாற்றப்பட்டதைக் காண்கிறோம். அந்தக்காலம் முதல் இங்கிலாந்தின் பெருமக்களுடைய குழந்தைகள் தொட்டில் பருவம் முதல் பிரஞ்சு மொழி பேசுவதற்குரிய பயிற்சி அளிக்கப்பட்டனர். அம்முறை 1349-ஆவது ஆண்டு முதன் முதலாக உண்டான பெருங் கொள்ளை நோய்க்காலம் வரையில் நடைமுறையில் இருந்துவந்தது. அதற்குப் பிறகு ஓரளவிற்கு மாற்றப்பட்டது. இலக்கணப் புலவரான காரன்வால் என்பவர் இலக்கணப் பள்ளிகளில் கல்வி அறிவினைப் பிரஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மாற்றினர். ரிச்சர்ட் பென்கிரீஸும் அவருடைய மனிதர்களும் பக்திப்பாடல்களை அம்முறையில் கற்பிப்பதற்குக் கற்றனர். அதுமுதல் நம்முடைய பிரபுவின் 1385-ஆவது ஆண்டு முதல் இரண்டாவது ரிச்சர்ட்டு அரசரின் ஒன்பதாவது படையெடுப்பிற்குப் பிறகு இங்கிலாந்தின் இலக்கணப் பள்ளிகள் அனைத்திலும் பிரஞ்சுமொழிக்குப் பதிலாகக் குழந்தைகள் ஆங்கிலத்தினைக் கற்று வரலாயினர். அக்கல்வி முறையின் நன்மை என்னவென்றால் குழந்தைகள் சிறிது நேரத்திலேயே அவர்களுடைய இலக்கணத்தைக் கற்றுக்கொள்ள முடிகிறது. ஆனால் பிரஞ்சு மொழி இலக்கணத்தைப் பிரெஞ்சு மொழியில் கற்றபோது குழந்தைகளுள் பெரும்பாலோர் நெடுங்காலம் கற்றும் நினைவில் வைத்துக்கொள்ளமுடியாது துன்புற்று வந்தனர். இந்தக் கல்வி முறையினால் உண்டான குறை என்னவென்றால் நம் குழந்தைகள் இனிமேல் பிரஞ்சு மொழியில் எழுதவும், பேசவும் முடியாது என்பதாகும். அவர்கள் பள்ளிகளில் படித்து வெற்றியுடன் வெளியே செல்லும்போது, புதிய நாடுகளில் பயணம் செய்வதற்குச் செல்வார்களானாலும், வேறு பல இடங்களிலும் அவர்கள் பிரெஞ்சு மொழி தெரியாது துன்புற நேரிடலாம். அத்துடன் அக்காலத்திய பெருமக்களுள் பெரும்பாலோர் தங்கள் குழந்தைகளுக்கு பெரிதும் பிரஞ்சு மொழியினைக் கற்பிப்பதைக் கைவிட்டு விட்டனர்."

என்று 1385 ஆம் ஆண்டு திரிவிசாவை (Trevisa) சேர்ந்த ஜான் என்பவர் எழுதியுள்ளார்.

இவ்வாறு எளிய பள்ளியாசிரியர்களான ஜான்காரன்வாலும், ரிச்சர்ட்டு பென்கிரீசும், பிற்காலத்தில் சாசரும் விக்ளிபும் தோன்றுவதவற்கு ஏற்ற வழியினை வகுத்துத் தந்தனர். அந்த வழியில்தான் வருங்காலத்தில் ஷேக்ஸ்பியரும், மில்ட்டனும் வந்தார்கள். அத்துடன் அவர்கள் ஆங்கிலேயச் சீர்திருத்த இயக்கமும், மறுமலர்ச்சி இயக்கமும் தோன்றுவதற்கு இவ்வாறு வழி காட்டினார்கள். இவை யாவற்றையும் விட, ஆங்கிலேய தேசிய விழிப்புணர்ச்சியும், அறிவும் முழு வளர்ச்சி அடைவதற்கும் பிரஞ்சுப் பண்பாட்டின் வடக்குக் கிளையாக விளங்காமல், தனிச் சிறப்புகளை உடையதாக அவை சிறப்புறுவதற்கும்

அவர்கள் அடிகோலினர். காலவழிச்செய்திக் கோவை ஆசிரிய ரால் மேலே குறிப்பிடப்பட்ட கூற்றுகள் தற்செயலாகப் பதிவு செய்யப்பட்டன என்று சிலர் கருதலாம். அவர்கள் மாபெரும் பட்டயத்தைக் காட்டிலும் (Magnacarta) அல்லது விடுதலை உறுதி ஆவணத்தைக் காட்டிலும் (Decleration of independence) அக்காலவழிச் செய்திக்கோவையின் குறைப்பை மிக முக் கியமானதாகக் கருதலாம்.[1]

ஆங்கில மொழி நார்மானியரின் படையெடுப்புக்குப் பிறகு உருவாகிக் கொண்டிருந்தது என்று கூறினால் மிகை யாகாது. அக்காலத்தில் அது கற்றறிந்தோர்களிடத்திலும், நாகரிகம் மிக்க பெருமக்களிடத்திலும் வழக்கொழிந்த மொழி யாகவும், அக்காலத்திய நாண்மரபு வழக்கு அற்ற மொழி யாகவும் இருந்ததைக் காண்கிறோம். சாக்சானியக் கம்பளிப் புழுவுக்கும் சாசரின் பட்டுப் பூச்சி நிலைக்கும் இடைப்பட்ட கூட்டுப் புழுப்பருவ நிலையில் அக்காலத்தில் ஆங்கில மொழி இருந்ததென்று கூறலாம். அக்காலத்தில் ஆங்கில மொழி, பல கிளை மொழிகளாக — வட்டார வழக்கு மிகுதியாக உடைய சொற்களைக் கொண்டதாக இருந்து வந்தது. அவ் வட்டார வழக்கு மொழிகளுக்குள் குறிப்பிடத் தக்கவை வெஸ்சக்ஸ், நார்த்தம்பிரியா, கிழக்கு மிட்லாந்து, மேற்கு மிட்லாந்து ஆகிய பகுதிகளில் பேசப்பட்ட மொழிகள் சிறப்பு மிக்கனவாகும். வெஸ்சக்ஸில் பேசப்பட்ட ஆங்கில மொழி ஆல்பிரட்டு அரசர் காலத்தில் அவைக்கள மொழியாகச் சிறப்புற்று விளங்கியமை இங்கு நினைவுகூரத்தக்கது. ஆனால், நார்மானியருடைய படையெடுப்பு அம் மொழியினைக் குடிசைகளுக்கும் உழவர்கள் தொழில் செய்யும் வயல்களுக் கும் விரட்டியதைக் காணுகின்றோம். அம்மொழியே கிழக்கு மிட்லாந்தின் மக்களுடைய பேச்சு மொழியாக இருந்தது.

1. 1375-ஆம் ஆண்டு அளவில் இங்கிலாந்தில் இருந்து வந்த மொழியியல் நிலையினை நாசிங்டன் (Nassington) என்பவர்.

'சிலர் பிரஞ்சு மொழியினைப் பேசுவர்; இலத்தீன் மொழி பேசப்படுவதில்லை. பிரஞ்சு மொழி நீதி மன்றங்களையே தமது இருப்பிடமாகக் கொண்டிருந்தது. யாராகிலும் இலத்தீன் மொழி யைப் பேச முயன்றால், அது பிரஞ்சு மொழியின் சொற்கள் நிறைந்ததாக இருக்கும். சிலர் ஆங்கில மொழியைப் புரிந்துகொள்ளு வர். அவர்கள் பிரஞ்சு மொழியையோ, இலத்தீன் மொழியையோ புரிந்துகொள்ளமுடியாது. ஆனால் கற்றோரும் கல்லாதவரும், இளை யோரும் முதியோரும் ஆகிய எல்லோரும் ஆங்கில மொழியினை நன்கு புரிந்துகொள்கின்றனர்' என்று சுருக்கமாகக் கூறியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

அம்மொழிதான் தற்கால ஆங்கிலத்தின் மூதாதையாக வளர்ச்சியடைந்தது. அப்படி இம்மொழி வளர்ச்சியடைந்த காலத்தில், அது பிற வட்டாரமொழிகளையும், கிளை மொழிகளையும் அழித்து, வெற்றிபெற்று நாட்டின் பல பகுதிகளிலும் மக்களால் பேசப்படும் மொழியாகப் போற்றப்படும் நிலையை அடைந்தது. அதற்குக் காரணம் இந்த வெஸ்சக்ஸ் வட்டார மொழியை லண்டன் மாநகரின் மக்களும், ஆக்ஸ்போர்ட்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் வாழ்ந்த அறிஞர்களும் கற்றோர்களும் பேசிவந்தமையேயாகும். அத்துடன் சாசர் என்னும் கவிஞர் அம்மொழியினைப் பயன்படுத்தியே தம்முடைய கவிதைகளை இயற்றியமையும் மற்றொரு காரணமாகும். அவர் அந்த மொழியில் பல பிரஞ்சு மொழிச் சொற்களைக் கையாண்டு அம்மொழியினை வளப்படுத்தினர். அத்துடன் விக்ளிப்பு வெஸ்சக்ஸ் மொழியிலே தம்முடைய சமய சித்தாந்த நூல்களை எழுதியதோடு, செயின்ட் ஜெரோமின் காலத்தில் எழுதப்பட்ட விவிலியத்தில் காணப்படும் இலத்தீன் மொழிச் சொற்களை மிகுதியாக எடுத்துக் கையாண்டு ஆங்கில மொழியினை வளப்படுத்தினர்.' சாசரும் விக்ளிப்பும் சேர்ந்து தங்களைப் போற்றிப் பின்பற்றக் கூடிய மக்கள் குழுவினை நாட்டிலே தோற்றுவித்தனர். அம்மக்கள், இவ்விருவரும் பயன்படுத்திய கிளைமொழியைப் போற்றிவளர்த்தனர். அவர்களுடைய கட்டுரைகளும், மொழி பெயர்ப்புகளும் சிறிது காலத்திற்குக் கையெழுத்துப் பிரதிகளாகவே மக்களிடையே சுற்றிவந்தன. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வெஸ்ட்மினிஸ்டருக்கு காக்ஸ்டன் கண்டுபிடித்த அச்சு இயந்திரம் வந்துசேர்ந்தது. அவ்வச்சு இயந்திரத்தினை யார்க்கிய அரசர்கள் பெரிதும் போற்றிவந்தனர். அவ்வியந்திரம் மேலும் சாசரை நாடு முழுவதும் அறியுமாறு செய்து, அவருக்குப் பொன்றாப் புகழைத் தேடித் தந்தது. அவர்களுடைய நூல்களையும் வேறு பல ஆங்கில நூல்களையும் வட்டார மொழிப் பயிற்சிகளின் மூலம் நாடு முழுவதும் அச்சு இயந்திரம் பரப்ப உதவியது.

இவ்வாறு டிரெண்ட்டு (Trent) ஏவோன் (Avon) ஆகிய பகுதிகளுக்கு அப்பால் உள்ள மக்கள் அனைவரும், சிறப்பாக யார் தங்களைக் கல்வி கற்ற ஆண்களும் பெண்களும் என்று சொல்லிக்கொள்ள விரும்பினாலும், அவர்கள் அனைவரும் பொதுவாக எழுதுவதற்கும் படிப்பதற்கும் உரிய ஆதாரமாக ஆங்கில மொழி உருவாக்கப்பட்டது. டியூடர்கள்

ஆட்சிக் காலத்து விவிலிய நூலும், வழிபாட்டு நூலும் இக் கிளை மொழியிலேயே எழுதப்பட்டதைப் பின்னர்க் காண்போம். அக்காலத்திற்குள் அக் கிளை மொழி 'அரசரின் ஆங்கிலம்' ('The King's English') என்று சொல்லத்தக்க வகையில் சிறப்புற்று வளர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அம்மொழி அக்காலத்து நாலா பக்கங்களிலும் இருந்துவந்து பரவப் பெற்ற மொழி வழக்குகளைப் பெற்று, இதற்கு முன்பு எக்காலத் திலும் இயற்றப்பட்ட நூல்களுக்கு இல்லாத தனிச்சிறப்பினை யும் ஆதிக்கத்தையும் இவை பெற்றதோடு, பொது அளவு கோலினையும் நிலைநாட்டியது. சாசர் காலம் முதல் எலிச பெத் காலம் வரைக்கும் உள்ள இடைப்பட்ட இரு நூற் ருண்டுகளிலும், இங்குக் குறிப்பிட்ட மொழி மக்களுடைய நூல்களில் வாழ்வதைக் காட்டிலும், அவர்களுடைய நாவிலே நடமாடிக் கொண்டிருந்ததைக் காணுகின்ருேம். அம்மொழி ஓர் ஆற்றலைப் பெறுவதிலிருந்து, மற்ருேர் ஆற்றலைப் பெறு வதை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது. ஒருவகையான அழகையும் நயத்தையும் பெறுவதிலிருந்து மற்ருெரு வகை யான அழகையும் நயத்தையும் பெறுவதற்கு விரைந்து வளர்ச்சி அடைந்து கொண்டிருந்ததைக் காணுகின்ருேம். அம் மொழி மறுமலர்ச்சி இயக்கத்தின் கல்வியறிவு அனைத்தையும், அதனுல் உண்டான எல்லாவகையான மகிழ்ச்சிகளையும் வெளிப்படுத்துவதற்குரிய சொற்களையும், இலத்தீன் மொழி யிலிருந்து பெற்று வளம்பெற்றது. இவ்வாறு ஸ்ராட்போர்ட் டைச் சேர்ந்த மனிதரான ஷேக்ஸ்பியரின் கைகளில் சிக்கிச் செம்மைப் படுத்தப்படும் முறையில் அம்மொழி மெல்லமெல்ல பல துறைகளிலும் முன்னேற்றமான வளர்ச்சியினை அடைந்து கொண்டுவந்தது. அம்மனிதரின் காலம் முதல் நுட்பமான விதி முறைதவருத அறிவியல் அறிக்கைகளுக்கு ஏற்ற வகையில் நெகிழ்வுத் திறனுடையதாக அம்மொழி வளர்ந்து வந்தது. அத்துடன் அதனுடைய கவிச்சுவையும். இலக்கியப் பண்பு களும் மெல்ல வளர்ச்சியுறத் தொடங்கின. இவ்வாறு அம் மொழியினைப் பயன்படுத்தும் மக்களின் மனப்பாங்கிலும், வாழ்க்கையிலும் உண்டான மாறுதல்களுக்கேற்ப அம்மொழியும் மாற்ற முற்று வளர்ந்து வந்தது இங்குக் கருதத்தக்கதாகும்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

இடைக்காலப் போர்கள்— நூறுண்டுப் போர்— பிரான்சு டன் போர் புரியக் காரணங்கள்— போரில் புகழ்— பிரான்சு நிலமானியப் படைமுறையினை இன்றும் பின்பற்றி இருத்தல்—

நீண்டவில் —ஆங்கிலேயேக் கம்பெனிகள்— ஆங்கிலேயரின் புதிய சூழ்ச்சிகள்—ஐந்தாம் ஹென்றியின் படையெடுப்புகள்—போரின் இறுதி நிலைகள்—அகின்கோர்ட்டினைப் பிற்காலத்தவர் மதிப்பிடுதல்—ஆங்கிலேய தேசிய வுணர்வு—பள்ளிகளில் மீண்டும் ஆங்கிலம் இடம் பெறல்— ஆங்கில மொழி.

## இயல் 7

# பெருங் கொள்ளை நோய்

1. உட்குடிகளின் விடுதலையும் உழைப்பின் நெகிழ்ச்சியும்; 2. 1381-ஆம் ஆண்டு உண்டான கலகம்; 3. திருச்சபையும் பாமர மக்களும்; 4. விக்ளிப்பும் லோலார்டியர்களும்.

இதற்கு முந்திய இயலில் இடைக்கால ஆங்கிலேய கிராமத்தின் வாழ்க்கை நிலையைப் பற்றி நாம் விரிவாகக் கண்டோம். அக்கிராமம் தம்முடைய உழைப்பாலும் திறமையாலும் தந்நிறைவு பெற்றிருந்ததையும் அடிக்கடி பஞ்சத்தால் அல்லலுற்றதையும் கண்டோம். ஆனால் என்றுமே அக்கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்ததில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். அக் கிராமம் தன் ஊருக்கு வெளியே இருக்கின்ற காட்டு எல்லைக்கு அப்பால் உள்ள உலகத்தோடு எத்தகைய தொடர்பும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், அந்தக் கிராமத்திற்குரிய பிரபுவின் தனிப்பட்ட முயற்சிகளாலும், தேவைகளாலும் சிற்சில சமயங்களில் அக் கிராமம் வெளியேயுள்ள வேறு சில ஊர்களோடு தொடர்பு கொள்ள நேர்ந்ததையும் காணுகின்றோம். இவை யாவற்றையும் விட, ஊரில் உள்ள மக்களுடைய எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றத்தக்க வகையில் தந்நிறைவு உடையதாகக் கிராமம் விளங்கியது. அக் கிராமத்தில் மாவு ஆலைக்காரர்களும், தொழில் வினைஞர்களும், நூல் நூற்போர்களும் இருந்தனர். அக் கிராமத்து மக்கள் தாங்களே நிலங்களை உழுவதன் மூலம் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து கொண்டனர். அவர்கள் பின்பற்றிய முறைகள் நெடுங்காலமாக வழக்கில் இருந்து வந்த உழவுத் தொழில் முறைகளாகும். திறந்த வெளிகளில் உட்குடிகளுக்கு இருந்த சிற்சில துண்டு நிலங்களையும், பொது மேய்ச்சல் நிலங்களிலும் தரிசு நிலங்களிலும் ஊர் மக்களுக்குப் பொதுவாக இருந்து வந்த உரிமைகளையும் பங்கிட்டுக் கொள்ளுதன் மூலமும் அவர்கள் உழவுத்

தொழில் செய்து, தம்முடைய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். மேலும் ஒவ்வொரு கிராமமும் ஒரு பிரபுவின் ஆட்சிக்குட்பட்ட மேனர் பண்ணையாக விளங்கியதையும் நாம் முன்பு கண்டோம். அந்தப் பிரபு அவ்வூரில் வாழ்பவராகவோ, வேறு எங்காகிலும் குடியிருப்பவராகவோ இருந்தார். அத்துடன் மேனர் பண்ணைக்குரிய பிரபுக்கள் சமயச் சார்பற்றவராக வோ, சமயத் தொடர்புடைய குருமார்களாகவோ இருந்தது இங்குக் குறிப்பிடத்தக்கது. பிரபுக்களுக்கும் உட்குடிகளுக்கும் இடையே இருந்துவந்த தொடர்பு எத்தகையது என்பதை நாம் முன்னர்க் கண்டோம். ஓர் ஊரில் வாழும் மக்களுக்குள் உட்குடிகளே பெரும்பான்மையினராக இருந்ததையும் நாம் பார்த்தோம். அவ் உட்குடிகள் கட்டாயமாக வேலை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டதன் மூலம் பிரபுவாகிய நிலக்கிழாரினுடைய மேலாளரின் பார்வையின்கீழ் உட்குடிகள் அவருடைய நிலத்தை உழுது பயிரிட்டு வந்ததையும் நாம் கண்டோம்.

இம் முறை ஐரோப்பா முழுவதிலும் சிற்சில மாற்றங்களோடு அக்காலத்து நடைமுறையில் இருந்து வந்ததைக் காணுகின்றோம். ஐரோப்பா முழுவதிலும் ஒரே வகையான சமயச் சடங்குகளைப் பின்பற்றியதன் மூலம் கிறிஸ்துவ உலகின் ஒருமைப்பாட்டை நிலைநாட்ட அது உதவியதைப்போன்று, நில மானியப் படைமுறை ஐரோப்பாவின் ஒருமைப்பாட்டினை நிறுவுவதற்குத் தூண்டியது என்று கூறினால் அது தவறாகாது. ஒவ்வொரு நிலத்திலும் ஒரே வகையான சமூகத்திட்டத்தைக் காணலாம். ஆனால், அச்சமூகத் திட்டம் பிரபு, அடிமை ஊழியர், என்னும் இரண்டு தூண்களினால் சுமக்கப்பட்டு வந்ததைக் காணுகின்றோம். அதைப் போன்றே ஒவ்வொரு நிலத்திலும் பிரபுவும் அடிமை ஊழியர்களும் வாழ்க்கை முறையைப் பற்றி ஒரே வகையான நோக்குடையவர்களாக இருந்தனர். மாற்றமும், வேறு பல திறமும் உழவர்கள் எழுச்சியின் விளைவாகத் தோன்றியது எனலாம். அவ்வேளாளர்கள் உரிமையுடைய வீரர்கள் ஆவார்கள். அத்துடன் சுறுசுறுப்பு வாய்ந்த அறிவாற்றல் மிக்க நடுத்தர வகுப்பினரும் இடைக்காலத்தின் இறுதிப்பகுதியில் உழவர்களோடு இணைந்து செயலாற்றத் தொடங்கியதன் மூலம், நாட்டிலே மாற்றங்களும் பற்பல வேறுபாடுகளும் தோன்றலாயின. பாரிசு மாநகரின் குடிமக்கள், ஜெனிவா மாநகரக் குடிமக்களிடமிருந்து பெரிதும் வேறுபட்டவர்களாக விளங்கினர். அதைப் போன்றே பிரான்சின் குடியானவர்களிடமிருந்து டியூடர் காலத்திய இங்கிலாந்தின் உழவர்கள் முற்றிலும் வேறுபட்டவர்

களாக விளங்கினர். இவ்வாறு இறுதியாகப் பழைய ஐரோப்பாவின் நிலமானியப் படைமுறை ஒற்றுமையும் ஒருமைப்பாடும் பல தேசிய இனங்கள் பிரிந்ததனுல் தகர்த்தெறியப்பட்டது. இவ்வாறு பிரிந்த ஒவ்வொரு தேசிய இனமும், தனக்கென தனிப் பண்பு உடையதாக விளங்கலாயிற்று.

இருண்ட காலத்திலிருந்த இங்கிலாந்தினை முன்னேற்றப் பாதைக்கு மேனர் பண்ணை முறை அழைத்துச் சென்றது. அத்துடன் மனிதர்களைக் காடுகெடுத்து நாடாக்கவும், கடலிலிருந்து நிலத்தினை மீட்கவும், நாட்டின் புதிய பகுதிகளில் குடியேற்றங்களை அமைக்கவும் மேனர் பண்ணை முறை உதவியாக அமைந்தது எனலாம். முரட்டுச் சக்தியே பேராற்றலாகக் கருதப்பட்டு வந்த இன்னல் மிக்க அக்காலத்தில், ஏழை எளியவர்களை மேனர் பண்ணை முறை அரை அடிமைகளாக்கிய போதிலும் வழக்காற்று நெறியின் மூலம் அவர்களைக் காத்துவந்தது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அம்முறை நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டியது. அறிவையும் முன்னேற்றத்தையும் தடைப்படுத்தியது. அத்துடன் உரிமை வழங்க மறுத்தது. ஆங்கிலேய மக்களின் வரலாற்றில் மேனர் பண்ணைக்குரிய பங்கு சிறப்புமிக்கதாகும். ஆனல் காலப் போக்கில் அம்முறை தன்னுடைய பயன் அனைத்தையும் இழந்து பயனற்றதாக மாறியது.

பதின்மூன்ரும் நூற்ருண்டு முடிவடைவதற்கு முன்பே, இங்கிலாந்தின் வாழ்க்கையில் மாற்றங்கள் உண்டாகப் போவதற்குரிய அறிகுறிகள் புலனுயின. பிரபுக்களும் அவருடைய மேலாட்களும், உட்குடிகள் ஒரு நாள் முழுதும் உழைப்பதற்குப் பதிலாக ஒரு பென்னியையோ அரைப் பென்னியையோ வாடகையாகப் பணத்தைப் பெறுவது மிகவும் வசதியானது என்பதைச் சிற்சில சமயங்களில் கண்டனர். ஆனல், இம்முறையினல் மாற்றப்பட்ட உட்குடிகள் சட்டத்தின் முன்பு தனியுரிமை மக்களாகக் கட்டாயம் கருதப்பட வேண்டுமென்ற நியதி உண்டாகவில்லை. பெரும்பாலான வழக்குகளில் அவர்கள் இன்னும் நிலத்தோடு பிணைப்புண்டவர்களாகவே இருந்து வந்தனர். பணத்தினைக் கொடுத்து உழைக்காது உரிமைபெறும் அம் மாற்று முறை அடிக்கடி பிரபுவினுடைய மாற்றமுடியாத கட்டளைக்கு அடி பணியும் முறையாக இருந்தது. பதினன்காம் நூற்ருண்டின் முதல் பகுதியில் சில பண்ணைகளில் அடிமை ஊழியர்கள் தம் நிலையிலிருந்து கூலிக்கு உழைக்கும் நிலையினை அமைதியாக

அடைந்து முன்னேறிக் கொண்டிருந்ததைக் காணுகின்றோம். ஆயினும் பழைய முறை நாடு முழுவதும் பின்பற்றப்படவில்லை என்றாலும், நாட்டின் பல பகுதிகளிலும் இன்னும் நடைமுறையில் இருந்து வந்ததாகத் தெரிகிறது. ஏனென்றால் 1348–49 ஆம் ஆண்டுகளில் திடுக்கிடச் செய்யும் தேசியப் பேரழிவு உண்டான போது, பழைய முறை பல பகுதிகளில் பின்பற்றப்பட்டு வந்தமை புலனாகின்றது.

கீழ்த்திசை நாடுகளில் அறிந்து கொள்ளமுடியாத நோய்களின் தலை ஊற்றாக இருந்த நாட்டிலிருந்து முதன்முதலாகப் பெரும் கொள்ளை நோய் ஐரோப்பாவுக்கு வந்து சேர்ந்தது. அக்காலத்தில் அக் கொள்ளைநோய் ஐரோப்பிய மக்களுள் மூன்றில் ஒரு பாகத்தினரை இரையாகக் கொண்டது குறிப்பிடத் தக்கது. ஒருகால், பாதிக்கு மேற்பட்ட மக்களைச் சிறப்பாக பொக்காசியோ (Boccaccio), பிராய்சார்ட்டு (Froissart) சாசர் (Chaucer) முதலியோரின் காலத்து வாழ்ந்த நாட்டு மக்களை அது விழுங்கியது எனலாம். அந்நோய் முதன்முதலாக ஐரோப்பாவினுள் நுழைந்த கொடிய காட்சி என்னவென்றால் அது பரவாத இடமே எங்கும் இல்லை என்பதாகும். திருச்சபை வட்டாரங்களிலுள்ள ஊர் மத குருமார்களின் பட்டியல்களிலிருந்து நாம் மிகவும் தனித்து விளங்கிய இங்கிலாந்தின் சிற்றூர்களில் எல்லாம் அந்நோய் பரவியிருந்ததை அறிகிறோம். அந்த மத குருமார்களின் பட்டியலிலிருந்து அழிவுமிக்க அவ் ஆண்டில் குறைந்தது இரண்டு பேராகிலும் அவ்வட்டாரத் திருச்சபையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் என்பது தெரியவருகிறது. பல சிற்றூர்களும், கிராமங்களும் முற்றிலும் அழிந்தொழிந்ததைக் காணுகின்றோம். அவ் ஊர்களைச் சார்ந்த மக்கள் எல்லாருமே அந்நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தொழிந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1349-ஆவது ஆண்டு, குளிர் காலத்தில் பிளேக் என்னும் அக் கொள்ளைநோய் இங்கிலாந்தில் தங்கியிருந்தது. அது இடைவிடாது துப்புரவு அற்ற பட்டணங்கள் யாதாகிலும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறிமாறிப் பரவிக் கொண்டிருந்தாகத் தெரிகிறது. இரண்டாம் சார்லசின் ஆட்சிக் காலத்து, 'லண்டன் மாநகரில் பிளேக் நோய்' பெரிதும் பரவி மக்களைக் கொன்று குவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலை அந்நோயின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த கொடிய செயலாகும். அந்நோய் லண்டன் மாநகரில் மிகச் சிறிய அளவிலேயே பரவியிருந்தது எனலாம். ஏனெனில், லங்காஸ்டிரியரியின் ஆட்சிக் காலத்தும், டியூடர்களின் ஆட்சிக் காலத்தும், ஸ்டூவர்ட்டுகளின்

ஆட்சிக்காலத்தும் தலைநகரை அழித்துத் துன்புறுத்திய பல பிளேக் நோய்களைக் காட்டிலும் மிகக் கொடுமையானதாக இது இருந்திருக்குமானால், டி.ஃபோ (Defoe) போன்ற அறிஞர்கள் அதைச் சிறப்பாகக் குறிப்பிடாமல் இருக்கமாட்டார்கள். துப்புரவற்ற வீதிகளின் மீதும் குறுகிய வாழ்நாளுடைய நம் முன்னோர்களின் மீதும் பிளேக்கு எப்போதும் வட்டமிடும் கார்மேகமாகவே இருந்துவந்தது. அது அடிக்கடி போதிய அளவுக்கு உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படாததனால் உண்டாகிய பஞ்சங்களை அடுத்துத் தோன்றிய விளைவாக இருந்ததைக் காணுகின்றோம்.

மூன்றும் எட்வர்ட்டு ஆட்சிக்காலத்து, அந்நோய் இங்கிலாந்தில் கோரதாண்டவம் புரிந்த பதினறு மாதங்களில் ஆங்கிலேயக் குடிமக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து போயிற்று. நாற்பது இலட்சம் மக்களிலிருந்து இருபது அல்லது இருபத்தைந்து இலட்சம் மக்களைக் கொண்ட நாடாக இங்கிலாந்து மாறியிருக்கலாம். இதனால் இனப் போராட்டங்களும், உட்குடிகளை விடுதலை செய்யும் முறையின்மீது வெறுப்புணர்ச்சி உண்டாவதும் விரைவுபடுத்தப்பட்டன. வாழ்க்கை நிலைகளில் மிக மெல்ல மாறுதல் அடைவதில் நன்கு பழக்கப்பட்ட அச் சமூகத்தில், தொடர்ந்து உழைப்பின் விலைமதிப்பு மிகுதிப்படுதலில் வியப்பு இல்லை. இதன் விளைவுகள் இருதிறப்பட்டனவாகும். இதற்கு முன்பே உரிமை பெற்ற உழவர்கள் உயர்ந்த கூலியைப் பெறுவதற்கு முயன்றனர். இந்நிலையில் உரிமை பெறாத உட்குடிகளாக இருந்தவர்கள் தங்கள் பிரபுவின் மேலாள் சட்டப்படி கட்டளையிடுகின்ற பணிகளை வழக்கம்போல் செய்வதனால் அல்லலுற்றனர். அவ்வழக்காற்று முறைகள் அக்காலத்து இரு திறத்தாருக்கும் சிறந்த மதிப்புடையாக இருந்தன. நாளடைவில் உட்குடிகள் தம்முடைய முழு உரிமையைப் பெறப் போராடவும், அத்துடன் தாங்கள் விரும்பிய இடத்தில் தொழில் செய்து கூலி பெறுவதற்குரிய உரிமையைப் பெறவும், தம்முடைய பிரபுவுக்கு எதிராக அரசரின் முறைமன்றத்தில் வழக்காடவும், இவை யாவற்றையும்விட நிலமானியப் படைமுறையின் தொல்லைமிக்க வரிகளைச் செலுத்துவதிலிருந்து விடுதலை பெறவும் முயன்று முன்னேற்றம் கண்டனர்.

அந்நிலையில் பிரபுக்களும் அவர்களுடைய மேலாட்களும், இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு போல், செய்வது அறியாது மனம் கலங்கினர். அவருடைய அதிகாரத்திற்கு

உட்பட்டு நிலத்தின் பாதிப் பகுதி குத்தகைக்கு விடப்பட்டன ; எஞ்சிய பாதிப் பகுதி உழுவாரற்று வெறுமனே கிடந்தன. அவ்வயல் வெளிகளில் புல்லும் புதர்களும் அளவுகடந்து வளர்ந்து அவற்றை மறைத்தன. அந்நிலங்களை உழுவதற்குரிய உழவர்கள் இறந்து விட்டனர். அவர்கள் வாழ்ந்த குடிசைகளின் கூரைகள் மெல்லப் பெயர்ந்து கீழே விழுந்தன. இத்தகைய இடர்ப்பாடு மிக்க காலத்தில், எஞ்சி உயிர்வாழ்ந்தவர்கள் சட்டத்திற்கும் வழக்காற்றுக்கும் எதிராக வெளிப்படையாகக் கலகம் செய்வதற்கு ஒன்று சேர்ந்தனர். இன்னும் சில சமயங்களில் பொருளாதார முறையில் அடையக்கூடியவற்றிற்கு எதிராகவும் அவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். உலகமே அக்காலத்தில் அழிந்து விடும் நிலைக்கு வந்து விட்டதாகத் தோன்றியது. ஆயினும் பிரான்சோடு மேற்கொண்ட போரினை நிறுத்திவிட வேண்டுமென்ற எண்ணம் ஆட்சிபுரியும் வகுப்பினருக்குத் தோன்றவே இல்லை. அந்நூற்றுண்டுப் போர் கொள்ளையடிப்பதற்கும், ஆதாயம் பெறுவதற்கும் உரிய ஓர் ஊற்றுக ஆளவந்தார்களால் கருதப்பட்டமைதான் இதற்குக் காரணமாகும். பாயிட்டியர்ஸ் வெற்றிக்குப் பிறகு, தொடர்ந்து கிரேசி போர்க்களத்திலும் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். ஆனால், இரு வெற்றிகளுக்கும் இடையே உலகின் மக்கள் தொகையில் பாதிப்பேர் இறந்து விட்டனர் என்று கூறினல் அது தவருகாது.

நிலக்கிழார்களுக்கு உண்டான துன்பங்களின் பெரும் பகுதி, கூர்த்த மதியினுலும் நல்ல முறையினுலும் ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டன. அவர்கள் நிலங்களை உழுவதற்குப் பதிலாக ஆட்டுப் பண்ணைகளுக்குரிய மேய்ச்சல் நிலங்களாக அவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினர். நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் பெரும் கொள்ளை நோயினுல் உண்டான அழிவிற்குப் பிறகும் மக்கள் தொகையில் உண்டான பெரும் பிளவினை ஓரளவுக்கு நிரப்பினர். ஆயினும் தாங்கள் ஆட்டிடையர்களுக்கு இடம் கொடுப்பதற்காக உழவர்களைத் தங்கள் நிலங்களிலிருந்து வெளியேற்ற வேண்டிய நெருக்கடி பிரபுக்களுக்கு உண்டாகவேயில்லை. 1350-ஆவது ஆண்டு உழவர்களை நிலங்களிலிருந்து இறப்பு வெளியேற்றியது. அதனுல் ‘பாழடைந்த ஊர்கள்’ பிறரால் கைப்பற்றப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தன. இத்தகைய சூழ்நிலையில் பெரும் துன்பத்திற்குள்ளாகி அல்லலுறும் சமூகத்தினருக்கு, ஆட்டுப்பண்ணைக்குரிய மேய்ச்சல் நிலங்கள் பெருகியமை ஒரு பெரும் ஆதாயமாகவே இருந்தது.

பிளாண்டர்சில் உள்ள தறிகளுக்கு, இங்கிருந்து பதப்படுத்தப் படாத கம்பளி நூல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதையும், அதே சமயத்தில் இங்கிலாந்தில் துணி உற்பத்தி வளர்ச்சியுற்றதையும், இங்கிலாந்தின் ஆடுகளிலிருந்து கிடைக்கும் கம்பளி நூல்கள் அனைத்தையும் விரும்பிப் பெறுவதற்குரிய தேவைகள் பேரளவினதாகப் பெருகியதையும் காண்கிறோம். அக்காலத்தில்தான் மூன்றாம் எட்வர்டு பிளாண்டர்சிலிருந்து பிளமிய நெசவாளர்களை நம் நாட்டுக்குக் கொண்டு வந்து குடியமர்த்தி நம்நாட்டு மக்கள் நெசவுத் தொழிலில் சிறந்த திறமையும் தேர்ச்சியும் பெறுமாறு செய்தார். இதனால், நம் நாடு துணி உற்பத்தித் தொழில் செழித்தோங்கியது. இவ்வாறு தேசியத் திட்டமும், நெடுந்தொலைவில் கிடைத்த வாணிகச் சந்தைகளும் பழைய மேனர் பண்ணையின் குறுகிய பொருளாதார நிலையை ஆட்டம்கொடுக்குமாறு செய்தது; ஆனால் அதே சமயத்தில் கம்பளி நூல் வாணிகத்தை அது பெரிதும் முன்னேற்றம் அடையச் செய்தது; அத்துடன் விடுதலை பெற்ற உட்குடிகளுக்கும் அல்லது பண்ணைகளை விட்டு ஓடிய உட்குடிகளுக்கும் மாற்றுவேலைகளைத் தந்து அவர்களுக்கும் வாழ்வு அளித்தது.

அப்பெரும் துன்பக்காலத்தில் நிலக்கிழார்கள் எடுத்துக் கொண்ட வேறு வகையான முயற்சிகள் இயல்பானதாக இருந்தும், செயல்முறைகளின் போக்குக்கு அவை உகந்தனவாக இல்லாமல் போயின. இதற்கு எடுத்துக்காட்டாகச் சட்டத்தின் மூலம் கூலிகளையும் விலைகளையும் கட்டுப்படுத்த அவர்கள் முயன்றனர். அத்துடன் உரிமை பெற்ற தொழிலாளர்கள் அதிகமாகக் கூலி கிடைக்குமிடத்தை நாடிச்செல்ல வொட்டாது, சட்டத்தின் மூலம் அவர்கள் தடுத்தனர். இவை யாவற்றையும் விட உட்குடிகளுள் இனியாரும் விடுதலை பெற்று உரிமைக் குடிகளாக மாறவொட்டாது அவர்கள் தடுத்தனர். ஆனால், இத்தகைய சமூகப் பொருளாதார மாற்றங்களைத் தடுப்பதற்குஅவர்கள் முயன்ற முயற்சிகள் அனைத்தும், நாட்டிலே தோன்றியிருக்கும் புதுமையானதும் தேசியப் பண்பு மிக்கதுமான நிலையை நிலக்கிழார்கள் உணருமாறு செய்தது. இவர்கள் இயற்றிய சட்டங்கள் அனைத்தும் பாராளுமன்றத்தின் மூலம் செய்யப்பட்டனவாகும். அப்பாராளுமன்றம் இதற்கு முன்பே நகராட்சி மன்றங்களிடத்தும் மேனர் பண்ணைகளுக்குரிய அதிகாரிகளிடத்தும் இருந்து வந்த பொருளாதாரக் கட்டுப்பாட்டு முறையினைத்தான் எடுத்துக்கொண்டு செயலாற்றத் தொடங்கியது. இம்முறை எலிசபெத்து அரசியின் காலத்தில்

சிறப்பு மிக்க நாட்டு இனத்தை உருவாக்கும் வகையில் முழு நிறைவு அடைந்ததைக் காணுகின்றோம். ஆனால், பாராளுமன்றத்தில் முற்றிலும் பிரித்து ஒதுக்கப்பட்ட வகையில் நிலக்கிழார்களாகிய பிரபுக்களும், பட்டணங்களில் தொழில் புரியும் வகுப்பினருமே இடம் பெற்றிருந்தனர். அவர்கள் 1351-ஆவது ஆண்டு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அரசர் நிறைவேற்றிய அவசரச் சட்டத்தினைப் பின்பற்றி தொழிலாளர்களின் சட்டம்' (Statute of Labourers) என்பதை இயற்றினர். அச்சட்டம் அவர்கள் நேர்மையாக இருக்க விரும்புவதைக் காட்டியதோடு, கூலிகளை மட்டுமல்லாமல், உணவுப் பொருள்களையும் வேறு பிறபொருள்களையும் பழைய விலைகளிலேயே நிலைப்படுத்த முயன்றனர் என்பதையும் தெரிவிக்கின்றது. ஆனால் எச்சட்டமும் ஒரே ஒரு ரொட்டித் துண்டு அல்லது ஒரே ஒரு தொழிலாளி இருக்கின்றபோது இரண்டு ரொட்டித்துண்டுகளையோ, இரண்டு தொழிலாளிகளையோ உண்டாக்க முடியாது. அதைப்போன்றே பாராளுமன்றத்தின் எந்தச் சட்டமும் பெரும் கொள்ளை நோயினை மீண்டும் நாட்டிலே தோற்றுவிக்க முடியாது. அதைப்போன்று அக்காலத்து மக்களின் மன எழுச்சியையும் அழித்தொழிக்க முடியாது. எனவே சட்டத்தின்மூலம் தொழிலாளர்களின் கூலிகள் வரையறுக்கப்பட்டமையும் உட்குடிகள் எல்லோரும் விடுதலை பெறுவது மறுக்கப்பட்டமையும் நாட்டிலே கொடிய ஒரு போராட்டத்தை உண்டாக்கியது. அப்போராட்டம் அந்நூற்றாண்டின் எஞ்சிய காலம் முழுவதிலும் தொடர்ந்து நடைபெற்று, இறுதியாகக் குடியானவர்களின் கலகம் (Peasants' Revolt) என்னும் நாடகமாக உச்ச நிலையை அடைந்ததைக் காண்கிறோம்.[1]

பதினான்காம் நூற்றாண்டில் சமூகத்தின் கடைநிலையிலிருந்த மக்களுடைய மன நிலையிலும் மனப்பாங்கிலும் அவர்களுடைய செயல்களிலும் உண்டான மாறுதலைப் போன்று சிறப்புமிக்கதாக வேறு ஒன்றையும் காண முடியாது. மூன்றாம் ஹென்றியின் சிறப்பினைப் பேராசிரியர் டேவிஸ்(Prof. Davis) என்பவர் 'இடைக்கால வாழ்வில் மிகவும் மாறுபட்டதாகக் காணப்படும் பல வகையான முரண்களில், உயர்வகுப்பினரிடையே அறிவாற்றலில் உண்டான எழுச்சியும், அவர்களைவிடத் தாழ்ந்த நிலையில் இருந்த மக்களிடையே கீழைநாட்டுக்கே உரிய செயலற்ற அமைதித் தன்மை குடிகொண்டிருந்தமையும் போன்று கூர்மையான வேறு

[1] Bertha Putnam : Enforcement of the Statutes of Labourers, 1349-50 (Columbia University, Studies in History, etc. Vol. XXXII, 1908)

பாட்டினை வேறு எத்துறையிலும் காணமுடியாது' என்று சுருக்கமாக உரைத்துள்ளார். ஆனால் மூன்றும் எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்து உழவர்கள் 'கீழை நாட்டுக்குரிய செயலற்ற அமைதித் தன்மை' உடையவர்களாக இருந்தார்கள் என்று நாம் குறைகூற முடியாது. அவர்களுடைய வகுப்பிலே 'அறிவாற்றலின் எழுச்சி' உண்டானமை தற்காலத்தொழிலாளர்களின் இயக்கங்களை நினைவுபடுத்துகின்றது. கிராமச் சங்கங்கள் உயர்ந்த கூலிக்காக வேலை நிறுத்தம் செய்தன. உட்குடிகள் ஓர் ஏக்கருக்கு நான்கு பென்னி பணத்தைக் கொடுப்பதன் மூலம் தங்களுக்கு உரிமை அளிக்குமாறு வேண்டினர். ஒவ்வொரு துறையிலும் மக்கள் ஒருவரை மற்றொருவர் ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கத்தக்க வகையில்,

> 'எப்போது ஆதாம் நிலத்தினைத் தோண்டினான்? எப்போது ஏவாள் நிலத்தினை அளந்தாள்? அப்போது அங்கு இருந்த பண்பாளர் யார்?'

என்னும் வினாவினை வினவினர். அக்கிளர்ச்சி அமைப்பிலும் வடிவிலும், மொழியிலும் கிறிஸ்துவ சமயத்திற்கு உரியதாக இருந்தது. ஆனால், திருச்சபை அதிகாரிகளுக்கு எதிரானதாக அக்கிளர்ச்சி இருந்தமை நாடு அறிந்த உண்மையாகும். திருச்சபை அதிகாரிகள் மடாலய நிலக்கிழார்களாகவோ, அரசரின் அமைச்சர்களாகவோ இருந்து வந்த காரணத்தினால் அக்கிளர்ச்சிக்காரர்களின் எழுச்சி அவர்களுக்கு வெறுப்பையும் துன்பத்தையும் அளித்தது.[1] இடைக்கால நிலையங்களான திருச்சபை, அரசு ஆகியவற்றின் ஆதரவினை அக்கிளர்ச்சி இழந்தது எனலாம். ஆனால் ஆதிகாலத்திய கிறிஸ்துவ சமயத்தின் போதனைகளில் காணப்பட்ட சமநிலைக் கோட்பாட்டுக் கூற்றிலிருந்து, அவ் இயக்கம் பேரார்வத்தையும் பேர் ஊக்கத்தையும் பெற்றது. திருச்சபை வட்டாரத்தைச் சார்ந்த ஊர்

[1] சமயத் தொடர்பற்ற நிலப்பிரபுக்களைக் காட்டிலும் மடாலயத் தலைவர்களுக்கோ, திருச்சபையைச் சார்ந்த குருமார்களுக்கோ அடிமை ஊழியர்களை விரைவில் விடுதலை அடையுமாறு செய்யவேண்டும் என்ற எண்ணம் இருந்ததாகத் தெரியவில்லை. வாணிகக் கொடுக்கல் வாங்கலைப் போன்று விடுதலை விலைகொடுத்து வாங்கப்பட்ட சமயங்களில் தவிர, மற்றப்பொழுதெல்லாம் அடிமை ஊழியர்களின் விடுதலை என்பது சமய நிலையங்களின் சொத்துக்களைக் கையாடுவதற்குரிய வழியினைக் காட்டுவதாகக் குறை கூறப்பட்டது. தனிப்பட்ட நிலப்பிரபுக்களைக் காட்டிலும், மடாலயங்கள் போன்ற கூட்டுரிமைக் கழகங்கள் கொடுமையான துன்புறுத்தும் திட்டங்களைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்கவில்லை. எனினும், அவை பெரிதும் புதிய மாறுதல்களை விரும்பாது பழமைப்பற்றினைப் போற்றி வளர்ப்பனவாகவும், குறுகிய மனப்பான்மையுடையனவாகவும் இருந்தன.

களில் இருந்த எளிய குருமார்களுள் சிலரும் சோதரத் துறவி களுள் சிலரும், விக்ளிப்பின் கொள்கைகளை நாட்டிலே பரப்பி வந்தவர்களுள் சிலரும், அக்கிளர்ச்சியாகிய எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றித் தீயினை மேன்மேலும் வளர்த்து வந்தனர். விக்ளிப்பு இச்சமயத்தில் தமக்கென ஒரு நடுநிலைமையை உடையவராக—இரு தரத்தாரிடையேயும் பரிவுமிக்க குற்றம் காண்பவராக இருந்தார். ஆனால், அந்நிலை ஜெர்மனியில் 'குடியானவர்களின்' கலகம் உண்டானபோது மார்ட்டின் லூதரின் சூடுமிக்க ஒருதலைச் சார்பான தன்மையை எடுத்துக் காட்டி, ஆதரிக்கும் வகையில் அமர்ந்திருந்தது.

இத்தகைய புதுமுறையான எண்ணங்களால் உண்டான பெருமகிழ்ச்சியால், உழவர்களும் தங்கள் உரிமைப் போராட் டத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். தனியுரிமைத் தொழி லாளிகள் தங்களுடைய கூலிப் பணத்தை வரையறுத்த சட்டங் களைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாது அடிக்கடி வேலைநிறுத் தங்கள் செய்துவந்தனர். ஆனல், அவ் வேலைநிறுத்தங்கள் எப் போதுமே வெற்றி தந்தன என்று கூறுவதற்கு இல்லை. தங்களுக் கென்று உரிமையாக நிலயங்களைப் பெருத மக்கள் அதிகமாகக் கூலி கேட்டால் மறுக்காமல் தருகின்ற பட்டணங்களுக்கும் அல்லது மேனர் பண்ணைகளுக்கும் அடிக்கடி தங்கள் பண்ணைகளை விட்டு வெளியேசென்று, குடியேறினர்.

நல்ல காலத்தில் அவர்கள் செழிப்புடன் வாழ்ந்ததைச் சாசர் 'பியர்சு பிளவுமென்'' (Piers Plowman) என்னும் பாடலில் பின் வருமாறு விளக்கியுள்ளார்:

> 'தொழிலாளிகள் தங்கி வாழ்வதற்கு நிலம் இல்லாமையால் தங்க ளுடைய கைகளையே நம்பி வாழ்ந்தனர். இரவில் உண்ணுவதற்கு உணவில்லாமல் அல்லலுற்றனர். அவர்கள் பன்றி இறைச்சியை யும், மாத்தேறலையும் உண்டு மகிழ முடியவில்லை. ஆனல், இறைச் சியை அல்லது மீனினை அரைகுறையாகச் சமைத்து உண்டனர். அவர்களுடைய் வயிற்றுப் பசியைத் தணிக்க இவற்றைக் குழம்போடு கலந்து உண்ணுவதைத்தவிர வேறு வழியில்லை. ஆனல், அவன் வேறு எங்காகிலும் அதிகக் கூலிபெற்று வாழ முடியும்...?... தொழிலாளிகள் துன்பப்படுமாறு சட்டம் இயற்றிய அரசரையும், அவருடைய ஆலோசனை சபையினரையும் அவன் பழித்துரைத்தான்.

ஆனல்; தொழிலாளர்களின் சட்டத்தினைச் செயல் படுத்து' வதற்காக நீதிபதிகளிடத்து ஒப்படைக்கப்பட்டிருந்ததைக் காணுகின்ருேம். அவர்கள் திறந்த சந்தைகளில் தொழிலாளருக் குரிய கூலி மிக அதிகமாக உயரவொட்டாது தடுத்து நிறுத்து வதில் வெற்றிபெற்றதாகத் தெரிகிறது.

இதற்கிடையே இன்னும் நிலத்தோடு பிணைப்புண்டு கிடந்த உட்குடிகள் சோம்பேறித்தனத்தாலோ, தங்கள் உழைப்புக்குக் கூலி கொடுக்கபடாமையாலோ தங்கள் பிரபுக்களிடத்தில் உழைக்க அவர்கள் மறுத்தனர். சிலர் நாட்டைவிட்டுக் காட்டுக்கு ஓடி, தலைமறைவாக வாழத் தொடங்கினர். அவர்கள் ராபின்வுட் என்ற கொள்ளைக் கூட்டத்தினரோடு சேர்ந்து கொண்டனர். அதன் மூலம் ஏழைக் குடியானவர்களின் நண்பனும், செல்வச் செழிப்பு மிக்க திருச்சபையினரின் எதிரியுமான அந்த ஏழை பங்காளனைப்பற்றிய கதைகள் பல தோன்றுவதற்கு அவர்கள் உதவி புரிந்தனர். மற்ற உட்குடிகள் நெடுந் தொலைவில் உள்ள பண்ணைகளுக்கு ஓடிச்சென்றனர். அப் பண்ணைகளில் பொது வாக வேலையாட்களின் பற்றுக்குறை இருந்து வந்த காரணத் தினால், அவர்களை உரிமை மிக்க தொழிலாளிகளாக ஏற்றுக் கொண்டதோடு, எத்தகைய கேள்வியும் அவர்களைக் கேட்காமல் வேலையில் அமர்த்திக் கொண்டனர். அச் செயல்களை அறிந்த அவர்களுடைய பழைய தலைவர்கள், எப்படியாகிலும் ஓடிப் போன உட் குடிகளை மீண்டும் பிடித்து வந்து அடிமைகள் ஆக்க வேண்டு மென்று அரும்பாடுபட்டனர். அப்படி அவர்களை மீண்டும் அடிமை ஆக்குவதன் மூலம், அவர்களுக்கு அங்கிருக் கின்ற மக்களிடத்திருந்து தண்டப்படுகின்ற பழைய கடமைகளைத் தண்டுவதற்கும் அப்பிரபுக்கள் முயன்றனர். இதற்காகப் முதுமையடைந்த தந்தையின் ஆரவாரம் மிக்க சட்டத்தினை நாட்பட்டுப் போயும் தடைப்படுத்தாது வைத்துக்கொண்டு, அதன் மூலம் வெளியேறிய உட்குடிகளை அச்சுறுத்தித் தங் களுக்குச் சேரவேண்டிய உடமைகளைத் தண்டுவதற்கு நிலக் கிழார்களாகிய பிரபுக்கள் முயன்றனர். அந் நிலையில் நிலக்கிழார் கள் சார்பில் வழக்கறிஞர்களும், வளம்மிக்க தீர்ப்புச் சான்றுளர் களும் ஒருங்குசேர்ந்து உட்குடிகளைத் துன்புறுத்திய காரணத் தினால், அறிவாற்றல் மிக்க தொழிலும், அத்துடன் தொடர் புடைய வேறு பல தொழில்களும், பொது மக்களால் வெறுக்கப் பட்டன. 1381–ஆவது ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு சில நீதி பதிகளும், தீர்ப்புச் சான்றுளர்களும் கூட உட்குடிகளின் மதிப் பினை உணராதவர்களாக இருந்து வந்தனர்.

அவ்வாண்டின் கோடை காலத்தில் நாடகப் பாணியில் நடை பெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் சமூகச் சிக்கல்களைக் கொண்ட காரணங்களினாலேயே தோன்றியனவாகும். அவை அரசியல் காரணங்களினால் உண்டாயின என்று சொல்லுவது தவறாகும். தலைவரி (Poll Tax) விதிக்கப்படாமை அக்கலகத்தினை விரைவு படுத்தியது என்றும், தூண்டியது என்றும் கூறுவது உண்மை

யாலும் அதன் தோற்றத்திற்குரிய அடிப்படைக்காரணம் சமூகத்தில் காணப்பட்டப் பல்வேறு சிக்கல்களேயாகும். தலைவரி என்பது பிரான்சு நாட்டோடு போராடிக் கொண்டிருந்த காலத்தில், ஏழை மக்களை நசுக்கிப் பிழிவதற்குரிய வரி விதிப்பு முறையாகப் பயன்படுத்தப்பட்டதாகும். அச் சமயத்தில் அது முற்றிலும் வெற்றி தராத காரணத்தினாலும், அதனால் குறிப்பிட்ட காலம் வரையில் மக்களுடைய ஆதரவைப் பெறுமலும் அவ்வரி இருந்துவரலாயிற்று. இரண்டாம் ரிச்சர்ட்டின் வயதுவராத காலத்திய திறமையற்ற ஆட்சி மக்களால் வெறுக்கப்பட்டும் இழித்தும் பழித்தும் குறை கூறப்பட்டும் வந்ததைக் காணுகின்றோம். ஆனால், கிழக்கு ஆங்கிலியாவைச் சேர்ந்த மக்களும் ஹோம் கவுன்ட்டிகளைச் சேர்ந்த மக்களும் ஒருங்குசேர்ந்து படைதிரட்டிக் கொண்டு இலண்டன் மாநகரம் வரையில் சென்றதற்குரிய காரணம் என்னவென்றால் உழவர்கள் என்ற முறையில் அவர்கள் தங்களுக்கிருந்துவந்த குறைகளையும் பேராவலையும் இதன் மூலம் வெளிப்படுத்தினர். அது ஒரு கிளர்ச்சியாகும். பெரிதும் ஜான்பால் (John Ball) என்பவராலும், அவருடைய ஆதரவாளர்களாலும் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டதாகும். அக்கிளர்ச்சி நாட்டிலே உள்ள உயர் குடி மக்களையும், வழக்கறிஞர்களையும், செல்வச் சிறப்புமிக்க திருச்சபையினரையும் எதிர்த்துக் குடியானவர்கள் செய்த பெரும் கலகமாகும். அக்கலகக்காரர்களின் தலைவர் வெளியிட்ட அறிக்கையில் காணப்பட்ட தலையாய உரிமைக்கோரிக்கை என்னவென்றால், நாடு முழுதும் எல்லாவகையான அடிமை மக்களும் செலுத்தவேண்டிய கடமைகளை ஓர் ஏக்கருக்கு நான்கு பென்சு வீதம் வாடகையாக மாற்றவேண்டும் என்பதாகும். அவர்கள், இன்னும் பல திருச்சபையின் அறக்கட்டளைகளைப் பறிமுதல் செய்யவேண்மென்றும், காடுகளைக் கட்டுத்திட்டமின்றி யார் வேண்டுமானாலும் பயன்படுத்த உரிமைதரப்படவேண்டும் என்றும், வேட்டைத் திட்டங்களை அழித்தொழிக்க வேண்டுமென்றும், சமூகத்தில் இருந்து யாரையும் விலக்கி வைக்கக்கூடாதென்றும் வேண்டினர். இவையனைத்தும், அண்மைக்காலம் வரையில் 'ராபின்வுட்டுடன் சேர்ந்திருந்த ஒருவர் அவருடைய திட்டங்களைச் செயல்படுத்த நினைத்து, நாட்டுக்குள் நுழைந்து, நாட்டில் உண்டான கலகத்தில் முக்கிய பங்கினைப்பெற்று, இவ்வாறு ராபின்வுட்டினுடைய திட்டங்களைச் செயல்படுத்த முயன்றதாகத் தோன்றியது.

அக்கிளர்ச்சி உயர்குடி வகுப்பினருக்குப் பெரு வியப்பினை உண்டாக்கிற்று. சில நாட்களுக்கு மத்திய அரசரிடமிருந்தோ,

வட்டார ஆளுநர்களிடமிருந்தோ எத்தகைய எதிர்ப்பும் உண்டாகவில்லை. அக்கிளர்ச்சியினை லண்டன் மாநகரில் தொழில் கற்றுக் கொண்டிருந்த கூட்டத்தினரும், மக்களாட்சிப் பண்புமிக்க குறிப்பிடத்தக்க ஆல்டர்மென் (Aldermen)எனப்படும் நகரமன்ற உயர் உறுப்பினர்களும் (ஜூன் 13, 1381) வரவேற்றனர். இதனால் கலகக்காரர்கள் தலைநகரையும் கைப்பற்றி அரசினைத் தங்கள் வசப்படுத்தினர். அவர்களுடைய கருணையினால்தான் அரசு இயங்கிக் கொண்டிருந்தது எனலாம். அரசர் கோட்டையில் அடைக்கப்பட்டார். அவரைத் தூக்கிலிடாவண்ணம் தடுப்பதற்காக அவருடை அன்புமிக்க மக்கள் அந்தக் கோட்டையை முற்றுகையிட்டனர். அந்நெருக்கடியான சூழ்நிலை ஒருவாறு காப்பாற்றப்பட்டது. ஆனால், மிகமிக இழிந்த முறைகளைக் கையாள்வதன் மூலம் கலகக்காரர்களை ஏமாற்றி, அந்நெருக்கடி நிலையை அரசரைச் சேர்ந்தவர்கள் தவிர்த்தனர் எனலாம். இரண்டாம் ரிச்சர்ட்டு மைல் எண்டு (Mile End) என்னுமிடத்தில் கலகக்காரர்களோடு கலந்து பேசுவதற்காக அமைக்கப்பட்ட மாநாட்டுக்காக அழைக்கப்பட்டார். அங்கு அவர் அந்த உழவர்களின் குற்றங்களை மன்னிப்பதாகவும், அவர்களுடைய உட்குடி நிலையிலிருந்து விடுதலை பெற்ற உழவர்களாக விளங்குவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்வதாகவும் உறுதிமொழி (ஜூன் 14) அளித்தார். ஆனால், அவருடைய உறுதிமொழியை அவருடைய ஆதரவாளர்களும், ஆளுநர்களும், பிரபுக்களும், மதகுருமார்களும் செயற்படுத்த வேண்டும் என்ற நோக்கம் உடையவர்களாக இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு கலகக்காரர்களுள் மிதவாதியினரை எளிதில் மகிழ்ச்சி அடையுமாறு செய்தனர். அந்த மிதவாதிகள் அரசர் வேறு, அவருடைய ஆலோசனை மன்றம் வேறு என்றும்;பாராளுமன்றமும் வழக்கறிஞர்களும் திருச்சபையும் மாவீரர்களும் அரசரிடமிருந்து வேறுபட்டவர்கள் என்றும் தவறாகக் கருதியோடு, அரசரிடத்து அசைக்கமுடியாத நம்பிக்கையுடையவர்களாக இருந்து வந்தனர். ஆனால், உண்மையில் இங்கிலாந்தின் அரசு மேற்கண்டவர்களுடைய நல்வாழ்வினைத் தம்முடைய நன்மைக்குரியதாகக் கருதி வந்ததை அந்த ஏழை மக்கள் அறியாதவர்களாக இருந்தனர்.

அரசருடைய எழுத்தாளர்களால் விரைவாக வரையப்பட்ட விடுதலை மன்னிப்பாகிய சலுகைகளைப் பெற்றவுடன், கலகக்காரர்களுள் பெரும்பாலோர் தங்களுடைய கிராமங்களில் உள்ள தம்முடைய வீடுகளை நாடி ஏமாற்றப்பட்ட மகிழ்ச்சியுடன் விரைந்து சென்றனர். ஆனால், இதற்கிடையே வேறு பலர் கோட்டை வாயிலில் கருத்து வேறுபாடு உடையவர்களாகப் பின

வுற்று கான்ட்டர்பரியின் தலைமைக் குருவான சட்பியூரி (Sudbury) என்பவரைத் தூக்கிலிட்டனர். அவரைத் தூக்கில் இடுகின்ற போது பெரும் திரளான மக்கள் கூட்டத்தினர் வெற்றிக் களிப்பினால் ஆரவாரம் செய்து, மூர்க்கத்தனமான செயல்களில் ஈடுபட்டு மகிழ்ச்சியடைந்தனர். அக்கலகக்காரர்கள் அந்தத் தலைமைக் குருவின் மீது வெறுப்புக் கொண்டதற்குக் காரணம், அவர் அரசருடைய சான்சலர் ஆகவும் முதலமைச்சர் ஆகவும் இருந்தமையேயாகும். ஆனால் அவர் கான்ட்டர்பரி திருக்கோயிலின் தலைமைக் குரு என்னும் காரணத்தினால் தெய்விகத்தன்மை வாய்ந்தவர் என்ற என்ற எண்ணம் அந்தக் கலகக்காரர்களிடையே தோன்றாமையோடு அவரிடத்து இரக்கமும் உண்டாகாமல் போனது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இந்தக் கொடுஞ் செயல்களைச் செய்த மக்களின் முன்னோர்கள் காலத்தில், நிலத்தினை உழுவதற்கு முன்பு கலப்பைகளுக்குப் பக்கத்தில் மண்டியிட்டு, புனிதம் மிக்க தாமஸ் பெக்கெட்டைப் பணிந்து நிலங்களை உழத் தொடங்கினர். ஆனால், இக்காலத்திய திருச்சபையினருக்கும் மக்களுக்குமிடையே இருந்துவந்தத் தொடர்பு பேரளவில் மாற்றம் அடைந்திருந்ததை மேற்கண்ட நிகழ்ச்சியால் அறியலாம்.

இவ்வாறு பல கொலைகள், அவ்வெழுச்சியில் இரத்தக்கறை படியுமாறு செய்தது. இத்தகைய கொலைகளில் சில லண்டன் மாநகரிலும், நாட்டின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றதாகத் தெரிகின்றன. ஆனால், இருபது ஆண்டுகளுக்கு முன்பு பிரான்சு நாட்டில் ஷாக்குரிகள் (Jaqueries) எனப்பட்ட உழவர்களின் கிளர்ச்சி உண்டான போது உயர்குடி மக்கள் பேரளவில் படுகொலை செய்யப்பட்டதைப் போன்று, இங்கு நடைபெற்ற கலகத்தின் போது நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் ஷாக்குரிகளின் எழுச்சி காட்டுமிராண்டித்தனமான மக்களின் நம்பிக்கையற்ற நிலையில் தோன்றியதாகும். ஆனால், ஆங்கிலேயருடைய கிளர்ச்சி நம்பிக்கை, முன்னேற்றம் ஆகிய இரண்டும் பெற்றெடுத்த குழந்தையாகும். அதனால்தான், அக்கிளர்ச்சி இதற்கு முன்பே முன்னேற்றப்பாதையில் சென்றுகொண்டிருந்த உரிமைப் போராட்டத்தினை விரைவுபடுத்தி, வீரதீரச் செயல் புரியுமாறு செய்ததைக் காணுகின்றோம். எனவே, இது புதிய இங்கிலாந்தில் விளைகின்ற துன்பங்களில் ஒன்றாக இருந்தது எனலாம்.

ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்குரிய சக்திகள் அனைத்தும் ஒருங்கு திரண்டு செயல்படத் தொடங்கின. ஜூன் பதினைந்தாம் நாள் ஸ்மித் பீல்ட் என்னுமிடத்தில் அரசரின்

முன்னிலையில் மற்றொரு மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டின் விளைவாக உழவர்களுக்கு மேலும் பல புதிய சலுகைகள் கிடைக்கவில்லை. ஆனால், அதற்கு மாறாகக் கலகக்காரர்களின் தலைவரான வாட் டெய்லர் (Wat Tyler) என்பவர் லண்டன் மாநகரத் தந்தையால் (Mayor of London) கொலை செய்யப்பட்டார். அதற்குப் பிறகு கலகக்காரர்கள் ஆதிக்கமும், பசப்புமொழியும் கலந்த அரசின் போக்கினை எதிர்த்து நிற்கமுடியாது விரைவிலே கலைந்து சென்றனர். அக் கலகம் மெல்ல மெல்ல நாடு முழுவதும் பரவலாயிற்று. இறுதியாகத் தெற்கு யார்க்ஷைரிலிருந்து தென் மேற்கு மாவட்டங்கள் வரையிலே அக்கலகம் பரவி முடிவுற்றது எனலாம். அது எப்போது லண்டன் மாநகர மக்களின் ஆதரவை இழந்ததோ, அப்போதே அது தன்னுடைய அழிவினைத் தேடிக்கொண்டதென்று கூறலாம்.

1381 ஆம் ஆண்டு உண்டான குடியானவர்களின் எழுச்சி, உட்குடிகள் முழு விடுதலை பெறுவதை உண்மையில் விரைவுபடுத்தியது அல்லது அதற்குத் தடையாக அமைந்தது என்று கூறுவது மிகவும் கடினமாகும். அதனுடைய உடனடியான விளைவு மிகக் கடுமையானதாகவும், கொடுமை நிறைந்ததாகவும் இருந்ததைக் காண்கிறோம். நெருக்கடியான காலத்தில் அரசரால் உழவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதி மொழிகள் அனைத்தும் செயல்படுத்தப்படவில்லை. அரசர் அக்கலகத்தில் கலந்து கொண்ட உழவர்களை மன்னித்து அருளிய மன்னிப்பு போலியானவை என்று மக்கள் எள்ளிநகையாடும் நிலையினைக் கொடிய சட்டத்தின் மூலம் உண்டாக்கினர். ஆனால் தம்மை ஆளுகின்ற அரசருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் இத்தகைய பேராபத்தை உண்டாக்கிய அவ்வகுப்பினர், கடைசிவரையிலும் முற்றிலும் அடக்கியொடுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். பீட்டர்லூ (Peterloo) கிளர்ச்சியோடும் வைக்கோல் போர்களைக் கொளுத்திய எழுச்சியோடும் அல்லது 1380-ஆவது ஆண்டு நடைபெற்ற உழவர்களின் கிளர்ச்சியோடும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, 1381-ஆவது ஆண்டு உண்டான உழவர்களின் புரட்சி வெல்லுவதற்கு அரிதாகவே இருந்ததைக் காண்கிறோம். திசில்வுட் (Thistlewood) கோட்டையைக் கைப்பற்றபோவதாகச் சொன்னார். ஆனால், ஜான் பால் அதைக் கைப்பற்றினார் ஏனென்றால் பதினான்காம் நூற்றாண்டின் குடியானவர்கள் படைக்கலப் பயிற்சியிலும்,விற்போரிலும் நன்கு பழக்கப்பட்டவர்ளாக இருந்தனர். அத்துடன் அவர்களுடைய கட்சியில் குத்தகைக்கு நிலத்தைப் பயிரிட்ட உழவர்களும் அவர்களுக்கு உதவியாக இருந்தனரே ஒழிய எதிராக இல்லை. இவை

யாவற்றையும் விட, யாருக்கும் கீழ்படியாத மகிழ்ச்சிப் பண்புமிக்க பட்டணங்களோடு ஜான் பால் மிக நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். தாயகத்தில் அமைதியினை நிலைநாட்டுவதற்காக நடந்த போராட்டத்தில் நூறுண்டுப் போரில் நிலமானியப் படைமுறை வகுப்பினர் காசில்ரீக்கு (Castlereagh), வெல்லிங்டன் (Wellington) காலங்களில் பெற்றிருந்த பெருமக்களாகிய நண்பரையோ அமைப்புக்களையோ தாயகத்தில் அமைதியினை நிலைநாட்டுவதற்காக நடந்த போராட்டமாகிய—நூறுண்டுப் போரின் நிலமானியப் படைமுறை வகுப்பினர் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை.

1381-ஆவது ஆண்டு குடியானவர்களின் கலகம் தோல்வியுற்றதனல் வேலை நிறுத்தங்களோ, தொழிலாளர்களின் தொல்லைகளோ, அடிமைத்தனத்திற்கு எதிராக நடைபெற்ற கலகங்களோ, எவ்வகையிலும் முடிவடையவில்லை. பிரபுக்களின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதியில் ஒருநாள் முழுவதற்கும் ஏற்ற நல்ல வேலையினைப் பெறுவது, வெடுவெடுப்பான அவர்களிடத்து அவ்வேலையைப் பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. ஓரளவிற்கு இக்காரணத்தினலும், பேரளவிற்கு அக்காலத்திய பொருளாதாரப் போக்குக்குக் கட்டுப்பட்டமையாலும் நிலக்கிழார்கள் தங்கள் ஆட்சிகுட்பட்ட நிலங்களில் உட்குடிகளைக்கட்டாயப்படுத்தி வேலை செய்யுமாறு தூண்டுவதை நாளடைவில் கைவிடலாயினர். அதற்குப் பதிலாகச் சந்தைகளுக்கு உற்பத்தி செய்யாத குடியானவர்களிடத்தில் தங்கள் நிலங்களை ஒப்படைத்தனர். இவ்வாறு உரிமை மிக்க தொழிலாளர்கள் உழைக்குமாறு செய்வதற்குரிய பணத்தைப் பெற்றனர். உட்குடிகளுள் பெரும்பாலோர் தங்கள் அடிமைப் பண்ணைகளிலிருந்து விடுதலை உரிமையை விலை கொடுத்துப் பெற்றனர். நாட்டிலே செல்வம் செழித்து ஓங்கிய காரணத்தினலும், குடியானவர்கள் பொருள் வளமுடையவர்களாக விளங்கத் தொடங்கிய காரணத்தினலும் அம்முறையில் உட்குடிகள் விடுதலை பெறுவது வசதி மிக்கதாக விளங்கியது. இவ்வாறு பணம் கொடுத்து விடுதலை பெற்றதற்குரிய மற்றொரு காரணம் நாட்டில் நாணயத்தின் பெருக்கம் மிகுதிப்பட்டு, புழக்கத்தில் இருந்து வந்தமையுமாகும். இத்தகைய விடுதலை பெரிதும் பதினைந்தாம் நூற்றுண்டில் நடைபெற்றது எனலாம். அவ்வாறு விடுதலை பெறும் முறை டியூடர்களின் ஆட்சிக்காலத்து முடிவடைந்தது எனலாம். அரசரின் முறை மன்றங்களின் போக்கு மாறிய காரணத்தினல் அவ்விடுதலை பெறும் முறை விரைவுபடுத்தப்பட்டது. அரசரின் முறை மன்றங்கள் வியக்கத்தக்க வகையில் முற்போக்குக் கொள்கையும், தாராள மனப்பான்மையும் உடை

யனவாக விளங்கியதோடு 'எளிய மக்களின் நன்மைக்காகச் சட்டத்தினை பழுதுபடுத்தவும்' தயங்கவில்லை.[1]

புதிய சமுதாயத்தில் விடுதலைபெற்ற உட்குடிகள் பலவகையான கடமைகளை மேற்கொண்டு செயலாற்றினர். அவர்கள் பல விதங்களில் சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய பணிகளைச் செய்தனர். உட்குடியாக இருந்து விடுதலைபெற்ற ஒருவர் இறையிலி நிலங்களிலோ (Freehold), குத்தகை நிலங்களிலோ (Leasehold), பட்டய நிலங்களிலோ (Copyhold) உழவுத் தொழில் செய்யும் எளிய குடியானவர்களாக விளங்கினர்; அல்லது வேறு இடங்களில் கூலிக்கு வேலைசெய்யும் தொழிலாளியாகப் பணிபுரிந்தார்கள். சிற்சில சமயங்களில் பட்டணங்கள் அல்லது கிராமங்களின் தொழிலகங்களில் சென்று தொழில் புரிந்து வந்தார்கள். மேலும் அவர்கள் போருக்குப் படைவீரராகச் செல்லுதல் அல்லது பெருங் கடல்களில் மரக்கலங்களில் சென்று கடலக வாழ்வில் ஈடுபடுதல் முதலிய பணிகளைச் செய்வதிலும் ஈடுபட்டனர். திறந்த வெளி வயல்களிலும் தரிசு நிலங்களிலும் மதிப்பதற்குரிய தம்முடைய உரிமைகளை விட்டுவிடாமல் போற்றிக் காத்தனர். அப்படி அந்த உரிமையை விட்டுக் கொடுக்காமல் இருந்த காரணத்தினால்தான் ஊர்களிலேயே அவர்கள் வாழவேண்டுமென்ற உள்ள உணர்வு உடையவர்களாக இருந்தனர். ஆனால் அவர்கள் இப்போது விரும்பியபடி எங்கும் செல்வதற்குரிய உரிமையைப் பெற்றிருந்தனர். 'உலகம் முழுதும் அவர்கள் முன்னால் நின்றது; அவர்கள் அவ்வுலகில் எங்குச் செல்வது என்பதைத் தெரிந்தெடுக்குமாறு தூண்டியது.' தற்கால ஆங்கிலேயர்கள் ஆன்மிக உலகிலும், உலகியல் வாழ்விலும் மாபெரும் துணிகரச் செயலாற்றும் வீரர்கள் என்பதைத் தாங்களே மெய்ப்பித்துவிட்டனர்.

[1] Holdsworth, III. 505. விடுதலை பெறுவதைப் பற்றிய விளக்கத்தினை அறியப் பின்வரும் நூல்களைப் பார்க்க.

1. Miss Levett and A. Ballard :
   Oxford Studies in Social and Legal History., Vol. V. Black Death etc. with introduction by Vinogradoff.
2. T. W. Page :
   End of Villeinage in England.
3. Maitland :
   History of a Cambridge Manor, (Collected Papers, Vol. II).
4. Ashley :
   Economic Organisatian of England, Chap. III.
5. G. G. Coulton :
   The Mediaeval Village, Especially Chapters XII, XIII on Monks and others.

பொருளாதார சமூகத்தின் நோக்கத்தினையும் உழைப்பின் நெகிழ்ச்சித் தன்மை முற்றிலும் மாற்றிவிட்டது. அடிமை ஊழியர் களுடைய வரையறுக்கப்பட்ட நிலையான கடமைகளிலும் உரிமை களிலும் மாற்றம் செய்யப்பட்டது. தேர்ந்த உழைப்பிற்குரிய சந்தைகளில் போட்டியும் நலப்பேறற்ற தன்மையும் நிறைந்து இருந்த அவல நிலைக்கு அடிமை ஊழியர்கள் ஆளாயினர். எனவே அவர்கள் பெற்ற உரிமை முற்றிலும் தொழிலாளிகளுக்கு நன்மை பயந்ததென்று சொல்வதற்கில்லை. ஆயினும் பெரும் கொள்ளை நோய்க்குப் பிறகு ஒரு நூற்றுண்டுகாலம் வரையில் தொழிலாளர்களின் பற்றுக்குறை இருந்து வந்த காரணத்தினால், தொழிலாளிகள் அதிகப்படியான கூலியினைக் கட்டாயப்படுத்திக் கேட்பதற்கு முனைந்தது மட்டும் உண்மையாகும். பதினைந்தாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தின் மக்கள் தொகை மீண்டும் பெருகத் தொடங்கியது. அதன் விளைவாகக் கூலிகளின் மதிப்புக் குறையத் தொடங்கியது. தற்கால ஆட்சியில் பஞ்சம் என்பது மிக அருகிய ஒன்ருக இருந்தாலும், ஒரு மனிதனின் சராசரி வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்ட காரணத்தினால் வேலை யில்லாத் திண்டாட்டத்தின் கொடுமைகளை மக்கள் அறியலா யினர். டியூடர் ஆட்சிக்காலத்திய 'முரட்டு இரவலர்கள்' தங்க ளுடைய உரிமையைப்பற்றிச் சிறிதும் மகிழ்ச்சி அடையவில்லை. ஆனால் ஆங்கிலேய இனம் அடிமை ஊழியர்கள் இனமாக இல் லாமல் சிறந்தொரு இனமாக விளங்கவேண்டுமென்றால், மாற்றம் ஒன்று இன்றியமையாத தேவையாகிவிட்டது. அதைப் போன்றே மக்கள் பெருக்கத்தில் மிகுதிப்பட்டு விளங்குவதற்கும் அறிவையும் செல்வத்தையும் பெருக்கிக் கொள்வதற்கும், பெரும் தொழில்களையும், கடலக வாணிகத்தையும், வீரதீரச் செயல் களையும் செய்வதற்கும், கடல்கடந்த நெடுந்தொலைவிலுள்ள நாடு களில் தங்கள் மக்களைக் கொண்டுசென்று குடியேற்றுவதற்கும் இங்கிலாந்து சமூகத்தில் ஒரு பெரும் மாறுதல் இன்றியமை யாத தேவையாக இருந்துவந்தது. அதிகாரம், உரிமை, முன் னேற்றம் ஆகிய மூன்றையும் தற்கால இங்கிலாந்தோடும், அமெரிக்காவோடும், ஆஸ்திரேலியாவோடும், ஆசியாவோடும் நாம் தொடர்புபடுத்திக் காண்கிறோம். இவையனைத்தும் அடிமை ஊழியர்களின் விடுதலைக்குத் தேவைப்பட்ட, முன்கூட்டியே வரை யறுக்கப்பட்ட சூழ்நிலைகளாகும். விடுதலையும், அதன் விளைவாக உண்டான உழைப்பின் நெகிழ்ச்சித் தன்மையும் வாணிகம், உற் பத்தி, குடியேற்றம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குரிய இன்றியமை யாத பீடிகையினை அமைத்துத் தந்தன. அதைப்போன்றே டியூடர் காலத்திய இங்கிலாந்திலும், ஸ்டுவர்ட்டு மன்னர் காலத்திய இங்கிலாந்திலும், அறிவாற்றலிலும் அரசியலிலும்,

இங்கிலாந்து முன்னேற்றம் அடைவதற்குரிய அடிப்படையை அவை அமைத்துத் தந்தன.

மூன்றாம் ஜார்ஜின் ஆட்சிக்காலம் முழுவதும் பழைய கிராமப் பொருளாதாரத்தின் சிறப்புமிக்க ஒருவகைப் பண்பு எல்லா மாவட்டங்களிலும் நிலைபெற்றிருந்ததைக் காணுகின்றோம். கோதுமை பயிரிடப்படும் வளமிக்க பகுதிகளான மிட்லாந்திலும், கிழக்கு மாவட்டங்களிலும் சிறுசிறு துண்டுகளான வயல்களை உடைய திறந்த வெளிகளில் கிராமங்கள் இருந்துவந்தன. அப் பகுதிகளில் பழங்காலத்திய ஆங்கிலேய-சாக்சானியர்களின் பயிரிடும் முறை கட்டாயமாக வற்புறுத்திப் பின்பற்றப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அம்முறை பல இடங்களில் அழிந்தொழியாது இருந்துவந்தது. இதைக்கண்டு ஆர்தர் யெங்கின் (Arthur Young) உணர்வுகள் அதிர்ச்சியடைந்தன. அத்துடன் 'மேம்பாடு அடைந்து கொண்டிருந்த அவருடைய நிலக்கிழார்களும் பேரதிர்ச்சி அடைந்தனர்'.

பதினான்காம் பதினைந்தாம் நூற்றாண்டுகள், இங்கிலாந்தில் அடிமை ஊழியர்களின் விடுதலையையும், ஆங்கிலேய மொழி, ஆங்கிலேய இலக்கியம், ஆங்கிலேய தேசிய உணர்வு ஆகியவற்றின் பிறப்பினையும் கண்டன. இதைப்போன்றே அந்நூற்றாண்டுகள் அம்மாபெரும் இயக்கங்களோடு ஒத்து இயங்கி இடைக்காலத்தின் அனைத்துலகக் குடிமகக் கோட்பாடுடைய திருச்சபை புதியநாட்டு இனத்தின் தனி உணர்வுமிக்க தேவைகளை நாடெங்கிலும் நிறைவேற்ற முடியாது தோல்வியுற்றதற்கும் சான்றாக விளங்குகின்றன.

திருச்சபை ஒழுக்கத்துறையிலும், அறிவாற்றல்-துறையிலும் தலைமைப் பதவியை இழப்பதற்கு எத்துணை அளவிற்குப் பண்டைக் காலத்தைவிடப் பெரும் ஊழலும் திறமைக்குறைவும் காரணமாக இருந்தன என்னும் கேள்வி கேட்கப்படலாம். பொதுமக்கள் எத்துணை அளவிற்கு எழுச்சியுற்று மேலோங்கினரோ, அத்துணை அளவிற்குக் குருமார்கள் தாழ்ந்து போய் விடவில்லை அல்லது ஊழலில் மூழ்கிவிடவில்லை. நார்மானியர் ஆட்சிக்காலத்திலும், பிளாண்ட்டா ஜெனட்டு அரசர்களின் ஆட்சித் தொடக்கத்திலும் மக்களுடைய உள்ளங்களில் எல்லாம் பேராற்றலும் பெருந்திறனும் உடைய மாண்புமிக்க அமைப்பாகத் திருச்சபை அரசோச்சி வந்தது. ஒவ்வொரு சமயக் குருவும் தமக்கு உரியவர்களாகக் கொண்டிருந்த மக்களை, தற்கால புராட்டஸ்டண்டு அல்லது கத்தோலிக்க சமயங்களுக்குரிய ஆங்கிலேய குருமார்களுடைய மக்களோடு ஒப்பிட்டுப்

பார்ப்போமானால் அவர்களுக்கு உரியவர்களாக இருந்த மக்கள் பெரிதும் அறியாமை நிறைந்தவர்களாகவும், வாழ்க்கையில் அடிக்கடி ஒழுங்கற்றவர்களாகவுமே இருந்து வந்தனர் என்பது தெரியவருகிறது. விருப்பமற்ற ஆங்கிலேயக் குருமார்களிடத்து திருச்சபை ஆட்சி இயந்திரம் ஹிட்லர் பிராண்டைன் பிரமசரிய நெறி முறைகளைத் திட்டமிட்டு முழுமையும் வாழ்க்கையில் பின் பற்றுமாறு வற்புறுத்துவதற்குத் தேவையான ஆற்றலற்றதாக இருந்தது. ஆனால், அந்நாட்களில் அக்காலத்தைவிட சமயச் சார்பற்ற மக்கள் குருமார்களைக் காட்டிலும் முரடர்களாகவும், அறியாமை நிறைந்தவர்களாகவும் இருந்தனர். ஒருகால் இப் போது இருப்பதைக் காட்டிலும் ஒழுக்கக்கேடு மிகுதியாக உடையவர்களாக அவர்கள் இருந்திருக்கலாம். ஆயினும் முரட்டுத்தனமான திருச்சபை தம்மைவிட முரட்டுப்பண்பு மிகுதி யுடைய மக்களிடத்தில், எளிதிலே தம்முடைய தலைமையினையும் ஆதிக்கத்தினையும் நிலைநாட்டிக் காத்துவந்ததைக் காண்கிறோம். ஆனால் காலம் மாறியது. சாசரின் காலத்தில் பொதுமக்களோ சமயக் குருமார்களோ போற்றத்தக்க மதிப்பு மிக்க வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்று கூறமுடியவில்லை. ஆயினும் பரவலாக எங்கும் பரவிய நாகரிக அளவுகோலான ஒழுங்கும், ஒழுக்கமும், நடத்தையும் நாட்டு மக்களிடத்துக் காணப்பட்டதாகத் தெரிய வருகிறது. அத்துடன் மிகுதியான கல்வியறிவும், சிறந்த அறி வாற்றல் மிக்க மனப்போக்கும் அக்காலத்திய மக்களிடை இருந்து வந்ததாக சாசரின் நூல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. அது குருமார்களின் நலிவுக்குரிய அறிகுறி என்பதைவிட, நாடு பொதுவாக முன்னேறிக்கொண்டிருந்ததைப் படம் பிடித்துக் காட்டுகிறது எனலாம். அக்காலத்தில் புதிய தலைமுறையைச் சார்ந்த பொதுமக்கள் திருச்சபையின் பழிப்புரைகளினால் சமயத் திலிருந்து விலக்கப்பட்டனர். ஆனால் இது ஒன்றும் புதுமையன்று. சமய மறுப்பாளரான விக்ளிப்பைப் போன்றே வைதிகப் பற்றுடைய கோவரும் (Gower) லாங்லாந்தும் (Longland), மனிதப் பண்பினைப் போற்றிப் பாராட்டிய அருள் உள்ளம்வாய்ந்த சாசரும் திருச்சபையினரை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

பழங்காலத்தில் மதகுரு ஒருவர் எப்படியிருந்தார் என்பதை நாம் தெளிவாக அறியமுடியவில்லையென்றாலும், நாட்டுக்கு வேண்டிய அறிவாற்றலில் தலைசிறந்த மக்களையும், ஒழுக்கத் துறையில் சிறப்புற்று விளங்கிய தலைமைப் பதவியையும் திருச் சபை அளித்து வந்ததைக் காணுகின்றோம். லான்பிராங்கு, ஆன்சலம், ஆகியோர் முதல் லாங்டன், குராஸ்ததே வரையில் பல அறிஞர்களையும் சான்றோர்களையும் திருச்சபை நாட்டுக்கு

அளித்ததையும் கண்டோம். ஆனால், நாட்டிலே மேல்நோக்கி உண்டான பரிணாம வளர்ச்சியில் அம்முறை அடியோடு அழிந்துபோயிற்று. இதனால் திருச்சபைக்கு மதிப்புக் குறைவு ஒன்றும் உண்டாகி விடவில்லை. ஏனென்றால் நாட்டின் பள்ளி யாசிரியராகத் திருச்சபை அவளுக்குரிய பணியினை மிகச் சிறந்த முறையில் செய்திருக்கிறது. அவளுடைய பயிற்சியினால்தான் அவளுடைய மாணவர்கள் தாங்களே சிந்திக்கத் தொடங்கி விட்டனர். புதிய யுகத்தின் செல்வாக்கு மிக்க இலக்கியச் செல்வர் லாங்லாந்து நீங்கலாக சாசர், கோவர் போன்றவர்கள் சமயக் குருமார்களே அல்லர். விக்ளிப்பும், அவருடைய ஆக்ஸ் போர்ட்டு பல்கலைக் கழக ஆதரவாளர்களும் குருமார்களாக இருந்தபோதிலும், அவர்கள் திருச்சபையின் கண்ணுக்குச் சமய மறுப்பாளர்களாகவே தோன்றினர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். வழக்கறிஞர்கள், உயர்குடி மக்கள், நாட்டுப்புறங் களிலும் பட்டணங்களிலும் புதியதாக எழுச்சி பெற்றுக்கொண்டு இருக்கும் நடுத்தர வகுப்பினர் முதலியோர் தங்களுடைய மூதா தையர்களைப் போன்று 'ஏன்? எதற்காக?' என்ற கேள்விகளைக் கேட்க வேண்டுமென்ற உணர்வற்ற மனநிலை உடையவர்களாக இருக்கவில்லை. ஆனால், அவர்கள் தங்களுக்காகத் தாங்களே சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். இவ்வாறு கடவுள்பற்று மிக்க லாங்லாந்து பின்வருமாறு கூறியிருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

> 'பெரிய மனிதர்கள் உணவினை உண்ணும்பொழுது, இயேசுநாத ரைப் பற்றியும், அவருடைய ஆற்றல்களைப் பற்றியும் குருமார்களைப் போன்று வியந்து பேசிக் கொண்டனர். மக்களிடத்துக் காணப்படும் குறைகளுக்கெல்லாம் உலகத்தின் தந்தையாகிய இறைவனே காரண மென்று, கடவுளின் மீது அவர்கள் குற்றம் சாட்டினர். குருமார் களின் கடுகடுப்பான சொற்களை அவர்கள் எதிர்த்துப் பேசிக் கொண் டிருந்தனர்.'

இதிலிருந்து ஆதாம் செய்த குற்றத்திற்காக நாம் துன்புறுத் தப் படலாகாது என்ற உண்மை வெளிப்படுவதைக் காண்கின் றோம்.

> 'பாணர்கள் அமைதியாக உள்ளபொழுது, அவர்கள் இறைச்சியினை உண்பதால் உண்டாகும் மகிழ்ச்சியில் அவர்கள் தங்களை மும்மூர்த்தித் தத்துவத்தில் ஒன்றெனக் கூறுவர். அதற்கு ஓரிரு கதைகளைச் சொல்லுவர். யாதாகிலும் பொருளற்ற காரணத்தைச் சொல்லி அதற்கு பெர்னார்ட்டு என்பவரைச் சான்றாகக் கூறுவர். தாங்கள் கூறும் குறியினை மெய்ப்பிப்பதற்கு உய்த்துணரத்தக்க வகையில் யாதாகிலும் காரணம் காட்டுவர்.'

திருச்சபைச் சீர் திருத்தத்திற்கும் சமய வளர்ச்சிக்கும் காலம் ஏற்ற ஒன்றாக முதிர்ந்து பக்குவம் அடைந்திருந்தது. அதைப் போன்றே சமூக அரசியல் மாற்றங்களுக்கும் காலம் நன்கு பக்குவப்பட்ட ஒன்றாக இருந்தது எனலாம். ஆனால், பாராளுமன்ற அமைப்புகளும் அடிமை ஊழியர்களின் விடுதலையும் மிக விரைவாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற அத்தகைய சூழ்நிலையில் சமயச் சீர்திருத்தம் என்பது நடைமுறையில் இயலாத ஒன்றாக இருந்தது. இங்கிலாந்தின் திருச்சபை அதனைத் தானே சீர்திருத்திக் கொள்ளுவதற்குரிய அதிகாரத்தினைப் பெற்றிருக்கவில்லை. ஏனென்றால், அத்திருச்சபை தனித்து இயங்கக்கூடிய தன்னாட்சி உரிமையையுடையதாக இல்லாமையேயாகும். கடல் கடந்த அயல்நாட்டில் பெரும் மதிப்பும் பேராதிக்கமும் உடையதாகவும், ஆங்கிலேயர்களுடைய தேவைகளைப்பற்றி ஒன்றும் அறியாததாகவும், குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டும் அமைக்கப்பட்டதாகவும், மாற்றத்தினை விரும்பாததாகவும் அமைக்கப்பட்டிருந்த உலகக்குடிமகக் கோட்பாடுடைய ஓர் அமைப்பின் பகுதியாகவே அத்திருச்சபை இருந்தது. அடிமைகளின் விடுதலை என்னும் அலையானது தோன்றுவதற்கு முன்பே, இங்கிலாந்தின் திருச்சபை மெல்ல மெல்ல ஓய்வு பெற்றிருக்குமானால், டியூடர் காலத்தில் உண்டான கொடுமை மிக்க தலைகீழான மாற்றங்கள் அவளுடைய அமைப்பே தோன்றுவதற்குரிய வாய்ப்பே இல்லாமல் போய்விட்டிருக்கும். ஆனால், அடைபட்ட வெள்ளந் தான் பேராற்றலோடு பெருக்கெடுத்து ஓடும் என்பதற்கு இணங்க பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் திருச்சபை எத்தகைய சலுகையை அளிப்பதற்கும் முன்வரவில்லை; ஒரு சீர்திருத்தத்தையும் செய்யவில்லை. அதற்குப் பதிலாகக் கொடிய முரட்டுச் சக்திகளைக் கொண்டு சமய மறுப்பினை அடக்கியொடுக்க முயன்றது. ஆனால், இதற்கு எதிர்மாறான வழிவகைகளைத் திருச்சபை பின்பற்றி இருக்குமானால், அடைக்கல உரிமைகளும் குருமார்களின் சலுகைகளும் (Benefit of Clergy) மாற்றம் செய்யப்பட்டிருக்குமானால், திருச்சபைக்குரிய சொத்துகள் அனைத்தும் ஊர்களில் ஏழை மத குருமார்களுக்கு நேர்மையான முறையில் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்குமானால், சாக்சானியர் காலத்தைப் போன்று குருமார்கள் தங்கள் மனைவியரை மணஞ் செய்து கொண்டு வாழ அனுமதிக்கப்பட்டிருப்பார்களானால், திருச்சபையின் செல்வமிக்க அயல்நாட்டுப் பகுதிகளில் தமக்கு வேண்டியவர்களைப் பதவிகளில் அமர்த்தும் முறையினை போப்பு ஆண்டவர் கைவிட்டிருப்பாரானால், பாவமன்னிப்புகளையும், புனித சின்னங்களையும் வேறு பல மூடப் பழக்க வழக்கங்களையும் மக்களிடையே விலை கூறி விற்று வருவதைச் சமயத்துறை அதிகாரி

கள் கைவிட்டிருப்பார்களானல், பொது மக்கள் செய்கின்ற பாவங்களுக்காகத் தண்டம் விதித்துப் பெரும் பொருளை அவர்களிடமிருந்து உறிஞ்சவேண்டுமென்னும் நோக்கத்தோடு பொதுமக்கள் வாழ்க்கையினை ஒற்றர்களைக் கொண்டு உளவு அறியும் வணிகத்தினைத் திருச்சபை முறை மன்றங்கள் பின்பற்ருதிருக்குமானல், திருச்சபையின் வரலாறு இங்கிலாந்தில் வேறு வகையாக அமைந்திருக்கும். இவை யாவற்றையும்விட லோலார்டியக் கோட்பாட்டாளர்கள் இணங்காதவர்கள் என்று பொறையுடைமையோடு போற்றப்பட்டிருப்பார்களானல், நாம் இன்றைக்கு அறியும் சமயப் புரட்சியாகிய சீர்திருத்த இயக்கத்திற்குப் பதிலாகப் பல நூற்ருண்டு காலம் இங்கிலாந்து முழுவதும் சமயத்தின் பரிணும வளர்ச்சி எங்கும் பரவியிருக்கும்.

இடைக்காலத் திருச்சபையின் மிக முக்கிய பகுதியாக இருந்தது துன்புறுத்தும் கோட்பாடேயாகும். இடைக்கால மக்களுக்குத் திருச்சபைக்கு வெளியே வாழும் வாழ்க்கையில் திருச்சபையின் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளாமல் வாழ்வதென்பது, நாட்டினுள் நாட்டின் சட்டத்திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்காமல் வாழ்வது என்பது எத்துணை அரிதோ, அதைப் போன்றே மிக அரிதாகக் கருதப்பட்டது. எனவே சமயத்தின் பெயரால் துன்புறுத்தப்படுதல் என்பது பொது வாழ்வில் ஒருவர் செய்யும் குற்றங்களுக்காக போலீஸாரால் துன்புறுத்தப்படுதலைப்போன்ற ஒரு சாதாரணச் செயலாகவே இருந்துவந்தது. அம்முறை சில ஆயிரம் ஆண்டுகளாக வரையறுக்கப்பட்ட ஒரு மரபாகவே அக்காலத்தில் விளங்கியது. நீண்ட காலத்தின் இடையே உண்டான மிகக் கசப்பான அனுபவத்தைப் பெற்ற பிறகுதான், தற்காலத்தில்தான் கிறிஸ்துவ மக்களின் மனத்திலிருந்த சமயத்தினைப் புறக்கணிப்பதற்காகத் துன்புறுத்த வேண்டுமென்ற கோட்பாட்டினை வேருடன் களைந்தெறிய வேண்டும் என்ற மனநிலை மக்களிடையே தோன்றலாயிற்று. இதனை நாம் முதலில் நன்ருகப் புரிந்துகொள்ளவேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய மூதாதையர் இங்கிலாந்திற்காகத் தொடங்கிய லோலார்டிய சமயத்தின் எழுச்சியையும் அதை அழித்தொழித்தல் ஆகிய கொடிய சமயப் போராட்டங்களில் அவர்கள் கலந்து கொண்டதைப் பற்றியும், நடந்து கொண்ட விதத்தைப் பற்றியும் நாம் நேர்மையான முறையிலே புரிந்து கொள்ளமுடியும். திருச்சபையினரால் விக்ளிப்பின் கோட்பாடுகள் ஒத்துக்கொள்ளப்படவில்லை. ஏனென்ருல், நாட்டு மக்கள் விக்ளிப்பினுடைய கோட்பாடுகளையும், கொள்கைகளையும் புரிந்து கொள்ளவேண்டுமென்ற பேச்சே கிடையாது. லோலார்டியர்களைத் துன்புறுத்திய ஆற்றல் மிக்க அரசர்களையும்

பாதிரிமார்களையும் கொடிய பண்புகள் உடையவர்களாக இருந்தனர் என்று நாம் வலிந்து கூறத் தேவையில்லை. ஜோனைத் (Joan of Arc) தீயிலிட்டுப் பொசுக்குமாறு தீர்ப்பு வழங்கிய நீதி மன்றத்து உறுப்பினர்களிடத்து. எத்தகைய பண்புகள் இருந்தனவோ, அத்தகைய பண்புகள் நம் நாட்டில் லோலார்டியக் கோட்பாட்டாளர்களைத் துன்புறுத்திய அரசரிடத்தும், பாதிரிமார்களிடத்தும் இருந்துவந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால், துன்புறுத்தல் என்னும் கோட்பாட்டினை நாம் ஒப்புக் கொள்ளுவதற்கு எத்தகைய தடையும் இல்லை. ஏனென்றால் அக்காலத்திலேயே அம்முறை மிகப் பழமையானதாகவும், போற்றத்தக்கதாகவும், உலகமெங்கும் போற்றிப் பின்பற்றப் பட்டதாகவும் இருந்து வந்தது. எனினும் அது குறைபாடுடையதாகவும் வருங்கால நூற்றாண்டுகளில் சொல்லொணாத் துன்பங்களை உண்டாக்குவதற்குக் காரணமாகவும் இருந்தது என்பதில் ஐயமில்லை. நாம் ஆழ வேரூன்றியதும், மிகப் பெரும் பிழையுமான இதனை என்றுமே களைந்தெறியாது போயிருப்போமானால், ஐரோப்பா இன்றைக்குச் சுட்டிக்காட்டுவதற்குரிய உறுதிமிக்க மனித முன்னேற்றத்தின் ஒரு பகுதியினை நாம் அடைந்திருக்க முடியாது.

அவ்வழக்கின் வரலாற்றில் இருந்து இத்தகைய கோட்பாடுகளை நாம் உயர்த்துணர்வோமானால் பாமரமக்களுக்கு, குருமார்களுக்கு அளித்ததைப்போன்ற சலுகைகளை அளிப்பதற்குத் திருச்சபை ஏன் மறுத்தது என்பதை நாம் உணரமுடியும். அதைப் போன்றே மடாலயங்களும் பெரும் அறக்கட்டளைகளைப் பெற்றிருந்த குருமார்களும் தாங்கள் பெற்றுவந்த பத்தில் ஒரு பங்கு வரியினையும், அறக்கட்டளைகளின் ஊர்க்குருமார்களின் நன்மைக்காக மீண்டும் மாற்றிப் பங்கிடுவதற்கு ஏன் முன்வரவில்லை என்பதைப் பற்றியும் தெளிவாக உணரமுடியும். இதனால்தான் டியூடர் காலத்திய ஊர்ப் பெரிய தனக்காரர்கள் திருச்சபைகளின் செல்வங்களையும், மடாலயங்களின் உடைமைகளையும் கொள்ளையடிக்க முன் வந்தனர் போலும். மக்கள் கடந்த காலத்துடன் கொண்ட தொடர்பினை எளிதில் அறுத்துக்கொள்ள முடியாதவர்களாக இருந்தனர். ரோமாபுரிப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு தோன்றிய இருண்டகாலத்தில் காட்டுமிராண்டித்தனப் பண்பும், ஒழுங்கீனமும் நேர்மையற்ற சக்திகளும் நிறைந்த உலகில் திருச்சபை நிலைபெற்று விளங்குவதற்காகப் போராடிக்கொண்டிருந்தது. அப்போராட்டத்தின் மூலம் சமய விலக்குச் செய்வதற்குரிய இயந்திரத்தினை அமைப்பதற்குரிய முறைகளையும், கிறிஸ்துவ உலகின் அதிகாரங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒற்றுமைப்

பட்ட திருச்சபைக் குருமார்களின் உரிமைகள் அனைத்தையும், குருமார்களுடைய கூட்டவைகள் அரிதில் முயன்று பெற்ற சொத்துகளின் ஒவ்வொரு பகுதியையும் எப்படிப் போற்றிக் காப்பது என்பதைத் திருச்சபை புரிந்துகொண்டது. இவை யாவும் திருச்சபையின் இன்றியமையாத கூறுகளாகக் கருதப் பட்டன. அவை அனைத்தையும் பழுதுபடாமல் திருச்சபை பேணிக் காத்தால்தான் அதற்கு வாழ்வு உண்டென்று கருதினர். மிகவும் பிற்பட்ட அந்தக்காலத்தில் இத்தகைய வழக்காற்று முறைகளைத் திருச்சபை பின்பற்றி வந்தது. அக்காலத்தில் இவ் வழக்காற்று முறைகள் அனைத்தும் அவளுடைய இயற்கைப் பண்புகளின் ஒரு பகுதியாக மாறிவிட்டன. எனவே அரசுடன் சலுகைகள் பெறுகின்ற முறையில் திருச்சபை நெருங்கிப் பழக முடியவில்லை. தமக்குள் தாமே சீர்திருத்தம் செய்துகொள்ள முடியாத நிலையில் திருச்சபை இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பாராட்டத்தக்க அளவில் யாதாகிலும் மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் திருச்சபையில் அரசு செய்வதற்காகத் திருச்சபையை முற்றிலும் அரசு வெற்றிபெற வேண்டுமென்ற நெருக்கடி உண்டாகிவிட்டதைக் காண்கிறோம்.

உண்மையில் இங்கிலாந்தின் திருச்சபை தன்னைத்தானே சீர்திருத்திக் கொள்ளுவதற்குரிய நிலையை அவள் விரும்பினாலும், அதை அவள் செய்ய முடியாதவளாக இருந்தாள். ஏனென்றால், அவளுக்கெனத் தனி உரிமையும் இல்லை. அத்துடன் கூட்டுரிமை வாழ்க்கைநெறியும் அவளுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. சோதரத் துறவிகளும் இங்கிலாந்தில் இருந்த அனைவரும் மடாலயத் துறவிகளுள் பெரும்பாலோரும் ஆங்கிலேய பாதிரிமார்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இல்லை. அவர்கள் அனைவரும் ரோமாபுரியிலுள்ள போப்பு ஆண்டவருக்கே அடிபணிந்து நடக்கின்றவர்களாக இருந்து வந்தனர். இங்கிலாந்தின் திருச்சபைக்கு அவர்கள் பற்றுறுதியும், கீழ்ப்படிதலும் உடையவர்களாக இல்லாமல் போப்பு ஆண்டவரிடத்து மட்டும்பற்றுறுதியும் கீழ்ப்படிந்து நடத்தலும் உடையவர்களாக இருந்தனர். திருச்சபைச் சட்டம் என்பது ரோமானிய சமயச் சட்டமாக இருந்து வந்தது. அதனை மாற்றுவதற்குரிய தகுதியும், திறமையும் ஆங்கிலேயத் திருச்சபைக்கு இருந்ததில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. சமய வழக்குகளில் மேல் முறையீடு செய்வதற்குப் போப்பு ஆண்டவருடைய முறை மன்றங்களே தகுதியுடையனவாகக் கருதப்பட்டன. எனவே, ஆங்கிலேய பாதிரிமார்கள் இங்கிலாந்தின் திருச்சபையினைச்சீர்திருத்திச்செம்மைப்படுத்தும் அதிகாரமற்றவர்களாக இருக்கநேர்ந்தது.

எந்த வழக்கிலும், அவ்வழக்கினை ஆராய்ந்து முடிவு காண்பதற்குரிய தகுதி, திறமைகளைப்பெற்ற உறுப்பினர்களைக் கொண்டதாகச் சமய குருமார்களின் முறை மன்றம் இருந்ததில்லை. அரசரும் போப்பு ஆண்டவரும் சேர்ந்து மக்களை ஏமாற்றுவதற்குரிய ஏற்பாடுகள் செய்துகொள்வதன்மூலம், போப்பு ஆண்டவரின் முறை மன்றத்தில் உறுப்பினர்களாக அமர்த்தப்பட்டனர். அம்முறை மன்றத்தில் அமர்த்தப்பட்ட பாதிரிமார்களுள் பெரும்பாலோர் அரசின் பணித்துறை ஊழியர்களாக இருந்தனர். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, கல்லூரிகளை நிறுவுவதிலே சிறப்புற்று விளங்கிய வைக்காமைச் சேர்ந்த (Wykeham) வில்லியத்தையும், 1381-ஆவது ஆண்டு நடைபெற்ற கலகத்திற்கு இரையான காண்ட்டர்பரியின் தலைமைக் குருவாகவும் சான்சலராகவும் விளங்கிய சர். சட்பியூரி (Sudbury) என்பவரையும் குறிப்பிடலாம். அவர்கள் மிகச் சிறந்த ஆற்றலும் திறமையும் உடையவர்களாக இருந்ததோடு, பயன்மிக்க மக்களாகவும் விளங்கினர். ஆனால், அவர்கள் திருச்சபைக்குத் தொண்டாற்றுவதற்குப் பதிலாக அரசுக்கே தொண்டாற்றி வந்தனர். அவர்களுடைய காலத்தில் வாழ்ந்த மக்கள் கூறியதைப்போன்றே இயேசு கிறிஸ்துவிற்குத் தொண்டாற்றுவதற்குப் பதிலாக அவர்கள் சீசருக்கே தொண்டாற்றி வந்தனர் எனலாம். அவர்களுடைய சமயத்துறைக்குரிய கடமைகளை அடிக்கடி அவர்களுடைய கீழ் அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டதைக் காணுகின்றோம். நாட்டின் சமய வாழ்வினைச் சீர்திருத்துமாறு அவர்களிடத்து உரைப்பது பயனற்ற செயல் என்பதை மக்கள் அறிந்திருந்தனர் போலும்.

போப்பு ஆண்டவரால் அமர்த்தப்பட்ட பேரரசர்கள்கூட இத்தகைய பெரும் பணிக்குத்,தங்களை ஆயத்தம் செய்துகொள்ள முடியாதவர்களாக இருந்தனர். மேலும், போப்பு ஆண்டவரும் நீண்ட காலத்திற்கு டார்சஸைச் (Tarsus) சார்ந்த தியோடருடைய (Theodore) பண்புகளைப் பெற்ற மனிதரையோ, ஸ்டீபன் லாங்டன் (Stephen Longton) போன்ற பேராற்றல் வாய்ந்த மனிதர்களையோ ஆங்கிலேய திருச்சபையை ஆளுவதற்கு அனுப்பி வைக்கவில்லை. தற்காலத்தில் அவர் ஆதரவைப்பெற்று இங்கிலாந்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குருமார்கள், குருமார்களின் பதவியின் உயர்ந்த நிலையில் பேரளவினராக இருந்தனராவர். அவர்கள் சமயத் தலைமைப் பதவிக்கு அடுத்து இருந்த பதவிகளில் பணிபுரிந்தவராவர். அவர்களுள் பெரும்பாலோர் அயல் நாட்டினராகவே இருந்தனர். அத்துடன் அவர்கள் இங்கிலாந்தில் குடியேறி, அங்கேதங்கி வாழாமல், அயல்நாடுகளிலேயே

வாழ்ந்தும் வந்தனர். இங்கிலாந்து தங்களுக்கு வருவாயினை நல்கும் ஓர் ஊற்ருகவே அவர்கள் கருதினர்.

உயர்ந்த பதவியிலுள்ள குருமார்களிடையே மானியங்களை வாங்குவதும், விற்பதும் பெரு வழக்காக இருந்து வந்தன. அவர்கள் தாயகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது அயல்நாட்டவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் ஒற்றுமையற்றவர்களாகவும் மானியங்களைப் பேரம்பேசி விற்பதிலும், வாங்குவதிலும் நாட்டம் உடையவர்களாகவும் இருந்து வந்தனர். சீர்திருத்த இயக்கத்திற்கு இரு நூற்ருண்டுகளுக்கு முன்பு திருச்சபையின் சிறப்புமிக்க கூருகிய விளங்கியவர்கள் ஏழ்மையில் வாடிய திருச்சபை வட்டாரங்களிலிருந்த (Parish) வறுமை மிக்க குருமார்கள் ஆவார்கள். அவர்களுள் பெரும்பாலோர் இரங்கத்தக்க வகையில் பட்டினியால் வாடி வதங்கினர். மடாலயத் துறவிகளும், உயர் பதவியில் இருந்த குருமார்களும் தனதாக்கிக்கொண்டு பத்தில் ஒரு பங்கு பொருள் ஊதியத்தை (tithe) இந்த ஏழை குருமார்களே பெறுவதற்குரியவர்களாவர். அவர்கள் பெரிதும் அறியாமை நிரப்பியவர்களாகவும். தங்கள் மக்கள் கூட்டத்தோடு நெருங்கிய தொடர்பு உடைவர்களாகவும் இருந்தனர். சாசரின் ஏழை ஊர் மத குருவினைப் (Poor Parson) போல், அவர்களுள் பலர் இருந்தனர் என்பதில் ஐயமில்லை. அதற்காகவாநாம் அவர்களுடைய வரலாற்றினைப் பெற்றிருக்கின்ருேம்?

பிளாண்ட்டாஜெனட் அரசமரபில்தோன்றிய பிற்கால அரசர்களும் போப்பு ஆண்டவரும் மக்களை ஏமாற்றுவதற்காக மறைமுகமாகச் செய்திருந்த கூட்டுச்சதி திருச்சபைக்குப் பெரும் தீங்கு விளைக்கக் கூடியதாக இருந்தது. இத்தகைய உடன்பாட்டினுல் அரசர் கைவிட்டு விட்டால் திருச்சபைக்கு வேறு எத்தகைய தற்காப்பும் இல்லாமல் இருந்தது குறிப்பிடத் தக்கதாகும். மக்களை ஏமாற்றுதற்குச் செய்யப்பட்ட இச்சதித் திட்டம் பாராளுமன்றத்திஞல் மிகவும் வெறுக்கப்பட்டதாக இருந்தது. இருந்த போதிலும் இம்முறை எட்டாம் ஹென்றி போப்பு ஆண்டவருக்கு எதிராக மாறுகின்ற வரையில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்ததைக் காணுகின்ருேம். திருச்சபையைச் சீர்திருத்துவதற்குரிய அதிகாரத்தினைப் போப்பு ஆண்டவர் ஒருவரே பெற்றிருந்தார். ஆனுல், அவர்கள் பெரிதும் ஆங்கிலேய மக்கள், சிறப்பாக வைதீகர்களும், சமய நிந்தனையாளர்களும் ஒருங்கே குறை கூறி வந்த திருச்சபைத் தொடர்பான கைகால் வாங்குவதிலும் ஊழல்களில் ஈடுபடுவதிலுமே அவர்கள் பேரார்வம் உடைய

வர்களாக இருந்து வந்தார்கள். மானியங்களை வாங்குவதற்கும் விற்பதற்குமுரிய முக்கிய நிலையமாகப் போப்பு ஆண்டவரின் முறை மன்றம் இருந்து வந்தது. போப்பு ஆண்டவரின் முறை மன்றம் பதினான்காவது நூற்றாண்டில் பிரான்சு நாட்டின் எல்லைப் புறத்தில் இருந்த அவிக்னான் (Avignon) என்னும் இடத்தில் கூடி வந்தது. அங்கு ஆங்கிலேய மக்களின் பகைவனான பிரான்சு அரசனோடு போப்பு ஆண்டவர் தொடர்பு கொண்டமை நூற்றாண்டுப் போரின் முதல் பகுதியில் போப்பு ஆண்டவருக்கும், அவருடைய செயல் முறைகளுக்கும் எதிராக ஆங்கிலேயரின் தேசியஉணர்ச்சியினைத் தூண்டுவதற்குப்பேருதவியாகஇருந்தது. அதுமட்டுமல்லாமல், இதைத் தொடர்ந்து போப்பு ஆண்டவர் பதவிக்குப் போட்டியிட்ட போட்டியாளர்களிடையே உண்டான சமயப் பிளவும், திருச்சபையிடத்து மக்களுக்கு இருந்து வந்த மதிப்பினைக் குறைத்தது எனலாம்.

ஆனால், எத்துணைக் காலம் வரையில், திருச்சபைக்கும் அரசருக்குமிடையே இருந்து வந்த தொடர்பைப்பற்றி இடைக் காலக் கொள்கைகள் சிறந்தன என மக்களால் கருதப்பட்டதோ அதுவரை இங்கிலாந்து தன்னுடைய குறைகளைப் போக்கிக் கொள்ளுவதற்கு வழியில்லாமல் தவித்தது. அவள் தம்முடைய குறைகளை முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். ஆனால், ரோமாபுரியிலோ அவிக்னானிலோ இருந்தவர்கள் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. 'ஆங்கிலேய கழுதைகள்' கனைக்கலாம். ஆனால் அவர்கள் அக்கழுதையின்மீது இன்னும் பெரும் சுமையினைச் சுமத்திக் கொண்டேயிருந்தனர். ஆங்கிலேயப் பாராளுமன்றம் பாதுகாப்புச் சட்டங்களை (Acts of Provisors) இயற்றி அரசினுடைய உரிமைக்கு எதிராகப் போப்பு ஆண்டவரின் அதிகாரத்தைக் குறைப்பதற்கு முயலலாம். ஆனால், இச்சட்டங்கள் அனைத்தும் பெரிதும் செயல்படுத்தவில்லை. போப்பு ஆண்டவரோடு அரசர் இடைவிடாது நடத்தி வந்த போரில், அரசர்க்கு ஒரு பெரும் சொத்தாக அமைவதற்கே இச்சட்டங்கள் பயன்பட்டன. ஆயினும், பொது மக்களிடையே கருத்து வளர்ச்சி உண்டாகி இருப்பதற்கு அவை சிறந்ததொரு அறிகுறியாக விளங்கின. மேலும், பிற்காலத்தில் பாராளுமன்றத்தின் மூலம் அரசர் பேராற்றலுடன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்குரிய முன் நிகழ்ச்சிகளாக இவை அமைந்தன.[1]

[1] இங்கிலாந்து நாட்டின் கோயில் மானியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள போப்பு ஆண்டவரின் சட்ட உடன்பாடுகளிலிருந்து அந்நாட்டு ஆதரவாளர்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்புச் சாசனம் (1351) அரண்செய்தது. போப்பு ஆண்டவரின் அதிகாரத்தைக் குறைக்கும் சாசனங்களின் (1353, 1365, 1393) அதிகார அளவு, பிற்காலத்தில் கருதப்பட்டதைவிடக் குறைவுபட்டதாகும். எனினும், அரசனது உரிமைகளில் போப்பு ஆண்டவரின் தலையீட்டைத் தடுக்கும் ஒரு கருவியாக அச்சாசனங்கள் விளங்கின.

ஜான் விக்ளிப்பு (John Wycliffe) யார்க்ஷையர் பகுதியிலே பிறந்தவராவார். தொழில் முறையில் அவர் ஆக்ஸ்போர்ட்டின் கல்லூரி முதல்வர் கூட்டத்தைச் சார்ந்தவர் ஆவார். அவர் இங்கிலாந்தின் துன்பங்களைப் போக்குவதற்காக வழிவகைகளைச் சுட்டிக்காட்டினார். அத்துடன் அதுவரையில் போப்பு ஆண்டவருடைய ஆதிக்கத்தை மறுப்பதற்குக் கொள்கை அடிப்படையில் இருந்த இறுதிக் காரணத்தினைக் கண்டு பிடித்தனர். அவருடைய 'அரசின் தத்துவம்' ('Theory of dominion') கொடியவர்களுடைய ஆதிக்கம் கடவுளிடமிருந்து வரமுடியாது என்பதை மக்களுக்கு எடுத்துரைத்தது. இதற்குமாறாக, போப்பு ஆண்டவருடைய அதிகாரம் அனைத்தையும் ரோமாபுரி சீசரிடமிருந்தே அவர் பெற்றிருக்கிறார் என்பதையும், திருச்சபையிடமிருந்தோ செயிண்ட் பீட்டரிடமிருந்தோ போப்பு ஆண்டவர் எந்தத் தனி அதிகாரத்தையும் பெறவில்லை என்றும் அவர் எடுத்து விளம்பினார். விக்ளிப்பு கல்விக் கழகத்தின் உறுப்பினராக இருந்தமையாலும், சிந்திக்கும் முறைகளிலும், எடுத்துரைக்கும் முறைகளிலும் தொழில் நுட்பப் புது நெறியைக் கையாண்டமையாலும் இடைக்காலத் தத்துவ உலகின் பிற்பகுதியில் சிறப்புற்று விளங்கலானார். இவ்வாறு தெளிந்த அறிவும், பரந்த அனுபவமும் உடையவராக விளங்கிய அவர் தாம் இறந்த பிறகு முந்நூறு ஆண்டுகளுக்குள் இங்கிலாந்தில் உருவாகப்போகும் பெரும் சீர்திருத்த முறைகளை அவர் முன்கூட்டியே சரியாக உணர்ந்திருக்கவேண்டும். விக்ளிப்பின் போதனைகளுள் ஆங்கிலேயச் சமய கோட்பாடுகளும், சமயச்சார்பற்ற பொதுக் கருத்துகளும், புராட்டஸ்டண்ட்டு சமயத்தின் கொள்கைகளும் சிறப்புற்று விளங்கியதைக் காணுகின்றோம்.[1]

[1] 'எராஸ்டியன்' (Erastian) என்னும் சொல்லுக்குரிய கண்டிப்பான பொருளினைக் கருத்தில்கொண்டு ஆராய்ந்தால், விக்ளிப்பினை எராஸ்டியக் கோட்பாட்டினர் என்று கூறமுடியாது. கலைமுதல்வர் ராஷ்டல் (Rashdall) 'விக்ளிப்பு 'எராஸ்டியக்' கோட்பாட்டினைப் பின்பற்றியவர் அல்லர். ஏனென்றால் அவர் பாமர மக்களுக்கும் மதகுருமார்களுக்கும் இடையே தனிப்பட்ட வேறுபாடு இருப்பதாக நம்பினார். பாமரமக்கள் குருமார்களாக்கப் படவேண்டும் என்பதை அவர் வன்மையாக வற்புறுத்தினார். திருச்சபையின் ஒரு பகுதி ஊழல் மலிந்து ஒழுங்கற்றுப் போனமையால் உண்டான தீமைகளை மற்றொரு பகுதியாகிய பாமர மக்கள் திருச்சபையினைச் சீர்திருத்த முன்வரவேண்டும் என்பதே அவருடைய பேரவா. அதற்காகவே அவர் மக்களை அறைகூவி அழைத்தார்' என்று எழுதியுள்ளார். ஆனால், டியூடர் அரசர்கள் காலத்தில் நடந்ததைப்போல, விக்ளிப்பு திருச்சபையைச் சீர்திருத்த பாமரமக்களை அழைத்தார். இச்செயல் எராஸ்டியக் கோட்பாட்டினைச் சார்ந்தது என்று பலர் கூறுவர். அவர் வெளிப்படையாகவும், உறுதியாகவும், கூறவில்லை என்றாலும் அவருடைய வாதத்தின்போக்கு திருச்சபையின் தலைமையிடத்தில் அரசனை அமர்த்தவேண்டும என்பதை அறிவிக்கிறது. ஆனால் அவர் தனி மனிதனுடைய மனச்சான்றிற்குச் சிறப்புத்தர வேண்டும் என்னும் அவர் கொள்கைக்கும், ஒவ்வொரு பாமர மனிதனும் தனக்குத்தானே குருவாக இருக்கவேண்டும என்னும் அவருடைய கருத்திற்கும் மாறாக 'டியூடர்கள்' காலத்தில் செய்யப்பட்ட திருச்சபைச் சீர்திருத்தம்' அவருக்கு மனநிறைவை அளிக்காமல் போயிருக்கலாம்.

இவ்வாறு அவருடைய கொள்கைகள் பலதிறப்பட்ட கருத்துக்களின் கலவையாக விளங்கியது. இவற்றை அடிப்படையாகக் கொண்டே இங்கிலாந்தில் இறுதியாகத் திருச்சபையின் செயல் முறைகளும், அரசின் செயல் முறைகளும் மாற்றி அமைக்கப்பட்டதையும் சீர்திருத்தம் செய்யப்பட்டதையும் காணுகின்றோம்.

மூன்றும் எட்வர்ட்டின் ஆட்சியின் இறுதி ஆண்டுகளில் விக்கிளிப்பு சீர்திருத்தக்காரர் என்ற முறையில் முதன் முதலாக முக்கியத்துவம் பெற்றார். அதனால் அவர், அரசியல் வாதிகளோடு தொடர்புகொண்டார். போப்பு ஆண்டவரின் எல்லைமீறிக் கைப்பற்றுவதற்கு எதிராக, தன் நாட்டு இனத்தின் வழக்கினை எடுத்து விளக்குமாறு அரசியல் பெரும் வாதிகளால் அவர் பயன்படுத்தப்பட்டார், அவர் சொத்துகளை உடைமைகளாகப்பெற்று இருக்கின்ற குருயார்களையும், பேரரசு ஆதிக்க மனநிலையுடைய குருமார்களையும் தாக்கிப் பேசியமை அவருக்கு நாடு முழுவதிலும் பேராதரவைத்தேடித்தந்தது. சிறப்பாக லண்டன்மாநகர மக்கள் அவரைப் பெரிதும் போற்றி ஆதரிக்கலானார்கள் ஆனால், ஆற்றல் மிக்க அம்மக்களின் ஆதரவைப் பெறாது காண்ட்டைச் சார்ந்த ஜான், நார்த் தம்பர்லாந்தைச் சார்ந்த பெர்சி முதலியோருடைய நட்பினை 1377-ல் பெறச்செய்தது. அந்தப்போன்றே திருச்சபையின் உடைமைகளைக் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டிருந்த பிரபுக்கள், மாவீரர்கள் ஆகியோருடைய நட்பும் விக்ளிப்பிற்குக் கிடைத்தது. இந்நிலையில் திருச்சபையின் உரிமைகளையும், குருமார்களின் நன்மைகளையும் காப்பதற்குப் பலர் இவர்களுக்கு எதிராகக் கிளம்பினர். பிற்காலத்தில் அவர்களுள் பலர் விக்ளிப்பின் மிகக் கொடிய பகைவர்களாக விளங்கினர். இங்கிலாந்தின் திருச்சபை முழுவதிலும் சோதரத் துறவிகள் எப்போதும் நல்ல முறையிலே தொடர்புகொண்டு இருக்கவில்லை. அவர்கள் இன்னும் வறுமையைப் போற்றி ஆதரிக்கின்ற கோட்பாடு உடையவர்களாக இருந்து வந்தனர். எனவே அவர்கள் திருச்சபையின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதில் பேரார்வம் உடையவர்களாக இருந்து வந்தனர். அவர்களுள் சிலர் நில உடைமைகளைப் பெற்றுக்கொண்டு நிலப்பிரபுக்களாக, துறவிகளுக்கும் பாதிரிகளுக்கும் எதிராகப் போராடுவதற்குத் தங்களுக்கு ஒரு நண்பன் கிடைத்தான் என்று மனம் மகிழ்ந்தனர். அதனால் விக்ளிப்போடு அவர்கள் தொடர்புகொண்டனர். விக்கிளிப்பு பொருள் மாற்றத்தினை (Transubstantiation) ஏற்றுக்கொள்ளாமல் மறுக்கத்தொடங்கிய வரையிலும், தங்களுடைய புரவலரான போப்பு ஆண்டவரைக் காக்கத்தொடங்கிய

வரையிலும், சோதரத் துறவிகள் விக்ளிப்பிேைடு தொடர்பு கொண்டிருந்தனர். அதுவரை அவர்கள் இரவலர் வாழ்க்கையை மேற்கொண்டு அவருடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

1381-ஆவது ஆண்டு நடைபெற்ற குடியானவர்களின் கலகத்தின்பொழுது, விக்ளிப்பு இருதரத்தினருள் எவரையும் ஆரிக்காது நடுநிலைமையோடு நின்றார். அக்கலகம் விக்ளிப்பை நேரிடையாகத் தாக்கவில்லை. விக்ளிப்பினைத் துன்புறுத்த வேண்டுமென்ற எண்ணமே கொண்டிராத ஆர்ச் பிஷப் சட்பியூரி என்பவர்மட்டும் குடியானவர் கலகத்திஞல் இந்த உலகத்தில் இருந்து மேலுலகிற்கு அனுப்பப்பட்டார். அவருக்குப் பிறகு காண்ட்டர்பரியின் ஆர்ச் பிஷப்பாகப் பதவி ஏற்ற கோர்ட்டனே (Courtenay) என்பவர் விக்ளிப்பின் கொடிய பகைவராக, ஆற்றல் மிக்க பகைவராக விளங்கத் தொடங்கிஞர். அதுமுதல் கடுமையான அடக்கு முறைக்குரிய காலம் தொடங்கியது எனலாம். அதே சமயத்தில் காண்ட்டைச் சார்ந்த ஜானின் நட்புறவினைச் சீர்திருத்தக்காரஞன விக்கிளிப்பு உதறி எறிந்தார். அத்துடன் பொருள் மாற்றத்தைப் பற்றிய கருத்துக்கு எதிராக வாதாடியதன் மூலம் அரசியல்வாதிகள், சோதரத் துறவிகள், ஜான் முதலியோருடைய ஆதரவினை விக்ளிப்பு இழக்க நேர்ந்தது. அந்தப் புனிதச் சமய வினையைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த ஆராய்ச்சிக்குரிய கருத்துகள் உண்மையில் மிகவும் நடுத்தரமானவையாகவே இருந்தன. ஆனல் அக்காலத்தில் அவருடைய கருத்து எல்லை மீறிய செயலாகக் கருதப்பட்டது. அடுத்த தலைமுறையில் தோன்றிய அவருடைய ஆதரவாளர்கள் அதைவிட இன்னும் தீவிரமான புரட்சிக் கருத்துக்களைத் தெரிவிக்கலாயினர்.

விக்ளிப்பு தம்முடைய வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் அரசியலிலும், கல்விக் கழக ஆராய்ச்சியிலும் ஈடுபடுவதைச் சிறிது குறைத்துக்கொண்டார். அவர் ஆக்ஸ்போர்ட்டில் இருந்து ஓய்வு பெற்று, லீஸ்ட்டர் ஷையரில் லட்டர்வொர்த்து என்னும் இடத்தில் தலைமைக் கல்வி மேற்பார்வையாளராகப் பணி புரிந்தார். அங்குத் தமது கடைசி இல்லத்தினை (1382–1384) அமைத்துக் கொண்டார். அங்கிருந்து அவர் மக்கள் எல்லாருக்கும் தமது முறையீட்டைத் தெரிவித்துவந்தார். அம்முறையீடுகளை அவர் ஆங்கிலத்தில்தானே எழுதியும், அல்லது தன்னுடைய தோழர்களை எழுதச்செய்தும் நாட்டு மக்களிடையே தம்முடைய கருத்தைப் பரப்பிவந்தார். அவர்போப்பு ஆண்டவரையும், துறவிகளையும், சோதரத் துறவிகளையும், சீசரின் ஆதிக்க

மனப்பான்மையிலிருந்து குருமார்களையும் தாம் தாக்கிய தோடு, தம் சீடர்கள் தாக்குவதற்குரிய முறைகளையும் கற்பித்து வந்தார். மேலும் அக்காலத்திய சமயப் பழக்க வழக்கங்களைச் சிறப்பாக உருவ வழிபாட்டையும், புனிதச் சின்னங்களின் வழிபாட்டையும், பாவமன்னிப்புச் சீட்டுகள் விற்பதையும் ஆன்மாக்களின் ஈடேற்றத்தை அளிப்பதையும் விக்ளிப்பும் அவருடைய சீடர்களும் வன்மையாகக் கண்டித்தனர். அவர் தனிமனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே தரகர்கள் தேவை இல்லை என்றும், தனிமனிதன் நேராகக் கடவுளிடத்துத் தொடர்பு கொள்ளவேண்டும் என்றும் கூறினர். கடவுள் வழிபாட்டில் தரகர்கள் தேவை இல்லை என்பதை வற்புறுத்திக் கூறும் வகையில், அவர்,

> 'குற்றவாளியாகக் குற்றம் சுமத்தப்படவேண்டிய ஒவ்வொரு மனிதனும் அவன் செய்த குற்றத்திற்காகக் குற்றவாளியாக்கப்படவேண்டும்; காப்பாற்றப்படவேண்டிய ஒவ்வொரு மனிதனும் அவனுடைய தனிப்பட்ட தகுதிக்காகவும், மதிப்பிற்காகவும் காப்பாற்றப்படவேண்டும்'

என்று அறைந்தார்.

அவர் ஆங்கில மொழியிலேயே வழிபாடு நடத்தப்படவேண்டுமென்று தெரிவித்தார். அதற்காக ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்தில் தமது ஆதரவாளராகவும், செயலாளராகவும் இருந்து வந்த பர்வே (Purvey) என்பவர் மூலமாக முதன் முதலில் விவிலிய நூல் முழுவதையும் ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தார். அவ்வாங்கில மொழி பெயர்ப்பு போற்றத்தக்கதாகவும், புலமைமிக்க பதிப்பாகவும் இருந்துவருகிறது. அத்தகைய மொழி யெயர்ப்பு ஆங்கிலேய மொழியின் வரலாற்றிலும், இங்கிலாந்தின் சமய வரலாற்றிலும் மாண்பு மிக்க ஒரு நிகழ்ச்சியாகும். பிற்காலத்தில் தோன்றிய புராட்டஸ்ட்டண்டுகள் சிலர் விவிலியத்தையே தங்களுடைய கோட்பாட்டிற்கும், வேண்டுகோள் விடுவதற்கும் ஆதாரமாகக் கொண்டதைப் போல் விக்கிளிப்பு விவிலியத்தை மட்டும் பெரும் ஆதாரமாகக் கொள்ளவில்லை. ஆனல், அவருடைய கோட்பாடுகள், தற்கால ஆங்கிலேய மொழியின் திருநூல்களின் கருத்துகள் மக்களுடைய அன்றடத் தேவைகளுக்கேற்ப எங்கும் சென்று பரவவேண்டும் என்பதை உணருமாறு செய்தது. அதனல், ஆங்கிலேய மொழியில் விவிலியத்தைப் படிக்கவேண்டும் என்பது அவரது கோட்பாட்டினரின் சிறப்பு மிக்க பழக்கமாக இருந்துவந்தது. திருச்சபை

பதினைந்தாம் நூற்றுண்டில் சிறப்புமிக்க விலக்கு உரிமையைச் செல்வர்களுக்கும், கன்னித்துறவிகளுக்கும் அளித்து வந்தது. அதாவது செல்வர்களும் கன்னித் துறவிகளும் தாய் மொழியில் எழுதப்பட்ட விவிலிய நூலினைப் படிப்பதற்குரிய சிறப்புரிமையைப் பெற்றுஇருந்தார்கள். ஆனல் பதினைந்தாம் நூற்றுண்டுக் காலத்திலும் பொதுவாகத் தாய்மொழியில் விவிலியத்தைப் படிப்பதற்குரிய உரிமையைப் பொதுமக்களுக்குத் திருச்சபை அளிக்க மறுத்து வந்ததைக் காணுகின்றேம். இதை ஒரு கருவியாகக் கொண்டு, ஆங்கில மொழியில் திரு நூலினை லோலார்டியர்கள் போற்றிவருகிருர்கள் என்ற குற்றத்தினைப் பிற்காலத்தில் அவர்கள் மீது திருச்சபை சாட்டியமை இங்குக் கருதத்தக்கதாகும் [1]

தொடக்க காலத்தில் ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்தின் இயக்கமாக விளங்கிய விக்ளிப்பியம் (Wycliffism) இதற்கிடையில் பெரும் துன்பத்திற்கு ஆளாகியது. பல்கலைக்கழகமும் அதனுடைய அதிகாரிகளும் கூடப் பேரளவிற்கு விக்ளிப்பின் ஆதரவாளாகளாக இருந்துவந்தனர். குறைந்தது அவருடைய ஆராய்ச்சிக் கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்ற வகையில் அப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாருமே அவருடைய ஆதரவாளராக இருந்துவந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆனல், இப்போது ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்தின் துறவிகளும் சோதரத் துறவிகளும் ஒன்ருகச் சேர்ந்து விக்ளிப்புக்கு எதிராக அவருடைய கொள்கைகளை வன்மையாகக் கண்டிக்கலாயினர். ஆயினும், ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்தைச் சமயச் சார்பற்ற குருமார்களும், பட்டப்படிப்பிற்குப் பயின்றுகொண்டிருந்த மாணவர்களும் பெயரளவுக்கு விக்ளிப்பினை ஆதரிப்பவர்களாகவும், பின் பற்றுபவர்களாகவும் இருந்தனர். இச்சச்சரவுக்கு இடையே ஆர்ச் பிஷப்பு கோர்ட்டனே (Archbishop Courtenay) குறுக்கிட்டார். அவர் 1382–ஆம் ஆண்டு அரசரின் உதவியைப் பெற்று, பல்கலைக் கழகத்தின் உரிமைகள் அனைத்தையும் தம்முடைய அதிகாரத்தின்கீழ்க் கொண்டு வந்து அடக்கியொடுக்கினர். அப் பல்கலைக்கழகத்திலிருந்து வந்த விக்ளிப்பின் ஆதரவாளர்களை வெளியேற்றியோ, வாய் பேசாது மௌனமாக இருக்கும்படியோ கோர்ட்டனே செய்துவிட்டார். மிகச்சிறந்த பண்

1 இதைப் பற்றிய விளக்கத்தை The Lollard Bible (Cam. Univ. Press, 1920) நூலினைப் பார்க்க. இந்நூல் கார்டினல் காஸ்குவெட்டு (Cordinal Gasquet) எழுதிய 'The Old English Bible' என்னும் நூலிற்கு மறுப்புரையாக எழுதப்பட்டதாகும்.

பாட்டில் வேரூன்றி இருந்த லோலார்டியர் கோட்பாட்டினை அவர் வேருடன் களைந்தெறிந்துவிட்டார். அத்துடன் அது கிறிஸ்துவ சமயத்தைப் பரப்பும் இயக்கமாக மாறுவதற்கு ஆர்ச் பிஷப் கோர்ட்டனே இவ்வாறு பேருதவி செய்தார். நான்காம் ஹென்றியின் ஆட்சிக்காலத்திலும் கிறிஸ்துவ சமயத்தில் தோன்றிய விக்ளிப்பின் கோட்பாட்டைக் களைந்தெறியும் முயற்சியை அரசு மேற்கொண்டதைப் பின்னர்க் காண்போம். இவ்வாறு கிறிஸ்துவ சமயத்தைப் பரப்பும் இயக்கமாக விக்ளிப்பின் ஆதரவாளர்கள் மாறியபோது, ஆதிக்கம் மிக்க அரசுக்கும், திருச்சபைக்கும் வெளிப்படையாகத் தெரியாதவாறு மறைந்திருந்து ஏழை எளிய மக்களிடத்துத் தங்கள் கொள்கைகளைப் பரப்பிவந்தனர். கல்விக்கழகத்தின் சிந்தனையின் உரிமையைக் கோர்ட்டனே அடக்கியொடுக்கியதனால் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு அப் பல்கலைக்கழகத்தின் அறிவாற்றலில் ஒரு தேக்கம் உண்டாகுமாறு செய்துவிட்டார். இதனால், அப் பல்கலைக்கழகம் தோன்றிய முதல் இரு நூற்றாண்டுகளில் பெயரளவிற்கு உரிமைகளைப் பெற்றுச் சிறப்புற்று விளங்கிய காரணத்தினால்தான் மாட்சிமை பொருந்திய ஆக்க வேலைகளில் அரும்பெரும் சாதனைகளைச் செய்தது என்பதை மக்கள் எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. பதினைந்தாம் நூற்றாண்டில் ஆங்கிலேயருடைய மனப் போக்கிலும், ஆன்மீக வாழ்விலும் உண்டான மலட்டுத் தன்மைக்கு வேறு எச்செயலையும் இதற்குரிய முக்கிய காரணமாகக் கூறமுடியாது.

ஆயினும், ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்தையும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தையும் பழமைப் பற்றுமிக்க வைதிகர்கள் வன்முறையில் அடக்கியொடுக்கியதில் ஒரே ஒரு நன்மை விளைந்தது எனலாம். அதன் விளைவாகக் கல்லூரிகளை நிறுவுவதற்கும், அவற்றிற்கு அறக்கட்டளைகள் வழங்குவதற்கும் நாட்டு மக்களுக்குக் கூடுதலான ஒரு வாய்ப்பினை அளித்து, அவர்களுடைய உள்ளங்களையெல்லாம் கவர முடிந்தது எனலாம். அவ்வாறு புதிதாகக் கல்லூரிகளுக்கும் அறக்கட்டளைகளுக்கும் பொருளினை வழங்குவதன் மூலம் மாணவர்களைச் சமய நிந்தனையான தொத்து நோயிடமிருந்து தனியாகப் பிரித்து வைப்பதற்குப் பேருதவி புரிந்தனர். வைக்காமைச் சார்ந்த வில்லியத்தின் ஆட்சிக்கும் உல்சியின் ஆட்சிக்கும் இடைப் பட்டகாலத்தில் பல கல்லூரிகளைத் தன்னகத்தே கொண்ட பல்கலைகழகம் தனிச்சிறப்பு மிக்க வகையில் வளர்ச்சியுற்றுச் சிறப்புறலாயிற்று. இத்தகைய கல்லூரி முறை தனிச்

சிறப்பு வாய்ந்த ஆங்கிலேயப் பண்பாட்டினை நிலைக்களனாகக் கொண்டு தோன்றியதாகும். ஆறும் ஹென்றி, பகட்டுவாய்ந்த வழிபாட்டுக் கூடத்தோடு அரசர் கல்லூரியை நிறுவினார். பழமை வாய்ந்ததும் முதியதுமான ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்திற்கு எதிராகக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைப் பேரும் புகழும் பெற்றுச் சிறப்புறச் செய்த பல நிகழ்ச்சிகளுள் இச்செயலே சிறப்பு மிக்க ஒன்றாக அமைந்தது. இத்தகைய புகழ்மிக்க போட்டி இப்பல்கலைகழகங்களிடையே சீர்திருத்த இயக்க காலத்தில் ஒவ்வொரு நாளும் குறிப்பிடத்தக்க அள வுக்கு மேன்மேலும் பெருகிக்கொண்டே வந்தது.

ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்தில் விக்ளிப்பிய இயக் கத்தின் அறிவாற்றல் மிக்க வேர்கள் அதிகாரக் குழுவினரால் கல்லி எறியப்பட்ட பிறகும், நாடு முழுதும் விக்ளிப்பியக் கோட்பாடு மெல்ல மெல்லப் பெருகி வளர்ந்துவந்ததாகத் தெரி கிறது. இத்தகைய வளர்ச்சியின் சிறப்பினைப் பின்வருமாறு கூறுவதுண்டு. தெருவிலே செல்லுகின்ற மனிதர்களுள் இரண் டாவதாக உள்ள ஒவ்வொருவரும் லோலார்டியர்களாக இருந் தனர் என்று கூறுவர். இக்கருத்து ஓரளவுக்கு உயர்வு நவிற்சியாக இருக்கலாம். ஆனால், லோலார்டியர்களின் கருத்து கள் இங்கிலாந்து மக்களுடைய உள்ளங்களைக் கவர்ந்து' பெரும் செல்வாக்குடன் விளங்கியமை இதனால் நமக்குப் புலனா கின்றது. விக்ளிப்பின் கோட்பாடுகளை மக்கள் எல்லாரும் அப்படியே முழுவதும் ஏற்றுக்கொள்ளவில்லையென்றாலும், அவ ருடைய கோட்பாடுகளில் சில பகுதிகளைப் பலர் ஏற்றுப் போற்றிப் பின்பற்றி வந்ததைக் காணுகின்றோம். இவ்வாறு நான்காம் ஹென்றியின் ஆட்சிக்காலத்திய மக்கள் சபையில், மாவட்டங்களைச்சார்ந்த மாவீரர்கள், வரிகளைக் குறைப்பதற்கும், ஏழைகளுக்கு அளிப்பதற்கும், புதிதாகப் பிரபுக்களாக உயர்ந்திருக்கின்றவர்களுக்கும் மாவீரர்களுக்கும் உதவுவதற் கும் திருச்சபையினுடைய மானியங்களை அரசு கைப்பற்ற வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தனர். அத்துடன் அத்தீர்மானத்தின் இன்றியமையாத சிறப் பியல்புகளை அவர்கள் எடுத்துவிளக்கினர். இத்தீர்மானத்தில் கூறப்பட்ட கருத்துகள் அனைத்தும், எட்டாம் ஹென்றியின் திட்டமாகப் பிற்காலத்துச் செயல்படுத்தப்பட்டமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், அத்தீர்மானத்தைக்கொண்டு வந்த மாவீரர்கள் தெய்வ நிந்தனைத் தடுப்புச் (De Heretico Cumburendo) சட்டத்தினை 1401—ஆவது ஆண்டு

பாராளுமன்றத்தில் கொண்டு வந்தபோது எதிர்க்கவில்லை. நான்காம் ஹென்றியும் ஐந்தாம் ஹென்றியும் அவர்களது ஆட்சிக் காலத்தில் லோலார்டிய இயக்கத்தை வன்முறைத் துன்புறுத்தல்களால் அடக்கியொடுக்கினர். அரசர்கள் தங்கள் அரசு மரபுரிமையைப் பற்றிச் சிக்கல் உண்டானபோது திருச்சபையின் ஆற்றல் மிக்க உதவியை அவர்கள் நாடிய காரணத்தினுல்தான் திருச்சபைக்கு எதிரான லோலார்டியர் இயக்கத்தை இவ்வரசர்களிருவரும் அடக்கியொடுக்க முன் வந்தனர். லோலாடியர் இயக்கத்தைச் சார்ந்த சமய மறுப்பாளர்கள் உயிருடன் தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர். மற்றும் பலர், 'தீயிலிட்டுத் துன்புறுத்துவோம்' என்று அச்சுறுத்தலின் மூலம் லோலார்டிய இயக்கத்திலிருந்து விலகுமாறு செய்யப்பட்டனர். பதினைந்தாம் நூற்ருண்டின் எஞ்சிய பகுதி முழுவதும் இங்கிலாந்தின் ஊர்களிலும் பட்டணங்களிலும் தலைமுறை தலைமுறையாக லோலார்டியக் கோட்பாட்டினர் வாழ்ந்து வந்ததோடு, தங்கள் கருத்துகளையும், இயன்றவரை அவர்கள் மக்களிடையே பரப்பிவந்தனர். ஏழாம், எட்டாம் ஹென்றிகளின் ஆட்சிக் காலத்தில் தங்கள் நாட்டைச் சேர்ந்த அனுபவமற்ற தம் சமயத்தின் நிந்தனையாளர்களின் செயல்கள், வைதிகர்களை அதிர்ச்சி அடையச் செய்தது. அதனுல் அவர்கள் மிகக்கொடிய முறையில் இவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினர். எனவே அவ்வரசர்கள் ஆட்சிக்காலத்தில் ஜெர்மனியில் லூதரால் தொடங்கப் பெற்ற புராட்டஸ்டண்ட்டு கோட்பாட்டின் அலை இங்கிலாந்தில் திரும்பி வீசியபோது, அத்துடன் லோலாடியர் கோட்பாடுகள் இரண்டறக் கலக்கின்ற வரையில் அவ்வரசர்களின் ஆட்சிக் காலத்தில் எண்ணற்ற மக்கள் லோலார்டியக் கோட்பாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்யவேண்டிய அவலநிலை இருந்து வந்தது. ஆனுல், ஆங்கிலேய சீர்த்திருத்த இயக்கத்தின் முக்கிய கூறுகள் ஒவ்வொன்றும் அந்நாட்டிலேயே தோன்றி வளர்ச்சி அடைந்தவை என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வாறு இங்கிலாந்தில் தோன்றிய சமயச் சீர்திருத்த இயக்கத்தின் கூறுகள் அனைத்தையும், விக்ளிப்பின் காலத்திலோ, அவருக்கு முற்பட்ட காலத்திலோ இந்நாட்டிலேயே தோன்றி வளர்ச்சி அடைந்ததற்குரிய சான்றுகளை நாம் இங்கிலாந்தின் வரலாற்றில் காணுகின்ருேம்.

## இவ்வியலில் கூறப்பட்ட கருத்துகள்

பிரபுக்களும் உட்குடிகளும் —பெரும் கொள்ளை நோய்— மாறுகின்ற உலகம்— தொழிலாளர் இயக்கம் —1381-ல்

உண்டான குடியானவர் கிளர்ச்சி— கோட்டையும் ஸ்மித் பீல்டும் —விடுதலை அளித்த முறை—விடுதலை அளித்தமையினால் உண்டான விளைவுகள் —பொது மக்களுடைய நிலை—சமயத்தின் துன்புறுத்தல்— திருச்சபை சீர்திருத்தப்படாமை— 'பாவம் நிறைந்த அவினன் நகரம்' — ஜான்விக்ளிப்பு — லட்டர் வொர்த்து—லோலார்டியரியன் கோட்பாடு தப்பிப் பிழைத்தல்.

## மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்


1. விக்கர்சு: (Vickers)
   England in the Later Middle Ages.
2. கிங்ஸ் போர்ட்டு: (Kings Ford)
   Henry V
3. கோல்டன்: Goulton
   Ghaucer and His England
4. திரெவிலியன்: (Trevelyan)
   England in the Age of Wycliffe
5. ராஷ்டல்: (Dean Rashdall)
   Article in Dict. of Nat. Biog. on Wycliffe
6. மார்க்கரெட்டு டீன்ஸ்லி: (Margaret Deanesly)
   The Lollard Bible (Cambridge, 1920)
   சிறப்பாக ஒன்பதாம் இயலைக் காண்க.
7. லேன் பூல்: (R. Lane Poole)
   Wycliffe and Movements for Reform
8. எச். பி. ஒர்க்மன்: (Rev. H. B. Workeman)
   John Wyclif (Oxford Press, 1926)


குறிப்பு: நாட்டுப்புறங்களின் பிரச்சினைகளைப் பற்றி விளக்கமாக அறிவதற்கு இவ்வியலில் பிறிதோரிடத்தில் அடிக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்களைப் பார்க்க.

## இயல் 8

# மூன்றும் எட்வர்ட்டின் ஆட்சிக்காலம் முதல் ஆறும் ஹென்றியின் ஆட்சிக்காலம் வரை பாராளுமன்றம் அடைந்த வளர்ச்சி

1. உயர்குடி மக்களினலுண்டான அரசியல் குழப்பம்; 2. இடைக்காலத்தின் பிற்பகுதியில் ஆங்கிலேயரின் வாழ்க்கையில் காணப்பட்ட சிறப்பியல்புகள்; 3. ரோஜாப்பூவினை அடையாளமாக அணிந்து புரிந்த போர்; 4. யார்க்கிய அரசர்கள்.

**அரசர்கள் :**

| | |
|---|---|
| மூன்றும் எட்வர்டு | 1327 - 1377 ; |
| இரண்டாம் ரிச்சர்ட்டு | 1377 - 1399 ; |
| நான்காம் ஹென்றி (லங்காஸ்டர்) | 1399 - 1413 ; |
| ஐந்தாம் ஹென்றி | 1413 - 1422 ; |
| ஆறும் ஹென்றி | 1422 - 1461 ; |
| நான்காம் எட்வர்டு (யார்க்) | 1461 - 1483 ; |
| ஐந்தாம் எட்வர்டு | 1483 ; |
| மூன்றும் ரிச்சர்ட்டு | 1483 - 1485. |

மூன்றும் எட்வர்டு அரசுகட்டில் ஏறியதற்கும், ஆறும் ஹென்றி முடி துறந்ததற்கும் இடைப்பட்ட காலத்தில் (1327-1461) ஆங்கிலேயப் பாராளுமன்றம், அதனுடைய இரு சபைகளைக் கொண்ட முழு வடிவில் நிலைத்த வாழ்வினைப் பெற்றது எனில் அது மிகையாகாது. அத்துடன் தற்கால முறைகளைப் பரவலாகப் பெற்றதையும் காணுகின்றோம். அதே சமயத்தில் மக்கள் சபையின் நிதித்துறை, நீதித்துறை அதிகாரங்கள் பெருவளர்ச்சியுற்றதாகத் தெரிகிறது. மேலும் அச்சபை பிரபுக்களுக்கு முன்னிலையில் அமைச்சர்களின் மீது குற்றஞ்சாட்டி, வழக்கு விசாரணை மூலம் சிற்சில சமயங்களில் நிர்வாகத் துறையினை அடக்கியாளும் அதிகாரத்தையும் பெற்றமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மக்கள் சபை பொருள்களை வழங்குவதற்கு உரிமையளிப்பதற்கு முன்பே, அதனுடைய குறைகள் நீக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கியதையும் காண்கிறோம். இத்தகைய வழிகளில் பிற்காலத்து ஸ்டூவர்ட்டு பாராளுமன்றக் கூட்டங்களில் பயன்படுத்துவதற்குரிய முன்நிகழ்ச்சிகள் பல இக்காலத்திய

பாராளுமன்றத்தின் செயல்களின் மூலம் உருவாக்கப்பட்டன. இத்தகைய முன்நிகழ்ச்சிகள் அரசினை ஆதரிக்கும் வழக்கறிஞர்கள் எடுத்து மேற்கோள் காட்டி வாதாடுவதற்கு ஆதரவாக இருந்ததைப் போலவே, அரசருக்கு எதிரான கட்சியின் வழக்கறிஞர்களும் மேற்கோள் காட்டுவதற்குரிய ஆற்றலுடையனவாக அவை அமைந்தன.

ஆனால், இடைக்காலத்தின் இறுதி நிலையில் முதலாம் சார்லஸின் ஆட்சியின்போது இருந்ததைப்போன்று கீழ்ச்சபையாகிய மக்கள்சபை, நாட்டில் சிறப்புற்று விளங்கிய முக்கிய அரசியல் சக்திகளின் பிரதிநிதிகளைக் கொண்டதாகவும் உரிமை மிக்க அதிகாரத்தை உடையதாகவும் விளங்கவில்லை. இடைக்காலத்தின் பிரபுக்களும், குருமார்களும் மக்களுக்கும் அரசருக்கும் இடையே பெரும் தடையாக இருந்து வந்தனர். அரசு, மக்கள்சபை ஆகிய இரண்டின் சிறப்பினையும் அவர்கள் குன்றச் செய்தனர். எனினும், கீழ்ச்சபை அரசரிடத்து பெரும் செல்வாக்கு உடையதாக விளங்கியது. அச்செல்வாக்குக்குரிய காரணம் என்னவென்றால், பிரபுக்களுக்கு இடையே பல்வேறு பிளவுகள் உண்டாகியிருப்பதை எதிர்க்கும் கருவியாக அரசுக்கு மக்கள்சபை பயன்பட்டு வந்தமையேயாகும். அரசினைத் தங்களுக்கு அடிபணிந்து நடக்குமாறு கீழ்ப்படுத்துதல் அல்லது அரசினைத் தங்கள் உடைமையாகக் கைப்பற்றுதல் ஆகிய முயற்சியில் பிரபுக்கள் தங்களுக்குள்ளேயே போரிட்டுக்கொண்டிருந்தனர். எனவே, அரசர் கீழ்ச்சபையினரின் உதவியை நாட வேண்டியவராக இருந்தார். அக்காரணத்தினால் கீழ்ச்சபை அரசரை ஆதரித்ததோடு, அரசரிடத்துச் செல்வாக்கு உடையதாக விளங்கி வரலாயிற்று. மூன்றாவது எட்வர்ட்டு அரசரது ஆட்சியின் இறுதிப் பகுதியில் கூடிய 'நல்ல பாராளுமன்றம்' 1376–ல் கருங்கவச இளவரசருக்கும் எல்லைப்புறக் கோமானுக்கும் சார்பாக மக்கள் நலன் கருதி அவர்களுடைய பகைவர்களை மாபெரும் குற்றஞ்சாட்டி வழக்கு விசாரணை செய்தது. ஆனால், அடுத்த ஆண்டில் கூடிய பாராளுமன்றம் காண்ட்டினைச்சார்ந்த ஜானின் குழுவினரான எதிர்க்கட்சியினரால் நிறைக்கப்பட்டிருந்தது. இவ்வாறே இரண்டாம் ரிச்சர்ட்டின் ஆட்சிகாலத்தில் (1377-1399) மக்கள்சபை உறுப்பினர்கள் தங்களுக்கு என்று நிலையான திட்டம் ஒன்றினை உடையவர்களாக இருக்கவில்லை. ஆனால், அரசிலே தொடர்ந்து உண்டான பல கோளாறுகளுக்குரிய கருவிகளாக அவர்கள் பயன்படுத்தப்பட்டனர். பேராற்றல் வாய்ந்தவர்கள் தங்களுக்கிடையே கொடிய முறையில் போராடிக் கொண்டிருந்தபோது, அப்போராட்டத்

திற்குரிய கருவியாக அவர்கள் பயன்படுத்தப்பட்டனர். இதற்கடுத்த நூற்றாண்டில் செயலாட்சித் துறையினைப் பாராளுமன்றம் தனக்குக் கீழ்ப்பட்டு நடக்குமாறு வற்புறுத்திய முதிர்ச்சியுறாத பரிசோதனை, உயர்குடி மக்கள் அரசியல் குழப்பத்தை உண்டாக்கியதன் மூலம் ஒரு முடிவுக்கு வந்தது. இவ்வுயர்குடி மக்களின் அரசியல் குழப்பமே ரோஜாப்பூவினை அடையாளமாக அணிந்து போரிட்ட போர்களாகச் சிறப்பித்துப் பேசப்படுவதை நாம் நன்கு அறிவோம்.

அரசரிடமிருந்து அதிகாரத்தினை மக்கள் சபையினர் கைப்பற்ற விரும்புவதற்கு முன்பே, டியூடர்களின் ஆட்சிக்காலத்தில் அரசுடைய அதிகாரம் மிகுதிப் படுத்தப்படவேண்டிய இடைநிகழ்ச்சி இன்றியமையாது தேவைப்பபட்டது. இவ்வாறு அரசனுடைய அதிகாரங்கள் பெருகுவதன் மூலம், அரசின் ஆட்சிமுறை அமைப்பினை வலுப்படுத்தவும், பிரபுக்களையும் குருமார்களையும் மற்றக் குடிமக்கள் நிலைக்குத் தாழ்த்தவும் வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. ஆங்கிலேய 'அரசியலமைப்புச் சட்டக் கலவையின்' அமைப்பிலோ உணர்விலோ என்றும் பிளவு உண்டானதில்லை. டியூடர் அரசர்களுள் பெரும் தலைமையும் பேராற்றலும் பெருந்திறனும் வாய்ந்த அரசர்கள், திருச்சபையிலும் பாராளுமன்றத்திலும் மாபெரும் புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்குவதற்கு உரிய கருவியாகப் பாராளுமன்றத்தைப் பயன்படுத்தினர். அதே பாராளுமன்றம் லங்காஸ்டிரிய அரச மரபைச் சேர்ந்த அரசர்களின் ஆட்சிக்காலத்தில் 'பாராளுமன்ற ஆட்சிமுறை' என்று சொல்லப்பட்ட ஆட்சிமுறையில், எத்தகைய சீர்திருத்தமும் செய்வதற்குரிய திறமையற்ற ஒன்றாகப் பாராளுமன்றம் கருதப்பட்டமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு நூற்றாண்டிலிருந்து மற்றொரு நூற்றாண்டிற்கு ஆங்கிலேய அரசின் சிக்கலான முறைகளும், மனவெழுச்சியும் சிற்சில மாறுதல்களோடு இருந்து வந்ததைக் காணுகின்றோம்.

வேல்ஸ் மக்களோடும் ஸ்காட்டிய மக்களோடும் போராடி வந்ததைத் தொடர்ந்து நூறாண்டுப் போர் தோன்றியதைக் கண்டோம். அப்போர்க் காலத்தில், 'தனக்குரிய வருவாயைக் கொண்டு' அரசர் தம்முடைய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு வாழ்வது என்பது மிகக் கடினமாயிற்று. போர்க் காலங்களில் அரசரின் சொத்துக்களிலிருந்தும், நீதிமன்றங்களிலிருந்தும், நிலமானியப் படைமுறைத் தீர்வைகளிலிருந்தும், வேறுபல வழக்கமான வரிவிதிப்புகளிலிருந்தும் கிடைக்கின்ற

வருவாயைக் கொண்டு அரசர் செலவுகளைச் செய்வது என்பது இயலாத ஒன்ருகப் பற்ருக்குறை மிகுதியுடையதாக இருந்தது. எனவே, எல்லாக் கட்சியினரும் தனிப்பட்ட வாணிகர்களுடனே நகரங்களுடனே மாவட்டங்களுடனே அரசர் பேரம் பேசாது, அதற்குப் பதில் மேற்கண்டவர்களுடைய தேசியப் பாராளுமன்றப் பிரதிநிதிகளைச் சந்திப்பதன் மூலம், அரசர் எல்லை மீறிய வரிவிதிப்புகளை விதித்து வருவாய்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று ஒருமுகமாகக் கூறினர். அக்காலத்தில் நெருக்கடி உண்டாகின்றபோது கம்பளி நூல் வாணிகத்தின் மீது வரி விதிக்கப் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புச் செய்வது வழக்கமாகும். அதன்மூலம் பெரும் தொகையினைத் தண்டுவது அரசருக்கு மிக எளிதான செயலாக இருந்தது. இவ்வாறு நெருக்கடி காலத்தில் மிகுதியாக வரிவிதிக்கத் தொடங்கியதனுல், அரசின் செயல் முறைகளில் தலையிடுவதற்கு விருப்பமே இல்லாதிருந்துவந்த பேரூர்களின் பிரதிநிதிகள் ஒருவகையான முக்கியத்துவத்தைப் பெறலாயினர். அவர்கள் பாராளுமன்றக் கூட்டங்களுக்கு வந்திருந்து பாராளுமன்றச் செயல்முறைகளில் தலையிடுவதன் மூலம், அரசின் செயல்களில் பங்கு பெற அவர்கள் விரும்பவில்லை என்ருலும் அவ்வரிவிதிப்புகளினுல் அவர்கள் முக்கியத்துவம் பெறலாயினர். நடுத்தரமான பேரூர் மக்களின் நிதிநிலை முக்கியத்துவம் கோட்டங்களில் வாழ்ந்த மாவீரர்களின் நிதி, அரசியல் துறைகளில் சிறப்புற்று விளங்குமாறு செய்தது. வெஸ்ட்மினிஸ்டர் மாமன்றத்தில் பேரூர்ப் பிரதிநிதிகளோடு, மாவீரர்களும் ஒன்ருகச் சேர்ந்து அமர்ந்து பாராளுமன்ற நடவடிக்கைகளைக் கவனித்து வரலாயினர்.

பிரான்சோடு போராடிக் கொண்டிருந்த போரின் வெற்றியும், வரிவிதிப்புக்கு வாக்குறுதி தரப்பட்ட மக்கள் சபையினரின் அதிகாரமும் ஒன்றினை ஒன்று சார்ந்ததாகவே இருந்துவந்தது. அது லாஹோக்கு (La Hogue), பிளன்னீம், வாட்டர்லூ போர்க்களங்களில் எத்துணை முக்கியத்துவமுடையதாக இருந்ததோ, அதற்குச் சிறிதும் குறையாத அளவிலேயே சுலூயிஸ் (Sluys) கிரேசி, அகின்கோர்ட்டு போர்க்களங்களில் நடைபெற்ற போர்களும் பொருள் வசதியை அடிப்படையாகக் கொண்டே அமைந்தன எனலாம். 1420 ஆவது ஆண்டு நல்லெண்ணத்தோடு தான் பிரான்சின் அரசராக விளங்கப்போகிறேன் என்று அரசர் தெரிவித்தபொழுது, அதனுல் உண்டாகக்கூடிய ஆதாயத்தினை நினைந்து மக்கள்சபையினர் கணநேரம் பேரதிர்ச்சி அடைந்தனர். மேற்கு ஐரோப்பாவினைப் பாரிஸிலிருந்து தங்கள் அரசர் ஆட்சி

புரிவாராஞல், இங்கிலாந்தின் உரிமைகளுக்கு உண்மையில் என்ன தீங்கு உண்டாகுமோ என்று அவர்கள் அஞ்சினர். ஆனல், எதிர்பாராத வகையில் ஐந்தாம் ஹென்றி (1422-1429) இறந்தமையும், ஜோன் என்னும் நங்கை பிரான்சின் விடுதலைப் போரில் ஈடுபட்டமையும் பிரிட்டிஷ் அரசியலமைப்பினைக் காப்பாற்றியது எனலாம்.[1]

இடைக்கால ஆங்கிலேயப் பாராளுமன்றம் வரி விதிப்புக்காகக் வாக்குறுதிகளை அளிப்பதாக மட்டும் இல்லாமல் சட்டங்களை இயற்றும் சட்டமன்றமாகவும் விளங்கியது. அது 'பாராளுமன்றத்தின் உயர் நீதிமன்றமாக' இருந்து நிதி, நிர்வாகக் கடமைகளைச் செயலாற்றி வந்ததைக் காணுகின்றோம். அக்காலத்தில் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரங்களிலிருந்து, நீதி நிர்வாகத்துக்குரிய அதிகாரங்கள் அனைத்தையும் வேறுபடுத்தி அறியமுடியாத நிலை இருந்துவந்தது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். வெஸ்ட்மினிஸ்டர் மன்றத்தில் வழக்காடிய வழக்கறிஞர்கள் அனைவரும் அத்தேசிய சட்டமன்றத்தை நீதிமன்றங்கள் அனைத்திலும் மிகச்சிறப்புடையதாகக் கருதி வந்தனர். அச் சட்டமன்றம் அவர்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு அண்மையிலேயே கூடிவந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வழக்கறிஞர்கள் பாராளுமன்றத்தைத் தலைசிறந்த நீதிமன்றமாகக் கருதிய காரணத்திஞல், அதன் வளர்ச்சிக்காக அவர்கள் விரைந்து உதவிபுரிய முன்வந்தனர். பொது வழக்கறிஞர்கள் பாராளுமன்ற உறுப்பினரோடு கூட்டாளிகளாகச் சேர்ந்து உழைத்து வந்தனர். பிளாண்ட்டாஜெனட் அரசர்கள் காலம் முதல் நடைமுறையில் இவ்வழக்கம் இருந்து வருவதைக் காணுகின்றோம்.

மக்கள்சபை, வழக்கறிஞர்களைப் போன்று முன் நிகழ்ச்சிக்கும் முறைகளுக்கும் பெரு மதிப்புக் கொடுத்து வந்தமை,

[1] கி.பி. 1420 இல் பிரான்சு நாட்டு மக்கள் ஐந்தாம் ஹென்றிக்குத் தங்கள் நாட்டின் அரசராக முடிசூட்டிக் கொள்ளுவதற்கு உரிமையளித்தனர். அந்நிலையில் அரசர் இங்கிலாந்திற்குத் திரும்பிவருகின்ற வரையில் ஆங்கிலேய மக்கள் சபையினர் அரசருக்கு அளிக்கவேண்டிய பணத்தொகை மானியத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தனர். அரசர் இங்கிலாந்திற்குத் திரும்பியவுடன், எக்காரணத்தை முன்னிட்டும் ஆங்கிலேயக் குடிமக்களை, ஆங்கிலேய அரசர் பிரான்சின் அரசராகவும் விளங்குவதஞல் பிறருக்கு அடிமைப்படுத்தாமல் காப்பதாக உறுதிமொழி அளிக்குமாறும், 1340ஆம் ஆண்டு வழங்கப்பட்ட உரிமைச் சட்டத்தை மீண்டும் வழங்குமாறும் மக்கள் சபையினர் அவரை வற்புறுத்தினர். 1340ஆம் ஆண்டைக்காட்டிலும், 1420ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் உரிமைகளுக்குப் பேராபத்து உண்டாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கு முதலிலிருந்தே பேராற்றலைத் தந்தது எனலாம். இத் தகைய பண்பு என்றுமே மக்கள்சபைக்கு உரியதாக இருந்து வருவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மக்கள் சபை தன்னுடைய வாழ்வினை வெறும் சொற்போர் சட்டசபையாகத் தொடங்காது, அரசரின் பாராளுமன்ற உயர்நீதி மன்றத் தின் ஒரு பகுதியாகத் தோன்றி வளர்ந்தமை நினைவு கூரத் தக்கதாகும். அத்துடன் நீதிமன்றத்துக்குரிய ஒழுங்கு முறை களையும், சிறப்புரிமைகளையும் மக்கள்சபை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அப் பாராளுமன்ற உறுப்பினர்களுள் வழக்கறிஞர்களாக இருந்தவர்களுடைய உதவியையும், அவர் களைச் சுற்றிலுமிருந்த வழக்கறிஞர்களின் உதவியையும் பெற்று மாவட்டங்களின் மாவீரர்கள் மிக இன்றியமையாத கலைகள் பலவற்றைக் கற்றுக் கொண்டனர். அவற்றுள் குறிப்பிடத் தக்கது, சட்டமாக நிறைவேற்றுவதற்குரிய 'சட்ட வரைவை' எப்படிச் செம்மையாக எழுதுவது என்பதை அவர்கள் வழக் கறிஞர்களிடமிருந்து கற்றனர். இதனால், அவர்கள் நிறை வேற்றிய சட்டங்கள், குறை தீர்ப்பதற்காகச் செய்யப்படும் வெறும் விண்ணப்பங்களாக மட்டும் விளங்காமல் சட்டங்களா கச் செய்யத்தக்க சிறப்பினைப் பெற்றன. இத்தகைய மாற்றம் ஆரும் ஹென்றியினுடைய ஆட்சிக்காலத்தின் இறுதியில் தொடங் கியது எனலாம். இம்மாற்றத்தினால் தங்கள் உடன்பாட்டை வேண்டிப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டங் களனைத்தையும், தங்கள் அதிகாரத்துக்குப் பெரிதும் கட்டுப் பட்டு விளங்குமாறு செய்வதற்குரிய பேராற்றலினை மக்கள் சபையினர் பெற்றனர் எனலாம். அத்துடன் பாராளுமன்றத் தில் முதன்முதலாக ஒரு சட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசுவதற்குரிய அதிகாரத்தை ஓரளவிற்கு அவர்கள் பெற முடிந்தது. தொடர்ந்து நெடுங்காலமாக அவர்கள் ஆற்றல் மிக்க உதவியினை நாட்டின் சிறப்புமிக்க சட்டத்துறை அறிஞர் களிடம் பெற்று வந்தனர். அவ்வுதவியைப் பெறுமலிருந்தால் சட்டமியற்றும் சட்டசபையின் தலைமைமிக்க ஊற்றாக மக்கள் சபை என்றுமே விளங்கியிருக்க முடியாமல் போயிருக்கலாம். மேலும் அரசரின் வழக்கறிஞர்களும் அரசரால் அமர்த்தப் பட்ட நீதிபதிளும் (அதாவது கோக்கு, செல்டன் (Seldon), சாமர்ஸ்) வாழ்ந்த நூற்றாண்டில் அவர்களுக்கு எதிராக அரசியலமைப்பு வழக்குகளை எதிர்த்து மக்கள் சபையினர் சொற்போர் புரிந் திருக்க முடியாமல் போயிருக்கும்.

தொடக்க காலம் முதல் நீதிமன்றக் கழகங்கள், மக்கள் சபையோடு தொடர்பு கொண்டிருந்தமையால், ஆங்கிலேயப்

பொதுச் சட்டத்தைக் கற்ற மாணவர்களிடையே, வெளிப்படையாக ஒருவகை மனப்போக்கு வளர்ந்து வரலாயிற்று. ரோமானியப் சட்டத் தொகுப்புகள் 'அரசர்வரம்பிலா முடியரசர்' என்று அறிவித்தன. அவற்றைப் படித்த மாணவர்கள் அக் கருத்தினை நம்பி வந்தனர். அதற்கு மாறாக ஆங்கிலேயப் பொதுச் சட்டத்தைக் கற்று அறிந்தவர்கள், 'அரசரும் சட்டத்துக்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டியவர்' என்னும் கருத்து உடையவர்களாகக் காணப்பட்டனர். இதனால் தான் இரண்டாம் ரிச்சர்ட்டு முடி துறக்குமாறு செய்யப்பட்டபொழுது, அவர் மீது பல குற்றங்கள் சாட்டப்பட்டன. அவற்றுள்முதன்மையானது எல்லாச் சட்டங்களும் 'தம் உள்ளத்தேயிருந்து தோன்றுகிறது' என்று அவர் அறிவித்தமையும், அச்சட்டங்களை இயற்றுவதற்குத் தமக்கே தனியுரிமை உண்டு என்று அவர் கருதியதையும், தம் விருப்பப்படியே, அவற்றை மாற்ற வேண்டுமென்று அவர் கூறியதையும், மக்கள் சபையினர் காரணங்களாகக் காட்டினர். இந்தப் போராட்டம் இரண்டாம் ஜேம்ஸ் அரியணையிலிருந்து விரட்டப்படுவதற்குக் காரணமாக இருந்த புரட்சி தோன்றுகின்ற வரையில் ஒரு முடிவுக்கு வராமலே இருந்துவந்தது. ஆனால் பிளாண்ட்டாஜெனட் மரபைச் சார்ந்த ரிச்சர்ட்டின் ஆட்சிக்காலத்து இத்தகைய நெருக்கடி ஒன்று உண்டானபோது, அதன்மீது பாராளுமன்றம் ஒரு தீர்ப்பினை வழங்கியதைக் காணுகின்றோம்.

இவ்விரு புரட்சிகளுக்குமிடையே .(1399- 1688) சற்றேறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் இடையீடு உண்டாகியிருப்பதைக் காணலாம். இவ்வாறு இவ்விரு புரட்சிகளும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், அவற்றின் அரசியலமைப்பு முறையில் எல்லைமீறிய ஒற்றுமை அவற்றிற்கிடையே அமைந்திருக்கின்றன. மேலும் அவற்றின் தனிப்பட்ட சூழ்நிலைகளிலும் அவற்றிற்கிடையே ஒற்றுமை இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 1688-ல் நடந்த புரட்சி சிறப்புமிக்க சமய வழக்குகளாலும் அகில உலகச் சிக்கல்களைப்பற்றி உண்டான நெருக்கடியினாலும் தோன்றியதாகும். அப்புரட்சி ஐரோப்பிய நாடுகளின் வரலாற்றில் மட்டுமல்லாமல் ஆங்கிலேயரின் வரலாற்றிலும் புதிய ஒரு யுகத்தினைத் தோற்றுவித்தமை சிறப்புமிக்க செய்தியாகும். ஆனால் ரிச்சர்ட்டுக்கும் அவருடைய குடிமக்களுக்குமிடையே 1399-ல் நடந்த போராட்டத்தில் அப்பண்புகள் இடம்பெறாமை இங்குக் குறிப்பிடத்தக்கது. அந் நிகழ்ச்சி உண்டாவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, அரசருடைய பண்புகளைக் கூர்ந்து ஆராயக்கூடிய தனிச்சிறப்பு மிக்க உள்ளுணர்வு வாய்ந்தவர்கள்

அல்லாமல், வேறு யாருமே இவ்விரு புரட்சிகளும் பிற்காலத்துத் தோன்றப்போகிறது என்பதை முன்கூட்டியே உணரக்கூடியவர்களாக இருந்திருக்க முடியாது. 1396-ல் ரிச்சர்ட்டு, மக்களிடையே தம்முடைய செயல்களைப் பொறுத்துக் கொள்ளக் கூடிய பண்பு விளங்குவதைக் கண்டார். அத்துடன் ஆற்றல் மிக்க தம்முடைய கட்சியாளர்களுக்குப் போதுமான புகழும் தம் நாட்டு மக்களிடையே இருந்து வருவதை அவர் உணர்ந்தார். இதைப் போன்றே 1685-ஆம் ஆண்டு ஜேம்ஸ் அரசர் நாட்டு மக்களிடையே தமக்கு ஓரளவிற்குச் செல்வாக்கும், ஆதரவும் இருந்து வருவதை நன்கு அறிந்திருந்தார். இவ்விருவர்களுக்கும் கொடிய பகைவர்கள் இருந்தபோதிலும், அப்பகைவர்கள் எளிதில் அடக்கி யொடுக்கப்பட்டனர். உண்மையில் ரிச்சர்ட்டு அரசர் இதற்கு முன்பு ஆறு ஆண்டுகளுக்கு மேலாக இங்கிலாந்தை ஆட்சி புரிந்து வரலானர். அவருடைய மூர்க்கமான மன வெழுச்சிகள் பொகிமியாவைச் சேர்ந்த ஆன் (Anne) என்னும் அவருடைய முதல் மனைவியின் அன்பினல் கட்டுப்படுத்தப்பட்டு இருந்த வரையில் அவர் அமைதியாக நாட்டை ஆண்டு வந்தார்.[1] ஆனல் அவருடைய இறப்புக்குப் பிறகு தெளிவில்லாத உளவியல் மாற்றம் ரிச்சர்ட்டிடத்து உண்டாயிற்று. அவருடைய உள்ள உரத்தையும், ஆராய்ந்து முடிவுக்கு வரக்கூடிய மன நிலையையும் அம்மனப்போக்கு அழித்து விட்டது எனலாம். வயது முதிர முதிர எதிர்பாராத ஆற்றலும், சமயக் கோட்பாட்டு வெறியும் ரிச்சர்ட்டை ஆட்டிப்படைக்கத் தொடங்கியமையால் ஜேம்ஸைக் காட்டிலும், மிகக் கொடிய மற்றொரு மனிதராக ரிச்சர்ட்டு மாறி விட்டார்.

இரு அரசர்களுக்கும் எதிராக, அவருடைய பழைய நண்பர்களையும் பழைய பகைவர்களையும் ஒருங்கு சேர்ப்பதற்கு மூன்று ஆண்டுகள் போதுமானதாக அமைந்தன. அவர்கள் இருவரும் தொடர்ந்து வெளிப்படையாகக் கொடுஞ்செயல்களில் ஈடுபடலாயினர். அவர்கள் இருவரும் வீணாகப்பாராளுமன்றத்தைக் கலைத்தனர். அதன் பிறகு பாராளுமன்றத்தின் உதவி இல்லாமலே நாட்டை ஆள அவர்கள் முயன்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் சட்டத்தின் மேல் சட்டமாகச் சட்டங்கள் அனைத்தையும் உடைத்தெறிந்தனர். இறுதியாக நாட்டிலே

1. பொகிமியாவிலிருந்து (செக்கு) அவளுடன் வந்த நாட்டு மக்களுள் சிலர் விக்கிளிப்பினுடைய நூற்களின் பிரதிகள் சிலவற்றைத் தங்கள் தாயநாட்டிற்கு எடுத்துக் கொண்டு போயிருக்க வேண்டுமென்றும் அதன் விளைவாகத்தான் பதினைந்தாம் நூற்றுண்டில் பொகிமியாவில் மாபெரும் 'உசைட்டு' (Hussite) இயக்கம் தோன்றியிருக்க வேண்டும் என்றும் நம்பப்படுகிறது.

இருக்கின்ற உரிமைக்குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் பண்ணை களில் இருந்து வந்த உரிமைகளைப் பறித்து விடுவதாக அவ்வரசர் கள் அச்சுறுத்தினர். முன் ஏற்பாடு இல்லாத ரிச்சர்ட்டு அந்தப் பிரபுக்களைக் காட்டிலும் மிகுதியான இரத்தவெறி பிடித்தவர் அல்லர். முற்பட்ட ஆண்டுகளில் பேராதிக்கம் மிக்க பிரபுக்கள் குழுவின் ஆதிக்கத்தை ரிச்சர்ட்டு அடக்கியொடுக்கித் தமக்கு அடி பணியுமாறு செய்தார். ஆனால் தீய அறிவுரைகளைக் கேட்டு ரிச்சர்ட்டு லங்காஸ்டர் குடியைச் சேர்ந்த மக்களின் பண்ணைகளை எல்லாம் கைப்பற்றினர். அக்குடியைச் சேர்ந்த பிரபுக்கள் அன்று வரை ரிச்சர்ட்டுடன் தனிப்பட்ட வகையிலோ இங்கிலாந்தின் அரச குடும்பத்தோடு பகைமை கொண்டவர்களாகவோ இருக்க வில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதைப் போன்றே ஜேம்ஸ் தீய அறிவுரைகளைக் கேட்டு மேக்டலன் தோழர்கள் (Magdalen) வெளியேறிய பிறகும் ரிச்சர்ட்டைக் காட்டிலும் கடுமையான முறையில் நடந்து கொண்டதை நாம் காண்கிறோம். ஆழ்ந்து சிந்திக்காது செய்யப்பட்ட அச்செயல் ஷேக்ஸ் பியருடைய இலக்கிய நயமிக்க குறட்பாவில் இன்னெலியுடன் ஒலிப்பதைக் கேட்கிறோம்.

“சிந்தனை செய் அரசே! சீர்தூக்கிச்
  சிறந்ததொரு முடிவிற்கு வருக அரசே!
வந்தனை செய்து நாளும் வானுயர்
  பொன்னும் பொருளும் புகழ் மிகு கவசமும்
எண்ணரிய நிலனும் கொண்டு ஏற்றமுறு
  அவன்றன் வளமிகு வாழ்வு தன்னைப்
பண்ணரிய செயல்கள் மூலம் பற்றுவோம் வாரீர்!”

அயல் நாட்டிலிருந்த லங்காஸ்டர் அரசர் குடும்பத்தைச் சேர்ந்த ஹென்றி, தாய்நாட்டிற்குத் திரும்பி வந்து தம்முடைய பெற்றோர்களின் பண்ணைகளைத் தமக்குரியன என்று உரிமைக் குரல் எழுப்பினர். அவ்வுரிமைக் குரலின் மூலம் நாட்டுமக்கள் அனைவருடைய ஆதரவையும் தமக்கே அவர் உரியதாக்கிக் கொண்டார். இதைப் போன்றுதான், பிற்காலத்து ஆரஞ்சு மரபினைச் சேர்ந்த வில்லியம் இங்கி லாந்து நாட்டுமக்களின் பேராதரவைப் பெற்றார் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய நெருக்கடியான நிலையில் ரிச்சர்ட்டு ஜேம்ஸைப் போன்று எத்தகைய பிழைகளை எல்லாம் செய்யமுடியுமோ அத்தகைய பிழைகளை எல்லாம் செய்தார். அதன் விளைவாகத் தமக்கு ஆதரவாகப் போரிடு வதற்கு நாட்டுமக்களுள் ஒருவரையும் பெறமுடியாது போயிற்று. அத்துடன் பாராளுமன்றத்தில் இங்கிலாந்து நாட்டின் அடிப்

படைச் சட்டங்கள் அனைத்தையும் உடைத்தெறிந்தார் என்னும் குற்றஞ் சாட்டப்பட்டு ரிச்சர்ட்டு அரியணையிலிருந்து விரட்டப் பட்டார். அதற்குப் பிறகு ஹென்றி அரசரற்றுக்கிடந்த அரியணைக்கு ஓரளவுக்கு மரபுரிமையின் அடிப்படையில் அரச ராக அமருமாறு அழைக்கப்பட்டார். ஆனால், பெரிதும் பாராளு மன்றத்தின் இசைவைப்பெற்று, அவர் அரசரானார் என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். இதைப்போன்றே வில்லியமும் பிற்காலத்தில் இங்கிலாந்தின் அரசரானதைக் காண்கிறோம். இவர்கள் இருவரும் அரியணை ஏறுவதற்கு மிக நெருக்கமான அரசுரிமை உடையவர்கள் அல்லர் என்பது இங்குக் குறிப் பிடத்தக்கதாகும்.

1399-ஆவது ஆண்டில் நடைபெற்ற புரட்சியின் விளைவாகப் பாராளுமன்றத்தின் இரு சபைகளினுடைய அதிகாரங்கள் இதற்கு முன்பு என்றுமே இல்லாத மிகச் சிறந்த வகையிலும் உறுதியான முறையிலும் நிலைநாட்டப்பட்டன. பாராளுமன்றத் தினர் அரசரை நாட்டிலிருந்து விரட்டியதோடு அவருக்கு அடுத்து யார் அரசராவதற்கு உரியவர் என்பதையும் அவர்களே தேர்ந் தெடுத்து அவருக்கு முடிசூட்டியதைக் காணுகின்றோம். இரண் டாம் எட்வர்டு ஆட்சிக் காலத்தில் இரண்டாம் எட்வர்டு முடி துறக்குமாறு வற்புறுத்தப்பட்டார். ஆனால், அவருக்குப் பிறகு அவருடைய மகன் அரசராகவேண்டுமென்ற காரணத்தினால் அவ் வாறு வற்புறுத்தப்பட்டார் என்ற செய்தி இங்குக் குறிப்பிடத் தக்கது. ஹனோவரிய அரசர்களைப்போன்று லங்காஸ்டிரிய அரச மரபைச்சேர்ந்த அரசர்களும் பாராளுமன்ற உரிமைகளைப் பெற்று நாட்டினை ஆண்டனர். அவ்விரு அரச மரபினைச்சார்ந்த அரசர்களின் ஆட்சிக்காலத்தில் பாராளுமன்றத்தின் இரு அவை களும் அதிகாரத்தையும், சிறப்புரிமைகளையும் பெற்று, சிறப் புற்று விளங்கியதோடு, அரசரால் மதித்துப் போற்றப்பட வேண்டிய இன்றியமையாத நிலையில் இருந்ததையும் காணுகின் றோம்.

எனவே, பதினைந்தாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தோன்றிய அரசியல் கோட்பாடுகள் அனைத்தும், அரசினுடைய ஆதிக்கம் சட்டமுறைக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதைக் கண்டு நாம் வியப்படைவதற்கில்லை. மேலும் அக்காலங்களில் ஆங்கிலேயக் குடிமக்களின் உரிமைகளைப் பிரஞ்சுநாட்டுக் குடிமக்களின் அடிமைத்தனத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்து ஒதுக்கு வதும் இங்கு வியப்புக்குரியதன்று. இத்தகைய கருத்துகள்

சமகாலத்தவரான ஓகார்த் (Hogarth), பிளாக்ஸ்டன் (Blackstone) பர்க் (Burke) போன்றவர்கள் காலத்தில் தொடர்ந்து மக்களுடைய சிந்தனைகளைத் தூண்டி வந்ததாகத் தெரிகிறது. அவ்வாறு இருக்க அதற்கும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, பதினைந்தாம் நூற்றுண்டில் தலைமை நீதிபதியான ஃபார்டஸ்கியூ (Fortesque) ஆங்கிலேயரின் உரிமைகளைப்பற்றிப் பெருமைப்பட்டதில் வியப்பில்லை. அத்தலைமை நீதிபதி தம்முடைய நாட்டினை உரிமை மிக்க நாடு என்று போற்றி அதனிடத்து பேரன்பு செலுத்திய வராகவும், நாட்டுபற்று மிக்கவராகவும் விளங்கினர். டௌட்டன்னுக்குப் பிறகு லங்காஸ்டிரியக் கட்சியினரோடு அவர் நாட்டிலிருந்து விரட்டப்பட்டபோதிலும் (1461), அவர் அயல்நாட்டில் இருந்துகொண்டு ஆங்கிலேய அரசியலமைப்பினைப் புகழ்ந்து பல கருத்துக்களை வெளியிட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். 'தன்னுடைய நாட்டின் சட்டங்களை இங்கிலாந்து நாட்டின் அரசர் தம்முடைய விருப்பத்திற்கேற்ப மாற்றவோ திருத்தவோ முடியாது. அரச உரிமையோடு அவர் தம்முடைய மக்களை அதிகாரம் கொண்டு ஆட்சி செய்யவில்லை. அரசியலமைப்புக்குட்பட்டு அவர் ஆட்சிசெய்கின்ருர்' என்று நாம் கூறலாம் என்பது அவருடைய கருத்தாகும். இங்கு 'அரசியல்' என்பது இக்காலத்து நாம் 'அரசியலமைப்பு முறை' என்று கூறுவதைக் குறிப்பிடுவதாகும். ஆங்கிலேயப் பொதுச் சட்டத்தின் உயர் பண்பு, பிற நாடுகளிளெல்லாம் பேராதிக்கம் செலுத்துகின்ற ரோமானியர் சட்டத்திற்கு அல்லது சிவில் சட்டத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும் என்று ஃபார்டஸ்கியூ எடுத்துரைத்தார். மற்ற நாடுகளில் 'அரசர்தம்முடைய விருப்பத்திற்கு ஏற்பசச்சட்டத்தினை மாற்றியும், திருத்தியும் அமைக்கின்ருர்' என்று கூறுவர். அதைப் போன்று இல்லாமல் இங்கிலாந்து நாட்டின் அரசர் ஆங்கிலேயப் பொதுச் சட்டத்தினைப் போற்றிப் பின்பற்ற வேண்டியவராக உள்ளார் என்பது அவருடைய கருத்தாகும். அவர் தம்முடைய அனுபவத்தைக்கொண்டு இருநாட்டுச் சட்டங்களுக்கிடையேயும் காணப்படுகின்ற ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டுச் சீர்தூக்கி ஆராய்கின்ருர். பிரஞ்சுநாட்டு மக்களுடைய கொடுந்துன்பத்தையும், திடீரென்று அரசர்களுடைய வீரர்களாலும், பணிமக்களாலும் அவர்கள் கொள்ளையடிக்கப்படுவதைப்பற்றியும் அவமதிக்கப்படுவதைப்பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனல், 'இங்கிலாந்து அரசரின் ஆட்சியில் ஒரு மனிதர் மற்றொரு மனிதரின் வீட்டில் அன்பினைப் பெருது சிறிது நேரமும் தங்குவது இல்லையென்றும், அதைப்போன்றே அந்த மனிதருடைய வீட்டிலிருந்து பிரிகின்றபோது பிரிவினல் உண்டாகும் மனக்கலக்கத்

துடனேயே பிரிந்து செல்லுவர்' என்றும் அவர் குறிப்பிடு கின்றார். வேறு வகையாகச் சொல்லுவதென்றால் ஆங்கிலேய ருடைய வீடே அவருடைய காவல் கற்கோட்டையாக இருக் கிறது எனலாம்.

ரோஜாப்பூ அணிந்து போரிட்ட போர், உச்ச நிலையை அடைந்து கொண்டிருந்த காலத்து இத்தகைய இனிய நடையில் ஃபார்டஸ்கியூ (Fortescue) எழுதியுள்ளமை குறிப்பிடத் தக்க தாகும். அது வரையில் அவர்காலத்திய இங்கிலாந்தில் காணப் பட்ட குறைகள் எவை என்பதை மிகக் கடுமையான முறையில் அவர் உணர்ந்து இருந்தமை, அவருடைய குறிப்பேட்டிலிருந்து தெரிய வருகின்றது. இத்தகைய கருத்தினை அவர் அப்போர்க் காலத்தின் நெருக்கடியான நிலையில் எழுதியிருக்கவேண்டும் என்பதும் புலனாகின்றது. பேராற்றல் வாய்ந்த குடிமக்களாகிய பிரபுக்களால் அரசருக்கு உண்டாகும் தீமைகளை நன்குணர்ந் திருந்தார். அத்தீமைகளின் 'உண்மையான ஊற்று, எது என் பதைக் கண்டறிந்தார். நாட்டிலே 'அரசு குறைபாடுடையதாக இருப்பதற்குக் காரணம் பிரபுக்களின் பேராதிக்கமே என்பதைக் கண்டறிந்தார். எனவே அவர் ஆற்றல் மிக்க செல்வச் செழிப்பு வாய்ந்த முடியாட்சியும், ஆற்றல் குறைந்த வறிய நிலையில் உள்ள பிரபுக்களும் தம்காலத்தில் இருக்கவேண்டுமென்று விரும்பினார். ஏழாம் ஹென்றி உண்மையில் செயல்படுத்திய திட்டத்தின் சில கருத்துகளை ஃபார்டஸ்கியூ முன்கூட்டியே அறிவுறுத்திச் சென்றார்.

பதினைந்தாம் நூற்றாண்டுக்காலத்திய இங்கிலாந்தின் மாண்பு மிக்க பிரபுக்களும், அவர்களைச் சூழ்ந்திருந்த பிற மக்களும் சட்ட வரம்பின்றிப் போரும் பூசலும் புரிந்து நாட்டின் நல்வாழ்வினைக் கெடுத்து வந்தனர். அவர்கள் தேசிய இனஅரசின் ஒற்றுமை யைப்பற்றி ஓரளவுக்கு ஒத்துக்கொண்டனர். அவர்கள் மாநிலங் கள் அனைத்தையும் நிலமானியப் படைமுறை அமைப்பினாலோ, அரச பிரதிநிதிகளின் ஆட்சி மூலமோ ஆளவேண்டும் என்னும் பேராசை உடையவர்களாக இல்லை. பிரஞ்சு நாட்டுப் பிரபுக்கள் மேற்கண்டவாறு தங்கள் நாட்டின் ஆட்சியைத் தங்களுக்குள்ளேயே பங்கிட்டுக்கொண்டு, நல்வாழ்வினைச் சீர்கெடுமாறு செய்த காரணத்தினால், பதினோராம் லூயி அரசர் ஆங்கிலேயப் படையெடுப்பாளர்கள் பிரான்சை விட்டுக் கடைசி யாக வெளியேறிய பிறகு, அப் பிரபுக்கள் அனைவரையும் அடக்கி யொடுக்கி, நாட்டு ஆட்சியைத் தம்முடைய கைக்குக் கொண்டு வந்தார். ஆனால், இங்கிலாந்தில் அரசருக்குப் போட்டியாக

வேறு அரசரை அமர்த்த விரும்பிய அரசரியற்றிகள் அரசருடைய ஆதிக்கத்தை அழிக்கவோ, பலபகுதிகளாகப் பிரிக்கவோ விரும்ப வில்லை. ஆனால், அவர்கள் அரசின் அதிகாரத்தை அடக்கித் தங்கள் தன்னலத்திற்காகச் சுரண்டும் பொருட்டு அரசரைப்பயன் படுத்த விரும்பினர். அவர்கள் வழக்கற்றுப்போன வாக்குரிமை முறைகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளுவதற்கும் முயல வில்லை; அல்லது முதலாம் எட்வர்ட்டின் 'எத்தகுதி பற்றிய விசாரணைக்கு' எதிராக வாரென்பிரபு என்பவர் பெரும் சல சலப்புடன் வைத்துக் காத்து வந்த தனியார் நீதிமன்றங்களைப் புதுப்பித்துக் கொள்ளுவதற்கும் அவர்கள் முயலவில்லை. பிற் காலத்திய பிரபுக்கள், மாவட்ட நடுவர்களுக்கும், அரசின் நீதிபதி களுக்கும், அமைதிகாண் நீதிபதிகளுக்கும் கையூட்டு வழங்குவதன் மூலமும், அவர்களுள் ஒருவருக்கு எதிராக மற்றொருவரைத் தூண்டுவதன் மூலமும், அரசின் நீதிமன்றங்களில் சாதிக்க வேண்டிய செயல்களைச் செயல்படுத்திக் கொள்ளுவதற்கு நன்கு அறிந்திருந்தனர். உண்மையில் சட்டத்தை உடைத்தெறிந்த அப் பிரபுக்களே, மாவட்டங்களில் அரசரின் ஆணைபெற்ற சிறப்புக் குழுக்களின் உறுப்பினர்களாக அமர்ந்து பணியாற் றினர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அக்காலத்திய பதிவேடுகள், அக்காலத்தில் நாட்டுப்புறமக்கள் அரசருடைய அமைதியையும், தொழிலாளர்களின் சட்டங்களையும் நடை முறையில் செயல்படுத்தி வரும் அவர்கள், கொள்ளை யடிப்பவர் களாகவும், கடல் கொள்ளையில் ஈடுபட்டவர்களாவும், கொலை செய்ததற்காகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களாகவும் இருந்தார் கள் என்னும் வியப்பிற்குரிய செய்தியைத் தெரிவிக்கின்றன. அவர்கள் நாட்டுப்புற நீதிமன்றங்களின் உறுப்பினர்களாக இருந்தும், அவர்கள் செய்த குற்றங்களுக்காகச் சிறைக்கு அனுப் பப்பட்டார்கள் என்றும் அப்பதிவேடுகள் எடுத்துரைக்கின்றன.

நாட்டுப்புறங்களில் சிறப்பில்லாத பிறமக்கள் பலர் அவ் வகையில் செயலாற்றிக் கொண்டிருந்தபோது, அவர்களுடைய புரவலர்களும், பொருள் கொடுத்து உதவியவர்களுமாகிய பிரபுக்கள் மத்திய அரசின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற் காகத் தங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண் டிருந்தனர். மத்திய அரசின் ஆதிக்கத்தைத் தாங்கள் கட்டுப் படுத்துவதன் மூலம் பேராதிக்கம், பெருமதிப்பு, பெருஞ் செல்வம் ஆகியவற்றின் தலையூற்றைத் தாங்கள் கட்டுப்படுத்திப் பயன்பெறலாம் என்று அவர்கள் பேராவல் கொண்டிருந்தனர். அப்பிரபுக்கள் அரசரின் ஆலோசனை மன்றத்திலே ஒருவரோடு

ஒருவர் போரிட்டுக் கொண்டிருந்தனர். அன்றாட ஆட்சிமுறைக் குரிய செயல்முறைகள் அனைத்தையும் ஆராய வேண்டிய அரச ருடைய ஆலோசனை மன்றம், பிரபுக்களின் போர்க்களமாக மாறியது. அப்பிரபுக்கள் நாட்டில் உள்ள சக்திகளின் பிரதிநிதி களைக்கொண்ட ஒரு கூட்டமாகவும், அல்லது உயர்ந்த பிரபுக் களின் பிரதிநிதிகளைக்கொண்ட கழகமாகவும், அரசருடைய ஆலோசனை மன்றத்தைக் கருதலாயினர். மேலும் அவ்வா லோசனை மன்றத்தை, நிலையாக அமர்ந்து ஆட்சிக்குரிய அலுவல் களைக் கவனிக்கின்ற ஒருவகைப் பாராளுமன்றமாகவே அப்பிர புக்கள் கருதலாயினர். அங்கு ஒவ்வொரு பிரபுவும் தம் விருப் பப்படி அமர்வதற்குத் தனியுரிமை உடையவராக இருந்தார். இதற்குமாறாக அரசர் அவ்வாலோசனை மன்றத்தைத் தமக்கே உரிய தனியுரிமையாகக் கருதினர். அம்மன்றம் சிறப்புமிக்க பிரபுக்களினால் கட்டாயம் நிரப்பப்படவேண்டும் என்ற நியதி இல்லையென்றும், தாம் விரும்பியவர்களைக் கொண்டே நிரப்பப் படலாம் என்றும் அரசர் கருதினர். அறிவு இல்லாத அரசரின் ஆட்சியில், இத்தகைய ஆட்சிமுறை அரசரின் அன்புக்குரியவரின் ஆட்சி முறையாகவும், தெளிந்த அறிவுமிக்க அரசரின் ஆட்சியில் பயிற்சி மிக்கவர்களும் தொழில்முறை நிபுணர்களும் ஆளுகின்ற ஆட்சியாகவும் காணப்படும்.

அரசரின் ஆலோசனை மன்றம் எத்தகைய செயல்முறை களைக் கவனிக்க வேண்டும் என்பதைப்பற்றி அரசருக்கும் பிரபுக் களுக்கும் இடையே கருத்து வேற்றுமை உண்டாயிற்று. அதனால் அடிக்கடி இவ்விரு தரத்தாருக்கும் இடையே போரும் பூசலும் உண்டாயின. சிறப்பாக, இரண்டாம் ரிச்சர்ட்டின் ஆட்சிக்காலத் தில் (1402-1405) அரசருக்கும் பிரபுக்களுக்குமிடையே இத் தகைய போராட்டம் வலுப்பெற்று வந்ததைக் காண்கின்றோம். நான்காம் ஹென்றி வேல்ஸ் சிக்கலினாலும், எல்லைப்புறச் சிக்கல் களினாலும் பெரிதும் தொல்லை தரப்பட்ட வழக்குகளில் பெர்சி ஸோடும், மார்ட்டிமரோடும், ஸ்கோர்ப்போடும் போராடிய போராட்டங்களும் ஓரளவுக்கு இத்தகைய கருத்து வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்தனவே என்று கூறலாம். இத் துடன் அக்காலத்தில் ஆட்சியுரிமையைப்பற்றிய எதிர்ப்பு அடிக்கடி மறைந்து விடாமல் இருந்து வந்தமை இங்குக் குறிப் பிடத்தக்கதாகும். ஆனால், ஆலோசனை மன்றத்தின் அரசிய லமைப்புக் கொள்கைகள் எப்படியிருக்க வேண்டுமென்பதைப் பற்றி அரசருக்கும், பிரபுக்களுக்குமிடையே உண்டான போட்டி யில் ஒன்றை மற்றொன்று அடியோடு அழித்து விடவில்லை. இதற்குக் காரணம் யாதெனில் அக்காலத்திய சக்திகளையும்

உண்மையான தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு அவை ஒவ்வொன்றும் விளங்கியமையேயாகும். ஆறும் ஹென்றியின் (1422–1437) வயதுக்கு வராத பருவத்தின் நீண்ட ஆட்சிக் காலத்தில்தான் தவிர்க்க முடியாத வகையில் ஆலோசனை மன்றம் பெருமை மிக்க பிரபுக்களின் கைகளில் சிக்கியது. பிறகு ஹென்றி பருவம் அடைந்த பிறகு, தம்முடைய அதிகாரத்தினைத் திரும்பப் பெறுவதற்கு முயன்றபோது, இதே சூழ்நிலையில் இரண்டாம் ரிச்சர்ட்டு பெற்றிருந்த திறமையோ பண்போ ஹென்றியிடம் இல்லாமல் போயிற்று. ஆலோசனை மன்ற அரங்கிலும், படுக்கையறையிலும், என்றும் போலவே பெரும் பிரபுக்களுக்கிடையே தலைமைப் பதவி குறித்துப் பெரும் பூசலும் போரும் தொடர்ந்து இருந்து வந்தது. அப்பூசலின் இறுதிக் கட்டத்தில் தான் அவர்கள் ரோஜாப் பூ அணிந்து போர் தொடுத்த போரினில் (1455) ஈடுபட்டனர்.

புனிதத் தன்மை வாய்ந்த ஹென்றி ஆலோசனை மன்றத்தில் தமக்கு எதிரான சக்திகளை அடக்கியொடுக்க முடியாது ஆற்றலற்று விளங்கியமையின் விளைவாக, நாட்டுப்புறங்களிலே சிறப்புரிமை மிக்க பிரபுக்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சட்ட வரம்பற்ற கொடுமை மிக்க செயல்களில் ஈடுபடலாயினர். பாராளுமன்றம் இதற்கு ஒரு முடிவினைக் கண்டிருக்க வேண்டும். அதன் மூலம் பிரபுக்களுக்கு எதிராக அரசருடைய அதிகாரத்தை வலுப்படுத்தியிருக்க வேண்டும். ஆனல், அது இந்த நெருக்கடியான வேளையில் இச்சிறு முயற்சியில் கூட ஈடுபடவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஆறும் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் இடைக்கால மக்கள் சபை அரசியலமைப்புச் சிறப்புரிமைகளைப் பெறுவதின் உச்ச நிலையை அடைந்தது. ஆனல், அவ்வுரிமைகளை நாட்டு மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்த அது தவறியது எனலாம். பாராளுமன்றத்திற்கும் ஆலோசனை சபைக்கும் இடையே எத்தகைய பூசலும் இல்லை. ஏற்கெனவே, அவ்விரு மன்றங்களையும் பிரபுக்களின் தனிக்குழுக்களே அடக்கியாண்டு வந்தமை நாடறிந்த உண்மையாகும். அப்பிரபுக்களுக்கு இடையே இருந்த போட்டியெல்லாம் தாங்கள் மற்றொருவருக்கு எதிராகத் தலைமைப் பதவியைப் பெற வேண்டுமென்பதேயொழிய, பாராளுமன்றத்திற்கு ஆலோசனை மன்றம் அடிபணிந்து நடக்கச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய நோக்கம் இருந்ததில்லை.

1430 ஆவது ஆண்டில் இயற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டம் மாவட்ட முறை மன்றங்களில் வழக்காடிய தனியுரிமைப்

பொது மக்களிடமிருந்து, பொதுவாகக் கோட்டங்களுக்குரிய வாக்குரிமைகளைப் பறித்துக் கொண்டது. அத்துடன் 40 ஷில்லிங் பெறுமானமுடைய தனியுடைமை நிலக் கிழார்கள் வகுப்பினைச் சார்ந்தவர்கள், மாவட்டங்களின் மாவீரர்களைத் தேர்ந்தெடுக்க வாக்களிக்கும் உரிமையினைப்பெறுமாறு சில கூட்டுத் திட்டங்கள் புகுத்தப்பட்டன. எனவே, 1382-ஆம் ஆண்டு சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்ட காலம் வரையில் மேற்கண்ட சட்டத்தின் சொற்பொருள் நடைமுறையில் அப்படியே பின்பற்றப்பட்டு வந்ததைக் காண்கின்றோம். ஆனால் லங்காஸ்டிரிய அரச மரபினர் காலத்து ஆண்டுக்கு 40 ஷில்லிங் பெறுமானமுடைய தனியுடைமை நிலக்கிழார்கள், பிற்காலத்தில் பணத்தின் மதிப்புக் குறைந்த காரணத்தால் அவர்களுக்கு உண்டான மதிப்புக்குறைவைக் காட்டிலும் மிகுந்த தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டு வந்தனர். எனவே சில தலைமுறைகள் வரையில் 1340-ஆவது ஆண்டில் இயற்றப்பட்ட வாக்குரிமைப் பறிமுதல் சட்டம் பொதுவாக எளிய மக்களுக்குக் கீழாகச் சமுதாயத்தில் உள்ள மக்களை வாக்குரிமை அளிக்காதவாறு ஒடுக்கி வைத்ததைக் காணுகின்றோம். அச்சட்டம் வேண்டுமென்றே வாக்களிப் போரில் பெரும்பான்மையினரை ஒதுக்கிவைப்பதற்குத் திட்ட மிட்டு இயற்றப்பட்டது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு போட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந் ததன் விளைவாக, பாராளுமன்றத்தின் முதுபெரும் பிரபுக் களுடைய அதிகாரம் மிகுதிப்படுமாறு செய்யப்பட்டது. பெருங்குடி மக்களின் தலைமை மிகுதியாக இருந்த காரணத் தினால் மக்கள் சபையில் உள்ளவர்கள் நாட்டு மக்களோடு மேலும் தொடர்பு அற்றவர்களாகவே பெருகிக் கொண்டிருந் தனர். இவ்வாறு மிக விரைவுமிக்க ஒரு காலத்தில் பாராளு மன்றத்தின் ஆட்சிமுறையை ஓர் எல்லைக்கே கொண்டு சென்றனர். மக்கள் சபையினைத் தங்களுடைய நோக்கங் களுக்கேற்பப் பிரபுக்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடியவர் களாக இருந்தனர். அதனால்தான், அவர்கள் மக்கள்சபை வளர்ச்சி அடைவதைக் கண்டு பொறாமைப் படவில்லை. மீண்டும் இங்குப் பதினெட்டாம் நூற்றாண்டிலும் பாராளுமன்ற வளர்ச் சியின் குறிப்பிடத்தக்க சில இயல்புகளோடு பொருத்தமுடைய சில கூறுகளைக் காண்கிறோம். பதினெட்டாம் நூற்றாண்டில் மக்கள் சபையின் அதிகாரமும் மதிப்பும் பெருகிக் கொண் டிருந்தன. ஆனால், அதே சமயத்தில் பெரும் புகழ் பெற முடியாத அளவுக்கு வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்டு மக்கள்சபை, பிரபுக்களின் சபையாக மாறிக் கொண்டிருந்தமை இங்குக் கருதத் தக்கதாகும்.

1453-ஆம் ஆண்டில் பிரான்சிலிருந்து, அங்கு எஞ்சி வாழ்ந்த ஆங்கிலேயர்கள் விரட்டியடிக்கப்பட்டமை சிறப்பு மிக்க செய்தி யாகும். இதையடுத்து இரண்டு ஆண்டுகள் கழித்து செயின்ட் ஆல்பன்சு நகரத்தின் தெருக்களில் ரோஜாப் பூவினை அடையாள மாக அணிந்து போரிட்ட போர் தொடங்கியது. நூறுண்டுப் போருக்குச் சென்றிருந்த பெரும் படைகளும், காவல் படைகளும் கடல் கடந்த நாட்டிலிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து இங்கிலாந்தில் நிறைந்திருந்தன. அப்படைகளைச் சார்ந்த மாவீரர்களும், வில் வீரர்களும் போரிடுவதிலும், கொள்ளை யடிப்பதிலும் கட்டற்ற விடுதலைவிலக்கு உரிமையோடு திரிவ திலும் நன்கு பழக்கப்பட்டிருந்தனர். எனவே எத்தகைய தீய செயல்களைச் செய்வதற்கும் அவர்கள் தயாராக இருந்தனர். இவர்களைவிட வேலையில்லாது திண்டாடிய மக்களும், பட்டினி யால் வாடி மெல்ல மெல்ல உயிரை விட்டுக் கொண்டிருந்த மக்களும் மிகவும் கொடுமை நிறைந்தவர்களாக மாறிக் கொண் டிருந்தனர். இவ்விரு திறத்தினரும் பிரஞ்சுப் போர் முடிந்து விட்ட காரணத்தினல், மேலும் தங்களுடைய அரசியல் பேராவல் களைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவும் அல்லது அயலாரின் பண்ணைகளில் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற் காகவும் அவர்களுக்குக் கூலி கொடுத்துப் பிரபுக்கள் தங் களுடைய கூலிப் படையினராக வைத்திருந்தனர்.[1]

நூறுண்டுப் போர் முடிந்த நிலையில், சமுதாயத்திற்குப் பெருங்கேட்டினை உண்டாக்கியது என்று சொல்லுவதற்கில்லை. அப்போர் நடந்தகாலம் முழுவதும் இங்கிலாந்தில் கொடுமை யிலும் சட்டத்திற்குட்படாத தீச்செயல்களிலும் மக்களைப் பழகு மாறு செய்துவந்தது. மூன்றும் எட்வர்ட்டின் பாராளுமன்றக் கூட்டங்களின்போது பிறருடைய பண்ணைகளை வன்முறையில் வளைத்துக் கொள்வதைப் பற்றியும், சொத்துக்கு உரிமையுடைய மகளிரைத் தூக்கிக் கொண்டு போவதைப் பற்றியும், பிரபுக் களும் அவர்களுடைய அடிமை ஏவலாட்களும் நாட்டில் நிலவிய அமைதியினைக்கெடுத்துப் புதியதீய சக்திகளை வளர்த்துக் கொண் டிருந்ததைப் பற்றியும் பலமுறை முறையிடப்பட்டதையும் காணு கின்றோம். அயல் நாட்டுப் படையெடுப்புகளினல் உண்டான விளைவுகளோடு, பழமையானதும் நிலையான செல்வாக்கு மிக்கது மான வேல்ஸ் பகுதி, ஸ்காட்டிய எல்லைப்புறம் ஆகிய இடங்களில் காவல் கோட்டைகளிலிருந்த எல்லைப் பிரபுக்களின் கொடுஞ்

[1] நூறுண்டுப் போரில் கலந்து கொண்ட 'கம்பெனி'ப்படைவீரர்கள் போர் முடிந்த பிறகு இங்கிலாந்தின் பிரபுக்களுடைய அடிமை ஏவலாட் களாகப் பணிபுரிந்ததைப் பற்றிய விளக்கத்தினை ஆறும் இயலில் காண்க.




படம் 18.

பதினைந்தாம் நூற்றாண்டு காலத்திய இங்கிலாந்து

செயல்கள் எல்லை மீறிப் பெருகலாயின. இதற்கு எடுத்துக் காட்டாக விக்மோரைச் சேர்ந்த மார்ட்டிமோரையும் ஆலன் விக்கைச் சேர்ந்த பெர்சியையும் குறிப்பிடலாம். அவர்கள் இருவரும் ஓயாது படைக்கலம் ஏந்தி, நிலமானியப் படைமுறை வரிகளைத் தண்டுவதிலும், நிலமானியப் படைமுறையின் பழக்க வழக்கங்களையும் மனப்போக்கினையும் நிலைநாட்டுவதிலும் ஈடுபட்டு வந்தனர். அக்காலத்தில் பெரிதும் நாகரிகமடைந்திருந்த தென் இங்கிலாந்திலும், கிழக்கு இங்கிலாந்திலும் நிலமானியப் படைமுறைப் பழக்க வழக்கங்களும், வரி தண்டுதல் முதலியனவும் அடியோடு மறைந்து விட்டிருந்த போதிலும் அங்கெல்லாம் அவர்கள் தங்களுடைய கொடுஞ் செயல்கள்மூலம் மீண்டும் நிலமானியப் படைமுறைக்குப் புத்துயிர் அளிக்க முயன்றனர். அவர்களுக்கு இடைப்பட்ட வேல்ஸும், வட இங்கிலாந்தும் நான்காம் ஹென்றியின் காலத்தில் தீராத பெருந் தொல்லைகளைக் கொடுத்து வந்தன. பேரளவுக்கு ரோஜாப்பூவினை அடையாளமாக அணிந்து போரிட்ட போர் வேல்ஸ் எல்லைப்புறப் பிரபுக்களுக்கிடையே நடந்த போராகவே நாம் கருதலாம். வேல்ஸ் எல்லைப்புறப் பிரபுக்கள் ஆங்கிலேய அரசருக்கு மிக நெருங்கிய உறவினர்களாக இருந்ததோடு, சிறப்புமிக்க ஆங்கிலேயப் பெரும் பிரபுக்களாகவும் இருந்துவந்தனர் என்பது இங்கு நினைவு கூரத் தக்கதாகும்.

நாகரிகம் அடைந்த சமூகத்தில், அரசியல் குழப்பத்தினை மீண்டும் புத்துயிர்ப்புப் பெறுமாறு செய்தனர். படைத்துறைக் கொடுமைகளும் நீதித் துறை உருட்டல் மிரட்டல்களும் ஒன்றாகச் சேர்ந்து அவ்வரசியல் குழப்பத்தினை உண்டாக்கின. வீட்டினை உடைப்பதன் மூலம் வழக்குத் தொடருமாறு வேண்டுகின்ற காலமாக அது இருந்து வந்தது. ஸ்டீபன்சு ஆட்சிக்காலத்தில் நாகரிகமற்ற நிலப் பிரபுக்கள் வழக்கறிஞர்களாக இருந்திருக்க வேண்டிய தேவையில்லாமல் இருந்தது. ஆனால், ஆறும் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் பேராசை உடைய ஒவ்வொரு பிரபுவும், நாட்டுப்புறத்தில் தம்முடைய குடும்பத்தின் செல்வத்தையும், செல்வாக்கையும் பெருக்க வேண்டுமென்று விரும்பிய ஒவ்வொரு பெருங்குடிமகனும் நாட்டுச் சட்ட முறைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கியதோடு, உயர்ந்த மதில்களைக் கொண்ட மேனர் மாளிகைகளை வன்முறையில் முற்றுகையிட்டு தாக்கிக் கைப்பற்றுவதற்குரிய முறையினையும் அறிந்தவர்களாகவும் இருந்தார்கள். இத்தகைய மனிதர்கள் தம்முடைய பணத்தைக் கொண்டு சம்பளம் கொடுப்பதன் மூலம், வில் வீரர்களை மட்டுமல்லாமல், வழக்கறிஞர்களையும், நீதிபதிகளையும் தங்

களுக்காக அமர்த்திக் கொண்டிருந்தனர். பேஸ்டன் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தங்களுக்கிடையே கடிதப் போக்குவரத்துகள் வைத்துக் கொண்டதிலிருந்து இத்தகைய முறைகள் நடைமுறையில் பின்பற்றபட்டமை புலனாகின்றது. அத்துடன் ஸ்டீவன்சன் எழுதியுள்ள நாவல் ஒன்றில் வரும் சர்டேனியல் பிராக்ளி (Sir Daniel Brackley) என்னும் கதைப் பாத்திரத்தாலும் இத்தகைய செய்தியை நாம் அறிய முடிகிறது. சட்டத்திற்கு உட்படாது செயலாற்றி வந்தவர்கள் பெரிதும் அமைதிகாண் நீதிபதிகளாகவே இருந்துவந்தனர். அரசருடைய நீதிபதிகளில் சிலர் மிக இழிவான பதுக்கல் முறைகளில் ஈடுபட்டிருந்தனர். உயர்ந்த பதவிகளிலிருந்த பிரபுக்களும் இத்தகைய இழி செயல்களை அக்காலத்தில் செய்துவந்தனர். சில சமயங்களில் தனிப்பட்டவருக்கிடையே உண்டாகின்ற போர்கூட பெரிய அரசுரிமைப் போராட்டமாகப்பேரளவில் நடத்தப்பட்டன. 1469-ஆவது ஆண்டு சர் ஜான் பாஸ்டால்ப்பின் (Fastolf) உயிலின் மீது உண்டான வழக்கு கெயிஸ்டர் காசிலினை (Caister Castle) நார்போக்கு கோமகன் மூவாயிரம் படை வீரர்களைக் கொண்டு ஐந்து வாரங்கள் முற்றுகையிடுமாறு செய்தது. இறுதியாக அம்முற்றுகை பீரங்கிப் படைகளைக் கொண்டு அக்காவல் கோட்டையின் சுவர்களை உடைத்தெறிவதின் மூலம் முற்றுப் பெற்றது. இத்தகைய நிகழ்ச்சி இங்கிலாந்தின் தீவினிலேயே மிகச் சிறப்பு மிக்கதும், மக்கள் எல்லாம் அமைதியாகவும், வசதியாகவும் வாழ்ந்து வரும் பகுதியாகிய கிழக்கு ஆங்கிலியாவில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அயர்லாந்து நாட்டின் நீதிபதிகள் அச்சுறுத்தப்பட்டதைப் போல், பதினைந்தாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் நீதிபதிகள் முறையாக அச்சுறுத்தப்பட்டும், கொடுமைப் படுத்தப்பட்டும் வந்தனர். 'காப்பு வரி' வாங்குதல் பிரபுக்களின் கொடுமைகளுள் ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. அவ்வரியினைச் செலுத்தித் தம்மைச் சார்ந்து வாழ்கின்ற மக்களை, அப்பிரபுக்கள் அரசரின் நீதிமன்றத்தில் நீதிநெறி முறைக்கு மாறான செயல்களில் விளையக்கூடிய துன்பங்களிலிருந்து காத்து வந்தனர். ஏனென்றால் ஆங்கிலேய நீதிமன்றங்கள் தீர்ப்புச் சான்றாளர்கள் பன்னிருவரும், ஒரு வகையான ஒத்த முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று இதற்கு முன்பிருந்தே வற்புறுத்தி வந்த காரணத்தினால் ஒரு பெரிய மனிதருக்குரிய நண்பருக்கு எதிராகத் தீர்ப்பினைப் பெறுவது என்பது மிக அரிய செயலாக இருந்துவரலாயிற்று. அக்காலத்தில் தவறுதலான குற்றச்

சாட்டுகளினால் உண்டாகக்கூடிய முறைகேடான செயல்களைக் காட்டிலும், தவறான வழியில் பலரை மன்னித்ததினால் உண்டான முறைகேடுகளே மிகுதியாக இருந்தன என்று பேராசிரியர் மெயிட்லண்டு மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது. இதையடுத்து அரசரின் ஆலோசனை மன்றத்தின் முன்பு, தீர்வுச் சான்றாளர்கள் தங்களுடைய முடிவுக்குக் காரணம் கூறி விளக்க வேண்டுமென்ற முறையினை டியூடர் அரசர்கள் தொடங்கி வைத்தனர். அம்முறை குடிமக்களின் உரிமைக்கு உகந்ததாக இல்லையென்றாலும் ஒரு காலத்தில் மிகவும் இன்றியமையாத சீர்திருத்தமாக இது கருதப்பட்டது. ரோஜாப் பூ அணிந்து போரிட்ட போர் தொடங்கிய காலத்தில் வாழ்ந்த அமைதி மிக்க மக்களின் குறைகளும், துன்பங்களும் என்ன என்பதைப் பின்வரும் இலக்கிய நயமற்ற பாட்டு நமக்குத் தெரிவிக்கின்றது :

'ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடுங்கோல் ஆட்சி நடைபெற்றமையால், போர்க்கவசமும், எஃகு குல்லாயும் அணியாமலேயே அருகிலுள்ள அண்டை அயலார் ஒருவரோடு மற்றொருவர் போரிட்டுக் கொண்டனர். ஆற்றல் அற்றவர்கள் போரிடப் பின்வாங்குவர். ஆனால் ஆற்றல் மிக்கவர் ஆற்றலற்றவரோடு போரிடுவதையே பெரிதும் விரும்புவர்.'

'உம்முடைய மனிதர்களை எப்பொழுதும் ஒருவருக்குப் பின் ஒருவராகவே அவர்கள் கொன்று குவிப்பர். யாதாகிலும் சொல்லுகின்றவன் கட்டாயம் கொலை செய்யப்படுவான். உம்முடைய வட்டத்தில் அமைதிகாண் நீதிபதிகள் இல்லாமையால் அவர்களைத் தட்டிக் கேட்பவர் இல்லை. அதனால்தான் அஞ்சாது ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிட முன் வருகின்றனர்.'

'சட்டமும் வெல்ஷ் மக்களின் நீண்ட காற்சட்டையைப் போன்று இருக்கிறது. அக் காற்சட்டை ஒவ்வொரு மனிதனுடைய உடலமைப்பிற்கேற்ப உருமாறிக் காணப்படுகிறது. அதைப்போன்று சட்டமும் நடைமுறையில் தலைகீழாக மாற்றப்படுகிறது; சொற்களின் பொருள் மாற்றப்படுகிறது. ஆற்றல் மிக்கவர்களால் சட்டம் காலின் கீழ் போட்டு நசுக்கப்படுகிறது.'

அன்றாட வாழ்வில் கலைகளிலும் கைத்தொழில்களிலும் நம்மைக் காட்டிலும் சிறப்புற்று விளங்கிய அச்சமூகத்தில், இதுவரை நிலமானியப் படைமுறைக் காட்டுமிராண்டித்தனத்திலிருந்து தோன்றிச் சிறப்புற்றிருந்த அச்சமூகத்தில், உயர்ந்த நிலையிலிருந்த பிரபுக்களிடையே இத்தகைய காட்டுமிராண்டித்தனமான தீய செயல்கள் திடீரென எழுச்சிபெற்றதற்குரிய காரணமென்ன? ஆனால், 'ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்த்தல்' என்பது சமூக வரலாற்றின் சாரமாக இருந்து வருகிறது. சிறப்பாக,

அப் பண்பு இடைக்கால வரலாற்றின் சாரமாக விளங்குகிறது எனலாம். நாம் பதினைந்தாம் நூற்றாண்டை வீரப் பெருந் தன்மைக்குரிய ஊழியென்று கருதுகிறோம். ஏனென்றால், அக் காலத்திய மாவீரர்கள் கவசத் தகடுகளை அணிந்து, நாட்டிலே தங்கள் வீரப் பெருந்தன்மையை நிலைநாட்டி வந்தார்கள். அக் காலத்திய ஓவியக்கலைஞர் சர் கலஹாட் (Sir Galahad) என்பவர், ஓவியத்தைத் தூய்மையோடு பள்ளி மாணவனுக்குரிய முகச் சாயலுடன் மாவீரர்களின் உருவப்படங்களை வரைந்துள்ளதை நாம் பார்க்கவில்லையா? அந்நூற்றாண்டில் அன்றோ சர் தாமஸ் மாலொரி (Sir Thomes Malory) என்பவர் (1470) மார்ட்டி ஆர்த்தர் (Morte Arthur) என்னும் இலக்கியத்தைப் படைத்தார். ஆனால், தற்காலத்திய நோக்கங்களை அளவுகோலாகக் கொண்டு மாலொரியின் காலத்தில் வாழ்ந்த மக்களை நெருங்கி ஆராய் கின்றபோது, அவர்களிடத்து 'வீரப் பெருந்தகைமை' என்னும் பண்பு போதிய அளவுக்கு இருந்தாகத் தெரியவில்லை. அக் காலத்திய இங்கிலாந்தில் நகர மக்களிடத்தும், உட்குடி களிடத்தும் பெரு வெறுப்புடன் வீரப் பெருந்தகைமை நோக்கப் பட்ட காலம் தொடங்கியது. அம்முறை மேலும் வீரப்பெருந் தகைமை சிறப்புற்று இருக்கின்ற பிரான்சு, பிளாண்டர்ஸ் சமூ கங்களிடமிருந்து பெரிதும் வெறுப்பினை உண்டாக்கியது. இத் தகைய வெறுப்புணர்ச்சி உண்டான செய்தியை சாஸ்டெலெய்ன் (Chastellain) தம்முடைய குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். பிற நாடுகளில் பொது மக்க ளிடமிருந்து பெருங்குடி மக்களைப் பிரித்து வைத்தமையால் உண்டான பிளவினைப் போக்குவதற்கு இங்கிலாந்தில் குடியான வர் விடுதலை, நகர மக்களின் செல்வம், முன்னெச்சரிக்கையோடு ஒரு நிலையினர் மற்றொரு நிலையினரிடத்துப் பெண் கொடுத்துப் பெண்கொண்டு கலந்து கொள்ளுதல், கலப்புத் திருமணம் செய்து கொள்ளுதல் ஆகிய முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. ஆனால், பிற நாடுகளைப் போலவே இங்கிலாந்திலும் வீரப் பெருந்தகைமை என்பது முரட்டுத்தனமான மூர்க்கச் செயல்களுக்கு உகந்ததாகவும், ஆதாய நோக்கத்துடன் திட்ட மிட்டுச் செயலாற்றும் உலகாயத வாதத்திற்கு ஏற்றதாகவும் அமைந்திருந்தது. அத்துடன் மகளிரைப் போற்றி ஆதரிக்காது தாழ்த்தித் துன்புறுத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மனைவியை அடிப்பது என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய உரிமையாக அக்காலத்தில் கருதப்பட்டு வந்தது. இவ் வாறு சமூகத்தின் கீழ்நிலையில் உள்ள மக்கள் மட்டும் அல்லாமல்

மேல் நிலையில் உள்ளவர்களும் தங்கள் மனைவியரை அடித்துத் துன்புறுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அந்நிலையில் மகளிரின் தற்காப்புக் கருவியாக அவர்களுடைய நாவே பயன்பட்டு வந்தது. அதன் உதவியினால் சில சமயங்களில் அவர்கள் குடும்பத்தின் தலைமையிடத்தையும் கைப்பற்றியிருந்ததாகத் தெரிகிறது. ஆனால், பல சமயங்களில் மகளிர் நாவடக்கம் இல்லாத காரணத்தால் உடல் வருந்தும்படியாக ஆடவரிடத்து அடிபட்டுத் துன்புற்றனர். லா டூர் லாண்டரி (La Tour-Landry) என்னும் மாவீரர் அக்காலத்திய நாண்மரபு வழக்கினைச் சுவைபட ஒரு கையேட்டில் எழுதிப் போற்றியுள்ளார். அந்தக் கையேட்டின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று பதினைந்தாம் நூற்றாண்டு காலத்திய இங்கிலாந்தில் சிறப்புற்று விளங்கியது. அந்தக் கையேட்டில், அதன் ஆசிரியர் மனைவியைத் துன்புறுத்துவது பற்றிப் பின்வருமாறு வருணித்துள்ளார் :

> ‘அவன் தன்னுடைய கை முட்டினால் மனைவியைக் குத்தி நிலத்தில் வீழ்த்தினான். பிறகு அவன் தன்னுடைய கால்களினால் அவளுடைய முகத்தில் ஓங்கி உதைத்தான். அவளுடைய மூக்கினை உடைத்தான். அவளுடைய மூக்கு உடைந்தமையால், அது கோணலாக அழகற்றுப் போயிற்று. அதன் பிறகு அவள் தன் முன்னால் அவளுடைய முகத்தைக் காட்டக்கூடாது என்று அவளைப் புறக்கணித்துத் துன்புறுத்தி வந்தான். வெறுப்பைத்தரும் அழகற்ற மூக்கோடு அவள் தன் முன்னால் தோன்றுவதற்கு வெட்கப்படவேண்டுமென்று அவளை அவன் பழித்துரைத்தான்.........எனவே மனைவி துன்பப்பட்டாக வேண்டுமென்ற நிலையில் கணவன் சொல் உரிமையும், குடும்பத் தலைமைப் பதவி யுரிமையும் உடையவனாக வாழ வேண்டுமென்ற நிலை இருந்து வந்தது.’

இதைப் போன்றே பெற்றோர்கள் தேர்ந்தெடுத்த பண்பாளன் ஒருவனைத் திருமணம் செய்துகொள்ள மறுக்கும் தம்முடைய மகளை அப்பெற்றோர் ஓர் அறையிலே பூட்டி வைத்துத் துன்புறுத்துவதும், அடிப்பதும், அவ்வறையிலேயே சிறைவைத்துப் பட்டினியால் வாடிச் சாகுமாறு செய்வதும் அக்காலத்திய வழக்கமாக இருந்தது. இவ்வாறு அறையிலிட்டுத் துன்புறுத்துவது பொது மக்களுக்கு அதிர்ச்சிதரக்கூடியதாக அக்காலத்தில் இல்லை.[1] அக்காலத்தில் திருமணம் என்பது

[1] பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலும் தன் மகள் விரும்பாத ஓர் ஆடவனை மணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்துவதற்காக, அப்பெண்ணை அறையில் தள்ளிப் பூட்டிவைத்துத் துன்புறுத்துவது ஊர்ப் பெரிய தனக்காரர்களின் குடும்பங்களில் கூட வழக்கத்

தனிப்பட்ட இருவரின் அன்பின் விளைவாக நிகழும் நிகழ்ச்சியாக இல்லை. ஆனால் திருமணம் என்பது குடும்பத்தின் பேராசையை நிறைவேற்றிக் கொள்ளும் கருவியாகவே கருதப்பட்டது. சிறப்பாக வீரப் பெருந்தகைமை வாய்ந்த உயர் குடிமக்களின் பேராசையை நிறைவேற்றுவதாக இருந்தது. ஸ்குரோப்பைச் (Scrope) சார்ந்த பிரபுக்கள் குடும்பத்தின் உறுப்பினர் ஒருவர், 'எனக்குப் பணமுடை உண்டாகின்ற போது எல்லாம், என்னுடைய பெண்களுள் இளைய பெண்ணை விற்பதிலே நான் மகிழ்ச்சியடைந்தேன். அவளுக்கு என்னால் எவ்வளவு செய்திருக்க முடியுமோ, அதைவிடப் பன்மடங்கு விலைக்கு அவளை நான் விற்றுப் பொருளைப் பெற்றேன்' என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும். திருமண உறுதி என்பது திருமணத்திற்கு ஒருவரோ, இருவருமோ தொட்டிலில் தூங்கும் குழந்தைகளாக இருந்த காலத்திலேயே செய்யப்பட்டு வந்தது. அவர்கள் குழந்தைப் பருவத்தைக் கடப்பதற்குமுன்பே, அவர்களுக்குத் திருமணம் செய்யப்பட்டு வந்ததாகவும் தெரிகிறது. அத்திருமண விழாவின்போது அந்தச் சிறு பிள்ளையைத் திருமணச் சடங்கில் சொல்லவேண்டிய சொற்களைச் சொல்லுமாறு தடுத்து நிறுத்தி வற்புறுத்துவது மிகவும் கடினமாக இருந்தது. ஏனென்றால் அவன் அச்சடங்கிற்கு இடையிடையே தன்னுடைய விளையாட்டுப் பொம்மைகளைத் தேடியெடுத்துக் கொண்டு வருவதற்கு ஓடி விடுவது வழக்கமாக இருந்துவந்தது.

அக்காலத்தில் காதலைப் பற்றிய இலக்கியங்கள் பேரளவில் தோன்றி யிருந்தன: அவையனைத்தும் பெரும்பாலும் பிரான்சு நாட்டுக் கதைகளாகவே இருந்தமை குறிப்பிடத் தக்கது. அவற்றுள் சாசரின் 'டிராய்லசும் கிரிசிடாவும்' (Troilus and Cresseyde) என்னும் காதல் கதை காதல் இலக்கியங்களுள் மிக மெல்லிய அழகுமிக்க மலராகும். அவ் இலக்கியம் அதுவரை நாட்டிலே காதலைப்பற்றி இருந்து வந்த கருத்தினை மாற்றியமைக்கும் வகையில் செய்யப்பட்ட திருமணத்தைப்பற்றிச் சிறப்பாக விளக்குவதாகும். அக்காலத்துக் காதல் பற்றிய நீதிமன்றத்தின் பழையவிதி ஒன்று 'திருமணம் செய்துகொண்ட ஒருவனும் ஒருத்தியும் உண்மையில் காதல் உடையவர்களாக இருக்க முடியாது' என்று அறிவுறுத்தியிருந்தபோதிலும், சாசரின் இலக்

தில் இருந்து வந்ததைக் காணுகின்றோம். இதற்குச் சிறந்த சான்றாகத் தன் மகளிடத்துப் பேரன்பு கொண்டிருந்த வெஸ்ட்டர்ன் என்னும் ஊர்ப் பெரியதனக்காரரின் மகளுடைய வழக்கின் நடைமுறையைக் கூறலாம். பதினைந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பெரிய தனக்காரர் தம்முடைய மகளைத் தம் கருத்திற்கு இசையுமாறு அடித்தும் துன்புறுத்தி இருக்கலாம்.

கியம் உலக இயற்கையில், உண்மையில் பல விதி விலக்குகள் உண்டு என்னும் உண்மையை நிலைநாட்டுவதற்காகக் காணப் பட்டது. உண்மையில் சாசர் இலக்கியம் எனும் கறைபடிந்த கண்ணுடியின் மூலம் மனித இயற்கையினை நோக்கவில்லை. அதனால்தான் பிராங்கிளின் புனைகதை என்னும் பாடலில் திருமணமானவர்களுக்கு இடையேயுள்ள நேர்மையையும் அன்பையும் படம்பிடித்துக் காட்டி, அதே சமயத்தில் காசுக்காக உடலை விற்கும் 'காதலரிடையே' உண்டாகும் உடல்வேதனையைச் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார். அக்காலத்தில் குழந்தைத் திருமணமும், கட்டாயத் திருமணமும் வெறுக்கத்தக்க பழக்க வழக்கங்களாக இருந்துவந்தன. எனினும் கருணையற்ற உள்ளம் படைத்த முதியோர்களின் திட்டங்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்ற இளைஞர்களும் அக்காலத்தில் இருந்தனர். அத்தகைய இளைஞர்கள் மிகவும் கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களைப் பின்பற்றிய பாஸ்டன்சு சமூகத்தினரிடமும் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு இடைக்கால வாழ்க்கையின் மூர்க்கச் செயலுக்கும், உலகாயதத்திற்கும் மறுபுறத்தே ஆங்கிலேய மக்களின் நல்லியல்பும் ஒருமைப்பாட்டின் பெரும் பகுதியும் இருந்து வந்தன. ஆங்கிலேய மக்களின் நல்லியல்பும் ஒருமைப்பாடும் நேற்று அல்லது அதற்கு முந்திய நாள் தோன்றியவை அல்ல. அவை பன்னெடுங் காலத்திற்கு முன்பே தோன்றி, வளர்ந்து, சிறந்தனவாகும்.

அக்காலத்தில் நாகரிகமும் அறிவும், அறியாமை ஆட்சி செலுத்திய இடங்களையெல்லாம் மெல்ல மெல்ல வன்முறையில் கைப்பற்றிக் கொண்டிருந்தன. இப்போதைய கல்வியின் மலர்ச்சிக்கு முன்பே பதினைந்தாம் நூற்றுண்டுக் காலத்திலேயே ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக்கழகம் அறிவாற்றலின் வீரியத்தில் நலிவுற்றிருந்த போதிலும், இடைக் காலத்தின் இறுதிப் பகுதி பல பள்ளிகள் நிறுவப்பட்ட சிறப்புமிக்க காலமாக விளங்குகிறது. அக்காலத்தில்தான் வைக்காமைச் சேர்ந்த வில்லியம் வின்செஸ்டரிலும், ஆறும் ஹென்றி ஈட்டனிலும் பள்ளிகள் அமைத்துக் கல்வியைப் போற்றி வளர்த்தனர். இவற்றுடன் வேறு பல பள்ளிகள் நாட்டிலே அக்காலத்தில் தொடங்கப்பட்டமை சிறப்புமிக்க செய்தியாகும். தொழில் கழகங்களும், தனிப்பட்ட மக்களும் இடையருது பாமர மக்களின் ஆன்மாக்கள்கடைத்தேறுவதற்குப் பொது வழிபாடுகள் நடத்துவதற்காகக் குருமார்களுக்கு எண்ணற்ற மானியங்களை அறக் கட்டளைகளாக வழங்கி வந்தனர். அத்தகைய மானியங்களோடு பெரிதும் பள்ளிகள் இணைக்கப்பட்டிருந்தன. மற்றப் பள்ளிகள் எல்லாம் தனிப்பட்ட வகையிலே

நிறுவப்பட்டன. சிற்சில சமயங்களில் அப்பள்ளிகளுக்குச் சமயச் சார்பற்ற அறிவாளிகளே தலைமையாசிரியர்களாக இருந்து பணியாற்றி வந்தனர். இவையனைத்தும் கல்லூரித் தலைமைக் கோயில், திருச்சபை வட்டாரப் பள்ளிகள் எனப் பட்டமுற்காலத்திய கல்வி நிலையங்கள் அனைத்தைக் காட்டிலும் சிறந்தனவாகவும், உயர்ந்தனவாகவும் இருந்தன.

யார்க்கிய, லங்காஸ்டிரிய அரச மரபுகளைச் சேர்ந்தவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் மேற்கண்டகாரணங்களினால், படிப்பதும் எழுதுவதும் குருமார்களுக்கே உரிய தனியுடைமை ஆதிக்கமாக இருந்து வந்த நிலைமாறிப் போயிற்று. வாணிகத்தில் மட்டு மல்லாமல், மேனர் பண்ணையின் மேலாட்களும் நல்ல முறையில் கணக்குகள் எழுதி வைத்துவந்தனர். பல சமங்களில் தங்க ளுடைய வாணிகப் பதிவேடுகளில் பிழையற்ற இலத்தீன் மொழி யில் அவர்கள் ஓரளவிற்கு எழுதி வந்தமை குறிப்பிடத்தக்கது. பாஸ்டன்சு குடும்பங்களைப் போன்று நிலக்கிழார்களின் குடும்பங் களைச் சார்ந்த உறுப்பினர்கள், தங்கள் கைகளினால் எழுதப்பட்ட கடிதங்களைக் கொண்டும் தங்களுக்கிடையில் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொண்டனர். அவர்கள் எழுதிய கடிதங்கள் பொதுவாக நீதித் துறைத் தொடர்புடையனவாகவோ வாணிகம் போன்ற பிற தொழில் தொடர்புடையனவாகவோ, அரசியல் செய்திகளைத் தெரிவிப்பனவாகவோ இருந்துவந்தன.

ஆயிரத்து நானூறாம் ஆண்டு சாசர் இறந்தார். அவருக்குப் பிறகு வந்த பல தலைமுறையினரிடத்து சாசர் பேராதிக்கம் செலுத்தி வந்தார். அவருடைய குழுவைச் சார்ந்த முக்கிய கவிஞர்கள் பலரும், அந் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந் தில் நிறுவப்பட்ட காக்ஸ்டனின் அச்சகமும் சாசரை நாட்டு மக்கள் நன்கு அறிந்து போற்றுமாறு செய்தனர். அவருடைய பாடல்களின் கையெழுத்துப் படிகள் போதிய அளவுக்குக் கிடைக்காது வருந்திய மக்கள் அனைவரும், அச்சுப் புத்தகங்களைப் பெற்று அதன் மூலம் சாசரின் இலக்கிய நயத்தையும் கவித் திறனையும் அறிந்து போற்றலாயினர்.

அக்காலத்திய சமூகத்தினரின் உள்ள வேட்கைகளை நிறை வேற்றும் வகையில் சாசரின் இலக்கியப் படைப்புகளும்,அவரைப் பின்பற்றி எழுதிய எண்ணற்ற இலக்கிய ஆசிரியர்களின் படைப்புகளும் இருந்து வந்தன. அக்காலத்திய மக்களின் உள்ளங்கள் பழத் தோட்டங்களிலும் செயற்கைப் பூங்காக் களிலும் காணப்படும் இயற்கைக் காட்சிகளையும், கேட்கப்படும்

இயற்கை ஒலிகளையும், நேர்த்தியான அழகையும், பொலிவையும் கண்டு இன்புறலாயின. அத்தகைய பழத் தோட்டங்களிலும், செயற்கைப் பூங்காக்களிலும் அவர்கள் நெடும் பொழுதினைப் பொழுதுபோக்காகக் கழித்து வந்தனர். இயற்கை எழில்மிக்க காடுகளின் அழகைக் கண்டு சுவைப்பதிலும் அவர்கள் ஈடுபாடு கொண்டிருந்தனர். இக்காலத்தில் நம்முடைய தோட்டங்களும் பூங்காக்களும் கொடுமை நிறைந்ததாகத் தோன்றுமாறு அமைத்திருக்கிறோம். ஏற்கெனவே, நமக்குப் புறத்தேயுள்ள பகுதிகள் அனைத்தையும் அமைதியுடையனவாக மாற்றிவிட்டிருக்கிறோம். ஆனால் பதினைந்தாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரையில் ஆங்கிலேய மக்கள் செயற்கைப் பூங்காக்களைப் பெரிதும் விரும்பினர். யாண்டும் அவர்கள் முரட்டுத் தனத்தையும் கொடுமை நிறைந்த இயற்கைக் காட்சிகளையும் உடையவர்களாக இருந்தனர். அக்காட்சிகளைக் காண்பதில் பூங்காக்களைக் கண்டு களிப்பதைக் காட்டிலும் பெரு மகிழ்ச்சி அடைந்தனர். பறவைகளின் பாட்டிலும் அருவிகளின் இனிய ஒலியிலும், பச்சைப் பசேலெனக்காட்சி தரும் காடுகளிலும் அவர்கள் தங்கள் உள்ளங்களைப் பறிகொடுத்திருந்தனர். காதலில் மூழ்கி, காதல் நோயினால் துன்புறும் காதலர் இயற்கை அழகில் ஈடுபடுவதன் மூலம் ஓய்வுபெற விழைந்தனர்:

> ‘நான் ஆற்றங்கரையோரத்தில் அமர்ந்திருந்தேன். ஆற்றின் நீர் சுழியிட்டு நுரையுடன் ஓடிக்கொண்டிருந்தது. அவ்வோட்டத்தினால் இனியதொரு ஒலி எழுந்தது. அவ்வொலி, பறவைகளின் இன்னொலியோடு இசைந்திருந்தது. நான் அவ்வொலியைக் ‘காற்றினிலே வரும் இனிய கீதமாக’க் கருதினேன். அக்கீதத்தை என்று வேண்டுமானாலும் காலை வேளையில் அங்குக் கேட்கலாம்.’

எள்ளி நகையாடப்பட்டும் காதலினால் உண்டான புண்ணுக்குச் சிறந்த மருந்து வண்ணப் பூவினைக் கண்டுகளித்தல் என்ற வழக்கம் இருந்ததைக் காண்கிறோம்.

> ‘வண்ணப் பூவினைக் கண்டு மகிழ்.’

மேனர் மாளிகைகளின் வீட்டுக் கட்டடக் கலையின் அழகு அக்காலத்து முழுமைத் தன்மையை அடைந்து கொண்டிருந்தது. கற்களுக்குப் பதிலாகப் புதிதாகச் செங்கற்களும். பயன்படுத்தப்பட்டன. உடைகள், மரச் சாமான்கள், பண்ணைக்குப் பயன்படும் பொதுவான பொருள்கள், களஞ்சியம், வீடு முதலியனவற்றைப் பண்பும் நேர்த்தியும் வாய்ந்தவனவாகக் கட்டினர். அவை வாழ்க்கையில் இருந்து மறைந்து போயிருந்த

மகிழ்ச்சியினைத் தந்து வாழ்க்கையை வளப்படுத்தியது. அப் பொருள்கள் அனைத்தும் அவற்றைப் படைத்த வினைஞர்களுக்கும் அத் தொழில் வினைஞர்கள் படைத்துத் தந்த பொருள்களைப் பயன்படுத்தியவருக்கும் அளவற்ற இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தந்தன. இடைக்காலத்தின் இறுதிப் பகுதியில் இங்கிலாந்தும் வியப்பிற்குரிய சிறந்ததொரு இடத்தைக் கலையுலகில் பெற்றிருந்தது. நாம் இழந்தவற்றின் முழுமையும், நாம் இன்று பெற்றிருப்பவற்றுள் பலவற்றையும் பெறாது இருந்தும் சாசரும், பாஸ்டன்களும் எழுதிப் போற்றி நமக்குக் காட்டியுள்ள அன்றைய இங்கிலாந்து ஆங்கிலேயப் பண்பு மிக்குடையதாகக் காலமெல்லாம் நம்மைப் போன்ற இயல்புடையதாக இருந்து வந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

இறுதியாகப் ரோஜாப் பூ அணிந்து போரிட்ட போர் முழு வடிவு பெற்றுத் தொடங்கப்பட்ட காலத்தில் (1455), அப்போர் லங்காஸ்டிரிய மரபினருக்கும், யார்க்கிய மரபினருக்கும் இடையே உண்டான பூசலின் விளைவாகவே காணப்பட்டது. அப் போரில் யாரும் எத்தகைய இலட்சியம் பற்றிய கேள்வியையோ, வகுப்பினரைப் பற்றிய ஆர்வத்தையோ நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. அது அரச மரபினோடு மிக நெருங்கிய குடும்பங்கள் இரண்டிற்கிடையே உண்டான உட்பகையினால் தோன்றிய போராகவே காணப்பட்டது. அவ்விரு குடும்பத்தினரும் ஆதிக்கம், செல்வம் ஆகியவற்றில் தமக்கே பெருஞ் சிறப்பு வேண்டுமென்று போட்டியிட்டுப் போரிடலாயினர். அவர்களுடைய இறுதி நோக்கமெல்லாம் நாட்டின் அரியாசனத்தைக் கைப்பற்றுவதாக இருந்தது எனலாம். பெரிய பிரபுக்களின் குழுக்கள் இவ்விரு கட்சியினரையும் சார்ந்து நின்று போரிடலாயின. ஒவ்வொரு பிரபுவும் தம்மைச் சார்ந்து வாழ்ந்து வந்த மாவீரர்களையும், பெருங்குடி மக்களையும், சிறு படைத் தலைவர்களையும் வழக்கறிஞர்களையும், குருமார்களையும் தமக்கு ஆதரவாக உடையவர்களாக இருந்தனர். மேற்கண்ட பலதிறப்பட்ட மக்கள் பெரும்பாலோருள் சிலர் ஒவ்வொரு பிரபுவையும் அடுத்து வாழ்பவராகவும், வேறு சிலர் நெடுந்தொலைவில் உள்ள மேனர் பண்ணைகளில் வாழ்ந்து வருபவராகவும் இருந்து வந்தனர். ஆனால் தங்களுடைய 'நிலப் பிரபுவின்' எழுச்சியையும் வீழ்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டே, தங்களுடைய நற்பேறு அமைந்திருக்கிறது என்பதை அவர்கள் அனைவரும் நன்கு உணர்ந்திருந்தனர். மற்றப் போர்களைக் காட்டிலும், இந்த உள்நாட்டுப் போரில் பிரபுக்களுக்குஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு மாறுவது அடிக்கடி நடைபெற்று வந்தது. இவ்வாறு

நடந்ததற்குக் காரணம் கட்சிக்காரரைக் கைவிடுவதைப் பற்றி எத்தகைய நெறிமுறையும் இல்லாமல் இருந்தமையாகும். நாட்டு மக்களுள் பெரும்பான்மையோர் அப்போரினை வெறுப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர். பட்டணங்களும், கிராமங்களும், போரின் கொடுமையிலிருந்து இயன்றவரை பிழைத்து வாழ் வதற்காகப் பிரபுக்களோடு பேரம் பேசிக் கொண்டிருந்தனர். ஒரு முறை லண்டன் மாநகரம், இங்கிலாந்தை நடுங்க வைத்த அவ் அரசுரிமைப் போரில் இரு திறத்தாரையும் ஆதரிக்காது நடுநிலைமையோடு இருந்து வந்தது குறிப்பிடத்தக்கசெய்தியாகும். அப்போரில் ஈடுபட்ட படைகள் இதற்குக் கைமாருக பிரான்சில் செய்த கொடுஞ்செயல்களைக் காட்டிலும் குறைந்த அளவில் லண்டன் மாநகரத்திலும், பிற பட்டணங்களிலும், நகரங் களிலும் வாழ்ந்த மக்களைத் துன்புறுத்தின. நடுநிலையில் இருக் கின்ற மக்கள் படைவீரர்களின் கொடுஞ் செயல்களால் கொதித் தெழுவார்களானல், பிளைமவுத் முதல் செவியத் மலையடிவாரம் வரையில் எங்கும் பரவி, ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்குவதன் மூலம் நாட்டை அலக்கழித்துக் கொண்டிருந்த சில ஆயிரமே எண்ணிக்கையுடைய வீரர்களை எளிதில் அழித் தொழித்து விடுவர் என்பதை அவ் உள்நாட்டுப் போரில்ஈடுபட்ட இருதிறப்படைகளின் தலைவர்களும் நன்கு அறிந்திருந்தனர். அப்போரில் ஈடுபட்ட படைகள் லங்காஸ்டிரிய, யார்க்கிய குடும்பத்தினரின் குறுகிய கால நற்பேற்றினை ஆக்கியும் அழித் தும் வந்தன. இவ்வாறு கொடிய போர் நடந்து கொண்டிருந்த போதிலும், அவை பெரிதும் இடையிடையே நின்றும் மீண்டும் நிகழ்ந்த போர்களாக இருந்துவந்தன. இத்தகைய கொடிய போர்க்காலச் சூழ்நிலைக்கு இடையே வாழ்ந்த பெருவாரியான நடுநிலைக் கோட்பாட்டைத் தழுவிய மக்கள் சிறிதளவே துன் புற்றனர். வாணிகம் என்றும் போலவே ஆறுகளின் வழியாக வும் பெருவழிகளின் வழியாகவும் நடந்து கொண்டிருந்தது. இதற்கு முன்பு எந்த அளவுக்கு வழிப்பறி செய்யும் கள்வர்களா லும், கடற்கொள்ளைக்காரர்களாலும் வாணிகர்கள் துன்புற்ற னரோ, அதைவிட மிகுதியாக ஒன்றும் இப்போர்காலத்தின் போது துன்புறவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.[1]

[1] இடைக்காலத்தில் சாலைகள் குதிரைகள் செல்லுவதற்குரிய பாதையைக் காட்டிலும் சிறிது அகலமாக இருந்தன. ஆனல் இக் காலத்தைக் காட்டிலும் அக்காலத்தில் ஆறுகள் ஆழமாக இருந்ததுடன் கப்பல் போக்குவரத்துக்குப் பெரும் வசதியுடையனவாக இருந்தன. உள்நாட்டுப் பட்டணங்களான யார்க்கு, லிங்கன் டங்காஸ்டர் போன்ற பிறவும் தங்களுடைய வாணிகத்திற்கு நீரினையே நம்பி இருந்தன. பதினான்காம் நூற்றாண்டுக் கால அளவிலேயே லண்டன் மாநகரம் நிலக்கரியினை எரிபொருளாகப் பயன்படுத்தியது. டைனிசைட்டி லிருந்து நிலக்கரி கடல் வழியாக லண்டனுக்கு வருவது மிக எளிதாக

ஆனல், போரில் கலந்துகொண்டு போரிட்ட இரு திறத்துப் படையினரும் பேரழிவும், பெருந் துன்பமும் அடைந்தனர். போரிட்ட பிரபுக்கள் ஒருவரை மற்றொருவர் மிகவும் காட்டுமிராண்டித்தனமாக நடத்தினர். அப்போரின் இடையே திடீரென நற்பேற்றின் சக்கரம் பலமுறை மாறி மாறித் திரும்பிக் கொண்டிருந்தது. அவ்வாறு ஒருவர் மற்றொருவரைத் திடீரென்று வெற்றி பெறுகின்றபோது, வெற்றிபெற்றவர்கள் பெரும்பண்ணைகளைப் புதிதாகக் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட பண்ணை வட்டாரங்களுக்குப் புதிய பிரபுக்கள் நியமிக்கப்பட்டனர். போர்க்களத்திலே கொலைசெய்யப்பட்ட தலைவர்களின் எண்ணிக்கை வீதத்திற்கு மிகுதியாகப் புதிய பிரபுக்கள் தோன்றலாயினர். இத்தகைய பறிமுதல்களால் அரசு வளம் பெற்றது. பிரபுக்கள் வலியவர்கள் ஆக்கப்பட்டார்கள். அப்போரினல் என்றுமே பேரளவுக்கு இல்லாத பிரபுக்களின் எண்ணிக்கை கடும் அளவிலே குறைக்கப்பட்டது. இவ்வாறு 'பேராற்றல் வாய்ந்த குடிமக்களை' அடக்கியொடுக்குவதற்கு வருங்கால டியூடர் அரசர்களின் திட்டத்திற்கு வழி வகுத்துத் தரப்பட்டது. பிரபுக்கள் தங்களுடைய வீடுகளிலேயே குருதிப் பெருக்கெடுத்து ஓடுமாறு செய்து கொண்ட அறுவை மருத்துவமாக ரோஜாப் பூ அணிந்து போரிட்ட போர் காணப்படுகிறது. அப்போர் நாட்டுக்கு ஒரு நற்பேருக அமைந்தது எனலாம்.

டௌட்டன் (Towton), பார்னெட்டு (Barnet), டியூக்ஸ்பரி (Tewkesbury) ஆகிய போர்க்களங்களில் போரிட்ட இரு தரப் படைவீரர்களுள் ஒரு பகுதியினர் போர் செய்வதையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட கூலிப்படையினராக இருந்தனர்; மற்றொரு பகுதியினர் விரைவாக அழைக்கப்பட்ட நண்பர்களாகவும், குத்தகைக்காரர்களாகவும் இருந்தனர். ஆனல், தனிப்பட்ட வகையில் கூலி வழங்கும் தலைவர்களிடத்தில் அவர்கள் வேலை செய்து வந்தவர்களாவர். அந்தத் தலைவரின் விருப்பத்திற்

---

இருந்தமையால் லண்டன் நிலக்கரியை எரிபொருளாகப் பயன்படுத்தத் தொடங்கியதாகத் தெரிகிறது. வாணிகத்திற்குப் பாலங்களும், கலிங்கல்களும் தடையாக யிருந்தமையால் இங்கிலாந்தின் வாணிகர்கள் ஆறுகளையே பெரிதும் நம்பியிருந்தனர். ஆற்றோரங்களில் படகுகளையும், கப்பல்களையும் வரிசை வரிசையாக அவர்கள் நிறுத்தி வைத்திருந்தனர். இக்காரணத்தினல்தான் பணவசதி இருந்தபொழுதும் ஆறுகளில் பாலங்களைக் கட்டாது, பரிசல்களையும், படகுகளையுமே இங்கிலாந்து மக்கள் பயன்படுத்தி வந்தனர். இடைக்காலத்தில் நிலத்தின் வழியாகப் பயணம் செய்வது என்பது நடந்து செல்லுதல், அல்லது குதிரையின்மீது ஏறி ஊர்ந்து செல்லுதல் ஆகியவற்றையே குறிக்கும். அதைப்போன்றே ஓர் ஓடையை அல்லது ஆற்றினைக் கடப்பதென்பது நீரில் இறங்கி நடந்து செல்லுதல் அல்லது ஓடக்காரன் உதவியைப்பெற்று ஓடத்தில் செல்லுதல் ஆகியவற்றையே குறிக்கும்.

கிணங்கி, யார்க்கிய அல்லது லங்காஸ்டிரிய மரபினரின் கீழ் ஒருங்குகூடி அவர்கள் போருக்குச் சென்றனர். அப்போரில் கை யாளப் பட்ட சூழ்ச்சி முறைகள் அனைத்தும், அத்தலைவர்களால் அண்மைக்காலத்தில் நடைபெற்ற பிரஞ்சுப்போரில் கடைப் பிடிக்கப்பட்ட சூழ்ச்சித் திறன்களாகவே இருந்தன. குதிரைப் படை போர்புரிதல் விதியாக இல்லாமல், விதிவிலக்காக இருந்தது. காலாட் படையினர் குதிரையின் மீது ஊர்ந்து செல் பவர்களாக இருந்தனர். போர்க்களத்தில் சிற்சில சமயங்களில் பீரங்கிகளும், புதிய கைத்துப்பாக்கிகளும் பயன்படுத்தப் பட் டன. அப்போரில் நீண்ட வில்லே படைக்கலக் கருவிகளின் மாபெரும் தலைவனாக விளங்கியது. மாவீரர்கள் அணி வகுப்பிற் குப் பின்புறத்தில் நிலத்தில் நின்றே, வில் வீரர்கள் போர் புரிந் தனர். ஆனால் அப்போர் நிகழ்ச்சிகள் கிரேசி, அல்லது அகின் கோர்ட் போர்க்களங்களில் காணப்பட்டதைப் போன்றில்லை. அப்போரில் இரு கட்சியினரிடத்தும் விற்படை வீரர்கள் இருந்த காரணத்தினால், வேறு ஒன்றையும் அவர்கள் தெரிந் தெடுக்க இயலாதவர்களாக இருந்தனர். எனவே, நெடுநேரம் அம்புமாரிக்கு இடையே நின்று போராடாது அடைப்பான இருப்பிடத்தை இயன்றவரை நாடிச் சென்று வாளும் அம்பும் கொண்டு திடீரென போரிட்டு ஒரு முடிவுக்கு வந்தனர்.

ரோஜாப்பூவினை அடையாளமாக அணிந்து போரிட்ட போர்களின் கொலைக்காரர் கூட்டத்தில் வெற்றி பெற்றவர் நான் காம் எட்வர்டு என்பவராவர்(1461-1483). அவர் யார்க்கிய மரபின் வாரிசாக விளங்கினர். முரட்டுத்தனமான வெற்றியும், தோல்வி யும் தலைகீழாக மாறிக் கொண்டிருந்த அப்போர்களினால் நன்கு பயிற்சிபெற்ற மாவீரராக அவர் விளங்கினர். யார்க்ஷையரில் வீசிய பனிப் புயலில் கண்ணுக்கு எட்டிய நிலையில் காணமுடி யாது துன்புற்ற பொழுது, டௌட்டன் என்ற இடத்தில் போர் நடந்தது. அப்போரே நான்காம் எட்வர்ட்டை அரியணையில் ஏற்றியது. மறுமலர்ச்சி இயக்க காலத்தில் பண்புமிக்க முதல் ஆங்கிலேய அரசர் நான்காம் எட்வர்ட்டாவார். மறுமலர்ச்சி இயக்கத்தில் ஊறித்திளைத்த அரசர்கள் பிரான்சின் பதினோ ராம் லூயியும், டியூடர் மரபைச் சேர்ந்த ஹென்றிகளும் என்பது நாம் நன்கு அறிந்த செய்தியாகும். எட்வர்டு மிகவும் சோம் பேறியாகவும் இன்பக் களியாட்டங்களில் ஈடுபாடு உடையவ ராகவும் இருந்தார். எனினும் அவர் மெக்கவெல்லிக்குச் சிறந்த தொரு முன் மாதிரியாகப் பயன்பட்டிருப்பார் என்று கூற லாம்.

அக்குறைகள் ஒருமுறை அவளுக்குப் பெருங்கேடுகளை உண்டாக்கின. மாண்புமிக்க நெவில் (Neville) குடும்பத்தைச் சார்ந்த வார்விக்கு ஓர் அரசரியற்றியாவார். அவர் எட்வர்ட்டினை லங்காஸ்டிரிய அரியணையில் ஏற்றுவதற்கு (1461) அரும்பாடு பட்டார். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு தாம் செய்த தொண்டுக்கு ஊதியம் தரப்படாமையால் மனக்கொதிப்புற்ற அவர் ஆறும் ஹென்றியை லண்டன் கோட்டையிலிருந்து வெளியே இழுத்து வந்து, இங்கிலாந்தின் அரசர் (1471) ஆக்கினர். ஆனால் பார்னெட்டு, டியூக்ஸ்பரி போர்களில் சொகுசு மிக்க இன்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த எட்வர்டு உணர்ச்சியால் தூண்டப்பட்டார். அதனால் அவர் இயல்பாக இருப்பதைக் காட்டிலும் சிறப்புமிக்க வீரராக மக்கள் முன்னால் தோற்றமளித்தார். அச்செயலின் விளைவாக வார்விக்கும், ஆறும் ஹென்றியும், அவருடைய மகனும் இறந்தனர். அவர்கள் இறந்தமையால் யார்க்கிய அரச குடும்பத்தினரின் ஆட்சி இதற்கு முன்பு இருந்ததைவிட உறுதியுடையதாயிற்று. இதற்குப் பிறகு வேறு எத்தகைய சக்தியாலும் அம்மரபினை அரியணையிலிருந்து விரட்ட முடியவில்லை. ஆனால், தன்னுடைய மரபுக்குள்ளேயே உண்டான பாழ்செய்யும் உட்பகையும் நம்பிக்கைக்கேடான செயல்களும்தான் அக் குடும்பத்தின் ஆதிக்கத்திற்குப் பிற்காலத்தில் ஊறு விளைத்தன.

நான்காம் ஹென்றியின் ஆட்சி குற்றமுடையதாகவும், குறைவுடையதாகவும் இருந்தது. பிற்காலத்தில் ஏழாம் ஹென்றி கடைப்பிடித்து ஒழுகிய கொள்கையின் ஒத்திகையாக, நான்காம் எட்வர்ட்டின் கொள்கைகள் இருந்தன எனில் மிகையாகாது. தன்னுடைய ஆட்சிக்குட்பட்டு நாட்டில் வாழும் பேராற்றல் வாய்ந்த குடிமக்களை அடக்கியொடுக்க வேண்டுமென்ற விருப்பமே எட்டுவர்ட்டுக்கு இருந்ததில்லை. அதற்குக் காரணம் அவர்களுள் ஒருவர் கூட அரியணை ஏறுவதற்கு உரிமையுடையவராக இல்லாமையே யாகும். அவருக்கு கிளாரன்சு என்னும் சகோதரர் ஒருவர் இருந்தார். கிளாரன்சு 'பொய்மையே பேசி, பொய்ச் சான்று கூறும் கயமகன்' என்று இழித்தும் பழித்தும் உரைக்கத்தக்கவராக விளங்கினர். அவரும் வார்விக்கினைத் தொடர்ந்து விரைவில் ஸ்டைக்சின் (Styx) அப்பாலுள்ள கரைக்குப் போய்ச் சேர்ந்தார். அங்குதான் ஆங்கிலேயப் பிரபுக்கள், அரச குடும்பங்கள் ஆகியோரைச் சேர்ந்தவர்களுடைய நிழல்களெல்லாம் ஒரு பெரும்படையாகத் திரண்டுகொண்டிருந்தது. இவ்வாறு எட்வர்டு இங்கிலாந்தின் ஆட்சியுரிமையைப் பாராளுமன்றத்தின் உரிமை வாயிலாகப் பெறாது, கைப்

பற்றுதல் மூலமாகப் பெற்றுத் தம்முடைய பேராற்றலையும் பெருந்திறனையும் நாட்டுமக்கள் அனைவரும் நன்கு உணருமாறு செய்தார். இதனால் லங்காஸ்டிரிய அரச மரபைச் சார்ந்த அரசர்கள் பாராளுமன்றத்தை மதித்துப் போற்றியதைப் போல் இவர் போற்றவில்லை. மேலும் பாராளுமன்ற ஆட்சிமுறையைக் காட்டிலும், இவருடைய ஆட்சி மிக இழிந்ததாக இருந்தது என்று நாட்டு மக்கள் கருதினர்கள் என்பதற்கே யாதொரு சான்றும் கிடையாது. உண்மையில் அக்காலம் பாராளுமன்ற நிலையங்களுக்குப் பெரும் இடர்ப்பாடுமிக்க காலமாக இருந்தது. எட்வர்டு ஒரு முறை கூட பாராளுமன்றத்தின் இரு அவைகளையும் கூட்டியதாகத் தெரியவில்லை. மக்கள் சபையினர் வாக்குறுதி தந்து ஆதரிக்கும் வரி விதிப்புகளை நம்புவதைக் காட்டிலும், அவர் கருத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டாயக் கடன்களை அல்லது தனிப்பட்ட குடிமக்கள் ஒவ்வொருவரிடமிருந்து தண்டப்பட்ட கட்டாயப் பரிசுத் தொகைகளையே நம்பி வாழ்ந்தார்.

ஆறும் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் உயர்குடி மக்களின் அதிகாரத்திற்குரிய முக்கிய கருவியாக விளங்கியது அரசரின் ஆலோசனை மன்றம் (King's Council) ஆகும். எனவே, நான்காம் எட்வர்டு தம்முடைய ஆட்சியின் பிற்பகுதி வரையில் அம்மன்றத்தைப் போற்றி ஆதரிக்காது இருந்த காரணத்தினல், தமக்குச் சில இடர்ப்பாடுகள் உண்டாவதைஉணர்ந்தார். எனவே, அவ் ஆலோசனை மன்றத்தைப் புதுப்பிப்பதின் மூலம்; அதை ஒரு கருவியாகக் கொண்டு அரசர் தம்முடைய தன்னுரிமையோடு ஆட்சி புரியலாம் என்று அவர் நினைத்தார். அக் கொள்கையினை அவருக்குப் பிறகு வந்த டியூடர் அரசமரபைச் சார்ந்த அரசர்கள் இன்னும் பேரளவிற்குப் பின்பற்றி ஆட்சி புரிந்து வந்தனர்.

பெரும் பிரபுக்களுடைய சமூகத்திடத்து எட்வர்டுக்கு பற்றுதல் குறைவாகவே இருந்துவந்தது. ஆனல் புதிதாக எழுச்சியுறும் உயர்குடி வகுப்பினரான வாணிகப் பெருஞ் செல்வர்களிடத்து அரசருக்குப் பெரும் ஈடுபாடு இருந்து வந்ததைக் காணுகின்ரேம். 'லண்டன் மாநகரம் நகரங்கள் எல்லாவற்றுள்ளும் மலர் போன்றது' என்று போற்றத்தக்க வகையில் உலகத்தின் பெரும் மதிப்பினை அக்காலத்தில் பெறத்தக்க நிலையை அடைந்து கொண்டிருந்தது. அந்நகரம் செல்வத்திலும், புற அழகிலும், அகத்தின் அறிவாற்றலிலும் பெரு வளர்ச்சி அடைந்து கொண்டிருந்தது. ஆனல் அதே சமயத்தில் பிரபுக்கள் தங்களுக்குள் ஒருவருடைய கழுத்தை மற்ரெருவர் அறுத்துக் கொண்டிருந்தனர்; திருச்சபை ஒழுக்கத் துறையிலும் அறிவாற்றல்

துறையிலும் தான் வகித்த தலைமைப் பதவியை மெல்ல மெல்லக் கைவிட்டுக் கொண்டிருந்தது. மடாலயத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் நாட்டின் தேவைகளை நாடெங்கிலும் நிறைவேற்றக் கூடியவர்களாக இல்லை. பழங்காலத்தை விட மடாலய காலவழிச் செய்திக் கோவைகள் மிகவும் வளமற்றதாகப் போய்விட்டன. பொதுமக்களிடையே சாசரின் மரபைச் சேர்ந்தவரின் கவிதைகளைப் படிப்பதற்காக அவற்றின் ஏட்டுப் பிரதிகள் வேண்டுமென்ற தேவை உண்டானமையாலும், அதைப் போன்றே காலவழிச் செய்திக் கோவைகள், வரலாறுகள் முதலியவற்றை உரை நடையில் எழுதிப் போற்ற முடியாமையாலும், பொது மக்கள் அவற்றைப் படிப்பதற்கு நாடமுடியாத காரணத்தினாலும் நாட்டிலே புதிதாக ஒரு வகுப்பினர் தோன்றினர். அவர்கள் 'எழுத்தர்' (Scriveners) அல்லது எழுதுபொருள் விற்போர் (Stationers) எனப்படுவோராவர். அவர்கள் புத்தகங்களைப் படியெடுத்து, அதன்மூலம் நாட்டு மக்களின் தேவையை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டனர். இத்தகைய சூழ்நிலையில் நான்காம் எட்வர்டு வெஸ்ட்மினிஸ்டரில் காக்ஸ்டனால் கண்டுபிடிக்கப்பட்ட அச்சு இயந்திரத்தை நிறுவிப் போற்றி ஆதரித்தார். அந்நிகழ்ச்சி அந்நூற்றாண்டின் ஆங்கிலேய மொழி வரலாற்றில் மாண்புமிக்க நிகழ்ச்சியாகும். எட்வர்டு பணத்தைப் பெறுவதை மட்டும் விரும்பவில்லை; அறிவாற்றல் மிக்க அறிஞர்களோடு கலந்து உறவாடுவதையும், சுறுசுறுப்பான சாகசமிக்க மகளிரோடு கூடிக் குலாவுவதையும் அவர் பெரிதும் விரும்பினார். தம்முடைய கொள்கையாலும் தேர்ந்தெடுக்கும் திறனாலும் லண்டன் மாநகரத்து மாண்புமிக்க குடிமக்களோடும் அவர்களுடைய மனைவியரோடும் சேர்ந்து அவர் பெரிதும் வாழ்ந்து வரலானார்.

ஆனால், தற்கால முறைக்கு ஏற்ற அரசியல் சூழ்ச்சித்திறன் அனைத்தையும் பெற்றிருந்தும், நான்காம் எட்வர்டு மாவட்டங்களில் அரசரின் அமைதியை நிலைநாட்டாமல் தோல்வியுற்றார். அத்துடன் அம் மாவட்டங்களில் செல்வமும், செல்வாக்கும் மிக்குடையவர்களாக விளங்கிய பிரபுக்களையும் பெருங்குடி மக்களையும் அடக்கியொடுக்குவதிலும் அவர் வெற்றி பெறவில்லை. அம் மாபெரும் பணி ஏழாம் ஹென்றியின் விண்மீன் (Star Chamber) மன்றத்தினருக்கு விடப்பட்டது. நாட்டிலே ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்கு ஏற்றவகையில் ஆட்சி இயந்திரத்தினைப் பலப்படுத்துவதற்கு உரிய திறமை மிக்க திட்டம் எதையும் எட்வர்டு பின்பற்றவில்லை. இவ்வாறு யார்க்கிய மரபினைச் சார்ந்தவர்கள் ஆட்சிக்காலத்து நாட்டில் அமைதியை

யும், ஒழுங்கையும் நிலைநாட்டி மக்கள் நலனைப் பேணிக்காப்பதற்குரிய வழிவகைகள் ஒன்றும் பின்பற்றப்படவில்லை. மனிதர்களுக்கிடையே தனிப்பட்ட போரும், பிழைப்புக்கான போராட்டமும், பண்ணைகளை வளர்த்தலும் டௌட்டனுக்கும், டியூக்ஸ்பரிக்கும் சிறிது குறைந்திருந்ததாகச் சொல்லலாமேயொழிய, ஆறும் ஹென்றி ஆட்சி புரிந்த காலத்தில் இருந்ததைப் போல் மிகவும் கொடுமை நிறைந்ததாக இல்லையென்று வேண்டுமானால் கூறலாம். இருந்த போதிலும் நான்காம் எட்வர்ட்டின் குருமார்கள், வழக்கறிஞர்கள், நடுத்தர வகுப்பினர், பெருங்குடிமக்கள் ஆகியோரைக் கொண்டு பணித்துறைத் தொழிலின் மூலம் நாட்டை ஆள்வதில் மனநிறைவு அடையவில்லை. அதற்கு மாறாக, தம்முடைய மனைவியின் உறவினர்களான உட்வில் (Woodvilles) கிரேசு (Greys) என்போரைப் புதிதாகப் பிரபுக்கள் பதவிக்கு உயர்த்துவதன் மூலம் ஒரு பெரும் தவற்றைச் செய்தார்.

1483-ஆம் ஆண்டு எட்வர்டு இறந்தார். அச்சமயத்தில் புதிதாகப் பிரபுக்களான உட்வில், கிரேசு ஆகியோரிடத்து நாட்டின் பழைய பிரபுக்களின் எச்சமாக இருந்த பிரபுக்கள் கொண்டிருந்த பகைமையும், பொறாமையும் கிளௌசெஸ்டரின் கோமகனும், எட்வர்ட்டின் சகோதரருமான ரிச்சர்ட்டு என்பவரை அரியணையைக் கைப்பற்றுமாறு செய்தது. ஐந்தாம் எட்வர்டு அப்போது குழந்தையாக இருந்தார். அவருடைய தாயாரும் அவருடைய உறவினர்களும் நாட்டிலே செல்வாக்கு அற்றவர்களாகவும், பிரபுக்களால் வெறுக்கப்பட்டும் இழித்தும் பழித்தும் பேசப்பட்டவர்களாகவும் இருந்தனர். இந்தப் 'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையுமே' யார்க்கிய அரச மரபின் அழிவுக்கு அடிகோலின. ரிச்சர்ட்டு பிறவியிலேயே 'இரக்கம் எனும் ஒரு பொருள் இல்லாத அரக்கனைப்' பிறக்கவில்லை. ஆனால் ஹென்றியும், கிளாரன்சும் இறந்தமைக்கு ரிச்சர்ட்டுதான் காரணம் என்பதற்குப் போதிய தெளிவான சான்றுகளும் நமக்குக் கிடைக்கவில்லை. பிற யார்க்கிய மரபினைக் காட்டிலும், அவர் கொடுமை நிறைந்தவர் என்று கூறுவது அத்துணைப் பொருத்தமாகத் தோன்றவில்லை. மேலும், அவர் அரியணையைக் கைப்பற்றுவதற்கு முன்பு அவருடைய செயல்கள் எல்லாம் கிளாரன்ஸைப் போன்று நம்பிக்கைக் கேடானதாகவோ, மற்றொரு சகோதரர் எட்வர்ட்டைப் போன்று இரத்தப் பெருக்கெடுத்து ஓடுமாறு இரத்த வெறியாகவோ இருந்ததில்லை. ஆனால் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மணிமுடி அவருடைய ஆன்மாவினைக் கவர்ந்தது. அவர் தம்முடைய பொறுப்பின்கீழ் விடப்பட்டிருந்த அண்ணன் பிள்ளைகள் இருவரை 1483-ல் கொன்றார். லண்டன் படையி

லிருந்து இளவரசர் காணமல் போனமையும்; அவர் வன்முறையில் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து நிகழ்ந்தமையால் அவர் நாட்டு மக்களின் பற்றுறுதியையும், ஆதரவையும் இழந்தார். தம்மை ஆளுகின்ற அரசர்கள் செய்த போர்களினலும், கொலைகளினலும் ஆங்கிலேய மக்கள் இழிந்த கயவர்களாக மாறிவிடவில்லை. ரிச்சர்ட்டுக்கு எதிராக நாட்டுமக்களிடத்தே உண்டான வெறுப்புணர்ச்சி சிறந்ததொரு எதிர்காலத்தின் தொடக்கமாக அமைந்தது.

மீண்டும் அரியணை ஏறுவதற்கு உரிமை கொண்டாடுவோர் பழைய அரசமரபுகளுள் ஒருவரும் இல்லாமல் போயினர். யார்க்கிய மரபைச் சார்ந்தவர்களும், லங்காஸ்டிரிய மரபைச் சார்ந்தவர்களும் போர்க்களங்கள் பலவற்றில் மாண்டுபோன காரணத்தினலும், அதைத் தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகளாக மேற்கண்ட இரு மரபுகளைச் சார்ந்த பிரபுக்கள் தூக்கிலிடப் பட்டுவந்த காரணத்தினலும், ஐந்தாம் எட்வர்டு இறந்தபோது இங்கிலாந்தின் அரியணையில் ஏறுவதற்கு யார்க்கிய, லங்காஸ்டிரிய மரபைச் சேர்ந்தவர்களுள் தகுதியுடையவர்கள் யாருமே இல்லாது போய்விட்டனர். எனவே, அரசற்ற அரியணைக்காக உரிமை கொண்டாடியவர்களுள் ரிச்மாண்டின் கோமகனும், வெல்ஷ் இனப் பெருமகனுமான ஹென்றி டியூடர் (Henry Tudor) என்போர் லங்காஸ்டிரியரின் சார்பில் தாமே அரசராவதற்கு உரிமையுடையவர் என்று உரிமை கொண்டாடினர். அவருடைய உரிமையும் மக்களால் போற்றி மதிக்கத்தக்கதாக இருந்தது. அந்தச் சுறுசுறுப்பான காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களின் வழக்கமாக இருந்து வந்ததையொட்டி, அவர் அயல்நாட்டுக்கு அடைக்கலமாகச் சென்றர். முதலில் அப்போது பிரான்சில் இருந்த பிரிட்டனியின் அவைக்களத்தில் புகலடைந்தார். குழந்தையைக் கொன்ற ரிச்சர்ட்டுக்கு நாட்டிலே செல்வாக்கு இல்லை என்பதை உணர்ந்து, அதை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளக் கருதி ஹென்றி டியூடர் நம்பிக்கை கொள்ள முடியாத சிறிய ஒரு படையுடன் இங்கிலாந்துக்கு மில் போர்டு ஹேவனில் (Milford Haven) வந்திறங்கினர். மில்போர்டு ஹேவன் என்பது அவருடைய நாடான வேல்சின் கடற்கரையில் இருந்த பட்டணமாகும். அவரைக் கண்டதும் தங்களுடைய பழைய பிரிட்டிஷ் அரசர்களின் மரபிலே வந்த ஒருவர் இப்போது இங்கிலாந்தின் அரசராகப் போகின்றர் என்பதை அறிந்தவுடனேயே வெல்ஷ் மக்களின் இனப்பற்றும் ஆர்வமும் பெருக்கெடுத்தது. ஹென்றி அங்கிருந்து காட்வாலா

டரின் (Cadwallader) முன் செந்நிறக் கொடியினை ஏந்தி அணி வகுத்து, முன் எச்சரிக்கையோடு படையுடன் இங்கிலாந்தின் அரியணையைக் கைப்பற்றப் புறப்பட்டார். வெல்ஷ் மக்கள் தங்கள் இனத்தைச் சேர்ந்தவர் அரசராகப் போகின்றார் என்பதைக் கேட்டுக் களிப்புற்றனர். ஒரு வாரத்திற்கு மேல் சில நாட்களுக்குள்ளாகவே ஹென்றி பேரறிவும் ஆற்றலுமுடைய தம்முடைய ஆதரவாளர்களை ஒருங்குதிரட்டி ஒரு படையினை நிறுவினார். எப்பொழுதுமே போர்க்களமாக விளங்கிய அந்த நாட்டில் தம்முடைய படையுடன் ஹென்றி குறுக்கே சென்றார். அந்த வெல்ஷ் மக்கள், சில பிரஞ்சு ஆங்கிலேய துணிச்சல் வீரர் களின் உதவியைக் கொண்டு 1485–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22–ஆம் நாள் பார்ஸ்வர்த்து போர்க்களத்தில் ஆங்கிலேயக் குடிமக்கள் எந்த அரசரின் சார்பாக எதிர்த்துப் போராட வெட்கப்பட்டார்களோ, அந்த அரசரை ஹென்றி தோற்கடித்து வாகை சூடினார். இங்கு உண்மையில் நற்பேற்றின் குறும்புச் செயலைக் காணுகின்றோம். பரந்த லீசெஸ்டர்ஷையரின் மேட்டு நிலத்தில் சில ஆயிரம் வீரர்கள் பாதசாரிகளாக மிக நெருக்க மாக எதிர்த்து நின்று போராடிக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில் சிறிது தொலைவில் சில ஆயிரக்கணக்கான மக்கள் அப்போரின் முடிவு என்ன என்பதை அறிவதற்கு ஆவலோடு காத்துக் கொண்டிருந்தனர். அவ்வாறு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அம்மக்கள் தங்கள் நாட்டின் அரச மரபுகள் அனைத்திலும் மாண்புமிக்க மரபைச் சேர்ந்த அரசரை அரியணை யேற்றுவதில் மனநிறைவு பெற்றனர். அத்தகைய புதிய அரச மரபின் ஆட்சி, ஒரு நூற்றாண்டுக்காலம் முழுவதும் பெருக்கெடுத் தோடிய மாறுதல்களாகிய நீண்ட ஊழிப் பெருக்கில் சிக்கிச் சீரழியாது தங்கள் நாட்டைக் காக்கும் என்று அவர்கள் கருதினர். இத்தகைய முடிவினை யார்க்கிய, லங்காஸ்டிரிய மரபுகளுக்கிடையே உண்டான பண்டை உலகின் போரிலே ஈடுபட்டிருந்த வில்லின் மூலம் கணைகளைக் கொண்டு ஓயாது போரிட்ட மனிதர்கள் யாருமே கனவில் கூடக் கண்டிராத வகையில் ஹென்றி டியூடர் பெரு வெற்றிபெற்று, இங்கிலாந்தின் அரசராக அரியணையேறினார்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

அரசரும், பிரபுக்களும், மக்கள் சபையினரும் — பாராளு மன்றமும் போரும் — வழக்கறிஞர்களும் பாராளுமன்றமும் — இரண்டாம் ரிச்சர்ட்டும் இரண்டாம் ஜேம்ஸூம்—தலைமை நீதிபதி ஃபார்ட்டஸ்கியூ—ஆலோசனை மன்றத்தின் இருவகை நோக்கங்

கள்—உயர்குடி மக்களின் ஒழுங்கின்மை—நீதிமன்றங்கள் பேரச்சத்திற்கு ஆளானமை — வீரப்பெருந்தகைமைக் காலம் — திருமண பழக்கவழக்கங்கள் — பள்ளிக்கூடங்கள் — சாசருக்குப் பிற்பட்ட இங்கிலாந்து —ரோஜாப்பூ அணிந்து போரிட்ட பேராட்டத்தின் சமூக நோக்கம்—ரோஜாப்பூ அணிந்துபோரிட்ட போர் — நான்காம் எட்வர்ட்டின் கொள்கை — மூன்றாம் ரிச்சர்ட்டு.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

1. C. L. கிங்ஸ்போர்ட் : (C. L. Kings ford)
Prejudice and Promise in the 15th Century England. (Ford Lectures, (1925)

2. ஜேம்சு கார்ட்டினர் : James Gairdner
Richard III

3. சர் ஜேம்சு எச். ராம்சே, (Sir James H. Ramsay)
Lancaster and york, 2 vols.

4. ஸ்டப்சு : (Stubbs)
Constitutional History of England, vol. III.

5. கிரைம்சு : (Chrimes)
English Constitutional Ideas in the 15th Century, 1936.

**குறிப்பு :**

இரண்டாவது பிரிவின் முதல் இயலின் இறுதியில் ‘ இடைக் காலத்திற்குரிய நூற்கள் ’ என்று குறிப்பிடப்பட்டுள்ளவற்றையும் காண்க.

# மூன்றும் பிரிவு

## டியூடர்களின் ஆட்சிக் காலத்திய இங்கிலாந்தில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கமும், சீர்திருத்த இயக்கமும், கடல் ஆதிக்கமும்

### தோற்றுவாய்

இன்றைய ஐரோப்பா பல தனி நாடுகளாகச் செம்மையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாடும் அதன் எல்லைக்குள் வரம்பிலா முழு அதிகாரம் பெற்றதாக உள்ளது. அந்நாடுகள் ஒவ்வொன்றும் ஓரினத்தையோ, தேசிய உணர்வுடைய மக்களையோ கொண்டதாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனல், இடைக் காலத்தில் ஐரோப்பா சமய குருமார்களைக் (Clergy) கொண்ட மாநகராட்சிகளாகவும் பிரபுக்களை (Nobles) யும் உட்குடிகளையும் (Villeins) கொண்ட பேரூர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. அவ்வூர்கள் தங்களுடைய நாட்டின் சட்டங்களைக் கொண்டு கன்னி மாடங்களிலும் (Convents), மாளிகைகளிலும் (Castle), பண்ணைகளிலும் (Estate), மதில் சூழ்ந்த நகரங்களிலும் நாட்டாட்சியை நடத்தின. காட்டுமிராண்டிகளின் படையெடுப்புகளால் தகர்த்தெறியப்பட்ட நாகரிகத்தின் நற்கலைகள், மேற்கண்ட நாட்டாட்சி முறையின் காவலில் மீண்டும் ஆழ வேரூன்றப் புத்தம் புது வடிவங்களில் தழைத்தோங்கலாயிற்று. ஆனல், நிலமானியப் படைமுறை ஊர்களில் வாழ்ந்த தனிமனிதனுக்கு உரிமையென்பதே கிடையாது. மடங்களில் வாழ்ந்த மக்களுக்கும் உரிமைகள் மிகக் குறைந்த அளவினதாகவே இருந்து வந்தன. அதே சமயத்தில் பட்டயங்கள் பெற்ற நகரங்களில் இருந்த தொழிற் கழகங்களின் உரிமைகளும் அவ்வப்போது தடைப்படுத்தப்

பட்டன. சிறப்புரிமையற்ற வகுப்பினராகிய ஏதிலார், ஊர்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இத்தகைய கூட்டுக் குழுக்கள், தம்முடைய ஆற்றலில் சிலவற்றை இழக்கும் வரையிலும், இடைக்காலத்திய திருச்சபை மக்கள் வாழ்க்கையினையும் அவர்களுடைய சிந்தனையையும் அடக்கியொடுக்கிக் கட்டுப்படுத்தி வந்த கட்டுப்பாடு தளர்ச்சியுறும் வரையிலும், ஆட்சியின் பரப்பு விரிவடைதலும் முன்னேற்றமும், ஒவ்வொன்றிற்கும் உரிய தனித் தன்மையின் வளர்ச்சியும் தடைசெய்யப்பட்டு வந்தது.

அந்த அளவிற்குச் சமுதாயப்புரட்சியினை வீறமைதியுடையதாகச் செய்வதற்குரிய பேராற்றல் இங்கிலாந்தினை ஆண்ட அரசரிடமே அமைந்திருந்தது. ஆயினும் நாட்டின் வல்லாட்சி தன்னுடைய உரிமைகளைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது. ஆனால் இடைக் காலத்தில் தனிமனிதன் பெற்றிருந்த உரிமைகளைக் காட்டிலும், அதிக உரிமைகளைப் பெறுவதற்கு அது வாய்ப்பு அளித்தது. டிரேக்கு (Drake), ராலே (Raleigh) முதலியோரின் மனத்திட்ப முயற்சியும் ஷேக்ஸ்பியர், பேக்கன் முதலியோரின் சிறப்பு மிக்க அறிவாற்றலும், புதிதாகத் தோன்றிய தனி மனிதன் மனத்திட்ப முயற்சியோடும் (Enterprise), விரிவடையும் அறிவாற்றலோடும் நெருங்கிய தொடர்பு உடையனவாகக் காணப்பட்டன. கடந்த இரு நூற்றாண்டுகளாகச் சமுதாயத்தில் உண்டான பிளவுகளும், தனி மனிதனின் அறிவிற்கும், மனச்சான்றிற்கும் மறுமலர்ச்சி இயக்கமும், சீர்திருத்த இயக்கமும் விட்ட வேண்டுகோள்களும் ஷேக்ஸ்பியர், பேக்கன் ஆகிய இருவரும் தோன்றக் காரணமாய் இருந்தன. தேசியப் பொதுநல விருப்பத்திற்குக் (Nalional will) கூட்டுக் குழுக்களின் அதிகாரம் கீழ்ப்படுத்தப்பட்டமை, அரசு, பாராளுமன்றம் ஆகிய இரண்டிலும் உள்ளார்ந்த பண்பாக உட்பட்டுக் கிடந்தது.

இடைக்கால அமைப்புகள் எதிர்பாரா வகையிலோ, ஒழித்துவிட வேண்டும் என்று எண்ணிய பொறுமையற்ற அரசனின் தீய எண்ணத்தாலோ அழிந்து விடவில்லை. ஆனால், பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகள் முதற்கொண்டு ஆக்கிலேயர்களின் வாழ்க்கையின் அடிப்படையில் உண்டான பெரும் மாறுதல்களாலேயே இடைக்கால அமைப்புகள் (Villeins) பெற்ற விடுதலையையும், லண்டன் நகரத்தின் வளர்ச்சியும், கல்வியறிவுடன் செயல்திறன் வாயந்த நடுத்தர மக்களினத்தின் எழுச்சியும், துணி உற்பத்திப் பெருக்கமும், பட்டய நகரங்களுக்கு வெளியே நடைபெற்ற பிற தொழில்களும்,

மக்களை ஒற்றுமையுடையவர்களாக வாழத் தூண்டிய பொதுச் சட்டமும், அரசனின் ஆட்சிமுறையும், தேசியப் பாராளுமன்றமும் மக்கள் வாழ்க்கையைப் பையப்பைய மாற்றமுறச் செய்தன. 'நூற்றாண்டுப் போரினால் (Hundred Years war) தோன்றிய தேசியப் பெருமிதமும், குதிரைப்படைப் பிரபுக்களை, ஆங்கிலேயே விற்படையாளர் புறமுதுகிட்டு ஓடச்செய்தமையால் பெற்ற வெற்றியும், கற்றறிந்தோர் ஆங்கிலமொழியைத் தங்கள் மொழியாக ஏற்றுக்கொண்டமையும், பிரபுக்களின் அரண்களைத் தகர்த்தெறிய குண்டுகளும் பீரங்கிகளும் புதிதாகச் செய்யப் பெற்றமையும், திருச் சபையாரின் தனி உரிமையாக இருந்து வந்த கல்வியை, அச்சு இயந்திரம் உலகப் பொதுச் சொத்தாக மாற்றியமையும் இடைக்கால அமைப்புக்கள் மறைந்ததற்குரிய காரணங்களாகும். மறுமலர்ச்சி இயக்கத்தின் அறிவுரைகளும், சமய சித்தாந்தங்களைச் சிறந்த முறையில் ஆராயத் தொடங்கியமையால் பெற்ற அறிவொளியால் இங்கிலாந்து இடைக்கால உறக்கத்திலிருந்து விழித்தெழுந்தது. அதனால் சமயத்தில் படிந்திருந்த மாசினைப் போக்க முயன்றனர். இடைக்காலக் கிறிஸ்துவ உலகம் அறிந்திராதப் பண்டைக் கிரேக்க, ரோமானிய லட்சிய (Ideal)க் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் பொதிந்து கிடந்த கருத்துக்களால், மற்றொரு பக்கமும் இங்கிலாந்தின் சமயம் விளக்கமுற்றது. முற்காலத்து வாணிகப் பழக்க வழக்கங்களில் இடம் பெறுமலும், அறிவாற்றல்களுக்கு அப்பாற்பட்டதாயும் இருந்த புதிய நாடுகள் கண்டு பிடிக்கப் பெற்றமையும், புதிய வாணிக வழிகள் மாபெரும் கடல்களிடையே கண்டுபிடிக்கப் பெற்றமையும் இங்கிலாந்து நாட்டு மக்கள் வாழ்க்கையைப் பெரிதும் மாற்றமுறச் செய்தன. இவ்வாறு உண்டான ஆன்மீக, உலகியல் மாற்றங்களும் சேர்ந்து இங்கிலாந்தில் இடைக்காலத்தின் மக்கள் சமுதாயத்தின் அமைப்பினை அழித்தன.

அதே சமயத்தில் பிரான்சு, ஸ்பெயின், போர்ச்சுக்கல் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள் தேசிய இன நாடுகளாக ஒன்றுசேர்ந்து ஒரு குழுவாக அமைவதற்கு முயன்றுகொண்டிருந்தன. ஒவ்வொரு புதிய நாட்டினுள்ளும் அதிகாரம் நாளடைவில் அரசனுடைய கைகளிலே சென்று குவிந்தன. ஆனால், பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் தோன்றிய புதிய முடியாட்சி (Monarchy) பழைய திருச்சபையோடு நெருங்கிய தொடர்பு கொண்டது. இங்கிலாந்தில் முடியாட்சி பழைய பாராளு மன்றத்தோடு நெருங்கிய தொடர்பு கொள்ளத்

தொடங்கியது. பிரான்சிலும், ஸ்பெயினிலும் இடைக்காலப் பாராளுமன்றங்கள் நலிவுற்ற போதிலும், இடைக்காலச் சமயம் நன்கு பேணிக்காக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் ரோமானியப் பேரரசின் சட்டம் (Roman Imperial Law) அரசனின் வரம்பற்ற அதிகாரத்திற்கு அடித்தளமாக அமைக்கப் பெற்றது. இங்கிலாந்தில் சிறப்புற்று விளங்கிய சமயம் போயிற்று. ஆனால், நாம் அதே நேரத்தில் இடைக்காலப் பாராளுமன்றத்தையும், நாட்டுப் பொதுச் சட்டத்தையும், அரச பதவியின் சட்ட வரம்புக்குட்பட்ட அதிகாரங்களையும் பேணிக் காத்து வந்தோம். இங்கிலாந்திற்கும் ஐரோப்பியப் பெருநிலப் பரப்பிற்கும் இடையே இருந்து வந்த வேறுபாடு, நார்மானியர் இங்கிலாந்தினைக் கைப்பற்றியதால் குறையலாயிற்று. ஆனால் இங்கிலாந்தின் ஆங்கிலக் கால்வாயின் இரு மருங்கிலும் உண்டான மாறுபட்ட வளர்ச்சியால் மீண்டும் ஒரு முறை வேறுபட்ட பண்பாடு ஆற்றல் மிக்கதாய் வளர்ந்தது. ஒரு காலத்தில் எளிதாகப் பகுத்தறிய முடியாத ஆங்கில, பிரஞ்சு நாகரிகங்கள் இக்காலத்தில் தனிப்பட்டனவாகப் பிரிந்து போயின. மேலும் அவற்றிற்கு இடையே பகைமையுணர்வும் தலைகாட்டத் தொடங்கியது.

டியூடர்கால இங்கிலாந்தின் சமுதாய அமைப்பில் மாபெரும் புரட்சிகரமான மாறுதல்கள் தோன்றின. ஆயினும் அது மிகப் பழைய அமைப்புகளையும், முறைகளையும், அவற்றின் உள்ளார்ந்த உயிராற்றலையும் பெரிதும் பாராட்டத்தக்க வகையில் பேணிக்காத்தது. இடைக்கால வாழ்க்கை முறையின் வாயில்களாக விளங்கிய பெரும்பாலான அமைப்புக்களும், கூட்டுக் கடிதங்களும், பல்வேறு நிலையங்களும் அரசின் இறைமைக்கு உட்பட்டு இயங்கும் நிலையில் சிறிதும் மாற்ற முருமல் இருந்து வந்தன. பல்கலைக் கழகங்களும், பிரபுக்களும், வழக்கறிஞர்களும், பாதிரிமார்களும், சமயச் சார்பற்ற குருமார்களும் (Secular Clergy), நகரங்களில் சிறப்புற்று விளங்கிய மாநகராட்சி மன்றங்களும் பகட்டாகப் பழைய முறைகளில் — அழியாது நிலைபெற்று விளங்கினர். உலகக் குடிமகக் கோட்பாடுடைய துறவிகளும் சோதரர்களும் சேர்ந்து வாழ்ந்த மன்றங்களைப் போன்ற சில நிலையங்கள் புதிய தேசிய அமைப்புத் திட்டத்திற்குப் பொருந்தி வராத காரணத்தினல், அரசாங்கத்தினல் தயக்கமின்றி அழிக்கப்பட்டன. அடைக்கல உரிமைகளும் (Rights of Sanctuary), திருச்சபையின் தனிவுரிமைகளும் போன்ற பல உரிமைகளுள் சில குறைக்கப் பெற்றன; மற்றும் சில

ஒழிக்கப் பெற்றன. இவ்வாறு அவற்றை ஒழிப்பதற்குக் காரணம் நாட்டுப் பொதுச் சட்டத்தைச் செயற்படுத்த அவை தடைகளாக இருந்தமையேயாகும். பிரபுக்களும், ஏழைகளும், குருமார்களும், பொதுமக்களும் நாட்டுச் சட்டத்தின் முன்பு சரிநிகர் சமானமாக ஆக்கப் பெற்றனர். இத்தகைய நன்மைகளை அடையாது ஒதுக்கப்பெற்ற உட்குடிகள் (Villeins) வகுப்புத் தானே மறைந்து ஒழிந்தது. பிரபுக்கள் அரசவைகளில் தங்கள் உரிமை ஏவலாளர்களைக் (Retainers) கொண்டு அரசரை வன்முறையில் கட்டாயப்படுத்தி வந்தமை மறைந்தொழிந்தது. திருச்சபை நீதிமன்றங்கள் பாமர மக்களிடத்துச் செலுத்தி வந்த அதிகாரங்கள் குறைந்து போயிற்று. அவை போப்பு ஆண்டவரின் அதிகாரத்திற்கு உட்பட்ட நிலைமாறி, இங்கிலாந்து நாட்டு அரசரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாயிற்று. உலகக் குடிமகப் பண்பு நிறைந்த நிலமானியப் படை முறையும், உலகக் குடியியல்பு வாய்ந்த திருச்சபையும், புதிதாகத் தோன்றிய தேசிய இனநாடு என்னும் கோட்பாட்டோடு இணைந்த தேசிய திருச்சபையின் முன்னர் சீரும் சிறப்புமிழந்து ஆற்றலற்றதாக மாறியது. இடைக்காலக் குருமார்கள், உயர்குடி மக்கள் ஆகியோரின் உரிமைகளும், தனியாகவும் கூட்டாகவும் கைக்கொள்ளப் பட்டிருந்த இறைமையின் அதிகாரங்களுள் சிலவும் கூட்டுக்கழகங்களிடத்தும் இருந்து வந்தன. அவற்றை அரசாங்கம் பொது மக்களின் உரிமைகளைக் காப்பதற்காகத் தானே எடுத்துக் கொண்டது.

இவ்வாறே வாணிக ஒழுங்குமுறைகள் முன்பு பட்டய நகரங்களின் அல்லது தொழிற் குழுக்களின் தன்விருப்பச் செயல்களாக இருந்து வந்தன. அவை இப்பொழுது அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பில் விடப்பெற்றது. பிளாண்டாஜெனட் (Plantagenet)டுப் பாராளு மன்றக் கூட்டங்கள் கூலியையும் விலைவாசியையும் தொழிலாளிகளின் சட்டங்களைக் கொண்டு, (Statutes of Labourers) அரசருடைய அமைதிகாண் நீதிபதிகளின் (Justices of Peace) மூலம் ஒழுங்கு படுத்த முயன்றதை முன்பு நாம் கண்டோம். டியூடர்களின் ஆட்சிக்காலத்தில் இந்தப் பொருளாதாரக் கட்டுப்பாடு மேலும் பலதுறைகளில் மேற்கொள்ளப்பட்டது. வேலை பயில்வோர்க்குரிய சட்டம் நாட்டின் ஒவ்வொரு தொழிற் கழகங்களாலும் விதிக்கப் பெறுதும் முறைப்படுத்தப் பெற்றது. முற்காலத்தில் இரவலர்களை ஆதரிப்பதும், அவர்களுக்கு உதவி செய்வதும், மடங்களும், தொழிற் கழகங்களும் தனி மனிதர்களும் செய்யவேண்டிய அறச்

செயலாகக் கருதப்பட்டு வந்தது. அந்நிலை இக்காலத்தில் மாறியது. இரவலர்க்கு உதவி புரிவது சமுதாயத்தின் கடமையாகக் கருதும்வண்ணம் அரசாங்கம் சட்டத்தின் மூலம் வற்புறுத்தியது. நாட்டு மக்களின் பொருளாதார வாழ்க்கைத் தரத்தையும், அரசியல் நீதி முறைகளையும் கண்காணித்து வந்தவர்கள் அமைதிகாண் நீதிபதிகளாவர். அவர்கள் அரசனின் பிரதிநிதியாக இருந்து நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் சட்டத்தின் மூலம் நிலைநாட்டி வந்தனர். அவர்கள் அரசரிடம் ஊதியம் பெறாமலேயே இப்பணிகளைச் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் நாட்டாட்சியின் நடைமுறைகளையும் மத்திய அரசினையும் இணைக்கும் அரசியற் பணிமக்களாக விளங்கினர். நிலமானியப் படைமுறைப் பிரபுக்கள் தங்கள் தனி உரிமைகளின் அடிப்படையில் செயலாற்றி வந்த கடமைகளுள் பலவற்றை, அரசின் அமைதிகாண் நீதிபதிகள் அரசாங்கத்தின் சார்பில் நிறைவேற்றி வந்தனர்.

பாராளு மன்றத்தின் மூலம் தொடர்ந்து திருச்சபையிலும் சமய நிகழ்ச்சிகளிலும் மாபெரும் மாறுதல்களை அரசு செய்து வந்தது. அதிலிருந்து அரசு எல்லையற்ற அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்டமை புலனாகிறது. இடைக்காலத்தில் இத்தகைய தீவிர சட்டங்களை இயற்றுதலை, இங்கிலாந்து நாட்டு மக்கள் ஆற்றல் மிக்க அரசின் நீதிக்கும் நேர்மைக்கும் உட்படாத பேராதிக்கமாகக் கருதப்பட்டிருக்கலாம். ஆனால், டியூடர்களின் ஆட்சிக் காலத்தில், இங்கிலாந்தின் அரசு அயல் நாட்டு ஆதிக்கத்தினை உதறித் தள்ளியது; மேலும் உள்நாட்டுக் குறைபாடுகளை அடக்கியொடுக்கியது; அதன் ஆட்சி வரம்பிற்குட்பட்ட பகுதியில் தான் நினைத்தவற்றையெல்லாம் செய்வதற்குரிய உரிமை கொண்டதாகத் தனது புதிய ஆற்றலை நிலை நாட்டியது. இத்தகைய நாட்டின் முழு விடுதலை பற்றிய புதிய உரிமை வாதமும், அரசுக்கே எல்லாத் தகுதிகளும் உரியதாகும் என்னும் கோட்பாடும் 'அரசன்' (Prince) என்னும் மனித வடிவில் உருப்பெற்றது. பதினாறும் நூற்றாண்டில் அரசனைத் தெய்வமாக வழிபடும் வழிபாட்டுநெறி சிறப்புற்று விளங்கியதற்கு இதுவே காரணமாகும்.

அக்காலத்தில் புதிய அரசாங்கத்தின் அதிகாரங்களும் அரசனாலேயே கைக்கொள்ளப்பட்டன. பாதி அளவிற்குச் சொற்போர் மன்றமாகவும், மற்றொரு பாதி அளவிற்கு நீதி வழங்கும் நீதி மன்றமாகவும் விளங்கிய பாராளு மன்றத்திற்கு, இத்தகைய

அதிகாரங்களை மேற்கொண்டு செயற்படுத்துவதற்கு வேண்டிய ஆற்றலோ பேரார்வமோ அக்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. சென்ற நூற்றாண்டில் வருந்தத்தக்க வகையில் புறக்கணிக்கப்பட்டு வந்த உண்மையான அரசாங்கத்தின் கடமைகளை நாட்டுப் புறங்களில் வாழ்ந்த அமைதிகாண் நீதிபதிகளுக்கும், வெஸ்ட்மின்ஸ்டரில் இருந்த பாராளுமன்ற மக்களுக்கும் கற்பிப்பதே உண்மையில் டியூடர் அரசர்களுக்கும், பிரிவி கவுன்சிலுக்கும் முக்கிய கடமையாக இருந்துவந்தமை வியப்பிற்குரிய செய்தியாகும். பாராளுமன்றம் அரசனின் மாணவனாகவும் ஊழியனாகவும் விளங்க இக்காலத்தில் ஆயத்தமாக இருந்தது.

அவ்வாறே நிலைமாறுகாலமாகிய அக்காலத்தில் வழக்கத்திற்கு மாறான சமயச் சூழ்நிலையும், இங்கிலாந்து அரசின் அதிகாரங்கள் பெருகுவதற்கு ஏற்றதாக இருந்தது. எட்டாம் ஹென்றி இடைக்காலத் திருச்சபையின் அதிகாரங்களையும், தனியுரிமைகளையும் அழித்த குருமார்களுக்கு எதிராக உருவாகிய புரட்சிக்குத் தாமே தலைமை தாங்கினர். அதனால் அவ்வதிகாரங்களின் நிலைக்களனை அரசர் விளக்கமுற்றார். அத்துடன் எதிர்காலத்தில் பேராற்றல் வாய்ந்த சக்திகளான லண்டன் மாநகர மக்கள் நடுத்தர வகுப்பினர், கடலோடிகள், கத்தோலிக்க மறுப்பு இயக்க (Protestant Preachers) போதகர்கள், கையூட்டுக்களாலும், மடாலயங்களின் நிலங்களாலும் படைவலிமை பெற்ற பெரியதனக்காரர்கள் முதலியவர்களோடு அரசர் நெருங்கிய தொடர்பு கொண்டார். அதன்மூலம் புதியதொரு முடியாட்சியை ஆற்றல் மிக்கதாக அமைத்தார். துறவிகளுக்கும், சோதரர்களுக்கும், எஞ்சிய நிலமானியப் பிரபுக்களுக்கும், வடக்கே வாழ்ந்த பணியாளர்களுக்கும் லண்டன்மாநகரிலிருந்து நெடுந்தொலைவில் வாழ்ந்த ஆழ்ந்த பக்தியுணர்வுடைய கத்தோலிக்கரும் சேர்ந்த பண்டை உலகின் சக்திகளுக்கும், டியூடர் அரசர்களும் அக்காலத்தில் புதிதாகத் தோன்றிய நடுத்தரமக்களும் இணைந்து, யாருமே எதிர்த்து வெற்றி பெறமுடியாத பேராற்றல் வாய்ந்த பெருஞ்சக்திகளாக விளங்கினர். சமயச்சார்பற்ற குருமார்கள் முதலில் நடுநிலையாளர்களாக இருக்க உடன்பட்டனர். ஆனால், எலிசபெத்து அரசியின் நீண்ட ஆட்சிக் காலத்தில் கோட்டத்தின் குருமார்களும், பள்ளி ஆசிரியர்களும் கத்தோலிக்க மறுப்பு இயக்கத்தின் விளம்பரத்திற்கும், பிரசாரத்திற்கும் உரிய முக்கிய கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டனர்.

இடைக்காலத் திருச் சபையை ஹென்றி தாக்கிய பொழுது இங்கிலாந்தில் ரோமானிய கத்தோலிக்க சமயத்திடம் மக்களுக்கு இருந்துவந்த ஆர்வம் மிகவும் அடங்கி யொடுங்கிக் கிடந்தது. எனவேதான் ஹென்றியின் மகளான மேரி, பழைய சமயம் தழைப்பதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பினை அளித்தாள். அவ்வாய்ப்பைப் பெற்றும் கத்தோலிக்க சமயம் சிறந்தோங்க முடியாமற் போயிற்று. எலிசபெத்தின் ஆட்சிக் காலத்தில் இயேசு சங்கப் (Jesuits) ப் பாதிரிகளின் எதிர்ப்புச் செயல்களால், இழந்த ஆற்றலை அச்சமயம் மீண்டும் பெற்றது. இப் புத்துயிர்ப்பு காலங்கடந்து ஒரு தலைமுறைக்குப்பின் தோன்றியது. இக்காரணத்தால் அது வெற்றி பெற இயலாமற் போயிற்று. மேலும், அப்புத் துயிர்ப்பு ஐரோப்பியப் பெருநிலப் பரப்பில் முளைத்தெழுந்த தாகும். அதனால் அது புதிதாக மலர்ச்சியுறும் தேசிய உணர்வுமிக்க ஆங்கிலேய மக்களுக்குச் சினமூட்டிற்று. கயவர்கள் கத்தோலிக்க சமயத்தை இயேசு சங்கத்தாருடையதாகக் கருதினர்; மேலும் அவர்கள் இயேசு சங்கத்தார் அனைவரும் ஸ்பெயின் நாட்டினைச் சேர்ந்தவர்கள் என்ற தவறான கருத்துடையவர்களாக இருந்தனர். போப்பு ஆண்டவர் தம்முடைய பேறுவிறைல் கடலைப் பயன்படுத்துவதற்கும், கடல் வழியாக அயல் நாடுகளுக்குச் செல்வதற்கும் ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய இருநாடுகளுக்கே, உலகம் உரிமையுடையதாக அறிவித்தார். அதனால் நம்முடைய கடலோடிகள் பெருங் கடல்களில் கப்பல் விடுவதற்குக் கடல் கடந்த நாடுகளோடு போராட வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. டிரேக்கும், அவருடைய மாலுமிகளும், சில வாணிகக் கம்பெனிகளும் கொண்டிருந்த புதிய வாணிக நாட்டமும், கடல்கவாழ்வில் உண்டான கவர்ச்சியும் இங்கிலாந்தின் டியூடர் அரசரின் கடற்படையாக உருவெடுத்தது. இதனுடன் ராலேயின் வருங்காலக் கடல் கடந்த குடியேற்ற நாட்டுப் பேரரசு பற்றிய கனவும் சேர்ந்து பண்டைச் சமயத்திற்கு எதிராகப் புதிய முடியாட்சியின் கொடிக்கீழ் இங்கிலாந்து அணிவகுத்து நின்று போர் முரசு கொட்டியது.

டியூடர் ஆட்சிக்காலம் முழுவதும் கத்தோலிக்க சமய ஆர்வம் வயது முதிர்ச்சியினால் நலிவுற்றும், கத்தோலிக்க மறுப்பு இயக்க ஆர்வம் முதிர்ச்சியடையாதலால் மெலிந்தும் இருந்துவந்தது. ஸ்காட்லாந்தில் கத்தோலிக்க சமயமும், பிரான்சில் புராடஸ்டண்ட்டு சமயமும் அரசினை எதிர்த்ததைப் போன்றே, பிற்காலத்திய இங்கிலாந்தில் தூய்மைவாதிகள் (Puritans) அரசினை எதிர்த்ததைப் போன்றே இக்காலத்தில் அரசுக்கு எதிராக

எத்தகைய எதிர்ப்புகளும் தோன்றவில்லை. அதற்கு மாறாக இருசாராரும் அரசினை எதிர்த்துப் போரிடும் உள்ள உரமற்றவர்களாகவே இருந்தனர். எனவேதான் தற்காலத்தில் அமைச்சரவை மாறுவதை நாம் பொறுமையுடன் ஏற்றுக் கொள்வதைப் போல, புதிய டியூடர் அரசர்கள் ஆட்சிக்கு வந்தபோதெல்லாம், சமயத்தின்கண் செய்யப்படும் குழப்பமிக்க மாறுதல்களைப் பாதிரிமார்களும் பாமர மக்களும் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டனர். குடிமக்கள் மேற்கொண்டொழுக வேண்டிய சமயத்தை, டியூடர் மன்னர்கள் வரையறுத்து நிர்ணயித்ததை ஒரேஒருமுறைதான் மக்கள் எதிர்த்தனர். ஆனால், மக்கள் வெற்றி பெற்றனர். அத்தகைய எதிர்ப்பு மேரி அரசியின் ஆட்சிக்காலத்தில் முந்நூறு கத்தோலிக்க மறுப்பு இயக்க தியாகிகள் நடத்திய அறப்போராக உருவெடுத்தது. அப் போராட்டத்தில் கலந்துகொண்ட தியாகிகள் தீக்கிரையாக்கப் பட்ட போதிலும், அவர்களுடைய நோக்கம் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது, கோமகன்களின் எழுச்சியும், கத்தோலிக்க திருப்பயணத்தினரின் முயற்சியும் பயனற்ற முறையில் தோல்வியுற்றன. அதைப்போன்று வியாட்ஸ் (Wyatts) கத்தோலிக்க மறுப்பு இயக்க கலகமும் தோல்வியடைந்தது. இங்கிலாந்தில் இக்காலம் பெக்கட் (Becket) வாழ்ந்த காலத்தைப்போன்றோ கிராம்வெல் (Cromwell) வாழ்ந்த காலத்தைப் போன்றோ தணியாத சமய ஆர்வம் பெருக்கெடுத்தோடிய காலமன்று. ஆயினும், சமயத்தின் சிறப்புமிக்க சிக்கலான வினைக்களுக் கெல்லாம் முடிவு காண்பதற்காக அச்சமயம் ஆராயப்பெற்றது. ஆகவே, இராஸ்டியன் (Erastian) இளவரசர் அரசுகட்டில் ஏறிய மாட்சிமை பொருந்திய அச்சமயத்தில், போப்பு ஆண்டவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டிருந்த அச்சமயத்தில், பாராளுமன்றத்தின் உதவியைப் பெற்றுத் தம் குடிமக்களின் சமயத்தை வரையறுப்பதற்குரிய முழுத்திட்டத்தை ஹென்றி முறையாகத் தயாரித்தார். நாட்டின் குடிமக்களுள் பெரும்பான்மையோர். அரசர் இவ்வாறு சமயத்தைச் சீர்திருத்துவதைப் பாராட்டி, மனமார வரவேற்றனர். இடைக்காலத்து மக்கள் நாட்டில் ஒரேஒரு சமயம்தான் இருக்கவேண்டும் என்று சமயப் பொறையற்றவர்களாக இருந்துவந்தனர். அவ்வாறு அவர்கள் வாழ்ந்தவரை சமுதாயத்தில் மதகுருக்களின் செல்வாக்கிற்குப் பதிலாக, இராஸ்டியன் (Erastian) அரசாங்கம் வீறுடன் விளங்கியது. சமயப் பேரார்வத்தின் பல்வகை நிலைகளுக்கும், கிளைகளுக்கும், இராஸ்டியன் அரசாங்கத்திற்கும் இடையே நிகழ்ந்த போராட்டங்களிலிருந்து மெல்ல மெல்ல மனிதனின் மனச்சான்று உரிமை பெற்று வளரத் தொடங்கியது.

எலிசபெத்துப் பேரரசி ஆட்சியின் இறுதிக் காலத்தில்தான், என்றைக்காகிலும் ஒருநாள் மக்கள் சபை (House of Commons) போதிய அளவிற்கு அரசியல் வலிமையும், உறுதியான சமய நம்பிக்கையும் பெற்று, சமய விவகாரங்களில் அரசு தலையிடு வதைக் கண்டித்துப் போராடும் என்பதற்குரிய அறிகுறிகள் தோன்றலாயின. இங்கிலையில் பிற்காலத்தில் உண்டாகிய குழப்பங்கள், தனி மனிதனின் மனச்சான்று, தமக்கேயுரிய நம்பிக்கை பெறுமாறு தூண்டப்பட்டதைக் காணுகின்றோம். பழைய திருச்சபையின் அதிகாரங்களைத் துன்புறுத்துவனவாக உள்ளன என்ற அரசாங்கத்தின் பாவனை அதனியல்பில் தற்காலிகமாகத் தோன்றியது என்பதைத் தெரிவிக்கின்றன. எனினும், தனி மனிதனின் மனச்சான்று தொடர்ந்து நிலையாக எதிர்த்துப் போராடுமானால், இறுதியில் அவை முறிந்துவிடும் என்பதும் இவற்றால் புலனாகின்றது.

ஆங்கில மக்களின் விரிவடையும் புறச் சக்திகளை, டியூடர் மன்னர்கள் புதியதொரு துறையில் செலுத்தினர். பிரான்சினைக் கைப்பற்ற வேண்டும் என்ற முயற்சி அக்கறையுடன் மறுபடியும் தொடங்கப் பெறவில்லை. ஐரோப்பாவில் எழுச்சியுற்று ஆற்றல்மிக்கு விளங்கும் புதிய பிரஞ்சு, ஸ்பானிய முடியாட்சிகளின் தாக்குதல்களிலிருந்து நாற்பது அல்லது ஐம்பது லட்சம் மக்களைக்கொண்ட சிறிய இங்கிலாந்து தம்மைத் தற்காத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. ஐரோப்பாவில் புதியதாகத் தற்பொழுது அமைக்கப்பட்டுவரும் அரசுகளின் ஆதிகத்திற் குட்படாது இங்கிலாந்து தனித்து விளங்குவதற்கு ஒரே ஒரு வாய்ப்புத்தான் இருந்தது. உல்சி (Wolsey) முதல் செசில் (Cecil) வரை, சிறந்த அரசியல் சூழ்ச்சித் திறனுகிய நாடுகளின் ஆதிக்கசமநிலைக் கோட்பாட்டைப் (Balance of Power) பின் பற்றுவதைத்தவிர வேறு வழி இல்லை. இக்கோட்பாடே அக்காலச் சூழ்நிலைக்குப் பொருத்தம் உடையதாகத் தோன்றியது. இத்தகைய அச்சத்தின் காரணமாக இங்கிலாந்தின் வரலாற்றிலேயே முதன் முதலாக வியக்கத்தக்க சிறப்பு மிக்க அரசாங்கக் கப்பற்படையை எட்டாம் ஹென்றி நிறுவினர். கெல்ட்டிக்கு வேல்ஸும் (Celtic Wales), அரசியல் குழப்பம் விளைவிக்கும் வெல்ஷ் மார்ச்சும் (Welsh March) ஒடுக்கப் பெற்றன; பிறகு அவை இங்கிலாந்தோடு சம உரிமையுடைய நாடுகளாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டன. எட்டாம் ஹென்றி வெல்ஷ் விவகாரங்களை நன்குணர்ந்தமையால், தற்கால அமைப்பில் எழுந்த ஆங்கிலப் பேரரசு மேற்கண்டதன் முதல் செயலில் முழுவெற்றி பெற்றது. அவர் ஸ்காட்லாந்தைப் பற்றித் தவருன கருத்துகள் கொண்

டிருந்தார். எலிசபெத் அரசியின் காலத்தில் ஸ்காட்லாந்து பிரான்சோடு கொண்டிருந்த தன்னுடைய தொடர்புகளை அறுத்துக்கொண்டு, கத்தோலிக்க சமய எதிர்ப்பு இயக்கத்திற்கு ஆதரவு தரும்வகையில் இங்கிலாந்தோடு ஒன்றுபட்டு நின்றது. அப்பொழுது, எதிர்காலத்தில் அவ்விருநாடுகளும் ஒன்று பட்டு ஒரு நாடாக விளங்குவதற்கேற்ற முன்னேற்பாடுகள் செய்யப்பெற்றன. ஐரோப்பிய வல்லரசுகள் கண்டு அஞ்சுமாறு வருங்காலத்தில் கடலாதிக்கம் வாய்ந்த பிரிட்டானியப் பேரரசு தோன்றப் போவதற்குரிய அறிகுறிகள் காணப்பட்டன. அதே காலத்தில், கடந்த நான்கு நூற்றாண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த அயர்லாந்தைக் கைப்பற்றும் முயற்சி மிகவும் கருத்தோடு செய்யப்பட்டது. ஆயினும், அம்முயற்சி மிகவும் காலம் கடந்த ஒன்றாக இருந்தமையால், இருதிறத்தாருக்கும் அயர்லாந்து கைப்பற்றப்பட்டும் மகிழ்ச்சியுண்டாகாமல் போயிற்று.

இறுதியாகத் தாயகத்தில் உண்டான சமூகப் பொருளாதார மாற்றங்கள் எல்லா வகுப்பினரிலும் உரிமை மிக்க தனி மனிதர்களைத் தோற்றுவித்தன. அவர்கள் தங்கள் விருப்பம் போலச் சுற்றித்திரிந்து செல்வம் தேட முயன்றனர். உள்ள உரமும், உடல் வளமும், நெஞ்சுத் துணிவும் கொண்ட போர் வீரர்களுக்கும், பெரும் பொருளீட்டும் பேரவாக் கொண்டவர்களுக்கும் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட கடல் வழிகள் காத்துக் கிடந்தன. அவ்வழிகள் துடிதுடிப்பும் ஆற்றலும் மிக்கோர்க்குப் பேரும் புகழும் பெற்றுச் சிறந்து விளங்குவதற்கு வாய்ப்புகளை அளித்தன. ஸ்பானிஷ் மெயினுக்குப் (Spanish Main) போவதற்காகக் காத்துக் கிடந்த தனியார் கப்பல்களில், வில்வீரர்களும், உரிமை ஏவலாளர்களும் தோன்றிய குடிகளில் பிறந்த எண்ணற்ற வீரர்கள் சென்று குவிந்தனர். மேலும் மஸ்கோவி (Muscovy)க்கும், லெவன்ட்டுக்கும் (Levant) மற்றும் பிற தூரக் கிழக்கு நாடுகளுக்கும் செல்லும் கப்பல்களிலும் ஆயிரக்கணக்கான ஆங்கிலேய இளைஞர்கள் பேரார்வம் மிக்கவர்களாகச் சென்று நிறைந்தனர். உலகின் எல்லைக்கு அப்பால் இங்கிலாந்து இருந்து வந்த நிலைமாறியது. ஆண்டுதோறும் புதிய உலகப் படம் (Mappamundi) திறக்கப்பட்டதைப்போன்று, இங்கிலாந்து பெரும்பயன் பெறக்கூடிய இடத்தை நெருங்கிக்கொண்டு வரலாயிற்று. ஆர்மடா (Armada) சுக்குநூறாக உடைத்தெறியப்பட்ட நிலையில் இங்கிலாந்து இறுதியாக அதன் பரந்துபட்ட நற்பேற்றின் எல்லையினுள்ளே நுழையலாயிற்று. பொது மக்களின் உள்ளங்களிலும், செயல்களிலும், வீரதீரச்செயல் புரியுமாறு

தோன்றிய அவா, எழுச்சியுறும் தலைமுறையினரிடத்துப் புதியதொரு மனவெழுச்சியை உண்டாக்கிற்று. அவர்கள் புதிய வீடுகளையும், கடல்களையும். அறிவுத் துறையையும், கற்பனையையும் ஆராய்ந்து பார்க்க, உரிமை மிக்க தனியாரின் தன் முயற்சியைத் துணையாகக் கொண்டு வெளியே சென்றனர். அத்தகைய நல்ல வேளையில் ஆங்கில மொழி, மக்களின் நாவிலே அழகும், ஆற்றலும், முற்றிலும் நிறைந்த மொழியாக நடமாடத் தொடங்கியது. அந்நிலையில் அதனை நன்முறையில் பயன்படுத்திப் பொன்றாப் புகழ்பெறுவதற்கென்றே ஷேக்ஸ்பியர் வாழ்ந்தார்.

## இயல் 1

# ஏழாம் ஹென்றியும் புதிய முடியாட்சியும்

டியூடர் ஆட்சிமுறை அமைப்புகளும் பொருளாதார மாறுதல்களும்—துணி வாணிகம்—இரவலர் சட்டம் உழவுத்தொழில் முதலியவற்றின் நிலை.

**அரசர்கள் :**

1. ஏழாம் ஹென்றி கி. பி. 1485–1509.
2. எட்டாம் ஹென்றி கி. பி. 1509-1547.

ஷேக்ஸ்பியர் தம்முடைய வரலாற்று நாடகங்களில் ஏழாம் ஹென்றியின் ஆட்சியைப் பற்றி ஒன்றும் கூறாது அமைதியாக இருந்துவிட்டார். ஹென்றியைப் பற்றி ஒன்றும் கூறாமல் இருப்பதே அறிவுடைமையாகும் என்று அவருடைய நண்பர்கள் யாரோ நன்முறையில் அவருக்கு அறிவுரை கூறியுள்ளார் என்பது இதனால் தெரிகிறது. ஹென்றி ரிச்மாண்டு (Henry Richmond) பாஸ்வர்த்துப் போரில் வாகை சூடிய வீர இளைஞராவர். அவர் மகிழ்ச்சியாகச் சூதாடிக் கொண்டிருப்பதே வாழ்க்கையில் பெறத்தக்க இன்பம் என்று கருதினர். கதைகளில் வரும் அரசிளங்குமரனைப் போன்று, தம் தோழர்களின் கூட்டத்தில் உணர்ச்சித் துடிப்போடு சுவையான செய்திகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதில் ஹென்றிக்கு அளவுகடந்த விருப்பம் இருந்ததாகத் தெரிகிறது. இவ்வாறு இளமைப் பருவத்தைப் பாழாக்கிய அவர், பேரரசர் ஹென்றியாகப் பேரும் புகழும் பெற்றுச் சிறப்புற்று விளங்குவது அரிதாயிற்று. ஆகவே தான், பிற்காலத்திய மக்கள் அவரைப் பதினன்காம் லூயியின்

மறுபதிப்பாகக் கருதினர். அவ்வாறு அவர்கள் கருதியதில் வியப்பொன்றும் இல்லை. ஹென்றி தவறு இழைப்பதில் விழிப் புணர்ச்சியும், சிக்கனமும் உடையவராக இருந்தார். எம்மனித னிடத்தும், எம்மங்கையிடத்தும் தமது உள்ளத்தைத் திறந்து காட்டாத பெருமை உடையவர் அவர். யாருமே புரிந்துகொள்ள முடியாத கூர்மையான நோக்குடன், அமைதியாகப் பெயர் அளவிற்கு அரசனாக நடமாடிக் கொண்டிருந்தார்.

மாறிக்கொண்டிருக்கும் சூழ்நிலைகளைக் கண்டுணரும் ஆற்றல் அவரிடம் இல்லை. எனவே, அவர் தம்மைப் புதிய சூழ்நிலைகளுக் கேற்ப மாற்றியமைத்துக் கொள்ள முடியாத நிலையில் அல்ல லுற்றார். 'வாழ்க்கை என்பது நீண்டதொரு பயணமாகும்'. 'ஒவ் வொரு மனிதனும் தன்னுடைய வாழ்நாளில் பல்வகைப் பாத் திரங்களாக நடிக்கின்றான்' என்னும் பொன்மொழி, ஹென்றியி னுடைய வாழ்க்கையில் பொய்த்துப் போகவில்லை. பாஸ்வர்த்து வெற்றிக்குப் பிறகு, இங்கிலாந்து போர் வீரர்களின் துணையை நாடிநிற்கவில்லை. நாட்டில் ஒழுங்கும் அமைதியும் நிலைநாட்டப் பட வேண்டும் என்பதே அக்காலத்தின் இன்றியமையாத தேவையாக இருந்தது. இத்தகைய குறிக்கோள்களைப் புதிய நிலையங்களில் ஹென்றி புகுத்தினர். வருங்காலத்தில் அந்நிலை யங்கள் தமக்குரிய வாய்ப்புகளை இதன்மூலம் கைப்பற்றுமாறு செய்தார். அதன் பிறகு ஏழாம் ஹென்றி இங்கிலாந்தை, ஏன் உலகத்தையேவிட்டுப் பிரிந்தார்.

டியூடர்களின் முடியாட்சி கால்நடையாளரைப் போன்று மிக மெல்லவே முன்னேற்றத்தைக் கண்டது. எலிசபெத்துப் பேரரசி யின் காலத்தில் அதன் புகழ் ஓங்கியது. ஆனால், அவ்வரசியின் பொன்றாப் புகழிற்குக் காரணமாக இருந்தவர் அவளுடைய பாட்டனாராவர். அவளுடைய பாட்டனாரைப் போலவே அவளும் இரட்டை வேடம் போட்டாள். ஒரு செயலைச் செய்வதற்குரிய வழிவகைகளை நாடுவதில் அவள் முன்னெச்சரிக்கையும் விழிப் புணர்ச்சியும் உடையவளாக இருந்தாள்; குறிக்கோள்களை அடை வதில் தெளிந்த அறிவும் விடாமுயற்சியும் உடையவளாக இருந் தாள். அவர்கள் இருவரும் அரசுகட்டில் ஏறுவதற்கு முன்பே, உலகில் வஞ்சனையும், இடையூறும் நிறைந்திருப்பதை அனுபவத் தின் மூலம் நன்குணர்ந்திருந்தனர். அதனால், தங்கள் ஆணவத் தைத் தாங்களே கடுமையாகக் கட்டுப்படுத்திக் கொண்டனர். 'மாண்புமிக்கவள்' (Gloriana) என்பது எலிசபெத்தின் மறு பெயராகும். அப்பெயர் அவளுடைய இயல்பினை விளக்குவதா கக் கூறுவர். அவளுடைய மற்றொரு செல்லப்பெயர் 'நல்ல

பேரரசி பெஸ்' (Good Queen Bess) என்பதாகும். அவளைப் போலவே, மக்களுடைய அன்பையும் ஆதரவையும் பெறுவதற்குரிய வழிவகைகளை ரிச்மாண்டும் அறிந்திருந்தார். அதனால், சிறப்புமிக்க பாஸ்வர்த்துப் போர்களத்தே, தம்முடைய இனத்தின் புகழ்மிக்க வீரம் தம்மிடத்து வெளிப்படுமாறு போரிட்டுப் பொன்றாப் புகழ் பெற்றார்.

ஏழாம் ஹென்றி தம்முடைய பேர்த்தியைப் போன்றே உள்நாட்டுக் குழப்பங்களுக்கும், வெளிநாட்டுப் போர் உண்டாவதற்குரிய சூழ்நிலைகளுக்கும் இடையே அரசுகட்டில் ஏறினார். ஆனால், எலிசபெத்திற்கு எதிராகத் தோன்றிய இடையூறுகளும், இன்னல்களும் குடிமக்களிடையே காணப்பட்ட சமய வேறுபாட்டுப் பூசல்களால் உண்டானவையாகும். ஹென்றிக்கு உண்டான எதிர்ப்புகள் யாவும் நாட்டின் சமூக நிலையிலிருந்து கிளைத்தெழுந்தனவாகும். சமுதாயத்தில் உயர்நிலையிலிருந்த மக்களிடத்தும், தாழ்நிலையிலிருந்த மக்களிடத்தும் ஒருங்கே ஒழுங்கற்ற முறைகேடான பழக்க வழக்கங்கள் இருந்துவந்தன. 'ஐரோப்பிய மக்களைக் காட்டிலும், இங்கிலாந்து நாட்டு மக்கள், சிறப்பாக வர்ணிகர்களும் குருமார்களும், செல்வச் சிறப்புடையவர்களாக இருந்தனர். உலகிலேயே மிக மென்மையும் நேர்த்தியும் வாய்ந்த ஆடைகளை அவர்கள் அணிந்திருந்தனர்'. அக்காலத்தில் இங்கிலாந்திற்கு வந்த வெனிஸ் (venice) நகரத்தூதனுக்கு இவ்வாறு இங்கிலாந்து காட்சி அளித்தது. ஆயினும், 'இங்கிலாந்தில் திருடர்களும் கொள்ளைக்காரர்களும் எண்ணற்றவர்களாக உள்ளதைப் போன்று, உலகில் வேறெந்த நாடுகளிலும் காணமுடியாது. திருட்டும், கொலையும் மலிந்து கிடக்கும் இந்நாட்டில், நண்பகற் பொழுதில்தான் சிலர் வெளியே போய்வரத் துணிகின்றனர். சில நகரங்களில் இரவில் யாருமே வீட்டைவிட்டு வெளியே வருவதில்லை. ஆனால் லண்டன் மாநகரிலோ விரல்விட்டு எண்ணக்கூடியவர்களைத்தான் வெளியே காணமுடியும்' என்று வெனிஸ் நகரத் தூதன் தன்னுடைய நாட்டுத் தலைவனுக்கு எழுதியுள்ளமை சிந்திக்கத்தக்கதாகும். [1]

[1] இங்கிலாந்தில் டியூடர் ஆட்சியின் தொடக்க காலத்தைப் பற்றி, போலிடோர் வெர்ஜில் (Polvdore Vergil) என்னும் மற்றொரு இத்தாலி நாட்டுப் பேட்டியாளர் இதைப் போன்ற கருத்துடையவராக இருந்தார். ஐரோப்பாவின் உழவர்களுக்கு மாறாக இறைச்சியை உண்டு வாழும் இங்கிலாந்து உழவர்கள் செழிப்புடன் விளங்குவதைக் கண்டு அவர் வியப்புற்றார்.

ராபின்வுட் குழுவைச் சார்ந்த கொள்ளைக் கூட்டத்தினர் முகமூடிகள் அணிந்துகொண்டும், முகங்களில் கரி பூசிக்கொண்டும் தனியார் பூங்காக்களிலும், அரசனுடைய காவற்காடுகளிலும் வளர்ந்துவந்த மான்களைக் கொன்று அழித்துக் கொடுமைகள் பல செய்துவந்தனர். எனினும் அவர்களுடைய கொடுமைகளைக் கண்டித்துப் பேசுவோர் நாட்டிலே ஒருவருமில்லாமற் போயினர். பெரும்பாலான வீடுகளிலும் மாளிகைகளிலும் பெரும் மன்றங்களைக் காத்து வந்த உரிமை ஏவலாளர்கள், தங்கள் பிரபு வந்திருக்கும் விருந்தினரோடு அரச குடும்பத்தில் புதிதாகக் கலகமும் குழப்பங்களும் உண்டாகப் போவதைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதை ஒட்டுக் கேட்டனர். நிலைமையைப் புரிந்துகொண்டபிறகு, அவர்கள் சுற்றுப்பக்கத்திலுள்ள பெரிய தனக்காரர் வீட்டிலுள்ள மனிதர்களை அடித்தும், சிற்சில சமயங்களில் களஞ்சியங்களைக் கொள்ளையடித்தும் மனநிறைவு பெற்றனர். மேலும், அவர்கள் அயலாருடைய ஆடுமாடுகளைக் கவர்ந்துசெல்லுவர்; தவிரவும் அவர்கள் தம்முடன் பகைமைகொண்ட மடாலயங்களின் வாயில்களைத் தீக்கிரையாக்கியும் வந்தனர். ஒவ்வொரு கோட்டத்திலும் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்குப் பெருந்தடையாகத் திருச்சபை தனிஉரிமைகளும், அடைக்கல உரிமைகளும் இருந்துவந்தன. தீர்ப்புச் சான்றுளர் குழுவினர் (Jury) இந்நாள் வரை அச்சுறுத்தப்பெற்றும், பணம் கையூட்டாகக் கொடுக்கப்பெற்றும் வந்தனர்.

இத்தகைய முறைகேடான பழக்க வழக்கங்களோடு அரச மரபின் உரிமைப் பிரச்சினை சிக்கிக்கொண்டிருந்தது. பதினைந்து ஆண்டுகள் கழிந்த பிறகுதான், பாஸ்வர்த் போர்க்களம், ரோஜாப்பூ அணிந்து வீரர்கள் போரிட்ட போரினை (War of the roses) முற்றுப்பெறுமாறு செய்தது என்பதை உறுதியாக நம்பமுடிந்தது. யார்க்கு (yark) அரச குடும்பத்தைச்சார்ந்த மங்கையை ஹென்றி மனம் புரிந்துகொண்டார். இவ்வாறு பரம்பரைப் பகைமை கொண்டாடாது ரோஜாப்பூ மரபினரோடு தொடர்பு கொண்டமையால் அரசுகட்டிலுக்குத் தமக்குரிய உரிமையை ஓரளவிற்கு அவர் பலப்படுத்திக் கொண்டார். மேலும், அதனால் நாட்டிலே அமைதியையும், நேச உறவையையும் நிலைநாட்டினர். பழைய அரச மரபில் தோன்றிய சிலர் உயிருடன் இருந்தனர். அவர்கள் தங்களுக்கு உண்மையிலேயே அரசராவதற்கு உரிமை உண்டு என்று கிளர்ச்சி செய்வதற்குத் தயாராக இருந்தனர். பிற்கால ஸ்டூவர்ட் அரசர்களும், அவர்களுடைய ஆதரவாளர்களும்

புதிதாகக் கற்பித்த தெய்விக அரச மரபுரிமைப்படியல்லாமல், மக்களுடைய பெருவிருப்பத்திற்கிணங்கியே டியூடர்கள் அரசுகட்டிலைக் கைப்பற்றினார்கள். இவ்வாறு மக்கள் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டே டியூடர்களின் ஆட்சி உரிமை அமைந்தது எனலாம்.

ஹென்றி செய்துகொண்ட இத்திருமணத்தால் யார்க்கிய அரசமரபினை மீண்டும் அரசுகட்டில் ஏற்ற விரும்பிய பிரபுக்களும் பண்பாளர்களும் மனநிறைவு அடையவில்லை. பிற்காலத்திய யாகோபியர்களைப் (Jocobites) போன்றே, அவர்கள் வடக்குப் பகுதியைச் சார்ந்த அரசமரபிடத்துத் துணிவும் தன்னம்பிக்கையும் உடையவர்களாக இருந்தனர். அயர்லாந்தில் சிறிது காலம் அவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். போலி உரிமை கொண்டாடிய லாம்பெர்ட் சிம்னெல் (Lambert Simnel) பெர்க்கின் வார்பெக் (Perkin Warbech) போன்றோரை அக்கிளர்ச்சிக்காரர்கள் இருமுறை தேர்ந்தெடுத்தனர். ஆனால் அவர்களை நம்பி அக்குழுவினர் ஏமாற்றம் அடையநேரிட்டது. இவ் ஏமாற்றம் ஹென்றியின் நற்பேற்றினால் நிகழ்ந்தது என்றே கூறலாம். ஆனால் டியூடர் ஆட்சியின் தொடக்க காலத்தில் பிரபுக்களிடையே, அரசனிடத்துக் கொண்டிருந்த பற்றுறுதி சீர்குலைந்ததையும், அரசாங்கத்தின் படை ஆற்றல் அற்றிருந்ததையும் இப்பல் குழுவும் பாழ் செய்யும் உட் பகையினரும் கொடுமைகள் பலவற்றை நெடுங்காலம் செய்து வந்ததையும் இவை நினைவுபடுத்துகின்றன.

அக்காலத்தில் 'மாட்டிறைச்சி உண்ணும்' மெய்க்காவல் படையினரைத் தவிர, நிலையான படை ஒன்றை அரசு வைத்திருந்ததாகத் தெரியவில்லை. பிரிட்டனின் வடக்குப் பகுதியில் லாம்பர்ட் சிம்னெல்லை, 'ஆறும் எட்வர்ட்டு' அரசர் என்று பிரபுக்கள் சிலர் அறிவித்தனர்; இவ்வாறு இங்கிலாந்தின் அரசுகட்டிலுக்குப் போட்டியாக அரச உரிமையற்ற ஒருவரை அரச உரிமையுடையவர் போல நடிக்குமாறு செய்தனர். அவர்கள் ஐரிஷ் வீரர்களைக்கொண்ட படையொன்றையும் ஜெர்மானியக் கூலிப்படை ஒன்றையும் தங்களுக்கு உதவியாகக் கொண்டிருந்தனர். ஸ்டோக் (Stoke) என்னும் இடத்தில் அவர்களை எதிர்த்து ஹென்றி நடத்திய போரில் (1487) ஹென்றி வெற்றிபெற்றதற்குக் காரணம், அவர் போருக்காகத் திரட்டிய-நெருக்கடி நேரத்திற்கு உதவிய படையின் ஆற்றலேயாகும். அடிப்படையில் பணித்துறை அலுவலாளர்கள், உழவர்கள், நகரக் குடிமக்கள் முதலியோர் வீரர்களாகச் சேர்ந்திருந்தனர். மேலும் வரிவிதிப்பை

எதிர்த்துப் போருக்கு எழுந்த கார்னிஷ் மக்களை (Cornishmen) பிளாக்கீத்தில் 1497-ல் அடக்கியொடுக்க உதவியதும் இவ் வணி வகுப்பேயாகும்.[1] ஸ்காட்லாந்து அல்லது, வேறிடங்களில் நடந்த போர்களுக்காகச் சில சமயங்களில் அரசு, அயல்நாட்டுக் கூலிப்படையினைப் பயன்படுத்திக்கொண்டது. ஆனால், அவர் களைக்கொண்ட ஒழுங்கான படையினை நிலையாக வைத்துக் காப்பதற்குப் போதிய பணவசதி அரசருக்கு இல்லாமற் போயிற்று.

ஏழாம் ஹென்றியோ, அவருக்குப் பின்வந்த டியூடர் அரசர் களோ நிலைப்படையை நிறுவவில்லை அல்லது நாட்டுப்புறங்களை மத்திய அரசிடத்துக் குவிக்கப்பெற்ற அதிகாரங்களைக்கொண்டு ஆட்சி புரிவதற்குரிய அமைப்பினை நிறுவி ஊதியமும் அவர்கள் கொடுக்கவில்லை. அக்கால ஐரோப்பிய வல்லரசுகளின் போக்கி லிருந்து டியூடர்களின் ஆட்சிமுறைக் கோட்பாடு மாறுபட் டிருந்தது. ஹென்றியும், அவர் வழி வந்தோரும் அரசரின் ஆலோசனைக் குழுவையும் (King's Council), பாராளுமன்றம், பொதுச்சட்டம், அமைதிகாண் நீதிபதிகள், தீர்ப்புச் சான்றுளர் குழு முதலிய இடைக்கால ஆட்சி முறை நிலையங்களான பழைய அமைப்புகளையும் காத்துப் போற்றினர். ஆனால், அவற்றிற்கு ஒரு புதிய ஆற்றலை அளித்து, அரசின் திறமைக்குத் தடையாக அவற்றை இருக்காமல் செய்தனர். அவற்றை அரசரின் அதி காரத்தை விரிவு படுத்துவதற்கு உரிய கருவிகளாகப் பயன் படுத்தினர். இவ்வாறு தற்கால நாகரிகத்திற்கு இன்றியமை யாத, சட்டத்திற்குட்பட்டு அடங்கி நடத்தல் என்னும் பண் பினைப் பயின்றபொழுது ஆங்கில மக்கள் தங்கள் பழைய உரிமைகளைப் பறிகொடுக்க வில்லை; அவர்கள் தேசிய வாழ்க் கையின் தொடர்பினை அறுத்துக்கொள்ளவும் இல்லை. ‘அரசன் தொன்மைச் சிறப்பு வாய்ந்த வழக்காற்று விதிகளில் ஒன்றை மாற்றப் போவதாகத் தெரிவிப்பானானால், அச்செயலை ஒவ் வொரு ஆங்கிலேயனும் தங்கள் உடலிலிருந்து உயிரினைப் பிரிப் பதைப் போன்றக் கொடுஞ் செயலாகக் கருதினர்’ என்று வெனிஸ் நகரத் தூதன் மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்க

[1] ‘நெடுங்காலத்திற்குப் பிறகு உண்மையான ஆறும் எட்வர்ட்டு முன்பு, சொற்பொழிவு மேடையிலிருந்து, என்னுடைய தகப்பனார் ஓர் உழவர்......நூறு ஆடுகளுக்காக அவர் நெடுந்தொலைவு நடந்து போனார். என்னுடைய தாய் முப்பது பசுக்களை நாள்தோறும் பால் கறந்தாள். என் தகப்பனார் அரசனின் குதிரைகளுக்குச் சேணம் அணிவிக்கும் தொழிலைச் செய்து அரசனிடத்துக் கூலி பெற்றார். அவர் பிளாக்கீத் போர்க்களத்திற்குச் சென்றபொழுது அவருடைய குதிரையின் சேணத் தைக் கட்டிவிட்டதை இன்னும் நான் மறக்கவில்லை’ என்று லாட்டிமர் கூறினார்.

தாகும். எனவே, வல்லாட்சி ஒன்றின் மூலமாகத்தான் நாட்டிலே அமைதியை நிலைநாட்ட முடியும் என்று நம்பி வந்த ஐரோப்பிய நாடுகளுக்கு, ஏழாம் ஹென்றி இங்கிலாந்திலே சமூக அமைதியை நிலைநாட்டியமை பெருவியப்பாக இருந்தது. அதற்கு ஹென்றி கடைப்பிடித்த முறை சிறப்புடையதாகும். தம்முடைய ஆட்சிக்குட்பட்ட குடிமக்களின் விருப்பு வெறுப்புக்களை நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்ப அவர் செயலாற்றினர்.

அரசனின் ஆலோசனை சபை பழைய வடிவில், புதிய சட்ட மன்றமாகப் பணியாற்றுவதற்குரிய அச்சாணியாக அமைந்தது. லங்காஸ்டர் அரசமரபின்கீழ், இச்சபை, பாராளுமன்றத்தைவிட உயர்குடி மக்கள் போர்புரியும் சபையாகச் சிறப்புற்று விளங்கியது.[1] அரசாங்கத்தின் படைகளை அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது என்னும் உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக அக்குழுவிற்குள் பிரபுக்கள் இடம்பெற முயன்றனர். ஆனல் ஏழாம் ஹென்றியும், எட்டாம் ஹென்றியும், யார்க்கிய அரசர்கள் முன்பு காட்டிய வழியினைப் பின்பற்றினர். அரசனல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், அரசனுக்கு அடங்கி நடப்பவர்களுமான பிரபுக்களைத் தவிர மற்றவர்கள் பிரிவி கவுன்சிலில் சேர்க்கப்படவில்லை.

உயர் குடிமக்களைப் பிரிவிகவுன்சிலில் சேர்த்துக் கொண்டமை டியூடர்களின் அரசியல் சூழ்ச்சியின் முதற் குறிக்கோளாகும். எட்டாம் ஹென்றியின் ஆட்சியில் தமது சார்பில் ஆட்சி புரிவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினறு பேர்களைக் கொண்ட காப்பாளர் (Regent) களில் ஒரு பிரபுகூட பன்னிரண்டாண்டுகள் அம்மன்றத்தில் நிலையாக இருந்தவர்கள் அல்லர். சிறுபான்மையோர் ஆதரவைப் பெற்றிருந்த ஆரும் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில், இம்மன்றம் முற்றிலும் வேறுபட்ட தோற்றமுடையதாக இருந்தது. 'எலிசபெத்தின் முதற் பாராளுமன்றக் கூட்டத்தில் வேண்டுமென்றே அறியாமை நிறைந்தவர்களாக வளர்க்கப்பட்டு வரும் பிரபுக்கள் சக்தியைவிட, அரசு தொண்டு செய்யக்கூடிய புதிய மக்களை ஊக்குவிக்க விரும்புகிறது' என்று விளக்கமாகக் கூறப்பட்டது. ஆரும் எட்வர்ட்டு ஆட்சிக் காலத்தில் 'லாட்டிமர் (Latimer)' உயர்குடி மக்கள் தலைமைப் பிரபுவாக (Lord President) நியமிக்கப்படாமைக்குக் காரணம் அவர்கள்

[1] ஏழாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில், அரசனின் பேரவையான ஆலோசனை சபைக்குள் மிகவும் நம்பிக்கைக்குரிய அரசியல், அமைப்பாக பிரிவி கவுன்சில்' என்னும் உட்குழு தோன்றியது.

கற்றறிந்தவர்களாக இல்லாமையேயாகும் என்று மொழிந்துள்ளார். இவற்றால் இத்தகைய பெருமாற்றத்திற்குப் பிரபுக்களின் குறைபாடே காரணம் என்பது புலனாகிறது.

டியூடர்களுள் முதல் மன்னனான ஏழாம் ஹென்றியின் காலத்தில், 'பிரிவி கவுன்சில்' உறுப்பினர்கள் யாவரும் நடுத்தர வகுப்பைச் சார்ந்த குருமார்களே (Clergy) யாவர். அவர்கள் பாக்ஸ் (Fox), மார்ட்டன் போன்ற பணித்துறை அலுவலாளர்களும், எம்ப்சன் (Empson), டட்லி (Dudley) போன்ற வழக்கறிஞர்களுமாவர். அவர்கள் யாவரும் ஏழாம் ஹென்றிக்குப் பல்லாற்றானும் கடமைப்பட்டவர்களாக இருந்தனர். எவ்வாறாகிலும் மக்களிடமிருந்து வரிப்பணத்தைப் பிடுங்கிக் கொண்டுவந்து அவர்கள் தம்முடைய கருவூலத்தை நிரப்புகின்ற திறமையை அளவுகோலாகக் கொண்டு ஹென்றி அவர்களை மதிப்பிட்டார். சமயச் சீர்திருத்த' இயக்கத்திற்குப் பிறகு பிரிவி கவுன்சிலிலும் வழக்கறிஞர்கள் முதலிடம் பெற்றனர். ஆனால், குருமார்கள் தங்கள் சிறப்பினை ஓரளவிற்கு இழக்கலாயினர். வாணிகச் சமூகத் தொடர்பு கொண்ட செசில் (Cecils), வல்சிங்காம்ஸ் (Walsinghams), பேக்கன் (Bacon) போன்றவர்கள் புதுமுறைப் பிரிவிகவுன்சிலர்களாவர். அத்தகையோர் பண்பாளர்களிடையே (Gentlemen) விரல் விட்டு எண்ணக்கூடியவர்களாகவே இருந்தனர். இம் மனிதர்கள் பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்றும், அனுபவ அறிவினைப் பெற்றும் இருந்தனர். மேலும் அவர்கள் எல்லாவகையான அரசியல் சூழ்திறனுக்கும், ஆட்சித்திறனுக்கும் பயன்படும் வகையில் சட்டங்களை நுட்பமாகக் கற்றறிந்திருந்தனர். எலிசபெத்துப் பேரரசியின் ஆட்சிக்காலத்து அரசாங்கம்பெற்ற மாபெரும் வெற்றிகளுக்கெல்லாம் இத்தகைய மக்களே காரணமாக இருந்தனர். அவர்கள் ஏழாம் ஹென்றியின்கவுன்சிலர்களைக் காட்டிலும் தெளிந்த அறிவும், உரிமைமிக்க மனவெழுச்சியும் உடையவர்களாக இருந்தனர். ஆயினும் அவர்கள் அரசிடத்துக் கொண்ட பற்றுதலில்சிறிதும் குறைந்த ஊழியர்கள் அல்லர்.

டியூடர் பேரரசர்கள் வெளியிடும் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காகக் கவுன்சில் அரும்பெரும் சட்டங்களை இயற்றும் பணியில் ஈடுபட்டது. பாராளுமன்றத்தில் கவுன்சிலர்கள், பாராளுமன்றம் இதுவரை எதிர்த்துப்பேசாது ஏற்றுக்கொண்டு வரும் உடனடிச் சட்டங்களை (Ordinance) யும் அரசறிக்கைகளையும் (Proclamation) சட்டமாகநிறைவேற்றுவதேபிரிவிகவுன்சிலின் சட்டமன்ற நடவடிக்கைகளாக இருந்துவந்தன. டியூடர் ஆட்சி அமைப்பின் இன்றியமையாத உறுப்பாகப் பாராளுமன்றம் சிறப்

புறத் தொடங்கியது. எட்டாம் ஹென்றிக்குப் பிறகு உல்சியோடு (Wolsey) கொண்ட உறவு முறிந்துவிட்டது. அதன்பிறகு அவருடைய சீர்திருத்தக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கியபின், பாராளுமன்றம் மேன்மேலும் சீரும் சிறப்பும்பெற்று விளங்கியது. ஏழாம் எட்வர்ட்டின் ஆட்சிக்காலத்திலும், அவருடைய மகனின் ஆட்சியின் தொடக்கக்காலத்திலும் பாராளுமன்றம் பெருஞ்சிறப்புற்றுவிளங்கவில்லை. அக்காலத்தில் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் எப்பொழுதோ சிற்சில சமயங்களில் கூட்டப் பெற்றன. ஆனால், பாராளுமன்றக் கூட்ட நடவடிக்கைகளில் மக்களுக்குச் சிறிதளவு ஆர்வமும் இருந்ததாகத் தெரியவில்லை, ஆறு ஆண்டுகள் தொடர்ந்து பாராளுமன்றம் கூட்டப்படாமல் இருந்தமைக்கு எத்தகைய எதிர்ப்பையும் மக்கள் காட்டவில்லை; பாராளுமன்றம் கூடிய காலத்தும் அதன் உறுப்பினராவதற்குப் போட்டியில்லை. மேலும் ஏழாம் ஹென்றி செல்வர்களிடமிருந்து 'கட்டாய நன்கொடை'யை அரசனது அதிகாரததிற்குப் புறம்பாகத் தண்டிக் கொடுஞ்செயல் புரிந்தபொழுது, அரசியல் அமைப்பிற்குட்பட்ட எத்தகைய எதிர்ப்பும் நாட்டிலே தோன்றவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். பிற்கால டியூடர் ஆட்சியில் கீழ்ச்சபையில் பிரிவிகவுன்சிலர்கள் இடம்பெற்றனர். மேலும் அதன் நடவடிக்கைகளைச் செம்மையாக அவர்கள் நெறிப்படுத்தி வந்தனர். அவர்களுடைய அதிகாரம் மக்களைப் பொறுத்து அமையாமல் அரசினைப் பொறுத்தே அமைந்தது. இக்கவுன்சில் ஓரளவிற்கு இக்கால அமைச்சரவையின் கடமைகளைச் செயலாற்றியது எனலாம். பிரிவி கவுன்சில் உறுப்பினர்கள் தம்முடைய மன்றத்துப் பிற உறுப்பினர்களோடு அரசின் விருப்பத்தை நன்கு உணருமாறு தெளிவாக விளக்குவதையே தங்களுடைய தலையாய கடமையாகக் கொண்டிருந்தனர். இத்தலைமைப் பொறுப்பு மக்கள்சபை (House of Commons) உறுப்பினர்களுக்கு அரசாங்க ஆட்சிமுறையில் உண்டாகும் உண்மையான சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும், நாட்டின் சிறந்த நிகழ்ச்சிகளை நிறைவேற்றுவதற்கும் உரிய வழிவகைகளைக் கற்பிக்கும் சிறந்த முறையாக அமைந்தது. இத்தகைய இடைக்காலப் பயிற்சிப் பருவநிலையைப் பெருத காரணத்தினால்தான், பிற நாடுகளில் கூட்டப்பெற்ற பாராளுமன்றங்கள் திடீரென்று அவற்றிடத்து அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டபொழுது, செயல்முறைகளைச் செவ்வையாக நிறைவேற்றுவதற்குரிய அனுபவ அறிவு இல்லாமையால் தோல்வியுற்றன.

டியூடர்களின் ஆட்சிக்காலத்துக் கவுன்சில் தம்முடைய உரிமைகளின் மூலம் உடனடிச் சட்டங்களை நிறைவேற்றுவ

தாலும், மறைமுகமாகப் பாராளுமன்றங்களில் சட்டங்கள் நிறைவேற்றுப்படுவதாலும் சட்டமியற்றும் செயல் பெருகியது. அத்துடன் நிர்வாகத்தில் அதன் பழைய நீதி நிர்வாக ஆற்றலை மீண்டும் விரைவாகப் பெறுவதற்கு அது தன்னுடைய உறுப்பினர்களைக் கொண்ட ஒரு துணைக் குழுவினை அமைத்தது. அதனிடத்து நார்மானிய அரசர் காலத்திய 'மன்னரின் மன்றம்' (Curia Regis) கவனித்து வந்த நீதி நிர்வாகத்திற்குரிய அதிகாரங்களைப், பாராளு மன்றத்தின் புதிய குழுவாகிய இதனிடத்து ஒப்படைத்தது. இப்புதுக்குழுவில், பிரிவி கவுன்சிலின் மாண்புமிக்க உறுப்பினர்கள் சிலர் சிறப்பிடம் பெற்றனர். இக்குழு நாட்டு மக்கள் யாருமே அச்சுறுத்தி அடக்கி ஒடுக்கி விடலாம் என்று நினைக்க முடியாத பெருஞ்சிறப்பு வாய்ந்த நீதி மன்றமாகச் சிறப்புற்று விளங்கியது. இப்புது நீதி மன்றத்தினை 'விண்மீன் மன்றம்' (Star Chamber) என்னும் பெயரிட்டழைத்தனர். இம்மன்றம் ஏழை எளியோர்களை வலியோரின் கொடுமையினின்று காத்தமையால், நாட்டிலே சீரும் சிறப்பும், ஏற்றமும் எழிலும் பெற்றுத் திகழ்ந்தது. ஏழாம் ஹென்றி, நாட்டிலே தோன்றிய நீதிக்கு மாறான கலகக்காரர்களின் அழிவுச் செயல்களையும், கொள்ளை, கொலை முதலிய கொடுஞ் செயல்களையும் 'விண் மீன் மன்றத்தினை' முக்கிய கருவியாகக் கொண்டே அடக்கி ஒடுக்கினர். ஷேக்ஸ்பியரின் '**மகிழ்ச்சியுறு மனைவியர்**' ('Merry Wives') என்னும் நாடகத்தைப் படிப்போர், அக்காலத்தில் 'விண் மீன் மன்றத்தை'க் கருவியாகப் பயன்படுத்தும் முறை சிறப்புற்று விளங்கியதை அறிவர் :

ஷாலோ : மாவீரனே! நீ என்னுடைய ஆட்களை எல்லாம் அடித்துத் துன்புறுத்தினாய்; என்னுடைய மான்களைக்கொன்றாய்; என்னுடைய மாளிகையின் வாயிற்கதவுகளை உடைத்தெறிந்தாய். இவ்வாறு நீ கலகம் செய்கிறாய். நான் இதைப் பற்றி விண்மீன் மன்றத்தில் முறையிடப் போகிறேன். அங்குச் சர்ஜான் பால் ஸ்டாப்புகள் இருபது பேர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு திரு. ராபர்ட் ஷாலோவை அவதூறாகப் பேசக் கூடாது......மன்றம் இதை விசாரிக்கப் போகிறது......!

பால்ஸ்டாப்பு : ஆனால், நான் உன்னுடைய வைப்பாட்டியின் மகளுக்கு முத்தம் கொடுக்கவில்லையே?

ஷாலோ : அடபோ! உள்ளத்தைப் புண் படுத்தாதே!... இதற்கு விடைக் கூறித்தான் ஆகவேண்டும்...இதை மன்றம் அறியட்டும்!

விண்மீன் மன்றம் மக்களுடைய மனத்தில் ஆழப்பதியுமாறு செய்த பேரச்சத்தின் மூலம் பொது நீதி மன்றங்கள் தங்களுடைய உண்மை விடுதலையை மீண்டும் பெற்றன. அவை விண்மீன் மன்றத்தைக் காட்டிலும் அவ்வட்டார மக்களின் தீய செல்வாக்கிற்கும் அச்சுறுத்தலுக்கும் இரையாகாமல் சிறப்புற்று விளங்கத் தொடங்கின. ஆற்றல் மிக்க அண்டை அயலாருக்கு எதிராகத் தங்கள் தீர்ப்பினை வழங்குவதற்குத் தீர்ப்புச் சான்றுளர் குழுவினர் (Jury) சிறிதும் அஞ்சவில்லை. ஆனால் வழக்கினை உண்மைக்கு மாருக ஆராய்ந்து தீர்ப்பு வழங்கினாலோ, அரசின் விருப்பத்திற்கு மாருகத் தீர்ப்பு வழங்கினாலோ விண்மீன் மன்றத்திற்கு முன்பு தாங்கள் செய்ததவற்றிற்குக் காரணங் கூற வேண்டுமே என்று அவர்கள் பெரிதும் அஞ்சினர். விண்மீன் மன்றத்தைப் பெரிதும் ஒத்ததான பிரிவி கவுன்சிலின் மற்றொரு நீதி நிர்வாக அமைப்பு வட இங்கிலாந்தில் இருந்தது. நில மானியப் படைமுறையாலும், எல்லைப்புறப் படைத்துறை மரபு வழக்குகளாலும் நையாண்டி செய்யப்பட்டு வந்த பொதுச் சட்டங்களை நிறைவேற்றும் நீதி மன்றங்களைக் கொண்ட[1] வடக்குப் பகுதியிலும், வேல்ஸிலும் அது சிறப்புரிமை பெற்று விளங்கியது.

ஏழாம் ஹென்றியின் ஆட்சியில் சிறப்புரிமை முறை மன்றங்கள் (Prerogative Courts), அரசரின் பொது முறை மன்றங்கள் ஆகிய இரண்டும் சேர்ந்து நீதிநிர்வாக ஆட்சித்துறையாக அரசின் ஆதரவில் வளர்ச்சியுற்றது. ஆனால், டியூடர்கள் ஆட்சியின் இறுதிக் காலத்தில் பிரிவிகவுன்சிலிலிருந்து கிளைத்தெழுந்த சிறப்புரிமை முறை மன்றத்திற்கும், பொதுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கிய முறை மன்றங்களுக்குக்கும் இடையே கடுமையான பகைமை உண்டானதை நாடறியும். மறுமலர்ச்சி இயக்கத்தின் பயனாக, ரோமானிய சிவில் சட்டத்தைப் பயின்ற சட்ட வல்லுநர்கள், சிறப்புரிமை முறை மன்றங்களில் அச்சட்டத்தைப் புகுத்த முயன்றமையால், இங்கிலாந்தினுள் இவ்விருவகை முறை மன்றங்களுக்கும் இடையே பகைமை உண்டாயிற்று. டியூடர்கள் ஆட்சியின் இறுதிக்காலத்தில் சிறப்புரிமை முறை மன்றங்கள் மிகப் பலவாக இருந்தன. அவை சுறுசுறுப்பாகக் கடமைகளைச் செயலாற்றுவதில் தேர்ச்சி பெற்றும் இருந்தன. விண்மீன் மன்றமும் வேண்டுகோள் மன்றமும் (Requests), கடற் படைமுறை மன்றமும், வடக்குப் பகுதியின் முறை மன்றங்களும், அரசின் ஆணைக் குழுவினரைக் கொண்ட

[1] டியூடர்கள் வேல்ஸோடு உடன்படிக்கை செய்து கொண்டதை இப்பிரிவின் ஏழாம் இயலில் காண்க.

திருச்சபை முறை மன்றங்களும் (Ecclesiastical Court of High Commission) அரசர் செய்த சீர்திருத்தத்தின் எல்லை மீறிய வளர்ச்சியின் பயனுகத் தோன்றியவையாகும். நாட்டுப் பொது மக்களின் நன்மைக்கு எதிராக இம்முறை மன்றங்கள், அரசனின் ஊழியர்களுக்குப் பேராதரவு தந்தன. இதனை ஐரோப்பிய நாடுகளின் சட்டத்தில், சிறப்பாகப் பிரான்சில் 'ஆட்சித்துறைச் சட்டம்' (Droit Administratif) என்பர். சில சிறப்புரிமை முறை மன்றங்கள், அலுவல் பற்றிய உறுதி மொழிகளை வாங்கும் முறையைக் கையாளத் தொடங்கின. இதனல், கைதிகளை வற்புறுத்தி அவனுக்கு எதிராகச் சான்று பகருமாறு உறுதி மொழிகளைப் பெற்றனர். இங்கிலாந்தின் பொதுச் சட்டத்தில், சித்திரவதை செய்தல் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருந்தது. எனினும் பிரிவிகவுன்சில் சிற்சில சமயங்களில் குற்றவாளிகளைச் சித்திரவதை செய்து புலன் விசாரணை நடத்தியது. பொதுச் சட்டத்திற்கும் அதற்குப் போட்டியாக எழுந்த மற்றவற்றிற்கும் இடையே யோராட்டத்தை முதன்முதலில் முதலாம் ஜேம்ஸ் ஆட்சிக்காலத்தில் கோக்கு (Coke) என்பவர் தொடங்கினர். இப்போராட்டம் பாராளுமன்றத்திற்கும், ஸ்டுவர்ட்டு மன்னர் களுக்கும் இடையே தோன்றிய போராட்டத்தின் முக்கிய பிரச்சினையாகும். கி. பி. 1641-ல், இறுதியாகப் பொதுச் சட்டம் வெற்றி பெற்றது. கி. பி. 1688-ல் மீண்டும் அது வலியுறுத்தப்பட்டது. ஆங்கில நாட்டுச் சட்டம் பிற்காலத்தில் சிறப்புரிமை முறை மன்றங்களைச் சார்ந்திராமையால், குடிமக் களின் உரிமைகள் மேன்மையுற்றன. ஆனல், டியூடர் ஆட்சிக் காலத்தில் சிறப்புரிமை முறை மன்றங்கள் நீதி நிர்வாக ஆட்சி முறையில் சிறப்பிடம் பெற்று விளங்கியதும் ஒரு தேவையாகவே கருதப்பட்டது.

அடுத்த நூற்றாண்டில் பாராளுமன்றத்தின் வாக்குரிமை களைப் பெருத வரி விதிப்பை, ஆங்கிலேய மக்கள் எதிர்த்த னர். அதைப் போன்று பதினரும் நூற்றாண்டிலும் அதிக வரிச்சுமையை அவர்கள் வன்மையாக எதிர்த்தனர். இதனல் அரசின் அதிகாரத்தினை வரையறுப்பது சிறிதும் ஆற்றலில்லா அரிய முயற்சியாகப் போயிற்று. மக்கள் 'உரிமைகள்' எனும் படைக்கலந்தாங்கியமையால், அரசர்கள் தனித்து நிற்க நேரிட்டபொழுது, டியூடர் மன்னர்கள் சிக்கனமாகவும் செட் டாகவும் வாழவேண்டியவர்களாயினர். கி. பி. 1497-ல் வரி விதிப்பை எதிர்த்து கிராம்வெல் மட்டும் தனித்து எழுந்த பொழுதே, அரசு பெரிதும் ஆட்டம் கொடுத்தது. அப்பொழுது, ஏழாம் ஹென்றியும், அவருக்குப் பின்வந்தோரும் தங்கள்

செலவில் ஒரு பகுதியைக் குறைப்பதற்காக, ஊதியம் கொடுக்கப்படும் ஆட்சித்துறையினை நாட்டுப் புறங்களில் அமைக்காது, ஊதியம் பெறாது பணியாற்றிய அதிகாரிகளிடத்தே அதிகப்படியான கடமைகளை ஒப்படைக்கலாயினர். அதனால் நாட்டுப் புறத்தில் அமைதிகாண் நீதிபதிகளாக அரசனால் அமர்த்தப்பட்டிருந்த உரிமையுடன் வாழ்ந்த பண்பாளர்கள் துன்புற்றனர். டியூடர் காலத்திய இங்கிலாந்து அமைதிகாண் நீதிபதிகள் மூலமாகப் பிரிவிகவுன்சிலால் ஆளப்பட்டு வந்தது. அரசு, நாட்டாட்சி, திருச்சபை ஆட்சி ஆகிய இரண்டிற்கும் உரிய திட்டங்களைத் தீட்டுவதற்கு முன்பு நாட்டின் நன்மக்களைக் கலந்து ஆலோசித்து வந்தமையால் அரசுக்கும் பண்பாளர்களுக்கும் இடையே ஓரளவிற்கு உடன்பாடு இருந்து வந்தது.

மன்னர்கள் புதிது புதிதாக ஆட்சிக்குவந்த போதெல்லாம் அமைதிகாண் நீதிபதிகளின் கடமைகள் பெருகிக்கொண்டே வந்தன. எலிசபெத்துப் பேரரசி இறந்த காலத்து நாட்டுப் புறத்து ஆட்சி முறைப் பண்புகள் மாநில ஆட்சி முறைக்குப் புதியனவாக இல்லை. அமைதிகாண் நீதிபதிகள் சிறு குற்றங்களைச் சிறிது நேர அமர்வுக் கூட்டத்தில் விசாரித்துத் தீர்ப்பு வழங்கினார்கள். அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்டிருந்த சாலைகளையும், பாலங்களையும், சிறைச்சாலைகளையும் பழுது பார்த்து நன்முறையில் வைத்திருந்தனர்; கள்ளுக்கடைகளுக்கு உரிமையாணை வழங்கிவந்தனர்; குற்றவாளிகளைச் சிறைப்படுத்தினர். கூலி, விலை முதலியவற்றை ஒழுங்குபடுத்துதல், வேலை பயிலுவோனுக்கும் அவனுடைய தலைவனுக்கும் இடையே உள்ள தொடர்பைக் கண்காணித்தல் போன்றவை முன்பு பழைய மாநகராட்சி மன்றங்களின் கடமைகளாக இருந்து வந்தன. அவற்றை அரசாங்கம் தாமே கண்காணிக்கத் தொடங்கியபொழுது அமைதிகாண் நீதிபதிகள் பரந்ததும் சிக்கலானதுமான பொருளாதாரக் கூட்டுப்பாட்டினைக் கண்காணிக்கும் பிரதிநிதிகளாகப் பணியாற்றினர். பிறகு அமைதிகாண் நீதிபதிகள் புதிதாக நிறைவேற்றப்பட்ட இரவலர் சட்டத்திற்கு (Poor Law) மக்களைக் கீழ்ப்படிந்து நடக்குமாறு செய்தனர். இவர்களுடைய நல்லெண்ணத்தையும், செயல் திறனையையும் அடிப்படையாகக் கொண்டே இயேசு சங்க உறுப்பினர்களை (Jesuits)யும், அரசனைத் திருச்சபையின் தலைவராக ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களையும், இணங்காதவர்களையும் (Non-(Conformists) வேட்டையாடும் எலிசபெத்து அரசியின் சமயக் கொள்கை அமைக்கப்பட்டது.

இத்தகைய பலதிறப்பட்ட கடமைகள் உள்ளூர் நடுவர்களாலேயே உண்மையாகவும் செம்மையாகவும் நிறைவேற்றப்படுமாறு பிரிவிகவுன்சில் கண்காணித்து வந்தது. அவர்கள் எலிசபெத்துப் பேரரசி காலத்தில், முன்பு எப்பொழுதும் காணமுடியாத அல்லது பலதலைமுறைகளுக்குப் பிறகும் காண முடியாத அளவிற்குப் பெரும் திறமையோடு கடமைகளைச் செம்மையாகச் செயலாற்றியது மறுக்கமுடியாத உண்மையாகும். பாராளுமன்றத்திற்குச் சட்டங்கள் இயற்றுவது பற்றிக் கற்பிப்பதோடு, அமைதிகாண் நீதிபதிகளுக்கு நாட்டையாளும் வகையினையும், நீதி வழங்கும் முறையினையும் கற்பிப்பது டியூடர் காலத்திய பிரிவி கவுன்சிலின் கடமையாயிற்று. டியூடர் ஆட்சியால் இழக்கப் பெற்றதைக் காட்டிலும், இங்கிலாந்து தன்னாட்சி முறைப் பழக்க வழக்கங்களில் புதிதாகப் பல பயன்களை அடைந்தது. இத்தகைய மாபெரும் முறையை இயங்குமாறு செய்த பெருமை ஏழாம் ஹென்றிக்குரியதாகும். அதனை அவருடைய மகனும், பேரப்பிள்ளைகளும் என்றும் ஓயாது ஒழியாது வளர்ச்சியுற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கச்செய்தனர்.

பிரிவுகவுன்சிலிலும், நாட்டுப்புற ஆட்சி அமைப்பிலும் பிரபுக்கள் தங்கள் முதன்மையை மற்றவருக்கு அளித்துத் தாழ்ந்து போகவேண்டும் என்ற எண்ணம் நமக்கு எழலாம். ரோஜாப்பூப் போர்கள் தற்காலிக மாகப் பிரபுக்களின் எண்ணிக்கையைக் குறைத்து விட்டது என்று சொல்லுவதற்குப் போதிய சான்றுகளில்லை.[1] அப்போர்களில் ஈடு பட்டமையால் உண்டான பெருஞ்செலவும், அதைத்தொடர்ந்து அரசாங்கம் பிரபுக்களின் பொருள்களைப் பறிமுதல் செய்து வந்தமையாலும் பிரபுக்கள் குடும்பங்கள் வறுமையுற்றன. அதே நேரத்தில் அத்தகைய பறிமுதல்களால் அரசின் செல்வம் பெருகத் தொடங்கியது. இச் செல்வச் செழிப்பிலும் சிக்கனமாக இருக்க விரும்பிய ஏழாம் ஹென்றி தம்முடைய சிறந்த ஆட்சி முறைக்குக் குறைந்த செலவில் ஊதியம் பெறும் அமைதிகாண் நீதிபதிகள்

1. கி. பி. 1454-ல் ரோஜாப்பூப் போர்கள் தொடங்குவதற்கு முன்பு கூட்டப் பெற்ற பாராளு மன்றத்தில் கோமகன்களும் (Earl) காணியாட்சியாளர்களும் (Barons) சேர்ந்து மொத்தம் 53பேர் இருந்தனர்; நான்காம் எட்வர்டு இறுதியாகக் கூட்டிய பாராளுமன்றத்தில் 45 பேர்கள் இருந்தனர். ஏழாம் ஹென்றி கூட்டிய பாராளுமன்றத்தில் 29 பேர்களே பிரபுக்கள் இருந்தனர்; இதற்குரிய ஒருகாரணம் அவர்களுள் பலர் தங்கள் பதவியைஇழந்தமை அல்லது குறைந்த வயதுடையவர்களாக இருந்தமையாகும். வயது வந்தவர்களாக வளர்ச்சியுற்றமையாலும் புதிதாகச் சில பிரபுக்கள் தோற்றுவிக்கபட்டமையாலும் டியூடர் ஆட்சிக் காலத்தில் பிரபுக்களின் சராசரி எண்ணிக்கை ஐம்பதாக உயர்ந்தது.

மூலம் வெற்றியுடன் நடத்தினர். இதற்கும் மேலாகச் சிற்றூர் களிலும் நகரங்களிலும் வாழ்ந்த நடுத்தர மக்கள் மனமாரப் பிரபுக்களுக்கு எதிராக அரசனையே ஆதரிக்கலாயினர். திருச் சபை ஊர்வட்ட நிலக்கிழார்களும் (Parish), வாணிகர்களும், உழவர்களும் அடிக்கடி தங்களுக்குள்ளே கலப்புத் திருமணம் செய்து கொண்டனர். மேலும் அவர்கள் பெரும் செல்வர் களாகவும் நன்கு பயிற்சிபெற்ற அறிவாற்றல் நிறைந்தவர் களாயும் சிறப்புற்றனர். எனவே அவர்களை இனிமேல் தேசிய வாழ்வில் தாழ்நிலையில் தள்ளிவைக்க இயலாமற் போயிற்று. இவ்வகுப்பு மக்களுக்குப் புதியதொரு முக்கியத்துவத்தை அளித்த தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் உண்டான மாற்றங்களை ஆராய்ந்து அறிவதற்கு இது பொருத்த மான சமயமாகும்.

இங்கிலாந்து இடைக்காலத்திலிருந்து தற்காலத்திற்கு மாறிய வரலாற்றை இங்கிலாந்தின் வாணிகச் சமுதாய வர லாற்றில் மிக நன்ருக எழுதலாம்.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்து நம்முடைய தீவில் நயப்பற்ற மட்டமான துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. நிலமானியப் படைமுறைக்குட்பட்ட இடைக்காலச் சிற்றூர் மக்கள், தங்களுடைய எளிய உடைகளுக்குத் தேவையான துணி களுக்குரிய நூற்களை நூற்றனர். அத்துடன் அவற்றைத் தாங் களே நெய்தும் வந்தனர். ஆனல், அந்நாட்களில் அயல்நாடு களுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கோ, உள்நாட்டுச் சந்தை களில் கொண்டு சென்று விற்பதற்கோ தகுதியுடையவாகச் சிறிதும் நெய்யப்படவில்லை. எனவே செல்வர்கள் இங்கிலாந்துக் கம்பளியை பிளமிஷ் (Flemish) துணிகளாக நம்நாட்டில் திரும்பிப் பெற வேண்டியவர்களாக இருந்தனர். இத்தாலியிலும், பிளாண் டர்சிலும் (Flanders) உள்ள தறிகளுக்கு, நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பதப்படுத்தாத கம்பளி (Wool) பிளாண்டாஜெனட்டு (Plantagenet) இங்கிலாந்திற்குப் போதிய வாணிக வளத்தினை நல்கியது. மேலும் போப்பு ஆண்டவரின் பிரதிநிதிகளுக்கு, அவர்கள் தலைவர் அச்சுறுத்திப் பறிக்குமாறு கட்டளையிட்ட தொகையைச் செலுத்தப் பேருதவியாக இருந்தது. இறுதியாக ஆங்கிலேயர்களே அயல்நாட்டுச் சந்தைகளுக்காகத் தாங்களே நேர்த்தியான மெல்லிய ஆடைகளை நெய்யக் கற்றூர்கள். அதனல் அவர்களுடைய வாழ்க்கை, எண்ணம் ஆகிய ஒவ்வொரு துறையிலும் இதுவரை எதிர்பாராத பல விளைவுகள் இதைப் பின் தொடர்ந்து தோன்றின.

மூன்றும் எட்வர்ட்டின் ஆதரவினல் பிளமிஷ் நெசவாளர்கள் பேரளவில் தங்கள் தொழில் திறமையோடு இந்நாட்டினுள் குடி புகுந்தனர். அப்பொழுது நம்நாட்டில் பெரும் மாற்றங்கள் தோன்றலாயின. அதனல், நூற்றுண்டுப் போரில் பிளமிஷ் நெசவாளர்கள் இங்கிலாந்தை ஆதரித்தனர். இங்கிலாந்தை ஆதரித்தமையால் அவர்கள் பெரும் துன்பத்திற்குள்ளாயினர். எனவே அவர்கள் இங்கிலாந்தினுள் அடைக்கலம் புகுந்தனர். பிரஞ்சு நிலமானியப் படைமுறைப் பிரபுக்கள் கெண்ட்டில் (Ghent) உரிமைக் குடிமக்களின் மக்களாட்சியையும், அதைச் சூழ்ந்த நகரங்களையும் தொடர்ந்து எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்தனர் கி.பி. 1381-ல் லண்டன் மாநகரில் உண்டான கலகம் ஒன்றில் கலகக்காரர்களால் நூற்றுக் கணக்கான பிள மியர்கள் கொலை செய்யப்பட்டனர். எனவே, இக்குக் குடி யேறிய பிளமியர்கள் சிறிது காலம்வரை உண்மையிலேயே செல் வாக்கற்றவர்களாக இருந்தனர். இங்கிலாந்து அரசரின் சிறந்த அறிவினல் எஞ்சிய சிலருக்கும் அவர்களுடைய சந்ததியார் களுக்கும், இங்கிலாந்து மக்களோடு கலப்புத் திருமணம் செய்து கொண்டு இறண்டறக் கலக்கும் வரையில் நன்கு பாதுகாப்பு அளித்தார். அவர்களுடைய தொழில் திறமையாகிய 'நன் கொடை' நாட்டின் அரிய செல்வமாகச் சிறப்புற்றது. ஆயிரக் கணக்கான புதுத் துறைகளில் அக்கலை வளர்ச்சியுறும் நற்பேறும் பெற்றிருந்தது. எலிசபெத்துப் பேரரசி, ஸ்டுவர்ட்டு மன்னர்கள் காலத்தில் திரள் திரளாக இங்கிலாந்தில் குடியேறிய பிரஞ்சு, பிளமிய யூகோநாட்டுக்கள்[1] (Huguenots) மக்களிடைப் பேராதரவு பெற்றனர். அவர்கள் கத்தோலிக்க சமய எதிர்ப்பு இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தமையால், பிரான்சில் எண்ணற்ற இடையூறுகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளாகித் துன் புற்றனர். அதனல் இங்கிலாந்து மக்கள் அவர்களுக்குப் பேராதரவு தந்தனர். அவர்களுக்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே குடிபுகுந்து, இங்கிலாந்தின் நெசவுத் தொழிலினைப் புதுமுறைகளில் வளமுறச்செய்த இவர்களுடைய மூதாதையர் களைப்போலவே, இவர்களும் இங்கிலாந்தின் தொழில் வளர்ச் சிக்குப் பேருதவி புரிந்தனர்.

[1] பதினரும் பதினேழாம் நூற்றுண்டுகளில், பிரான்சில் வாழ்ந்த புராடஸ்டண்ட்டு கிறித்துவ சமயத்தைச் சார்ந்த மக்கள் சமூகத்திற்கு 'யூகோ நாட்டுக்கள்' என்ற பெயர் வழங்கலாயிற்று. பதினன்காம் லூயியின் ஆட்சியில் அவர்கள் துன்புறுத்தப் பெற்றனர். எனவே அவர்கள் பெருந்திரளாக இங்கிலாந்திற்கும் மற்ற ஐரோப்பிய நாடு களுக்கும் சென்று குடியேறினர்.

கி.பி. பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் நார்விச்சி (Norwich)யைத் தலைநகராகக் கொண்ட கிழக்கு ஆங்கிலியா (East Anglia), துணி வாணிகத்தினால் செல்வச் செழிப்புற்று விளங்கியது. அதற்கு இன்று அங்குக் காணப்படும் நேர்த்தி வாய்ந்த அழகிய பல திருக்கோயில்களே போதிய சான்றாகும். இங்கிலாந்தில் கிழக்கிலும் மேற்கிலும், வடக்கிலும் தெற்கிலும் பழைய மதில் அரண்களையுடைய நகரங்களில் மட்டும் அல்லாமல், பெயின்ஸ்விக் (Painswick), சிப்பிங் காம்ப்டென் (Chipping Campden) போன்ற பட்டி தொட்டிகளிலும் நெசவாளர் குடியேற்றங்கள் பல அமைக்கப்பட்டன. இவ்வாறு நிலக்கிழார்களிடையிலும், உழவர்களிடத்திலும் புதிய கருத்துகளும், புதிய செல்வமும் சென்று பரவியது. அதனால், நாட்டுப்புறங்கள் முழுவதும் ஒன்றுசேர்ந்து துணி உற்பத்தி செய்வதைப் பற்றிச் சதித்திட்டம் தீட்டின. அத்தகைய மாவட்டங்களில் 'ஏரினை விரைவாகச் செலுத்து' என்னும் பழமொழியோடு, 'தறியினை விரைவாகச் செலுத்து' என்னும் புது மொழியும் மக்களிடையே வழங்கத் தொடங்கியது. குடியானவர்களுக்குச் செம்மறியாடுகள் புதிய தொரு செல்வத்தை அளிப்பனவாகத் தோன்றின. காட்ஸ் வோல்டு (Cots wold) வழியாகச் செல்லும் பயணி, டியூடர்களின் மிகப் பண்பட்ட கட்டடக்கலையின் மாட்சியை அங்கு அழியாது விளங்கும் கல்லால் கட்டப்பட்ட மதில் சூழ்ந்த ஊர்களில் காணலாம். மேலும் பல கற்கள், டியூடரின் பண்ணைகளிடையே மிக அழகிய முறையில் வளைத்துக் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக் கட்டிடங்கள், இருப்பதை அப்பயணி இன்றும் காணலாம். அவை யாவும் அங்குப் பண்டைக் காலத்தில் நெசவுத் தொழில்கள் செழிப்புற்று விளங்கிய கதையைக் கூறுவதைக் கேட்கலாம். மேலும் வெஸ்ட்மோரிலாந்தில் காணப்படும் பெரிய கற்சுவர்களிலும், சீமை ஆலமரத்தில் (Oak) செய்யப்பெற்ற நேர்த்தி வாய்ந்த மரச்சாமான்களிலும், கம்பிரியன் (Cumbrians) செம்மறியாட்டுப் பண்ணைகளிலும் கெண்டல் (Kendal) துணி வாணிக வரலாறு அடைந்திருந்த சிறப்பினை இன்றும் காணலாம்.

நெசவுத்தொழில் குடும்பத் தொழிலாகவே—குடிசைத் தொழிலாகவே—இருந்துவந்தது. நெசவாளிகளின் குடும்பத்தைச் சார்ந்தோர் தங்கள் குடிசைகளிலே ஆடைகளை நெய்து வந்தனர். அவர்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களைத் தரகர்களே கொண்டுவந்து கொடுத்தனர். மேலும் அவர்கள் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை எடுத்துக் கொண்டு போய் விற்று வந்தனர். அக்காலத்தில் கம்பளிநூல் மூட்டைகளோ, கம்பளி ஆடைகளின் மூட்டைகளோ கட்டப்பெற்றிருந்த குதிரைகள் கூட்

டம் கூட்டமாகச் சாலைகளின் ஓரங்களில் தொடர்ந்து சென்று கொண்டே இருந்தன. அவை ஆங்கில மக்களின் வாழ்க்கைப் பாவிற்கும், ஊடு இழைக்கும் குறுக்கே ஓயாது அசையும் தறியின் ஓடமாக விளங்கியது. இவ்வாறு நெடுந் தொலைவிலுள்ள இடங்களையும் மக்கள் வகுப்பினரையும் ஒருங்கு சேர்த்து உறுதியான தேசிய அமைப்பினை உருவாக்கியது. ஹல் (Hull), லண்டன் ஆகிய நகரங்களில் வாழ்ந்த வாணிகர்களும் கடலோடிகளும் கம்பளித் துணிகளுக்கு முதலில் லெவாண்ட், பால்டிக் பகுதிகளிலும், கீழை நாடுகளிலும், மேற்கு இந்தியத் தீவுகளிலும், இறுதியில் வர்ஜீனியா, மஸ்ஸாசூசேட்ஸ் (Massachusetts) முதலிய இடங்களிலும் புதிய சந்தைகளைப் பெறுவதற்கு ஆராய்ந்து கொண்டிருந்தனர். அப்பொழுது யார்க்ஷையரிலுள்ள தறிகளுக்காக, லின்கன் ஷையரில் வாழும் குடியானவன், மெல்லிய கம்பளிகளை அளிக்கும் ஆடுகளை வளர்த்து வந்தான். காட்ஸ்வொல்டைச் (Cotswold) சார்ந்த இடையர்களும், நெசவாளர்களும் தங்களுடைய பண்டங்களைக் கடல் கடந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகக் கிளௌஸெஸ்டரையும் பிரிஸ்டலையும் தங்களுக்குப் பணிபுரியுமாறு செய்திருந்தனர்.

பிரிவிகவுன்சிலில் நாட்டின் பொருளாதாரக் கொள்கையையும், அயல்நாட்டுக் கொள்கையையும், எங்கும் பரவியுள்ள இத்தகைய ஆற்றல்கள் பலவற்றையும் நன்கு ஆராய்ந்து மதிப்பிட்ட அரசியல் வல்லுநர்கள் திட்டமிட்டுச் சட்டமாக்கினர். செசில் (Cecil), எலிசபெத்து ஆகிய இருவரும் தங்கள் கூர்ந்த மதியினைக் கொண்டு வழி காட்டியபொழுது, பல திறப்பட்ட தனி மனிதர்களின் விருப்பங்களும் நோக்கங்களும் ஒரே ஒரு வழியைத் தான் கண்டன. நாட்டு அரசினைப் போன்று, மாநகராட்சி மன்றங்களோ, உள்நாட்டுத் தொழிற் கழகங்களோ வருங்காலத்தைப்பற்றி நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. புதிய தொழில் இயக்கத்தினை நகராட்சி மன்றங்கள் உண்மையில் சிறிதுகூடக் கட்டுப்படுத்த முடியவில்லை. துணி உற்பத்தி செய்யப்படாத காலத்திலும் வாணிகத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக நகராட்சி மன்றங்கள் இருக்கலாகாது என்ற காரணத்தினால், பேரூர்களின் (Borough) ஆட்சி வரம்புக்கு அப்பாற்பட்ட நிலையிலேயே, தொழில் வளர்ச்சி போற்றப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. பொருளாதார ஒழுங்கு முறையைப் பொறுத்த வரையில், டியூடர் ஆட்சிக்காலம் முழுவதிலும், இடைக் காலத்தில் தொழிற்கழக ஊர்களிலும், பேரூர்களிலும் சிறப்புற்று விளங்கிய கூட்டுக் கழகங்கள் நலிவுற்றன. ஆனால், துணி வாணிகமும், புதிய கடல்வழி கண்டுபிடிப்புகளும் லண்டன் மா

நகரமும், மற்ற நகரங்களும் சிறப்பாகத் துறைமுகப்பட்டினங்களும் செல்வத்திலும் அரசியல் அதிகாரத்திலும் செழிப்புற்றோங்குமாறு செய்தன. இவ்வாறு துணி வாணிகம் கடல்வழி கண்டுபிடிப்புகள் ஆகிய இரண்டும் இணைந்து ஆங்கிலக் கடலகப் பெருவாணிகத்தில் புதியதொரு பொற்காலத்தைத் தோற்றுவித்தன.

துணி வாணிகம் தனி மனிதரையும், நாட்டையும் புதிய ஊக்கம் கொள்ளுமாறு தூண்டியது. அது உலகப் பொதுப்பற்றையோ, கூட்டு வாழ்க்கை நெறியையோ வளர்க்கவில்லை. ரோஜாப்பூப் போர்கள் நடந்த காலத்திலும், ஹென்றியின் சீர்திருத்தங்களால் பெரும் மாற்றங்களும் கொடுஞ் செயல்களும் கோரதாண்டவம் புரிந்த காலத்திலும், மேரியின் சமயச் சீர்திருத்த எதிர்ப்பு இயக்க (Counter Reformation) காலத்திலும், இங்கிலாந்தின் பொற்காலமெனப் போற்றப்படும் எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்திலும், பாராளுமன்றத்திற்கும் அரசனுக்கும் இடையே உள்நாட்டுப் போர்கள் நடந்துகொண்டிருந்த காலத்திலும், வினைத்திட்பமும், துணிவும் வீரமும் உடைய துணி வாணிகர்களும்; நெசவாளர்களும், ஆடுகளை வளர்க்கும் குடியானவர்களும் தங்கள் தனி விருப்பத்தின் அடிப்படையில் அரசாங்கத்தின் காவலுக்கும் கட்டுப்பாட்டிற்கும் கடமைப்பட்டு, பெருவாணிகம் செய்து, பெரும் பொருளீட்டிச் செல்வச் சீமான்களாகச் சிறப்புற்றனர். இடைக்காலத் திருச்சபையைச் சார்ந்த மக்களையும், பிரபுக்களையும் காட்டிலும், அவர்கள் ஒரே சமயத்தில் தனியுரிமையைப் பாராட்டுபவராயும், நாட்டுப் பற்றுடையவராகவும் இருந்தனர். எனவே அவர்கள் திருச்சபையின் குருமார்கள், பிரபுக்கள் பெற்றிருந்த சிறப்பிடத்தை மெல்ல மெல்லக் கைப்பற்றி, ஆங்கிலேய மக்களின் தலைவர்களாகும் பேற்றைப் பெற்றனர். இவ்வாறு அவர்கள் சிறப்புறுவதற்கு இடைக்காலப் பாதிரிகள் (Bishop), துறவிகள், பிரபுக்கள், நகரமக்கள் (Burghers) முதலியவர்களைப் போன்று உலகக் குடிமகக் கோட்பாட்டினைச் சார்ந்த கூட்டு வாழ்க்கை நெறியைப் போற்றிப் பின்பற்றாமையே காரணமாகும். மக்கட்சபை (House of Commons) தேசப்பற்றின் அடிப்படையில், மக்களாட்சிப் பண்பின் கூட்டுறவு முறையினைத் தோற்றுவிக்குமாறு தூண்டியது. அவர்கள் அதுவரை டியூடர்களின் முடியாட்சியிடத்துப் பொறுமையோ, வெறுப்போ கொள்ளவில்லை.

இந்த மனிதர்களுக்கும், அவர்களுடைய பண்பு நலனுக்கும் புராடஸ்டண்ட்டு சமயம் ஏற்றதாக இருந்தது. அச்சமயம் தனி மனிதன் குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும் மனச்சான்றினைப் போற்றி வளர்க்க உரிமை அளித்தமையாலும்,

கிறிஸ்தவ வேத நூற்படிப்பிற்கு வாய்ப்பு அளித்தமையாலும் அதைப் பெரிதும் பின்பற்றத் தொடங்கினர். கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் தங்கள் ஆன்மா கடைத்தேறவும், தங்கள் புகழ் நிலைபெறவும் மதகுருமார்களுக்கு மானியங்களை (Chantries) நிறுவியவர்கள் டியூடர்கள் ஆட்சியின் தொடக்க காலத்தில் சமயக் குருமார்களின் (Clergy) ஆதிக்கத்தை வன்மையாக எதிர்க்கும் வகையில் தாங்களே பொது மன்றங்களில் விவிலிய நூலினைப் படிப்பவர்களாகப் பணியாற்றினர். இப்புது நடுத்தர வகுப்பற்கே, பதினாறும் நூற்றாண்டில் தோன்றிய சீர்திருத்தக்காரர்கள் பெரிதும் ஒத்திருந்தனர். அவர்களுள், செல்வம் படைத்தவர்கள் நிலபுலன்களை வாங்கினர். தேவைப்பட்ட போது ஊர்ப் பெரிய தனக்காரர்களோடு கலப்பு மணம் செய்தும் 'கோட்டங்களின் குடும்பங்களைப்' புதிதாகத் தோற்றுவித்தனர். மடங்கள் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, திருக்கோயில் நிலங்களை வாங்குவதற்காகக் கையில் பெருந்தொகையினை வைத்துக்கொண்டு, எந்நிலத்தை வாங்கினால் ஆதாயம் அதிகம் கிடைக்கும் என்று அவர்கள் நோட்டம்பார்த்தனர். அவர்களுடைய பிள்ளைகள் பல்கலைக் கழகங்களிலும், நீற மன்றக் கழகங்களிலும் (Inns of Courts) நாட்டின் பொதுத் துறைப் பணியில் (Public Service) ஈடுபடத் தாங்களே பயிற்சி பெற்று வந்தனர். முதலில் எலிசபெத்துப் பேரரசியின் ஆட்சியிலும், அதைத் தொடர்ந்த பாராளுமன்ற வளர்ச்சிக் காலத்திலும், புதிதாகச் செல்வர்களான இம்மக்கள் நாட்டின் முதுகெலும்பாக விளங்கினர். அவர்கள் மூலமாக டியூடர்கள், ஸ்டூவர்ட்டுகளுடைய கப்பற்படை கடல்களை ஆளத்தொடங்கியது. புதிதாகக் கண்ட நாடுகளிலே அந்நாட்டுப் பண்டங்களுக்கு மாற்றாகக் நம்முடைய நாட்டுத் துணிகளைக் கொண்டு சென்று கொடுத்துச் சுரண்டுவதற்குரிய சிறந்ததொரு வாய்ப்பினை நாம் பெற்றிருந்தோம். ஸ்பானியர்கள் எத்தகைய பொருள்களையும் பெற்றிராமையால் அவர்கள் எப்பொருளையும் புதிய நாடுகளுக்கு அனுப்ப இயலாது தவித்தனர். எனவே, அவர்கள் வீரர்களையும், குருமார்களையும், குடியேறிகளையும் அந்நாடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

துணிவாணிகத்தின் விளைவாக நாட்டுப்புறங்கள் முன்னேற்றமடைந்தன. அவ்வாணிக முன்னேற்றம் முழுவதும் நன்மை பயக்காமற் போயிற்று. அவ்வாணிகம் சமுதாயத்தின் முதல்நிலை, கடை நிலைகளிலிருந்த மக்களுக்கு வேலையையும் செல்வத்தையும் தேடிக் கொடுத்தமை, அது எவ்வமைப்பினை அழித்ததோ, அதைக் காட்டிலும் பெரிதும் மேம்பட்டு விளங்




படம் 19.

டியூடர் காலத்திய இங்கிலாந்தின் கோட்டங்கள்

கியது. ஆனால், பொருளாதார மாற்றத்தின் ஒவ்வொரு முறையிலும் காணப்படுவதைப் போன்று, இவ்வாணிகத்திற்குப் பலியான மக்களைப் பற்றியும், வெந்துயருற்ற மக்களைப் பற்றியும் ஏராளமான கதைகள் கூறப்படுகின்றன. பணத்தொடர்புக்கும், உழைப்பு நெகிழ்ச்சிக்கும் ஆதரவாகச் சமூக மதிப்பினையும், வழக்கத்தினையும் அது தலைகீழாக மாற்றியது. இதனால், புதிதாக விடுதலை பெற்ற உட்குடிமக்களுக்குப் பெரும் வாய்ப்புக்களும், பேரிடர்களும் உண்டாயின. நிலக்கிழார்களுக்கும் செல்வமிக்க உழவர்களுக்கும் மற்றவர்களை அழித்தொழித்து, விரைவில் தாங்களே பெருஞ் செல்வர்களாக வேண்டும் என்ற பேராசை உண்டாயிற்று. மாவட்டங்கள் சிலவற்றுள் ஆட்டிடையர் சிலருடைய வாழ்வு வளம் பெறுவதற்காகப் பல ஏழை உழவர்கள் தங்கள் ஊரின் சிறந்த வயல் வெளிகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்; அவ்விளை நிலங்களை வளைத்து மேய்ச்சல் வெளிகளாக் வேலியிட்டனர். டியூடர்கால பிரிவிகவுன்சில், விளைநிலங்கள் வளைக்கப்பட்டு, மக்கள் வெளியேற்றப்படுபவதைத் தடுக்க அடிக்கடி தலையிட்டு வந்தது. ஆயினும், அதன் முயற்சி தொடர்ந்து நடைபெறுமையாலும், வெற்றிதராமையாலும் பயனற்றுப் போயிற்று. இவ்வாணிகத்தினால் விளைந்த தீமைகளின் நடுநாயகமாக லீசெஸ்டர் ஷையரும் (Leiccstershire) நார்த்தாம்டன் ஷையரும் (Northamptonshire) விளங்கின. இவற்றிற்கு அடுத்த நிலையில் இவற்றைக் கிழக்கிலும் தெற்கிலும் சூழ்ந்திருந்த கோட்டங்கள் துன்புற்றன. அது முதல், நிலபுலன்களிலிருந்து வெறியேற்றப்பட்ட உழவர்களுள் பெரும்பாலோர் நாடோடிகளாக இங்கும் அங்கும் அலைந்து திரிந்து, டியூடர்கால இலக்கியங்களிலும் சட்டப் புத்தகங்களிலும் 'முரட்டு இரவலர்', 'கைத்தடி அடியாட்கள்' 'கொல் குறும்பர்' என்று இழித்தும் பழித்தும் பேசப்படும் இழிநிலையுற்றனர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் உரிமை ஏவலாட்கள் (Retainers) குறிப்பிடத்தக்க கொடியோர்களாக இருந்ததைப்போல, பதினாறும் நூற்றாண்டில் இரவலர்கள் இருந்தனர். முன்பு பிரபுக்கள் உரிமை ஏவலாட்களை வைத்திருந்ததைப் பார்ட்டஸ்கியூ (Fortesque) போன்றவர்கள் பழித்துரைக்கப் பட்டதைப் போன்று, உழவர்களை இரவளர்களாக—ஆதரவற்ற நாடோடிகளாக்கிய நிலக்கிழார்களை, மூர் (More), லாட்டிமர் (Latimer) போன்ற அறவியல் அறிஞர்கள் வன்மையாகக் கண்டித்தனர். 'முரட்டு இரவலர்' பலர் பதினைந்தாம் நூற்றாண்டுச் சமுதாயத்தில் காணப்பட்ட நீதிவரம்புக் குட்படாத பழக்க வழக்கங்களை உதறியெறியாது இருந்த முற்காலத்தில் உரிமை ஏவலாட்களாகவும்,

கொள்ளைக்காரர்களாகவும், சமூகத்தினரால் வெறுத்து ஒதுக்கப் பட்டவர்களாகவும் இருந்தனர். ஆற்றல் மிக்க அரசரின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் சிற்சில சமயங்களில் எளியவர்களைத் துன்புறுத்தும் கொடியவர்களாகவும், பல சமயங்களில் பலியிடப் படுவோராகவும் தோற்றமளித்தனர். துணி வாணிகத்தின் விளைவால் குறிப்பிட்ட பருவகாலத்தில் தோன்றிய வேலையில்லாத் திண்டாட்டத்தால் துன்புற்ற குற்றமற்ற மக்களும், தற்காலப் பண்பு வாய்ந்த வேறு பல தொழிற்சாலைகளில் வேலையில்லாமற் போனதால் வெளியேறியவர்களும், மேற்கண்ட வெளியேற்றப்பட்ட உழவர்களோடு சேர்ந்துகொண்டனர். இவர்களோடு இறுதியாகப் மிட்லாந்து (Midlands) பகுதியில் வெளியேற்றப்பட்ட உழவர்களும் பேரளவில் வந்து சேர்ந்தனர். நாட்டு மக்கள் அனைவரும், பெருந் துன்பத்திற்குள்ளான அவ் வகுப்பினரின் அவலநிலையைப்பற்றிப் பேசி வந்த காலம் அது. பிற்காலத்தைப் போலல்லாது பதினாறும் நூற்றாண்டில் நெடுந் தொலைவிற்குக் கால் நடையாக நடந்து பயணம் செல்லுதல் இயல்பாக இருந்திருக்குமாதலால், எப்பொழுதும் வறியவர்களாக இருந்து வந்தவர்கள் தங்களைத் திறந்த வெளிநிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட உழவர்கள் என்று நடித்து நாட்டு மக்களுடைய இரக்கத்தை எளிதில் பெற்றிருப்பர்.

மடங்கள் ஒழுங்கற்ற நிலையில் அறம்செய்து வந்தமை ஒரு வகையில் இரவலர்களைப் பெருக்கியது எனலாம். மற்றொரு வகையில் இரவலர்களைத் துன்பத்தினின்று காப்பாற்றியது என்றும் கூறலாம். இரவலர் சட்டம் (Poorlaw) நன்கு வளர்ச்சியுற்று, இரவலர்களுக்கு உதவிபுரியும் சிறந்த நிலையமான மடங்களின் இடத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பே, அரசு திடீரென்று மடங்களை எல்லாம் அடக்கியொடுக்கியமை, இயல்பாகவே துன்புற்றிருந்த இரவலரின் துன்பத்தைப் மிகுதிப் படுத்தியது. மடத்தின் அறச்செயல்கள் தடைப்பட்டமையால், மடத்தில் பெருந்திரளாகப் பணிபுரிந்து வந்த ஊழியர்களும் கொழு கொம்பற்ற கொடிபோலத் துன்புற்றனர். பிற்காலத்தில் இவர்களுக்கு மடத்தில் பெற்ற ஊதியத்தில் மிகக் குறைந்த அளவு தொகை, உதவித் தொகையாகக் கொடுக்கப்பட்டது. இந்த 'இரவலர்கள்' ஒரே சமயத்தில் மக்களுடைய அச்சத்திற்கும், அருளுணர்வுப் பெருக்கிற்கும் உரியவர்களானார்கள். அவர்கள் சிற்றூர்களுக்குள் (நம்முடைய டியூடர் முன்னோர்கள் பொதுவாக 'பட்டணம்' (Town) என்றே சிற்றூர்களைக்கூறி வந்தனர்) நுழைந்தமை சிறுவர் பாடல்களில் சிறப்பிடம் பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

'ஊரில் இரவலர் நுழைவதைப் பார்! பார்!
நாய்கள் குரைப்பதைக் கேள்! கேள்!
வெள்ளை ரொட்டியோடு பழுப்பு ரொட்டியை
ஊரார் கொடுப்பதைப் பார்! பார்!
இரவலர் சிலர் கசையடி பெறுவதைப் பார்! பார்!
ஊருக்கு வெளியே விரட்டப்படுவதைப் பார்! பார்!
இரவலர் ஓட்டம்பிடிப்பதைப் பார்! பார்!'

இப்பாட்டில் குறிப்பிடப்படும் ரொட்டி, கசையடி ஆகிய இரண்டும் தனிமனிதனின் அறவுணர்வையும், தற்காப்பு உணர்ச்சியையும் தெரிவிக்கின்றன. இவை இரண்டும் டியூடர்களின் இரவலர் சட்டத்தாலும், எலிசபெத்தின் திருச்சபை ஊர்களின் இரவலர் தீர்வை மதிப்பீட்டுச் சட்டத்தில் (Parish Poor Rate) பாதிக்கப்பட்ட சமுதாயத்தின் கட்டாயக் கடமைகளாக அமைந்தன. நாளடைவில், வேலைசெய்ய விரும்பாத தடியன்களுக்கும், வேலைசெய்ய முடியாத கிழவர்களுக்கும், வலியற்றோர்களுக்கும், வேலை வாய்ப்புப் பெறமுடியாத நற்பேறற்றவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை டியூடர்கால மக்கள் சமுதாயம் நன்குணர்ந்ததோடு, இரவலர் சட்டத்தினுள்ளும் அது இடம் பெற்றது. வேலையில்லாதவருக்கு மடங்கள் அளித்து வந்த உதவித் தொகையை அரசு ஒழித்து விட்டது. அதனால், இரவலர் 'சிக்கலை' அரசாங்க ஒளியிலே இங்கிலாந்து கண்டு ஆராய்ந்து முடிவு காண்பதற்கும், சட்டத்தின் மூலம் இரவலர்க்கு உதவுவதை ஆட்சியியல் கடமைகளுள் ஒன்றாகச் சேர்த்து முன்னேற்பாடு செய்வதற்கும் பேருதவி புரிந்தது. எலிசபெத்துப் பேரரசி சட்டமாக்கிய இரவலர் சட்டத்தில் குறைபாடுகளிருந்த போதிலும், சமுதாய அமைப்பிலே அது ஒருவகை முன்னேற்றத்தின் அடிச்சுவட்டைப் பொறித்தது. அவளுடைய ஆட்சியின் இறுதிக் காலத்திற்குள் நாட்டிலே இரவலர்களே இல்லாமற் போனதைக் கண்டு அயல் நாட்டவர்கள் பெருவியப்புற்றனர். ஏனெனில் அவர்கள் இரவலர்கள் இல்லாத நாடே ஏற்றமிக்க நாடு என்னும் கோட்பாட்டினைச் சிறிதும் அறியாத பிறநாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தமையேயாகும்.[1]

[1] இப்பகுதியில் ஏழாம் அதிகாரத்தில் இதைப்பற்றி விரிவாகப் பேசப்பட்டிருப்பதைக் காண்க. மடங்களைக் கலைப்பதற்கு முன்பே, பல இரவலர் சட்டங்கள் இயற்றப்பட்டமை சட்டப் புத்தகத்தினுள் குறிப்பிடப்பட்டிருக்கும் பல சட்டங்களால் தெரியவருகிறது. 'மடங்களின் கலைப்பு உண்மையில் இரவலர் சட்டத்தை மிக இன்றியமையாத தேவையாக்கியது. ஆனால் அவற்றிற்கு இடையே எத்தகைய காரண காரியத் தொடர்பும் இல்லை என்பது கருதத்தக்கது' — Tanners 'Documents' P. 470.

பரந்த வயல்களை வேலியிட்டு அடைத்து அல்லது நிலையான கற்கள் எழுப்பி மேய்ச்சல் நிலமாக மாற்றியமை, உண்மையில் நல்லதன்று என்று கூறுவது, பிரிட்டானிய வேளாண்மை வரலாற்றிற்குத் தவருன முறையில் விளக்கம் தருவதாகும். முதலாவதாகப் பதிஞரும் நூற்ருண்டிலும் கூட வேலியிட்டு அடைக்கப்பட்ட எல்லா விளை நிலங்களும், எவ்வகையிலும் மேய்ச்சல் நிலங்களாக மாற்றப்படவில்லை. உழவுக்குப் பயன்படுத்தப் படாதிருந்த நிலங்களையே மேய்ச்சல் நிலங்களாக மாற்றுமாறு வழிகாட்டப் பட்டனர். அல்லது உழத் தகுந்த நிலத்தின் தரத்தை உயர்த்துவதன் மூலம் விளைச்சலைச் செழிப்படையச் செய்யும் முறைகளில் ஒன்ருகிய, புல் வளர்த்தல் முறையைக் கையாண்டனர். இங்கிலாந்தின் செல்வத்தைப் பெருக்குவதற்கும், வாணிகத்தை வளமுறச் செய்வதற்கும், மக்களுக்குப் போதிய உணவுப் பொருள்களை அளிப்பதற்கும் இம்முறை இன்றியமையாததாகும். இரண்டாவதாக டியூடர்கள் காலத்தில் பெரும்பாலான செல்வம் கொழிக்கும் நிலக் கிழார்களாலோ, 'முதலாளித்துவ பண்ணைக் காரர்களாலோ' விளை நிலங்கள் வேலியிடப்பட்டு அடைக்கப்படவில்லை. மாருகச் சிறிதளவு நிலம் வைத்திருந்த வேளாளர்களே இச்செயலில் ஈடுபட்டனர். ஊர்ப்புறத்துள்ள திறந்த வயல் வெளிகளில் அடக்கமான பகுதிகளை வளைத்து வேலியிட்டு, மேய்ச்சல் நிலங்களாக மாற்றுவதன் மூலம் உழவர்கள் ஏழை எளியவர்களுக்கு வேலை வாய்ப்பினைத் தேடித் தந்ததோடு, அவர்களுடைய பொருள் வருவாய் வளர்ச்சியுற உதவி புரிந்தனர். நல்ல உழவர்கள் பொது வயல்களில் வேலை செய்யும் தொழில் திறமையற்ற, நேர்மையற்ற, காலந்தாழ்த்தும் இயல்புடைய அண்டை அயலார்களிடமிருந்து விடுதலை பெற்றனர். சிதறிக்கிடந்த வயல்களுக்கு இடப்பட்டிருந்த வேலிகளும், எல்லைக் கற்களும் வரப்புகளும் அடிக்கடி அயலார்களால் வெட்டிச் சிதைக்கப்பட்டமையால் உண்டாகும் பூசல்களும், வழக்குத் தொடுப்புகளும் இதனல் ஒரு முடிவிற்கு வந்தன. விளை நிலங்களை 'வேலியிட்டு அடைத்தல்' தனி மனிதனின் முயற்சிக்கு ஊக்கம் அளித்தமையால் 'உழவுத் தொழில் புரிந்த குடியானவர்கள்' தனக்கும் பிறருக்கும் ஒரு நன்மையைச் செய்பவர்களாஞர்கள். கி. பி. பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்ருண்டுகள் வரை மிட்லாந்தில் (Midlands) மிகச் சிறந்த நிலங்களில் பெரும் பகுதி 'திறந்த வெளி வயல்களாகவே' இருந்து வந்தமை வருந்தத் தக்க தொன்ருகும். டியூடர் ஆட்சிக் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் சிறிய உழவர்களின் நன்மைக்கு மாருன சமூகப் பொருளாதார நிலைகள் நாட்டில் தோன்றவே, அத்'திறந்த வெளி வயல்கள்' நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்புதான்

'வேலியிட்டு அடைக்கப்பட்ட' தடுப்பு நிலங்களாக மாற்றப்பட்டன.[1] விளை நிலங்களை அடைப்பதோடு, செல்வம் கொழிக்கும் முதலாளித்துவ நிலக் கிழார்கள், எண்ணற்ற உழவர்களை அவர் தம் நிலங்களிலிருந்து வெளியேற்றியதை அஞ்சாது எதிர்க்கும் வகையிலே ஹக்லாட்டிமரின் (Hugh Latimer) மேடைப் பேச்சுக்கள் அமைந்தன. ஆனால் உண்மையான உழவர் குடியில் தோன்றியவர் தம் தந்தை என்று பெருமையடித்துக் கொண்ட லாட்டிமரின் தகப்பனாரே, ஒருவேளை தடுக்கப்பட்ட விளை நிலங்களைக் கொண்ட மேய்ச்சல் பண்ணையை யுடையவராக இருந்திருக்கலாம். அவருடைய இருநூறு ஏக்கர் விளை நிலத்தைக் கொண்ட குத்தகைப் பண்ணையில் (Leasehold) நூறு செம்மறியாடுகளும், முப்பது கறவைப் பசுக்களும், உழவுக்காளைகளும் மேய்வதற்குரிய நிலம் இருந்தது. இப்பண்ணையில் ஆறு ஆண்களும், பல பெண்களும் வேலை செய்து வந்தனர். இப்பண்ணையின் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு, தம்முடைய பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஐம்பது பவுன்கள் கொடுத்தார். மேலும், அவர் லாட்டிமரைக் கல்லூரிக்கு அனுப்பிப் படிக்க வைத்தார். லாட்டிமர் பாதிரியாரின் (Bishop) முறைமன்றத்தில் வழக்கறிஞராவதற்கும், இறுதியில் கழுவேறி உயிர்த்தியாகம் செய்வதற்கும் காரணமாக இருந்தது அப்பண்ணையும் நிலமுமே யாகும். இடைக்காலத்தில் வீறுடன் விளங்கிய பிரபுக்கள், உட்குடிகள் வாழ்ந்த இங்கிலாந்தைக் காட்டிலும், பல வகையில் சிறப்பு மிக்க புதிய இங்கிலாந்தை இத்தகைய வேளாளர்களே (Yeomen) உருவாக்கினர். இத்தகைய உழவர்கள் சிறிதளவு படியுரிமை (Gopyhold), நிலங்களையோ, குத்தகையுரிமை (Leasehold) நிலங்களையோ, இறையிலி நிலங்களையோ (Freehold) கொண்ட பண்ணைகளையுடைவர்களாக வாழ்ந்தனர். இவர்களும் செழிப்பு மிக்க பெரு நிலக்கிழார்களைப் போலவே வளர்ந்து வரும் நாட்டுப்புறப் பொருளாதாரத்தின் முக்கிய உறுப்பினர்களாக விளங்கினர். பதினைந்தாம், பதினாறும் நூற்றுண்டுகளில் நாட்டின் பொருளாதார நிலையில் உண்டான மாறுதல்களால்தான் ஸ்டூவர்ட்டு மன்னர்கள் காலத்திய அரசியலிலும், போர்களிலும் பொதுவாக வேளாளர்கள் (Yeoman), சிறப்பாக இறையிலி நிலங்களை உரிமையாகக் கொண்டிருந்த வேளாளர்கள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக விளங்க முடிந்தது.[2]

[1] எலிசபெத்துப் பேரரசியின் காலத்திய உழவப் புலவன் துசூர் (Tussur) 'தடுக்கப்பட்ட' விளை நிலங்களினால் உண்டாகும் நன்மைகளைச் சிறப்பித்துப் பாடியுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

[2] 'இயோமன்' (Yeoman) என்னும் சொல் பதினெட்டாம் நூற்றுண்டிற்கு முன்னர் உரிமை வாய்ந்த குடியானவர் (வேளாளர்) களைக் குறிப்

வேலியிட்டு வளைக்கப் பெறும் நில இயக்கத்தினால் உடனடியாக உண்டான சமுதாயச் சீர்கேடுகளைக் கொண்டு, அவ்வியக்கத்தைப் பற்றி நாம் ஒரு முடிவிற்கு வருதல் நல்லதன்று. இவ்வியக்கத்தின் விளைவுகளை வேளாண்மை, பொருளாதார நோக்கங்களின் அடிப்படையில் ஆராய்வோமானால், அச்செயல் நேர்மையான தென்றே புலனாகும்.

'பல நூற்றாண்டுகளாகத் தானியங்கள் பயிரிடப்பட்டு வந்தமையால் திறந்த வெளி வயல்கள் வளம்குன்றிச் செழிப்பற்றுப் போய் விட்டன. அதனால் அவை மீண்டும் வளம் பெறுவதற்கு நெடுங்காலம் அவற்றில் புற்களை வளர்த்து ஓய்வு தரவேண்டும்' என்று பிரிட்டானியப் பண்ணைகளின் வரலாற்றை எழுதிய அறிஞர்கள் எடுத்துரைத்துள்ளனர். மேலும் வேலியிட்டுத் தடுக்கப் பெற்ற நிலங்கள் முழுவதும் இவ்வாறு தானிய உற்பத்திக்குப் பேருதவி புரிந்தன. திறந்த வெளிப் பண்ணைகள் துண்டாடப்படுவதால் உண்ணுவதற்கு உணவுப் பொருள்கள் கிடைக்காமல் போய்விடும் என்று டியூடர் காலத்திய மக்கள் அஞ்சினர். ஆனால் ஹனோவர் அரசமரபினர் காலத்திய மக்கள் இன்னும் அதிகமாக வேலியிட்டு நிலங்களைத் தடுத்துப் பண்ணைகளாக்கினால் தான், மக்கள் பெருக்கம் மிகுந்துள்ள இங்கிலாந்தைப் பஞ்சம் உண்டாகாமல் காப்பாற்ற முடியும் என்று தங்கள் அனுபவத்தின் மூலம் அறிந்தனர்.[1]

வேளாளர்களின் அடக்கமான பண்ணைகள் அங்குத் தங்கி வாழ்கின்றவர்களுக்கு ஏற்பச் சிறு சிறு துண்டுகளாகத் துண்டாடப் பட்டதோடு, பெரும் நிலப் பண்ணைகள் (ஜமீன்கள்) உருவாகியதையும் காணலாம். டியூடர்காலமக்கள் எலிசபெத்துப் பேரரசியின் காலத்தில் கிராமப்புற மாளிகைகளில் தலைசிறந்து விளங்கிய குடும்பங்களில் தோன்றிப் பெரும் செல்வமிக்க குடிமக்களாக விளங்கியமையே இதற்கு அழியாத பெரும் சான்றாவார்கள். சில மனிதர்களைப் பெருஞ் செல்வர்களாக மாற்றிய இவ்வியக்கம், பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் சிறிய இறையிலி நில உரிமையாளர்களை அழிப்பதன் மூலம் உச்ச நிலையை அடைந்தது. ஆனால் டியூடர்கள், ஸ்டூவர்ட்டுகள் ஆட்சிக்காலத்திய இங்கிலாந்தில் பேருடை-

---

பிடப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது. அவர்கள் வைத்திருந்த நிலம் இறையிலி நிலமாகவும், குத்தகை நிலமாகவும் இருந்தது. ஆனால் 'வில்லெய்ன்' (Villeins) என்பவர் வேளாளர் அல்லர்; நிலமற்ற கூலிக்காரரும் அல்லர். அவர்களுடைய பண்ணைகளின் உட்குடிகளாவர்.

[1] Lord Ernle: Land and the people, Chaps I & II.

மைகளும் சிற்றுடைமைகளும், பெரும் பண்ணைகளும் சிறு வயல்களும் அருகருகே செழித்து விளங்கியமை கருத்திலிருத்தத்தக்கதாகும். தலைமகன் உரிமை இங்கிலாந்தில் சட்டத்துக்கு இணங்கிய கடமையாக இல்லாமற்போய் நெடுங்காலம் கழிந்த பிறகும், அது சமுதாயத்தின் சிறந்த வழக்கமாக இருந்து வந்தது. அதனால் நிலவுடைமைப் பெருக்கம் வீறுடன் விளங்கலாயிற்று. நாட்டு நன்மக்கள் அவர்களுடைய உயில்களில் (will) மூத்த பிள்ளைகளே நிலபுலன்களை அடையுமாறு எழுதி வைத்தனர். இவ்வாறு உயில் எழுதுவதற்கு முன்பே தம்முடைய இளைய பிள்ளைகளுள் சிலரை வளர்ந்து வரும் தொழில்களிலோ, வாணிகத்திலோ பயிற்சி பெற்றுப் பொருளீட்டுமாறு அயல் ஊர்களுக்கும், அயல் நாடுகளுக்கும் அனுப்பினர்; மற்றும் சிலரைத் திரை கடலோடித் திரவியம் தேடுமாறு அனுப்பினர். இவ்வழக்கம் ஐரோப்பியப் பிரபுத்துவ நிலையினின்று பெரிதும் வேறுபட்டதாகும். இவ்வழக்கம் ஆங்கிலேயச் சமுதாயத்தில் அரும்பியிருந்த வகுப்புப் பிரிவுகளை அடியோடு அழித்தொழித்தது. மேலும், இங்கிலாந்தின் பெருவாணிகத்தையும், பேரரசையும் உருவாக்கப் பேருதவி புரிந்தது. அத்துடன் அது பெருநிலப் பண்ணைகளை அமைப்பதற்கும் காரணமாக இருந்தது.

ஆட்டுப் பண்ணைகளும், தடுப்பு மேய்ச்சல் பண்ணைகள் மட்டும் இங்கிலாந்தின் நாட்டுப்புறங்களில் தோன்றிய புத்துணர்வின் அறிகுறிகள் அல்ல; முன்பெல்லாம் 'பிழைப்பிற்காக வேளாண்மை' என்னும் கோட்பாட்டிற்கிணங்க ஒவ்வொரு ஊரும் தனக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பயிரிட்டுக் கொள்ளுமாறு உதவி செய்யப்பட்டன. ஆனால், இப்பொழுது சிறியோரும் பெரியோருமான பல மக்கள் தானியங்களுக்கும், கம்பளிக்கும், கால்நடைகளுக்கும், குதிரைகளுக்கும், கோழிப் பண்ணைகளுக்கும், பால் பண்ணை உற்பத்தி செய்யும் பொருள்களுக்கும், இன்னும் இவற்றைப் போன்ற நூற்றுக்கணக்கான பொருள்களுக்கும் நாட்டுச் சந்தைகளில் நாள்தோறும் உடனடித் தேவைகள் பெருகிக் கொண்டு வந்ததைக் கருத்தில் கொண்டே, பெரும் பொருளை நிலத்திலே முதலீடு செய்து வந்தனர். டியூடர், ஸ்டுவர்ட்டு அரசமரபினர்களின் ஆட்சிக்காலம் முழுவதும் பண்டைக்காலம் முதல் பிழைப்பிற்காகச் செய்யப்பட்டு வந்த வேளாண்மையும், புதிய முதலாளித்துவ வேளாண்மையும் அருகருகே செழிப்புற்று விளங்கியது. ஆயினும் முதலாளித்துவ வேளாண்மை பெரிதும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. முதன் முதலாகப் பீருக்கு (Beer) நறுமணமூட்டும் 'ஹாப்பு' என்னும் பொருள்

(Hop), பிளாண்டர்சிலிருந்து (Flanders) இங்கிலாந்திற்குக் கொண்டுவந்து புகுத்தப்பட்டபொழுது, முதலாளித்துவ வேளாண்மை முதல் வெற்றி பெற்றது. இப்புதிய பொருளின் வருகையால் டியூடர் காலத்து இங்கிலாந்து நாட்டு மக்களின் குடிநீர் வகையில் பெரும் மாற்றங்கள் உண்டாக்கியதோடு, கெண்ட்டு (Kent) என்னும் நகரம் புதிதாகத் தோன்றலாயிற்று. குளிர்காலத்தில் கால்நடைகளுக்கும் செம்மறியாடுகளுக்கும் தீனி போடுவதற்குரிய வழிவகைகள் கருத்தாக ஆராயப் பட்டன. ஷேக்ஸ்பியர் (Shakespeare) காலத்திற்கு முன்பே இங்கிலாந்தில் டர்னிப்பு (Turnip) கிழங்குகள் பயிரிடப்பட்டன என்பது அவருடைய நாடக நூல்களில் டர்னிப் கிழங்குகள் குறிப்பிடப்படுவதால் அறிகிறோம்.[1] ஹாலந்து நாட்டில் அறிவியல் அடிப்படையில், செயற்கை முறையில்வளர்க்கப்படும் புல்பண்ணை முறையைப் பின்பற்றி, ஸ்டுவர்ட்டு மன்னர்கள் காலத்தில் இங்கிலாந்திலும் செயற்கை முறையில் புல் வளர்க்கப்பட்டன. எருதுகளைக் கொண்டு ஏர் உழுவதற்குப் பதிலாக குதிரைகளைக் கொண்டு ஏர் உழும் முறை மெல்ல மெல்லப் பரவலாயிற்று.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

ஏழாம் ஹென்றியின் பண்பு நலன் — ஒழுங்கற்ற பழக்கங்கள் டியூடரின் கொள்கை : அரசர் மன்றம் — அரசு பாராளுமன்றத்திற்குப் பயிற்சி தருதல்—விண் மீன் மன்றத்தின் செயல்முறைகள் — அதிக வரி விதிப்பு இயலாது — அமைதிகாண் நீதிபதிகள் — துணி வாணிகம் — தேசியமும் தனி மனித உரிமையும் — புதிய நடுத்தர வகுப்பினர் — முரட்டு இரவலர் — தடுப்பு நிலங்களின் நன்மை தீமைகள் — வேளாளர்களின் அடக்கமான பண்ணைகள் — உழவுத் தொழிலின் வளர்ச்சியும் முன்னேற்றமும்

[1] 'மகிழ்ச்சியுறு மனைவியர்' என்னும் நாடகத்தில் ஷேக்ஸ்பியர் 'டர்னிப்' கிழங்குகளைக் குறிப்பிட்டுள்ளார். ஆன்பேஜ் (Anne page) என்னும் நங்கை டாக்டர் கேயஸ்ஸை (Dr-Caius) மணந்தவுடன் டர்னிப்பு கிழங்குகளால் அடித்துக் கொல்லப்படுதல் நல்லது என்று குறிப்பிடுகின்றாள்.

## மேற்கொண்டு படிப்பதற்குரிய நூற்கள்
(பொதுவாக டியூடர் காலத்திற்குரியவை)


I. அரசியல் :

1. பிஷர், H. A. L. : (H. A. L. Fisher)
   Political History of England, 1485-1547.
2. பொலார்டு, A. F : (A. F. Pollard)
   Political History of England, 1547-1603.
3. இன்னஸ் : (Innes)
   England under the Tuders.
4. டானர் : (Tanner)
   Tudor Constitutional Documents.
5. ஓல்டுசுவர்த்து : (Holdsworth) :
   History of English Law, vol. IV
   (இக்காலத்தைப் பற்றியது மிகச் சிறப்புடையது)
6. பொலார்டு : (Pollard)
   Factors in Modern History.
7. மாக் இல்வெயின் : (Mc Ilwain)
   The High court of Parliament
8. Pollard and his Twelve colleagues :
   Tudor studies, 1924.


குறிப்பு :

இக்காலத்தைப் பற்றிய கருத்து வேற்றுமை மிகுந்த வரலாற்றை திரு. பிரவுட் (Froude) டும், அவருடைய கருத்தினை எதிர்ப்பவர்களும் எண்ணற்ற செய்திகளைக் கொண்டு பல நூற்கள் எழுதியுள்ளனர் என்பது உலகறிந்த உண்மை. எனவே, அந்நூற்களை இங்குக் குறிப்பிடத் தேவை இல்லை என்று நான் கருதுகின்றேன். இன்றைய தலைமுறையைச் சேர்ந்த வரலாற்று சிரியர்கள் மிகவும் அமைதியான மனநிலையும், பெரிதும் விருப்பு வெறுப்பின்றி நடுநிலையான மனநிலையும், உடையவர்களாக இருக்கின்றனர்.


II. பொருளாதார, வேளாண்மை மாற்றங்கள் :

1. ஆஸ்லி : (Ashley)
   (a) Economic Organization in England ;
   (b) Economic History, Part II

2. எர்ன்லே : (Ernle)
(a) British Farming
(b) The Land and the People, Chap II.

3. டானி : (Tawney)
Agrarian Problem in the 16th Century.

4. ஜான்சன், A. H. : (A. H. Johnson)
Disappearance of the Small Free holder

5. கொன்னர் : (Gonner)
Common Land and Enclosure.

6. லியோனர்டு . (Leonard)
English poor Relief.

7. டானியும், பவரும் : (Tawney and Power)
Tudor Economic Documents

III. கல்வி முதலியன :

1. லீச்சு : (Leach)
English Schools at the Reformation.

2. பாஸ்டர் வாட்சன் : (Foster Watson)
English Grammar Schools to 1660.

3. ஐன்ஸ்டின் : (Einstein)
Tudor Ideals.

4. சீபோம் : (Seebohm)
The Oxford Reformers.

## இயல் 2

# மறுமலர்ச்சி இயக்கத்தின் மாணவர்கள்

*லோலார்டியக் கோட்பாட்டின் (Lollardry) புத்துயிர்ப்பு— மறுமலர்ச்சி இயக்கத்தின் மாணவர்கள் — உல்சியும் அரசுகளின் ஆதிக்கச் சமநிலைக் கோட்பாடும் — புதியன கண்பிடிக்கும் காலம் — காபட்டு (Cabots) — எட்டாம் ஹென்றி அரசாங்கக் கப்பற் படையை நிறுவுதல்.*

*அரசர்கள் : ஏழாம் ஹென்றி 1485 — 1509*
*எட்டாம் ஹென்றி 1509 — 1547*

இங்கிலாந்தில் நார்மானியர் வெற்றி பெற்றது முதல் இன்று வரை, நம்முடைய நாட்டு வரலாற்றில் காணமுடியாத சிறப்பு மிக்க செய்தி என்ன வென்றால், பதினைந்தாம் நூற்றாண்டு முழுவதும் அறிவுத்துறையில் இங்கிலாந்து வறட்சியுற்று இருந்தமையேயாகும். இதற்கு விதி விலக்காக இருந்தது பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி இருபதாண்டுகளேயாகும். விக்ளிப்பின் (Wycliffism) கோட்பாட்டினர் துன்புறுத்தப் பட்டமையின் மூலம், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் மட்டுமல்லாமல் நாடு முழுவதிலும் சிந்திக்கும் உரிமை மூர்க்கத்தனமாக அடக்கியொடுக்கப்பட்டது. அதனால், அறிவுத்துறையிலும், ஒழுக்கத் துறையிலும் பழைமைப் பண்பாடுகளுள் யாதேனும் ஒன்று புத்துயிர்ப்புப்பெற்ற போதிலும், நன்மை ஒன்றும் உண்டாகவில்லை. இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த 'துறவிகள் வருகை' யோடு இதற்கு எத்தகைய தொடர்பும் இப்பொழுது இருப்பிதாகத் தெரியவில்லை. ஏழை பீகாக்கு (Pecock) என்னும் பாதிரியார் சிறை செய்யப்பட்டார். ஆனால், அவர் விசாரணை செய்யப்பட்டார். அதனால் சீர்திருத்த எதிர்ப்பாளர் (Obscurantism) இயக்கத்தின் வெற்றி உச்ச நிலையை அடைந்தது. லோலார்டுகளுக்கு எதிராக, அவர் வாதாடினர். திருச்சபையின் ஆதிக்கத்திடம் தம்முடைய குறையை முழுவதும் முறையிடாது, ஓரளவிற்கு மனிதனின் பகுத்தறிவிடத்து முறையிட்டார். ஒருசில புகழ் வாய்ந்த நாட்டுப் பாடல்களை (Ballads) நாம் நீக்கி விட்டால், மக்களிடை இக்காலத்தில் பேரிலக்கியங்கள் ஒன்றும் தோன்றாமை இங்குக் கருதத்தக்கது. சாசரை (Chaucer) ப் படிப்போரும், மனப்பாடம் செய்து ஒப்புவிப்போரும், அதைப் பின்பற்றிப் போலியாகப் பாடுவோரும் தோன்றினர்களே ஒழிய, அவருடைய இலக்கிய மரபை வளர்க்கும் புதுக் கவிஞர்கள் ஒருவர் கூடத் தோன்றவில்லை. ஆயினும் அக்காலத்தில் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட அச்சு இயந்திரம் இருந்தது. நடுத்தர வகுப்பினர் கல்வி பயிலுவதற்குப் போதிய புதுப் பள்ளிக் கூடங்களும் நாட்டிலே இருந்தன. இங்கிலாந்தில் அக்காலத்தில் பயிற்றுவிக்கப்பட்ட கல்வி தரம் குறைந்ததாகவே இருந்தது. ஆயினும், அக்கல்வி கற்ற மக்கள் தங்கள் மனத்தில் எத்தகைய கருத்துகளையும் ஆழ வேரூன்றி வளருமாறு செய்து வந்தனர். ஏழாம் ஹென்றியின் ஆட்சி மக்களின் மனத்தில் விதைவிதைப்பதற்கு ஏற்ற பருவமாக அமைந்தது.

நாட்டிலே அமைதியும், ஒழுங்கும் மீண்டும் நிலை நாட்டப்பட்டன. அதனால் அறிவாற்றல் மறு மலர்ச்சிக்கு ஆதரவான

சூழ்நிலை உருவாகியது. லூதரின் (Lutheran) கருத்துமாறுபாடு தோன்றுவதற்கு முன்பே, டியூடர் மன்னர்களின் ஆட்சிக் காலத் தொடக்கத்திலேயே, பிற்காலத்தில் விளையப்போகும் நன்மையின் அறிகுறிகள் இரண்டை நாம் காண முடிகின்றது. ஏழை எளிய மக்கள் விவிலிய நூலினைப் படிக்கத் தொடங்கியமையும் லோலார்டியக் கோட்பாடுகள் புத்துயிர்ப்புப் பெற்றமையும் முதலாவது நன்மையாகும். கடல் கடந்த நாடுகளிலிருந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பயனாகத் தோன்றிய கல்விமுறை இங்கிலாந்திற்குள் நுழைந்தமை இரண்டாவது நன்மையாகும். இவ்விரு இயக்கங்களோடு இன்னொரு கருத்தினையும் நாம் சேர்த்துக் கூறலாம். அதாவது நாட்டு மக்களுள் பெரும் பிரிவினரிடையே, சமயக் குருமார்களுக்கு எதிர்ப்பாக ஒரு புத்துணர்ச்சி தோன்றியது. அது மேற்கண்ட இரு இயக்கங்களுக்கும் பேராதரவு தந்து வளர்த்தது எனலாம். 'ஏபெல் (Abel) என்பவர் ஒரு மத குருவாக இருப்பாரானால், அவருடைய எதிரியாகிய கெய்னை (Cain) லண்டன்மாநகரத் தீர்ப்புச் சான்றோளர் குழுவினர் (Jury) குற்றமற்றவர் என்று அறிவிப்பர்' என்பது ஒரு பழமொழியாகும். அதனால் மக்களுக்கு மத குருமார்கள் மீது உண்டான வெறுப்புணர்ச்சி ஒருவாறு புலப்படுகிறது. ஒவ்வொரு ஊரிலும் இருந்த பெரிய தனக்காரர்கள் (Squires) பிரபுக்கள் முதலியோர் லோலார்டியக் கோட்பாட்டை மேற்கொண்டொழுகுவதைக் கைவிட்டதோடு, திருச்சபையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாது வாழத் தொடங்கினர். கொள்ளையிடப்படுவதால் கிடைக்கக் கூடிய பொருளைக் கொண்டு அவர்கள் செல்வர்களாக விரும்பியமையால், திருச்சபையைக் கொள்ளையடித்து அழிக்கவேண்டும் என்ற கொள்கையைப் போற்றி ஆதரிக்கவும் அவர்கள் ஆயத்த மானார்கள். இங்கிலாந்தில் மற்ற உரிமைகளெல்லாம் மாறிக்கொண்டிருந்த காலத்திலும், பல நூற்றாண்டுகள் திருச்சபையின் தனியுரிமைகள் (Ecclesiastical Privileges) சிறிதும் மாற்றப்படாமல் இருந்து வந்தன. இவ்வாறு திருச்சபையின் தனியுரிமைகள் நெடுங்காலமாக மாற்றப்படாமல் இருந்தமையே இங்கிலாந்து மக்களுக்கு மத குருமார்களிடத்து ஒருவகை வெறுப்புணர்ச்சியை உண்டாக்கியது. அவர்களைப் புதிய கருத்துகளையும், கோட்பாடுகளையும் உடனடியாகக் கேட்டுச் சிந்திக்கத்தூண்டியது. தன்னுடைய தனியுரிமைகளையும், பெருஞ் செல்வத்தையும், மக்களைத் துன்புறுத்தும் அதிகாரத்தையும் திருச்சபை கட்டிக்காப்பதில் கருத்தாக இருந்தது. ஆனால், அது ஒழுக்கத்துறையிலும் அறிவுத்துறையிலும் தன்னுடைய தலைமையினை இழந்துவிட்டதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. விக்ளிப்பியக்

கோட்பாட்டிற்கு எதிராகத் தமக்குத் தற்காப்புத் தேடிக் கொள்ளத் திருச்சபை முடிவு செய்தது. அதற்குச் சீர்திருத்தத்தைக் கையாளாது அடக்கு முறையைக் கையாளத் தொடங்கியது; அது சிறிது காலத்திற்கு வெற்றியைத் தந்தது. ஆனால் அதுவே பிற்காலத்தில் பெருந்துன்பம் தருவதாக முடிந்தது.

லூதர் தோன்றுவதற்கு ஒரு தலைமுறைக்கு முன்பு, நெடுங் காலமாக அடக்கியொடுக்கப்பட்ட லோலார்டியக் கோட்பாடுகள் மீண்டும் திடீரென வெளிக்கிளம்பிப் புகழ் பெறலாயிற்று. அது இங்கிலாந்து மண்ணிலே முளைத்தெழுந்த பெருமையுடையது. ஜான் பனியனின் ஆன்மீகத் துறையின் மூதாதையர்களால், குடிசைகளிலும் தொழிற்சாலைகளிலும் ஏழை மக்களின் மரபுப் பண்பாக அது போற்றி வளர்க்கப்பட்டது. முடியரசின் தனி மானியப் பகுதி நிலக் கூறுகளிலும் (Chilterns) உள்நாட்டுக் கோட்டங்களிலும் வேலை செய்த உழவர்களும், லண்டன் மாநகரிலும், பிரிஸ்டலிலும், மற்றைய நகரங்களிலும் வாழ்ந்த ஏழை எளிய மக்களும், எங்காவது ஓரிடத்தில் இருந்த சமயக் குருவையும், வாழ்க்கை வசதியுடைய மக்களையும் மறைவாகச் சந்தித்து ஆங்கில மொழியில் எழுதப்பட்ட திருக் கடிதத்தையும், விவிலியத்திலுள்ள நற்செய்தியையும், 'விக்ளிப்பின் வெறுக்கத் தக்க நூல்களையும்' படித்து வந்தனர். இதன், மூலம் நாம் இப்பொழுது 'புராடஸ்டண்ட்டு' என்று கூறும் கத்தோலிக்க மறுப்பு இயக்கத்தைப் பற்றித் தாங்கள் கொண்ட கருத்துகளுக்கு அவர்கள் உரமூட்டி வந்தனர். கி. பி. 1400-க்கும், 1521-க்கும் இடையே லோலார்டுகளில் (Lollards) பலர் கழுவேற்றப்பட்டனர்; தங்கள் உயிரினைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பியவர்கள் லோலார்டியக் கோட்பாடுகளைக் கைவிடலாயினர். இதற்கு முன்பு நிகழ்ந்த துன்புறுத்துதல்களைக் காட்டிலும் இம்முறை மிகவும் கடுமையாகவே இருந்தது. ஆயினும், துன்புறுத்துதலின் நோக்கம் தோல்வியுற்றது எனலாம்.

அதே காலத்தில் வேறொரு புதிய இயக்கம் பல்கலைக் கழகங்களை ஒரு கலக்குக் கலக்கி அவற்றைப் புத்துயிர் பெறுமாறு செய்தது. இத்தாலி மறுமலர்ச்சி இயக்கத்தின் தாயகமாகும். எனவே அங்கிருந்து பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி இருபதாண்டுகளில் புதிய கல்வியும், ஆராய்ச்சியும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திற்கு வந்து சேர்ந்தன.[1] கிரேக்க இலக்கி

[1] ஆறாம் ஹென்றியின் ஆட்சி தொடங்கிய காலத்தில், ஹம்பரி, எனப்பட்ட கிளௌசெஸ்டர் கோமகன் இத்தாலிய நாட்டு, புதிய மறுமலர்ச்சி இயக்கத்தைச் சார்ந்த அறிஞர்களை ஆதரித்துப் போற்றினார்.

யத்தில் புதியதொரு ஆர்வத்தையும், இலத்தீன் இலக்கணத்தில் புதியதொரு ஈடுபாட்டையும், மருத்துவ அறிவியலில் அளவு கடந்த கவர்ச்சியையும் இத்தாலியிலிருந்து, குரோசைனும் (Grocyn), லில்லி (Lily)யும், லினேக்கரும் (Linacre) தங்கள் தாயகத்திற்குக் கொண்டு வந்தனர். நெடுங்காலமாக இழக்கப்பட்டிருந்த கிரேக்கப் பண்பாடு மீண்டும் மெல்லப் புத்துருவம் பெறலாயிற்று. ஆர்வம் மிக்க அறிஞர்களுக்குக் கொலம்பஸ், காபட்டு (Cabot) முதலியோரின் புத்தம் புதிய கடற்பயணங்கள் இடைக்கால அண்ட அமைப்பியல் (cosmography) எல்லைகளுக்கு அப்பால் பரந்ததொரு நிலவுலகம் இருப்பதைக் கண்டு பிடித்துக் காட்டியதைப் போன்று, இடைக்கால வானுலகிற்கும், நரக லோகத்திற்கும் உட்படாத புதியதொரு சிந்தனை உலகம் கிரேக்கப் பண்பாட்டிலே காட்சியளித்தது. இதற்கிடையில் இடைக்காலத் தெளிவுற்ற இலத்தீன் மொழிக் கல்விக்குப் பதிலாக சிசரோ (Cicero) பேசிய எழில் மிகு இலத்தீன் மொழிப் பயிற்சியும், ஆராய்ச்சியும் இங்கிலாந்தில் பரவியது. அதனால் ரோமானியத் தொன்மை நாகரிகம் மக்களுடைய மனத்தைக் கவர்ந்தது. இத்தகைய அரிய பண்பாட்டியல்பு நீதிமன்றங்களிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் ஸ்டிராட்போர்ட் முதலிய இடங்களிலுள்ள பொது இலக்கணப் பள்ளிகளுக்குச் சென்று பரவுமானால், இவ் வாற்றங்கரையோர வாழ்க்கை, காலப்போக்கில் பேரருளும், பெருந்தன்மை மிக்க வீரவுணர்வும் பெற்றனவாக மாறிவிடும்.

தற்கால இங்கிலாந்தினை உருவாக்குவதற்கு உதவிய மற்றொரு அடிப்படைப் பண்பின் கூற்றினை, லண்டன் மாநகர வணிகர் ஒருவரின் மகனை கோலட்டு (Colet) என்னும் இளைஞர் கி. பி. 1497-ல் புதிதாகக் கொண்டு வந்து இங்குப் புகுத்தினர். அவர் இத்தாலிய நாட்டு நறுமணச் சோலையிடையே அமைந்த கலைக் கழகத்தில் பயின்றுவிட்டுத் தாயகத்திற்குத் திரும்பி வந்தார். வந்தவுடன் செயிண்ட்–பாலின் (St. Paul) திருக் கடிதங்களைப் பற்றித் (Epistles) தான் சொற்பொழிவாற்றப் போவதாகக் கூறி, அவர் ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்தையே வியப்பிலாழ்த்தினர். தம்முடைய அறிவுத் திறமை ஒன்றை அடிப்படையாகக் கொண்டே, ஆர்வம் மிக்க பட்டம் பெறும் கல்லூரி மாணவர்களைப் பேரார்வத்தோடு கேட்குமாறு கோலட்டு செய்தார். எதையும் ஏற்றுக் கொள்ள மறுக்கும் மடாலய முதல்வர் (Abbot)

---

அவர் ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்திற்கு அளித்த நூல் நிலையம் யாட்லின் நூல் நிலையத்தின் தொடக்க நிலைக்குச் சிறந்த சான்றாகும். அங்குப் பண்டை அறிஞர்களின் இலக்கியங்களையும், தத்துவங்களையும் சிறிதுகாலம் கழிந்த பிறகுதான் மக்கள் படிக்கலாயினர்.

களையும், இறைமையியல் பேரறிஞர்களையும் (Doctors of Divinity), சமயக் குருவாக அமர்த்தப்படாத ஓர் இளைஞனின் சமயச் சொற்பொழிவைக் கருத்தூன்றிக் கேட்குமாறு செய்தார். அச்சொற்பொழிவில் அவர் பண்டைத் தத்துவப் பொருள் விளக்க முறையினைப் பற்றிக் கவலைப்படவில்லை. மூல நூலிலிருந்து நேரடியாகப் பல பகுதிகளை எடுத்து மேற்கோள் காட்டி, செயின்ட் பாலின் வாழ்க்கையையும் அறவுரைகளையும் மெய்ம்மையான, மனிதப் பண்பு நிறைந்த வகையில் அவர் விளக்கி விரிவுரையாற்றினார். திருக் கடிதங்களை எழுதியவர் உணர்த்த விரும்பியவை எவை என்பதையும், அவற்றை முதன் முதல் பெற்றோர், எவ்வாறு அவற்றின் உட்பொருளை உணர்ந்தனர் என்பதையும் ஆராய்ந்தறிய கோலட்டு (Colet) முயன்றாரே ஒழிய, கடந்த மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்த வாத முறை ஆராய்ச்சி வல்லுநர்களால் (Dialecticians) அவை எவ்வாறு விளக்கப்பட்டன என்பதைப் பற்றி அவர் சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பிணத்தினைத் திறந்த வெளியிலிட்டால் எவ்வாறு அது அழிவுறுமோ, அதைப் போல இடைக்கால கல்வி முறையும் ஆராய்ச்சிகளும் அவருடைய அறிவாற்றல் மிக்க விரிவுரையால் தவிடு பொடியாயின. டன்ஸ் ஸ்கோட்டஸ் (Dunsscotus) ஒரு காலத்தில் அறிவாற்றல் முன்னேற்றத்தினை ஆதரிப்பதில் முதன்மை பெற்று விளங்கினார். ஆனால் புதிதாக ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறிய புதிய தலைமுறையினரும், நாட்டின் மூலை முடுக்குகளிலுள்ள பள்ளிகளில் பயின்ற சிறுவர்களும், தெளிந்த பேரறிஞரான டன்ஸ் ஸ்கோட்ஸிடத்தில் இன்னும் உண்மையான ஈடுபாடு கொண்டிருந்தவர்களை 'மடையர்கள்' என்று எள்ளி நகையாடினர்.

அச்சு இயந்திரத்தின் உதவியால் ஹாலந்து நாட்டவரான எராஸ்மஸ் (Erasmus), ஐரோப்பாவில் இதுவரை யாருமே அடைந்திராத அளவிற்கு மிக விரைவில் பேரும் புகழும் பெற்றுச் சிறப்புற்றார். அவர் பெரிதும் இங்கிலாந்திலேயே தங்கி இருந்தார். அவரும் சர். தாமஸ் மூரும் (Sir Thomas More), கோலட்டின் நண்பரும், தோழர்களுமாக விளங்கினர். அவர்களுக்கிடையில் மறுமலர்ச்சி இயக்கத்தின் அறிவராய்ச்சிகளுக்குப் புதியதொரு பண்பு விளக்கத்தைத் தந்து, கோலட்டு இங்கிலாந்தில் எங்கும் பரவுமாறு செய்தார். இத்தாலிய நாட்டில் மறுமலர்ச்சி இயக்கம் கலைச் சுவையும், மூடபக்திக் கோட்பாடும் (Paganisam) கொண்டதாகக் காணப்பட்டது. அதைப் போல் அல்லாமல், வட ஐரோப்பாவில் ஒழுக்க நெறியும், சமயவுணர்வும் செறிந்ததாக மறுமலர்ச்சி இயக்கம் மாற்றியமைக்கப்

பட்டது. இத்தாலிய நாட்டு அறிஞர்களுக்கும், அவர்களை ஆதரித்துப் போற்றும் அரசர்களுக்கும், போப்பு ஆண்டவருக்கு அடுத்த நிலையிலுள்ள குருதேவர்களாகிய கார்டினல்களுக் (Cordinals) கும் மறுமலர்ச்சி இயக்கம் பண்டைக் கவிஞர்களிடத்தும், தத்துவ ஞானிகளிடத்தும், பளிங்குச் சிலையாகக் காட்சி தரும் தெய்வ மகளிரிடத்தும், 'பழுப்பு நிறக் கிரேக்க மொழிக் கையெழுத்துச் சுவடிகளிடத்தும்' பொதிந்து கிடப்பதாகத் தோன்றியது. ஆனால், கோலட்டு எராஸ்மஸ் ஆகிய இருவருக்கும், அவர்கள் மூலம் பொதுவாக இங்கிலாந்து நாட்டு மக்கள் அனைவருக்கும் மறுமலர்ச்சி இயக்கம் மேற்கண்ட பொருள்களை உணர்த்தியதோடு அமையவில்லை. அதற்கு மேலாக அவர்களுக்கு மறுமலர்ச்சி இயக்கம் விவிலிய நூலின் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும், பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலும் இருப்பதை எடுத்துரைத்தது. இதனால் உண்டான வேறுபாடு மிகவும் ஆழமானதாகவும், ஆற்றலுடையதாகவும் இருந்தது. இவ்வாறு இங்கிலாந்திற்கும், பிரஞ்சு இத்தாலிய நாகரிகங்களுக்குமிடையே மீண்டுமொரு பெரிய பிளவினை மறுமலர்ச்சி இயக்கம் உண்டாக்கியது. இதற்கு முன்பே வேறு துறைகளில் உண்டான பிளவு இவ்விரு நாகரிகங்களையும் தனிப் பண்பு வாய்ந்தனவாக வளர உதவியதை நாம் முன்பு கண்டோம். இத்தாலிய நாட்டு மறுமலர்ச்சி இயக்கம் அந்நாட்டு மக்கள் மட்டுமல்லாமல், பிரஞ்சு நாட்டு மக்களும் அன்றுதொட்டு இன்றுவரை கலைகளைச் சுவைப்பதிலும், இலக்கிய இன்பத்தில் திளைப்பதிலும், சமயவுணர்வு அறவேயில்லா அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபடுவதிலும் மகிழ்ச்சியுறுமாறு செய்ததை வரலாறு எடுத்தியம்புகிறது. இதன் விளைவாகச் சமயக் குருமார்கள், பாதிரிகள் முதலியோரின் உதவியில்லாமல் சமயச் சடங்குகளை மக்களே செய்து கொள்ளுவதற்குரிய வாய்ப்பினை அறவே மறுமலர்ச்சி இயக்கம் மக்களுக்கு அளிக்காது உதறித் தள்ளிவிட்டது. ஆனால், இங்கிலாந்தில் மறுமலர்ச்சி இயக்கத்தைச் சார்ந்த மக்கள், கோலட்டின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கிரேக்க மொழியையும், இலத்தீன் மொழியையும் கற்றனர். அதனால் பெற்ற அறிவைக் கொண்டு இங்கிலாந்தின் பள்ளிக்கூடங்களைச் சீர்திருத்துவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், திருச்சபையையும் சீர்திருத்திப் புதுபிக்க முயன்றனர். இவ்வரிய பணியில் குருமார்கள், உலகியலில் மூழ்கிக் கிடக்கும் பொதுமக்கள் ஆகிய இரு திறத்தாரையும் ஒருங்கே தங்களுக்கு உதவி புரியுமாறு அவர்கள் அழைத்தனர்.

ஒரே சமயத்தில் அறிவும், அறிவாற்றலும் நிறைந்ததாயும், பண்டை இலக்கியப் பண்பாட்டையும், கிறிஸ்துவ சமய உணர்வையும் அடிப்படையாக கொண்டதாயும் அமைந்தது இம் மறுமலர்ச்சி இயக்கம். சிலர் கூறுவதைப் போன்று அது இங்கிலாந்தின் சீர்திருத்தச் சூருவளியில் சிக்கி அழிந்தொழியவில்லை. இதற்கு மாருக, மறுமலர்ச்சி இயக்கத்தின் உயிர்ப் பண்பு இங்கிலாந்தின் சீர்திருத்தப்பெற்ற பள்ளிக் கூடங்களின் கல்விமுறைக் கொள்கைளிலும், திருச்சபையின் சமயக் கொள்கைகளிலும் வெளிப்படலாயிற்று. இவ்வாறு இங்கிலாந்தில் பண்டைப் போராட்டங்களினல் குழம்பிக் கிடந்த நிலையிலிருந்து, டியூடர் மன்னர்களின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் சீர்த்திருத்தப் பெற்ற திருச்சபை சிறந்தோங்கத் தொடங்கியது. எலிசபெத்துப் பேரரசியின் காலத்தில் சிறப்புற்று விளங்கிய இலக்கணப் பள்ளியைக் கோலட்டு பார்த்திருப்பாரானல். அவர் பெரிதும் மகிழ்ச்சியுற்றிருப்பார்; மனநிறைவு பெற்றிருப்பார். ஹென்றி, எட்வர்டு, மன்னர்கள் காலத்தில், பழைய அறக் கட்டளைகள் பல பறிமுதல் செய்யப்பட்டன. அவற்ருேடு எலிசபெத்துப் பேரரசியின் காலத்தில் புதிதாகவழங்கப்பட்ட அறக் கட்டளைகளை ஒப்பிட்டுப் பார்ப்போமானல், டியூடர்கள் ஆட்சிக் காலத்தில் கல்வி பயிலுவதற்குரிய வாய்ப்பு வசதிகள் அதிகப்பட்டிருந்ததாகத் தோன்றிலும், அவை தேவையான வசதிகளை அளிப்பதற்குப் போதியனவாக இல்லை. ஆனல் கல்வியின் தரம் பேரளவிற்குத் திருத்தம் பெற்று வளர்ச்சியுற்றிருந்தது மட்டும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

இப்புதிய கல்வி முறையைப் பற்றி இங்கிலாந்தின் புதிய மன்னர் என்ன நோக்கம் கொண்டிருந்தனர் என்பது அடுத்து ஆராயத்தக்கதாகும். அக்காலத்திய சூழ்நிலையில், இங்கிலாந்து அரசருடைய விருப்பத்திற்கு மாருக ஒன்றும் செய்ய இயலாத நிலையில் இருந்தது. அரசரும் மக்களுடைய விருப்பத்திற்கு மாருக எதையும் செய்யமுடியாத இக்கட்டான நிலையில் இருந்தார். ஆனல் இவை இரண்டும் ஒன்ருகச் சேர்ந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்தால் சமயக் கோட்பாடுகளையும், திருச்சபையின் சிறப்புரிமைகளையும் மாற்றுவதும், போற்றிக் காப்பதும் போன்ற எதையும் அவர்களால் எளிதில் செய்ய முடிந்தது. எனவே அரசு கல்வித்துறையில் அதிகமாகத் தன்னுடைய கருத்தைச் செலுத்தியது.

ஏழாம் ஹென்றி இங்கிலாந்தின் காவலராக மாபெரும் பணியாற்றுவதில் பெரிதும் ஈடுபட்டிருந்தார். அதனல் புதிய

கல்வி முறையினைப் பற்றிச் சிந்திக்க அவருக்குப் போதிய ஓய்வு கிடைக்கவில்லை. சமயக் குருமார்கள் அவருக்குப் பணித்துறை அலுவலர் (Civil Servants) களாகப் பெரிதும் பயன்பட்டனர். தவத்திரு போப்பு ஆண்டவர், ஹென்றியின் அரசியல் சூழ்ச்சி நிறைந்த சதுரங்க விளையாட்டிற்குப் பயன்படும் ஒரு காயாகவே கருதப்பட்டார். ஹென்றி மற்றத் துறைகளில் எல்லாம் பழமைக்குக் கட்டுப்பட்டவராக இருந்தார். ஒரு முறை அவர் கழுவேற்றப்பட இருந்த லோலார்டு ஒருவரைக் கிறிஸ்துவராக மாற்றுவதில் கலந்து கொண்டார்; அந்த லோலார்டு தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொண்ட பிறகும், அவனைத் தீயிலிட்டுக் கொல்லுமாறு அரசர் கட்டளை யிட்டார். அக் காலத்தில் கிறிஸ்துவ சமயத்தின் அற உணர்வு இத்தகைய அவல நிலையில்தான் இருந்தது போலும்.

ஆனல் அவருடைய மகன் எவ்வாறு நடந்து கொண்டார் என்பது அறியத் தக்கது. இளவரசனக இருந்துவந்த தமது தமையன் எதிர்பாராவகையில் இறந்துவிட்டமையால் கி. பி. 1509-ல் எட்டாம் ஹென்றி அரசனக முடிசூட்டிக் கொண்டார். அத்துடன் தம்முடைய அண்ணன் கூடி இன்புற்றிருக்க வேண்டியவளும், ஸ்பெயினிலிருந்த மன்னர் பெர்டினண்டின் மகளுமான, (தன்னைவிட ஆறு வயது மூத்தவளாகிய) காதரைன் (அரகான்) என்னும் இளவரசியை மணம் செய்து கொண்டார். பதினெட்டு ஆண்டுகளே நிரம்பிய இளைஞரான அரசர், அவ்வயதினரான தம்முடைய குடிமக்களைக் காட்டிலும் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்கினர். அவர் அரசர்களுக்கெல்லாம் சிறந்ததொரு எடுத்துக் காட்டாக விளங்கினர். அவர் புதிய கல்வியில் மூழ்கித் திளைத்த அறிஞர்களையும், இங்கிலாந்தில் எல்லா வகையிலும் சிறந்து விளங்கிய ஆட்டக்காரர்களையும் போற்றி ஆதரிக்கும் புலவராக விளங்கினர். அவருடைய தந்தை பெருந்துன்பப்பட்டு ஈட்டிய பொருளிற்கும், அதிகாரத்திற்கும் தகுதியுடையவராக ஹென்றி விளங்கினர். மேலும் அவர் அமைதியை விரும்பும் அரசரென்னும் புகழையும் பெற்றார். அவர் தம்முடைய மக்களிடத்துக் கொண்டிருந்த அன்பிற்கு அச்சாரமாக எம்ப்சன் (Empson), டட்லி (Dudley) ஆகிய இருவரின் தலைகளையும் கொய்தார். இவ்வாறு எட்டாம் ஹென்றி ஆட்சிக்கு வந்த காலம் முதற் கொண்டே நாட்டு மக்களின் உள்ளங்களை யெல்லாம் கொள்ளை கொண்டார். இங்கிலாந்தின் பாமரக் குடியானவனகிய ஜார்ஜைப் (George) போன்றே, அவர் உண்மையான ஓர் ஆங்கிலேயனக—ஆனல் அவர்களைக் காட்டிலும் பெருந் திறமையும் பேராற்றலும் வாய்ந்தவராக விளங்கினர். நாட்டில் சிறந்து

விளங்கிய காட்டுவாழ் வேட்டுவரைப் போன்று அவரும் விற் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருந்தார். ஒரு சமயம் அவருடைய விற்பயிற்சியைக் கண்டு பாராட்டிய பிரஞ்சு நாட்டுத் தூதரை நோக்கி, 'பிரஞ்சுக்காரர்களுக்கு இது ஒரு நன்மையாகும்.' என்று அவர் மொழிந்தார். பழம் பொருட்காட்சிச் சாலையி லுள்ள கொடிய படைக்கலன்களைக் கொண்ட எட்டாம் ஹென்றி யின் பேருருவ உறுப்புகள், லான்ஸ் லாட் (Launcelot) போன்ற மாபெரும் வீரர்கள் வரிசையில் சிறப்பிடம் பெற்று விளங்கிய ஹென்றி, தம் எதிரிகளை எளிதில் வென்று, மேலும் மேலும் பகைவர்கள் கிடைக்காமையால் தோள் தினவெடுத்துத் திரிந் திருக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றன. அவர் டென்னிஸ் பந்தாட்டத்தில் (Tennis) வல்லுநராகவும், வேட்டை யாடுவதில் தேர்ச்சி பெற்றவராகவும் விளங்கினர். தம் தகப்ப னரைப் போன்றே அவர் வைதிகராக இருந்தார்; அவர் லோலார்டுகளைத் தீயிலிட்டுப் பொசுக்குவதற்குத் தொடர்ந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார். அவர் மார்ட்டின் லூத ரின் கொள்கைகளைக் கண்டித்துப் புத்தகமொன்றை கி. பி. 1521-ல் எழுதினர். அதனைப் பழைய சமயத்தின் காவலரான போப்பு ஆண்டவர் வேறு மொழிகளில் புதிய வடிவில் வெளியிட் டார். ஆனல், அவர் கோலட்டு, மூர் (More) ஆகியோருடைய நண்பராகவும், இருந்தார். மூரினை இடர்ப்பாடுகள் மிகுந்த அரசவை உறுப்பினர் வேலையில் சேருமாறு ஹென்றி வற்புறுத்தி வந்தார். ஹென்றி, பிரான்சின் மீது கி. பி. 1513-ல் போர் தொடுத்தார். அப்பொழுது அஞ்சா நெஞ்சம் படைத்த பல்கலைக் கழகக் கலைத் துறைத் தலைவரான (Dean) கோலட்டு அதைக் கிறிஸ்தவரின் செயலன்று என்று தாக்கிப் பேசினர். அப்பொழு தும், சீர்திருத்த எதிர்ப்பாளர் குழுவைச் சார்ந்த குருமார் களுக்கு எதிராகக் கோலட்டை ஆதரித்து ஹென்றி, 'ஒவ்வொரு மனிதனும் ஒரு பேரறிஞரைத் (Doctor) தமக்குத் துணையாகக் கொள்ளட்டும்; இவர் கோலட்டு என்னுடைய துணைவர்' என்று கூறினர் என்றல், அவருடைய ஈடுபாட்டை எவ்வாறு எடுத் துரைப்பது? அவர் இயற்றி இசையமைத்ததாகக் கூறப்படும் பாடலில் குறிப்பிடுவதைப் போல் 'ஹென்றி ஒரு மனிதனை நேசித்தார்'; அதோடு 'நல்ல நண்பர் குழாத்திடையே இன்ப மாகப் பொழுது போக்குவதை அவர் பெரிதும் விரும்பினர்' என்னும் கருத்துகள் இங்குக் குறிப்பிடத்தக்கவை யாகும். மற்றக் கலைகளிலும், சிறப்பாக இசைக் கலையிலும் அவர் சிறந்த வல்லு நராக விளங்கினர். அவர் தொட்டுப் பயிலாத இசைக் கருவி களே இல்லையெனலாம். இசையும், பாட்டும் அரசவையில் போற்றி வளர்க்கப்பட்டன. ஆங்கில உணர்ச்சிப்பாடல்களும்

(Lyrics), இசையியல் சிறப்புத் திறமையும் எலிசபெத்து அரசியின் ஆட்சியில் மீண்டும் அழகாகப் பூத்துக் குலுங்குவதற்காகச் சிறந்த முறையில் வளர்ந்து கொண்டிருந்தன. அவை எட்டாம் ஹென்றியின் காலத்தில் அவருடைய அவைக் களத்தில் பாட்டும் இசையுமாக செழித்தோங்கின.

ஹென்றியின் அவைக்களம் எந்தப் பல்கலைக் கழகங்களிலும் காண முடியாதச் சிறந்த அறிஞர்களைக் கொண்ட அறிவுக் கருவூலமாகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. அவருடைய தொடக்ககால நண்பர்கள், அவருடைய உள்ளத்தில் துறவிகளிடத்தும், உருவ வழிபாட்டிலும் வெறுப்புணர்ச்சியை வளர்த்தனர். அத்துடன் அவர்கள் விவிலிய நூலினைப் படிப்பதில் ஆர்வம் உண்டாகுமாறு செய்தனர். இவை யாவும் சீர்திருத்த எதிர்ப்பாளர்களின் வைதிகக் கோட்பாடுகளுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. இதனைப் பிற்காலத்தில் இங்கிலாந்து நாட்டு மக்கள், முப்பதாண்டு தொடர்ந்து அரசராக ஆட்சி புரிந்தமையால் அதிகார வெறியால், அழகும் இளமையும் உடைய சிறந்த ஆட்டக்காரரும், சிறந்தவற்றையும், உயர்ந்தவற்றையும் போற்றிய பண்பாளருமான ஹென்றி எவ்வாறு பெரிதும் மாறி விட்டார் என்பதைத் தெளிவாகக் கண்டனர். ஹென்றி இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கனைத் தன்னல வேட்கை வெறியை வழிபடத் தொடங்கினர். அதனால் தம்முடைய பழைய நண்பர்களின் பிணங்களின் மீது, வெட்கமின்றி அவர் ஏறுநடைப் போட்டுச் சென்றார். அதைக் கண்டு மக்கள் மனம் புழுங்கினர். சமயத்துறையிலே போப்பு ஆண்டவரின் ஆதிக்கத்தை அடியோடு அழித்துவிட்டு, அதற்கு மாறாக அவர் அரசனுடைய ஆதிக்கத்தைப் போற்றத் தொடங்கினர். அப்புதிய சமயக் கொள்கையினால் நாட்டிலே எதிர்ப்புகள் தோன்றின. அவர் அப்புதிய பகைவர்களைக் கொன்று குவித்ததைக் கண்டு மக்கள் அஞ்சி நடுங்கினர். ஹென்றியின் இத்தகைய பலதிறப்பட்ட பிற்காலக் கொள்கைகளின் கூறுகள் அனைத்தும், அவருடைய இளமைப் பருவத்தில் அவருடைய உள்ளத்தில் ஆழப் பதிந்த கருத்துகளினால் உண்டான விளைவுகளேயாகும். இதற்குரிய சுவடுகள் பல அவருடைய வாழ்க்கை வரலாற்றிலே புதைந்து கிடக்கின்றன.

அவர் ஆட்சிக்கு வந்த இந்நிலையில், அத்தகைய கொடிய நாட்களெல்லாம் நெடுந் தொலைவிற்கு அப்பால் இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஹென்றியின் ஆட்சி தொடங்கிய காலத்தில் போப்பு ஆண்டவருக்கு அடுத்த நிலையிலுள்ள குரு தேவர்களுள்

ஒருவரான கார்டினல் உல்சி என்பவர் இங்கிலாந்தில் ஆட்சி செய்து வந்தார். அவரே இங்கிலாந்தில் இறுதியாகப் பதவி வகித்த திருச் சபையைச் சார்ந்த கார்டினலாவார். நாள் தோறும் விடியற் காலையில் நம்முடைய அரசர் தவறுமல் வேட்டையாடுவதற்குச் சென்று கொண்டிருந்தபொழுதும், இரவு வேளைகளிலே பண்டைப் பகட்டாரவார விழாக்களிலும் விருந்துகளிலும் களியாட்டங்களிலும் அரசர் ஈடுபட்டிருந்த பொழுதும், உள்நாட்டு, அயல்நாட்டுக் கொள்கைகளைத் தெளிவாக உருவாக்குவதில் உல்சி (Wolsey) இராப் பகலாக ஓய்வின்றி உழைத்து வந்தார். இவ்வாறு இவர் உருவாக்கிய கொள்கைகளையே, ஹென்றி, தமது ஆட்சியின் பிற்பகுதியில் விடாமுயற்சி வாய்ந்த தாமே எடுத்துக் கையாளத் தொடங்கினர். ஆனால் இளைஞர்களுக்குத் தொண்டு செய்தல் வேண்டும்—அதிலும் ஹென்றி போன்ற இளைஞர்களுக்குத் தொண்டு செய்வது சிறந்ததல்லவா? எனவே, போப்பு ஆண்டவரின் பிரதிநிதியாக உல்சி ஹென்றிக்குத் தொண்டு செய்ததனல் பேராற்றலும், பெருஞ் செல்வாக்கு முடையவராக — முடிசூடா மன்னராக — அவர் திகழ்ந்ததில் வியப்பில்லை.

டியூடர் மன்னர்களுக்குப் பெருந் தொண்டாற்றிய பல சிறந்த அரசியல் அதிகாரிகளைப் போலவே, உல்சி மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்தவராவர். அவருடைய தகப்பனர் கிழக்கு ஆங்கிலியாவில் ஆடுகளை மேய்ப்பவராகவோ, கம்பளி வாணிகம் செய்பவராகவோ இருந்திருக்கலாம். அவர் இளமையிலேயே படித்துப் பட்டம் பெற்றமையால் ஆணவமும், வெளிப்பகட்டும் உடையவராக இருந்தார்; இப்பண்புகள் அரச மரபினரிடத்து இருந்திருந்தால் மக்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். அயல்நாட்டுப் பார்வையாளர் ஒருவர் அவர் அளவு கடந்த தற்பெருமை வாய்ந்த தலைமைக் குரு (Prelate) என்றும், பிறரிடத்து வாய் திறந்து பேசாப் பெரும் பகட்டுக்காரர் என்றும் குறை கூறிச் சென்றமை இங்குக் குறிப்பிடத்தக்கது. பொதுமக்களும் இவ்வாறே கருதினர் என்று தெரிகிறது. அவருடைய சிறந்த அரசியல் சூழ்ச்சித் திறன் வாய்ந்த பண்பு நலனில் மூர்க்கத்தனம் என்னும் அவருடைய மன நிலையாகிய மாசு படிந்து இருந்தது. பிரான்சோடு தொடர்பு கொண்டிருந்த கத்தோலிக்க நன்சியோ (Papal Nuncio) வைத் திடீரென்று ஒரு நாள் பிடித்துக் கழுமரத்தில் ஏற்றப் போவதாக உல்சி அச்சுறுத்தினர். ஹாம்டன் அவையிலே (Hampton Court) சிறப்புற்று விளங்கிய மன்றத்தில் அரசினை நடத்தியபோதும், இடையிடையே சிறிது காலத்திற்கு அவர் பயணம் செய்தபோதும்,


அரசாங்கத்தின் ஆட்சிமுறை மன்னரை மகிழ்வித்தது; மக்களைத் திகைப்பில் ஆழ்த்தியது. ஆனால், இறுதியில் அவை அனைத்தையும் அவருக்கெதிராகத் திருப்புவதற்கு அவை பேருதவியாக இருந்தன. புலவர்களுக்கு உல்சியின் வீழ்ச்சி சிறந்ததொரு நீதியைச் சுட்டிக் காட்டப் பயன்பட்டது.

இங்கிலாந்தின் அயல் நாட்டுக் கொள்கையின் குறிக்கோள், ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஆதிக்கச் சமநிலையை (Balance of Power) நிலை நாட்டுவதாகும். உல்சிதான் முதன் முதல் அதைத் தெளிவாக வரையறுத்து விளக்கினார். பிரான்சிலும், ஸ்பெயினிலும் ஆற்றல் மிக்க முடியாட்சிகள் தோன்றியமையால், இத்தகைய கொள்கை கட்டாயமாகப் பிறப்பிக்கப்பட்டது. அவ்வரசுகளுள் யாதாகிலும் ஒன்று மற்றொன்றை வென்று அடக்கி யொடுக்கி விட்டால், அது ஒன்றே ஐரோப்பாவில் எல்லாவற்றிற்கும் மேலான பேரரசாகிவிடும். அவ்வாறானால் சிறிய இங்கிலாந்தின் நிலை இரங்கத்தக்கதாகவும், பாதுகாப்பாற்றதாகவும் போய்விடும். ஆங்கிலேயரின் குருதிக்கும் பொருளுக்கும் பெருஞ்சேதம் ஏற்படாவண்ணம் பல ஆண்டுகள் உல்சி தம்முடைய முழுத் திறமையையும் கொண்டு நாடுகளிடையே ஆதிக்கச் சமநிலை மிகாதவாறு காத்து வந்தார். கி. பி. 1513–ல் படையெடுத்து வந்த ஸ்காட்டியர்களை (Scots), பிளாடன் (Flodden) என்னும் இடத்தில் ஆங்கிலேயர் புறமுதுகிடச் செய்தனர். நெதர்லாந்து எல்லைப் புறத்தில் ஸ்பர்ஸ் (Spurs) என்னுமிடத்தில் பிரான்சிற்கும், இங்கிலாந்திற்கும் நடந்த போரில் இங்கிலாந்து பெருவெற்றி பெற்றது. இவ்வாறு இங்கிலாந்து பெற்ற இருபெரும் வெற்றிகளால் ஆதிக்கச் சமநிலையினைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் பொறுப்பு இந்நாட்டிற்கே உரியதாயிற்று. ஆனால், கி. பி. 1521–க்குப் பிறகு உல்சியின் பெருந்திறமையும், பேராற்றலும், முன்னறிவும் அவரைத் தோல்வியுறச் செய்தன். ஆற்றலிழந்துவரும் பிரான்சின் நலன் கருதி அதை ஆதரிக்க வேண்டிய நேரத்தில், உல்சி ஸ்பெயினின் மன்னரான ஐந்தாம் சார்லஸையும், நெதர்லாந்து மன்னரையும், ஜெர்மானியப் பேரரசரையும் ஆதரித்தார். பேவியா (Pavia)ப் போர்க்களத்தே இத்தாலியப் படைகள் கி. பி. 1525-ல் அழிக்கப்பட்டன. அந்நாட்டு மன்னரான முதலாம் பிரான்சிஸ் சிறைப் பிடிக்கப்பட்டார். அதனால், அடுத்த நூற்றெண்பது ஆண்டுக் காலத்திற்கு, இத்தாலி ஸ்பெயினின் அடிமையாக வாழ நேர்ந்தது. இதனால் இங்கிலாந்தும் பிரான்சும் தற்காலிகமாக ஆற்றலற்றுப் போயின ; ஐரோப்பாவில் ஹாப்ஸ்பர்க் (Haps burg) அரச குடும்பத்தின் கை மேலங்கிது. இரண்டாம்

பிலிப்ஸ், எலிசபெத்து ஆகிய இருவர் ஆட்சிக்காலத்திலும் இங்கிலாந்து முற்றிலும் அழிக்கப்படக் கூடிய நெருக்கடியான நிலை உருவாகியது. ஆனால், நல்ல காலமாக இங்கிலாந்தில் உல்சி புறக்கணித்து வந்த அல்லது எதிர்த்து வந்த மக்கள் சக்தியும், கடலாதிக்கமும், சமய ஆற்றலும் நன்கு வளர்ச்சியுற்றிருந்தமையால் இங்கிலாந்து தப்பிப் பிழைக்க முடிந்தது.

ஸ்பெயினின் ஆதிக்கம் பண்டை உலகில் (Old world)எல்லைக் குட்பட்டு மட்டும் இருக்கவில்லை. பண்டைக்காலத்தில் ஆசியா, எகிப்து நாடுகளிடையே அமைந்திருந்த வாணிகப் பெருவழிகள் ஐரோப்பாவில் ஜெனோவா (Genoa), வெனிஸ் (venice) நகரங்களின் எல்லைப்புறத்தில் வந்து சேர்ந்தமையால், அவ்வாணிகப் பெருவழிகள் ஜெனோவா, வெனிஸ் நகரங்களின் கைகளிலிருந்து வந்தன. புதியப் பெருங்கடல் வழிகளும், பெருவாணிகத்திற் குரியவழிகளும் கண்டு பிடிக்கும் காலம் தொடங்கி விட்டமையால், அவ்வழிகளின் மீது இருந்த ஆதிக்கம் கைமாறத்தொடங்கியது. இத்தாலிய நகரங்களிலிருந்தும், நிலம் இடையிட்ட நடு நிலக்கடற் பகுதியினுடைய செல்வமும் ஆதிக்கமும், குட்டையான படகுகளின் மூலம் அங்கிருந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மாறிக் கொண்டிருந்தன. இந்நாடுகள் பெருந்தொலைவிலுள்ள ஆசிய நாட்டுச் சந்தைகளுக்குச் செல்லுவதற்காகப் பரந்த ஆழ் கடல்களைக் கடந்து செல்லத்தக்க புது வகையான கப்பல்களைக் கட்டின. அஞ்சா நெஞ்சம் படைத்த கடல் மறவர்களைக் கடல் வழியாக அனுப்பக்கூடிய ஆற்றல் உடையனவாகவும் அவை விளங்கின. அவ்வாறு அனுப்பப்பட்டவர்கள், சென்ற வழியில் எதிர்பாரா வகையில் ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற புது நாடுகளைக் கண்டு பிடித்தனர்.

இத்தகைய மாற்றத்தால் முதன் முதல் நன்மையடைந்த முக்கிய நாடு இங்கிலாந்து அன்று என்பது குறிப்பிடத்தக்கது. கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் போர்ச்சுகல் நாட்டு இளவரசரான ஹென்றி என்னும் கடலோடி, எல்லோருக்கும் முன்னராகவே ஆப்பிரிக்காவின் கடற்கரை யோரத்திலும், இந்தியாவிற்குச் செல்லும் நன்னம்பிக்கைமுனையைச் சூழ்ந்தும் இன்று வரை நிலைத்து நிற்கக்கூடிய நற்பேறு வாய்ந்த ஒரு பேரரசை நிறுவிக் கொண்டிருந்தார். ஸ்பெயின் நெடுங்காலம் ஒற்றுமையற்றதாகவும், மூரியர் (Moors) களோடு போராடிக்கொண்டும் இருந்தது. அதனால் கடலாதிக்கப் போட்டியில் முதலில் இறங்க முடியவில்லை. ஆனால், அரகான் மரபைச் சேர்ந்த பெர்டினன்ட், காஸ்டிலியன் (Castile) இளவரசியான




படம் 20.

**எட்டாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்திய ஐரோப்பா**

இசபெல்லா (Isabella)வை மணம் செய்து கொண்டார். அதனல், இரண்டு அரசுகளும் சேர்ந்து ஓர் அரசாக ஸ்பெயின் ஒன்று பட்டது. மேலும், தன் நாட்டுப் பக்கத்தில் ஜிப்ரால்டர் இடைகழி (Strait) யோரத்தில் மூரியர்களைத் தலைகாட்ட வொட்டாது அடித்து விரட்டியது. தவிரவும் கொலம்பஸைப் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க அனுப்பியதோடு மெக்சிகோ, பெரு முதலியவற்றைக் கண்டுபிடிக்க ஒரு கண்டுபிடிப்பாளரை (Conquista - dores) அனுப்பியது. அவாகள் மெக்சிகோ, பெரு (Peru) ஆகிய இடங்களிலுள்ள சுரங்கங்களைத் தாயகத்திற்கு அன்பளிப்பாக வழங்கி, அதனல் ஸ்பெயினைச் செல்வம் கொழிக்கும் நாடாகச் செய்தனர்.

இச்சமயத்திற்கேற்ற வகையில் போப்பு ஆண்டவரும் செயலாற்ற முனைந்தார். நிலவுலகின் ஒரு முனையிலிருந்து

இன்னொரு முனைக்கு நிலவுலகினிடையே அவர் ஒரு கோடிட்டு அசோரசுக்கு (Azores)[1] மேற்கில் கண்டு பிடிக்கக்கூடிய நாடுகள் எல்லாம் ஸ்பெயினுக்கும், அசோரசுக்கு கிழக்குப் பக்கத்தில் கண்டு பிடிக்கக்கூடிய நாடுகள் எல்லாம் போர்ச்சுகலுக்கும் கொடுத்தார். இவ்வாறு தொடங்கப்பட்ட போட்டியில், சிறந்த கடலோடிகளை இரு ஐபீரிய அரசுகளும் (Iberians) ஊதியம்கொடுத்துத் தூண்டிவிட்டனர். பசிபிக் கடலையும், அதற்கு அப்பாற் பட்ட பகுதிகளையும் ஆராய்வதற்கு ஹார்னைச் (Horn) சுற்றி வருமாறு மக்கலனையும் (Magellen) அமெரிக்கோ வெஸ்பூச்சியை (Amerigo Vespucci) யும் இன்று அவருடைய பெயரைத் தாங்கியுள்ள கண்டத்தின் தெற்குக் கடற்கரையோரத்தைக் கண்டறிந்து வருமாறு அனுப்பினர். இதுவரை போப்பு ஆண்டவரின் முடிவினை யாரும் குற்றம் சாட்டி விசாரிக்கத் தொடங்கவில்லை. இன்னும் ஸ்பெயினுக்கும், போர்ச்சுகலுக்கும், பெருங்கடலிலும் அதற்கப்பாற் பட்ட நாடுகளிலும் போட்டியாக வேறு எந்நாடுகளும் தோன்றவில்லை. இத்தாலிய நாட்டுக் கடல் வாணிக அரசுகள் கொலம்பஸ், வெஸ்பூச்சி (Vespucci) காபெட் (Cabot) போன்ற மிகச்சிறந்த கடலோடிகளைத் தந்து தவியது. ஆனால் வெனிஸ் மாநகரமோ, ஜெனோவாவோ தங்கள் நாட்டின் புதிய பெருங்கடல் வழிகளைக் கண்டு பிடிக்கத் துணிவு கொள்ள வில்லை. பண்டை ஆசிய வாணிகப் பெருவழிகளின் மூலம் நடந்து வந்த வாணிகம் நலிவுற்றது. அதனால் அப்பெருவழிகளின் தன்னிகரற்ற தலைவியாக விளங்கிய இத்தாலிய நாட்டின் இதயமே உடைந்து விட்டதைப் போன்று காணப்பட்டது. பெருங்கடல்களில் செல்லுவதற் கேற்ற கப்பல்களைக் கட்டுவதற்கும் மாலுமிகளைப் பயிற்றுவதற்கும் தேவையான ஆற்றலோ, திறமையோ, ஆர்வமோ, வெனிஸ், ஜெனோவா போன்ற நகரங்களில் வாழ்ந்த மக்கள் சமுகத்தில் சிறிதளவும் இல்லாமற் போயிற்று. அவர்களுடைய கடலாதிக்கம் நலிவுற்றமையால் பழைய லெவாண்ட் (Levant) வாணிகம் சிதைவுற்றதில் எஞ்சிய பகுதியோடு தொடர்பு கொண்டு வாணிகம் நடத்துவதும், துருக்கியப் போர்க்கப்பல்களைக் கூலிக்குப் பேசி வாணிகம் செய்வதுமே அவர்களுக்குகந்ததாகக் கருதினர்,

ஆப்பிரிக்க, ஆசிய அல்லது அமெரிக்க நாடுகளில் ஸ்பெயினிற்கும், போர்ச்சுகலுக்கும் உள்ள குடியேற்ற நாட்டு தனிமையுரிமைக்கும், வாணிகத் தனியுரிமைக்கும் எதிராகப் போட்டி

[1] அட்லாண்டிக்குப் பெருங்கடலின் நடுவிலுள்ள, போர்ச்சுகலுக்குச் சொந்தமான தீவுக் கூட்டங்களுக்கு அசோரஸ் என்று பெயர்.

யிடுவதற்கு இன்னும் பிரான்சோ, இங்கிலாந்தோ ஆயத்தமாக வில்லை. ஏழாம் எட்வர்டு ஆட்சிக் காலத்தில் கி. பி. 1497 – ல் ஜான் காபட்டும் (Johncabot) அவருடைய மகன் சபாஸ்டியனும் பிரிஸ்டலைச் சேர்ந்த பதினெட்டுத் தீரமிக்க மக்களையும் உடன் அழைத்துக்கொண்டு ஆழமற்ற சிறுபடகில் (Cockle-boat) லாப்பிராடோர் (Labrador), நியூ பவுண்ட்லாந்து (புதிதாகக் கண்டநாடு) அல்லது நோவாஸ் கோஷியா (Nova Scotia) எனப் பட்ட கானடா (Canada) போன்ற நாடுகளின் குறித்த சில பகுதி களுக்குச் சென்றுவந்தனர். அவர்கள் கற்பனைக் கதைகளில் சிறப்பாகப் பேசப்படுகின்ற காத்தேயை (Cathay)யும், கீழ் நாட்டு ஏழு மாபெரும் நகரங்களையும, அவற்றின் புகழ்மிக்க நறுமணப் பொருள்களையும், பொன்னையும் கொண்டு வருவதற்கு மேற்கு நோக்கிப் புறப்பட்டனர். ஆனால் அவர்கள் மூடுபனி கவிந்த கரையோரத்தையுடைய வட அமெரிக்காவைக் கண்டனர். அது ஆங்கிலேயரின் மரபுரிமைக்கு ஏற்ற இடம் என்பதைஅவர் கள் அறிய மாட்டார்கள். இம் மரபுரிமையைக் கைப்பற்றி ஸ்பெயின் கடுஞ் சீற்றம் கொள்ளுமாறு செய்வதற்கு இதுவரை இங்கிலாந்திற்குத் துணிவு உண்டாகவில்லை. மேலும் அவளுக் குரிய காலம் இன்னும் வரவில்லை. ஏழாம் ஹென்றி கடலக வீர வாழ்வினைப் போற்றி ஊக்குவித்து வந்தார். ஆனால் உல்சி அதற்குத் தடையாகவே இருந்து வந்தார். காபட்டின் (Cabot) கடற் பயணங்கள் ஆங்கிலேயராகிய தங்களுக்கும் புதிய நாடுகளைக் காண்பதில் தொடர்பு உண்டு என்று போட்டியிடப் பயன்பட்டதே ஒழிய, அவர்கள் பல தலைமுறைகளுக்குப்பின்னர் வரை உள் நாட்டுப் பகுதிகளைக் கண்டுப் பிடித்துக் குடி யேற்றப் பண்ணைகளை அமைப்பது செயலில் நடைபெற வில்லை. புதிய நூற்றாண்டின் இடைப்பகுதியில் நியூ பவுண்ட் லாந்தின் மீன் பிடிக்கும் பகுதிகள் நம்முடைய பரதவர்களை வளர்க்கும் பண்ணை களுள் சிறப்பிடம் பெறலாயிற்று.

இத்தகைய சூழ்நிலையில்தான் எட்டாம் ஹென்றி தம்முடைய தனிப் பொறுப்பில் செயலாற்றத் தொடங்கினர். அவருடைய அரசியல் கொள்கை, அறிவும் ஆற்றலும் ஒருங்கே வாய்ந்த தாகும். கடலாதிக்கத்தின் தலைமையைக் கைப்பற்றியிருக்கும் ஸ்பெயினுக்கு எதிராக, அவர் கடல் கடந்த நாடுகளைக் காண் பதில் ஈடுபட விரும்பவில்லை. ஆயினும், தம் நாட்டு மக்களின் ஆற்றல் பிற்காலத்தில் உரிமை பெறுவதற்குரிய சிறந்த கருவி யாக விளங்குமாறு அரசாங்கக் கப்பற் படையை நிறுவினர். நூற்றாண்டுப் போர்க் காலத்தில் கடல்களை இங்கிலாந்தின் வணிகர்கள், அரசனின் ஆணையின் பேரில் ஒன்று சேர்ந்து,

தங்கள் கடற்படைகளைக் கொண்டு குறுகிய கடற்பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்தனர். ஐந்தாம் ஹென்றி அரசாங்கக் கப்பற்படை ஒன்றை அமைக்கத் தொடங்கினர். ஆயினும் அவருடைய முயற்சி முற்றுப் பெறுவதற்குள்ளாகவே அவர் அதைக் கைவிட்டுவிட்டார். ஏழாம் ஹென்றி வாணிகக் கப்பல் களைக் கட்டுவதற்கு ஆதரவு தந்தார். ஆனல், போருக்குப் பயன் படுத்துவதற்காக மட்டும் தனிச் சிறப்பு மிக்க வகையில் அவர் கப்பற்படையை நிறுவவில்லை. எட்டாம் ஹென்றியே உல்விச்சு (Woolwich), டெப்ட் போர்டு (Deptford) ஆகிய அரசாங்கக் கப்பல் கட்டும் தளங்களில், திறமை மிக்க அரசாங்கப் போர்க் கப்பல்களைப் பேரளவில் கட்டி, சிறந்த கப்பற்படையை நிறுவி ஞர். மேலும் அவர் கப்பல் துறை அலுவலகமாகிய முப்பெரும் வாணிகக் கழகத்தைத் (Trinity House) தோற்றுவித்தார்.

ஹென்றியின் கடல் துறைக் கொள்கை இருவகைச் சிறப்பு களைக் கொண்டதாகும். அரசாங்கக் கடற்படைத் துறையில் பணியாற்றுவதற்கென்று தனித் திறமையும் அறிவாற்றலும் நிரம்பிய அதிகாரிகளும், ஊழியர்களும், வீரர்களும் தேர்ந்தெடுக் கப்பட்டனர். அத்தகையோரைக் கொண்டு அமைக்கப்பட்ட சிறந்த போர்க் கப்பல்களைக் கொண்ட கடற்படையை இங்கி லாந்தின் வரலாற்றிலேயே முதன் முதலாக ஹென்றி நிறுவினர். அது அவருக்கு அழியாப் பெரும் புகழைத் தேடி தந்தது. அவரு டைய கப்பல் கட்டும் தொழில் வல்லுநர்கள், புதிய முறையில் சிறந்த வகையில் வசதியும் தற்காப்புமுடைய கப்பல்களைக் கட்டினர். அவை கடற் பயணத்திற்கு ஏற்றதாயும், சூழ்ச்சித் திறத்தோடு போர் புரிவதற்குரிய கருவிகளை யுடையதாகவும் அமைக்கப்பட்டதோடு இடைக்காலத்து இங்கிலாந்தும், ஸ்பெயி னும் பயன்படுத்திய குறைகள் நிறைந்த வட்ட வடிவமான மரக் கலங்களைவிட வசதியும், உறுதியும் உடையனவாக இருந்தன. நடு நிலக் கடற் பகுதியில் பயன்படுத்தப் பட்டு வந்த 'குறுங்கப்பல் களை' (Galley) விட, பல வகையில் அவை சிறப்புடையனவாகவும் விளங்கின. பண்டை வட்ட வடிவ மரக்கலங்கள் அவற்றின் விட்டங்களைப் போல் இரண்டு மடங்கு நீளமுடையனவாக இருந்தன. ஆனல் புதிதாகக் கட்டப்பட்ட இங்கிலாந்தின் போர்க் கப்பல்கள் அவற்றின் விட்டங்களைப் போல் மூன்று மடங்கிற்கு மேற்பட்ட நீளம் உடையனவாக அமைக்கப்பட்டன. இதுவரை கடற் போர்கள் எல்லாம் பண்டைக் காலத்து கிரேக்க ரோமானிய நாவாய்ப் படைகள் (Navies) மேற்கொண்ட முறையினைப் பின் பற்றியதாகவே இருந்துவந்தது. அதாவது கப்பல்களை இடித்து உடைத்தல், விற்போர் புரிதல், பகைவர்

கப்பல்களினுள் புகுந்து பழாக்குதல் போன்ற போர் முறைகளைப் பின் பற்றியனவாக இருந்தன. இப்புதிய ஊழியில் புதிய போர் முறைகள் தோன்றின. எட்டாம் ஹென்றியின் கப்பற் படைகளின் பக்கத்திலுள்ள துளைகளில் பெரிய பீரங்கிகளின் வாய்கள் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன. போர் மூளுமானால் அப்பீரங்கிகளின் மூலம் அருகில் வரும் கப்பல்களைச் சுட்டு, சுக்கு நூறாக உடைத்தெறிவதற்கு ஏற்றவாறு அமைக்கப் பட்டன. பிரிட்டானியக் கடலாதிக்கமும், குடியேற்ற நாடாதிக்கமும் தோன்றுவதற்குப் பெரிதும் இம் மாபெரும் கப்பற்படையாற்றலே காரணமாகும். எட்டாம் ஹென்றியே தம்முடைய கப்பல் கட்டும் தொழில் வல்லுநர்களிடத்து, கப்பலில் பெரும் பீரங்கிகளைப் பொருத்துவதற் கேற்ற புது முறையில் கப்பல் கட்டுமாறு அறிவித்ததாகத் தெரிகிறது. அவ்வாறே அவர்கள் கப்பல்களின் பக்கங்களில் துளைகளை அமைத்து, அவற்றின் மூலமாகப் பீரங்கிகளிலிருந்து சுடப்படும் குண்டுகள் எளிதில் ஊடுருவி வெளியே செல்லுவதற்கேற்ற முறையில் திறமையாகப் பீரங்கிப் படைகளை வரிசையாக நிறுத்தி வைத்தனர்.

ஹென்றியினுடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் கி. பி. 1545-ல் பிரஞ்சுப் போர்க்கப்பல்கள் (Armada) இங்கிலாந்தின் மீது படையெடுத்த பொழுது, பிரிட்டானிய அரசரின் நாவாய்ப் படைகளால் (Royal Navy) தோற்கடிக்கப்பட்டன. இங்கிலாந்து படையெடுப்பினின்று காப்பாற்றப்பட்டது. அதே ஆண்டில் தாவிஸ்டாக் (Tavistock)கிற்கு அருகிலிருந்த பண்ணையொன்றில் பிரான்சிஸ்டிரேக்கு (Francis Drake) என்னும் குழந்தை பிறந்தது, இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்க நாவாய்ப் படையினைத் தோற்றுவித்த பெருமை ஹென்றிக்கே உரியதாகும். ஹென்றியும், அவருக்குப் பின் அவருடைய மகளும் இங்கிலாந்திற்கென்று தனிப்பட்ட அரசியல் கொள்கையைக் கடைப்பிடித்து, ஐரோப்பிய கத்தோலிக்க வல்லரசுகளை எதிர்த்து நின்ற பொழுது, அவரையும் அவருடைய மகளையும் அவர் தோற்றுவித்த அரசின் நாவாய்ப் படையே காப்பாற்றியது. இங்கிலாந்தின் கடல் ஆதிக்கத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய எண்ணமே உல்சிக்கு இருந்ததில்லை. அவர் இடைக்காலத் திருச்சபையின் சிறப்பு மிக்க உறுப்பினர், பண்டை மரபில் ஊறிய பணித்துறை அலுவலர்; மறுமலர்ச்சி இயக்கத்தின் சாயலினை யுடைய அரசியல் விரகராவார் (Diplomatish). பிற்காலத்தில் உள்நாட்டிலும், கடல்களின் மீதும் இங்கிலாந்தின் முன்னேற்றம் எவ்வாறு வளர்ச்சியுறப் போகிறது

என்பதை உய்த்துணரும் ஆற்றல் அற்றவர் உல்சி. அவருடைய தலைவரான ஹென்றி ஆங்கில மக்களோடு ஒன்றிப்போகும் இயல்பூக்கத்தினால் தூண்டப்பட்டு, அவர்களுடன் ஒன்றி, வருங்காலத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார். இத்தகைய ஒன்றிப் போகும் இயல்பே டியூடர் மன்னர்களின் மாட்சிக்குரிய மறை பொருளாகும். அவர் ஆட்சித்துறையில் பயின்று கொண்டிருந்த காலத்தில் உல்சியின் முழு நிறை ஆட்சியியல் ஆற்றலையும், திறமையையும் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. அதன் பிறகு தமக்கு உறுதுணையாக இருந்த உல்சியினையும் பணியுமாறு செய்யும், புதியதொரு வழியினைத் தமக்கென்று ஹென்றி தாமே வகுத்துக் கொண்டார். அவ்வழியில் எந்தக் குருதேவர்களும் அடி எடுத்து வைக்க முடியாதவாறு செய்து விட்டார்.

உல்சி ஆற்றல் வாய்ந்த மிகப் பெரிய மனிதராவர். ஆனால் தற்கால இங்கிலாந்தை உருவாக்கியவர் அவரன்று. அவருக்குக் கப்பற்படை நிறுவுவதில் ஆர்வம் கிடையாது; பாராளுமன்றத் திடத்து நம்பிக்கை கிடையாது. நாட்டிலே விரைவாக வளர்ந்து வந்த மத குருமார்களை எதிர்க்கும் இயக்கம் கி. பி. 1515-ல் பாராளுமன்றத்தின் மூலம் செயலாற்றத் தொடங்கியது. மன்ற உறுப்பினர்கள் திருச்சபைத் தனியுரிமை (Benefit of Clergy)களையும், பிணப் புதைப்பு வரியையும், போப்பு ஆண்டவர் கட்டளைகளை இங்கிலாந்தில் செயல்படுத்துதலை (Papal Decrees)யும் தாக்கிப் பேசினர். அதனால் உல்சிக்கு உண்மையில் பாராளுமன்றத்திடத்து பெரும் வெறுப்பும் நம்பிக்கையின்மையும் வளர்ந்து வரலாயிற்று. இங்கிலாந்தில் போப்பு ஆண்டவரின் ஆதிக்கத்தை ஆதரிப்பவர்கள் முன் பாதுகாப்பு (Praemunire) செய்வதற்காகக் குருமார்களின் பேரவை கூட்டப்பட்டதற்காகத் தண்டனை அளிக்கப்பட்டதைப் பற்றி நீதி மன்ற வட்டாரங்களிலே புதியதொரு செய்தி பேசப்பட்டு வந்தது. மக்கள் உரிமையின் பிரதிநிதிகளாகிய நீதிபதிகளும், பாராளுமன்றமும் குரு தேவர்களின் தனியுரிமையை எதிர்த்தும், அரசனின் அதிகாரத்தை ஆதரித்தும் வன்மையாகப் போராடினர். உல்சியோ, அவருடைய தலைவரான எட்டாம் ஹென்றியோ இவற்றையெல்லாம் கவனிக்காமல் இருக்கவில்லை. தற்காலிகமாக உல்சி நாட்டினை ஆண்டார். ஹென்றிப் பொறுமையாகப் பார்த்திருந்தார். ஆனால், உல்சியினால் தமக்குக் களைப்பும், சோர்வும் உண்டாகின்ற பொழுதும், திருச்சபையைக் கொள்ளையடிக்கவோ, சீர்திருத்தவோ விரும்புகின்ற பொழுதும், போப்பு ஆண்டவரின் ஆதிக்கத்தை இங்கிலாந்தில் வேரோடு களைந்தெறிய முயலு

கின்ற பொழுதும் எத்தகைய நிலையங்களின் உதவியை, அச்செயல்களைப் புரிய நாட வேண்டுமென்பதை ஹென்றி நன்குணர்ந்திருந்தார்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

சீர்திருத்த இயக்கத்தின் தொடக்க நிலை—லோலார்டுகளின் மறுமலர்ச்சி—ஆக்ஸ்போர்ட்டில் கோலட்டின் சொற்பொழிவுகள் — சமயமும் மறுமலர்ச்சி இயக்கமும் — ஹென்றியின் புகழ் மிக்க இளமைப் பருவம் — உல்சியும் ஆதிக்கச் சமநிலையும் — பெருங் கடற் புது வழிகள் — கடல் ஆதிக்கம் திரும்ப வழங்கப் பெற்றமை—ஹென்றி அரசாங்கக் கப்பற் படையை நிறுவுதல்—ஹென்றியும், உல்சியும், பாராளுமன்றமும்.

## இயல் 3

# எட்டாம் ஹென்றியின் பாராளுமன்றச் சீர்திருத்தங்கள்

எலிசபெத்துப் பேரரசியின் பிற்காலம்வரை, டியூடர்கால இங்கிலாந்தில் மாறுபட்ட இருவகைக் கருத்துக்களை கொண்ட கத்தோலிக்க புராடஸ்டண்ட்டுச் சமயங்களைச் சார்ந்த அறிஞர்களாலும் சீர்திருத்த இயக்கத்தின் (Reformation) உண்மையான போக்கினை அறிய முடியவில்லை. அக்காலத்தில் கருத்துகள் உருவாகிக்கொண்டிருந்தனவே ஒழிய அவை முழு உருவம் பெற்று விடவில்லை. நேர்மையை நாடும் மக்களும், காலத்திற்கேற்ப கோலம்புனையும் மக்களும் ஓயாது தங்கள் கருத்துகளை மாற்றிக் கொண்டே இருந்தனர். பிற்காலக் கத்தோலிக்க, புராடஸ்டண்ட்டு கட்சியாளர்களுக்கு மன நிறைவு அளிக்கத்தக்க நிலையில், வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளைக் கொண்டு ஒழுகிய மக்கள் மிகச் சிலரே இக்காலத்தில் வாழ்ந்தனர். சமய நிலையங்களையும், அவை நாட்டிலே வளர்த்த எண்ணற்ற மூட நம்பிக்கைகளையும் தாக்கிப் பிறர் உள்ளமெல்லாம் புண்படுமாறு குறை கூறிவந்த சர் தாமஸ் மூர் (Sir Thomas More) போப்புஆண்டவரின் ஆதிக்க மேம்பாட்டினை ஆதரித்து, அதற்காகத் தம் உயிரினையே தியாகம் செய்தார். ஆனால் கார்டினர் (Gardiner) பாதிரியாரும், போனர்

(Bonner) பாதிரியாரும் மேரியின் ஆட்சிக்காலத்து, போப்பு ஆண்டவரைப் போற்றுவதில் புகழ் மிக்கவர்களாக விளங்கினர். எனினும், ஹென்றி ரோமாபுரியோடு கொண்டிருந்த தொடர்பினை முற்றிலும் அறுத்துக் கொண்டபொழுது, ஹென்றியின் செயலை அவர்கள் முற்றிலும் ஆதரித்துப் போற்றினர். எலிசபெத்துப் பேரரசி கன்னித்துறவு நெறியை விரும்பிப் போற்றியும் இருக்கலாம். அரசனுடைய சமயக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு துன்பத்திற்குள்ளாகி வருந்துவதைவிட நாட்டின் அமைதியைப் பேணிக்காப்பதே இன்றியமையாத கடமை என்ற கருத்து பெரும்பான்மையான மக்களிடையே நிலவி வந்தது.

இங்கிலாந்தின் வடக்கிலும், தென் மேற்குக் கரைப் பகுதியிலும் வாழ்ந்த மக்கள், போப்பு ஆண்டவரின் அதிகார வரம்பைக் காப்பதில் உண்மையான அக்கறை கொள்ளவில்லை. ஆயினும் அவர்கள் மடங்களையும். சமயத்தின் பழைய நிலையங்களையும் வேறு பல அமைப்புகளையும் போற்றிக்காக்க வேண்டும் என்ற காரணத்திற்காகப் பேரார்வத்தோடு சமயச் சீர்திருத்த இயக்கத்தை எதிர்க்கலாயினர். லண்டன் மாநகரிலும், அதைச் சூழ்ந்த பகுதிகளிலும் சமயச் சீர்திருத்த இயக்கத்தை மகிழ்ச்சியோடு ஆதரித்த மக்களே மிகுதியாக இருந்தனர். டியூடர் ஆட்சிக்காலத்தில் லண்டன் மாநகரக் குடிமக்கள் கொண்டிருந்த கருத்துகளுக்கும் அரச மரபினர் வாழ்ந்த பாரிஸ் நகரின் (Valois Paris) குடிமக்கள் இடைக்காலத் திருச்சபைக் கோட்பாடுகளைப் பற்றியும், மத குருமார்களைப் பற்றியும் கொண்டிருந்த நோக்கத்திற்கும் இடையேயுள்ள வேற்றுமையே சீர்திருத்த இயக்கம் இங்கிலாந்தில் வெற்றி பெறுவதற்கும், பிரான்சில் தோல்வியுறுவதற்கும் உரிய காரணங்களை விளக்குவனவாகும்.[1]

[1] 'லண்டன் மாநகரம், இங்கிலாந்தின் பிற பகுதிகளின்மீது ஆதிக்கம் செலுத்தியமையே டியூடர்களின் வல்லாட்சிக்கு ஆதரவாக அமைந்தது' என்பர் பேராசிரியர் போலார்டு (Pollard). இதனையொட்டி குமாரி (Miss Davis) 'இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு இங்கிலாந்தின் சீர்திருத்த இயக்க வரலாற்றினை நாம் மிகச் சிறப்பாக எழுதிவிடலாம். லண்டன் மாநகரத்து மக்கள் ஆவலோடு எதிர்பார்த்த மாற்றங்களே சீர்திருத்தச் சட்டங்களாக உருவாயின. உல்சி, கிராம்வெல், சாமர்செட், மேரி ஆகியோர் தோல்வியுற்றதற்கும் எட்டாம் ஹென்றி, எலிசபெத், பார்க்லி (Burghley) ஆகியோர் வெற்றி பெற்றதற்கும் காரணம், இவர்கள் எப்பொழுதும் லண்டன் மாநகரைப் புறக்கணிக்காமையேயாகும். அதனால் அந்நகரின் ஆதரவை அவர்கள் இழக்கவுமில்லை' என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும். நிலைப் படையில்லாது, அளவிடற்கரிய பெரும் செல்வத்தைக் கொண்ட கருவூலத்தையுடையவனாகிய அரசன், தன் அரண்மனை வாயிலுக்கு வெளியே இரண்டு கல் தொலைவிலுள்ள லண்டனின் பெருந்திரளான மக்களும், படைக்கருவிகளும், செல்வமும் குவிந்திருந்தமையால், அவன் அதற்குச் சில சலுகைகளைத் தவறாது அளித்து வந்தான். பார்க்க : 'Tudor Studies' பக் 287-8.

லண்டன் மாநகரிலும், வேறு பல பகுதிகளிலும் மாற்றத்தை விரும்பிய மக்கள் முழுவதும் கத்தோலிக்க மறுப்பு இயக்கக் (Protestantism) கோட்பாடுகளால் ஊக்குவிக்கப்பட்டவர்கள் அல்லர். கோலட்டும் (Colet) அவருடைய நண்பர்களும் கொண்டு வந்து பரப்பிய புதிய கல்வியறிவின் பயனுக, மக்கள் அனைவரும் தெளிவு பெற்றவர்கள் என்றும் கூறுவதற்கில்லை. அவர்கள் மாற்றத்தை விரும்பியதற்கு ஒருவகை மனவெழுச்சியே காரணம் என்று கூறலாம். மதகுருமார்களிடத்து உண்டான வெறுப்புணர்ச்சியே அம்மன வெழுச்சியாக வெளிப்பட்டது என்று கூறுவது முற்றிலும் பொருத்தம் உடையதாகும். தங்கள் தனிக் குடும்பங்களின் நன்மைக்காகத் திருச்சபைகளைக் கொள்ளையிட வேண்டும் என்று கருதிய சில பேராசைக்காரர்கள், மக்களுக்கு மதகுருமார்களிடத்து உண்டான வெறுப்புணர்ச்சியைப் பயன் படுத்திக் கொள்ளத் தொடங்கினர். மதகுருமார்கள் அனுப வித்து வந்த இன்ப வாழ்விலும், பெற்றிருந்த சிறப்புரிமைகளி டத்தும், பிறரைத் துன்புறுத்தப் பயன்படுத்திய அதிகாரத்திடத் தும் பகுத்தறிவின் காரணத்தால் பிற மக்கள் வெறுப்புணர்ச்சி கொண்டிருந்தனர். அது போற்றத்தக்க வெறுப்புணர்ச்சியாகும். எண்ணற்ற வழிகளில் மக்களிடமிருந்து பணத்தைப் பறிப்பதற்கு இன்னும் மதகுருமார்கள் சட்டத்தின் பேரால் உரிமைகள் பல பெற்றிருந்தனர். எல்லா மக்களையும் ஒழுக்க நெறியின் பேரால், சமயக் கோட்பாடுகளின் பேரால் குற்றம் சாட்டி, அவர் களுடைய சமய நீதி மன்றங்களில் விசாரணை நடத்தினர். தண்டனை விதிக்கும் சிறப்புரிமையைப் பாமர மக்கள் தாங்களே சிந்தித்துச் செயலாற்றும் திறமை வாய்ந்தவர்களாக விளங்கிய காலத்திலும், மதகுருமார்கள் ஆதிக்கம் உடையவர்களாக இருந்து வந்தமை மக்களிடையே வெறுப்புணர்ச்சியை உண்டாக் கியது. முதலில் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாமர மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுக் கூட்டு முயற்சியில் செயலாற்றத் தொடங்கினர். பிறகு தனி மனிதன் பெற்ற மனச்சான்று உரிமை யினைப் பயன்படுத்தி வாழ்க்கையை நடத்தினர். இவ்வாறு பாமர மக்கள் உரிமை பெற்று உயர்நிலை அடையத் தொடங்கினர். மத குருமார்களின் ஆதிக்கத்தை மக்கள் குறைத்தனர். இவ்வாறு மதகுருமார்களின் ஆதிக்கத்தை மக்கள் வாழ்க்கையின் பல

---

மேலும் பதினாறும் நூற்றாண்டிலும், பதினேழாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலும் ஆக்ஸ்போர்ட்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களை நீக்கி விட்டால், லண்டன் மாநகரம் அச்சு இயந்திரங்களைப் பேரளவில் தனக்கே உரிமையாகப் பெற்றிருந்தது. எலிசபெத்துப் பேரரசி லண்டன் மாநகருக் கும், இரு பல்கலைக்கழகங்களுக்கும் வெளியே அச்சடிப்பதற்குத் தடை விதித்தமை நினைவுகூரத்தக்கதாகும்.

துறைகளிலும் குறைத்தமையும், கூடிவாழும் உரிமையும் மனச் சான்று உரிமையும் மக்கள் பெற்றமையுமே இடைக்காலத்தில் சமயத்துறையில் உண்டான பெருமாற்றமாகும். இவ்வாறு தற்காலத்திய சமுதாயம் தோன்றியது. இதற்குக் காரணமாக இருந்த இயக்கங்களுள் திருச்சபையினை அரசுக்கு அடிமைப் படுத்த முயன்ற இயக்கம் சிறப்புடையதாகும். இவ்வியக்கம் எவ்வளவிற்குக் கத்தோலிக்க சமய எதிர்ப்பு இயக்கமாக (Protestant) விளங்கியதோ, அவ்வளவிற்கு மதகுருமார்களின் ஆதிக்கத்தை எதிர்க்கும் (Anti-clericalism) இயக்கமாகவும் விளங்கியது எனலாம்.

எட்டாம் ஹென்றி மதகுருமார்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்தார். அவருக்கு எதிரிகளாக இருந்த கத்தோலிக்கர்களின் தலைகள் வெட்டப்பட்டன; சிலர் தூக்கிலிடப் பட்டனர். அதே நேரத்தில் அவரால் புராடஸ்டண்ட்டுகள் தீயிலிட்டு எரிக்கப்பட்டனர். இன்று மிகவும் புதுமையாகத் தோன்றும் அவருடைய கொள்கையை, அக்காலத்திய இங்கிலாந்து நாட்டு மக்கள் பெரிதும் போற்றினர். ஹென்றியின் ஆட்சிக்காலத்து எழுந்த குழப்பமானமக்கள் குரலில், கத்தோலிக்க சமயச் சார்பும், தேசிய உணர்வின் பெருக்கும், மதகுருமார்களின் ஆதிக்கத்தை எதிர்க்கும் பேரொலியும் கலந்து ஒலித்தன. ஹென்றி இறந்த பிறகே அயல்நாடுகளிலும், தாய் நாட்டிலும் உண்டான புது நிலைமைகளை ஒட்டி, மதகுருமார் களின் ஆதிக்கத்தை எதிர்த்த ஆங்கிலேயர்களும், தேசிய உணர்வு மிக்க ஆங்கிலேயர்களும், புராடஸ்டண்ட்டுகளோடு தொடர்பு கொண்டனர். அதன்பிறகே கத்தோலிக்கப் பிற்போக் காளர்களின் கொடுமைகளின்று தங்களைத் தற்காத்துக் கொள்ள முயன்றனர். எலிசபெத்துப் பேரரசியின் காலத்தில் ஆங்கிலேயர்களுள் பெரும்பாலோர் புராடஸ்டண்ட்டு கோட் பாடுகளைப் போற்றிப் பின்பற்றலாயினர்.

வால்டேர் (Voltaire) காலம் முதல் இத்தாலியிலும், பிரான் சிலும் மதகுருமார்களின் எதிர்ப்பு இயக்கம் நிலையான மூட நம்பிக்கைகளுள் ஒன்றாக மாறியது. அதைப்போன்று, இங்கிலாந்தில் தோன்றிய மதகுருமார்களின் எதிர்ப்பு இயக்கம், நிலையாக மக்கள் உள்ளங்களில் ஆழ வேரூன்றிப் பதியவில்லை. ஐரோப்பாவின் எப்பகுதியிலுமே காண முடி யாத ஒரு சிறப்பியல்பை நாம் இங்கிலாந்தின் வரலாற்றில் காணுகின்றோம். இங்கிலாந்தில் மத குருமார்களின் ஆதிக் கத்தின் மீது உண்டான வெறுப்புணர்ச்சியும், சமயத்திடத்து மக்கள் கொண்ட பெருமதிப்பும் ஒரேகாலத்தில் சிறப்புற்று

விளங்கியதைக் காணுகின்றோம். சீர்திருத்த இயக்கத்தின் பயனாக அமைக்கப்பட்ட திருச்சபைகளும், சமயத்தில் தோன்றிய புதிய உட்பிரிவுகளும் ஒருவாறு அம்மக்களுக்கு மன நிறைவை அளித்தமை குறிப்பிடத்தக்கதாகும். மத குருமார்களின் ஆதிக்கத்தை எதிர்த்துத் தோன்றிய இயக்கம் சில சமயங்களில், மக்கள் வாழ்வினை இயக்குவிக்கும் உரிமையுடையதாக விளங்கியது. அது 'ரோமானிய' அல்லது 'தூய்மைச் சமயத்தினு'டைய (Puritanism) கோட்பாடுகளுக்கு எதிராக 'ஆங்கிலிகம்' (Anglicanism) எனப்பட்ட ஆங்கிலநாட்டுத் திருச்சபை மரபுக்குரிய கோட்பாடுகளை மக்களிடையே செல்வாக்குறச் செய்தது. வேறு சில சமயங்களில் அரசாங்கக் குருமார்களின் உரிமைகளுக்கு எதிராக இணங்காதாரே (Non-conformity) இணங்கி நின்றனர். ஆனால், எட்டாம் ஹென்றியால் போப்பு ஆண்டவரின் மேலாண்மையும், இடைக்காலத் திருச்சபையின் ஆதிக்கமும் உடைத்தெறியப்பட்டன. அக்காலத்தில் கத்தோலிக்க, புராடஸ்டண்ட்டு சமயங்களின் பக்கத்தே தனித்து நின்ற ஆற்றல் மிக்க இயக்கமே, மதகுருமார்களின் ஆதிக்க எதிர்ப்பு இயக்கமாகும். சீர்திருத்த இயக்கம் முடிவுற்றபிறகும், நெருக்கடியான மேலும் சில ஆண்டுகள்வரை மதகுருமார்களின் ஆதிக்க எதிர்ப்பு இயக்கமே இம் மூன்றினுள் பேராற்றல் வாய்ந்ததாக விளங்கியது.

கிறிஸ்துவ சமயத்தின் தலைமையிடமாக விளங்கிய ரோமாபுரியின் பெருமையைச் சில ஆண்டுகள் அடியோடு அழித்தொழித்த லூதரின் (Luther) தலைமையில் இவ்வியக்கம் கி. பி. 1519-ல் தோன்றியது. இவ்வியக்கம் ஹென்றி, போப்பு ஆண்டவரோடு கொண்டிருந்த தொடர்பினை அறுத்துக்கொள்ளுவதற்கு முன்னோடியாக அமைந்தது. ஸ்பெயின் நாட்டு அரசனும், ஜெர்மனியின் பேரரசனுமான ஐந்தாம் சார்லஸின் படைகள் கி. பி. 1527-ல் புனிதமான ரோமாபுரியைத் தாக்கியது; கொள்ளையடித்து அதைப் பாழாக்கியது. ஜெர்மானியச் சமய மறுப்புக் கோட்பாட்டினரும், ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த கத்தோலிக்கர்களும் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு திருச்சபைகளைக் கொள்ளையடித்தனர்; கன்னிப்பெண் துறவிகளைக் கற்பழித்தனர்; போப்பு ஆண்டவரும், கார்டினல்களும் (Cardinals) இருந்த செயிண்ட் ஆஞ்சிலோ (Saint Angelo) மாளிகையை முற்றுகையிட்டனர். அப்பொழுது ரோமானியக் கத்தோலிக்கர் ஒருவர், 'ரோமாபுரியின் அவை மிக இழிவான முறையில் ஆளப்பட்டு வருகின்றது. அதைக்கண்டு இறைவன் மக்களுக்கு அருள்

புரிய விரும்பினான். அதனால் இத்தகைய பேரிடுக்கண் திருச்சபைக்கு உண்டாயிற்று என்று எல்லோரும் கருதுகின்றனர். சிலர் இனிமேல் ரோமாபுரியில், கிறிஸ்துவ சமயத்தின் தலைமையிடம் இருக்கக்கூடாது என்று கூறுகின்றனர். அதற்குப் பதிலாகப் பிரான்சில், அந்நாட்டு மன்னர், போப்புஆண்டவருக்கு அடிபணியாத ஒரு குருதேவரைத் தம் நாட்டுத் திருச்சபையின் தலைவராக நியமிக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். அதைப்பின்பற்றி இங்கிலாந்தின் மன்னரும், மற்ற அரசர்களும் அவ்வாறே செய்யவேண்டும் என்றும் மக்கள் சிலர் தங்கள் கருத்துகளை எடுத்துரைக்கின்றனர்' என்று ஐந்தாம் சார்லஸ் மன்னருக்கு எழுதியுள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

போப்பு ஆண்டவரோடு கொண்டிருந்த தொடர்பினை இங்கிலாந்து அறுத்தெறிவதற்கும், ஐரோப்பிய மக்களின் நல்லெண்ணத்தை ஆதரவாகப் பெறுவதற்கும் நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது. லூதரின் எழுச்சிக்கும், ரோமாபுரியின் முற்றுகைக்கும் பிற்பட்ட தலைமுறையில் அவ்வாய்ப்பு இங்கிலாந்திற்குக் கிடைத்தது.

வைட்டன் பர்க்கில் (Wittenberg) மார்ட்டின் லூதரின் கோட்பாடுகள் முதன்முதல் எடுத்துரைக்கப்பட்டன. சிறிது காலத்திற்கெல்லாம், அரசாங்கம் விதித்த தடைச் சட்டத்தையும் மீறி, அக்கோட்பாடுகள் ஆற்றலோடு விரைவில் நாடெங்கும் பரவலாயிற்று. அவை உடனடியாக லோலார்டுகளைப் (Lollards) புராட்டஸ்டண்ட்டு இயக்கத்தில் சேருமாறு தூண்டியது. அதன் மூலம் அவர்களுடைய தனித் தன்மையை இழக்கச் செய்தது. புதிய கல்வியினைக் கற்றவரிடையே இருவகை விளைவினை உண்டாக்கின. சிலர், சிறப்பாக ஆர்வமும் ஆற்லும் வாய்ந்த இளைஞர்கள், பேராற்றல் வாய்ந்த கத்தோலிக்க மறுப்பு இயக்கத்தில் சேர்ந்தனர். இங்கிலாந்திற்கு மறுமலர்ச்சி இயக்கத்தின் நறுமணத்தைக் கொண்டுவந்த மற்றவர்கள் பண்டைச் சமய நெறியைக் கட்டிக் காக்கும் பிற்போக்குவாதிகளாக மாறினர். எராஸ்மஸ் (Erasmus) கத்தோலிக்க மறுப்பு இயக்கத்திடத்துப் பேரச்சம் கொண்டார். அதை எதிர்த்ததோடு, வன்மையாகக் கண்டித்துப் பல நூல்கள் எழுதினார். கடந்த காலத்தில் எல்லாம் முன்னேற்றத்திற்கான பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், இப்புது இயக்கத்தைக் கண்டு ஐயமுற்றுப் பிற்போக்குவாதியாக மாறியது. ஆனால், முதன்முதலாகக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் தேசிய இயக்கத்தின் முன்னணியில் தலைமை தாங்கிநின்றது. கி. பி. 1521 முதற்

கொண்டு அந் நகரைச் சார்ந்த மாணவர்கள் லூதரின் புது வகைக் கருத்துகளை ஆராய்வதற்காக 'வெண்புரவி சாராயக் கடையில்' (White Horse tavern) கூடினர்.[1] அவ்விடுதிக்கு 'ஜெர்மனி' என்று 'செல்லப்' பெயரிட்டு அழைக்கலாயினர். அவ்விடுதியில் ஓயாது சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த மாணவர்கள் 'ஜெர்மானியர்கள்' என்ற பெயர் பெற்றனர். ஆனல், அவர்களே புதிய இங்கிலாந்தை உருவாக்கியவர்கள் என்பதை நாம் மறத்தலாகாது. அவர்களுள், டியூடர்கால ஆங்கிலமொழி நடையில் முதன் முதல் விவிலிய நூலினை மொழி பெயர்த்துக் கொடுத்த டைண்டேல் (Tyndale), கவர்டேல் (Coverdale) ஆகியோரும், வழிபாட்டு நூலினை முதன்முதல் வகுத்துக் கொடுத்த கிரான்மரும் (Cranmer) மக்கள் இயக்கத்தின் உயிர் நாடியாக விளங்கிய லாட்டிமரும் (Latimer), பிற்காலத்தில் இவ்வியக்கம் வெற்றிபெற உயிர்த்தியாகம் செய்த வீரத் திருத் தொண்டர்கள் (Apostles) பலரும் குறிப்பிடத் தக்கவராவர்.

பிற்காலத்தில் சீர்திருத்தப்பெற்ற ஆங்கிலத் திருச்சபையின் இரு அடிப்படைக் கூறுகள், ஒழுக்க நெறியும், தியான நெறியுமாகும். லாட்டிமரும், கிரான்மரும் முறையே அவற்றின் மிகச் சிறந்த பிரதிநிதிகளாக விளங்கினர். லாட்டிமர் சமய நோக்கங்களில் லூதரைப் போன்று அஞ்சா நெஞ்சம் வாய்ந்தவராக விளங்கினர்; சமயச் சார்பற்றோரின் அதிகாரத்தைக் கண்டும், சமுதாயப் பிரச்சினைகளைக் கண்டும், எளிதில் அஞ்சி நடுங்கிய ஜெர்மானிய சீர்திருத்தக்காரரான லூதரைப் போன்று இல்லாமல், அவர் உள்ள உரம் படைத்தவராகத் திகழ்ந்தார். கிரான்மர் மெல்லியல்பும், விழிப்புணர்ச்சியும் உடையவர். அறிவாற்றல் மிக்க வாதங்களில் மிக விழிப்புணர்ச்சியோடிருந்து, மெல்லவே ஒரு கட்சியை ஆதரித்துப் பேசுவார். எந்நேரமும் அறவாழ்வில் ஆழ்ந்த பற்றுதலும் மனக் கருத்துகளை மிகப் பொறுமையாகவே மாற்றிக்கொள்ளும் இயல்பும் கிரான்மரின் சிறப்பியல்புகளாகும். சிற்சில சமயங்களில் எதற்கும் அஞ்சி யஞ்சிச் சாகும் பெண்கள் தம் குழந்தைகளைக் காப்பதற்காக வீறு கொண்டு எழுவதைப்போல, அவர் தாம் கொண்ட கொள்கை

[1] அந்நாட்களில் சாராயக் கடையைப் பற்றி இழிவாக மக்கள் கருதவில்லை. அதைத் தற்காலப் பொதுமகளிர் விடுதியோடு சேர்த்து இழிவாகக் கருதவில்லை. பண்புமிக்க மக்கள் மாலைப் பொழுதினை இன்பமாகக் கழிப்பதற்கு, அக்காலத்தில் அடிக்கடி தங்கள் மனைவியரை அச்சாராயக் கடைக்கு அழைத்துச் செல்லுவர். அக்காலத்தில் இளைஞர்களும் முதியோரும் தங்களுடைய நண்பர்களை மாலைவேளையில் சந்திப்பதற்குரிய இடமாக அது இருந்துவந்தது. சாராயக்கடை முதலவர் 'எனது புரவலராகச்' சிறப்புற்றிருந்தமையை 'விண்ட்சரின் மகிழ்ச்சியுறு மனைவியர்' (Merry Wives of Windsor) என்னும் நாடகத்தால் அறிகிறோம்.

யினை நிலைநாட்டுவதற்காக உள்ள உரத்துடன் போரிடுவதற்குப் பொங்கி எழுவார். இவ்விரு மனிதர்களும் ஹென்றியின் மதிப்பினைப் பெற்றனர். ஆயினும், நெடுங்காலம் லாட்டிமரின் கருத்துகள் அரசனது கொள்கைக்கும், செயலுக்கும் பொருந்தி வருவனவாக இல்லை. உல்சி (Wolsey), மூர் (More), கிராம்வெல் (Cromwell) போன்ற பெரிய மனிதர்களும், எண்ணற்ற ஆண்களும் பெண்களும் ஹென்றியின் அரசியல் சமயச் சீர்திருத்தக் கொள்கைகளின் மாற்றத்திற்கு இரையாக நேர்ந்தது. அத்தகைய கொடுமை மிக்க காலத்தில், கிரான்மருக்கும் அரசருக்கும் இடையே நிலையான—நீடித்த நட்பு இருந்து வந்தமை கருதத் தக்கது. உண்மையிலேயே ஹென்றி அன்போடும் ஆர்வத்தோடும் கடைசிவரைப் போற்றி வந்த நெருங்கிய நண்பனாகக் கிரான்மர் வாழ்ந்தார் எனில் அது மிகையாகாது. ஆணவம் மிக்க கொடிய அரசரான ஹென்றி, இறக்கும் நிலையில் அவருடைய வாய், கடவுளிடத்து அவர் கொண்ட நம்பிக்கையை முணுமுணுப்பின் மூலம் வெளிப்படுத்தின. அவருடைய கை ஆங்கிலிகத்தினை (Anglicanism) தோற்றுவித்த கிரான்மரின் மெல்லிய நடுக்கமுற்ற கைகளை நம்பிக்கையோடு பற்றிக் கொண்டிருந்தது. இக்காட்சியின் உட்பொருளை ஒருவர் நல்ல முறையில் விளக்குவாரானால், மனித இயற்கையின் வியக்கத்தக்க இயல்புகளைத் தெளிவாக நாம் உணரலாம்.

ஆனால், ஹென்றி இறப்பதற்கு முன்பு ஆற்றவேண்டிய அரும்பணிகள், செய்து முடிக்கவேண்டிய செயல்கள், மிகப்பலவாக இருந்தன. ரோமாபுரி தாக்கப்பட்டபொழுது, அவருக்கு முப்பத்தாறுவது ஆண்டு நடந்து கொண்டிருந்தது. அவருடைய மந்தமான வளர்ச்சியில் அவரது அறிவாற்றல்கள் முதன்மையாக வளர்ச்சியுற்றுச் சிறந்தன. அவருடைய மித மிஞ்சிய ஆற்றலின் வெளிப்பாட்டிற்கு வேட்டையாடுதலும், வீரக்களியாட்டங்களும் நெடுங்காலத்திற்குப் போதிய வாய்ப்பினை அளிக்காமற்போயின. எனவே அவர் அரசியலில் ஈடுபடத் துணிந்தார். இறுதியாகப் பெருஞ்சுமையாகிய ஆட்சிப் பொறுப்பை உல்சியினிடமிருந்து (wolesy) வாங்கிக் கொள்ளுவதற்கு ஆயத்தமானார். மேலும் அவருடைய குடிமக்கள் அனைவரையும் போலவே, அவரும் வெளிநாட்டுக் கொள்கையில் தோல்வியும், உள்நாட்டு விவகாரங்களில் தனிப்பட்ட முறையில் தீங்கையும் இழைத்துவருகின்ற கார்டினல் உல்சியின் ஆட்சியால் களைப்பும் சோர்வுமுற்றார். எனவே, அரசரின் திருமண விலக்கீட்டுப் பிரச்சினை எழுவதற்கு முன்பே உல்சியின் வீழ்ச்சியினை மக்களும் மன்னரும் விரைவிலே எதிர்பார்த்திருந்தனர்.

இங்கிலாந்தில், ரோமாபுரியோடு பிரிட்டன் கொண்டிருந்த தொடர்பினை அறுத்தெறிவதற்கு நெடுங்காலமாகப் பல சூழ்நிலைகள் உருவாகி வந்தன. ஆகவே 'திருமண விலக்கு' பற்றி எழுந்த பிரச்சினையே அதற்கு உடனடியான காரணம் என்பது பொருந்தாது. நுட்பமாக ஆராய்வோமானால், காதரைன் (Catherine) முதலிலேயே ஹென்றியினுடைய அண்ணனை மணந்திருந்தமையால், ஹென்றி அவளை நேர்மையான முறையில் மணம் புரிந்து கொண்டிருந்தாரா இல்லையா? என்பதுதான் ஆராய்ந்து முடிவு காணவேண்டிய ஒரு பெரும் பிரச்சினையாகும். முன்பு இருந்த போப்பு ஆண்டவர், அவளைத் திருமணம் செய்துகொண்டதிலிருந்து ஹென்றிக்கு 'மண விலக்கு' அளித்தார். ஆனால் ஏழாம் கிளமெண்ட்டு என்னும் புதிய போப்பு ஆண்டவரை, ஹென்றி, தாம் காதரைனை மணம் செய்துகொண்டது எப்பொழுதுமே சட்டப்படி செல்லாத ஒன்று என்று அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும், அவர் இன்று வரை தமக்குத் திருமணமாக வில்லை என்றும், அதனால் ஆற்றல் மிக்க இளைஞன் என்று தம்மை அறிவிக்குமாறும் வேண்டினர். இவ்வாறு வேண்டியதற்குக் காரணம் ஆன் பொலீனை (Anne Boleyn)த் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற பெருவிருப்பத்தாலேயாகும். பன்னெடுங்காலமாக அவருக்கு முன்னரும் பின்னரும் வாழ்ந்த அரசர்கள், ஒருத்தியை மணந்து வாழ்ந்தனர். அவருடைய காலத்தில் பிற நாடுகளில் வாழ்ந்த மன்னர்களும் ஒருத்தியை மணந்து வாழ்ந்தனர். அவர்கள் அனைவரையும் போல ஹென்றியும் காதரைனை மனைவியாகவும் தலைவியாகவும் பெற்று வாழ்வதில் பெரு மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைந்திருப்பார். ஆனால், அவருடைய மனத்தகத்தே தமக்குப் பின் நாட்டினையாள ஓர் ஆண் பிள்ளை தமக்குப் பிறக்கவேண்டும் என்று எழுந்த எண்ணமே, அதற்கு இடையூறாகத் தோன்றியது. அவருக்குப் பிறகு, நாட்டில் போட்டியின்றி ஒருவன் அரசனாக வேண்டும் என்றும், அவன் சிறந்த ஆற்றல் மிக்க அரசனாக விளங்கவேண்டும் என்றும் ஹென்றி விரும்பினர். அதனால் தமக்குத் தக்கதொரு 'வாரிசு' தேவை என்று கருதினர். இனியும் தமக்குக் காதரைனிடத்துப் பிள்ளை பிறக்கும் என்ற நம்பிக்கை ஹென்றிக்கு இல்லாமற் போயிற்று. இளவரசி மேரியே அவர்களுடைய ஒப்பற்ற குழந்தையாக விளங்கினள். இதற்கு முன்பு என்றுமே இங்கிலாந்தில் அரசி நாடாளுந் தலைவியாக இருந்ததில்லை. பெண் ஆட்சிக்கு வருவது என்னும் பழக்கமில்லாததால் புதிதாக ஆட்சிக்கு வந்தால் நாட்டிலே உள்நாட்டுப் போர் உண்டாகும் என்ற அச்சம் மக்களிடையே தோன்றியது. அத்துடன் தம் இளவரசியின் கணவனாக

வரக்கூடிய அயல்நாட்டு அரசகுமாரனைத், தங்கள் நாட்டு அரசனாக ஏற்றுக்கொள்ளவும் நாட்டு மக்கள் தயங்கினர்.

போப்பு ஆண்டவர் ஹென்றிக்கு மணவிலக்கு உரிமை அளிக்கத்தயங்கியதற்குத் காரணம் ஐயுறவு அன்று. அவர் அண்மையில் தான் இதைவிடச் சிறியதொரு காரணத்திற்காக ஹென்றியுடன் பிறந்தவளும், ஸ்காட்லாந்தின் அரசியுமான மார்க்கரெட்டைத் (Margaret) திருமண விலக்கு செய்து வைத்தார். அவருடைய முன்னோர்களான போப்பு ஆண்டவர்கள் பிரான்சினை ஆண்ட பன்னிரண்டாம் லூயி (Louis XII) போன்ற அரசர்களை வேறெக்காரணமுமின்றி, அரசின் நன்மைக்காக மட்டும் திருமண விலக்கு வேண்டியபோதெல்லாம் அவர்களை விடுதலை செய்துள்ளனர். ஆனால் காதரைன் ஐந்தாம் சார்லஸின் அத்தையாவாள். ரோமாபுரியின் முற்றுகைக்குப் பிறகு, போப்பு ஆண்டவர் சார்லஸின் ஆதிக்கத்திற்குட்பட்டவராக இருந்தார். அவன் ரோமாபுரியின் காவலனாக இருந்தான். எனவேதான் இங்கிலையில், ஹென்றியின் வேண்டுகோட்கு இணங்கி ஒன்றும் செய்ய இயலாத இக்கட்டான நிலையில் இருந்தார் மற்ற சமயங்களில் இருந்ததைப் போன்றே, அக்காலத்திலும் போப்பு ஆண்டவரின் சமயத் தொடர்பில்லாத அதிகாரம், அவருக்கு வேண்டிய உரிமைகளை அளிக்காது, உலகியல் நோக்கத்திற்கு அவரை அடிமையாக்கியது. அவர் இத்தாலிய நாட்டு இளவரசராவார். அதனால், இத்தாலிய நாட்டினை அரசு புரிந்து வந்த மன்னரின் மனம் புண்படுமாறு நடந்து கொள்ளவும் போப்பு ஆண்டவர் விரும்பவில்லை.

அது ஹென்றிக்குப் பொறுத்தற்கரிய கொடுஞ்செயலாகத் தோன்றியது; இங்கிலாந்தின் உரிமைகள் போப்பு ஆண்டவரின் மூலமாக ஜெர்மானியப் பேரரசனுக்கு அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டும் என்று அது அறிவிப்பதாக ஹென்றி உணர்ந்தார். இதனால், ஹென்றிக்குப் பெருந்துன்பம் உண்டாயிற்று. அத்துடன் தோன்றிய சினத்தைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? இங்கிலாந்து உண்மையிலேயே ஒரு தனி இனமக்களைக் கொண்ட நாடாக இருக்குமானால், அவளுடைய அயல் நாட்டுப் பகைவர்களாலும், எதிரிகளாலும் திறமையாகக் கையாளப்பட்டு வரும் ஆன்மீகத்துறை ஆட்சி எல்லையினை அவள் மறுத்தொழிக்க வேண்டும். இவ்வாறு நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே பல ஆங்கிலேயர்கள் கருதி வந்தனர். அவர்களுடன் சேர்ந்து ஹென்றியும் இவ்வாறு கருதலானார். பிளாண்டாஜெனட்டு (Plantagenet) மன்னர்களின் காலத்திலிருந்து ஆங்கிலத் தேசப்

பற்று முழு வளர்ச்சிபெற்று முதிர்ச்சியுற்றிருந்தது. அந்நாட்டு மக்களை, 'நாம் எதற்காக நம்நாட்டுத் திருமண அல்லது சமயச் சட்ட திட்டங்களைச் செயற் படுத்துவதற்கு அயல் நாட்டினருடைய ஆதரவை எதிர்பார்க்க வேண்டும்? நாம் ஏன் நம் திருச்சபைக் குருமார்களைக் கலந்து சிந்திக்கக்கூடாது? நம்முடைய பாராளுமன்றத்தின் மூலம் ஏன் செயலாற்றக்கூடாது?' என்று தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ளுமாறு அவர்களுடைய தேசிய உணர்வு தூண்டியது.

போப்பு ஆண்டவரிடமிருந்து மணவிலக்கினைப்பெற முடியாததனால், உல்சி கி.பி. 1530-ல் தம்முடைய அழிவினைத் தாமே தேடிக் கொண்டார். அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நண்பகல் நேரத்தில் கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர். அக்கொடுங்கோலாட்சிக்கு இரையாகிய எண்ணற்ற உயர்குடி மக்களுள் ஒருவராக உல்சி குற்றஞ் சாட்டப்படுவதற்கு முன்பே, அவர் தமக்குண்டான மானக் கேட்டினைத் தாளமுடியாமல் உயிர் துறந்தார். அதனால் அவர் கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்லப்படுவதிலிருந்து காப்பாற்றப்பட்டார். கிரான்மர், ஹென்றியின் மண விலக்கினைப் பல காரணங்கள் காட்டித், தம்முடைய அறிவாற்றல் வெளிப்படுமாறு ஆதரித்துப் பேசினார். மேலும், இப்பிரச்சினையை இங்கிலாந்து தானே தீர்த்துக் கொள்ளுவதற்கு வேண்டிய ஆற்றலும் உரிமையும் பெற்றிருப்பதாக அவர் வாதாடினார். அதனால் அவர் அரசரின் ஆதரவைப் பெற்றார். அரசர் அவரைக் காண்டர்பரியின் தலைமைக் குருவாக கி.பி. 1532-ல் (Archbishop) அமர்த்தினார். ஆனால், ஹென்றிக்குச் சிறிது முரட்டுப் பண்புடைய நேர்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவதில் கருத்தில்லாத தொண்டன் ஒருவன் தேவைப்பட்டான். அத்தகைய பண்புடையவனைத் தாமஸ் கிராம்வெல் (Thomas Cromwell) விளங்கினார். எனவே, ஹென்றி அவரைத் தமக்குகந்த பணிமகனாக அமர்த்திக்கொண்டார். போப்பு ஆண்டவருக்கு எதிராகத் தோன்றிய வெறுப்புணர்ச்சியும், மத குருமார்களின் ஆதிக்கத்திற்கு மாறாக எழுந்த எதிர்ப்பு உணர்ச்சியும், ஆங்கிலிகமும், திருச்சபை நாட்டின் அரசாங்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கவேண்டும் என்ற 'எராஸ்டியக்' (Erastianism) கோட்பாடும் ஒருங்குசேர்ந்து இங்கிலாந்திலே புரட்சியென்னும் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுமாறு செய்தன. புரட்சியினை இயக்குவிக்கும் பேராற்றல் தனி மனிதனாகவோ, பாமரக் கும்பலாகவோ இருந்தாலும், பெரிய சமுதாயப் புரட்சிகளோடு எல்லாம் தொடர்ந்து, பொதுவாக உண்டாகும் நேர்மையற்ற கொடுஞ்செயல்கள் இப்புரட்சியிலும் சிறப்பிடம் பெற்றன.

இங்கிலையில் திருமணவிலக்கு பற்றி ஆங்கிலேய மக்களின் நோக்கம் எவ்வாறு இருந்தது என்பது அறியத்தக்கதாகும். ஆங்கிலேயப் பொதுமக்கள் போப்பு ஆண்டவர் இங்கிலாந்தின் விவகாரங்களில் தலையிடுவதைத் தங்கள் முன்னோர்களைப்போல் வன்மையுடன் எதிர்த்தனர். ஆனால், இப்புதிய சூழ்நிலையில் இதற்குமுன்பு எப்பொழுதுமே கண்டிராத பேரளவிற்கு ஆங்கிலேயர் அவ்வெறுப்புணர்ச்சி யுடையவராக விளங்கினர். அத்துடன் இப்பிரச்சினைக்கு இறுதியாக ஒரு முடிவு காண வேண்டும் என்று முயன்ற ஹென்றிக்குப் பேராதரவை அவர்கள் அளித்தனர். இங்கிலாந்தில் நாட்டுணர்ச்சி முழு வளர்ச்சியுற்றிருந்தது. எனவே ஆயிரம் கற்களுக்கு அப்பால் மலைகளையும் கடல்களையும் கடந்து அமைந்திருந்த போப்பு ஆண்டவரின் சமய ஆதிக்கத்திற்கு இனி அடிபணிந்து சிறிது காலமும் மக்கள் வாழ இசையவில்லை. ரோமாபுரியின் திருச்சபை இங்கிலாந்தில் எழும் பிரச்சினைகளுக்கு, இங்கிலாந்தின் சூழ்நிலையையும் வழக்காறுகளையும் அடிப்படையாக கொண்டு ஆராய்ந்து தீர்வு காண்பதில்லை. ஆனல் அதற்குமாருக இத்தாலிய, ஸ்பானிய, ஜெர்மானியப் பேரரசினுடைய, விருப்பத்திற்கு இணங்கவும், சிற்சில சமயங்களில் பிரான்சினுடைய விருப்பு வெறுப்புக்களையும் வழக்காறுகளையும் அளவு கோலாகக்கொண்டும் தீர்ப்பு வழங்கி வந்தது. அதனல் ஆயிரம் கற்களுக்கு அப்பால் மலைகளையும் கடல்களையும் கடந்து அமர்ந்திருந்த போப்பு ஆண்டவரின் சமய ஆதிககத்திற்குட்பட்டு வாழ இனிமேல் சிறிது காலமும் இங்கிலாந்து இசையவில்லை. ஆனல், அதே நேரத்தில் லண்டன் மாநகரிலும், பொதுவாக இங்கிலாந்தின் பொது மக்கள் அனைவரும், குற்றமற்ற காதரைனும் அவளுடைய மகள் மேரியும் துன்புறுவதைக் கண்டு அவர்களிடத்து இரக்கம் காட்டினர். ஆன் போலீன் மக்களுடைய ஆதரவைப் பெறவில்லை. வேருெருத்தியின் வாழ்க்கையைக் கெடுத்து, இன்னெருத்தியைத் தலைவியாக்க முயலுவதை மக்கள் விரும்பாதது இதற்கொரு காரணமாகலாம். மேலும், காதரைனைக் காட்டிலும், ஆன் போலீன் எவ்வகையிலும் சிறந்தவள் என்று பெருமையாக உரிமைப் பாராட்டிக்கொள்ளுவதற்குரிய சிறப்பியல்புகள் ஒன்றுமே இல்லாதவள் என்பதை மக்கள் நன்கு அறிந்திருந்தனர். எனவே, மக்கள் காதரைனைப் புறக்கணிக்க முடியாது, அவளிடத்தும் பரிவு காட்டினர்.

ஆயினும் இத்தனிப்பட்ட கருத்தும், அருளுணர்வும், நாட்டில் எழுந்த அரசியல் தொடர்புடைய சமயப் பிரச்சினை என்னும் வெள்ளத்தினுள் அமிழ்ந்து போயிற்று. எனவே வேறு

வழியின்றி, மக்கள் காதரைனை ஹென்றி மணவிலக்கு செய்ததை ஏற்றுக் கொள்ள வேண்டிய நெருக்கடிக்கு உள்ளானார்கள். இதனால் ஹென்றி மக்களிடத்து ஆதரவு பெற்று, பேராற்றலுடையவராகத் திகழ்ந்தார். அவர் ரோமாபுரியின் பிடியிலிருந்து இங்கிலாந்தின் அரசையும், திருச்சபையையும் விடுவிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டார். அதனால் நாட்டிலே தோன்றிய புரட்சியின் பொழுது, பண்டை உலகக்குடி மகக்கோட்பாடுடைய துறவிகளையும் சோதரர்களையும் அவர் அடக்கி யொடுக்கினார்; குருமார்களின் சிறப்புரிமைகளையும் அதிகாரத்தையும் கட்டுப் படுத்தினார். இவ்வரிய பணியைச் செய்வதற்கு லண்டன் மாநகரும், இங்கிலாந்தின் தென்பகுதியும் ஹென்றிக்குப் பேராதரவு தந்தன. பழிக்குரிய மணவிலக்கு பிரச்சினை, புகழ்மிக்க விடுதலையை—போப்பு ஆண்டவரின் ஆதிக்கத்தினின்றும் பெற்ற விடுதலையை, அடிமை விலங்கினை உடைத்தெறிந்தமையால் கிடைத்த விடுதலையை — ரோமாபுரி பூட்டியிருந்த சமயமென்னும் அடிமைத்தளையிலிருந்து இங்கிலாந்திற்கு விடுதலை அளித்தது. ரோமாபுரியோடு கொண்டிருந்த தொடர்பு அறுத்தெறியப் பட்டது. அது தாயகத்திலே குருமார்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் புரட்சி தோன்றக் காரணமாக அமைந்தது. நாட்டின் ஆற்றல் மிக்க சக்தி அனைத்தும் ஒரு முகமாக இப்புரட்சிக்குப் பேராதரவு தந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால், இத்தகைய மாற்றங்கள் எல்லாம், அடுத்துக் கத்தோலிக்க மறுப்பு இயக்கத்தைச் சமயமாக ஏற்றுக் கொள்ளும்படி செய்யும் என்பதை ஹென்றியோ, அவருடைய குடிமக்களோ இன்னும் உணரவில்லை. அக்காலம் கத்தோலிக்கரைத் துன்புறுத்தும் குருமார்களின் எதிர்ப்பு இயக்கத்தின் புதுமைக் காலமாகும். சிலர் ஹென்றியைப் போலவே அக்காலம் கொடுமை நிறைந்ததாக இருந்தது என்று கூறலாம். ஆயினும் அச்சமயத்தில் அவ்வியக்கம் அறிவாராய்ச்சிக்குப் பொருத்தமானதாக மக்களுக்குத் தோன்றியது. அருளுணர்வு மிக்க பிறகொள்கைகளையும் கோட்பாடுகளையும்விட அவ்வியக்கம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக மக்கள் கருதியமையால், தங்களுடைய பேராதரவை அதற்கு நல்கினர். அரசனது ஆணைக்கு எதிராகப் போப்பு ஆண்டவரின் அதிகாரத்திற்குட்பட்டு நடக்க விரும்பிய மாண்புமிக்க சர் தாமஸ் மூரையும் (Sir Thomas More), ஹென்றி தூக்கு மேடைக்கு அனுப்பினார். அத்துடன் நின்று விடாமல், அப்பமும் தேறலும் இயேசுவின் தசை குருதியாகி விடுகின்றன என்ற கத்தோலிக்கரின் கருத்தினை ஏற்க மறுத்த (Transubstantiation) புராடஸ்டண்ட்டுகளைக் கழுவேற்றினார். தற்காலச் சமுதாயத்தின் அடிப்படையாக விளங்கும் சமயப் பொறையுடைமையில், நன்கு ஊறி

விட்ட நமக்கு ஹென்றியின் செயல்கள் சீற்றத்தையும் வெறுப்பையும் உண்டாக்குவது இயல்பேயாகும். ஆனால், அக்கொடிய காட்சிகள் அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் உள்ளத்தை வேறு வகையாகத் தாக்கின. அக்கொடுந் துன்பத்திற்கு இரையான மக்களிடத்து இரக்கம் காட்டினர். ஆனால், யாரும் இதுவரை கண்டிக்காத துன்புறுத்தும் நெறிமுறைகளைப் பின் பற்றியது அரசு. அதற்கு ஆதரவாகப் பண்டைக் கிறிஸ்துவ சமயப் பழக்க வழக்கங்களைப் பயன்படுத்திக் கொண்டது. இவ்வாறு அரசாங்கம் நாட்டிலும் திருச்சபையிலும் அமைதியை நிலை நாட்டியது. சமூக அமைதியைக் காத்துவந்தது. எனவே மக்கள் அதனிடத்துப் பெருமதிப்புடையவர்களாக இருந்தனர்.

இந் நெருக்கடியான காலத்தில், தனி மனிதனை அரசனின் விருப்பத்தையே நாட்டுமக்கள் அனைவரும் ஈடேறுவதற்குரியதாக (Salus publici) மக்கள் மனமுவந்து ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர். அரசனுடைய விருப்பமே நாட்டு மக்களுடைய விருப்பமாகக் கருதப்பட்டது. டியூடர்களின் ஆட்சிக் காலத்தில் அரசர் வழிபாட்டுநெறி அதன் உச்சநிலையை அடைந்தது. அதனால் ஹென்றியின் பண்பு நலங்கள் பாழ்படுத்தப்பட்டன. ஹென்றியைப் பிடித்தலைத்த தன்னல வேட்கை வெறியும், ஆணவமும் என்று சொல்லப்படும் நோய், அவரைச் சொல்லொணாத் துன்பத்திற் காளாக்கியது; ஆனால், அந் நோய் அவருடைய உள்ளத்தைத்தான் தாக்கியது; மூளையைத் தாக்கவில்லை. ஆற்றல் மிக்க அரசரது ஆட்சிக் காலத்து அரசர் வழிபாட்டு நெறி சிறப்புற்றமையால், ஒரு நன்மை விளைந்தது. அதனால், இங்கிலாந்தில் உள்நாட்டுப் போரின்றியே, பல நிலையங்களில் பெறும் மாறுதல்களை உண்டாக்க முடிந்தது; நாட்டு மக்களின் குருதி வீணாகச் சிந்தப்படாமல் காக்கப்பட்டது. கிளர்ச்சிகள் உண்டாகியிருந்தால், அவற்றை அடக்கியொடுக்குவதற்கு நிலையான படை ஒன்றை ஹென்றி வைத்துக் காக்கவில்லை என்பதை நாம் முன்னர்க் கண்டோம். எனவே துணிவு மிக்க தொண்டர்களே தங்கள்குருதியைக் கொண்ட கொள்கைகளுக்காகக் கொட்டினர். ஆனால் பிரான்சிலும், ஹாலந்திலும், ஜெர்மனியிலும் நிகழ்ந்த சமயப் போர்களின் பொழுது இரத்த ஆறு பெருக் கெடுத்து ஓடியதை நாம் அறிவோம். அதைப் போன்று இங்கிலாந்தில் பொதுமக்களின் குருதி வீணாகப் பாழாக்கப்படவில்லை என்பது கருதத்தக்கது.

ஹென்றி தம்முடைய அரசிற்குரிய சீர்திருத்தங்களைச் செய்வதற்குரிய கருவியாகப் பாராளுமன்றத்தைத் தேர்ந்தெடுத்தார். அப்பாராளுமன்றக் கூட்டம் வெறும் சமயக் குருமார்களின் திருக்

கூட்டமாக இருக்கக் கூடாது என்பது ஹென்றியின் உட்கிடக்கை யாகும். காண்ட்டர்பரி, யார்க்கு முதலியவற்றைச் சார்ந்த சமயப் பேரவைகளில், பொதுமக்களின் பிரதிநிதிகள் இல்லாமையால் அவற்றை மதகுருமார்களின் எதிர்ப்பு இயக்கத்திற்குச் சிறந்த கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாமற்போய்விட்டது. இடைக்காலத் திருச்சபையில் மதகுருமார்களே உறுப்பினர்களா கச் சேரத் தகுதியுடையவர்களாக இருந்து வந்தனர். அதனால், பொது மக்கள் வெளியிலிருந்தே தங்கள் உரிமைகளை வற்புறுத்த வேண்டியதாயிற்று. எனவே பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஏற்ற கருவி பாராளுமன்றமே ஒழிய குருமார்களின் திருக்கூட்டமன்று என்பதை ஹென்றி தெளிவாக உணர்ந்திருந் தார்.

காண்ட்டர்பரி, யார்க்கு மாவட்டங்களில் சமயக் குருமார் களின் திருக்கூட்டம் போப்பின் அதிகார வரம்பினை ஆதரித் தால், தங்களுக்குத் தண்டனை கிடைக்கும் என்பதை அரசனின் அச்சுறுத்தலின் மூலம் நன்கறியலாயிற்று. எனவே, எதிர் பேச் சின்றி அவ்விடங்களில் கூட்டங்கள் கூட்டப்பட்டன. எனினும், சமயச் சார்பில்லாத குருமார்கள் அனைவரும் இயல்பாகவே எல்லாப் புதிய மாற்றங்களையும் ஏற்றுக் கொண்டனர். இதற் குக் காரணம் அரசனுடைய ஆதிக்கத்திடத்து உண்டான அச்ச மன்று. அவர்கள் இயல்பாகவே புதிய மாற்றங்களை வரவேற்ப வர்களாயும், அவற்றைச் செயல்படுத்துவதில் பேரார்வம் உடையவர்களாகவும் இருந்தனர். அவர்கள் துறவிகளிடத்தும் சோதரர்களிடத்தும் பெரும் வெறுப்புக் கொண்டிருந்தார்கள். போப்பு ஆண்டவருக்குக்கோயில் மானியத்தின் முதலாண்டு விளை வினைச் செலுத்துமாறு (Annates) தங்களைப் போப்பு கட்டாயப் படுத்தியமை அவர்களுக்கு வெறுப்பினை உண்டாக்கியது. அத் துடன் வேறு பல சுங்கவரிகளைப் போப்பு ஆண்டவர் பெருஞ் சுமையாக விதித்து வந்தமையாலும், குருமார்கள் போப்புஆண்ட வரிடமிருந்து உள்ளூரப் பெருஞ் சினமும் வெறுப்பும் கொண் டிருந்தனர். குருமார்களின் திருக்கூட்டங்கள் கூடியபொழுது, பலர் திருச்சபைகளின் தனியுரிமைகளையும், அடைக்கல உரிமை களையும் சமயமுறை மன்றங்களைத் தவறாகப் பயன்படுத்துவதை யும் சீர்திருத்தி அமைக்க வேண்டும் என்று தங்கள் கருத்துக்களை அவ்வப்போது தெரிவித்தும் வந்தனர். மேலும், ஹென்றி, தமக்கு வேண்டிய பாதிரிமார்கள் பலரைத் தேர்ந்தெடுத்தார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட குருமார் குழுவினுள் லாட்டிமர், கிரான்மர் போன்ற சிலர், ஆனால் மிகப் பலராக வளர்ந்துவரும் தீவிரச் சீர்திருத்த வாதிகள் பலர் இருந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

காலத்திற்குப் பொருந்தாத சிறப்புரிமைகளுக்காக உள்நாட்டுப் போரை மூட்டுவதற்குப் பிரசாரம் செய்கின்றவர்களையும், எதற்குமே இணங்காத ஏடாகோடமாக வெறிபிடித்து அலைகின்றவர்களையும் போன்று ஆங்கிலேய மதகுருமார்களின் எண்ணமும் எழுத்தும், சொல்லும் செயலும் அமையவில்லை. அவர்கள் மாபெரும் வீரர்களாக விளங்கவில்லை என்றாலும் நாட்டுப் பற்றுமிக்குடையவர்களாக இருந்தனர். நாட்டு மக்கள் பலருக்கும் நன்முறையில் பயன்படும் நிலையில், ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக இங்கிலாந்து நாட்டு சமயக் குருமார்கள் வாழ்ந்தனர் என்று கூறின், அது மிகையாகாது. இயல்பாக அவர்களிடத்து நாம் எதிர்பார்க்கக் கூடியதைக் காட்டிலும் விரும்பத்தகாத பல சீர்திருத்தங்களைப் பேரளவில் அமைதியாக அவர்கள் ஏற்றுக்கொண்டனர். இதனால் அவர்கள் இங்கிலாந்தைச் சமயப்போர் ஒன்றிலிருந்து காப்பாற்றினார்கள். மேலும், தற்காலத்திற்கு ஏற்ற புதியதொரு ஆட்சிமுறையில், நெடுங்காலமாக அவர்கள் இழந்துவிட்டிருக்கும் தாய் நாட்டுப் பற்றினை மீண்டும் விரைவில் திருப்பப்பெற்றனர்.

போப்பு ஆண்டவரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவது குருமார்களுக்கு நன்மை பயப்பதாக இருந்திருக்கலாம். எனினும் அரசனுக்கு அடிபணிந்து நடக்கவேண்டும் என்பது சிறிது துன்பமாகவே அவர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால், இதைவிட நல்லதொரு மூன்றாவது வாய்ப்பு குருமார்களுக்குக் கிடைக்காமையால், வேறு வழியின்றி அவர்கள் அரசனுக்கு அடிபணிவதின்மூலம் மனவமைதி பெற முயன்றனர். 'கிறிஸ்து பெருமானின் சட்டம் அனுமதிக்கும் வரையில்' என்ற சொற்றொடர் (விழிப்புணர்ச்சியுடன்) இணைக்கப்பட்ட 'ஹென்றியே இங்கிலாந்து நாட்டுச் திருச்சபையின் தனி முதல் தலைவனாவான்' என்ற தீர்மானத்திற்குக் குருமார்களின் திருக்கூட்டம் 1531-ல் ஒரு பெருமூச்செறிவதோடு தமது உடன்பாட்டினைத் தெரிவித்தது. இத்தீர்மானத்தில் சேர்த்து வழங்கப்பெற்ற 'கிறிஸ்துபெருபெருமானின் சட்டம் அனுமதிக்கும் வரையில்' என்ற நெகிழ்ச்சி மிக்க சொற்றொடர், அடுத்த சில ஆண்டுகளில் நெடுந்தொலைவிற்கு இழுத்துச் செல்லப்பட்டு, விரிந்த பொருளில் விளக்கம் செய்யப்பட்டது.[1] இவ்வாறு குருமார்கள் போப்பு ஆண்டவரின் அதிகார

[1] கி. பி. 1534-ல் பாராளுமன்றத்தில், போப்பு ஆண்டவருக்குச் சமயத்துறையில் இருந்து வந்த தலைமை முழுவதையும் அரசக்கு அளிப்பதற்காக நிறைவேற்றப்பட்ட மாபெருந் தலைமைச் சட்டத் (Act of Supremacy)தினுள் இவ்வடைமொழி நீக்கப்பட்டது. அதற்கு மாற்றாக 'இங்கிலவுலகில் உள்ள இங்கிலாந்தின் திருச்சபைக்குத் தனிப் பெருந் தலைவராக விளங்கும் ஆங்கிலேயரின் சமய முதல்வர்' ஹென்றி என்று குறிப்பிடப் பட்டமை ஒப்பு நோக்கத்தக்கது.

வரம்புக்குட்பட்டவர்கள் அல்லர் என்பதை ஆணையிட்டு மறுத்துக் கூறி அவ்விடத்தில் இங்கிலாந்தின் அரசினை ஏற்றுக் கொண்டனர். ஆயினும், ஹென்றி குருமார்களின் திருக்கூட்ட ஆதரவைக் காட்டிலும், சிறந்ததொரு சுறுசுறுப்பான கருவியை, நாட்டில் தொடர்ந்து நடத்த புரட்சியின் மூலம் பெற முயன்றார். முடிவில் பாராளுமன்றமே அதற்குரிய சிறந்த கருவி என்ற முடிவிற்கு அவர் வந்தார்.

சீர்திருத்த இயக்கம் பாராளுமன்றத்தின் முக்கியத்துவத்தை இரட்டிக்கச் செய்தது. இதுவரை பாராளுமன்றம் சட்டம் இயற்றும் மன்றமாக இருந்ததைப் போலவே, வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் நீதி மன்றமாகவும் இருந்து வந்தது. ஏழாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தும், உல்சியின் ஆட்சிக்காலத்தும் அதன் முக்கியத்துவம் தளர்ச்சியுறலாயிற்று. இங்கிலாந்தின் வரலாறு தனக்கெனத் தானே வகுத்த வழியில் செல்லாது, ஐரோப்பிய வரலாற்றின் ஒரு கிளையாகவே இருந்திருக்குமானால், பிரான்சு, ஸ்பெயின் நாடுகளின் இடைக்கால ஆதீனங்கள் கால வெள்ளத்தில் சிக்கி இருந்த இடம் தெரியாது அழிந்தொழிந்ததைப் போன்று, அக்காலம்வரை இங்கிலாந்து பாராளுமன்றமும் தொடர்ந்து நலிவுற்று, இறுதியில் பொய்யாய்ப் பழங்கதையாய் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிருக்கும். ஆனால், எட்டாம் ஹென்றி இதற்காக வேறொரு வழியினைத் தேர்ந்தெடுத்தார்.

சமயச் சீர்திருத்தத்திற்காகக் கூட்டப்பட்ட பராளுமன்றம் அதன் பிறகும் தொடர்ந்து (1529–1536) செயலாற்றத் தொடங்கியது. தொடர்ந்து அது செயலாற்ற வேண்டிய இன்றியமையாமையை மன்னனும் மக்களும் நன்குணர்ந்திருந்தனர். இங்கிலாந்திற்கும் ரோமாபுரிக்கும் இருந்து வந்த தொடர்பினை அறுத்தெறிந்து நாட்டிலுள்ள மடங்களை எல்லாம் அழித்து, அரசின் ஆதிக்கத்தைத் திருச்சபையின்மீது செலுத்துவதற்கு உரிமையளிக்கும் சட்டத்தைப் பிரிவி கவுன்சில் உறுப்பினர்கள் தயாரித்தனர். பாராளுமன்றத்தின் இரு பேரவைகளும் அச்சட்டத்தில் காணப்படும் கருத்துகளை நன்கு கலந்து ஆராய்ந்தன. அதன் பிறகே அவை அதைச் சட்டமாக்கின. இதற்கு முற்பட்ட பாராளுமன்றக் கூட்டங்களைப் போன்று இல்லாமல், சமயச் சீர்திருத்தத்திற்காகக் கூடிய பாராளுமன்றம் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் செயலாற்றி வந்தது. இவ்வாறு எட்டுமுறை பாராளுமன்றம் தொடர்ந்து கூடினமையால் அதன் உறுப்பினர்களிடையே சிறந்த அனுபவ அறிவு வளர்ந்தது. அவர்கள் பாராளு

மன்றக் கடமைகளில் நாள்தோறும் ஈடுபட்டுச் செயலாற்றும் திறமையையும் பெற்று வந்தனர். இப்பயிற்சியும் வாய்ப்பும் தற்கால மக்கள் சபையினை (House of commons) நன்முறையில் உருவாக்கியது ; நாளடைவில் அதனை அரசாங்கத்தின் மிகச் சிறந்த கருவியாக விளங்குமாறு செய்தது. ஹென்றியின் பாராளு மன்றத்தில், அரசன் ஆராயுமாறு இரு அவைகளுக்கும் விட்ட கருத்துகள்மீது நடந்த சொற்போர்கள் போற்றத்தக்க அள விற்கு உரிமையுடன் நடைபெற்றது. ஹென்றி உண்மையான அறிவுரை, கருத்துரைகளின் பயனை நன்குணர்ந்திருந்தார். ஆனால் அவை தம்முடைய விருப்பத்திற்குப் பெரிதும் மாறாக இருக்கக்கூடாதென்று கருதினார். மேலும் அவை அக்காலச் சூழ் நிலையில் பாதுகாப்பு அளிப்பனவாகவும், அரசினுடைய திட்டத் திற்குகந்த பண்பினை உடையனவாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆயினும், ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கம் நிறைவேற்ற விரும்பிய பல திட்டங்களைப் பாராளுமன்றத்தினர் மறுத்துவிட்டனர். வேறு சில, மக்கள் சபை உறுப்பினர்களால் திருத்தப்பெற்று அதன் பிறகு சட்ட மாக நிறைவேற்றப்பட்டன.

'ஆட்சியும் அரசும் நானே' (Le'tat C'estmoi)

என்று பதினான்காம் லூயி கூறியதாக அறிஞர்கள் நம்பி வருகின் றனர். பதினான்காம் லூயி தாம் நினைத்ததை நினைத்தவாறே செயலாற்றினார் என்றும் கூறுவர். அவர் இக்கருத்தினை முதன் முதலில் ஹென்றி ஒப்புக்கொண்டமையால், ஹென்றியின் ஆதிக் கம் வேறு வகையாக இருந்தது. கி. பி. 1543-ல் மக்கள் சபை உறுப்பினர்களுக்குச் சிறைப் பிடித்தலினின்று விலக்கு அளிக்கும் (Freedom from arrest) சிறப்புரிமை ஹென்றி வழங்கினார். அப் பொழுது அவர், 'தலைவனாகவுள்ள யானும், உறுப்பினர்களாக உள்ள நீங்களும் ஒருங்கு இணைந்து ஓர் அரசியல் குழுவாக விளங்குகின்றபொழுது—பாராளுமன்றக் கூட்டத்தின் பொழுது தான், எம்முடைய அரச பதவியில் நான் மிக உயர்ந்த நிலையை அடைவதாக நம்முடைய நீதிபதிகள் எனக்கு அறிவித்துள்ள னர்' என்று மொழிந்தமை இங்குக் கருதத் தக்கதாகும்.

நினைவுக்கு எட்டாத நெடுங்காலம் முதற்கொண்டு அரசி னாலோ, பாராளுமன்றத்தினாலோ திருச்சபையின் சட்டதிட்டங் கள் மாற்ற முடியாத பேராற்றல் வாய்ந்தவை என்று நம்பப் பட்டு வந்தமைக்கு மாறாக, மன்னரின் பாராளுமன்றச் சட்டங் களால், நாட்டின் அடிப்படைச் சட்டங்களும் திருச்சபையின்

அடிப்படைச் சட்டங்களும் புரட்சிகரமாக மாற்றப்பட்டமை, உண்மையிலேயே 'பாராளுமன்றத்தில் வீற்றிருக்கும் அரசுக்கு (Crown in Parliament) இருமடங்கிற்கு மேற்பட்ட அதிகாரங்களை வழங்கியதென்றே கூறலாம். இதற்கு முன்பு என்றுமே இருந்திராத அளவிற்கு எதையும் செய்யத்தக்க தகுதி யுடையதாகப் பாராளுமன்றம் மாறியது. அதனல் இங்கிலாந்து நாட்டிற்குள் அது எத்தகைய சட்டத்தையும் செய்யக் கூடிய பேராற்றலுடையதாக விளங்கத் தொடங்கியது.

நாட்டிலே பாராளுமன்றம், சிறப்பாக மக்கள் சபை புதியதொரு நிலையினை அடைந்து கொண்டிருந்த போதிலும், அரசனுடைய நேரடிக் கண்காணிப்பிலேயே அது இருந்து வந்தது. சமயச் சீர்திருத்தத்திற்காகக் கூடிய பாராளுமன்றத்திலும், அதைத் தொடர்ந்து கூடிய 'சொற்படி நடக்கிற' (Tractable) பாராளுமன்றத்திலும், புதிதாக இங்கிலாந்தின் போப்புஆண்டவராக விளங்கும் அரசர் பெருமானின் (Pope-King of England) தெய்விகப் பேரொளி அளவுகடந்து உறுப்பினர்களின் கண் கூசுமாறு பிரகாசித்தாகத் தெரிகிறது. அரசத்துரோகத் தடுப்புச் சட்டம் (Statute of Treason) கி. பி. 1534-ல் நிறைவேற்றப்பட்ட பிறகு, அரசரிடத்து அசைக்க முடியாத பற்றுடைய குடிமக்களின் பாதுகாப்பிற்கு ஊறுண்டாகாதவாறு எளிதில் கவனித்துக் கொள்ள முடிந்தது. இச்சட்டம் எட்டாம் ஹென்றியின் ஆட்சியிலும், கிராம் வெல்லின் காலத்திலும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. நல்ல காலமாக ஆறும் எட்வர்ட்டு ஆட்சியின் தொடக்க காலத்தில், தாராள மனப்போக்குடைய காப்பாளரான சாமர்செட்டி (Somerset)ன் தலைமையின் கீழ் அச்சட்டம் தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் ஒருமுறை அரசுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே இருந்த டியூடர் காலத்திய தொடர்பு நிலவலாயிற்று.

துறவிகள், சோதரர்கள் முதலியயோருடைய அமைப்புகளும் நிலையங்களும் அடக்கி யொடுக்கப்பட்டமையும் (1536-1539), அவர்களுடைய சொத்துகள் நாட்டு உடைமைகளாக ஆக்கப்படுவதற்கும் பாராளுமன்றத்திற்கு மன்னர் கொண்டு வந்த சீர்திருத்தச் சட்டங்கள் பேருதவியாக இருந்தன. அவை அரசரின் ஆட்சிக் குழுவின் நலங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது, எட்டாம் ஹென்றி, தாம் பறிமுதல் செய்த மடாலயங்களுக்குரிய நிலங்களுள் பெரும் பகுதியைப் பிரபுக்களுக்கும், அரசவை உறுப்பினர்களுக்கும், பொதுப் பணியாளர்களுக்கும், வாணிகர்களுக்கும் விற்ருர். அவர்கள்

உடனே அவற்றுள் பெரும் பகுதியை ஏழை எளியவர்களுக்கு விற்றனர்[1]. வாணிக நோக்குடைய தரகர் குழுக்கள் நில உடைமையில் துணிகர வாணிகம் செய்வதற்காக அந்நிலங்களை வாங்கினர்கள். மேரி அரசியின் காலத்தில் போப்பு ஆண்டவரை ஆதரித்துப் பிற்போக்கு வாதிகள் கிளர்ச்சி செய்தனர். அப்பொழுது பெரிதும் இத்தகைய வாணிகச் செயல் முறைகளால் தான் புதியதாகத் தோன்றிய நிலக்கிழார்களின் மீதும், ஊர்ப் பெரிய தனக்காரர்களின் மீதும் (Squires) மக்கள் ஐயுறவு கொண்டனர். மடாலயங்களுள் (Abbey) மிகப்பல பெரும் பண்ணைக் காரர்களின் மாளிகைகளாயிற்று. வேறு சிலவற்றை இடித்து, அவற்றுள் இருந்த பொருள்களைக் கொண்டு பெரும் பண்ணைக் காரர்கள் தங்களுக்குப் புதிதாக மாளிகைகள் கட்டிக்கொண்டனர். இவ்வாறு செய்தமைக்குரிய காரணம் ஊர்ப்பெரிய தனக் காரர்கள் தங்கள் ஊர்களில் மீண்டும் மடாலயங்களைக் காண விரும்பாமையேயாகும். இத்தகைய மனிதர்கள், தாங்கள் கழுவிலேறி உயிர்த்தியாகம் செய்யவில்லை யென்றாலும், எத்தகைய நன்மையையும் குறிக்கோளாகக் கொள்ளாமல் இறைவனுக்குத் தொண்டு செய்வதையே தங்களுடைய பெரும் விருப்பமாகக் கொண்டுள்ள புராடஸ்டண்ட்டு சமயத் தொண்டர்களைப் போற்றி ஆதரிக்கும் அறிவுடைமை வாய்ந்தவர்களாக இருந்தனர்.

அக்காலத்தில் நிலவுடமை என்பது அந்நிலத்தில் வாழும் மக்களின்மீது நேரடியாகச் செலுத்தும் அதிகாரத்தையே குறிப்பதாயிற்று. மடங்களின் சொத்துகளான நிலங்களில் குத்தகைக்காரர்கள் செழிப்புற்று விளங்குவதற்குச் சமயசீர்திருத்தங்கள் என்றுமே அனுமதி தரவில்லை. ஆனல் ஒவ்வொரு கோட்டங்களிலும் (Shires) உள்ள நிலங்கள் பண்டைச் சமயத்தையும், போப்பின் ஆதிக்கத்தையும் போற்றிப் பின்பற்றுவதில் ஈடுபட்டிருந்த நிலையங்களுக்கு உரியனவாக இருந்தன. மடாலயங்கள் கலைக்கப்பட்டதும், அவற்றின் ஆதிக்கத்தில் இருந்த நிலங்கள் அரசனல் கைப்பற்றப்பட்டன. அத்தகைய நிலங்களைப் பலர் பெருவிருப்பத்தோடு விலைக்கு வாங்கினர். அதனல்

[1] ஹென்றியை ஒரு சிலரே எதிர்த்தனர். மற்றவருக்குப் பேரச்சம் உண்டாகுமாறு ஹென்றி அவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றார். மடங்கள் கலைக்கப்பட்ட பிறகும், மடங்களின் பழைய உறுப்பினர்கள் நன்முறையிலேயே அரசரால் நடத்தப்பட்டனர். கலைக்கப்பட்ட மடங்களின் தலைவர்களுள் பலர் பாதிரிகளாகவும், கல்வி நிலையங்களின் முதல்வர்களாகவும் பணிபுரிந்தனர். துறவிகளுக்குத் தாராளமாக உதவித் தொகை அளிக்கப்பட்டது. அவர்களுள் பெரும்பாலோர் உதவித் தொகை பெற்றதோடு, ஊதியத்திற்காக வேலையும் செய்து வந்தனர். பாஸ்கர்வில்லே (Baskerville) எழுதியுள்ள 'Engilsh Monks and the Suppression of the Monasteries' (1937) என்னும் நூலினைப் பார்க்க.

அவர்கள் புதிய சமயநெறியினைப் போற்றுபவர் என்பது புலனாகியது. இவ்வாறு பொது மக்களுக்கு மடத்தின் மானியங்கள் விற்கப்பட்டமையால், குத்தகைக்காரர்களிடத்து அரசிற்கும் பிரபுக்களுக்கும் இருந்து வந்த செல்வாக்குத் தலைகீழாக மாற்றமுற்றது.[1] மற்ற நகரங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படுவதைப் போலவே, லண்டன்மாநகரிலும் சமயத் தொடர்பான நிலையங்களுக்குரிய மதிப்புயர்ந்ததும், சிறப்புடையதுமான நிலையங்களும், அவற்றிற்குரிய மாளிகைகளின் பல்வேறு பொருள்களும் பொதுமக்களின் கைக்கு மாற்றப்பட்டன. அதனால், ஓயாது வளர்ந்து வரும் புராடஸ்டண்ட்டு சமயக் கொள்கைகளுக்கும், மதகுருமார்களின் எதிர்ப்பு இயக்கத்திற்கும், தலைநகரின் வாணிக வளத்திற்கும் எதிராக இருந்துவந்த இறுதித் தடை நீக்கப்பட்டது எனலாம். ஆக்ஸ்போர்ட்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில், துறவிகளும் சோதரர்களும் மிகப் பலராக இருந்து வந்தனர். ஆகவே புதுக் கல்வியினை எதிர்க்கும் இயக்கத்திற்கு அவர்களே முதுகெலும்பாக அமைந்தனர். மடாலயங்கள் கலைக்கப்பட்டமையால் அவர்கள் நாட்டில் செல்வாக்கு அற்றவர்களாயினர். அதனால் உண்டான முதல் விளைவு பல்கலைக் கழகங்களில் பயிலுவோர் எண்ணிக்கை மிகவும் குறைந்து போயிற்று. இவ்விளைவு லாட்டிமருக்குக் கிலியுண்டாக்கிற்று. ஆனால் சிறிது காலத்திற்குள், நடுத்தர வகுப்பினைச் சார்ந்த பண்பாளர்களின் பிள்ளைகள் பேரளவில் கல்வி கற்கப் பல்கலைக்கழகங்களில் சேர்ந்தமையால், பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பெருகிற்று. இப்புதிய வகுப்பினைச் சார்ந்த பட்டம் பெறாத மாணவர்கள், பல்கலைக் கழகங்களை வாழ்க்கையில் நன்மைகளை அடைவதற்கும், பொதுப்பணிகளில் ஈடுபடுவதற்கும் வழிகாட்டும் அறிவுலகமாக விளங்குமாறு செய்தனர். எலிசபெத்துப் பேரரசியின் காலத்தில் நாட்டாட்சியிலே சிறப்புற்று விளங்கிய செசிலும் (Cecil), பேக்கனும் (Bacon) பல்கலைக் கழகத்தில் கற்றுத் தேர்ந்தவர்களாவர். அவர்கள் அங்குப்பெற்ற அறிவாற்றல்களைக் கொண்டு, அரசாங்கப் பொதுத்துறை ஆட்சிக்குத் (Civil Service) தகுதிவாய்ந்தவர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டனர். மேலும் ஆக்ஸ்போர்ட்டும், கேம்பிரிட்ஜும்

[1] கி.பி. 1545-ல் பிரான்ஸிஸ் டிரேக் (Francis Drake) பிறந்த குடும்பத்தினர், உறுதியாகப் புராடஸ்ட்டண்டு கோட்பாடுகளைப் பின்பற்றியொழுகினர். அவர்கள் டெவன்ஷையரிலுள்ள டாவிஸ்ட்டாக் மடாலயத் (Tavis Tock Abbey) திலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலத்தினைக்கொண்டு, ரசலின் சொத்துக்களில் ஒரு பண்ணை அமைத்திருந்தனர். டிரேக்கிற்குப் பிரான்ஸிஸ்ரசலே வளர்ப்புத் தந்தையாக விளங்கினார். உலகின் இருபெரும் பகுதிகளிலும் புகழ்பெற்று விளங்குமாறு அவர் அக்குழந்தைக்கு அக்கிறிஸ்துவப் பெயரினைச் சூட்டினார்.

துறவிகள், சோதரர்கள் முதலியோரை வழிகாட்டியாகக் கொண்டு, சமயத் தொடர்பில்லாத குருமார்களின் கண் காணிப்பில் வளர்ந்து வந்திருக்குமாயின் அடைந்திருக்க முடியாத முன்னேற்றத்தைப் புதுவகையான அறிவாற்றல் நிரம்பிய கருத்துகளைச் செசிலும், பேக்கனும் போற்றி வளர்ப்பதன் மூலம் விரைவுபடுத்தினர்.

ஆயினும் மடங்களின் நிலங்கள் வழங்கப்பட்ட முறையே கல்வி வளர்ச்சிக்கு எதிராக இழைக்கப் பெற்ற மாபெரும் தீமை யாக அமைந்தது. மடங்களின் செல்வமும், அதன் பிறகு குரு மார்களுக்கு விடப்பட்டிருந்த மானியங்களும் (Chantries) ஹென்றி யினுடைய ஆட்சியின் இறுதிக்காலத்திலும், ஆறும் எட்வர்ட்டின் ஆட்சியின் தொடக்க காலத்திலும் கொள்ளையிடுதல், இடித்தும் தீயிட்டும் அழிக்கப்பெறுதல் போன்ற எண்ணற்றஅழிவு வேலை களால் சீரழிந்தன. இதனல், இதற்கு முன்பே சில மடங்களின் சார்பில் நடத்தப் பெற்ற பள்ளிகளும், பல குருக்கள் மானியங் களில்நடத்தப்பெற்ற பள்ளிகளும் மூடப்பெற்றன. அத்துடன் புதி தாகப் பள்ளிகள் திறக்கப் படுவதற்குரிய வாய்ப்பும் இல்லாமற் போயிற்று. பிற்காலத்தில் கிறிஸ்துவ திருச்சபைக் கல்லூரி, (Christ Church College) என்று புகழ்பெற்ற கல்லூரி, ஒரு காலத் தில் 'கார்டினல் கல்லூரியாக' இருந்தது. அப்பொழுது, அதனை நன்முறையில் நடத்துவதற்கு, உல்சி தாம் அடக்கி யொடுக்கிய மடாலயங்களின் செல்வத்தைக் கல்விக்காகப் பயன்படுத்து வதற்கு வழி காட்டினர். கி. பி. 1496-ல் கேம்பிரிட்ஜில் சிறப் புற்று விளங்கிய கன்னிமடம் (Nunnery) ஒன்று, ஊரிலே அதைப் பற்றி உண்டான அவதூறு காரணமாக அழித்தொழிக்கப்பட்டு, அது இயேசுவின் கல்லூரியாக மாற்றப்பட்டது. எட்டாம் ஹென்றி, பறிமுதல் செய்யப்பட்ட மடங்களின் நிலங்களைக் கொண்டே. கேம்பிரிட்ஜில், டிரினிட்டி கல்லூரி என்னும் முத்திறக் கல்லூரியினை (Trinity College) நிறுவினர். இச்செயல் ஒன்றே, மடாலயங்களை அழித்து அவற்றின் பொருளைக் கொண்டு செய்த செயல்கள் பலவற்றுள்ளும் பொன்றாப் புகழுடையதாய், மறக்க முடியாத நிலையில் இன்றுவரை இருந்து வருகிறது. தொழிற் புரட்சிக்கு முன்பே இங்கிலாந்து 'கல்வியறிவு வாய்ந்த மக்க ளாட்சி நாடாக மாறியிருக்கும். அவ்வாறாகியிருந்தால் மிகச் சிறந்த மனிதப் பண்பினைப் போற்றி வளர்க்கும் துறைகள் பல வற்றின் மூலம் நாட்டிலே உண்டான பெரிய மாறுதல்களை நெறிப்படுத்திச் சிறப்புற அவன் செய்திருப்பான். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து ஆகிய இரு நாடுகளிலும், மடாலயங்களிலிருந்தும் குருக்கள் மானியங்களிலிருந்தும் பெற்ற நிலங்கள் முழுவதையும்

மொத்தமாகப் பொதுமக்கள் நலனுக்குப் பயன்படுத்துவது என்பது 'சமயப் பற்றுமிக்க கற்பனையாகவே' உலகியலில் சிக்கிச் சீரழியும் ஆட்சியாளருக்குத் தோன்றியது. நாட்டின் கருவூலம் காலியாக இருக்கும் நேரத்தில், அரசவையினர் பேராசை உடையவர்களாக வாழுகின்ற சமயத்தில், விரைவில் தனி மனிதர்க்கு அந்நிலங்களை விற்பதே சிறந்த வழியாக அரசாங்கம் கருதியது.

துறவிகள் எப்பொழுதும் பெரும் கடன்காரர்களாக இருந்து வந்தனர். அதனால் அவர்களுடைய சொத்துகளை நல்ல முறையில் கண்காணிக்கும் மேலோர்களாக அவர்கள் விளங்க முடியவில்லை. அவர்களுக்கும், அவர்களுடைய குத்தகைக்காரர்களுக்கும் துறவிகளுக்கும் இடையே இருந்து வந்த தொடர்பினைப் போல் மிகச்சிறப்பாகவோ, மிக மட்டமாகவோ இல்லாமல், பொதுப் படையாகவே இருந்து வந்தது. இவ்வாறே கூட்டுக் கழகங்களிடத்தும் அவர்களுடைய தொடர்பு இருந்து வந்தது. மேலும் அடிக்கடி அவர்கள் நிலக்கிழார்கள் என்ற அடிப்படையில் பழமைப் பற்றாளர்களாகவே இருந்து வந்தனர். அக்கொள்கை திறமையற்றதாகவும், கண்டிப்புக் குறைந்ததாகவும் இருந்தது. ஆனால், இவ்விதியும் பல விதிவிலக்குகளை உடையதாக இருந்தது. வேலியிட்டுத் தடுக்கப்பெற்ற நிலங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டமை பல மடாலயங்களினுடைய நிலங்களிலும் நடைபெற்றது. கி. பி. 1526-ல் லாங்குலாந்து பாதிரியார் 'சமயச் சார்பற்றவர்களும், பொது மக்களும் செய்துவந்த கொடுமைகளைக் காட்டிலும், சில மடங்களில் குத்தகைக்காரர்களின் தோலினை உரித்தெடுக்கும் மிகக் கொடிய செயல்கள் நடைபெறுகின்றன' என்று கூறியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மடங்கள் கலைக்கப்பட்டபொழுது, அம்மடங்களினுடைய நிலங்களின் விலையேற்றப்பட்டமையாலும், அடிக்கடி நிலங்கள் விற்கப்பட்டு ஒருவர் கையிலிருந்து இன்னொருவர் கைக்கு மாற்றப்பட்டமையாலும் குத்தகைக்காரர்கள் கொடுக்க வேண்டிய தீர்வை உயர்த்தப்பெற்றது. அதனால் உண்மையிலேயே குத்தகைக்காரர்கள் பெருந்துன்பமுற்றார்கள். ஆனால் இம்முறையும் பெரு வழக்காக இல்லை. அடிக்கடி துறவிகள் தங்கள் நிலங்களோடு நேரடித் தொடர்பு கொள்ளாது, நெடுங்காலத்திற்கு யாருக்காகிலும் குத்தகைக்கு விட்டு, அந்நெடுங்காலத்திற்குச் சேர வேண்டிய தீர்வையை மொத்தமாகப் பெற்றுக் கொண்டு வாளா இருந்து விடுவர். அதனால், நிலங்கள் ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்கு மாறிய காலத்திலும் அது குத்தகைக்காரருக்கே முழு உரிமையுடையதாக இருந்து வந்தது.[1]

[1] இவ்வியலின் இறுதியிலுள்ள குறிப்பைப் பார்க்க.

துறவிகளும், கன்னிப்பெண் துறவிகளும், உதவிச் சம்பளம் பெற்று வாழ்ந்த பொதுத்திற மக்களும், மடங்களின் அறக் கட்டளைகளினின்று தண்டப்பெற்ற கடமைகளைக் கொண்டு வாழ்ந்தவர்களும், உண்மையில் அவர்கள் தோன்றிய குடும் பங்களும், தொடர்பு கொண்ட குடும்பங்களும் வளமான வாழ்வை யுடைய உயர்குடிகளேயாகும்.[1] இக்காலத்திற்குப் பிறகு மடங்கள் அறிவாற்றல் நிறைந்த ஓர் அமைப்பாகவோ, மக்களாட்சிப் பண்புகள் நிறைந்த சக்தியாகவோ விளங் கவில்லை. அவர்களுடைய வருவாயில் இரவலர்க்கு என்று உண் மையில் அறத்திற்காகச் செலவிடப் பெற்ற தொகையின் விகிதம் மிகக் குறைவாக இருந்தது. கடந்த காலத்தில் ஆங்கில நாட்டு மடங்கள், காலவழிச் செய்திக் கோவையினை (Chroni'cle) எழுது வதில் சிறப்புற்று விளங்கின. ஆனால், இக்காலத்தில் மடங்கள் அதை மறந்தே போய் விட்டன. வேறு எத்தகைய அறிவாராய்ச் சிக்குப் பயன்படும் செயல்கள் ஒன்று கூட மடங்களில் நடை பெறுமற் போயிற்று. கோலட் (Colet), மூர் (More), எராஸ்மஸ் (Erasmus) ஆகியோருக்குத் துறவிகள் சீர்திருத்த எதிர்ப்பாளர் களாகவே தோற்றம் அளித்தனர்; சோதரர்கள் மக்களுடைய மிக இழிந்த மூட நம்பிக்கைகளைத் தங்கள் தன்னலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளுவதையே நோக்கமாகக் கொண்ட தன் னலக்காரர்களாகவே காட்சி அளித்தனர். மறுமலர்ச்சி இயக் கத்தின் பயனைக் கிரேக்க ரோமானிய நாட்டு இலக்கியங்களி டத்தும், விவிலியத்திடத்தும் மீண்டும் மக்களுக்கு உண்டான ஈடு பாடும், அறிவாராய்ச்சியும், மடங்களில் சென்று எதிரொலித்த தாகவே தெரியவில்லை. துறவிகளிடத்து உடலுழைப்பு என்பதே இல்லாமற் போயிற்று. முற்காலத்தில் மக்களிடையே அவர் களுக்குப் பெரும் செல்வாக்கைத் தேடித்தந்த துறவற வாழ்க்கை யினை, அவர்கள் போற்றிப் பின்பற்றி வாழ்ந்து காட்டவில்லை. சிற்சில சமயங்களில் மடங்களைப் பற்றியும், கன்னி மடங்களைப் பற்றியும் அவதூறான கருத்துகள் நாட்டு மக்களிடையே நட மாடின. சமய நிலையங்கள் கலைக்கப்பட்ட பிறகு, சமயவாழ்வினை மேற்கொண்ட மக்கள் அனைவரும் கொடிய குற்றங்கள்

[1] இக்கருத்தினைப் பற்றி விளக்கம் பெற, பேராசிரியர் செவைன் (savine) எழுதியுள்ள 'ஆங்கிலேய மடங்களின் கலைப்பு' 'English Monasteries at the Dissolution' என்ற நூலில் பக். 240-5 ஐயும், பக். 263-7 ஐயும் காண்க, (கிளார. அச். 1909). ஆங்கிலேயக் கன்னி மடங்களைப் பற்றி குமாரி பவர் (Miss Powers) எழுதியுள்ள 'இடைக்கால இங்கிலாந்தின் கன்னிமடங்கள்' (Mediaeval English Nunneries) (1922) என்ற நூலில் காண்க. இடைக்கால இங்கிலாந்தில் 2000 கன்னிப் பெண் துறவிகளுக்கு மேல் இருந்திருக்க மாட்டார்கள்.

செய்யாது, கவலையற்ற சொகுசுமிக்க இன்பவாழ்க்கையில் ஈடுபட்டுத் தங்களைச் சூழ்ந்திருக்கின்ற மக்களுக்கு எத்துணையும் பயனில்லாது வாழலாயினர். பல தலைமுறைகளாகப் புனிதமான அறக்கட்டளைகள், மடங்களின் அறச்செயல்களுக்குப் பயன் படுத்தப்படாது, குருக்கள் மானியங்களிலும், வேறு பல இடங் களிலும் சென்று குவிந்தன. மூன்று நூற்றாண்டுகளுக்குள் துறவி களின் எண்ணிக்கை கால்பங்கு குறைந்து விட்டது. மடங்கள் கலைக்கப்பட்ட காலத்தில், சற்றேறக்குறைய 7000 துறவிகளே இங்கிலாந்தில் இருந்தனர். ரோமாபுரியோடு கொண்டிருந்த தொடர்பினை இங்கிலாந்து அறுத்தெறிவதற்குப் பல ஆண்டு களுக்கு முன்பே, மடங்களை அடக்கி யொடுக்க வேண்டும் என்ற இயக்கத்தினை இங்கிலாந்தில் வைதிகப் பாதிரிமார்களும் கார் டினல்களும் தொடங்கி நாடு முழுவதிலும் பரப்பி வந்தனர்.

துறவிகளினுடைய அறக்கட்டளைகளைப் புதிய காலத்திற்குகந்த முறையில், பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில், செயற் படுத்துவதற்குச் சிறந்ததொரு காரணம் இருந்தது. போப்பு ஆண்டவருடைய தொடர்பு உடைத்தெறியப்பட்டது நிலைத்து நிற்கும் என்பது உறுதியானால், அவருடைய படைகளாக விளங்கும் துறவிகளுடைய மடங்களும், மடாலயங்களும் கலைக்கப் பட்டாகவேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை தோன்று வதற்கு இடமே இல்லை. ஆனால், போதிய சான்றுகளில்லாமல் உட்குடிகளிடம் வரி தண்டியமையும்,[1] கிளாஸ்டன்பரி மடாலயத் தலைவரை (Abbot) நீதிமுறைப்படி கொலை செய்தமையும், சமயத் தோடு தொடர்புகொண்ட வேறு பலரைக் கொன்று அவர் களுடைய உடைமைகளை விரைவில் கைப்பற்றிக் கொண்டமை யும், அவற்றை அப்படியே தனி மனிதர்களுடைய கைகளுக்குச் செல்லுமாறு விற்று, தற்காலிகமாக அரசாங்கத்தின் கரு வூலத்தை நிறைத்துக் கொண்டமையும்பற்றி நாம் ஒன்றும் உறுதி யாகக் கூறுவதற்கில்லை.

[1] மடங்கள் அக்காலத்தில் எத்தகைய சீர்கேடான நிலையிலிருந்தன என்பதை அறிவதற்கு எட்டாம் ஹென்றியின் ஆணையர்கள் அக்காலத் தில் வெளியிட்ட அறிக்கைகளால் தெரிகிறது. வரலாற்றாசிரியர்கள் ஒருவரும் மடங்களைப் பற்றிய அவ்வறிக்கைகளைப் படித்துப் பார்க்கா மலே, மடங்களைப்பற்றி எழுதியுள்ளனர். ஆனால் அவ்வாணையர்களின் அதிகாரத்திற்குட்பட்டிருந்த மடங்களின் நடைமுறைகளைப் பற்றிய ஏரா ளமான நற்சான்றுகள் மடங்களின் ஆட்சி அறிக்கைகளில் காணப் படுகின்றன. இதன் மிகச்சிறந்த சுருக்கத்தை டானரின் 'அரசியலமைப்பு ஆவணங்கள்' (Tanner: Constitutional Documents) என்ற நூலில் பக். 50-7 யைப் பார்க்க.

இடைக்காலச் சமுதாய அமைப்பும், நிலமானியப் படைமுறையும் நிலைபெற்று விளங்கிய லிங்கன்ஷையர், யார்க்ஷையர் முதலிய பகுதிகளிலும், வட எல்லைப்புற மாவட்டங்களிலும் இன்னும் துறவிகள் போற்றப்பட்டனர்; பழைய சமயமும் அன்புடன் போற்றப்பட்டது. இதன் விளைவாக கி.பி.1536-ல் தோன்றிய கிளர்ச்சியே 'அருளாளர்களின் திருப்பயணம்' (Pilgrimage of the grace) என்னும் பெயர் பெற்றது. காவற்படையைச் சேர்ந்த சில உழவர்களைத் தவிர, ஹென்றியிடத்துப் பெரியதொரு படைகிடையாது. அந்நிலையில் நாட்டின் மற்றப் பகுதிகளும் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்திருக்குமானால், அல்லது நாட்டுமக்கள் அவருக்குத் தங்கள் ஒருமித்த ஆதரவைத் தந்துதவாமலிருந்தால், ஹென்றியின் ஆட்சி விரைவில் வீழ்ச்சி யுற்றிருக்கும். இல்லையானால் அவர் தம்முடைய சமயக் கொள்கையையாகிலும் மாற்றிக் கொண்டிருப்பார். ஆனால் லண்டன் மாநகரும், இங்கிலாந்தின் தென்பகுதியும், நடுப்பகுதியும் அரசருக்குப் பேராதரவு அளித்தன. ஆதலால், வடக்கிலிருந்து வீசிய சூறாவளி மெல்ல வலிகுன்றிப் போயிற்று. பொது மக்களின் இத்தகைய போக்குப் புதியது மன்று. அரசரும் பண்பாளரும் மடங்களுக் கெதிராகப் போர் முரசு கொட்டுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, கி. பி. 1381-ல் உழவர்களும், நகர மக்களும் எழுச்சியுற்று செயிண்ட் ஆல்பன்சு, செயிண்ட் எட்மண்ட்டு முதலிய இடங்களில் கிளர்ச்சி செய்துள்ளனர்.

'சமயவுணர்வாளர்'களிடையே உண்டான பூசலைத் தீர்ப்பதற்கு, அமைதி மிக்க பிற பகுதிகளின் உதவியைத் திருச்சபை நாடியதாகவும் தெரியவில்லை. சமயச்சார்பற்ற குருமார்களிடமிருந்து அவர்களுடைய வருமானத்தில் பத்தில் ஒரு பங்கினை வரியாகவும், (Tithes), வேறு சில கடமைகளையும் தவறாமல் திருச்சபை அதிகாரிகள் தண்டல் செய்து வந்தனர். அவர்களுடைய தொழில்களோடு போட்டியிட்டும், அவர்களுடைய அதிகார வரம்பினை மறுத்தும் திருச்சபையைச் சார்ந்த துறவிகளும் சோதரர்களும் வாழ்ந்து வந்தனர். இதனால், பல நூற்றாண்டுக் காலமாகச் சமயச் சார்பற்ற குருமார்கள், துறவிகளையும் சோதரர்களையும் தங்கள் எதிரிகளாகவே கருதி வந்தனர். இவ்வாறு இங்கிலாந்தில் கத்தோலிக்கத் திருச்சபையின் இரு பகுதிகளிடையே இத்தகைய போட்டியும், பூசலும், பகைமையுணர்வும் மூண்டெழுந்தன. அப்பகைமையுணர்வு முந்தைய காலங்களைப் போன்றே, சமயச் சீர்திருத்த இயக்கத்தின் எழுச்சியின் போதும் பேராற்றல் உடையதாகவே இருந்து வந்தது. இக்காலத்தைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகள்

எல்லாம் இவ்வெழுச்சிக்கு உரிய மூலகாரணங்களைச் சிறந்த முறையில் விளக்குவதாக அமைந்தன. உலகக் குடிமக்கள் கோட்பாடுடைய நிலையங்களும், சமயச் சார்பற்ற குருமார்களின் குழுவும், மிகவும் முன்னேற்றமுற்ற பொதுமக்களைப் போன்றே தனித்து நின்ற அமைப்புகளாகும். அந்நிலையங்கள் தங்கள் பாதுகாப்பிற்கு ரோமாபுரியிலிருந்து உதவியை எதிர்பார்த்திருந்தன. ஆயினும் அவை அழிந்து போனமைக்குக் காரணம் இங்கிலாந்தில் உருவாகிய நாட்டுணர்ச்சியும், இங்கிலாந்திற்கென்று தனிப்பட்ட ஒரு தேசிய திருச்சபையை அவ்வமயத்தில் அமைத்துக் கொண்டமையுமாகும்.

அத்திருச்சபையில் சட்டத்திலோ, அமைப்பிலோ எத்தகைய மாற்றமுமின்றிப் பாதிரிமார்கள் தங்கள் பழைய இடத்தைப் பெற்றிருந்தனர். நெடுங்காலமாக அவர்கள் போப்பு ஆண்டவரின் தொண்டர்களாக இராம்ல் அரசனுடைய ஊழியர்களாகப் பணி புரிவதில் பழக்கப்பட்டு விட்டமையால், அவர்கள் போப்பிற்குப் பதிலாக அரசனைத் தங்கள் தலைவனாக ஏற்றுக் கொள்ளுவது மிகவும் எளிதாகவே இருந்தது. இடைக்காலத்திய இங்கிலாந்தின் பாதிரிமார்களுக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக விளங்கியவர் வைக்கேகத்தைச் சார்ந்த வில்லிய மாவர் (William of Wykeham); பெக்கட்டை (Becket)ச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகக் கூறுவது பொருந்தாது. அப்பாதிரிமார்கள் பணித் துறை அலுவல்களில் அனுபவமுடையவர்களாகவும், பிரிவி கவுன்சில், பாராளுமன்றம் ஆகியவற்றின் நடவடிக்கைகளில் சுறு சுறுப்புடனும் கலந்து கொண்டு திறமை பெற்றவர்களாகவும், அரசுக்கும் திருச்சபைக்கும் இடையே உண்டாகும் உரிமைப் போட்டிகளையும் பிணக்குகளையும் தீர்த்து வைப்பதில் வல்லவர்களாகவும் விளங்கினர். எனவே நாட்டிலுண்டான மாபெரும் மாற்றங்களுக்கேற்பத் தங்களையும், தங்களுடைய பதவிகளையும், மாற்றியும் திருத்தியும் அமைத்துக் கொண்டனர். ஆனல், மடாலயத் தலைவர்களுள் (Abbots) பெரும்பாலோர் தங்கள் நாட்டு மக்களின் தேசிய வாழ்க்கையுடன் தொடர்பு கொள்ளாதவர்களாக வாழ்ந்தனர். அவர்களுள் சிலரே பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொண்டனர்; ஒருவர் கூடத் தங்கள் பழக்க வழக்கங்களுக்குப் புறம்பான நாட்டு நடைமுறைகளில் கலந்து கொண்ட தில்லை. அக்காலத்தில் அதுவே அவர்களுக்குரிய இயல்பாக இருந்தது. புதிய இங்கிலாந்தில் பாதிரிமார்களுக்குப் பெரும் வாய்ப்புகளும் பதவிகளும் கிடைத்தன.

ஆனால், மடாலயத் தலைவர்களுக்கு எத்தகைய வாய்ப்பும் வசதியும் கிடைக்காமற் போயிற்று. பிரபுக்கள் சபையில் (House of Lords) பாதிரிமார்களோடு பக்கத்தில் வீற்றிருந்த மடாலயத் தலைவர்கள் எதிர்பாராவகையில் மறைந்து போயினர். அம்மன்றத்தில் ஆன்மீகத்துறையினைச் சார்ந்தோர் சிறுபான்மையோராகப் போயினர். முன்பெல்லாம் பிரபுக்கள் சபையில் ஆன்மீகத்துறையினரே பெரும்பான்மையோராக இருந்து வந்தனர் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. இம்மாற்றம் மாபெரும் சிறப்புடையதாகும்.

ஹென்றி திருச்சபையின் மாபெரும் தலைவராக அமர்ந்து நாட்டு மக்களின் சமயத்திலே பற்பல சீர்திருத்தங்களைச் செய்யத் தொடங்கினார். முதலில் ரோமாபுரியோடு கொண்டிருந்த தொடர்பினை முற்றிலும் அறுத்தெறிந்தார். போப்பு ஆண்டவரின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஐரோப்பாவோடு பிணைக்கும் சங்கிலியாக இருந்த திருச்சபை விதிகளை (Canon Law)ப் படிப்பது[1] இங்கிலாந்தில் தடை செய்யப்பட்டது. மேலும் தெய்விக ஈடுபாட்டுப் பண்பிலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஹென்றி தம்முடைய துன்பம் மிக்க தள்ளாமைக் காலத்தில், தம்முடைய இளமைப் பருவத்தில் ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த சீர்திருத்தவாதிகளிடமிருந்து தாம் கற்ற உயர்ந்த குறிக்கோள்களையும், உணர்ந்து உள்ளத்தில் இருத்திய சிறந்த இலட்சியங்களையும் செயற்படுத்த முனைந்தார். அதன் மூலம் மக்களிடையே துறவிகளும், சோதரர்களும், போப்புஆண்டவரின் ஆதரவாளர்களும் பெற்றிருக்கும் செல்வாக்கினை அழித்தொழிக்க முயன்றார். கோலட்டும் எராஸ்மஸும் வன்மையாகக் கண்டித்து வந்த நினைவுச் சின்ன வழிபாடும், உருவ வழிபாடும், பாவ மன்னிப்பினை நாடியலைதலும் மக்களிடையே பெருவழக்காக உள்ள மூட நம்பிக்கைகளும், கடவுளின் பெயரால் செய்யப்படும் மோசடிகளும் போன்ற பலவற்றை ஹென்றி தம்முடைய அரசின் அதிகாரத்தைக்கொண்டு அடக்கியொடுக்கினார். நாடு முழுவதிலும் இருந்த நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டன; அற்புத நிகழ்ச்சிகளைச் செய்யும் தெய்வ வடி

1 சமயச் சீர்திருத்த இயக்கத்தின் மறைமுகமான விளைவாகத் திருச்சபை முறை மன்றங்களின் உரிமைகள் குறைக்கப்பட்டன. மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளில் அவற்றிற்கிருந்து வந்த அதிகார வரம்பும் சுருக்கமுற்றது. இதற்குச் சான்றாக ஆள் பழிப்புக் குற்றமும், அவதூறு வழக்குகளும் விசாரிக்கப்படுவது மெல்ல மெல்ல டியூடர்கள் காலத்திலும், ஸ்டூவர்ட்டுகள் காலத்திலும் பொது நீதிமன்றங்களின் கடமையாக மாறலாயிற்று. பார்க்க: ஹோல்ட்ஸ் வர்த்து (Holdsworth) III. 410-11, V. 205-6.

வங்கள் எடுத்தெறியப்பட்டன. அவற்றின் காட்டுமிராண்டித் தனமான இயல்புகள் அனைத்தும், மக்களின் அறியாமையை அடிப்படையாகக் கொண்டு வியக்கதக்கதாக அமைக்கப்பட்டிருப்பதைப் பகுத்துப் பகுத்து, மக்கள் முன்னிலையில் வைக்கப்பட்டன. 'நாடெங்கும் வேதாளங்கள் வீழ்ச்சியுறுகின்றன. பாபிலோனின் கண்டாமணி தூள்தூளாக உடைக்கப் பெற்றது' என்று சீர்திருத்தக்காரர்கள் முழங்கினர். தாமஸ் பெக்கட்டின் (Thomas Becket) திருக்கோயிலும் வழிபாட்டு நெறியும் — அன்று வரை ஆங்கிலேய மக்களின் புனித யாத்திரைத் தலமாக இருந்து வந்த நிலைமை மாறி — எளிதில் முழுவதும் அழித்தொழிக்கப்பட்டது. இப்புதுமைக் காலத்தில் 'தூய பேரின்ப வாழ்வினை அடைந்த உயிர்த்தியாகி' என்று பெக்கட்டைப் போற்றி வந்தமைக்கு மாறாக, 'நற்பயன் அளிக்கத்தக்க சட்டங்களை ஒழிப்பதற்காகத் தாய்நாட்டிலிருந்து பிரான்சிற்கும், ரோமாபுரிப் பாதிரியிடத்தும் ஓடிப்போன கலகக்காரன்' என்று மக்கள் அவரை இழித்தும் பழித்தும் பேசலாயினர்.

இதற்கிடையே பெருந்திரளான பொது மக்களின் சமய இயல்பூக்கத்தினைக் கிளர்ந்தெழச் செய்வதற்குப் புதிய முறை முறையில் கிரான்மரின் முயற்சியால் வேண்டுகோளொன்று விடப்பட்டது. தலைமைப் பாதிரியாரே தமக்கென்று ஆங்கிலத்தில் ஒரு வழிபாட்டு நூலிற்குரிய முறைகளை வகுத்து கொண்டிருந்தார். அடுத்த அரசரின் ஆட்சிக் காலத்தில் தொகுக்கப்பட்ட 'வழிபாட்டு நூலில்' (Prayer Book) அவை சிறப்பிடம் பெற்றன. ஆனால், இதற்கிடையில் ஹென்றி பாதிரிமார்களையும் குருமார்களையும் தங்கள் வழிபாட்டுத் திருக்கூட்டங்களிலும், தந்தைமார்கள் தங்கள் குழந்தைகளுக்கும், 'எம்பெருமானின் வேண்டுகோளையும்' (Lord's Prayer), கட்டளைகளையும், சமய விதிகளையும் (Articles of faith) ஆங்கிலத்தில் ஓதுமாறும், ஓதுவிக்குமாறும், பயிற்றுவிக்குமாறும் கட்டளையிட்டார். இவை எல்லாவற்றையும் விட, கிரான்மரின் தூண்டுதலின் பேரில் ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட விவிலிய நூலின் பிரதிகள் மக்களிடையே தங்கு தடையின்றிப் பரவுவதற்கு ஹென்றி அனுமதி அளித்தார். அத்துடன் நாட்டின் ஊர்வட்டாரங்கள் (Parish) ஒவ்வொன்றிலுமுள்ள திருச்சபைகளில் விவிலிய நூல் கட்டாயம் பொதுமக்கள் படிப்பதற்காக வைக்கப்பட வேண்டும் என்று ஹென்றி ஆணையிட்டருளினர். இதன் பயனைச் சிறந்த அறிஞரும் உயிர்த்தியாகியுமான டைண்டேலும் (Tyndale), அவருக்குப் பின்வந்த மைல்ஸ் கவர்டேலும் (Mlies coverdale) ஆகிய இருவரின் மொழி பெயர்ப்

பாகிய விவிலிய நூல் மக்களிடையே பரவியது. அதனால் 'ஒவ்வொரு தொழிலாளியும்' ஏர் உழும் உழவரின் சிறுவர்களும், எளிதில் கற்றுணரவேண்டும் என்று அன்று டைண்டேல் கண்ட கனவு இன்று நினைவாயிற்று. திருச்சபைக்குச் செலுத்தப்பட்டு வந்த மானியத்தை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் தாக்குதல்கள் தோன்றின. இவ்வாறு இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்த இயக்கம் திருச்சபைக்குச் செலுத்தப்பட்ட மானியத்தை எதிர்த்துத் தோன்றிய பாராளுமன்றத் தாக்குதல்களில் தொடங்கியது. மடாலய நிலங்களின் மீது அரசின் திடீர் தாக்குதல்களாகத் தொடர்ந்தது; இறுதியில் விக்கிளிப் (Wycliffe) கண்ட கனவைப்போல, சமய சித்தாந்தங்களிலும், பொதுமக்கள் கற்றுணர்ந்த அறிவினிலும் சமயத்தின் அடிப்படையைக் கண்டது. இதன் பயனாக மேரியின் துன்புறுத்தலின் பொழுது, அதனைச் செம்மார் (செருப்பு தைப்போர்) களும் ஆடைநெய்வோரும், துணிவிற்போரும், ஏழை மகளிரும் தாங்கள் முதலில் தெளிவாக உணராத குறிக்கோள் ஒன்றிற்காகத் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் உளமார வழங்குவதற்கு முன்வந்தனர். இதற்கேற்ற உள்ள உரத்தையும், கொள்கையில் உறுதியையும் சமயச் சீர்திருத்த இயக்கம் மக்களுக்கு அளித்தது.

இவ்வாறு, ஹென்றி சீர்திருத்தம் என்னும் கடலினுள் இறங்கிய பிறகு, வெள்ளத்திற்குச் சட்டத்தின் மூலம் வரம்பு கட்ட முயன்றார். போப்பு ஆண்டவருக்கு எதிராக ஜெர்மனியிலிருந்து கிராம்வெல் கொண்டு வந்து சேர்த்தவளும் கிளாவெசைச் சேர்ந்தவளுமான ஆன் (Anne of Cleves) என்னும் ஆரணங்கை ஹென்றி பிற்காலத்தில் மணம் புரிந்து கொண்டிருந்தார். அவ்வம்மையாரின் அருவருப்பான போக்கும், ஐரோப்பிய நாடுகளைப் பற்றிக்கொண்டிருந்த அயல் நாட்டுக் கொள்கையினால் உண்டான தீமையும் ஒன்றாகச் சேர்ந்து, நாட்டின் செயல்கள் அவருடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டனவாய் விட்டன அல்லது அவருடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்ட நிலையை மிக விரைவில் அடைந்து கொண்டிருக்கின்றன என்பதை ஹென்றிக்கு நினைவுறுத்தின. கிராம்வெல் தலைவாங்கப்பட்டார். இதற்கு முன்பே ஆறு விதிச் சட்டம் (Act of Six Articles), பொருள் மாற்றத்தை (Transubstantiation) மறுப்பவர்கள் தூக்கிலிடப் பெறுவர் என்று எடுத்துரைத்தது; கழுவாயினை விரும்பி சமயக் குருமார்களின் காதுகளில் தாங்கள் செய்த பழி பாவங்களைக் கூறி மன்னிப்பு (Auricular Confession) வேண்டுவோரும் சமயக் குருமார்கள் பிரமசரியம் மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்து

வோரும் கொலைத் தண்டனை பெறுவர் என்றும் அறிவித்தது. லண்டன் மாநகரில் ஒரு மனிதன் வெள்ளிக்கிழமையன்று இறச்சியினைத் தின்றதற்காகத் தூக்கிலிடப்பட்டான். ஒழுங்கற்ற முறையில் சிந்தனையின்றிப் புராடஸ்டண்ட்டுகளைக் கொளுத்துவது மெல்ல மெல்ல அமைதியாகத் தொடர்ந்து நடந்து வந்தது. லாட்டிமர் ஓய்வு பெற்றுத் தனி வாழ்க்கை நடத்துவதற்கு அனுமதி தரப் பெற்றார். ஆனால் கிரான்மர் தலைமைக் குருவாகவே (Archbishop) தொடர்ந்து இருந்து வந்தார். அது கொள்கையிலே உண்டான நேர்மாறான திருப்பம் அன்று; கொள்கையில் உண்டான ஊசலாட்டமேயாகும். ஹென்றியின் ஐந்தாம் மனைவியான காதரைன் ஹோவார்ட்டு (Catherine Howard) எனப்பட்ட ஆன் பொலீன் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவளாக இருந்தமையால் அவளிடமும் இத்தகைய குறைபாடுகள் இருந்தன. எனவே அவளுக்கு முன்மாதிரி மரபாக அமைந்த புராடஸ்ண்ட்டு மனைவியரைப் போலவே அவளும் தூக்கிலிடப் பெற்றாள். ஹென்றியால் கொலை செய்யப்படாது தப்பியதனால் புகழ் பெற்று விளங்கும் காதரைன் பார் (Catherine Parr) சீர்திருத்தக்காரர்களை விழிப்புணர்ச்சியுடன் ஆதரிக்கும் திறமிக்கவளாய் விளங்கினாள். அதே சமயத்தில் அரசனின் சமயக் கொள்கை எல்லை மீறிப் போகாது கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையவளாகவும் இருந்தாள்.

ஹென்றி மேற்கொண்டு இன்னும் எத்தகைய மாற்றங்களும் உண்டாகாதவாறு தடுப்பதில் உண்மையிலேயே கருத்துடையவராக இருந்தார். சமயத்தைப் பற்றி இறுதியாக — குறைந்தது தற்காலத்திற்கேனும் — அரசருடைய அருளினால் உறுதியாக முடிவு செய்யப்பட்டமையால், சமயத்தைப் பற்றி இயல்பாகவே வாதம்புரியும் மக்களையும் அச்சுறுத்தி, அவர்கள் வாயை மூட விரும்பினார். இதற்கிடையே மக்கள் விவிலியத்தைப் படித்தனர்; அமைதியாக அவர்கள் விரும்பியதை எல்லாம் ஆழ்ந்து சிந்தித்து வந்தனர். ஆறு விதிச் சட்டம் (Act of six Articles) நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டபொழுது வாழ்ந்த மக்களுள் பெரும்பாலோர் போப்பினை ஆதரிப்பவர்களாகவோ, புராடஸ்டண்டுகளாகவோ இருக்கவில்லை. எனவே மேலும் சமயப் பொறையுடைமையில் அவர்களுக்கு நம்பிக்கை எழாமையாலும், அது மக்களுடைய ஆதரவைப் பெற்றது. அச்சட்டம் கடுமையாகவோ, முறையாகவோ நடைமுறையில் செயற்படுத்தப்படவில்லை. குடிமக்களுடைய பொதுவான விருப்பங்களோடு இன்னும் ஹென்றி தொடர்பு கொண்டிருந்தார். அவருடைய ஆட்சிக் காலத்தின் இறுதி ஆண்டுகளிலும், பகையான அயல்நாட்டு வல்லரசுகளை

எதிர்ப்பதற்குத் தன் குடிமக்களின் உறுதியான ஆதரவைப் பெற்றிருந்தார். ஆனால் காலம் கட்டாயமாக மாறவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. வேறொரு துறையில் முன்னேறுவதற்காக அவர் நகர்ந்து கொண்டிருப்பதற்குரிய அறிகுறிகள் தோன்றின. அதற்கு முன்பே இங்கிலாந்தின் வேந்தரை அழைப்பதற்குரிய ஆன்மீகப் பேராற்றலையும், பெரும் திறமையையும் உடைய பரம்பொருள் கி. பி. 1547-ல் ஹென்றியை அழைத்துச் சென்றார்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

லண்டன் மாநகரும் மக்களின் கிளர்ச்சியும் — மதகுருமார்களின் எதிர்ப்பு இயக்கமும், கத்தோலிக்க சமய எதிர்ப்பு இயக்கமும் — கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகச் சீர்திருத்தக்காரர்கள் — கிரான்மர் — மறைவிலக்கு பிரச்சினை — போப்பிற்கு எதிராகத் தோன்றிய புரட்சி— குருமார்களின் மனப்பான்மை— பாராளுமன்றமும் சீர்திருத்த இயக்கமும் — பாராளுமன்றத்தில் அரசு — மடங்களின் கலைப்பு — மூட நம்பிக்கையை எதிர்த்து நிகழ்ந்த போர் — ஆங்கில மொழியில் எழுதப்பட்ட விவிலியம்— எட்டாம் ஹென்றியின் மறைவு.

### மேற்கொண்டு படிப்பதற்குரிய நூற்கள்

1. பொலார்டு : (Pollard)
   (a) Henry VIII
   (b) Cranmer and wolsey.
2. சாம்பர்ஸ், R. W : (R. W. Chambers)
   Thomas more.

இப்பிரிவின் முதலியல் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள நூற்களையும் பார்க்க.

### துறவிகள் நிலக்கிழார்களாக இருந்ததைப் பற்றிய குறிப்புகள்
(அடிக்குறிப்பு : பக். 688)

கி. பி. 1517-ல் உல்சி வெளியிட்டு அடைக்கப்பெற்ற நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேட்டைத் தயாரித்தார். அதனை மிகவும் ஆழ்ந்து படித்துப் பகுத்து ஆராய்ந்த திரு. லெட்டாம்

(Leadam) புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு பின் வரும் முடிவிற்கு (I, பக். 48-9, 263) வந்துள்ளார். 'நிலக்கிழார்கள் குடியானவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றினார்களா? அல்லது குத்தகைக்காரர்கள் அவ்வாறு செய்தார்களா? என்பதை நாம் புறக்கணித்தாலும் பிற்காலத்திய தலைமுறையினர் திருச்சபை, மடங்கள் ஆகியவற்றின் நிலங்களைப் பயிரிடுபவர்களுக்கு மிகச் சிறந்த பாதுகாப்பு இருந்ததாக நம்பியதற்குப் போதிய சான்றுகள் இல்லை என்று உறுதியாகக் கூறலாம்.' எனவே, மடங்கள் சிறப்புற்றிருந்த காலத்திலும், நல்ல நிலக்கிழார்கள் என்னும் மதிப்புடையவர்களாக மடத்தினர் இருந்ததில்லை என்பது புலனாகின்றது. ஆனால் பிற்கால மக்களிடையே அத்தகைய எண்ணம் எவ்வாறோ ஆழப் பதிந்துவிட்டமை தெரிகிறது.

சர் தாமஸ் மூரின் (Sir Thomas More) 'உடோப்பியா' (Utopia) என்னும் 'கற்பனை உலகில்', 'செல்வர்களும், பண்பாளர்களும், சில மடாலயத் தலைவர்களும், தங்கள் மூதாதையர்களுக்கும், முன்னோர்களுக்கும் நிலத்திலிருந்து வழக்கமாகக் கிடைத்த வருவாயும் ஆதாயமும் போதியதாகத் தோன்றாததால் அவர்கள் மனநிறைவற்றவர்களாகவே இருந்தனர். ......அதனால் பயிரிடுவதற்கு அவர்கள் நிலத்தை விடவில்லை. எல்லா நிலத்தையும் புல்வெளிகளாக மாற்றி வேலியடைத்தனர். அங்கிருந்த வீடுகளையும், ஊர்களையும் அவர்கள் அழித்தொழித்தனர். திருச்சபையைத் தவிர மற்ற இடங்களில் வேறொன்றும் இருக்க விடாது, எல்லாவற்றையும் அழித்து, அவ்விடங்களை ஆட்டுக் கிடைகளாக மாற்றினர்.'

இப்பொருளைப் பற்றி நன்கு அறிய வேண்டுமானால் பின் வரும் நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

1. பாஸ்கர்வில்லே, ஜி. : (G. Baskerville)
English Monks and the Suppression of the Monasteries (Cape, 1937)

2. சால்ட்டர், எச். ஜி : (H. G Salter) Editor
Eynsham Cartulary (Clarendon Press)
இந்நூலின் முடிவுரையைத் தவறாது படிக்கவும். (பக். 20)

3. டானி : (Tawney)
Agrarian Problems in the 16th Century, pp. 382-3.

4. சவைன், எ. : (A. Savine)
English Monasteries on the eve of the Dissolution, (Clarendon Press)

5. சினேப்பு, R. H.: (Snape. R. H)
English Monastic Finances (Cambridge Press)

6. லெட்டாம் : (Leadam)
Domesday of Enclosures, (Royal. Hist. Soc.)

7. டானர் : (Tanner)
Constitutional Documents pp. 50-7.

8. பிஷர், H. A. L : (H. A. L. Fisher)
Political History
(இடையிடையே சில பகுதிகளை மட்டும் படித்தால் போதும்)

இவை அனைத்தையும் கார்டினல் காஸ்கியுட்டு (Cardinal-Gasquet) எழுதியுள்ள Henry VIII and the English Monasteries என்னும் நூலுடன் ஒப்பிட்டுப் படிக்க வேண்டும். இடைக்காலம் முழுவதிலும் ஐரோப்பாவிலிருந்த குடியானவர்களுக்கும், திருச்சபைக்கும் மடாலயங்களுக்கும் இடையே இருந்துவந்த தொடர்பையும், மடாலயங்களும் திருச்சபைகளும் பண்ணைகளைப் பற்றிக் கொண்டிருந்த கொள்கைகளையும் பற்றிப் பொதுவான சிறந்தொரு மதிப்புரையை ஜி. ஜி. கோல்டன் (G. G. Coulton) எழுதியுள்ள 'Mediaeval Village' (Cambridge Press, 1925) என்னும் நூலிலும், 'Five Centuries of Religion' என்னும் நூலிலும் காணலாம்.

## இயல் 4

# புராடஸ்டண்ட்டுகளும் கத்தோலிக்கர்களும்

**அரசர் :**

| | |
|---|---|
| ஆறும் எட்வர்டு, | 1547 — 1553. |
| முதலாம் மேரி, | 1553 — 1558. |

பொறுமை மிக்க ஏழாம் ஹென்றியின் திறமையும், எட்டாம் ஹென்றியின் பேரரசினை நிறுவும் ஆர்வமும் தற்கால இங்கிலாந்திற்கு நல்லதொரு அடிப்படையை அமைத்துத் தந்தன. நாட்டிலே அமைதி நிலைநாட்டப் பெற்றது. பிரபுக்களும், அவர்

களுடைய உரிமை ஏவலாளர்களும் அடக்கி யொடுக்கப்பட்டனர். இங்கிலாந்தின் ஒவ்வொரு மூலையிலும் அரசரின் ஆலோசனை மன்றமும் பாராளுமன்றமும் அரசரின் ஆட்சியை நன் முறையில் நடத்துவதற்குப் பேருதவியாக இருந்தன. வேல்ஸிலும் அரசரின் ஆட்சிநடைபெற்றது என்றால்,மற்றப் பகுதிகளைப் பற்றிச் சொல்ல வும் வேண்டுமோ?[1] இக்காலத்தில் முதன் முதலாக அரசாங்கக் கப்பற்படை அமைக்கப்பட்டது. ஐரோப்பாவிற்கு எதிராக இங்கிலாந்தின் ஆன்மீக உரிமையும், சமயச் சார்பற்ற உரிமையும் நிலை நாட்டப்பட்டது. திருச்சபைக்கும் அரசுக்கும் இடையே இருந்து வந்த தொடர்பில், பாமர மக்களால் உண்டாக்கப் பட்ட புரட்சி வெற்றி பெற்றது. இவையாவும் செய்து முடிக்கப் பெற்றது. ஆனால் அவை கட்டிக் காக்கப்படாமற்போயிற்று. எட்டாம் ஹென்றி இறந்தவுடன், அரசு பெரும் கடனாளியாக மாறியது ; அரசாங்கம் வெளியிட்டு வந்த நாணயத்தின் மதிப்பு, குறைந்து போயிற்று. ஹென்றி வன்முறைச் செயல்களால் அடக்கி யொடுக்கிய சமயப் பூசல்கள், மீண்டும் புதிதாகப் பெரும் மூர்க்கத்தனத்தோடு கிளர்ந்தெழுந்தன. திறமையாகவும், சிக்கனமாகவும் நாட்டினை ஆட்சி புரியவில்லை என்றால், டியூடர் கள் ஆற்றிய அரும்பணி அனைத்தும் அழிக்கப்பட்டு விடும் என்று அஞ்சத்தக்க நெருக்கடி நிலை உண்டாயிற்று. நாட்டிலே புதி தாகத் தோன்றியுள்ள அரசாங்கத்திருச்சபை ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் புதியதொரு சமயக்கோட்பாட்டினை உருவாக்கி, மக்களிடத்து அதைப் பரப்பவேண்டும். இல்லை என்றால், நாட்டிலே உள்நாட்டுப் போர் உண்டாகும். அதையடுத்து கலகமும் குழப்பமும், எதிர்ப்புப் புரட்சியும் தோன்றும். அவற்றை அரசு அடக்கி யொடுக்குதல் அரிய செயலாகப்போய் விடும் என்ற அச்சம் நாட்டு மக்களிடையே குடி கொண்டிருந்தது. இத்தகைய பெருஞ்சிக்கல்களை எல்லாம் முடிவாக எலிசபெத்து அரசி தீர்த்து வைத்தார். அவள் அறிவாற்றல் வாய்ந்தவளாக, ஆனால் ஓரளவிற்குச் சமயப் பற்றில்லாதவளாக இருந்தாள். எனி னும், தன்னுடைய தகப்பனார் இறந்ததற்கும், தான் அரசியாவதற் கும்இடைப்பட்டபன்னிரண்டு ஆண்டுக் காலத்தில்அவள் நாட்டின் ஆட்சி மடையர்களின் கையிலும், வீரதீரத் துணிவுமிக்கவர்களி டத்திலும், அயல் நாட்டவரிடத்தும், வெறியர்களிடத்தும் சிக்கிச் சீரழிந்ததைக் கண்டாள். அவர்களுடைய கொடுங்கோல் ஆட்சி யில் டியூடர் மரபைச் சார்ந்த அரசர்கள் ஆற்றிச் சென்ற அரும் பணிகள் அனைத்தும் அழிவினை நெருங்கிக் கொண்டிருந்தது. அவர்கள் இங்கிலாந்தினைச் சிறப்பற்ற மூன்றும் தர அரசாக

[1] வெல்ஷ் சிக்கலை எட்டாம் ஹென்றி தீர்த்ததைப் பற்றிய விளக் கத்தை இப்பிரிவின் ஏழாம் இயலில் காண்க.

மாற்றி விட்டுச் சென்றனர். அவர்கள் இங்கிலாந்தைச் சமயப் பூசலால் ஒற்றுமையற்ற பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும் உடைய நாடாகப் பாழாக்கி விட்டுச் சென்றனர்.

ஆயினும், இச்சிறப்பற்ற காலத்திலும் பெரும்பயன் தரத் தக்க விளைவுகள் உண்டாயின. சமயக் கட்சிகளும், ஆராய்ச்சிக்குரிய சமயக் கருத்துகளும், மிகத் தெளிவாக வரையறுக்கப் பட்டன. ஹென்றியின் புதுமைச் சமய நெறிக் கோட்பாடு, நிலையாக மக்களுடைய உள்ளத்தைக் கவரவில்லை. ரோமாபுரியுடன் மறுபடியும் சேர்வதைப் பற்றியும், புராடஸ்டண்ட்டு சமய நெறியினைப் பின்பற்றி முன்னேறுவதைப் பற்றியும் நாட்டு மக்கள் ஆராய்ந்து முடிவுகாண வேண்டியவர்களாக இருந்தனர். அதே சமயத்தில் போப்புக்கு எதிராக எழுந்த தேசிய உணர்வும், ஸ்பெயினின் ஆதிக்கத்திற்குட்படாது உரிமையோடு இங்கிலாந்து விளங்கவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தியது. எட்வர்ட்டு காலத்தில் தயாரிக்கப்பட்ட வழிபாட்டு நூலும், மேரியின் காலத்து உயிரிழந்த புராடஸ்டண்டு உயிர்த் தியாகிகளின் வரலாறும் ஆங்கிலேயச் சீர்திருத்த இயக்கத்தினைப் புதிய அறிவாற்றல்களிலும், அறவியல் நிலையிலும் மேன்மையுறச் செய்தது. கி. பி. 1559–ல் எலிசபெத்துப் பேரரசி, சமயத்தில் நிலையான ஓர் உடன்பாட்டினைக் காண அது உதவியது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்புவரை, நாட்டிலே குழப்பமும், பிரிவினை மனப்பான்மையும் சேர்ந்து பேரழிவினை உண்டாக்கின. அவற்றிற்கிடையே எத்தகைய மனிதனுடைய அறிவாற்றலும் செய்ய முடியாத மாபெரும் சாதனையைச் சாதித்த பெருமை அப்பேரரசிக்கே உரியதாகும்.

ஜேன் ஸெய்மோருக்கும் (Jane Seymour), எட்டாம் ஹென்றிக்கும் பிறந்த பிள்ளையே ஆறும் எட்வர்ட்டாக (கி. பி. 1547-1553) அரசு கட்டில் ஏறினர். அவர் இளமை முதற்கொண்டே நோயாளியாக இருந்தார். அவர் வயதுக்கு மிஞ்சிய அறிவாற்றலும், நேர்மையும், கண்டிப்பும் உடையவராகவும், தம் தகப்பனைரக் காட்டிலும் பெரிதும் மனச்சான்றிற்கு அஞ்சி நடப்பவராகவும் காணப்பட்டார். ஆனல் அவர் இரக்கம் அற்றவராக இருந்தார். இந்த அளவிற்குத்தான், பதினறு வயதிற்குள் இறந்து விட்ட ஒருவரைப் பற்றி நாம் முடிவு செய்ய முடியும். அவர் நெடுங்காலம் வாழ்ந்திருந்தால், அவருடைய மாற்றாந்தாய் மகளான மேரி கத்தோலிக்க சமய இயக்கத்தினைப் பாழாக்கியதைப் போல, இவரும் சீர்திருத்த இயக்கத்தை விரைவு படுத்துவதன் மூலம் அழித்தொழித்திருப்பார். அவர் வாழ்ந்தவரை,

அவர் பெயரால் இருவர் அரசினை நடத்தி வந்தனர். முதலாவதாக அவருடைய அம்மான் செய்மோ (Seymour)ரும், காவலராக விளங்கிய வெறி பிடித்த இலட்சியவாதியான சாமர்செட்டும் அரசரின் பேரால் இங்கிலாந்தை ஆண்டு வந்தனர். அவருக்குப் பிறகு, ஜான்டட்லி என்ற வார்விக்கு கோமகன், தன்னல வெறியைத் தவிர வேறு எத்தகைய குறிக்கோளும் இல்லாமல் வாழ்ந்தார். அவரே நார்த்தம்பர்லாந்தின் கோமகனுகவும் ஆக்கப்பட்டார். அவருடைய காப்பரசு காலத்திய ஆட்சியில் கொடுஞ்செயல்கள் பல செய்யப்பட்டன.

ஆனல், எட்வர்ட்டின் ஆட்சிக்காலம் பயனற்றுப் போகாதவாறு சமயத் துறையில் தங்கிகரற்று விளங்கிய இரு பெருந் தலைவர்கள் சிறந்த பணியாற்றியுள்ளனர். ஆர்ச்பிஷப்பு கிரான்மர் வழி பாட்டு நூலினை (Prayer Book) இயற்றினர், அவர் இலத்தீன் மொழியிலிருந்து, டியூடர் காலத்திய தூய ஆங்கிலத்தில் அதை மொழி பெயர்த்தார். அவர் பழமையும், புதுமையும் ஒருங்கியைந்து போகுமாறு செய்தார். நாட்டு மக்களுள் ,பெரும்பாலோர் உள்ளப் பாங்கினையும், உயர்ந்த உணர்வையும் தொடுமாறு வேண்டுகோள் விடுத்து அவர் வெற்றி பெற்ருர். இவ்வாறு இவர் அறை கூவி அழைத்து ஒன்று சேர்க்காமல் போயிருந்தால், அப்பெரும் பான்மையான மக்கள் முரண்பட்ட கருத்துடையவராய்த் தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டிருப்பர். இதனல், அரசருக்கு எதிராகத் தோன்றிய புரட்சி, மதகுருமார்களுக்கு எதிராகத் தோன்றிய புரட்சி ஆகியவற்றின் எச்சமாக இங்கிலாந்தின் திருச்சபை இராது, சிறப்பு மிக்கதாக மாறியது. இங்கிலாந்து நெடுங்காலமாகத் தீவிரமாகத் தமக்கென ஒரு தனிப்பட்ட சமயச் சூழ் நிலையை அமைத்துக் கொள்ள அலைந்து கொண்டிருந்தது. அதற்கேற்ற சூழ்நிலையை இக்காலத்தில் தான் இங்கிலாந்து அமைத்துக் கொள்ள முடிந்தது. ‘வழிபாட்டு நூல்’ இறுதியாக எலிசபெத்து அரசியின் காலத்திலேயே வெற்றி பெற்றது. ஆனல் மக்கள் உள்ளங்களாகிய கடலில், கருத்துக்களாகிய புயல் வீசிக் கொண்டிருந்த அக்காலத்தில் தான், அது முதன் முதலாகத் தன் பயணத்தைத் தொடங்கியது. அரசனது ஆலோசனை மன்றத்தில் கிரான்மர் அச்சம் மிக்கவராகவும், காலத்திற்கேற்ற வண்ணம் பணி புரிபவராகவும் இருந்து வந்தார். ஆனல், அவர் உரியையுடன் தம்முடைய ஆராய்ச்சியினைத் தொடங்கியவுடன், தெய்விக ஊக்கம் பெற்ற மனிதனைப் போல மாபெரும் செயல்களைச் செய்தார்.

'அவருடைய நண்பர் லாட்டிமர் முற்றிலும் மாறுபட்டவராக இருந்தார். ஹென்றியின் ஆட்சிக்காலத்தில், புராடஸ்டண்ட்டுச் சமயத்தை ஆதரித்தமையால், அவர் தம்முடைய சமயப் பதவியைத் தாமே துறந்து விட்டுப் போனார். மீண்டும் அப்பதவியை இக்காலத்தில் ஏற்றுப் பணியாற்ற அவர் முன்வரவில்லை. ஆனால், எட்வர்ட்டின் ஆட்சிக்காலத்தில் சீர்திருத்த இயக்கத்தின் உரிமை மிக்க ஈட்டியாக அவர் விளங்கினார். அவர் பிரபுக்களின் கவுன்சிலில் 'பிறர் பொருளைக் கவர விரும்புவோருக்கு எதிராகக் கூக்குரலிடும்' அளவிற்கு உரிமையுடையவராக இருந்தார். செயிண்ட் பால்ஸ்கிராசில் (St.Paul's Cross) நாட்டு மக்களுக்கும், அரசருடைய சோலையில்அரசவையினருக்கும் லாட்டிமர் திருத்தம் பெறாத, ஆனால் இனிமையும் எளிமையும் பொருந்திய சமயச் சொற்பொழிவுகளாற்றி வந்தார். அடுத்த நூறு ஆண்டுகளுக்குப் புராடஸ்டண்ட்டு சமயத்தில், மக்கள் பேரளவில் சேருவதற்குக் காரணமான கவர்ச்சியும் சுவையுமிக்க சொற்பொழிவு முறையினை அவர் விவிலிய நூலையும், வழிபாட்டு நூலையும் துணையாகக் கொண்டு அமைத்துத் தந்தார்.

இதற்கிடையே அரசின் சீர்திருத்தங்களைத் தாம் எவ்வாறு கண்டித்தாரோ, அவ்வாறே அதனால் உண்டான கேடுகளை நீக்கி நன்மை யுண்டாகுமாறு செய்ய விழைந்தார். தொழிற் கழகங்களையும், குருக்கள் மானியங்களையும் கொள்ளையடிப்பதற்கு ஹென்றி தீட்டிய திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம், எட்வர்ட்டின் ஆட்சி தொடங்கப் பெற்றது. மூடப் பழக்க வழக்கங்களையும், இறந்தவர்களுக்கு வழிபாடு செய்வதையும் அடியோடு அழித்தொழிக்க வேண்டும் என்ற பேரார்வத்தினாலேயே அவ்வாறு செய்தனர். ஆனால், அரசரது அவையினராகிய பிரபுக்களுக்குப் புதிதாகப் பெரும் செல்வம் கிடைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, வரம்பின்றிக் கொள்ளையடிக்கலாயினர். கூட்டுக் கழகங்கள் அடக்கி யொடுக்கப்பட்டமையால், அவற்றின் உதவியால் நடத்தப்பட்டு வந்த பள்ளிகள் முதலில் மூடப்பட்டன. பிறகு சில 'எட்வர்ட்டு அரசனின் இலக்கணப் பள்ளிகளாக'த் திறக்கப்பட்டன. லாட்டிமரும், அவருடைய காலத்து மக்களும் கல்வியைச் சமயத்தின் ஒரு பகுதியாகவே கருதி வந்தனர். கல்வியறிவு மக்களிடையே பரவவில்லை என்றால், இங்கிலாந்தில் புராடஸ்டண்ட்டு சமயம் வேரூன்ற முடியாது என்பது லாட்டிமருடைய அசைக்க முடியாத நம்பிக்கையாகும். பிற்காலத்தில் இங்கிலாந்தின் திருச்சபை 'கல்வி'யைக் கற்பிப்பதில் தன்னிகரற்று விளங்கியது. இதன் விளைவாக

இங்கிலாந்தில் மதகுருமார்களும், அறிஞர்களும் கல்வியில் வல்லவர்களாகச் சிறப்புறத் தொடங்கினர். ஜுவல் (Jewel), ஹுக்கர் (Hooker) முதற்கொண்டு வெஸ்ட்காட்டு (Westcott), ஹோர்ட்டு (Hort) போன்ற அறிஞர்கள் வரை, குருமார்களின் 'அணி வகுப்புகள்' மிகப் பலவாகத் தோன்றின. ஆனால், இக்காலத்தில் குருக்கள் மானியங்களின் நிலங்களைப் பங்கிட்டுக் கொண்டமையால், திருச்சபையினர் செல்வத்தைச் சேர்த்துக் காப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தனர். எப்படிப் பணிபுரிவது என்பதைப் பற்றி அவர்கள் கவலைப் படவில்லை.

'பள்ளிக் கூடங்கள் தொடங்கப்படவில்லை' என்று லாட்டிமர் கூக்குரலிட்டார். 'அறிஞர்கள் தங்கள் அறிவின் ஆழத்தைப் பிறருக்குப் பயன் படுத்துவது கிடையாது; சமயப்போதனை அலுவலகம் அழிவுற்றுக் கொண்டு வருகிறது. மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நிலத்தையும் செல்வத்தையும் சேமித்து வைக்கின்றனர். ஆனால் பெரிதும் அவர்கள் கல்வியையும், போதகர் அலுவலகத்தையும் புறக்கணித்தே வருகின்றனர். எனவே இவையாவும் அழிந்தவுடன், நம்மிடத்தில் ஒரு சிறிய ஆங்கிலக் குருமார் குழுவினைத் தவிர வேறொன்றும் இருக்கப் போவது இல்லை. அதனால் கல்வியறிவில் பேரிழப்பும், நம் நாட்டில் காட்டுமிராண்டித் தனமும் உண்டாகப் போகிறது. ரோமாபுரிப் பாதிரியின் ஆதிக்கத்தைப் பரவ வொட்டாமல் தடுக்க வேண்டும் என்பது மட்டும் என்னுடைய விருப்பமன்று. இங்கு நான் மிகவும் தாழ்மையுடன் வேண்டுவது என்ன வென்றால் ஏழை எளிய மக்களின் பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்துச் சிறந்த அறிஞர் களாக்க வேண்டும். அவர்கள் வீடு பேற்றை நல்கும் அலுவலகத்தைத் திறமையாக நடத்த வேண்டும்' என்பது லாட்டிமரின் வேண்டுகோளாகும்.

நடுத்தர வகுப்பினருள் பெரும்பான்மையோர் இத்தகைய புதிய பத்தி நெறியினைப் போற்றிப் பின்பற்றியமையும், நாளடைவில் கொள்ளையிட்டுக் கொண்டு வந்த பொருள்களைக் கொண்டு அரசவையினர் செய்த நற்செயல்களும் இங்கிலாந்தைக் காட்டுமிராண்டித்தனத்திலிருந்தும், 'ரோமாபுரிப் பாதிரியின் ஆதிக்கத்திலிருந்தும்' காப்பாற்றியது. ஆயினும், பறிமுதல் செய்யப்பட்ட நிலத்தின் பெரும் பகுதியைக் கல்வியின் பொருட்டு அறக் கட்டளையாக வழங்கத் தவறினர். இங்கிலாந்து அக்காலத்தில் மக்களாட்சி நாடாக இல்லாமையும், கல்வியறிவிடத்துக் காதல் கொண்ட நாடாக இல்லாமையுமே இதற்குக் காரணமாகும்.

கிரான்மரின் எதிர்ப்புகளுக்கிடையே தொழிற் கழகங்களையும் குருமார்களின் மானியங்களையும் பறிமுதல் செய்து கைப்பற்றிய பொருள்களைத் தனியாரின்விருப்பத்திற்காகவும்,நலத்திற்காகவும் காப்பாளர் சாமர்செட்டு செலவழித்து வந்தார். அவர் அக்கொள்ளைப் பொருளில், தமக்குச் சேர வேண்டிய பங்கினைப் பெற்று, பாதுகாத்து வந்தார். அவற்றைக் கொண்டே அவர் தேம்ஸ் ஆற்றங்கரை ஓரத்தில், குடி மகனாகிய தமக்கு அரச போக வாழ்வை நல்கும் 'சாமர் செட்டு மாளிகையை'க் கட்டினார். அவர் அரசியல் விரகராகிய தம்மிடத்திலேயே, அதிகாரங்கள் அனைத்தும் குவிந்திருக்க வேண்டும் என்னும் கருத்தினால் பல தவறான செயல்களைச் செய்து வந்தார். அரசர் வயது வராத சிறு பிள்ளையாக இருந்தது. அவருக்கு நல்ல வாய்ப்பாக இருந்தது. மேலும், அரசரது ஆலோசனை மன்றத்தினுள் உள்ள பிற உறுப்பினர்களுக்கு எதிராக, அரசரை ஆதரிக்க வேண்டிய பொறுப்புடையவராக இருந்தமையால், அவர் தம்முடைய அதிகாரத்தை எளிதில் பெருக்கிக் கொள்ள முடிந்தது. ஆயினும், அவர் பகட்டும் பணிவும், தன்னலமும், தூய பொதுநல வேட்கையும் கலந்த ஒருவகைப் புதுமை மனிதராகத் தோன்றினார். அவர் மிகவும் நேர்மையும் உண்மையும் உடையவராகக் கடமைகளைச் செய்து வந்தார். அக்காலத்திய அரசியல்வாதிகளைக் காட்டிலும் அவர் மனிதப் பண்பினை மதித்துப் போற்றும் பண்பாளராகவும், இரக்க உள்ளம் படைத்தவராகவும் இருந்தார்.[1] திருச்சபை, அரசு ஆகிய இருதுறை விவகாரங்களிலும் பொறையுடைமை இன்றியமையாத தேவை என்றும் நம்பினார். ஹென்றியின் ஆட்சிக்காலப் பிற்பகுதியில், சட்டமாக்கப்பட்ட கொடிய சட்டங்களான அரச துரோகச் சட்டத்தையும் (Statue of Treason), ஆறு விதிச் சட்டத்தையும் (Act of Six Articles) பாராளுமன்றத்தைத் தள்ளுபடி செய்யுமாறு (1547) சாமர் செட்டு வற்புறுத்தினார். மேலும், அவர் குருமார்கள் விண்ணப்பத்தை அடிப்படையாகக் கொண்டு, அவர்கள் திருமணம்

1. கடந்த காலத்தில் மக்களினம் மிகமிகத் தாழ்ந்த நிலையிலிருந்ததையும், நடைமுறைத் தகுதியையும் கருத்து மாறுபாட்டாளர்கள் மறந்துவிடுகின்றனர். அதனால், அவர்கள் தற்காலத்தில் நன்முறையில் நடந்துகொள்ளும் பிரிவுகளையும், கட்சிகளையும் மனத்திற் கொண்டு, அதை ஒரு பெரும் போராட்டமாக முடிவு கட்டுகின்றனர். எட்டாம் ஹென்றியினுடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில், சான்சலர் பிரபுவான விரியேதிஸ்லி (Wriothesley) யும், வேண்டுகோள் தலைவரான (Solicitor General) ரிச்சும் (Rich) புராடஸ்டண்ட்டு நங்கை ஆன் ஆஸ்கேவி (Askeiwe) என்பவளை இயந்திரக் கழுவில் ஏற்றியபொழுது, அவர்கள் இருவரும் தங்கள் கைகளினால் அவ்வியந்திரத்தை இயக்கி, அவளை மன்னிப்பு கோருமாறு துன்புறுத்தினர். பிறகு அவளுடைய சிதைந்த உடலை, ஸ்மித் பீல்டில் கம்பத்தில் கட்டித் தொங்கவிட்டுத் தீயிட்டுக் கொளுத்தினர்.

செய்துகொள்ளுவதைச் சட்டத்திற்குட்பட்ட செயலாகப் பாராளுமன்றத்தை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். சாமர் செட்டு முதன் முதலாக கிரான்மரின் வழிபாட்டு நூலின் முதல் பதிப்பைக் கொண்டு வந்தார். டியூடர் பாராளுமன்றம் எப் பொழுதுமே சட்டமாக்காத வழிபாட்டு ஒருமைச் சட்டத்தை (Act of Uniformity) அவர் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

கத்தோலிக்கர்களையும், புராடஸ்டண்டுகளையும் அவர் களுடைய கருத்துகளுக்காக சாமர்செட்டு என்றுமே துன்புறுத்தியதில்லை. சமய வேற்றுமைகளைத் தடையின்றி, ஒருவரோடு ஒருவர் கலந்து வாதிப்பதற்கு அவர் உரிமை அளித் தார். அதனால், மிகத் தீமையான விளைவுகள் உண்டாயின. ஆற்றல் மிக்க அரசின் கை தளர்ச்சியுற்ற பொழுது, சமயக் கட்சிக்காரர்கள் நாடெங்கும் ஒருவரையொருவர் அழித்தொழிக்க முற்பட்டனர். 'சினமிக்க புராடஸ்டண்ட்டுகள்' அடக்கி யொடுக்கப்பட்ட துறவிகள் மீது பாய்ந்தனர். சோதரர்கள் அவர்களுக்கு எதிரிகளான புராடஸ்டண்ட்டுகளை ஒழித்துக் கட்ட முனைந்தனர். திருச்சபைகளிலும், தெருக்களிலும் தெய்வ உருவங்களை வைத்திருப்பதா, எடுத்தெறிவதா என்பதைப் பற்றியும், மக்கள் விவிலிய நூலையும், வழிபாட்டு நூலையும் படிப்பதைப் பற்றியும் நாட்டிலே குழப்பமும் கொந்தளிப்பும் உண்டாயின. அத்துடன் புராடஸ்டண்ட்டுகளின் போதனைகளா லும், கத்தோலிக்கரின் ஊர்வலங்களாலும் உண்டான சச்சரவு கள், உள்நாட்டுப் போர் உண்டாவதற்குரிய அறிகுறிகளைக் காட்டின.

ஆக்ஸ்போர்டு ஷையரில் தீவிரமான கிளர்ச்சிகள் உண்டா யின. அங்கிருந்த குருமார்களைத் தூக்கிலேற்றி அரசினர் அக்கிளர்ச்சியை அடக்கியொடுக்கினர். வடக்கே பெரிதும் அமைதி நிலவி யிருந்தது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 'அருளாளர்களின் திருப்பயணத்தை' (Pilgrimage of the Grace) அடுத்து, கத்தோலிக்கர்கள் அடக்கியொடுக்கப்பட்டமை யால், அங்கு அமைதி நிலவியது போலும். ஆனால், தென் மேற்குக் கோடியில்தான் சமயக் கலகமும் குழப்பமும் தோன்றின. இக்காலத்திலும் காரன்வாலில் வாழ்ந்த மக்கள், அவர்களுடைய பழைய கெல்ட்டிக்கு மொழியினையே பேசி வந்தனர். அவர்களுக்கு இலத்தீன் மொழியும், ஆங்கிலமொழி யும் புரியாத புது மொழிகளாகவே இருந்தன. அவ்விரு மொழிகளுள்ளும், அவர்கள் நன்கறிந்திருந்த ஓசையினையுடைய இலத்தீன் மொழியைப் போற்றலாயினர். டோவோனிலும்

நாட்டுப்புற மக்கள் குருமார்களின் தலைமையில் கிளர்ச்சி செய்தனர். அவர்களிடத்துச் சிக்கிக் கொண்ட சர்வால்டர் ராலேவின் தகப்பனரைக் கடலோடிகள் காப்பாற்றினர்கள். எக்சீடரின் குடிமக்கள் புராடஸ்டண்ட்டுச் சமயத்தின் சார்பில் ஆறு வாரங்கள் முற்றுகை யிட்டிருந்தனர். எலிசபெத்து அரசியின் காலத்தில் ஊர்ப் பெரிய தனக்காரர்களும், புதிய குருமார்களும், நாட்டுப்புற மக்களை, கடலோடிகளும் நகர மக்களும் கொண்டுள்ள புதியகருத்துகளை ஆதரிக்குமாறு வற் புறுத்தினர். பெருங்கடல்களில் கத்தோலிக்க சமயத்திற்கு எதிராகப் போரிடும் பேராற்றலை நாளடைவில் அக்கோட்டம் மற்றக் கோட்டங்களைக் காட்டிலும் சிறப்பாகப் பெற்றது.

சாமர்செட்டு ஆண்ட காப்பரசு (Protectorate) நாட்டின் அமைதியைக் குலைக்க வேறிடங்களில் தோன்றிய கிளர்ச்சிகள் சமயச் சார்புடையன அல்ல. அவை உழவர்கள் செய்த கிளர்ச்சி களாகும். காலமும் தீயதாக இருந்தது. எட்டாம் ஹென்றி நாணயத்தின் மதிப்பினைக் குறைத்தார். அதைத் தொடர்ந்து விலையேற்றமும், நிலையில்லாத விலைவாசிகளும் மக்களுக்குப் பெரும் துன்பத்தை உண்டாக்கின. நார்போக்கில் (Norfolk) உண்டான கலகமே கட்டுக்கு அடங்காததாக இருந்தது. அங்குச் சீர்திருத்த இயக்கம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது. ஆனல், பெருநிலக்கி கிழார்கள் அளவில்லாத விளை நிலங்களில் எல்லாம் பண்ணைகளை வைத்திருந்தனர். அதனல் மக்களுக்கு — உழவர்களுக்கு வெறுப்புணர்ச்சியும், சினமும் உண்டாயிற்று. கெட்டு (Kett) என்பவரின் தலைமையின் கீழ், உழவுத் தொழில் செய்தோர் படைக்கலன் தாங்கிக் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் கி. பி. 1549-ல் நார்விச்சைக் கைப்பற்றினர். அதன் வாயிலுக்கு வெளியே மௌஸ்கோல்டு ஹீத்தில் (Mousehold Heath) பாசறை அமைத்துத் தங்கி யிருந்தனர். அவ்விடம் பிற்காலத்திய இங்கிலாந்தின் இயற் கைக் காட்சிக்குப் பெயர் பெற்ற இடமாகச் சிறப்புற்றது. அவர்கள் அங்குத் தங்கள் தொழிலுக்கு இடையூருக இருந்த இருபதினயிரம் செம்மறியாடுகளைக் கொன்று விழுங்கினர். அவர்களுடைய மனப்போக்கு மக்களாட்சிப் பண்பு மிகுந்த தாகவே காணப்படுகிறது. கி. பி. 1381–ல் ஜான் பால்சின் (John Balls) மனிதர்கள் செய்த அழிவைப் போன்ருே, லூதரின் காலத்தில் ஜெர்மானிய உழவர்கள் கிளர்ச்சி செய்ததைப் போன்ருே இவர்களுடைய எழுச்சி நேர்மையற்றதன்று. உட்குடி களாக இருக்கிறவர்கள் எல்லோரையும் விடுதலை செய்து உரிமையுடைய மக்களாக்க வேண்டும் என்பது அவர்களுடைய

வேண்டுகோள்களுள் முக்கியமானதாகும். அவ்வார்வம் மிக்க வேண்டுகோள் எலிசபெத்துப் பேரரசியின் காலத்தில் நிறைவேற்றப்பட்டது. அவ்வரசி தன்னுடைய அரச குடும்பப் பண்ணையில் கண்ட உட்குடிகளை எல்லாம், மிகக் குறைந்த கட்டணத்தைச் செலுத்தி விடுதலை பெறுமாறு வற்புறுத்தி வந்தாள்.

பிறர் உதவியில்லாமல் நாட்டில் தோன்றும் பிற கிளர்ச்சிகளைப் போன்றே, 1549-ல் உண்டான கிளர்ச்சியும் நன்முறையில் திறமையாக வாழ்ந்த வகுப்பினரால் அடக்கியொடுக்கப்பட்டது. அக்கிளர்ச்சியின் முக்கிய விளைவாக ஆற்றல்மிக்க அரசினை, ஆதரிக்கும் மனப்பான்மை மக்களிடையே தோன்றியது. அதனால் மிகவும் தாராளப் பண்புடையவராக இருந்த சாமர்செட்டு வீழ்ச்சியுற நேர்ந்தது. அவர் வீழ்ச்சியுற்றதற்குக் காரணம் மக்களுடைய குறைகளையெல்லாம் தாமே கேட்டு, அவர்களிடத்து இரக்கம் காட்டியமையாகும். லாட்டிமரின் தூண்டுதலினாலும், சமயச் சீர்திருத்த இயக்கமான 'சம உரிமைக் குழு'வினரின் ஆதரவிலும், தடுப்பு நிலங்களைக் கட்டுப்படுத்த சாமர்செட்டு, பாராளுமன்றத்தில் கடுமையான சட்டங்களை நிறைவேற்றுமாறு செய்தார். ஆனால், மிகக் குறைந்த வாக்குரிமைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த அக்காலத்திய பாராளுமன்ற உறுப்பினர்களே, அத்தடுப்பு நில வாணிகத் தொழிலில் மிகுதியாக ஈடுபட்டிருந்தனர். அது மட்டுமல்லாமல் மன்னரின் ஆலோசனை மன்றத்தில் சாமர்செட்டோடு உறுப்பினர்களாக இருந்த மற்றவர்களும், அத்தொழிலின் மூலம் பெரும் ஆதாயத்தை அடைந்து கொண்டிருந்தனர். எனவே, அவர்கள் கெட்டின் தலைமையில் உண்டான கிளர்ச்சிக்குக் காப்பாளரே காரணம் என்று சாமர்செட்டின் மீது பழியைச் சுமத்தினர். அதைப்போலவே வேறு பல இடங்களில் உண்டான கலகங்களுக்கும் அவரே காரணம் என்று குற்றம் சாட்டினர். ஆயினும் இதற்கு முன்பே, அவர் அந்நகரப் பெருமக்களின் உடைமைகளைக் கைப்பற்றிக் கொண்டு, அவர்களை வெளியேற்றி விட்டார். அவருடைய அதிகாரப் போராட்டத்திற்கு உழவர்களின் அன்பு சிறிதும் பயனில்லாமல் போயிற்று. அவர் நாட்டுமக்கள் அனைவரையும், 'ஆற்றல்மிக்க அவர்களுக்கு' எதிராகத் தம்மை ஆதரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அதன் பிறகு அரசரின் ஆலோசனை மன்றத்தில் இருந்த கத்தோலிக்க, புரொடஸ்டண்ட்டு உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து சாமர் செட்டைப் பதவியிலிருந்து 1549-ல் விலகுமாறு செய்தனர்.

நாட்டின் ஆட்சி அமைப்பிலே மாற்றத்தை உண்டாக்க உதவிய கத்தோலிக்கர்கள், அதனால் தங்களுக்குச் சில நன்மைகள் உண்டாகும் என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டதைப் பிறகு உணர்ந்தனர். சாமர்செட்டின் இடத்தைக் கைப்பற்றிய டட்லி (Dudley) முதலில் வார்விக் கோமகனாகவும், பிறகு நார்த்தம்பர்லாந்தின் கோமகனாகவும் சிறப்புற்று விளங்கினார். அவர் தமக்கென்று ' எத்தகைய சமயக் கோட்பாடுகளையும் கொண்டவராக இல்லை. ஆனால், புராடஸ்டண்ட்டுகளோடு வேலை செய்வதற்காக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே சீர்திருத்த இயக்கம், முன்பு காலத்துக்கேற்ற மரபுகளைப் பின்பற்றியதைப் போன்றல்லாமல், பேராற்றலுடன் செயலாற்றத் தொடங்கியது. திருச்சபையிலும், அரசிலும் பொறையுடைமையைப் பின்பற்றவும், சமூகப் பிரச்சினைகளில் மக்களின் இரக்கத்தையும் ஆதரவையும் பெறவும் சாமர்செட்டு முயன்றார். உயர்ந்த வகுப்பினர்களால் அம்முயற்சிகள் தோல்வியுற்றன. பாராளுமன்றத்தில் நிலவிய கருத்தினால் ஊக்கமூட்டப்பட்ட டட்லி, எட்டாம் ஹென்றியின் கொடிய முறைகளுள் சிலவற்றைப் பின்பற்றிச் செயலாற்றத் தொடங்கினார். ஆனால், இச்சமயம் பெரிதும் முன்னேற்றமான புராடஸ்டண்ட்டு கோட்பாட்டோடு தொடர்பு கொண்டு அவர் செயலாற்றினார். கிறிஸ்து பெருமானின் மனிதப் பிறவியை மறுத்த ஜோான் போச்சரையும் (Joan Bocher), இயேசு நாதரின் தெய்விகத் தன்மையை மறுத்த ஒரு டச்சுக்காரனையும் தவிர, வேறு யாரும் சமயத்தின் காரணமாக அவரால் கொலை செய்யப்படவில்லை. ஆனால் சில முக்கிய கத்தோலிக்கர்கள் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுச் சிறைப்படுத்தப் பட்டனர்.

வழிபாட்டுநூல் புராடஸ்டண்ட்டு பாடத் திருத்தத்தோடு சற்றேறக்குறைய இன்றைய வடிவில் (1925) திரும்ப வெளியிடப் பெற்றது. ஜெர்மானிய அரசர்களிடத்து லூதரியம் (Lutheranism) உறங்கத் தொடங்கிய நாள்முதல், ஸ்டிராஸ்பர்க்கும் (Starsburg) சுவிட்சர்லாந்தும் புராடஸ்டண்ட்டுதீயின் அணையாத குண்டமாக இருந்துவந்தன. அவை இங்கிலாந்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஆங்கிலேயர்கள் ஒன்று கூடும் இடங்களாகவும் இருந்தன. அவர்களுள் பலர் இக் காலத்தில் தாயகத்திற்குத் திரும்பி, தங்கள் பணியை விரைவாகச் செய்யத் தொடங்கினர். ஆல்பஸ் மலை தாழ்ந்து நோக்கும் பகுதிகளில் விடப்படும் ஒரு மூச்சு, உடனே இங்கிலாந்தில் சென்று வீசியது. இன்னும் அச் செல்வாக்கு ஜெனேவாவைச் சார்ந்த கால்வினிடமிருந்து

(Calvin) வருவதற்கு முன்பே, சூரிச்சிலுள்ள அமைதியான சுவிங்கிலி (Zwingli) யிடமிருந்து வந்தது. ஆனால் இவ்விருசீர் திருத்தக்காரர்களும் மக்களாட்சிப் பண்பைப் போற்றுபவர்களாக இருந்தனர். சுவிட்சர்லாந்து மக்களைக் கவர வேண்டும் என்றால், சீர்திருத்தவாதிகள் மக்களாட்சிப் பண்பு நிறைந்தவர்களாக இருக்க வேண்டும் அல்லவா? ஜெர்மானிய புராடஸ்டண்ட்டு சமயம் அரசரைச் சார்ந்ததும், அதிகாரத் தொடர்புடையதுமாக இருந்துவந்தது. ஆனால், சுவிட்சர்லாந்தின் புராடஸ்டண்ட்டு சமயம், ஹாலந்தாக இருந்தாலும், ஸ்காட்லாந்தாக இருந்தாலும் அல்லது இங்கிலாந்தாக இருந்தாலும் பொதுமக்களின் சமயத்தில் ஓர் எளிமையும் இனிமையும் நிறைந்த உணர்வினை எழுப்புவதாக அமைந்து இருந்தது. அதன் மூலமாக இங்கிலாந்தின் சீர் திருத்த இயக்கத்திற்குப் பயன்படத் தக்க ஒருபண்பினை அளித்துதவியது. நாளடைவில் பழைய சமயத்திலும், புதியசமயத்திலும் பல நற்பயன்கள் அதனால் உண்டாயின. ஆனால், இங்கிலாந்திற்கு வெளியிலுள்ள யாருக்கும் அது இன்பம் அளிக்காமற் போயிற்று.

டட்லி காப்பாளராக் வந்தமை (கி. பி. 1549—1553) எந்த அளவிற்குத் தகுதியற்றதோ, அந்த அளவிற்கு அவர் பெயரையும் கெடுத்துக்கொண்டார். ஆயினும், கி. பி. 1551-ல் அவர் நார்த்தம்பர்லாந்தின் கோமகனாக ஆக்கப்பட்டார். அக்காலத்தில் அரசவையினர் கையூட்டுப் பெறுதலும், பேராசை பிடித்து அலைதலும் உச்சநிலையை அடைந்தன. நாடு அவர்களுடைய ஆதிக்கத்திற்கு அடிபணிந்து கிடந்தது. அவர்களை ஒழுங்காகப் பணியாற்றுமாறு கட்டுப்படுத்துவதற்கு அரசர் ஒருவரும் இல்லாமற் போயினர். இறந்து கொண்டிருக்கும் அரச குமாரனை நம்பியும் நார்த்தம்பர்லாந்து கோமகன் தம்முடைய தனிமைச் செல்வாக்கினைக் கொண்டும் பேராசை மிக்க திட்டங்களைத் தீட்டி மனக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தார். அவர் தன்னலநாட்டத்தைதவிர வேறொன்றையும் அறியார். அவ்வரச குமாரனும் டட்லியை உண்மையான புராஸ்டண்ட்டு என்று தவறாக நம்பினான். ஆனால், நோயாளி அரசனுடைய அறைக்கு வெளியே இருந்த மக்கள் அனைவரும் டட்லியை வஞ்சனையும் சூழ்ச்சியும் நிறைந்தவர் என்பதை நன்குணர்ந்திருந்தனர். லண்டன் மாநகரப் புராடஸ்டண்ட்டுகளும் டட்லியை அடியோடு வெறுத்தனர். அதைப் போலவே வடக்கிலும், மேற்கிலும் வாழ்ந்த கத்தோலிக்கர்களும் அவரை வெறுக்கலாயினர். போரிடுவதிலும் அரசியல் சதியாலோசனை செய்

வதிலும் அவர் திறமையும் உள்ள உரமும் படைத்தவராக இருந்தார். ஆனால், இப் பண்புகள் அரசியல் சூழ்ச்சித் திறனற்ற மக்கள் எல்லோராலும் வெறுக்கப்பட்ட அம்மனிதரைக் காப்பாற்ற முடியாமற் போயின. பல அரசியல் வெற்றி வேட்டையாளர்கள் மேன்மையுறக் காரணமாக இருந்த அவ்வடிப் படைக்கலையைக்கூட டட்லி அறிந்திருக்கவில்லை. அவர் தம்மை ஆதரிக்குமாறு, நாட்டு மக்களுள் ஒரு சிறு கூட்டத்தை எழுச்சியுறச் செய்யுமாறு தூண்டுவதற்கும் திறமையற்றவராக இருந்தார். நெருக்கடி உண்டான சமயத்தில், அவருடைய நார்த்தம்பர்லாந்தே அவரைக் கைவிட்டு விட்டது.

ஆறும் எட்வர்டு இளமையிலேயே இறந்துவிட்டார். அந்நிலையில் டட்லி எட்டாம் ஹென்றியின் பெண்களான மேரியும், எலிசபெத்தும் ஆட்சிக்கு வராமல் தடுக்க துணிச்சலான சதித்திட்டமிட்டார். அதன்படி தம்முடைய மருமகளான மங்கை ஜேன்கிரே (Lady Jane Grey) அரசர் குடும்பத்தோடு ஓர் அளவிற்கு உறவு உடையவளாக இருக்கின்ற காரணத்தால், அவளே அரசியாவதற்குத் தகுதியுடையவள் என்று அவர் அறிவித்தார். இதற்காக மரணப் படுக்கையில் இருந்த எட்வர்ட்டினை, மேரி அரசியானால் கத்தோலிக்கர்களால் நாட்டில் குழப்பம் உண்டாகும் என்று டட்லி அச்சுறுத்தினர். எனவே, அதற்காக அப்பையனை ஓர் உயிலில் கையெழுத்து இடுமாறு அவர் வற்புறுத்தினர். அதை ஓரளவிற்கு அவர் தம்முடைய திட்டத்திற்கு ஆதாரமாகக் காட்டியபொழுதுஅரசரது ஆலோசனை மன்றமே திகைப்புற்றது. அச் சதி நாடகம் நல்ல முறையில் நடிக்கப்பட்டது. ஆனல் லண்டன் மாநகரும் இங்கிலாந்தின் ஏனைய பகுதிகளும் அதை அடியோடு வெறுத்தன, அதன் விளைவாக டட்லியே மேரியை அரசியாக ஜூலை 1553–ல் மகிழ்ச்சியோடு வரவேற்க நேர்ந்தது.

இவ்வாறு அவர் வரவேற்றதனல், மலைக் கோபுரத்தில் (Tower Hill) உள்ள கோடரிக்கு இரையாகாமல் அவர் தப்பித்து விடவில்லை. முதலில் அவர் புராடஸ்டண்ட்டு சமயத்தைப் பின்பற்றுபவர் போல நடித்தது எத்துணை உண்மையோ, அதைப்போன்று பொது மக்கள் முன்னிலையில் புராடஸ்டண்ட்டு சமயத்தை வன்மையாகத் தாம் எதிர்ப்பதாக உறுதி மொழி கூறினர். ஆனல், அவர் எதிர்பார்த்த பயன் அதனல் விளையவில்லை. தம் கொள்கைகளைக் கைவிடுவதன் மூலம் தாம் தூக்குமேடை ஏறுவதை டட்லி சிறிது காலத்திற்குப் பின்னர் நிகழுமாறு செய்தார். இறுதியாக அவருக்கு வாழ்க்கையில்

வெறுப்பும், ஏமாற்றமும் உண்டாயின. அவருடைய மருமகளான மங்கை ஜான்கிரே, பணிவும் சுறுசுறுப்பும் உடைய பதினறு வயது பெண்ணுக இருந்தபோதிலும், சூழ்நிலையினைப் புரிந்து கொண்டாள். உடனே, தன்னுடைய பதவியைத் துறந்தாள். தன்னுடைய மாமனர் தன்னை வஞ்சித்துத் தவருன வழியில் பதவியில் அமர்த்தியிருக்கிருர் என்பதை அவ்விளம் பெண் உணர்ந்த உடனே, தாளுகவே அப்பதவியை விட்டு நீங்கினுள். அவளுடைய மாமனர் கொலை செய்யப்பட்டபொழுது மக்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர். ஆனல், அதற்கு ஆறு மாதம் கழித்து அம்மக்கள் அவளுடைய அவல முடிவிற்காக வருத்தமுற்றனர். டியூடர் பேரரசர்கள் அனைவரையும் போன்றே, இப்பண்பு மிகு மங்கை ஜேன்கிரேயும் கல்வியறிவு உடையவளாக இருந்தாள். டியூடர் மரபைச் சார்ந்த சிறந்த அரசர்களைக் காட்டிலும் இவ்வெழிலரசி மிகச் சிறந்த மாசற்ற பண்புடையவளாக விளங்கினுள். ஆனல் எலிசபெத்தைப் போன்று இவள் அரச பாரமாகிய இறைமையைத் தாங்கும் ஆற்றலுடையவளாக இருந்திருப்பாளா என்பது ஐயப் பாட்டிற்குரிய செய்தியாகும்.

தன்னுடைய பகைவர்கள் செய்த தவறுகளாலும், கொடுமைகளாலும் மக்களுடைய அன்பையும், ஆதரவையும் பெற்று மேரி (கி.பி. 1553–1558) அரசியானுள். ஆனல், அவள் இரண்டாம் ஜேம்ஸைப்போல் விரைவிலேயே மக்களுடைய அன்பையும் ஆதரவையும் இழக்க நேர்ந்தது. ஜேம்ஸைவிட, மேரி சிறந்த பல பண்பு நலம் உடையவளாவாள். நெருக்கடியான நேரத்தில் அவள் டியூடர் அரச குடும்பத்திற்கே சிறப்பாக உரிய வீரத்தினையும், உள்ள உத்திரனையும் காட்டினுள். அவளுக்குத் தனிப்பட்ட முறையில், பழிவாங்க வேண்டும் என்ற கொடிய நோக்கம் கிடையாது. அவள் சமயப்பற்றற்ற வளாகவோ, மட்டமான சமய உணர்வு உடையவர்களாகவோ இருந்திருந்தாலும், பல ஆண்டுகள் கழித்து மக்கள் அவளை 'கருணை மிக்க மேரி' என்று போற்றினர். ஆனல், காதரைனி (ஆரகான்)ன் மகளான மேரி, குறுகிய நோக்குடையவளாக வாழ்வதற்கு மறைமுகமாகப் பயிற்றுவிக்கப் பட்டிருந்தாள். அவளுடைய தாய் செய்ததாகக் கூறப்படும் குற்றங்களுக்காக, மேரியும் அவளுடைய தந்தையால் புறக்கணிக்கப்பட்டாள். அவளுடைய தாய் ஸ்பானிய அரச குடும்பத்தில் தோன்றியவளாவள். அதனல், மேரியை மேற்கு ஐரோப்பா பெரிதும் கவர்ந்ததில் வியப்பில்லை. அவள் ஆட்சி புரிந்த நாட்டின் சார்பில் அவளுக்குத் தேசிய உணர்வும் பெருமிதமும் இல்லை. அவள் ஆங்கிலேய மக்களின்

ஆன்மாக்கள் கடைத்தேற வேண்டும் என்பதைப் பற்றியே கவலைப்பட்டு வந்தாள். மேலும், ஆங்கிலேயர்கள் இத்தாலிய ரிடத்தும், ஸ்பானியரிடத்தும் ஒப்படைக்கப்பட்டால் மிக்க பாது காப்புடன் இருப்பார்கள் என்று மேரி நம்பினாள். அவளுடைய நோயாளியான சகோதரன் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையி லிருந்தமையால், இங்கிலாந்தின் உண்மையான நிலையினைக் காணாது போனான். அதைப் போலவே, மேரியும் தன்னுடைய வீட்டிலிருந்த வழிபாட்டு அறையில் இருந்து கொண்டிருந்தாளே ஒழிய, இங்கிலாந்தின் உண்மை நிலையை வெளியே வந்து காண வில்லை. தமக்கையும் தம்பியும் சமயக் கோட்பாடுகளின் ஆராய்ச்சியில் ஈடுபடுவதிலும், சமயவுணர்வுப் பெருக்கால் பெரு மகிழ்ச்சியுறுவதிலும் காலம் கழித்தனரே ஒழிய, டியூடர்களின் அரசியல் கொள்கையைக் கூர்ந்து நோக்கி உணரும் ஆற்றல் அற்றவர்களாகவே இருந்தனர். இங்கிலாந்தின் விளை நிலங் களின் வருங்காலச் செழிப்பையும், நெருக்கடியான சந்தை களையும், மேனர் மாளிகைகளையும், நெடுந்தொலைவிலுள்ள கடல் களில் ஆங்கிலேயர்களின் கப்பல்கள் அசைந்தாடுவதையும் அவர்களிருவரும் தங்கள் மனக் கண்களினால் காணத் தவறினர். அவர்களுடைய குடிமக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவை என்ன வென்பதைப்பற்றி, அவர்களைச் சிந்திக்குமாறு தூண்டும் இயல்பூக்கங்களும் அவர்களிடையே தோன்றாமல் போயின. ஆனால், அவ்வகக் காட்சியும், அவ்வியல்பூக்கங்களும் காலம் முழுவதும் டியூடர் அரசர்களின் வெற்றிக்குத் திறவுகோலாக இருந்து வந்தன. அவை எலிசபெத்துப் பேரரசியின் வாழ்வின் பல நிலைகளிலும் அவளைவிட்டுப் பிரியாது உடனிருந்து, அவளைப் பல வகைச் சிக்கல்களிலும், போராட்டங்களிலும் காப்பாற்றின. அவள் தன்னுடைய அரசின் ஆலோசனை மன்றத்தில் இருந் தாலும், அவள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தாலும் அல்லது சமய சித்தாந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தாலும், அயல்நாட்டுத் தூதர்கள் போற்றிப் புகழும் பேட்டிகளின் பொழுதும் அல்லது அவளுடைய காதலைப் பெறுவதற்காகப் பேரளவில் வந்து குழுமி இருக்கும் அவளுடைய அன்பர்கள் நடுவில் இருக்கின்ற பொழுதும், அப்பண்புகள் இரண்டும் எலிசபெத்தைக் கைவிட்டு விடவில்லை.

லண்டன்மா நகரத்தொழில் பழகுநர்களால் அன்போடு அரசியாக மேரி வரவேற்கப்பட்டாள். அதற்குக் காரணம் அவள் கத்தோலிக்க சமயத்தினை ஆதரிப்பாள் என்று அவர்கள் நம்பியமையாகும். ஆனால், அவள் ஸ்பெயினோடும், போப் போடும் தொடர்புகொள்ளத் தொடங்கியமையால், கத்தோ

லிக்க சமயம் இங்கிலாந்தில் சிறப்புற முடியாமற்போயிற்று. அந்நாள் முதல் மக்களுடைய உள்ளங்களில் புராடஸ்டண்ட்டு சமயம் சிறப்பிடத்தைப் பெற்றதோடு, நாட்டிலே கொடுமையும் அமைதியின்மையும் உண்டாயிற்று. தொழிற் கழகங்களையும், குருக்களின் மானிலங்களையும் அரசு கொள்ளையடிக்கத் தொடங்கியது. புராடஸ்டண்ட்டுகளை ஆதரித்த எட்வர்ட்டு ஆட்சியில் தொடர்ந்து தொல்லைகளும் துன்பங்களும் உண்டாயின. அவை எல்லாவற்றையும்விட டட்லியின் நெடுங்காலத்திய பதவிப்பித்து, இறுதியில் சதியாக முடிந்ததோடு, புராடஸ்டண்ட்டு சமயக் கொள்கையை அவர் கைவிட்டு விட்டதாக அறிவித்தார். இவற்றால் புதிய சமயத்தைச் சிறிது காலத்திற்கு இங்கிலாந்து மக்கள் வெறுத்து வந்தனர். நிலையற்ற மக்கள் கருத்தில், அது மிக இழிவாகத் தோன்றியது. தன்னுடைய தந்தையைப்போல் மேரி சமயங்களுக்கிடையே உடன் பாட்டைக் கண்டிருப்பாளானால், அது அவளுக்குப் பாது காவலாக அமைந்திருக்கும். அதாவது ஆண்டுதோறும் அவள் பன்னிரண்டு புராடஸ்டண்ட்டுகளைத் தீக்கிரையாக்கியும், இலத்தீன் மொழி இயல் நூலைப் (Latin Mass) படிக்குமாறு வற்புறுத்தியும் இருக்கலாம். சிறிது காலத்திற்காகிலும், இங்கிலாந்து அந்நிலையில் அமைதியாக இருக்கட்டும் என்று அவள் மன நிறைவடைந்திருப்பாளானால், எலிசபெத்து அரசி ஆட்சிக்குவந்த முதலாண்டில், உண்டான சமய மறுப்புக் கோட்பாட்டு மன மாற்றம் மக்களிடையே உண்டாகியிருக்காது. ஆனால், எப்பொழுதும் தன் குடிமக்களின் விருப்பத்தைப்பற்றிக் கவலைப்படாது, ஸ்பெயின் நாட்டு அரசரான பிலிப்பைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக (1554)த் தொடர்ந்து மேரி கூறிவந்தாள். அதனால் அவள் மக்களின் உள்ளத்தைப் புண்படுத்தியதோடு நாட்டின் பெருமிதத்திற்கு இழுக்குத் தேடத் துணிந்தாள். மேலும் அவள் ஹென்றி கார்டினர், பான்னர் (Bonner) முதலியோரின் உதவியைக் கொண்டு, தன்னுடைய தந்தை இங்கிலாந்தில் அடியோடு ஒழித்துக்கட்டிய போப்பு ஆண்டவரின் அதிகாரத்தினை, அவள் மீண்டும் புதுப்பிக்க (1555) முனைந்தாள். இவ்வாறு அவள் தந்தையும் சகோதரியும்கூட நாட்டிற்கு இழுக்குத் தேடத்துணியாத நிலையில், இருமுறை மேரி இங்கிலாந்தின் தன் மானத்தையும், பெரு மிதத்தையும் அழிப்பதற்கு முற்பட்டாள். இவற்றிற்குச் சிறப்பினைத் தேடித்தரும் வகையில் அவள் நான்கு ஆண்டுகள் (1555–1558) முந்நூறு புராடஸ்டண்ட்டுகளைத் தீயிட்டுக் கொளுத்தினாள். அதன்மூலம் பழைய கிறிஸ்தவ சமயத்தை அயல்நாட்டுப் பற்றுற்றதாகவும், கொடுமை நிறைந்ததாகவும் நாட்டுமக்களுடைய உள்ளங்களில் எல்லாம்

எளிதில் பதியுமாறு செய்துவிட்டாள். அதை மாற்றுவது என்பது அரிய செயலாயிற்று.

'டியூடரின் வல்லாட்சி', அல்லது 'கொடுங்கோலாட்சி' என்று பேசுவது இயல்பாகி விட்டது. ஆனல், ஆங்கிலேயர் என்றும் 'ஊமைகளாகவும் பார்வையாளராகவும்' அரசருடைய கொடுஞ் செயல்களை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த தில்லை. பிரஞ்சுக்காரர்கள்தான் பதினன்காம் லூயியின் ஆட்சியில் நிகழ்ந்தவற்றைப் பொறுமையாகப் பார்த்துக்கொண் டிருந்தனர். எட்டாம் ஹென்றியின் கொள்கைகள் மக்களுடைய கருத்துகளோடு தொடர்பு கொண்டிருந்தன. சிறப்பாகப் பாராளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தும் மக்கள் கருத்தினை ஆதரவாகப் பெற்றிருந்தன வாகும். எட்வர்ட்டின் ஆட்சிக் காலத்தில், பாராளுமன்றம் மக்களுடைய ஆதரவைப் பெருது, தனித்து இயங்கி வந்தது. மக்களாட்சிப் பண்பு மிக்க உழவர்களின் நன்மைக்காகச் சாமர் செட்டு இரு அவைகளிலும் ஒரு சட்டத்தை நிறைவேற்ற முயன் ருர். அப்பொழுது, அச்சட்டம் தோற்கடிக்கப்பட்டமை இதற்குச் சிறந்த சான்ருகும். அதற்குப் பிறகு ஆரும் எட்வர்ட்டின் உயிலையும், இறுதி விருப்பத்தையும் பொதுமக்கள் புறக்கணித் தனர்; அவர்கள் டட்லியின் மரபினர் அரசராவதைத் தடுத்து நிறுத்தினர். அடுத்து நடக்கப்போவது என்ன? ஸ்பெயினுக் கும் ரோமாபுரிக்கும் அடிபணிந்து போக வேண்டும் என்னும் மேரியின் கொள்கை மக்களுடைய விருப்பத்திற்கு முரண்பட்ட தாக இருந்தது.

மேரி விரும்புகின்றவனை அவள் மணம் செய்து கொள்ளக் கூடாது என்று தடுக்க, பாராளுமன்றத்திற்கு எத்தகைய அரசி யல் அமைப்பு உரிமையும் கிடையாது. எனவே மக்கள் சபை யின் உறுப்பினர்கள் ஸ்பானிய அரசர் தங்கள் அரசிக்கு ஏற்ற கணவர் அன்று என்று அறிவித்தமை பயன்படாமல் போயிற்று. வியாட்டின் (Wyatt) தலைமையில், கெண்ட்டில் உண்டான கிளர்ச்சி (1554), ஸ்பானிய அரசரை ஏற்கமறுக்கும் நாட்டு மக்களின் உணர்ச்சியை வெளிப்படுத்தியது. ஆனல் வியாட்டு பொது மக்களின் இரக்கத்தைப் பெற்ருரே ஒழிய, அவர்களு டைய ஆதரவைப் பெருமல் போனர். இதற்குக் காரணம் நாட்டிலே கலகம் செய்வது சூனிய வித்தையைப் போன்ற கொடிய பாவமாக அக்கால மக்கள் கருதியமையாகும். அரசுக்கு எதிராகப் படைக்கலன் தாங்கிச் செய்யப்பட்ட கலகத்தினை லண்டன் மாநகரத்தினர், மாபெரும் கொடுமையாகக் கருதினர்.

வடக்கு மேற்குப் பகுதிகளைக் காட்டிலும், தென் இங்கிலாந்து அக் கிளர்ச்சியைக் கொடுமை நிறைந்ததாகவே கருதியது. நார்த்தம்பர்லாந்து செய்த மாபெரும் குற்றத்தினால் மக்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்ற மேரி, இன்னும் மக்களுடைய உள்ளத்தில் நல்லவளாகவே இருந்து வந்தாள். இந்நிலையில் வியாட்டின் படைகள் பிளீட்டு தெரு (Fleet street) வழியாக லட்கேட்டிற்குச் (Lndgate) சென்ற பொழுது புராடஸ்டண்ட்டு களான லண்டன் மக்கள் அவருடன் சேர்ந்து ஒத்துழைக்க மறுத்தனர். எனவே, பேராற்றல் வாய்ந்த அரசினால் வியாட்டு சிறைப்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

தமக்கையினுடைய அரியணையில் எலிசபெத்தை அமர்த்த வேண்டும் என்பது வியாட்டின் உட்கிடக்கையாகும். ஆனால் சிறுமியாக இருந்த பொழுதே எலிசபெத்து பெற்ற கசப்பான அனுபவங்களால், உலகில் வஞ்சனையும் சூழ்ச்சியும் நிறைந்திருக்கிறது என்பதை உணர்ந்திருந்தாள். எனவே அரசிளங் குமரி இந்நிலையில் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொண்டாள். வியாட்டின் கலகத்திற்கு எலிசபெத்தே காரணம் என்று மெய்ப்பிப்பதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. அவள் அவ்வளவு கள்ளங்கபடமற்றவளாக இருந்தாள். அவளு டைய தமக்கை மேரியும் கொடியவள் அல்லள். நாட்டு மக்கள் அவளையே ஆதரித்தனர். சிறையிலே பல வாரங்கள் பேரார் வத்தோடு எலிசபெத்து இருந்தாள். அச்சமயத்தில் ஸ்பானிய தூதரான ரேனார்டு (Renard) அவளுடைய குருதியைக் குடிக்க வேண்டும் என்று கூப்பாடு போட்டான். பின்னர் இளவரசி விடுதலை செய்யப்பட்டாள். அதனால் பிற்காலத்தில் பலர் பெரும் வருத்தமுற்றனர்.[1] கத்தோலிக்க தலைமைக் குருவும்,

[1] எலிசபெத்தின் முதல் பாராளுமன்றக் கூட்டத்தில், மேரியின் ஆட்சியில் புராடஸ்டண்ட்டுகளைத் துன்புறுத்துவதில் சிறப்புற்று விளங்கிய ஜான் ஸ்டோரி (John Story) என்பவர், பாராளுமன்றத்தில் நேர்மையற்ற முறையில் கைப்பற்றியதைத் திருப்பித் தருமாறு பொது மக்கள் வேண்டியதை அடிப்படையாகக் கொண்டு சட்டம் இயற்றப் படுவதை மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். 'மேரி அரசியின் காலத் தில் நான் பலமுறை பாதிரிகளிடத்தில் கிளைகளை வெட்டிக் கொண்டிருப் பதால் பயனில்லை; வேரினைக் கல்லி எறிய வேண்டும் என்று கூறியுள் ளேன்: அவர்கள் அப்படிச் செய்திருப்பார்களானால், இப்பொழுது இத் தகைய பிரச்சினையே உண்டாகியிருக்காது' என்று அவர் அறைந்தார், நமது அன்பிற்குரிய மங்கை நல்லாள் எலிசபெத்து அரசியைக் கொன்று ஒழித்திருக்க வேண்டும் என்பதே அவருரைத்த உவமையின் பொருளா கும். அவர் அவ்வாறு கடுமையான சொற்களைக் கொடுமையாகப் பயன் படுத்தி அரசியைக் கொலை செய்திருக்க வேண்டும் என்று கூறிய பொழுது, பாராளுமன்றத்தில் இருந்த நேர்மையும் உண்மையும் வாய்ந்த மக்கள் யாரும் காது கொடுத்து ஆர்வத்தோடு கேட்காது, வெறியன் ஏதோ உளறுகிறான் என்று வெறுப்புடன் அவனை நோக்கினர்.— State Trials and Strype, I, 1, 115.

அரசியல் வீரகருமான கார்டினர் (Gardiner) ஸ்பானிய அரசரை மேரிக்கு ஏற்ற கணவர் அல்லர் என்று எதிர்த்தவராவர். ஆயி னும் அவர் எலிசபெத்து அரசியாகவராமல், தடுப்பதற்குத் தயா ராக இருந்தார். பொது வழிபாட்டின்பொழுது எலிசபெத்து பத்தியோடு மண்டியிட்டு வணங்குவதில்லை என்பது அவருடைய ஐயுறவுமிக்க குற்றச்சாட்டாகும். ஆனால், பாராளுமன்றம் அவள் அரசியாவதற்குரிய உரிமையைப் போற்றி ஆதரித்தது. அரச ராக வருவது யார் என்பதில் பாராளுமன்ற அரசியலமைப்பின் உரிமை மிக்க முடிவினை யாரும் மறுக்க முடியாத நிலை இருந்து வந்தது. எனவே, அதனுடைய விருப்பமே நிறைவேறியது. கத்தோலிக்க பாதிரியாருக்கும், ஸ்பானிய தூதருக்கும் எதிராக இங்கிலாந்து மக்களும், பாராளுமன்றமும் எலிசபெத்திற்குப் பேராதரவு தர முன் வந்தனர். அவள் தனக்குப் பக்கபலம் நாட்டில் எங்கே இருக்கிறது என்பதை அமைதியாகப் பார்த்து, அதைக் கருத்தில் இருத்திக் கொண்டாள்.

மூடத்தனமாக நடந்து கொண்ட மேரி அரசியை, ஸ்பெயின் நாட்டு அரசரான பிலிப்ஸ் (1555-1558) மணம் செய்து கொண்டது முதல், மூன்றாண்டுகளுக்கு இங்கிலாந்து மாண்பு மிக்க ஸ்பானிய முடியாட்சியின் அடிமை நாடாக இருந்து வந்தது.[1] மேரி உயிருடன் வாழ்ந்த வரையிலும், அவரால் காதலிக்கப்பட்ட வரையிலும் ஸ்பெயினுக்கு எதிரான அயல்நாட்டுக் கொள்கை களை இங்கிலாந்து புறக்கணித்தது. அமெரிக்காவோடு இங்கி லாந்து வாணிகம் செய்வதற்கு, பிலிப்பு உரிமை அளிக்க மறுத் தார். எனவே, இங்கிலாந்து அமெரிக்க வாணிகத்தைத் தற் காலிகமாக மறக்க வேண்டியதாயிற்று. அது மட்டுமல்லாமல், இங்கிலாந்தின் குடியேற்றக் கனவுகளும், கடலாதிக்கமும் கை விடப்பட்டன. மேரி அரசியினைத் திருமணம் செய்து கொள்ளு வதற்கு ஸ்பெயின் நாட்டு அரசர் விதித்த விதிகள் இங்கிலாந் தின் நலத்திற்கும், உரிமைக்கும் ஊறு விளைப்பனவாக இருந்தன. அக்காலத்தில் இங்கிலாந்திற்கு வந்திருந்த வெனிஸ் நகரத் தூதர் ஒருவர் ஸ்பானியர்களை இங்கிலாந்து நாட்டின் தலைவர் களாக்குவதைத் தவிர வேறு எத்தகைய குறிக்கோளும் மேரிக்கு இருந்ததில்லை என்று அறைந்துள்ளார். இங்கிலாந்து உரிமைப் பாதையில் செல்லுவதற்கும், அவளுக்காகக் கடலில் காத்திருக் கும் பெருமையை அடைவதற்கும் உரிய வழி, ஒன்று நாட்டிலே புரட்சி உண்டாக வேண்டும்; அல்லது மேரி அரசி இறக்க வேண் டும் என்ற நெருக்கடியான நிலை உண்டாயிற்று.

[1] பிலிப்பு தம்முடைய தந்தை ஐந்தாம் சார்லஸுக்குப் பிறகு கி. பி. 1556-ல் ஸ்பெயினின் அரசரானார்.

அடுத்த படியாக ரோமாபுரியோடு மீண்டும் ஒன்று சேர வேண்டும் என்பது மேரியின் பேரவா. எட்வர்ட்டு அரசரின் ஆட்சியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளால், அரசர்களின் மேலாண்மை சிறப்புற்று விளங்குமானல், கத்தோலிக்க சமயம் பாதுகாக்கப் படாது என்பதைக் கார்டினர் பாதிரியாரும், பானரும் நன்குணர்ந்திருந்தனர். மேரி தன்னுடைய தாயைப் போலவே எப்பொழுதும் போப்பு ஆண்டவரை வழிபடுபவளாக இருந்தாள். புதிய பாராளுமன்றம் அரசின் நெருக்கடிக்கும், பிரிவி கவுன்சிலுக்கும் உடன்பட்டுப் போயிற்று. ஆனல் பற்றுறுதியுள்ள அரசிக்குச் சில கட்டுத் திட்டங்களையும், விதி முறைகளையும் பாராளுமன்றம் விதித்தது. அதனல் மேரியின் மனம் பெரிதும் புண்பட்டது. ஆனல் அது கீழ்த்தரமான உடன்பாடாகும். சமய விவகாரங்களையும், ஆன்மீகத் துறைச் செய்திகளையும் கவனிக்கும் அதிகாரத்தைப் போப்பு ஆண்டவருக்கு அரசி அளித்தாள். ஆனல் பொது மக்களின் கிளர்ச்சிக்குக் காரணமான உலகியல் வாழ்வின் முன்னேற்றிற்குரிய உரிமைகளும், கடமைகளும் மொத்தமாக அரசிடத்து ஒப்படைக்கப்பட்டன. மடாலய நிலையங்களின் உரிமைப் பத்திரங்கள், வருமானத்தில் பத்திலொரு பங்கு வரி செலுத்துதல், மற்றத் திருச் சபை உடமைகள் அனைத்தும் என்றும் போலவே சில குறிப்பிட்ட மனிதர்களின் இரும்புப் பெட்டியை நிறைத்துக் கொண்டிருந்தன. அதே நேரத்தில் போப்பு ஆண்டவரின் மேலாதிக்கத்தினை ஏற்றுக் கொண்டாள். கடவுள்மறுப்புக் கோட்பாட்டினை எதிர்க்கும் சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டமையால், ஆன்மீக முறை மன்றங்கள் மீண்டும் தோன்றின. புராடஸ்டண்ட்டுகள் என நம்பப் பட்டவர்களைப் பிரிவி கவுன்சில் உறுப்பினர்கள், தங்கள் விருப்பம் போல் உயிருடன் தீக்கிரையாக்கினர். செம்மாரும் குருமார்களும் தங்களுடைய சமயத்தில் கொண்டிருந்த பற்றுறுதிக்காக வெந்துயருற்று, உயிர்த் தியாகம் செய்தனர். பொது மக்களுள் உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் மேரி அரசியின் ஆட்சியில் துன்புறவில்லை. பெருங் கொள்ளையினல் நலம் பெறுவோர், மக்களின் உடலையும், நிலத்தையும் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகப் பெருந்திரளாக மக்கள் பின் பற்றும் கத்தோலிக்க சமயத்தை ஆதரிக்கலாயினர். ஆனல், அவர்கள் புதிய தொரு அரசு முறை உண்டானல், இவ்விரு சமயங்களும் நாட்டில் பாதுகாப்புடன் இருக்க முடியும்என்பதை நன்குணர்ந்தனர். வருங்காலத்தைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்த ஊர்ப் பெரியதனக்காரர்கள் பலர், 'இளவரசி எலிசபெத்தை இறைவன் காப்பாற்றுவாராக' என்று வேண்டிய வண்ணம் வாழ்ந்தனர். 'மிக்க இறைப் பற்றுறுதியுடைய சில கத்தோலிக்கரைத் தவிர, மற்றவர்கள் யாரும் முப்பத்தைந்து வயதிற்குக்

கீழ்ப்பட்டவர்கள் அல்லர். பலர் உண்மையாகக் கத்தோலிக்க சமயத்திடத்துப் பற்றுதல் கொள்ளாது, அதைப்போற்றிப் பின் பற்றுவதாக வெளிவேடம் போட்டுத்திரிகின்றனர்' என்று வெனிஸ்நகரத் தூதர் தம்முடைய தலைமை அதிகாரிக்கு அக்காலத்தில் எழுதியமை இங்குக் கருதத் தக்கதாகும். பழைய சமயத்திற்கு மேரியின் அரசு கொடுத்த வாய்ப்பினை நன்முறையில் பயன்படுத்தி, கத்தோலிக்க சமயம் மீண்டும் தழைத்தோங்க முடியாமல் போயிற்று. புதிதாகத் தோன்றும் தலை முறையினரிடத்துப் பண்டைச் சமயம் புது வாழ்வினைப் பெறுமல் போனதே அதற்குக் காரணமாகும்.

மேரியின் பாராளுமன்றம், கொள்கை எதிர்ப்புக் கோட்பாட்டுச் சட்டங்களைப் புதுப்பிக்க கி. பி. 1555-ல் இசைவு தந்தது. அதனுல், தன்னுடைய ஆங்கிலேய மக்களின் உயிரினை மாற்ருரிடத்து ஒப்படைத்தது. ஆன்மீக வழக்கு மன்றங்களிடத்தும், மேரி தேர்ந்தெடுத்த பிரிவி கவுன்சிலிடத்தும் அவ்வுரிமைகளைப் பாராளுமன்றம் ஒப்படைத்தது. ஹென்றியின் காலத்தில் நாடு ஏற்றுக் கொண்ட தண்டனைகளையே அவ்வுறுப்பினர்கள் தருவார்கள் என்று நம்பி மேரி இவ்வாறு செய்தாள். பல வகைக் குறைபாடுகளையுடையதாக இருந்த எட்வர்ட்டின் ஆட்சியில் விறகினையும், தீயினையும் யாரும் கண்டதில்லை. சற்றேறக் குறைய நான்கு ஆண்டிற்குள் (1555—1558) மேரி முந்நூறு ஆடவரையும் மகளிரையும் தீயிலிட்டுப் பொசுக்கியது மக்களுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. துன்புறுத்துவோர் மக்கள் கருத்தைப் பற்றி முற்றிலும் தப்புக் கணக்குப் போட்டுவிட்டனர். அவர்கள்தான் வெறி பிடித்தவர்களாக இருந்தனரே! பாவம். அவர்கள் என்ன செய்வார்கள்? மேரியும், அவருடைய சமய அறிவுரையாளர்களான போலும் (Pole), பான்னருமே (Bonner) இத்தகைய கொடிய கொள்கைக்குப் பொறுப்பாளிகளாவர். இத்துன்புறுத்தல் தொடங்கியவுடனேயே இறந்துவிட்ட கார்டினரும் ஓரளவிற்கு இதற்குப் பொறுப்பாளியாவார். கூர்த்தமதியும், திட்டம் தீட்டும் திறமையும் உடைய ஸ்பானியர்கள் இங்கிலாந்தைத் தங்கள் ஆதிக்கத்திற்குட்படுத்தி வைக்க வேண்டும் என்ற ஆர்வத்தால், புராடஸ்டண்ட்டுகளைக் கொளுத்துவதால் மேரிக்குப் பழி உண்டாகிறது என்று கூறி, அம்முறையைக் கைவிடுமாறு எச்சரிக்கை செய்து வந்தனர். நெதர்லாந்தில் ஸ்பானியர்கள் மேரியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகப் புராடஸ்டண்டுகளைத் தீயிலிட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தனர். ஆனல், இச்செயலில் அவள் கடவுளின் குரலை அல்லவா கேட்டுக் கொண்டிருந்தாள். எனவே, அவள் தன்னுடைய கணவனின் வேண்டுகோளுக்குக் கூட இசையாமல் இருந்தாள்.

பழைய தலைமுறையைச் சார்ந்த ஆங்கிலேயத் தலைமைக் குருமார்களே, மேரியை இவ்வாறு தூண்டி விட்டனர். இவ்வாறு செய்வதனால் கத்தோலிக்க சமய ஆர்வம் மக்களிடத்தும், அரசிடத்தும் குன்றிவிடும் என்பதை அவர்கள் உணரவில்லை. நாட்டுப் பொதுமக்கள் புராடஸ்டண்ட்டுச் சமயத்திடத்துக் கொண்ட பேரார்வம் நீறு பூத்த நெருப்பாக இருந்து வருவதையும், இத்துன்புறுத்தலும் கொடுஞ்செயலும் அதைப் பெரியதொரு அரசியல் சக்தியாக மாற்றி, வருங்காலத்தில் திருச்சபைக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பினை முடிவு செய்யுமாறு தூண்டி வருவதையும் அவர்கள் உணர்ந்தவர் அல்லர். சீர்திருத்தக் கட்சியைப் பற்றி மேரியும், அவளுடைய அறிவுரையாளர்களும் அரசவையில் ஓரளவிற்கு அறிந்திருந்தனர். அக்கட்சி தன்னலப்பற்று மிக்குடையது என்றும் காலத்திற்கேற்றவாறு பணியாற்றுவது என்றும், உண்மையில் எராஸ்டியப் பண்புடையது என்றும், அரசரின் சமயத்தோடு இணங்கிப்போகும் இயல்புடையது என்றும் அறிந்திருந்தனர். இங்கிலையில் கத்தோலிக்கர் மிகவும் வேறுபட்ட மக்களுடைய எதிர்ப்பினைச் சமாளிக்க வேண்டிய நெருக்கடி உண்டான உடனே திகைப்புற்றனர். தங்களுடைய திட்டங்கள் மீண்டும் உருப்படாதவாறு தகர்த்தெறியப் பட்டதைக்கண்டு பெரிதும் வருத்தமுற்றனர்.

இங்கிலாந்தின் மக்களிடையே அருட்பண்பு மெல்ல வளர்ச்சியுற்று வருவதைத் தவறாகக் கருதி விட்டனர். அடிக்கடி மக்கள் கடுந்துயரினைத் தாங்களே விருப்பத்துடன் வரவேற்று நெடுங்காலம் துன்புற்ற காட்சிகளும், வேண்டுமென்றே அரசு தண்டனை விதித்து வந்தமையும் இடைக்காலத்திய மக்களைப் பேரதிர்ச்சியடையச் செய்திருக்காது. கொடுஞ் செயல்களைக் கண்டால், இன்று நம்மிடையே எத்தகைய இரக்கமும், சினமும் உண்டாகுமோ, அதைப் போன்று, மேரி அரசியின் காலத்திலும் மக்களுடைய உள்ளங்கள் துடிதுடித்தன. இம் முதிர்ச்சியுறாத மன்பதையிடத்துக் கொண்ட அருளிரக்க உணர்வு (Humanitarianism) மக்களைப் பொறுமையுடன் வாழத் தூணடியது. அவ்வுணர்வு இங்கிலாந்தில் முதன் முதலாக அரசியல் காரணத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட சமய நம்பிக்கைக்காக, மக்கள் கொலை செய்வதை எதிர்க்கும் புதியதொரு உணர்ச்சியினை — மக்கள் கருத்தினை உருவாக்கியது. இவ்வுள்ளார்ந்த உணர்வே பின்னர்த் தோன்றிய அரசுகளின் நடைமுறைச் செயல்களைப் பாதித்தது.

ஜான் பாக்ஸ் (John Foxe) போன்ற திறமை மிக்க பிரசாரகர்களால், உயிர்த்தியாகிகளின் நினைவு, ரோமாபுரியின் திருச்சபை மீது வெறுப்புணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்தது. அடுத்து வரும் நூற்றுண்டுகளில் பணித்துறை, சமயத்துறைப் பிரிவினரிடையே, இவ்வுணர்வு நின்று நிலவியது. ஆங்கிலேய மக்களுடைய கருத்தின் சிறப்பு மிக்க கூருக, அது அவர்களுடைய செயல்களின் மூலம் வெளிப்படலாயிற்று. அடுத்த இரு நூற்றுண்டுகளிலும், அதற்குப் பிறகும் பாக்ஸ் எழுதிய '**உயிர்த்தியாகிகளின் வரலாறு**' நாட்டுப்புற வட்டாரத் திருச்சபைகளில், விவிலிய நூலிற்குப் பக்கத்தில் வைத்துப் போற்றப்பட்ட சிறப்புடையதாகும். மேனர் மாளிகைகளிலும், குடிசைகளிலும் ஆங்கிலிகளும், தூய்மைச் சமயத்தினரும் (Puritans), சமய ஆர்வம் ஆழ்ந்தும் அகன்றும் பரவியிருந்த அக்காலத்தில், படிப்பதற்கு வேறொரு நூலும் கிடைக்காத அக்காலத்தில் பாக்ஸின் 'உயிர்த்தியாகிகளின் வரலாறு' என்னும் நூலினைப் பேரார்வத்தோடு படித்து வந்தனர்.

இக்கொடிய துன்புறுத்துதலுக்கு இரையானவர்களுள் பெரும்பாலோர், லண்டன் மாநகரில் வாழ்ந்தவர்களாகவும், உள்நாட்டுக் கோட்டங்களில் வாழ்ந்தவர்களாகவும் இருந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் தாழ்ந்த குடியில் தோன்றிய ஏழை எளியவர்களாவர். இந்நிலையில், தாம் விரும்பியதைப் போன்றே லாட்டிமர் இயற்கை யெய்தினர். பிறருடைய தயக்க மிக்க கருத்துகளையும் மிகச் சிக்கலான கருத்துகளையும் தெளிவாக உணருவதற்காகத் தம்முடைய அறிவு ஒளியினை உலகிற்கு அளித்து விட்டு அவர் மறைந்தார். தெளிவில்லாத திட்டங்களும், குழப்பமான அறிவுரைகளும், உடன்பாடுகளும் நிறைந்த காலத்தில் வாழ்ந்த லாட்டிமர், நேர்மையான நோக்கமும் கொள்கையும் உடையவராக இருந்தார். புதுமைக் காலத்தில் தோன்றிய ஆங்கிலேயர்கள் அதை எளிதில் புரிந்து கொண்டதோடு, பின்பற்றவும் தொடங்கினர். கிரான்மருடைய வாழ்வும் இத்தகைய சிறந்ததொரு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தாலும், அது வேறுபட்ட ஆற்றலுடையதாகும். ஏனெனில் இறுதியாக எதையும் பின்பற்றும் ஐயுறவாளர்களில் அவரும் ஒருவராவர். அவர் இங்கிலாந்தில் அரசுதான் சமயத்தைப் பற்றி முடிவு செய்யவேண்டும் என்ற நேர்மையான கருத்துடையவராக இருந்தார். அப்படியானல் அவர் மேரியை ஆதரிப்பதா? அல்லது அவருடைய தனித் திடநம்பிக்கைகளுக்காக வாழ்வதா ? இத்தகைய இக்கட்டான நிலை ஏராஸ்டிரியக் கோட்பாட்டில் ஆழ ஊறித்திளைத்த அவருக்கு — பின்னர்

புராடஸ்டண்ட்டாக மாறிவிட்ட அவருக்கு உண்டாயிற்று. போப்பு ஆண்டவர் சமயமறுப்பாளராக மாறியிருந்தால், கத்தோலிக்கர்களுக்கும் இத்தகைய இடர்ப்பாடு உண்டாகியிருக்கும். அவருடைய அச்சமே இயல்பான பண்புநலன் முதலில் அவரைத் தயங்கச் செய்தது. கொடிய இறப்பிற்கு முன்னால் அவர் தாம் கொண்ட சமயக் கொள்கையை மறுத்துக் கூறியதில் வியப்பில்லை. ஆயினும், வியக்கத்தக்க முறையில் அவர் தம்முடைய இறுதியினைக் கண்டார். தீயிலே தம்முடைய உடலைப் பொசுக்குவதன் மூலம் (1556) தம்முடைய கொள்கையை மறுக்கும் ஆவணத்தில் கையெழுத்திட்டார் போலும். அக்காலத்திய மக்கள் நம்முடைய நரம்பு மண்டலத்தைக் காட்டிலும், விறைப்பு மிக்க நரம்புகளையுடையவர்களாக இருந்தார்களா ? அல்லது உடலிற்கு உண்டாகும் துன்பத்தைப் பொருட்படுத்தாது வெற்றி காணும் ஞானிகளுடைய ஆற்றல் மிக்க மனநிலையைப் பெற்றிருந்தார்களா? என்பது தெரியவில்லை. இத்தகைய மாண்பு மிக்க அறிகுறிகளுக்கிடையே இங்கிலாந்தின் திருச்சபை புத்துயிர்ப்புற்றது.

ஸ்பெயினின் மனத்தை நிறைவு படுத்துவதற்காக, இங்கிலாந்து பிரான்சோடு போரிட்டது. அப்போரில் பிரான்சு, காலெய்சை (Calais) 1558 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கைப்பற்றியது. அதனால் இங்கிலாந்திற்குப் பெருத்த மானக்கேடு உண்டாயிற்று. இதற்கிடையே மேரி தன் ஆணவத்தால் தானே மக்களுடைய வெறுப்பைப் பெற்றாள். அதனால், நாட்டின் ஆட்சி ஆட்டம் கொடுக்கத் தொடங்கியது. பிரஞ்சு மண்ணில் சிறப்புற்று விளங்கிய காலெய்சு பாலத் தலைப்பை இழந்தமை, இங்கிலாந்தின் தேசிய உணர்விற்குப் பேரிழுக்கை உண்டாக்கியதாக மக்கள் உணர்ந்தனர். ஆனால், அந்நிகழ்ச்சியே இங்கிலாந்தின் பிற்கால வரலாற்றை உருவாக்குவதற்கு உறுதுணையாக அமைந்தது எனில் மிகையாகாது.

மக்களால் வெறுக்கப்பட்டும், கணவனால் புறக்கணிக்கப்பட்டும் துன்புற்ற மேரிக்கு, மகப் பேறில்லாமல் போனது பெருங் குறையாகும். மேலும் தன் கணவருடைய நாட்டம் எல்லாம், தன் தங்கை எலிசபெத்தின் மீது சென்றதைக் கண்டு அவள் மனம் புழுங்கினாள். தனக்குப் பின் ஆட்சிக்கு வரவேண்டிய தனது தங்கை, வாழ்ந்தாக வேண்டும் என்பதில் அசைக்க முடியாத அன்புறுதி கொண்டிருந்தாள் மேரி. ஆனால், தன் தங்கை அரசியானால், தான் கடவுளுக்காகச் செய்துவந்த சமயத் தொண்டினைப் பாழாக்கி விடுவாளே என்று அவள் மனக் கலக்க

முற்றுள். டியூடர் அரச குடும்பத்தினருள் மிக நேர்மையான வளும், மிகத் தவருன அறிவுரைகளைக் கேட்டு அறிவு மயக்கம் கொண்டவளுமான மேரி கி. பி. 1558 ஆம் ஆண்டு நவம்பர் பதி னேழாம் நாள் இறந்து போனுள். அக்காலத்தைப் போன்று இங்கிலாந்து எந்நூற்ருண்டிலும் தாழ்ச்சியுற்றிருந்ததில்லை. நாடு தவருன முறையில் ஆளப்பட்டது. இங்கிலாந்தில் போதிய படைகளும், தலைவர்களும் இல்லாததாலும், அமைதிக் காலத் திலும், போர்க் காலத்திலும் இங்கிலாந்திற்கு மானக் கேடு நேர்ந்தது. ஆனல், எல்லா வகையான எண்ணங்களுக்கும் நோக்கங்களுக்கும் இங்கிலாந்து ஸ்பானியப் பேரரசினைச்சேர்ந்த நாடாகவே கருதப்பட்டது. துன்பத்திலே சிக்கிய மனிதர்கள் ஓர் இளம் பெண்ணைப் பார்த்துக் காப்பாற்றுமாறு எவ்வாறு அளவு கடந்த நம்பிக்கையோடு வேண்டித் தோல்வியடைவார் களோ அதைப் போன்று ஹென்றியின் மூன்ரும் நான்காம் வழித்தோன்றல்களில் இருவர், தங்கள் கடமையில் தோல்வி யுற்றனர். பரந்த ஆங்கிலேயர் மீண்டும் ஒன்றுபட்டுச் சிறப்புற வும் புதிய துறைகளில் புகழ் பெறவும் உதவும் முதிர்ந்த அரசியல் விரகரையோ, சிறப்பு மிக்க குழுத் தலைவரையோ பரந்த ஐரோப்பா முழுவதிலும் காண்பது அரிது. ஆனல், வர லாறு தந்த இப்புதுமையான வாய்ப்பு இங்கிலாந்தைச் சீரும் சிறப்புமுற்று விளங்கச் செய்தது.

### இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

ஆரும் எட்வர்டு — கிரான்மரும் லாட்டிமரும் — குருக்கள் மானியம் கைப்பற்றப்படுதல் — கெட்டின் கிளர்ச்சி — சாமர் செட்டின் வீழ்ச்சி — டட்லியும் மங்கை ஜேன் கிரேயும் — முத லாம் மேரியின் பண்பு நலன் — வியாட்டின் எழுச்சி — ரோமா புரியோடு மீண்டும் ஒன்றுபடுதல் — சிமித் பீல்டின் தீ—உயிர்த் தியாகிகள் — மேரியின் தோல்வியும் மறைவும்.

## இயல் 5

# முதலாம் எலிசபெத்து

1. எலிசபெத்தின் கொள்கையும், பண்பு நலனும்; 2. திருச் சபை உடன்படிக்கை; 3. ஸ்பெயினும் பிரான்சும்; 4. ஸ்காட் லாந்தின் சீர்திருத்த இயக்கமும் பிற்காலப் பெரும் பிரிட்டனும்; 5. கோமக்களின் எழுச்சியும், இங்கிலாந்தில் நிலமானியப் படை முறையின் வீழ்ச்சியும்.

கடந்த பல நூற்றுண்டுகளாக ஆங்கிலேயர்களைத் தேசிய உணர்வும், நாட்டுப்பற்றும் உடையவராய் வாழத் தூண்டிய சக்திகள் பலவாகும். தனி மனிதன் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யுமாறு அச்சக்திகள் ஆங்கிலேயர்களைத் தூண்டி வந்தன. இதற்கு முன்பு எல்லாம் கத்தோலிக்க திருச்சபைக்கும், நிலமானியப் படைமுறைக் கடமைகளுக்கும், உலகக் குடிமகக் கோட்பாடுடைய அமைப்புகளுக்கும், கூட்டுக் குழுக்களுக்கும் தனி மனிதன் அடங்கி நடப்பதே சிறந்ததென்று கருதப்பட்டது. இங்கிலாந்தில் தேசிய உணர்வின் ஊற்றுக விளங்கிய சக்திகள் பல. அவற்றுள் பேராற்றல் வாய்ந்தவை ஆங்கிலேயப் பொதுச் சட்டமும், அரசரின் அமைதியும், அரசருடைய முறை மன்றங்களுமாகும். அவற்றோடு நெடுந்தொலைவிலுள்ள கோட்டங்களின் பிரதிநிதிகளும், பேரூர்களின் பிரதிநிதிகளும், பாராளுமன்றத்தின் தேசிய அவையில் அடிக்கடி கலந்து, தொடர்பு கொண்டமை நாட்டு மக்களிடையே தேசிய உணர்வினை வளர்த்தது. நகராட்சி அமைப்பின் அடிப்படையில் அல்லாமல் நாட்டுணர்வின் அடிப்படையில் அமைக்கப்பட்ட புதிய துணி உற்பத்தித் தொழிற்சாலைகளும் தேசிய உணர்வினை ஊட்டுவதில் பெரும்பங்கு கொண்டன. இவற்றோடு இங்கிலாந்து முழுவதற்கும் பொதுவாகத் தோன்றிய புதிய இலக்கியமும், புதிய மொழியும் தேசிய ஒருமைப்பாட்டினை வளர்க்கலாயிற்று. இறுதியாக, புராடஸ்டண்ட்டு சமயம், எவ்வாறு தனிமனிதனுக்கும் கடவுளுக்கும் இடையே தடையாக இருந்தவை அனைத்தையும் அகற்றி வந்ததோ அதைப் போன்று, டியூடரின் முடியாட்சியும் தனி மனிதனுக்கும் அரசுக்கும் இடையே குறுக்கிட்ட எல்லா வகையான பற்றுறுதிகளையும், ஈடுபாட்டையும் அழித்தொழித்தது, அல்லது பையப் பைய குறைத்துக் கொண்டே வந்தது. இதனால், எலிசபெத்து அரசியின் ஆட்சிக்காலம் ஒரே சமயத்தில் ஆழ்ந்த தேசிய உணர்வுடையதாகவும், சிறந்த தனிநிலைக் கொள்கை (Individualistic) உடையதாகவும் சிறப்புற்று விளங்க முடிந்தது.

உலகக் குடிமகக் கோட்பாடுடைய திருச்சபையை மீண்டும் இங்கிலாந்தில் நிறுவுவதற்கு மேரி உண்மையாகவே அரும்பாடு பட்டாள். அத்திருச்சபை அயல்நாட்டு மொழி ஒன்றைப் பயன்படுத்தி வந்ததையும் அதன் சட்ட திட்டங்களை வகுப்பதற்கு ஆல்ப்ஸ் மலைக்கு அப்பால் உள்ள ஒரு நாட்டினுடைய அனுமதியை நாடுவதையும் பற்றி மேரி கவலைப்படவில்லை. அத்திருச்சபை சீசர்களின் அரசாங்க அமைப்புக் கோட்பாடுகளையும், இலத்தீன் அரசியல் குறிக்கோள்களையும் அடிப்படையாகக்

கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. அது ஆங்கிலேயப் பொது மக்கள், தங்கள் சமயச் சார்பற்ற செயல்களுக்குப் பயன்படும் வண்ணம் தோற்றுவித்துக் கொண்டிருந்த தேசிய, பாராளுமன்ற ஆட்சியியல் அமைப்பிற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. மேரியைப் போன்ற சமய நம்பிக்கை உடையவர்கள் திரும்ப உரிமை பெறுதலை குருமார்களில் பெரும் பகுதியினரும், வட இங்கிலாந்தில் ஓரளவிற்கு நிலமானியப் படைமுறையைப் பின் பற்றிய சமூகத்தினரும் மகிழ்ச்சியோடு வரவேற்றனர். ஆனால், அது லண்டன் மாநகர மக்களுடைய ஆதரவைப் பெறவில்லை. அந்நகரில் வாழ்ந்த மக்களுள் பெரும்பாலோர் கடலோடிகளாக இருந்தமையாலும், ஊர்ப் பெரிய தனக்காரர்களுள் முன்னேற்றக் கருத்துடையவர்கள், புதிதாக வளர்ச்சியுறும் நடுத்தர வகுப்பினரோடு தொடர்புடையவர்களாக இருந்தமையாலும், கொடுமைகள் பல புரிந்த கத்தோலிக்க சமய ஆதரவாளர் அரசராகவர்க்கூடாது என்று அவர்கள் கருதினர். பிறர் இடும் கட்டளைப்படி தாங்கள் எதையும் நம்ப வேண்டும் என்பதையும், மதகுருமார்கள் தங்கள் வாழ்க்கையைக் கண்காணிப்பதையும், சிறப்பாகக் கடல் கடந்த நாடுகளில் உள்ள குருமார்கள் மேற்பார்வையிடுவதையும் லண்டன் மாநகர மக்கள் வெறுத்து வந்தனர்.

இத்தகைய சக்திகள் அனைத்தும் மக்கள் சபையில் பிரதிநிதித்துவம் வகித்தன. எனவே இவற்றின் உதவியைக்கொண்டு, எலிசபெத்து தன்னுடைய முதல் ஆட்சி ஆண்டிலேயே, சமயச் சார்பற்ற தேசிய அரசினை நிறுவினாள். அரசியினுடைய பணிமகளை விளங்குமாறு தேசிய திருச்சபையைச் சில கட்டுப்பாடுகளுடன் அமைத்தாள். இத்தகைய புதிய அமைப்புகளுக்கு ஏற்றவாறு அவள் நாட்டு மக்களுடைய பழக்க வழக்கங்களை முன் எச்சரிக்கையோடு மாற்றியும் திருத்தியும் அமைத்தாள். அதை அயல் நாட்டுப் படையெடுப்பாளர்களிடமிருந்து காப்பாற்றுவதிலேயே தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் எலிசபெத்து கழித்தாள். பல ஆண்டுகள் வெற்றிக்குரிய வாய்ப்புகளைக் காட்டிலும், இடர்ப்பாடுகளே மிகுதியாக அவளை அச்சுறுத்தி வந்தன. விவிலிய நூலினையும் வழிபாட்டு நூலையும் கற்று, அதில் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்த மக்களையும், அரசியிடத்துப் பற்றுறுதியுடைய மக்களையும் கொண்ட புதியதொரு தலைமுறையினர் இங்கிலாந்தில் இறுதியாகத் தோன்றிய பிறகே, எலிசபெத்தின் ஆட்சி சிறப்புறத் தொடங்கியது. இங்கிலாந்திற்கும் ஸ்பெயினுக்கும் இடையே இருந்துவந்த போட்டியும் பூசலும், இறுதியில் போராக மூண்டது. ஐரோப்பிய கத்தோலிக்க பிற்

போக்கு வாதிகளுக்குத் தலைமையேற்றுப் புதிய உலகிற்குச் செல்லும் கடல் வழிகளைத் தனக்கே உரியதாகக் கொண்டிருந்த ஸ்பெயினுக்கு எதிராக இங்கிலாந்து போர்தொடுக்க நேர்ந்தது. அப்போராட்டத்தின் விளைவாக ஆங்கிலேய நாகரீகம் தற்கால வடிவினைப் பெற்றது. ஒரே சமயத்தில் தீவு வாழ்க்கையும், கடலக வாழ்க்கையும் உடையதாக அது மாற்றியமைக்கப் பட்டது. நார்மானியப் படையெடுப்பு, ஒரு காலத்தில் இங்கிலாந்தின் நாகரிகத்தினை ஐரோப்பிய நாகரிகத்தின் ஒரு பகுதியாக்கியது. ஆனால், இப்பொழுது ஆங்கிலேய நாகரிகம் முற்றிலும் வேறுபட்டதாக வீறுடன் விளங்கத் தொடங்கியது.

இவ்வாறு தற்கால இங்கிலாந்து உருவாக்கப் பெற்றதுடன் பிற்காலத்தில் பெரும் பிரிட்டன் (Great Britain) அமைக்கப்படுவதற்குக் கால்கோள்விழாவும் நடத்தப்பட்டது. ஐரோப்பியப் பெருநிலப் பரப்பின் கத்தோலிக்க சக்திகளை எதிர்த்துப் போராடி, இத்தீவின் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்ற நெருக்கடி உண்டானமையால், ஸ்காட்லாந்திற்கும் இங்கிலாந்திற்கும் இடையே நெடுங்காலமாக இருந்து வந்த பகைமை மறைந்தொழிந்தது. ஆனால், அதே காரணங்கள் கத்தோலிக்க அயர்லாந்தினைக் கொடிய நற்பேறில்லாப் படையெடுப்பின் மூலம் இங்கிலாந்து கைப்பற்ற வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று.

எலிசபெத்து அரசியின் காலத்திய ஆங்கிலேயர்களிடை, தனிநிலைக் கொள்கை கடல் வழியாகவும் நிலவழியாகவும் தேசிய உணர்வின் நண்பனைச் சம உரிமைபெற்று விளங்கியது. தேசிய அரசு ஒரு படையினை வைத்துக் கட்டிக்காப்பதற்குத் தேவையான பொருள் வசதியற்றதாக இருந்தது ; பிற்காலத்திய பிரான்சு, பிரஷ்யா போன்று, மையக்குவிமுக ஆட்சியை நிறுவி அதற்குத் தனிமனிதன் தன் விருப்பங்களை அடிமைப் படுத்துமாறு செய்வதற்கும் அதனிடத்தில் பொருள் வசதியில்லை. எலிசபெத்து காலத்தில் அரசாங்கம் வறுமையுற்றிருந்ததே அதனுடைய பல வகைக் தோல்விகளுக்கும், நலிவிற்கும் காரணமாக இருந்தது. அவ்வறுமையே எலிசபெத்தின் ஆட்சி மேன்மையுற்று விளங்குவதற்கும் பொன்றாப் புகழ் பெறுவதற்கும் காரணமாக இருந்தது. போர்க் காலத்திலும் ஆண்டிற்கு ஐந்து லட்சம் பவுன்களுக்குக் குறைவான பொருளே எலிசபெத்திற்கு வருவாயாகக் கிடைத்தது. அதனால்தான் அவள் கஞ்சத்தனமாக வாழ நேர்ந்தது. ஆனால், போருக்கு வேண்டிய பொருளைக் குடிமக்களைக் கசக்கிப் பிழிந்து பெறக்கூடாது என்று அவள் கருதினாள் அக்காரணத்தினால், போருண்டான போதெல்லாம், அவள்

தனுக்கு உதவியாக வந்து அவர்களைப் போரிடுமாறு மகிழ்ச்சியுடன் வேண்டினுள். தன்னிடத்து மக்கள் கொண்டுள்ள அன்பு உண்மையானதா என்பதை இத்தகைய நெருக்கடியான சமயங்களில் அவள் அறிந்துகொள்ள முடிந்தது. மக்களும் தங்கள் பொருளைவிட, அவர்களுடைய அன்பையும் உயிரையும், அவளுக்காக உடனே தந்துதவ முன்வந்தனர். அவள் இயற்றிய அரசியல் பற்றிய கவிதை[1] ஒன்றில் தெளிவாக விளக்கியிருப்பதைப் போல, 'இன்னும் நாட்டிலே அமைதி நன்கு நிலவுவதற்கு ஏற்றவாறு நடந்துகொள்ள மக்களுக்கு நாம் கற்பிக்கவேண்டும்' என்பதே அவளுடைய குறிக்கோளாகும். மக்கள் தன்னுடைய அரசியைப் பெறற்கரிய பெரும் செல்வமாகப் போற்றிக் காத்தமைக்குக் காரணம், அக்காலத்திய அண்டை நாடுகள் எல்லாம் சமயப்பூசல் என்னும் காட்டுத் தீயினுள் சிக்கிச் சீரழிந்து இரையாகிக்கொண்டிருந்த நேரத்தில், அவள் நாட்டிலே அமைதியை நிலைநாட்டியதோடு, பல துறையிலும் நாட்டை வளமுறச் செய்தமையாகும். அவளுடைய சமய உடன்பாட்டினை, முழுவதும் புராடஸ்டண்டு மயமாக இருக்கிறது என்று குறை கூறியவர்களும், போதிய அளவிற்குப் புராடஸ்டண்ட்டு மயமாக இல்லை என்று வெறுத்தவர்களும் நாட்டிலே அமைதியை நிலைநாட்ட அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள சிறந்த நடவடிக்கையாக அதைப் போற்றினுர்கள். வெறிமிக்க போட்டிகள் நிறைந்த அக்காலத்தில், அச்செயல் அரசியலின் அற்புத சூழ்ச்சித்திறனுகத் தோன்றியிருக்கலாம்.

எலிசபெத் தனது இருபத்தைந்தாம் வயதில், 1558 ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் அரசியானுள். அச்சமயம் அயலாரின் படையெடுப்பினை எதிர்க்கும் ஆற்றலற்றதாக நாடு இருந்தது. அன்றைய இங்கிலாந்து கொடிய சமயப் போராட்டங்களால் பிளவுபட்டு ஒற்றுமையின்றிப் பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் உடையதாக அல்லோலகல்லோலப்பட்டது. அதனுல் அயல் நாடான பிரான்சிற்கு அடிபணிய நேர்ந்தது. ஆனுல், பல ஆண்டுகளாக ஸ்பெயினியின் ஒருசிறு பகுதியாகவே இங்கிலாந்து நடத்தப்பட்டு வந்தது. அதனுடைய பொருளாதார வளமும், போர்த் தளவாடங்களும், படைகளும் சீர்குலைந்து

[1] 'சொற்போரின் மகள்' அதைப்போன்ற ஒன்றைத் தோன்றுமாறு செய்யமாட்டாள். ஏனெனில் அதனுல் ஒரு பயனும் விளையாது என்பதை அவள் நன்கறிவாள். இதற்கு முற்பட்ட ஆட்சி, நாட்டிலே அமைதி வளர்ச்சியுறவேண்டும் என்பதைத் தெளிவாக அறிவுறுத்தியுள்ளது.

'சொற்போரின் மகள்' என்பவள் ஸ்காட்லாந்தின் அரசியான மேரியாவாள்.

கிடந்தன. அமைதியான காலத்திலும், போர்க்காலத்திலும் இங்கிலாந்தை நன்முறையில் ஆளுவதற்கு ஆற்றலுடைய ஒருவரை ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டிய பொறுப்பு எலிசபெத்திடத்து நாட்டு மக்களால் ஒப்படைக்கப் பட்டது. ஸ்பானிய தூதரகத்தில் நடுத்தர வகுப்பைச் சார்ந்த பண்பாளர்களிடையே தோன்றிய அரசியல் வாதியான செசில் (Cecil) அதற்குத் தகுதியுடைய மனிதர் என்ற கருத்து உலவியது. அச்செசில் பெரிதும் சமயப் பற்றற்றவராவார். அவருக்குச் சமய வெறி இல்லாமையால், மிகவும் அஞ்சத் தக்கவர் என்று சிலர் கருதினர். ஆனல், எலிசபெத்தைப் போன்றே, அவரும் பெரும்பான்மையான மக்களுடைய ஆதரவைப் பெற்றவராக இருந்தார். மேலும் எவ்வாருகிலும் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோளாக இருந்து வந்தது.

எனினும், ஸ்பெயின் நாட்டு அரசரான பிலிப்பு, புதிதாக அரியணை ஏறிய தன் கொழுந்தி எலிசபெத்தினுடைய காப்பாளராகப் பல ஆண்டுகள் இருந்து வந்தார். சமயத்தைப் பற்றி அவர் கொண்டிருந்த அச்சத்தை செயலில் அவள் செய்து காட்டிய பிறகும், அவர் அவளுடைய காவலராக இருக்கவிரும்பினர். ஏனெனில் இங்கிலாந்தின் அரியணைக்கு அடுத்து அரசராகும் தகுதியும் உரிமையும் பெற்றிருந்தவள் ஸ்காட்டிய இனத்தைச் சார்ந்த மேரி அரசியாவாள். அவள் ஆழ்ந்த கத்தோலிக்க சமயப் பற்றுடையவள். ஆனல், பிரஞ்சு நாட்டு அரசரின் மூத்த மகனை அவள் திருமணம் செய்து கொண்டிருந்தாள். எலிசபெத்து ஆட்சிக் காலம் முழுவதும் கத்தோலிக்க கிறிஸ்துவ நாடுகளான பிரான்சுக்கும், ஸ்பெயினுக்கும் இடையே கடுமையான போட்டி இருந்துவந்தது. இங்கிலாந்து பேராற்றல் வாய்ந்த நாடாக வளர்ச்சியுறும் வரையில், அவ்விரு நாடுகளும் இங்கிலாந்தின் மீது படையெடுக்காமல், அவற்றிற்கிடையே இருந்து வந்த போட்டியே இங்கிலாந்தைக் காப்பாற்றியது. இருபோட்டியாளர்களும் இங்கிலாந்தைத் தாங்களே கைப்பற்ற வேண்டும் என்று விரும்பினர். ஸ்பெயினுக்கு எதிராக நெதர்லாந்தில் உண்டான கலகமும், பிரான்சில் நடந்த சமயப் போர்களும் இங்கிலாந்திற்கு மேலும் தக்க பாதுகாப்பினை அளித்தது எனலாம். இவ்விரு இயக்கங்களும் பேராற்றல் உடையதாக விளங்குமாறு, அடிக்கடி எலிசபெத்து மனிதர்களையும் பொருளையும் அவ்விரு நாடுகளுக்கும் அனுப்பி உதவி வந்தாள். ஆனல், அவள் ஆட்சியின் தொடக்க ஆண்டுகளில் நெதர்லாந்தில் வெளிப்படையாகக் கலகம் உண்டாக வில்லை. எனவே,

அவள் பிலிப்பினைத் தன் பசப்பு மொழிகளால் மயக்கி வைத்திருந்தாள். அவனையாகிலும் அல்லது அவன் குறிப்பிடும் வேறு யாரையாகிலும் தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அவள் நடித்து, அவனைத் தன் அடிமையாக்கி வைத்திருந்தாள். ஆனால் உண்மையில் அவள் அவ்வாறு யாருடைய கண்ணியிலும் சிக்கிக் கொள்ளத் தயாராக இல்லை.

ஆயினும், அவள் ஸ்பானியர்களோடு நட்புடையவளாக இருக்க விரும்பினாள். மேரியின் பிற்காலத்தில் ஸ்பானியஅரசன் எலிசபெத்திடத்துக் காட்டிய அன்பினால்தான், இன்று அவள் வாழ்வும் வளமும், ஏற்றமும் எழிலும் பெற்று அரசியாகஅரியணையில் வீற்றிருக்கிறாள் என்று ஸ்பானிய தூதர் இழிவாகப் பேசவொட்டாது அவர்களை அடக்கி வைத்திருந்தாள். அவள் தன்னுடைய உரிமைகள், சிறப்புகள் அனைத்தையும் ஆங்கிலேய மக்களிடம் இருந்து பெற்றதாகக் கூறி வந்தாள். இது முழு உண்மையாக இல்லையென்றாலும், உண்மையின் ஒரு பகுதியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வியல்பே மிகச் சிறப்புடையதாகப் போற்றப்பட்டது. எலிசபெத்து தன்னுடைய உண்மையான எண்ணத்தையும், நோக்கத்தையும் மறைக்க விரும்பிய வீணான வஞ்சனை நிறைந்த சொற்களாகிய மேகத்தினிடையே, அடிக்கடி தோன்றி மறைந்த 'நேர்மை' என்னும் மின்னல் ஒளியில் வெளிப்பட்ட சொற்களுள், இவையும் சிலவாகும். சிற்சில சமயங்களில் பிறரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கம் இல்லாமலே, அவள் வேடிக்கையாகப் பொய் பேசியும் வந்தாள். ஒருமுறை அவள் ஸ்பெயின் நாட்டுத் தூதனிடம், அவள் 'ஒரு கன்னிப் பெண் துறவியாக வாழ விரும்புவதாகவும், ஒரு சிற்றறையில் அமர்ந்து காலை முதல் இரவு வரை செபமாலையை உருட்டி மந்திரம் செபிக்கப் போவதாகவும்' கூறியது, முற்றிலும் வேடிக்கையாகப் பேசியதாகும். அதைக் கேட்ட அத்தூதன் 'இப்பெண்ணை லட்சக்கணக்கான பேய்கள் பிடித்துக் கொண்டு ஆட்டிப் படைக்கின்றன' என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும்.

தன்னுடைய மக்களிடையே அவள் தான் ஓர் 'ஆங்கிலப் பெண்' என்று பெருமையடித்துக் கொண்டாள். அவளுடைய தாய் அயல் நாட்டு அரச மரபைச் சார்ந்தவள் அல்லள். அவள் காதல் சாகசம் புரியும் ஆங்கிலேய மாதாவாள். எலிசபெத்தின் தந்தை இங்கிலாந்திற்குச் சமய விடுதலையை அளித்தவராவர்; சிறந்ததொரு அரசாங்கக் கப்பற்படையை நிறுவியவருமாவர். அவருக்கு ஆறுவது அறிவாகிய பகுத்தறிவு இருந்தது. அதைக்

கொண்டு, அவர் தம்முடைய கொடிய சீற்றத்தின் பொழுதும் ஆங்கிலேய மக்களின் மனப் போக்கினை நன்கு புரிந்து கொண்டார். எனவே, இவ்விருவர்களுடைய பண்புகளையும் எலிசபெத்து இயல்பாகவே பெற்றிருந்தாள். ஆனால், அவளுடைய தகப்பனாரிடமிருந்தே மிகுதியான பண்புகளைப் பெற்றிருந்தாள். எலிசபெத்து தானும் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுவதென்று தீர்மானித்துக் கொண்டாள். அவளுடைய தாயைப் போல் பகட்டும், இன்ப விளையாட்டில் ஈடுபடும் சாகசக்காரியாகவும் எலிசபெத்து இருந்திருப்பாளானால், அவளை எச்சரிக்கை செய்ய வேண்டிய பொறுப்பு அவளுடைய தலைவிதிக்கு உண்டாகியிருக்கும். சிறுமியாக இருந்தபொழுது, அவள் பெற்ற கசப்பான அனுபவங்களான மானக்கேடும், சிறைப்படுத்தப்பட்டமையும், இறப்பின் அச்சமும் அவளுக்கு நல்ல படிப்பினைகளாக இருந்தன. அவளைப் போன்றே மாண்பு மிக்க பிரடெரிக்கு இத்தகைய அனுபவங்களைச் சிறு பையனாக இருந்தபொழுதே அனுபவித்தார். தனிப்பட்ட அன்பு வாழ்க்கையும், மனவெழுச்சியும் அரசர்களுக்குத் தேவை இல்லை என்பதை அவர் அனுபவத்தால் நன்கு அறிந்தார். துன்பம் கற்பிக்க வேண்டிய படிப்பினைகள் ஒவ்வொன்றையும் எலிசபெத்து நன்கு கற்றிருந்தாள். எனவே காதல் உலகத்தினை, தனக்குப் போட்டியாகத் தோன்றியவளுக்குக் கொடுத்து, அதில் அவளை மெய்மறக்குமாறு செய்துவிட்டாள்.[1]

அவளுடைய இனிய பண்பிலே சிறிது வன்மையும் முரட்டுத்தனமும் கலந்திருந்தது. அவளுடைய வாழ்வில், கட்டுக்கடங்காத கடமைகளைத் திறமையாக அவள் செய்வதற்கு அவை ஓரளவிற்குத் தேவைப்பட்டது போலும். தனிப்பட்ட முறையில் அவள் விரும்பத்தக்க பெண்ணல்லள்; போற்றிப் பாராட்டத்தக்க அழகரசியும் அல்லள். ஆனால், தன்னுடைய குடி மக்களும், அரசவையினரும் கண்டு போற்றுமாறு 'கலைகள் அனைத்தையும் கற்று, அரியணையில் தனியே அமர்ந்து ஆட்சி புரிந்தாள். பெண்மைப் பண்பினை ஒரு சிறிதும் இழக்காது, வாழ்க்கையை அதன் முழுமைத்தன்மையோடு அவள் காதலித்தாள். அதனால் எல்லா

[1] எலிசபெத்து தனக்கு மகப்பேறு வாய்க்காது என்பதை அறிந்தே, எப்பொழுதும் திருமணம் செய்து கொள்ளுவதைப் பற்றி நோக்கம் இல்லாமலும், காதல் நாடகமாடுவதோடு, வேறு எத்தகைய விருப்பமும் கொள்ளாமலும் இருந்திருக்கலாம். ஆனால் இதையே காரணமாக உறுதியாகக் கூற முடியாது. இத்தகைய அளவிடற்கரிய 'இறப்பைப்' போன்ற அரசியல் மறைபொருளைச் செவிலும் அறியவொட்டாது காத்து வந்தமை அவளுடைய பண்புநலத்தின் சிறப்பியல்பாகும்.

வற்றையும் அரசின் நோக்கத்திற்கு அடிமைப்படுத்தினள். அவளுடைய கல்வியறிவு, அவளைப் பல்கலைக் கழகங்களின் அன்புக்குரியவளாககியது; அவளுடைய உள்ள உரமும் வீரமும் படைவீரர்களையும், கடல் மறவர்களையும் பாராட்டச் செய்தது. அவளுடைய சாகசச் செயல்கள் பிரபுக்களையும், அரசவையினரையும் அவரவர்களுடைய இடத்தில் இருக்குமாறு செய்வதற்கு ஒரு கருவியாகப் பயன்பட்டன; மேலும் அவர்களிடம் இருந்து பொதுப்பணிக்குத் தனிப்பட்ட ஒவ்வொருவருடைய அன்பினையும், ஈடுபாட்டையும் கடைசி வரையில் பெறுவதற்குத் தன் காதல் நாடகத்தை அவள் பயன்படுத்தி வந்தாள். லீசெஸ்டரின் தோலினைத் தடவி, அவருக்குக் கிளர்ச்சியூட்டி மகிழச் செய்திருக்கலாம். ஆனல், அவனுடைய எதிரியாகிய செசில் மிக உயர்ந்த அரசியல் கொள்கையில் அரசியின் நம்பிக்கைக்குரியவராகவே இருந்தார். எதற்கும் பயன்படாத, சதியாலோசனை புரியும் லீசெஸ்டரை எங்கு எலிசபெத்து திருமணம் செய்து கொள்ளுவாளோ என்ற பேரச்சத்தால், செசிலும் அவளுக்கு மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றியிருப்பார். செசில் தனக்கு எலிசபெத்தைத் திருமணம் செய்து வைப்பதானல், இங்கிலாந்தில் ரோமானிய திருச்சபைய்யை மீண்டும் நிறுவுவதாக ஸ்பெயின் அரசனுக்கு அறிவித்ததோடு, தான் ஒரு தூய்மைச் சமயவாதிகளின் புரவலன் போல் நடித்தும் வந்தார். எலிசபெத்து வேட்டையாடுவதிலும், நடனமாடுவதிலும்,முகமூடி ஆட்டத்திலும் (Masque), ஆடம்பர ஆரவாரங்களிலும் பேரார்வம் உடையவளாக இருந்தாள். அவ்வார்வமே அவளுடைய இறுதிப் பக்கபலமாக இருந்து, அவளுடைய பரந்த புகழை வலுப்பெறச் செய்தது. அவள் பொது இடங்களுக்கு அவ்வப்பொழுது சென்றமையும், நாட்டிலே உலாவந்தமையும், அவளுக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்ததோடு, அரசியிடத்து மக்கள் அசைக்க முடியாத பற்றுறுதி கொள்ளுமாறு தூண்டியது. அவளுடைய புறப்பாடு கலையழகு மிக்கதாக விளங்கியது. அவள் ஆடிய ஆட்டங்கள் சிறந்ததொரு ஆட்டக்காரன் அமைக்கும் மாண்புமிக்க கலைப்பொருளாகப் பொலிவுற்றது. அவ்வாட்டக்காரனுடைய உள்ளம் அவ்விளையாட்டில் அப்படியே எதிரொலித்தது. அது அரசிளங்குமரியின் ஆன்மாவை அவளுடைய அன்புமிக்க குடிமக்களின் ஆன்மாவாகவும், அம்மக்களின் ஆன்மாவை அவ்விளவரசியின் ஆன்மாவாகவும் மாற்றிக் கொள்ள உதவியது.

தற்கால அரசியல் அமைப்பிற்கிணங்கச் செய்யப்படும் அரசரின் பாராளுமன்றச் சொற்பொழிவிற்கும், எலிசபெத்து

பாராளுமன்றத்தில் பேசிய பேச்சுகளுக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. பாராளுமன்றத்தின் இரு சபையினரும் சேர்ந்த பேராட்குழு எலிசபெத்தை அரசியாகுமாறு வற்புறுத்த அவளிடத்துச் சென்றது. அப்பொழுது அவள் 'நான் ஒரு பெண்ணாக இருந்தாலும், என்னுடைய பதவிக்குத் தேவையான வீரமும் துணிவும், என்னுடைய தந்தை எப்பொழுதும் கொண்டிருந்ததைப்போல, என்னிடமும் இருந்து வருகிறது. நான் உங்களுடைய முடி சூட்டப்பெற்ற அரசி. நான் என்றும் வன்முறைச் செயல்களின் மூலம் எதையும் செய்யமாட்டேன். என்னுடைய நாட்டை விட்டு என்னுடைய இந்த உடையோடு நான் விரட்டப்படுவேனானால், கிறிஸ்துவ உலகின் எவ்விடத்திலும் நான் வாழ்வதற்குத் தேவையான திறமையையும், பண்புகளையும் பெற்றிருக்கிறேன். அப்பண்புகளை எனக்கு அளித்த இறைவனுக்கு நான் நன்றி செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறேன்' என்று கூறினாள்.

மனிதர்கள் உயர்ந்த பதவிக்கு வந்தால், சில ஆண்டுகளில் அல்லது சில மாதங்களில் பெரிதும் சோர்வடைந்துவிடுவர் என்று சொல்லுவார்கள். இவ்விராங்கனை நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு, பெரிதும் அச்சுறுத்தப்பட்ட தன் வாழ்க்கைக்கும் அரசிற்கும் தீமைகள் சூழ்ந்திருந்த போர்க் காலத்திலும், அமைதிக் காலத்திலும் தன்னுடைய முதல் அமைச்சராகத் தானே பணியாற்றி வந்தாள். ஆனால், அக்காலம் நெடுக அவள் நோய் வாய்ப்பட்டவளாகவும், பலதிறப்பட்ட மனப்போக்கிற்கு அடிமையாகவும், காரணமில்லாது உணர்ச்சி வயப்படுபவளாகவும், நரம்புக் கோளாறு உடையவளாகவும் அவள் துன்புற்றுக் கொண்டிருந்தாள். அவை அவளை ஆட்டியலைத்தது. ஆனால் கடமைகளைச் சரிவரச் செய்யவொட்டாது அவளை என்றுமே அவை ஆட்டியலைக்கவில்லை. அவளுடைய உள்ளம் அன்பற்றதாக இருந்திருக்கலாம். ஆனால், அது வைரமேறிய சீமை ஆலமரத்தினால் (Oak) செய்யப்பட்டதாக இருந்தது.

அவள் 'வெறும் ஆங்கிலேயப் பெண்ணாக இருந்தாள். தற்கால ஐரோப்பாவும், பண்டை ஐரோப்பாவும் கொடுக்க முடிந்த விரிந்த கல்வியறிவினை எலிசபெத்து பெற்றிருந்தாள். ஆகஸ்போர்ட்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களுடன் அவள் கிரீக்கிலும், இலத்தீனிலும் உரையாடினாள். மாக்கியவெல்லி (Machiavelli) பிறந்த இத்தாலிய நாட்டு மக்களிடத்துத் தூய இத்தாலிய மொழியினைச் சரளமாகப் பேசினாள். அக்காலத்தில் வழக்கிலிருந்த சொற்றொடரால், அவளுடைய பகைவர்கள் அவளை 'இத்தாலிய நாகரிகத்திலும், பண்பாட்டிலும் ஊறித்திளைத்த

ஆங்கிலேய மாது' (Inglese Italianata) என்று அழைத்திருப்பர். ஆனால்; அவளுடைய நெடுங்கால வாழ்க்கையில் இங்கிலாந்தின் கடற்கரையைவிட்டு அவள் எங்கும் சென்றதில்லை. இத்தாலியில் சமய மறுப்பாளர்களாக வெர்மிக்கிலி (Vermigli) என்பவரும், ஒஷினோ (Ochino) என்பவரும் அக்காலத்தில் சிறப்புற்றிருந் தனர். அவர்கள் வெறும் வெறியர்கள் அல்லர். அவர்கள் சிறந்த தத்துவஞானிகளாகவும் விளங்கினர். அவர்களுடைய கருத்துகளும், கோட்பாடுகளும் எலிசபெத்தைப் பெரிதும் கவர்ந்தன. அவ்விரு இயக்கங்களையும் எத்துணைக்காலம் வேறு படுத்தி அறிய முடியாமல் இருந்ததோ, அதுவரை அவள் சீர்திருத்த இயக்கத்தின் குழந்தையாக இல்லாமல், மறுமலர்ச்சி இயக்கத்தின் குழந்தையாகவே சிறப்புற்று விளங்கினாள். அவள் கோலட்டு, எராஸ்மஸ் ஆகியோரின் தற்கால மனப்போக்குடன் சமயத்தை நெருங்கினாள். ஆனால், அவர்களுக்குப் பிறகு இரண்டு தலைமுறை கழித்து, ரோமாபுரி இயேசு சங்கத்தார் வெறுக்கப் பட்ட காலத்திலும், பொருள் மாற்றம் நம்பமுடியாதது என்று கருதப்பட்ட காலத்திலும், அவள் அவர்களுடைய மனநிலையோடு சமயத்தைச் சீர்திருத்த முனைந்தாள். ஜெனீவாவின் திருச்சபை அவளைச் சிறிதும் கவரவில்லை. மேலும் ஜெனிவா மாநிலம் அதனு டைய குடியரசுப் பண்போடு, அரசனாக உரிமையற்ற ஒருவனால் கைப்பற்றப்பட்டது அவளுக்கு மிக்க வருத்தத்தை உண்டாக் கியது. அவளுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர் 'பாதிரி வேண் டாம்; அரசர் வேண்டாம்' என்று கூறினர். ஆனால் அதற்குப் பன் னெடுங் காலத்திற்கு முன்பே, எலிசபெத்து அதைப்பற்றிச் சிந்தித்தாள்; அதை அவள் கடைப் பிடித்தும் ஒழுகிவந்தாள்.

வெறியுணர்ச்சி வளர்ந்து கொண்டிருந்த காலத்தில், எலிச பெத்து சமயப் பற்றற்றவளாகவும், சமயப்பொறையுடைமை உடையவளாகவும் இருந்தாள். அவளுடைய உணர்வெல்லாம் ஆங்கிலேய மயமாக இருந்தது. ஆனால், அவள் பெற்ற கல்வி ஐரோப்பியப் பண்புடையதாக இருந்தது. ஆங்கிலிகத் திருச் சபையை மீண்டும் நிறுவுவதற்கென்றே அவள் பிறந்தாள்; அவ்வுடைய பெற்றோரால் வளர்க்கப்பட்டாள். கத்தோலிக் கருக்கும் புராடஸ்டண்ட்டுகளுக்கும் இடையே அறிவாற்றல் வாய்ந்த உடன்பாட்டினைக் காண முயலுவதே அவளுடைய சிறந்த குறிக்கோளாகும். அவ் உடன்பாட்டின் மூலம் அரசையும், பொது மக்களையும் பிரிட்டனின் தலைவர்களாக்க அவள் முயன் றாள். அவள் உள்நாட்டுப் போர் மூளாமல் காக்க விரும்பினாள். தன்னுடைய தகப்பனாரின் கொள்கையைப் புதுப்பிப்பதே தன்னுடைய தலையாய கடமையாக எலிசபெத்து கருதினாள்.

ஆனால், காலம் மாறிக் கொண்டிருந்தமையால் அக்கால மாறுதலுக்கேற்ற வண்ணம், அக்கொள்கையில் அவள் பேரளவிற்குப் புராடஸ்டண்ட்டு சமயக் கருத்துகளைச் சேர்த்துக் கொண்டாள். இயேசு சங்கத்தினரின் பிரசாரத்தையும், ஈட்டிப் படையினரையும், ஸ்பானியக் கடலோடிகளையும் வெற்றிகொள்ளுவதற்குப் போப்பினைக் கிறிஸ்து பெருமானின் எதிரியாகக் கருதியவர்களையும், கூட்டுவழிபாட்டினை வெறுத்து ஒதுக்கியவர்களையும் அவள் தமக்கு உதவியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டியதாயிற்று. கிரான்மர் புதுப்பித்த வழிபாட்டு நூல் இதற்குச் சிறந்ததொரு இடைப்பட்ட நெறியாகப் பயன்பட்டது. உருவ வழிபாட்டினராகிய ஸ்பானியரை எதிர்த்து வெற்றி பெற்றதற்கு முன்னரும், அதன் பின்னரும் அவ்வழிபாட்டு நூல், டிரேக்கின் கப்பலில் இருந்தவர்களுக்குச் சிறந்த மன அமைதியைக் கொடுத்தது. நாட்டின் வட்டாரத் திருச்சபைகளில், பெர்னார்டு கில்பினும் (Bernard Gilpin) அவரைப் போன்ற நேர்மையான பல புராடஸ்டண்ட்டு மதகுருமார்களும், நாகரிகமற்ற நாட்டுப்புற மக்களின் அறியாமை நிறைந்த மனத்தில் புதிய சமயத்தின் கோட்பாடுகளை ஆழப்பதியுமாறு அரிய தொண்டாற்றுவதற்கு, அவ்வழிபாட்டு நூல் பேருதவியாக இருந்தது. பன்னிரண்டு காசுகளைத் தண்டமாக இறுக்கவேண்டுமே என்று அஞ்சி, கத்தோலிக்கப் போர்வையில் மறைந்து திருச்சபைக்கு ஐயப்பாட்டுடன் சென்று வந்தவர்கள் அவ்வழிபாட்டு நூலைக்கண்டு அதிர்ச்சியடையவில்லை என்றாலும், பெரிதும் அச்சமுற்றார்கள். அவர்கள் அவ்வழிபாட்டுப் பாடல்கள் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டாலும், அவை பழைய வழிபாட்டுப் பாடல்களாக இருப்பதை மறக்கவில்லை. அவ்வழி பாட்டுநூல் பலதிறப்பட்ட மக்களுக்குப் பலதிறப்பட்ட பொருளையுணர்த்துவதாக 'பச்சோந்தியை'ப் போன்று காணப்பட்டது. இவ்வியல்பு, எலிசபெத்திற்கு அவ்வப்பொழுது அவளுடைய புதுப்புது கொள்கைகளுக்கேற்ற வண்ணம் அவற்றை விளக்குவதற்குச் சிறந்ததொரு கருவியாகப் பயன்பட்டது. எப்படி அவள் தன்னுடைய பேழையிலிருந்த பலவண்ண உடைகளை, இடத்திற்கும், காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவாறு மாற்றி மாற்றி உடுத்து, மக்கள் முன்னிலையில் பகட்டாகப் பவனிவர விரும்பினாளோ, அதைப் போன்று அவ்வழிபாட்டு நூலினைத் தனக்கேற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ளவும் முயன்றாள்.

கி. பி. 1559-ல் கூடிய பாராளுமன்றம் மாபெரும் முதன்மைச் (Act of suprency) சட்டத்தை நிறைவேற்றியது. அதன் மூலம் அது சீர்திருத்த இயக்கத்தை ஆங்கிலேயப் பாணியில்

புத்துயிர்ப்புறச் செய்தது. அச்சட்டம் போப்பு ஆண்டவரின் அதிகாரத்தை அழித்தொழித்தது. அதையடுத்துப் பாராளு மன்றம் வழிபாட்டு ஒருமைச் சட்டத்தை (Act of Ilniformity) நிறைவேற்றியது. அதன் மூலம் வழிபாட்டு நூலைக் (Prayer Book) கொண்டு செய்யப்படும் வழிபாடே சட்டத்திற்குட்பட்ட வழிபாடு என்று அறிவித்தது. இச்சட்டங்கள் அரசின் விருப் பத்தையும், மக்கள் சபையினரின் விருப்பத்தையும் தெரிவிப் பனவாக அமைந்தன. நம்பிக்கைக்குரிய பொதுமக்களின் சமயச் சீர்திருத்த ஆர்வத்தைக் கட்டுப்படுத்தும் பேராற்றலாக அரசி விளங்கினாள். மக்கள் அரசியைத் 'திருச்சபையின் மாபெரும் தலைவி' என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொள்ளுமாறும், அதனைச் சட்டத்தில் சேர்க்குமாறும் தூண்டிய பொழுது, அரசி அவ்வேண்டுகோளை ஏற்க மறுத்தமை இதற்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும். ஆனால் அவள் திருச்சபையின் மாண்பு மிக்க ஆளுநர் (Supreme Governor) என்னும் பதவியையேற்று, கடமைகளைச் செய்ய இசைந்தாள். சமயச் சடங்குகளிலும், கொள்கைகளிலும் செய்யப்பட்ட மாபெரும் மாறுதல்களைப் பிரபுக்கள் சபையினர் பேரிடர்ப்பாடுகளுக்கு இடையே ஏற்றுக்கொள்ளுமாறு செய்யப்பட்டனர். சமயச் சார்பற்ற பிரபுக்கள் இச்சீர்திருத்தச் சட்டத்தில் ஆர்வம் குறைந் தவர்களாக இருந்து வந்தனர். அத்துடன் அவர்கள் கருத்து வேறுபாடுடையவர்களாகவும் இருந்தனர். கத்தோலிக்கரின் நன்மையை நாடும் சில திருத்தங்களைப் பிரபுக்கள் கொண்டு வந்து, அவற்றை மக்கள் சபையினரை ஏற்றுக் கொள்ளுமாறு வீணாக வற்புறுத்தி வந்தனர். ஆனால், கீழ்ச் சபையைச் சார்ந்த உறுப்பினர்களே இறுதியில் வெற்றி பெற்றனர். அவர்கள் பிரபுக்களைக் காட்டிலும் அரசினை நடத்துவதில் முக்கிய பங்கேற்றிருந்தமையும், அடிக்கடி அரசியையும், அவளுடைய ஆலோசனை மன்றத்தையும் கலந்து செயலாற்றிவந்தமையுமே அவர்களுடைய வெற்றிக்குக் காரணமாகும்.[1]

மேல் சபையில் இருந்த பாதிரிமார்கள் அனைவரும் சமயச் சீர்திருத்தங்கள் எல்லாவற்றையும் எதிர்த்தனர். ஆனால், அவர்களுடைய எதிர்ப்பு வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட பொழுது தோல்வியுற்றது. எதிர்பாராத அளவிற்குப்

[1] இந்த மக்கள் சபை முழு நிறைவு பெற்றதாக இல்லை. எலிசபெத் தின் தந்தை, சகோதரன், சகோதரி முதலியோர் காலத்தில் தேர்ந் தெடுப்பதற்கு இருந்து வந்த உரிமைகளே இக்காலத்திலும் நடைமுறை யில் இருந்ததற்குரிய சான்றுகள் உள்ளன — பார்க்க: English Hist. Review, July and october, 1908, Mr. Baynes' Articles.

பாதிரிமார்கள் பாராளுமன்றத்திற்கு அன்று வராமல் போனதாலேயே, அவர்கள் கொண்டுவந்த திருத்தம் தோல்வியுற்றது. பாராளுமன்றத்திற்கு வெளியே, காண்ட்டர்பரி மாநிலக் குருமார்களின் திருக்கூட்டம், போப்பு ஆண்டவரின் மேலாண்மையை மீண்டும் வற்புறுத்தியது. அக் கூட்டத்துக் குருமார்கள் பொருள் மாற்றக் கோட்பாட்டினைத் திரும்பவும் வற்புறுத்தினர். அவர்களுடைய விருப்பத்தைப் பற்றிப் பாராளுமன்றம் கவலைப்படவில்லை அவர்களுடைய எதிர்ப்பை அது புறக்கணிக்கலாயிற்று.

இச் சீர்திருத்த இயக்கம், அரசும் பாராளுமன்றமும் மேற்கொண்டு நடத்திய பொது மக்களின் புரட்சியாகும். சிறப்பாக அரசும் பொதுமக்களும் சேர்ந்து நடத்தியதாகவே அதைக் கூறலாம். எனவே, அச்சீர்திருத்தங்கள் திருச்சபை மன்றங்களில் இடம் பெறுத, சமய உணர்வுமிக்க பொது மக்களின் விருப்பத்திற்கு மாறு பட்டனவாக இல்லை. மானியம் பெற்று வந்த எண்ணுயிரம் மதகுருமார்களுள், ஏழாயிரம்பேர் சட்டத்தின் மூலம் சமயத்தில் செய்யப்பட்ட மாற்றங்களை அமைதியாக ஏற்றுக் கொண்டனர். எலிசபெத்து ஆட்சியின் முதலாண்டில் மதகுருமார்களுக்கு எதிராக அரசாங்கம் கொண்ட வெறுப்பு முரட்டுத் தனமாக மாறியதற்குச் சில காரணங்கள் கூறலாம். இயேசு சங்கத்தினரும் டிரெண்ட்டு அவையினரும் சிறப்புற்று விளங்கிய அக்காலத்தில், சீர்திருத்த இயக்கத்தினரும், ரோமானியக் கிறிஸ்துவ சமய ஆதரவாளர்களும், மிக்க கருத்து வேற்றுமையுடையவர்களாகவும், எத்தகைய தொடர்பும் அற்றவர்களாகவும் இருந்தனர். உடன்பாட்டினைப் பெரிதும் விரும்பும் நெடுந் தொலைவிலுள்ள இங்கிலாந்திலேயே இவ்வாறு அவர்கள் வெறியர்களாக மாறியது அரசிக்குப் பிடிக்கவில்லை. மேரி அரசி திருச்சபையின் அதிகாரிகளாக இருந்த புராடஸ்டண்ட்டுக் கோட்பாடுடைய மக்கள் அனைவரையும் பூண்டோடு அழித்துவிட்டமை இதைவிடச் சிறந்ததொரு காரணமாகும். கி. பி. 1559–ல் நடைபெற்ற திருக் கூட்டத்திற்கு, குருமார்கள் புராடஸ்டண்ட்டு நோக்குடையவர்களின் பிரதிநிதிகள் அழைக்கப்படவில்லை. அவ்வாண்டின் பாராளுமன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து அக்கூட்டம் கூடியது. எட்டாம் ஹென்றியின் காலத்தை விடப் பொதுமக்களின் கருத்துகளாகிய எழுச்சியினல் குருமார்களின் உரிமைகள் தடைப்படுத்துவதைப் போன்று தோன்றியது.

ஆனால், இங்கிலாந்தின் பொதுமக்கள் அக்காலத்திய ஸ்காட்டிய சீர்திருத்தக்காரர்களைப் போன்று, சமயத் தொடர்பான மன்றங்களில் பொதுமக்களின் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டும் என்றும், ஒவ்வொரு வட்டாரத் திருச்சபைக் குருமார்கள் அங்குள்ள 'மூத்தோர்' அவையினைக் கலந்தே செயலாற்ற வேண்டும் என்றும் வற்புறுத்த முன்வரவில்லை. ஆங்கிலத் திருச்சபையின் உள்ளமைப்பு, இடைக்கால வடிவிலேயே முழுவதும் குருமார்களே இருக்குமாறு விடப்பட்டது. அதை அரசும், பாராளுமன்றமும் வெளி விவகாரங்களில் கட்டுப்படுத்துவதற்காகவே அவ்வாறு விடப்பட்டது. எனவே, தங்களுக்குப் பேரளவிற்கு இன்னும் வாக்குரிமை அளிக்கும் அப்புறக் கட்டுப்பாட்டைப் பெரும்பான்மையான மதகுருமார்கள் இன்றியமையாத தேவையாகவே கருதினர். மற்றவர்கள் அரசும், பாராளுமன்றமும் சமயச்சடங்குகள் அனைத்தையும் தேசியத் தனிஉரிமயையாக்குவதாக நினைத்தார். அதனால் நாட்டு மக்கள் அனைவரும் இணங்காதவராகவும் (Dissenters), ரோமானிய சமய ஆதரவாளர்களாகவும், தூய்மைவாதிகளாகவும் போய்விடுவர் என்று நம்பினர். பல் வேறு சமயங்களையும் ஓரேசமயத்தில் வாழவிடவேண்டும் என்று யாரும் கனவில்கூட கருதவில்லை. எனவே நாட்டிலே எச்சமயத்தை ஒப்பற்ற சமயமாக நிலைநாட்டுவது என்பதைப்பற்றிப் பாராளுமன்றமே முடிவு செய்ய வேண்டும் என்று நாட்டு மக்கள் அனைவரும் கருதினர்.

பாராளுமன்றத்தில், சமயக்கோட்பாடுகளையும், சடங்குகளையும் வரையறுத்துச் சட்டமாக நிறைவேற்றப்பட்ட சட்டங்களைக்கொண்டு திருச்சபையினைப் பொதுமக்கள் வெளியே கட்டுப்படுத்தி வந்தனர். அரசியால் நியமிக்கப்பட்ட ஆணையர்களும், பாதிரிமார்களும், அவளுடைய கட்டளைப்படி திருச்சபையினைக் கண்காணித்தும், ஆட்சி புரிந்தும் வந்தனர். அவளுடைய ஆட்சியின் இறுதிப் பகுதியிலும், அவளுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அரசர்களிருவர் காலத்திலும், மிகுதியாகத் திருச்சபையின் தூய்மைவாதிகள் பாராளுமன்றத்தின் உதவியை நாடினர்;' திருச்சபையின் ஆங்கிலிகக் கட்சியினர் அரசின் உதவியைவேண்டி நின்றனர். ஆனால், இவ்விருவகைக் கோட்பாட்டினரும் ஸ்காட்டிய திருச்சபையின் உயர்ந்த சமய அடிப்படையைப் பின்பற்ற முடியவில்லை. ஸ்காட்டிய திருச்சபை முற்றிலும் தனியுரிமையுடையதாக விளங்கியது. அரசின் கொள்கைகளை வரையறுப்பதிலும், ஸ்காட்டிய பாராளுமன்றத்திற்குக் கட்டளையிடுவதிலும் பேராற்றல் வாய்ந்ததாக

47

அது விளங்கியது. 'கடவுளின் மடத்தனமான கீழாளாக' விளங்கிய அரசனையும் தன்னுடைய ஆணைக்கு அடி பணிந்து நடக்குமாறு அத்திருச்சபை செய்தது. அத்தகைய உரிமையையும் பேராற்றலையும் இங்கிலாந்தின் திருச்சபை என்றுமே பெற்றிருந்ததாகத் தெரியவில்லை.

ரோமாபுரியும், ஜெனேவாவும், லயோலாவும், நாக்ஸும் (knox) திருச் சபைக்கு உரிமை அளிக்க வேண்டும் என்றும், திருச்சபையின் உரிமைகளே ஒரு நாட்டினுடைய அரசின் உரிமைகளைக் காட்டிலும் சிறப்புடையதாக இருக்க வேண்டும் என்றும் உரிமைப் போர் தொடுத்தனர். ரோமாபுரி வேண்டிய உரிமைகள், சமயச்சடங்குகளின் ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஜெனேவா வேண்டிய உரிமைகள் சமய மக்களாட்சிப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இங்கிலாந்தின் திருச்சபை அத்தகைய உரிமைகள் எதையும் பெற முயலவில்லை. மக்கள் தாங்களே சிந்திப்பதற்குக் கற்றுக் கொண்ட இங்கிலாந்தில், சமயச் சடங்குகளின் ஆதிக்கத்தின் வாழ்நாள் முடிவுறும் நிலையை அடைந்து கொண்டிருந்தது. மக்களாட்சி உணர்வு அக்காலத்திய இங்கிலாந்தில் பெருக்கெடுத் தோடியது. எனவே, அது வெளிப்படுத்துவதற்குச் சிறந்ததொரு அமைப்பாக—உறுப்பாகப் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையாகிய மக்கள் சபை விளங்கியது. இதற்கு மாறாகத் திருச்சபையின் மன்றங்களிலும், சங்கங்களிலும், மக்களாட்சி உணர்வு வெளிப்பட வேண்டிய தேவை இங்கிலாந்தில் இல்லாமற் போயிற்று. டியூடர் காலத்திய ஆங்கிலேயர்களுக்கு இது மிகவும் பொருத்தம் உடையதாக இருந்தது. ஏனெனில், அவர்கள் சமயத்தோடு மட்டுமல்லாமல், வேறு பல அமைப்புக்களிலும், இயக்கங்களிலும் ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். இதற்குப் பிறகு சிறிது காலம் கழித்து, சமயத்திலே மக்களாட்சி உணர்வு வெளிப்பட முயன்ற பொழுது, அவ்வுணர்வு இணங்காதார் (Non--Conformists) மூலம் வெளிப்பட்டது. எலிசபெத்து அரசி செய்த சமய உடன்பாடு, 'பொறையுடைமை' என்னும் பண்பினைல் வேகம் குறைக்கப்பட்டு, இங்கிலாந்தின் நிலையங்களிலும், அதைவிடத் தற்கால இங்கிலாந்தின் உள்ளார்ந்த உணர்விலும், உயிர்ப்பண்பிலும் நிலையாக ஓர் இடத்தைப் பெற்றது.

கி. பி. 1559-ஆம் ஆண்டு, தற்கால இங்கிலாந்து உருவாகிய முதலாண்டாகும். அதைவிடத் தற்கால ஸ்காட்லாந்து பிறந்த ஆண்டு என்று அதை உறுதியாகக் கூறலாம். இங்கிலாந்தின்

வடக்கும், தெற்கும் எதிர்பாரா வகையில் இறுதியாக ஒரே சமயத்தில் ரோமாபுரியின் மேலாதிக்கத்தை உதறியெறிந்தன. அதனால் மாபெரும் விளைவுகள் உண்டாயின. இவ்விரு நிகழ்ச்சி களும் இவ்விரு நாடுகளிலும் சீர்திருத்த இயக்கம் இடையீ டின்றி நிலைபெற்று விளங்குமாறு செய்தன. அவை இதுவரை இவ்விரு நாடுகளுக்கும் இடையே இருந்து வந்த பகைமை ஒழிந்து, ஒருவருக்கொருவர் உதவியாக நேசஉறவு கொண்டு நாட்டினைப் பாதுகாக்கவும் தூண்டின. மேலும், ஆங்கில, ஸ்காட் டிய நாட்டுப் பற்றினை அந்நிகழ்ச்சிகள் வளர்த்தன. இவ்விரு நாடுகளிலும் ஐரோப்பியப் பெருநிலப் பரப்பின் சமயச் சார் பற்ற ஆதிக்கத்தினின்றும், ஆன்மீக ஆதிக்கத்தினின்றும் விடு தலை பெற வாய்ப்பளிப்பதே சீர்திருத்த இயக்கத்தின் நோக்க மாகக் கருதப்பட்டது. கி. பி. 1558ஆம் ஆண்டின் கூதிர்ப் பருவத்தில் இங்கிலாந்து ஸ்பெயினுக்கு அடிமைப்பட்ட ரோமா னிய கிறிஸ்துவ சமயத்தை மேற்கொண்ட நாடாக இருந்தது; ஸ்காட்லாந்து பிரான்சுக்கு உண்மையில் அடிமையான கத்தோ லிக்க நாடாக இருந்தது. ஆனல், இரண்டு ஆண்டுகள் கழிந்த வுடன், அவை இரண்டும் அயல் நாட்டுப் பிணைப்பிலிருந்து முழு விடுதலை பெற்ற புராடஸ்டண்ட்டு நாடுகளாகச் சிறப்புற்று விளங்கின. அவை இரண்டும் தாங்கள் புதிதாகத் தேர்ந்தெடுத் துக் கொண்ட சமயத்தினை, அவற்றின் தேசிய உரிமையுடன் ஒப்புமையுடையதாகப் போற்றின. ஸ்பெயினும் பிரான்சும் எதிரிகளாக் இருந்தமையாலும் இங்கிலாந்தும், ஸ்காட்லாந்தும் நெருங்கிய நண்பர்களாக இருந்தமையாலும் இவ்விரு நாடுகள் செய்த புரட்சிகள் வெற்றி பெற்றன. முதலாம் எட்வர்ட்டின் ஆட்சிமுதல் இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் நண்பர்களாக இருந்தன. இத்தகைய இருவகை நெருக்கடிகளின் காரணமாக, வில்லியம் செசிலும் ஜான் நாக்ஸும் சேர்ந்து பெரும்பிரிட்டனுக் குக் (Great Britain) கால்கோள் விழா நடத்தினர்.

இங்கிலாந்து, சீர்திருத்த இயக்கத்தினை மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலம் அணுகியது. ஸ்காட்லாந்து, மறு மலர்ச்சி இயக்கத்தினை, சீர்திருத்த இயக்கத்தின் மூலம் அணுகியது. ஸ்காட்டியர்களுக்குக் கத்தோலிக்க சமயம், ஒரு சமயமாகத் தோன்றவில்லை. ஏனெனில் தெற்குப் பிரிட் டனைக் காட்டிலும், ஸ்காட்லாந்தில் அச்சமயத் திருச்சபை ஊழல் மலிந்ததாகவும், ஆன்மீக உணர்வினை வளர்ப்பதில் திறமை யற்றதாகவும் இருந்தது. அதனல் ஸ்காட்டியருக்குக் கத்தோலிக்க சமயத்திடத்து இயல்பாகவே வெறுப்புணர்ச்சி தோன்றி வளரலாயிற்று. கி. பி. 1513-ல் பிளாடனில் (Flodden)

மிக முக்கியமான பிரபுக்களைக் கொன்று குவித்ததன் மூலம், ஸ்காட்லாந்தின் சமயச் சார்பற்ற சக்திகள், குருமார்களும், பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்த வீரர்களும் பெற்றிராத பேராற்றலைப் பெற்றன. அதன் பிறகு ஸ்காட்லாந்தில் தலைமைக் குருமார்களும், பிரபுக்களின் இளைய புதல்வர்களும் பொது மக்களைப் போல் வாழ்ந்தனர். அவர்கள் மடாலயங்களுக்காகவும், திருச்சபைகளின் சிறப்புரிமைகளுக்காகவும் வாளையும் துப்பாக்கியையும் கொண்டு தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டனர். சர் டேவிட்டு லிண்ட்சே (Sir David Lyndsay) இயற்றிய நாட்டுப் பாடல்களும் மற்றவர்கள் இயற்றிய 'தெய்விகக் கதைப் பாடல்களும்' 'திருச்சபையினரின் வாழ்க்கையைப் பற்றியும், உரிமைகளைப் பற்றியும் மக்கள் உள்ளங்களில் வெறுப்புணர்ச்சி தோன்றுமாறு செய்து, சீர்திருத்த இயக்கத்திற்கு வழி வகுத்துக் கொடுத்தன, நாக்ஸின் தலைமையின் கீழ், புராடஸ்டண்ட்டு சமயம் ஸ்காட்லாந்து மக்களுடைய அறிவாற்றல்களையும், அறவுணர்வையும் ஆட்கொண்டது. அதைப் போன்று அடுத்த நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான், இங்கிலாந்தில் பையப் பைய புராடஸ்டண்ட்டு சமயம் செல்வாக்குப் பெற்றது. இங்கிலாந்தில் அரசும், அரசைச் சார்ந்தவர்களுமே சீர்திருத்த இயக்கத்தைப் போற்றி ஆதரித்தனர். ஆனால், அதே நேரத்தில் அங்கு வாழ்ந்த நிலமானியப் படைமுறைப் பிரபுக்கள் சீர்திருத்த இயக்கத்தில் பேரார்வம் கொள்ளாதவர்களாக அல்லது அதை எதிர்ப்பவர்களாகவே இருந்தனர், ஆனால், ஸ்காட்லாந்தில் இதற்கு முற்றிலும் மாறாக இருந்தது. ஆனால், இவ்விரு நாடுகளிலும் அவ்வியக்கத்தின் நடுநாயகமாக நகரக் குடிமக்கள், உழவர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள், சிறு நிலக்கிழார்கள் முதலியோர் விளங்கினர். இங்கிலாந்தில் ஊர்ப் பெரிய தனக்காரர்களும், ஸ்காட்லாந்தில் நிலக்கிழார்களும் (Lairds) சீர்திருத்த இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டனர்.

கி. பி. 1559-ஆம் ஆண்டிற்குப் பிறகு புராடஸ்டண்ட்டு சமயத்தினர் ஸ்காட்லாந்தில் நாட்டுப் பற்று மிக்க தேசிய வாதிகளாகச் சிறப்புற்றனர். அந் நூற்றாண்டில் நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் இடைப்பட்ட ஆண்டுகளில், கத்தோலிக்க சமயத்தினரே ஆங்கிலேயர்களின் தலையீட்டைத் தேசிய அடிப்படையில் எதிர்த்து நின்றனர். எட்டாம் ஹென்றி, இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் ஒன்றுபட்ட ஒரு நாடாக விளங்கவேண்டும் என்பதை நன்குணர்ந்திருந்தார். அதற்காகத் தம்முடைய மகன் எட்வர்ட்டுக்கு ஸ்காட்டிய அரசியான குழந்தை மேரி

ஸ்டுவர்ட்டைத் திருமணம் செய்து வைத்தார். ஆயினும், முட்டாள் தனமாக அவர் வாளினைக் கொண்டு ஸ்காட்லாந்தை அச்சுறுத்தித் தம்முடைய கொள்கையைச் செயற்படுத்த முயன்றார். டிவீட்டு (Tweed) பள்ளத் தாக்கிலும், லோத்தியன் பகுதியிலும் அடிக்கடி ஆங்கிலேயர் படையெடுத்துச் சென்று, பேரழிவு வேலைகளில் ஈடுபட்டமை ஸ்காட்டியர்கள் அவர்களைக் கொடியவர்கள் என்றும், புறச்சமயத்தினர் என்றும் வெறுக்கவும், தூற்றவும் செய்தது. அத்தகைய ஆங்கிலேயர்களை ஆதரிக்கும் ஸ்காட்டியர்களையும் அவர்கள் வெறுக்கத் தொடங்கினர் (பார்க்க: படம் எண்: 15). ஹென்றி இறந்தவுடன் அரசின் காப்பாளராக விளங்கிய சாமர்செட்டும், பிங்க்கிப் (Pinkie) போர்க்களத்தில், அத்தகைய கொடுஞ் செயல்களிலேயே ஈடுபட்டார். அப்போரில் (கி. பி. 1547) ஸ்காட்டியர் படுதோல்வியுற்றனர். ஆனால், சாமர்செட்டின் பகற்கனவுகள் அனைத்தும் அதனால் அழிந்தொழிந்தன. அவர் பெரும் பிரிட்டனை நிறுவவேண்டும் என்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தார். 'கடலையே சுவராகவும், ஒருவருக்கொருவர் காட்டும் அன்பையே அதற்கு அரணாகவும்' கொண்டு, பெரும் பிரிட்டனை உருவாக்க அவர் விரும்பினார். அவருடைய மனக்கோட்டை அவருடைய கொடுஞ்செயல்களாலேயே தகர்த்தெறியப்பட்டது. ஆறும் எட்டுவர்ட்டிடத்து முரட்டுப் பிடிவாதமாகக் காதல் கொண்ட மேரி ஸ்டுவர்ட்டை, அப்பாதையிலிருந்து வேறு வழியில் திருப்ப விரும்பிய ஸ்காட்டியர், கருத்தைக் கவரத்தக்க அச்சிறுமியைப் பிரான்சிற்கு அனுப்பி (கி. பி. 1548) வைத்தனர். பொருத்தமற்ற பிரான்சின் சூழ்நிலையில் பிடிவாதமும், முரட்டுத் தனமுமுள்ள தன்னைத்தானே அவள் அடக்கி யாளுவதற்குக் கற்றுக் கொள்ளுமாறு அவர்கள் செய்தனர்.

ஆனால், பிரான்சோடு நேச உறவுகொண்டதன் விளைவாகப் பிரான்சின் படை, ஸ்காட்லாந்தில் நிறுத்தி வைக்கப்பட்டதை மானக் கேடாகக் கருதிய ஸ்காட்டியர், நெடு நாட்கள் பிரான்சோடு நட்புறவு கொண்டவர்களாக இருக்க விரும்பவில்லை. அக்காலத்திய இங்கிலாந்தில் ஸ்பானியரின் ஆதிக்கம் எவ்வாறு பொறுக்க முடியாததாகப் போயிற்றோ, அதைப்போலவே ஸ்காட்லாந்தில் காலிக்குகளின் (Gallic) ஆதிக்கம் கட்டுக்கடங்காததாகப் போயிற்று. ஸ்காட்லாந்தின் அரசியான மேரி, அவளுடைய பதினாறும் வயதில் பிரான்சு நாட்டு அரசரின் மூத்த மகனைத் திருமணம் செய்து கொண்டாள். அத்துடன் அவளுக்குக் குழந்தை பிறக்காமல்

போனால், ஸ்காட்லாந்து பிரான்சிற்கு நன்கொடையாக அளிக்கப் படவேண்டும் என்ற மறைமுகமான உடன்படிக்கை ஒன்றிலும் அவள் கையெழுத்திட்டாள். அவள் ஸ்காட்லாந்தில் இல்லாத காரணத்தினால், அரசியின் சார்பில் கைசைச் (Guise) சார்ந்த, மேரி என்பவள் ஆண்டு வந்தாள். அவள் பிரான்சின் படைகளையே பெரிதும் நம்பி வாழ்ந்தாள். புரூஸ் (Bruce) பிறந்த நாட்டைப் பிரான்சின் நன்மைக்காக ஆளப்படும் ஒரு காப்பரசாகவே மேரி கருதினாள். இச்சூழ்நிலையில்தான், புராடஸ்டண்டுகள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, தேசிய விடுதலைக்காகப் போராடத் தொடங்கினர். ஆனால், கத்தோலிக்க சமயம் பிரஞ்சுக்காரர்களின் ஆக்கிரமிப்பினை ஆதரிக்கும் எடுப்பார் கைப்பிள்ளையாக மாறியது. கைசைச் சார்ந்த மேரியின் தலைமையில் வடக்குப் பிரிட்டனும், மேரி டியூடரின் தலைமையில் தெற்குப் பிரிட்டனும் 'கொடிய பெண்களின் ஆட்சி'யால் அல்லலுற்றன, நாக்ஸ் பிற்காலத்தில் தமக்கும் எலிசபெத்திற்கும் உண்டாகப்போகும் தொடர்பினை அறியாது, இம்மகளிர் ஆட்சியை மிக வன்மையாகக் கண்டிக்கலானார்.

இத்தகைய சூழ்நிலைகளில், நிலமானியப் படைமுறை அமைப்பில் உண்டாகும் கலகத்தைப் பயன்படுத்தி, அரசை அச்சுறுத்தக் குழுக்கள் அமைத்துப் பழக்கப்பட்ட ஸ்காட்டிய பிரபுக்களில் சிலர் சேர்ந்து, புதிய சமயத்தைப் பாதுகாக்க கி. பி. 1557-ல் ஒரு குழுவினை அமைத்தனர். அவ்வுடன்பாட்டின் உறுப்பினர்கள், முதலில் ஸ்காட்லாந்து கடவுளோடு செய்து கொண்ட பல 'உடன்படிக்கைகளுக்கு'க் கட்டுப் பட்டனர். அதனை அவர்கள் 'பிரபுக்களின் திருக்காட்டம்' என்று அழைக்கலாயினர். அக்கூட்டம் பல பண்ணைகளைக் கொண்ட ஒரு சங்கமாக அமைக்கப்பட்டது. ஒவ்வொரு சங்கத்திலும் புராடஸ்டண்ட்டுகளில் சிறப்புமிக்க ஒருவர் சமயத்துறை அமைச்சராக, பிரபுவாக, நிலக்கிழாராக அல்லது நகரக்குடி மகனைப் பதவியேற்றனர். ஸ்காட்லாந்தின் பாராளுமன்றத்தைக் காட்டிலும், இச்சங்கம் நாட்டிலிருந்த அரசியல் சக்திகள் அனைத்தின் பிரதிநிதிகளையும் கொண்டிருந்தது. ஆனால், ஸ்காட்லாந்தின் பாராளுமன்றம் நிலமானியப் படைமுறையினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. அது பதிவுகள் செய்யப்படும் முறைமன்றத்தைக் (Court of Registration) காட்டிலும் சிறந்த செயல்கள் எதையும் செய்யவில்லை. 'பிரபுக்களின் திருக்கூட்டம்', படை, திருச்சபை, அரசியல் அவை ஆகிய அனைத்தும் ஒரே வடிவில் அமைக்கப்பட்டதைப் போன்று காட்சியளித்தது. அது

ஸ்காட்லாந்தில் நிலமானியப் படைமுறை வீரர்களையும், கலகக் காரப் பிரபுக்களின் கூட்டங்களையும் அடுத்தும், ஸ்காட்லாந்தின் மக்களாட்சிப் பண்புமிக்க சமயத்தின் சபையினை கிர்க்கில் (Kirk) அமைப்பதற்கு முன்பும் இருந்த இடைப்பட்ட காலத்தில், இங்கிலாந்தின் நிலையை விளக்குவதாக அமைந்திருந்தது. 'திருக் கூட்டத்தைச்' சார்ந்த பிரபுக்களே, அவை ஒவ்வொன்றுக்கும் தலைவர்களாக இருந்தனர். ஆனால், அவற்றின் கூட்டங்களில் மக்களிடையே செல்வாக்கு பெற்ற கருத்துகளும், சமயச் சீர்திருத்தக் கோட்பாடுகளும் பேசப்பட்டன ; ஆராயப்பட்டன. சிறப்பாக ஜான் நாக்ஸின் மூலம் மக்களுடைய குரல் அக் கூட்டங்களில் எதிரொலித்தது.

ஸ்காட்லாந்தின் மோஸஸ் (Moses) என்றுபுகழப்பட்ட நாக்ஸ் பெறற்கரிய இருவகைப் பண்புகளை ஒருங்கே பெற்றிருந்தார். அவர் மிகச்சிறந்த ஞானியாவார். அத்துடன் அவர் தந் நிகரற்ற அரசியல் விரகராகவும் விளங்கினார். அவர் எம் மனிதர்களுக்கும் அஞ்சியதே கிடையாது. அவர் அச்சமின்றி வழி வகைகளை ஆராய்ந்து வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்புகளைக் கணக்கிடலானார். இத்தகைய அரும் செயல்களைக் கடவுள் பித்துப்பிடித்தவர்கள் செய்வது மிகவும் அரிதாகும். கொடிய அடிமைப் பணியினால் அவருடைய உள்ளம் கல்லாகியிருந்தது. பிரஞ்சுக் குறும்படகுகளின் துடுப்புகளைத் தள்ளிய பொழு தெல்லாம் தியானம் செய்து, அவர் மனம் இறுகிவிட்டது. அது முதல் தென் ஸ்காட்லாந்து முழுவதும் திருச்சபைத் திருக் காட்டங்களை அவர் கூட்டிக் கொண்டிருந்தார். எனவே தக்க காலமும் அதற்கேற்ற வாய்ப்பும் உண்டாகும் சமயத்தைத் தெளிவாக உணர்ந்தார்.

கி. பி. 1559 ஆம் ஆண்டில் நாக்ஸின் போதனைகளால் மக்களாட்சிப் பண்பு நிறைந்த சமயப் புரட்சி ஸ்காட்லாந்தி லுள்ள பெர்த்தில் (Perth) தொடங்கியது. ஸ்காட்லாந்தின் பேரூர்களில் பரவிய அப்புரட்சி தெய்வங்களின் சிலைகளை உடைத்தெறிவதை முக்கிய செயலாகக் கொண்டது. இவ்வாறு தான் கால்வினியரின் புரட்சி, நெதர்லாந்திலும், பிரஞ்சு மொழி பேசும் மக்கள் வாழும் பகுதிகளிலும் தொடங்கியது. ஆனால், அவை அடிக்கடி வாள் முனையினால் அடக்கி யொடுக்கப் படவில்லை. ஸ்காட்லாந்தில் 'பிரபுக்களின் திருக்கூட்டம்' பிரஞ்சுப் படைகளிடமிருந்தும், மேரியிடமிருந்தும் தங்களைத் தற் காத்துக் கொள்ளுவதற்காகப் படைக்கலம் ஏந்திப் புரட்சி செய்தது. இரு திறத்தாருக்கும் இடையே கைகலப்பு

உண்டாயிற்று. திடீர் தாக்குதல்களும், நன்முறையில் திட்டமிடாது, போரும் நடைபெற்றது. இங்கிலாந்து ஸ்காட்டிய புராடஸ்டண்ட்டுகளுக்கு ஆதரவு காட்டும் வகையில், இப்புரட்சியில் தலையிடத் தொடங்கியது. அதனால், ஸ்காட்லாந்தின் புராடஸ்டண்ட்டுகளுக்குப் பெரும் தீமைகள் உண்டாயின. செசில், எலிசபெத்தின் ஆட்சியின் மாபெரும் முயற்சிகளுள் ஒன்றாக, ஸ்காட்லாந்தின் அரசியல் விவகாரத்தில் தலையிடுமாறு எலிசபெத்தைத் தூண்டினார். ஆங்கிலேயக் கப்பற்படை போர்த்து கடற்கழியில் (Firth of Forth) வந்து சேர்ந்தது. மேலும் ஆங்கிலேயப் படை ஒன்று, முன்பே ஸ்காட்டிய புராடஸ்டண்ட்டுகளுக்கு உதவியாக லீத்திற்கு (Leith) வந்தது. அதனால் சீர்திருத்த இயக்கத்தினரின் குறிக்கோள் காப்பாற்றப் பட்டது. இத்தகைய நாடகச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து, கைசைச் சேர்ந்த மேரி இறந்தாள். எடின்பரோ உடன்படிக்கைக்கு (ஜூலை. 1560) இணங்கி, ஸ்காட்லாந்தை விட்டுப் பிரஞ்சு படைகள் வெளியேறினர்.

இருதிறத்தினரும் மிகக் கொடிய மொழிகளைக் கையாண்டபோதிலும், ஸ்காட்டியச் சீர்திருத்த இயக்கம் பெருத்த சேதமின்றி, வெற்றிபெற்றது சிறப்புமிக்க செய்தியாகும். புராடஸ்டண்ட்டுகளுக்குள் மிகமிகச் சிலரே கொளுத்தப் பட்டனர். சமயக் கொள்கை காரணமாகக் கத்தோலிக்கர்கள் யாருமே தூக்கி விடப் படவில்லை. ஐரோப்பியப் பெருநிலப் பரப்பும், மேரி டியூடர் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தும் மதவெறியினால் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடிய கொடிய காட்சியைக் கண்டது.

விரைவில் பிரான்சிலிருந்து மற்றொரு கத்தோலிக்க சமய ஆற்றல், காப்பாளரின் பதவியை ஏற்கவும், படைவீரர்களுக்குத் தலைமை தாங்கவும் ஸ்காட்லாந்திற்கு வந்து சேர்ந்தது. ஸ்காட்லாந்தின் அரசியான மேரியும், நாள் முழுவதும் இன்பக் களியாட்டத்தில் ஈடுபடுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்த அழகிய ஆரணங்குகளின் கூட்டம் ஒன்றும், அரசியிடத்து மாறாத அன்பு கொண்ட மங்கையரும் ஆடவரும் கி. பி. 1561 ஆம் ஆண்டு, ஸ்காட்லாந்திற்கு வந்து சேர்ந்தனர். மேரி ஸ்டூவர்ட்டு திறமையும், ஆற்றலும், அழகும், கவர்ச்சியுமுடைய விதவையாக இருந்தாள். எனவே அவள் நாக்ஸிற்கும், பிரபுக்களின் திருக் கூட்டத்திற்கும் அரசின் விருப்பத்தை அடிமையாக்கச் சிறிதும் விரும்பவில்லை. மேலும் அச்சீர்திருத்த இயக்கத்தினருக்கு நாட்டிலே தனிப்பட்ட பகைவர்களும், அரசியல்

சமயத் துறையைச் சார்ந்த பகைவர்களும் மிகுதியாக இருப்பதை மேரி கண்டாள். எனவே, அவர்களைத் தன்னுடைய கொடியின் கீழ் ஒன்று சேர்க்கத் திட்டமிட்டாள். அத்துடன் அவளுடைய ஆர்வம் மிக்க உள்ளம், ஸ்காட்லாந்திற்கு வெளியிலிருந்து உதவி கிடைக்குமா என்பதை ஆராய்ந்தது. அந்நிலையில் ஐரோப்பாவின் கத்தோலிக்கர்கள், இங்கிலாந்தை மீண்டும் கத்தோலிக்க நாடாக்குவதற்குத் தன்னுடைய தலைமையில் போர் தொடுக்கத் துடிப்பதைக் கண்டாள். பிரான்சும் ரோமாபுரியும் மேரிக்குப் பக்க பலமாக இருந்துவந்தன. இங்கிலாந்து மக்களுள் ஒரு பெரும் பிரிவினர், பிரிட்டனை ஒன்றுபட்ட ஒரு நாடாக்க விரும்பி, கிளர்ச்சி செய்து வெற்றி பெறலாம் என நம்பி வந்தனர். அதன் மூலம் அவர்கள் எட்டாம் ஹென்றியின் காதற் கிழத்தி மகளான எலிசபெத்தை அரச பதவியிலிருந்து விரட்டி விட்டு, இங்கிலாந்தின் அரியணைக்கு, நேர்மையான வழியில் உரிமையுடைய ஸ்காட்லாந்தின் அரசியான மேரிக்கு முடிசூட்டலாம் என்று அவர்கள் கனவு கண்டு கொண்டிருந்தனர்.[1]

எனவே, ஸ்காட்லாந்தின் புராடஸ்டண்ட்டுகள் எலிசபெத்துடன் போரிடவும் முடியவில்லை; அவளும் அவர்களோடு போர் தொடுக்கவும் முடியவில்லை. தனக்குப் போட்டியாகத் தனக்குரிய அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் மேரிக்கு எதிராக நிலமானியப் படைமுறைப் பிரபுக்களும், கால்வினியர்களும் எதிர்ப்பதைத் தடுக்கவோ, அடக்கியொடுக்கவோ எலிசபெத்து விரும்பவில்லை. தனக்குப் போட்டியாக இருக்கும் ஒருத்திக்கு இவள் எவ்வாறு உதவி செய்வாள். அச் சூழ்நிலை மிகவும் நெருக்கடி வாய்ந்ததாக இருந்தது. ஸ்காட்லாந்தின் எல்லைப்புறத்தை ஒட்டியே இங்கிலாந்தின் நிலமானியப் படைமுறைப் பகுதிகளும் கத்தோலிக்கர்களும் பேரளவில் வாழ்ந்த சதுப்பு நிலப் பகுதியும் இருந்தன. அம்பருக்கு வடக்கே கத்தோலிக்க சமயமும் நிலமானியப் படைமுறைப் பிரபுக்களும் பெரும் செல்வாக்குடையவர்களாக இருந்தனர். எலிசபெத்து, தன் ஆட்சியின் தொடக்க காலத்தில், அவ்வட எல்லைப் பகுதிகளில் கத்தோலிக்க பெருமக்களை அதிகாரிகளாக அமர்த்துவதில் மகிழ்ச்சியுற்றாள். அவ்வாறு அமர்த்தப் பட்டவர்களே அவளுடைய அதிகாரிகள் என்ற முறையில் பெர்சிஸ் (Percies), டேக்கிரஸ் (Dacres), நெவில்லஸ் (Nevilles) ஆகிய மூவரும் தங்களுடைய பழைய நிலமானியப் படைமுறைச் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவர்கள் பணிபுரிந்து வந்தனர். 'நார்த்தம்பர்லாந்து முழுவதும் வாழ்ந்த மக்கள் பெர்சிஸைத் தவிர, வேறோர் அரசர் இருப்பதை அறிந்த

[1] அடிக்குறிப்பு விளக்கம் 746 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.

[1] 745-ஆம் பக்க அடிக்குறிப்பு விளக்கம்.

**ஹென்றி VII**

ஆர்தர் (இறப்பு 1502) = காதரைன் (ஆரகான்)

மார்க்கரெட்டு = ஜேம்ஸ் IV
ஸ்காட்லாந்தின் அரசர்
பிளாடனில் கொலை செய்யப்பட்டார் 1513

ஹென்றி VIII

ஜேம்ஸ் V
(இறப்பு 1542)

(காதரைனின் மகளான) மேரிடியூடர்

(ஆன்பொலீன் மகளான) எலிசபெத்து

(ஜேம்ஸ் செய்மோரின் மகளை) எட்டுவர்டு IV

1. பிரான்சிஸ் II = மேரிஸ்டுவர்ட்டு
பிரஞ்சு நாட்டு இளவரசன் (இறப்பு 1559). ஸ்காட்டிய அரசி (பிறப்பு 1542)
2. டார்ன்லி பிரபு—பதவி விலக்கல் 1567,
3. பாத்வெல் கோமகன் தூக்கிலிடப்படுதல் 1587.

(டார்ன்லிக்கும் மேரிக்கும் பிறந்த)
ஜேம்ஸ் VI, ஸ்காட்லாந்தின் அரசர், 1567
முதலாம் ஜேம்ஸெனா இங்கிலாந்தின் அரசரானர், 1603.

வர்கள் அல்லர்' என்று அக்காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை கருதத் தக்கதாகும். பெர்னல்டு கில்பின், அமைதியான ஆங்கிலிகரான ஜான் நாக்ஸ் ஆகிய இருவரும் வட இங்கிலாந்தில் புராடஸ்டண்ட்டு சமயத் திருச்சபைகளை அமைப்பதற்குப் புதிய பாதிரிமார்களுக்குப் பேருதவி புரிந்து வந்தனர். ஆனால், பல ஆண்டுகள் அம்பருக்கு வடக்கே உள்ள இங்கிலாந்து முழுவதையும் ஒன்று சேர்த்து ஒரு நாடாக்கி, மேரி ஸ்டூவர்ட்டே ஆட்சி செய்வதற்குக் கத்தோலிக்கர்களும், நிலமானியப் படைமுறைப் பிரபுக்களும் உதவி செய்வர் என்ற அச்சம் எலிசபெத்திற்கு இருந்துவந்தது. ஸ்காட்லாந்தைப் போன்றே, வட இங்கிலாந்திலும், சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படாது பூசலிடும் இனப்பண்புடைய மக்கள் வாழ்ந்து வந்தனர். நெடுந் தொலைவிலே இருந்து ஆட்சி புரிந்த அரசு, சிறந்ததொரு படையினை வைத்தில்லாத காரணத்தால், அவர்களை அடக்கியொடுக்குவது அரிதாக இருந்தது. ஆனால், எலிசபெத்தின் நற்பேற்றின் காரணத்தால், ஸ்காட்லாந்தைப் போன்றே வட இங்கிலாந்திலும் மக்கள் மிக மிகக் குறைந்த அளவிலேயே வாழ்ந்து வந்தனர். அத்துடன் அவர்கள் மிகவும் வறியவர்களாகவும் இருந்தனர். தொழிற் புரட்சி உண்டாகிய வரையில் செல்வமும், மக்கள் பெருக்கமும் தென் இங்கிலாந்திலேயே செழிப்புற்று விளங்கின. சிறப்பாக லண்டன் மாநகரிலும், அதைச் சுற்றிலும் செல்வமும், மக்கள் தொகையும் என்றும் நிறைந்திருந்தது.

மேரியின் ஆதிக்கத்தை வளர்த்தால், தனக்கு எத்துணைப் பெருங்கேடு உண்டாகும் என்று எலிசபெத்து கருதினளோ, அத்துணை அளவிற்கு அவள் மிக்க முன்னெச்சரிக்கையுடையவளாக நடந்து கொண்டாள். மேலும் ஸ்காட்லாந்து அரசியலில் எலிசபெத்து தலையிடுவதற்குப் போதிய பொருள் வருவாயற்றவளாகவும் இருந்தாள். ஆறு ஆண்டு (1561—67) காலப் புதுமை உணர்வுமிக்க வரலாற்றில், மேரிக்கு எதிராக நாக்ஸும், பிரபுக்களும் நடத்திவந்த போராட்டம் இங்கிலாந்தின் தலையீடின்றித் தொடர்ந்து நடந்து வந்தது. கத்தோலிக்க அரசியான மேரியை எதிர்ப்பதற்கு, அரசியல் அமைப்பிற்குட்பட்டுச் செயலாற்றும் அமைப்புகள் ஒன்றும் ஸ்காட்லாந்தில் இருந்ததாகத் தெரியவில்லை. கி.பி. 1560-ல் ஸ்காட்டிய பாராளுமன்றம் சீர்திருத்த இயக்கத்தைச் சட்டதிட்டத்திற்குட்பட்டதாக அறிவித்து, மீண்டும் பழைய நிலைக்கு—புறக்கணிக்கத் தக்க உறுப்பினர்களைக் கொண்ட ஆற்றலற்ற அமைப்பாக மாற்றமுற்றது. எனவே நிலமானியப் படைமுறை உயர்குடிமக்கள் மடாலயங்களின் நிலங்களைக்

காப்பதில் கருத்துடையவராயினும், தங்களுக்குள்ளே சமயத்தின் காரணமாகப் பிளவுபட்டு போரிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களை மேரி எளிதில் தோல்வியுறச் செய்திருக்கலாம். ஆனால், ஜான் நாக்ஸும், அவனுடைய கட்சியினரும் தேசிய வாழ்வில் வேறு பல அமைப்புகளைப் படைத்துக்காத்து வந்தமையாலும், கல்விகற்ற நடுத்தர வகுப்பினரிடையே புதியதொரு புத்துணர்வை அவர்கள் ஊட்டியதனாலும், அம்மக்கள் பழைய நிலமானியப்படைமுறைச் சக்திகளை எதிர்த்துப் போரிட்டு வந்தமையாலும் மேரி வெற்றிபெற முடியாமற்போயிற்று. ஒவ்வொரு திருச்சபை வட்டாரத்திலும் பாமர மக்களின் மக்களாட்சி தோன்றியது. அவர்கள் தங்களுடைய கருத்துகளை வெளியிடுவதற்கு ஒரு மைய அமைப்பினை ஒவ்வொரு வட்டார மக்களும் நிறுவி, கிர்க்கில் நடக்கப்போகும் திருச்சபை வட்டார மக்கள் மாநாட்டில் தங்கள் கருத்துகளை வெளியிடுவதற்குத் தயாராயினர். சிறிது காலத்திற்குள்ளாகவே ஒரு தேசிய அமைப்பும் நிறுவப்பட்டது. திருச்சபையின் பொதுமன்றத்தில் அமைச்சர்களும், நிலக்கிழார்களும் அருகருகே அமர்ந்து அரசியல்விவகாரங்களை ஆராய்ந்தனர். இவர்கள் உயர்குடியில் பிறந்த தலைமைக் குருமார்களுக்கும், ஸ்காட்லாந்தை ஆண்டு வந்த பிரபுக்களுக்கும் முற்றிலும் மாறுபட்ட சமூக வகுப்பைச் சார்ந்தவர்களாவர். பாராளுமன்றம் ஆங்கிலேயரின் வாழ்க்கையின் நடுநாயகமாக சிறப்புற்றதைப்போல, ஸ்காட்லாந்தில் திருச்சபையின் பொதுமன்றம் மிக முக்கியத்துவம் பெற்றுவிளங்கியது. அங்கு அரசினைக் கட்டுப்படுத்தும் குவியமையமாகத் திருச்சபை மாறியது.

ஸ்காட்லாந்திற்குத் திருச்சபை, உரிமையையும், அடிமைப் பண்பினையும் ஒன்றாகவே கொண்டு வந்தது எனலாம். சமயச் சடங்கு ஆர்வம் அற்ற, ஆனால், மக்களாட்சிப் பண்பு மிக்க கொடுமை நிறைந்த, புதிய சமயத்தின் நம்பிக்கைகளையும், கொள்கைகளையும் கொண்டு நாட்டின் அரசிற்கும், குடிசைகளில் வாழ்ந்த குடியானவர்களுக்கும், மன்றங்களில் வாழ்ந்த நிலக்கிழார்களுக்கும் கட்டளையிடத் தொடங்கியது. இந்த வெறியார்வமும், உடன்பாட்டிற்கு வர முடியாத உணர்வும் பலரால் பொறுத்துக் கொள்ள முடியாததாக இருந்தது. அடுத்து வரப்போகின்ற நூறு ஆண்டுக் காலத்தில் உள்நாட்டுப் போர்களுக்கும் இதுவே முக்கிய காரணமாகும். இறுதியில் திருச்சபையின் அதிகாரம் அனைத்தும் அரசின் ஆதிக்கத்திற்கு அடிபணிய நேர்ந்தது. ஆனால், அதற்குள் அரசிலே ஒரு மாபெரும் மாறுதல் உண்டானமை குறிப்பிடத் தக்கதாகும். அது தாழ்நிலத்து வாழ்ந்த ஸ்காட்டியர்களைக் கொடிய நிலமானியப் படை

முறைக் கீழோட்கள் நிலையிலிருந்து உயர்த்தியது; வாளேயும், கலப்பையையும் தவிர வேறென்றையும் அறியாதிருந்த அவர்களை, ஐரோப்பாவிலேயே மிகச் சிறந்த முறையில் கல்வி கற்ற உழவர்களாக்கியது. அதன் பின்னர், அவர்கள் அடிக்கடி தனிமையாகத் தியானத்தில் ஆழ்ந்தனர். தருக்கத்தின் அடிப்படையிலும், அவர்கள் அடிக்கடி கடுமையான சொற்போர்களில் ஈடுபடுவதில் வல்லவர்களாக விளங்கினர். இவற்றை அறிந்து கொள்ளும் அறிவு நலனே, பயிற்சியோ சில ஆங்கிலேயர்கள் கூடப் பெறுமற் போனமை கருதத் தக்கதாகும். காலமும் திருச்சபையும் மாறின. ஆனல், அக்காலத்திய கடுமையான வாழ்க்கைப் பள்ளியில் ஸ்காட்டியர்கள் பெற்ற அறிவாற்றலும், அறவாழ்வின் நிலைக்களனும் இன்று வரை கைவிடப்படாமல் அவர்களால் போற்றிக் காக்கப்படுகிறது.

ஆனல் தற்கால ஸ்காட்லாந்து ஹோலிருட்டில் (Holy rood) ஆண்ட மேரியின் காலத்தில்தான், உருவாகத் தொடங்கியது. அவள் தன்னுடைய உள்ள உணர்ச்சியை, எலிசபெத்தைப் போலக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையவளாக இருந்திருந்தால்—தன்னுடைய கொள்கைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்திருந்தால்—நாக்ஸினை அடக்கி யொடுக்குவதன் மூலம் மேரி எதிர்ப்பாளர்களின் முன்னேற்றத்தை வெளிப்படையாகவே தடுத்து நிறுத்தி வெற்றி பெற்றிருக்கலாம். ஆனல், அவள் டார்ன்லி (Darnley) பிரபுவை மணம் செய்து கொண்டாள். அவர் கிர்க்கிற்கு (Kirk) அருகில் பாத்வெல் (Bothwell) என்பவரால் கொலை செய்யப்பட்டார். உடனடியாக ஆழ்ந்து சிந்திக்காது அக்கொலைகாரனை மேரி மணம் செய்து கொண்டாள். இவற்ருல் அவளுடைய குடிமக்கள், மேரி ஏதோ சதித் திட்டம் போட்டு வேலை செய்கிருள் என்று அவளை வெறுத்தனர். கொலை செய்யப்படுவது அன்றுவரை அந்நாட்டில் ஒரு வழக்கமாகவே இருந்து வந்தது உண்மை. கார்டினல் பீட்டன் (Cardinal Beaton) கொலை செய்யப் பட்டதையும், டார்ன்லி ரிஜியோவை (Rizzo)க் கொலை செய்ததையும் நாக்ஸ் ஒத்துக் கொண்டார். ஆனல், மக்கள், கணவன்மார்கள் அவர்தம் மனைவியரால் கொலை செய்யப்படுவதைப் பெரிதும் வெறுத்ததோடு, அதற்கெதிராகக் கிளர்ச்சி செய்ய முற்பட்டனர். மேரி அறிந்தோ, அல்லது மாபெரும் கொலைக் குற்றம் செய்த மன நிலையோடே பாத்வெல்லை (Bothwell) மணந்துகொண்டதன் மூலம் நாட்டையும், அரசையும், தன்னுடைய மதிப்பையும் பகைவர்களுடைய கையிலே ஒப்படைத்தாள். சுவை மிக்க வீரதீரச் செயல்களுக்கும், ஒழுங்கு முறையற்ற போருக்கும்

பிறகு, மேரி ஸ்காட்லாந்தை விட்டுப் புகலிடம் தேடி கி.பி. 1568-ல் ஓடினாள். அவள் ஆத்திரத்தாலோ, நெருக்கடியாலோ எலிசபெத்திடம் சென்று அடைக்கலம் புகுந்தாள். அவள் என்ன எதிர்பார்த்தாள்? அவள் புதுமை உணர்வு ஊட்டுகிற தாராள மனப்பான்மையுடையவளாக—அருள் உள்ளம் உடையவளாக நடந்து கொண்டால், அவளுடைய வாழ்க்கையைத் தானே அழித்துக் கொள்ளுபவளாவாள். எனவே அவள் தன்னுடைய எதிரியை முட்டாளாக்கத் தன்னுடைய கூர்த்த மதியை எலிசபெத்து நம்பி இருந்தாள்.

மேரி தானாகவே எலிசபெத்திடம் சிறைப்பட்ட நேரம் முதல் இங்கிலாந்தின் அரசியல் மட்டுமல்லாமல், ஐரோப்பாவின் அரசியல் நிலையும் அவளுடைய சிறைக்கதவுகள் திறக்கப்படுவதைப் பொறுத்தே அமையும் நிலையிலிருந்தது. அவள் தானாகவே தன் முயற்சியையும் தன்னுடைய உரிமையையும் கைவிட்டு விட்டாள். அதனால் ஸ்பெயின் நாட்டு அரசர் பிலிப்ஸ், அவளை பிரான்சுக்கு எதிராக, ஸ்பெயினின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு மேரியின் இந்நிலையை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளத் துணிந்தார். போப்பினாலும், இயேசு சங்கத்தினராலும் இங்கிலாந்தின் கத்தோலிக்கர்கள் எலிசபெத்தின் ஆட்சியைக் கவிழ்க்குமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். அதனால், இங்கிலாந்தில் வாழ்ந்த கத்தோலிக்கர்கள் மேரியை அரசியாக்குவதற்குத் தொடர்ந்து பல சதிச் செயல்களைச் செய்து வந்தனர். அவர்கள் பல படுகொலைகள் புரிந்தனர்; கலகம் செய்து வந்தனர். அவற்றோடு இங்லாந்தின் மீது அயல்நாட்டினரைப் படையெடுத்து வருமாறு தூண்டினர். முதன் முதல் நார்த்தம்பர்லாந்தின் கோமக்களும், வெஸ்ட் மோர்லாந்தின் கோமக்களும், அரசிக்கு எதிராக கி. பி. 1569ஆம் ஆண்டு கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். அதைத் தொடர்ந்து கி. பி. 1570-ல் டேக்கரின் கலகம் (Dacre's Rebellion) உண்டாயிற்று. வட இங்கிலாந்தின் கத்தோலிக்க சமயத்தைத் சார்ந்த நிலமானியப் படைமுறைக்குத் தலைவர்களான பெர்சிஸ், நெவிலஸ், டேக்கர் ஆகிய மூவரும் மேரியின் சார்பிலும், ரோமானிய திருச்சபையின் சார்பிலும் படைக்கலம் ஏந்தியதோடு, ஸ்காட்லாந்தின் கத்தோலிக்கப் பிரபுக்களைத் தங்களுக்கு உதவி புரியுமாறு அழைத்தனர். மேலும் அவர்கள் கிறிஸ்து பெருமானின் 'ஐந்து புண்களைச்' (Five Wounds of Christ) சின்னமாகக் கொண்ட கொடியின் கீழ் ஒருங்கு திரண்டனர். அவர்கள் டர்ஹாம் தலைமைக் கோயிலில் இருந்த விவிலிய நூலையும், வழிபாட்டு நூலையும் கிழித்து

எறிந்தனர். ஆனல் ஸ்காட்டிய அரசு, ஸ்காட்டிய கத்தோலிக்கர் தங்கள் நாட்டு எல்லையைக் கடந்து இங்கிலாந்தினுள் நுழைய வொட்டாது தடுத்தது. தென் இங்கிலாந்து எலிசபெத்திற்கு உண்டான தீமையையும், துன்பத்தையும் எதிர்த்துப் போராட ஆர்வத்தோடு முன் வந்தது. நிலமானியப் படை முறையினர் போர்க்களத்திலே, தேசிய உணர்வு மிக்க மக்கள் படையை நோக்கிய பொழுது தாங்கள் வெற்றி பெற இயலாது என்ற அச்சம் கொண்டனர். எல்லைப்புற வோரங்களில் இருந்த மக்களும், அரசிக்கு எதிராகப் புதிதாகத் தோன்றிய பெர்சியை ஆதரிக்க விரும்பவில்லை. எனவே ஒரே ஒரு இடத்தில் இரு திறத்தாருக்கும் உண்டான கைகலப்பினுல் நிலமானியப் படை முறைப் பிரபுக்களும், கத்தோலிக்கப் படையினரும் தோற்று ஓடினர்.

வியப்புமிக்க மக்களுடைய உள்ளங்களில், எலிசபெத்திற்குத் தரப்பட்டிருக்கும் சிறப்பிடத்தை உலகம் அறியுமாறு இவ்வெற்றி செய்தது. ஆனல், அவ்வாறு கருதாமல்,—அதற்கு நன்றி செலுத்தாமல், எலிசபெத்து நிலமானியப் படைமுறைக் குத்தகைக்காரர்களைக் கொடியமுறையில் பழிவாங்கத் திட்டமிட்டாள். அவர்களுள் எண்ணூறு பேரைக் கொன்று குவித்தாள். ஆனல், அதற்கு மேற்கொண்டு செய்த செயல்களுள் அவளுடைய அறிவுடைமை சிறிது வெளிப்பட்டது. இறுதியாகச் சிக்கல் நிறைந்த வட இங்கிலாந்தின் பெரும் பிரச்சினைகள் அடியோடு அழித்தொழிக்கப்பட்டன. வடக்கு இங்கிலாந்தின் மன்றமும் (Council of the North), மார்ச்சஸ் (Marches) பகுதியின் காவலர் பதவியும் இப்பொழுது அரசியிடத்துப் பற்றுறுதியும், ஈடுபாடுமுடைய அதிகாரிகளிடத்து ஒப்படைக்கப்பட்டது. அதனல் கலகம் செய்யும் விருப்பமுடைய அவ்வவ்வட்டாரப் பெருமக்களிடத்து அப்பகுதிகளை விட்டுவைக்க வேண்டிய தேவை இல்லாமற் போயிற்று. ஸ்காட்லாந்தோடு நடந்த எல்லைப்போர் இவ்வாறு முடிவுற்றது. அதனல் இங்கிலாந்தின் வட எல்லைப் பகுதியை அதனுடைய இராணுவ நிலமானியப் படைமுறைப் பழக்க வழக்கங்களில் இருந்து மாற்றி, புதிய வாழ்க்கை நிலையை அரசு உண்டாக்க அது பேருதவி புரிந்தது. உயர்ந்த உள்ளம் படைத்த. ஆனல் கொடுஞ்செயல்களைச் செய்துவந்த எல்லைப்புற மக்கள் சமூகம் மெல்ல மெல்லச் சட்டதிட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு செய்யப்பட்டது. அச்சமூகம் விவிலிய நூலைப் படிக்கின்ற இடையர் சமூகமாகச் சிறப்புறலாயிற்று. வால்டர் ஸ்காட்டு (Walter Scott) தாமஸ்விக்கு (Thomas Bewick)

ஆகியோர் காலத்தில் அச்சதுப்பு நிலப்பகுதியில் இவ் இடையர்களே மிகுதியாக வாழ்ந்து வந்தனர்.

வடக்குப் பகுதியில் உண்டான கலகம் தோல்வியுற்றதன் மூலம், புதிய இங்கிலாந்தின் உள்நாட்டு ஒற்றுமை உலகிற்குப் புலனாகியது. எனவே, அயல்நாட்டின் கொடுமைகளையும் இடர்ப்பாடுகளையும் இப்பொழுது மிகுந்த உள்ள உரத்துடன் இங்கிலாந்து எதிர்ப்பதற்குத் தக்க வாய்ப்பு கிடைத்தது. அந்நிலையில் அயல்நாட்டுப் பிரச்சினை நெருக்கடியான கட்டத்தை அடைந்தது. கி.பி.1570 ஆம் ஆண்டு ஐந்தாம் போப்பு பயஸ், எலிசபெத்தையும், இங்கிலாந்தில் பணி புரிந்துவந்த இயேசு சங்கத்தினரையும் சமய விலக்குச் செய்தார். கி. பி. 1572-ல், நார்போக்கின் கோமகன், பிலிப்பு, ஆல்வா, போப்பு முதலியோருடைய பிரதிநிதிகளின்மூலம் சதிசெய்து மேரியை இங்கிலாந்தின் அரசியாக்க முயன்ற குற்றத்திற்காகக் கொலை செய்யப்பட்டார். இம்முறை, அவர் பிரான்சின் கைப்பாவையாக இல்லாமல் ஸ்பெயினின் கைப்பாவையாகச் சதியில் ஈடுபட்டார். மேரிக்குப் பாத்வெல் பிரபுவிடமிருந்து 'திருமண விலக்கு அளிப்பதற்காகப் போப்பு ஆண்டவர் உறுதிமொழி அளித்தார். ஆனால், நார்போக்கு மேரியை மணம்புரிந்து கொள்ளலாம் என்று போப்பு அறிவித்தார். புறச் சமயத்தினரைக் கொன்று குவிப்பது புனிதமான வேலையாகக் கருதப்பட்ட ஐரோப்பிய சமயத் தலைவர்களும் இதுமுதல் எலிசபெத்தைக் கொலை செய்தல் பற்றியே பெரிதும் சிந்தித்தும், பேசியும் வந்தனர்.

வட இங்கிலாந்தின் கோமக்களின்வீழ்ச்சியைத் தொடர்ந்து, இங்கிலாந்தின் பிரபுக்களுள் சிறப்பு மிக்கவரான நார்போக்கு தூக்கிலிடப்பட்ட நிகழ்ச்சி, பழைய நிலமானியப் படைமுறையின் மீது இங்கிலாந்தின் புதிய ஆட்சி இறுதியாகப் பெற்ற வெற்றியாகத் தோன்றலாயிற்று. அதே ஆண்டில் (1572) செயிண்ட் பர்த்தலோமியா (St. Bartholomew) கொலை செய்யப்பட்டார். அதனால் பிரான்சிலிருந்த யூகோநாட்டு (Huguenot) மக்களின் குறிக்கோள் பழுதுபடுத்தப் பட்டதே ஒழிய, முற்றிலும் அழிக்கப்படவில்லை. இதை ஒரு காரணமாகக் கொண்டு ஸ்பெயின் நாட்டு பிலிப்பின் கொடுமைகளை எதிர்த்து ஹாலந்தின் கடலோடிகளும், நகர மக்களும் பெரும் கலகம் செய்தனர். பேரச்சமும், பெரும் சீற்றமும் கொண்டிருந்த மக்கள் சபையினர் ஸ்காட்லாந்தின் அரசியாக முடிசூட்டு விழா நடத்தப்படாத மேரியைத் தூக்கிலிடுமாறு எலிசபெத்திடம் விண்ணப்பம் செய்தனர். பதினைந்து ஆண்டுக்காலத்திற்கு, எலிசபெத்து தன்னுடைய

அமைதி நாடும் இயல்பூக்கத்திற்கும் அரசின் இயல்பூக்கத்திற்கும் கட்டுப்பட்டு, அவளுடைய மக்களுக்கும் மேரிக்கும் இடையே தன்னுடைய கடமைகளைச் செய்யவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. அவள் அரசிகளைக் கொல்லுவதை விரும்பவில்லை. அப்படி மேரியைக் கொன்றால், ஸ்பெயினோடு நேரடியாகப் போரிட நேரிடும் என்பதை எலிசபெத்து நன்குணர்ந்திருந்தாள். தனக்குப் பிறகு மேரியே இங்கிலாந்தின் அரசியாவதற்குரிய உரிமை உடையவள் என்ற நிலை எத்துணைக்காலம் நீடிக்கின்றதோ, அதுவரை பிலிப்பு தன்னிடத்தும், தன்னுடைய கடலோடிகளிடத்தும் வெறுப்புக் கொள்ளாமல் இருப்பான் என்று எலிசபெத்து நம்பினாள். ஆனால், மேரி மறைந்தால், பிலிப்பு இங்கிலாந்தைத் தனக்குரியதாக்கிக் கொள்ளப் படையெடுத்து வருவான் என்று அவள் கருதினாள். நெதர்லாந்து இன்றும் அடியோடு அழித்தொழிக்கப்படாத ஆல்வாவின் கடற்கரைக்கும், கெண்ட்டின் கடற்கரைக்கும் இடையே அறுபது கற்கள்தான் உள்ளன. நல்ல காலமாக அக்கற்கள் அனைத்தும் உப்பு நீராக — கடல் தண்ணீராக இருந்தன. பண்டைய நிலமானியப் படைமுறைப் பண்பையும், வீரப் பெருந்தகைமையையும் உடைய தலைவர்கள் அனைவரையும் பற்றிக் கவலைப்படாத புதுயுகத்தில், இங்கிலாந்தின் முக்கியத்துவம் நாளுக்குநாள் பெருகுவதற்குக் கலங்கலான உப்பு நீர் சிறந்ததொரு காரணமாக இருந்தது.

### இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

புராடஸ்டண்ட்டுகளும் தேசிய புத்துயிர்ப்பும்— பிரான்சுக்கும் ஸ்பெயினுக்கும் இடையே — எலிசபெத்தின் பண்பு நலனும் கொள்கையும் — சமய உடன்பாடு — பாமரரின் புறக் கட்டுப்பாடு — ஆங்கில, ஸ்காட்டிய சீர்திருத்த இயக்கங்கள் — பிரபுக்களின் திருக்கூட்டம் — ஜான் நாக்ஸ் — இங்கிலாந்து தலையிடல் — ஸ்காட்லாந்தும் வட இங்கிலாந்தும் — ஸ்காட்லாந்தின் சமய அடிப்படையில் மலர்ந்த மக்களாட்சி — மேரியும் எலிசபெத்தும் — ஆங்கிலேய நிலமானியப் படைமுறையின் அழிவு.

## இயல் 6

# இங்கிலாந்தின் கடலாதிக்கம்

'மேன்மைதங்கிய அரசிக்குமுன்பு, இந் நாட்டினை ஆண்ட அரசர்களுள் யாருடையகொடி காஸ்பியன் கடற்பகுதியில் பட்டொளி வீசிப் பறந்தது? நம்முடைய அரசியைப்போல், அவர்களுள் யார் பாரசீக


அரசரோடு தொடர்புகொண்டிருந்தனர்? தன்னுடைய வாணிகருக்குச் சிறப்புரிமைகளைப் பாரசீக மன்னரிடம் இருந்து யார் வாங்கித் தந்தனர்? இவ்வரசியின் ஆட்சிக்கு முன்பு இங்கிலாந்தின் தூதரை கான்ஸ்டாண்டிநோபிளில் யாராகிலும் பார்த்திருக்கின்றனரா? ஆங்கிலேய அயலிட நாட்டுப் பேராள்களையு (Consuls) யும், பிரதிநிதிகளையும் சிரியாவிலுள்ள திரிபோலிசிலும் (Tripolis), அலப்போ (Aleppo) விலும், பாபிலோனியாவிலும், பால்சாராவிலும் (Balsara) யாராகிலும் முன்பு பார்த்திருக்கின்றனரா? இதற்கு முன்பு யாராகிலும் கோவாவில் ஆங்கிலேயரைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கின்றனரா? ஆங்கிலேயரின் கப்பல்கள் இதற்கு முன்பு 'பிளேட்' என்னும் பேராற்றில் நிறுத்திவைக்கப்பட்டனவா? சில்லி, பெரு கடற்கரை யோரங்களில் செல்லுவதற்கு வசதியற்ற மக்கல்லன் இடைகழிவழியாகக் கப்பல்கள் இதற்கு முன்பு சென்றது உண்டா? நோவா ஹிஸ்பேனியாவிற்குப் பின்புறமாக எப்பொழுதாகிலும் கிறிஸ்துவர்கள் இதற்கு முன்பு சென்றது உண்டா?—ஹாக்ளுயட்டு.

பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் இங்கிலாந்து உலகப் படத்தின் விளிம்பிலே அடைக்கப்பட்டிருந்தது. அதற்கு அப்பால் ஒன்றும் இல்லாமல் இருந்தமையால், இங்கிலாந்தில் வாழ்ந்த மக்களின் தனிப்பட்ட வீரதீரச் செயல்களுக்கும், தேசிய விரிவிற்கும் ஐரோப்பவினையே அவர்கள் பயன்படுத்தி வந்தனர். ஆயினும், பழைய ஐரோப்பா இனியும் வளைந்து கொடுக்கக் கூடியதாக இல்லை. அது சுறுசுறுப்பும் இளமையும் உடைய இங்கிலாந்தின் முயற்சியினால், அதனுடைய வழக்காற்றையும், பிரிட்டிஷ் மொழியையும் சிறிதளவுகூடப் பின்பற்றிப் போற்ற முன்வரவில்லை. இதை நூறாண்டுப் போரின் முடிவு தெளிவாக விளக்கியது. இப்பொழுது திரும்பி வருவதற்குரிய அவ்வழியின் கதவுகள் தாளிடப்பெற்றன. ஐரோப்பியப் பெரு நிலப்பரப்பில் பெரிய முடியாட்சிகள் தோன்றியமையால் அவ்வழி அடைக்கப்பட்டது. அதனால் ஆங்கிலேயர் தங்களைத் தீவினுள் அடைத்து, அங்கேயே மாநில ஆட்சியமைப்பில் அல்லலுறுமாறு செய்ததாக உணர்ந்தனர். மேலும் தாங்கள் இழந்த பழம் பெருமையையும் புகழையும் நினைத்து மேனர் மாளிகைகளிலிருந்து பெருமூச்சு விட்டு வருந்துமாறு செய்துவிட்டதற்காகப் அவர்கள் பெரிதும் வருத்தமுற்றனர். பிராய்சார்ட்டு (Froissart) எழுதிப் போற்றிய காலவழிச் செய்திக்கோவை குறிப்பிடும் பழம்பெருமையை நினைத்தும், ஐந்தாம் ஹாரியின் (Harry the Fifth) காலத்தில் அவர்கள் பரந்த உலகில் நடமாடியதை நினைத்தும் பெரிதும் வருத்தமுற்றனர்.

ஆனால், மிகவும் எதிர்பாராவகையில் அது நடைபெற்றது. நாளடைவில், டியூடர் ஆட்சிக்காலத்தில், பிரிட்டனில் வாழ்ந்த

மக்கள், தாங்கள் உலகின் எல்லைப்புறத்தில் இருந்த நிலைமாறி, இப்போது உலகின் நடுநாயகமாக உள்ள நாட்டிலே வாழுவதை உணர்ந்தனர். தற்கால வாணிகக், குடியேற்ற வழிகளையும் அதன் ஆதிக்கத்தையும், செல்வத்தையும் தாங்களே கைக் கொள்ளக் கூடிய வாய்ப்பும் வசதியும் பெற்றிருப்பதை அறிந்தனர். கற்பனைக்கும் அப்பாற்பட்ட நெடுந்தொலைவிலுள்ள நாடுகளுக்குக் கடல் வழியாகச் சென்று செயற்கரும் செயல்களைச் செய்வதற்குரிய வாய்ப்புகள் தங்களுக்குக் காத்துக் கொண்டிருப்பதை ஆங்கிலேயர் ஒவ்வொருவரும் நன்குணர்ந்தனர். அக்கடல்வழியாகப் பொன்னுடைய ஆப்பிரிக்க ஆறுகளுக்கும், அலங்கரிக்கப்பட்ட ஆசியாவின் கடைவீதிகளுக்கும், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பாதிக்குமேல் காலியாக இருக்கும் புதிய பெருநிலப்பரப்பிற்கும் செல்லலாம் என்பதைத் தெரிந்துகொண்டனர். மேலும், இந்நாட்டின் மக்கள் அப்புதிய பெரு நிலப்பரப்பில் சிதறுண்டு கிடந்தவை அனைத்தும் பார்க்கின்றவர் வியப்படையுமாறு ஒன்று சேர்வதையும், இது வரை அறியப்பட்ட அண்டப் படைப்புத்தோற்றம் (cosmogony) பற்றிய கருத்துகள் அனைத்தையும், பெருவாணிகத்தின் வழக்காறுகள் அனைத்தையும் முற்றிலும் தலைகீழாக மாற்றும் நிலையில் அமைந்திருப்பதைக் கண்டனர்.

பண்டைக் காலத்தில் இருந்ததைப்போலவே, இடைக் காலத்திலும் உலகப்பெருவாணிகமும், கடல் ஆதிக்கத்தின் நிலைக்களனும் நடுநிலக் கடற் பகுதியிலேயே இருந்துவந்தன. தற்காலத்தில் ஐரோப்பியக் கப்பல்களைக் கொண்டு பெருங் கடல்களைக் கடந்துசென்று, செய்யப்படும் ஐரோப்பாவின் வெளி நாட்டு வாணிகமும் பண்டைக்காலத்தில் நிலவழியாக ஒட்டகச் சாத்துகளின் மூலம் ஆசியாவின் உள்நாட்டுப் பகுதிகளுக்குக் கொண்டு சென்றனர். அல்லது பாரசீக வளைகுடா வரையிலும், செங்கடல் வரையிலும் கீழ்நாட்டு மக்களின் மரக்கலங்கள் வாணிகப் பொருள்களைக் கொண்டு வந்து இறக்கியும் ஏற்றியும் சென்றனர். சீனாவிலிருந்தும், இந்தியாவிலிருந்தும், கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்தும் விலையுயர்ந்த பொருள்கள் பல ஒட்டகங்களின் மீது மூட்டை மூட்டையாக ஏற்றப்பட்டன. அவை லாவண்டைனிலுள்ள கப்பல் துறைகளுக்குக் கொண்டு வரப்பட்டன. அங்கிருந்து அவை இத்தாலிய நாட்டுக் கப்பல்களின்மூலம் வெனிஸ், ஜெனோவா முதலிய துறைமுகங்களுக்குக் கொண்டு வந்து இறக்குமதி செய்யப்பட்டன. அங்கிருந்து அவை கிறிஸ்துவ உலகம் முழுவதற்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டன.




படம் 21
எலிசபெத்து அரசியின் ஆட்சிக்காலத்திய உலகம்

பொனீசியரும், ரோமானியரும், அவர்களுக்குப் பிறகு வந்த வெனீசியரும் இப்பெருங் கடலினை எவ்விடத்திலும் கடந்து செல்லும் கடப்பாடுடைவர்களாக இருந்தனர். நடுநிலக்கடலின் நீரைக் கிழித்துச் செல்லுவதற்குக் கப்பல்கள்தான் தேவைப் பட்டன. பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகளின் கடற்கரையைச் சுற்றிக்கொண்டு இங்கிலாந்து, பிளாண்டர்சு, வடக்கு ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு மரக்கலங்கள் சென்றன. வாணிகக் கப்பற் படையாக இருந்தாலும், இராணுவக் கப்பற்படையாக இருந் தாலும், அக்காலத்தில் அவை துடுப்புகளால் தள்ளப்படும் குறுங்கப்பல்களையுடையனவாகவே இருந்தன. இந்நிலை வர லாற்று நூலிற்கு முற்பட்ட தொல் பழங்காலம் முதல் பதினைந் தாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் நீடித்திருந்தது. அதன் பிறகு நன்னம்பிக்கை முனைவழியாக இந்தியாவிற்கு வழி கண்டு பிடிக்கப்பட்டமையும், அமெரிக்கா என்னும் ‘புதிய உலகம்’ கண்டுபிடிக்கப்பட்டமையும், இத்தாலிய நகரங்களின் கடலக ஆதிக்கத்தை அழித்தொழித்தன. அதுமுதல் ஐரோப்பாவே தன்னுடைய ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்கப் பொருள்களைத் தேடிக் கொண்டுவரக் கடல்வழியாகப் புறப்பட்டது. அத்தகைய பெருங் கடற்பயணத்திற்குக் கைத்துடுப்புக்களினால் தள்ளப்படும் குறுங் கப்பல்கள் பயனற்றவையாகத் தோன்றின. புதிய உலகச் சூழலில் பெரு வாணிகத்திலும், கடலாதிக்கத்திலும் யார் தலைமை தாங்குவது என்ற போட்டி ஸ்பெயின், பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு இடையே உண்டாயிற்று. அவை ஒவ்வொன்றும் திடீரென்று கடல் வழியாக மாறிய மேற்குக் கடலை நோக்கிப் புறப்பட்டன. அவை ஒவ்வொன்றும் தற்கால அரசுகளாக ஒன்றுபடுத்தப்படும் முறையினைப் பின் பற்றிக் கொண்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் ஆற்றல் மிக்க முடியாட்சியின் கீழ், வீணாக வன்முறையில் தாக்கும் இன வெறி யுடைய நாடுகளாக இருந்தன.[1]

[1] ‘காட்டுமிராண்டிகளான துருக்கியர், இடைக்கால வாணிக வழி களை அடைத்து விட்டமையால், போர்ச்சுகீசியரும், ஸ்பானியரும் புதிய கடல் வழிகளைக் காண முயன்றனர்’ என்று அடிக்கடி கூறப்படுவது சிறந்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டது அன்று. இதைப்பற்றி விரிவாக அறிவதற்கு திரு. லிபையர் (Lybyer) எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரையை English Historical Review (1915) என்னும் இதழில் காண்க. துருக்கியர் டார்ட்டார்களைக் காட்டிலும் பரந்த நோக்குடைய வர்கள். அவர்கள் மார்கோபோலோவின் காலத்தில் நடு ஆசிய வாணிக வழியினைத் தங்களுடையதாக்கிக் கொண்டிருந்தனர். ஆனால், பதினைந்தாம் நூற்றாண்டில் அவர்கள் ஐரோப்பாவோடும் ஐரோப்பாவின் மூலமும் நடத்தி வந்த வாணிகத்தை முற்றிலும் நிறுத்தி விடவில்லை. நன்னம்பிக்கை முனைவழி கண்டுபிடிக்கப்படும்வரை, எகிப்தின் வழியாக

புதிய சூழ்நிலையினை முதன்முதல் ஸ்பெயினும், அதனுடைய பக்கத்து நாடாகிய போர்ச்சுக்கலுமே பேரளவில் பயன்படுத்திக்கொண்டன. ஆப்பிரிக்க அமெரிக்கக் கடற்கரையோரங்களின் வழியாக அவை புதிய வழிகளைக் கண்டுபிடித்துக் கொண்டு சென்றன. அவை தென் அமெரிக்காவிலும், நடு அமெரிக்காவிலும் தங்கள் மக்களைக் குடியேற்றின. ஆங்கிலச் சாக்சானியர் குடியேறவொட்டாது தடுக்கக்கூடிய அளவிற்கு அந்நாடுகள் தங்கள் மக்களைக் குடியேற்றின. ஆங்கிலேயருக்குத் தங்களுடைய முறை வந்தபொழுது, மிகவும் குளிர்ச்சி பொருந்திய வட அமெரிக்காவின் வட எல்லைப் பகுதியில் மட்டும் தங்கள் குடியேற்றங்களை அமைத்து மன அமைதி பெற வேண்டியவர்களாக இருந்தனர். அங்கு வெள்ளையர் தங்கள் கைகளைக் கொண்டு நிலத்தைத் தோண்டவேண்டிய நிலையுண்டாயிற்று. ஆனால் பொன்னைப் பெற அவ்வாறு தோண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்பெயினின் அடிச்சுவட்டைப் பிரான்சு ஓரளவிற்கே பின்பற்ற விரும்பியது. கடலிலும் அமெரிக்காவிலும் ஆதிக்கம் செலுத்துவதற்கும் அது முழு முயற்சியோடு போட்டியிடவில்லை. ஆனால், கொலம்பஸ் காலத்திலேயே, ஆல்ப்ஸ் மலைக்கு அப்பாலும் ரைன் ஆற்றை நோக்கியும் உள்ள ஐரோப்பாவின் பகுதிகளைக் கைப்பற்றுவதில் அது தன்னுடைய கருத்தைச் செலுத்தி வந்தது. இங்கிலாந்து தன்னுடைய சிறப்புகளுக்காக நெடுங்காலம் கலகம், குழப்பம் ஆகியவற்றால் ஆற்றலற்றுப் போகுமாறு தண்டிக்கப்பட்டதை, நூறாண்டுப்போரின் படிப்பினையாகக் கற்றது. எனவே, ஐரோப்பியப் பெருநிலப்பரப்பின் பேராசைக்குத் தன்னை மீண்டும் குருட்டுத்தனமாக இரையாக்கிக் கொள்ள இங்கிலாந்து விரும்பவில்லை. டியூடர் காலம் முதல் ஐரோப்பிய அரசியலைப் படையெடுப்பிலிருந்து தவிர்த்துத் தற்காப்பினை நிலைநாட்டும் கருவியாகவே பிரிட்டன் பயன்

---

நடைபெற்ற வாணிகம் செழிப்புற்று விளங்கியது. இடைக்கால வழிகளைக் காட்டிலும் நன்னம்பிக்கை முனை வழியாகப் பெருஞ் சுமையான சாமான்களைப் பேரளவில், பெருங்கடல்களின் வழியாகக் கப்பல்களில் எடுத்துச் செல்லுவது எளிதாக இருந்தது. இடைக்கால ஐரோப்பா, ஆசிய நாடுகளிலிருந்து தருவித்த மதிப்புமிக்க பொருள்களுக்கும், நறுமணப் பொருள்களுக்கும், பொன்னையும், வெள்ளியையும் கொட்டிக் கொடுத்தது. அதனால், அக்காலத்திய ஐரோப்பா வறுமையுற்றது. அமெரிக்க சுரங்கங்களில் பேரளவிற்குப் பொன்னும் வெள்ளியும் கிடைக்கத் தொடங்கிய பிறகே ஐரோப்பாவிற்கு இருந்துவந்த பற்றாக்குறை ஒருவாறு நீங்கியது. அதே சமயத்தில் கீழை நாடுகளிலிருந்து சந்தைகள் பெருஞ் சுமையான பொருள்களைக் கப்பல்களின் மூலம் அனுப்பிவைக்க முன் வந்தன.

படுத்தி வந்தது. ஆனால், பெருங்கடலுக்கு அப்பால் செயற்படுத்தும் வகையில் இங்கிலாந்து தன்னுடைய திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தது. அவளுடைய தீவுப்பண்பினை நன்முறையில் பயன்படுத்தியமையால், கடலக வாழ்விலும், குடியேற்றங்களை அமைக்கும் போட்டியிலும் பிரான்சுக்கும் ஸ்பெயினுக்கும் கிடைக்காத வாய்ப்புகள் பேரளவில் இங்கிலாந்திற்குக் கிடைத்தன.

புதிய உலகப் போட்டியிலிருந்து பிரான்சை வேறு வழியில் சமயப்போர் திருப்பியமையால், அதன் கடலக வாழ்வின் முன்னேற்றம் தடைப்பட்டது. அதே சமயத்தில் எலிசபெத்துப் பேரரசி இங்கிலாந்தினை அப்படுகுழியில் விழாது காத்ததோடு, தனக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பினைப் பயன்படுத்தி, இங்கிலாந்தின் கடலாதிக்கத்தை நிறுவமுயன்றாள். ஹாலந்து நாட்டின் புராடஸ்டண்ட்டுகளைப் போன்றும், இங்கிலாந்தின் புராடஸ்டண்ட்டுகளைப் போன்றும், பிரான்சு நாட்டு யூகோ நாட்டுகள் வாணிகத்தில் ஈடுபாடும் கடலக வாழ்வில் விருப்பமும் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் தங்கள் முயற்சியில் வெற்றிபெற்றிருந்தால், அவர்கள் பிரான்சினைப் பெருங்கடலின் தலைவியாக ஆக்கி இருப்பார்கள். ஆனால், கடற்படைத் தலைவர் கோலிக்னி (Admiral Coligny)யும், அவருடைய தோழர்களும் செயிண்ட் பார்த்தலோமியரின் நாளில் கொலைசெய்யப் பட்டனர். அதே நாளில் பிரான்சிஸ் டிரேக்கும், அவருடைய தலைமையில் பணியாற்ற முன்வந்த புராடஸ்டண்ட்டு கடலோடிகளும், ஆங்கிலேய அரசியின் தொண்டர்களாவும், ஆங்கிலேய மக்களின் சிறப்புமிக்க தலைவர்களாகவும் சிறப்புறத் தொடங்கினர். அவர்கள் இங்கிலாந்தின் முதன்மையான எண்ணத்தையும் முயற்சியையும் கடலின்மீது செலுத்துமாறு மக்களையும், அரசையும் திருப்பினர்.

பிரான்சின் நாட்டுப்புற அமைப்பில் சிறிதும் சிதறிப் போகாத சதுக்கங்களின் (Square) நீண்ட நில எல்லையுடையதாக இருந்தமையால், அதனுடைய பழைய நிலமானியப் படைமுறை வாழ்வே சமூகத்தின் சிறப்புமிக்க கூறாக இருக்கவேண்டும் என்ற இன்றியமையாமை ஏற்பட்டது. புதிய தேசிய முடியாட்சியின் நில ஆட்சி, செயல்முறைகளுக்குரிய அமைப்பினை உருவாக்கியது. ஆனால், இங்கிலாந்து, குறுகிய, ஒழுங்கற்ற வடிவில் முழுவதும் நன்கு அமைந்த கடற்கரையினால் சூழப்பட்டிருக்கிறது. அதனுடைய வடபகுதில் உள்ள ஒரே அண்டை நாடான ஸ்காட்லாந்தோடு இறுதியாக அமைதியுறவு கொண்டது. இத்தகைய கடற்

கரை அமைப்பினால் சிறியதும் பெரியதுமான துறைமுகங்கள் பலவற்றை இங்கிலாந்து பெற்றிருக்கிறது. அத்துறைமுகங்களில் கடலோடிகளும் மீனவர்களும் அக்காலத்தில் நிறைந்திருந்தனர். மேலும் அந்நாடு வணிகர்கள், கடல் மறவர்கள் முதலியோரின் கருத்துகளுக்கும் செல்வாக்கிற்கும் அடிமைப்பட்டிருந்தது. கடற்கரையோரத்திலுள்ள டோவோன் போன்ற கோட்டங்களிலுள்ள சிறந்த குடும்பங்களைக் கொண்ட சங்கம் ஒன்றை அவர்கள் நிறுவினார்கள். நம்முன்னோர்களிடத்து,

> "நாங்கள் உங்கள் போர் வீரர்களைப் பொருட்படுத்தமாட்டோம்;
> அதை அரசு வெறுத்தொதுக்கும்
> ஆனால் நாங்கள் உங்களுடைய கப்பலோட்டும் இளைஞர்களையே
> பெரிதும் விரும்புகிறோம்;
> அவர்களை அரசு போற்றி ஆதரிக்கும்"

என்னும் கருத்தமைந்த பழைய பாட்டு ஒரு வகை உணர்ச்சியை ஊட்டி, அவர்களை உள்ளக் கிளர்ச்சி பெறுமாறு செய்து வந்தது.

ஸ்பானிய ஆர்மடாவைத் தோற்கடித்து, இங்கிலாந்து பெற்ற வெற்றி வரம்புக்குட்பட்டதாகவே இருந்தது. அதற்குக் காரணம் கடலக ஆதிக்கமில்லாமை அன்று; தக்க இராணுவ அமைப்பும், கப்பற்படையினரால் (Sinior Service) உண்டாக்கப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க மரபுகளைப் பின்பற்றுமையுமே யாகும்.

இங்கிலாந்து இன்னும் கடற்கரையோரத்திலிருந்து எழுபது கற்களுக்கு மேற்பட்ட தொலைவில் இருப்பதில் ஒன்றும் பயனில்லை. அவளுடைய மக்களுள் பெரும்பான்மையினர் எவ்வகையிலாவது கடலோடு தொடர்புடையவர்களாக இருந்தனர். குறைந்தது கடலோடிகளுடனாவது அவர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். இவை எல்லாவற்றையும்விட லண்டன் மாநகரமே கடலின்மீது இருந்தது. ஆனால் பிரஞ்சு அரசமரபினர் வாழ்ந்த பாரிசு மாநகர் (Paris) உள்நாட்டில் அமைந்திருந்தது. மாட்ரிட்டு (Madrid) எவ்வளவு கடற்கரையோரத்திலிருந்து உள்நாட்டினுள் தள்ளி இருக்க முடியுமோ, அவ்வளவு தொலைவு உள்நாட்டிற்குள்ளே தள்ளி இருந்துவந்தது. லண்டன்மாநகரம்புராடஸ்டண்ட்டுகளின் சிறப்பு மிக்க நகரமாக விளங்கியது. ஆனால், அதே சமயத்தில் பாரிசு ஆர்வம் மிக்க கத்தோலிக்கர்களின் நகரமாக இருந்தது. இங்கிலாந்தின் பிறபகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, லண்டன்மாநகரம் மக்கள் பெருக்கத்திலும்,

செல்வத்திலும் ஈடும் இணையுமற்று விளங்கியது. அதனால்தான், அது இங்கிலாந்து முழுவதற்கும் வழிகாட்டியாக அமைய முடிந்தது. யூகோ நாட்டுகளின் துறைமுகமாகிய லா ரோச்செல்லே (La Rochelle), பிரான்சின் உள்நாட்டுப் பகுதிகளில் இருந்த பன்னிரண்டு மாபெரும் நகரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சிறப்பற்றதாகவே காணப்பட்டது. இக் காரணங்களாலும், வேறு சில காரணங்களாலும், பதினாறும் நூற்றாண்டில் பிரான்சு கடல் ஆதிக்கப் போட்டியில் முழுமுயற்சியுடன் ஈடுபட்டும் தோல்வியுற நேர்ந்தது. அதனுடைய கடற்படையின் சிறப்பு மிக்க பகுதி ஆங்கிலேயருடனும் சமயத்தின் அடிப்படையிலும், அரசியல் அடிப்படையிலும் நேச உறவு கொண்டு, காடிஸ்ஸிக்கும் (Cadiz) நெதர்லாந்திற்கும் இடையே ஸ்பானியக் கப்பல்கள் சென்றால் அதைக் கொள்ளையடிப்பதிலேயே ஈடுபட்டிருந்தது.

இங்கிலாந்தைக் காட்டிலும் பிரான்சு நிலமானியப் படை முறையினைப் பெரிதும் பின்பற்றியது. அதைக் காட்டிலும் ஸ்பெயின் நிலமானியப் படை முறையில் மூழ்கித் திளைத்தது எனலாம். ஸ்பெயின் போர்ச்சுக்கலைக் கைப்பற்றித் தன் நாட்டுடன் இணைத்துக் கொண்ட பிறகு (1580), இங்கிலாந்தைப் போன்றே அது கடலால் சூழப்பட்டிருந்தது. இவை யாவற்றையும் விட அந்நாடு போருக்குரிய கப்பற்படை ஒன்றை நிறுவி, கடலக மரபினைப் போற்றி வளர்த்திருந்தது. ஆனால், அக்கப்பல்கள், அடிமைகளால் இயக்கப்பட்டு வந்தன. அதன் கடலகப் போர்முறை மரபுகள் நடுநிலக் கடற்பகுதியின் கடலக மரபினைப் பின்பற்றுவனவாக இருந்தன. அக்கப்பற்படை சாலமிஸ் (Salamis), ஆக்டியம் (Actium) ஆகியோரின் தந்திரங்களைப் பின்பற்றி, துருக்கியின் படைகளை 1571-ல் லெபாண்ட்டோ என்னும் இடத்தில் முறியடித்தது. ஆனால், அப்படை டிரேக்கின் பரந்த கப்பல்களைக் கொண்ட படையினை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெற இயலாமற் போயிற்று. மேலும் ஸ்பெயினினுடைய கப்பற்படையினால் அட்லாண்டிக்குப் பெருங்கடலைக் கடப்பதற்கு முடியாமல் போயிற்று. எனவே, அப்படை ஆங்கிலக் கால்வாயிலும், பிஸ்கே வளைகுடாவிலும் (Bay of Biscay) மட்டும் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. ஆயினும் பெருங்கடல்களில் செல்லக்கூடிய பெருங் கப்பல்களை ஸ்பெயின் அமெரிக்காவிற்குச் சென்றுவரப் பயன்படுத்தி வந்தது; அட்லாண்டிக்கு பெருங்கடலை காடிஸ்ஸிக்கும் ஸ்பானிய மெயினுக்கும் (Spanish Main) இடையே கடந்து செல்லுவதற்கு அப்பெருங்கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. அவை குடியேறுவதற்காக வெளிநாடு

களுக்குச் செல்லும் மக்களை ஏற்றிச் செல்வதற்கும், அந்நாடுகளி லிருந்து பொன்னையும், வெள்ளியையும் கொண்டுவருவதற்கும் பயன்பட்டன. ஆனால், அவை போர்க்கப்பல்கள் அன்று. அதனால் ஆங்கிலேயக் கடற்கொள்ளைக்காரர்களுக்கு எளிதில் அவை இரையாயின. இங்கிலாந்திற்கும் ஸ்பெயினுக்கும் இடையே ஒழுங்காகப் போர்தொடங்கிய பிறகே, ஸ்பெயின் போர்க்கப்பல்களைக் கட்டத் தொடங்கியது. ஸ்பானிய ஆர்மடா, அந்நாட்டின் கடைசிக் கப்பற்படை அன்று; முதன் முதலாகக் கடலில் போரிடுவதற்காக (1588)க் கட்டப்பட்ட கப்பற்படையே யாகும். இதற்கு முற்றிலும் மாறாக இங்கிலாந்தின் நிலை இருந்தது. பிரான்சோடும், ஸ்பெயினோடும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது, ஆங்கிலேயரின் மக்கள் தொகை மிகக் குறைந்த அளவின தாகும். ஆனால், அவர்களுள் பெரும்பான்மையினர் கடலக வாழ்வில் நன்கு பயிற்சி பெற்ற கடலோடிகளாக இருந்தனர். அவர்கள் பல நூற்றாண்டுகளாக வடகடலின் புயலுக்கும் பேரலைக்கும் அஞ்சாது திரைகடலோடித் திரவியம் தேடும் கடல் மறவர்களாக வாழ்ந்துவந்தனர். எட்டாம் ஹென்றியின் காலம் முதல், தற்கால முறைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டதும், படைக்கலன்கள் பொருத்தப்பட்டதுமான சிறந்ததொரு கப்பற்படையை உடையதாக இங்கிலாந்து இருந்து வரலாயிற்று. அதனால் தனிப்பட்ட வாணிகர்களும், கடற்கொள்ளைக்காரர்களும் தொழில் முறையினால், கடற்போர் புரியும் ஆற்றலையும் முயற்சியையும் இயல்பாகப் பெற்றனர். பிலிப்பு மேரியை மணந்து கொண்டது முதல், அவர் ஆங்கிலக் கடற்படையை நம்பியே தம்முடைய திட்டங்களை வகுத்தார். தம்முடைய ஸ்பானியக் கப்பற்படை ஒருகாலும் இங்கிலாந்தின் கப்பற்படைக்கு இணையாக முடியாது என்பது அவருடைய நம்பிக்கையாகும்.[1]

[1] எலிசபெத்து அரசியின் காலத்திய கப்பற்படைகளைப் பற்றி நன் கறிந்த சர்வில்லியம் மான்சன் (Sir William Monson), 'உண்மையைச் சொல்லுவதானால் ஸ்பெயினின் அரசர் நம்மொடு போர்தொடுக்கும் வரை, கடற்போர் என்ன என்பதைப் பற்றி அறியாதவராக இருந்தார். அவர் அறிந்திருந்தவை எல்லாம் துருக்கியர்களை எதிர்த்துக் கடல் இடை கழிகளில் குறுகிய சிறைச் கப்பல்களில் போரிடுவதும், பிரஞ்சுக்காரரை எதிர்த்து டெர்செராஸ் (Terceras) தீவினில் போரிடுவதைப் பற்றியுமே யாகும். அப்போருக்கு அவர் பயன்படுத்திய கப்பல்கள், புதிதாக ஸ்பெயினோடு சேர்க்கப்பட்ட நாடாகிய போர்ச்சுக்கலுக்கு உரியன வாகும். கி. பி. 1591-ல் 'பழிக்குப் பழி' வாங்கப்பட்டபொழுதே அவ் வரசர் முதன் முதலாகத் தாம் கடலிலும் பேராற்றல் உடையவர் என் பதை உலகறியச் செய்தார். கி. பி. 1580-ல் பிலிப்பு, போர்ச்சுக்கலையும், அதன் படையையும், கடல் கடந்த நாடுகளில் உள்ள அதன் உடைமை

ஸ்பானியர் பெருங்கடல்களைக் கடந்து செல்லும் போர்க் கப்பல்களைக் கட்டியபொழுதும், அவர்கள் சமூக வாழ்வில் ஊடுருவிச் சென்ற நிலமானியப் படைமுறைக் குறிக்கோள்களும் படையியல் குறிக்கோள்களும் இயல்பாகவே அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி வந்தன. மேலும் லெபாண் டோவில் அவர்கள் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்த நடுநிலக் கடற்பகுதி மரபுகளும் அவர்களுடைய கப்பற்படையைப் புதுவகையில் அமைப்பதற்குத் தடையாக இருந்தன. துடுப்புகளால் தள்ளிச் செலுத்தப்பட்ட குறுகிய சிறைக் கப்பல்களாக இருந்தாலும் சரி, அல்லது பாய்மரத்தினையுடைய குறுகிய போர்க்கப்பல்களாக இருந்தாலும் சரி, ஸ்பானியர் நேராகக் கடலில் கப்பலைச் செலுத்தும் இயல்பூக்கம் உடையவர்களாகவே இருந்தனர். அக்கப்பல்களின் மூலம் அருகிலுள்ள இடங்களுக்குச் செல்லவும், பகைவரைத் தாக்குவதற்கும், சிறைப் பிடித்துக் கொண்டு வருவதற்கும் ஸ்பானியர் முயன்றனர். சுருங்கச் சொல்லுவதென்றால், ஸ்பானியர் தங்களுக்கு முன்பு சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த கிரேக்கர், ரோமானியர், வெனீசியர் ஆகியோரைப் போன்று, காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ற வகையில் கடற்போரினைப் பெரிதும் நிலப்போரோடு ஒப்புமையுடையதாகச் செய்ய விரும்பினர். அவர்கள் கப்பல்களில் வீரர்களைப் பாதுகாவலாக நிறைத்தனர். அவ்வீரர்கள், கப்பலோட்டிகளை முன்பு குறுகிய சிறைக் கப்பல்களைத் துடுப்பினால் செலுத்திய அடிமைகளைப் போன்றவர்கள் என்று கருதி, அவர்களைக் கொடுமைப்படுத்தினர் ; குற்றேவல் செய்யுமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டனர். இவற்றை நன்கறிந்த ஒருவர் 'கப்பலோட்டிகள், கப்பலிலுள்ள மற்றவர்களுக்கு அடிமைகளாக உள்ளனர்; அல்லும் பகலும் அவர்கள் உழைத்துழைத்து உரமற்றுப் போயினர். அவர்களுள் உறங்கும் வாய்ப்பினைப் பெற்றவர்கள் இல்லை எனலாம். கப்பலின் மேல் தளத்தில் சிறிது நேரமும் ஓய்வு பெறாது உழைக்க வேண்டியவர்களாக இருந்தனர்' என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.


கப்பல்களின் பக்கங்களில் உள்ள தொளைகளின் வழியாகப் பீரங்கிகளைச் சுடுவதற்குரிய புதிய போர் முறைப் பரிணாம வளர்ச்சியை முதன்முதலாக உலகிற்கு ஆங்கிலேயர் அளித்தனர். டிரேக்கின் துப்பாக்கிகள், நெல்சனின் மூன்றடுக்குக்

---

களையும் கைப்பற்றினர். அது கி. பி. 1640-வரை ஸ்பெயின் நாட்டு அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருந்து வந்தது. அதன் பிறகு அது இழந்திருந்த தனது உரிமையைப் பெரிதும் இங்கிலாந்தோடு நேச உறவு கொண்டு பேணிக்காத்து வந்தது.

கப்பல்களில் இருந்தத் துப்பாக்கிகளைக் காட்டிலும் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், அவை மிகச் சிறியன அல்ல. அவர்களுக்குத் தொண்டு செய்ய வீரர்களைக் காட்டிலும் கடலோடிகளே — கப்பலோட்டிகளே மிக முக்கியமானவர்கள். பகைவர்களை ஏமாற்றும் வகையில் கப்பல்களைத் திறமையாக எப்பக்கத்திலும் திருப்பிச் செலுத்தக்கூடிய ஆற்றலுடைய கப்பலோட்டிகள் இல்லையென்றால், பகைவருடைய தாக்குதல்களுக்குக் கப்பல்கள் எளிதில் இரையாகி விடும். மேலும், இரு கப்பல்களின் போக்கினைக் கணக்கிட்டு, குறிவைத்துச் சுடுவதற்கு ஏற்ற வகையில் கப்பலைச் செலுத்தக் கடமைப்பட்டவன் கப்பலோட்டியே ஆவான். சர் பிரான்சிஸ் டிரேக்கு போர்க் கப்பலை நடமாடும் பீரங்கியாகப் பயன்படுத்தினர். மெடீனாசிடோனியாவின் கோமகனுக்குக் கப்பல் வாட்படை வீரரையும், துப்பாக்கிப் படை வீரரையும் செயல்புரியச் செய்யும் மேடையாகவே பயன்பட்டது. ஆங்கிலேயக் கடற்படை வரலாற்றில், டிரேக்கு ஹாகின்சு ஆகியோர் காலம் முதல் நெல்சன் காலம் வரையில் பகைவரைக் கைப்பற்றித் தங்கள் கப்பல்களில் ஏற்றி வந்ததைப் பற்றிச் சுவைமிக்க கதைகள் பல சொல்லப்படுகின்றன. இங்கிலாந்தினைக் கடல் பேரரசியாக்கியது, அக் கப்பல்களில் சிறைபடுத்தப்பட்டு ஏற்றப்பட்டவர்கள் அல்லர்; அக் கப்பல்களின் பக்கங்களில் இருந்த துளைகளேயாகும்.

ஸ்பானியர் நிலமானியப் படைமுறை வெறுப்புணர்ச்சிகளோடு நடு நிலக்கடற்பகுதியைச் சார்ந்த கடற்போர் முறையினைப் பின்பற்றிச் செயலாற்றியமையால், கப்பல்கள் கடலில் செல்லுகின்ற பொழுதும், வீரர்களுக்குக் கப்பலோட்டிகளை அடிமைப்படுத்தியிருந்தனர். அதே சமயத்தில் டிரேக்கு, கப்பல்களில் வீரர்களுக்கும் கப்பலோட்டிகளுக்கும் இடையே அன்பான உறவும், உடன்பாடும் இருந்து வருமாறு செய்தார். அத்துடன் அவர் உலகைக் கப்பலில் சுற்றி வந்த (1578) பொழுது வீரதீரச் செயல்புரியும் பண்பாளர்களுக்குள் கீழ்ப்படியாது இருந்தவர்களை எல்லாம் கீழ்ப்படிந்து நடக்குமாறு செய்து விட்டார். இவ்வாறு அவர் 'பண்பாளர்க்கும் கப்பலோட்டிகளுக்கும் இடையே இருந்து வந்த வயிற்றெரிச்சலைப்' போக்குவதற்குச் சிறந்ததொரு விதியினை வகுத்தார். 'நான் உடல் நலத்துடன் வாழப் பண்பாளர்கள் எனக்குத் தேவை; அதைப் போன்று கப்பலைச் செலுத்துவதற்குக் கப்பலோட்டிகள் எனக்குத் தேவை' என்பதே அவ்விதியாகும். இத்தகைய புதிய புறப்பாட்டில் தொடங்கிப் 'பண்பாளர்', போருக்குக் கப்பல்களில் புறப்படும் ஆங்கிலேயர்களுள், தங்களுடைய நிலை




படம் 22

**எலிசபெத்து அரசியின் காலத்திய ஐரோப்பா**

என்ன என்பதை நன்குணர்ந்தனர். நெடுங்காலம் படிப்படியாகப் பழகி வந்தமையால் அவர்களும் கடற்படை வீரர்களாக மாற்ற முற்றனர். நெல்சன் பிறந்த பொழுது, அரசரின் கடற்படை அதிகாரிகள் ஒவ்வொருவரும் 'கடற்படை வீரர்க்குரிய' பண்பு நலத்துடன், 'பண்பாளர்களுக்குரிய' பண்புநலமும் உடையவர்களாகச் சிறப்புற்று விளங்கினர். அதனால் கடலோடிகளாகப் பணிபுரிவதும், வீரர்களாகப் போர்புரிவதும் இணைந்து ஒரே பணித்துறையாக, பிரிக்க இயலாததாக இங்கிலாந்தின் கடற்படை சிறப்புற்று விளங்கியது.

டிரேக்கு தனிப்பட்ட கடலோடிகளுள் மாண்பு மிக்கவராக விளங்கியதைப் போன்றே, அரசின் கடற்படைத் தலைவர்களுள் பெருஞ் சிறப்பும் பொன்றாப் புகழும் பெற்றவராவர். வேறு யாருமே அரசாங்கத்துக் கப்பற்படைக்கும், வாணிகரின் பெருங் கப்பல்களுக்கும் இடையே உண்டாக்க முடியாத உடன்பாட்டை டிரேக்கு நன்முறையில் நெடுங்காலம் தொடர்ந்து அவர்களிடையே நிலவுமாறு செய்தார். அவ்வாணிகக் கப்பல்கள் நெடுங்காலமாக ஸ்பெயினோடு தனிப்பட்ட முறையில் போராடிக் கொண்டிருந்தமையால், அவை அரசினரின் கப்பற்படையோடு ஒருங்கியைந்து பகைவரை எதிர்க்க முற்பட்டன. ஸ்பானியர் கப்பல்களைச் செலுத்துவதற்கென்று அடிமைகளையும், கடற்போர் புரிவதற்கென்று சிறந்த வீரர்களையும் கப்பல்களில் பயன்படுத்தி வந்தனர். ஆனால், இங்கிலாந்தின் பெருமைக்கும், செல்வச்சிறப்புக்கும் காரணமாக இருந்த சுறுசுறுப்பான தனிப்பட்ட கடல் வாணிகர்களையும், கடலோடிகளையும் கொண்ட மிக இன்றியமையாத கடற்போருக்குரிய வீரர்களையும், கப்பலோட்டிகளையும் ஸ்பெயின் பெற்றிருக்கவில்லை.

ஸ்பானிய, ஆங்கிலேயக் கப்பல்களிடையே காணப்பட்ட தந்திர முறைகளிலும், ஆட்கள் தொகுதியிலும், பொறியியல் அமைப்பிலும் காணப்பட்ட வேறுபாடுகள், ஸ்பெயினுக்கும் புதிய இங்கிலாந்திற்கும் இடையே காணப்பட்ட சமூக வேறுபாடுகளால் உண்டானவையாகும். தனியார் முயற்சி, தனியார் வீரதீரச் செயல்கள், மக்களினங்களுக்கு இடையே நல்லதொரு சமுதாய சமத்துவ முறை முதலியன மறுமலர்ச்சி இயக்கத்தாலும், சீர்திருத்த இயக்கத்தாலும் புதிய விழிப்புணர்ச்சி பெற்ற இங்கிலாந்தில்—நிலமானியப் படைமுறைப் பழக்க வழக்கங்களைக் கைவிட்டுவிட்ட இங்கிலாந்தில்—பெருகிய வண்ணம் இருந்தன. இப்பண்புகள் இங்கிலாந்தின் வாணிகர்களிடத்திலும், கடலோடிகளிடத்திலும் பேராற்றல் வாய்ந்த

லவயாக இருந்தன. பண்பாளர்கள், நடுநிலைவகுப்பினர், கடைநிலைவகுப்பினர் ஆகிய மக்களுடைய ஆற்றல் மிக்க உணர்வனைத்தும் கடலக வாழ்வில் தோழமைப் பண்பினை வளர்த்தன. அதனால், அவர்கள் வாணிகம் செய்வதிலும், போரிடுவதிலும் தோழமைப் பண்புடன் ஒருங்கு சேர்ந்து செயலாற்றினர். அரசியலில் அரசன் வரம்பற்ற அதிகாரங்களையுடையவராக மாறிய போதிலும், ஸ்பெயின் இக்காலத்திலும் நிலமானியப் படைமுறைப் பழக்க வழக்கங்களையும் கருத்துகளையும் கொண்ட சமூகமாகவே இருந்துவந்தது. டிரேக்கு நன்குணர்ந்திருந்ததைப்போல, கப்பல் தளத்தில் ஒழுங்கு முறையும் கட்டுப்பாடும் இன்றியமையாது தேவைப்பட்டதே ஒழிய, நிலமானியப் படைமுறையும், இனச்செருக்கும் தேவைப்படவில்லை. கடலக அதிகார வரிசைமுறை, நாட்டிலே காணப்படும் அதிகார வரிசைமுறையைப் போன்றது அன்று.

ஸ்பானியர் தங்கள் ஆதிக்கத்தின் கொடுமுடியை எட்டிப் பிடித்த காலத்தில், சிறந்த குடியேறிகளாகவும், திறமை வாய்ந்த வீரர்களாகவும் விளங்கினர். ஆனால், அவர்கள் சிறப்புடைய கப்பலோட்டிகளாகவும், துணிவுமிக்க வாணிகர்களாகவும் விளங்காமற் போயினர். அதற்குமாறாக வெறுக்கத்தக்க அரசியல் வாதிகளாகவும், ஆளுநர்களாகவுமே இருந்தனர். அவர்களுடைய கத்தோலிக்க சமய ஆர்வம், தங்களுடைய மக்களைத் தங்கள் நாட்டிலிருந்து வெளியேற்றவும் அல்லது கொலை செய்யவும் தூண்டியது; இதைப்போன்றே இவர்களுடைய வாணிக வாய்ப்புகளைப் பிறநாட்டவரும், பிற இனத்தவரும் கைப்பற்றுமாறு தூண்டியது. அமெரிக்கச் சுரங்கங்களில் இருந்து தொடர்ந்து பொன்னையும், வெள்ளியையும் இறக்குமதி செய்வதனால் மட்டும் ஒரு நாடு நெடுங்காலம் செழிப்புற்று விளங்கமுடியாது. ஆங்கிலேயர் அவற்றை வழிப்பறி செய்யாமல் இருந்திருந்தாலும், அப்பொருளால் சிறப்புற்று அந்நாடு நெடுங்காலம் இருந்திருக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்பானியர் தங்கள் சமய வெறியினால், புதுயுகத்தில் ஒருகால் போட்டியிட்டிருக்கக்கூடிய பிளாண்டர்சு நகரங்களின் செழிப்பினையும் சிறப்பினையும் அழித்தொழித்தனர். பிளமிய வாணிகர்கள் இழக்க நேர்ந்த வாணிகத்தை ஹாலந்தின் கடலோடிகள் மரபுரிமையாகப் பெற்றனர். ஆனால், ஸ்பானியரின் கொடுமையைப் பொறுக்க முடியாது, அவர்கள் ஆங்கிலேயருடன் நேச உறவு கொண்டனர். எப்பொழுதாகிலும் சமூக, அறிவாற்றல் உரிமைகள் அதன் எதிரான பண்புகளின்மீது வெற்றி கொண்டிருக்குமானால், அது

இங்கிலாந்தும் போர்ச்சுக்கலும் ஸ்பெயினின்மீது கொண்ட வெற்றியாகவே இருக்கமுடியும்.

எலிசபெத்து அரசியின் காலத்தில் கடற் போர்களில் இங்கிலாந்து வெற்றி பெற்றமைக்கும், ஸ்டூவர்ட்டு அரசர்கள் காலத்தில் உலகின் பல பகுதிகளில் குடியேற்றங்களை அமைப்பதில் இங்கிலாந்து வெற்றிபெற்றமைக்கும் அதனுடைய வாணிக வளர்ச்சியே காரணமாகும். ஸ்பானிய கடல் ஆதிக்கத்தை வளர்ப்பதற்குரிய முறையில் அந்நாட்டுக் கடல் வாணிகம் வளர்ச்சியுறாமையால், இங்கிலாந்து என்னும் சிறு தீவின் தாக்குதலால் அது வீழ்ச்சியுறலாயிற்று பேரரசர் பிலிப்பின் அரசியல், படையியல் ஆற்றலும் பயனற்றுப்போயிற்று. உலக உருண்டையின் பாதிப்பகுதிக்கு மேற்பட்ட நாடுகளின் மூலைமுடுக்குகளில் எல்லாம் ஸ்பெயின் குடியேற்றங்களை அமைத்திருந்தபோதிலும், வாணிக வளமும், கடலாதிக்கமும் இல்லாமையால் ஒரே சமயத்தில் இங்கிலாந்திடத்தும், கலகம் புரியும் சில நகரங்களையும், சேற்று நிலங்களையும் கொண்ட ஹாலந்திடத்தும் தோல்வியுற நேர்ந்தது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் பகுதிகளோடு எவ்வாறு வாணிகம் செய்யவேண்டும் என்பதை ஸ்பெயின் அறியவில்லை. ஆனல் அதை ஆங்கிலேயரும், டச்சுக்காரர்களும் நன்கு கற்றிருந்தனர்.

புதிதாக உற்பத்தி செய்யப்படும் துணிகளைக் கொண்டு சென்று விற்பதற்குரிய இடத்தினையும், நாடுகளையும், சந்தைகளையும் ஐரோப்பாவில், இங்கிலாந்தின் துணிவுமிக்க வாணிகர்கள் பதினைந்தாம் நூற்றாண்டு முதல் தேடிக்கொண்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் தேடியலைந்தபொழுது, கடற்கொள்ளை ஒரு பொது நிகழ்ச்சியாக — இழிவாகக் கருதப்படாததாக இருந்த காலத்தில் அடிக்கடி கடற்பயணத்தில் இரத்தம் சிந்த வேண்டியவர்களாக இருந்தனர். மேலும் அக்காலத்தில் வாணிக உரிமைகள் மறுக்கப்பட்டும், வாளினைக் காட்டி அச்சுறுத்திப் பெறப்பட்டும் வந்தமையால் அவர்கள் குருதியைச் சிந்தியதில் வியப்பில்லை. எலிசபெத்துப் பேரரசியின் காலத்தில் அவர்கள் ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்க நாடுகளில் புதிய சந்தைகளைத் தேடிப் புது வழிகளில் சென்றனர்.

ஹாக்ளுயுட், ஒவ்வொரு கடற்பயணத்திலும் உயிர் பிழைத்து வந்தவர்கள் சொல்லிய கதைகளைப் பொறுமையாகக் குறித்து வைத்ததன் மூலம், தங்கள் நாட்டின் வருங்காலச் சிறப்பு அனைத்தும் கடலக வாழ்வினை ஒட்டியே அமையப் போகிறது

என்ற உணர்வினை ஆங்கிலேய மக்களிடத்து நன்கு வேரூன்றித் தழைக்குமாறு செய்தார். அவருடைய நூல் நமக்குப் போரியல் பண்புடைய துணிவு மிக்க டிரேக்கு ஸ்பானியரைக் கொள்ளையடித்த செயல்களும், புதிய வாணிகத் தொடர்பினை அதன் குடியேற்ற நாடுகளோடு பீரங்கிப்படையின் உதவியைக் கொண்டு நிறுவிய செய்தியையும் எடுத்தியம்புகிறது. அதே சமயத்தில் மஸ்கோவி, ஆப்பிரிக்கா, லெவாண்ட்டு ஆகிய நாடுகளோடு பேரளவில் அமைதியான வாணிகத் தொடர்பு இருந்து வந்ததையும் அறிய முடிகின்றது. ஹாக்கின்சும், மற்றவர்களும் அடிமை வாணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், மற்ற ஆங்கிலேய வாணிகர்கள் போர்ச்சுகீசியர்களால் நீக்கிரோக்கள் துன்புறுத்தப்பட்டதைப் போல் அல்லாமல், அவர்களை நன்முறையில் நடத்துவதன் மூலம் கினியா (Guinea) வாணிகத்தை வளர்க்க விரும்பினர். மேலும், அவர்கள் வீணுக வெள்ளையரிடத்திலும் கறுப்பர்களிடத்திலும் போரிட விரும்பவில்லை.

ஆயினும் அமைதியை விரும்பிய வாணிகர்களையும், போரிடும் பண்பு கொண்டிருந்த வாணிகர்களையும் தெளிவாக வேறுபடுத்தி உரைப்பது அரிய செயலாகும். ஏனெனில் ஆப்பிரிக்க, இந்தியக் கடற்கரை ஓரங்களில் வந்த ஆங்கிலேய வாணிகர் அனைவரையும் போர்ச்சுகீசியர் தவருமல் தாக்கி வந்தனர். தங்களுக்குப் போப்பு ஆண்டவர் உரிமையாக அளித்த நாடுகளில் பிற நாட்டினரை, சிறப்பாகச் சமய மறுப்பாளர்களைக் காலெடுத்து வைக்கவொட்டாமல் தடுத்துக் காப்பதில் ஸ்பெயின் எத்துணை அளவிற்குக் கண்ணும் கருத்துமாக இருந்துவந்ததோ, அத்துணை அளவிற்குப் போர்ச்சுக்கலும் அதைப் பின்பற்றி வந்தது. அடிக்கடி ஆப்பிரிக்காவின் கோல்டு கோஸ்ட் (Gold Coast), போர்ச்சுகீசிய தனியுரிமைக் குத்தகைக்காரர்களுக்கும், ஆங்கிலேய தலைபீட்டாளர்களுக்கும் இடையே உண்டான போரின் எதிரொலியை மீண்டும் மீண்டும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. எலிசபெத்தினுடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் அதே ஒலி இந்தியக் கடல்களின் அமைதியைக் குலைக்கத் தொடங்கியது. மேலும் மலேயாத் தீவுக் கூட்டங்களிலும் அவ்வொலி சென்று ஒலிக்கத் தொடங்கியது. போர்க் காலமாக இருந்தாலும் சரி, அல்லது அமைதிக் காலமாக இருந்தாலும் சரி, நேர்மையான வாணிகர் ஒருவரின் வாழ்க்கையில் கடற்கொள்ளைக்காரர்களோடு போரிடுவதோ, அயல் நாட்டுப் போட்டியாளரோடு போரிடுவதோ தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாக அக்காலத்தில் இருந்து வந்தது. இத்தகைய தவிர்க்க முடியாத பகைவர்களினுல் உண்டாகும் இழப்புகளையும், அதற்காகச் செய்யப்

படும் செலவுகளையும் பொறுப்புடன் ஏற்றுக் கொள்ளுவதற்காக நகரங்களில் கம்பெனிகள் (Companies) நிறுவப்பட்டன. உலகின் மற்றொரு பகுதியாகிய புதிய நாடுகளுக்கு அரசாங்கக் கப்பல் களும், அரசாங்கத் தூதர்களும் எப்பொழுதுமே சென்றதில்லை. எனவே, அந்நாடுகளில் இராணுவ அதிகாரமும், அரசியல் சூழ்ச்சித்திறனும் பெற்று விளங்குமாறு, அக்கம்பெனிகளுக்கு அரசி எலிசபெத்து பட்டயங்களை வழங்கினாள். தனிப்பட்ட ஆங்கிலேய வாணிகர்கள், தங்கள் சட்டத்திற்குட்பட்ட வாணி கத்தின்பொருட்டு அயல் நாட்டிற்குச் சென்றவர்களே மாஸ் கோவில் சார் (Czar) மன்னரின் அவையிலும், ஆக்ராவில் மொக லாய வேந்தரின் அவையிலும் முதன்முதலாகத் தங்கள் நாட்டின் சார்பில் இடம் பெறலாயினர்.[1]

புதிய நாடுகளைக் கண்டு பிடிக்கும் ஆர்வத்துடன் செய்யப் படும் ஆய்வுப் பயணத்திற்கும், போர்த் தொழிலிற்கும்" அயல் நாட்டு வாணிகமே ஊக்கியாக இருந்தது. மக்களின் மனத்தி லும் இதயத்திலும் வியப்பூட்டும் அருந்திறப் புத்துணர்ச்சியும் (Romance), பணம் தேடவேண்டும் என்னும் எண்ணத்தோடு நம்பிக்கையற்ற நிலையில் உண்டான உள்ள உரமும், ஆதாய ஈவுகளும் (Dividend) நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. அன்றாட வயிற்றுப் பசியைப் போக்குவதற்காகப் பாடுபடும் வாழ்க்கையையும், கற்பனை நிறைந்த கவியுலக வாழ்க் கையையும் வேறுபடுத்திக் காண முடியாத நிலையில் அக் காலத்திய மக்கள் வாழ்ந்தனர். தற்காலத்தில் எவரெஸ்ட்டு (Everest) சிகரத்தின் கொடுமுடியைக் காண்பதற்கும், தென் துருவத்தினைக் (South Pole) கண்டு அறிவதற்கும், 'பெருமையை யும் மதிப்பையுமே நோக்கமாகக் கொண்டு மக்கள் செல்லுவது பணச் சந்தைகளின் நடைமுறைகளும், தெளிவுமிக்க அரசியல் விரகரின் போர்த் திட்டங்களும் மக்களைப் பயணங்களிலும், படையெடுப்புகளிலும் கலந்து கொண்டதோடு பெரிதும் ஒப்பு மையுடையதாகக் காணப்படுகின்றது. ஓரளவிற்கு அக்காரணத் தினால்தான், எலிசபெத்தின் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலேயரின் செயல்முறைக் குறிக்கோள் (idealism) மிகச் சிறந்த உச்சநிலை யினை அடையுமாறு எழுச்சியுற முடிந்தது.

[1] பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆப்பிரிக்காவின் உள் நாட்டுப் பகுதிகளில் ‘பட்டயம் பெற்ற’ கம்பெனிகள் அமைக்கப்பட்டன. அவை எலிசபெத்தின் மாஸ்கோவி கம்பெனி (Elizabethan Muscovy Co) லெவாண்ட்டு கம்பெனி, கிழக்கு இந்தியக் கம்பெனி முதலியவை அமைக் கப்பட்ட சூழ்நிலையினைப்போன்றும், அவை பெற்ற அதிகாரத்தைப் போன்றும் உரிமைகள் உடையனவாய் நிறுவப்பட்டன.

> 'பேரிடுக்கண்கள் நிறைந்தும் வீரதீரச் செயல்புரியும் உணர்வு மிகுந்திருப்பதைப் போன்றும், பேராரவாரத்தோடு பெய்யும் பெருமழையினிடையே நடந்து செல்லுவதைப் போன்றும், ஈட்டியை உறுதியற்ற நிலையில் ஊன்றுவதைப் போன்றும்'

வாழ்வையும், தாழ்வையும் அளித்து ஆன்மாவிற்குக் கிளர்ச்சியூட்டும் வீரதீரச் செயல்கள் நிறைந்த வாணிகத்தையே தங்கள் உயிர்நாடியாகக் கொண்டிருந்த மக்களிடையேதான், டிரேக்கு (Drake), சிட்னி (Sidney), ஸ்பென்சர் (Spenser), முதலியோர் மட்டும் அல்லாமல் ஷேக்ஸ்பியரும் தம்முடைய வாழ்நாளைக் கழித்தார்.

பெருங்கடலிற்கு அப்பாலிருந்த நாடுகள் உலகப் படத்தில், குறிப்பிடப் படாமலிருந்தமையால், லண்டனிலும், டேவோனிலும் வாழ்ந்த மனிதர்களுக்குத் தெய்வலோக மங்கையர் நிறைந்த தீவுக் கூட்டமாகவே அவை தோன்றின. ஒவ்வொரு தீவும் தனக்கெனப் புதிய அதிசயங்களையுடையதாகவும், நெடுந்தொலைவிலுள்ள 'நாடுகளுக்குச் சென்று பெரும் பொருள் திரட்டி வருவேன் அல்லது அங்கேயே செத்து மடிவேன்' என்று சாராயக் கடைகளில் வஞ்சினம் மொழிந்து, துணிச்சலோடு புறப்பட்டுவரும் மாவீரர்களால் புதிதாகக் கண்டு பிடிப்பதற்காக அந்நாடுகள் ஒவ்வொன்றும் காத்துக் கொண்டிருப்பதாகவே ஆங்கிலேயர்கள் கருதலாயினர்.

இத்தகைய பேராற்றலும், பெருந்திறனும், பேரார்வமுடைய நம் தலைமுறையினருக்கு, போர்ச்சுகீசியருக்கும், துருக்கியருக்கும் பின்புறமாக, ஆர்க்டிக்குப் பெருங்கடலின் மூலம் இந்தியச் சந்தைகளுக்குக் கடல் வழி கண்டு பிடிப்பது ஒரு சிறு செயலாகவே தோன்றியது. ஆறும் எட்வர்ட்டின் ஆட்சிக்காலத்தில், முதுமைப் பருவமுற்றிருந்த சபாஸ்டியன் காபெட்டு ஆங்கிலேயர்களின் உள்ளங்களில் இவ்வெண்ணத்தைப் புத்துயிர்ப்புப் பெறுமாறு செய்தார். 1553-ல் ரிச்சர்ட்டு சான்சலர் (Richard Chancellor) என்பவர் வெண்கடல் (White Sea) மூலம் வடகிழக்குக் கடல் வழியாக இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார். ஆனல், அவர், பர் (fur) உடை அணிந்த பழங்குடி மக்களைக் கொண்ட மாஸ்கோவில், சார் (Czar) மன்னர் காட்டுமிராண்டித்தனமாக மக்களை ஆளுவதைக் கண்டார். அங்கிருந்து தாயகம் திரும்பியவுடன் ரிச்சர்ட்டு, தன் நாட்டு மக்களுக்கு ருஷியோவோடு பேரளவில் வாணிகம் செய்வதற்குரிய வாய்ப்புக்கள் இருப்பதைப் பற்றி எடுத்துரைத்தார். மூன்றாண்டுகள் கழித்து இரண்டாவது முறையாக அவர் ருஷியாவிற்குக் கடற்

பயணம் செய்தபொழுது, வழியில் இறந்து போனர். எனவே, எலிசபெத்துப் பேரரசியின் காலத்தில் நிறுவப்பட்ட ஆங்கிலேய மஸ்கோவி கம்பெனி (English Muscovy Company)யைச் சார்ந்த வாணிகர்களே ருஷியாவின் உள்நாட்டோடு வாணிகத் தொடர்பு கொண்ட முதல் மேலை நாட்டினராவர். ஆனல், அடுத்த நூற்றுண்டில், சிறிது காலத்திற்கு அவர்கள் அவ்வாணிகத்தை டச்சுக்காரர்களிடத்து (1576–8) ஒப்படைக்க வேண்டியவர்களாயினர். இதற்கு நேர் எதிராக வடமேற்குக் கடல் வழியாகப் புரோபிஷரும் (Frobisher), டேவிசும் (Davis) இந்தியாவிற்குச் செல்லுவதற்கு (1585–7) முயன்றனர். அதன் பயனுக ஸ்டுவர்ட்டு மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் ஹட்சன் வளைகுடாவில் (Hudson's Bay), பர் (fur) வாணிகம் செழிப்புற்று வளரலாயிற்று. இவ்வாணிக முயற்சி பிரிட்டிஷ் கனடாவின் வரலாற்றை உருவாக்கிய பலவகை ஆற்றல்களுள் சிறப்புமிக்கதாகும்.

ஸ்பெயினேடு போரிட்டுக் கொண்டிருந்த போதிலும், எலிசபெத்து காலத்திய ஆங்கிலேய வாணிகர்கள் அதைப்பற்றிய தயக்கமோ, கவலேயோ இல்லாமல், நடுநிலக் கடலிணக் கடந்து கீழ்த்திசையிலுள்ள நாடுகளுக்குச் சென்று வந்தனர். லெவாண்ட்டு (Levant) வாணிகக் கம்பெனி வெனிஸ் மாநகரோடும் அதனைச் சூழ்ந்திருந்த கிரேக்க தீவுகளோடும் வாணிகம் செய்து வரலாயிற்று. அத்துடன் நின்றுவிடாது, வெனிஸுக்கு அப்பாலுள்ள இசுலாமிய உலகத்தோடும் அக்கம்பெனி வாணிகத் தொடர்பு கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாதம். துருக்கியருக்குக் கடலக வாழ்வில், வெனீசியரும், ஸ்பானியரும் பகைவர்களாக இருந்து வந்தமையால், துருக்கியின் சுல்தான், புறச் சமயத்தினரான ஆங்கிலேயர்களைக் கான்ஸ்டாண்டிநோபிளில் மகிச்சியுடன் வரவேற்ருர். ஆனல் அவ்விடம் நோக்கிச்செல்லுகின்றபொழுதும் ஆங்கிலேய வாணிகர்கள், ஜிப்ரால்டர் இடைகழி அருகில் ஸ்பானியரின் சிறைக் கப்பல்களிலிருந்தும், அல்ஜீரிய கடற்கரைக்கு அப்பால் 'பார்பாரி கடற் கொள்ளைக்காரர்கள்' ('Barbary pirates') எனப்படும் வட ஆப்பிரிக்கக் கடற் கொள்ளைக்காரர்களிடமிருந்தும் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருந்தார்கள். இவ்வாறு நடுநிலக் கடற் பகுதியில் ஆங்கிலேயரின் கடலாதிக்கம் தோன்றிவளரலாயிற்று. ஆயினும் ஸ்டுவர்ட்டு ஆட்சிக்காலம் வரையில், வாணிகக் கப்பல்களே பகைவர்களை எதிர்த்துப் பல போர்கள் புரிந்து வந்தன. ஸ்டுவர்ட்டு மன்னர்கள் ஆட்சியில்தான், முதன் முதலாக அரசாங்கக் கப்பற்படை வாணிகக் கப்பல்களுக்குத் துணையாக உடன் அனுப்பப்பட்டன.

இங்கிலாந்தினை ஆர்மடா தாக்கிக்கொண்டிருந்த பொழுது, ரால்பு பிட்ச் (Ralph Fitch) என்னும் துருக்கிய வாணிகர் அலப்போ (Aleppo) விலிருந்து புறப்பட்டு, தூரக்கிழக்கு நாடுகளில் பயணம் செய்துவிட்டு, நிலவழியாக இந்தியாவிற்குச் சென்றார். அவர் எட்டு ஆண்டுகள் அந்நாடுகளில் எல்லாம் சுற்றித்திரிந்தார். அதன் பிறகு, அவர் பாரசீக வளைகுடா, இந்துஸ்தான், மலாக்கா முதலியவற்றைப் பற்றிய சிறந்த செய்திகளைத் தாயகத்திற்குக் கொண்டு வந்தார். அவர் அரும்பாடு பட்டுத் திரட்டிக் கொண்டுவந்த செய்திகளும், குறிப்புக்களும் கிழக்கிந்தியக் கம்பெனியின் (East India Company) அமைப்பாளர்களைப் பெரிதும் ஊக்குவித்தது. 1600-ல் அவர்கள் எலிசபெத்திடமிருந்து, பட்டயத்தைப் பெற்றனர். அதன் பிறகு உயர்ந்த கப்பல்களில் அவர்கள் சரக்குகளை நிறைத்துக்கொண்டும், போர்ச்சுக்கலிடமிருந்து தங்களைக் தற்காத்துக்கொள்ளுவதற்குப் போதிய படைகளையும் உடன் அழைத்துக்கொண்டு, நன்னம்பிக்கை முனையினைச்சுற்றிய வண்ணம் இந்தியக் கடல்களில் சென்று வாணிகம் செய்வதற்குப் புறப்பட்டனர். பெரிய தீபகற்பமான இந்தியாவை நம் நாட்டு மக்கள் கைப்பற்ற வேண்டும் என்ற மண்ணாசையோடு அந்நாட்டிற்கு முதலில் செல்லவில்லை. தங்களுடைய வாணிகப் பொருள்களைக் கொண்டு சென்று குவிப்பதற்குகந்த வாணிகச் சந்தையைத் தேடியே நம் நாட்டு மக்கள் முதன் முதலாக இந்தியாவிற்குச் சென்றனர். ஆனல், அவர்களுடைய வழித்தோன்றல்கள் அந்நாட்டினை ஆளும் பேறுபெற்றனர். இதற்கு முன்பே, ஹாக்ளுயட்டு இத்தகைய நாட்டுப் பற்றுடன், இதற்கும் அப்பால் நெடுந்தொலைவிலுள்ள நாடுகளை நோக்கியுள்ளார்.

'இந் நாட்டின் இயற்கை அளிக்கும் சிறப்பு மிக்க நம்முடைய கம்பளியால் நெய்யப்பட்ட துணிகளுக்குப் பேரளவில் சந்தைகளைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற நம்முடைய பேரார்வத்தாலும், பெரு விருப்பத்தாலும் ஆராய்ந்தேன். நான் படித்த நூல்களினலும், காட்சியறிவினலும் பல திறப்பட்ட ஜப்பான் தீவுகளும், சீனவின் வடபகுதியும், அதற்குப் பக்கத்திலுள்ள டார்ட்டார்களுடைய (Tartars) நிலப்பகுதியுமே நம்முடைய கம்பளிப் பொருள்களுக்குப் பெரிதும் ஏற்றதாகத் தோன்றுகிறது' என்று அவர் எழுதியுள்ளார்.

எலிசபெத்து அரசியின் காலத்தில், துணிவுமிக்க வாணிகர்கள் இத்தகைய கடல் வழிகள் அனைத்தையும், நெடுந்தொலைவிலுள்ள சந்தைகளையும் கண்டறிந்து ஒருவாறாகத் திட்டத்தைத்

தீட்டினர். அதன் பயனுக ஸ்டூவர்ட்டு மன்னர்கள் காலத்தில் பேரளவில் அயல் நாட்டு வாணிகம், சிறப்பாகத் துணி ஏற்று மதியில் பெருக்க முற்றது. அரசியும், அவளுடைய அமைச்சர் களும் வாணிகச் சமூகத்தினரின் தேவைகளையும், துன்பங்களை யும் நன்கு புரிந்து கொண்டனர். அதனுல், அவர்கள், வாணிகர் களுக்கு ஒல்லும் வகையெல்லாம் ஓயாது தொண்டாற்றி வந்த னர். எலிசபெத்து அரசி தன்னுடைய சகோதரனையும், சகோதரியையும் போன்று இல்லாமல், லண்டன் மாநகர மக்க ளின் கருத்துக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாள். இங்கிலாந்தில் டியூடர்களின் ஆட்சி வெற்றி பெற்றதற்குக் காரணம் அவர்கள் லண்டன் மாநகர மக்களின் கருத்துகளை மதித்துப்போற்றியமை என்பதை நாம் மறத்தலாகாது. அரசாங்க நாணயமாற்றினை (Royal Exchange) முதன் முதலாக நிறுவிய சர்தாமஸ் கிரஷாம் (Sir Thomas Gresham) என்பவரோடு எலிச பெத்தும், செசிலும் (Cecil) தனிப்பட்ட முறையில் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்து வந்தனர். தாயகத்திலும், வெளி நாடு களிலும் கடன்களை எழுப்புவதற்கு அவள், கிரஷாமைப் பயன் படுத்தி வந்தாள். மேலும், நிதிபற்றிய விவகாரங்களில் அரசி, அவருடைய அறிவுரையை நாடியவண்ணம் இருந்தாள். அக் காலத்திய நிதிச்சிக்கல்களில், நாணயங்களை மறுபடியும் அச்சிட்டு வழங்குவது பெரும் பிரச்சினையாக இருந்து வந்தது. எலிச பெத்து தன்னுடைய ஆட்சியின் தொடக்க காலத்தில் நாணயங் களை மறுபடியும் அச்சிட்டு வழங்கினுள். அதன் மூலம், அவள் தன்னுடைய தந்தை வேண்டுமென்றே செய்த நாணயச் செலா வணியின் தரக்குறைப்பால், குடிமக்களின் அன்றாட வாழ்க்கை யில் உண்டான பெருஞ்சுமையை அப்புறப்படுத்துவதில் வெற்றி கண்டாள்.

தொடர்ச்சியாக நெடுங்காலம் நாணயத்தின் தரம் குறைந்து வந்தமையால் எலிசபெத்திற்கு நிதிப் பற்றுக்குறையால் உண் டான இடர்ப்பாடுகள் பெருகலாயின. டியூடர் ஆட்சிக்காலம் முழு வதும் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போயின. சிறப்பாக ஹென்றி நாணயத்தின் தரத்தைக் குறைத்ததற்குப் பிறகு விலை யேற்றம் கட்டுக் கடங்காததாகப் போயிற்று. அதற்கு அவரு டைய மகள் ஒரு மாற்று மருந்தினைக் கையாளத் தொடங்கிய வுடன், ஸ்பானிய அமெரிக்க சுரங்கங்களிலிருந்து பொன்னும், வெள்ளியும் ஐரோப்பாவில் வந்து குவியலாயிற்று. அதனுல் மீண்டும் இங்கிலாந்தில் விலைவாசிகள் ஏற்றமுற்றன. இதனுல் வாணிகர்களுக்குத் தீமை உண்டாகியிருக்காது. ஆனுல், அது கூலி வேலை செய்வோருக்குப் பெரும் தீமையை விளைவித்தது.

அத்துடன் அரசாங்க வருவாயில் பலவரிகள் நிலையான தீர்வைகளாக இருந்து வந்தமையால், அரசிக்குத் தன்னுடைய வருவாயில் பற்றுக்குறை உண்டாயிற்று. போர்க்காலத்திலும் பாராளுமன்றத்தினுல் உரிமை வழங்கப்பட்டு, புதிதாக விதிக்கப் பட்ட மிகைப்படியான வரிகள் மூலம் அரசாங்கத்திற்குக் கால் பங்கு வருவாய் கூட வரவில்லை. நாட்டின் செல்வப்பெருக்கத் திற்கேற்ப அரசாங்க வருவாயின் தொகை அமையுமாறு பாராளுமன்ற 'உதவித் தொகை' (Subsidy) வரி விதிக்கப் பட்டது. முதலாம் சார்லஸை எதிர்த்துப் பாராளுமன்றம் போர் தொடுக்கும் வல்லமை பெறும்வரை, குடிமக்கள் மீது வரி விதிக் கும் முறையைப் பற்றி அது கண்ணும் கருத்துமாக இருக்க வில்லை.

பேரரசினிடத்துக் கொண்ட ஆர்வத்தாலோ, புராஸ்டண்ட்டு சமயத்திடத்துக் கொண்ட ஆர்வத்தாலோ சில வரலாற்றாசிரியர் எலிசபெத்து அரசியின் சிக்கனமாகச் செலவிடும் போக்கினைக் கண்டித்தும், குறைகூறியும் உள்ளனர். அவள் பேரளவில் மனிதர்களை நெதர்லாந்திற்கும், பிரான்சிற்கும், அயர்லாந்திற் கும் ஏன் அனுப்பவில்லை என்று அவர்கள் வினவுகின்றனர். அவள் ஏன் பிலிப்பிடத்துப் பொய் மொழிகூறி நெடுங்காலம் மழுப் பிப் பேசி வந்தாள் என்றும், அவள் ஆட்சியின் தொடக்கக் காலத்திலேயே பிலிப்புடன் வெளிப்படையாகப் போக்கிர் தொடு வில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். ஸ்பானிஷ் ஆர்மடாவை முறியடித்த பிறகு எலிசபெத்து எக்காரணத்தினுல் ஸ்பானிய குடியேற்றங்களைக் கைப்பற்றுமலும், ஸ்பானியரின் ஆதிக்கத்தை அடியோடு அழித்தொழிக்காமலும் வாளா இருந் தாள் என்று அவ்வரலாற்றாசிரியர்கள் வினவுகின்றனர். அரசாங்கத்தின் விவரமான அறிக்கைகள் இவற்றிற்குப் போதிய அளவிற்கு விடை அளிப்பனவாக உள்ளன. ஆர்மடா முறியடிக் கப்பட்டதற்கு அடுத்த ஆண்டு அரசியின் ஆண்டு வருமானம் 4,00,000 பவுன்களாக இருந்தன. அதனுள் 88,362 பவுன்கள் பாராளுமன்றத்தின் மூலம் விதிக்கப்பட்ட வரியினுல் கிடைத்த பொருளாகும். அவளுடைய ஆட்சியின் இறுதி ஐந்து ஆண்டுக் காலத்திலும், போரின் கடைசி ஐந்தாண்டுக் காலத்திலும் அவளுடைய சராசரி ஆண்டு வருமானம் ஐந்து லட்சம் பவுன் களுக்குக் குறைவாகவே இருந்து வந்தது. பாராளுமன்றத்தின் மூலம் விதிக்கப்பட்ட வரிகளால் தண்டப்பட்ட உதவித்தொகைப் பணம் இன்னும், அவளுடைய மொத்த வருமானத்தில் கால் பங்குக்குக் குறைவாகவே இருந்து வந்தது கருதத்தக்கதாகும். வரலாற்றின் வழக்கு மன்றத்தில் எலிசபெத்து சிக்கனமாக

இருந்ததற்கு யாராகிலும் விடை கூற வேண்டும் என்றால், அரசியும் அவளுடைய அமைச்சர்கள் மட்டுமல்லாமல், அவளுடன் பாராளுமன்றமும், வரி செலுத்துவோரும் உடனிருந்தே விடையளிக்க வேண்டும். எத்துணைச் சிறிதளவு பணத்தைக் கொடுத்து அவளுடைய குடிமக்கள் நாட்டினை ஆட்சி புரியுமாறு செய்தனரோ, அதை அவளுடைய கூர்த்த மதியினைக் கொண்டு அக்குடிமக்களுடைய நன்மைக்காகவும், பாதுகாப்பிற்காகவும் செலவழித்து வந்தாள். புராடஸ்டண்ட்டுச் சமயத்தின் சார்பாக அவள் முன் கருத்தின்றி வெளிநாடுகளோடு சிலுவைப் போர் புரிய மறுத்தமையால்தான், அவளால் சீர்திருத்த இயக்கத்தைக் காப்பாற்ற முடிந்தது. பொருள் வருவாய் குறைவாக இருந்த காலத்தில் எலிசபெத்து செட்டாகச் செலவு செய்பவளாகவும், 'சிறிய இங்கிலாந்துக் காரி'யாகவும் இருந்தமையால் தான், அவள் பேரரசின் கடலாதிக்க அடிப்படையை அமைக்க முடிந்தது. அவ்வடித் தளத்தின்மீதுதான் அவளுக்குப் பிறகு வந்தவர்கள் அனைவரும் பேரரசினைக் கட்டிக் காத்தனர்.[1]

ஆர்மடா கடலில் மிதந்துவரும் வரையில் இங்கிலாந்து ஸ்பெயினோடு ஒழுங்காகப் போர் தொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்தமைக்குப் பிலிப்பு, எலிசபெத்து ஆகிய இருவரும் முன் எச்சரிக்கையும், அமைதியை விரும்பும் மனநிலையும் உடையவர்களாக இருந்துவந்தமையே காரணமாகும். ஆயினும் இருவரும் கொண்டகொள்கையில் நெகிழ்ச்சியுறாது அதைப் பின்பற்றி வந்தனர். அக்கொள்கை தோல்வியுற்று, போரிலே சென்று முடியாததாக இருந்துவந்தது. போப்பு ஆண்டவரினால் ஸ்பெயினுக்கும், போர்ச்சுக்கலுக்கும் அளிக்கப்பட்டனவும், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டனவுமாகிய ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்கக் கடற்கரையோரங்களில் வெளிநாட்டாரை வரவொட்டாது தடுக்கும் முழு உரிமையைப் பிலிப்பு பெற்றிருந்தார். எனவே அவர் தம்முடைய புதிய குடியேற்ற நாடுகளில் நுழைந்த ஆங்கிலேய வாணிகர்களையும், கடலோடிகளையும் கடுமையாக வழக்குவிசாரணை செய்யும் உரிமையுடையவராக இருந்தார். எலிசபெத்தின் இறப்பினை அவர் நெடுங்காலம் பொறுமையாகப் பொறுத்துக் கொள்ளத் தயாராக இருந்தாலும், ரோமாபுரியின் தொடர்பினை அறுத்தெறிந்துவிட்டு இங்கிலாந்து தனித்தியங்குவதை பிலிப்பால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எலிசபெத்தின் இறப்பினைச் செயற்கை

[1] இவ்வியலின் இறுதியில் எலிசபெத்தின் வருவாயையும் போர்க் காலச் செலவுகளையும் பார்க்க.

முறையில் விரைவுபடுத்த அவர் முயன்றார். அவள் ஆட்சிக்கு வந்த பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கெல்லாம், அவர் எலிசபெத்தைக் கொலைசெய்வதற்குரிய சதித்திட்டத்தைப் பற்றியும், அவள்மீது படையெடுத்துச் செல்லுவதைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார். அதுமுதல், அவர் போப்பு ஆண்டவரின் கட்டளையாகிய எலிசபெத்தைப் பதவியிலிருந்து விலக்கும் பெரும் பணியைச் செயலில் செய்து காட்டும் பேரரசராக விளங்கமுயன்றார். ஆயினும், அவருடைய பண்புநலனில் இயல்பாக அமைந்திருந்த தயக்கமிக்க பண்பு, அவரை நெடுங்காலம் வெளிப்படையாகப் போரைத் தொடங்காதவாறு தடுத்து வந்தது. மேலும் அவ்வியல்பினுல், அவர் டிரேக்கு, ஹாக்கின்சு எலிசபெத்து ஆகியோரால் தமக்கும், தம் நாட்டுமக்களுக்கும் உண்டான மானக்கோட்டையும், இன்னல்களையும் பொறுத்துக் கொண்டு வந்தார். ஒருகால், அவர் ஒவ்வோர் ஆண்டும் அமைதிகாண் வில்லியத்தின் (William the Silent) ஆட்சியின் கீழ் டச்சுக்காரர்களின் எதிர்ப்பு முற்றிலும் அழிந்துவிடும் என்று ஆவலோடு எதிர்பார்த்துவந்தார். அவ்வாறு டச்சுக்காரர்களின் ஆதிக்கம் அழிந்தொழியுமாளுல், எலிசபெத்து தானே அடங்கிவிடுவாள் அல்லது இங்கிலாந்தினை எளிதில் கைப்பற்றிவிடலாம் என்னும் நம்பிக்கையோடு பிலிப்பு இருந்திருக்கலாம்.

எலிசபெத்து, பிலிப்பு காலந்தாழ்த்திக் கொண்டிருப்பது, தனக்குப் பெருநன்மை உண்டாக்குவதை அறிந்தாள். ஒவ்வோராண்டும் இங்கிலாந்தை முன்பிருந்ததைக் காட்டிலும் ஆற்றலும் ஒற்றுமையும் பெற்றுச் சிறந்துவிளங்குமாறு செய்த மையால் பிலிப்பின் தயக்கம் அவளுக்குப் பெரும் நன்மையை அளித்துவந்தது. போரிட விரும்பாத பிலிப்பின் மனப்பண்பினை நன்கு எலிசபெத்து அறிந்திருந்தமையால், அவள் சில துணிச்சலான செயல்களில் ஈடுபட்டாள். கி. பி. 1569-ல் ஒருமுறை நெதர்லாந்திலுள்ள ஸ்பானியப் படைகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்காகப் பணத்தைக் கொண்டு சென்ற ஸ்பானியக் கப்பலொன்று இங்கிலாந்தின் துறைமுகங்களில் அடைக்கலம்தேடி வந்தபொழுது, எலிசபெத்து அதைப்பறிமுதல் செய்தாள். மூன்றாண்டுகளுக்குப் பின்னர் (1572) டச்சுக்குடியரசினை நிறுவிய கடல் பிச்சைக்காரர் (Sea Beggars) கள் பிரில்லைக் (Brill) கைப்பற்றுவதற்கு எலிசபெத்து மறைமுகமாக உடந்தையாயிருந்தாள்.[1] மேலும் புரட்சிக்காரர்களுக்கு உதவி செய்யுமாறு

[1] ஆங்கிலேயரைப் பற்றி அடிக்கடி நேர்மையற்ற கருத்துடையவராக இருந்த மோட்லி (Motley) பிரில் (Brill) நிகழ்ச்சியில் எலிசபெத்து


ஆங்கிலேயக் கடலோடிகளைப் பணித்தாள். (பார்க்க. படம் எண் : 23) அத்தொடக்க நாட்களில் டச்சுக்காரர்களின் ஆற்றல்மிக்க எதிர்ப்பு திறந்தவெளியில் நடைபெறவில்லை. ஆனால், அவர்கள் நீரிலே பேராற்றல் வாய்ந்தவர்களாக இருந்ததோடு, பேரரண்களையுடைய ஹார்லம் (Haarlem) லீடன் (Leyden) என்னும் தங்களுடைய நகரங்களைப் பெரு வீரத்தோடு (1573—1574) தற்காத்துக் கொண்டனர்.

இவை யாவற்றையும் விட ஸ்பானிய கப்பல்களையும், குடியேற்றங்களையும் ஹாக்கின்சு, டிரேக்கு ஆகியோரின் கடற் கொள்ளைத் தாக்குதல்களின் மூலம் எலிசபெத்து ஸ்பெயினுக்குப் போர் வெறியை ஊட்டி வந்தாள். கடற் கொள்ளையடிப்பதன் மூலமே நாட்டில் அமைதி நிலவிய காலத்தில் தனியாரைப் போரிடச்செய்து இங்கிலாந்தின் போராற்றலுக்கு அவள் பயிற்சியளித்து வந்தாள். இத்தகைய ஒழுங்கற்ற போராட்டங்களுக்கு நிலைக்களனாக ஸ்பானிய அமெரிக்கா (Spanish America) இருந்து வந்தது. அதனுடைய துறைமுகங்கள் அயல் நாட்டு வாணிகத்தில் கலந்து கொள்ளாதவாறு ஸ்பானிய அரசாங்கம் கண்காணித்து வந்தது. ஆனால், ஸ்பானிய வாணிகர்கள் அந்நாட்டு மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கொண்டு வந்து விற்பதில் திறமையும் துணிச்சலும் அற்றவர்களாக இருந்தமையால் அந்நாட்டு மக்கள் அயல் நாட்டுப் பொருள்களை வாங்குவதில் விருப்பமுடையவர்களாக இருந்தனர். ஆப்பிரிக்காவிலிருந்து, தான் கடத்திக் கொண்டு வந்த நீக்கிரோக்களைக் கொண்டு ஹாக்கின்சு குற்றமற்ற வாணிகப் போக்குவரத்துக் கப்பல்களை இடைமறித்துத் துன்புறுத்தி வந்தார். அடிமை வாணிகத்திற்கு இரையாகிய மக்களின் துன்பத்தையுணர்ந்து, அடிமை வாணிகத்தைக் கண்டித்துப் பேசக்கூடியவர்கள் அக்காலத்திய ஐரோப்பாவில் காண்பது மிகவும் அரிதாக இருந்தது. கடல் வாணிகத்தில் பேராற்றல் பெற்று விளங்கிய ஆங்கிலேயச் சமுதாயம் இரு நூற்றாண்டுகளுக்கு, ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளை அமெரிக்காவிற்குக் கொண்டு செல்லுவதில் முதன்மையானதாக விளங்கியது. அதைப் போன்றே இறுதியில் அவள் அடிமை வாணிகத்தை அடக்கியொடுக்குவதிலும் முதன்மையானவளாகத் திகழ்ந்தாள்.

---

கொண்ட பங்கினைத் தவறாகப் புரிந்து கொண்டார். பொலார்டின் (Pollard) அரசியல் வரலாற்றைப் (Political History) பார்க்க : பக் 331-2.

அடிமை வாணிகத்தில் டிரேக்கு ஆர்வம் காட்டவில்லை. ஆனால் அவர் அமெரிக்கக் கடற்கரையோரங்களில் ஸ்பானியக் கப்பல்களையும், நகரங்களையும், வாணிகச் சாத்துகளையும் தாக்கியும் கொள்ளையடித்தும் வந்தார். உலகச் சட்டம் (International Law) வளர்ச்சியடைவதற்கு முன்பு, ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த கடலோடிகளின் பழக்க வழக்கங்களோடு, டிரேக்கின் செயல்முறைகள் மிகவும் ஒத்தியங்குவனவாகவே இருந்தன. ஆனால், எலிசபெத்தின் அறிவுரையாளர்கள் சிலரால் டிரேக்கின் செயல்கள் அறநெறியின் அடிப்படையிலும், முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டும் என்னும் கூர்த்த மதியின் அடிப்படையிலும் கண்டிக்கப்பட்டன.




படம் 23.

**ஸ்பானியரின் நெதர்லாந்தும் டச்சுக்காரர்களின் நெதர்லாந்தும்**

அவ்வாறு கண்டித்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் செசில் (Cecil).[1] அவர் ஆங்கிலக் கால்வாயில் ஸ்பானியப் பொருட் குவியலைத் தாமே கைப்பற்றியவர் என்பதை நாம் மறத்தலாகாது.

ஒரு வகையில் இங்கிலாந்தினை வலுச் சண்டைக்குச் சென்ற நாடு எனலாம். ஆனால், அவள் தானாக வலுச் சண்டைக்குப் போகாமல் இருந்திருப்பாளானால், ஐரோப்பாவைத் தவிர வேறு எந்த நாடுகளோடும் வாணிகத் தொடர்பு கொள்ளாத வாறு கட்டாயப்படுத்தப்பட்டும், தடுக்கப்பட்டும் இருப்பாள்; அவளுடைய கடல்கட வாணிகப் பேரார்வத்தையும், குடியேற்றங் களை அமைக்கும் குறிக்கோளினையும் கைவிடுமாறு வற்புறுத்தப் பட்டிருப்பாள்; மேலும், ஹாலந்தின் எதிர்ப்பு அழிவுற்ற சிறிது காலத்திற்கெல்லாம் அவளை அடிக்கடி ஸ்பெயினுக்கும், ரோமாபுரிக்கும் தலைவணங்கி நடக்குமாறு துன்புறுத்தப்பட்டும் இருப் பாள். அன்றைய உலகில் கொடுமையே கோரதாண்டவம் புரிந்தது. அத்தகைய உலகில் அமைதியை நாடிய ஆங்கிலேயர் கள், ஸ்பானியர்களால் எளிதில் சிறைப்படுத்தப்படுவதற்கும் அல்லது கொலை செய்யப்படுவதற்கும் ஏற்ற வாய்ப்புகளும் சூழ்நிலைகளும் இருந்து வந்தன. குற்றவாளிகளென்று ஐயுறவு கொள்ளப்பட்டவர்களைக் கடுமையாகக் குற்ற விசாரணை செய் யும் உலகமும், செயிண்ட்டு பர்த்தலோமியோவின் படுகொலை யும், நெதர்லாந்தில் ஆல்வாவின் (Alva) திடுக்கிடச் செய்யும் பேயாட்டமும், போப்பு ஆண்டவர் எலிசபெத்தினைப் பதவி யிலிருந்து விலக்கியமையும், கத்தோலிக்க ஐரோப்பா பேரார் வத்தோடு அதைச் செயலாற்ற ஆயத்தம் செய்து கொண்டிருந் தமையும் உலக நாடுகளோடு இங்கிலாந்து மென்மையான உள்ளவுணர்வுடன் தொடர்பு கொள்ளுவதற்கு வாய்ப்பு அளிக்க வில்லை.

ஸ்பானியர் வீசும் வலையில் சிக்காமல் எலிசபெத்தின் அரச பதவி காப்பாற்றப்பட வேண்டுமென்றால், டிரேக்கும், அவரு டைய தோழர்களும் நெறிமுறையற்ற செயல்களில் ஈடுபடுவதை அரசி ஊக்குவிக்கவேண்டும் என்று சர் பிரான்சிஸ் வல்சிங்காம் (Sir Francis Walsingham) அரசியை ஆர்வத்துடன் வேண்டிக் கொண்டார். பற்றாக் குறையான வருவாயையுடைய அரசுக்கு, கடலோடிகள் கொள்ளையடித்துக் கொண்டுவரும் பொருள்களில்

[1] கி. பி. 1571-ல் வில்லியம் செசில் (William Cecil) பிரபு பர்லீ (Lord Burleigh) யானார். ஆனால், தெளிவின் பொருட்டு, நான் அவரைச் செசில் என்றே தொடர்ந்து குறிப்பிட்டு வருகிறேன்.

ஒரு பங்கு கிடைத்துவந்தது. அதனால், அவர்களுடைய செயல்களை அரசு ஆதரித்தும், ஊக்குவித்தும் வந்ததில் வியப்பில்லை. செசிலுக்கு உடன் போட்டியாளராகவும், பகைவராகவும் தோன்றிய லீசெஸ்டரைப் (Leicester) போன்றில்லாமல், அரசவையில் வல்சிங்காமின் செல்வாக்கு நாள்தோறும் வளர்ந்து கொண்டு வரலாயிற்று. இளைஞரான வல்சிங்காமின் செல்வாக்கு, வயது முதிர்ந்த செசிலின் ஆதிக்கத்திற்குப் பேருதவியாக இருந்து வந்தது. ஆனால் அக்கிழவன் காணமுடியாத சிலவற்றை இவ்விளைஞன் எளிதில் காணக்கூடிய அறிவாற்றல் உடையவனாக இருந்தான். வல்சிங்காம் அமைத்த ஒற்றர்களின் குழு, பிலிப்பின் சதித்திட்டங்களிலிருந்து எலிசபெத்தினை எண்ணற்ற முறை காப்பாற்றி வந்தது. அதனால் வல்சிங்காமின் அறிவும் ஆற்றலும் நாட்டு மக்களால் போற்றப்பட்டது. அதனால் அவருக்கு அளவுகடந்த மதிப்பு உண்டாயிற்று. இவருடைய ஒற்றர் குழுவினர் இல்லாமற் போயிருந்தால், பிலிப்பும் இயேசு சங்கத்தினரும் அமைதிகாண் வில்லியத்தைக் (William the Silent) கொன்றொழித்ததைப் போல, எலிசபெத்தையும் எளிதில் ஒழித்து விட்டிருப்பார்கள். வல்சிங்காம் (1584); ஐரோப்பியப் பெருநிலப் பரப்பில் சீற்றத்தோடு அழிவுவேலைகளில் ஈடுபட்டிருந்த கத்தோலிக்கரின் பிற்போக்குத் தன்மையை எதிர்க்கும் தூய்மைவாதிகளின் பேரார்வத்தையுடையவராக இருந்தார். தேசிய உணர்வுமிக்க புராடஸ்டண்ட்டான செசிலும், 'வெறும் ஆங்கிலேய' (mere English) அரசியும் சிறப்பாக எச்சரிக்கை செய்திருந்தும் வல்சிங்காம் பொறுமையில்லாது துடிதுடித்துக் கொண்டிருந்தார். பெரும் பொருள் பாழானாலும் பெரும் தீங்குவருவதானாலும் அவற்றைப் பற்றி அவர் கவலையுறாது, எப்பொழுதும் செயலில் இறங்கவேண்டும் என்ற பதற்றம் உடையவராக இருந்தார். ஒவ்வொரு சமயத்திலும் எலிசபெத்து, வல்சிங்காமினுடைய அறிவுரையைக் கேட்டிருந்திருப்பாளானால், அவள் என்றோ அழிந்தொழிந்திருப்பாள். எப்பொழுதுமே எலிசபெத்து வல்சிங்காமினுடைய அறிவுரையைக் கேட்டு; அதன்படி செயலாற்றாமல் இருந்திருந்தாலும் அவள் என்றோ அழிந்தொழிந்திருப்பாள். எனவே, தன்னுடைய மாபெரும் அமைச்சர்களான அவ்விருவர்களின் அறிவுரையில் எவையெவை மிகச் சிறந்தனவாகவும், பொருத்தமானதாகவும் இருந்தனவோ அவற்றை மட்டும் எலிசபெத்து ஏற்று, அதன்படி செயலாற்றி வந்தாள்.

டிரேக்கு உலகைக் கடல் வழியாகச் (1577) சுற்றத் தொடங்கியபொழுது இந்நெருக்கடி உச்சநிலையை அடைந்தது. புது

நாடுகளைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதைச் செசில் முற்றிலும் கடுமையாக எதிர்த்தார். ஆனால், வல்சிங்காம் வரலாற்றில் பெரும் புகழ்மிக்க கடற்கொள்ளைப் பயணத்தில் எலிசபெத்தை மறைவாகக் கலந்துகொள்ளுமாறு வேண்டினார். 'டிரேக்கு! நீர் உலகைக் கடல்வழியாகச் சுற்றிப் பயணம் செய்வீரானால், நம்முடைய முக்குளிப்போரை (Divers) ஸ்பெயினின் அரசரான பிலிப்பு கொன்ற அம்மாபெரும் குற்றத்திற்கு அவர் உம்மால் பழி வாங்கப்படுவார். அதனால் நான் அடையக்கூடிய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!' என்று எலிசபெத்து வியப்புடன் கூறினாள். இவ்வாறு அவள் தகுதியும் திறமையும் வாய்ந்த மனிதனிடத்தில் விண்ணப்பித்துக்கொண்டாள்.

அமெரிக்காவின் தென்கோடி வழியாக மக்கலன் ஒரு கடல் வழியைக்கண்டது (1520) முதல், 'அந்நாளைய சிறிய மரக்கலங்கள் செல்லுவதற்கு அவ்வழி இடர்ப்பாடுடையது என்றும், சூறாவளிக்காற்று உடையது என்றும் கருதப்பட்டது. அக்காரணத்தினால் அவ்வழியில் செல்லுவதை மக்கள் பொதுவாகத் தவிர்த்தனர். பசிபிக் கடலின் கரையோரத்தில் ஸ்பானிய கப்பல்கள் அவ்வவ் விடங்களிலேயே கட்டப்பட்டு வந்தன. எனவே அட்லாண்டிக்கு கடலோடு போக்கு வரத்து பனாமா நில இடுக்கு வழியாக நடைபெற்று வந்தது. இதனால் சில்லியின் (Chile) கடற்கரை யோரமாகத் தென்பகுதியில் டிரேக்கு வந்தபொழுது (1578-1579), 'தெய்வலோகத்தில்' இருந்து அவர் வந்ததைப் போன்று ஸ்பானியருக்குத் தோன்றியது. அதுவரை, ஸ்பானியர் உலகின் கப்பல் போக்குவரத்திற்கு அமைக்கப்பட்ட ஏரித் தீவாகப் பசிபிக் பெருங்கடலைப்பற்றிக் கருதுமாறு பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். கோல்டன் ஹைண்ட்டு (Golden Hind) என்படும் டிரேக்கின் போர்க்கப்பல் தொகுதியில் நூற்றுக்குக் குறைவாகவே மனிதர்கள் இருந்தனர். அக் கப்பற்படை புயல் காற்றினால் அலைப்புண்டு அல்லற்பட்டு அமெரிக்காவிற்கு வந்து சேர்ந்தது. அது மக்கலன் இடைகழி, ஹார்ன் (Strait of Horn) ஆகிய இரண்டிடத்தும் கடந்த காலத்திலேயே உரிமையுடையதாக இருந்தது. நீண்ட கடற்கரையின் வியக்கத்தக்க செல்வத்தைக் கொள்ளையடிப்பது டிரேக்கிற்கு மிக எளிதாக இருந்தது. அவருடைய சிறிய படகில் விலையுயர்ந்த உலோகங்களைப் பேரளவில் கொண்டு வந்து நிரப்பினார். அதன் பிறகு அவர் பசிபிக்குப் பெருங்கடலைக் கடந்து, தாயகம் நோக்கிப் புறப்பட்டார். அவர் நன்னம்பிக்கை முனைக்குச் செல்லும் கடல் வழியில் பயணத்தைத் தொடங்கினார்.

இத்தகைய செயல் முறைகளுக்கு இவ்வாறு ஸ்பெயினிலும், இங்கிலாந்திலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதைப் பற்றிப் பனமாவிருந்து ஐரோப்பாவிற்குச் செய்தி அனுப்பப் பட்டது. ஸ்பானியத் தூதர்கள் உரத்த குரலில் ஓலமிட்டனர். டிரேக்கு தன் தாயகத்திற்குப் பெரும் செல்வத்தோடு பாதுகாப் பாகத் திரும்பி வராமல் போயிருப்பாரானால், அரசியின் அவை யிலே, உள்ள உரமில்லா செசிலின் கொள்கையே வெற்றி பெற் றிருக்கும்; உலகப் போட்டியில், ஸ்பெயினுக்கும், ரோமாபுரிக் குமே வெற்றி கிடைத்திருக்கும். டிரேக்கு தன்னுடைய தோழர் களிடத்தில், 'நாம் இத்துணிகர முயற்சியில் தோல்வியுறுவோ மானால், இதைப்போன்ற செயலில் நாம் மீண்டும் ஈடுபடமாட் டோம்' என்று முன்னரே அறிவித்திருந்ததாகத் தெரிகிறது. பட்டயம்பெற மொலூக்கா கடலின் (Molucca Sea) மணல் திடரில், கோல்டன் ஹைண்ட்டு (Golden Hind) எனப்படும் அவ ருடைய கப்பற்படை நிலத்தில் மோதியது. சற்றேறக்குறைய இருபது மணிநேரம் அங்கு அது அழிவின் எல்லையை அடைந் திருந்தது. ஆழ்கடலில் சேதமின்றி வழுக்கிச் செல்லவேண்டிய இறுதிநேரத்திலும் ஆங்கிலேய ஓக்குமர (Oak)த்தின் சில பலகை களுக்கும், வெப்பமண்டல மணல் திட்டிற்கும், சிறிதளவு காற்றிற்கும் இடையே அவர்களுடைய பரந்த தலைவிதி சிக்கிக் கொண்டிருந்தது.

சற்றேறக்குறைய மூன்றாண்டுகளாக ஐரோப்பாவில் இல்லாமலிருந்து பிளைமவுத் சவுண்டினுள் (Plymouth Sound) டிரேக்கு நுழைந்தவுடனே (1580), அவ்வழியாகச் சென்று கொண்டிருந்த மீனவர்களை அவர் முதன்முதலாக 'அரசி உயிருடன் நலமாக இருக்கிறார்களா?' என்னும் கேள்வியைக் கேட்டார். ஆம், அவள் பல்வேறுவகையான பகைவர்களுக்கு இடையே இன்னும் உயிரோடுதான் இருந்து கொண்டிருக்கிறாள். அடுத்த ஆண்டில் டெப்ட்போர்டுக்கு வந்து, அவர் கப்பலிலே ஏறி அவருக்கு 'வீரத்திருத்தகை' (Knight) என்னும் பட்ட மளித்துப் பாராட்டுவதற்காக மிகவும் நலமாகவே உயிருடன் இருந்துவந்தாள். என்றுமே ஆங்கிலேய அரசர்கள் பிறர் யாருக் கும் அளிக்காத பெரும் சிறப்பு வாய்ந்த 'வீரத்திருத்தகை' என்னும் பட்டத்தை டிரேக்குக்கு எலிசபெத்து அளித்துப் பெருமைப் படுத்தினாள். அப்பட்டமளிப்பு, ஸ்பெயினை நேர்முக மாகப் போருக்கு அறைகூவி அழைப்பதாகவும், இங்கிலாந்தின் மக்களை, கடலிடமிருந்து தங்கள் பேராற்றலைப் பெற்று வளர்க்கு மாறு வேண்டுவதாகவும் அமைந்தது. இப் பட்டமளிப்பினை, அவளுடைய நம்பிக்கைக்குரிய செசில் முற்றிலும் மறுத்தும்,

எலிசபெத்து இம்மாபெரும் செயலைச் செய்தாளென்பதை அறிந்தவர்கள், எலிசபெத்து என்றுமே துணிவுடன் செயலாற்றியது இல்லை என்று கூறமுடியுமா? அவளுடைய துணிவுமிக்க தீர்மானங்கள் மிகச்சிலவாக—விரல் விட்டு எண்ணக்கூடியனவாக இருக்கலாம். ஆனால், அவை ஒவ்வொன்றும் புதியதொரு ஊழிக் காலத்தை (epoch)த் தொடங்கிவைத்ததை நாம் மறந்துவிட முடியாது.

டெப்ட்போர்டில் வீரத்திருத்தகை என்னும் பட்டம் அளித்துப் பாராட்டு நடத்தியபிறகு, பிலிப்பின் மந்தமான மனநிலை விரைவாக வேலைசெய்யத்தொடங்கியதை ஒட்டி, வெளிப்படையாகப் போர்தொடுக்கும் வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறலாயின. ஸ்காட்டியரின் அரசியான மேரி தூக்கிலிடப்பெற்றது, இங்கிலாந்து எல்லாரையும் எதிர்த்துப் போருக்கு அழைக்கும் இறுதி அறைகூவலாக அமைந்தது. அச் செயல் இங்கிலாந்து நாட்டின் அரசினுடைய துணிச்சலால் செய்யப்பட்டதன்று; மக்களுடைய துணிவாற்றலே அதற்குக் காரணமாகும். நெடுங்காலம் மேரியைக் கொலைசெய்ய வேண்டும் என்னும் மக்களின் கூக்குரலை எலிசபெத்து எதிர்த்தே வந்தாள். பாபிங்டனைச் சேர்ந்த வல்சிங்காம் (Walsingham of Babington) எலிசபெத்தைக் கொலைசெய்வதற்காகச் சதித் திட்டமிட்டிருப்பதைக் கண்டுபிடித்தபொழுது, அச் சதிச்செயலில் மேரியும் கலந்துகொண்டிருப்பது தெரியவந்தது. எனவே, இங்கிலாந்தின் குடிமக்கள் அரசியைப் பலவகையிலும் மேரியைக் கொலைசெய்யுமாறு வற்புறுத்தினர். மேரி நெடுங்காலமாக நீடித்து உயிர் வாழ்ந்தமை, மனிதரின் குருதியில் காய்ச்சலைப்போல, சீற்றத்தை உண்டாக்கியது. எலிசபெத்திற்குப் பிறகு மேரி உயிருடன் இருப்பாளானால், அவளே இங்கிலாந்தின் அரசியாக முடிசூட்டப்படுவாள். அதனால், சீர்திருத்த இயக்கத்தின் அரும் பெரும் பணிகள் யாவும் பாழாக்கப்படும். அல்லது மிகக்கொடிய உள்நாட்டுப் போராகிலும் உண்டாகும். தேசியஉணர்வு மிக்க இங்கிலாந்துமக்கள் ஸ்பெயின் முழுவாற்றலும் கொண்டு ஆதரிக்கும் இங்கிலாந்தின் அரசுகட்டிலுக்கு நேர்மையான 'வாரிசாகிய' மேரியை எதிர்த்துப் போர்புரிய நேரும். இவ்வாறு எதிர்பார்த்திருந்த செய்தி, மிக அண்மையில் நெருங்கிக்கொண்டிருந்தது. மிகவும் அவப்பேறுன பெண் ஒருத்தியைக் காலம் கருணைகாட்டுமாறு மக்கள் விட்டுச் செல்வது மிகக் கொடிய செயலாகத் தோன்றியது. பாராளுமன்றமும், மக்களும், அமைச்சர்களும், மேரியைத் தூக்கிலிட இணங்குமாறு எலிசபெத்தைப் பெரிதும் வேண்டினர். அவள் டேவிசன்

(Davison) என்னும் செயலாளரைத் தண்டித்ததற்குக் காரணம் மேரியைத் தூக்கிலிட மரணதண்டனை விதித்த பொறுப்பு தன்னைச் சார்ந்ததன்று; தன்னுடைய செயலாளரே அவ்வாறு செய்துவிட்டார் என்று அறிவிப்பதற்கேயாகும். டிரேக்கின் வீரக்திருத்தகை என்று பாராட்டியமை எவ்வாறு அவளுடைய மிகச்சிறந்த நடத்தையை எடுத்துக்காட்டியது. அதைப்போன்று இவ்விழிசெயல் அவளுடைய மிகமிக மோசமான நடத்தைக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாயிற்று.

ஸ்பெயின் உடனடியாகத் தாக்கப் போகிறது என்பதை மேரியின் கொலை உறுதிப்படுத்தியது. ஆனால், அது இங்கிலாந்தினை ஒற்றுமைப்படுத்திப் பகைவரை எதிர்க்கச் செய்தது. ஸ்பெயினின் அரசரான பிலிப்பு இங்கிலாந்தின் அரியணை தமக்கேயுரியது என்று உரிமை கொண்டாடிய அந்நிலையில், மேரிக்குச் சார்பாக வாளேந்திப் போர் புரிந்திருக்கக்கூடிய கத்தோலிக்க சமயத்தை ஆதரித்த நடுத்தர மக்களும், தேசிய உணர்வு மிக்கவர்களாய், எலிசபெத்தின் கை மேலோங்குவதற்குத் துணை புரிய ஆயத்தமாயினர். எலிசபெத்தும் வெறியற்ற கத்தோலிக்கர்களைத் துன்புறுத்தவும் இல்லை. திருச்சபைக்கு வராத காரணத்திற்காக விட்டுவிட்டுத் தண்டம் விதித்ததைத் தவிர, கத்தோலிக்க சமய நம்பிக்கையுடைய பாமர மக்களை அவள் என்றுமே துன்புறுத்தியது கிடையாது.[1] அவளுடைய பாராளுமன்றம் வற்புறுத்தி வேண்டியதைப் போன்று, முனைப்பான புராடஸ்டண்ட்டுச் சமய வழிபாட்டு நூலினையும், அல்லது போப்பு ஆண்டவரின் ஆதரவாளர்கள் புதிய சமயத்தை மறுத்தமைக்காகக் கொடிய முறையில் துன்புறுத்தியும் இருப்பாளானல் ஸ்பானிய ஆர்மடா இங்கிலாந்தைத் தாக்கத் தொடங்கிய நேரத்தில், இங்கிலாந்தில் உள்நாட்டுப் போர் மூண்டிருக்கும். ஆனால் இங்கிலாந்தின் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நின்றே ஆர்மடாவின் சூறாவளித் தாக்குதலை எதிர்த்துக் கடும் போர் புரிந்தனர். திருச்சபை, அரசு ஆகிய இரு துறைகளிலும் தூய்மை வாதிகள் எலிசபெத்தின் ஆட்சியில் எத்தகைய துன்

[1] கத்தோலிக்க 'சமய மறுப்பாளர்' (Recusants) களை எலிசபெத்து நடத்திய முறையை அறிவதற்கு, American Historical Review, April 1908-ல் திரு மெரிமென் (Mr. Merriman) எழுதியுள்ள கட்டுரையைக் காண்க. மேலும் Elizabathen Episcopal Administration, Alcuin Club, 1924-ல் திரு W. P. M. கென்னடி (W. P. M Kennedy) எழுதியுள்ள கட்டுரையைப் பார்க்க. கி. பி. 1559-ல் திருச்சபைக்கு வராததற்கு விதிக்கப்பட்ட தண்டம் ஆகிய 12 பென்ஸை அடிக்கடி கொடுமையாகத் தண்டல் செய்தனர். ஆனால், பேரழிவினை உண்டாக்கியதும், 1581ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்படி தண்டப்பட்டதுமான 20 பவுன் வாங்கும் தண்டம் அச்சுறுத்தும் சட்டமாக இருந்ததே ஒழிய, செயல் முறையில் பெரிதும் பின்பற்றப்படவில்லை.

பத்தை அடைந்தவர்களாக இருந்தபோதிலும், அவர்கள் அவள் சார்பில் ஸ்பானியரை எதிர்த்துப் போரிடுவதில் முதன்மை யானவர்களாக விளங்கினர்.

வெல்லுவதற்கரிய ஆர்மடாவின் மாலுமிகளும், படை வீரர்களும் பாதிக்கு மேல் நடு நிலக் கடற் பகுதியைச் சேர்ந்த கடலோடிகளாகவே இருந்தனர். அவர்கள் பரந்து பட்ட அட்லாண்டிக் மாக்கடலில் மிதந்து சென்ற கப்பல்களின் நிர்வாகத்தில் வேலைபயிலுவோர்களாக இருந்தவர்களாவர். அவர்கள் வீரர்களுக்கு 'எடுபிடி' யாட்களாகவே கப்பல்களில் சென்று முன்னர் சிறந்த பயிற்சி பெற்றிருந்தனர். அத்தகைய பயிற்சியும் பண்பும் மிக்கவர்களே இங்கிலாந்தைத் தாக்குவதற்காகப் புறப்பட்ட ஆர்மடா என்னும் போர்க் கப்பலில் நிறைக்கப்பட்டிருந்தனர். இக்கப்பற் படையை எதிர்த்துப் போரிட்ட இங்கிலாந்தின் கப்பற்படை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அந்நாட்களில் கடற்படை முதற்றலைவர் (Lord High Admiral) மிகச் சிறந்த பெருமகனாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்து வந்தது. ஆனால், எப்பிங்காமைச் (Effingham) சேர்ந்த ஹோவார்டு பெருமகன் (Lord Howard), நார்போக்கு கோமகனுக்கு உறவினராக இருந்தார். எனினும் அவர் சிறந்த கத்தோலிக்க சமய மறுப்பு இயக்கவாதியாக — புராடஸ்டண்டாகவே இருந்து வந்தார். அவர் தம்முடைய தந்தையைப் போன்றே சிறந்த மாலுமியாகவும் கடலோடியாகவும் விளங்கினார். அவர் கடலோடிகளினுடைய குழுக்களின் சிறப்பையும், மதிப்பையும், பயனையும் நன்குணர்ந்திருந்ததோடு, அவர்களுடைய தொண்டினை நம்பிச் செயலாற்ற முடியும் என்னும் நம்பிக்கையும் உடையவராக இருந்தார். ஹாக்கின்சையும் (Hawkins) புரோபிஷரை (Frobisher) யும் போன்றே, கடலோடிகளின் தந்நிகரற்ற உலகத் தலைவராக டிரேக்கினைப் பொருமையற்ற உள்ளத்தோடு அவரும் கூர்ந்து நோக்கி வந்தார். இதற்கு ஓராண்டிற்கு முன்புதான் டிரேக்கு காடிஸ் (Cadiz) துறைமுகத்திலேயே ஸ்பானியரின் அருமையான போர்க் கப்பலைத் தாக்கி அழித்தொழித்து, ஸ்பானிய அரசனின் தாடியினைப் (Singed the Spanish King's beard) புகழ்ந்து பாடினர்.

இங்கிலாந்திற்குப் போட்டியாக இருந்த ஸ்பானியக் கப்பற் படையின் தலைவர்களாக ஹோவார்டும் (Howard), சைடோனியா (Sidonia)வும் புகழ்பெற்று விளங்கினர். அவர்களுடைய கப்பற் படை ஆங்கிலேயரின் கப்பற்படைக்கு ஒன்றும் இளைத்ததன்று. அரசாங்கக் கப்பற் படையோடு, வாணிகக் கப்பல்களையும்

ஒன்றாகக் கொண்டு விளங்கியதே ஆங்கிலேயக் கப்பற்படை யாகும். அவை பேரளவில் துப்பாக்கிகளைக் கொண்டு போரிடும் கப்பற்படைகளாக அமைக்கப்பட்டிருந்தன. மேலும், அவை சிறந்த கடலோடிகளைக் கொண்டிருந்ததோடு, துப்பாக்கிகளைக் கொண்டு போரிடுவதில் திறமைமிக்க வீரர்களையுடையதாகவும் இருந்தது. ஸ்பானியருடைய கப்பற்படை ஏராளமான வீரர்களைச் சுமந்து கொண்டு சென்றதே ஒழிய, அவ்வீரர்களுக்குக் கடற்போர் புரிவதற்குரிய அறிவாற்றலும், திறமையும் இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வீரர்கள், கப்பலின் மேல்தளத்தில் பதவி வரிசை முறைப்படி அணிவகுத்து, ஈட்டிக்காரர்களுக் (Pikemen)கு முன்னால் நின்று கொண்டிருந்தனர். பண்டைக் காலத்திய கடற்போர் முறைப்படி அவர்கள் ஆங்கிலேயருடைய கப்பல்கள் அருகில் வருமா என்று வீணாகக் காத்துக் கொண்டிருந்தனர். ஆனால் ஆங்கிலேயர்கள், காலாட்படைக்கும் பீரங்கிப் படைக்கும் நேரடிப் போராக அப்போரை நடத்த விரும்பினர். எனவே, ஸ்பானியர் ஆங்கிலக் கால்வாயைக் கடந்த உடனேயே கொடிய முறையில் தண்டிக்கப்பட்டதில் வியப்பில்லை. காலெய்சு (Calais) சாலைகளை அடைவதற்கு முன்பே அவர்களிடையே ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாமற் போய் விட்டது. டிரேக்கின் நெருப்பை வாரி வீசும் கப்பற்படையினைக் கண்டு அஞ்சிய ஸ்பானியர், தங்கள் கப்பல்களைத் தவறானவகையில் செலுத்தத் தொடங்கினர். நெதர்லாந்தில் இவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்த பார்மாவின் (Parma) படைகளைக் கப்பல்களில் ஏற்றிக் கொண்டுவர முயலுவதற்கு ஸ்பானியர்கள் தவறி விட்டனர். கிரேவெலினசுக்கு (Gravelines) அப்பால் நடந்த (ஜூலை 29, 1588) மற்றொரு பெரும் போரில் தோல்வியுற்ற உடனே தப்பித்தால் போதும் என்று புறமுதுகிட்டு ஓடினர். அவர்கள் அவ்வாறு ஓடாமல் போயிருப்பார்களானால், காற்றின் போக்கிலே உண்டான மாற்றத்தால் தோன்றிய புயல்காற்றிலே சிக்கிச் சீரழிந்து திசை கெட்டுச் சென்று டச்சுக் கடற்பகுதியின் மணற்குன்றுகளிலே மோதிப் பூண்டோடு மாண்டொழிந்திருப்பர். புயற்காற்று வீசுவதற்கு முன்பே, ஸ்பானியர் உயிர்பிழைத்தால் போதும் என்று உண்ண உணவோ, குடிப்பதற்குத் தண்ணீரோ இன்றி, உடைந்த கப்பல்களையும் பழுது பார்ப்பதற்கும் நேரமில்லாமல், இரும்பு வேலியைப் போன்ற கடற்கரைகளையுடைய ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் கடற்கரைகளைச் சுற்றிக் கொண்டு விரைந்தோடினர். ஆங்கிலக் கால்வாயில் பீரங்கிகள் தொடங்கி வைத்த கப்பல்களை அழிக்கும் வேலையை, வடமேற்குப் பகுதிக்கு நெடுந்தொலைவில் காற்றும், பேரலைகளும், பாறைகளும் முற்றுப்பெறச்செய்தன. கெல்ட்டிக்கு

இனப் பழங்குடி மக்கள் வாழ்ந்த நீண்ட கடற்கரை ஒதுக்கிடங்களில், உயரமான கப்பல்கள், இரு வரிசைகளாக ஒவ்வொரு சமயத்திலும் பன்னிரண்டுக்குக் குறையாமல் வந்து குவிந்தன. அவற்றைக் கண்ட கெல்டிக்கு இனப்பழங்குடி மக்களுக்கு, என்ன நடைபெறுகிறது என்பது தெரியாது. மேலும், அவர்கள் நாகரிகமுற்ற மக்களுக்கிடையே நடைபெறும் போரால் தங்களுக்குப் பெரும்பயன் கிடைப்பதைப் பற்றியும் கவலைப்படவில்லை. ஆனால், அவர்கள் தங்கள் கரையிலே வந்து ஒதுங்கிய உடைந்த கப்பல்களில் இருந்த ஐரோப்பாவின் சிறந்த வீரர்களையும், செருக்குமிக்க பிரபுக்களையும் ஆயிரக்கணக்காகக் கொன்றும், வெட்டியும் துன்புறுத்தினர். நூற்றுமுப்பது பெரிய கப்பல்களைக் கொண்டு படையெடுத்து வந்த ஸ்பானியர்கள் திரும்பிச் சென்றபொழுது, அவற்றுள் பாதி அளவு கூட உருப்படியாகச் செல்லவில்லை.

கடலோடிகள் மட்டும் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்த விடுதலை இப்போரால் கிடைத்தமையால் ஆங்கிலேயர்கள் பெரிதும் மனநெகிழ்ச்சியுற்றனர். அவர்கள் பெற்ற வெற்றிக்கு இறைவனுடைய திருவருளே துணையாக இருந்ததாக நம்பினர். எனவே, அவர்கள், 'அவன் காற்றாக வீசினான்; அவர்கள் சிதறியோடினர்' ('He blew and they were scattered') என்பதைத் தங்கள் மேற்கோளுரையாகக் கொண்டனர். இறைவனைப்பற்றிக் கருத்தில்லாத கடற்பயண வழித்துணைவர்கள் (Couriers) அவ்வெற்றிக்கு அலைகடலைக்கண்டு அஞ்சாத தங்கள் நெஞ்சமும், கடலில் போர்புரியும் திறமையும் ஓரளவிற்குக் காரணமாகும் என்பதைச் செருக்கின்றிக் கூறலாயினர்.

இங்கிலாந்தினைக் கைப்பற்றுவதற்கு ஸ்பெயின் மும்முரமாகச் செய்த முதன் முயற்சியே, அதனுடைய இறுதி முயற்சியாகவும் முடிந்தது. பன்னெடுங்காலமாக ஸ்பானியர்களின் ஆர்வம் மிக்க முறையீட்டினாலும், வேண்டுகோளினாலும் ஆர்மடா (Armada) என்னும் ஸ்பானிய கப்பற்படை அமைக்கப்பட்டது. அக்கப்பல்களைக் கட்டுவதற்கும், அவற்றில் தேவையான கருவிகளைப் பொருத்துவதற்கும் பயன்படுத்தப்பட்ட மாபெரும் முயற்சியினை, மீண்டும் ஒருமுறை பயன் படுத்தி மற்றொரு 'ஆர்மடாவை' நிறுவ முயல்வது முடியாத செயலாகவே தோன்றியது. ஆயினும், டிரேக்கு முதன் முதலாக ஸ்பானிஷ் மெயினுக்கு (Spanish Main)ச் சென்ற பொழுது ஸ்பானியரிடையே இருந்த கப்பற்படையைவிட, பிற்காலத்தில் ஸ்பெயின் வெல்லுதற்கரிய கடற்படையை அட்லாண்டிக்குப் பெருங்கடலில்

உடையதாக இருந்தும், மற்றுமொருமுறை 'ஆர்மடாவை' அமைக்கும் முயற்சியில் ஈடுபடாமை வியப்பிற்குரியதாகும். ஆனால், ஒரே போர் நிகழ்ச்சியின் மூலம், போர்த்தகராறு ஒரு முடிவிற்கு வந்தது. ஐரோப்பா அதை உடனே வரலாற்றின் சிறப்புமிக்க ஒரு திருப்புமையமாகக் கருதியது. உலகம் முழுவதிலும் இருந்த வெள்ளையரின் மாபெரும் தலைவனாகவும், உலகக் குடியேற்ற நாடுகளின் தன்னிகரற்ற தலைவனாகவும் சிறந்து விளங்கியதனால் பெற்ற தன்னுடைய பேராற்றல் முழுவதையும் பயன்படுத்தி, இங்கிலாந்தின் கடல் ஆதிக்கத்தை அழித்தொழிக்க முயன்ற ஸ்பெயின் இறுதியிலே மாபெரும் தோல்வியுற்றது. இங்கிலாந்தின் மீது படையெடுக்குமாறு ஓயாது தூண்டியதன் மூலம், தன்னுடைய பொதுவான நாட்டுப் பற்றினைக் கார்டினல் அலன் (Cardinal Allen) தியாகம் செய்தார். ஆர்மடாவின் போர் முயற்சியால், தம் வாழ்நாள் முழுவதும் ஆற்றிய பணிகள் அனைத்தும் அழிந்தொழிந்ததைக் கார்டினல் அலன் முதன் முதலாகக் காணக்கூடிய பேறுபெற்றார். அவரே அன்றைய திறமைமிக்க பார்வையாளராவார். இதற்குப் பிறகு சில ஆண்டுகள் கழித்து, பைனஸ் மோரிசன் (Fynes Moryson) என்னும் யாத்திரிகர் மாறுவேடத்தில், ரோமாபுரியின் பழம் பெரும் சின்னங்களைக் காண்பதற்காக, அங்குச் சென்றார். அந்நகருக்கு வந்த தன் நாட்டைச் சார்ந்தவர்களான புராட்டஸ்டண்ட்டுகளைத் துன்புறுத்துவதைக் கார்டினல் அலன் நிறுத்திக் கொண்டதைக் கண்டு மோரிசன் வியப்புற்றார். இவ்வகையில் அவர் தம்முடைய கருத்தினை மாற்றிக் கொண்டமைக்கு '1588-ல் ஸ்பானியக் கப்பற்படையை ஆங்கிலேயர்கள் முறியடித்தமையால் இங்கிலாந்தினைப் போப்பு ஆண்டவரின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளுமாறு அடக்கியொடுக்க முடியும் என்ற நம்பிக்கை இல்லாமற் போனதாகும்' என்று கார்டினல் அலன் காரணம் கற்பித்ததாகத் தெரிகிறது.

ஆர்மடாவின் படுதோல்வி, டச்சுக் குடியரசினை நிலைபெற்று விளங்குமாறு உறுதிப்படுத்தியது. மேலும், நான்காம் ஹென்றியின் ஆட்சியின்கீழ் பிரான்சு ஸ்பானியப் படைகளிடம் இருந்தும், கொள்கைகளிடமிருந்தும் விடுதலை பெற்றுத் திகழச் செய்தது. இவற்றோடு அல்லாமல், ஆர்மடாவின் அழிவு மறைமுகமாகப் புராடஸ்டண்ட்டு ஜெர்மனியைக் காப்பாற்றியது. சீர்திருத்த மறுப்பு இயக்கத்தினர் முறையாகவும், ஆர்வத்தோடும் பேரளவில் கொலைபுரிந்து வந்த இந்நெருக்கடியான நேரத்தில், ஜெர்மனியில் லூதரின் கோட்பாடுகளைப் பின்

பற்றிய அரசிளங் குமரர்கள், பொது மக்களின் பக்கம் சேராது, கால்வினியக் கோட்பாடுடையவர்களைத் துன்புறுத்துவதில் தாங்களே பேரார்வம் காட்டி வந்தனர்.

இதுவரை நடுநிலக் கடற்பகுதிக்கே உரியதாக இருந்து வந்த கடலாதிக்கம், இப்பொழுது வடகோடியிலுள்ள மக்கள் கைக்குச் சென்று விட்டதை ஆர்மடாவின் தலைவிதி உலகத்திற்கு அறிவுறுத்தியது. இதன் விளைவாக வடஐரோப்பாவில் தோன்றிய சீர்திருத்த இயக்கம் ஓரளவிற்கு நிலைபேறுடையதாக விளங்கத் தொடங்கியது; புதிய கடலாதிக்க யுகத்தில் வடவர்களே உலகத் தலைமைப் பதவியை ஏற்றுச் சிறப்புறுமாறு செய்தது.

கி. பி. 1603-ல் எலிசபெத்து இறக்கும் வரை, இங்கிலாந்திற்கும் ஸ்பெயினுக்கும் இடையே தொடர்ந்து போர் நடந்து கொண்டே வந்தது. பிலிப்பிற்கு எதிராகப் பிரான்சும், ஹாலந்தும் விடுதலையுற்று விளங்குமாறு செய்யவேண்டும் என்பதே எலிசபெத்தின் நோக்கமாகும். அதற்காகவே, அவளுடைய பற்றுக்குறையான போருக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் முதலிடம் கொடுத்திருந்தாள். ஓரளவிற்கு ஆங்கிலேயர்களின் உதவியாலும், கடல்களிலே ஆதிக்கம் செலுத்தி வந்தமையாலும், அந்நாடுகள் இந்நோக்கத்தில் வெற்றி பெற்றன. மேலும் ஸ்பானியரின் கைப்பற்றுதலை வெறுத்த உள்நாட்டு மக்கள், கால்வினியக் கோட்பாட்டாளர்கள், செயல் திறமையுடைய கத்தோலிக்கர்களோடு கூட்டு சேர்ந்து தாய்நாட்டைக் காக்க முன்வந்தமையாலும் இந்நாடுகள் ஸ்பெயினின் ஆதிக்கத்திற்குட்படாது தப்பித்தன. அக்காலத்திய ஐரோப்பாவில் காண்பதற்கு அரிய பரந்த நோக்கம் இதைத்தொடர்ந்து தோன்றலாயிற்று. இப்பரந்த நோக்கம் பிரான்சிலும் ஹாலந்திலும் பிறர் நற்பண்புகளையே நாடும் எலிசபெத்தின் மனநிலைக்கேற்ப உணரப்பட்டது.

டச்சுக்காரர்கள், சிறப்பு மிக்க ஆங்கிலேயப் படைப் பகுதிகளைக் கூலிக்கு அமர்த்திப் போரிட்டனர். அப்படைகளைப் போரிடும் குடும்பப் பெயர்களையுடையவர்கள் (the fighting-Veres) தலைமை தாங்கி நடத்தினர். இப் படையின் உதவியால் டச்சுக்காரர்கள் ஸ்பெயினின் காலாட்படையை 1597-ல் டர்ன்ஹவுட்டு (Turnhout) என்னும் போர்க்களத்திலும், 1600-ல் நெப்போர்ட்டு (Nieuport) என்னும் போர்க்களத்திலும் தோற்றோடுமாறு செய்தனர். அதுவரை திறந்த வெளிப் போர்களில் வெல்ல முடியாததாக ஸ்பெயின் இருந்துவந்தது. அமைதி

காரண் வில்லியத்தின் மகனான மவுரிசு (Maurice) என்னும் இளவரசர் ஆட்சியில் ஹாலந்து ஐரோப்பாவின் அறிவியல் போர் முறைப் பள்ளியாக மாறிக்கொண்டிருந்தது. அயல்நாட்டுப் படைகளில் பணி புரிந்த இந்த ஆங்கிலேயர்களே, தங்கள் தாய் நாட்டில் தற்காலப் போரியல் மரபுகளை வகுத்துத் தந்தவர்கள் என்று உரிமை கொண்டாடுவதற்குரிய சிறப்புடையவர்களாவர்.[1]

எலிசபெத்து தன்னால் கொடுத்து உதவக்கூடிய போரியல் சக்திகளில் பெரும் பங்கு ஐரிஷ் துயரநிகழ்ச்சியான செர்போனியன் (Serbonian bog) சதுப்பு நிலத்தில் மூழ்கிப் போயின. அவள் சிறந்த கடலாதிக்கம் உடையவளாக இருந்தும், ஸ்பானியப் பேரரசைச் சிதைத்து அழிக்காமல் போனமைக்கும், பிலிப்பின் பிடியிலிருந்து போர்ச்சுக்கலை விடுவிக்காமல் போனமைக்கும் காரணமாக ஓரளவிற்கு இதனைக் கூறலாம். அசோரசினை (Azorès) ப் பழிக்குப் பழி வாங்கப் போரிட்ட இறுதிப் போரைப் போன்று இதைப் பற்றியும் பல சுவையான கதைகள் சொல்லப் படுகின்றன. அப்போரின் நிகழ்ச்சிகளை வருணிக்கும் கதைகளைக் கூறும் கவிதைகளும் அவற்றை மிகைப்படுத்திக் கூறவில்லை. ஸ்பெயினுடைய கடல் வாணிகத்தின் நிலைக்களனாக இருந்த காடிஸ் (Cadiz) பட்டினம் கொள்ளையடிக்கப்பட்டதைப் பற்றியும் பல கதைகள் கூறப்படுகின்றன. மார்ல்பரோ (Marlborough), சாத்தம் (Chatham), நெப்போலியன் ஆகியோர் காலத்தில் நடைபெற்ற போர்களில், இங்கிலாந்தின் ஒன்றுபட்ட படைகள் நிலையாகப் புதிய நாடுகளைக் கைப்பற்றியதைப் போன்று, இப்போரில் இங்கிலாந்து எதையும் நிலையாகக் கைப்பற்றவில்லை. டிரேக்கின் தலைமையில் பணியாற்றிய போர்க்குழு இங்கிலாந்தைக் காப்பாற்றியதே, பிற செயல்களைக் காட்டிலும் மிக முக்கியமானதாகும். ஆனால், அவர்கள் வெளிப்படையாகப் பெரு வெற்றி பெற்ற நாட்களில், தாங்கள் மறையத் தொடங்கி இருப்பதையும் கண்டனர். அவர்கள் நெடுங்காலமாக ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த ஒழுங்கான போர் மூண்டபொழுது அது தன்னுடன் மருட்சி நீக்கத்தைக் கொண்டு வந்தது.

[1] பெர்சியின் ரெலிக்குகளோடு (Religues) பதிப்பிக்கப்பட்டுள்ள மூன்று சிறந்த அழகிய கதைப்பாட்டுகளான (ballads) 'Brave Lord Willough by', The Winning of Cales (Cadiz), The Spanish Lady's Love, என் பனவற்றைப் படிப்போமானால், இப்போரில் நாட்டு மக்கள் காட்டிய நாட்டுப்பற்றையும், ஆங்கிலேய வீரர்களின் ஒழுங்கு முறையையும் நன்கறியலாம். டச்சுக்காரர்களின் படையில் பணி புரிந்த ஆங்கிலேய வீரர்களின் மன நிலையை வெர்ரேயின் (Vere) 'Commentaries' நன்கு விளக்குகின்றன.

புதிதாகத் தோன்றிய தன்னுடைய கடலாதிக்கத்தைத் தாங்குவதற்குத் தேவையான பொருளாதார, படையியல் முறைகளை இனிமேல்தான் இங்கிலாந்து வகுக்க வேண்டிய வளாக இருந்தாள். எலிசபெத்து அரசியின் ஆட்சிக்காலத்தின் இறுதியில், ஐம்பது லட்சத்திற்கும் குறைவான மக்களைக் கொண்டிருந்த இங்கிலாந்து, ஸ்பானியரின் ஆட்சிக்குட்பட்ட நாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்கும், தனக்கெனக் குடியேற்ற நாடுகளைக் கொண்ட ஒரு பேரரசினை நிறுவுவதற்கும் தேவையான பொருள் வசதியையோ, மக்கள் சக்தியையோ பெற்றிருக்கவில்லை. 1587-ல் வர்ஜீனியாவில், ராலே தோட்டங்களை அமைத்தமையும், பருவத்திற்கேற்ற செயலாக அமையாமற் போயிற்று. ஸ்டூவர்ட்டு மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்து பெருஞ் செல்வத்தைச் சேகரித்து வைத்திருந்ததோடு, தேவைக்கு மேற்பட்ட மக்கள் தொகையை உடையதாகவும் இருந்தது. இதனால்தான் ஸ்பெயினோடு சமாதானமாக இருந்த அக்காலத்தில் மீண்டும் குடியேற்ற நாடுகளை அமைக்கும் பணியைத் தொடங்குமாறு தூண்டி வெற்றி பெறச்செய்தது; ஸ்பானியர்கள் சென்றடையாத வட அமெரிக்கக் கடற்கரைப்பகுதிகளில் தூய்மைவாதிகளையும் மற்றக் குடியேறிகளையும் சென்று குடியேறுமாறு தூண்டியது. எலிசபெத்து காலத்தில் நடந்த போர் அளித்த வாய்ப்பினைப் பயன்படுத்தி ஆங்கிலேயர் ஸ்பெயினுக்கும் போர்ச்சுக்கலுக்கும் உரிய வெப்ப மண்டலத்தைச் சேர்ந்த நாடுகளைக் கைப்பற்றி, அந்நாடுகளில் குடியேறியிருப்பார்களானால், தன்னம்பிக்கையையும், உள்ள ஊக்கத்தையும் அழிக்கும் அவ்விடங்களின் தட்பவெப்ப நிலையினால் அல்லலுற்றிருப்பர். அத்தகைய இடர்ப்பாடின்றி ஸ்டுவர்ட்டு மன்னர் காலத்தில் ஆங்கிலச் சாக்சானியக் குடியேற்றங்களுக்குப் புதியதொரு வழி காத்துக் கிடந்தது. இத்துறையிலும், எலிசபெத்தின் 'சிறிய இங்கிலாந்திய' (little Englandism) கோட்பாடு, பேரரசின் எதிர்காலத்திய வாழ்விற்குப் பெருந்துணையாக இருந்தது. டிரேக்கும், ராலேயும் போரின் போக்கினை விரிவடைய வொட்டாது கட்டுப்படுத்திய இயற்கைக் குறைபாடுகளைக் கண்டு பெரிதும் எரிச்சல் கொண்டனர். ஆயினும், அது அக்காலத்திய ஆட்சிக்குக் கிடைத்த நன்மைகள் பலவற்றுள், மிகச் சிறந்ததொன்றாகும். அதனால்தான், ஆங்கிலேயர்கள் தங்களுடைய வரலாற்றில் அவ்வாட்சிக் காலத்தை நற்பேறுடையதாகவும் வியக்கத்தக்கதாகவும் இன்று கருத முடிகிறது.

குறிப்பு :

### 776–ஆம் பக்க அடிக்குறிப்பின் விளக்கம்

### எலிசபெத்தின் காலத்திய வருவாய்களும் செலவுகளும்

1588–ஆம் ஆண்டு மைக்கல்மசு முதல் 1589-ஆம் ஆண்டு மைக்கல்மசுக்கு உட்பட்ட ஓராண்டுக் காலத்தில் அரசிக்குக் கிடைத்த பொது வருவாயின் மொத்தத்தொகை 294,819 பவுன்களாகும். இவற்றுள் தண்டத் தொகைகளும், நாட்டின் வாணிக வளர்ச்சியை ஒட்டிப் பெருகிக்கொண்டுபோன சுங்கவரியும் அடங்கும். இத்துடன் பாராளுமன்றம் சிறப்பாக வழங்கிய உதவித்தொகை வரிவிதிப்பால் கிடைத்த 88,362 பவுன்களும், நன்கொடையாகக் கிடைத்த 4410 பவுன்களும், பரிசுப் பொருளாகக் கிடைத்த 4878 பவுன்களும் சேர்க்கப்பட்டன. கடந்த ஐந்தாண்டுக் காலத்திலும், போரின் போதும் கிடைத்த சராசரி வருவாய் :

| | | | |
|---|---|---|---|
| பொது வருவாய் | ... | 360, 519 | பவுன்கள் |
| உதவித் தொகைளும், பத்திலொன்றாகச் செலுத்தப்பட்ட கடமைகளும் | ... | 125,000 | பவுன்கள் |
| மொத்த பவுன்கள் | ... | 485,519 | |

ஸ்காட்டு (W.R. Scott) எழுதியுள்ள Joint Stock Companies என்னும் நூலின் 516–17 ஆவது பக்கங்களைப் பார்க்க. (கேம்பிரிட்ஜ் அச்சகம், 1911).

1603–ல் எலிசபெத்து அரசியின் ஆட்சிக்காலம் முழுவதிலும் போருக்குச் செலவிட்டதைப் பின்வரும் பட்டியலில் அதிகாரிகள் வரைந்துள்ளனர் :

| | | | பவுன்கள் |
|---|---|---|---|
| ஸ்காட்லாந்திலுள்ள லீத்திற்கு, | 1559-60 | ... | 178,820 |
| நியூஹாவன் (ஹாவ்ரே), | 1562 | ... | 246,380 |
| வடக்கிலுண்டான கலகம், | 1569 | ... | 92,932 |
| ஷேன் ஓ நெயில்சு கலகம், | 1573 | ... | 230,440 |
| டெஸ்மாண்டின் கலகம், | 1579 | ... | 254,961 |
| டைரோனின் கலகம் முதலியன | | ... | 1,924,000[1] |
| நெதர்லாந்து 1585 முதல் 1603 வரை | | ... | 1,419,596 |

[1]மூலக் கையெழுத்துப் பிரதிகளில் இத்தொகையே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், Cal. St. Papers. Dom., 1603-ல் தவறுதலாக 192,400 என்று பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

| | | |
|---|---|---|
| 1591 இலும், அதன் பிறகும் பிரஞ்சு அரசருக்குச் செய்த உதவி | ... | 297,480 |
| ஸ்பானிஷ் ஆர்மடாவும், டில்பரி முகாமும் | ... | 161,185 |
| காடிசுக்கும் தீவுகளுக்கும் சென்றமை | ... | 172,260 |
| | | 4,978,054 |

இத்தொகைகள் அல்லாமல், கடற்படை நிர்வாகச் செலவு முதலிய தொடர்ந்துவரும் செலவுகளையும், பாராளுமன்றம் வழங்கும் வரிவிதிப்பு உதவித் தொகைகளைப் பெறுது, நிலையாக வரும் வருவாயினைக் கொண்டே சமாளிக்க வேண்டியிருந்தது. ஆனால் பண்டைய சுங்கவரிகளும், இறக்குமதிப் பொருள்களின் மீது விதிக்கப்பட்டு வந்த வரிகளும் மொத்த வருவாயைச் சேர்ந்தனவாகும். எலிசபெத்து அரசியின் நாற்பதாண்டுக்கால ஆட்சி முழுவதிலும் பாராளுமன்றம் சிறப்பாக வழங்கிய வரி விதிப்பு உதவித் தொகைகளிலிருந்தும், வருமானத்தில் பதினைந் தில் ஒரு பங்காகச் (fifteenth) செலுத்தப்பட்ட கடமைகளி லிருந்தும் கிடைத்த மொத்த வருமானம் முப்பத்தைந்து இலட்சம் பவுன்களாகும். மேலே காட்டப்பட்ட அளவுமீறிய போர்ச் செலவிற்கு இம்முப்பத்தைந்து இலட்சம் பவுன்களும் பயன் படுத்தப்பட்டன.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

இங்கிலாந்தின் வாய்ப்பு — புதிய பெருங்கடல் வழிகள் — பிரான்சும் இங்கிலாந்தும் ஒப்பு நோக்கப்படுதல் — ஸ்பெயினும் இங்கிலாந்தும் ஒப்பு நோக்கப்படுதல் — ஆங்கிலேயக் கடற் படையின் சூழ்ச்சித்திறன் — கடற்படை வீரர்களும் பண்பாளர் களும் — ஆங்கிலேயரின் புதிய கடல் வாணிகம் — எலிசபெத்துக் காலத்திய ஆங்கிலேயரின் வீரதீரச் செயல்கள் — லெவாண்ட் டும் இந்தியாவும் — அரசாங்கத்தின் கொள்கைகளை நிதிநிலை கட்டுப்படுத்துதல் — பிலிப்பும் எலிசபெத்தும் — ஹாக்கின்சும் டிரேக்கும் — செசிலும் வல்சிங்காமும் — டிரேக்கின் கடற் பயணம் — மேரி தூக்கிலிடப்படுதல் — ஆர்மடா — முறையான போரும் அதன்முறைகளும்—முறையான போரும் அதன் குறை களும்.

இயல் 7.

# மாண்புமிக்க எலிசபெத்தின் ஆட்சிக்காலம்
# இங்கிலாந்தின் பொற்காலம்

1. வேல்சு, (2) அயர்லாந்து, (3) சமயம்,
4. எலிசபெத்தினுடைய உரிமையின் எல்லைகள்,
5. கிறிஸ்துவ வேதமும், பாட்டும், இசையும்,
6. பெரும் தொழிற்சாலைகளில் வேலை பயில்வோரும் அவர்களுடைய நிலையும்,
7. பெரு மக்களும் பாராளுமன்றமும்.

எலிசபெத்தின் காலம் முதற்கொண்டு, பேராற்றலுடைய படையியல் பேரரசுகள் சிலவற்றை எதிர்த்துத் திரும்பப் போரிடுவது பிரிட்டனுடைய வரலாற்றில் காணப்படும் தலைமைப்பண்பாகும். அப்போர்கள் கடலரணாகிய கேடயத்தின் பாதுகாப்பிலிருந்து போரிடப்பட்டு வந்தமையாலும், அரசினுடைய கடற்படை அளித்த தற்காப்புமே இதற்குக் காரணமாகும். இங்கிலாந்து இக்காலம் முதல் எப்பொழுதுமே அயலாரின் படையெடுப்புகளால் அல்லலுறவில்லை. 1914-18-ம் ஆண்டுகளில் உண்டான யுத்தம் புதிய சூழ்நிலைகள்வரை பிற நாடுகளில் இங்கிலாந்து தன்னுடைய ஆண்மையின் பெரும் பகுதியைப் பலியிடவேண்டிய தேவையே உண்டாகவில்லை; அல்லது வழக்கமாக நடைபெற்று வரும் வாணிக முறைக்கும், இல்லங்களின் இன்பவாழ்விற்கும் என்றுமே போர்கள் தடையாக இல்லை. இத்தகைய தொடர்ந்த பாதுகாப்பு மிக எளிய அல்லது நெடுந்தொலைவிலுள்ள நாடுகளுக்கு மட்டும் கிடைக்கக் கூடிய சிறப்புரிமையாகும். ஆனால், உலக நிகழ்ச்சிகளின் பெருவழியிலே சிறப்புற்று விளங்கிய ஒரு வல்லரசு, இத்தகைய சிறப்புரிமையைப் பெற்று இருந்தது என்பது இங்கிலாந்திற்கே உரிய தனிச் சிறப்பாகும். இச்சிறப்புரிமை பிரிட்டனின் பண்புகளிலும், நிலையங்களிலும் பொதிந்திருக்கும் மறைபொருளாகும். நாம் பாராளுமன்ற அரசினை நிறுவுவதற்கு இச்சிறப்புரிமையே பேராற்றலையும், பேருக்கத்தையும் நமக்குத் தந்து உதவியது. மேலும், மாபெரும் நாடுகள் எல்லாம் தத்தம் நாட்டு மக்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு முன்பே நமது குடிமக்களுக்கு உரிமையை இங்கிலாந்து அளித்தது எனில் அது மிகையாகாது. நம்மிடையே உள்ள பலதிறப்பட்ட பித்துக்கொள்ளியான கருத்துக்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் நம்மைப் பெருமைப் படுமாறு தூண்டி

யது அச்சிறப்புரிமையேயாகும். எலிசபெத்தின் ஆட்சியின் பொழுது உண்டான மறுமலர்ச்சியின் வளமிக்க அறுவடையே அச்சிறப்புரிமை நமக்கு அளித்த சிறப்புமிக்க முதற் பரிசாகும்.

ஷேக்ஸ்பியரின் சமகாலத்திய மக்கள் 'அகழியைத் தற்காப்பாகக் கொண்ட வீடுகளினுல் உண்டாகும் நன்மையை நன்குணர்ந்திருந்தனர். இங்கிலாந்து வெளிப்படையாகப் பதினைந்து ஆண்டுகள் (1587-1603) பிலிப்போடு போர் புரிந்து கொண்டிருந்தபொழுது, அவருடைய காலாட்படையினர் ஆண்ட்வர்ப்பி (Antwerp) லிருந்து லண்டன் மாநகருக்குக் கடலைக் கடந்து வர முடியாது தவித்தனர். மேலும், எலிசபெத்து ஆட்சிக்கு வருவதற்கு முப்பதாண்டுகளுக்கு முன்பிருந்து, இங்கிலாந்து 'அயல் நாட்டு வரிச்சுமையாலும், 'குடும்பத்திலுண்டான பாழ் செய்யும் உட் பகையாலும்' அமைதியின்றி அல்லற்பட்டது. அவ் அவல நிலைக்கு மாருக இக்காலத்தில் பெரும் பாதுகாப்பையும், அமைதியையும் பெற்று விளங்கலாயிற்று. கூடுதலாக அதிகரிக்கப்பட்ட வரி விதிப்பையோ, பொருளாதாரக் குழப்பங்களையோ நாட்டில் உண்டான போர் நிலை மேலும் நெருக்கடி மிகுந்த இடர்ப்பாட்டினை உண்டாக்கவில்லை. நெப்போலியனேடு போராடிக் கொண்டிருந்த காலத்தோடு, நாம் இக்காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கலாம். இப்பிற்காலம் இங்கிலாந்தின் இயற்கைக் காட்சி ஓவியம், கவிதை, புதினம் எழுதுதல், குத்துச் சண்டை, வேட்டையாடுதல், சுடுதல் முதலியவற்றின் பொற்காலமாகும். ஆனல் போரினுல் உண்டான பொருளியல் எதிர் விளைவுகளினுல் பெருவாரியான மக்களுக்கு அது ஓர் இருண்ட காலமாகும். பிற்காலச் சமுதாயத்தில் உண்டாகப் போகும் பிளவிற்கு இக் காலத்தில் வித்திடப்பட்டது எனலாம். ஆனல், எலிசபெத்தின் ஆட்சிக் காலத்து நடைபெற்ற போர்களின் பொழுது டியூடர் கால இங்கிலாந்தின் சமூகப் பொருளியல் சிக்கல்கள் நெருக்கடியை உண்டாக்கக் கூடிய வகையில் வளர்ச்சி அடையவில்லை. மக்கள்-தொகை பெருகிக் கொண்டிருந்ததற்கேற்ப, வேலை வாய்ப்புகளும் பெருகிக் கொண்டே இருந்தமையால், பாராளுமன்றமும், பிரிவி கவுன்சிலும், அமைதிகாண் நீதிபதிகளும் ஏழை மக்களுக்குப் பொதுவான முன்னேற்பாடுகள் செய்ய வேண்டிய பிரச்சினைகளை எதிர்த்து நின்று சமாளிக்க முடிந்தது. போர்க்காலத்தின் இறுதி ஆண்டில் அயல் நாட்டிலிருந்து இங்கிலாந்திற்கு வந்திருந்த பயணி ஒருவர், ஐரோப்பிய நாடுகளைத் தாக்கித் துன்புறுத்திக் கொண்டிருந்த பிச்சைக்காரர்களாகிய 'கொள்ளை நோய்' இங்கு இல்லாததைக் கண்டு பெரு வியப்படைந்தார். அக் கொள்ளை நோய் டியூடர் ஆட்சிக்காலத்

தொடக்கத்தில் இங்கிலாந்திற்குப் பேரின்னல் இழைத்து வந்தமை இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.[1]

எலிசபெத்தின் காலத்தில் இங்கிலாந்து தற்காப்பு மிக்கதாகவும், அமைதியான நல்வாழ்வினைப் பெற்றதாகவும் இருந்ததற்குக் காரணம் நெடுங்காலத்திற்குப் பிறகு ஒன்றுபட்ட பெரும் பிரிட்டனை அமைப்பதற்குரிய திட்டம் உருவாக்கப்பட்டமையேயாகும். முதலாம் எட்வர்ட்டு காலத்திற்குப் பின்னர்க் காணப்பெருத நிலைபெற்ற அமைதி ஸ்காட்டிய எல்லைப் பகுதியில் இக்காலத்தில் நிலவியது. அத்துடன் அவ்வெல்லைக்கு அப்பால் நட்புறவு கொண்ட நாடாக ஸ்காட்லாந்து இருந்துவந்தமை, இங்கிலாந்திற்குப் பலவகையில் பாதுகாப்பை அளித்தது. இடைக்காலத்திய ஆங்கிலேயர்கள் ஐரிஷ் சிக்கலைப் போன்று கடுமையாக இல்லாத, வேல்ஸ் சிக்கலைக் கண்டு மலைத்துப் போயிருந்தனர். அப்பெரும் தொல்லைமிக்க சிக்கலுக்கு டியூடர் அரசமரபைச் சேர்ந்த மன்னர்கள் ஒரு முடிவைக் கண்டனர்.[2]

ஏழாம் ஹென்றி (1485—1509) வேல்ஸின் விவகாரங்களில் தலையிடத் தொடங்கினர். அவ்வாறு அவர் தலையிடுவதற்கு இரு பெரும் உரிமைகளை இயல்பாகப் பெற்றிருந்தார். அவருடைய மூதாதையர்களைக் காட்டிலும், ஹென்றி பேராற்றல் வாய்ந்த எல்லைப்புற மக்களின் பிரபுவாக (Marcher Lord) விளங்கினர்.

[1] கோமகன் ஸ்டெட்டினின் (Duke Stettin) பயண நாட் குறிப்பு, *1602* (*R.* Hist. Soc. *1892*) பக்கங்கள் *11-12*.

'இத்தகைய இடங்களில், பிற நாடுகளில் அடிக்கடி சந்திக்கப்படும் பிச்சைக்காரர்களின் தொல்லையும் துன்பமும் இல்லாமல் (அரசாங்க பரிமாற்றத்தால்) வெளியில் சென்று வருவது இன்பமளிப்பதாகும். இங்கிலாந்து முழுவதிலும் புதிதாக வருகின்றவர்கள் பிச்சைக்காரர் களால் துன்புறுவதில்லை. ஏனெனில் இங்குப் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கையில் மிகச் சிலராகவும், நகரத்தின் வாயில்களுக்கு வெளியே யும் இருக்கின்றனர். ஒவ்வொரு திருச்சபை வட்டாரமும் அதனுடைய இரவலர்களின் இன்னலைப் போக்க முயலுகிறது. புதிதாக வருகின்ற இரவலர்கள் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஆனல், தம் அரசிலிருந்தோ, நெடுந் தொலைவிலுள்ள இடங்களிலிருந்தோ வந்தவர்களை ஒரு திருச்சபை வட்டாரத்திலிருந்து மற்றொரு திருச்சபை வட்டாரத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். இறுதியாக அவர்கள் தங் கள் வீடுகளைச் சென்று அடையும் வரை, அவர்களுடைய தேவைகளை அறிந்து, அவற்றைக் கொடுத்து உதவுவதில் அவர்கள் கருத்தாக உள்ளனர்.'

எலிசபெத்தின் இரவலர் சட்டமும், கட்டாய இரவலர் தீர்வையும், பிற நாடுகளில் காணமுடியாத அளவிற்கு இங்கிலாந்தில் முன்னேற்ற மிக்க வகையில் செயல்பட்டு வந்ததைப் பிற சான்றுகளைக் கொண்டு நாம் அறிய முடியவில்லை என்றால், மேற்கண்ட மேற்கோள் பயனற்ற தாகி விடும். பார்க்க : 'ஏழாம் ஹென்றியும் புதிய முடியாட்சியும்' (பக். *616—646*).

[2] இடைக்காலத்திய வேல்ஸைப் பற்றி அறிவதற்குக் 'கெல்ட்டிக்கு களும் சாக்சானியர்களும்' என்னும் இயலைப் பார்க்க (பக்.*449—496*).

மேலும் ஐம்பதிற்கு மேற்பட்ட யார்க்ஷையர், லங்காஷையர் எல்லைப்புறமக்களின் பிரபுக்கள் குடும்பங்களுக்கு உரிய தனிப் பெருந் தலைவராக அவர் திகழ்ந்தார். இரண்டாவதாக அவர் வேல்ஸில் கல்விகற்றவராகவும் வெல்ஷியப் பண்பாடுமிக்க வேல்ஸ் நாட்டு மனிதராகவும் இருந்தார். அவர் தம் வாழ்நாள்முழுவதும் வெல்ஷிய கவிதைகளிடத்தும், மரபுகளிடத்தும் நீங்காத பெருங்காதல் கொண்டிருந்தார். அவருடைய நாட்டுமக்கள், பாஸ்வொர்த்துப் போர்த்தளத்தில் இங்கிலாந்தின் அரியணையில் தங்களுடைய ஓர் அரசிளங்குமரனை ஏற்றியதன் மூலம், தாங்கள் தங்களுடைய விடுதலையைப் பெற்றுவிட்டதாகக் கருதினர். ஒருநூற்றாண்டிற்குப் பிறகு முதலாம், ஆறும் ஜேம்ஸ் மன்னர்கள் காலத்தில், ஸ்காட்டியர் இங்கிலாந்தின் அரசவையில் பெருந்திரளாகக் குழுமியிருந்ததைப் போன்று, இக் காலத்தில் வெல்ஷ் மக்கள் ஹென்றியின் அவைக்குப் பெருந்திரளாக வந்துகொண்டிருந்தனர். இத்தகைய நலன்களைப் பெற்றிருந்த முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ளும் இயல்புடைய டியூடர் அரசரான இவர் இரத்தக்கறைபடிந்த பெருங்குழப்பத்திற்குள்ளாகியிருந்த வேல்ஸில் ஓரளவிற்கு ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார். இவர் தொடங்கிய இவ்வரும் பணியை இவருடைய மகன் முற்றுப்பெறச் செய்தார்.

எட்டாம் ஹென்றி (1509–1547) ஸ்காட்லாந்தையும், அயர்லாந்தையும் தவறாகக் கையாடிய போதிலும், வேல்ஸின் நிலையை நன்கு புரிந்து கொண்டதுடன், அதன் சிக்கலையும் தீர்த்து வைத்தார். அவர் குழப்பங்களையும் கலகங்களையும் அடக்கியொடுக்கினர். அவர் கெல்ட்டிக்கு இனமக்களுக்கு நேர்மையான வழியில் நன்மை செய்தார். இவ்வாறு எட்டாம் ஹென்றி வேல்ஸ் பிரச்சினைக்கு ஒரு முடிவைக் கண்டார். லிச்பீல்டின் (Lichfield) பாதிரியான ரோலண்டுலீ (Rowland Lee) என்பவர் எல்லைப்புற மக்களின் சங்கத்திற்குப் பேராற்றல் வாய்ந்த தலைவராக இருந்தார். அவர் திருடர்களையும், கொலைகாரர்களையும் இரக்கமற்ற நிலையில் கொன்று குவித்தார். அதன் மூலம், பெரியோரும், சிறியோரும், சாக்கானியர்களும் கெல்டிக்குகளும் அரசரின் ஆதிக்கத்தைக் கண்டு அஞ்சி நடுங்குமாறு செய்தார். அவர் கையாண்ட முறைகள் இன்று நம்மை அதிர்ச்சியடையச் செய்யலாம். ஆனல், அந்நாடு இதற்கு முன்பு கண்டிராத அமைதியை அவர் அந்நாட்டில் நிலைநாட்டினர். அவர் அஞ்சி நடுங்குமாறு செய்த அம்மக்களின் எதிர்காலத்தைப் பற்றி, பல பெரும் ஆட்சியாளர்களைப் போன்று சிறிதுகூட

நம்பிக்கையற்றவராக இருந்தார். அவருடைய அறிவுரைக்கு மாருக எட்டாம் ஹென்றி, வேல்ஸினை இங்கிலாந்துடன் சம உரிமைக் கட்டுப்பாடுகளுடைய நாடாக 1535-ல் ஒன்ருகச் சேர்த்துக் கொண்டார். இத்துணிவான முயற்சி பிரிட்டனுடைய வரலாற்றில் முதல் முயற்சியாகும். ஆனல், ஒன்றுபட்ட நாட்டமைப்புச் சட்டத்தின் வெற்றியைத் தராத கடைப்பட்ட செயலன்று இது. ஹென்றி அந்நாட்டில் இருந்து வந்த எல்லைப் புற மக்களின் பிரபுக்கள் பதவிகளையும், கோமக்கள் ஆட்சியையும் அடியோடு அழித்தொழித்தார். அந்நாடு முழுவதையும் அவர் பன்னிரண்டு கோட்டங்களாகப் பிரித்தார். இங்கிலாந்தின் கோட்டங்களைப் போன்றே இவற்றையும் அமைதிகாண் நீதிபதி களைக் கொண்டு ஆண்டு வந்தார். (பார்க்க: படம் எண், 19) அவ்வமைதிகாண் நீதிபதிகள், மன்னரின் ஆலோசனை மன்றம் அவ்வப்போது அறிவிக்கும் கட்டளைகளுக்கும், பாராளுமன்றத் தில் செய்யப்பட்ட சட்டங்களுக்கும் கட்டுப்பட்டவர்களாக இருந்து வந்தனர். இதற்குப் பிறகு ஆங்கிலேய மக்கள் சபையில் வெல்ஷ் மாவட்டங்களின் பிரதிநிதிகளும், பேரூர்களின் பிரதி நிதிகளும் இடம்பெற்றனர். தொல்லை மிக்க இன்னல் நிறைந்த அம்மாவட்டங்களில் அரசனுடைய ஆலோசனை மன்றத் தின் ஆதிக்கம் நிலைநாட்டப் பெற வேண்டியது மிக இன்றியமை யாததாக இருந்தது. அம் மன்றம் தன்னுடைய கிளையாக வேல்ஸிற்கும், எல்லைப்புறத்திற்கும் உரிய 'வேல்ஸ் மன்றம்' என்பதை நிறுவி, அதன் மூலம் செயலாற்றத் தொடங்கியது. இவ் வேல்ஸ் மன்றம் ஸ்காட்லாந்தில் முன்னர் அமைக்கப்பட்ட கவுன்சிலைப் போன்றதாகும்.[1]

இவ்வாறு மத்திய அரசின் ஆற்றல் மிக்க உதவியையும் ஆதர வையும் பெற்று, பல நூற்ருண்டுகளாகப் பழங்குடி மக்களின் காட்டுமிராண்டித்தனமான செயல்களும், நிலமானியப் படை முறையால், உண்டான கலகங்களும் குழப்பங்களும் நிறைந்து கிடந்த கொடிய அம் மலைப் பகுதியில், அமைதிகாண் நீதிபதிகள் அமைதியாக ஆட்சிசெய்ய முடிந்தது. எட்டாம் ஹென்றி தொடங்கிய இம்முறையில் இந்நீதிபதிகள் வேல்ஸின் மக்களை ஆட்சி புரிவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கிலேயர்கள் அல்லர். ஆனல், வெல்ஷ் மக்களிடையே இயல்பாகத் தலைவர் களாக விளங்கிய பெருமக்களே இப்பகுதியில் அமர்த்தப்பட்டு, நாடாளும் பொறுப்பும் அளிக்கப்பட்டிருந்தனர். அயர்லாந்தில்

[1] 'ஏழாம் ஹென்றியும் புதிய முடியாட்சியும்' என்னும் இயலைப் பார்க்க (பக். 616—646).

அந்நாட்டு உயர் வகுப்புமக்களை அழித்தொழித்ததைப் போன்று ஒன்றும் இங்குச் செய்யப்படவில்லை. அதற்கு மாருக வெல்ஷ் மக்களிடையே சிறப்புற்று விளங்கிய உயர் வகுப்பு மக்களிடத்து ஆங்கிலேய அரசாங்கம் நட்புறவு கொண்டது.

டியூடர் அரசமரபினர் இங்கிலாந்தின் அரியணையில் அமர்ந்திருக்கும் காட்சி கெல்ட்டிக்கு இன மக்கள் பெருமைப் படத்தக்க வகையில் இருந்தமையால், அவர்கள் இக் கட்டுப்பாடுகளுக்கிணங்கி இங்கிலாந்தோடு ஒன்றுசேர இசைந்தனர். டியூடரின் நெருக்கடியான ஆட்சிக்காலம் முழுவதும் அவர்கள் இங்கிலாந்திடத்துப் பற்றுறுதியும் ஈடுபாடும் உடையவர்களாகவே இருந்து வந்தனர். ஷேக்ஸ்பியர் தம்முடைய அரசர் ஐந்தாம் ஹென்றி நாடகத்தில், அந்நாடகத் தலைவரான ஐந்தாம் ஹென்றி வெல்ஷ் மரபிலே தோன்றியவர் என்று காப்டன் புளுலன் என்பவர் பெருமையடித்துக் கொள்ளுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதே முறையில் ஷேக்ஸ்பியர் காலத்து நேர்மையான வெல்ஷ் மனிதர் யாராகிலும் அரசி எலிசபெத்தின் இனத் தோற்றத்தைப்பற்றி இவ்வாறு பெருமையடித்துக் கொண்டிருந்ததை அவர் ஒட்டுக் கேட்டிருப்பாரோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது. இவ்வாறு கெல்டிக்கு இனமக்கள் டியூடர் அரசமரபிடத்துத் தனிப்பட்ட ஈடுபாட்டுணர்ச்சி உடையவர்களாக இருந்துவந்த நிலையில் தான், ஆங்கிலேய சீர்திருத்த இயக்கத்தினல் அவர்களுடைய பற்றுறுதியையும், ஈடுபாட்டையும் சோதிப்பதைப் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கின. மிதவாதிகளின் புத்துயிர்ப்பிற்குப் பிறகு, பிரிட்டனிலேயே மிகச் சிறந்த புராட்டஸ்டண்டு நாடாக வேல்ஸ் விளங்கியது உண்மை. ஆனல் பதினறும் நூற்றுண்டில் இவ்வாறு வேல்ஸ் விளங்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். டியூடர்களின் ஆட்சிக் காலத்தில்தான் வேல்ஸிற்கு முதன் முதலாகப் புராட்டஸ்டண்டு சமயம் அதிகார ஆங்கிலிகளின் உடையில் சென்று புகுந்தது. பெரும்பான்மையான மக்களுக்குத் தெரியாத இலத்தீன் மொழியில் வழிபாட்டு நூலையும், விவிலியத்தையும் தம்முடன் கொண்டுசென்று புராடஸ்டண்ட்டு சமயம் அந்நாட்டில் முதன் முதலாகக் குடியேறியது. இப் புதிய சமயம் அயல்நாட்டு குருமார்களாகிய அதிகாரிகளினல் முதன்முதல் இந்நாட்டு மக்களிடையே பரப்பப்பட்டது. அக் குருமார்கள் இப்பணிக்காக மிக உயர்ந்த ஊதியத்தைப் பெற்று வந்தனர். ஆயினும், அவர்கள் பெரும்பாலும் தங்கள் கடமையைச் செய்வதில் கருத்தில்லாதவர்களாகவும், இப்புதிய நாட்டிற்கு வந்து பணியாற்றுமலேயே ஊதியம் பெறுபவர்களாகவும் இருந்து வந்தனர். வேல்ஸிலுள்ள கெல்டிக்கு இனமக்

களையும், அவர்களுடைய மன இயல்புகளையும் ரோமாபுரி கவருவதற்கு இது மிகச் சிறந்ததொரு வாய்ப்பாக அமைந்தது. இத்தகைய சூழ்நிலைகளுக்கிடையே, ரோமாபுரி அயர்லாந்தில் பணியாற்றி வெற்றிப்பெற்றதைப் போன்று, இங்கும் வெற்றிபெற முயன்று கொண்டிருந்தது. ஆனால், எலிசபெத்தின் ஆட்சிக் காலத்தில் இயேசு சங்கத்தினைச் சார்ந்த சமயத்தொண்டர்கள் வேல்ஸினை முற்றிலும் புறக்கணித்தே வந்தனர். ஐரோப்பிய கல்விச் சாலைகளில் இங்கிலாந்தையும், வேல்ஸையும் சேர்ந்த தொண்டர்கள் மிகக் கடுமையாகத் தங்களுக்குள்ளே பூசலிட்டுக் கொண்ட காரணத்தால், ஆங்கிலேய சமயத்தொண்டர்கள் வேல்ஸினைப் புறக்கணிக்கலாயினர்.

இவ்வாறு வெல்ஷ் மக்கள் பிறர் தலையீடின்றித் தனித்துவிடப் பட்டமையால், அவர்கள் சீர்திருத்த இயக்கத்தினால் உண்டாகும் மாறுதல்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. அதே சமயத்தில், அவர்களுள் கல்விகற்றவர்களும், நிலக்கிழார் வகுப்பினரும் ஆங்கிலத்தில் பேசுவதையும், ஆங்கிலேய வாழ்க்கையின் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு வாழ்வதையும் தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால், அதே சமயத்தில் அவர்களுடைய நாட்டுமொழி திருச்சபையிலும், அரசிலும் போற்றியாதரிக்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வந்தது. சிறிது காலத்திற்கு நயம்படப் பேசும் திறமைவாய்ந்த மலைவாழ் உழவருடைய அறிவாற்றலில் உணர்ச்சியற்ற மந்தநிலை நிலையாக இடம்பெற்றது. கல்வி பயிலுவதற்குரிய கருவியாகக் கெல்ட்டிக்கு மொழி புறக்கணிக்கப்பட்ட போதிலும், ஐரிஷ் மக்களிடத்து ஐரிஷ்மொழி நிலைபெற்றதைக் காட்டிலும், பேரளவில் அது வெல்ஷ் மக்களிடத்து நின்று நிலைபெற்றது எனலாம். காலப் போக்கில் பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில், வெல்ஷ் மக்களின் தேசிய உணர்விலும் பண்பாட்டிலும் புதியதொரு மலர்ச்சி தோன்றிற்று. அப்புத்துயிர்ப்பு தூய்மை நெறியுடன் தொடர்பு கொண்ட சமயத்திலும், கல்வியிலும், இசையிலும், கெல்ட்டிக்கு மொழிப் பாட்டுகளிலும் உண்டாயிற்று. வெல்ஷ் மக்களின் வரலாற்றில் பழங்குடி மக்களினம் இக் காலத்தில் இறந்து விட்டது. ஆனால், பாணர்கள் இன்னும் பெரும் செல்வாக்குடையவர்களாகவே இருந்து வந்தனர். இதே காலத்தில் அயர்லாந்தில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கம் இங்கிலாந்திற்கு எதிராகப் பகைமையின் உருவமாக மாறியது. ஆனால், இப்பிற்காலத்தில் தோன்றிய கெல்ட்டிக்கு இனத்தின் மறுமலர்ச்சி அதைப்போன்று உருவெடுக்காமை நம்முடைய நற்பேறேயாகும். எட்டாம் ஹென்றியின் ஒருமைப்பாட்டுச்

சட்டம் (Act of Union) மக்களின் உள்ளங்களை ஒற்றுமைப்படுத்த முயலுவதாகப் போற்றப்பட்டது.

அயர்லாந்தில் டியூடர்களின் கொள்கை வேறுவகையான விளைவுகளை உண்டாக்கியது. பிலிப்பு (Philip) அரசர் நெதர்லாந்தின் உள்நாட்டு நிலைகளை உணராது செயலாற்றத் தொடங்கியதைப் போன்றே, அயர்லாந்தின் உள்நாட்டு நிலைகளை அறியாமல் உண்டான ஆர்வத்தினால் டியூடர்கள் பின்பற்றிய அயர்லாந்தின் கொள்கை தோல்வியுற்றது எனலாம். பதினைந்தாம் நூற்றாண்டில் அயர்லாந்து 'செல்வக்குடி மக்களின் தன்னாட்சி' (Aristocratic Home Rule) என்னும் குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டு ஆளப்பட்டுவந்தது. அவ்வாறு ஆட்சிபுரிந்தவர்கள் சிறப்புமிக்க ஆங்கிலேய-ஐரிஷ் குடிகளைச் சார்ந்தவராவர். அவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் கில்டேரை (Kildare)ச் சேர்ந்த ஃபிட்ஸ்ஜெரால்டு (Fitzgeralds) மரபினைச் சேர்ந்தவராவர். ஆனால், அம்முறை ஏழாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் சிதையத் தொடங்கிற்று; எட்டாம் ஹென்றியின் காலத்தில் மிகக் கொடியதொரு முடிவிற்கு வந்தது. எட்டாம் ஹென்றி, டைபர்ன் என்னும் இடத்தில் கில்டேரின் கோமானையும் அவருடைய ஐந்து சிற்றப்பன்மார்களையும் கி. பி. 1537-ல் தூக்கிலிட்டுக் கொன்றார். இக்கொடிய செயலின் மூலம் அயர்லாந்தின் தன்னாட்சி அடியோடு அழிக்கப்பட்டது. உடனடியாக வேறு எத்தகைய ஆட்சி முறையும் அதற்குப் பதிலாக அந்நாட்டில் அமைக்கப்படவில்லை. சர்ரேயின் கோமான் பேரரசர் ஹென்றியினிடத்து, அயர்லாந்தைக் கைப்பற்றுவதும், அதில் குடியேற்றங்களை அமைப்பதும் மிக இன்றியமையாததாக ஆகிவிட்டதென்று அறிவித்தார். எனினும், அப்பகுதியில் எலிசபெத்துப் பேரரசியின் ஆட்சிக்காலத்துப் பிற்பகுதியில்தான் இக்கொடிய மாற்றுமுறை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

ஃபிட்ஜெரால்டுகளைத் தூக்கிலிட்டதோடு, எட்டாம் ஹென்றி ஐரிஷ் அவலநாடகத்தின் வளர்ச்சிக்கும் விரிவுக்கும் வேறுசில செயல்களையும் செய்தார். இங்கிலாந்திற்கு உகந்தவகையில் அவர் திட்டமிட்டு உண்டாக்கிய சமயப்புரட்சிக்கு, அயர்லாந்தை நடைமுறையில் அடிமைப்படுத்தினார். முதன்முதல் போப்பு ஆண்டவரின் மேலாதிக்கம் அழித்தொழிக்கப்பட்டமை, கெல்ட்டிக்கு இனமக்களுக்கு ஒன்றும் சிறப்பாகத் தோன்றவில்லை. இதற்குக் காரணம் யாதெனில், கெல்ட்டிக்கு இனமக்கள் ரோமாபுரியினை என்றுமே ஒருவகையான அயல் நாட்டு ஆதிக்க

மாகவே கருதி வந்தமையாகும். ரோமானிய சமயம் என்றுமே நாட்டு மக்களிடத்துச் செல்வாக்கு பெருது, ஆங்கிலேய—ஐரிஷ் பிரபுக்களிடத்து மட்டும் மிக நெருங்கிய உறவு கொண்டிருந்த மையுமாகும். இதன் உடனிகழ்ச்சியாக மடாலயங்கள் அழித்தொழிக்கப்பட்டன. டியூடர்கால இங்கிலாந்திற்கும், டியூடர் கால அயர்லாந்திற்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், பண்பாட்டின் நிலைக்களன்களாக விளங்கியதுமான மடாலயங்களின் அழிவு நாகரிகத்தின் அழிவாயிற்று. ஐரிஷ் துறவிகள், பாதிரிமார்களையும், குறுகிய மனப்பான்மையுடைய சமயக் குருமார்களையும் போன்று உலகியலில் ஊறித்திளைத்தவர்களாகவும், பயனற்றவர்களாகவும் இருந்தனர் என்பது உண்மை. ஆனல், அவர்கள் மிக இழிந்தவர்கள் அல்லர் என்று உறுதியாகக் கூறலாம். அத்தீவில் பரவியிருந்த சிறிதளவு கல்வியும், மடாலயங்களின் முயற்சியினல் பரவியதே என்பது இங்கு நினைவுகூரத்தக்கதாகும். மக்களிடையே பரவியிருந்த சமயமும் நாடு முழுவதும் சுற்றிச் சுற்றி வந்த சோதரத் துறவிகளாலேயே பெரிதும் பேணி வளர்க்கப்பட்டது. இத்துறவிகளும் ஹென்றியின் தடையுத்தரவினல் அழிந்தொழிந்தனர். தாங்கள் அயர்லாந்தில் அழித்தொழித்த முறைகளுக்கு மாருக ஆற்றல் மிக்க எத்தகைய முறைகளையும் ஆங்கிலேயர் தங்களுடன் கொண்டு வரவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் அழித்தொழித்த மடாலயங்களுக்குப் பதிலாக, கல்வியை வளர்க்கும் நிலையங்களான பள்ளிகளையோ, பல்கலைக் கழகங்களையோ அவர்கள் இங்கு நிறுவவில்லை.[1] இக்காலத்தில் கெல்ட்டிக்கு இனமக்கள் ஐரோப்பிய மறுமலர்ச்சி இயக்கத்திற்கும், புதிய கல்வி முறைக்கும் அடிமையாகாது தனித்து வாழ்ந்துவந்தனர். அதனல், ஹென்றியின் ஆங்கிலமொழி விவிலிய நூலும், எட்வர்ட்டின் வழிபாட்டு நூலும் அவர்களுக்குப் புரியாத மொழியில் எழுதப்பட்டனவாகவே இருந்தன. ஆனல், பழைய சமயமும் மிகவும் நலிவுற்றுக் கொண்டிருந்தது. எனவே, அதிகாரச் சீர்திருத்தச் செயல்களுக்கு எதிராக, ஆற்றல் மிக்க எதிர்ப்புகள் சிறிது கூடத் தோன்றவில்லை. அயல் நாட்டிலிருந்து இயேசு சங்கத்தைச் சார்ந்த துறவிகள் இந்நாட்டிற்கு வந்து இங்குள்ள சோதரத் துறவிகளோடு சேர்ந்த பிறகுதான் அரசின் சீர்திருத்தச் செயல்களுக்கு எதிர்ப்புத் தோன்றியது அச்சோதரத் துறவிகளை அரசு தடையுத்தரவின் மூலம் நாடு கடத்த முடிந்ததே ஒழிய, அடக்கியொடுக்க முடியவில்லை.

[1] எலிசபெத்தின் ஆட்சி இறுதிக்காலம் வரையில் டிரினிட்டி கல்லூரியும் (Trinity College), டியூப்பிளின் கல்லூரியும் நிறுவப்படவில்லை.

அயர்லாந்தில் ஆங்கிலேயரின் சமயச் சார்பற்ற ஆட்சியும் ஆன்மிகத் துறை ஆட்சியும் 'ஆட்சிமுறைக் குறைபாடு'டையதாக இருந்ததென்று தெரிகிறது. இந்நிலைமையை நன்முறையில் பயன்படுத்திக்கொண்ட இயேசு சங்கத்தினர், தங்களால் இயன்றவகையெல்லாம் தங்கள் கொள்கையையும் சமயத்தையும் பரப்புவதில் ஆர்வம் காட்டி வந்தனர். பெரிதும் இவ்வியேசு சங்கத்தினரின் செயல்முறையினால் அயர்லாந்து நாட்டுச் சூழ்நிலையில் ஒருவகையான நெருக்கடி தோன்றியது. அது எலிசபெத்து அரசிக்குப் பேரிடர்ப்பாடாக இருந்து வந்தது. 'அயர்லாந்து மிகச் சிறந்த காட்டு மரங்களையும், பாதுகாவலான துறைமுகங்களையும் உடையதாக இருக்கின்றது; அவற்றின் தலைவராக ஸ்பானியர் இருப்பார்களானால், அவர் மிகக் குறுகிய காலத்திலேயே பெருங்கடல்களின் தலைவராக விளங்குவர். இக்கடற்படையே நம்முடைய மிக வலிவான ஆற்றலாகும்' என்று அக்காலத்தினரால் குறிப்பிடப்பட்டுள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும். போப்பு ஆண்டவரே தம்முடைய ஆணையைப்பெற்ற படையெடுப்பாளர் படை ஒன்றை அயர்லாந்திற்கு அனுப்பி வைத்தார். அப்படை வீரர்களுள் அறுநூறுபேர் சுமர்விக்கு (Smerwick) என்னும் இடத்தில் ஆங்கிலேயர்களால் சிறைப் பிடிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். எலிசபெத்தின் ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடுகளில், அயர்லாந்து ஆபத்தின் முனையாக கி.பி. 1580 முதல் இருந்து வந்தது. அங்கு அவளுடைய பகைவர்கள் அவளைத் தாக்கியபொழுது, அவள் விருப்பமில்லாமலே அந்நாட்டினைக் கைப்பற்றுவதற்குப் படையெடுத்து வருமாறு கட்டாயப் படுத்தப்பட்டாள். ஏனெனில் அவளுடைய படை பலமும், நிதிநிலையும் இப்படையெடுப்புக்கு வேண்டிய வசதிகளையுடையதாக இல்லாத காரணத்தினால்தான் அவள் அயர்லாந்தின்மீது போர்தொடுப்பது குறித்துத் தயங்க வேண்டி இருந்தது. அவளுடைய படைத் தலைவர்கள் தங்கள் வாளினால் மக்களைக்கொன்று குவிப்பதில் மிகக் கொடியவர்களாகவும், நாட்டிலே பஞ்சத்தினைத் தலைவிரித்தாடச் செய்வதில் வல்லவர்களாகவும் இருந்தனர். மேலும், தங்களால் கட்டிக் காக்கமுடியாத மாவட்டங்களை மக்கள் வாழ்க்கையற்ற பாலை நிலங்களாக அவர்கள் மாற்றி வந்தனர்.

அதே சமயத்தில் இங்கிலாந்தின் அரசு போற்றிப் பின்பற்றிய ஆங்கிலேயரின் குடியேற்றக் கொள்கை, ஒவ்வோர் ஆண்டும் பகைமையுணர்வு மிகுதியுடையவர்களாக வளர்ந்து

வரும் குடியேற்ற நாட்டுக்குரிய மக்களை நிலையாகக் கட்டுப்படுத்தி வைப்பதற்குரிய வழி வகைகளைக் கையாளுமாறு செய்தது. இது 'பண்புமிக்க வீரதீரச் செயலில் நாட்டம் உடைய 'பெருங் கூட்டத்தினருக்கும், இங்கிலாந்தின் மேனர் குடும்பங்களைச் சேர்ந்த இளைய பிள்ளைகளுக்கும்' புதிய வாயில்களின் கதவு களைத் திறந்துவிட்டன. எலிசபெத்தினுடைய கழுகுகள் ஸ்பானிஷ்மெயினுக்குப் பறந்துசென்றன என்றும், அதே சமயத்தில் இராசாளிகள் அயர்லாந்தில் திடீரென்று பாய்ந்து தாக்கின என்றும் சொல்லப்படுகின்றன. ஆனல் பல சமயங் களில் அவை ஒரே பறவையாக இருந்தமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். அயர்லாந்தினைக் கைப்பற்றியவர்களும், சுரண்டிய வர்களும் மிகப் பலராவர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஹம்பிரி கில்பர்ட்டு, வால்ட்டர் ராலே, பழிக்குப் பழிவாங்கும் செயலில் ஈடுபட்ட கிரேன்வில் (Grenville), 'அணங்கு அரசி' (Faery Queen) என்னும் காப்பியத்தின் ஆசிரியரான உயர்ந்த பண்புமிக்க ஸ்பென்ஸர் (Spenser) முதலியோராவர். அவர் கள் அமெரிக்காவிலும், அயர்லாந்திலும் ஒப்பான முக்கியத் துவமும் கவர்ச்சியுமுடைய இரு புதிய வெளிகளைக் கண் டனர். அவ்விடங்களில் தனியார் செல்வத்தை ஈட்டுவதற்கும், பேரரசிக்குப் பொதுத்துறைப் பணிபுரிவதற்கும், போப்பு ஆண்ட வருக்கும் ஸ்பானியருக்கும் எதிராக ஆதரித்துப் போற்றப்படும் உண்மையான சமயத்தின் நன்மைக்காகத் தொண்டு புரியவும் வாய்ப்புகளும் வசதிகளும் இருப்பதை அவர்கள் கண்டனர். ராலேவும், ஸ்பென்சரும் தங்களுடைய கண்களுக்கு எதிரில் காணப்படும் அயர்லாந்தின் இனச்சிக்கல்களையும், சமயப் பிரச் சினைகளையும் பற்றிய உண்மைகளைக் காணமுடியாத குருடர் களாக இருந்தனர் என்ருல், தாயகத்தில் இருந்த சாதாரண ஆங்கிலேயர் பலநூற்றுண்டுகள் கழிவதற்கு முன்பு அச்சிக்கல் களைப் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று கூறுவது பொருத்த மற்றதாகும்.

இவ்வாருக எலிசபெத்தினுடைய ஆட்சியின் இறுதி முப்பது ஆண்டுக் காலத்தில், இதுவரை குழம்பிய ஒன்ருக இருந்துவந்த அயர்லாந்தின் வரலாறு, முறையான வடிவமாக உருவாக்கப் பட்டது. அது அங்கு மூந்நூறு ஆண்டுகள் இறுகி உறுதிப்பட லாயிற்று. அந்நாட்டின் மக்கள் ரோமாபுரியின் சமயத்திடத்துப் புதுமையான ஒரு வகை ஆர்வத்தைக் கொண்டதாகக் காணப் பட்டது. அவர்கள் தாங்கள் ஆங்கிலேயரிடத்துக் கொண்டுள்ள உணர்ச்சி மிக்க வெறுப்புடன், அச்சமயத்தை அதற்குரிய அடை யாளமாக வைத்து எண்ணலாயினர். மற்ருெரு புறத்தில் இங்கி

லாந்திலிருந்து புதிதாக அயர்லாந்தில் குடியேறிய மக்கள் புராட்டஸ்டண்டு சமயத்தைப் போற்றியதோடு அமையாமல், அதைத் தங்களுடைய இன உயர்வுக்கு அடையாளமாகக் கருதி வந்தனர். அவர்கள் புராட்டஸ்டண்டு சமயத்தைப் போற்றி வளர்த்தலைத் தாங்கள் இங்கிலாந்திற்கும், இறைவனுக்கும் செய்யக்கூடிய பெருமிதம் மிக்க கடமையாகக் கருதினர். இப் புதிய குடியேறிகள், அயர்லாந்தில் நெடுங்காலமாக வாழ்ந்து வந்த பழைய ஆங்கிலேய–ஐரியப் பெருங்குடியைச் சார்ந்தவர்கள் அல்லர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். எப்பொழுதும் போலவே பிரிட்டிஷ் தீவுகளில் அயர்லாந்து மிக்க சமயப்பற்றுடைய பகுதியாகவே இருந்து வருகிறது.

இத்தகைய சூழ்நிலைகளில்தான், மூழ்கி விட்ட ஐரிய தேசிய இனத்தோடு அயர்லாந்தின் தொல்குடி இன மக்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஓரின மக்களாக்கப்பட்டனர். இங்கிலாந்திற்கு எதிராகத் தோன்றிய வெறுப்பின் ஒற்றுமையும், சமய ஒழுகலாற்றைப் போற்றிப் பின்பற்றுவதாலும், தம் சமயத்தைப் பரப்ப வேண்டும் என்ற ஆர்வத்தாலும் உண்டான ஒற்றுமையும் ஒருங்கு சேர்ந்து, நாள் குறிப்பிட முடியாத தொன்மை வாய்ந்த இனப் பிரிவுகளை இறுதியாக அழித்தொழிக்கக்கூடிய பேராற்றலை அளித்தது. வெளியிலிருந்து கொண்டே இவ்வினப் பிரிவுகளை அழித்தொழிப்பதில் ஆங்கிலேயர் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். டியூடர்களின் ஆட்சிக்காலத்தில் அயர்லாந்தின் உள்நாட்டு உயர் குடி மக்கள் வகுப்பினை அழித்தொழிப்பதன் மூலம், ஆங்கிலேய நிலக்கிழார்களுக்கு இடந்தருவதற்குரிய முயற்சிகள் தொடங்கப்பட்டதைக் காணுகின்றோம். கிராம்வெல் காலத்தில் இவ்வரிய பணி நிறைவேற்றப்பட்டது. இம்முயற்சிகளின் விளைவாக உழவர்களைக் கொண்ட அயர்லாந்தின் மக்களினம் தலைவர்களற்றுத் தத்தளிக்கலாயிற்று. ஆனால் குருமார்கள் நாட்டில் இருந்தனர். மக்களிடத்து இரக்கம் காட்டக்கூடியவர்கள் யாருமே இல்லாமற் போயினர். ஆனால், அதற்கு மாறாக இங்கிலாந்தின் பகைவர்களே இருந்தனர்.

இங்கிலாந்து புராட்டஸ்டண்ட்டு சமயத்திற்கு முதன் முதல் மாறத் தொடங்கியது விக்கிளிப்பின் காலத்தில் என்பது இங்கு நினைவுகூர்தற்குரியதாகும். அச்சமய மாற்றம் எலிசபெத்தின் நீண்ட கால ஆட்சிக்கிடையில்தான் உறுதியாக நிறைவேற்றப்பட்டது. அவள் அரியணை ஏறியபொழுது பெரும்பான்மையான மக்கள் பல திறப்பட்ட சமயக் கொள்கைகளை உடையவர்களாய் இருந்தனர். கத்தோலிக்க சமய

எதிர்ப்புக் கட்சியில் புராட்டஸ்டண்ட்டு சமயக் கொள்கைகளை ஆதரித்த மக்களின் எண்ணிக்கை அளவிற்கு, சமயக் குருமார்களின் ஆதிக்கத்தை எதிர்த்து வந்த மக்களும் இருந்து வந்தனர். ஆனால், அவள் இறந்தபொழுது ஆங்கிலேய மக்களுள் மிகப் பேரளவினர் தங்களை ஆர்வம் மிக்க புராட்டஸ்டண்ட்டுகளாகக் கருதி வாழ்ந்தனர். அவர்களுள் மிகப் பேரெண்ணிக்கையினர் விவிலியத்தையும், வழிபாட்டு நூலையும் அடிப்படையாகக் கொண்ட சமய வாழ்வில் ஈடுபட்டிருந்தனர்.

எலிசபெத்து அரசியின் ஆட்சிக்காலத்திய உள்நாட்டுக் கொள்கையில் இரண்டு நிலைகள் இருந்ததாகத் தெரிகிறது. அவ்வரசியின் முதல் பன்னிரண்டு ஆண்டுக்கால ஆட்சியின் பொழுது, வழிபாட்டு நூல் ஒன்றுதான் சட்டத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சடங்காகும். இக்காலத்தில் ரோமானியக் கத்தோலிக்கர்கள் துன்புறுத்தப்படவில்லை. ஆனால், அவர்களிடமிருந்து குறைந்த அளவில் வரியொன்று ஒழுங்கற்ற முறையில் தண்டப்பட்டதாகத் தெரிகிறது.[1] சமயம் காரணமாக இவ்வாட்சிக்காலத்தில் யாருமே கொலை செய்யப்படவில்லை. தனிப்பட்ட மக்கள் பேரளவில் ரோமானிய கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றி வழிபாடு செய்து வந்ததை அதிகாரத்திலிருந்தோர் கண்டும் காணாதது போலவே இருந்து வந்தனர். அரசின் மிக உயர்ந்த பதவிகளில் இருந்தவர்கள் கூட கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்ததை யாரும் கண்டித்ததாகத் தெரியவில்லை. ஆனால், 1570-ல் போப்பு ஆண்டவர் அரசியைச் சமய விலக்குச் செய்தார். மேலும், அவளுடைய குடிமக்கள் எல்லோரையும் அவர்கள் அரசியிடத்துக் கொண்டிருந்த பற்றுறுதிக்காக மன்னித்துவிட்டார். இது முதல் இரண்டாவது காலம் தொடங்குகிறது. உடனே சமயப் போரும் பூசலும் நிறைந்த இங்கிலாந்தை நாம் காணுகின்றோம். இயேசு சங்கத்தினர் பேரளவில் அயல்நாடுகளிலிருந்து வந்து இங்கிலாந்திற்குள் மாறுவேடம் தரித்து நுழையலாயினர். அவர்கள் ஒரு மண்டபத்திலிருந்து மற்றொரு மண்டபத்திற்கு மாற்றுடையில் சுவரில் பதிக்கப்பட்டுள்ள பலகைகளின் பின்னுலுள்ள 'குருமார்களின்-துளைகளில்' மறைந்து மறைந்து நாடு முழுவதிலும் பரவலாயினர். அவர்கள் பழைய ஆங்கிலேய சமயத்தின் அமைதியான உடலினுள், ஐரோப்பிய சீர்திருத்த இயக்கத்தின் மறுப்பு இயக்கமாகிய புதியதொரு ஆர்வத்தை ஊட்டிவரலாயினர். கத்

[1] இவ்வியலுக்கு முந்திய அதிகாரத்தின் இறுதிப் பகுதியைப் பார்க்க.

தோலிக்க பெரியதனக்காரர்கள் ஆங்கிலேயச் சடங்குகளிடத்து மெல்ல மெல்ல அமைதியாகப் பழக்கப்பட்டுவரும் முறையை இயேசு சங்கத்தினர் தடுத்து நிறுத்தினர். இயேசு சங்கத்தினரின் தொண்டு சமயச் சார்புடையதாக இருந்தது. அதுவெற்றி பெறவேண்டும் என்ருல், அதனுடைய அரசியல் விளைவாக அரசி பதவியிலிருந்து விலக்கப்படவேண்டும் என்ற நெருக்கடி உண்டாயிற்று. அவ்வாறு அரசி பதவியிலிருந்து விலக்கப்படுவாளானல், தாயகத்திலும் கடல் கடந்த நாடுகளிலும் புதிய இங்கிலாந்து கருத்தைச் செலுத்தியிருக்கின்ற எல்லாவற்றிற்கும் அழிவு நோக்கி விடும் என்பதை மக்கள் நன்குணர்ந்திருந்தனர். எலிசபெத்துடன் போரிட்டுக் கொண்டிருக்கிற போப்பு ஆண்டவராகிய அரசரிடத்து (Pope-king) ஆன்மீகத் துறையில் அடிமையாக இருக்குமாறு இயேசு சங்கத்தினர் போதித்து வந்தனர். அப்போப்பு ஆண்டவராகிய அரசர் எலிசபெத்தோடு போரிட்டுக் கொண்டிருந்ததோடு அல்லாமல், தம்முடைய படைக்கலன் தாங்கிய படைகளோடு அயர்லாந்தின் மீது அவர் படையெடுத்திருப்பதையும் நாம் நினைவு கூர்தல்வேண்டும். அவருடைய சமயத் தொண்டர்களைக் கண்டு நாடும் அரசும் நாகரிகமற்ற பண்டைக்கால நிலைக்கு மாறலாயிற்று. எனவே, அத்தொண்டர்கள் ஆங்கிலேய அரசிற்கு நம்பிக்கை துரோகம் செய்தவர்கள் என்ற குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டனர். ஆனல், அவர்களுடைய சமயக் கூட்டத்தைச் சார்ந்த மக்களால், கத்தோலிக்கத் திருச்சபைக்காக உயிர்த்தியாகம் செய்த 'மாவீரர்கள்' என்று போற்றப்பட்டனர். இங்கிலாந்தில் பணியாற்றிய இயேசு சங்கத் தொண்டர்களின் தலைவர்களுள் இருவர் குறிப்பிடத்தக்கவராவர். அவர்களுள் சாம்பியன் (Champion) என்பவர் அரசியலைப் பற்றிக் கவலைப்படாதவர்; பெரிதும் சமயத்தொண்டிலேயே ஈடுபட்டிருந்தவராவர். தீவினைப் பயன் விளைவாக அவர் 1581-ல் கைப்பற்றப்பட்டு தூக்கிலிடப்பட்டார். அதே சமயத்தில் ஐயமற்ற நாட்டுப் பகைவனுகிய பார்சன்சு (Parsons) நாட்டை விட்டுத் தப்பியோடினன். ஐரோப்பாவில் அடைக்கலம் புகுந்த அவன், இங்கிலாந்தின் மீது ஸ்பெயினைப் படையெடுத்துச் செல்லுமாறு செய்வதற்குரிய வேலைகளைச் செய்து வந்தான்.[1]

[1] இங்கிலாந்தினைக் கைப்பற்றுவதைப் பயன்படுத்திக் கொள்ளுவதைப் பற்றிச் சொற்போர் புரிந்த பார்சன்சு 'எம்முறையில் அல்லது எவ்வகையில் ஸ்பெயினிலோ, இத்தாலியின் பல பகுதிகளிலோ பழக்கத்தில் உள்ள கடும் குற்றத்தைச் சாட்டினல், போரினைத் தொடங்க முடியும்' என்று வினவினர். கத்தோலிக்கப் பாதிரிமார்கள் மக்கள்சபையினரைத் தேர்ந்தெடுக்கும் நேர்வினை மறுக்கவோ, உறுதிப்படுத்தவோ அதிகாரம் உடையவர்களாக இருக்கவேண்டும்.

மேரியின் ஆட்சிக்காலத்து ஒவ்வோராண்டும் சராசரி 56 புராட்டஸ்டண்ட்டுகள் துன்புறுத்தப்பட்டதற்கு மாருக எலிசபெத்து அரசியின் ஆட்சிக்காலத்து ஒவ்வோராண்டும் கத்தோலிகர்கள் துன்புறுத்தப்பட்டு வந்தனர். அவர்கள் சமயத்தினைப் பழித்துரைப்பதற்காகத் துன்புறுத்தப்படும் நிலை மாறியது. நாட்டிற்கு எதிராகவும், அரசிற்கு எதிராகவும் சதி செய்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டிக்கப் பட்டனர். அது வருந்தத்தக்க செயலாகும். ஆங்கிலேய கத்தோலிக்கர்களுள் பலர் நாட்டுப்பற்றும், அரசிடத்துப் பற்றுறுதியும் உடையவர்களாக இருந்து வந்தனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனல், அவர்கள் தங்கள் சமயமே அரியணையில் வீற்றிருக்க வேண்டும் என ஏக்கம் கொண்டிருந்தனர். தங்களுடைய ஆன்மீகத் தலைவரான போப்பு ஆண்டவராகிய ஏந்திரக் கல்லின் மேல் கல்லிற்கும், உலகியலுக்குத் தலைவராகிய அரசி என்னும் ஏந்திரக் கல்லின் கீழ்க் கல்லுக்கும் இடையே அவர்கள் அகப்பட்டுக் கொண்டு அல்லலுற்றனர். அவர்கள் இரு திறத்தினரிடத்தும் ஈடுபாடும் பற்றுறுதியும் உடையவர்களாக இருத்தல் என்பது மனித இயல்பிற்கு மாருனதும் முரண்பாடுடையதுமாக இரு திறத்தினராலும் கருதப்பட்டது. இவ்வஞ்சத்தக்க சச்சரவிற்குக் குற்றமற்ற அப்பாவிகள் பலர் இரையாயினர். இம் முரண்பாட்டினருக்கு இடையே ஓர் உடன்பாட்டை இச்சமயத்தில் காண்பதென்பது இயலாத செயலாகவே இருந்தது. எலிசபெத்து அரசியின் ஆட்சிக் கால இடைப் பகுதியில், இங்கிலாந்து முற்றுகையிடப்பட்ட பட்டணத்திற்குரிய ஒழுங்குமுறை சிலவற்றைத் தமக்கேற்ற வகையில் கடைபிடிக்கலாயிற்று. உலக முழுவதிலும் ரோமாபுரியின் திருச்சபை கடுமையான குற்றங்களைச் சாட்டி விசாரணை செய்யும் முறைகளைக் கைவிடும் வரையிலும், செயிண்ட் பர்த்தலோமியோவின் படுகொலை வரையிலும், அரசர்களைப் பதவியிலிருந்து விலக்குவதும் கொலை செய்வதுமாகிய கொடுஞ் செயல்களைக் கைவிடும் வரையிலும் – அவளுடைய ஆட்சிக்குட் பட்டிருந்த எல்லா நாடுகளிலும், கத்தோலிக்க சமயத் தொண்டர்களிடத்துச் சமயப் பொறையுடன் நடந்து கொள்ளுவதைத் தடுக்க, எலிசபெத்து அரசி பிறரால் வெல்ல முடியாத தடையுத்தரவைப் பிறப்பித்திருந்தாள். இவ்வாறு செய்வதன் மூலம் படைக்கலனேந்திய கருணையற்றபோர் வீரனேடு படைக்கலனே இல்லாத தனி மனிதன் ஒருவனை எதிர்த்துப் போரிடச் செய்து தோல்வியைத் தாமே தேடிக் கொண்டனர்.

இத்தகைய சூழ்நிலைகளுக்கு இடையே இங்கிலாந்தில் புராட்டஸ்டண்ட்டு சமயப் பிரசாரம் விரைவாக முன்னேற்ற மடைந்து கொண்டிருந்தது. அச்சம் கொண்ட அதிகார வகுப்பினரால் அது போற்றி ஆதரிக்கப்பட்டது. ஆங்கிலேய மக்களின் உள்ளங்களில் எல்லாம் புராட்டஸ்டண்ட்டு சமயம், நாட்டுப்பற்று, ஸ்பானிய ஆதிக்கத்தின் எதிர்ப்பு, கடலாதிக்கம், அமெரிக்காவில் டிரேக்கு ஆற்றிய வீரதீரச் செயல்களோடும், கொலைகாரர்களிடமிருந்து அரசியின் வாழ்வைக் காப்பது ஆகியவற்றின் அடையாளமாகக் கருதப்பட்டது. 'இலக்கணப் பள்ளிகள்' எனப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் திருத்தி அமைக்கப்பட்டன. அப்பள்ளிகளில் எராஸ்மஸ், கோலட்டு முதலியோரின் உள்ள உணர்வோடு கற்பிக்கப்பட்டுவந்த பழம் பெரும் இலக்கியங்களை இளைஞர்கள் நன்கறிந்திருந்தனர். மேலும், விவிலிய நூலையும், வினா விடை நூற்களையும் அவர்கள் கற்றனர். இவ்வாறு இலக்கியத் துறையில் புதிய ஆங்கில மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களும், சமயத் துறையில் புராட்டஸ்டண்ட்டு ஆங்கிலிக (Protestant Anglicanism)ச் சமயத்தைப் போற்றி வளர்த்தவர்களும் தோன்றலாயினர். ரோமாபுரியுடன் நடைபெற்ற மரணப் போராட்டத்தின்பொழுது, ஆங்கிலேய கத்தோலிக்க சமயம் செழித்தோங்க முடியாமற் போயிற்று. புதிய தலைமுறையைச் சார்ந்த சமயக்குருமார்களும், அறிஞர்களும் தீவிரப் புராட்டஸ்டண்ட்டுகளாக இருந்தனர்.[1]

தாய்மை வாதியர்களுள் மிகப் பேரளவினர் திருச்சபைக்குள்ளேயே இருந்து வந்தனர். அவர்கள் நாட்டினைப் புராட்

[1] 'அங்குத் திருச்சபையின் பிற அமைப்பிற்கும், கோயிற் பாடகர்களின் இடத்திற்கும் இடையே பெரிய பங்கீடு ஒன்றும் இல்லையாயினும், இப்பொழுது அது மிகச் சிறியதாகவோ, ஒன்றும் இல்லாததாகவோ இருந்தது. உண்மையைச் சொல்லுவது முழுவதும் தேவையற்றது. திருச்சபையின் கூட்டத்தில் சமயக்குரு அமர்ந்து தம்முடைய தொழுகையைப் பொதுவாகச் சொல்லுவார். இதற்காகச் சுவரில் பதிப்பிக்கப்பட்ட பலகையில் சிறு கூடாரத்தில் அவர், மக்களை நோக்கி அமர்ந்து வழிபாடு செய்வார். இதன் மூலம் அறியாமை நிறைந்த மக்கள் பல வகைப்பட்ட பாசுரங்களை மனப்பாடம் செய்து கொள்ளுவதோடு, பொது வழிபாட்டுப் பாடல்களையும் நன்கு கற்றுக்கொள்ளுவர். ஆனல், அவை படிக்கப்படுகின்றபொழுதே, அவரோடு சேர்ந்து அவர்களும் இறைவனை வேண்டித் தொழுவர். இவ்வாறு ஒரே சமயத்தில் வழிபாட்டுக் கூட்டத்தினர் அனைவரும் உயிருடன் வாழும் 'கடவுளிடத்து' அவருடைய திருச்சபைக்குரிய பண்ணைகளின் சார்பில் உண்மையுடனும் ஆர்வத்துடனும் தங்களுடைய விண்ணப்பங்களைப் பொழிந்து வந்தனர்' என்பது எலிசபெத்து ஆட்சியின் தொடக்க காலத்தில் ஆங்கிலத் திருச்சபையின் வட்டாரங்கள் எவ்வாறு இருந்தன என்பதை ஹாரிசன் (Holinshed, II.I.) என்பவர் விளக்கியுள்ளதாகும். இது அரசின் ஆட்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில், திருச்சபைகள் எப்படியும் அடைய முயன்று வந்த குறிக்கோளாக இது வளர்ந்து வந்ததைக் காணுகின்றோம்.

டஸ்டண்டு நாடாக மாற்றுவதற்குத் திருச்சபையை ஒரு கருவி யாகப் பயன்படுத்திக் கொண்டனர். இதுவரை அவர்கள் திருச் சபையின் சடங்குகளையும், அரசினையும் தங்களுடைய போக்கிலே திருப்பவேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்து வந்தனர். தன் னுடைய இயல் பூக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்ற வகையில், கத்தோலிக்க சமயத்திற்கு எதிராக மிக உறுதியுடன் இல்லாத பாதிரிமார்களைப் பெறுவது எலிசபெத்திற்கு உண்மையிலேயே மிகவும் கடினமாக இருந்தது. இவ்விடர்ப்பாடு அவள் கான்டர்பரி ஆர்ச்பிஷப்பாக வித்கிப்ட்டு (Whitgift) என்பவரை அமர்த்தும் வரை இருந்து வந்தது. இதற்குப் பிறகு இவருடைய உதவியுடன் பேரரசி திருச்சபையைத் தூய்மைப் படுத்த முயலுவோருக்கு எதிராக உறுதியாக இருந்து செய லாற்றி வந்தார். வித்கிப்ட்டு கால்வினியக் கோட்பாடுகள் பல வற்றைப் போற்றிப் பின்பற்றியவராவர். ஆனால் அவர் திருச் சபை ஆட்சியை மக்களாட்சிப் பண்புடையதாக மாற்றுவதை வன்மையாக எதிர்த்தார். அவர் பாராளுமன்றத்திற்கும், பொது மக்களுக்கும், சமய சங்க ஆட்சிக் கொள்கையுடைய குருமார் களுக்கும் (Presbyterian clergy) எதிராக அரசினுடைய அதி காரத்தையும் திருச்சபையின் அதிகாரத்தையும் நிலைநாட்ட வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந் தார்.

திரும்பிவரும் ரோமானியத்திற்கும், வரம்பு கடந்து பிறர் உரிமைகளில் தலையிட்டுவரும் தூய்மைவாதிகளின் கோட்பாட் டிற்கும் எதிராக எலிசபெத்து பழைய திருச்சபை முறை மன்றங்களையும், ஆதிக்கத்தையும் பயன்படுத்தி வந்தாள். அரசியின் இச்செயல்கள் அனைத்தையும் சிறப்புக்குழு ஒன்று ஆதரித்துப் போற்றியது. இக்குழு சமயத்துறையில் ஒருவகை யான 'விண்மீன் மன்றமாக' விளங்கியது. இதன் மூலம் திருச்சபையினை அரசு கட்டுப்படுத்தி ஆட்சி புரியும் புதிய முறை திறமையாகச் செயற்படுத்தப்பட்டது. இச்சிறப்புக்குழு பிரிவி கவுன்சிலின் ஒரு கிளையாக இருந்தது. எனினும், அது தன்னுடைய உறுப்பினர்களின் பொதுப்பண்பின் பிரதிநிதியாக இல்லாமல், அரசியின் பிரதியாகவே இருந்து வந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அவ்வுறுப்பினர்களுள் பலர், சிறப்பாகச் செசில் (Cecil) போன்றவர்கள், குற்றம் சாட்டப்பட்டவரை 'ரோமானிய உயர்வழக்கு உசாவல்' முறையில் புது ஊக்க முள்ளவராக ஆணையிட்டுரைக்குமாறு விசாரணை செய்த முறையை வெறுத்தனர். மேலும், தீவிரப் புராட்டஸ்டண்ட்டு களைத் துன்புறுத்தும் திட்டம் அரசுக்குப் பேரின்னல் இழைக்கும்

என்பதையும் செசிலைப் போன்ற அரசியல் விரகர்கள் கண்டஞ்ரினர். ஆனால் அவளுடைய ஆலோசனை சபையினரின் அறிவுரைகளை ஏற்காமல், அரசி தன் விருப்பப்படியே தொடர்ந்து செயலாற்றி வந்தாள். அவளுடைய நம்பிக்கைக்குரிய பொது மக்கள் அவளுக்கு எதிராக வாக்குரிமைகளை அளித்த போதிலும், அவள் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. எனவே செல்வாக்குமிக்க சக்திகள் பல திருச்சபையின் ஆங்கிலியப் பண்புகளை ஐரோப்பாவிலும். ஸ்காட்லாந்திலும் பெருக்கெடுத்தோடிய சீர்திருத்த இயக்கப் பெருவெள்ளத்தில் கொண்டு சேர்க்க முயன்ற அக்காலத்தில், அல்லது அதனைப் பல புதிய பிரிவுகளினால் துண்டாடி அழிக்க முயன்ற அக்காலத்தில், அரசி எலிசபெத்து இங்கிலாந்தின் திருச்சபைக்குரிய ஆங்கிலியப் பண்புகளை அழிந்தொழியா வண்ணம் காத்துப் போற்றினாள்.

எலிசபெத்தின் அரசத்திருச்சபையின் (State-Church) ஆட்சியில் புராடஸ்டண்ட்டு சமயத்தைச் சார்ந்த உயிர்த்தியாகிகள் மட்டுமல்லாமல், கத்தோலிக்க சமய உயிர்த்தியாகிகளும் இருந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். தூய்மை வாதிகளான கருத்து மாறுபாட்டாளர் (Contorversialists) பாதிரி மார்களுக்கு இடர்ப்பாடுகள் உண்டாகுமாறு வன்முறையில் கடுமையாகத் தாக்கிப் பேசி வந்தனர். அவர்களுள் பென்றி (Penry) என்பவர் குறிப்பிடத்தக்கவராவர். அவர் 'சீர்கெட்ட தலைமைக் குருமார்கள்' (Marpreletes) என்னும் சிறு நூல் ஒன்றை எழுதியுள்ளார். சமயக் குருமார்களின் ஆட்சியைத் தாக்குவது அரசிக்கு அரசியல் குற்றமாக தோன்றியது. ஏனெனில் திருச்சபையிலும் அரசிலும் நிறுவப்பட்டுள்ள அவளுடைய அதிகாரத்தின் மென்மையான சமநிலை இதனால் அழிந்துவிடும் என்று கருதியதனாலேயே, சமயக்குருமார்கள் ஆட்சியைத் தாக்குவது எலிசபெத்திற்கு அரசியல் குற்றமாகவே தோன்றியது. இதனால் தான் தாமஸ் கார்ட்ரைட்டு (Thomas Cartwright) என்னும் சமய சங்க ஆட்சிக் கொள்கையாளர் மரபொழுங்கு தவறாது தம் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் மக்களிடத்து எடுத்து விளக்கியமை அரசிக்குச் சினமூட்டியதோடு, பீதியடையவும் செய்தது. கி. பி. 1590-ல் கார்ட்ரைட்டு சிறைப்படுத்தப்பட்டார். மூன்றாண்டுகளுக்குப் பிறகு பென்றி (Penry), பாரோ (Barrow) கிரீன்வுட்டு (Greenwood) ஆகியோர் அரசப் பகைவர்கள் என்ற குற்றம் சாட்டப்பெற்று, தூக்கிலிடப் பெற்றனர்.

மற்றும் பலர் தங்களுடைய மனச்சான்றிற்காக இக்காலத்தில் உயிர்த்தியாகம் செய்தனர். அவர்களுக்குத் தாயகத்திலோ,

கடல் கடந்த நாடுகளிலோ அவர்களுடைய தலைவிதியைக் கண்டு இரக்கப்படுவதற்கும் அல்லது அவர்களுடைய உள்ள உறுதியைப் போற்றிப் பின்பற்றுவதற்கும் பெரிய கட்சி ஒன்றும் இல்லாமற்போயிற்று. ஆனால், அவர்கள் இயேசு சங்கத்தினரையோ, தூய்மைவாதிகளையோ போன்றில்லாமல், அரசுக்கு எதிரான எல்லாக் குற்றங்களையும் செய்யாத குற்ற மற்றவர்கள் என்பது தெளிவாகப் புலனாகின்றது. கிழக்கு ஆங்கிலியாவைச் சேர்ந்த மக்கள் பலர் 'பலதிறப்பட்ட வெறுக்கத்தக்க சமய மறுப்பாளர்கள்' என்ற காரணத்திற்காகத் தீயிலிட்டுப் பொசுக்கப்பட்டனர். அவர்கள் வைதிகக் கோட்பாடான 'மும்மூர்த்தி' (Trinity) தத்துவத்தினை ஐயுற்றமையே அரசிக்குச் சீற்றத்தை உண்டாக்கியதாகத் தெரிகிறது. அக்காலத்தில் இத்தகைய மனிதர்களுக்கு கத்தோலிக்கரோ, கால்வினியரோ, ஆங்கிலிகரோ கருணை காட்டியதாகத் தெரியவில்லை. அவர்கள் அரசின் கொடும் செயலிற்கு இரையாகவில்லை. பொறையுடைமையில்லாத சமயவெறுப்புகளுக்கே அவர்கள் பலியிடப்பட்டனர். இடைக்காலத்திய சமயமறுப்பாளர்களைத் தேடி வேட்டையாடும் பழக்கங்கள், இன்னும் அழியாமல் இருக்கின்றன என்பதற்கு இது சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

தற்கால அரசு அதனுடைய எல்லைக்குள் பெறவேண்டிய தகுதிகள் அனைத்தையும் பெற்று விளங்குவதாகும். டியூடர் முடியாட்சிக்குப் பிறகு பாராளுமன்றத்தின் மூலம் அரசு திகிலடையச் செய்யும் அதிகாரங்களையுடையதாய் மேலாட்சி புரிந்து வந்தது. இக்காலத்தில் அரசு பாராளுமன்றத்தின் மூலம் தம்முடைய விருப்பத்திற்கேற்ற வகையில் திருச்சபையை அடக்கியொடுக்கியது. ஸ்பானியரின் படையெடுப்பில் இருந்து நாட்டைக் காப்பதற்கு இத்தகைய அதிகாரங்கள் அரசுக்குத் தேவைப்பட்டிருக்கலாம். ஆனால், தனி மனிதரின் உரிமை நிலையாக வளர்ச்சியடைவதை அது கட்டுப்படுத்திவிட்டது. இடைக்கால முறைகளின் மறைவினால், பொருளாதார உரிமையும், அறிவாற்றல் உரிமையும் தம்முடைய எல்லையை விரிவுபடுத்திக்கொண்டன. ஆனால், சமயத்திலும், அரசியலிலும், புதிய அரசு, குறிப்பிட்ட காலம்வரை, தகர்த்தெறியப்பட்டதளைகளைக் காட்டிலும் கொடுமை மிக்க விலங்கினைப் பூட்டியது. கத்தோலிக்கர்களும், தூய்மைவாதிகளும் தங்களுடைய கடவுளைத் தங்களுடைய மனச்சான்றிற்கேற்ப வழிபடுவதற்குரிய உரிமையை விட்டுக்கொடுக்க அரசு இணங்கவில்லை; அரசியலில் எத்தகைய எதிர்ப்பும் தலைகாட்ட வொட்டாமல் முளை

யிலேயே அழித்தொழிக்கப்பட்டது. யாரும் அரசின் செயல்களில் குற்றங்காணவோ, குறை கூறவோ அனுமதிக்கப்படவில்லை. பேரரசியிடத்துப் பேரன்பும், பற்றுறுதியும் கொண்டிருந்த ஜான் ஸ்டப்சு (John Stubbs) என்பவர், பிரஞ்சு நாட்டு இளவரசர் அலன்சன் (Alencon) என்பவரை அரசி எலிசபெத்து மணம் புரிந்து கொள்ள வேண்டாம் என்று அறிவுரை கூறும் வகையில் ஒரு துண்டு வெளியீட்டை எழுதினார். அதற்காக கி. பி. 1579-ல் அவருடைய வலதுகை அரசியின் கட்டளையால் வெட்டப்பட்டமை இங்குக் கருதத்தக்கதாகும். இரத்தம்வடியும் வெட்டப்பட்ட கையின் அடிப்பகுதியை ஆட்டிக் கொண்டே தூக்குமேடையில், அவர் ' அரசி நீடு வாழ்க!' என்று கூக்குரலிட்டார். இத்தகைய முறையில் விந்தையான, அறிவுக் கூர்மை வாய்ந்த அப்பெண்ணுக்கும், எளிய உள்ளம் படைத்த அவளுடைய குடிமக்களுக்கும் இடையே தொடர்பு இருந்து வந்தது. அவள் அலன்சனை மணந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் சிறிதளவு கூட உடையவளாக இல்லை. ஆனால், சிறந்த பெண்ணின் அரசியல் சூழ்ச்சிதிறனாகிய திகைக்க வைக்கும் செயலில் எந்தத் தூய்மை வாதியான பெருமகனும் தலையிட அவள் அனுமதிக்கவில்லை.

ஆயினும், இதுவரை தனி மனிதனுக்கு அரசியல் உரிமையோ, சமய உரிமையோ வழங்கப்படவில்லை. அரசுக்கும். பாராளுமன்றத்திற்கும் இடையே உண்டாகக் கூடிய சிறு பிளவு தனி மனிதனுக்குத் தேவையான அரசியல் உரிமையையும், சமய உரிமையையும் அளிக்கக் கூடியதாக இருந்தது. இங்கிலாந்து ஒரு வல்லாட்சி நாடாக இல்லாமையே இதற்குக் காரணமாகும். அரசின் அதிகாரம் அனைத்தும் படை பலத்தை அடிப்படையாகக் கொண்டிக்கவில்லை. அதற்கு நேர்மாறாக மக்களின் ஆதரவையே அரசியின் அதிகாரம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. பொது நன்மையைக் கருதி அரசு இத்தகைய வன்கண்மை வாய்ந்த அதிகாரங்களைக் கையாளுமாறு மக்கள் இன்னும் விரும்பி வந்தனர். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் அனைவரும் சேர்ந்து கி. பி. 1559-ல் புதுப்பித்த அரசியின் சமயத்துறை ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும் மறுக்கவில்லை என்றாலும், அவற்றைத் தூய்மைவாதியருக்கு எதிராக அவள் பயன்படுத்திய முறையைக் கண்டு, அவளைக் குறை கூறியமை சிறப்புமிக்க செய்தியாகும். இடைக்காலத் திருச்சபையிடம் இருந்து ஆங்கிலேய அரசு, சமயத்தினைக் கட்டுப்படுத்தியாளும் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றது. இவ்வதிகாரத்தைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தவை

தனி மனிதனின் சிந்தனை உரிமையோடும், ஆராய்வதற்கு உதவிய சக்திகளோடும், தனிப்பட்டோரின் தனிப்பட்ட தீர்ப்புகள் வழங்குவதற்குரிய உரிமைகளோடும் கொண்ட தொடர்பினலேயே யாகும். அரசு, தான் புதிதாகப் பெற்ற ஆதிக்கத்தின் அறச்சார்புடைய தோற்றத்தை நிலையாக மறுக்க முடியவில்லை. அரசியல் விரகருக்குத் தூய்மை வாதிகளும், கத்தோலிக்கர்களும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை கொடுமை செய்வோராகவும், நெடுங்காலம் தொல்லை கொடுக்கக் கூடியவர்களாகவும் இருக்கலாம். ஆனால், அவர்கள் மனச்சான்று என்னும் உயர்ந்த சட்டத்தின் பெயரால், அரசும், பாராளுமன்றமும் வெளியிட்ட சமயச் சட்டங்களுக்கு எதிராக அவர்கள் எழுப்பிய உரிமைக்குரல், இறுதியில் ஆற்றலுடையதாகவே விளங்கியது. இடைக்காலத்தின் பரந்த அமைப்பாகவும், நினைவிற்கெட்டாத பெருமதிப்பு வாய்ந்ததாகவும் விளங்கிய ஐரோப்பியத் திருச்சபைக்கு எதிராக, இங்கிலாந்தில் தனிமனிதரின் தீர்ப்புக்கு வேண்டுகோள் விடப்பட்டமை வெற்றியடைந்ததைக் கண்டோம். எனவே, இங்கிலாந்து அரசின் சமயச்சார்பற்ற அதிகாரங்களைக் காட்டிலும், சமயத்துறை விவகாரங்களில் அது முன்பிருந்ததைக் காட்டிலும் பேராற்றல் வாய்ந்ததாக உள்ளதை மெய்ப்பிக்கவும் வேண்டுமோ? எனவே, பிளவுகளும் உட்கலகங்களும், துன்புறுத்தலும், இரத்தம் சிந்துதலும் நிறைந்த மற்றுமொரு நூற்றுண்டிற்குப் பிறகு, அரசத் திருச்சபையின் ஆதிக்கத்திற்கு ஆங்கிலேயர் அனைவரையும் கட்டாயமாகப் பணியுமாறு செய்த முயற்சி கைவிடப்படவேண்டிய அவலநிலையை அடைந்தது, அத்துடன் அது பென்றி (Penry) அல்லது பார்சன்சு (Parsons). வித்கிப்ட்டு அல்லது செசில் கனவிலும் கண்டிராத அளவிற்கு விரிந்த உரிமைகளை ஒன்றன்பின் ஒன்ருகப் பெற்றுச் சிறப்புறுமாறு செய்தது.

ஆனல் அரசியல் சமயத்துறைகளுக்கு வெளியே, எலிசபெத்து அரசியின் ஆட்சிக்கால இறுதிக்குள் அறிவாற்றல் உரிமையும், பாட்டியல் உரிமையும் முழுவகையில் விரிவடைந்திருப்பதைக் காணுகின்ருேம். மறுமலர்ச்சி இயக்கத்தின் உயிர் நாடியாக எதையும் ஆராய்ந்தறியும் பண்பும், கிரேக்க, ரோமானியரின் சிந்தனைகளிலிருந்து பண்டைக்கால மக்கள் பெற்றிருந்த தொன்மையான உரிமைகளைக் கண்டு அறியும் திறனும் மறுமலர்ச்சி இயக்கத்தின் உயிர் நாடியாக இருந்தன. அவை இத்தாலியில் ஸ்பானியர்களாலும் இயேசு சங்கத்தினரின் கொடுஞ்செயல்களாலும் விரைவாக அழிந்து கொண்டிருந்தமையால், அவற்றை இங்கிலாந்தில் கொண்டுவந்து புதிதாகப்

பயிரிடத் தொடங்கினர். ஆர்டன் காட்டில் கவிஞர்கள் அதை ஆங்கிலேய மரங்களைத் தழுவி வளருமாறு மரங்களில் சுற்றிப்படருமாறு போற்றிவளர்த்தனர். அதன் பயனாக அது இங்கிலாந்தில் புதுமலர்ச்சியுற்றது. அங்குக் கற்பனை உண்மை யிலேயே உரிமையுடையதாக இருந்தது—நம் நாட்களைக் காட்டிலும் மிகுந்த உரிமைகளையுடையதாக இருந்தது. நம் காலத்தில் கற்பனையின் மீது மிகப்பெரியதோர் அறிவுச்சுமை சுமத்தப்பட்டுள்ளது. மேலும் இயந்திர ஊழியின் கொடிய தன்மை நவிற்சி (Realism)யினால் சுற்றிவளைத்துக் கொள்ளப் பட்டுள்ளது அதனால் இக்காலத்திய கற்பனை அக்காலத்திய கற்பனையைக் காட்டிலும் உரிமைகளற்றதாகவே உள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும். இக்காலத்தில் ஷேக்ஸ்பியரும் அவருடைய நண்பர்களும் இடர்ப்பாடுமிக்க சமய உலகிற்கும் அரசியல் கருத்து மாறுபாடுகளுக்கும் இரையாகாது வெளியே நின்றுகொண்டிருந்தனர். அதனால், அவர்கள் தங்களுடைய பரந்த எல்லைக்குள், உரிமையுணர்வினை நன்கு அனுபவித்தனர். அவ்வுரிமை உணர்வு மீண்டும் பெறமுடியாத ஒன்றாகலாம்.

ஆனால் ஷேக்ஸ்பியர் அவருடைய காலத்தின் பெரும் சிறப்புவாய்ந்த மாண்பினைப் பின்னோக்கிக் காண்பவராக இருக் கலாம். ஆனால், அவர் வாழ்ந்த காலத்தில் அதனுடையபெரும் செல்வாக்கினைஅவர் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. எலிச பெத்தின் ஆட்சிக்கால இறுதிக்குள் ஆங்கிலேயரின் நூல் களிலெல்லாம் தலைசிறந்த நூலாக விவிலியம் விளங்கத் தொடங் கியது. ஆயினும், அவள் இறந்த சில ஆண்டுகளுக்குப் பிறகே இன்றுவரை பயன்படுத்தப்பட்டுவரும் அரசினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விவிலியநூலின் மொழிபெயர்ப்பு முதலாம் ஜேம்சின் பாதிரிமார்களால் வரையறுக்கப்பட்டது. கவிஞர் சிட்னி அல்லது ஸ்பென்சரின் கவிதைகளைப் படித்த ஒவ்வொரு ஆங்கிலேயனுக்கும், குளோப்பு நாடக அரங்கில் ஷேக்ஸ்பியர் நடித்த நாடகங்களைக் கண்ட ஒவ்வொரு ஆங்கிலேயனுக்கும், எதிராக இறைவன் திருவாய்மலர்ந்தருளிய சொற்கள் என்ற நம்பிக்கையோடு மிகக் கருத்துடன் விவிலியத்தைப் படித்தவர் களும், படிப்பதை அருகில் இருந்து கேட்டவர்களும் நூற்றுக் கணக்கானவர்களாக இருந்தனர். இத்திருமறை தொடர்ந்து வீடுகள்தோறும் படிக்கப்பட்டுவந்தமையின் விளைவாகப் பிற் பட்ட மூன்று நூற்றாண்டுக் காலத்திற்கு நமது தேசியப் பண் பிலும், கற்பனையிலும், அறிவாற்றலிலும் உண்டான பயன்கள் மிகப்பேரளவினதாகும். நம்முடைய வரலாற்றேடுகளில் காணப்படும் இலக்கிய இயக்கங்கள் அல்லது செயிண்ட்

அகஸ்டின் வருகைக்குப்பிறகு சிறப்புற்றுவிளங்கிய சமய இயக்கங்கள் எவற்றாலும் விளையாத பெரும் பயன், இதனால் உண்டாயிற்று எனலாம். இதுவரையில் வேறொன்றும் படிப்பதற்கே இல்லாதிருந்த மக்களுக்கு வரலாறு, கவிதையெனும் புதிய உலகங்கள் விவிலியத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் திறந்துவிடப்பட்டன. சமூகத்தின் பல வகுப்பினைச் சார்ந்த மக்கள் அனைவருக்கும், படிக்கும் பழக்கத்தையும் அது உண்மையிலேயே உண்டாக்கியது. மேலும் அப்பழக்கம் தகரவேலை செய்துவந்த ஒருவரை ஆங்கிலேய மொழியின் சிறப்பு மிக்க ஆசிரியர்களுள் ஒருவராக மாற்றியமை இங்குக் கருதத்தக்கதாகும். நடு நிலக்கடல் பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களின் எண்ணங்களும்,செயல்களும் விவிலியத்தின் வழியாக ஆங்கிலத்தின் மூலம் மொழிபெயர்க்கப்பட்டது. அக்காலத்தில்தான் நம்முடையமொழி குறுகிய நிறைவினை அடைந்தது. இக்காலத்திய செய்தித்தாள்கள் நம்முடைய அன்றாட வாழ்வில் எண்ணங்களுக்கும் பேச்சுகளுக்கும் வண்ணம்பூசுவதைப் போன்று அன்றைய பிரிட்டானிய மக்களின் எண்ணங்களையும் பேச்சுகளையும் அது உருவாக்கியது எனலாம். ஆங்கிலேயரின் வரலாற்றில், இலக்கிய மறுமலர்ச்சி இயக்கத்தைக் காட்டிலும் மிகப்பரந்ததும், ஆற்றல்மிக்கதுமான எபிரேய மொழி மறுமலர்ச்சியை விவிலிய நூல் தோற்றுவித்ததாகக் கூறலாம். சீர்திருத்தி அமைக்கப்பட்ட இலக்கணப் பள்ளிகளை (Grammar Schools), சிறப்பாகக் கல்வி கற்றவர்களுக்கு நல்லதொரு மனப்பாங்கிற்குரிய பின்னணியை, அமைத்துத்தந்ததன் பயனாகத் தோன்றியதே இலக்கிய மறுமலர்ச்சி இயக்கமாகும். பிரிட்டானிய மக்களின் பெருங்கடற் பயணங்கள், வாழ்க்கையைப்பற்றிய பயனுடைய நோக்கத்தினை தூண்டியதையும், விரிவுபடுத்தியதையும் போன்று, விவிலியமும், பழம்பெரும் இலக்கியங்களும், ஒருங்குசேர்ந்து பிரிட்டானியரின் பண்பாட்டைக் கிளர்ச்சியுறச்செய்து விரிவுபடுத்தியது.

ஆர்மடாவிற்கும், உள்நாட்டுப் போருக்கும் இடைப்பட்ட மாண்புமிக்க அக்காலத்தின் மக்களுக்குரிய பொது விருப்பமான ஆர்வத்தின், பண்புநயத்தின் மற்றோர் ஊற்றாக இசையும், தன்னுணர்ச்சிப் பாடல்களும் (Lyricalpoetry) விளங்கின. அவை இரண்டும் ஒன்றாகச் செழித்தோங்கின. ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் காணப்படும் பாடல்களைப் போன்ற மிகச் சிறந்த பாடல்களில் பல இசையுடன் பாடுவதற்காகவே இயற்றப்பட்டன. எலிசபெத்து காலத்திய இங்கிலாந்தை இசைக்கலையில் ஈடு இணையற்ற நாடாக ஐரோப்பா ஏற்றுப் போற்றியது. அக்

காலத்து இங்கிலாந்தில் பயணம் செய்த ஜெர்மானியப் பயணிகள், 'வயோலா, பண்டோராக்களின் இனிய இசையைக் கேட்டோம். இங்கிலாந்து முழுவதிலும் சிறு கிராமங்களிலும் கூட இசைவாணர்கள் சிறு தொகையினை யார் கொடுத்தாலும், அதை வாங்கிக் கொண்டு பாடுவதற்குக் காத்திருப்பது வழக்கமாக இருந்தது' என்று வியப்புடன் குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும். டியூடர் அரசமரபினரின் ஆட்சிக்காலம் முழுவதிலும், ரோமானியப் பொதுவழிபாட்டிற்கும், ஆங்கிலிகத் தொழுகைக்கும் வேறுபாடு கருதாது திருச்சபைக்குரிய இனிய இசைப் பாடல்கள் இயற்றப்பட்டன. ஆனால், மறுமலர்ச்சி இயக்ககாலத்தில்,புதியதொரு உணர்ச்சியுடன், சமயச் சார்பற்ற இசை போற்றி வளர்க்கப் பட்டதைக் காணுகின்றோம். அதன் விளைவாக எலிசபெத்து அரசியின் ஆட்சிக்காலத்தில் இசைக் கலை வளர்ச்சியின் கொடுமுடியை அடைந்து சிறப்புற்று விளங்கியது. பையர்ட்டு (Byrd) என்பவரின் (1538—1623) மதிநுட்பம் தெய்விக இசையையும், பொது இசையையும் வேறுபாடின்றிப் போற்றி வளர்த்ததைக் காணுகின்றோம். காதல் செய்யுளுக்குப் பெயர் போன சிறப்பு மிக்க அக்காலத்தில், திறமைமிக்க பாவாணர்களின் குழுக்கள் பல செழித்தோங்கின. டியூடர்கள், ஸ்டூவர்ட்டு மன்னர்கள் ஆட்சிக் காலங்களில் இசையரங்குகளாக விளங்கியவை வீடுகளிலிருந்து வந்த அடுப்படிகளே அன்றி இசையரங்கு மன்றங்கள் அல்ல என்பது இங்குக் கருதத்தக்கதாகும். செய்தித் தாள்கள் இல்லாத அக்காலத்தில், புத்தகங்கள் மிகச் சிலவாகவும் பெரும் பளுவாகவும் இருந்த அக்காலத்தில், புதிதாக எழுச்சியுற்றுக் கொண்டிருந்த நடுத்தர வகுப்பினர் தங்கள் இல்லங்களில் வாய்ப்பாட்டு இசையையும் கருவி இசையையும் கருத்தூன்றிக் கற்று வந்தனர். இதற்குத் தூய்மைவாதியரின் குடும்பங்கள் விதிவிலக்கல்ல. இசைப் பாடல்கள் அச்சு இயந்திரத்தின் உதவியால் வெளியிடப்பட்டமை, அப்பழக்கத்தை நாடெங்கும் பரப்புவதற்குப் பேருதவியாக இருந்தது. எலிசபெத்து அரசியே தம்முடைய குடிமக்களுக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் அவளுடைய கன்னிப் பருவத்திற்குரிய பண்புகளினால் தமது திறமையைப் பயன்படுத்தி இசைக்கலையில் தேர்ச்சியுற்று விளங்கினாள்.

இசையும், பாட்டும் மக்கள் அனைவருடைய படைப்பாகவும், மரபுரிமையாகவும் இருந்தன. தொழில் வினைஞர்கள் தங்கள் தொழில்களைச் செய்து கொண்டே பாடி மகிழ்ந்தனர். ஊர் ஊராகச் சென்று விலைகூறி விற்று வாணிகம் செய்த வாணிகன்

ஒற்றையடிப்பாதை வழியில் செல்லும் பொழுது எல்லாம் பாடிக்கொண்டே சென்றான். ஆயர் மகளிர் புதர்ச்செடி வேலிகளுக்கு அப்பால் இருந்தே 'களிமிக்க பாடல்களைக்' கேட்டு மகிழ்ந்தனர். அல்லது நாட்டின் வடக்குப் பகுதியில், எல்லைப் புறப் போர்களையும், கொள்ளைகளையும் பற்றிய அவலச்சுவைமிக்க கதைப் பாடல்களை (ballads) உணர்ச்சி மேலீட்டால் அடிக் குரலில் பாடப்படுவதை ஆயர்மகளிர் கேட்டு இன்புற்றனர். அக்காலத்தில் நாடகம் என்பது கவிதை நாடகமாகவே இருந்தது. அக்காலத்தில் கவிதை நாடகம் புகழ்பெற்று விளங்கியதற்குக் காரணம், அது மக்களின் கற்பனைத் திறனைத் தூண்டி விட்டமையேயாகும். கவிதை இன்னும் அறிவாற்றல் மிக்க மக்கள் குழுவினருக்கே உரிய தனியுடைமையாக மாறவில்லை. அதைப் போன்றே இசையும் அயல்நாட்டுக் கவிவாணர்களால் இயற்றப்படும் பாடல்களோடு முக்கியமாகக்கூட்டுச் சேரவில்லை. ஷேக்ஸ்பியரும், மில்ட்டனும் தோன்றி ஆங்கில இலக்கியத்தைப் பொன்றுப் புகழ்பெறச் செய்தமை எதிர்பாராதவகையில் தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சி அன்று. அவர்கள் தோன்றிய காலத்திய ஆங்கிலேய சமுதாயம் பல துறைகளில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. நாட்டு மக்கள் அனைவரும் இடைவிடாது விளங்கும் இயற்கையின் முன்னிலையில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் உள்ளத்தினால் நுகரக்கூடிய மிகச் சிறந்த இன்பத்தை நுகர்ந்து மகிழ்வதற்குரிய வகையில், தங்கள் கண்களாலும், காதுகளாலும் பயிற்சி பெற்றிருந்தனர். இன்றைய உலகில் பத்திரிகைத் தொழிலினர் மெல்ல மெல்ல எழுத்துத் துறையில் வளர்ச்சி அடைந்த நாவலாசிரியராக (Novelist) மாறுவதைப் போன்று, அன்றைய இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியரின் புலமையின் பரிசு, சமுதாயத்தின் பொது வளர்ச்சி நிலையின் ஒரு பகுதியாகவே முழு வளர்ச்சி அடைந்தது. எலிசபெத்துப் பேரரசி இறந்ததற்குப் பிறகு ஐந்தாண்டுகள் கழித்து ஜான் மில்ட்டன் பிறந்தார். அவருடைய வாழ்வில், அக்காலத்திய ஆங்கிலேயப் பண்பாட்டின் மூன்று முக்கிய கூறுகளான இசை, பழம் பெரும் இலக்கியங்களான கிரேக்க, ரோமானிய மொழி இலக்கியங்கள், விவிலியம் ஆகிய மூன்றும் ஒன்றுகச் சேர்ந்து 'இங்கிலாந்தின் இறையருள் பெற்ற இசைக் கருவியின் குரலுக்குத் தெய்விக ஊக்கம் அளித்தது.

எலிசபெத்தின் காலம் முதல் மூன்றும் ஜார்ஜ் அரசரின் ஆட்சிக்காலத்தில் தொழில் துறையில் உண்டான மாற்றங்கள் வரையில், சமுதாயத்தின் பொருளாதார உடன்பாடு சில வகை

களில் நற்பேறு உடையதாக இருந்தது. இக்காலம் வரையில் ஆங்கிலேய மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய நாட்டுப்புற மக்களாகவே இருந்து வந்தனர். ஆனல், அவர்கள் இதற்கு முன்பே, இடைக்கால உழவர்களுக்குரிய கொடிய வறுமையின் பிடியிலிருந்தும், அறியாமையின் பிடியிலிருந்தும் ஓரளவிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

நாட்டிலே உள்ள பட்டணங்களும், கிராமங்களும் ஒரே சமயத்தில் இக்காலத்தில் வேளாண்மைத் தொழிலில் ஈடு பட்டும், பெருந்தொழில்களில் ஈடுபட்டும் இருந்ததைக் காணு கின்றோம். அப்பட்டணங்களிலும், ஊர்களிலும் வாழ்ந்த மக்க ளுள் குறிப்பிடத்தக்க அளவினர் நன்கு பயிற்சி பெற்ற தொழில் விஞைர்களாக இருந்தனர். பண்டைக்கால வாழ்வில் உட்குடி மைத் தொழில் எத்துணைச் சிறப்புடையதாக இருந்ததோ, அதைப் போன்று இப்புதிய தேசிய வாழ்வின் திறவுகோலாகத் தொழில் பயிற்சி இருந்து வந்தது. தொழில் பயிற்சி முறை நெடுங்காலம் வட்டாரப் பழக்க வழக்கங்களுக்கும், நகராட்சியின் கட்டுத் திட்டங்களுக்கும் கீழ்ப்பட்டிருக்கவில்லே. ஆனல், எலிச பெத்து 1563-ல் இயற்றிய புதியது புனைபவர்களின் சட்டம் (Statute of Artificers) பட்டணங்களிலும், நாட்டுப்புறங்களிலும் ஒரே தன்மையான தேசிய வடிவமுறையினை ஒழுங்கு படுத்தியது. ஏழாண்டுகள் தொழில் பயிற்சி முறையில் பயிலாதவர்கள் யாரும் தலைமைத் தொழில் விஞைஞகவோ, தொழிலாளி யாகவோ பணிபுரிய முடியாது. இவ்வழியில் நாட்டின் இளைஞர் கள் தொழில் நுட்பக் கல்வி அறிவினைப் பெற்று வந்தனர். இத்துடன் அவர்கள் சமூக ஒழுங்கு முறையையும் கற்றனர். இவ்வாறு மிகவிரிந்த முறையாகிய பள்ளிப் படிப்பினை வேண் டாதவர்களின் இழப்பினை ஈடுசெய்வதற்கு இம்முறை சிறிதள விற்குப் பயன்பட்டது. இளைஞர்கள் தொழில்துறை ஆசிரியர் களின் கண்காணிப்பிற்குட்பட்டவர்களாக இருந்து வந்தனர். குறிப்பிடத்தக்க சில இளைஞர்கள் இருபத்து நான்காம் வயது வரையில் தலைமைத் தொழில்விஞைர்களின் கண்காணிப்பிற்கு உட்பட்டவர்களாக இருந்து வந்தனர்.

தலைமைத் தொழில் விஞைரின் வீட்டிலேயே தொழில் செய்யப்பட்டு வந்தது. அதே தொழிலகத்தில் தொழிலைக் கற்றுக் கொண்டே கூலிக்கு உழைப்பவர்களோடும், தம்மிடம் தொழில் பயிலும் மாணவர்களோடும் ஒன்ருகச் சேர்ந்து தொழில் செய்வதும், உணவினை உண்பதும் தொழில் முதல்

வரின் வழக்கமாக இருந்தது. பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலகங்களின் மகிழ்ச்சி தொழிற்சாலைச் சட்டங்களையோ, தொழிற் சங்கங்களின் விதிகளையோ அடிப்படையாகக் கொண்டு அமையவில்லை. அதற்குமாறாக அத்தொழிலகங்களில் உடன் உறைபவரின் மனநிலையையும், பண்புகளையும் பொறுத்தே மகிழ்ச்சி நிலவியது. அங்கு இக்காலத்தில் பொறுத்துக் கொள்ள முடியாத முறையில், அடிக்கடி கடுமையாகத் தொழிலாளிகள் நடத்தப்பட்டனர். ஏனென்றால், மக்களை மக்களாகப் பரிவுடன் நடத்தவேண்டும் என்னும் உணர்வும், முறையாக அமைக்கப்பட்ட மனிதஇன அன்புப்பணியும் (humanitarianism) தொழில் புரட்சிக்காலத்திற்கு முன்பு கடைப்பிடிக்கப்படவில்லை. பழைய முறையில் தொழில்புரிவோர் எங்கே படுத்து உறங்கினார்கள் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். அவர்கள் பெரும்பாலும் உத்திரங்களின் கீழ் அல்லது நிலையறைப் பெட்டிகளினுள்ளே உறங்கியிருக்க வேண்டும். தலைமைத் தொழில்வினைஞர், தங்களிடம் தொழில் பயிலுவோரை அடித்து வேலை வாங்கும் உரிமையுடையவர்களாக இருந்தனர். அதைப் போலவே தொழில் கற்றுக் கொண்டே கூலிக்கு வேலை செய்வோர் மீது அடிக்கடி தலைமைத் தொழில் வினைஞரின் சினமிக்க கைகள் சூடுகொடுத்தன. ஆனால், அங்குக் கண்டிப்பும் கடுமையைக் காட்டிலும், அதிகமாக அன்பு காட்டப்பட்டிருக்கலாம். ஏனென்றால் அவர்களுக்கு இடையே இருந்து வந்த தொடர்பு தனிப்பட்ட உரிமையுடையதாகவே இருந்தது. மேலும், தங்கள் தொழிலகத்திலே அமைதியின்மையைச் சிலர் கூட விரும்ப மாட்டார்கள். தலைமைத் தொழில்வினைஞருக்கும் தொழிலாளிக்கும் இடையே காணப்பட்ட வேற்றுமை பதவிநிலை வேற்றுமையே ஒழிய, வகுப்புவேற்றுமை அன்று. லண்டன் மாநகரில் தொழில் கற்ற பயிற்சியாளர்கள், ஊர்ப்பெரிய தனக்காரர்களின் (Squires) இளைய புதல்வர்களாகவே இருந்து வந்தனர் என்பதும், அவர்கள் தங்கள் தலைமைத் தொழில்வினைஞரைவிடச் சிறந்த பண்பாளர் என்று பெருமையாகப் பேசிக்கொண்டனர் என்பதும் பழைய நாடகங்கள் நமக்கு உண்மையிலேயே நினைவுபடுத்துகின்றன.[1]

[1] காரே (Carey) என்பவர் எழுதியுள்ள 'நம்முடைய தெருச்சந்தில் திடீர்த்தாக்குதல்' (Sally in our Alley) என்னும் பாட்டில் அரசி ஆன் காலத்திலும், எலிசபெத்து அரசி காலத்திலும் ஒரே வகையாக இருந்து வந்த தொழில் பயில்வோருடைய வாழ்க்கையின் சில உண்மைகளைச் சித்திரிப்பதைக் காணலாம்:

தேர்ச்சி பெற்ற தொழில் வினைஞரின் தொழில்கள் அனைத்தும் அவர்களுக்கு மனமகிழ்ச்சியைத் தருவதாக இருந்தன. தற்காலத்திய பெருந்தொழிற் சாலைகளில் சிறப்பாகத் தனிப் பயிற்சி பெறப்பட்ட செயல் கூறுகளைப் போன்றில்லாமல், மனிதனிடத்தில் மறைந்திருக்கிற கலைஞனை வெளியில் தோன்றுமாறு அவர்கள் செய்தனர். ஆனல், பெருந்தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும் முறை, இயந்திரங்களின் இயக்கமுறையைக் கூர்ந்து கண்காணிப்பதோடு அமைந்து விடுகிறது. இக்காரணத்தினல்தான் அக்காலத்திய வீடுகளிலும் வயல்களிலும், போர்க்களங்களிலும் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் அனைத்திலும், பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட பொருள்களான கப்பல், வண்டி, வீடு முதலியவற்றிலும் அழகும், தனிப்பட்ட தொழில் வினைஞரின் நேர்த்திமிக்க கைவண்ணமும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணுகின்றோம். இத்தகைய அழகும், நேர்த்தியும், இக்காலத்தில் இயந்திரங்களில் செய்யப்படுகின்ற பொருள்களில் காண்பது அரிதாகும். இக்காலத்தைக் காட்டிலும் அக்காலத்தில் கைத்தொழில் சிறப்புடையதாகவும், புகழ்மிக்கதாகவும் இருந்தது. அது மனிதனுடைய மிகச் சிறந்த திறமைக் கூறினைக் கற்பிப்பதாக அமைந்திருந்தமையே, அதற்குரிய ஒருகாரணமாகும்.

ஆனல், இயந்திர காலத்திற்கு முற்பட்ட மக்கள் வாழ்க்கைக்கு மற்ருெரு பக்கம் இருந்தமை இங்கு ஆராயத்தக்கதாகும். கடந்த காலத்தைப் பகுத்தறிவின்றிப் புகழ்ந்து போற்றுகின்றவர்கள் எல்லாரும், இத்தகைய வாழ்க்கையின் மற்ருெரு பக்கத்தை

'அவள் என்னருகில் இருந்தபொழுது எல்லாம் நான் என்னுடைய வேலையைச் செய்வதை விட்டு எழுவேன்; நான் அவளை உண்மையாகவே காதலிக்கின்றேன். அந்நிலையில் என்னுடைய தலைமைத் தொழில்வினைஞர் துருக்கியரைப் போன்று உள்ளே வருகிருர். என்னை மிகக் கடுமையாகத் திடீரெனத் தாக்குகிருர்.

என்னுடைய தலைவர் என்னைத் திருச்சபைக்குத் தூக்கிச் செல்லுகிருர். அங்கு விவிலியத்தில் படிக்கப் போகும் பகுதியின் பெயர் கூறப்பட்டவுடன், நான் அவரைத் திடீரென்று தனியே விட்டு விட்டு வந்து விடுகின்றேன் என்று அவர் என்னை அடிக்கடி குறை கூறுகிருர்.

என்னுடைய தலைமைத் தொழில் வினைஞரும், அயலார்களும் என்னையும் 'சாலியையும்' கொண்டு விளையாடுகின்றனர். நான் அவளுக்காகத் தான் இத்துன்பத்தை எல்லாம் பொறுத்துக் கொண்டு இருக்கின்றேன். இல்லையென்ருல் நான் இதைவிடச் சிறந்த நிலையில் ஓர் அடிமையாக இருந்து, குறுங்கப்பல்களைத் துடுப்புகளைக்கொண்டு ஓட்டிக் கொண்டிருப்பேன்.

எப்பொழுது என்னுடைய ஏழாண்டுக்காலப் பயிற்சி முடிவடைகிறதோ, அப்பொழுது நான் சாலியை மணம் புரிந்து கொள்ளுவேன். ஆம்! நான் அப்பொழுது நல்லமுறையில் திருமணம் செய்து கொள்ளுவதோடு, நல்ல படுக்கையில் படுத்துறங்குவேன்; ஆனல் நம்முடைய தெருச்சந்தில் தூங்கமாட்டேன்.'

மறந்தே விடுகின்றனர். தேர்ச்சிபெற்ற உழைப்புடன், மிகக் கடினமான உடலுழைப்பாகிய பெரும் சுமை அக்காலத்திய மக்களிடையே இருந்துவந்தது. ஆனால், அப்பெரும்சுமையைத் தற்கால இயந்திரக்கருவிகள் மனிதனிடமிருந்து விடுவித்துவிட்டன. மரம் அறுக்கும் குழிகளிலும், உழவுத் தொழில்களிலும், கல் வெட்டி எடுக்கும் இடங்களிலும், மிகப்பாரமான பொருள்களை இடமாற்றி அசைத்து வைப்பதிலும், மனிதன் இயற்கையை வெல்லுவதற்காகத் தன்னுடைய பேராற்றலையும் பேருழைப்பையையும் காணிக்கையாக இன்னும் கொடுத்து வந்தான். அன்றாட வாழ்வில் உழவர்கள் பாதுகாப்பின்றிப் பலவகையான கொடுமைகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகி அல்லற்பட்டு வாழவேண்டியிருந்த அவர்களுடைய நிலை அச்சம்தருவதாகும். இடர்ப்பாடுகளும் இன்னல்களும் மிக்க தொழில்களின் வீதம் மிகப்பெரிதாக இருந்தது. குடிசைத் தொழில்களில் அடிக்கடி பெற்றோர்கள் தங்களுடைய சிறு குழந்தைகளை நெடுநேரம் வேலைவாங்கிவந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டில், தொழில் கற்போருக்கும் சிறுகுழந்தைகளுக்கும் தலைமைத் தொழில் வினைஞர்கள் பேரளவில் இழைத்துவந்த இன்னல்களினாலும், அவர்களைக் கொடுமையுடன் நடத்திவந்தமையாலும் பொது மக்களுடைய மனச்சான்று அமைதியற்றுப் போயிற்று. இத்தகையகொடுஞ் செயல்களால் குழந்தைகளும் வேலைகற்போரும் இறந்துபோனதைப் பற்றிய வழக்குகள் ஏராளமாகப் பெருகியமையால் மக்கள் அக்கொடுமையைத் தவிர்க்க முயன்றனர். முற்காலத் தலைமுறையினர் உண்மையில் தொழிலாளர்களைப் பரிவோடு நடத்தும் பண்பற்றவர்களாகவே இருந்தனர்.

ஆனால், எலிசபெத்து அரசியின் காலத்திய குழந்தைகள் தொழிலகங்களில் வேலைசெய்யுமாறு விடப்படாது இருந்ததால், வயல்களிலும் வனங்களிலும் விளையாடும் உரிமையைப் பெற்றிருந்தனர். நம் காலத்திய நாகரிகத்தின் பல்வேறு சூழ்நிலைகளின் காரணத்தால் தற்காலக் குழந்தைகளுக்கு அவ்வுரிமை அளிக்க மறுக்கப்படுகிறது. அக்காலத்திலேயே பிள்ளைகள் 'விருப்பமின்றிப் பள்ளிக்கூடத்திற்கு ஊர்ந்து சென்றனர்' என்பதில் வியப்பில்லை. ஏனென்றால் பள்ளிக்கூடத்திற்கு வெளியே முழுஉரிமையும், மகிழ்ச்சியும் அளிக்கத்தக்க உலகம் இருந்துவந்ததைப் பிள்ளைகள் நன்கு அறிந்திருந்தார்கள். அறிவொளிமிக்க சில ஆசிரியர்களும் பெற்றோர்களும் தவிர, மற்றவர்கள் எல்லோரும் பள்ளியில் இரக்கமற்ற முறையில்

பிள்ளைகளை அடிப்பதுதான் கல்விகற்பிப்பதின் மிக இன்றி யமையாத பகுதியாக இன்றும் கருதப்பட்டு வந்தது.

இடைக்கால மேனர்பண்ணைகளில் கிடைத்ததைவிட, எலிச பெத்தின் காலத்திய கிராமங்களில் வாழ்ந்தமக்களுக்கு உடையும் உணவும், வசதியும் அதிகமாகக் கிடைத்தன. எனினும், நம் காலத்தைக் காட்டிலும் அவை அடிக்கடி போதிய அளவிற்குக் கிடைக்காத காரணத்தினால் பற்றாக்குறை மிகுதியாக இருந்தே வந்தது. அறுவடை நன்றாக இல்லையென்றால், உணவுப் பொருளின் பற்றாக்குறை மேலும் மிகுதிப்படும் நிலை இருந்து வந்தது. உடைகளைத் தோய்ப்பதும், மனிதர்கள் குளிப்பதும் பெரிதும் புறக்கணிக்கப்பட்டன. சிறப்பாகக் குளிர்காலத்தில் இது பெருவழக்காக இருந்தது. இன்றியமையாத தேவைகள் என்று நாம் கருதுகின்ற வசதிகள் அக்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. உயர்வகுப்புக் குடும்பத்தைச் சார்ந்த மக்களிடை யிலேயே இறப்பு வீதம் தாங்கமுடியாததாக இருந்தது. ஏழை மக்கள் மிகப்பலராக உள்ள தங்களுடைய கால்வழியினருள் மிகச் சிலரே இறவாமல் வாழ்ந்தால்போதும் என்று எதிர்பார்த்தனர். மருத்துவமும் மருந்துகளும் அவற்றின் குழவிப்பருவத்தில் இருந்தன. வயதுமுதிர்ந்தோர், நோயாளிகள், கடன்காரர்கள், சட்டத்திற்கு முன்பு குற்றவாளிகளாகச் சிக்கிக் கொண்டவர்கள் எல்லோரும் உயிர்த்தியாகம் செய்யவேண்டிய துன்பத்திற்கு ஆளானார்கள். இது மனிதனின் தவிர்க்க முடியாத தலைவிதி யாகவும், நற்பேறாகவும் கருதப்பட்டது. அக்காலத்திய வாழ்க்கை அழகு நிறைந்ததாக இருந்தது. ஆனால், இன்றைய நிலையைவிட அது உறுதியற்றதாகவும், வசதிகள் குறைந்ததா கவும் இருந்தது. எலிசபெத்து அரசியின் காலத்தில் இங்கிலாந் தில் உயிருடன் வாழ்ந்த மக்களின் தொகை இன்றைய இங்கி லாந்தின் மக்கள் தொகையில் ஏழில் ஒரு பங்கேயாகும்.

இன்று நாம் பொறுத்துக் கொள்ளமுடியாதவை என்று கருதுவன எல்லாம், அக்காலத்தில் கொடுமைகளாகக் கருதப் படவில்லை. ஏனென்றால், அதற்கும் முற்பட்ட காலங்களில் இதைவிட மிகவும் கேடாக மக்கள் நிலை இருந்துவந்தமையால் இதைப் பெருங்கொடுமையாக அவர்கள் கருதவில்லை. எலிச பெத்து அரசியின் காலத்திய எழுத்தாளர்கள், சன்னல்களில் விலங்குகளின் கொம்புகளைப் பயன்படுத்தி வந்ததற்குப் பதி லாகக் கண்ணாடிகளைப் பயன்படுத்தத் தொடங்கியதையும், ஏழைமக்களின் குடிசைகளில் புகைபோக்கிகள் அமைக்கப்பட்டு

இருந்ததையும், பொதுமக்களுள் சிலராகிலும் வைக்கோல் பாய்களுக்குப்பதிலாகக் கால்நடைகளின் தோல்களினுலாய பாய்களைப் பயன்படுத்தியதையும் தம் நூற்களில் குறித்துப் போற்றியுள்ளனர்.

இங்கிலாந்தில் தலைசிறந்த வகுப்பினராக நிலக்கிழார்கள் அல்லது ஊர்ப்பெரிய தனக்காரர்கள் விளங்கினர். அவர்கள் நிலமானியப் படைமுறை வகுப்பையோ, படையியல் மரபைச் சார்ந்த வகுப்பையோ சார்ந்தவர்களாக இக்காலத்தில் இல்லை. எனவே 1642 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போர் தொடங்கிய பொழுது, அவர்களுக்கு முதலிலிருந்து படைத்துறைப் பயிற்சி தரவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. புதிய இங்கிலாந்தில் வாழ்ந்த 'பிரபுக்க'ளுக்கும், 'எளிய' மக்களுக்கும் இடையே முக்கியமாகக் குறிப்பிடத்தக்க தனிப்பண்புகள் இருந்துவந்தன. பிரபுக்கள் நிலக்கிழார்களாக இருந்தனர். அவர்களுக்கென்று தனிப்பட்ட குடும்பச் சின்னங்கள் இருந்தன. மேலும் பிரபுக்கள் விரும்பினுல், கோமகன் (Duke)முதலாக உள்ள மற்றப் பிரபுக்களை அறைகூவிப் போருக்கு அழைத்து, கொடுவாளினைக் கொண்டு ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிடுவதற்குரிய உரிமையுடையவர்களாக இருந்தனர். ஆனுல், உழவர்களும், வாணிகர்களும் திருமணத் தொடர்பு கொள்ளுவதாலும், புதிதாகத் தாங்கள் நிலங்களை விலைக்கு வாங்கி நிலக்கிழார்களாக மாறுவதாலும் மேற்கண்ட பிரபுக்கள் வகுப்பில் புதிதாக நுழைந்து கொண்டிருந்தனர். மேனர் பண்ணைகளுக்குரிய பிரபுக்களின் இளைய புதல்வர்கள், பொதுவாகப் பண்ணைகளைவிட்டு நீங்கி, வாணிகம், உற்பத்தி செய்தல், கல்வி, திருச்சபை அல்லது அயல்நாடுகளில் படைத்துறையில் பணிபுரிதல் போன்ற தொழில்களில் ஈடுபடலாயினர். சிற்சில சமயங்களில் தாங்கள் பிரபுக்களின் குடியைச் சார்ந்தவர்கள் என்னும் உரிமை கொண்டாடிக் கொண்டு மேற்கண்ட பணிகளில் ஈடுபட்டனர். வேறு சில சமயங்களில், தாங்கள் பிரபுக்களின் குடியைச் சேர்ந்தவர்கள் என்பதைச் சூழ்ச்சித்திறனுடன் வெளியில் காட்டிக் கொள்ளாது பணிபுரிந்தனர்.

இந்தச் சிறப்புமிக்க உயர்குடி வகுப்பினருக்கு இடையே செல்வத்தாலும், பதவியாலும் எண்ணற்ற படிநிலைகள் இருந்து வந்தன. இவ்வகுப்பிற்குரிய படிநிலைகளின் தலைமையிடத்தில் பெரும்பிரபுக்கள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். அவர்கள்

பிரபுக்கள் சபையின் (House of Lords) உறுப்பினர்களாக இருந்தனர். அவர்கள் பிளாண்ட்டாஜெனட்டு அரசமரபினர் காலத்தில் கட்டப்பட்ட காவல் கற்கோட்டைகளில், அல்லது டியூடர் அரசமரபினர் காலத்தில் கட்டப்பட்ட செங்கற்கோட்டை மாளிகைகளில் அரசவாழ்வினை நடத்தி வந்தனர். எனவே, பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களாகிய பணிமக்கள் இங்குச் சிறந்த முறையில் பயிற்சி பெறுவதன் மூலம், பிற் காலத்தில் அரசரவையில் தேர்ச்சிமிக்க அதிகாரிகளாக விளக்க முற்றனர். பிரபுக்களின் அரண்மனையின் தலைவாயிலில் நாள் தோறும் பெருந்திரளாகக் கூடிய ஏழை எளியவர்களுக்கு இறைச்சித் துண்டுகள் அளிக்கப்பட்டன. பிரபுக்களின் மண்ட பங்களில் அடிக்கடி பெரும் விருந்துகள் நடத்தப்பட்டன. அச் சமயங்களில் பிரபுக்கள் தங்களுடைய துணைவியரோடும், சிறப்பு மிக்க விருந்தினர்களோடும் மேடையில் அமர்ந்து, விருந்துண் பார். மேடையினை வெள்ளியினால் செய்யப்பட்ட மேஜைகளும் வெனிஸ் நகரத்தின் கண்ணாடிப் பாத்திரங்களும் அணி செய் தன. மேடைக்குக் கீழே நூற்றுக்கணக்கான, பிரபுக்களைச் சார்ந்து வாழும், அரைவயிற்றுக்கஞ்சிக்கு அன்றாடம் அல்லலுறு வோரும், படை வீரர்களும் அமர்ந்து விருந்துண்டனர். அந் நிலையில் விருந்து படைக்கும் பெருந்திரளான பணிமக்களும், வேட்டைக்குரிய காட்டைப் பாதுகாப்பவர்களும் சமையலறை யின் பரந்த பகுதிகளில் நெருங்கி அளவுக்கு மீறிக் குடித்து (Pewter) மகிழ்ந்தனர். அப்பிரபுக்களின் படிநிலையின் இறுதிப் பகுதியில் ஊர்ப் பெரிய தனக்காரர்கள் (Squires) இடம் பெற் றிருந்தனர். அவர்கள் தங்கள் பெற்றோர் வைத்துச் சென்ற சில ஏக்கர் நிலங்களைத் தாங்களே பயிரிட்டு வந்தனர். தங்கள் அயலவர்களாகிய உழவர்களோடு குதிரை மீது அமர்ந்து பக்கத்து ஊரிலுள்ள சந்தைக் கடைகளுக்குச் சென்று வருவர். அவர்கள் தங்கள் உற்றார் உறவினர்களுடனும் அக்கம் பக்கத் தினருடனும் கிளைமொழியில் (Dialect) அல்லது வட்டார வழக்கு மொழியில் பேசி வந்தனர். அப்பெரிய தனக்காரர்கள், கடுமை யாக உழைக்கும் தம் மனைவியின் உதவியைக் கொண்டும், ஊரிலுள்ள பள்ளி ஆசிரியரின் உதவியைக் கொண்டும், தங்களு டைய முரட்டுப் பண்பு வாய்ந்த, கந்தலாடை உடுத்திய பன்னி ரண்டு பையன்களையும், பெண்களையும் வளர்த்து வந்தனர். அப் பெரிய தனக்காரர்களின் சிறு மன்றத்தைச் சுற்றிலும் ஒரு பழத் தோட்டம் இருந்தது. அது பண்ணைக்குரிய சிறு இடமாக இருந்தது. அடிக்கடி அது பின்வருபவரால் களஞ்சியமாக மாற்றப்பட்டும் வந்தது. அத்தகைய தோட்டத்தில் அவர்களு

டைய பையன்களும் பெண்களும் சேர்ந்து தலைகால் தெரியாமல் விளையாடுவது வழக்கமாகும்.

இவ்விரு எல்லைகளுக்கு இடையே, டியூடர், ஸ்டுவர்ட்டு அரசமரபினர் காலத்திய மேனர் பண்ணைகள் பல திறப்பட்டனவாகத் தோன்றின. தங்கள் பகுதியில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டு கல்லிலும், புதிதாக வனையப்பட்ட செங்கற்களைக் கொண்டும், பாதி மரத்தாலும் பாதி கல்லாலும் கட்டப்பட்ட பழைய முறையிலும் மேனர் பண்ணைகள் புதிதாகப் பல தோன்றின. இந்த மேனர் பண்ணைகளும், அவற்றில் வாழ்ந்தோரும், கிராமப் பெருந்தொழிற்சாலைகளும் சேர்ந்து புதிய உலகின் முக்கிய வாழ்க்கையோடும், எண்ணங்களோடும் நாட்டுப்புற மக்களைத் தொடர்பு கொள்ளச் செய்தனர். ஷேக்ஸ்பியர் காலத்திய இங்கிலாந்து பிற்போக்குடையதாகவோ, காட்டுமிராண்டிப் பண்புடையதாகவோ இல்லாமல், நாட்டுப்புறப் பண்புடையதாகவே இருந்துவந்தது. லண்டன் மாநகரம் எவ்வெவற்றைப் புதிதாகத் தோற்றுவித்ததோ, அவை அனைத்தையும் காலப்போக்கில், இங்கிலாந்தின் நாட்டுப்புறப்பகுதிகள் ஈர்த்துத் தமதாக்கிக் கொண்டன.

டியூடர்களின் ஆட்சிக்காலம் வீட்டுக் கட்டடக்கலையின் சிறப்புமிக்க காலமாகும். பிற்காலத்திலிருந்து பிரித்தறியத்தக்க வகையில், இடைக்காலத்தோடு, மறுமலர்ச்சி இயக்கக் காலமும் இக்கட்டடக்கலை வளர்ச்சியைப் பொதுவாகப் போற்றி வளர்த்தது எனலாம். வீடுகளைக் கட்டும் முறைகளைப் பெருக்குவதற்காகப் பணம் முதலீடு செய்யப்பட்டதைக் காணுகின்றோம். இவ்வாறு செய்வதற்கு முற்காலத்தைக் காட்டிலும் இப்பொழுது வசதிகளும் வாய்ப்புகளும் மிகுதியாக இருந்தன. ஆனால், பிற்காலத்தில் வழக்காறாகவும், எளிமையாகவும், பாதுகாவலாகவும் விளங்கியதைப் போன்று இக்காலத்தில் அவை அமையவில்லை. பொதுவாகச் செல்வர்கள் தங்கள் செல்வம் படிப்படியாகச் சேர்ந்து பேரளவினதாகக் குவிந்தவுடன், அவர்கள் கலைகளிலும், புறப்பகட்டுகளிலும் அதைச் செலவழிக்கத் தொடங்கினர். சிறப்பாக அணிகலன்களிலும், பொன், வெள்ளித்தகடுகள், சாமான்கள், அழகிய உடைகள் முதலியவற்றிலும், இவை யாவற்றையும்விட அழகிய கட்டடங்களிலும் செல்வர்கள் தாங்கள் சேர்த்து வைத்துள்ள பெரும் பொருளைச் செலவழிக்கலாயினர். இவ்வாறு செய்வதன் மூலம் வாழ்க்கையில் செருக்கையும் ஆடம்பர ஆரவாரத்தையும் அதிகப்படுத்தினர். ஆனால், இடைக்காலம் எத்துணை அளவிற்குப் பொது மக்களின் உறைவிடங்களாகிய வீடுகளைக் கட்டுவதைப் புறக்கணித்து வந்ததோ

அத்துணை அளவிற்குத் திருச்சபைகளையும், மடாலயங்களையும், காவல் கற்கோட்டைகளையும் கட்டும் காலமாக விளங்கியது. டியூடர்களின் ஆட்சிக்காலத்தில் மாளிகைகள் முழுச் சிறப்பு வாய்ந்தனவாகக் கட்டி முடிக்கப்பட்டன. இங்கிலாந்தின் பரந்த இயற்கைக் காட்சி மிக்க திறந்த வெளிகளில் எல்லாம், இடைக்கால உட்குடிகளின் சிறு குடிசைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட முக்கோணச் சுவர் முகடுகளைக் கொண்ட பண்ணை மாளிகைகள் தோன்றின. நாளடைவில் திறந்த வெளி அனைத்தையும் அவை மறைத்துக் கொண்டன. இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளில் இன்று நாம் கண்டு வியந்து போற்றும் நேர்த்தி மிக்க பண்ணைகள், தற்காலத்தை நோக்கி உண்டான மாற்றத்தாலும், முன்னேற்றத்தாலும், துணி வாணிகத்தாலும், தடுப்பு நிலப் பண்ணைகளாலும் தோற்றுவிக்கப்பட்டனவாகும்.

டியூடர்களின் ஆட்சியின்கீழ் ஊர்ப் பெரியதனக்காரர்கள் அல்லது நாட்டுப்புறத்தைச் சேர்ந்த எளியபிரபுக்கள் புதியதொரு முக்கியத்துவத்தைப் பெற்றனர். அவர்களுள் பெரும்பாலோர், மடாலய நிலங்களை மிகக் குறைந்த விலைக்கு விலை பேசி வாங்கிக்கொண்டமையால் மட்டும் அவர்கள் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றுவிடவில்லை. நெடுங்காலமாக அவர்கள் மீது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்த நிலப் பிரபுக்களும், மடாலயத் தலைவர்களும் இப்பொழுது மிகத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு வரப்பட்டமையால், இவர்கள் புதியதொரு சமூக நிலையினை அடைந்தனர். அரசின் அமைச்சர்களாகவோ, வட்டார அமைதிகாண் நீதிபதிகளாகவோ அவர்கள் பணி புரிந்து வந்ததன் மூலம் தாங்களே அரசாங்கத்தில் முதன்மை வாய்ந்தவர்களாகவும், மக்கள் சபையின் தலைவர்களாகவும், நாட்டுப்புறங்களின் உண்மையான ஆட்சியாளர்களாகவும் விளங்கினர். ஸ்டூவர்ட்டு மன்னர்களின் காலத்தில் ஊர்ப்பெரிய தனக்காரர்களே முக்கியமாகக் காவெலியர் (Cavalier) கட்சி, ரவுண்ட்டுஹெட்டு (Roundhead) கட்சி ஆகிய இரண்டிற்கும் தலைமை தாங்கி நடத்தி வந்தனர்.

டியூடர்களின் ஆட்சிக்காலத்தில், அவர்கள் தங்களுடைய புதிய வாழ்க்கைப் பாங்கிற்காகத் தங்களைத் தாங்களே கருத்துடன் ஆயத்தம் செய்து கொண்டனர். சில பண்பாளர்கள் தங்களுடைய பிள்ளைகளை அயல்நாடுகளில் பயணம் செய்துவிட்டு வருமாறு அனுப்பி வைத்தனர் அல்லது நீதி மன்றக் கழகங்களில் சட்டக் கலையைப் பயிலுமாறு அனுப்பினர். இவ்வாறு தங்கள் பிள்ளைகளுக்குச் சட்டக் கல்வி அளிப்பதன் மூலம், அவர்களைப் பாராளுமன்றத்தில் தலைவர்களாக விளங்கு

வதற்குரிய தகுதி திறமையையும், அல்லது தங்கள் மாவட்டங்களில் நீதிமன்ற நடுவர்களாக விளங்குவதற்குரிய அறிவாற்றல்களையும்பெற்றுச்சிறப்புறுமாறு செய்தனர். அத்துடன் தொன்மை இலக்கிய மறுமலர்ச்சியினுல் உண்டான 'புதிய கல்வி' அவர்களுடைய உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது. இடைக்காலத்தில் குருமார்களாக விளங்கவேண்டும் என்ற ஊழ்வினைப் பயனுடைய ஏழை மாணவர்களே, கல்வியினைப் பெறுவதற்கு, கல்வி நிலையங்களை நாடி அலைந்தனர். ஆனுல், அதே சமயத்தில் சமயச்சார்பற்ற உயர்குடி வகுப்பினர் எல்லாம் கல்வி கற்றலை இழித்தும், பழித்தும் பேசி வெறுத்துவந்தனர். ஆனுல், எலிசபெத்து அரசியின் ஆட்சிக்காலத்தில் நாட்டுப்புறப் பண்பாளர்களின் பிள்ளைகள் இலக்கணப் பள்ளிகளில் மட்டுமல்லாமல், பல்கலைக் கழகங்களிலும் படித்த மாணவர்களுள் முக்கிய பகுதியினராக இருந்தனர். பல்கலைக் கழகங்களைச் சோதரத்துறவிகளும், மடாலயத் துறவிகளும் விட்டுச் சென்றதனுல் உண்டான வெற்றிடம் முழுவதையும் நாட்டுப்புறப் பண்பாளர்களின் பிள்ளைகளே நிறைவு செய்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு முன்பு எல்லாம் ஏழை எளியவர்களுக்காகப் பல்கலைக் கழகங்களில் ஒதுக்கி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை எல்லாம் வாழ்க்கையில் வசதியுடையோர் வன்முறையில் கைப்பற்றிக் கொள்ளுகின்றனர் என்று முறையிட்டுக் கொள்ளப்பட்டதில் ஓரளவிற்கு உண்மையும், நேர்மையும் இருப்பது உண்மையேயாகும். அவ்வியக்கம் பழிக்கப்படுவதற்குரிய குறைகளை உடையதாக இருந்தபோதிலும், நிலத்தை ஆளுகின்றவர்கள், அந்நிலத்தினுல் பெறக்கூடிய சிறந்த கல்வியினைப் பெற்றுவந்தனர். இடைக்காலத்தில், தங்களுடைய செயலாளர்கள் மட்டும் ஆக்ஸ்போர்ட்டிலும், கேம்பிரிட்ஜிலும் இருந்து வந்தவர்களாக இருந்தால் போதும் என்று பிரபுக்கள் கருதினர். அதனுல்தான் அவர்கள், காவல் கற்கோட்டைகளிலும், ஈட்டிப் போர் பயிலும் இடங்களிலும் தங்களுக்குரிய கல்வியினைக் கற்றுவந்தனர்.

அவ்வகுப்புகளைச் சார்ந்த மக்கள் அரசியலில் பேரார்வம் கொண்டிருந்தனர். மேலும் நாட்டின் ஆலோசனை சபைகளில் தங்கள்கருத்தினைப் பிறர் கேட்கவேண்டும் என்ற ஆவலுடையவர்களாக இருந்தனர். அவர்களுடைய கருத்தினை அவர்களுடைய பேராட்களின் மூலம் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தனர்.

பழைய நிலமானியப் படைமுறையின் எச்சமாக இருந்த நிலப்பிரபுக்களும், அண்மைக்காலத்தில் படைக்கப்பட்ட பர்க்கிலி

(Berghley) லெய்செஸ்டர் (Leicester), ரசல், பெட்போர்ட்டின் கோமான் போன்ற அரசின் ஊழியப் பிரபுக்களும் சேர்ந்து பிரபுக்கள்சபையை அணிசெய்தனர். இம் மேல்சபைக்கு அரசு பாதிரிமார்களைத் தம்முடைய பேராட்களாக அமர்த்திவந்தது. அதன்மூலம் பணித்துறையைச் சேர்ந்த வாக்குறுதியை மிகுதிப் படுத்தியது. மடாலயத் தலைவர்கள் மறைந்துபோயினர். எலிசபெத்துப் பேரரசி வடக்குப் பகுதியைச் சார்ந்த கோமான் களையும், நார்போக்கு (Norfolk) கோமகனையும் தோற்கடித்த பிறகு (1569—1572), மாண்புமிக்க பெருங்குடி மக்களின் தனி யுரிமைவாய்ந்த நிலமானியப் படைமுறையின் அதிகாரமும் இருக்கும் இடம்தெரியாமல் அழிந்து போயிற்று. எலிசபெத்து அரசியினுடைய ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில், பிரபுக்கள் சபையைச் சேர்ந்தவர்கள் மதிப்புமிக்கவர்களாக இருந்தனர். எனினும், இதற்கு முற்பட்டகாலத்திலோ, பிற்பட்டகாலத் திலோ இருந்ததைக் காட்டிலும் இக்காலத்தில் அரசியலில் முக்கியத்துவம் இல்லாத சக்தியாகவே மேல்சபையின் பிரபுக் கள் இருந்துவந்தனர். டியூடர் மரபைச் சார்ந்த அரசர்கள் மக்களாட்சிக் கோட்பாட்டினர் அல்லர். ஆனால், நடுத்தர மக்கள் வகுப்பினர் ஆதிக்கம் அடைவதற்கு அவர்கள் வழிவகுத்துத் தந்தனர். அவர்கள் மாற்றியும் திருத்தியும் அமைத்த அரசில், அரசுக்கும் மக்களுக்கும் இடையே தனியுரிமைவாய்ந்த அதிகாரம் உடையவர்கள் யாருமே விட்டுவைக்கப் படாமையே நடுத்தர மக்கள் செல்வாக்கு அடைவதற்குக் காரணமாயிற்று.

நிலக்கிழார்களின் ஆற்றல் வளர்ந்து கொண்டேவந்தது. அவர்களுக்கு வாணிகர்களும், உழவர்களும் பேராதரவு அளித்து வந்தனர். இவ்வாறு ஆற்றல்மிக்கவர்களாக விளங்கிய நிலக் கிழார்கள் மக்கள் சபையில் இடம் பெற்றனர். தேர்தல் என்பது நாட்டாண்மை அமைப்புக்களின்மீது அரசு சுமத்தும் சுமை என்று இக்காலத்தில் யாரும்கருதவில்லை. ஆனால், நாடுமுழுவதற்கும் உரிய திட்டத்தில் தாங்கள் செல்வாக்குப் பெறுவதற்குரிய சிறந்த தொரு வழியாகத் தேர்தலை மக்கள் கருதலாயினர். தாங்களோ, தங்களுடைய நண்பர்களோ பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும், என்பதற் காக நாட்டாண்மைக்காரப் பெருங்குடிமக்கள்ஒருவரோடொருவர் போட்டியிட்டனர். அக்காலத்தில் மாவட்டங்களைக் காட்டிலும் பேரூர்கள் மிகக்குறைவாகவே இருந்தன. மேலும், அக்காலத் திய இங்கிலாந்தில் பட்டணங்களுக்கும் நாட்டுப்புறங்களுக்கும் இடையே பகைமையுணர்ச்சி இருந்ததில்லை. ஏராளமான கார்னீ

ஷியப் பேரூர்கள் (Cornish Boroughs) டியூடர் பேரரசர்களால் தேர்தலில் கலந்துகொண்டு வாக்குரிமையளிக்கும் பேருரிமை அளிக்கப்பட்டன. அப்பேரூர்கள் ஊர்ப்பெரிய தனக்காரர்களான தூய்மைவாதிகளிடம் சிக்கின. அவர்களே எதிர்க்கட்சியினராக இருந்துவந்தனர். எலிசபெத்தின் ஆட்சிக்காலத்து அரசின் செயல்முறைகளை ஆராய்ந்து மதிப்பிட்டு, குற்றங்குறைகளை எடுத்துரைத்த பால் (Paul), பீட்டர் வெண்ட்வொர்த்து (Peter Wentworth) போன்றபெருமக்களை அப்பேரூர்கள் மக்கள் சபைக்கு உறுப்பினர்களாக அனுப்பிவைத்தன. எலிசபெத்தின் ஆட்சிக்குப் பின்னர், அப்பேரூர்கள் சர் ஜான் எலியட்டு, ஹாம்ப்டன், மற்றும் அக்கட்சியைச் சேர்ந்த பலரைப் பாராளு மன்றத்தின் உறுப்பினர்களாக அனுப்பிவைத்தமை இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.[1]

மக்கள் சபை அரசின் ஆதரவாளராகவும், அதே சமயத்தில் அரசின் திறனாய்வாளராகவும் பணிபுரிவதன் மூலம் தனக்கே சிறப்பாகவுரிய தொடக்கத்தினைப் பெறத் தொடங்கியது. ஸ்பெயினுக்கும், போப்பாண்டவருக்கும் முன்னிலையில் அரசியைக் காட்டிலும் மக்கள் சபை பெரிதும் எலிசபெத்திற்கேயுரியதாகக் காணப்பட்டது. இச்சபையின் உறுப்பினர்கள் அரசியிடத்து இடைவிடாத பற்றுறுதிடையவர்களாக இருந்து வந்தனர். தற்காப்பு முறைகளில் திருமணம் செய்து கொள்ளுதல், தனக்குப்பிறகு யார் அரியணை ஏறுவது என்பதை முடிவு செய்தல், ஸ்காட்டிய அரசியைத் தூக்கிலிடுதல், கத்தோலிக்கர்களை மிகுதியாகவும் தூய்மைவாதிகளைக் குறைவாகவும் துன்புறுத்துதல் போன்ற ஆற்றல் மிக்கமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு அவர்கள் அரசியை ஆர்வத்துடன் வேண்டிக்கொண்டனர். சுருங்கக் கூறுவதென்றால், உயர்ந்த வரியை உயர்த்துவதைத் தவிர, மற்ற எல்லாச் செயல்களும் இடர்ப்பாடானவை என்பதை அரசியும், உறுப்பினர்களும் நன்குணர்ந்திருந்தனர். மக்கள் சபை அளவுகடந்த ஆர்வமும், அளவுகடந்த சுறுசுறுப்பும் உடையதாக இருக்கிறது என்று அவ்வரசி கருதினாள். டியூடர் அரசர்களின் ஆட்சிக்காலத் தொடக்கத்தில் அரசு தேர்தல் சமயங்களில் பாராளுமன்றத்தைக் கலைத்து விடாமலேயே, சமயத்

[1] கார்னிஷியப் பேரூர்களைத் தோற்றுவித்தமை பாராளுமன்றத்தில் அரசின் அதிகாரத்தை அதிகப்படுத்துவதற்கே என்னும் கருத்து உண்மையா அல்லது தவறா என்பது குறித்துச் சிறப்பு மிக்க நிபுணர்கள் கருத்து வேறுபாடுடையவர்களாக இருக்கின்றனர். அத்தகைய நோக்கத்துடன் அப்பேரூர்கள் தோற்றுவிக்கப் பட்டிருக்குமானால், அந்நோக்கம் தோல்வியுற்றதெனலாம்.

துறை விவகாரங்களிலும் கூட அரசரும் அவருடைய ஆலோசனை மன்றமும் வழிகாட்டுவதை நாட்டின் விருப்பமும், அதன் பேராட்களும் பின்பற்றுவர் என்று இடர்ப்பாடின்றி நம்பிக்கை கொண்டிருந்தமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். எலிசபெத்து அரசியின் ஆட்சிக்காலத்தில் ஊர்ப் பெரியதனக்காரர்களின் தூய்மைவாதிப்பண்பு மிகுதிப்பட்டமை, மக்கள்சபையில் புதியதொரு கூறினைக் கொண்டுவந்து புகுத்தியது. பீட்டர் வெண்ட்வொர்த்துப் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுடைய உள்ளங்களில் இறைவனிடத்துக் கொண்ட அச்சத்துடனும், அன்புடனும், அரசியிடத்துக்கொண்ட அச்சமும், அன்பும் சேர்ந்து போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வந்தன எனலாம். முதலாவது ஸ்டுவர்ட்டு அரசர் தோன்றி, கொந்தளிக்கும் தண்ணீரை இன்னும் மிகுதிப் படுத்துவதற்கு முன்பே புராட்டஸ்டண்ட்டுச் சமயமும், பாராளுமன்றச் சிறப்புரிமைகளும் நெருங்கிய தொடர்பு கொண்டனவாக இருந்தன.

முதலாம் ஜேம்ஸ் விரைவில் மக்கள்சபையை எதிர்க்கட்சியாக மாற்றியதைப் போன்று, மக்கள்சபை இன்னும் இன்றியமையாத எதிர்கட்சியாக மாறவில்லை. பேராற்றலும் பெருந்திறமையும் வாய்ந்த பிரிவிகவுன்சிலர்கள் அப்பேரவையில் இடம் பெற்றிருந்தவரையில், ஒவ்வொரு பாராளுமன்றக் கூட்டத்தின் பொழுதும் நிறைவேற்றப்பட்ட முக்கிய சட்ட திட்டங்களுக்கு அவர்கள் பொறுப்புடையவர்களாக இருந்து வந்தவரையில் ஆட்சித்துறைக்கும், சட்டமியற்றுதலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்துவந்தது. இத் தொடர்பு எலிசபெத்திற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அரசர்களின் புறக்கணிப்பால் மெல்ல அற்றுப்போயிற்று.

அரசி எத்துணைக்காலம் உயிருடன் இருந்துவந்தாளோ அத்துணைக்காலம் வரை, அடக்கி வைக்கமுடியாத சச்சரவுகள் எல்லாம் அவளுடைய தனியுரிமைப் பண்புகளினால் தள்ளிப் போடப்பட்டு வந்தன. சபையில் சொல்லப்பட்டனவற்றாலும் மிகுதியாகச் செய்யப்பட்டவற்றாலும் அவள் வெறுப்படைந்திருந்தபோதிலும், அச்சபையின் சிறப்புரிமைகளை மதித்துப் போற்றி வந்தாள். அவள் தன்னுடைய ஆற்றல், தெய்விக உரிமையில் அமைந்து கிடக்கவில்லை என்பதை 'நன்கறிந்திருந்தமையால் மக்கள் சபையினை எலிசபெத்து மதித்துப் போற்றி வந்தாள். இதற்கு மாறாக அவள் தன்னுடைய ஆற்றல், சினமிக்க தன்னிறைவு உடைய இத்தகைய ஊர்ப் பெரியதனக்காரர்

களின் பற்றுறுதியிலும் ஈடுபாட்டிலுமே அமைந்திருப்பதை அறிந்திருந்தாள். கண்ணுக்குத்தெரியாத நெடுந்தொலைவில் கடலிலும் நிலத்திலும் ஓயாது உழைத்துக் கொண்டிருக்கின்ற இலட்சக்கணக்கான மக்களுடன் இப்பெரிய தனக்காரர்கள் தம்மையும், தம்முடைய அரசவையினரையும்விட, நேரடியான தொடர்பு கொண்டுள்ளனர் என்பதை அரசி நன்குணர்ந் திருந்தாள். எலிசபெத்து நன்கு அறிந்திருந்த இம் மறை பொருளை ஸ்டுவர்ட்டு மன்னர்கள் என்றுமே அறியாமல் இருந்தனர். இறுதியாக அவள் ஆடவரை வயப்படுத்தி, செயல்களைச் சாதித்துக் கொள்ளும் கலையில் கைதேர்ந்த வளாக விளங்கினாள். பாராளுமன்ற உறுப்பினர்களையும் கூட அவள் தன் விருப்பப்படி ஆட்டிவைத்ததற்குக் காரணம், ஆடவரை மயக்கும் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தமையேயாகும். அவள் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மக்களால் வெறுக்கப்பட்ட வாணிகத் 'தனியுரிமைக் குத்தகை' வரியைப் பெருந்தன்மையுடன் நீக்கிய முறை, உடனடியாக மக்களுடைய அன்பினையும், ஆதரவையும் அவள் மீண்டும் பெறுமாறு செய்தது. இதனால் மதிப்புமிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியினால் இன்பக்கண்ணீர் சொரிந்தனர். அத்தகைய உள்ளத்தை உருக்கும் மனநிலையுடன் அவர்கள் காதலாகிக் கசிந்துருகிக் கொண்டிருந்த அந் நிலையில், அவர்களுடைய அன்னையாகவும் தன்னிகரற்ற தலைவியாகவும் விளங்கிய எலிசபெத்து, அவர்களை 'வெண்மாளிகை' (White hall) க்கு வருமாறு அழைத்தாள். 'இறைவன் என்னை மிகச்சிறந்த நிலைக்கு உயர்த்தியுள்ளார். எனினும் இதனை நான் என்னுடைய மணி முடியின் மாட்சியாகவே கருதுகிறேன். இவ்வரசினை உங் களுடைய அன்பினைக் கொண்டே நான் ஆட்சிபுரிந்து கொண்டிருக் கிறேன்' என்று, முடிவடைந்து கொண்டிருக்கும் தன்னுடைய சிறப்பு மிக்க நெடுங்கால ஆட்சியின் வெற்றிக்குரிய மறை பொருளை அப்பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பேரரசி எலிசபெத்து எடுத்துரைத்தாள்.

## இவ்வியலில் கூறப்பட்டுள்ள கருத்துகள்

போர்க் காலத்தில் அமைதியும், தன் தேவை நிறைவும் — எட்டாம் ஹென்றி வேல்ஸினை அமைதிப்படுத்துதல் — வெல்ஷ் சமயமும் பண்பாடும் — அயர்லாந்தில் சீர்திருத்த இயக்கம் — அயர்லாந்தும் எலிசபெத்து காலத்திய மக்களும் — இங்கிலாந் தில் இயேசு சங்கத்தினர் — இங்கிலாந்து புராட்டஸ்ண்ட்டு நாடாதல் — எலிசபெத்து காலத்திய உரிமையின் வரம்பு —

ஷேக்ஸ்பியரும் மறுமலர்ச்சி இயக்கமும் — ஆங்கில மொழியில் விவிலிய நூல் — ஆங்கிலேய இசையும் பாட்டும் — தொழில் பயிலுவோரும் அவர்களுடைய தொழில்களும் — அன்றும் இன்றும் — எலிசபெத்தின் காலத்திய பிரபுக்களின் நிலை — பல்கலைக் கழகத்தின் கட்டடக்கலை — மக்கள் சபை — எலிசபெத்தும், அவளுடைய பாராளுமன்றக் கூட்டங்களும்.

## மேற்கொண்டு படிப்பதற்குரிய நூல்கள்

இப்பிரிவின் முதல் இயலின் இறுதியில் குறிப்பிடப் பட்டுள்ள நூல்களைக் காண்க. மேலும் பின்வரும் நூல்களையும் காண்க.

### பொது


1. கிரைட்டன் : (Creighton)
   Queen Elizabeth.
2. நீல் : (Neale)
   Queen Elizabeth.
3. பொலார்ட் : (Pollard)
   Political History 1547-1603.
4. கான்யர்சு ரீட் : (Conyers Read)
   Mr. Secretary Walshingam, 3 vols.
5. ஜே. பி. பிளாக்கு : (J. B. Black)
   The Reign of Queen Elizabeth, (Oxford History of England (1936).


### பாராளுமன்றம்

பீட்டர் வெண்ட்வொர்த்தைப் (Peter Wentworth) பற்றி ஜே. இ. நீல் (J. E. Neale) என்பவர் English Historical Review என்னும் இதழில் 1924-ல் வெளியிட்டுள்ள கட்டுரைகளைக் காண்க.

### சமயம்

1. மெய்ட்லண்டினுடைய 'The Anglican Settlement and the Scottish Reformation' என்னும் கட்டுரையினை Cambridge Modern History, இரண்டாம் தொகுதியில், இரண்டாவது பதினாறாவது அதிகாரங்களில் காண்க.

2. பேய்னே : (Bayne)
Anglo-Roman Relations, 1555-1565 (Oxford, 1913).

3. கென்னடி, W. P. M. (W. P. M. Kennedy)
Elizabethan Episcopal Administration (Alcuin club, 1924).

4. கீ : (Gee)
Elizabethan Clergy. (Oxford, 1898)

5. டௌடன் E. L: (E. L. Tauuton)
The Jesuits in England

6. ஸ்காட் பியர்சன் : (Scott Pearson)
Thomas Cartwright and Elizabethan Puritanism (Cambridge, 1925).

### கடலாதிக்கம்

1. சர் ஜூலியன் கார்பெட்டு : (Sir Julian Corbett)
Drake and the Tudor Navy, 2 vols. &
The Successors of Drake.

2. சர் வால்ட்டர் ராலே ; (Sir Walter Raleigh)
English Voyages in the Sixteenth Century.

3. பேராசிரியர் காலண்டர் : (Prof. Callender)
The Naval Side of the British History.

4. வில்லியம்சன் J. A. : (J. A. Williamson)
The Age of Drake (1938).

### ஸ்காட்லாந்து

1. Cambridge Modern History, vol. II, chap. XVI.

2. ஹ்யூம் பிரவுனும் : (Hume Brown)
ஆண்டிரூ லாங்கும் : (Andrew Lang)
சேர்ந்து எழுதியுள்ள
Histories.

### வேல்ஸ்

1. வில்லியம்ஸ் W. Ll. : (W. Ll. Williams)
The Making of Modern Wales.

அயர்லாந்து

1. பாக்வெல் R.: (R. Bagwell)
Ireland under the Tudors, 3 vols.
2. ஸ்டீபன் குவைன் : (Stephen Gwynn)
History of Ireland.

## கலைச்சொற்கள்

### (ஆங்கிலம்—தமிழ்)

### A

| | |
|---|---|
| Abbot | மடாலயத் தலைவர், மடாலய முதல்வர் |
| Act of Six Articles | ஆறுவிதிச் சட்டம் |
| Act of Supremacy | மாபெரும் முதன்மைச் சட்டம் |
| Act of Uniformity | (வழிபாட்டு) ஒருமைச் சட்டம் |
| Anarchy | அரசியல் குழப்பம் |
| Annates | முதலாண்டு வருவாய் |
| Apostle | வீரத்திருத் தொண்டர் |
| Archbishop | தலைமைப் பாதிரியார், தலைமைக்குரு |
| Articles of Faith | சமய விதிகள் |
| Assizes | சட்டங்கள் |
| Assize of Arms | படைக்கலச் சட்டம் |

### B

| | |
|---|---|
| Bailiff | வழக்குமன்றத் தலையாரி, மேலாள் |
| Balance of Power | ஆதிக்கச் சமநிலைக் கோட்பாடு |
| Bards | பாணர்கள் |
| Baron | நிலப்பிரபுக்கள், காணியாட்சியாளர் |
| Barony | காணியாட்சிப் பகுதி |
| Battle of Standard | கொடிப்போர் |
| Benefit of clergy | திருச்சபைச் சலுகை |
| Black Death | பெரும் கொள்ளைநோய் (பிளேக்கு) |
| Black Prince | கருங்கவச இளவரசர் |
| Book Land | பட்டயநிலம் |
| Book of Common Prayer | பொது வழிபாட்டு நூல் |
| Book of Martyrs | தியாகிகள் வரலாறு |
| Borough | பேரூர் |
| Bureaucracy | மையக்குவிமுக ஆட்சி |

## C

| | |
|---|---|
| Calvinism | கால்வினியம் |
| Canon Law | திருச்சபை விதிகள் |
| Cardinal | கார்டினல் |
| Castle | காவல் கற்கோட்டை |
| Cathedral | மாவட்டத் தலைமைக்கோயில் |
| Chantries | குருமார்களுக்கு விடப்பட்ட மானியம் |
| Charter of Liberties | உரிமைப் பட்டயம் |
| Chiltrens | முடியரசு தனிமானியப் பகுதி |
| Chivalry | வீரப்பெருந்தகைமை |
| Chronicle | காலவழிச் செய்திக் கோவை |
| Civil Servants | பணித்துறை அலுவலர் |
| Clergy | குருமார்கள் |
| Coloni | குடியேறிகள் |
| Common Law | பொதுச் சட்டம் |
| Compurgators | நல்லொழுக்கச் சான்று கூறுவோர் |
| Confessor | அருளாளர் |
| Conquistadores | கண்டுபிடிப்பாளர் |
| Consilium | அரசரின் ஆலோசனை மன்றம் |
| Convents | கன்னி மடங்கள் |
| Copy hold | படியுரிமை நிலங்கள் |
| Cosmopolitan | அனைத்துலகக் குடிமகன் |
| Cottars | நிலக் கூலிகள் |
| Counter Reformation | சமயச் சீர்திருத்த எதிர்ப்பு இயக்கம் |
| County | கோட்டம் |
| Court of Assize | குறிப்பிட்ட காலத்தில் கூடும் முறை மன்றம் |
| Court of Common Pleas | பொதுமக்களின் முறைமன்றம் |
| Court of king's Bench | அரசரின் நீதிமன்றம் |
| Crusade | சிலுவைப் போர்கள் |
| Curia Regis | மன்னரின் பேரவை |

## D

| | |
|---|---|
| Declaration of Independence | விடுதலையுறுதி ஆவணம் |
| Despotic rule | வல்லாட்சி |

| | |
|---|---|
| De donis Conditionalibus | கட்டுப்பாட்டிற்குட்பட்ட சொத்து மாற்றம் |
| Diplomat | அரசியல் விரகர் |
| Division of Labour | தொழில்முறைப்பாகுபாடு |
| Doctor of Divinity | இறையியல் பேரறிஞர் |
| Domesday Book | நிலவுடைமைப் பேராய்வுக் கணிப்பேடு |
| Droit administratif | ஆட்சித்துறைச் சட்டம் |
| Duke | கோமகன் |

E

| | |
|---|---|
| Earl | கோமான் |
| Eccleciastic Court | திருச்சபை நீதிமன்றம் |
| Eccleciastical Privileges | திருச்சபையின் தனியுரிமைகள் |
| Equity Courts | நேர்மை நீதிமன்றம் |
| Estate | பண்ணை |
| Estate jumping | பண்ணை வளைத்தல் |
| Exchequer | கருவூலம், கருவூல மன்றம் |

F

| | |
|---|---|
| Feudalism | நிலமானியப் படைமுறை |
| Fidei defensor | சமயத்தின் பாதுகாவலர் |
| Folk land | பொதுமக்கள் நிலம் |
| Free hold | இறையிலி நிலம் |
| Free man | உரிமைக் குடிமகன் |
| Free tenants | தனியுரிமைக் குத்தகையாளர் |
| Friars | சோதரத் துறவிகள் |
| Fyrd | குடிப்படை |

G

| | |
|---|---|
| Geburs | வாரத்திற்குப் பயிரிடும் குடியானவர்கள் |
| Gesith | சாக்சானியர் காலத்தில் தொண்டினால் படைத்துறையில் பெருமக்கள் நிலைக்கு உயர்ந்தவர்கள் |
| Guilds | தொழிற் கழகங்கள் |

H

Heptarchy — ஏழரசு
House Carls — வேளக்காரப் படையினர்
House of Commons — மக்கள் சபை
House of Lords — பிரபுக்கள் சபை
Humanitarianism — மனிதஇன அன்புப்பணி
Hundred — நூறு, இது ஆங்கிலேய - சாக்சானியரால் உள்நாட்டு ஆட்சி முறையில் அமைக்கப்பட்ட ஒரு பிரிவு

I

Indulgence — பாவமன்னிப்புச் சீட்டு
Inns of Courts — நீதிமன்றக் கழகங்கள்
Interdict — திருச்சபை சாபம்

J

Jesuits — இயேசு சங்கத்தினர்
Jury — தீர்ப்புச் சான்றுளர் குழு
Justices of Assize — சட்டமியற்றும் நீதிபதிகள்
Justices of Eyre — சுற்றிவரும் நீதிபதிகள்
Justices of Peace — அமைதிகாண் நீதிபதிகள்

K

King maker — அரசரியற்றி
Knights — மாவீரர்கள்

L

Lease hold — குத்தகையுரிமை நிலம்
Legate — திருத்தூதர்
Le'tat c'estmoi — ஆட்சியும் அரசும் நானே

M

Magna Carta — மாபெரும் பட்டயம்
Maintenance — காப்புவரி

| | |
|---|---|
| Maletote | கொடிய வரி |
| Manors | மேனர் பண்ணைகள் |
| Mappa Mundi | உலகப்படம் |
| Martyr | உயிர்த்தியாகி |
| Mass | வழிபாடு |

N

| | |
|---|---|
| Nation | தேசிய இனம் |
| Non-Conformists | இணங்காதவர் |
| Norman Conquest | நார்மானியரின் வெற்றி, நார்மானியர் கைப்பற்றுதல் |

O

| | |
|---|---|
| Oath of fealty | பற்றுறுதி உறுதிமொழி |
| Obscurantism | சீர்திருத்த எதிர்ப்பாளர் இயக்கம் |
| Ordinance | உடனடிச் சட்டம் |

P

| | |
|---|---|
| Parish | திருச்சபை வட்டாரம் |
| Parliament | பாராளுமன்றம் |
| Peasants Revolt | குடியானவர்கள் கலகம் |
| Pilgrims Father | திருப்பயணத் தந்தைகள் |
| Pilgrimage of the Grace | அருளாளர்களின் திருப்பயணம் |
| Poor law | இரவலர் சட்டம் |
| Praemunire | முன்பாதுகாப்புச் செய்ய |
| Prerogative Courts | சிறப்புரிமை நீதிமன்றங்கள் |
| Presbyterianism | சமயச் சங்க ஆட்சி |
| Pimate | தலைமைக்குரு |
| Protectorate | காப்பரசு |
| Provisions of Oxford | ஆக்ஸ்போர்ட்டு ஏற்பாடுகள் |

Q

| | |
|---|---|
| Quo Warranto | எத்தகுதி பற்றி |

R

| | |
|---|---|
| Ransom | மீட்புப்பணம் |
| Reformation | சமயச் சீர்திருத்தம் |
| Regent | காப்பாளர் |
| Renaissance | மறுமலர்ச்சி |
| Retainers | உரிமை ஏவலாளர் |
| Rights of Sanctuary | அடைக்கல உரிமைகள் |
| Rule of Law | சட்ட ஆட்சிமுறை |

S

| | |
|---|---|
| Salus Publici | மக்களின் ஈடேற்றம் |
| Scutage | படைத் தொழிலுக்குப் பதிலாகத் தரப்படும் பணம் |
| Seignorial | பெருநிலக் கிழாருக்குரிய |
| Serf | அடிமை ஊழியர் |
| Servile Tenure | ஊழிய வாரமுறை |
| Sheriff | மாவட்டத்தலைவர், நாட்டாண்மைக்காரர் |
| Shire | மாவட்டம் |
| Soc | தனியார் நீதிமன்றம் |
| Squire | ஊர்ப் பெரியதனக்காரர் |
| Star Chamber | விண்மீன் மன்றம் |
| State | அரசு, நாடு, இராச்சியம் |
| Statute of Six Articles | ஆறுவிதிச்சட்டம் |
| Statute of Artificers | புதியது புனைபவர்களின் சட்டம் |
| Statute Law | பட்டயச் சட்டம் |
| Statute of Treason | அரசத் துரோகத் தடுப்புச் சட்டம் |
| Sub-in-feudation | உட்பிரிவுப் படைமானியம் |

T

| | |
|---|---|
| Tenants-in-chief | தலைமைக் (மேல்) குத்தகையாளர் |
| Tenure | நிலவாரம், நிலவுரிமைக் கட்டுப்பாடு |
| Thegns | தேனர் |

| | |
|---|---|
| Thralls | அடிமைகளாகப் பிணைப்புண்டவர்கள் |
| Tithe | வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு |
| Transubstantiation | பொருள்மாற்றம் |
| Trial by ordeal | ஒறுப்புமுறை ஆய்வு |

**V**

| | |
|---|---|
| Vassals | கீழாட்கள் |
| Viking | வைக்கிங்குகள் |
| Villeins | உட்குடிகள் |

**W**

| | |
|---|---|
| Wapentakes | டேன்லாப் பகுதியிலுள்ள நூறுகள் |
| Weregeld | இழப்பீடு |
| Witanagemot | முதறிஞர் மன்றம் |

**Y**

| | |
|---|---|
| Yeoman | வேளாளர் |

# பொருள் அட்டவணை

## தி



## தீ



## து



## தே



## தொ



## ந



## நா

ஹே



ஹோ

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 94 | 26 | நார்ட்டிக்கு | நார்டிக்கு |
| 107 | 34 | பழநிலேயில் | படிநிலேயில் |
| 117 | 34 | பிரதிகளாகவும் | பிரதிநிதிகளாகவும் |
| 124 | 13 | அகஸ்டினுடைய | அகஸ்டசினுடைய |
| 192 | 9 | கட்டுப்பாடு | கடப்பாடு |
| 379 | 17 | படைகள் சட்டத் தின்படி | படைக்கலச் சட்டத் தின்படி |
| 387 | 4 | ∴பெடரிக் பேர ரசுக்கும் | பிரடரிக்கு பேரரசருக்கும் |
| 408 | 2 | கடந்து கொண் டிருக்கும் | காத்துக் கொண்டிருக்கும் |
| 430 | 4 | ஒடுக்கி விட்டும் | ஒதுக்கி விட்டும் |
| 439 | 5 | வாக்கிற்கு | வாக்கெடுப்பிற்கு |
| 483 | 22 | பாசிப்படை | தூசிப்படை |
| 549 | 5 | ஹிட்லர் பிராண் டைன் | ஹில்டர் பிராண்டைன் |
| 560 | 5 | ஆரிக்காது | ஆதரிக்காது |
| 582 | 21 | போட்ட வாக் காளர்களின் | கோட்ட வாக்காளர் களின் |
| 586 | 15 | பாஸ்டால்ப்பின் (Fastolf) | பால்ஸ்டாப்பின் (Falstoff) |
| 597 | 1 | மரபினரின் கீழ் | மரபினரின் கொடிக் கீழ் |
| 607 | 3 | நூற்ருண்டுப் | நூருண்டுப் |
| 608 | 26 | கூட்டுக் கடிதங்களும் | கூட்டுரிமைக் கழகங்களும் |
| 654 | 28 | புலவராக | புரவலராக |
| 697 | 12 | மறைவிலக்கு பிரச் சினே | மதவிலக்கு பிரச்சினே |
| 735 | 3 | (Act of Ilni- formity) | (Act of Uniformity) |
| 775 | 21 | போகக்ரெர்தாடு | போர்தொடுக்க |